பிரிட்டன் வரலாறு
(மூன்றாம் புத்தகம்)
- அநுமந்தன் (கி. ர)

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 42

பிரிட்டன் வரலாறு

(மூன்றும் புத்தகம்)

(கி.பி. 1837 - 1972)

Political and Constitutional History of England

(Book - III — A.D. 1837 - 1972)

ஆசிரியர்

கி. ர. அநுமந்தன், எம்.ஏ.,

எம்.எஸ். (விஸ்கான்ஸின், U.S.A.),

பேராசிரியர், வரலாற்றுத்துறை,

மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

Revised Edition—February, 1970
2nd Revised Edition—August 1973

T.N.T.B.S. (C.P.) No. 42

© Tamil Nadu Text Book Society

Political and Constitutional History of England-III

K. R. HANUMANTHAN

Price Rs. 6-80

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare' (Department of Culture), New Delhi.

Printed by
LALITA PUBLICATION & PRESS
5-A, Tank Bund Road.
Nunkambakkam,
Madras-600034

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.யூ.சி., பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், தத்துவம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய பல துறைகளில் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'பிரிட்டன் வரலாறு-III'** என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான **42**ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்ட மாணவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின், இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளிவருகின்றது. இந் நூல் மைய அரசு, கல்வி சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

இங்கிலாந்தின் வரலாற்றில் ஒவ்வொரு நூற்றாண்டும் ஒருசில சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அச் சிறப்பியல்புகள் யாவும் திடீரென ஏற்பட்டுவிடுவன அல்ல. அதற்கு முன்னைய நூற்றாண்டில் ஏற்பட்ட ஒருசில மாற்றங் களின் அடிப்படையிலேயே அவை அமைந்திருக்கும். இங்ஙனம் வாழையடிவாழை என ஒரு நூற்றாண்டின் நிகழ்ச்சிகள் இன்னொரு நூற்றாண்டின் நிகழ்ச்சிகளுக்கு அடிகோலும் வகையில் அமைந் திருக்கும் முறைமையைத்தான் நாம் வரலாற்றுத் தொடர்பு (Historical Continuity) எனக் கூறுகிறோம். இத்தகைய வரலாற் றுத் தொடர்பு மிகச் சிறந்த முறையில் பிரிட்டனின் வரலாற்றில் அமைந்துகிடப்பதை நாம் காணலாம்.

இந் நூலின் முதற்பாகத்தில் பதினேழாம் நூற்றாண்டில் ஸ்டூவர்ட் வமிச மன்னர்களுக்கும் பாராளுமன்றங்களுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகளையும், அவற்றின் இறுதியில் பாராளுமன்றத்தின் இறைமை நன்கு நிலைநாட்டப்பட்டதையும் ஆராய்ந்தோம். இரண்டாம் பாகத்தில் பதினெட்டாம் நூற்றாண் டில் பாராளுமன்ற ஆட்சிமுறை அல்லது காபினெட் முறையானது ஹெனோவரிய அரசர்களால் எங்ஙனம் பேணி வளர்க்கப்பட்ட தென்பதையும் அரசியல் துறையிலும் தொழில் துறையிலும் எங்ஙனம் வியத்தகு புரட்சிகள் ஏற்பட்டதென்பதையும், அதிகார மானது எங்ஙனம் பணம் படைத்த பிரபுக்களின் பிடியினின்றும் நழுவி, நடுத்தர மக்கள், தொழிலாளர்கள் போன்ற சாதாரண மக்களின் கைகளுக்கு மாறியதென்பதையும் பார்த்தோம். அவற் றின் விளைவுகளும் எதிர் விளைவுகளுமே விக்டோரியா இராணி யாரின் காலத்தையும் அதற்குப் பிற்பட்ட கால வரலாற்றையும் அதாவது பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளின் வர லாற்றை உருவாக்கியுள்ளன. அவற்றை விளக்கமாகக் கூறுவதே இந் நூலின் குறிக்கோளாகும். பதினெட்டாம் நூற்றாண்டில்

ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாகவும் கப்பற்படைப் பெருக்கத்தின் விளைவாகவும் ஆங்கிலப் பேரரசானது எங்ஙனம் உலகெங்கும் பரந்து விரிந்ததோர் நிறுவனமாக அமைந்தது என்பதையும், அப் பேரரசில் காலத்துக்கேற்றபடி எப்படி ஜனநாயகப் பண்புகள் மலர்ந்தன என்பதையும், இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சி முறையும் மக்கள் நல அரசும் எங்ஙனம் படிப்படியாக உருவாகி வளர்ந்தன என்பதையும் நாம் ஈண்டு விரிவாக நோக்குவோம்.

இந் நூல் தற்போது மூன்றும் பதிப்பாக வெளியிடப்படுகிறது. எனவே, சமீப காலத்தில் இங்கிலாந்தில் நடைபெற்றுள்ள முக்கிய நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. அரசியலமைப்பிலும், காமன்வெல்த் கூட்டுறவிலும் தற்காலத்தே ஏற்பட்டுள்ள வியத்தகு மாற்றங்களைப்பற்றிய ஆய்வுரை ஒன்று இந் நூலின் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில அரசியலமைப்பையும், அதையொட்டி அமைந்துள்ள நம் நாட்டு அரசியல் நிறுவனத்தையும் மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ள அவ்வாய்வுரை பெரிதும் உதவியாயிருக்குமென்று நம்புகிறேன்.

கி. ர. அநுமந்தன்

பொருளடக்கம்

			பக்க
	முன்னுரை	....	v
	வம்சாவளிப் பட்டியல்	....	viii
	மன்னர்கள், இராணியார்களின் பட்டியல்	....	ix
	முக்கிய நிகழ்ச்சிகளின் கால அட்டவணை	....	xi
1.	விக்டோரியா மகாராணியாரின் காலம் (1837—1901)		1
2.	விக்டோரியப் பேரமைச்சர் சர் ராபர்ட் பீல் (1788—1850)	....	16
3.	விக்டோரியப் பேரமைச்சர் பாமர்ஸ்டன் (1784—1865)	....	30
4.	விக்டோரியப் பேரமைச்சர் ஜான் ரஸ்ஸல் பிரபு (1792—1878)	....	56
5.	விக்டோரியப் பேரமைச்சர் டிஸ்ரேலி (1804-81)	....	64
6.	விக்டோரியப் பேரமைச்சர் கிளாட்ஸ்டன் (1809—1898)	....	92
7.	விக்டோரியா காலப் பேரரசு	....	117
8.	விக்டோரியப் பேரமைச்சர் சாலிஸ்பரி பிரபு (1830—1903)	....	141
9.	விக்டோரியா மகாராணியார் கால இங்கிலாந்தின் நிலைமை	....	158
10.	ஏழாம் எட்வர்ட் (1901-10)—மூன்றும் பெரிய சீர்திருத்த காலம் (1905-14)	....	179
11.	முதல் உலகப் பெரும் போர் (1914-18)	....	204
12.	இரண்டாம் உலகப் பெரும் போர் (1939-45)	....	225
13.	பிரிட்டிஷ் காமன்வெல்த்	....	258
14.	முதல் உலகப் போருக்குப் பிற்பட்ட கால இங்கிலாந்து	....	277
15.	இங்கிலாந்து அரசியலமைப்பின் வளர்ச்சி வரலாறு	....	323
	மேலும் படிக்கவேண்டிய நூல்கள்	....	449
	சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வு வினாக்கள்	....	451
	கலைச்சொல் அகராதி	....	457
	பொருள்குறிப்பகராதி	....	464

ஹனோவர் வி

முதலா

இ

17 NOV 1973

வேல்ஸ் இளவரசர் பிரடரிக்
(1751இல் மரணம்)

மூன்றும் ஜார்ஜ்

நான்காம் ஜார்ஜ்
(1820-30)

யார்க் கோமகன்
பிரடரிக்
(1827இல் மரணம்)

நான்காம் வில்லியம்
(1830-7)

சார்லட்டி = பெல்ஜிய மன்னர்
லியோபோல்டு

விக்டோரியா = ஆ
(1837-1901) (1

ஒன்பதாம் கிறிஸ்டியன் (டென்மார்க் மன்னர்)

எட்டாம்
பிரடரிக்

முதலாம் ஜார்ஜ்
கிரீஸ் மன்னர்

அலெக்ஸாந்திரியா = ஏழாம் எட்வர்ட்
(1901-10)

விக்டோரியா =

பத்தாம்
கிறிஸ்டியன்

கான்ஸ்டன்டைன்

ஐந்தாம் ஜார்ஜ் (விண்ட்ஸார்)
(1910-36)

இரண்டாம் வி
ஜெர்மன் பேர
(1918இல் முடி

ஏழாம் ஹேக்கோ = மாட்
(நார்வே மன்னர்)

எட்டாம் எட்வர்ட்
(1933இல் முடிதுறப்பு)

ஆறும் ஜார்ஜ்

இரண்டாம் எலிஸபெத்

மன்னர்கள், இராணியார்களின் பட்டியல்

ஹனோவர் வமிசம்

விக்டோரியா மகாராணியார்		....	1837—1901

சாக்ஸி கோபர்க் வமிசம்

ஏழாம் எட்வர்ட்	....	....	1901—1910

விண்ட்சார் வமிசம்

ஐந்தாம் ஜார்ஜ்	....	....	1910—1936
எட்டாம் எட்வர்ட்	....	....	1936
ஆரும் ஜார்ஜ்	....	....	1936—1952
இரண்டாம் எலிஸபெத்	....	....	1952

மந்திரிசபைகளின் பட்டியல்

1835—1841	மெல்போர்ன் (2)	மந்திரிசபை	(விக்)
1841—1846	பீல் (2)	,,	(கன்)
1846—1852	ரஸ்ஸல் (1)	,,	(விக்)
1852	டெர்பி (1)	,,	(கன்)
1852—1855	அபெர்டீன்	,,	(விக்)
1855—1858	பாமர்ஸ்டன் (1)	,,	(விக்)
1858—1859	டெர்பி (2)	,,	(கன்)
1859—1865	பாமர்ஸ்டன் (2)	,,	(விக்)
1865—1866	ரஸ்ஸல் (2)	,,	(லிபரல்)
1866—1868	டெர்பி (3)	,,	(கன்)
1868	டிஸ்ரேலி (1)	,,	(கன்)
1868—1874	கிளாட்ஸ்டன் (1)	,,	(லிப)
1874—1880	டிஸ்ரேலி (2)	,,	(கன்)

1880—1885	கிளாட்ஸ்டன் (2)	மந்திரிசபை	(லிப)
1885—1886	சாலிஸ்பரி (1)	,,	(கன்)
1886	கிளாட்ஸ்டன் (3)	,,	(லிப)
1886—1892	சாலிஸ்பரி (2)	,,	(கன்)
1892—1894	கிளாட்ஸ்டன் (4)	,,	(லிப)
1894—1895	ரோஸ்பரி	,,	(லிப)
1895—1902	சாலிஸ்பரி (3)	,,	(கன்)
1902—1905	பால்பர்	,,	(கன்)
1905—1908	காம்ப்பெல் பானர்மேன்	,,	(லிப)
1908—1915	ஆஸ்க்வித் (1)	,,	(லிப)
1915—1916	ஆஸ்க்வித் (2)	,,	(கூட்டு)
1916—1922	லாயிட் ஜாரஜ்	,,	(கூட்டு)
1922—1923	போனர்லா	,,	(கன்)
1923—1924	பால்டுவின் (1)	,,	(கன்)
1924	மாக்டனல்ட் (1)	,,	(தொழிற்)
1924—1929	பால்டுவின் (2)	,,	(கன்)
1929—1931	மாக்டனல்ட் (2)	,,	(தொழிற்)
1931—1935	மாக்டனல்ட் பால்டுவின் தேசீய சர்க்கார்		(தொழிற்)
1935—1937	பால்டுவின் (3)	,,	(தொழிற்)
1937—1940	சேட்பர்லின்	,,	(தேசீய)
1940—1945	சர்ச்சில் (1)	,,	(தேசீய)
1945—1951	அட்லி	,,	(தொழிற்)
1951—1955	சர்ச்சில் (2)	,,	(கன்)
1955—1957	ஈடன்	,,	(கன்)
1957—1964	மாக்மில்லன்	,,	(கன்)
1964—1969	வில்சன்	,,	(தொழிற்)

முக்கிய நிகழ்ச்சிகளின் கால அட்டவணை

(1835 - 1972)

1835-1841 மெல்போர்ன் மந்திரிசபை.

1835 நகராட்சி மன்றங்களின் சீர்திருத்தச் சட்டம்.
பீல் பதவி துறத்தல், அவரது டாம்வொர்த் தேர்தல் அறிவிப்பு.

1836 பிறப்பிறப்பு, திருமணம் ஆகியவைகள் பதிவு செய்யப்படுதல். சமயஞ்சார்ந்த உயர் ஆணைக்குழு.
(தென் ஆப்பிரிக்க) பெரும் வெளியேற்றம்.
தெற்கு ஆஸ்திரேலியக் குடியேற்றம்.

1837 நான்காம் வில்லியம் இறத்தல், விக்டோரியா பட்டமெய்தல், கனடாவில் கலகங்கள்.

1838 மக்கள் சாசனம்.
தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்.

1839 பெல்ஜியம் சுதந்திரமடைதல்.
நியூஸிலாந்தில் பிரிட்டிஷார் புகல்.
டர்ஹாம் அறிக்கை.
மீண்டும் சிரியப் பிரச்சினை.
பள்ளியறைச் சீமாட்டிகள் நியமனம் பற்றிய பிரச்சினை.

1839-1842 முதல் ஆப்கானியப் போர்.

1840 நால்வர் கூட்டுறவு.
பென்னித் தபால் முறை.
மறு இணைப்புச் சட்டம்.
நியூ சௌத் வேல்ஸுக்குக் குற்றவாளிகளை அனுப்புதல் நிறுத்தப்படல்.
வைடாங்கி உடன்படிக்கை.

1840-1842 முதல் சீனப் போர்.

1841 மெல்போர்ன் பதவி துறத்தல்.

1841-1846 பீலின் இரண்டாவது மந்திரி சபை.

1842 சுரங்கச் சட்டம்.
வருமானவரி.
ஆஷ்பர்ட்டன் உடன்படிக்கை.

1843 அயர்லாந்து இளைஞர் இயக்கம்.
மாய்னூத் கல்லூரிக்கு மானியம்.
நேடால் சேர்த்துக்கொள்ளப்படல்.
சிந்து சேர்த்துக்கொள்ளப்படல்.
ஸ்காட்லாந்து திருச்சபையில் பிளவு.

1844 பீலின் தொழிற்சாலைச் சட்டம்.
பாங்குச் சாசனச் சட்டம்.

1845 ஐரிஷ் பஞ்சம்.

1846 தானியச் சட்டங்களின் ரத்து.
ஒரிகான் உடன்பாடு (அமெரிக்காவுடன்).
பீல் பதவி துறத்தல்.

1846-1852 ஜான் ரஸ்ஸல் பிரபுவின் மந்திரிசபை.

1847 பீல்டனின் தொழிற்சாலைச் சட்டம்—பத்து மணி வேலை நேரம்.

1848 சாட்விக்கின் பொது ஆரோக்கியச் சட்டம்.
புரட்சிகளின் ஆண்டு (ஜெர்மனி ஃபிரான்சு, ஆஸ்திரியா, சார்ட்டிஸ்டுகளின் ஊர்வலம், விண்ணப்பம்; இத்தாலி தோல்வி, ஐரிஷ் கலகம்).

1849 பஞ்சாப் சேர்த்துக்கொள்ளப்படல்.
மேற்கு ஆஸ்திரேலியாவுக்குக் குற்றவாளிகள் அனுப்பப்படல்.

1850 கிரே பிரபுவின் தொழிற்சாலைச் சட்டம்.
டான் பஸிபிகோ நிகழ்ச்சி.
பாமர்ஸ்டனுக்கு எச்சரிக்கை.

1851 பிரான்ஸில் லூயி நெப்போலியனின் திடீர்ப் புரட்சி.
பாமர்ஸ்டன் பதவி இழத்தல்.
நியூசௌத் வேல்ஸ், விக்டோரியாவில் தங்கம்.
மாபெருங் கண்காட்சி.

1852 ரஸ்ஸல் பதவி துறத்தல்.
மணலாற்று மாநாடு (போயர்கள்).
நியூஸிலாந்தில் பொறுப்பாட்சி.

1852-1855 **அபெர்டீன் மந்திரிசபை, முதல் டெர்பி மந்திரிசபை.**

1853 கிளாட்ஸ்டனின் தடையிலா வாணிகப் பட்ஜெட்.

1854 புளும்பாண்டின் மாநாடு (போயர்கள்).

1854-1855 நான்கு ஆஸ்திரேலியக் குடியேற்ற நாடுகளில் பொறுப்பாட்சி.

1854-1856 கிரிமியப் போர், ஆல்மா, பாலக்லாவா; இங்கெர்மென்.

1855-1858 **பாமர்ஸ்டனின் முதல் மந்திரிசபை.**

1856 நியூஸிலாந்துக்குச் சுயாட்சி.
செபாஸ்டபோல் வீழ்ச்சி, பாரிஸ் உடன்பாடு.

1857 இந்தியப் பெருங் கலகம்.

1858-1859 **இரண்டாவது டெர்பி மந்திரிசபை.**

1858 கொலை சூழ்ச்சி மசோதா.
பாமர்ஸ்டன் பதவித் துறப்பு.
யூதர்கள் பாராளுமன்றத்தில் இடம் பெறல்.
கிழக்கிந்தியக் கம்பெனியின் முடிவு.

1859-1865 **பாமர்ஸ்டனின் இரண்டாவது மந்திரிசபை.**

1859 க்யூன்ஸ்லாந்துக்குப் பொறுப்பாட்சி.

1859-1860 இத்தாலிய ஐக்கியம்.

1860 கிளாட்ஸ்டனின் தடையிலா வாணிக பட்ஜெட்.
மவோரிகளின் போர்.

1861 அரசியார் கணவர் ஆல்பர்ட் இறத்தல்.
அமெரிக்க உள்நாட்டுப் போர், அலபாமா நிகழ்ச்சி.

1862 தபால் நிலைய சேமிப்பு பாங்கு.

1863 ஃபெனியன் இயக்கம்.

1864-1865 ஸ்லெஸ்விக் ஹோல்ஸ்டைன் பிரச்சினை.

1865 பாமர்ஸ்டன் இறத்தல்

1865-1866 **ரஸ்ஸல் மந்திரிசபை (இரண்டாவது).**

1866 ஃபெனியன்கள் கனடாமீது படையெடுத்தல்.
அமெரிக்க ஐக்கிய நாடுகள் அலாஸ்காவை வாங்கல்.

1866-1868 **மூன்றாவது டெர்பி மந்திரிசபை.**

1866 ஆஸ்திரிய பிரஷ்யப் போர்.

1867 இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்.
தொழிற் சங்கம் பற்றிய ராயல் கமிஷன்.
பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் — கனடா டொமினியனுதல்.

1868-1874 **கிளாட்ஸ்டனின் முதல் மந்திரிசபை.**

1868 டெர்பி பதவி துறத்தல், டிஸ்ரேலியின் முதல் மந்திரி சபை, கிளாட்ஸ்டன் பதவி ஏற்றல்.
மேற்கு ஆஸ்திரேலியாவுக்குக் குற்றவாளிகளை அனுப்பும் வழக்கம் நிறுத்தப்படல்.

1869 ஐரிஷ் திருச்சபைச் சட்டம்.
சூயெஸ் கால்வாய் திறக்கப்படல்.

1870 ஐரிஷ் நிலச் சட்டம், சுயாட்சிச் சங்கம், ஆரம்பக் கல்விச் சட்டம்.
மானிட்டோபா கனடா டொமினியனோடு சேரல்.
பிராங்கோ பிரஷ்யப் போர்.
மூன்றும் நெப்போலியனின் வீழ்ச்சி, மூன்றும் ஃபிரெஞ்சுக் குடியரசின் தோற்றம்.

1871 கார்டுவெல்லின் இராணுவச் சீர்திருத்தங்கள்.
கருங்கடலில் ரஷ்யக் கடற்படை.
இணங்காதோர், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜில் இடம் பெறல்.

1871 தொழிற்சங்கங்கள் சட்டம்.
குறுகிய காலச் சேவை முறை இராணுவத்தில் புகுத்தப்படல்.
கனடாவோடு, பிரிட்டிஷ் கொலம்பியா சேர்தல்.

1872 மறைவு வாக்கீட்டுத் தேர்தல் சட்டம்.
சேனையில் பதவி விற்பனை முறை ஒழிதல்.
கேப் குடியேற்ற நாட்டிற்குப் பொறுப்பாட்சி.

1873 ரயில்வே, கால்வாய்ப் போக்குவரத்துக் கமிஷன், கனடாவோடு, பிரின்ஸ் எட்வர்டு தீவு சேர்தல்.

1874 கிளாட்ஸ்டனின் ராஜினமா.

1874-1880 **டிஸ்ரேலியின் இரண்டாவது மந்திரிசபை.**

1875 பொது ஆரோக்கியச் சட்டம்.
தொலைபேசி கண்டுபிடிக்கப்படல்.
சூயெஸ் கால்வாய்ப் பங்குகள் வாங்கப் பெறல்.

1876 பல்கேரியப் படுகொலைகள்.

1877-1878 ரஷ்யத் துருக்கிப் போராட்டம்.

1877 விக்டோரியா இந்தியப் பேரரசியாதல்.
டிரான்ஸ்வால் சேர்த்துக்கொள்ளப்படல்.

1878 ஸான் ஸ்டீஃபானோ, பெர்லின் உடன்படிக்கைகள்.

1879 எகிப்தில் ஆங்கிலப் பிரெஞ்சு இரட்டையாட்சி.
இருவர் கூட்டுறவு (ஆஸ்திரியா, ஜெர்மனி)
அயர்லாந்து நிலச் சங்கம்.
ஜுலுக்கள் போர்.
மிட்லோதியன் தேர்தல்.

1880 டிஸ்ரேலியின் ராஜிநாமா.

1880-1885 கிளாட்ஸ்டனின் இரண்டாவது மந்திரி சபை.

1880-1882 அயர்லாந்தில் ஃபார்ஸ்டர்.

1881 முதல் போயர் யுத்தம்; மதூபா குன்றுச் சண்டை.
இரண்டாவது ஐரிஷ் நிலச் சங்கம்.
முதல் அடக்குமுறைச் சட்டம்.
டிஸ்ரேலி இறத்தல்; கார்லைல் இறத்தல்.

1882 போனிக்ஸ் பூங்கா படுகொலைகள்.
இரண்டாவது அடக்குமுறைச் சட்டம்.
எகிப்தியக் கலகம்; டெல்-எல்-கபீர் போர்க்களம்.
முக்கூட்டுறவு (ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி)

1883 சட்டத்துப் புறம்பான ஊழல் முறை ஒழிப்புச் சட்டம்.

1884 மூன்றுவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்.

1885 கார்டன், கார்டுமில் கொல்லப்படல்;
கிளாட்ஸ்டன் ராஜிநாமா.

1885-1886 சாலிஸ்பரியின் முதல் மந்திரிசபை.

1885 கனடிய பஸிபிக் ரெயில்வே.
பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கக் கம்பெனி.
ஆஷ்போர்ன் ஐரிஷ் நிலம் வாங்கல் சட்டம்.
டெய்ம்லெரின் பெட்ரோல் பொறி.

1886 பர்மியப் போர்.
டிரான்ஸ்வாலில் தங்கம் கிடைத்தல்.
முதல் சுயாட்சி மசோதா.
சாலிஸ்பரி ராஜிநாமா—கிளாட்ஸ்டனின் மூன்றுவது மந்திரிசபை.
கிளாட்ஸ்டனின் ராஜிநாமா.

1886-1892 சாலிஸ்பரியின் இரண்டாவது மந்திரிசபை.

1887 ஐரிஷ் நிலச்சட்டம்; மூன்ருவது அடக்குமுறைச் சட்டம்.
விக்டோரியா இராணியாரின் வெள்ளி விழா.
முதல் குடியேற்ற நாடுகளின் மாநாடு.

1888 தல ஆட்சிமுறைச் சட்டம்; கவுன்டி மன்றங்கள் ஒழிதல்.

1889 துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.
பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்கக் கம்பெனி தோற்றம்.
ரொடீஷியா.
கடற்படைப் பாதுகாப்புச் சட்டம்.

1890 மேற்கு ஆஸ்திரேலியாவுக்குப் பொறுப்பாட்சி.

1892 சாலிஸ்பரியின் பதவி துறப்பு.

1892-1894 கிளாட்ஸ்டனின் நான்காவது மந்திரிசபை.

1893 இரண்டாவது அயர்லாந்து சுயாட்சி மசோதா.
நேட்டாலுக்குப் பொறுப்பாட்சி.

1894 கிளாட்ஸ்டனின் ராஜிஞமா.

1894-1895 ரோஸ்பரியின் மந்திரிசபை.

1894 தல ஆட்சிமுறைச் சட்டம் (ஜில்லா, பாரிஷ் மன்றங்கள்).

1895 ரோஸ்பரி ராஜிஞமா.

1895-1902 சாலிஸ்பரியின் மூன்ருவது மந்திரிசபை.

1895 ஜேமிஸன் பாய்ச்சல் (தென் ஆப்பிரிக்கா).

1896 வெனிஸுலா எல்லைத் தகராறு.

1896-1898 சூடான் கைப்பற்றப்படல்.

1897 விக்டோரியா இராணியாரின் வைர விழா.
இரண்டாவது குடியேற்ற மாநாடு.
துருக்கிக்கும் கிரீஸுக்குமிடையே போர்.

1898 ஆம்டுர்மன் போர்க்களம்; சூடான் வெல்லல்.

1899-1902 இரண்டாவது போயர் யுத்தம்.

1900 தொழிற் கட்சியின் தோற்றம்.
ஆஸ்திரேலியக் காமன்வெல்த் சட்டம்.

1901 விக்டோரியா இராணியாரின் மரணம்.
ஏழாம் எட்வர்ட் பட்டமெய்தல்.
தொழிற்சாலை—சட்டம் தொகுக்கப்படல்.

1902 சாலிஸ்பரி ராஜிநாமா.
கல்விச் சட்டம்.
போயர் குடியரசுகள் பணிதல்; வெரீனிகிங் உடன்படிக்கை.
ஆங்கில ஜப்பானியக் கூட்டுறவு.

1902-1905 பால்பர் மந்திரிசபை.

1903 சேம்பர்லின் ராஜிநாமா, காப்பு வரிச் சீர்திருத்த இயக்கம்.
ஐரிஷ் நிலம் வாங்கல் சட்டம்.

1904 ஆங்கில பிரெஞ்சு மனமார்ந்த நேச உடன்படிக்கை.

1904-1905 ரஷ்ய ஜப்பானியப் போர்.

1905 மொராக்கோ நெருக்கடி.
பால்பர் ராஜிநாமா.

1905-1908 காம்ப்பெல் பானர்மேன் மந்திரிசபை.

1906 டிரான்ஸ்வாலுக்குப் பொறுப்பாட்சி.
அல்ஜஸிராஸ் மகாநாடு.

1907 ஆரஞ்சு நதிக் குடியேற்ற நாட்டிற்குப் பொறுப்பாட்சி.
ஆங்கில-ரஷ்ய மாநாடு-முக்கூட்டு நேச உடன்படிக்கை.

1908 முதல் பாஸ்னிய நெருக்கடி.
காம்ப்பெல் பானர்மேன் ராஜிநாமா.
துருக்கியில் புரட்சி.

1908-1911 ஆஸ்க்வித்தின் முதலாவது மந்திரிசபை.

1909 மக்கள் வரவு செலவுத் திட்டம்.
முதியோர்க்கு உதவிப் பணம்.

1910 ஏழாம் எட்வர்ட் மரணம்; ஐந்தாம் ஜார்ஜ் பட்டமெய்தல்.
பிரபுக்கள் சபையில் பட்ஜெட் நெருக்கடி
தென் ஆப்பிரிக்க ஒன்றியம் ஏற்படல்.

1911 பாராளுமன்றச் சட்டம்.
தேசீய ஆரோக்கியக் காப்புறுதி முறை.
தேசீய வேலையின்மைக் காப்புறுதி முறை.
இத்தாலி துருக்கியிடையே போர்.
அகெடிர் நெருக்கடி.

1912 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.
பால்கன் போர்.
மூன்றாவது சுயாட்சி மசோதா.

1914 இரண்டாவது பாஸ்னிய நெருக்கடி.
முதல் உலகப் போரின் ஆரம்பம்.
வெல்ஷ் திருச்சபையின் நிலைகுலைப்பு.
சுயாட்சி மசோதா நிறைவேறி நிறுத்தி வைக்கப் பெறல்.
எகிப்து பாதுகாப்புக்குட்பட்ட நாடாதல்.
கிச்சினர் போர் அமைச்சராதல்.
மேற்கு முனையில் போர்; மான்ஸ், மார்ன் போர்க் களங்கள்.

1915 கேலிபோலி தாக்கப்படல்.
ஆஸ்க்வித் பதவி துறத்தல்.

1916-1922 லாயிட் ஜார்ஜ் மந்திரிசபை.

1916 கூட்டு மந்திரிசபை அமைத்தல்.

1917 ரஷ்யப் புரட்சி, லெனின் ஆதிக்கம் பெறல்.
அமெரிக்கா போரிலிறங்கல்.

1918 போர் நிறுத்தம்.
நான்காவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்.
கல்விச் சட்டம்.
ப்ரெஸ்ட் லிடோவ்ஸ்க் உடன்பாடு.
வில்ஸனின் பதினான்கு கோட்பாடுகள்.
மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை.
அயர்லாந்தில் 'நாம் நமக்கே' கட்சியின் ஆதிக்கம்.

1919 வெர்சேல்ஸ் உடன்படிக்கை.
சர்வதேசச் சங்கம்.
இந்திய அரசாங்கச் சட்டம்.

1920 செவ்ரஸ் (துருக்கியுடன்) உடன்படிக்கை.
செண்ட் ஜெர்மெய்ன் (ஆஸ்திரியா), டரெய்னான் (ஹங்கேரி) உடன்பாடுகள்.

1922 அயர்லாந்து சுயேச்சைக் குடியரசாதல்.
வாஷிங்டன் கடற்படைக் குறைப்பு மகாநாடு.
முசோலினி ரோம் நகர் மீது படையெடுத்தல்.
துருக்கியின் விழிப்புணர்ச்சி, கமால் ஆட்டாடர்க்.

1923 லாசேன் உடன்படிக்கை (துருக்கியுடன்).
ஃபிரான்சு ரூர் பிரதேசத்தைக் கைப்பற்றல்.

1924 பால்டுவின் பதவித் துறப்பு; மாக்டனுல்டின் முதல மந்திரிசபை.
லெனின் மரணம்; ஸ்டாலின் ஆட்சியைக் கைப்பற்றல்.

1924-1929 பால்டுவினின் இரண்டாவது மந்திரிசபை.

1926 பொன் நாணயத்திட்டம் பிரிட்டனில் மீண்டும் வரல்.
ஜெர்மனி சர்வதேசச் சங்கத்தில் இடம் பெறல்.
பிரிட்டனில் பொது வேலை நிறுத்தம்.

1927 லாப்ரடார் எல்லைச் சிக்கல் தீரல்.

1929 கெல்லாக் ஒப்பந்தம்.
பெண்களுக்கு வாக்குரிமை (21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு).

1929 பால்டுவின் ராஜினுமா.
அமெரிக்காவில் பொருளாதாரச் சீர்குலைவு.
ரைன் நதிப் பிரதேசத்திலிருந்து பிரிட்டிஷ் ஃபிரெஞ்சுத் துருப்புகள் விலகல்.

1929-1931 மாக்டனுல்டின் இரண்டாவது மந்திரிசபை.

1930 லண்டன் கடற்படை மாநாடு.

1931 ஐரோப்பாவில் பொருளாதாரச் சீர்குலைவு.
தேசீய சர்க்கார்.

1931-1935 மாக்டனுல்டின் மூன்ருவது மந்திரிசபை.

1931 ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றல், சர்வதேசச் சங்கத்தினின்றும் விலகல், வெஸ்ட்மினிஸ்டர் நிலவரிச்சட்டம்.

1932 நஷ்டஈடு பற்றிய ஷரத்துகள் வெர்சேல்ஸ் உடன்பாட்டினின்றும் நீக்கப்படல்.
ஒட்டாவா மாநாடு.

1932 லண்டன் பொருளாதார மாநாட்டின் தோல்வி.
ஜெனிவா ஆயுதக் குறைப்பு மாநாட்டின் தோல்வி.
பிராங்லின் ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனுதிபதியாதல்.
ஹிட்லர் ஜெர்மன் சான்சலராதல்.

1935-1937 **பால்டுவினின் மூன்ருவது மந்திரிசபை, மாக்டனுல்ட் ராஜிஞமா.**

1935 இந்திய அரசாங்கச் சட்டம்.
இத்தாலிய அபிசினியப் போர்.
ஜெர்மனி வெர்சேல்ஸ் உடன்பாட்டை மறுத்தல்.

1936 ஜெர்மனி சர்வதேசச் சங்கத்தினின்றும் விலகல்.
இத்தாலி அபிசினியாவைக் கைப்பற்றல்.
ஐந்தாம் ஜார்ஜ் இறத்தல், எட்டாம் எட்வர்ட் முடி துறப்பு.
ஆரும் ஜார்ஜ் பட்டத்துக்கு வரல்.

1937 இத்தாலிய ஜெர்மனியக் கூட்டுறவு.
பால்டுவின் பதவி நீங்கல்.

1937-1940 **சேம்பர்லின் மந்திரிசபை.**

1938 ஹிட்லர் ஆஸ்திரியாவைக் கைப்பற்றல்.
ஹிட்லர் செக்கோஸ்லோவேகியாவைப் பயமுறுத்தல்
மியூனிச் ஒப்பந்தம்.

1939 ஹிட்லர் செக்கோஸ்லோவேகியாவைக் கைப்பற்றல்.
முசோலினி அல்பேனியாவைக் கைப்பற்றல்.
ஜெர்மனி ரஷ்ய நட்புடன்பாடு.
ஹிட்லர் போலந்தைத் தாக்கல்.
இரண்டாவது உலகப் போர் தொடக்கம்.

1940-1945 **சர்ச்சிலின் முதல் மந்திரிசபை.**

1940 செம்பர்லின் ராஜிஞமா, சர்ச்சில் பிரதமராதல், இத்தாலி போரிலிறங்கல், ஃபிரான்சின் வீழ்ச்சி.

1941 ஜப்பானுடன் போர் தொடக்கம்.

1942 பீவரிட்ஜ் திட்டம்.

1945 போர் நிறுத்தம், சர்ச்சிலின் ராஜிஞமா.

1945-1951 **அட்லி மந்திரிசபை.**

1945 மின்சாரம், எரிவாய்வு தொழில்கள், போக்குவரத்து சாதனங்கள், இரும்புத் தொழில்கள் தேசீயமயமாதல்.

1951-1955 **சர்ச்சிலின் இரண்டாவது மந்திரிசபை.**

1952 ஆரும் ஜார்ஜ் இறத்தல், இரண்டாம் எலிஸபெத் பட்டமெய்தல்.

1955-1957 ஈடன் மந்திரிசபை.

1957 எகிப்தியப் படையெடுப்பு, ஈடன் பதவி துறத்தல், மாக்மில்லன் பிரதமராதல்.

1957-1964 மாக்மில்லன் மந்திரிசபை.
வாடகைச் சட்டம், கொலைக் குற்றச் சட்டம்.
தேசீயப் பொருளாதார வளர்ச்சிக் கழகம்.
காமன்வெல்த் குடியேறிகள் தடைச் சட்டம்.
ஹைட்ரஜன் குண்டு வெடிப்பு.
புரோபியூமோ புரளி.

1964-1969 வில்சன் மந்திரிசபை.
ரொடீஷியப் பிரச்சினை.
பொருளாதார நெருக்கடி.
தொழிற் கட்சி ஆட்சியின் சாதனைகள்.

பிரிட்டன் வரலாறு - III

1. விக்டோரியா மகாராணியாரின் காலம் (1837-1901)

[Victorian Age]

சில சிறப்பியல்புகள் (**Some Characteristics**): பேரரசு வளர்ச்சி—ஜனநாயகக் கொள்கையின் வளர்ச்சி—தடையிலா வாணிகக் கொள்கையின் வளர்ச்சி. மகாராணியாரின் வாழ்க்கைக் குறிப்பு; அவரது குணாதிசயங்கள்; இராணியாரின் ஆட்சி காலப்பிரிவுகள்; இராணியாரது ஆட்சியின் ஆரம்பகாலப் பிரச்சினைகள்: மெல்போர்ன் பிரபுவின் மந்திரி சபை (1837-41)—அரசியின் புதிய செலவுத் தொகை—கனடாவில் கலகம் - டர்ஹாம் அறிக்கை (1837-40) — போயர்களின் பெரும் வெளியேற்றம் (1835-43)—தொழிலாளர் இயக்கங்கள்—சமதர்மம்—கூட்டுறவு இயக்கம்—சார்ட்டிஸம்—ஜமைக்கா மசோதா—பள்ளியறைச் சீமாட்டிகள் நியமனம்பற்றிய சிக்கல்—மீண்டும் மெல்போர்ன்—பென்னித் தபால் முறை—இராணியின் திருமணம்-மெல்போர்ன் வீழ்ச்சி.

சில சிறப்பியல்புகள்
(Some Characteristics)

பேரரசு வளர்ச்சி

இங்கிலாந்தை ஆண்ட அரசர்களுக்குள்ளேயே மிக நீண்ட காலம் ஆட்சிப் பொறுப்பை வகித்தவர் விக்டோரியா மகாராணியாவார். அவரது ஆட்சிக்காலம் உண்மையில் பல சிறப்பியல்புகளைக் கொண்டிலங்குகின்றது. அவரது காலம்வரை இங்கிலாந்து பெரும்பாலும் தன் உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதிலேயே கவனத்தைச் செலுத்தியது. ஆனால், விக்டோரியாவின் காலத்தில் ஆங்கிலேயர்கள் பிரிட்டிஷ் பேரரசைப் பற்றிப் பெரிதும் அக்கறை கொள்ளலாயினர். உள்நாட்டுப் பிரச்சினைகளைவிடப் பேரரசுப பிரச்சினைகளே மக்களின் எண்ணத்தைப் பெரிதும் ஈர்த்தன.

விக்டோரியா மகாராணியார் காலம், பிரிட்டிஷ் பேரரசு எனும் சிறு செடியில் பல கிளைகளைக் கொண்டதொரு பெரு மரமாகப் பருத்துப் பரவியதொரு காலமாகும். அவரது காலத்துக்கு முன் இந்தியாவிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் மட்டுமே பரவியிருந்த பேரரசு, அவரது காலத்தில் வியத்தகு வண்ணம் விரைவாகக் கனடா, தென்னுப்பிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற கண்டங்களுக்கும் பரவியது. இங்ஙனம் பேரரசு விரிவடைந்ததால் பல புதிய பிரச்சினைகள் நாட்டில் முளைக்கலாயின. அவற்றைச் சமயோசிதமாகச் சமாளித்த பெருமை இராணியாருக்கும் அவரது அமைச்சர்களுக்குமே உரியதாகும்.

ஜனநாயகக் கொள்கையின் வளர்ச்சி

மகாராணியாரின் காலம் அரசியல் துறையில் நல்ல பல கருத்துக்களின் வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தது. ‘மக்களுக்காகவே மக்களால் நடத்தப்பெறும் மக்களுடைய ஆட்சி’ என ஆப்பிரஹாம் லிங்கனுல் விவரிக்கப்படும் ஜனநாயக ஆட்சி முறையானது மத்திய அரசாங்கத்திலும், உள்நாட்டுத் தல அரசாங்கங்களிலும், குடியேற்ற நாடுகளிலும் இக்காலத்தில்தான் பெரிதும் பேணப் பட்டு வளர்க்கப்பட்டது. பாராளுமன்றம் உண்மையிலேயே பொதுமக்களின் பிரதிநிதியாக விளங்கச் செய்வதற்காக இரு பெருஞ் சீர்திருத்தச் சட்டங்கள் 1867, 1884ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டன. தல அரசாங்கங்களில் பொதுமக்களின் பிரதிநிதித்துவம் பெருக்கப்பட்டது. பரோ, ஷயர், பாரிஷ் போன்ற தல நிர்வாகப் பிரிவுகளில் மேற்சொன்ன ஜனநாயகக் கொள்கையானது முறையே 1835, 1898, 1895ஆம் ஆண்டுகளில் புகுத்தப் பட்டது. அதே போன்று பிரதிநிதித்துவம் வாய்ந்த பொறுப் பாட்சியும், சுயாட்சியும் கனடா (1840), ஆஸ்திரேலியா (1850-90), தென் ஆப்பிரிக்கக் கேப் காலனி (1872) ஆகிய குடியேற்ற நாடுகளுக்கு வழங்கப்பட்டன. இந்தியா, அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு மட்டும் பொறுப்பாட்சி வழங்கப் பிரிட்டிஷார் காலந் தாழ்த்தினர்.

தடையிலா வாணிகக் கொள்கையின் வளர்ச்சி

விக்டோரியா மகாராணியாரின் காலம் வியாபாரத் துறையில் தடையிலா வாணிகக் கொள்கையின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தது. உலகின் பல்வேறு நாடுகளும் தங்கள் தங்களது திறமைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்பப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்றும், அங்ஙனம் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்கள் யாதொரு தடையுமின்றி உலகநாடுகளிடையே விற்கப்படவேண்டுமென்றும் பிரிட்டன் பறை சாற்றியது. அக்

கொள்கையை யாவருக்கும் விளக்க வேண்டி 1851ஆம் ஆண்டில் லண்டன்மாநகரில் ஒரு பெரிய கண்காட்சி நடைபெற்றது. ஆனால், ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும் பிரிட்டனின் கொள்கைக்கு அவ்வளவாக ஆதரவு காட்டவில்லை.

இவ்வாறு விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக்காலம் அரசியல் துறையில் ஜனநாயகக் கொள்கையின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத் துறையில் பேரரசுக் கொள்கையின் வளர்ச்சிக்கும், தடையிலா வாணிகக் கொள்கையின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவமுள்ளதாக விளங்குகிறது.

மகாராணியாரின் வாழ்க்கைக் குறிப்பு

மிக இளவயதிலேயே பிரிட்டனையாளும் பெரும் பொறுப்பை ஏற்ற விக்டோரியா மகாராணியார், அவரது பெற்றோர்களின் ஒரே புதல்வியாவார். 1819ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதியன்று அவர் கென்ஸிங்டன் மாளிகையில் பிறந்தார். அவரது தந்தை கென்ட் கோமகனான எட்வர்ட் என்பவர். மூன்றாம் ஜார்ஜ் அரசரின் நான்காம் புதல்வர் எட்வர்ட். நல்ல திறமையும், சீரிய ஒழுக்கமும் ஒருங்கே கொண்டவர். அடிமை முறை ஒழிப்பு, கத்தோலிக்க விடுதலை போன்ற தாராளக் கொள்கைகளை ஆதரித்தவர். விக்டோரியாவின் தாயார் விக்டோரியா மேரி லூயிஸா **(Victoria Mary Louisa)** என்பவர். அவர் சாக்ஸிகோபர்க் கோமகனான பிரான்சிஸ் என்பாரது புதல்வி. அவர் உயர்ந்த ஒழுக்கமும் கண்டிப்பான குணமும் உடையவர். அவரது கணவன் அகால மரணமடைந்து விட்டதன் காரணமாக விக்டோரியாவை அவரே நன்கு பராமரித்து ஒழுக்கம், நேர்மை, காலந்தவறாமை, பணிவு, தியாகம் போன்ற பண்புகளை வளர்த்தார். விக்டோரியாவின் இளமைக்கால ஆசிரியர்களாய் அமைந்தவர்கள், அவரது தாயாரும் தாய்மாமனான லியோபோல்டு என்னும் சாக்ஸிகோபர்க் கோமகனுமேயாவர். நான்காம் வில்லியம் இறந்தபின் அவர் 1837ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் தேதி பிரிட்டனுக்கும் அயர்லாந்துக்கும் அரசி என அறிவிக்கப்பட்டார். 1838ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் தேதி அவரது முடிசூட்டு விழா வெஸ்ட்மினிஸ்டரில் இனிது நடந்தேறியது. 1840ஆம் ஆண்டில் அவருக்கும் ஆல்பர்ட் என்ற சாக்ஸிகோபர்க் இளவரசருக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. தானே விரும்பிக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட ஆல்பர்ட்டை இராணியார் இறுதிவரை உளமார நேசித்து வந்தார். கருத்தொருமித்த காதலர்களாய் நெடுங்

காலம் வாழ்ந்த அவர்கள் நான்கு ஆண்மக்களையும், ஐந்து பெண் மக்களையும் விட்டுச் சென்றனர். 1877ஆம் ஆண்டில் விக்டோரியா வுக்கு 'இந்தியப் பேரரசி' என்ற பட்டம் கிடைத்தது. 1901ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் தேதி அரசியார் இப்பூவுலகை நீத் தார். அதன்பின் அவரது மூத்த மகனை ஆல்பர்ட் எட்வர்ட், ஏழாம் எட்வர்டு என்ற பட்டத்துடன் அரியணையேறினர்.

அவரது குணாதிசயங்கள்

அரசியார் பல அருங்குணங்களுக்கு இருப்பிடமானவர்; 'பணி யுமாம் என்றும் பெருமை' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஓர் எடுத் துக்காட்டாக விளங்கினர். அடக்கமே உருவானவர்; பொறுமைக் கோர் இருப்பிடம்; உண்மைக்கோர் உறைவிடம். 'யாமறிந்த மாந்தருக்குள் அவரைப்போல் உண்மையுள்ளம் படைத்தோரை யாங்கணுமே கண்டதில்லை' என ஜான் பிரைட் என்னும் ஆசிரியர் கூறியுள்ளார். அரசியல் சிக்கல்களை எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய அறிவாற்றல் இயல்பாகவே அவரிடம் குடிகொண்டிருந் தது. ஆழ்ந்த நுண்ணறிவோடு இரக்க சிந்தனையும் அவர்பால் மிகுதியாகக் காணப்பட்டது. அடக்கம், அன்பு, கருணை போன்ற பெண்மைக் குணங்களோடு கண்டிப்பு, நேர்மை, சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறன், அமைச்சர்களைக் கட்டுப்படுத்தும் வன்மை போன்ற ஆண்மைக் குணங்களும் சேர்ந்து அவரிடம் மிளிர்ந்தன.

இராணியாரின் ஆட்சிகாலப் பிரிவுகள்

இராணியாரது நெடுநாளைய ஆட்சியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவில் (1837-46) பீல் என்னும் பேரமைச்சர் பல அரிய சீர்திருத்தங்கள் செய்வதைக் காண்கிறோம். இரண்டா வது பிரிவில் (1846-1865) பாமர்ஸ்டன் பிரபு தமது ஒப்பற்ற வெளி நாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்துக் கிரிமியப் போர், இந்தி யப் பெருங்கலகம் போன்றவைகளைச் சமாளிப்பதைப் பார்க்கின் றோம். மூன்றாவது பிரிவை (186-51885) டிஸ்ரேலி **(Disraeli)**, கிளாட்ஸ்டன் **(Gladstone)** என்ற இருபெரு அமைச்சர்களிடையே ஏற்பட்ட போட்டிகளும், அவர்கள் நாட்டிற்குச் செய்த தொண்டு களும் நிரப்பிவிடுகின்றன. நான்காவது பிரிவில் (1885-1901), ஆங்கிலப் பேரரசானது எங்ஙனம் ஆப்பிரிக்காக் கண்டத்தில் பரவியதென்பதைக் காண்கிறோம். பொதுவாக நோக்குமிடத்து, விக்டோரியா இராணியாரின் ஆட்சி என்னும் அருங்கலத்தை செவ்வனே செலுத்திய மாலுமிகள் பீல், பாமர்ஸ்டன், கிளாட்ஸ்

டன், டிஸ்ரேலி என்னும் நான்கு அறிஞர்களேயாவர். அந் நால்வரது சாதனைகளின் விளக்கமும், இராணியாரது ஆட்சி பற்றிய விரிவுரையும் ஒன்றே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இராணியாரது ஆட்சியின் ஆரம்பகாலப் பிரச்சினைகள்

மெல்போர்ன் பிரபுவின் மந்திரி சபை *(1837–41)*

பதினெட்டே வயது நிரம்பப்பெற்ற இளமங்கையான விக்டோரியா அரசியை எதிர்நோக்கி நின்ற பிரச்சினைகள் பல. உள்நாட்டில் சார்ட்டிஸ்டுகள் என்ற தீவிரவாதிகளும், தானியச்சட்ட எதிர்ப்புவாதிகளும் எந்தச் சமயத்திலும் பலாத்காரத்தில் இறங்கக்கூடிய நிலையிலிருந்தனர். வெளிநாடுகளில்—கனடாவில் புரட்சித் தீ குமுறிக் கொண்டிருந்தது. அயர்லாந்தியர் அதிருப்தியின் எல்லையை எட்டிக்கொண்டிருந்தனர். இந்திய எல்லைப்புறத்திலும் சீனுவிலும் புதிய இராணுவப் பிரச்சினைகள் எழுந்தன. இவை எல்லாவற்றினும், முடியரசின் பெருமையையும் கண்ணியத்தையும் மீண்டும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு இராணியாருக்கு ஏற்பட்டது. மக்களுடைய மனத்தில் முடியரசின்மீது பக்தியைய்யும் மரியாதையையும் வளர்க்கவும், முக்கியமாக நடுநிலை வகுப்பாரின் ஆதரவைப் பெறவும் இராணியார் பாடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இராணியாருக்கு இவ்விஷயத்தில் அவரது கணவர் பெரிதும் உதவிபுரிந்தார். ஆரம்பத்தில் அவரை ஆங்கிலேயர் வெறுத்தனரேனும், நாள் செல்லச் செல்ல அவர்களுக்கு அவர்பால் நேசமும் மரியாதையும் ஏற்பட்டன. அவரது அரசியலறிவும், ஒழுக்கமும் மிக உயர்ந்தனவாயிருந்தன. அரண்மனையில் அவர் கௌரவத்தை நிலைநாட்டியதோடு இசை, நாடகம், ஓவியம் போன்ற நுண்கலைகளையும் வளர்த்தார். அயல்நாட்டு விவகாரங்களில் அவர் கருத்துகளும், அமைச்சர்களின் கருத்துகளும் பல சமயங்களில் முரண்பட்டன. எனினும், ஐரோப்பிய ராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்த அவரது உதவி பெரிதும் தேவையாயிருந்தது.

பல பிரச்சினைகளால் சூழப்பட்டிருந்தமையால், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் உணர்ந்த இள இராணியாருக்கு உறுதுணையாயிருந்து ஆறுதல் கூறிப் பிரச்சினைகளையும் கூடியவரை சமாளித்த பெருமை மெல்போர்ன் பிரபுவுக்குரியதாகும். இராணியார் அவரைத் தம் தந்தைபோல் கருதிப் போற்றினர். அவரும் அரசியாரின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பொதுவாழ்க்கைக்கும் இன்றியமையாத அறிவுரைகளை மிகத் திறமையாக

எடுத்தோதி, அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொண்டார். 1837 முதல் 1841 வரை அவர் பிரிட்டனின் பிரதமராகப் பணியாற்றினார்.

அரசியின் புதிய செலவுத்தொகை (New Civil List)

அரசியார் பட்டமெய்தியவுடன் கூடிய பராளுமன்றமானது முதன்முதலாக அவரது செலவுத் தொகையை நிர்ணயித்தது. மூன்றாம் வில்லியம் காலத்திலிருந்து அரசருக்கென ஒதுக்கப்பட்ட செலவுத்தொகை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. மூன்றாம் ஜார்ஜ் தமது பரம்பரை வருமானங்களை யெல்லாம் நாட்டுக்கு அர்ப்பணித்துவிட்டு, அதற்குப் பதிலாக 8,00,000 பவுன்களை ஆண்டொன்றுக்குச் செலவுத் தொகையாகப் பாராளுமன்றத்திடமிருந்து பெற்றார். நான்காம் வில்லியம் காலத்து அத்தொகை 5,10,000 பவுனாகக் குறைக்கப்பட்டது. விக்டோரியா இராணியாருக்கு அளிக்கப்பட்ட தொகை 3,85,000 பவுன்களாகும். லங்காஸ்டர், கார்ன்வால் என்ற இரண்டு பிரதேசங்களிலிருந்துவரும் வருமானத்தைத் தவிர மற்றைய பரம்பரை வருமானங்களை எல்லாம் அரசியார் பாராளுமன்றத்துக்கே தத்தம் செய்துவிட்டார். அதனால் நாடு நலமுற்றதோடு அரசியாரின் மதிப்பும் உயர்ந்தது.

கனடாவில் கலகம்—டர்ஹாம் அறிக்கை (1837-40)

அரசியின் செலவுத்தொகையை நிர்ணயித்தபின் பாராளுமன்றம் கலைந்தது. ஆனால் கனடாவிலிருந்து வந்த பரபரப்பான செய்திகளால் அது விரைவிலேயே மீண்டும் கூடவேண்டியதாயிற்று. கனடா ஆங்கிலேயருக்கு 1763ஆம் ஆண்டில் கிடைத்தபோது அங்கு முற்றிலும் ஃபிரெஞ்சுக்காரர்களே இருந்தனர். அதன்பின் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்த ராஜ விசுவாசிகள் (Loyalists) பலர் வந்து கனடாவில் குடியேறினர். இங்ஙனம் குடியேறிய பிராட்டஸ்டெண்ட் ஆங்கிலேயருக்கும், ஏற்கெனவே அங்கு வாழ்ந்த கத்தோலிக்கப் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. அவர்களுக்குள் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய பிட் என்னும் பேரமைச்சர் 1791ஆம் ஆண்டில் கனடா அரசியலமைப்புச் சட்டத்தை (Canada Constitutional Act) ஏற்படுத்தினார். அச் சட்டப்படி கனடா இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஃபிரஞ்சுக்காரர் பெரும்பான்மையாக வாழ்ந்த தென்பாகமும், ஆங்கிலேயர் அதிகமாக வாழ்ந்த வடபாகமும் தனித்தனியே ஒவ்வொரு கவர்னரால் ஆளப்பட்டன. அவருக்கு உதவியாக ஒரு நிர்வாக சபையும் ஈரங்கச் சட்ட சபையுமிருந்தன. இச் சட்டத்தால் கனடாவில் அமைதி ஏற்படவில்லை. ஏனெனில், நிர்வாக சபை, சட்டசபைக்குப் பொறுப்புள்ளதாயில்லை. எனவே, இரு

சபைகளும் அடிக்கடி தம்முள் மோதிக்கொண்டன. முக்கியமாகத் தெற்குக் கனடாவில் இத்தகு பூசல்கள் அடிக்கடி நடைபெற்றன. அங்கிருந்த லூயி பேப்பனு (Louis J. Papineau) என்ற ஒரு ஃபிரெஞ்சுத்தலைவர் 1837-ல் ஒரு சுதந்திரக் கிளர்ச்சியைத் துவக்கினுர். அதையொட்டி வட கனடாவிலும் வில்லியம் லயோன் மெக்கன்ஸி (William Lyon Mackenzie) என்ற ஒரு தலைவர் கலகமொன்றைத் துவக்கினுர். இக் கலகங்களை அடக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டது. முடிவில் அவை முற்றிலும் ஒடுக்கப்பட்டன. எனினும், மெல் போர்ன் மந்திரிசபை கனடாவின் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவான தீர்வுகாண விரைந்தது. அதன்படி 1838-ல் கனடாவில் அரசியல் திட்டமானது செயற்படாமல் நிறுத்தப்பட்டது. டர்ஹாம் பிரபு அந்நாட்டின் உயர்ஆணையாளராக (High Commissioner) நியமிக்கப்பட்டார்.

டர்ஹாம் பிரபு கனடாவின் நிலையை நன்கு ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையில் அவர் கனடாவுக்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினுர். இரு கனடாக்களும் ஒன்ருக இணைக்கப்பட வேண்டுமெனவும்,சட்டமன்ற உறுப்பினர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டுமெனவும், தல ஆட்சி சீர்திருத்தப்பட வேண்டுமெனவும், மத்திய நிர்வாக சபை, சட்டசபைக்குப் பொறுப்புள்ளதாக இருக்க வேண்டுமெனவும், கூடியவரை பிரிட்டிஷ் அரசாங்கம் கனடாவின் ஆட்சியில் தலையிடக்கூடாதெனவும் அவரது அறிக்கை சிபாரிசு செய்தது. ஆங்கிலக் குடியேற்ற நாட்டுக் கொள்கையில் ஒரு பெரும் திருப்பத்தை அவ்வறிக்கை ஏற்படுத்தியது. குடியேற்ற நாடுகளின் சுயாட்சிக்கு ஒரு மகாசாசனமாக அது மதிக்கப்படுகிறது. தாராளத் தன்மையில் 1832ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தோடு அது ஒப்பிடப்படுகிறது. இவ்வளவு தாராளத்தன்மை வாய்ந்த அறிக்கையைப் பிறப்பித்த டர்ஹாம் பிரபு நடைமுறையில் வெகு குறுகியநோக்குடன் நடந்து கொண்டார். நிர்வாக சபையில் புதிய உறுப்பினர்களை நியமித்துக்கொண்டு, சர்வாதிகாரிபோல் அவர் நடக்கலானுர். கலகத்தில் கலந்துகொண்ட எண்மரை அவர் பெர்முடா (Bermuda) தீவுக்கு நாடுகடத்தினுர். ஏற்கெனவே நாட்டைவிட்டு ஓடிப்போன மற்றும் பதினைந்து பேர்கள் நாட்டுக்குள் வரக்கூடாதெனத் தடுத்தார். இதற்கான அவசரச் சட்டமொன்றை (Ordinance) அவர் பிறப்பித்த போது நாடெங்கும் அதற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே, பிரிட்டிஷ் சர்க்கார் அச்சட்டத்தை நிராகரித்துவிட்டது. மெல்போர்ன் பிரபு, டர்ஹாமின் விவேகமின்மையைக் குறித்து

வருந்தினர். ஆனல், வெளிப்படையாக அவரைக் கண்டிக்க முடிய வில்லை. டர்ஹாம் மனமுடைந்து நாடு திரும்பினர். அவரை டோரி களும் விக்குகளும் சேர்ந்துகொண்டு பலமாகத் தாக்கிப் பேசினர். அத்தாக்குதலைப் பொறுக்க முடியாமலோ என்னவோ டர்ஹாம் தாய்நாடு திரும்பிய இரண்டே ஆண்டுகளில் *(1840)* இறந்தார். ஆனல், அவரது அறிக்கையில் காணப்பட்ட சிபாரிசுகளை அரசாங் கம் பெரிதும் ஏற்றுக்கொண்டது. *1840*-ல் கனடா ஐக்கியச் சட்டம் **(Act of Union)** பாராளுமன்றத்தில் நிறைவேறியது. அதன்படி பொறுப்பாட்சியும் சுயாட்சியும் கனடாவில் ஏற்பட்டன. நாளடை வில் இச் சுயாட்சிக் கொள்கையானது ஏனைய குடியேற்ற நாடு களிலும் புகுத்தப்பட்டது.

போயர்களின் பெரும் வெளியேற்றம் (The Great Trek of the Boers, *1835–43*)

கனடாவில் கலகம் தோன்றியது போன்றே தென் ஆப்பிரிக்கா விலும் ஒரு சாத்வீக எதிர்ப்பியக்கம் அங்கு வாழ்ந்த போயர்கள் என்னும் டச்சுக்காரர்களிடையே தோன்றியது. 1833ஆம் ஆண்டில் அடிமை முறை இங்கிலாந்தில் ஒழிக்கப்பட்டபோது தென் ஆப்பி ரிக்காவில் வாழ்ந்த போயர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அடிமைகளின்றி வெப்பம் மிகுந்த கேப் குடியேற்ற நாட்டில் விவசா யம் சரிவர நடைபெருது என அவர்கள் கூறினர். ஆனல், பிரிட்டிஷ் அரசாங்கம் அடிமைகளை விடுதலை செய்யவேண்டும் என வற்புறுத்தியது. இதை விரும்பாத போயர்கள் கேப் காலனி என் னும் குடியேற்ற நாட்டை விட்டுத் தங்கள் உடைமைகளோடு ஆரஞ்சு நதிக்கு வடக்கே சென்று நேடால் என்ற புதிய குடியேற்ற நாட்டைத் தோற்றுவித்தனர். குடும்பங் குடும்பமாக அவர்கள் இடம்பெயர்ந்த இந் நிகழ்ச்சிதான் ‘பெரும் வெளியேற்றம்’என அழைக்கப்படுகிறது. புதிய இடத்திற்குச் சென்ருல் அங்கு, தம் விருப்பம்போல் அடிமைகளை வைத்துக் கொள்ளலாம் என்ற போயர்களின் விருப்பம் நிறைவேருதவாறு ஆங்கிலேயர் தடுத் தனர். கேப் காலனியின் கவர்னராக இருந்த சர் ஜார்ஜ் நேபியர் என்பவர் போயர்கள் எங்கு சென்ருலும் பிரிட்டிஷ் குடிமக்களே என அறிவித்ததோடு, நேடால் பிரதேசத்தையும் கேப் காலனி யோடு 1843-ல் சேர்த்துவிட்டார்.

தொழிலாளர் இயக்கங்கள் (Working Class Movements)

வெளிநாடுகளில் மேற்கூறியவாறு பல பிரச்சினைகளைச் சமாளித்த மெல்போர்ன் மந்திரிசபைக்குத் தொழிலாளர்களின் இயக்கம் உள்நாட்டில் பெரிய தலைவலியைக் கொடுத்தது. இவ் வியக்கம் மக்களிடையே பரவலாக இருந்த அதிருப்தியின் விளைவே

யன்றி வேறில்லை. தொழிற் புரட்சியின் விளைவாக நாட்டின் சமுதாயத்தில் பெருத்தமாற்றம் ஏற்பட்டது. புதிய நடுநிலை வகுப்பு ஒன்று ஏற்பட்டது. முதலாளிகள்—தொழிலாளர்கள் என்ற இரு முரண்பட்ட வகுப்பினர் தோன்றினர். நாட்டில் மக்களிடையே இருந்த ஒற்றுமை சிதைந்தது. மனிதனுக்கு மனிதன், வகுப்புக்கு வகுப்பு இவர்களிடையே இருந்த அன்பும் பிடிப்பும் மாறிப் பூசலும் காழ்ப்பும் எங்கும் தாண்டவமாடின. இங்ஙனம் பிளவுபட்ட சமுதாயத்தை டிஸ்ரேலி தமது சிபில் (Sybil) என்னும் நூலில் நன்கு விவரித்துள்ளார். சமுதாயத்தில் இங்ஙனம் குறைகள் ஏற்பட்டது போல் பொருளாதாரத்துறையிலும் ஏற்றத்தாழ்வுகளைத் தொழிற்புரட்சி ஏற்படுத்தியது. ஒருபக்கம் ஆலைமுதலாளிகளும் வியாபாரிகளும் செல்வத்தில் உயர்ந்துகொண்டே செல்ல, மறு பக்கத்தில் ஏழைத் தொழிலாளர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. கூலிகள் குறைந்தன. விலைவாசிகள் உயர்ந்துகொண்டே சென்றன. பஞ்சமும் பிணியும் ஏழைகளை வாட்டின. இக் குறைகளை நீக்கத் தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து கிளர்ச்சி செய்தனர். அரசியலில் அவர்கள் இங்ஙனம் ஈடுபட்டு 1832ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தச்சட்டம் கொண்டுவர உதவிசெய்தனர். ஆனால், அச்சட்டம் நாம் ஏற்கெனவே பார்த்தபடி தொழிலாளர்களை ஏமாற்றியது. எனவேதான் 'தன் கையே தனக்குதவி' என்று எண்ணித் தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

சமதர்மம் (Socialism)

தொழிலாளர்களின் நிலையை உயர்த்த இங்கிலாந்தில் முதன் முதலாகப் பாடுபட்டவர் ராபர்ட் ஓவன் (Robert Owen) என்னும் பெரியார். கூட்டுறவு முறையில் மக்கள் வாழவேண்டியதன் இன்றியமையாமையைப் போதித்ததோடு நடைமுறையிலும் கடைப்பிடித்தார். நியூ லானர்க் (New Lanark) என்னுமிடத்தில் ஒரு கூட்டுறவுச் சமுதாயத்தை வெற்றிகரமாக அமைத்தார். அங்கே எல்லாமே பொதுவுடமையாகவே இருந்தது. இக்கூட்டுறவுக் கொள்கையைத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் எடுத்துக் கூறினர். அவர்கள் குறை தீரவேண்டுமானல் அவர்கள் ஒன்று கூடித் தொழிற்சங்கங்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று போதித்தார். ஆனால், 1824ஆம் ஆண்டில்தான் தொழிற்சங்கங்கள் சட்டரீதியானவை என்று ஒப்புக் கொள்ளப்பட்டன. 1834-ல் ராபர்ட் ஓவன், 'ஒன்றுபடுத்தப்பட்ட மகத்தான தேசீயத் தொழிற் சங்கம்' (The Grand National Consolidated Trade Union) என்ற ஒரு தொழிலாளர் சங்கத்தைத் தோற்றுவித்தார். அதன்மூலம் நாடெங்கும் ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தி,

முதலாளித்துவத்தை ஒழித்துத் தொழிலாளர்களின் ஆதிக்கத்தை எல்லாத் தொழில்துறைகளிலும் ஏற்படுத்த வேண்டுமென விரும்பினர். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதில் சேர்ந்தனர். தங்களுக்குப் பெரியநன்மை அதனுல் ஏற்படப்போகிறதென அவர்கள் நம்பினர். ஆனுல், போக்குவரவு வசதிகள் இல்லாத காரணத்தாலும், முதலாளிகளின் சூழ்ச்சிகளாலும் அச்சங்கம் தான் எண்ணியவாறு தொழிலாளர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒன்றையும் உருப்படியாகச் சாதிக்க முடியாமல் அச்சங்கம் சிதைந்தது. ஆயினும், ஓவனின் கொள்கைகள் ஆங்கில சமதர்மத்திற்கு வித்திட்டன. தனிப்பட்டவர்களின் போட்டிகள் ஒழியவேண்டுமென்றும், எல்லாத் தொழில்களும் தேசிய மயமாக்கப்பட்டுத் தேசியக் கம்பெனிகளினுல் நடத்தப்பட வேண்டுமென்றும் அவர் கூறிய கருத்து சமதர்மக் கருத்துகளுக்கெல்லாம் கருப்போன்றதென்பதில் ஐயமில்லை.

ஓவன் என்பாரின் திட்டம் தோல்வியுற்றதேனும், அவரது கருத்துகளால் உந்தப்பட்ட சிலர், ஆங்காங்கே பலாத்காரத்தில் இறங்கினர். வேலை நிறுத்தங்கள் பல இடங்களில் தோன்றின. அரசாங்கம் அம்மாதிரி இயக்கத்தில் ஈடுபட்டவர்களைக் கடுமையாகத் தண்டித்தது. டார்செட்ஷயர் (Dorsetshire) மாகாணத்திலிருந்த டால்படில் (Tolpuddle) என்னுமிடத்தைச் சேர்ந்த சில தொழிலாளர்கள், தங்கள் தொழிற்சங்கங்களின் ஆணைக்குக் கட்டுப்படுவதாக வாக்குறுதி எடுத்துக் கொண்டதற்காக ஏழு ஆண்டுகள் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டனர். இதை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகள் கிளம்பின. எனினும், அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். விக்குகள்மீது தொழிலாளர்கள் பெருஞ்சினங் கொண்டனர்.

கூட்டுறவு இயக்கம் (Co-operative Movement)

டார்செட் தொழிலாளர்களின் கதியைக் கண்டபின், தொழிலாளர்கள் சோஷலிச சமுதாயத்தைப் பற்றிய கவலையை விட்டுத் தங்கள் உடனடியான தேவைகளைப் பெறுவதில் கவனஞ் செலுத்தினர். கூலியுயர்வைப் பெறவும், தொழில் நுட்பம் அறிந்தவர்கள் வேலையில் இடம்பெறவும் அவர்கள் பாடுபடலாயினர். குறிப்பிட்ட முதலாளிகளோடு மட்டுமே போரிடுவதற்கான தொழிற்சங்கங்கள் ஆங்காங்கே ஏற்பட்டன. அதோடு கூட்டுறவு இயக்கமும் நாட்டில் வளர்ந்து வந்தது. ராஷ்டேல் (Rochdale) என்னுமிடத்திலிருந்த நெசவாளிகள் சிலர் ஒன்று சேர்ந்து தங்களுக்கும் தங்களைச் சுற்றியுள்ளோருக்கும் தேவையான உணவுப் பொருட்களை வாங்கி விற்க ஒரு கடையைத் திறந்தனர். அங்ஙனம் விற்ற

தால் கிடைத்த இலாபத்தை அவர்கள் வாங்குபவர்களுக்கே, அவரவர் வாங்கியதற்கேற்பப் பகிர்ந்தளித்தனர். ராஷ்டேல் வழி காட்டிகள் (Rochdale Pioneers) என அவர்கள் அழைக்கப் பட்டனர். அவர்கள் கண்டுபிடித்த இக்கூட்டுறவு இயக்கம் நாளடைவில் நாடெங்கும் பரவியது.

சார்ட்டிஸம்

சோஷலிச இயக்கம் ஒரு பொருளாதார இயக்கமாகும். ஆனால், சார்ட்டிஸ்ட் இயக்கம் முற்றிலும் ஓர் அரசியல் இயக்க மாகும். தொழிலாளர்களுக்கு அரசியலில் பங்கு கிடைத்தாலன்றி, அவர்கள் தங்களது நிலைமையை உயர்த்திக்கொள்ள இயலாதென் பது அவர்களது கொள்கையாகும். முதலாளிகளோடு சரிநிகர் சமானமாகப் பாராளுமன்றத்தில் இடம்பெற வேண்டி அவர்கள் ஆறு கோரிக்கைகளைத் தயாரித்துப் பாராளுமன்றத்திடம் சமர்ப் பிக்க விரும்பினர்.

சார்ட்டிஸ்டுகளின் தலைவர்கள் பலவகைப் பட்டவர். வில்லியம் லவட் (William Lovett) என்ற தலைவர் லண்டன் நகரைச்சேர்ந்தவர். தொழிலாளர்களின் ஒழுக்கத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பது அவரைச் சார்ந்தோரின் கூற்றாகும். ஃபியர்க்ஸ் ஓ கானர் (Feargus O Connar) என்ற இன்னொரு பெருந்தலைவர் ஓர் ஐரிஷ் கலகக்காரர்; நல்ல நாவன்மை படைத்தவர். லீட்ஸ் நகரத்திலிருந்து 'வடக்கு விண்மீன்' (Northern Star) என்ற பத்திரிகையை நடத்தியவர். அவர் பன்முறை தொழிலாளர்களை ஒன்றுசேர்த்துப் புரட்சி ஏற்படும் தறுவாயில் அதை நிறுத்தி விடுவது வழக்கம். அதனால் ஆலைத்தொழிலாளர்கள் அவர்பால் நம்பிக்கையிழந்தனர். எனவே தமது இறுதிநாளை அவர் விவசாயி களின் கூட்டுறவுச் சமுதாயங்களை அமைப்பதில் கழித்தார். ஆஸ்லர் (Oastler) போன்ற மெத்தாடிஸ்ட் குருமாரும், தாமஸ் கூப்பர் (Thomas Cooper) போன்ற குறிக்கோள்வாதிகளும் ஓபிரியன் (O Brien) போன்ற பலாத்காரவாதிகளும் சார்ட்டிஸ்ட் இயக்கத் தலைவர்களாயிருந்தனர். அவர்களில் ஒருசிலர் பிர மாண்டமான கூட்டங்களைக் கூட்டி, அதன்மூலம் அரசாங்கத் திடமிருந்து தம் கோரிக்கைகளைப் பெற விரும்பினர். அவர் கள் 'ஆன்மபலச் சார்ட்டிஸ்டுகள்' (Moral Force Chartists) எனப்பட்டனர். அவர்களது அமைதியான கூட்டங்களை அர சாங்கம் அனுமதித்தது. ஆனால், வேறு சிலர் 'புய பலச் சார்ட் டிஸ்டுகள்' (Physical Force Chartists) எனக் கூறிக் கொண்டு பலாத்காரத்தில் இறங்கினர். அவர்களை அரசாங்கம் கடுமையாக ஒறுத்தது.

1838-ல் சார்ட்டிஸ்டுகள் பலர் பர்மிங்ஹாமில் கலகம் விளைவித்துப் பல கடைகளைச் சூறையாடினர். நியூபோர்ட் என்னும் நகரத்தை அவர்கள் கைப்பற்ற முயன்றனர். நகரத் தந்தை துருப்புக்களைக் கொண்டு பல சார்ட்டிஸ்டுகளைக் கொன்று வீழ்த்திய பின்னரே அவர்கள் நகரை விட்டகன்றனர். அதன் பின், அவர்கள் பெரிய விண்ணப்ப மொன்றைப் பாராளுமன்றத் திடம் சமர்ப்பித்தனர். நன்கு ஆராய்ந்தபின் பாராளுமன்றம் இதை நிராகரித்தது. 1843-ல் சார்ட்டிஸ்டுகள் மீண்டும் தலை காட்டினர். பொது வேலைநிறுத்தம் செய்வதாகப் பயமுறுத்தினர். அப்போது உள்நாட்டு அமைச்சராயிருந்த பீல் என்பவர் 500 சார்ட்டிஸ்ட் தலைவர்களைக் கைது செய்து அடக்கினார். 1849-ல் அவர்கள் தமது இறுதி முயற்சியைச் செய்தனர். ஓ கானர் என்னும் தலைவர் 5 மில்லியன் கையெழுத்துக்கள் நிரம்பிய பெரிய விண்ணப்பமொன்றைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப் போவ தாகக் கூறினார். விண்ணப்பத்தை ஏந்திய கூட்டத்தின் ஊர்வலம் வழியிலேயே தடுக்கப்பட்டது. விண்ணப்பம் பாராளுமன்றத் திடம் சேர்ப்பிக்கப் பட்டபோது, அதில் பொய்க்கையெழுத்துக் களே அதிகம் இருந்தன. எனவே, விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டது; சார்ட்டிஸ்ட் இயக்கமும் அதனோடு மாய்ந்தது.

ஜமைக்கா மசோதா (Jamaica Bill)

சார்ட்டிஸ்ட் இயக்கத்தைப் போன்று தானியச்சட்ட எதிர்ப்புச் சங்கம் (Anticorn law League) ஒன்று இங்கிலாந்தில் தோன்றி மெல்போர்ன் மந்திரிசபைக்குத் தொந்தரவு கொடுத்தது. 1839-ல் வில்லியர்ஸ், காப்டன் போன்ற தலைவர்கள் தானியச் சட்டங்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இச் சமயத்தில் ஜமைக்கா தீவினர் அடிமை முறையொழிப்பை எதிர்த்துக் கிளர்ச்சியிலிறங்கினர். அக் கிளர்ச்சியை ஒடுக்க மெல்போர்ன் மந்திரிசபை ஒரு மசோதாவைக் கொணர்ந்தது. அத்தீவின் அரசியல் திட்டம் தொழிற்படுவது 5 ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கப்பட வேண்டுமெனவும், சகல அதிகாரமும் கொண்ட கவர்னரொருவரால் அது ஆளப்பட வேண்டுமெனவும் அம்மசோதா கூறியது. அதிகப்படியாக ஐந்தே வாக்குகளைப் பெற்று, அம்மசோதா நிறைவேறியது. ஆனால், கமிட்டிப் பரிசீலனையின்போது அதற்குப் பெரும்பான்மையான எதிர்ப்பே காணப்பட்டது. எனவே, மெல்போர்ன் தமது மந்திரி சபையைக் கலைத்தார்.

பள்ளியறைச் சீமாட்டிகள் நியமனம்பற்றிய சிக்கல் (Bed-chamber Question)

மெல்போர்ன் பிரபு பதவி துறந்ததைக் கேள்வியுற்ற இராணியாருக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. தந்தைபோன்று

கனிவுடன் தம்மை நடத்திவந்த பிரபு ஒருவரை விட்டு, முன்பின் தெரியாத ஒருவரைப் பிரதமராக ஏற்க அவரது மனம் இடந்தர வில்லை. எனினும், மெல்போர்ன் பிரபு அவருக்கு உள்ளநிலைமையை நன்கு விளக்கி, பீல் என்பவரை அழைத்து மந்திரிசபை யமைக்கு மாறு கேட்டுக்கொள்ளும்படித் தூண்டினர். அரை மனத்தோடு இராணியார் பீலை அழைத்து அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். பீல் ஒரு டோரிக் கட்சியினர். எனவே, அரண்மனை உத்தியோகங்களில் ஏற்கெனவே இருந்த விக்குகளை நீக்கி விட்டு அப் பதவிகளில் டோரிகளை அமர்த்தினர். அடுத்தாற் போல் அவர் விக்குக் கட்சியைச் சேர்ந்த இராணியாரின் பள்ளியறைச் சீமாட்டிகளைப் பதவியினின்றும் நீக்குமாறு இராணியாரைக் கேட்டுக் கொண்டார். இதைக்கேட்ட இராணியார் மனம் நொந்தார். தமது சொந்த விஷயத்தில் பீல் தலையிடுவது தகாது எனக் கூறி, அவரது வேண்டுகோளுக் கிணங்க மறுத்து விட்டார். எனவே, பீல் தமது பதவியை உடனே ராஜினமா செய்தார்.

மீண்டும் மெல்போர்ன்-பென்னித் தபால் முறை (Penny Postage)

பீல் ராஜினமா செய்ததைக் கேட்ட இராணியார் உள்ளூர மகிழ்ந்தார். தமது எண்ணப்படி, மெல்போர்னை மீண்டும் வந்து மந்திரிசபையை அமைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். இராணியின் கௌரவத்தைக் காக்கவேண்டி மெல்போர்ன் மீண்டும் பதவியிலமர்ந்தார். இச்சமயத்தில்தான் ரௌலண்ட் ஹில் (Rowland Hill) என்பவரால் பென்னித் தபால் முறையை நாட்டில் புகுத்தும் மசோதா ஒன்று பாராளுமன்றத்தில் கொணரப்பட்டது. பென்னித் தபால்முறை இங்கிலாந்தில் ஏற்பட்ட வரலாறு உண்மையிலேயே மிகச் சுவையான தொன்ருகும். ஆங்கிலப் புலவர் கோல்ரிட்ஜ் என்பவர், ஒரு நாள் வட இங்கிலாந்தில் ஒரு குடிசையின் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தார். அப்போது தபால்காரன் ஒருவன் வந்து அக் குடிசைமுன் நின்ருன். சிறுமி ஒருத்தி குடிசையுள்ளிருந்து வந்து ஆவலோடு அக் கடிதத்தை வாங்கினுள். ஆனல் தபால் கட்டணத்தைக் கொடுக்க வியலாது அவள் அக் கடிதத்தை மீண்டும் தபால்காரனிடத்திலேயே கொடுத்து விட்டாள். அக் காலத்திலெல்லாம் தபாலைப் பெறுகிற வர்களே கட்டணத்தைச் செலுத்துவது வழக்கம். கட்டணம் ஒரு ஷில்லிங் முதல், தூரத்துக்கு ஏற்ப உயர்ந்துகொண்டே செல்லும். ஏழைகள் தபால் முறையைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையிலிருந்தனர். இதை அறிந்திருந்த கவிஞர் கோல்ரிட்ஜ் அச் சிறுமியின் துயர் துடைக்க முன்வந்தார். தபால் கட்டணத்தைத் தாமே கட்டிவிட்டுக் கடிதத்தைச் சிறுமியிடம் கொடுத்தார்.

மகிழ்ச்சியால் மலர்ந்தன அச் சிறுமியின் கண்கள். அவள் கடிதத்தைப் பிரித்தாள்; அதில் ஓர் எழுதப்படாத வெள்ளைத்தாள் மட்டுமே இருந்தது. பின்னர் அவள் கவிஞரிடம் தனது சோகக் கதையைக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். தனது சகோதரன் ஒருவன் லண்டனிலிருப்பதாகவும், அவன் அவளுக்குக் கடிதம் எழுதினால் அதற்குப் பணம்கட்டப் போதிய பணம் அவளிடம் இல்லாததால், அவ்வப்போது அவன் தனது நலத்தை உணர்த்த ஒரு வெறுந்தாளைத் தபால்காரன் மூலம் அனுப்பு வதாயும், அதை வாங்கி உடனே திருப்பித் தந்துவிடும்படி, அவன் அவளிடம் கூறிச் சென்றதாயும் அவள் உரைத்தாள். இதைக் கேட்ட கவிஞர் மனமுருகினார். தபால் இலாகாவின் அதிகாரி ரௌலண்ட் ஹில்லிடம் அவர் அக் கதையைக் கூறினார். அதன் விளைவாகவே அரசாங்கம் பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் எங்கு வேண்டுமானாலும் ஒரு பென்னி கட்டணம் செலுத்தித் தபால்மூலம் செய்தி அனுப்பும் முறையைக் கொணர்ந்தது. அதனால், கடிதங்கள் ஏராளமாக எழுதப்படுமாதலால் பென்னிகளை வசூல் செய்வது தபால்காரருக்குப் பெரும்பாடாய்ப் போகு மென்றும், எனவே தபால் அனுப்புவர்களே ஒரு பென்னிக்குத் தபால் தலைகளை வாங்கிக் கடிதங்களில் ஒட்டிவிடலாமென்றும் ரௌலண்ட் ஹில் ஒரு திட்டம் கொண்டுவந்தார். பலரும் இத் திட்டத்தைக் கண்டு ஆரம்பத்தில் எள்ளி நகையாடினர். ஆனால், அது நாளடைவில் இங்கிலாந்துக்கேயன்றி உலகனைத்துக்குமே நலன் விளைக்கும் ஒரு நன்முறையாக ஆயிற்று.

இராணியின் திருமணம் - மெல்போர்ன் வீழ்ச்சி

பாராளுமன்ற நடவடிக்கைகளை வெளியிடும் உரிமையைப் பத்திரிகைகளுக்கு அளிக்கும் சட்டமொன்றும் 1840-ல் இயற்றப் பட்டது. 1840ஆம் ஆண்டில் மக்களின் எண்ணத்தை எல்லாம் ஒருங்கே ஈர்த்தது இராணியாரின் திருமணமாகும். சாக்ஸிகோபர்க் இளவரசனான ஆல்பர்ட் என்பவரை இராணியார் காதலித்தது பலருக்குப் பிடிக்கவில்லை. எனினும், இராணியின் பிடிவாதம் காரணமாகத் திருமணம் நடந்தது. எதிர்க்கட்சியினர் ஆல்பர்ட் டுக்கு அரசாங்கம் அளிக்க முன்வந்த உதவித் தொகையைக் குறைக்க முயன்று அதில் வெற்றியும் பெற்றனர். மெல்போர்ன் மந்திரிசபையின் செல்வாக்குக் குறைந்தது. யூதர்களுக்குப் பொது மக்கள் சபையில் இடமளிக்க அது கொண்டுவந்த ஒரு மசோதா வைப் பிரபுக்கள் சபை நிராகரித்தது. அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தைப் பொதுமக்கள் சபை ஏற்றுக்கொள்ள மறுத்தது. மந்திரி சபைமீது பீல் என்பவரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானம் ஒரே ஒரு வாக்கினை அதிகம் பெற்றுப் பொது

மக்கள் சபையில் நிறைவேறியது. எனவே, மெல்போர்ன் தமது மந்திரிசபையைக் கலைத்துவிட்டு, ஒரு பொதுத் தேர்தலை நடத்தும் படி இராணியாரை வேண்டிக் கொண்டார். அடுத்து நடைபெற்ற தேர்தலில் அரசாங்கத்தின் ஆட்கள் பலர் தோல்வியுற்றனர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையோர் அரசாங்கத்தை எதிர்ப்போராகவே இருந்தனர். எனவே, விக்கு மந்திரிகள் தங்களது பதவியை ராஜினமா செய்தனர். பீல் என்பவரை அழைத்து, அரசாங்கத்தை அமைக்குமாறு இராணியார் கேட்டுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மெல்போர்ன் பிரபு மிகப் பெருந்தன்மையாகத் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு புதிய மந்திரிகளோடு ஒத்துப்போகும்படி இராணியாரைப் பெரிதும் தூண்டி, அதில் வெற்றியும் பெற்ருர். இராணியாருக்கு அவர் செய்த சேவைகளில் அதுவே இறுதியானதும், மிக முக்கிய மானதுமாகும் என்பதில் ஐயமில்லை. இராணியாருக்குப் பக்க பலமாக அவரது அன்புக்குரிய கணவர் அருகில் இருந்ததால் விக்குக் கட்சியினரான பள்ளியறைச் சீமாட்டிகளை நீக்கிவிட்டு, டோரிக் கட்சிச் சீமாட்டிகளை நியமிக்க அவர் ஒப்புக்கொண்டார்.

2. விக்டோரியப் பேரமைச்சர் சர் ராபர்ட் பீல் (1788-1850)

வாழ்க்கைக் குறிப்பு; பீலின் இரண்டாவது மந்திரி சபை (1841-46); பீலும் அயர்லாந்தும்; பீலின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்; பீலின் சமூகச் சீர்திருத்தங்கள்; தானியச் சட்ட ஒழிப்பு (1846); பீல் மந்திரி சபையின் வீழ்ச்சி (1846); பீலின் மதிப்பீடு.

வாழ்க்கைக் குறிப்பு

சர் ராபர்ட் பீல், லங்காஷயரில் வாழ்ந்த ஒரு பெரும் பஞ்சாலை முதலாளியின் மகனாக 1788ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தையார் டோரிக் கட்சியில் ஊக்கமாக உழைத்து வந்த ஓர் அரசியல்வாதி. அவர் தமது மகனுக்கு நல்ல கல்வியையும் அரசியலறிவையையும் அளித்தார். ஹேரோ (Harrow), ஆக்ஸ்போர்டு ஆகிய இடங்களில் உயர்குடிச் செல்வக் குழந்தைகளோடு பீல் கல்வி பயின்றார். ஆக்ஸ்போர்டில் அவர் கணிதம், பண்டைய இலக்கியம் (Classics) இரண்டிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். சிறப்பு வகுப்பில் (Honours) முதன்முதல் புகழ் பெற்றவர் பீல் ஒருவரேயாவார். 'விளையும் பயிர் முளையிலே' என்ற முதுமொழிக் கிணங்க அவரது கல்லூரி வாழ்க்கையமைந்தது. கல்லூரி வாழ்க்கை முடிந்தவுடன் அவர் அரசியலில் நேரே நுழைந்தார். 1809-ல் அவர் தமது தந்தையின் உதவியால் அயர்லாந்தில் நசித்துப்போன பரோ ஒன்றின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துள் நுழைந்தார். டோரிக் கட்சியினர் அவரைக் குதூகலமாக வரவேற்றனர். ஒரே ஆண்டிற்குள் அவர் உதவி அமைச்சர் பதவியைப் பெற்றார். விரைவில் அயர்லாந்தின் அமைச்சராகப் பணியாற்றும் பேற்றையும் அடைந்தார். ஐரிஷ் நிர்வாகத்தை 1812 முதல் 1818 வரை அவர் திறம்பட நடத்தினார். புதிய போலீஸ் ஒன்றை அங்கு ஏற்படுத்தினார். ஆனால்,

கத்தோலிக்கரின் விடுதலையை முழுமனத்தோடு எதிர்த்தார். பாராளுமன்றத்தில் அவர் அதை எதிர்த்துப் பேசிய பேச்சின் காரணமாக, ஆக்ஸ்போர்டின் பிரதிநிதியாக 1817இல் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்றத்தில் அவருக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. 1919இல் அவர் நாணயச் சீர்திருத்தக் குழு ஒன்றுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவரது சிபாரிசின் பேரில்தான் நாணயங்களுக்கு ரொக்கமாகப் பொன் நாணயம் வழங்கவேண்டுமெனக் கூறிய சட்டமொன்று பாராளுமன்றத்தில் நிறைவேறியது. 'பீலின் சட்டம்' (Peel's Act) என்ற இச் சட்டத்தால் நாட்டில் நாணயத்தின் மதிப்பு உயர்ந்தது. தமது தந்தையின் கொள்கைக்கு விரோதமாகவே பீல் இச் சட்டத்தைச் சிபாரிசு செய்தார். இதிலிருந்து அவர் சிறுவயது முதற்கொண்டே சுதந்திர மனப்பான்மை கொண்டவர் என்பது நன்கு விளங்குகிறது. மேலும் அவர் நிலைமைகளுக்கேற்பத் தம் கருத்துக்களை மாற்றிக்கொள்பவர் என்பதையும் இந் நிகழ்ச்சி நன்கு விளக்குகிறது. ஏனெனில், இதே கொள்கையை அவர் 1811இல் பலமாக எதிர்த்தார். ஆனால், பொருளாதாரம் பற்றி நன்கு படித்த பின்னர், தமது எதிர்ப்பு அறியாமையின் விளைவு என்பதை ஒப்புக்கொண்டார்.

1818 முதல் 1821 வரை அவர் பதவி ஏதுமின்றிக் காலம் கழித்தார். 1822இல் லிவர்ப்பூல் பிரபுவின் மந்திரி சபையில் உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். கிரிமினல் சட்டத் தொகுதியைச் சீர்திருத்தி அமைத்து அப்போது அவர் புகழ் பெற்றார். 1827இல் லிவர்ப்பூல் பிரபு இறந்ததால் கானிங் பிரபு பிரதமரானார். கானிங் பிரபு கத்தோலிக்கரின் விடுதலையை ஆதரித்தவராகையால், அதை எதிர்த்துவந்த பீல், தமது பதவியை ராஜினுமா செய்தார். அவரது செய்கையையொட்டி வெலிங்டன், எல்டன் போன்ற டோரிகளும் தம் பதவிகளைத் துறந்தனர். 1828இல் கானிங் இறந்து போகவே வெலிங்டன் பிரபு பிரதமரானார். அப்போது பீல் மீண்டும் உள்நாட்டு அமைச்சராகப் பதவியேற்றார். வெலிங்டன் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்கர் விடுதலைப் பிரச்சினை முக்கியத்துவம் அடைந்தது. கத்தோலிக்கருக்கு விடுதலையளிப்பதைப் பீல் முதலில் எதிர்த்தார். ஆனால், அவர்கட்கு விடுதலையளிக்காவிடில் அயர்லாந்தில் புரட்சி ஏற்படுமெனத் தெரிந்தபின், அவர் வெலிங்டனை ஆதரிக்க முற்பட்டார். அதனால், அவரைக் கட்சித் துரோகி என மற்ற டோரிகள் அழைக்கலாயினர். அதனால் சினங்கொண்ட பீல் தமது ஆக்ஸ்போர்டு தொகுதிப் பிரதிநிதித்துவத்தை ராஜினாமா செய்தார். மீண்டும் அங்குத் தேர்தல் நடை

பெற்றது. ஆனால், அவர் அதில் வெற்றிபெறவில்லை. அவரது அமைச்சர் பதவியைக் காக்க அவர் வெஸ்ட்பரி (Westbury) என்ற பரோவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அதன் பின்னரே அவர் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினர். இச் சமயத்தில்தான் அவர் லண்டன் போலீஸ் படையையும் நிறுவி அழியாப்புகழ் பெற்றார். 1830இல் பாராளு மன்றச் சீர்திருத்தப் பிரச்சினை எழுந்தபோது பீல் உள்ளூரச் சீர்திருத்தத்தை விரும்பினரெனினும், கட்சித் தலைவரான வெலிங்டன் பிரபு அதை மறுத்ததால், வேறு வழியின்றி அவர் பாராளுமன்றத்தில் கிரே மந்திரி சபையை மிதமாகத் தாக்கிப் பேசிக்கொண்டிருந்தார். தான் பதவியிலிருந்தால், சீர்திருத்தச் சட்டத்தை ஆதரித்திருக்கக்கூடுமென அவர் தமது நெருங்கிய நண்பரான குரோக்கர் (Croker) என்பாருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இறுதியில் அச் சட்டத்தை விக்குகள் இயற்றிவிட்டதாலும், வெலிங்டன் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றதாலும் பீல் டோரிக் கட்சியின் தலைவரானர். 1834இல் மெல்போர்ன் மந்திரிசபையை நான்காம் வில்லியம் கலைத்து விட்டுப் பீலை அழைத்து மந்திரிசபையை அமைக்குமாறு கூறினர். பீல் அப்போது இத்தாலியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். விரைவில் அவர் திரும்பி வந்தார். பாராளு மன்றத்தில் அப்போது டோரிக் கட்சியினர் சிறுபான்மை யினராயிருந்தனர். எனவே, அவர் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தலை நடத்தினர். நாட்டில் சீர்திருத்தக் கருத்துக்கள் நன்கு வேரூன்றிவிட்டதை உணர்ந்த பீல் தமது கட்சியினர் அதற்கு ஏற்றாற்போல் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளவேண்டுமென வற்புறுத்தினர். பழம் பெருச்சாளிகளான டோரிகள் பலர் அவர் கருத்தை ஏற்க மறுத்தனர். எனவே, அவர் கன்சர்வேடிவ் கட்சி என்ற புதிய டோரிக் கட்சியை நிறுவினர். டாம்வொர்த் தேர்தலறிக்கையில் (Tamworth Manifesto) அவர் தமது கட்சியின் கொள்கைகளை வெளியிட்டார். சீர்திருத்தங் களைத் தாம் வெறுப்பவரல்லர் என்றும், படிப்படியாக, மிதமான சீர்திருத்தங்களைக் கொண்டுவரவே தாம் விரும்புவதாகவும் அதில் குறிப்பிட்டார். அவ்வறிக்கையின் பலனாகக் கன்சர்வேடிவ் கட்சி யினர் பலர் தேர்தலில் வெற்றிபெற்றனர். எனினும், பொது மக்கள் சபையில் அவர்கள் பெரும்பான்மையான இடங்களைப் பெற முடியவில்லை. எனவே பீல் தமது விருப்பப்படி செயலாற்ற முடியாதென்பதை உணர்ந்து, 1835இல் தம் பதவியைக் கைவிட்டார். மெல்போர்ன் மீண்டும் பிரதமரானர். 1837இல் விக்டோரியா இராணியார் பட்டத்துக்கு வந்தபோது மெல்போர்ன் அவரது மனத்திற்குகந்த அமைச்சராய்த் திகழ்ந்தார். ஆனால்,

1839இல் அவர் ராஜினுமா செய்யவேண்டிய சூழ்நிலையேற்பட்டது. எனவே, பீல் மீண்டும் பிரதமர் ஆனுர். ஆனுல், பள்ளியறைச் சீமாட்டிகள் நியமனம் பற்றியெழுந்த பிரச்சினையில் பீல் தமது பதவியைத் துறந்தார். தமது கட்சி இன்னும் போதிய பலம் பெறவில்லை என்றும், புதிய தேர்தலில் தம் கட்சிக்குப் பெரும் பான்மையான இடங்கள் பாராளுமன்றத்தில் கிடைக்காமற் போனுல் மீண்டும் தமது பதவியை ராஜினுமா செய்யவேண்டி நேரும் என்ற நினைப்பாலேயே அவர் பள்ளியறைச் சீமாட்டிகள் பற்றிய பிரச்சினையை எழுப்பியிருக்கக்கூடும் என்றும் சௌத்கேட் என்னும் ஆசிரியர் கருதுகிருர். [1] ஏனெனில், 1841இல் அவர் (பீல்) மீண்டும் பதவிக்கு வந்தபோது அப் பிரச்சினை அரசியல் பிரச்சினையன்று எனத் தாம் கருதுவதாக அறிவித்தார். மெல் போர்ன் மந்திரி சபை 1841இல் மீண்டும் கவிழ்ந்தது. மீண்டும் பீல் பிரதமராக்கப்பட்டார். அவ்வாண்டில் நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி, பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை இடங்களைப் பிடித்தது. எனவே, பீல் நம்பிக்கையோடு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 1846 வரை அதைத் திறம்பட நிருவகித்தார்.

பீலின் இரண்டாவது மந்திரி சபை (1841-1846)

விக்டோரியா இராணியார் காலத்தில் சிறப்புற்று விளங்கிய முதல் பிரதமர் சர் ராபர்ட் பீல் என்பவர், உண்மையில் ஓர் ஒப்பற்ற பிரதமராகத் திகழ்ந்தார். அவருக்கு முன்பிருந்த பிட், வால்போல் போன்ற பிரதமர்கள்கூட அவரைப்போல அதிகாரம் செலுத்த வல்லவர்களாக இல்லை. பீல் தமது சகாக்கள் அனைவரையும் விருப்பம்போல் ஆட்டிப்படைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அவர் தனிப்பட்ட முறையில் கண்காணிக்காத இலாகாவே ஒன்றுமில்லையெனலாம். குறைகள் எங்கிருப்பினும், அவை அவரது கழுகுக் கண்களுக்கு எப்படியும் புலப்பட்டுவிடும். எனவே, அவரைக்கண்டு அஞ்சாத அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒருவருமில்லையென்றே கூறலாம். காபினெட் அரசாங்கம் அவரது தலைமையில் தனித் திறமையுடன் இயங்கியது. பிற்காலத்தில் இங்கிலாந்தின் பிரதமர்களாக விளங்கிய ஸ்டான்லி, அபெர்டீன் (Aberdeen), கிளாட்ஸ்டன் (Gladstone), காடரிச் (Goderich) போன்றவர்களும், இந்தியாவின் வைஸ்ராய்களாக விளங்கிய ஹார்டிஞ்ச் (Hardinge), எல்லன்பரோ (Ellenborough), டல்ஹௌஸி (Dalhousie), கானிங் என்பவர்களும் அவரது

[1] See Prime Ministers of the 19th Century by Ramsay Page 66

காபினெட்டில் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் யாவரும் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்ததால், அவர்கள் மூலமாக அவர் அரசாங்கத்தின் பற்பல இலாகாக்களையும் கட்டிக் காத்துவந்தார். காபினெட்டில் மட்டுமின்றிப் பாராளுமன்றத்தில்கூட அவர் தன்னிகரற்றுத் திகழ்ந்தார். பிரபுக்கள் சபையில் பெருஞ் செல்வாக்குப் படைத்த வெலிங்டன் பிரபு, அவருடைய ஏவலைச் சிரமேற்கொண்டு நடக்கத் தயாராயிருந்ததால், அச் சபையில் பீலுக்கு எதிர்ப்பேயில்லை. பொதுமக்கள் சபையிலும் அவர் ஓர் எதேச்சாதிகாரியாக விளங்கினர். ஒரு சமயம் சர்க்கரை மீது விதிக்கப்பெற்ற சுங்கங்கள் பற்றிய சட்டமொன்றுக்குத் திருத்த மொன்று அவர் விருப்பத்துக்கு விரோதமாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. உடனே தாம் ராஜினமா செய்யப்போவதாகப் பீல் பயமுறுத்தினர். சாதாரண ஒரு திருத்தத்துக்காக அரசாங்கம் கலைக்கப்பட வேண்டியதில்லை எனப் பலர் கூறியும் ஒப்புக்கொள்ளவில்லை. திருத்தம் மீண்டும் ஓட்டுக்கு விடப் பட்டது. பயந்துபோன பாராளுமன்றம் பீலின் விருப்பத்தினை ஏற்று, அதற்கேற்ப வாக்களித்துத் திருத்தத்தைக் கைவிட்டது.

பீலும் அயர்லாந்தும்

பீலை எதிர்நோக்கி நின்ற பிரச்சினைகள் பல. தொழிலாளர் நிலை நாளுக்கு நாள் சீரழிந்தது. பொருளாதார நிலையும் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட வேண்டியிருந்தது. இவை யாவற்றிற்கும் மேலாக, அயர்லாந்தில் மீண்டும் ஒரு பெருஞ் சிக்கல் ஏற்பட்டது. ஓ கானல் என்ற புரட்சித் தலைவர் அயர்லாந்து, இங்கிலாந்தினின்றும் பிரியவேண்டும் எனக் கூறிக்கொண்டு கிளர்ச்சி செய்தார். இங்கிலாந்து-அயர்லாந்து கூட்டுறவைப் பிரிக்கப் பலாத்காரத்தைப் பயன்படுத்தலாமெனவும் ஒரு சாரார் கூறினர். ஆனால், ஓ கானல் அத்தகைய முறையை ஆதரிக்க வில்லை. கிளான்டார்ப் (**Clantorf**) என்னுமிடத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து ஒரு பிரமாண்டமான கூட்டத்தை ஓ கானல் கூட்ட ஏற்பாடு செய்தார். இதைக் கேட்ட பீல், படைக்கலச் சட்டம் (**Arms Act**) ஒன்றை ஏற்படுத்தி அயர்லாந்தினர் அனுமதியின்றிப் படைக்கலன்களை வைத்துக்கொள்வதைத் தடுத்தார். கிளான் டார்ப் கூட்டம் நடைபெருது தடுக்கும்படி அயர்லாந்து கவர்னருக்கு உத்தரவிட்டார். அயர்லாந்தின் லெப்டினன்ட் பிரபுவும் கூட்டம் நடைபெறக் கூடாதென உத்தரவிட்டதோடு, அதையும் மீறிக் கூட்டம் நடைபெற்ருல் அதைக் கலைக்கவென ஒரு படையையும் தயாரித்தார். அதைக் கண்ட ஓ கானல் தம் கூட்டத்தைக் கலைத்துவிட்டார். எனினும், பீலின் உத்தரவுப்படி

அவர் கைது செய்யப்பட்டார். அரசாங்கத்தை அவதூறு செய்த குற்றத்துக்காக விசாரிக்கப்பட்டுச் சிறையிடப் பெற்ருர். ஆனுல், பிரபுக்கள் சபை அத் தண்டனையை ரத்துசெய்தது.

வில்லியம் ஸ்மித் ஓ பிரியன் (William Smith O'Brien) என்ற செல்வரும், தாமஸ் டேவிஸ் (Thomas Davis) என்ற இன்னெருவரும் சேர்ந்து 'இள அயர்லாந்து' (Young Ireland) என்ற ஒரு புரட்சிக் கழகத்தைத் தோற்றுவித்தனர். அவர்கள் ஓ கானலின் சாத்வீகக் கொள்கையை எதிர்த்துப் பலாத்காரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தைப் பறை சாற்றினர். 'நேஷன்' (Nation) என்ற பத்திரிகையானது அவர்களது கருத்துக்களை நன்கு விளம்பரப்படுத்தியது. ஜான் மிட்சல் (John Mitchell) என்பார் 'ஐக்கிய அயர்லாந்தியர்' (United Irishmen) என்ற புதிய புரட்சிக் கழகத்தை அமைத்தார். இதையறிந்த பிரிட்டிஷ் அரசாங்கம் மிட்சலையும், ஓ பிரியனையும் நாடு கடத்தியது. புரட்சிக் கருத்துக்களும் ஒருவாறு ஓய்ந்தன.

இவ்விதம் முதலில் அடக்குமுறைக் கொள்கையைப் பீல் கடைப் பிடித்தார். பின்னர் ஐரிஷ் பிரச்சினையை ஆராய டெவன் கமிஷன் (Devon Commission) என்ற ஒரு குழுவை அவர் டெவன் பிரப்புவின் தலைமையில் ஏற்படுத்தினுர். அக் கமிஷன் குடியானவர்களின் நிலையை ஆராய்ந்து, நிலத்தைவிட்டு வெளியேற்றப் பட்டவர்களுக்கு நஷ்டஈடு அளிக்கும்படி சிபாரிசு செய்தது. அச் சிபாரிசையொட்டிப் பாராளுமன்றத்தில் மசோதா ஒன்றை ஸ்டான்லி என்பவர் கொணர்ந்தார். ஆனுல், அம் மசோதா நிறைவேறவில்லை.

கத்தோலிக்கரின் உரிமைகளைப் பெருக்கவேண்டிக் கத்தோலிக்கக் குருமார்கள் பயிற்சி பெற்று வந்த மாய்னூத் கல்லூரிக்கு (Maynooth College) அளிக்கப்பட்டுவந்த உதவித் தொகையை பீல் 9,000 பவுனிலிருந்து 26,000 பவுன்களாக உயர்த்தினுர். கத்தோலிக்கர்களேயன்றி மற்றையோரையும் மகிழ்விக்கவேண்டி, மதச்சார்பற்ற கல்லூரிகளை இராணியின் கல்லூரிகள் (Queen's Colleges) என்ற பெயரில் பெல்பாஸ்ட் (Belfast), கார்க் (Cork), கால்வே (Galway) என்ற நகரங்களில் பீல் ஏற்படுத்தினுர். அக் கல்லூரிகளில் கத்தோலிக்கரும், ஏனைய சமயத்தவரும் ஒருங்கே கல்வி கற்கலாமெனப் பீல் அறிவித்தார். இதனுல் எல்லாச் சமயத்தவர்களும் ஒன்றுபட ஒரு வழிபிறக்குமென அவர் எதிர் பார்த்தார். ஆனுல், அவர் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடைபெற வில்லை. பிராட்டஸ்டென்டுகளும், கத்தோலிக்கர்களும் சேர்ந்து அக்கல்லூரிகளைக் 'கடவுளில்லாக் கல்லூரிகள்' (Godless Colleges)

எனப் பழிக்கலாயினர். எனினும், பிராட்டஸ்டென்டுகள் மட்டுமே கல்வி கற்றுவந்த ஒரு நிலைமையை மாற்றி அயர்லாந்தியக் கத்தோலிக்கர்களும் கல்வியறிவு பெறச்செய்த பெருமை பீல் ஒருவரையே சாருமெனக் கூறலாம்.

பீலின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

பீலின் சாதனைகளிலெல்லாம் மிக உயர்ந்ததாகக் கருதப் படுவது அவரது பொருளாதாரச் சீர்திருத்தங்களாகும். முதலில் அவர் நாட்டின் செலாவணித் திட்டத்தை ஒழுங்குபடுத்த முயன்றார். இங்கிலாந்து பாங்கு முறைகளில் பற்பல ஊழல்கள் இருந்தன. தனிப்பட்ட பாங்குகள் பல, தங்கள் விருப்பம்போல் தாள் நாணயங்களை வெளியிட்டன. நெருக்கடியான காலங்களில் அவைகள் அத் தாள் நாணயங்களுக்குச் சமமான பொன் நாணயங்களை வழங்கமுடியாது திகைத்தன. 1825, 1839ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நெருக்கடிகளில் பல பாங்குகள் திவாலாயின. மக்களுக்கு நாணயத்தின் மீதிருந்த நம்பிக்கை குறைந்தது. இதை உத்தேசித்தே பீல் 1819ஆம் ஆண்டிலேயே தாள் நாணயங்களுக்கேற்ற பொன் நாணயங்களை ரொக்கமாகப் பாங்குகள் வழங்கவேண்டுமெனக் கூறிய சட்டமொன்றைக் கொண்டுவந்தார். ஆனால், அது சரிவர அமுல் நடத்தப் பெறவில்லை. எனவே, 1844இல் பீல் மீண்டும் அச் சீர்திருத்தத்தைக் கொணர்ந்தார். பாங்குச் சாசனச் சட்டத்தை (Bank Charter Act) ஏற்படுத்தினார். அதன்படி இங்கிலாந்தின் பாங்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கடன் கொடுக்கல் வாங்கலையும், மற்றொன்று தாள் நாணயங்களை வெளியிடுவதையும் கவனித்துக் கொண்டன. தாள் நாணயங்களை வெளியிடும் பாங்கு பல கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. அரசாங்க மதிப்பான 14 மில்லியன் பவுன்களுக்கு மட்டுமே அது தாள் நாணயங்களை வெளியிடலாம்; அதன் பின் வெளியிடப் பெறும் ஒவ்வொரு தாள் நாணயத்துக்கும் சமமான மதிப்புள்ள தங்கக் கட்டிகள் பாங்கிலிருக்க வேண்டும். பற்பல பாங்குகளும் விருப்பம்போல் தாள் நாணயங்களை வெளியிடுவது தடுக்கப்பட்டது. ஒரு சில பழைய பாங்குகள் மட்டுமே ஒரு குறிப்பிட்ட அளவு மதிப்புள்ள (85,00,000 பவுன்) தாள் நாணயங்களை வெளியிட அனுமதிக்கப் பட்டன. இத்தகைய முறைகளால் கையிருப்பிலுள்ள தங்கத்தின் மதிப்புக்கும் மீறித் தாள் நாணயங்கள் அச்சிடப்பட்டுப் பணவீக்கம் (Inflation) ஏற்படுவது தடுக்கப்பட்டது. நாணயங் களின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. நெருக்கடிக் காலங் களில் இச் சட்டம் பயன்படாது எனவும், நிலைமைக்கேற்றபடி

செலாவணியானது பெருக்கப்படுவதை அது தடுக்கிறது எனவும் சிலர் அச் சட்டத்தைக் குறை கூறினர். ஆனுல், நெருக்கடிக் காலங்களில் அதைச் சிறிது நிறுத்தி வைப்பதால் கோரிய பலன்களைப் பெறமுடியுமென்பதை அவர்கள் உணரவில்லே. 1847, 1857, 1866ஆம் ஆண்டுகளில் இவ்விதம் அச் சட்டமானது சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டது. உடனே, நாட்டில் நாணயமும், நம்பிக்கையும் வளர்ந்து, மேலும் தாள் நாணயங்கள் அச்சிடப்பட வேண்டிய அவசியம் தவிர்க்கப்பட்டது.

1842, 1845-இந்த இரண்டு ஆண்டுகளிலும் பீல் கொண்டு வந்த வரவு செலவுத் திட்டங்கள் அவரது பொருளியல் நிபுணத்துவத்தைப் பெரிதும் புலப்படுத்துவனவாக அமைந்தன. அவர் பதவிக்கு வருமுன் கொண்டுவரப்பட்ட வர்வு செலவுத் திட்டங்களெல்லாம் பற்ருக்குறைத் (deficit) திட்டங்களாகவே இருந்தன. இக் குறையை நீக்க விரும்பினுர் பீல். வியாபாரம் வளர்ந்தாலொழிய நாட்டின் செல்வநிலே உயராதென உணர்ந்த அவர், வாணிகத்தை வளர்க்கக்கூடிய வகையில் பல சுங்க வரிகளே ரத்து செய்தார். கச்சாப் பொருள்கள்மீது விதிக்கப் பட்டிருந்த வரியை 5 சதவீதம் வரையும், பொறிசெய் பொருள்கள் மீதிருந்த வரியை 20 சதவீதம் வரையும் அவர் குறைத்தார். அதனுல் உள்நாட்டுக் கைத்தொழில்கள் பல வெளிநாட்டுப் போட்டியினின்றும் காக்கப்பட்டு வளர்ந்தன. ஆரம்பத்தில் வரிக் குறைப்பால் நாட்டில் வருமானம் பெருமளவு குறைந்தது. இதை எதிர்பார்த்த பீல், அப் பற்ருக்குறையை நிவர்த்திக்க மூன்று ஆண்டுகளுக்கு ஒரு வருமான வரியை விதித்தார். ஆண்டுக்கு 150 பவுன்களுக்கு மேல் வருமானம் பெற்றவர்கள் பவுனுக்கு 7 பென்ஸ் வீதம் வரிசெலுத்துமாறு வற்புறுத்தப் பட்டனர். வருமானவரி விதித்த பின்பும், 1843ஆம் ஆண்டில் வருமானம் செலவுக்குப் போதாமலே இருந்தது. ஆனுல், 1844ஆம் ஆண்டில் செலவைவிட வருமானம் உயர்ந்தது. 1845இல் வருமானவரி இருப்பதே அவசியமில்லாத நிலே ஏற்பட்டது. இதைக் கண்ட பீல் மேலும் பல சுங்கவரிகளே ரத்து செய்து, அதனுலேற்படும் இழப்பை ஈடுகட்ட வருமான வரியை மீண்டும் 1845இல் விதித்தார். வருமான வரி அதன் பின் நீக்கப்படவே யில்லே. ஆனுல், அதற்கு ஈடாக நாட்டின் வாணிகம் வளர்ந்தது. வருமான வரிப்பணத்தின் உதவிகொண்டு பீல் ஏராளமான சுங்க வரிகளே ஒழித்தார். ஏற்றுமதி வரிகள் அனைத்தும் நீக்கப் பட்டன; இறக்குமதி வரிகள் பல நீக்கப்பட்டன; ஒரு சில குறைக்கப்பட்டன. இங்ஙனம் தடையிலா வாணிகக் கொள்கை யைப் பீல் கடைப்பிடித்தார். அக் கொள்கையின் மூலமே

வாணிகம் வளருமென்றும், அதன் வழி வேலையில்லாத் திண்டாட்டம் தீருமென்றும், ஏழைகள் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்த முடியுமென்றும் பீல் நம்பினார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. ஆனால், தடையிலா வாணிகக் கொள்கையை வெறுத்த கன்சர்வேடிவ் கட்சியினர் யாவரும் அவரை வெறுக்கலாயினர். தானியங்கள் மீதிருந்த வரிகளை மட்டும் பீல் ரத்து செய்யவில்லை. அதற்கேற்ற தருணத்தை அவர் எதிர்நோக்கியிருந்தார். ஏழைகளின் நலனுக்காக ஓயாது பாடுபட்ட பீல், போக்குவரவு சாதனங்களையும் ஓரளவு கட்டுப் படுத்தி, மைலுக்கு ஒரு பென்ஸ் கட்டணத்தில் மக்கள் இடம்விட்டு இடம் பயணம் செய்ய வழிவகுத்தார். அதற்கெனத் தனிப்பட்ட பயணிகள் வண்டிகளை விடும்படி அவர் ரெயில் முதலாளிகளை வற்புறுத்தினார். 1846-ல் மின்சாரத் தந்தி முறைகளை நாட்டில் வளர்க்கும்படி தனி நபர்களை அவர் ஊக்குவித்தார்.

பீலின் சமூகச் சீர்திருத்தங்கள்

சுரங்கங்களில் உழைக்கும் தொழிலாளர்களின் நிலையை நேரில் ஆராயப் பீல் 1842இல் கமிஷன் ஒன்றை நிறுவினார். அக் கமிஷனது அறிக்கையில் பெண்களும், சிறுவர்களும் சுரங்கங் களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுப் பெரிதும் துன்புறுத்தப்படுவது விளக்கப்பட்டிருந்தது. எனவே, பீல் 1842இல் சுரங்கச் சட்ட மொன்றை (Mines Act) ஏற்படுத்தி, அதன் மூலம் பெண்களும், பத்து வயதிற்குட்பட்ட சிறுவரும் சுரங்கங்களில் வேலைக் கமர்த்தப் படுதலைத் தடுத்தார். 1844இல் அவர் தொழிற்சாலைச் சட்டத்தை (Factory Act) ஏற்படுத்தி, அதன் மூலம் ஆலைகளில் பெண்கள் வேலை செய்யும் நேரத்தை 12 மணியாகவும், சிறுவர் களின் நேரத்தை $6\frac{1}{2}$ மணியாகவும் குறைத்தார். மேலும், சிறுவர்களை நாளைக்கு மூன்று மணிநேரமாவது கல்வி கற்க வேண்டுமெனவும் வற்புறுத்தினார். ராயல் விவசாய சங்க மொன்றை நிறுவி, விவசாய சம்பந்தமான எல்லா விவரங்களையும் சேகரிக்க ஏற்பாடு செய்தார். வேதி நூல், இரசாயன நூல், தாவர நூல் இவற்றின் துணைகொண்டு விவசாயம் வளர்ச்சியுற அவர் பெரிதும் பாடுபட்டார். நகரங்களில் சுகாதார வசதிகளை ஆராய்ந்து அதற்கான சிபாரிசுகளைச் செய்யக் கமிஷன் ஒன்றை அவர் 1845இல் ஏற்படுத்தினார்.

தானியச் சட்ட ஒழிப்பு (Abolition of the Corn Law) *1846*

தானியச் சட்டங்களை ஒழிக்க வேண்டுமென்ற இயக்கம் இங்கிலாந்தில் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டே வந்தது.

தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கமானது 1838ஆம் ஆண்டில் மாஞ்செஸ்டர் நகரில் தோன்றியது. ரிச்சர்ட் காப்டன் என்பவரே அதைத் தோற்றுவித்தவர். 1841இல் அவர் பாராளுமன்ற உறுப்பினரானது முதல் தானியச் சட்டத்தை ரத்து செய்யும்படி ஓயாது கூறிவந்தார். ஜான்பிரைட் என்ற இன்னொரு ஆவேசப் பேச்சாளர் காப்டனுக்குத் துணையாகப் பிரசாரம் செய்துவந்தார். தானியங்களின் விலை குறையாமல் தானியச் சட்டங்கள் பாது காத்ததால், நிலப் பிரபுக்கள் அதை ஆதரித்தனர். ஆனால், எளிய விலைக்குத் தானியத்தை பெற விரும்பிய ஏழை மக்களும் நடுநிலை வகுப்பினரும் அதை ரத்துசெய்யக் கோரினர். பீல் ஏழைகளின் நண்பர்; எனினும், பிற்காலத்தில் இங்கிலாந்துக்கும், வேறு ஐரோப்பிய நாட்டுக்கும் போர் ஏற்பட்டால் நாட்டில் பஞ்ச மேற்படுமெனவும், அச் சமயம் எளிய விலைக்குக் கிடைக்கும் தானியம் திடீரென்று நிறுத்தப்பட்டால் மக்கள் பட்டினியால் இறக்க நேருமெனவும், ஆகவே, பிரிட்டிஷ் விவசாயத்தைக் காப்புவரிகளால் காத்துவருதலே விவேகமானது எனவும் பீல் கருதினர். ஆனல், இங்கிலாந்தின் மக்கள்தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேவந்ததால், யுத்த காலத்தில் ஏற்படக் கூடிய பஞ்ச நிலைமை சாதாரண காலத்திலேயே ஏற்பட்டது. தானியச் சட்டங்கள் ஒழிந்தாலன்றி மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் எளிய விலைக்குக் கிடைக்காத நிலை நாளுக்கு நாள் முற்றிக்கொண்டே சென்றது.

இச் சமயத்தில் அயர்லாந்தில் உருளைக்கிழங்கு நோய் ஏற்பட்டு, உருளைக்கிழங்குச் செடிகளெல்லாம் காய்ந்து சருகாய்ப் போயின. வெளிநாட்டிலிருந்து உருளைக்கிழங்கு அயர்லாந்துக் குள் நுழையாதபடி தானியச்சட்டங்கள் தடுத்து நின்றன. அயர்லாந்தினர் உருளைக்கிழங்கையே உணவாகக் கொண்டோர். எனவே, தானியச் சட்டங்களை ரத்து செய்தாலன்றி, அயர்லாந்து மக்களைப் பட்டினியினின்றும் காக்க இயலாது என்பதையுணர்ந்த பீல், 1845ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமது மந்திரி சபையிடம் தானியச் சட்டத்தை ரத்து செய்வதில் தமக்கு ஆதரவளிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். ஆனல், காபினெட் அவருக்கு ஆதரவளிக்க மறுத்தது. நவம்பரில் ரஸ்ஸல் என்னும் விக்குக் கட்சித் தலைவர் தானியச் சட்டத்தை ரத்து செய்வதே தம் கட்சியின் கொள்கையென வெளிப்படையாகத் தமது தொகுதியினருக்கு அறிவித்தார். இதைக் கண்ட பீல், மீண்டும் தமது காபினெட்டிடம் தம் கருத்தைத் தெரிவித்தார். ஆனல், காபினெட் அதை நிராகரித்தது. எனவே, 1845ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவர் தம் பதவியை ராஜினமா செய்தார்.

அதன் பின் ரஸ்ஸல் பிரபு மந்திரி சபையை அமைக்க முயன்று தோற்ருர். எனவே, மீண்டுப் பீல் பிரதமராஞர். தானியச் சட்டத்தை ரத்து செய்வதென்ற உறுதியுடன் பதவியேற்ற அவர், 1846ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் அதற்கான மசோதா ஒன்றைப் பிரேரேபித்தார். ஜூன் மாதத் துக்குள் அம் மசோதாவானது இரு சபைகளிலும் நிறைவேறியது.

பீல் மந்திரி சபையின் வீழ்ச்சி (1846)

தானியச் சட்டத்தை ரத்து செய்வதில் பீலுக்கு விக்குக் கட்சியினர் உதவி செய்தனரேனும், அவரைப் பதவியிலிருந்து நீக்கத் தக்கதொரு தருணத்தை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டே யிருந்தனர். டோரிக் கட்சியினர் சிலரும் பீலை எதிர்க்க விக்குகளோடு சேர்ந்து கொண்டனர். பெண்டிங், டிஸ்ரேலி போன்ற இளைஞர்கள் அத்தகையோரின் தலைவர் களாய்த் திகழ்ந்தனர். டிஸ்ரேலி ஒரு சமயம் பீலிடம் சென்று அவரது மந்திரி சபையில் ஓர் உத்தியோகம் வழங்கும்படி கேட்டார். பீல் அதற்கு உடன்படவில்லை. எனவே, அவர் தருணம் வாய்த்தபோதெல்லாம் பீலைத் தாக்குவதென உறுதி பூண்டார். தானியச் சட்ட ரத்தைப் பீல் தாராள மனத்துடன் ரத்துசெய்ய விரும்பியதை டிஸ்ரேலி, தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டார். வாதத்தில் வல்லவரான டிஸ்ரேலி பீலின் கொள்கைகளைப் பாராளுமன்றத்தில் பழித்துரைத்தார். தம் கட்சிக்குத் துரோகம் செய்தவர்களுள் அவர் முதன்மை யானவர் என்று கூறி அவரைத் தூற்றிஞர். அதோடு ‘பாது காப்பாளர்கள்’ (Protectionists) என்ற ஒரு புதிய கட்சியைக் கன்சர்வேடிவ் கட்சியிலேயே அவர் தோற்றுவித்தார். தானியச் சட்டத்தை விரும்பிய நாட்டுப்புறக் கனவான்கள் டிஸ்ரேலியைத் தங்களது கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

1846இல் அயர்லாந்தில் கொலையும், கொள்ளையும் தாண்டவ மாடின. நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட குடியானவர்கள் நிலப்பிரபுக்களைக் கொன்றும், அவர்களது சொத்தைச் சூறையாடி யும் வந்தனர். அயர்லாந்தில் அமைதியை நிலைநாட்ட விரும்பிய பீல் அடக்குமுறைச் சட்டங்களை (Coercion Bills) 1846இல் பாராளு மன்றத்தில் கொணர்ந்தார். கன்சர்வேடிவ் கட்சியினர் பொதுவாக அத்தகைய சட்டங்களை வரவேற்றனர். ஆஞல், தடையிலா வாணிகக் கொள்கையினரோடும், விக்குகளோடும், அயர்லாந்தின ரோடும் பாதுகாப்புவாதிகள் என்னும் கன்சர்வேடிவ்கள் சேர்ந்துகொண்டதால், அடக்குமுறைச் சட்டங்கள் பாராளுமன்றத்

தில் தோல்வியுற்றன. எனவே, பீல் 1846ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந் தேதி தம் பதவியை ராஜினுமா செய்தார். அதன் பின்னரும் பீல் பொதுமக்கள் சபையில் வீற்றிருந்து தமது அரசியல் பணியைத் தொடர்ந்து செய்துவந்தார். அவருக்குப் பின் பிரதமரான ரஸ்ஸல் பிரபுவுக்கு அவர் எல்லா உதவிகளையும் செய்தார். அவரது உதவியின்றேல் ரஸ்ஸல் பிரபு தடையிலா வாணிக முறையை வளர்த்திருக்க முடியாது. இராணியாருக்கும், அவரது கணவருக்கும் கடைசிவரை பீல் உறுதுணையாயிருந்து வந்தார். இறுதியில், குதிரையினின்றும் வீழ்ந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியினுல் 1850இல் அவர் இறந்தார்.

பீலின் மதிப்பீடு

'நாணம் நிறைந்த ஒரு விசித்திரப்பேர்வழி' என விக்டோரியா இராணியாரால் முதலில் கருதப்பட்ட பீல், பின்னர்த் தமது பிரதமர் பதவியை ராஜினுமா செய்தபோது, அதே இராணியாரால் மனமுவந்து பாராட்டப்பட்டார். பீலின் உதவியின்றித் தாம் ஆட்சி நடத்த முடியாது எனக் கூறி இராணியார் அங்கலாய்த்தார். அதற்குக் காரணம் இராணியார் அவரிடம் கண்ட அரும் பெருங் குணங்களாகும்.

பீல் பருத்த உடலும், உரத்த குரலும், நுண்ணிய அறிவும் கொண்டவர்; நல்ல உழைப்பாளர்; கல்வியிற் சிறந்தவர்; நல்ல நாவன்மை படைத்தவர்; பாராளுமன்றத்தில் அவர் கணீரெனப் பேசும்போது கேட்டு மயங்காதார் இலர். பேசும்போது புள்ளி விவரங்களை நிறையக் கொடுப்பதில் வல்லவர். மெக்காலே பிரபுவுக்கிணையான நினைவாற்றல் அவரிடம் காணப்பட்டது. அவர் தமது சகாக்களிடம் அதிகம் பேசமாட்டார். அவர்களோடு மிக்க கண்டிப்பான முறையில் ஓர் எதேச்சாதிகாரிபோல் நடந்து கொள்வார். எனினும் அமைச்சர்கள் அனைவரது நன்மதிப்பையும் அவர் பெற்றிருந்தார்.

பிறப்பாலும் வளர்ப்பாலும் அவர் ஒரு டோரிக் கட்சியினரே எனினும், உளப்பாங்கில் தாராளக் கொள்கையுடையவர். சீர் திருத்தங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதை நன் குணர்ந்தவர். குறுகிய கட்சிப்பற்றைவிட, நாட்டுப்பற்றே அவரிடம் மேலோங்கி நின்றது. நாட்டின் நலனுக்காக அவர் தம் கட்சிக் கொள்கைகளை விட்டுக்கொடுக்க ஒருகாலும் தயங்கியதில்லை. எனவேதான், அவர் தம் கட்சிக்கு விரோதமாகக் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டத்தையும், தானியச் சட்ட ரத்தையும் ஆதரித்தார். இங்ஙனம் அவர் தம் கட்சிக்கு மும்முறை

துரோகம் விளைவித்தார். ஆனால், நாட்டின் நலன் கருதியே அவ்வாறு செய்தார் என்பதால் அவரது பெருமை மேலும் ஓங்கியதே யன்றிக் குறையவில்லை. அவரது செய்கையால் டோரிக் கட்சியில் ஒரு பிளவு ஏற்பட்டது. அக் கட்சியுள் கன்சர்வேடிவ் கட்சியை அவர் 1829இல் ஏற்படுத்தினார். தானியச் சட்டத்தை ரத்துசெய்ய முயன்றபோது கன்சர்வேடிவ் கட்சியிலும் பிளவு நேர்ந்தது. பீல் ஒரு நல்ல கட்சித் தலைவராக என்றுமே இருந்ததில்லை. தமக்கு வேண்டியவர்களுக்கு அதிகம் எதுவும் நன்மை செய்யமாட்டார். அவரது பதவிக் காலத்தில் அவர் ஆறே பேர்களுக்கு மட்டுமே பிரபுப் பதவியை வழங்கினார். யாரிடமும் மனம்விட்டுப் பேசிப் பழகத் தெரியாதவர் எனினும், பாராளுமன்றத்தில் நல்ல மதிப்பைப் பெற்றிருந்தார். அதிலிருந்த நாட்டுப்புறக் கனவான்களைப் போல் அவரும் வேட்டையாடுவதிலும், குதிரைப் பந்தயங்களிலும் ஈடுபாடு கொண்டவர்.

செல்வந்தர் வீட்டில் பிறந்து, செல்வத்திலேயே வளர்ந்தவரென்றாலும், பீல் ஏழைகள்மீது அன்பு கொண்டவர். அவர்கள் எளிய விலைக்கு உணவுத் தானியங்களைப் பெறவேண்டுமென்பதே அவரது குறிக்கோள். அவர் ஒரு பொருளியல் நிபுணர் என்பதை அவரது பாங்குச் சட்டமும், சுங்க வரிச் சீர்திருத்தங்களும் நன்கு மெய்ப்பிக்கின்றன. நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்படுத்திய பெருமை அவருக்கே உரியது. பிற்காலத்தில் பிரிட்டிஷ் வியாபாரம் பல்கிப் பெருகியமைக்குக் காரணம், அவர் ஏற்படுத்திய வலிமை மிக்கப் பொருளாதார அடிப்படையேயாகும்.

வெளிநாட்டு விவகாரங்களில் அவர் அதிகக் கவனம் செலுத்தவில்லை. அபெர்டீன் என்ற வெளி நாட்டமைச்சர் கூறிய வண்ணமே அவர் நடந்து கொண்டார். கூடியவரை போரைத் தடுக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். அமெரிக்காவோடு 1842இல் அவர் காலத்து ஆஷ்பர்ட்டன் உடன்படிக்கையும், 1846இல் ஒரிகான் உடன்பாடும் ஏற்பட்டன. முன்னதன் மூலம் கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலிருந்த எல்லை வரையறுக்கப்பட்டது. பின்னதன் மூலம் பசிபிக் கடற்கரையோரம் பிரிட்டிஷாரின் எல்லை நிர்ணயிக்கப்பட்டது. வான்கூவர் தீவு பிரிட்டிஷாருக்குக் கிடைத்தது.

இங்ஙனம் வெளிநாட்டில் அமைதியையும், உள்நாட்டில் பொருளாதார வளத்தையும் நிலைநாட்ட ஓயாது பாடுபட்டார் பீல். டிஸ்ரேலி போன்ற அவரது எதிரிகள் அவரை 'மற்றையோர் கருத்துக்களைத் திருடியே வாழ்பவர்' **(Burglar of other men's**

intellect) என்றும், சொந்த மூளையற்றவர் என்றும், எதிர்கால நோக்கும் கற்பனைத்திறனும் இல்லாதவர் என்றும் பழித்தனர். மேலும், அவர் ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய பண்புகள் சிறிதும் அற்றவர் என்றும், தன்னம்பிக்கையில்லாதவர் என்றும், மனிதர்களின் தராதரத்தை நிர்ணயிக்க இயலாதவரென்றும் டிஸ்ரேலியால் பழிக்கப்படுகிறார். அதே சமயத்தில், அவரைப் 'பாராளு மன்றத்தில் வீற்றிருந்த உறுப்பினர்களிலேயே மிகப் பெரியவர்' என்று புகழ்கின்றார். பொதுமக்கள் சபையில் அவர் மிக எளிய முறையில் தமது காரியங்களைச் சாதித்துக் கொண்டதைக் கண்ட டிஸ்ரேலி, 'மிகச் சாமர்த்தியமுள்ள மனிதர்' என்று அவரைப் போற்றுகிறார். 'நிருவாகத் திறமையில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர்' என்பதையும் டிஸ்ரேலி ஒப்புக்கொள்கிறார். பகைவர்களாலேயே இங்ஙனம் புகழப்படுவதென்றால் உண்மையில் அவர் எத்தகைய பெருமை வாய்ந்தவரா யிருக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

3. விக்டோரியப் பேரமைச்சர் பாமர்ஸ்டன் (1784 - 1865)

வாழ்க்கைக் குறிப்பு; பாமர்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள்கை (1830-41); பெல்ஜியத்தின் சுயேச்சை (1830) — போலந்து — ஸ்பெயினும் போர்ச்சுகலும்—துருக்கி-ரஷ்யா-கீழைச் சிக்கல்—முதல் ஆப்கானிய யுத்தம் (1839-42)—முதல் சீனப் போர் (1839-42)—டோரிகள் ஆட்சியில் வெளிநாட்டுக் கொள்கை (1841-46); பாமர்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள்கை (தொடர்ச்சி) (1846-51); 1848ஆம் ஆண்டுப் புரட்சிகள்—டான்பஸிபிகோ நிகழ்ச்சி (1850)—ஃபிரெஞ்சுத் திடீர்ப் புரட்சி (1851)—ரஸ்ஸல் மந்திரி சபை வீழ்ச்சி—டெர்பி மந்திரி சபை; அபெர்டீன் கூட்டு மந்திரி சபை; பிரதமர் பாமர்ஸ்டன் (1855-1865): பாமர்ஸ்டனின் முதல் மந்திரி சபை (1855-58)—பாமர்ஸ்டனின் இரண்டாவது மந்திரி சபை (1859-65)—பாமர்ஸ்டனும் இத்தாலியும்—பாமர்ஸ்டனும் ஃபிரான்சும்—பாமர்ஸ்டனும் அமெரிக்காவும் — பாமர்ஸ்டனும் பிரஷ்யாவும் — பாமர்ஸ்டனும் போலந்தும்—பாமர்ஸ்டனும் சீனுவும்—பாமர்ஸ்டனும் ஜப்பானும்; பாமர்ஸ்டனின் மதிப்பீடு: வெளிநாட்டுக் கொள்கை—உள்நாட்டுக் கொள்கை—குணுதிசயங்கள்.

விக்டோரியா மகாராணியார் காலத்தில் ஒப்புயர்வற்று விளங்கிய பேரமைச்சர்களில் பாமர்ஸ்டனும் ஒருவராவார். பீல் என்பார் எங்ஙனம் தமது உள்நாட்டுக் கொள்கைகளாற் பெரும் புகழ் எய்திஞரோ, அதே போன்று பாமர்ஸ்டனும் தனது விவேகம் நிறைந்த வெளிநாட்டுக் கொள்கையினுல் அழியாப்புகழ் பெற்றுர். பொதுவாழ்க்கைக்காகவே தனது வாழ்நாளனைத்தையும் தத்தஞ் செய்தவர் பாமர்ஸ்டன். தனது 23-வது வயதில் அமைச்சராக நியமிக்கப் பெற்ற அவர், 81-வது வயதுவரை, அதாவது இறக்கும்வரை பொதுவாழ்விலேயே ஈடுபட்டிருந்தார். இந் நெடுநாளைய பொதுவாழ்க்கையில் அவர் 16 பாராளுமன்றங்களில் அமர்ந்து பணியாற்றியவர். 10 பிரதம மந்திரிகளிடம் கட்டுப்பட்டுத் தொழில் புரிந்தவர். அச் சமயத்தில் பெரும்பாலும்

இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தவர். கடைசியாக இங்கிலாந்தின் பிரதமராக இருந்து ஆட்சிபுரியும் வாய்ப்பையும் அவர் பெற்ருர்.

வாழ்க்கைக் குறிப்பு

பாமர்ஸ்டன் 1784ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 20-ந் தேதி பிறந்தார். ஹேரோ, எடின்பர்க், கேம்பிரிட்ஜ் முதலிய இடங்களில் அவர் கல்வி பயின்ருர். 1807ஆம் ஆண்டில் அவர் ஒரு நசித்துப் போன பரோவின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் நுழைந்தார். ஆரம்பத்தில் அவர் ஒரு டோரியாக விளங்கிஞர். 1807 முதல் 1828 வரை அவர் பெர்சிவல் (Percevel), லிவர்ப்பூல், கானிங், காடரிச், வெலிங்டன் போன்ற டோரிப் பிரதமர்களின் மந்திரி சபைகளில் போரமைச்சராகப் (Secretary of War) பணியாற்றிஞர். 1828ஆம் ஆண்டில் அவர் கிழக்கு ரெட்ஃபோர்ட் (East Retford), பென்ரின் (Penryn) என்ற தொகுதிகளின் பிரதிநிதித்துவத்தை ஒழிக்கும்படி வெலிங்டன் பிரபுவைக் கேட்டுக் கொண்டார். அவர் அதற்கு இணங்காமற் போகவே, பாமர்ஸ்டன் டோரிக் கட்சியைவிட்டு நீங்கி விக்குக் கட்சியில் சேர்ந்து கொண்டார். கிரே பிரபுவின் அமைச்சரவையில் அவர் 1820ஆம் ஆண்டில் வெளிநாட்டு அமைச்சராகச் சேர்ந்தார். 1834-35இல் பீல் பிரதமரானபோது, அவர் அமைச்சர் பதவியினின்றும் விலகிஞர். மீண்டும் மெல்போர்ன் மந்திரிசபை ஏற்பட்டபோது அவர் வெளிநாட்டு அமைச்சராஞர். 1841 வரை அவர் மெல்போர்ன் தலைமையில் பணிபுரிந்தார். அதன் பின், விக்குகளுக்குப் பதிலாக டோரிகளின் ஆட்சி பீல் தலைமையில் ஏற்பட்டது. அவரது ஆட்சிக்குப் பின் வந்த ரஸ்ஸல் மந்திரி சபையில் பாமர்ஸ்டன் மீண்டும் வெளிநாட்டமைச்சராகப் (1846-51) பணியாற்றிஞர். 1851இல் அவர் ரஸ்ஸல் பிரபுவைக் கலக்காமல் ஃபிரெஞ்சுப் புரட்சி சர்க்காரை ஆதரித்ததால் பதவியினின்றும் நீக்கப்பட்டார். ஆனுல், 1852இல் ரஸ்ஸல் மந்திரிசபை வீழ்ச்சியுற்று டெர்பி பிரபுவின் கன்சர்வேடிவ் மந்திரிசபை ஏற்பட்டது. பாதுகாப்புக் (Protection) கொள்கையை ஒப்புக்கொள்ளாததால் பாமர்ஸ்டன் பிரபு டெர்பி மந்திரி சபையில் சேர மறுத்து விட்டார். சில மாதங்களே நீடித்த டெர்பி மந்திரி சபைக்குப்பின் அபெர்டீன் அமைச்சரவை ஏற்பட்டபோது பாமர்ஸ்டன் உள்நாட்டு அமைச்சராஞர். 1852 முதல் 1855 வரை அவர் அப் பதவியிலிருந்தார். 1855இல் அபெர்டீன் அமைச்சரவை வீழ்ச்சியுற்ற பின் பாமர்ஸ்டன் பிரதமராஞர். 1858இல் 15 மாதங்களுக்கு டெர்பி பிரபுவின் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சியினர் பதவியி

லமர்ந்தனர். அதன் பின்னர் மீண்டும் பாமர்ஸ்டன் பிரதமரானுர். 1865 வரை பிரதமராகவே இருந்து அவர் இறந்தார்.

பாமர்ஸ்டன் வெளிநாட்டுக் கொள்கை (1830-1841)

வெளிநாட்டுக் கொள்கையில் பாமர்ஸ்டன், கானிங் பிரபுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினுர். ஐரோப்பிய சமாதானத்தை எவ்வகையாலும் பாதுகாக்கவேண்டுமென்றும், ஐரோப்பிய விவகாரங்கள் யாவற்றிலும் பிரிட்டன் கலந்துகொண்டு தனது செல்வாக்கை நிலைநாட்டவேண்டுமென்றும் அவர் விரும்பினுர். பிரிட்டனின் வன்மையை வெளிநாட்டுக்கு உணர்த்தும் சந்தர்ப்பம் எதையும் நழுவ விடக்கூடாது என்பது அவரது கொள்கையாகும். அவரது அந்நிய நாட்டுக் கொள்கை சுறுசுறுப்புள்ளதாகவும், ராஜ தந்திரங்கள் நிரம்பியதாகவும் இருந்தது. உள்நாட்டில் தாராளக் கொள்கைகளை அடக்கினுர். எனினும் வெளிநாடுகளில் தாராளக் கொள்கைகளுக்கு அவர் நல்ல ஆதரவு தந்தார். ஆஸ்திரியா, ரஷ்யா போன்ற நாடுகளில் நிலவிய வல்லரசை வெறுத்தார். தேசீய இயக்கங்களை ஆதரித்ததோடு, தேசீயப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தங்கள் நாட்டைவிட்டு ஓடி வந்த அகதிகளுக்கு ஆதரவளித்தார். அவரது கொள்கைகளுக்கு மக்களுடைய பூரண ஆதரவு இருந்தது. எனினும், அவரது கொள்கையால் பல ஐரோப்பிய நாடுகளுக்கு அநீதி விளைந்தது. பிரிட்டனும், அவரது கொள்கையின் விளைவாகச் சில சமயங்களில் மிக்க இக்கட்டான நிலைமைகளுக்குள்ளாகியது.

பெல்ஜியத்தின் சுயேச்சை (1830)

பெல்ஜியத்தையும் ஹாலந்தையும் ஒன்ருக இணைத்தது வியன்ஞகாங்கிரஸ் (1815) செய்த பல தவறுகளில் ஒன்ருகும். மதம், கலாசாரம் முதலிய துறைகளில் முற்றிலும் வேறுபட்டிருந்த காரணத்தால், பெல்ஜியர்கள் டச்சுக்காரர்களின் பிடியினின்றும் விடுபடுவதற்கே தருணம் பார்த்துக்கொண்டிருந்தனர். 1830ஆம் ஆண்டில் ஃபிரான்சில் ஒரு புரட்சி ஏற்பட்டுப் பத்தாம் சார்லஸ் அரியணையினின்றும் அகற்றப்பட்டு, லூயி பிலிப் என்னும் அரசர் அதிகாரம் பெற்ருர். இதைக்கண்டு ஊக்கம் பெற்ற பெல்ஜியர்கள் தாங்களும் சுயேச்சை பெறவேண்டி பிரஸ்ஸெல்ஸ் நகரில் ஒரு கலகத்தைத் தோற்றுவித்தனர்.

இங்கிலாந்தின் வெளிநாட்டமைச்சரான பாமர்ஸ்டன் உடனே பெல்ஜியத்தை ஆதரித்தார். லண்டன் நகரில் ஃபிரான்ஸ்,

பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நாடுகளை ஒன்றுகூட்டிப் பெல்ஜியப் பிரச்சினையை ஆராயும்படி அவர் கூறினார். லண்டன் மாநாடு பெல்ஜியமும் ஹாலந்தும் பிரிக்கப்பட வேண்டுமென்றும், நாட்டுக் கடனில் பாதியைப் பெல்ஜியம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், லக்ஸம்பர்க் மாகாணம் ஹாலந்துக்குத் தரப்பட வேண்டுமெனவும் சிபாரிசு செய்தது. இச் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள டச்சுக்காரர் தயங்கினர், பெல்ஜியமும் லக்ஸம்பர்க்கைக் கைவிட மறுத்தது. எனவே, டச்சுக்காரர் பெல்ஜியத்தின்மீது படையெடுத்தனர். எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்று இந்தச் சமயம் பார்த்து ஃபிரான்சும் பெல்ஜியத்தின்மீது படையெடுத்தது. ஃபிரெஞ்சுக்காரர் உடனே பெல்ஜியத்தினின்றும் வெளியேற வேண்டுமெனவும், இல்லாவிடில் இரு நாடுகளுக்கும் போர் விளையு மெனவும் பாமர்ஸ்டன் எச்சரித்தார். ஃபிரெஞ்சுக்காரர் அதன்படி பெல்ஜியத்தினின்றும் வெளியேறினர்.

சாக்ஸிகோபர்க் இளவரசனும், விக்டோரியா இளவரசியின் மாமனுமான லியோபோல்டு என்பவரைப் பிரிட்டன் பெல்ஜியத் தின் மன்னரென அறிவித்தது. லண்டன் மாநாட்டின் சிபாரிசு களைப் பிரிட்டனும், ஃபிரான்சும் மீண்டும் 1832இல் உறுதிப் படுத்தின. அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்த ஹாலந்தை, ஃபிரான்சும், பிரிட்டனும் படையெடுத்து அவர்களைப் பெல்ஜியத்தி னின்றும் ஓட்டின. டச்சுக்காரர்கள் லண்டன் மாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள மீண்டும் மறுத்தனர். கடைசி யாக, 1839ஆம் ஆண்டில்தான் ஹாலந்து, பெல்ஜியத்தின் சுயேச்சையை ஒப்புக்கொண்டது. பிரிட்டன், ஃபிரான்ஸ், ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்ய நாடுகளோடு அது செய்துகொண்ட லண்டன் உடன்படிக்கையின்படி பெல்ஜியத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன. மேலும், பெல்ஜியம் நடுநிலைமை நாடு என்பதையும் எல்லா வல்லரசுகளும் ஒப்புக்கொண்டன. 1914 வரை பெல்ஜியத்தின் நடுநிலையைக் குலைக்க எந்த நாடும் முன்வரவில்லை.

போலந்து

ஃபிரெஞ்சு நாட்டில் நடைபெற்ற ஜூலைப் புரட்சியை (1830) முன்மாதிரியாகக்கொண்டு போலந்திலும் ஒரு கலகம் தோன்றி யது. ரஷ்ய மன்னர் நிக்கோலாஸ் வெகு கடுமையாக அப் புரட் சியை யொடுக்கிப் போலந்தை ரஷ்யப் பேரரசோடு இணைத்து விட்டார். போலந்து அதுவரை அனுபவித்து வந்த சுதந்திரம் பறிபோயிற்று. வியன்னு காங்கிரஸ் போலந்துக்களித்த அரசியல் திட்டத்தை ரஷ்யா புறக்கணித்துவிட்டதைப் பாமர்ஸ்டன் மிக

வன்மையாகக் கண்டித்தார். ஆனால், உருப்படியான நடவடிக்கை எதையும் அவர் எடுத்துக்கொள்ளவில்லை. எனினும், ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் அதிலிருந்து மனக்கசப்பு வளரலாயிற்று.

ஸ்பெயினும் போர்ச்சுகலும்

டாம் பீட்ரோ (Dom Pedro) என்னும் பிரேஜில் பேரரசர் ஸ்பெயினுக்குத் தமது மகளான டோன்னா மேரியா என்பவளை அரசியாக்கினார் (1828). அதை எதிர்த்து அவரது சகோதரரான டாம் மிகுவெல் (Dom Miguel) என்பவர் புரட்சி செய்து அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டார். இதைக் கண்ட பீட்ரோ, பிரேஜிலின் முடியைத் துறந்துவிட்டு (1831), ஐரோப்பாவுக்கு வந்து தம் மகளை அரியணையில் அமர்த்தப் பாடுபட்டார். பீட்ரோ தமக்குவேண்டிய படைகளை இங்கிலாந்தில் திரட்டிக்கொள்ள பாமர்ஸ்டன் உதவிசெய்தார். மேலும், நேபியர் (Napier) என்ற தளகர்த்தர்வசம் ஒரு கப்பற்படையையும் பீட்ரோவுக்கு உதவியாக அனுப்பினார். அதனால், பீட்ரோ, மிகுவெலைத் தோற்கடித்துத் தமது மகளைப் போர்ச்சுகலின் அரசியாக முடி சூட்டினார்.

1833இல் ஸ்பெயின் மன்னரான ஃபெர்டினண்டு இறந்தார். அவருக்குப்பின் அவரது மகள் இஸபெல்லாவே ஸ்பெயினின் அரசியாக வேண்டுமென அவர் ஏற்கெனவே அறிவித்திருந்தார். ஆனால், ஸ்பெயினின் குடிமக்கள், ஃபெர்டினண்டின் சகோதரரான டான் கார்லோ (Don Carlos) என்பவரே பட்டத்துக்கு வர வேண்டும் என விரும்பினார்கள். ஆகவே, ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் மூண்டது. பாமர்ஸ்டன், இஸபெல்லாவை ஆதரித்தார். உரிமையுடைய அவ்வரசிக்கு விரோதமானவர்களை ஒழிக்க பிரிட்டன், ஃபிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் தம்முள் ஒரு நால்வர் ஒப்பந்தத்தைச் (Quadruple alliance) செய்துகொண்டன. அந்த ஒப்பந்தத்தில் ஃபிரான்சு சேருவதை ஆரம்பத்தில் பாமர்ஸ்டன் விரும்பாத காரணத்தால், ஃபிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் பகைமை ஏற்பட்டது. இவ்வாறு பாமர்ஸ்டன் ஸ்பெயினிலும், போர்ச்சுகலிலும் சட்டரீதியான முடியரசுகளையே ஆதரித்தார்.

துருக்கி-ரஷ்யா-கீழைச்சிக்கல்

துருக்கிய சுல்தானின் பிரதிநிதியாக எகிப்தை ஆண்டுவந்த மெஹெமெட் அலி (Mehemet Ali) என்பார் 1832-33இல் தம் தலைவருக் கெதிராகவே ஒரு கலகத்திலிறங்கினார். ஆசியா மைனரை அவர் தாக்கிக் கைப்பற்றினார். அதன்பின், அவர்

சுல்தானின் தலைநகரான கான்ஸ்டான்டிநோபிலை நோக்கி விரைந்தார். இச் சமயத்தில் பிரிட்டனும், ஃபிரான்சும் ஹாலந்தைத் தாக்கிக்கொண்டிருந்ததால் சுல்தானுக்கு உதவிசெய்ய இயலவில்லை. எனவே, சுல்தான் ரஷ்யாவின் உதவியை நாடினார். ரஷ்யாவின் துருப்புகள் துருக்கியில் புகுந்து மெஹெமெட் அலியின் முன்னேற்றத்தைத் தடுத்தன. ரஷ்யாவின் செல்வாக்கைத் துருக்கியில் வளரவிடக்கூடாதென விரும்பிய பிரிட்டனும், ஃபிரான்சும் மெஹெமெட் அலியைப் பயமுறுத்தி அவர் கைப்பற்றிய சிரியா மாகாணத்தைத் துருக்கிய சுல்தானுக்குத் திரும்பவும் கொடுக்கக் கூறினார். அதன்மூலம் சுல்தானுக்கு ரஷ்ய உதவி தேவையில்லாமல் செய்ய அவர்கள் முயன்றனர். எனினும், சமயத்தில் உதவிசெய்த ரஷ்ய ஸாரோடு துருக்கிய சுல்தான், உன்கியார் ஸ்கெலெஸ்ஸி (Unkiar Skelessi) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி துருக்கி ஒரு குறிப்பிட்ட நஷ்ட ஈட்டுத்தொகை தரும் வரை ரஷ்யா தான் கைப்பற்றிய டான்யூபியப் பிரதேசங்களை அப்படியே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேலும், டார்டனல்ஸ் ஜலசந்தியில் ரஷ்யர்களின் கப்பல்களைத் தவிர, வேறு எந்நாட்டுக் கப்பலையும் உள்ளே விடுவதில்லை என சுல்தான் ஒப்புக்கொண்டார். இதைக் கேட்ட பிரிட்டனும், ஃபிரான்சும் பெரிதும் கவலை கொண்டன.

1833இல் ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா, ஃபிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகள் பெர்லினில் கூடிப் பழைய தூய ஒப்பந்தத்தை (Holy Alliance) உயிர்ப்பித்தன. சட்டரீதியான மன்னர்களுக்கெதிராகக் கலகம் எந்த நாட்டில் ஏற்பட்டாலும் அதில் தலையிடத் தங்களுக்கு உரிமை இருப்பதாகப் பெர்லின் மாநாடு அறிவித்தது.

1839ஆம் ஆண்டில் மெஹெமெட் அலி மீண்டும் துருக்கியின் மீது படையெடுத்தார். இச் சமயத்தில் ரஷ்யா துருக்கிக்கு உதவி செய்ய முன்வந்தது. ஆனால், பாமர்ஸ்டன் அதைக் கண்டித்து எல்லா வல்லரசுகளும் சேர்ந்தே துருக்கியப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனக் கூறினார். ஃபிரெஞ்சு மன்னரான லூயி பிலிப், மெஹெமெட் அலிக்கு உதவிசெய்ய விரும்பினார். ஏனெனில், பிரிட்டிஷாரின் செல்வாக்கு எகிப்திலும், மத்தியதரைக்கடலிலும் வளராமலிருக்க மெஹெமெட் அலி அவசியமென அவர் எண்ணினார். இந்த நிலையில் பாமர்ஸ்டன் ரஷ்யாவோடு பேச்சு வார்த்தை நடத்தித் தனிப்பட்ட முறையில் அது துருக்கிய விவகாரத்தில் தலையிடுவதைத் தடுத்துவிட்டார். லண்டனில் ரஷ்யா,

ஆஸ்திரியா, பிரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாட்டின் பிரதிநிதிகள் கூடித் துருக்கிய சுல்தானுக்கு உதவி செய்வதெனத் தீர்மானித்தனர். ஃபிரெஞ்சு சர்க்காரை ஏனைய வல்லரசுகள் கூட்டுச் சேர்க்கவில்லை. இதையறிந்த ஃபிரான்சு கோபங்கொண்டு மெஹெமெட் அலிக்கு உதவிசெய்யத் தீர்மானித்தது. ஃபிரான்சின் உதவி வருமென்று மெஹெமெட் அலி துருக்கியைத் தாக்கினார். ஆனால், ஆஸ்திரியா, துருக்கி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் கூட்டுப் படையானது மெஹெமெட் அலியின் படைகளைத் தோற்கடித்து சிரியாவைக் கைப்பற்றியது. மெஹெமெட் அலி பணிந்தார். எகிப்திய பாட்சாவாக இருக்க மட்டும் அனுமதி பெற்று அவர் வந்தவழியே திரும்பினார். இக் கீழைச்சிக்கலில் பிரிட்டனுக்கும், ஃபிரான்சுக்கும் போர் ஏற்பட்டுவிடுமோ என்று அனைவரும் பயந்தனர். ஆனால், அப்படியொன்றும் ஏற்படவில்லை. ரஷ்யா, துருக்கியில் தனிப்பட்ட செல்வாக்கைத் தேடிக் கொள்ள முடியாமல் பாமர்ஸ்டன் தடுத்துவிட்டார்.

முதல் ஆப்கானிய யுத்தம் *(1838-42)*

கீழைச்சிக்கல் விவகாரத்தில் ரஷ்யாவுடன் உறவுகொண்டாடிய பிரிட்டன், தூரக்கிழக்கு விவகாரத்தில் ரஷ்யாவின்மீது ஐயப்பட்டது. எங்கு ரஷ்யா இந்தியாமீது படையெடுத்துவிடுமோ எனப் பிரிட்டன் ஐயுற்றது. 1838இல் ஆப்கானிஸ்தானத்தின் அமீரான தோஸ்த் முகமதுகான் ரஷ்யத் தூதுவர் ஒருவரைக் காபூலில் ஏற்றுக் கொண்டது, அவ்வையத்தை மேலும் உறுதிப்படுத்தியது. இந்தியாவில் அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்த ஆக்லண்ட் பிரபு உடனே ஒரு சேனையைக்கொண்டு ஆப்கானிஸ்தானத்தின் மீது படையெடுத்தார். காந்தஹார், கஜினி, காபூல் ஆகிய நகர்களைக் கைப்பற்றியபின் ஆங்கிலத் துருப்புகள் ஷா ஷுஜா (Shah Shuja) என்ற நண்பரை அரியணையில் அமர்த்தின. ஆனால், 1842ஆம் ஆண்டளவில் ஆங்கிலத் துருப்புகள் காபூலிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டன. 16,000 வீரர்கள் இந்தியாவை நோக்கிப் பின்வாங்கினர். தோஸ்த் முகமதுவின் படைவீரர்கள் மலையுச்சியிலிருந்து கற்குண்டுகளை உருட்டி, மலைகளினின்றும் இறங்கிச்சென்று கொண்டிருந்த ஆங்கில வீரர்களைக் கொன்றனர். டாக்டர் பிரைடன் (Brydon) என்ற ஒருவர் மட்டுமே ஜலாலாபாத்துக்குத் திரும்பி வந்து நடந்தவற்றை எல்லாம் வெளிப்படுத்தினார். அதன் பின், சேல் (Sale), போலாக் (Pollock) போன்ற தளகர்த்தர்களை அனுப்பி, ஆக்லண்டு ஆப்கானியர்மீது பழி தீர்த்துக் கொண்டார். எனினும், ஆக்லண்டுக்குப்பின் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக வந்த

எல்லன்பரோ (Ellenborough) என்பவர், தோஸ்த் முகமதுவே காபூல் மன்னராக இருக்க அனுமதித்தார். பண விரயமும், ஆள் சேதமும் ஏற்பட்டதைத் தவிர ஆங்கிலேயருக்கு இந்த யுத்தத்தால் ஒரு பயனும் விளையவில்லை.

முதல் சீனப் போர் (1839-42)

இந்தியாவுக்கு மேற்கே பிரிட்டன் போரில் ஈடுபட்டதுபோல் அதன் கிழக்கிலும் பாமர்ஸ்டன் வெளிநாட்டமைச்சராயிருந்த காலத்தில் ஒரு தொல்லையேற்பட்டது. 1833ஆம் ஆண்டிலிருந்து சீனாவோடு வியாபாரம் செய்யும் உரிமை எல்லா வணிகர்களுக்கும் வழங்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோக வியாபார உரிமை அதனால் ரத்து செய்யப்பட்டது. எனவே, சீன வியாபாரம் நாளுக்கு நாள் பெருகியது. சீனர்கள் பெரிதும் விரும்பிய அபினி என்னும் லாகிரிப்பொருளை ஆங்கில வியாபாரிகள் ஏராளமாக அங்கு கொண்டு குவித்தனர். அதனால், சீனர்களின் உட்லும் உள்ளமும் பெரிதும் பலவீனமடைந்தன. எனவே, சீனசர்க்கார் ஆங்கிலேயரின் அபினி வியாபாரத்துக்குத் தடை விதித்தது. 1839இல் 60,00,000 பவுன் பெறுமானமுள்ள அபினியைச் சீன சர்க்கார் பறிமுதல் செய்தது. இதையெதிர்த்து ஆங்கிலேயர் சீனரோடு போர் தொடுத்து அவர்களை வென்றனர். அபினிப் போர் (Opium War) என அழைக்கப்பட்ட இப்போர் நான்கிங் (Nanking) உடன்படிக்கையின்படி நிறுத்தப்பட்டது. ஒரு பெருந் தொகையை நஷ்ட ஈடாக வழங்க சீனா ஒப்புக் கொண்டதுமன்றிக் கான்டன் (Conton) உள்பட ஐந்து துறைமுகங்களோடு வியாபாரம் செய்யும் உரிமையையும், ஹாங்காங் தீவையும் அது ஆங்கிலேயருக்கு வழங்கியது. ஹாங்காங் தீவில் விக்டோரியாவின் பெயர் தாங்கிய ஒரு துறைமுகம் நாளா வட்டத்தில் வளர்ந்து, கீழைநாட்டு வியாபாரத்துக்கு ஒரு கேந்திரப் பட்டினமாக மாறியது. முன்பே 1819இல் ஆங்கிலேயர் சிங்கப்பூர் என்ற மற்றொரு கேந்திர ராணுவ வியாபாரத் தலத்தைப் பெற்றிருந்தனர். 1839இல் அவர்கள் ஏடன் என்ற துறைமுகத்தையும் கைப்பற்றினர். அதனால் கீழைநாட்டு வியாபாரம் மேலும் பன்மடங்கு பெருகியது. இங்ஙனம், பாமர்ஸ்டன் வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றிய முதல் தடவையில் கிரேட் பிரிட்டனின் செல்வாக்கை ஐரோப்பிய நாடுகளில் பெருமளவு வளர்த்தார். பெல்ஜியத்தின் சுயேச்சையைக் காத்து போர்ச்சுக்கல், ஸ்பெயின் நாடுகளில் முறையற்ற வல்லரசு வளர்வதைத் தடுத்து, துருக்கியை ரஷ்ய செல்வாக்கினின்றும் காத்து, இந்தியாவையும் வல்லரசுகள் தாக்கா வண்ணம் வகைசெய்து அவர் பிரிட்டனுக்கு நல்ல

சேவை செய்தார். ஆனால், ஐரோப்பிய நாடுகளிடையே, முக்கியமாகப் ஃபிரான்சிடையே, அவர், பிரிட்டன்மீது ஒரு வெறுப்பையுண்டாக்கினார். தம்முடைய சக மந்திரிகளைக் கேளாமலே அவர் தாமாகவே பல காரியங்களிலும் ஈடுபட்டுவிடுகிறார் என்ற குறை அவர்மீது சுமத்தப்பட்டது.

டோரிகள் ஆட்சியில் வெளிநாட்டுக் கொள்கை *(1841-46)*

பீலின் தலைமையில் டோரிகள் இங்கிலாந்தை ஆண்டனர். அச்சமயம் வெளிநாட்டு அமைச்சராக இருந்தவர் அபெர்டீன் என்பவராவர். அபெர்டீன், காசில்ரே பிரபுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியவர். ஐரோப்பாவில் அமைதி நிலவ வேண்டும் என்பதே அவரது அவா. அதற்காக அவர் ஐரோப்பாவில் நன்கு நிலைபெற்றுவிட்ட வல்லரசுகளை எல்லாம் ஆதரித்தார். ஃபிரான்சுடன் உறவாட ஆரம்பித்தார். கைஸட் என்ற ஃபிரெஞ்சு அமைச்சரும், அவரும் நண்பர்கள் ஆயினர். பாமர்ஸ்டன், அபெர்டீனின் கொள்கையைக் கண்டித்தார். தேசீயப் பாதுகாப்புக்காக ஒரு விரிவான திட்டத்தைத் தீட்டும்படி அவர் அபெர்டீனுக்கு அறிவுரை கூறினார். விரைவிலேயே அபெர்டீன் ஃபிரெஞ்சுக்காரர்களை நம்பக்கூடாது என உணர்ந்து கொண்டார். ஏனெனில், **1843-44**இல் அவர்கள் தாஹிடி **(Tahiti)** என்ற பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டதோடு பிரிட்சர்டு **(Pritchard)** என்ற தலைவரையும் கைது செய்தனர். ஆங்கிலேயர்கள் நியூசிலாந்தைக் கைப்பற்றியதை ஃபிரெஞ்சு அரசாங்கம் கண்டித்தது. ஆங்கிலேயருக்கு விரோதமாகப் பல காப்பு வரிகளையும் அவர்கள் விதித்தனர். இவை எல்லாவற்றையும்விட ஆங்கில ஃபிரெஞ்சு நட்புறவு பெரிதும் பாதிக்கப்படக் காரணமாயிருந்தது ஸ்பானியத் திருமணங்களாகும். இராணி இஸபெல்லாவுக்கும், அவருக்குப் பின் ஸ்பானிய மகுடத்தைப் பெறவிருந்த அவரது சகோதரிக்கும் யாரைக் கணவராகத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி ஃபிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் பெருங்கருத்து வேறுபாடு காணப்பட்டது. அபெர்டீன், பாமர்ஸ்டன் போன்றவர்கள், இஸபெல்லா ராணி, கோபர்க் நாட்டு இளவரசரான லியோ போல்டு **(Leopold of Coburg)** என்பவரை மணந்துகொள்ள வேண்டுமென விரும்பினர். ஆனால், ஃபிரெஞ்சு வமிசமான போர்பன் குடும்பத்திலேயே இஸபெல்லா திருமணம் செய்துகொள்ள வேண்டுமென ஃபிரெஞ்சு மன்னர் பிலிப் விரும்பினார். மேலும் இஸபெல்லாவின் சகோதரி இன்பென்டாவைத் தம் மகனை மான்ட்பென்சியர் **(Montpensier)** என்பவருக்கு மணமுடிக்கவும் அவர் விரும்பினர். இத்தகைய திருமணங்களால் பிற்காலத்தில் போர்பன் வமிசத்தாரே ஸ்பெயி

னிலும் ஃபிரான்ஸிலும் ஆதிக்கம் பெறவும், இரு நாடுகளும் ஒன்று சேரவும் வாய்ப்பு ஏற்படும் என்பது லூயியின் எண்ணம். அவ்வாறு நேர்ந்தால் அது ஐரோப்பிய சக்தி சம நிலையைக் குலைத்துவிடுமென அஞ்சிய பிரிட்டிஷார், லூயியின் கருத்துக்களை எதிர்த்தனர். இதைக்கண்ட லூயி, இஸபெல்லா திருமணம் செய்துகொண்டு குழந்தைகளை ஈன்ற பின்னரன்றி இன்பென்டாவுக்கும் தமது மகனுக்கும், தாம் திருமணம் செய்துவைக்கப் போவதில்லையென விக்டோரியா இராணியாரிடமும், அபெர்டீனிடமும் வாக்களித்தார். 1846இல் இஸபெல்லா காடிஸ் கோமகனை டான் பிரான்ஸிஸ் (Don Francis) என்பவரை மணந்து கொண்டார். உடனே லூயி பிலிப் தமது மகனுக்கு இன்பென்டாவைத் திருமணம் செய்துவைத்து விட்டார். இங்ஙனம் லூயி தாம் விக்டோரியா இராணியாருக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை மீறினர். இத்திருமணங்கள் நடக்கா வண்ணம் தடுக்கப் பாமர்ஸ்டன் பெரிதும் முயன்றார். ஆனல், பலிக்கவில்லை. இதனல் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் விரோதம் ஏற்பட்டது.

பாமர்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள்கை (தொடர்ச்சி) *(1846-51)*

1846இல் ரஸ்ஸல் மந்திரிசபை ஏற்பட்டபோது பாமர்ஸ்டன் மீண்டும் வெளிநாட்டு அமைச்சராகப் பதவியேற்றார். பிரிட்டனுக்கு விரோதமாக நடைபெற்ற ஸ்பானியத் திருமணங்களை பாமர்ஸ்டனும் விக்டோரியா ராணியாரும் பலமாகக் கண்டித்தனர். இங்ஙனம் பிரிட்டனுக்கும் ஃபிரான்சுக்கும் ஏற்பட்ட மனவேறுபாட்டைப் பயன்படுத்திக்கொண்டு ஆஸ்திரியா, கிராக்கோ (Cracow) குடியரசைக் கைப்பற்றிக் கொண்டது. மேலும் ஸ்விட்சர்லாந்தையும் அவர்கள் அழிக்க முயன்றனர். 1847இல் அங்கிருந்த பிராடஸ்டென்டு கான்டன்களுக்கும், கத்தோலிக்க கான்டன்களுக்கும் (Cantons) உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது ஆஸ்திரியா அதில் தலையிட விரும்பியது. ஆனல், பாமர்ஸ்டன் அதைத் தடுத்தார். ஸ்விட்சர்லாந்தின் நடுநிலைமை காக்கப்பட வேண்டுமென்று அவர் அறிவித்தார். ஃபிரான்ஸ், ஸ்விஸ் பிற்போக்குக் கட்சிக்கு உதவிசெய்ய முன்வந்தது. பாமர்ஸ்டன் அதைத் தடுத்து நிறுத்தினர்.

1848ஆம் ஆண்டுப் புரட்சிகள்

1848ஆம் ஆண்டில் ஃபிரான்சில் ஒரு புரட்சி ஏற்பட, அதன் மன்னரான லூயி பிலிப் அரியணையினின்றும் நீக்கப்பட்டார்.

அவரும் அவரது அமைச்சரான கைஸ்டும் இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தனர். தமது பகைவர்களெனத் தெரிந்திருந்தும் பாமர்ஸ்டன் அவர்களுக்குப் புகலிடமளித்தது அவரது பெருந்தன்மையை நன்கு விளக்குகிறது. ஃபிரான்ஸ் ஒரு குடியரசுநாடாக மாறியது. ஃபிரான்சில் புரட்சி ஏற்பட்டதையொட்டி வியன்னுவில் கலகம் விளைந்தது. அதன் விளைவாக அதுவரை ஆஸ்திரியாவின் முடிசூடா மன்னராக விளங்கிய சான்சலர் மெட்டர்னிக் தம் பதவியை இழந்து இங்கிலாந்துக்கு ஓடி வந்தார். புரட்சித் தீ ஹங்கேரிக்கும் பரவியது. கோசுத் (Kossuth) என்னும் ஹங்கேரியத் தலைவர் ஹங்கேரியை ஆஸ்திரியப் பிடியினின்றும் விடுவிக்க ஒரு பெருங் கிளர்ச்சியில் ஈடுபட்டார். இத்தாலியில் ஆஸ்திரியாவுக்குச் சொந்தமாயிருந்த வெனிஸ், லம்பார்டி என்ற இரு நகரங்களும் ஆஸ்திரியாவை எதிர்த்துக் கலகம் செய்து தமது சுதந்திரத்தை நிலை நாட்டின. கரிபால்டி, மாஜினி போன்ற இத்தாலிய சுதந்திர வீரர்கள் ரோம் நகரைக் கைப்பற்றி ரோம் குடியரசைத் தோற்றுவித்தனர் (1849). ஜெர்மனியிலும் மன்னருக்கு விரோதமாகப் புரட்சியொன்று பெர்லினில் ஏற்பட்டது. தாராளக் கொள்கைகளின் அடிப்படையில் எழுந்த இம்மக்கள் புரட்சிகளைப் பாமர்ஸ்டன் மனமார வரவேற்றார். ஆனால், ஆஸ்திரிய முடியரசுக்கு விரோதமாக எழுந்த புரட்சிகளை விக்டோரியா இராணியாரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'கனடாவும், மால்டாவும் நமக்கு விரோதமாக இவ்வாறு புரட்சியில் இறங்கினால் நாம் என்ன செய்வது?' என இராணியார் கலங்கினார். ஆனால் பாமர்ஸ்டனின் கொள்கைக்கு மக்களின் ஆதரவு நிறைய இருந்தது. பாராளுமன்றம் ஓரளவு அவரைக் குறை கூறினாலும் முடிவில் அவரது கொள்கையை ஏற்றுக்கொண்டது.

1849-51ஆம் ஆண்டுகளில் ஐரோப்பியப் புரட்சிகள் யாவும் ஒடுக்கப்பட்டன. ஆஸ்திரியப் படைகள் புறப்பட்டுச் சென்று வெனீசையும், லம்பார்டியையும் மீண்டும் கைப்பற்றின. ஃபிரெஞ்சுப் படைகள் ரோம் நகரின் கலகக்காரர்களை விரட்டி, பழைய ஆட்சியை நிறுவின. ஜெர்மனியிலும் கலகங்கள் ஒடுக்கப்பட்டன. ஹங்கேரியக் கலகத்தை ஆஸ்திரியப் படைகளும், ரஷ்யப் படைகளும் சேர்ந்து அடக்கின. இதையெல்லாம் கண்ட பாமர்ஸ்டனின் உள்ளம் பதறியது. மக்கள் தலைவர்களைக் கொடுங்கோல் மன்னர்கள் நடத்திய விதத்தையும், குற்றமற்ற பாமர மக்களை அவர்கள் கொன்று குவித்ததையும் கண்டு அவர் உள்ளம் குமுறினார். ஆனாலும், தம் உள்ளக்கிடக்கையைக் கூடிய வரை வெளிக்காட்டாமலே இருந்தார். ஏனெனில், ஆஸ்திரிய வல்லரசின் வெற்றியைக் கேட்டு இராணியார் உள்ளம் மகிழ்ந்தார். பாமர்ஸ்

டனுக்கும், அரசியாருக்கும், அரசியாரின் கணவருக்கும் இவ்வாறு வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் கருத்து வேறு பாடுகள் நாளுக்கு நாள் அதிகமாயின. பாமர்ஸ்டன் அவ்விரு வரையும் சட்டை செய்யாமல் தம் விருப்பம்போல் நடந்து வந்தார். அயல் நாடுகளுக்கு அவர் எழுதும் கடிதங்கள் பலவற்றை அவர் அரசியாரிடம் காண்பிப்பதேயில்லை. அப்படியே காண்பித்தாலும், காண்பித்த பின், அவர் அவைகளில் பல மாற்றங்களை அரசி யாரின் அனுமதியின்றியே புகுத்திவிடுவது வழக்கம். இவைகளை யெல்லாம் கண்ட இராணியாரின் உள்ளம் வெகுண்டது. 1850 ஆம் ஆண்டில் அவர் பாமர்ஸ்ட்டனுக்கு அனுப்பிய நினைவுக் குறிப்பு (Memorandum) ஒன்றில், தன்னைக் கலக்காமல் அவர் எந்த வெளிநாட்டுக் காரியங்களிலும் ஈடுபடக்கூடாது எனவும், அந்நிய நாடுகளைப் பொறுத்தவரையில் அவர் என்ன செய்யப் போகிறுர் என்பதை முன்கூட்டியே திட்டவட்டமாகத் தம்மிடம் தெரிவிக்க வேண்டுமெனவும், அங்ஙனம் இன்றி வேறுவிதமாகப் பின்னர் நடந்துகொள்ளக் கூடாதெனவும் கண்டிப்பாக எச்சரித் தார். ஓர் அரசிக்குரிய உரிமையையே விக்டோரியா வற்புறுத் திஞராதலால், பாமர்ஸ்டன் அவர் விருப்பப்படியே நடந்து கொள்ளுவதாக வாக்களித்தார். எனினும், அவரது நடத்தை வேறுவிதமாக இருந்தது. இரு நிகழ்ச்சிகளில் அவர் நடந்து கொண்ட முறை அவர் உளப்பாங்கை நன்கு எடுத்துக்காட்டு வதா யமைந்தது.

1850ஆம் ஆண்டில் ஹாய்ஞு (Haynau) என்னும் ஆஸ்திரியத் தளகர்த்தர் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். அவர் அப்போது தான் ஹங்கேரியில் புரட்சியிலீடுபட்ட மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தும், பெண்டிரைச் சவுக்கால் அடித்தும் அமைதி யை நிலைநாட்டிவிட்டு வந்திருந்தார். லண்டனுக்கு அவர் வந்த போது கோபங்கொண்ட ஒரு மக்கள் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டு தாக்க ஆரம்பித்தது. வரிக்குதிரை என்று பொருள்படும் ‘ஹியாஞு, ஹியாஞு’ (Hyena) என்று கத்திக்கொண்டு மக்கள் அவரைத் துரத்தினர். கடைசியில் லண்டன் போலீசாரின் தலையீட்டால் அவரது தலை தப்பியது. இந் நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பாமர்ஸ்டன் உள்ளூர மகிழ்ந்தார். ஆனல், வெளிக் குத் தமது ஆழ்ந்த வருத்தத்தை ஆஸ்திரியத் தூதுவருக்குத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். நண்பர் ஒருவருக்கு அவர் எழுதிய கடிதமொன்றில், ஹாய்ஞுவை மக்கள் அடித்ததற் குப் பதிலாக ஒரு கம்பளியில் அவரை அப்படியே சுற்றி மூட்டைகட்டி உருட்டியிருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார். அடுத்த ஆண்டிலேயே ஹங்கேரியப் புரட்சித் தலைவர் கோசுத்

(Kossuth) லண்டனுக்கு விஜயம் செய்தார். அப்போது அவரைத் தமது இல்லத்திற்கு அழைத்து ஒரு வரவேற்பளிக்கப் பாமர்ஸ்டன் விரும்பினர். இதையறிந்த ரஸ்ஸல் என்ற பிரதமர் அவரை அவ்வாறு செய்யாமல் தடுத்தார். இதையெல்லாம் கேள்வியுற்ற இராணியார் பெரிதும் உளம் நொந்தார்.

டான் பஸிபிகோ (Don Pacifico) நிகழ்ச்சி *(1850)*

*1850*இல் பாமர்ஸ்டன், டான் பஸிபிகோ என்னும் யூதர் ஒருவருக்கு அவருக்குரிய நஷ்ட ஈட்டைத் தருமாறு கிரேக்க சர்க்காரைப் பலவந்தப் படுத்தினர். டான் பஸிபிகோ மால்டாவில் பிறந்தவராதலால், பிரிட்டிஷ் பிரஜையென்றும், பிரிட்டிஷ் பிரஜைகள் எவ்வளவு சிறியவராயினும் அவரைக் காப்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடமை எனவும் கூறிப் பாமர்ஸ்டன் ஒரு கப்பற் படையைக் கிரேக்க சர்க்காருக்கு விரோதமாக அனுப்பிவைத்தார். டான் பஸிபிகோ, ஏதென்ஸில் வியாபாரம் செய்துவந்த சாதாரண வியாபாரி. அவருடைய வீட்டைச் சில கிரேக்கர்கள் சூறையாடி விட்டார்கள். அதற்குரிய நஷ்ட ஈட்டைக் கிரேக்க அரசாங்கம் கொடுக்க மறுத்ததால் அவர் பாமர்ஸ்டனிடம் முறையிட்டார். அவருக்குச் சாதகமாகவே பாமர்ஸ்டன் கடற்படையை அனுப்பினர். அதனல், ஃபிரான்சும், ரஷ்யாவும் வெகுண்டன. பிரிட்டனுக்கும் அந் நாடுகளுக்கும் எங்குப் போர் மூண்டுவிடுமோ எனப் பலரும் அஞ்சினர். கண்டனக் குரல்கள் பல, பிரபுக்கள் சபையில் அவருக்கெதிராகக் கிளம்பின. ஆனல், ஒரு நாள் முழுதும் ஆற்றிய பேருரையொன்றில் பாமர்ஸ்டன் தனது செய்கை நியாயமானதே என வாதாடினர். தம் செய்கைக்குப் பொது மக்கள் சபையின் ஒப்புதலும் பெற்றார்.

ஃபிரெஞ்சுத் திடீர்ப் புரட்சி (Coup D'etat) *(1851)*

*1851*ஆம் ஆண்டில் ஃபிரான்சில் லூயி நெப்போலியன் என்னும் ஜனதிபதி திடீரென்று அதிகாரத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொண்டு, தம்மை ஃபிரான்சின் பேரரசர் என அறிவித்தார். இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பாமர்ஸ்டன் தாம் நெப்போலியனது செயலை ஆதரிப்பதாக ஃபிரெஞ்சுத் தூதுவரிடம் தெரிவித்தார். அவர் தமது கருத்தைத் தெரிவித்து, பாரிஸிலிருந்த பிரிட்டிஷ் தூதுவருக்கும் ஒரு கடிதம் எழுதினர். அக் கடிதத்தை அவர் இராணியாரிடமோ, பிரதமர் ரஸ்ஸலிடமோ காண்பிக்கவில்லை. இதைக் கேள்வியுற்ற ரஸ்ஸல் பாமர்ஸ்டனைப் பதவியினின்றும் உடனே நீக்கிவிட்டார். காபினெட் அவரது செய்கை

யை ஆமோதித்தது. இதைக் கேட்ட இராணியாரும் அவரது கணவரும் களிப்புக் கடலில் ஆழ்ந்தனர்.

ரஸ்ஸல் மந்திரி சபை வீழ்ச்சி—டெர்பி மந்திரி சபை

பாமர்ஸ்டன் பிரபு மந்திரி சபையை விட்டு வெளியேறியபின் அதன் பலம் வெகுவாகக் குறைந்தது. பீலைப் பின்பற்றியவர்களும் **(Peelites)** கன்சர்வேடிவ்களும் சேர்ந்து கொண்டு அரசாங்கத்தைச் சதா தாக்கி, அதை ஒரு சில மாதங்களிலேயே கவிழ்த்துவிட்டனர். அதன்பின் டெர்பி என்ற கன்சர்வேடிவ் தலைவர் மந்திரிசபையை அமைத்தார். பீலைப் பின்பற்றியோர் கோஷ்டி அச்சபையில் இடம் பெற மறுத்துவிட்டது. எனவே, அரசியல் அனுபவம் சிறிதுமற்ற கன்சர்வேடிவ்கள் பலரே நாட்டின் முக்கியப் பதவிகளில் அமர்ந்தனர். பென்சமின் டிஸ்ரேலி என்பார் முதன் முதலாக அமைச்சர் பதவி பெற்றது இச் சமயத்தில்தான். அவர் கருவூலத் தலைவராக நியமிக்கப்பட்டார். இம் மந்திரி சபை 1852ஆம் ஆண்டு முடிவு வரைதான் நீடித்தது. அச்சமயத்தில் யாதொரு முக்கிய நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. வெலிங்டன் பிரபு அச் சமயத்தில் தான் இறந்தார். கண்ணிய மிக்க ஒரு பெருந் தலைவரும், ஒப்பற்ற போர் வீரருமான ஒருவரைத் தமது டோரிக் கட்சிக் கொள்கைக்கும் விரோதமாக, நாட்டின் நலனொன்றையே நோக்கமாகக் கொண்டு பல சீர்திருத்தச் சட்டங்களியற்றியவரை நாடு இழந்தது.

அபெர்டீன் கூட்டு மந்திரி சபை

டெர்பி மந்திரி சபையின் வீழ்ச்சிக்குப் பின் அபெர்டீன் பிரபுவின் தலைமையில் விக்குகளும் பீலைச் சார்ந்தோருமடங்கிய ஒரு கூட்டு மந்திரிசபை ஏற்பட்டது. கிளாட்ஸ்டன் என்னும் அறிஞர் அதில் கருவூலத் தலைவராயிருந்தார். பீலைப் பின்பற்றியவர்களுள் மிகச் சிறந்தவர் அவரே; விக்குகளிற் சிறந்தவர் வெளிநாட்டமைச்சராய் அமைந்த ஜான் ரஸ்ஸல் பிரபு ஆவார். பாமர்ஸ்டன் பிரபுவின் வெளிநாட்டுக் கொள்கை இராணியாருக்குப் பிடிக்காதிருந்த காரணத்தால், அவர் உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப் பெற்றார். நல்ல பல அறிஞர்களைக் கொண்ட இவ்வமைச்சரவை மூன்றாண்டுகள் மட்டுமே நீடித்தது. எதிர்பாராத வகையில் ஒரு போரினைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு அதற்கு ஏற்பட்டு விட்டது. போரினைச் சரிவர நடத்த முடியாமல் அச்சபை திணறியது. அதனால், அது பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை 1855இல் இழந்தது. அபெர்டீன் மந்திரிசபை கலைந்தது. பாமர்ஸ்டன் பிரபு மீண்டும் பிரதமரானார்.

பிரதமர் பாமர்ஸ்டன் (1855-1865)

பாமர்ஸ்டனின் முதல் மந்திரி சபை (1855-58)

பல ஆண்டுகளாக வெளிநாட்டமைச்சராகப் பணியாற்றிய பாமர்ஸ்டனை இறுதியில் கிரிமியப் போரின் விளைவாகப் பிரதம மந்திரி பதவி தேடிவந்து அடைந்தது. கிரிமியப் போரை வெற்றியுடன் முடிக்கக்கூடியவர் பாமர்ஸ்டன் ஒருவரே எனப் பிரிட்டிஷ் மக்கள் எண்ணினர். அவர்கள் எண்ணம் சரியானதே என்பதைப் பாமர்ஸ்டன் விரைவிலேயே மெய்ப்பித்துவிட்டார். கிரிமியப் போரில் வெற்றியுடன் ஆங்கிலேயர் திரும்பி வந்தனர். பாரிஸ் உடன்படிக்கை மூலம் பாமர்ஸ்டன் துருக்கியச் சுதந்திரத்தைக் காத்து, ரஷ்யாவின் செல்வாக்கு பால்கன் தீபகற்பத்தில் வளர விடாமல் தடுத்தார்.

கிரிமியப் போருக்குப் பின் பத்து ஆண்டுகள்வரை பிரிட்டனில் குறிப்பிட்ட நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. ஆனால் வெளிநாடுகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பல இக்காலத்தே நடந்தேறின. இக் காலத்தில்தான் இத்தாலியானது ஆஸ்திரியாவோடு போரிட்டுத் தன் சுதந்திரத்தைப் பெற்றது. பிரஷ்யா, டேனியர்களோடும் ஆஸ்திரியர்களோடும் போரிட்டுத் தனது தலைமையை நிலைநாட்டிக்கொண்டதும், உள்நாட்டுப் போரின் மூலம் அமெரிக்காவின் ஐக்கியம் காக்கப் பெற்றதும் இக் காலத்தில்தான். இப் போர்களிளெல்லாம் பிரிட்டன் நேர்முகமாக எதிலும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. எனினும், வல்லரசுகளை எதிர்த்து நடைபெற்ற இயக்கங்களெல்லாம் பாமர்ஸ்டனின் பூரண ஆதரவைப் பெற்றிருந்தன.

கிரிமியப் போர் முடிந்து சிறிது காலத்திற்கெல்லாம் இந்தியாவில் சிப்பாய்க் கலகம் எனப்படும் இந்தியரின் முதல் சுதந்திரப் போர் ஏற்பட்டது (1857). ஆனால், இந்தியரின் ஒற்றுமையின்மையாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உறுதியாலும் கலகம் வெற்றிகரமாக ஒடுக்கப்பட்டது. அதன் பின், 1858இல் ஃபிரெஞ்சு மன்னருக்குச் சாதகமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு மசோதாவின் காரணமாகப் பாமர்ஸ்டனின் முதல் மந்திரிசபை வீழ்ச்சியுற்றது. நெப்போலியன் பாரிஸின் தெருவொன்றில் போய்க்கொண்டிருந்த போது, ஆர்ஸினி (Orsini) என்ற ஓர் இத்தாலியன், அவர் சென்ற கோச்சு வண்டியின்மீது குண்டினை எறிந்தான். ஆனால், அதனால் மன்னரின் உயிருக்கு ஊறு ஒன்றும் நேரவில்லை. ஆர்ஸினி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது, அவனது சதித் திட்டங்கள் எல்லாம் இங்கிலாந்திலேயே உருவாயின எனவும், அவன்

வீசியெறிந்த குண்டுகள்கூடப் பர்மிங்ஹாம் நகரில் செய்யப்பட்ட வை என்பதும் தெரியவந்தன. உடனே ஃபிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் இங்கிலாந்தைப் பலபடியாகக் குறைகூற ஆரம்பித்தார். மக்களினத்துக்குத் துரோகம் இழைக்கின்ற ஈவிரக்கமற்ற கொலைகாரர்களுக்கெல்லாம் பிரிட்டன் ஒரு புகலிடமாய்ப் போயிற்று என்று அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் புகார் செய்தார். ஃபிரெஞ்சு அரசாங்கத்தைச் சிறிது திருப்திப்படுத்த எண்ணிய பிரிட்டிஷ் அரசாங்கம் ஆர்ஸினி போன்ற கொலைச் சதிகாரர்கள் இங்கிலாந்தில் புகுவதைத் தடுக்கக் கொலைச் சூழ்ச்சி மசோதா ஒன்றைப் **(Conspiracy to Murder Bill)** பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. பிரிட்டனைக் கேவலமாகப் பழித்துரைத்த ஃபிரான்சைப் பிரிட்டிஷ் மக்கள் வெறுத்தனர். எனவே, ஃபிரெஞ்சு மன்னருக்குச் சாதகமாகக் கொண்டுவரப்பட்ட மசோதாவை எதிர்த்துப் பொதுமக்கள் சபையில் தீர்மானம் கொண்டுவரப் பட்டது. அத் தீர்மானம் நிறைவேறியதால் பாமர்ஸ்டனின் மந்திரி சபை கவிழ்ந்தது.

பாமர்ஸ்டனின் இரண்டாவது மந்திரி சபை *(1859-65)*

பாமர்ஸ்டன் பதவி துறந்தபின் ஓராண்டுவரை டெர்பி பிரபுவின் தலைமையில் ஏற்பட்ட அமைச்சரவை நாட்டை ஆண்டது. இச் சமயத்தில்தான் இந்திய அரசாங்கத்தைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நேர் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்த இந்திய மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

1859ஆம் ஆண்டில் பாமர்ஸ்டன் மீண்டும் பிரதமரானார். அவர் கூட்டிய மந்திரி சபையில் கிளாட்ஸ்டன் கருவூலத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஜான் ரஸ்ஸல் பிரபு வெளிநாட்டமைச்சர் ஆனார். திறமைமிக்க இம் மூன்று நிர்வாகிகளே நாட்டின் ஆட்சியை அடுத்து ஆறு ஆண்டுகள் நடத்தினர். எனவே, அவர்களது ஆட்சி மூவர் நிருவாகம் **(Triumvirate)** என்று அழைக்கப்படுகிறது.

பாமர்ஸ்டனும் இத்தாலியும்

பாமர்ஸ்டன் காலத்தில்தான் இத்தாலிய ஐக்கிய இயக்கம் உச்சநிலை யடைந்தது. மாஜினி என்ற அறிஞர் தமது உணர்ச்சியும் உத்வேகமும் நிறைந்த கவிதைகளால் இத்தாலிய மக்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்ப, அதை நன்கு பயன்படுத்திக் கொண்டு, சார்டினிய முதலமைச்சர் கெவூர் **(Cavour)** என்பாரும் தேச பக்தச் செம்மலான கரிபால்டி **(Garibaldi)** என்பாரும் இத்தாலியினின்றும் அந்நியர்களை விரட்டிச் சுதந்திரத்தை நிலை

நாட்டியது இக்காலத்தில்தான். அந்நிய நாட்டின் உதவியின்றி இத்தாலிய ஐக்கியத்தைப் பெறவியலாது என்பதையுணர்ந்த கெவூர், ஃபிரெஞ்சு மன்னர் மூன்றும் நெப்போலியனின் உதவியைப் பெற்று, ஆஸ்திரியர்களை 1859இல் வென்றார். ஆனால், நெப்போலியன் திடீரென்று ஆஸ்திரியாவோடு சமாதானம் செய்து கொண்டு, கெவூரை நட்டாற்றில் விட்டுச்சென்று விட்டார். கெவூரும் தம் பதவியைத் துறந்து தமது கிராமத்திற்குச் சென்றார். எனவே, சிறிது காலம் இத்தாலிய சுதந்திரப் போர் ஓய்ந்திருந்தது. பின் திடீரெனக் கரிபால்டி என்னும் வீரர் தோன்றித் தமது சிவப்பு உடை தரித்த ஆயிரம் தொண்டர்களுடன் சென்று, சிசிலித் தீவை நேபில்ஸ் மன்னரிடமிருந்து கைப்பற்றினார். அதன் பின் அவர் நேபில்ஸ் நாட்டையும் படையெடுத்தார். அச் சமயத்தில் அவரைத் தடுத்து நிறுத்தப் பிரிட்டிஷ் ஃபிரெஞ்சுக் கூட்டுக் கடற்படை ஒன்று இத்தாலிக்கு அனுப்பப்பட வேண்டுமென, ஃபிரெஞ்சு சர்க்கார் ஒரு யோசனை கூறியது. பாமர்ஸ்டனும் ரஸ்ஸலும் அந்த யோசனையை அடியோடு வெறுத்து நிராகரித்தனர். எனவே, யாதொரு தடையுமின்றிக் கரிபால்டி நேபில்ஸில் நுழைந்து அதைக் கைப்பற்றினார். அதன் மன்னர் நாட்டை விட்டே ஓடிப் போய்விட்டார். இதையறிந்த கெவூர் மீண்டும் சார்டினிய நாட்டின் பிரதமர் பதவியை ஏற்றார். ஆஸ்திரியருக்கு விரோதமாக இத்தாலியில் எழுந்த கலகங்களை அவர் ஆதரித்துத் தலைமை தாங்கி நடத்தினார். ஆஸ்திரியா இத்தாலியினின்றும் பிரிந்தது. போப்பாண்டவருக்குட்பட்டிருந்த நாடுகளும் விடுதலை பெற்றன. இவ்வெல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து சார்டினிய அரசர் விக்டர் எமானுவல் என்பவரை அரசராக ஏற்றனர். 1860 ஆம் ஆண்டளவில் ரோம், வெனிஸ் இரண்டைத் தவிர ஏனைய நாடுகளெல்லாம் ஐக்கிய மடைந்தன. ஒற்றுமையுற்ற இத்தாலியை பாமர்ஸ்டன் அங்கீகரித்தார். இத்தாலியின் ஒற்றுமைக்காகவும் விடுதலைக்காகவும் பாடுபட்ட சார்டினிய அரசரைப் பாமர்ஸ்டனும் ரஸ்ஸலும் வாயாரப் போற்றினர்.

பாமர்ஸ்டனும் ஃபிரான்சும்

ஃபிரெஞ்சுப் பேரரசரான மூன்றும் நெப்போலியனைப் பாமர்ஸ்டன் ஆரம்பத்தில் ஆதரித்தார். ஆனால், நாள் செல்லச் செல்ல நெப்போலியனைப் பாமர்ஸ்டனும், பொதுவாகப் பிரிட்டிஷ் மக்களும் வெறுக்கலாயினர். சார்டினியாவுக்கு உதவிசெய்யச் சென்ற நெப்போலியன் நடுவில் திடீரெனப் போரை நிறுத்திவிட்டதையும், அதன்பின் செவாய் (Savoy), நீஸ் (Niece) என்ற இரு இடங்களையும் அவ்வரைகுறை உதவிக்குப் பிரதியுபகாரமாக அவர்

பெற்றுக் கொண்டதையும், இத்தாலிக்குத் தருவதாக வாக்களித்த வெனிஸை ஆஸ்திரியாவுக்கு அவர் கொடுத்து விட்டதையும் கண்ட பிரிட்டன் அவரை ஒரு பேராசை பிடித்த நம்பிக்கைத் துரோகி எனக் கருதியது. ஃபிரான்சோடு போர் புரிய 1858இல் இங்கிலாந்தில் தொண்டர் படையொன்று உருவாகியது. ஆயிரக் கணக்கானவர்கள் அதில் சேர்ந்தனர். ஆனுல், எதிர்பார்த்தபடி போர் எதுவும் நடைபெறவில்லை. காப்டன் (Cobdon) என்பவரது முயற்சியால் பிரிட்டனுக்கும், ஃபிரான்சுக்கும் ஒரு வியாபார உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்பின் இரு நாடுகளுக்கும் இருந்த பகைமை சிறிது சிறிதாக மாறி உறவு ஏற்பட ஆரம் பித்தது. ஆனுல், நெப்போலியன்மீது பிரிட்டிஷ் மக்கள் வைத் திருந்த நம்பிக்கையானது பெருமளவுக்குக் குறைந்து விட்டது.

பாமர்ஸ்டனும் அமெரிக்காவும்

பாமர்ஸ்டன் காலத்தில் அமெரிக்காவில் ஒரு பெரும் உள் நாட்டுப் போர் எழுந்தது. வடக்கேயுள்ளவர்களோடு ஒத்து வாழ இயலாது எனக் கூறித் தெற்குநாடுகளெல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டினின்றும் பிரிந்து தனித்து வாழ விரும்பின. அதற்குக் காரணம் தெற்கேயுள்ளவர்களின் செல்வாக்கிற்கு ஜீவாதாரமாக விளங்கிய அடிமை முறையை ஒழிக்கவேண்டுமென வடவர்கள் வற்புறுத்தியதேயாகும். வடக்கே இருந்தவர்களெல்லாம் பெரும் கைத்தொழில் அதிபர்கள். அவர்களுக்கு அடிமைகளால் யாதொரு பயனுமில்லை. எனவே, அவர்கள் அடிமை முறையை ஒழித்து நீக்ரோக்களுக்கு சுயேச்சை வழங்கிடவேண்டுமெனக் கூற லாயினர். ஆனுல், தெற்கே இருந்தவர்களெல்லாம் விவசாயத்தை நம்பி வாழ்ந்த பெரும் பிரபுக்கள். வெப்பமிகுந்த அந் நாடுகளில் வெள்ளையர்கள் வேளாண்மை செய்யவியலாமல் தவித்தபோது அவர்களுக்குச் சமய சஞ்சீவியாக உதவியவர்கள் ஆப்பிரிக்கா வினின்றும் கொண்டுவரப்பட்ட நீக்ரோ அடிமைகளாவர். அவர் கள் விடுதலை பெற்றுவிட்டால் பிரபுக்கள் பழைய உயர்நிலையி லிருக்க முடியாதென்பதை யுணர்ந்தே தெற்கேயுள்ளவர்கள் அமெரிக்க யூனியனிலிருந்து விடுபட விழைந்தனர். ஆனுல், அப்போது அமெரிக்க ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரஹாம்லிங்கன் எப்பாடுபட்டாகிலும் அமெரிக்க ஐக்கியத் தைக்காக்க வேண்டுமெனவும், அடிமை முறையை அமெரிக்கா வினின்றும் ஓட்டிவிடவேண்டுமெனவும் கங்கணம் பூண்டார். பிரிவினையை விரும்பிய தெற்குப் பகுதியினரை எதிர்த்து அவர் போர் செய்தார். கெட்டிஸ்பர்க் (Gettysberg) போர்க்களத்தில் இறந்தவர்களின் சவ அடக்கத்தின் போது அவர் தமது குறிக்

களை வெளியிட்டு, அதற்காக மடிந்த வீரர்களைப் பாராட்டினர். அதில் அவர் 'மக்களுக்காக மக்களால் ஆளப்படும் மக்களுடைய அரசாங்கமே' தனது குறிக்கோள் எனப் புகன்றார். இச் சொற் களைக்கேட்ட பிரிட்டிஷ் தாராளவாதிகள் பலரும் ஜனநாயகத்துக் காகவும், அடிமை முறை ஒழிப்புக்காகவும் பாடுபட்ட வடபகுதி யினரை ஆதரித்தனர். ஆனால், பாமர்ஸ்டனின் அரசாங்கம் நடு நிலைமை வகித்தது. ஏனெனில், யார் பக்கம் நீதியுள்ளது என்பது பலருக்கு அப்போது புரியவில்லை. ஆனால், இந்நடு நிலைமையானது இரண்டு நிகழ்ச்சிகளினால் பழுதடைந்தது.

ஒரு சமயம் 'ட்ரென்ட்' **(Trent)** என்ற ஆங்கிலக் கப்ப லொன்றை அமெரிக்க வட நாட்டினர் தடுத்து நிறுத்திச் சோதனை போட்டதில் தென்னாட்டவரின் ஏஜெண்டுகள் இருவர் அங்கேயிருக்கக் கண்டனர். அவர்களிருவரும் உடனே கைது செய்யப்பட்டார்கள். தென்னவர்களுக்கு இவ்வாறு ஆதரவளித்த தன் மூலம் இங்கிலாந்து தன் நடுநிலைமையினின்றும் பிறழ்ந்தது என வடவர்கள் பழி தூற்ற ஆரம்பித்தனர். பல பிரிட்டிஷ் மக்களும் கூடப் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் குறைகூற ஆரம்பித் தனர். ஆனால், நாள் செல்லச் செல்ல இருதரப்பிலும் மனக்கசப்பு மாய்ந்தது. லிங்கன் தாம் சிறைபிடித்த இரு ஏஜெண்டுகளையும் விடுவித்தார். ஆனால் சில நாளிலேயே இரு நாடுகளுக்கும் மனக் கசப்பை விளைவித்த மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது.

'அலபாமா' **(Alabama)** என்ற போர்க் கப்பலொன்று அமெ ரிக்கத் தென்னவர்களுக்கென லிவர்ப்பூல் துறைமுகத்தில் கட்டப் பட்டது. அதைத் தெற்கத்தியருக்குத் தருவது இங்கிலாந்தின் நடுநிலைமைக் கேற்றதன்று என வடவர் கூறினர். எனினும் எப்படியோ 'அலபாமா' இங்கிலாந்தை விட்டகன்று கடலுள் இறங்கி விட்டது. அதன் பின் வட அமெரிக்கர்களின் வியா பாரக் கப்பல்கள் பலவற்றை அது நாசம் செய்தது. இரண் டாண்டுகளுக்கு அக்கப்பல் தனது நாசவேலையைத் தொடர்ந்து நடத்தியது. உள்நாட்டுப் போர் அமெரிக்காவில் நின்றபின், அமெரிக்கர்கள் 'அலபாமா' கப்பலால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடு தரும்படி பிரிட்டிஷாரைக் கேட்டார்கள். நஷ்ட ஈடு எவ்வளவு தருவது என்பது பற்றிப் பத்து ஆண்டுகளாக இரு நாடுகளும் வழக்கிட்டுக் கொண்டன. இறுதியில் 3 மில்லியன் பவுன்கள் கொடுப்பதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் 1872இல் ஒப்புக் கொண்டது.

பாமர்ஸ்டனும் பிரஷ்யாவும்

பிரஷ்ய நாடு 'பிஸ்மார்க்'கின் தலைமையின்கீழ் வெகு வேக மாக ஐரோப்பாவில் மிகச் சிறந்ததொரு நாடாக மாறிக்கொண்டு

வந்தது. போரின் மூலமாகவே எதையும் சாதிக்க முடியும் என்ற கொள்கையுடையவர் பிஸ்மார்க். நாடு பிடிக்கும் ஆசை காரணமாக ஸ்லெஸ்விக் (Schleswig), ஹோல்ஸ்டைன் (Holstein) என்ற மாகாணங்களில் ஏற்பட்ட ஒரு வாரிசுரிமைப் போட்டியில் அவர் கலந்துகொண்டார். அவ் விரண்டு மாகாணங்களும் வெகு காலமாகவே டேனியர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தன. 1852இல் டேனிய மன்னர் ஆண் வாரிசு யாருமின்றி இறந்து விட்டதால் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரனை ஒன்பதாம் கிறிஸ்டியன் என்பார் பட்டத்துக்கு வந்தார். கிறிஸ்டியனைத் தங்கள் மன்னராக ஏற்க முடியாதென மேற்சொன்ன இரு மாகாணங்களும் மறுத்துவிட்டன. அவருக்குப் பதிலாக ஒரு ஜெர்மன் இளவரசரைத் தங்கள் மன்னராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. ஹோல்ஸ்டைன் மாகாணத்தில் வசித்தவர்களில் பெரும்பான்மையோர் ஜெர்மானியர்கள்; ஸ்லெஸ்விக் மாகாணத்தி லும் ஒருபகுதியினர் ஜெர்மானியர்களாயிருந்தனர். எனவேதான் அவர்கள் டேனிய மன்னரை ஒதுக்கிவிட்டு, ஜெர்மன் மன்னரொரு வரைத் தேர்ந்தெடுத்தனர். தங்கள் உரிமையைக் காக்குமாறு அம் மாகாணங்கள் ஜெர்மன் பேரரசான ஆஸ்திரியாவை வேண்டிக் கொண்டன. ஆஸ்திரியாவிடம் அப்போது போதிய படைபல மின்மையால் அது பிரஷ்யாவையும் துணைக்கழைத்தது. இரு நாடுகளும் சேர்ந்து அவ்விரு மாகாணங்களையும் பங்கு போட்டுக் கொள்ளத் தம்முள் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டு டேனிய மன்னர் கிறிஸ்டியனை எதிர்த்தன. பிரஷ்ய-ஆஸ்திரிய நாடுகளின் இப் படையெடுப்பானது வடிகட்டிய வலுத் தாக்குதல் என்றும், டேனிய மன்னருக்குத் தாம் உதவி செய்யப்போவதாகவும் பாமர்ஸ் டன் அறிவித்தார். ஆனால் அவரது எண்ணத்தைக் காபினெட் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. இராணியாருக்கும் அது பிரியமில்லை. வயது முதிர்ந்த நிலையிலிருந்த பாமர்ஸ்டனும் தமது விருப்பத்தை வற்புறுத்தாது விட்டுவிட்டார். எனவே, ஆஸ்திரிய, பிரஷ்யப் படைகள் டேனியரை எளிதில் முறியடித்து ஸ்லெஸ்விக், ஹோல்ஸ்டைன் மாகாணங்களைக் கைப்பற்றிக் கொண்டன. அங்ஙனம் கைப்பற்றப்பட்ட மாகாணங்களைத் தம்முள் எவ்வாறு பிரித்துக்கொள்வது என்பது பற்றிப் பிரஷ்யாவும் ஆஸ்திரியாவும் தம்முள் சச்சரவிடத் தொடங்கின. அச் சச்சரவானது முற்றி 1866ஆம் ஆண்டில் ஆஸ்திரிய-பிரஷ்யப் போராக உருவெடுத்தது. பிரஷ்யாவின் படைபலமானது அப்போது ஐரோப்பாவிலேயே தலைசிறந்ததொன்றாயிருந்த காரணத்தால், ஆஸ்திரியாவை, அது எளிதில் தோற்கடித்துவிட்டு, மேற்சொன்ன இரு மாகாணங்களை யும் தனக்கே சொந்தமாக்கிக் கொண்டது. ஆஸ்திரியா, ஜெர்மன் இணைக் கூட்டரசினின்றும் (Confederation) பிரிந்துவிட ஒப்புக்

கொண்டது. அதனால், பிரஷ்யா, ஜெர்மன் நாடுகளின் தலைமையைப் பெற்றுவிட்டது. இங்ஙனம் பிஸ்மார்க் பலாத்கார வழிகளில் தனது நாட்டைப் பெருக்கிக்கொண்டதை பாமர்ஸ்டனும், ரஸ்ஸல் பிரபுவும் சிறிதும் விரும்பவில்லை. ஆனால், இராணியார் பிரஷ்யாவையும் ஆஸ்திரியாவையும் ஆதரித்து வந்தாராதலால் அவர்கள் வாளாவிருந்துவிட்டனர். இங்ஙனம், வெளிநாட்டுக் கொள்கையில் இராணியாருக்கும், பாமர்ஸ்டனுக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டு வந்தது.

பாமர்ஸ்டனும் போலந்தும்

போலந்தில் ரஷ்யர்கள் அடக்குமுறை ஆட்சியை நடத்தினர். கட்டாய ராணுவ சேவை செய்யும்படி போலந்தியர்களை அவர்கள் வற்புறுத்தினர். இவ்வடக்கு முறை ஆட்சியை எதிர்த்து 1863இல் போலந்தில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சிக்குத் தமது மனப்பூர்வமான ஆதரவு இருப்பதாகப் பாமர்ஸ்டனும் ரஸ்ஸல் பிரபுவும் அறிவித்தனர். பிரிட்டிஷாரின் உதவி வருமென நம்பி, போலந்தியர் புரட்சியைத் தொடர்ந்து நடத்தினர். ஆனால், எதிர்பார்த்த உதவி அவர்களுக்குக் கிட்டவில்லை. எனவே, புரட்சியாளர்கள் தோல்வியுற்றனர். போலந்து, ரஷ்யாவோடு சேர்க்கப்பட்டது. அங்ஙனம் சேர்க்கப்பட்டது, 1815ஆம் ஆண்டு உடன்படிக்கைக்கு விரோதமானது என ரஸ்ஸல் பிரபு கூறினர். ஆனல், அதைத் தடுக்க யாதொரு முயற்சியையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை.

பாமர்ஸ்டனும் சீனவும்—இரண்டாவது, மூன்ருவது சீனப் போர்கள்

பாமர்ஸ்டன் பிரதமராயிருந்தபோது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் சீன அதிகாரிகளுக்கும் இருமுறை போர் நிகழ்ந்தது. அதற்குக் காரணம் வியாபாரத்துறையில் ஏற்பட்ட சிறு சச்சரவுகளேயாகும். கொள்ளையடித்த குற்றத்துக்காக 1856ஆம் ஆண்டில் 'ஆரோ' (Arrow) என்ற கப்பலைச் சீனர்கள் கைப்பற்றி, அதிலிருந்த சில பிரிட்டிஷாரையும் கைது செய்தனர். 1855இல் அக் கப்பல் ஓராண்டுக்குப் பிரிட்டிஷ் கப்பலாகப் பதிவுசெய்யப்பட்டது. ஆனல், அவ்வோராண்டு கழிந்த பின்னும் அக் கப்பலில் பிரிட்டிஷ் கொடி பறந்து கொண்டிருந்தது. ஹாங்காங் துறைமுக அதிகாரியாக அப்போது இருந்த சர் ஜான் பௌரிங் (Sir John Bouring) அது பிரிட்டிஷ் கப்பலே என வாதாடினர். அக் கப்பலிலிருந்து கைப்பற்றப்பட்டவர்களை உடனே விடுதலை செய்யுமாறும், மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுமாறும் அவர் கான்டன்

நகர் கமிஷனருக்கு உத்தரவிட்டார். 'யெ' (Yeh) என்ற அக் கமிஷனர், 'ஆரோ' கப்பல் பிரிட்டிஷாருடையது அல்ல என்பதை எடுத்துக்காட்டியபின் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தார். ஆனால், மன்னிப்புக் கேட்டுக்கொள்ள அவர் மறுத்து விட்டார். மேலும், நான்கிங் உடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் ஹாங்காங்கில் நுழைவதையும் அவர் தடுத்தார். எனவே, பௌரிங், கான்டன் நகர்மீது படையெடுத்தார். கான்டன் எளிதில் கைப்பற்றப்பட்டது. அதன் கமிஷனர் 'யெ' என்பாரும் சிறைப்பட்டார். பீகிங் நகரை நோக்கிப் பிரிட்டிஷ் படைகள் முன்னேறின. இதைக் கண்ட சீனர்கள் சமாதானத்துக் கிணங்கினர். டியன்சின் (Tientsin) உடன்பாட்டின்படி பிரிட்டிஷ் பிரதிநிதி ஒருவரைப் பீகிங் நகரில் ஏற்றுக்கொள்ள சீன அரசு ஒப்புக்கொண்டது. பிரிட்டிஷ் கான்சல்களை வியாபாரத் துறை முகங்களில் ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் சம்மதித்தனர். வியா பாரச் சலுகைகளும் அதிகமாக்கப்பட்டன. பாமர்ஸ்டன், பௌரிங் கின் செயலைப் பாராட்டினார். பௌரிங் செய்தது தவறு என்றும், 'ஆரோ' கப்பல் பிரிட்டிஷாருடையதல்ல வென்றும், பாராளு மன்றத்தில் பலர் பேசினர். பௌரிங்கைக் கண்டித்துப் பொது மக்கள் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கிளாட்ஸ் டன், டிஸ்ரேலி, ரஸ்ஸல் போன்றவர்கள் அத் தீர்மானத்தை ஆதரித்தனர். எனினும், பாமர்ஸ்டன் பிடிவாதமாகப் பௌரிங் கை ஆதரித்துப் பொதுமக்கள் சபையைக் கலைத்துவிட்டார். அடுத்து நடைபெற்ற தேர்தலில் பாமர்ஸ்டனை ஆதரிப்போர் பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டியான்சின் உடன்பாட்டை அமல் நடத்துமாறு சீன அரசை வற்புறுத்த வேண்டி ஆங்கிலப் படையொன்று ஃபிரெஞ்சுப் படையுடன் சேர்ந்துகொண்டு, தாகு (Taku) கோட்டைகளைத் தாக்கிக் கைப் பற்றின. 1860இல் எல்ஜின் பிரபு என்னும் பிரிட்டிஷ் படைத்தலை வர், பீகிங் நகரைக் கைப்பற்றிச் சீன மன்னரின் கோடை அரண் மனையைக் கொளுத்திவிட்டார். அதன்பின், 1860ஆம் ஆண்டு, அக்டோபர், 24ஆம் தேதி சீனர்கள் பிரிட்டிஷாரோடு பீகிங் உடன்படிக்கையைச் செய்துகொண்டனர். அதன்படி டியன்சின் உடன்படிக்கையை அமல் நடத்தச் சீனர் ஒப்புக் கொண்டனர். பிரிட்டிஷ் தூதரொருவர் பீகிங் நகரில் ஏற்றுக் கொள்ளப்பட் டார். ஏற்கெனவே பிரிட்டிஷ் வியாபாரத்துக்காகத் திறந்து விடப்பட்டத் துறைமுகங்களோடு டியன்சினும் சேர்ந்தது.

பாமர்ஸ்டனும் ஜப்பானும்

அந்நியர்களைத் தம் நாட்டுக்குள் நுழையவிடாமல் தடுத்து வந்த ஜப்பானியர்களின் நாட்டிலும் ஆங்கிலேயர், பாமர்ஸ்டன்

காலத்தே மெல்ல நுழைந்துவிட்டனர். 1862இல் ஜப்பானியர் ஆங்கிலேயன் ஒருவனைக் கொன்றுவிட்டனர் என்பதற்காக ஆங்கிலப் படையொன்று ஜப்பானுக்குள் நுழைந்தது. ஜப்பானியப் படைகள் தோல்வியுற்றன. அதன்பின் கொலை செய்யப்பட்ட ஆங்கிலேயனுக்காகக் குறிப்பிட்ட தொகையை ஜப்பானிய சர்க்கார் நஷ்டஈடாகச் செலுத்தினர். அதோடு யோகோஹாமா (Yokohama) என்ற துறைமுகத்தைத் தவிர மற்ற எல்லாத்துறைமுகங்களோடும் வியாபாரம் செய்யப் பிரிட்டிஷார் அனுமதி பெற்றனர்.

இங்ஙனம், பாமர்ஸ்டன் மந்திரி சபை தாராளக் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு தனது வெளிநாட்டுக் கொள்கையினை வகுத்துச் செயலாற்றியது. இத்தாலிய சுதந்திரத்தை ஆதரித்ததில் அச் சபைக்கு நல்ல புகழ் ஏற்பட்டது. ஆனால், இராணியாருக்கு மட்டும் ஆஸ்திரியர்களை எதிர்த்து இத்தாலியர்கள் போர் செய்தது பிடிக்கவில்லை. அமெரிக்க உள்நாட்டுப் போர்க் காலத்தும், இங்கிலாந்து தனது நடுநிலைக் கொள்கையைப் பெருமளவுக்கு வெற்றிகரமாகக் கடைப்பிடித்தது. 'அலபாமா' கப்பலைக் கடலில் உலவ விட்டதுதான் அது செய்த தவறாகும். அதுவும் அஜாக்கிரதையால் விளைந்த குற்றமேயன்றி, வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல. டென்மார்க், போலந்து என்ற நாடுகளைப் பொறுத்தவரையில் இம் மந்திரி சபையின் கொள்கை அவ்வளவு போற்றத்தக்கதாயில்லை. அதற்குக் காரணம் இராணியாரின் பிடிவாதமேயன்றி மந்திரி சபையின் குற்றமல்ல.

பாமர்ஸ்டனின் மதிப்பீடு

வெளிநாட்டுக் கொள்கை

இவ்வாறு, அரை நூற்றாண்டுக்கும் மேலாக இங்கிலாந்துக்கு அரும்பெரும் சேவைகளைச் செய்த பாமர்ஸ்டன் 1865ஆம் ஆண்டில் பூதவுடல் நீத்துப் புகழுடம்பை எய்தினர். அவர் இருக்கும்வரை ஐரோப்பியர்களுக்கு அவர் பெயர் சிம்ம சொப்பனமாக இருந்தது. எந்தச் சமயத்தில் எதைச் செய்துவிடுவாரோ என ஐரோப்பிய வல்லரசுகள் பயந்துகொண்டேயிருந்தன. அவரது வெளிநாட்டுக் கடிதப் போக்குவரத்திலெல்லாம் ஒருவித அதிகாரத் தோரணையும் கண்டிப்பும் காணப்பட்டன. நாம் செய்வது சரியானது என்ற எண்ணத்தில் ஏற்பட்ட இறுமாப்பே அத்தகைய கடிதங்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்தது. தமக்குச் சரியெனப்பட்டதை அவர் யாருக்கும் அஞ்சாது, யாருடைய உணர்ச்சியையும், ஏன், மகாராணியாரின் உணர்ச்சியையுங்கூட மதிக்காமல் அவர் செய

லாற்றிக் கொண்டே போவது வழக்கம். அதனுல் பல பேருடைய மனம் நோகக் காரணமாயிருந்தார். இவ்வித அலட்சிய மனோ பாவத்தினுலேயே அவர் ஒரு முறை பதவியினின்றும் நீக்கப் பட்டார். எனினும், அவரது கொள்கைகளை மக்கள் மனமுவந்து பாராட்டினர். பாமர்ஸ்டன் என்ற அவரது இயற்பெயரைச் சுருக்கி 'பாம்' (Pam) என்ற செல்லப் பெயரால் அவரை ஆங்கிலேயர் அழைப்பது வழக்கம்.

'அவரது வாழ்க்கை, 18ஆம் நூற்ருண்டுக்கும் 19ஆம் நூற்ருண்டுக்கும் இடையேயுள்ள ஆச்சரியகரமானதொரு பால மாக விளங்குகிறது' என பிலிப் கியூடெல்லா (Philip Guedalla) என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர்.[1] சுக போகங்களில் ஈடுபாடு, எதையும் சாதாரணமாக (Levity) எடுத்துக்கொள்கின்ற இயல்பு, கொள்கைகளில் ஆழ்ந்த உறுதிப்பாடின்மை போன்ற 18ஆம் நூற்ருண்டின் குணங்கள் அவரிடம் பெரிதும் பொதிந்திருந்தன. ஐரோப்பிய நாடுகளில் இந்நாடு நட்புடையது, இந் நாடு பகைமை யுடையது என்று நிரந்தரமாக எண்ணிக்கொள்வதைப் போன்ற மடமை வேறென்றுமில்லை என அவர் கூறுவது வழக்கம். சமயத்துக் கேற்ருற்போல் கொள்கைகளை மாற்றிக் கொள்ள அவர் என்றுமே தயங்கியதில்லை. ஆனுல், அவரது கொள்கை களில் எல்லாம் பத்தொன்பதாம் நூற்ருண்டுக்குரிய தாராளக் கருத்துக்களின் மணம் கமழ்வதைப் பார்க்கின்ருேம். எடின்பர்க் நகரில் நிலவிய தாராளச் சூழ்நிலையில் அவர் கற்ற கல்வி, ஐரோப்பிய நாடுகளிடையே அவர் அடிக்கடி செய்த பிரயாணங் கள், அயர்லாந்தில் அவர் ஒரு பிரபுவாக இருந்தது, கானிங்கிடம் அவர் கற்ற பாடம் இவை யாவும் அவரது கொள்கைகளைத் தாராளத் தன்மையுடையதாக்கின எனலாம். ஐரோப்பாவுக்கே ஒரு முன் மாதிரியாகவும், மத்தியஸ்த நாடாகவும் (Arbiter) இங்கிலாந்து விளங்கவேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தே கானிங் பிரபுவால் தூவப்பட்டதாகும். இங்ஙனம், அவர்பால் ஆரம்பத்தில் டோரிக் கொள்கைகளும், நாள் செல்லச் செல்ல விக்குக் கொள்கைகளும் நிறைந்து விளங்கின. இங்கிலாந் தின் அரசியல் நிறுவனங்களே உலகத்தில் மிகச் சிறந்தவை யென்றும், அவைகள் ஐரோப்பாவெங்கும் பரவ வேண்டுமென்றும் அவர் விரும்பினுர். சீர்த்திருத்தங்களை ஏற்படுத்தும்படி, அவர் ஐரோப்பிய மன்னர்கள் பலரைத் தூண்டி விட்டார். பிரிட்டனின் செல்வாக்கு ஐரோப்பாவில் நன்கு நிலைபெறச் செய்தவர் பாமர்ஸ் டனே யாவார். எனினும், மற்ற நாடுகளின் உரிமைகளையும் உணர்ச்சிகளையும் சிறிதும் பொருட்படுத்தாமல், எதேச்சாதிகார

[1]See Hearnshaw - Prime Ministers of the 19th Century, p 112.

முறையில் அவர் நடந்து கொண்டது, இங்கிலாந்தின் அரசியல் தரத்தை ஓரளவு குறைத்தது எனலாம்.

உள்நாட்டுக் கொள்கை

வெளிநாட்டுக் கொள்கையில் தாராள நோக்கினை வற்புறுத்திய பாமர்ஸ்டன், உள்நாட்டுக் கொள்கையில் அவ்வளவு பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்தவில்லை. கத்தோலிக்க விடுதலையை அவர் ஆதரித்தாலுங்கூடப் பாராளுமன்றச் சீர்திருத்தங்களை அவர் வரவேற்க மறுத்தார். 1832ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்துக்கு மேலும் பாராளுமன்றத்தைச் சீர்திருத்துவது தவறானது என அவர் உறுதியாக நம்பினார். வாக்குரிமையை விரிவுபடுத்த விரும்பிய ரஸ்ஸல் பிரபுவை அவர் எதிர்த்தார். காகிதங்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளை ரத்து செய்யக் கிளாட்ஸ்டன் விரும்பியபோது, அவர் அதை எதிர்த்தார். குடியேற்ற நாடுகள்பற்றி அவர் அதிகம் கவலைப்படவில்லை. இணங்காதாரின் உரிமைகளைப்பற்றியும் அவர் அக்கறை கொள்ளவில்லை. போருக்கெனப் பெருந்தொகையைப் பாமர்ஸ்டன் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குவது வழக்கம். நிருவாகச் செலவையும் போர்ச் செலவையும் குறைக்க வேண்டும் எனக்கூறிய கிளாட்ஸ்டனோடு அவர் அடிக்கடி சச்சரவிட்டுக்கொள்வது வழக்கம். எனினும், பொதுவாகக் காபினெட் அமைச்சர்கள் அனைவரும் அவரது தலைமைக்குக் கட்டுப்பட்டே நடந்தனர். தீவிரமான சீர்திருத்தங்களுக்கு அவர் முட்டுக்கட்டை போட்டதை டோரிகள் பெரிதும் விரும்பிப் போற்றினர். ஓரளவு அவர் சீர்திருத்தங்களை ஆதரித்ததால் விக்குகளும் அவரைப் புகழ்ந்தனர். இரு கட்சியினரும் அவரது சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டனர்.

குணாதிசயங்கள்

பாமர்ஸ்டன் சுதந்திர மனப்பான்மை பெரிதும் நிரம்பியவர். வெளிநாட்டுறவைப் பொறுத்தவரையில் அவர் அடிக்கடி இராணியாரோடும், அவரது கணவரோடும், உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் கிளாட்ஸ்டனோடும் அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டதற்குக் காரணம் அவரது இந்தச் சுதந்திர மனப்பான்மையே யாகும். ஆங்கில நடுநிலை வகுப்பைச் சேர்ந்த கனவான்களின் நல்லதொரு பிரதிநிதியாக அவர் திகழ்ந்தார்; வேட்டையாடுதல், விளையாட்டுகளில் கலந்துகொள்ளல் போன்றவற்றில் மிகுந்த ஊக்கம் காட்டினார். அதனால், அவர் உடல் உரம்பெற்று விளங்கியது. தொடர்ந்து பணி புரியக்கூடிய திறமை அவருக்கு வயோதிகப் பருவத்தும் கிடைத்தது, அவரது உடற்பயிற்சியினா

லேயே யாகும். கூட்டங்களிலும், பாராளுமன்றங்களிலும் அவர் சாதாரணமாக உரையாடுவது போன்றே பேசுவார். நாவன்மை அவரிடம் அதிகம் காணப்படவில்லை. ஆனால், நகைச்சுவை யோடும், எதிரிகளைக் கிண்டல் செய்தும் பேசுவதில் அவர் சமர்த்தர். அதனால், சிலர் அவருக்குப் பகைவர்களாகி விட்டாலும், பாராளுமன்றத்திலிருந்த பெரும்பான்மையோருடைய — ஏன், பிரிட்டிஷ் மக்களில் பெரும்பான்மையோருடைய — அன்பையும் மரியாதையையும் அவர் இறுதிவரை பெற்றிருந்தார்.

4. விக்டோரியப் பேரமைச்சர் ஜான் ரஸ்ஸல் பிரபு (1792-1878)

(Lord John Russel)

வாழ்க்கைக் குறிப்பு; சீர்திருத்தவாதி ஜான்; நகராட்சி மன்றச் சீர்திருத்தம்; குடியேற்ற நாடுகளின் உரிமை; அயர்லாந்தும் ரஸ்ஸலும்; ரஸ்ஸல் பிரபுவின் தவறுகள்—மதிப்பீடு.

புகழ்பெற்ற பாமர்ஸ்டன் பிரபுவின் மரணத்திற்குப் பின்னர் (1865), இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் ரஸ்ஸல் பிரபு ஆவார். அவரது குடும்பத்தினர் எப்போதுமே முன்னேற்றக் கருத்துக்களையும் தாராள இயக்கங்களையும் ஆதரித்தவர்கள். டியூடர்கள் காலத்தில் மதச்சீர்திருத்த இயக்கத்தையும், ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் பாராளுமன்ற உரிமைக் காப்புப் போராட்டத்தையும் அவர்கள் ஆதரித்தனர். அக் குலப் பெருமை குன்ருவண்ணம் ரஸ்ஸல் பிரபுவும் நடந்துகொண்டார். பிரிட்டிஷ் மக்களுடைய—ஏன், உலக மக்களனைவருடைய—சிவில், சமய உரிமைகளுக்காகப் போராடுவதே தமது வாழ்க்கையின் குறிக்கோள் என அவர் அடிக்கடி கூறுவது வழக்கம். அவர் அங்ஙனம் கூறியதை அவ்வப்போது செயலில் காட்டவும் தயங்கியதில்லை.

வாழ்க்கைக் குறிப்பு

ரஸ்ஸல் பிரபு, 1792ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 18ஆம் தேதி யன்று பிறந்தார். இயற்கையான காலத்துக்கு இரண்டு மாதங்கள் முன்பாகவே அவரது பிரசவம் நிகழ்ந்தது. இக் குறைப் பிரசவம் காரணமாக அவரது உடல் என்று பார்த்தாலும் ஏதாவது நோய்க்குட்பட்டுப் பலவீனமாகவே இருந்தது. இவ்வுடல்

பலவீனத்தை ஈடுகட்டுமாறே போல் அவர் மிக உயர்ந்த கொள்கைகளைப் பிடிவாதமாக ஆதரித்தார். 1813ஆம் ஆண்டில் அவர் டாவிஸ்டாக் (Tavistoc) என்னும் இடத்தின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துள் நுழைந்தார். ஆரம்பத்திலிருந்தே அவர் விக்குக் கட்சியின் உறுப்பினராயிருந்து வந்தார். 1828ஆம் ஆண்டில் அவரே சோதனைச் சட்டம், மாநகராட்சிச் சட்டம் என்ற சட்டங்களை ஒழிக்கும் மசோதாவைக் கொணர்ந்து கத்தோலிக்கர்களின் விடுதலைக்காகப் போரிட்டார். அதன்பின், அவரே பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவை 1831இல் கொணர்ந்து, பின் அது 1832இல் சட்டமாவதற்கும் துணைபுரிந்தார். அயர்லாந்து திருச்சபை சீர்திருத்தப்படவேண்டும் என்ற இயக்கத்தை அவர் ஆதரித்தார். 1835ஆம் ஆண்டு மெல்போர்ன் மந்திரி சபையில் உள்நாட்டு அமைச்சராகப் பணியாற்றியபோது மரண தண்டனைகள் பலவற்றை நீக்குவதில் அவர் பெரிதும் அக்கறை காட்டினார். 1839-41ஆம் ஆண்டுகளில் குடியேற்ற நாட்டமைச்சராகப் பணியாற்றியபோது, கனடாவிற்குச் சுயாட்சியுரிமை வழங்கிய கனடா மசோதாவை அவர் பாராளுமன்றத்தில் கொணர்ந்தார். அதன்பின், பீல் என்பார் ஆட்சிப் பீடத்திலிருந்தபோது, 1845ஆம் ஆண்டில் தடையற்ற வாணிகக் கொள்கையை ஆதரித்து எடின்பர்க் கடிதம் (Edinburgh Letter) என்னுமோர் கட்டுரையை வெளியிட்டு, அதன் மூலம் தானியச் சட்டங்கள் ரத்தாவதற்கு வழி செய்தார். 1846 முதல் 1852 வரை அவர் பிரதமராக இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். அச்சமயம் அவர் 'டர்ஹாம் கடிதம்' (Durham Letter) என்ற தாராளக் கொள்கைகள் நிறைந்ததோர் கட்டுரையை வெளியிட்டார். சமயத் துறையில் கத்தோலிக்கர்கள் மீதிருந்த கட்டுப்பாடுகளை நீக்கும் சட்டமொன்றை 1851ஆம் ஆண்டில் இயற்றினார். மக்களின் உரிமைகளை மதிக்காத மூன்றும் நெப்போலியனை மன்னராக ஏற்றுக்கொண்ட குற்றத்திற்காகப் பாமர்ஸ்டன் பிரபுவை அமைச்சர் பதவியினின்றும் 1851ஆம் ஆண்டில் அகற்றினார் என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். 1852இல் ஏற்பட்ட அபெர்டீன் அமைச்சரவையில் அவர் வெளிநாட்டமைச்சராகப் பதவியேற்றார். கிரிமியப் போரை அப்போது மனதார ஆதரித்தார். 1855இல் நடைபெற்ற வியன்னா சமாதான மாநாட்டில் இங்கிலாந்தின் தூதுவராக இருந்தார். 1859 முதல் 1865ஆம் ஆண்டுவரை அவர் பாமர்ஸ்டன் மந்திரி சபையில் வெளிநாட்டமைச்சராகப் பணியாற்றியபோது, எங்ஙனம் தமது தலைவரின் தாராளக் கொள்கைகளை நடைமுறையில் கொணர்ந்தார் என்பதையும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். அவரது அரிய சேவைகளைப் பாராட்டிப் பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு 'எர்ல்' பட்டத்தை 1861ஆம்

ஆண்டில் வழங்கிற்று. 1865-66ஆம் ஆண்டில் அவர் இரண்டாம் முறையாக இங்கிலாந்தின் பிரதமரானார். அப்போதுதான் அவர் பாராளுமன்றத்தின் இரண்டாவது சீர்திருத்தச் சட்டத்தைக் கொணர்ந்தார். 1878இல் அவர் இறந்தார்.

சீர்திருத்தவாதி ஜான் (John the Reformer)

இங்கிலாந்தின் வரலாற்றில் ஜான் ரஸ்ஸல் ஓர் அழியாத இடத்தைப் பெற்றமைக்கு முக்கிய காரணமானது, அவர் தமது நாட்டின் பற்பல துறைகளிலும் சீர்திருத்தம் ஏற்படவேண்டுமென ஓயாது பாடுபட்டு வந்ததேயாகும். 1821ஆம் ஆண்டிலேயே அவர் கிராம்பவுண்டு (Grampound) என்ற நசித்த பரோவின் வாக்குரிமையை ரத்து செய்ய மசோதா ஒன்றைக் கொணர்ந்தார். ஆரம்பத்தில் அவரது சீர்திருத்த மனப்பான்மையை அனைவரும் கேலி செய்தனர். எனவே, அவரது முயற்சிகள் யாவும் முதலில் தோல்வியடைந்தன. ஆனால், இறுதியில் அவர் கொணர்ந்த பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவானது 1832ஆம் ஆண்டில் வெற்றி பெற்றது. அம்மசோதா சட்டமாகிவிட்டபின், வேறு எந்தச் சீர்த்திருத்தமும் பாராளுமன்றத்தில் தேவையில்லை எனப் பல விக்குப் பிரமுகர்களும், ரஸ்ஸல் பிரபுவும் கூறலாயினர். எனவே, இறுதிநிலை ஜான் (Finality John) என்ற கேலிப் பெயரும் அவருக்கு ஏற்பட்டது. ஆனால், உண்மையில் ஜான் மேலும் பல சீர்த்திருத்தங்கள் பாராளுமன்றத்தில் ஏற்பட வேண்டுமென விரும்பினார். 1852-1854ஆம் ஆண்டுகளில் அவர் மீண்டும் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாக்களைக் கொணர்ந்தார். ஆனால், கீழைச் சிக்கல் காரணமாக அவர் தமது மசோதாக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். 1860ஆம் ஆண்டில் அவர் மீண்டும் ஒரு சீர்திருத்த மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொணர்ந்தார். ஆனால், அது வெற்றி பெறவில்லை. 1866இல் அவர் கொணர்ந்த ஒரு சீர்திருத்த மசோதாவானது, பரோக்களில் 7 பவுன் வாடகைப் பெறுமானமுள்ள சொந்த விடுகளில் வசிக்கும் அனைவருக்கும், 10 பவுன் வாடகை செலுத்தும் விடுதிவாழ் மக்களுக்கும், கவுன்டிகளில் 14 பவுன் வாடகை செலுத்தும் அனைவருக்கும் வாக்குரிமையை விரிவுபடுத்தும்படி கூறியது. ஆனால், அவரது முயற்சி மீண்டும் தோல்வியுற்றது. அதன்பின் அவர் அரசியல் வாழ்வினின்றும் ஓய்வு பெற்றுவிட்டார்.

நகராட்சி மன்றச் சீர்திருத்தம்

ஜான் ரஸ்ஸல் பிரபு பாராளுமன்றச் சீர்திருத்தங்களை யேயன்றி வேறுபல சீர்திருத்தங்களையும் ஆதரித்தார். நகராட்சி

முறையில் சீர்திருத்தம் ஏற்படுத்த அவர் 1835ஆம் ஆண்டில் 'நகராட்சி சீர்திருத்தச் சட்டம்' (Municipal Reform Act) ஒன்றைக் கொணர்ந்தார். நகராட்சியில் சாதாரண மக்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முதன்முதல் உதவியது இச் சட்டமேயாகும். ஜனநாயக ஆட்சி முறையை நாட்டில் வலுப்படுத்திய சட்டங்களுள் இது முதலிடம் வகிக்கிறதெனலாம். அடுத்து, அவர் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்களைக்காண விழைந்தார். ஆரம்பப் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகைகளை அதிகரிக்கும் சட்டமொன்றை அவர் 1839ஆம் ஆண்டில் ஏற்படுத்தினர். கல்விமுறையைக் கண்காணிக்கும் அதிகாரிகள் பலர் அச் சட்டப்படி நியமிக்கப்பட்டனர். மேலும், ஆரம்பக்கல்வி முறையைக் கவனித்துக் கொள்ள பிரிவிகவுன்சிலின் குழு ஒன்றும் இச்சமயத்தே ஏற்பட்டது. இங்கிலாந்தின் ஆரம்பக்கல்வி முறையின் அடிப்படையை அமைத்த பெருமை அக்குழுவிற்கே உரியதாகும். கல்வியின் தரம் குறையாதிருக்க வேண்டி ஒவ்வோர் ஆசிரியருக்கும் இத்தனை மாணவர்கள்தாம் இருக்க வேண்டுமென்ற நியதியை அவர் 1847ஆம் ஆண்டில் ஏற்படுத்தினர். இளமாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணவேண்டுமானுல் ஓரளவு சமயக் கல்வியும் அன்னுருக்கு அளிக்கப்பட வேண்டுமென அவர் நம்பினர். ஆரம்பக் கல்வியில் மட்டுமல்லாது உயர்தரக் கல்வியிலும் அவர் பெரிதும் அக்கறை காட்டினர். லண்டன் பல்கலைக் கழகத்தை அவர் 1826ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். சிறுவர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்வதைத் தடுத்த 'தொழிற்சாலைச் சட்டத்தை' (Factory Act) அவர் 1847இல் ஆதரித்தார்.

குடியேற்ற நாடுகளின் உரிமை

இங்கிலாந்திலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் ஏற்பட்ட மக்களின் உரிமைக் கிளர்ச்சிகள் யாவாற்றிலும் ரஸ்ஸல் பிரபு பெரிதும் அக்கறை காட்டினர். இணங்காதார் (Non-conformists) என்ற கூட்டத்தார் கல்வி பெறுவதைத் தடை செய்த சோதனைச் சட்டத்தை ரத்து செய்ய உதவியவர் அவரே. நகராட்சி மன்றங்களில் அவர்கள் இடம்பெறுவதைத் தடுத்த மாநகராட்சிச் சட்டத்தையும் அவர் ரத்து செய்தார். இணங்காதாரது திருக்கோயில்களில் நடைபெற்ற திருமணங்கள் சட்ட ரீதியானவையே எனக்கூறும் திருமணச் சட்டமொன்றை (Marriage Act) அவர் 1836இல் நிறைவேற்றி வைத்தார். பீல் என்பார் கத்தோலிக்கர்களுக்கு விடுதலை அளிக்க முன்வந்தபோதும், மாய்னூத் கல்லூரிக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத் தொகையை அவர் அதிகரித்தபோதும் ரஸ்ஸல் பிரபு தமது முழு மனத்தோடு கூடிய ஆதரவை அவருக்கு அளித்

தார். யூதர்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற உதவிய சட்ட மொன்றை அவர் 1858இல் கொணர்ந்து அதை வெற்றிகரமாக நிறைவேற்றினர். இத்தாலியர்களின் உரிமைப் போரை அவர் மனமார ஆதரித்தார். விக்டோரியா, டாஸ்மேனியா, தென் ஆஸ் திரேலியா முதலிய குடியேற்ற நாடுகள் சுயாட்சி பெற உதவிய சட்டமொன்றை அவர் 1850இல் ஆதரித்தார். ஆரஞ்சு சுயேச்சை நாட்டில் வாழ்ந்து வந்த போயர்களின் உரிமையை அவர் போற்றியதோடு, பிரிட்டிஷ் ஆதிக்கம் அங்கு நிலைநாட்டப் படுவதையும் கண்டித்தார். அந்நாடு சுயேச்சையடைவதே நல்ல தென அவர் கூறினர்.

அயர்லாந்தும் ரஸ்ஸலும்

அயர்லாந்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர் களுள் ரஸ்ஸல் பிரபுவும் ஒருவராவார். ஓ'கானல் என்ற அயர் லாந்துத் தலைவரோடு 'லிச்பீல்ட் குடும்ப ஒப்பந்தம்' (**Lichfield House Compact**) என்னும் ஒரு கூட்டுறவை அவர் ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அயர்லாந்தின் நன்மைக்கான சட்டங்கள் பல பாராளுமன்றத்தில் நிறைவேறுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இந்தக் கூட்டுறவைச் சேர்ந்தவர்களேயாவர். இவர்களது முயற்சி யால்தான் இரவலர் சட்டம், ஐரிஷ் நகராட்சிச் சட்டம் போன்ற சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேறின. 1847இல் அயர் லாந்தில் பஞ்சமேற்பட்டபோது அவர் உள்ளம் பதைத்தார். பட்டினியால் வாடிய மக்களுக்கு உணவளிக்க அவர் உணவுத் தானியங்களின் மீதிருந்த இறக்குமதி வரியைக் குறைத்தார். நாவாய்ச் சட்டங்களை அவர் நிறுத்தி வைத்தார். பஞ்ச நிவாரணத்துக்காக தாமே வலிய வந்து உதவிய நிறுவனங்களை யெல்லாம் அவர் ஊக்குவித்தார். வேலையில்லாமல் திண்டாடிய மக்களுக்கு வாழ்வளிக்க அவர் நாடெங்கும் பாதைகளை அமைக் கும் பணியைத் தொடங்கிவைத்தார். அதனுல் மாதமொன்றுக்கு ஒரு மிலியன் பவுன்கள் செலவாயின. ஓரளவு தற்காலிக நிவாரணம் ஏற்பட்டதேனும், அதனுல் நிரந்தரமான பயன் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. பென்டிங் பிரபு என்பார் அயர்லாந் தில் ரெயில் பாதைகளை அமைக்கும் திட்டமொன்றைக் கொணர்ந்த போது ரஸ்ஸல் அதை எதிர்த்தார். அத்திட்டங்களில் செலவிடும் பணத்தில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே ஏழைத் தொழிலாளர் களுக்குப் போய்ச் சேருமென்றும், அதனுல் அத் திட்டத்துக்கு அர சாங்கம் ஆதரவளிக்கக் கூடாதெனவும் அவர் வாதிட்டார். பொது மராமத்து வேலைகளில் ஈடுபட்டிருந்த பல நிலச்சுவான்தார் கள் அரசாங்கத்தின் பணத்தையெல்லாம் திருப்பித் தரும்படி

அந்தந்த வட்டாரத்திலிருந்த மக்களை வற்புறுத்தினர். அதனால் பலர் கோபமுற்றனர். அயர்லாந்தின் பஞ்சத்திற்கு அவரே காரணமெனப் பலரும் கூற ஆரம்பித்தனர். பஞ்சத்தால் இறந்து போன மக்களைப்பற்றி விசாரித்த பல ஜூரிகள், அவர்களை வேண்டுமென்றே கொலைசெய்த குற்றத்தை ரஸ்ஸல் பிரபு மீது சுமத்தித் தமது தீர்ப்பினை வழங்கினர். அயர்லாந்தின் துன்பங்களைப் போக்க அவர் உண்மையிலேயே விரும்பினாரெனினும், அத் துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாகிய நிலச் சாகுபடி முறையை (**land tenure**) அவர் சிறிதும் மாற்றியமைக்கப் பாடுபடவில்லை. எனவேதான், எத்தனையோ நன்மைகளை அயர்லாந்தியருக்குச் செய்துங்கூட அவர் நல்ல பெயர் எடுக்க முடியவில்லை.

ரஸ்ஸல் பிரபுவின் தவறுகள்—மதிப்பீடு

இத்தனை நற்குணங்கள் பொருந்திய ரஸ்ஸலிடம், முழு மதியிலும் களங்கமிருப்பதே போல், ஒரு சில குறைகள் இருந்தன. சில முடிவுகளைச் செய்து, அதை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்வார். தமது கட்சியை எடுத்து ஆனமட்டும் அவர் வாதாடிப் பார்ப்பார். அதனால் எல்லாம் அவரது எதிரிகளை வாயடைக்க முடியாத போது, அவர் திடீரெனப் பிடிவாதக்காரராக மாறி விடுவார். அப்புறம் அவர் தீர்மானத்தினின்றும் யாராலும் அவரை மாற்ற முடியாது. சாதாரண காலங்களில் மக்களிடம் நெருங்கிப் பேசவே நாணுகின்றவராகிய அவர் சில சமயங்களில் சிங்கம் போல் கர்ச்சித்து விடாப்பிடியாகத் தம் கொள்கைகளை நிலைநாட்டுவார். விவேகமற்ற இவ்வித அவசர புத்தியால் அவர் அவ்வப்போது பல தவறுகளைச் செய்துவிடுவதுண்டு.

'டர்ஹாம் கடிதம்' என்ற கட்டுரையில் போப்பாண்டவரையும், ஆக்ஸ்ஃபோர்டு இயக்கத்தையும் அவர் மிக வன்மையாகக் கண்டித்திருந்தார். அதனால், அவரைக் கத்தோலிக்கரும், மத நிலைய மேலோர் எனப்படுவோரும் பெரிதும் வெறுக்கலாயினர். அபெர்டீன் மந்திரி சபையிலிருக்கும்போது, அவர் தலைமையமைச்சருக்குத் தரவேண்டிய மதிப்பையும், மரியாதையையும் தரத் தவறி விட்டார். தலைமையமைச்சராக இருக்கத் தகுதியானவர் தாமே என அப்போது அவர் அடிக்கடி கூறிக் கொள்வார். தம் பதவியை ராஜினமா செய்துவிடுவதாகவும் அவர் அடிக்கடி பயமுறுத்துவார். அபெர்டீன் மந்திரி சபையானது கிரிமியப் போரைச் சரிவர நடத்தாததைக் கண்டித்து, 1855இல் ரோபக் (**Roebuck**) என்பார் ஒரு தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் கொணர்ந்தார். உடனே

ரஸ்ஸல் தமது பதவியை ராஜிஞமா செய்தார். உற்ற தருணத்தில் தங்களையெல்லாம் கைவிட்டுவிட்டுப் பொறுப்பினின்றும் நழுவி விட்டதாக அவரது சக மந்திரிகள் அவரைக் குறை கூறலாயினர். வியன்னு நகரில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் அவர் கலந்து கொண்டார். அப்போது அவர் சில நிபந்தனைகளை ஒப்புக் கொண்டார். ஆனால், தாய்நாடு திரும்பியதும் காபினெட்டின் கொள்கைகளை அனுசரித்து அவர் தமது வியன்னு நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அதனால், அவர் தமது குடியேற்ற நாட்டமைச்சர் பதவியை ராஜிஞமா செய்தார். அவரது செய்கையைப் பாராளுமன்றம் மிக வன்மையாகக் கண்டித்தது. காபினெட்டின் நற்பெயரைக் காக்க வேண்டி, அவர், தாம் ராஜிஞமா செய்த தனுடைய உண்மையை யாரிடமும் வெளிப்படையாகக் கூற வில்லை. அது, அவரது பெருந்தன்மையை நன்கு வெளிக் காட்டு கின்றது. அமெரிக்க உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகையில் அமெரிக்கத் தென்னவர்களுக்குச் சாதகமாக அலபாமா என்ற கப்பல் கட்டப்பட்டதையும், பின்னர் அது கடலில் உலவ விடப் பட்டதையும், தடுக்காமல்விட்ட குற்றம் அவர்மீது சுமத்தப் பட்டது. ஆனால், உண்மையில் அக் குற்றத்திற்குப் பொறுப்பாளி அவரல்லர். ஏனெனில், அரசியின் சட்ட அதிகாரிகளின் ஆலோசனையைக் கேட்டபின்பே அவர் அலபாமா விஷயத்தில் தலையிடக் கூடியவராயிருந்தார். அரசியின் சட்ட நிபுணர் அப்போது நோய்வாய்ப்பட்டிருந்தமையால், அவர் சிறிது காலந்தாழ்த்த நேர்ந்தது. அதற்குள் அலபாமா கப்பலானது கடலுக்குள் புகுந்து விட்டது. சட்ட நிபுணரின் ஆலோசனைகளைக் கேட்டவுடன் ரஸ்ஸல் அலபாமாவைத் தடுத்து நிறுத்தும்படி ஒரு தந்தி கொடுத் தார். எனவே, தம் மீது ஏதும் குற்றமில்லை என அவர் வாதிட் டார். அமெரிக்க உள்நாட்டுப் போரைப் பொறுத்தவரையில் இங்கிலாந்து நடுநிலைமையே வகித்து வந்துள்ளதெனவும், அலபா மாவால் விளைந்த நஷ்டத்துக்கு ஈடு எதுவும் செய்ய முடியாதென வும் அவர் வாதாடினர். இங்ஙனம், அவர் தமது தாய்நாட்டின் கௌரவத்தைக் காக்கவும், தாய் நாட்டினரின் உரிமைகளைக் காக்கவும் ஓயாது பாடுபட்டு வந்தார்.

ரஸ்ஸல் பிரபு ஒரு சீர்திருத்தவாதி மட்டுமல்ல. அவர் ஒரு நல்ல ரசிகருங் கூட. கலைகளிலும், பண்டைய இலக்கியங்களிலும் அவர் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். வரலாற்றிலும் அவருக்கு ஆர்வம் அதிகம் காணப்பட்டது. அரச வரலாற்றுக் கழகத்தின் **(Royal Historical Society)** தலைவராக அவர் பல ஆண்டுகள் பணி யாற்றி வந்தார். சார்லஸ் ஜேம்ஸ் பாக்ஸ் **(Charles James Pox)** என்பவரின் வரலாற்றை அவர் சுவைபட எழுதியுள்ளார். ஐரிஷ்

கவிஞர் மூர் (Moore) என்பவரது வாழ்க்கை வரலாற்றையும் அவர் வரைந்துள்ளார். ஹெரேஸ் என்பாரது நூலின் பிரதியொன்றை அவர் சதா தம்முடன் வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். இங்ஙனம் அரசியலிலும், இலக்கியத்திலும் ஒரே சமயத்தில் ஈடுபாடு கொண்டவராக அவர் விளங்கினுர். அவர் ஒரு சில தவறுகளைச் செய்தாரென்பது உண்மையே. ஆனுல், அவரைப் போல் உயரிய கொள்கைகளுக்காக ஆண்மையோடு ஓயாது போரிட்டவர்கள் வேறெவரும் அவர் காலத்தில் இல்லை. 'நான் தவறுகள் பலவற்றைச் செய்துள்ளேன். எனினும், நான் என்னென்ன செய்தேனே அதிலெல்லாம் பொதுமக்களின் நன்மையொன்றே எனது குறிக்கோளாயிருந்திருக்கிறது' என்று அவரே எழுதிக் கொடுத்த கல்லறை வாசகமானது (Epitaph) அவரது நேர்மையையும், கொள்கையில் தூய்மையையும் தெள்ளிதின் புலப்படுத்துகிறது.

5. விக்டோரியப் பேரமைச்சர் டிஸ்ரேலி (1804–81)

டிஸ்ரேலியும் இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவும்: சீர்திருத்தம் ஏற்பட்டதற்கான காரணங்கள் - தொழிற் சங்கங்களின் கிளர்ச்சி—வெளிநாட்டுக் கொள்கையின் விளைவு—அமெரிக்க உதாரணம்—அறிஞர்கள் ஆதரவு—சீர்திருத்தம் ஏற்பட்ட விதம் - கிளாட்ஸ்டனின் முயற்சி—சீர்திருத்தச் சட்டத்தின் முதல் தோல்வி - மக்களின் கொந்தளிப்பு—டிஸ்ரேலியின் திடீர் சட்டத்தின் முதல் மாற்றம் - சட்டம் கொணரப்படல்; கிளாட்ஸ்டனும் டிஸ்ரேலியும்; டிஸ்ரேலியின் அரசியல் வாழ்க்கை (1837-81): ஆரம்ப காலம்—டிஸ்ரேலி பிரதமராதல்—பிரதமர் டிஸ்ரேலியும் இராணியாரும்; டிஸ்ரேலியின் சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்: தொழிலாளர் நலச் சட்டங்கள்—விவசாயத் துறை சீர்திருத்தச் சட்டங்கள்—நட்புரிமைக் கழகங்கள் சட்டம் (1875)—வியாபாரக் கப்பல் ஏற்றச் சட்டம் (1876); கடன் கழிவு நிதி; டிஸ்ரேலியின் வெளிநாட்டுக் கொள்கை: சூயஸ் கால்வாய்ப் பங்குகளை வாங்கல்—விக்டோரியாவுக்குப் பேரரசிப் பட்டம் வழங்கல்—கீழைச் சிக்கல்—கண்ணியத்துடன் சமாதானம்—ஆப்கானியப் போர்—தென் ஆப்பிரிக்கா; டிஸ்ரேலியின் அந்திய காலம்; டிஸ்ரேலி பற்றிய மதிப்பீடு: டிஸ்ரேலியும் கன்சர்வேடிவ் கட்சியும்—பேரரசுக் கொள்கை—வெளிநாட்டுக் கொள்கை—பாராளுமன்றத்தில் டிஸ்ரேலி—டிஸ்ரேலியின் குணச் சிறப்புகள்.

டிஸ்ரேலியும் இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவும்

1832ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டமானது இங்கிலாந்தின் இடைநிலை வகுப்பினரின் கைகளில் அரசியலை ஒப்படைத்தது. அதன் விளைவாக நாட்டின் பொருளாதார வளம் பெருகியது. குடியேற்ற நாடுகள் ஓங்கின; வாணிகம் வளர்ந்தது; வருமானம் பெருகியது. நாட்டு மக்களிடையே ஒருவித தெம்பும், மன நிறைவும் தென்பட்டன. இங்கிலாந்தின் அரசியல் அமைப்பின்

சிறப்பே அதற்கெல்லாம் காரணமெனப் பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்களும், ஐரோப்பிய அரசியல் வித்தகர்களும் எண்ணலாயினர். அவ்வரசியலமைப்பைச் சிறிதும் மாருவண்ணங் காப்பதையே அவர்கள் தங்கள் தலேயாய கடைமையெனக் கருதினர். இடைநிலே வகுப்பினர் ஆதிக்கம் செலுத்திய இக் காலத்தில்தான் அவர்களுக்குத் தக்கதொரு தலேவராகப் பாமர்ஸ்டன் பிரதமர் பீடத்திலிருந்து ஆட்சி புரிந்துவந்தார். சீர்திருத்த வாதியான ரஸ்ஸல் பிரபு அவ்வப்போது கொண்டுவந்த பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாக்களேயெல்லாம் தோற்கடிப்பதில் தனி இன்பம் கண்டார். நாட்டு மக்களும் அவ்விதச் சீர்திருத்தங்களில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லே. ஆனுல், இந்த நிலே சில காரணங்களினுல் விரைவிலேயே மாறியது.

சீர்திருத்தம் ஏற்பட்டதற்கான காரணங்கள்—தொழிற் சங்கங்களின் கிளர்ச்சி

தொழிற் சங்கங்களின் விறுவிறுப்பான வளர்ச்சி சீர்திருத்தக் கிளர்ச்சிகளுக்கு முக்கிய காரணமெனலாம். இத் தொழிற் சங்கங்களே நசுக்கக் கூடிய பல தீர்ப்புகள் நீதிமன்றங்களில் 19ஆம் நூற்ருண்டின் இடையிலே வழங்கப்பட்டன. சான்ருக, வேலே நிறுத்தம் செய்யும்படி தொழிலாளர்களேத் தூண்டுவது சட்ட விரோதம் என அறிவிக்கப்பட்டது. இங்ஙனம், அவைகள் இழந்து போன பலத்தை மீண்டும் பெறவேண்டுமானுல், அவைகளே அங்கீகரித்து ஆதரிக்கக்கூடிய புதிய சட்டங்கள் நாட்டில் ஏற்படுவதைத்தவிர வேறு வழியில்லே. அங்ஙனம், புதிய சட்டங்கள் வர வேண்டுமானுல், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இடம் பெறவேண்டும். எனவே, தொழிலாளர்கள் வாக்குரிமை பெறத்தக்க சீர்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவேண்டும் என அச்சங்கங்கள் கூக்குரலிடலாயின.

வெளிநாட்டுக் கொள்கையின் விளேவு

மேலும், ஆளும் வர்க்கத்தினர் இங்கிலாந்தின் கௌரவத்தையும் ராணுவச் சிறப்பையும் வெளிநாடுகளில் நிலேநாட்டத் தவறி விட்டதும் தொழிலாளர்களின் கிளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளித்தது. கிரிமியப் போரில் இங்கிலாந்தின் இராணுவம் நடந்து கொண்டவிதம் பழிப்புக்கு இடமாய்ப் போயிற்று. அதற்குப் போதிய தளவாடங்களேயும் உணவுப் பொருள்களேயும் அனுப்பாத குறை அரசாங்கத்தின்மீது வீழ்ந்தது. எனவே, அரசாங்கத்தை நடத்த இடைநிலே வகுப்பினரின் பிரதிநிதிகள் தகுதியற்றவர்கள் எனத் தொழிலாளர்கள் கூறலாயினர்.

அமெரிக்க உதாரணம்

அமெரிக்க உள்நாட்டுப் போரில் வடக்கத்தியர் பெற்ற வெற்றி தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இருந்த ஆதரவை மேலும் பெருக்கியது. அவர்தம் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றியாகவும், ஆலைத் தொழிலாளர்களின் வெற்றியாகவும் கருதப்பட்டது. மேலும், அப்போரின்போது ஏற்பட்ட பருத்திப் பஞ்சத்தை லங்காஷயர் தொழிலாளர்கள் பொறுமையுடன் சமாளித்த விதத்தைக் கண்ட அனைவரும், அவர்களுக்கும் அரசியல் அதிகாரத்தில் ஓரளவு பங்கு தரப்படல் வேண்டுமெனக் கூறலாயினர்.

அறிஞர்கள் ஆதரவு

கடைசியாக அக் காலத்து வாழ்ந்த முப்பெரும் அறிஞர்களின் ஆதரவும் சீர்திருத்தக் கிளர்ச்சிக்காரர்களுக்குக் கிட்டியது. அவர் களில் ஒருவர் ஜான் பிரைட் என்பவர். அவர் குவேக்கர் பிரிவினைச் சேர்ந்த ஒரு தீவிரவாதி. தானியச் சட்டங்களின் ரத்துக்காகப் பாடுபட்டு வெற்றிகண்ட அவர், இப்போது சாதாரண மக்களின் வாக்குரிமைக்காகப் பாடுபட்டார். தமது நாவன்மையால் அவர் இங்கிலாந்தின் வடக்கிலும், மத்தியிலும் வாழ்ந்த ஏராளமான இணங்காதார் கூட்டங்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். கிளாட்ஸ்டன் என்ற அமைச்சர், பிரைட் என்பாரைப் பின்பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். சொத்துரிமைத் தகுதியுள்ளவர்களே வாக்குரிமை பெறவேண்டும் என்ற கொள்கையை அவர் பலமாகக் கண்டித்தார். அமைச்சர் ஒருவர் இப்படிப் பேசுவது கண்டு, பாமர்ஸ்டன் மனம் பதைத் தார். ஆனல், கிளாட்ஸ்டனுக்கு நாட்டில் ஆதரவு மேன்மேலும் பெருக ஆரம்பித்தது. அவரது சொல்வன்மையும், வாதத்திறனும் மக்களை அவர்பால் காந்தம்போல் ஈர்த்தன.

சீர்திருத்தச் சட்டம் ஏற்பட்ட விதம்—கிளாட்ஸ்டனின் முயற்சி

1865ஆம் ஆண்டில் பாமர்ஸ்டன் மாண்டதும் பாராளு மன்றச் சீர்திருத்தங்களை அதுகாறும் வழிமறித்து வந்த நந்தி விலகி வழிவிட்டது போலாயிற்று. ரஸ்ஸல் பிரபு பிரதமரானர். கிளாட்ஸ்டன் அவரது கொள்கைகளுக்கு உறுதுணையாய் நின்று இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா ஒன்றைக் கொணர்ந்தார் (1866). அம் மசோதா பெரிதும் மிதவாதத்தன்மை பொருந்தியதாய் இருந்தது. அது சட்டமாகியிருந்தால், மேற் கொண்டு 2,00,000 தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்றிருப்பர்.

ஆனால், அம் மசோதாவை ஆளுங் கட்சியினரும், பிறரும் மிக வன்மையாக எதிர்த்தனர். அங்ஙனம், எதிர்த்தவர்களில் ராபர்ட் லவே (Robert Lowe) என்பவர் மிக முக்கியமானவர். அவர் விக்குக் கட்சியைச் சேர்ந்தவர்தாம்; எனினும், கிளாட்ஸ்டனை அவர் எதிர்த்தார். அவர் பிரிட்டிஷ் அரசியலமைப்பின் புனித தத்துவத்தை எடுத்துக்காட்டி, அதை மாற்றுவது தவறு எனத் திறமையுடன் வாதாடினார். கிளாட்ஸ்டன்கூட அவருக்குத் தக்க மாற்றங் கொடுக்க இயலாது சில சமயங்களில் திணறினார். பிரைட் என்பவர் அவரைத் தாவீது (David) என்னும் விவிலிய நூல் மன்னனுக்கு ஒப்பிட்டார். எப்படி அத் தாவீது மன்னன் தன் நாட்டில் வாழ்ந்த எல்லா அதிருப்தியாளர்களையும் துன்புற்றவர்களையும் அடல்லம் என்ற குகையில் (Cave of Adullam) ஒன்று திரட்டினானோ அப்படியே லவேயும் தன் கட்சியிலிருந்த பல அதிருப்தியாளர்களை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு கிளாட்ஸ்டனை எதிர்த்தார். அவர்கள் அனைவருக்கும் 'அடல்லமைட்டுகள்' (Adullamites) என்ற புனை பெயரும் ஏற்பட்டது. எனவே, மசோதா தோல்வியை அணைந்தது. அமைச்சரவையும் கலைந்தது. டெர்பி பிரபு பிரதமரானார்.

சீர்திருத்தச் சட்டத்தின் தோல்வி—மக்கள் கொந்தளிப்பு

இரண்டாம் சீர்திருத்த மசோதா தோல்வியுற்றதைக் கேட்டவுடன் இங்கிலாந்து நாட்டில் என்றுமில்லாதபடி ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. இதுவரையிலும் நாட்டின் வட மத்தியப் பகுதிகளில் மட்டுமே அத்தகைய கிளர்ச்சிகள் நடைபெறுவது வழக்கமாக இருந்தது. ஆனால், இப்போதோ அக் கிளர்ச்சித் தீ, லண்டன் மாநகருக்கும், தென் பகுதிகளுக்கும் பரவியது. ட்ராஃபால்கர் சதுக்கத்தில் (Trafalgar Square) மசோதாவை ஆதரித்துப் பெருங் கூட்டங்கள் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றின. கிளாட்ஸ்டனைப் பாராட்ட ஒரு பெருங்கூட்டம் அவரது இல்லம் நோக்கிச் சென்றது. அங்கே அவர் இல்லை எனத் தெரிந்ததும், அக் கூட்டம் கிளாட்ஸ்டனின் மனைவியை ஆரவாரத்துடன் பாராட்டித் திரும்பியது. அரசாங்கத்தின் தடையையும் மீறி ஹைட் பூங்காவில் (Hyde Park) ஒரு கூட்டம் கூடிப் பாராளுமன்றத்தின் செயலைக் கண்டித்தது.

டிஸ்ரேலியின் திடீர் மாற்றம்—சட்டம் கொணரப்படல்

இங்ஙனம், அத்து மீறிய செயல்களில் மக்கள் ஈடுபடுவதைக் கண்ட ஆளுங் கட்சியினர் திகிலடைந்தனர். டெர்பி மந்திரி சபையில் அப்போது பேராற்றலுடன் விளங்கிய டிஸ்ரேலி

என்பவரின் மனத்தில் நூதன எண்ணங்கள் பல தோன்றின. தாராளக்கட்சியினர் செய்யத் தவறிய சீர்திருத்தத்தில், நாட்டு மக்கள் விரும்பி நிற்கும் ஒரு மாற்றத்தை, ஏன் தாமாகவே வலிய வந்து செய்து தாம் பேரும் புகழும் அடைவதோடு, தம்கட்சியையும் வலுப்படுத்தக் கூடாது என அவர் எண்ணமிடலானுர். அவரது கருத்தைக் கட்சித் தலைவர் டெர்பி பிரபு அவ்வளவாக ஏற்கவில்லை யெனினும், சீர்திருத்தம் கொணர்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில், அதை அவரது கட்சியினரே கொண்டு வருவது சாலச் சிறந்தது என்பதை அவர் ஒப்புக் கொண்டார். எனவே, டிஸ்ரேலி 1857இல் ஒரு பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவைக் கொணர்ந்தார். இருபது ஆண்டுகளுக்கு முன்பு பீல் என்னும் பேரமைச்சர் தமது கன்சர்வேடிவ் கட்சிக் கொள்கைக்குப் புறம்பாகத் தானியச் சட்டரத்தை ஆதரித்தபோது அக்கட்சியில் இருந்த டிஸ்ரேலி அவரைப்பழித்தார். 'விக்குகள் குளித்துக் கொண்டிருக்கையில் அவர்களின் ஆடைகளைத் திருடிக்கொண்டு ஓடியவர்' என அவரை டிஸ்ரேலி அப்போது குறைகூறினுர். அதே குற்றச்சாட்டை இப்போது டிஸ்ரேலி மீது அவரது எதிரிகள் சுமத்தக் கூடும் என்பதை அவர் உணர்ந்தாரில்லை. பலபடியாக வாதம் செய்து, தாம் செய்ததே சரியென டிஸ்ரேலி நிறுவினுர். அவரது முதல் மசோதா மிக மிதவாதத் தன்மை பொருந்தியதாக இருந்தது. கிளாட்ஸ்டன் அதற்கு ஏராளமான திருத்தங்களைக் கொணர்ந்தார். எனவே, டிஸ்ரேலி அதைக் கைவிட்டு இரண்டாம் முறையாக ஒரு மசோதாவைச் சமர்ப்பித்தார். அதை விக்குக் கட்சியினரும் ஏற்றுக் கொண்டனர். ஆனுல், கன்சர்வேடிவ் அமைச்சர்களில் சிலர் அம்மசோதாவை எதிர்த்தனர். பிற்காலத்தில் சாலிஸ்பரி பிரபு என அழைக்கப்பட்ட கிரான்போர்ன் (Cranborne) என்பவர் அதை முழு மனத்தோடு எதிர்த்துப் பின் தமது பதவியையும் ராஜிஞமா செய்தார். அவரைத் தொடர்ந்து வேறுசில மந்திரிகளும் தமது பதவிகளைத் துறந்தனர். ஆனுல், டெர்பி பிரபு வாக்குரிமைச் சிக்கலுக்கு ஏதாவதொரு முடிவான வழி காணவேண்டும் என விரும்பியதால், டிஸ்ரேலியை உறுதியாக நின்று ஆதரித்தார். மசோதா தோற்ருல், தாம் மந்திரி சபையைக் கலைத்துவிடப் போவதாகத் தமது சகாக்களையும், பிரபுக்கள் சபையையும் அவர் அச்சுறுத்திஞர். மந்திரிசபை கலேந்தால் தாராளக் கட்சியினர் பதவியிலமர்வது உறுதி எனக் கண்ட கன்சர்வேடிவ் கட்சியினர் மசோதாவைச் சட்டமாக்க உதவினர். அதனுல், சாதாரண மக்களான தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. உண்மையான ஜனநாயகம் நாட்டில் ஏற்பட்டது. இதன்படி, பட்டணங்களில் ஏழைகள் வரி (Poor rate) செலுத்திய எல்லாச் சொந்த வீட்டுக்

காரர்களும், 10 பவுன் அல்லது அதற்கு மேற்பட்ட வாடகை கொடுத்த எல்லாக் குடிக்கூலிக்காரர்களும் (Lodgers), கவுன்டிகளில் 12 பவுன் வாடகை மதிப்புள்ள வீடுகளில் குடியிருப்பவர்களும் வாக்குரிமை பெற்றுர்கள். இச்சட்டம் எதில் போய் முடியுமோ எனப் பலர் பயந்தனர். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல், டெர்பி போன்ற கன்சர்வேடிவ் கட்சியினர் உணர்ந்தனர். 'ஏதோ இருட்டில் குதித்து விட்டோம் (A leap in the dark) இனி என்ன நடைபெறுமோ?' என அவர் அங்கலாய்த்தார். 'தாவுகின்ற நயாகரா' (Shooting Niagara) எனக் கார்லைல் அம் மசோதாவை வர்ணித்தார். ஆனுல், அவர்கள் எண்ணியபடி பெருத்த மாறுதலொன்றையும் அம் மசோதா தோற்றுவிக்கவில்லை. பாராளுமன்றம் பழைய நிலையிலேயே பல ஆண்டுகளுக்கு இருந்தது. தொழிலாளர்களின் பிரதிநிதிகள் சட்டசபையில் இடம் பெற மேலும் பல ஆண்டுகள் பிடித்தன. எனினும், அரசியல் சட்டத்துக்கு முன் அனைவரும் சமமே என்ற கொள்கையின் வெற்றிச் சின்னமாக இம் மசோதா விளங்குவதொன்றே அதன் பெருமைக்கு மூல காரணமாகும். உடனடியாக அது விளைத்த மாற்றங்களைவிட நாளடைவில் அது அரசியலரங்கில் தோற்றுவித்த கொள்கை மாற்றத்தாலேயே பெரிதும் சிறப்புப் பெறுகிறது.

1868இல் டெர்பி பிரபு தமது அலுவலினின்றும் ஓய்வு பெற்ற போது டிஸ்ரேலி பிரதமராஞர். ஆனுல், ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே அவர் பதவியில் இருக்கமுடிந்தது. ஏனெனில், கிளாட்ஸ்டன் அரசியலரங்கில் டிஸ்ரேலிக்குப் போட்டியாக முளைத்து விட்டார். அடுத்த பதின்மூன்ருண்டுகளுக்கு இவ்விரு பெரும் தலைவர்களே அரசியலரங்கில் மலைந்த இரு பெரும் மல்யுத்த வீரர்களென விளங்கினர். அரசியல் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த இவ்விருவரின் வாக்கு வாதங்களை மக்கள் படித்து, அவற்றின் திண்மையையும் ஆழத்தையும் ரசித்து மகிழ்ந்தனர். மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிடும் சினிமா நடிகர்களும், விளையாட்டுப் போட்டி வீரர்களும் இல்லாத அக்காலத்து இவ்விருவரது அரசியல் போட்டிகளைப் பற்றிய செய்திகள் எல்லோராலும் பெரிதும் விரும்பிப் படிக்கப் பெற்றதில் விந்தையேதுமில்லை.

கிளாட்ஸ்டனும் டிஸ்ரேலியும்

கிளாட்ஸ்டனும் டிஸ்ரேலியும் உண்மையிலேயே இரு வேறுபட்ட இயற்கையுடையவராய்த் திகழ்ந்தனர். கிளாட்ஸ்டன் உடலுரமும் உள்ளத் திறனும் ஒருங்கே பெற்ற ஒரு பெருந்தலைவர். மணிக்கணக்கில் அவர் அயராது பாராளுமன்றத்தில் பேச வல்லவர். அவரது பேச்சைக் கேட்டவர்கள், அறிவுள்ள எவரும்

அவர் சொல்வதற்கு மேல் எதுவும் செய்யமுடியாது என எண்ணும்படி நேர்ந்து விடுமாம். அவ்வளவு அரிய வாதத்திறம் பொருந்திய அவரது பேச்சுக்கள் கேட்போர் வியக்கத்தக்க தகவல் கருவூலங்களாயும் விளங்கின. ஆனால், டிஸ்ரேலியோவெனில் அவ்வளவு ஆணித்தரமாகப் பேச வல்லவரல்லர். எதற்கும் நிலை கலங்காத ஓர் உள்ளவன்மையை இறைவன் அவருக்களித்திருந் தார். எனவே, எதுவரினும் அவர் அமைதியாக இருப்பார். அவரது மௌனத்தைக் கண்ட அவரது எதிரிகள் அவரை ஒரு புதிர் நிரம்பிய மனிதராக மதித்தனர். அவரது மௌனத்துக்குப் பின் என்னென்ன சூழ்ச்சிகள் மறைந்து கிடக்கின்றனவோ என அவர்கள் வியப்பில் ஆழ்வர்.

கிளாட்ஸ்டன் லிவர்ப்பூலில் வாழ்ந்த ஒரு பெரு வணிகரின் புதல்வர். ஈட்டன், ஆக்ஸ்ஃபோர்டு போன்ற இடங்களில் பயின்று முதல் வகுப்பில் தேறிய நல்ல கல்விமான். அவரது இளமைக் காலத்தே அவர் மத நிலைய மேலோரது கட்சியிலும் டோரிக்கட்சி யிலும் பெரிதும் பற்றுள்ளவராக விளங்கினர். அப்பற்று அவரது ஆயுள் பூராவும் நீடித்தது. ஆனால், அவரது அரசியல் வாழ்வில் அடிக்கடி மாறுதல்கள் நிகழ்ந்தன. ஆரம்பத்தில் அவர் பீல் என்பவரைப் பின்பற்றிய தாராளக் கொள்கையுடைய டோரியாக விளங்கினர். அப்போது அவர் விக்குக் கட்சியினரின் தடையிலா வாணிகக் கொள்கையை ஆதரித்து வந்தார். பாமர்ஸ்டன், ரஸ்ஸல் போன்றவர்களை ஆதரித்த அவர், அவர்களெல்லாம் இறந்தபின் அவர்களது கொள்கைகளை உட்கொண்ட லிபரல்-கட்சி (Liberal Party) ஒன்றை ஏற்படுத்தினர். கிளாட்ஸ்டன் ஒழுக்கமும் நேர்மையும் மிக்கவர். அவரது நேர்மைத்திறனை வெறும் வேஷம் என அவரது எதிரிகள் நினைத்தனரெனினும், உண்மையில் அவர் மனசாட்சிக்கு அஞ்சி நடந்தவர். இறைவன் தன்னை ஏதோ ஓர் அரிய பணியை இங்கிலாந்து மக்களுக்கு ஆற்றவே படைத்துள்ளதாக நம்பியவர். இறை நம்பிக்கையும், கொள்கையில் ஊட்டமும், பணிசெய்வதில் ஆர்வமும் மிக்க அவரை அவரது சீடர்கள் தெய்வமென மதித்து வழிபட்டனர்.

டிஸ்ரேலியோ, எல்லா வகையிலும் கிளாட்ஸ்டனுக்கு மாறு பட்டவர். அவர் ஒரு யூதரது மகனாக 1804 ஆம் ஆண்டு பிறந்தார். யூதர்கள் உயர்ந்த ஜாதியினர் என்றும், உலகாளப் பிறந்தவர்களென்றும் அவர் நம்பினர். ஆனால், இடையில் (1817) அவர் தம்மைக் கிறித்தவராக மாற்றிக் கொண்டார். எனினும், மக்களை ஆள்வதற்கெனவே இறைவனால் தாம் படைக்கப்பட் டிருப்பதாக அவர் சிறு வயது முதலே நம்பினர். இளவயதில்

அவர் முறையே கல்லூரிகளில் கல்வி பெறவில்லை. எனினும், தமது தகப்பனாரின் பெரிய நூல்நிலையத்திலிருந்த நூல்களை எல்லாம் தமது விருப்பம் போல் எடுத்துப்படித்து அதன் மூலம் தம் அறிவை விரிவாக்கிக்கொண்டார். கல்லூரியில் பயிலாத போதிலும் அவரிடம் சொந்தமாகச் சிந்தித்து எழுதும் ஆற்றல் மிகுந்திருந்தது. இயல்பாகவே அவரிடம் காணப்பட்ட கற்பனை யூற்று அவரது சொந்தப்படிப்பின் காரணமாக ஒரு பெரிய நதியெனப் பெருக்கெடுத்து ஓடலாயிற்று. அவ்வாற்றிலே பூத்த நறுமலர்களே சிபில், விவியன் கிரே போன்ற அவரது நாவல் களாகும். அவரது நாவல்கள் ஓரளவு சுயசரிதத்தன்மை பொருந்தியன. பாராளுமன்றத்தில் உறுப்பினராகிப் பின்னர் நாட்டையாளும் பேறு பெற வேண்டுமென்ற அவரது வேணவா அவரது நாவல்களில் ஊடாடலைக் காண்கிறோம். அரசியலில் அவர் ஆரம்ப முதல் இறுதிவரை டோரிக் கட்சியினராயிருந்தார். எனினும், அக்கட்சியின் கொள்கைகளையும் போக்கையும் அவர் பெருமளவுக்கு மாற்றிவிட்டார்.

டிஸ்ரேலியின் அரசியல் வாழ்க்கை (1837-81)

ஆரம்ப காலம்

ஆரம்பத்தில் அவர் எந்தக் கட்சியிலும் சேராமல் சுயேச்சை யாக இருந்தார். 1832-34இல் அவர் சுயேச்சை வேட்பாளராக ஹை வைகோம்பி (High Wycombe) என்னுமிடத்தில் தேர்தலில் நின்று தோல்வியுற்றார். 1835இல் டோரிக் கட்சியின் சார்பில், டாண்டன் என்னுமிடத்தின் பிரதிநிதியாகத் தேர்தலில் போட்டி யிட்டுத் தோற்றார். அதன் பின் லிண்ட்ஹர்ஸ்ட் பிரபு (Lord Lyndhurst) என்ற கருவூலத் தலைவர் அவரை ஏதாவதொரு கட்சி யில் சேரும்படி அறிவுறுத்தியதன் பேரில் பீல் என்பாரின் கட்சியில் சேர்ந்தார். 1837இல் விக்டோரியா மகாராணியார் பட்டத்துக்கு வந்தபோதுதான் அவர் முதன் முறையாகப் பாராளுமன்ற உறுப்பினரானார். அதன்பின் அவர் எவரது தயவையும் எதிர்பாராமல் சொந்த முயற்சியின் காரணமாகப் படிப்படியாக முன்னேறினார். 1837 முதல் 1843 வரை அவர் பீலின் அன்புக்குரிய சீடராக விளங்கினார். 1841இல் பீல் பிரதம ரானபோது அவரது மந்திரி சபையில் ஓர் இடம் கிடைக்குமென எதிர்பார்த்து ஏமாந்தார். அதை மனத்தில் வைத்துக்கொண்டோ என்னவோ, அவர் 1842இல் பீலை காரசாரமாகத் திட்ட ஆரம் பித்துவிட்டார். 'இளைய இங்கிலாந்து' (Young England) என்ற கட்சியினரோடு சேர்ந்துகொண்டு பீலைக் கொள்கையில்லாதவ

ரெனவும், நாக்கில் நரம்பற்றவரெனவும் தூற்ற ஆரம்பித்தார். அதனுல் வெகுண்ட பீல் அவரைக் கட்சியினின்றும் புறக் கணிக்கப் பலவாறு முயன்ருர். டிஸ்ரேலி அதனுல் கட்சியை விட்டு விலகினுர். தங்குதடையின்றிப் பீலைத் திட்ட அது நல்ல வாய்ப்பாக அவருக்கு அமைந்தது. தானியச் சட்ட ரத்தினைப் பீல் பிரேரேபித்தபோது டிஸ்ரேலி அவரை வாய்க்கு வந்தபடி யெல்லாம் வைதார். டோரிக் கட்சியில் ஒரு பிளவு ஏற்பட்டது. கன்சர்வேடிவ்கள் என்ற புது கட்சிக்கு அவர் தலைவராஞர். 1846 முதல் 1848 வரை அவர் பெண்டிங் பிரபுவின் கீழ் வேலை பார்த்தார். அவர் இறந்த பின், ரஸ்ஸல் பிரபுவின் அமைச் சரவை யாட்சியின்போது எதிர்கட்சித் தலைவராக வீற்றிருந்தார். 25 ஆண்டு காலம் அவர் பொது மக்கள் சபையில் ஒரு சிறுபான்மைக் கட்சியின் தலைவராகவே இருந்து வந்தார். டெர்பி பிரபு என்னும் டோரிக் கட்சித் தலைவர் அவரது முன்னேற்றக் கருத்துக்களுக்குச் சதா முட்டுக்கட்டை போட்டுவந்தார். எனினும், அவர் தமது கட்சியினரைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றினுர். புதிய பாடங்களை அவர்களுக்குக் கற்பித்தார். காப்பு வரிக் கொள்கையைக் கடைப் பிடித்த அவர்களைத் தடையிலா வாணிகக் கொள்கையினை ஆதரிக்கும்படி முதலில் மாற்றினுர். பின்னர் பாராளுமன்றச் சீர்திருத்தத்தையும் ஆதரிக் கும்படி செய்தார். அதன் விளைவாகவே 1867ஆம் ஆண்டு சீர் திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

டிஸ்ரேலி பிரதமராதல்

பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தை டிஸ்ரேலி கொண்டு வந்தாலும், ஆங்கில மக்கள், கிளாட்ஸ்டனே அதற்குக் காரணமென நினைத்தனர். உண்மையில் ஆரம்பத்தில் மிகவும் மிதவாதத் தன்மை வாய்ந்ததாக இருந்த அச்சட்டம் பெரிதும் தாராளத்தன்மை வாய்ந்ததாக மாறியதற்குக் காரணம் கிளாட்ஸ் டனின் திருத்தங்களேயாகும். 1868இல் கிளாட்ஸ்டன் அயர் லாந்தின் திருச்சபைப் பிரச்சினையைக் கிளப்பினுர். அயர்லாந்தின் ஆங்கிலிகத் திருச்சபையை அரசாங்கம் ஆதரித்து வந்ததை அவர் எதிர்த்து, திருச்சபையும் அரசும் தனித்தனியே பிரிக்கப் படவேண்டுமெனக் கூறினுர். தங்களுக்கு விரோதமான ஒரு திருச்சபையை வாழவைக்க அயர்லாந்தியர்கள் டைத் என்னும் வரியைச் செலுத்துவது அடாதது என அவர் வாதிட்டார். டிஸ்ரேலி அயர்லாந்தில் இருந்த திருச்சபை ஆதிக்கத்தை ஆதரித்ததால் அவர் 1868ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தோற்ருர். 1868 முதல் 1874 வரை கிளாட்ஸ்டனின்

முதல் அமைச்சரவை இங்கிலாந்தை ஆண்டது. அவர் செய்த பல சீர்திருத்தங்கள் தாராளக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதெனினும், பலதரப்பட்ட வகுப்பினரின் பகைமையை அவை அவருக்குத் தேடிதந்தன. உள்நாட்டிலே யன்றி வெளி நாட்டிலும் இங்கிலாந்தின் மதிப்பு குன்றியது. பிராங்கோ-பிரஷ்யப் போரில் ஃபிரான்ஸ் தோல்வியுற்றதைக் கண்ட ரஷ்யா ஏற்கனவே தான் பாரிஸ் உடன்பாட்டில் ஒப்புக்கொண்டதற்கு விரோதமாகக் கருங்கடலில் படைகளைத் திரட்ட ஆரம்பித்தது. இதனுலெல்லாம் கிளாட்ஸ்டனின் பெருமை குன்றியது. அதே சமயத்தில் டிஸ்ரேலியின் புகழ் வளர ஆரம்பித்தது. 1872இல் அவர் மாஞ்செஸ்டர் நகரில் ஆற்றிய நான்கு மணி நேரச் சொற்பொழிவு, டோரிக் கட்சிக் கொள்கைகளின் மேன்மையை ஆங்கில மக்களுக்குத் தெளிவாகப் புலப்படுத்தியது. பிரிட்டிஷ் நிறுவனங்களின் பெருமை, பிரிட்டிஷ் பேரரசு வளரவேண்டியதன் இன்றியமையாமை ஆகியவைகளை அவர் விளக்கியதைக் கண்ட மக்களும் அரசியாரும் அவரை 1874இல் பிரதமராகத் தேர்ந்தெடுத்தனர். 1872ஆம் ஆண்டிலேயே கிளாட்ஸ்டன் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள முன்வந்தார். ஆனுல், பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மையான ஆதரவின்மையால் டிஸ்ரேலி பிரதமராக அவ்வமயம் மறுத்துவிட்டார். 1874இல் அவருக்கு நல்ல பெரும்பான்மை ஆதரவு பொதுமக்கள் சபையில் ஏற்பட்டது.

பிரதமர் டிஸ்ரேலியும் இராணியாரும்

டிஸ்ரேலி பிரதமரானபோது அவர் நோயாளியாக இருந்தார். எந்த ஒரு மனைவியின் அன்பாலும் செல்வத்தாலும் அவர் முன்னுக்கு வந்தாரோ, அவ்வம்மையார், அவர் பிரதமராவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். ஆஸ்த்துமா, பாரிசவாயு போன்ற நோய்கள் அவரைத் துன்புறுத்தின. எனினும், வியத்தகு முறையில் தமது கடமைகளைச் செவ்வனே செய்துவந்தார். டிஸ்ரேலி இராணியாரின் முழு அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார். இராணியாரின் புகழ், விருப்பம் போன்ற பல ஹீன இயல்புகளை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். அவர் அரசியாரிடம் உரையாடும்போது 'நூலாசிரியர்களாகிய நாம்' (We Authors Madam) என்று அவர் அடிக்கடிக் கூறி அவரை மகிழ்விப்பார். அரசியல் சிக்கல்களை அவர் எளிமையான முறையில், சுருக்கமாக அரசியாரிடம் கூறுவார். அரசியாரும் எளிதில் அவற்றைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ற மாற்றம் புகல்வார். ஆனுல், கிளாட்ஸ்டனே, அரசியல் சிக்கல்

களை இராணியாரிடம் கூறும்போது வாதப் பிரதிவாதங்களோடு பாராளுமன்றத்தில் பேசுவதுபோல் எடுத்துரைப்பார். அரசியாருக்கு அது பெருவேதனையாயிருக்கும். எனவே, கிளாட்ஸ்டனைக் கண்டால் அரசியாருக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. 'டிஸ்ரேலி, என்னை ஒரு பெண்ணென எண்ணி அதற்கேற்றபடி பேசுகிறார். ஆனால், கிளாட்ஸ்டனோ என்னை ஒரு நிறுவனம் (Institution) போல் பாவித்து உரையாடுகிறார்' என அவர் மனம் நொந்து சில சமயங்களில் கூறுவது வழக்கம். மேலும், டிஸ்ரேலி வெளிப்பகட்டில் விருப்பமுள்ளவர். சிங்காரமாக உடை உடுத்திக்கொண்டு, எடுப்பாக விரல்களில் மோதிரங்களை அணிந்து செல்வதில் அவர் தனிவிருப்பம் கொண்டவர். அவரது அலங்காரத் தோற்றமும், நடையுடை பாவனைகளும் அரசியாருக்கு மெத்தவும் பிடித்திருந்தது.

பிரதமராயிருந்தபோது டிஸ்ரேலி தமது தாராள முன்னேற்றக் கருத்துக்களையெல்லாம் செயலாக்குவதில் முனைந்தார். அப்போது அவருக்கு உறுதுணையாயிருந்தவர் ரிச்சர்ட் கிராஸ் (Richard Cross) என்ற உள்நாட்டமைச்சராவார். மக்களின் நலன்கருதி சுமார் பதினைந்து சட்டங்களை அவர் இயற்றினார்.

டிஸ்ரேலியின் சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

சமுதாயத்தைப் பற்றி டிஸ்ரேலி கொண்டிருந்த கருத்துகள் விசித்திரமானவை; ஆனால், உன்னதமானவை. சமுதாயத்தை அவர் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிற ஒரு உயிருள்ள ஜீவனாகக் (Organism) கருதினார். எனவே, பழைய பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் முதலியவைகளைப் பொன்னே போல் போற்றினார். அதே சமயத்தில் புதிய சீர்திருத்தங்கள் சமுதாயத்தில் ஏற்படுவதையும் வரவேற்றார். அப்படி ஏற்படுவதொன்றே வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு அறிகுறி என எண்ணினார். பழமை என்னும் அடிப்படை அப்படியே இருக்க, அதன்மேல் புதுமை என்னும் கட்டடம் பொலிவுற அமைக்கப்பட வேண்டுமென விரும்பினர். மேலும் சமுதாயத்தில் வாழும் பல்வேறு வகுப்பினரும், ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டு சச்சரவிடலாகாதென்றும், செல்வர்களான முதலாளிகள் தொழிலாளர்களோடு நட்புடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறிவந்தார். சமூகத்தில் உள்ள சிறந்த மனிதர்களே அச் சமூகத்தின் தலைவர்களாக இருக்கவேண்டுமென்றும், தலைவர்களாக இருப்பவர்கள் அரசாங்கத்தின் வலிமையைத் துணைகொண்டு, ஏனைய வகுப்பினர் யாவரது நலன்களையும் பேணும் சட்டங்களை ஆக்கவேண்டு

மெனவும் கூறுவர். இங்ஙனம், ஒருவருக்கொருவர் நன்மை செய்துகொண்டு வாழ்வதன் மூலமே சமுதாயத்தில் இருக்கும் பல் வேறு பிரிவினரும் ஒற்றுமையுடனும், அமைதியுடனும் வாழ முடியுமென்பது அவரதுநம்பிக்கை. இக் கருத்துக்களை அடிப் படையாகக்கொண்டே அவரது அமைச்சரவைக் காலத்தே ரிச்சர்ட் கிராஸ் என்பவர் நல்ல பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொணர்ந்தார். அவரது சீர்திருத்தச் சட்டங்கள் பல நூதனத் தன்மை பொருந்தியவை. அவை மக்கள்மீது கட்டாயமாகத் திணிக்கப்படவில்லை. உள்நாட்டுத் தல அரசாங்கங்கள் அவற்றை வேண்டுமானால் நடைமுறையில் புகுத்தலாம். விருப்பமில்லா விடில், அவை அவற்றை அப்படியே ஏற்காமல் விட்டுவிடலாம். இத்தகு முறையினால் சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு ஏற்பட வழியில்லாமல் போய்விட்டது. பிரியமான இடங்கள் அவைகளை அமல் நடத்தின. அவற்றால் அங்கெல்லாம் நன்மை ஏற்பட்டதால் அதைக் கண்டு மற்ற இடங்களும் அவைகளை ஏற்று அமல் நடத்த முன்வந்தன.

தொழிலாளர் நலச் சட்டங்கள்

இங்ஙனம், அவரது காலத்து ஏற்பட்ட சட்டங்களுள் தொழி லாளர் குடியிருப்புகள் சட்டம் (Artisans Dwelling Act, 1875) மிக முக்கியமானது. இச் சட்டமானது, தொழிலாளர்கள் வாழ்ந்து வந்த சுகாதார வசதி சிறிதுமற்ற முடைச்சேரிகளை (Slums) விலைக்கு வாங்கி, அவற்றை ஒழித்துவிட்டுச் சுகாதார வசதி யுள்ள புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் அதிகாரத்தைத் தல அதிகாரிகளுக்கு நல்கியது. அப்படிக் கட்டப்பட்ட வீடுகளை நியாயமான குடிக்கூலிக்குத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவும் அவர்கள் அதிகாரம் பெற்ற னர். மற்றும் பொதுச் சுகாதாரச் சட்டம் (Public Health Act, 1875) என்னும் சட்டமொன்று ஆக்கப்பட்டது. அதன்படித் தல அதிகாரிகள் ஆங்காங்கே தக்க மருத்துவர்களை நியமித்து மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்படி வற்புறுத்தப்பட்ட னர். மேலும், கழிவு நீர் அகற்றல், குடிநீர் வசதி அளித்தல், தொத்து நோய்களைத் தடுத்தல் போன்ற பல சுகாதார சேவை களைச் செய்யும்படியும் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். இச் சட்டங்கள் காரணமாக அழுக்கும் நாற்றமும் நிறைந்த பல நகரங் கள் அழகான பட்டணங்களாக மாறின. இச் சேவையில் செல்வர்களான தல அதிகாரிகள் காட்டிய ஊக்கம் சொல்லத் தரமன்று. அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லக் கூடியவர் பர்மிங்ஹாம் நகர மேயராக இருந்த ஜோசப் சேம்பர்லின் என்பவர்.

குப்பையும் கூளமும் நிறைந்து, பார்ப்பதற்கே அருவருப்பாயும், குடியிருப்பதற்குச் சற்றும் தகுதியற்றதாயும் விளங்கிய பர்மிங் ஹாம் நகரை, எல்லாச் சுகாதார வசதிகளும் நிறைந்த அழகிய நன்னகரமாக்கிய பெருமை அவருடையதாகும். தனிப்பட்ட தொழிலாளர்களின் நலனைப் பேணியதேபோல், டிஸ்ரேலி தொழிலாளர் சங்கங்களின் உரிமைகளையும் வளர்த்தார். அவர் காலத்து ஏற்பட்ட சதிச் சட்டமும் உடமைக் காப்புச் சட்டமும் (**Conspiracy and Protection of Property Act, 1875**), முதலாளிகள் தொளிலாளர்கள் சட்டமும் (**Employers and Workmen Act, 1875**), தொழிற்சங்கச் சட்டமும் (**Trade Union Act, 1876**) தொழிற்சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை. தொழிற்சங்கங்களுக்கு அவை ஒரு பேருரிமைப்பட்டயமாக (**Magna Carta of Trade Unionism**) விளங்கின என்றால் அது மிகையாகாது. ஏனெனில், அதுவரை ஒருவகையான சதிக் கும்பல்களைப்போல் மதிக்கப்பட்டுவந்த தொழிற்சங்கங்களை மேற்கண்ட சட்டங்கள் சட்டரீதியான சங்கங்களாக ஏற்றுக்கொண்டன. இரண்டுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து சங்கம் அமைத்துக் கொள்வதும், அச் சங்கங்கள் மூலம் தொழிலாளர்கள் முதலாளிகளிடையே இருந்துவரும் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதும் சதித்திட்டங்கள் அல்ல என்றும், அவை முற்றிலும் சட்டரீதியானவையே என்றும் அவைகள் கூறின. மேலும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளச் செய்யும் அமைதியான மறியல் (**Picketing**) போன்ற நடவடிக்கைகளையும் அவை சட்டரீதியானவையென ஒப்புக் கொண்டன.

1877ஆம் ஆண்டில் ஏற்பட்ட தொழிற்சாலை தொழிற் கூடங்கள் சட்டம் (**Factory and Workshops Act**), தொழிலகங்களில் வேலை பார்த்துவந்த பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நலன்களைப் பேணியது. 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கண்டிப்பாகத் தொழில்கள் எதிலும் ஈடுபடுத்தக்கூடாதென அச் சட்டம் கூறியது. ஏனைய சிறுவர்கள் பாதி நேரம் மட்டுமே வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர். பெண்டிர்களின் நேரம் குறைக்கப்பட்டது. நெசவுத் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் பெண்கள் வாரத்துக்கு 56½ மணிகளுக்கு மேலும், ஏனைய தொழிற்சாலைகளில் அவர்கள் வாரத்துக்கு 60 மணிகளுக்கு மேலும் தொழில் செய்யக்கூடாது எனவும் அச் சட்டம் கூறியது. தொழிற்சாலையைக் கண்காணிப்பவர்கள் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டனர். பழைய தொழிற்சாலைச் சட்டங்கள் அனைத்தையும் சீர்திருத்தி ஒன்றாகப் பிணைத்த பெருமை 1877ஆம் ஆண்டுச் சட்டத்துக்கே உரியதாகும்.

விவசாயத்துறைச் சீர்திருத்தச் சட்டங்கள்

விவசாய முன்னேற்றத்திலும் டிஸ்ரேலி அமைச்சரவை பெரிதும் ஊக்கம் காட்டியது. விவசாயம் வளரவேண்டுமானால் நாட்டிலுள்ள நிலபுலங்களை விற்பதிலும் வாங்குவதிலுமுள்ள தேவையற்ற தடைகள் நீங்கவேண்டும். நிலத்தில் போட்ட முதலுக்கு அழிவில்லை என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு ஏற்பட வேண்டும். இந்த நிலைமையை ஏற்படுத்தவே, 'நிர்ணயிக்கப்பட்ட நிலபுலங்களின் குத்தகை, விற்பனைச் சட்டம்' (Leases and Sales of Settled Estates Act) ஒன்று 1875இல் கெய்ர்ன் (Cairn) என்பவரால் கொண்டுவரப்பட்டது. நிலபுலங்களை எளிதில் விற்கவும், குத்தகைக்கு விடவும் அச் சட்டம் துணைபுரிந்தது. மேலும், ஒவ்வொருவருடைய நில உரிமையும் ஆவணப்பதிவு பெறல் (Registered) வேண்டுமெனவும் அது கூறியது. அச் சட்டத்தை விருப்பமுள்ள வட்டாரங்கள் மட்டும் அமல் நடத்தினால் போதுமெனக் கூறப்பட்டதாலும், குடும்ப வழக்கறிஞர்கள் எதிர்த்ததாலும், இதனால் விரிவான பலன் ஏதும் விளையவில்லை. ஆனால், 1882ஆம் ஆண்டில் நிறைவேறிய 'நிர்ணயமான நிலச் சட்டம்' (Settled Land Act) என்பது நில விற்பனைகளை மேலும் எளிதாக்கியது. 1875இல் ரிச்மன்ட் கோமகனால் கொணரப்பட்ட 'விவசாய நிலவுடைமைச் சட்ட'மானது (Agricultural Holdings Act) குடியானவர்கள் நிலத்தில் போட்ட முதலுக்குப் பாதுகாப்பு அளித்தது. இந்தச் சட்டமும் கட்டாயமாக நாட்டில் திணிக்கப் படவில்லை. விருப்பமுள்ளவர்கள் அதை அமல் நடத்தினர். நிலத்தை வளப்படுத்த ஒரு குடியானவன் செய்த செலவுகளையும் அதை வாங்குபவன் தரவேண்டுமென்று கூறி அச் சட்டம் 1883 ஆம் ஆண்டில் கட்டாயமாக்கப்பட்டது. 'பொது நிலங்களின் வேலியிடல் சட்ட'மானது (Enclosure of Commons Act) பெரு நிலப்பிரபுக்கள் பொதுநிலங்களைத் தங்களுடைய நிலங்களோடு சேர்த்துக்கொள்வதைத் தடுத்தது. 'மக்களுக்கு வேண்டியது உணவு மட்டுமல்ல, நல்ல காற்றும் அவர்களுக்குத் தேவை' என்று கிராஸ் என்னும் அமைச்சர் கூறி, மேற்சொன்ன சட்டத்தைக் கொணர்ந்தார். பொதுமக்கள் ஓய்வு நாட்களைக் கழிக்கவும், விளையாடவும் பல இடங்கள் இச் சட்டத்தால் ஏற்பட்டன. லண்டனுக்கருகே இருந்த எப்பிங் காடு (Epping Forest) விளையாட்டு நிலமாக மாறியது இதற்கொரு சான்றாகும். குடியானவர்களின் சொத்துகளில் ஒன்றான ஆடு மாடுகளைக் காக்கப் பிராணிகளின் தொத்து நோய்ச் சட்டமொன்றும் [Contagious Diseases (animals) Act] 1878ஆம் ஆண்டில் ஏற்பட்டது. தொத்து நோய்கள் பரவியுள்ள நாடுகளிலிருந்து இங்கி

லாந்துக்குள் இறக்குமதியான கால்நடைகளனைத்தையும், அவை நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டவுடன் கொன்றுவிட வேண்டும் என அச் சட்டம் கூறியது. அதனால், குடியானவர்களின் கால் நடைகள் தொத்து நோய்களினின்றும் காக்கப்பட்டன.

நட்புரிமைக் கழகங்கள் சட்டம் (Friendly Societies Act)—*1875*

நாட்டிலிருந்த நட்புரிமைக் கழகங்களில் ஊழல்கள் பல மலிந்து கிடந்தன. அதை நடத்தியவர்கள் பொதுப்பணத்தைச் சொந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்திவந்தனர். இவ்வூழல்களை நிறுத்தி, அவை செவ்வனே நடைபெறச் செய்யவே மேற்கண்ட சட்டம், சர் ஸ்டிராஃபோர்ட் நார்த்கோட் (Sir Strafford Northcote) என்பவரால் கொண்டுவரப்பட்டது. நாட்டிலுள்ள கழகங்கள் தங்களை ஆவணங்களில் பதிவு செய்துகொள்ளல் வேண்டுமென அச் சட்டம் கூறியது. ஆனால், பதிவு செய்வதை அச் சட்டம் கட்டாயமாக்கவில்லை. கழகங்களுக்கு வரவு செலவு அட்டவணைகளை வழங்கவும், அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வசதி செய்து தரவும், அரசாங்கம் முன்வந்தது. பொதுவில் கழகங்கள் தங்களைத் தாங்களே திருத்திக்கொண்டு முன்னேற மேற் சொன்ன சட்டம் பெரிதும் துணை புரிந்தது எனலாம்.

வியாபாரக் கப்பல் ஏற்றச் சட்டம் (Merchant Shipping Act)—*1876*

கடல் வாணிகத்தில் ஈடுபட்ட சிலர் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டனர். கப்பல் மூழ்கினால் காப்புறுதிப் பணம் எப்படியும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில், பலர் நைந்து போன கப்பல்களில் அளவுக்குமீறிய பண்டங்களை ஏற்றிச் சென்றுவந்தனர். அதனால், பல்லாயிரக் கணக்கில் கப்பல் தொழிலாளர்கள் கடலில் மூழ்கி மாள நேர்ந்தது. இப் புன்மையை அகற்றும்படி பிளிம்சால் (Plimsoll) என்னும் பெருந்தகை யொருவர் பாராளுமன்றத்தில் அடிக்கடி வாதாடி வந்தார். அவரது இடைவிடாத முயற்சியின் காரணமாகவே 'வியாபாரக் கப்பல் ஏற்றச் சட்டம்' ஏற்பட்டது. அதன்படி கப்பல் ஒவ்வொன் றும் எவ்வளவு சுமையைத் தாங்கும் என்பதைக் குறிக்கும் சுமைக் கோடுகளைக் (loadline) கப்பல் சொந்தக்காரர்கள் தங்கள் கப்பல் களின் வெளிச்சுவர்களில் வரைய வேண்டுமென வற்புறுத்தப் பட்டனர். நைந்துபோன கப்பல்கள் என தெரிந்தால், அவற்றைத் துறைமுகத்திலேயே நிறுத்தி வைக்கும் அதிகாரத்தை வாணிகக் குழுவுக்கு (Board of Trade) இச் சட்டம் வழங்கியது. ஒரு கப்ப லில் எவ்வளவு பண்டங்களை ஏற்றலாம் என்பதைக் குறிப்பிட அதன் பக்கத்தில் வரையப்பட்டுள்ள கோடு இப்போது பிளிம்சால் குறி (Plimsoll mark) எனப்படுகிறது.

இங்ஙனம் டிஸ்ரேலியின் அமைச்சரவை, தலையிடா கொள்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டுப் பல நல்ல சீர்திருத்தங்களை நாட்டில் புகுத்தியது. அரசாங்கம் அவற்றைக் கட்டாயப்படுத்தவில்லையென்றும், தனிப்பட்ட, வேரூன்றிய சுயநலமிகளுக்கு விரோதமாகப் போக அது தயங்கியதெனவும் சிலர் அதைக் குறை கூறுவர். எனினும், விக்குக் கட்சியைப்போல் சீர்திருத்தக் கொள்கை எதற்கும் கட்டுப்படாத டோரிக் கட்சியினர், அவ்வளவு தூரம் சீர்திருத்தப் பாதையில் முன்னேறியது உண்மையில் போற்றுதற்குரியதாகும். அக்காலச் சூழ்நிலையில் அவ்வளவு செய்ததே பெரிது என்பதில் ஐயமில்லை.

கடன் கழிவு நிதி (Sinking Fund)

ஸர் ஸ்டிரா∴போர்டு நார்த்கோட் என்னும் கருவூலத் தலைவர் பல நல்ல பொருளாதாரத் திட்டங்களை மேற்கொண்டார். முதலில் அவர் வருமான வரியைச் சிறிது குறைத்தார். பின்னர் வீடுகள்மீது விதிக்கப்பட்ட வரியையும், சர்க்கரை வரியையும் குறைத்தார். அஞ்சல் நிலைய பொருள் சேமிப்புப் பாங்கின் **(Post Office Savings Bank)** வரவு செலவுகளை அவர் ஒழுங்குபடுத்தினர். தல ஆட்சி நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகப் பணத்தை அவர் வழங்கினர். அதனால் பல உள் நாட்டு வரிகளை அத் தல அரசாங்கங்கள் கைவிட முடிந்தது. நார்த்கோட் தமது இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தில் ஏற்கெனவே இருந்ததோடு, புதியதொரு கடன் கழிவு நிதியையும் ஏற்படுத்தினர். அதன் மூலம் நாட்டுக் கடனின் வட்டியைக் கொடுப்பதோடு, அதன் முதலின் ஒரு பகுதியை ஆண்டுதோறும் செலுத்தவும் அவர் வழி செய்தார். எனினும், விரைவிலேயே நாட்டில் வியாபார மந்தமும் பணத் தட்டும் ஏற்பட்டன. குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட போர்களில் நிறையப் பணம் செலவாயிற்று. எனவே, நார்த்கோட் கடன் கழிவு நிதியிலிருந்து பணத்தை எடுத்து அச்செலவுகளைச் சமாளிக்க நேரிட்டது. வருமான வரி மேலும் உயர்த்தப்பட்டது. பொருளாதாரத் துறையைப் பொறுத்தமட்டில் டிஸ்ரேலியின் அமைச்சரவை பெரிதும் இக்கட்டான நிலையில் சிக்கித் தவித்ததென்றே கூறலாம்.

டிஸ்ரேலியின் வெளிநாட்டுக் கொள்கை

டிஸ்ரேலியின் உள்நாட்டுக் கொள்கையைவிட அவர் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கைகளின் சிறப்பே அவருக்கு என்றும் அழியாப் பெயரையும், புகழையும் இங்கிலாந்தில் ஏற்

படுத்தியது எனத் துணிந்து கூறலாம். அப்பழுக்கற்ற நாட்டுப் பற்று (Patriotism), பேரரசு மனப்பான்மை (Imperialism) என்ற இவ்விரு பண்புகள்தாம் அவரது வெளிநாட்டுக் கொள்கையெனும் கட்டடத்தைத் தாங்கி நின்ற இரு பெருந் தூண்களாக விளங்கின. அவரது பாராளுமன்றப் பேச்சுக்களிலெல்லாம் இவ்விரு கொள்கைகளே ஊடுருவி நிற்பதைப் பார்க்கின்றோம். டிஸ்ரேலி ஒரு யூதரே எனினும், ஓர் ஆங்கிலேயனுக்கு இருந்ததைவிட அதிகமான நாட்டுப்பற்று அவர்பால் காணப்பட்டது. இங்கிலாந்தின் நிறுவனங்களின் பெருமையை அவர் நன்கு உணர்ந்தவர். தன்னாட்டின் பெருமையை வெளிநாடுகளில் நிலைநாட்ட அவர் ஓயாது பாடுபட்டார். அதோடு அன்றைய ஆங்கிலேயர் பலருக்குத் தென்படாத ஒரு காட்சியும் அவர் உள்ளத்தே தெள்ளிதின் புலப்பட்டது. கற்பனை வளம் நிறைந்த அவரது மனத்தே பரந்து விரிந்த ஒரு பிரிட்டிஷ் பேரரசு காட்சியளித்தது. பிரிட்டனின் சீரும் சிறப்பும் அப் பேரரசின் வலிமையைப் பொறுத்தே அமையும் என்பதையும் அவர் உணர்ந்தார்.

சூயஸ் கால்வாய்ப் பங்குகளை வாங்கல்

பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சியை முன்னிட்டு அவர் துணிந்து செய்த காரியங்கள் பல. அவற்றுள் மிகவும் துணிச்சலானதெனக் கருதப்படுவது எகிப்திய கெடிவ் இஸ்மெயில் பாஷாவுக்குச் சொந்தமாயிருந்த சூயஸ் கால்வாய்ப் பங்குகளைப் பாராளுமன்றத்தைக் கேளாமலே அவர் வாங்கிவிட்டதாகும். கொஞ்சம் அவர் ஏமாந்திருந்தால் ஃபிரெஞ்சுக்காரர்கள் அப் பங்குகளைத் தட்டிக் கொண்டு போயிருப்பர். அவைகளின் பொருளாதார, அரசியல் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த டிஸ்ரேலி பாராளுமன்றத்தின் ஆதரவுக்காகக் காத்திராமல் ராட்ச்சில்டுகள் என்ற செல்வக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெற்று அவற்றை வாங்கினார். நாளடைவில் அது எவ்வளவு இலாபகரமானது என்பதைப் பிரிட்டிஷ் மக்கள் உணர்ந்தனர். ஆனால், அக்காலத்தே குறுகிய நோக்குடைய சில அரசியல்வாதிகள் அவரது செய்கையைக் கண்டித்தனர். டிஸ்ரேலிக்கோ, சூயஸ் கால்வாய், அவர் மனத்தே தென்பட்ட கீழை நாட்டுப் பேரரசை இணைக்கின்ற ஒரு சங்கிலி எனத் தோன்றியது. தமது செய்கையால் அச் சங்கிலியின் வழி இங்கிலாந்து ஆதிக்கம் பெற்றது எனவும் அவர் உணர்ந்தார். அது முற்றிலும் உண்மை என்பதைப் பிற்கால வரலாறு நன்கு புலப்படுத்தியது. இந்தியா போன்ற கீழை நாடுகளோடு தொடர்பு கொள்ளவும், அவற்றைப் பாதுகாக்கவும், எகிப்தில் ஃபிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் வளரா

மல் தடுக்கவும் அவரது செய்கை பெரிதும் பயன்பட்டது. எகிப்திய கெடீவ், கடன் என்னும் சகதியில் சிக்கி வெளிவர இயலாது திகைத்தார். பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய இரு நாடுகளுக்கும் கொடுக்க வேண்டிய கடனைத் திருப்பித்தரவியலாத பரிதாப நிலையை அடைந்துவிட்டார். இதைக்கண்ட டிஸ்ரேலி, பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் கடன் தீரும்வரை எகிப்தின் வருமானத்தை வசூலித்துக்கொள்ளும் உரிமையைப் பெறவேண்டுமெனக் கூறினர். கெடீவ் அதற்கு முடிவில் இணங்கினர். டிஸ்ரேலியின் இச் செய்கையால், முதலில் பிரிட்டனும், ஃபிரான்சும் சேர்ந்து எகிப்தில் ஆதிக்கம் பெறவும், இறுதியில் பிரிட்டனின் தனியாதிக்கம் அங்கு ஏற்படவும் வழி பிறந்தது.

விக்டோரியாவுக்குப் பேரரசிப் பட்டம் வழங்கல்

இந்தியப் பெருங்கலகத்தால் பெரிதும் தளர்ந்துபோன இந்தியப் பிரிட்டிஷ் உறவு முறையைப் பலப்படுத்த டிஸ்ரேலி ஒரு நல்ல உபாயத்தைக் கையாண்டார். 'மன்னுயிர்த்தே மலர்தலையுலகம்' என்ற நம்பிக்கையில் ஊறியவர்களும், கோனாட்சி முறைக்கு நன்கு பழக்கப்பட்டவர்களுமான இந்தியர்கள், மக்களின் இறைமையைப் பிரதிபலிக்கும் பாராளுமன்றத்தைவிட ஒரு பாராளும் மன்னனை அல்லது அரசியைப் பெரிதும் விசுவாசிப்பர் என்பதை அவர் நன்கு உணர்ந்துகொண்டார். எனவே, 1874ஆம் ஆண்டில், அவர் வேல்ஸ் இளவரசரை இந்தியாவுக்கு அனுப்பி, அதன் பல பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்யும்படி செய்தார். இளவரசரின் பயணத்தை நாட்டுப்பற்று மிகுந்த தலைவர்கள் எதிர்த்தனரேனும், படிக்காத பாமர மக்கள் தங்களை ஆள்பவர் யார் என்பதை உணர்ந்து விசுவாசம் காட்ட அது பெரிதும் உதவியது. 1876ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் தேதியன்று வேல்ஸ் இளவரசர் கல்கத்தாவில் ஒரு பெருந் தர்பாரை நடத்தியது இந்தியரின் ராஜவிசுவாசத்தை மேலும் அதிகரித்தது. 1876ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 8-ந் தேதியன்று, டிஸ்ரேலி பாராளுமன்றத்தைத் துவக்கிவைத்தபோது நிகழ்த்திய பேருரையில், இராணியாருக்கு இந்தியப் பேரரசி என்ற பட்டத்தை வழங்க அரசாங்கம் விரும்புவதாகத் தெரிவித்தார். அன்றைய கூட்டத்தில் வீற்றிருந்த இராணியார் அவரது உரையைக் கேட்டு இறும்பூதெய்தினர். ஆனல், பாராளுமன்றத்தில் அவரது கருத்துக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. பிரிட்டிஷாரின் ஆட்சியை இந்தியர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானல், அவர்களது கற்பனைக் கெட்டாததும், கண்ணிற்குப் புலனாகாததுமான பிரிட்டிஷ் நிறுவனங்களை அவர்கள் முன்

வைத்துப் பயனில்லை யென்றும், அவர்கள் கண்ணுல் கண்டு போற்றக்கூடிய ஒரு பேரரசியை அவர்கள் முன் வைப்பதாலேயே பிரிட்டிஷ் ஆட்சிக்கு அவர்களது முழு விசுவாசத்தையும் பெற முடியு மென்றும் டிஸ்ரேலி தம்மை எதிர்த்தவர்களுக்கு எடுத்துக் காட்டினர். இறுதியில் அவரது வாதம் வென்றது. பாராளு மன்றம் ஒத்திவைக்கப் படுவதற்குள்ளாகவே 'இந்தியப் பேரரசி யவர்களே' என்று விக்டோரியா இராணியாரை விளித்து, அவரது பாராட்டுதலையும், முழு அபிமானத்தையும் பெறுகின்ற வாய்ப்பை டிஸ்ரேலி பெற்றார். இச் சமயத்தில் இந்தியாவில் ராஜப்பிரதிநிதியாக இருந்த நார்த்ப்ருக் பிரபு, இந்திய அமைச்ச ரான சாலிஸ்பரி பிரபுவோடு சச்சரவிட்டுக்கொண்டு தம் பதவியை ராஜிஞமா செய்தார். இந் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு டிஸ்ரேலி தமக்குப் பிடித்தமான லிட்டன் பிரபுவை இந்திய ராஜப் பிரதிநிதியாக்கினர். லிட்டன் பிரபு இந்தியா சேர்ந்ததும், தமது முதல் வேலையாக டில்லியில் பெருந் தர்பார் ஒன்றைக் கூட்டி, விக் டோரியா இராணியாரை இந்தியப் பேரரசி என்று அறிவித்தார். அறுபத்து மூன்று இந்தியச் சிற்றரசர்கள் தர்பாருக்கு வந்து தங்கள் மரியாதைகளைச் செலுத்தினர்.

கீழைச் சிக்கல்—கண்ணியத்துடன் சமாதானம் (Peace with honour)

இந்தியப் பேரரசைக் காக்கவேண்டுமென்ற கவலை, டிஸ்ரேலி யின் கீழைச் சிக்கல் பற்றிய கொள்கைகளைப் பெரிதும் பாதித்தது. ரஷ்யா, துருக்கியப் பேரரசில் காலூன்றிவிட்டால், அது இந்தியப் பேரரசுக்கு ஆபத்து என்பதை அவர் உணர்ந்தார். அதனுலேயே பால்கன் நாடுகளில் ரஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சியைத் தடுக்க வேண்டுமென அரும்பாடுபட்டார். பாரிஸ் சமாதானத்துக்கு விரோதமாகத் துருக்கி, தனக்குட்பட்டிருந்த கிறித்துவர்களைக் கொடுமைப்படுத்தியதால் மக்கள் புரட்சிகள் பாஸ்னியாவிலும் ஹெர்சகோவினவிலும் ஏற்பட்டபோது அதில் ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய ஐரோப்பிய நாடுகளே முதலில் தலை யிட்டன. 1876இல் அந் நாடுகள் ஆண்ட்ரசிக் குறிப்பு (Andrassy Note), பெர்லின் நினைவுக் குறிப்பு (Berlin Memorandum) என்ற குறிப்புகளை அனுப்பிப் புரட்சி ஏற்பட்ட நாடுகளில் சமயப் பொறைமையையும், சீர்திருத்தங்களையும் ஏற்படுத்தும்படித் துருக்கி யை வற்புறுத்தின. சிக்கலைத் தீர்க்கப் போரை இரு மாதங்களுக் குத் தாற்காலிகமாக நிறுத்தும்படி அவை துருக்கிக்கு ஆணை யிட்டன. தனிப்பட்ட முறையில், பிரிட்டனைக் கலக்காமல் இவ் விதம் ஐரோப்பிய வல்லரசுகள் நடந்துகொண்டதை டிஸ்ரேலி கண்டித்தார். பெர்லின் நினைவுக் குறிப்புக்கும், பிரிட்டனுக்கும் ஏதும் சம்பந்தமில்லை என அவர் அறிவித்தார். பிரிட்டனை

அலட்சியம் செய்த வல்லரசுகளுக்கு அவர் தக்க பாடம் கற்பித்தாரென்றே கூறலாம். ஆனால், அவரது நடவடிக்கையால் துருக்கி, தனக்குப் பிரிட்டனில் உதவி கிடைக்குமெனத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டது. அந் நம்பிக்கையாலேயே அது பல்கேரியாவில் நடைபெற்ற கலகத்தை அடக்குவதில் மிக மிருகத்தனமாக நடந்துகொண்டது. அதைக் கண்டதும் டெர்பி பிரபு, கிளாட்ஸ் டன் போன்றவர்கள் துருக்கியைக் கண்டிக்க முற்பட்டனர். பின்னர், செர்வியா, மாண்டி நீக்ரோ பகுதிகளில் கலகம் பரவிய போது டெர்பி பிரபு கலகம் நடைபெற்ற பகுதிகளில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துவதாக ஒப்புக்கொள்ளும்படியும், வல்லரசுகள் அதைக் கண்காணிப்பதை ஏற்றுக்கொள்ளும்படியும் துருக்கியைக் கேட்டுக்கொண்டார். சிக்கலைத் தீர்க்க அவர் வேறு சில நிபந்தனைகளையும் போட்டார். அவற்றை வல்லரசுகள், கான்ஸ்டான்டிநோபிள் மாநாட்டில் ஏற்றுக்கொண்டன. சீர்திருத்தங்கள் ஏற்படுத்த ஒப்புக்கொண்ட துருக்கி, அவற்றை வல்லரசுகள் மேற்பார்வையிட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள மறுத்தது. எனவேதான், ரஷ்யா துருக்கியின்மீது படையெடுத்தது. இங்கிலாந்து என்ன செய்வதெனத் தெரியாமல் இச் சமயம் வாளாவிருந்தது. இறுதியில் ரஷ்யா வெற்றி பெற்று ஸான் ஸ்டீபானோ (San Stefano) உடன்பாட்டைத் துருக்கியோடு செய்துகொண்ட போதுதான் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் விழித்துக்கொண்டனர். டிஸ்ரேலி பிரிட்டனின் ரிசர்வ் படைகளை அனுப்பி, சிரியாவிலுள்ள ஒரு துறைமுகத்தைக் கைப்பற்றும்படி செய்தார். இந்தியாவுக்குச் செல்லும் வழியினை ரஷ்யாவினின்றும் காக்கவே தாம் அவ்வாறு செய்ததாக டிஸ்ரேலி கூறினார். போரை விரும்பாத டெர்பி பிரபு, டிஸ்ரேலியின் இச் செய்கை காரணமாகத் தமது வெளிநாட்டமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். அவருக்குப்பின் அப் பதவியை ஏற்ற சாலிஸ்பரி பிரபு ஐரோப்பியக் காங்கிரஸ் மூலம் கீழைச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தினார். இச் சமயத்தில் 7,000 இந்திய வீரர்களை டிஸ்ரேலி மால்டாவுக்குத் தற்காப்புக்காக அனுப்பிவைத்தார். பாராளுமன்றத்தின் அனுமதியின்றியே அவர் அங்ஙனம் செய்தார். படைக்கலகச் சட்டத்துக்கு விரோதமாக அவர் அதிகப்படியான வீரர்களை ஐரோப்பாவுக்கு அனுப்பிவிட்டாரென்ற குறையும் கூறப்பட்டது. இந்திய வருமானத்திலிருந்து செலவு செய்து இந்திய வீரர்களை ஐரோப்பிய இராணுவ நடவடிக்கைகளிலீடுபடச் செய்யப் பாராளுமன்றத்தின் ஒப்புதல் வேண்டுமெனப் பலர் வாதித்தனர். ஆனால், இந்திய இராணுவம் பிரிட்டிஷ் அரசுக்கு (Crown) உட்பட்டதென்றும், அவ்வரசால் தமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியே தாம் மால்டாவுக்குத் துருப்புகளை

அனுப்பியதாகவும் டிஸ்ரேலி வாதித்தார். அதன்பின் கீழைச் சிக்கலை ஐரோப்பிய வல்லரசுகள் யாவும் சேர்ந்தே தீர்க்க வேண்டுமென்று டிஸ்ரேலி அறிவித்ததும், அதன் விளைவாகப் பெர்லின் மாநாடு நடைபெற்றதும், பல்கேரியா துண்டாடப்பட்டதும் நாம் பின்வரும் அத்தியாயமொன்றில் காண்போம் (அத்தியாயம் 14). பெர்லின் மாநாட்டில் 'கண்ணியத்துடன் சமாதானத்தைத்' தாம் பெற்று வந்ததாக டிஸ்ரேலி தம்மைத் தாமே வியந்து கொண்டார். சமாதானத்தைப் பெற்ருர் என்பது உண்மைதான். ஆனல், இங்கிலாந்தின் கண்ணியத்தைக் காப்பாற்றிஞரா என்பது ஐயப்பாட்டிற்குரியது. சுயநலத்தின் காரணமாகவே பிரிட்டன் கீழைச் சிக்கலில் தலையிட்டது என்றும், இறைமை பெற்ற தனி நாடுகளின் சுதந்திரங்களில் தலையிட்டது பிரிட்டனின் பெருமைக்கு இழுக்கு என்றும் பலர் கூறலாயினர். துருக்கியையும், அதில் வாழ்ந்த கிறித்துவர்களையும் காக்கும் தேவையற்ற பொறுப்பைப் பிரிட்டன் ஏற்றுக் கொண்டதைக் கிளாட்ஸ்டன் போன்ருேர் கண்டித்தனர். எனினும், ரஷ்யாவின் ஆதிக்கம் பால்கன் நாடுகளில் பரவாமலிருக்க டிஸ்ரேலி உதவி செய்தார் என்பதை யாரும் மறுக்கவியலாது. கீழைச் சிக்கலில் கலந்து கொண்டதில் டிஸ்ரேலி தவறு செய்தாரெனக் கூறலாம். பெர்லின் நினைவுக் குறிப்பை ஏற்றுக்கொள்ளாததே அத்தவருகும். ஐரோப்பிய வல்லரசுகள் தீர்மானித்த அக் குறிப்பைப் பிரிட்டனும் ஏற்றுக்கொண்டிருக்குமானல் துருச்கி பயந்து போரை நிறுத்தியிருக்கும். ரஷ்யா தனிப்பட்ட முறையில் கீழைச்சிக்கலில் தலையிட நேர்ந்திராது. ஆனல், எல்லாம் நடந்த பின்னராவது டிஸ்ரேலி விழித்துக்கொண்டு ரஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சியைத் தடுக்க ஏற்பாடு செய்தது போற்றுதற்குரியதாகும் என்பதில் ஐயமில்லை.

ஆப்கானியப் போர்

ரஷ்யாவின் ஆதிக்கம் கீழைநாடுகளில் எங்குப் பரவிவிடுமோ எனப் பயந்த காரணத்தால், டிஸ்ரேலி, லிட்டன் பிரபுவை ஏவி ஆப்கானிஸ்தானத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயலும்படி செய்தார். லிட்டன் பிரபு, ஆப்கன் அமீரை வற்புறுத்தி ஒரு பிரிட்டிஷ் பிரதிநிதியைத் தம் தலைநகரில் ஏற்றுக் கொள்ளும்படி செய்தார். அமீர் தமது வெளிநாட்டுக் கொள்கைகளைப் பிரிட்டிஷ் அதிகாரியின் ஆலோசனைகளுக்கேற்பவே நிர்ணயிக்க வேண்டுமென அவர் வற்புறுத்திஞர். ஆனல், பிரிட்டிஷ் அதிகாரியும், அவரது சகாக்களும் காபூலில் நடைபெற்ற ஒரு கலகத்தில் கொல்லப்பட்டனர். இதனல் வெகுண்ட லிட்டன் பிரபு, ராபர்ட்ஸ் என்னும் தளகர்த்தரை அனுப்பி, ஆப்கானியரை வென்று பழி தீர்த்துக்கொண்டார். எனினும்,

ஒரு நிலப்படையின் உதவியின்றி ஆப்கானியரை அடக்கி வைப்பது முடியாத காரியமென்பதை அவர் உணர்ந்தார். இந்திய அரசாங்கம், படையை வைத்துப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முடியாத நிலையிலிருந்தது. எனவே, பிரிட்டிஷார் ஆப்கானிய அமீரோடு நட்புடன்படிக்கையைச் செய்துகொண்டனர். ரஷ்யா, இந்தியா மீது படையெடுக்கா வண்ணம் பாதுகாக்கின்ற இடைத்தடை நாடாக (Buffer State) ஆப்கானிஸ்தானம் விளங்கட்டும் என்ற கொள்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

தென் ஆப்பிரிக்கா

ஆப்கானிஸ்தானத்திலன்றித் தென் ஆப்பிரிக்காவிலும் டிஸ்ரேலி காலத்தில் தொல்லை மூண்டது. 1852-54ஆம் ஆண்டுகளில் சுயேச்சைபெற்ற போயர் குடியரசுகளான டிரான்ஸ்வால், ஆரஞ்சுக் குடியரசுநாடுகள் ஜூலு என்ற சுதேச மக்களின் தாக்குதல்களுக்குட்பட்டுத் தவித்தன. சிடவாயோ (Cetewayo) என்ற வலிமை மிக்க ஜூலு தலைவனுக்கும் போயர்களுக்கும் கடும்பகை ஏற்பட்டது. லாபெங்குலா (Lobengula) என்ற மெடாபாலிக் கூட்டத்தினரின் தலைவனும், செகுகுன்னி (Sekukunni) என்ற இன்னொரு தலைவனும் போயர்களை எதிர்த்தனர். போயர்களிடம் அச்சமயம் படை பலமோ, பொருள் வளமோ சிறிதுமில்லை. எனவே, சுதேசிகளால் பூண்டோடு ஒழிக்கப்படும் அபாயமான நிலையில் அவர்கள் அப்போதிருந்தனர். போயர்களின் நாடுகள் வீழ்ச்சியுற்றால், அடுத்தாற்போல் ஜூலுக்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டைப் படையெடுக்கக் கூடிய அபாயம் இருந்தது. அவ்வமயம் பிரிட்டனில் குடியேற்ற நாட்டமைச்சராயிருந்த கார்னர்வான் பிரபு உயர்ந்த இலட்சியங்களை யுடையவர். போயர் குடியரசு நாடுகளையும், கேப் குடியேற்ற நாட்டையும் இணைத்து ஒரு கூட்டரசை ஏற்படுத்த அவர் விரும்பினார். தமது கனவை நனவாக்க அவர் சர் பார்ட்லி ஃபிரெரி (Sir Bartle Frere) என்னும் அறிஞரைக் கேப் மாகாணக் கவர்னராக அனுப்பினார். அவர் அனுப்பப்பட்ட ஒரு மாதத்துக்குள் டிஸ்ரேலி தியோபிலியஸ் ஷெப்ஸ்டோன் என்னும் நேட்டால் அமைச்சரைத் தென் ஆப்பிரிக்காவின் சிறப்பு உயர் ஆணையாளராக (Special High Commissioner) அனுப்பி, நேட்டாலுக்கருகே நடைபெற்ற கலகங்களை ஆராய்ந்து அதற்கு ஒரு முடிவு காணுமாறு கூறினார். மூன்றுமாத ஆராய்ச்சிக்குப்பின் சுதேச மக்களின் கலகம் நடைபெற்ற டிரான்ஸ்வால் நாட்டைப் பிரிட்டிஷ் குடியேற்ற நாடெனக் கேப் மாகாணத்தோடு சேர்த்து விடுவதே நல்லதென்று ஷெப்ஸ்டோன் அறிவித்தார். அவரது சிபார்சையொட்டி 1877இல்

டிரான்ஸ்வால் பிரதேசம் பிரிட்டிஷ் மகுடத்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. விரைவில் போயர்களுக்கு உள்நாட்டுச் சுயாட்சி அளிக்கப்பெறும் என்ற வாக்குறுதியையும் பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்தது. டிரான்ஸ்வால் பிரிட்டிஷ் பேரரசில் சேர்க்கப்பட்டதை யறிந்த ஜுலுக்கள் பிரிட்டிஷாரிடம் தங்களது வழக்குகளை எடுத்துரைத்து அவற்றைத் தீர்க்குமாறு கூறினர். ஜுலுக்களின் வேண்டுகோளைப் பிரிட்டிஷார் நிறைவேற்ற மறுத்ததால் இரு தரப்பாருக்கும் பலத்த போர் விளைந்தது. இசாண்டில்வானு (Isandhlwana) என்னுமிடத்தில் ஜுலுக்கள் பிரிட்டிஷ் படைகளை முறியடித்தனர். பிரிட்டிஷ் படையிலிருந்த 800 ஐரோப்பிய வீரரையும் 500 சுதேச வீரரையும் ஜுலுக்கள் ஒருவர் விடாமல் கொன்று வீழ்த்தினர். இத் தோல்வியின்பின் பிரிட்டிஷார் விழிப்புடன் போர் நடத்தலாயினர். டிரிப்ட் (Drift) என்னுமிடத்தை அவர்கள் 4000 ஜுலுக்களிடமிருந்து காத்தனர். அதனால் நேட்டால் மாகாணம் ஜுலுக்களிடம் சிக்காமல் தப்பியது. உலுண்டி (Ulundi) என்னுமிடத்தில் ஜுலுக்கள் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களின் தலைவனான சிட்வாயோ என்பானும் பிடிபட்டான். 1879இல் செகுகுன்னி என்னும் தலைவனும் சிறைப்பட்டான். இருவரும் கேப் மாகாணத்தில் சிறைவைக்கப்பட்டனர். எனினும், ஆரம்பத்தில் பிரிட்டிஷார் உற்ற தோல்விகளைக் கண்ட போயர்கள் ஆங்கிலேயரது வீரத்தை ஐயுற்றனர். அவர்களை எளிதில் வென்றுவிடலாமென அவர்கள் எண்ணினர். ஜுலுக்களது பயம் தீர்ந்தபின் போயர்கள் ஆங்கிலேயர்களை எதிர்க்கத் துணிவு பூண்டனர். ஷெப்ஸ்டோன் அளித்த வாக்குறுதிகள் நடைமுறையில் அமலாக்கப் படவில்லை. உள்நாட்டுச் சுயேச்சை கிடைக்காத காரணத்தால் போயர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கலகம் செய்தனர். அதற்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் கைமாறியது. பிரதமர் பீடத்துக்கு வந்த கிளாட்ஸ்டன், டிரான்ஸ்வால் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டின் பிரிக்க முடியாத பகுதி என அறிவித்தார். எனவே, போயர்களுக்கும், பிரிட்டிஷாருக்கும் போர் மூண்டது.

டிஸ்ரேலியின் அந்திய காலம்

ஜுலுப்போர், ஆப்கானியப் போர் இவைகளில் ஆங்கிலேயர் அடைந்த தோல்விகளாலும், அப்போர்களால் ஏற்பட்ட ஏராளமான செலவுகளாலும், அச்செலவுகளின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட பண வறட்சி, வியாபார மந்தம், விவசாய நலிவு போன்றவைகளாலும் பிரிட்டிஷ் மக்கள் டிஸ்ரேலியின்மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு கிளாட்ஸ்டன் தமது ஆவேசப் பேச்சுக்களால் நாட்டு மக்களின்

கருத்தைத் தம் கட்சியின்பால் ஈர்த்துக் கொண்டார். அரசியலி லிருந்து ஓய்வு பெறப்போவதாகக் கூறிக் கொண்டிருந்த அவர் திடீரெனத் தாம் மிட்லோதியன் என்னும் பிரதேசத்தின் பிரதிநிதி யாக நிற்கப்போவதாக அறிவித்தார். 1879ஆம் ஆண்டு இலை யுதிர்காலம் முழுமையும் அவர் அங்குச் சென்று தமது தேர்தல் பிரச்சாரத்தை நடத்தினார். பிரிட்டனின் தேர்தல் வரலாற்றிலேயே மிகப் புகழ் பெற்றது எனக் கருதப்படத்தக்க அவரது தேர்தல் பிரச்சாரத்தில் அவர், பீக்கன்ஸ்பீல்டு பிரபு அமைச்சரவையின் குறைகளையெல்லாம் மிகுந்த உணர்ச்சியுடன் அம்பலப்படுத்தினார். அதன் விளைவாக 1880இல் நடந்த பொதுத் தேர்தலில் தாராளக் கொள்கையினர் பெருவாரியான வாக்குகளைப் பெற்று அதிகாரத் தைக் கைப்பற்றினர். கிளாட்ஸ்டன் பிரதமரானார். பீக்கன்ஸ் பீல்டு பிரபு மனமுடைந்து 1881ஆம் ஆண்டு, ஏப்ரல், 19-ந் தேதி யன்று மாண்டார்.

டிஸ்ரேலி பற்றிய மதிப்பீடு

டிஸ்ரேலியும் கன்சர்வேடிவ் கட்சியும்

பழுத்த தேசபக்தரான டிஸ்ரேலி, நாட்டிற்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் பல அரிய தொண்டுகளைச் செய்துவிட்டுச் சென்றார். சர் ராபர்ட்பீலைத் தாக்குவதன்மூலம் அவர் முதலில் தமது வெற் றிக்கு அடிப்படையை அமைத்துக் கொண்டார். பீலின் வீழ்ச்சி யின் பின், டிஸ்ரேலியே கன்சர்வேடிவ் கட்சியின் ஒப்பற்ற தலைவ ராய் விளங்கினார். அக் கட்சியை அவர் வாயாரப் புகழ்ந்தார். அதில் உறுப்பினராயிருந்த செல்வமிக்க பிரபுக்களே நாட்டை யாளத் தகுதி படைத்தவர்கள் என்பது அவரது எண்ணம். அதே சமயத்தில் அப்பிரபுக்கள் காலத்துக்கேற்றபடி தங்களை மாற்றிக் கொண்டு சாதாரண மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமென்றும் அவர் விரும்பினார். அப்படி அப்பிரபு வர்க்கத்தினர் தங்களை மாற்றிக் கொள்ளாததைக் கண்ட டிஸ்ரேலி நாளடைவில் சாதாரண மக்களை ஆதரிக்க முன்வந்தார். அதனால்தான் அவர் 1867ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டத்தைக் கொணர்ந்து ஏழைத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கினார். கன்சர்வேடிவ் கட்சியிலிருந்த பல பிரமுகர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத் தாமல் அவர் அக்கட்சியினருக்குச் சதா தம் கொள்கைகளைப் போதித்து அப்போதனையின் மூலம் பாராளுமன்றச் சீர்திருத்தம், தடையிலா வாணிகக் கொள்கை முதலிய தாராளக் கொள்கைகளை அவர்கள் ஆதரிக்கும்படி செய்துவிட்டார். பிரிட்டிஷ் பேரரசை வளர்ப்பதே தம் கட்சியின் நோக்கம் எனக்கூறி, அதன்மூலம் அவர் தம்கட்சிக்குப் பரந்த மனப்பான்மையை ஊட்டினார். கன்சர்

வேடிவ் கட்சி என்ருல் செல்வர்களின் சிறப்புரிமைகளைக் காக்கும் ஒரு கட்சி என்ற கருத்தை அவர் மாற்றி, ஏழை எளியவர்களின் நலனுக்காகப் பாடுபடும் கட்சியாக ஆக்கிஞர். ஏழைகளின் நல்வாழ்வுக்காக உழைத்த இங்கிலாந்து இளைஞர் கட்சியில் **(Young England Party)** அவர் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கைகளைப் புதிய முறையில் உருவாக்கி, அவற்றை வரையறுத்த பெருமை அவருடையதே யாகும். அவர் கருத்துப்படி அக் கட்சியின் கொள்கைகள் மூன்ருகும். நாட்டின் பழைய நிறுவனங்களை அழிய விடாமல் அப்படியே காத்தல், பேரரசைக் காப்பாற்றி நிலைபெறச் செய்தல், நாட்டுமக்களின் நிலைமையை வளமுறச் செய்தல் என்பனவே அம் முப்பெரும் கொள்கைகளாகும். இக் கொள்கைகளை நடைமுறையில் நிறைவேற்றுவதில் அவர் அதிகம் வெற்றி பெறவில்லையென்ருலும், தம் கட்சியின் வருங்கால நடவடிக்கைகளை வரையறுத்துச் சென்றதே அவர் சிறப்புக்குக் காரணமாகும். 1895 முதல் 1906ஆம் ஆண்டுவரை அவரது கொள்கைகளே பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கைகளாகத் திகழ்ந்தன. அவர் தமது கட்சிக்குச் செய்த தொண்டின் அறிகுறியாகவே பிரைம்ரோஸ் லீக் **(Primerose League)** என்னும் கழகம் இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்டது. பிரைம்ரோஸ் என்ற மலர் டிஸ்ரேலிக்கு மிகப் பிடித்தமானதென்ற நம்பிக்கையை அக் கழகத்தின் பெயர் அங்ஙனம் அமைந்ததற்குக் காரணமாகும்.

பேரரசுக் கொள்கை

இங்கிலாந்தின் பேரரசை நிலைபெறச் செய்வதற்கான பெரும் பெருந் திட்டங்கள் அவரது உள்ளத்தில் உருவாகி வந்தன. ஒரு பெரும் பரந்த பேரரசின் நடுநாயகமாக இங்கிலாந்து விளங்க வேண்டுமென்பது அவரது விருப்பமாகும். பேரரசுத் தலைகள் இறுக வேண்டுமென்றும், அதற்காகக் குடியேற்ற நாடுகளுக்குச் சுங்க வரிகளைப் பற்றிய வரையில் பல சலுகைகளை வழங்க வேண்டுமென்றும் குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் பொதுவான ஒரு பாதுகாப்புப் படை உருவாக்கப்பட வேண்டுமென்றும், குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய சபையொன்று லண்டனில் இருக்க வேண்டுமென்றும் அவர் கூறிவந்தார். ஆஞல் இப்பெருங் கொள்கைகளை நடைமுறையில் அவர் கொணரவில்லை. விக்டோரியா இராணியாரை இந்தியப் பேரரசியாக ஆக்கியதற்குமேல் அவர் இங்கிலாந்தின் பேரரசு நாடுகளை இங்கிலாந்தோடு பிணைத்து வைக்கும் பணி எதையும் செய்யவில்லை. எகிப்து, இந்தியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் அவரது கொள்கையால் தொல்லைகள் பல ஏற்பட்டனவேயன்றி

வேறில்லை. எனினும் அவருக்குப் பின்வந்த சேம்பர்லின், ரோஸ்பரி பிரபு போன்ற அமைச்சர்கள் பேரரசுக் கொள்கையைப் பொறுத்தவரையில் அவரது அடிச்சுவடுகளையே பின்பற்றினர்.

வெளிநாட்டுக் கொள்கை

வெளிநாட்டுக் கொள்கையும் ஓரளவு அவரது பேரரசு மனப்பான்மையால் உருவாக்கப்பட்டது. பிரிட்டனின் கீழைப் பேரரசுக்கு ஆபத்து வருமென்ற பயத்தாலேயே அவர் ரஷ்யாவின் செல்வாக்கைக் குறைக்கவும், துருக்கியின் நிலையைப் பலப்படுத்தவும் முயன்றார். இந்திய வடமேற்கு எல்லையை நிர்ணயிக்க அவர் பாடு பட்டதும், ரஷ்யர்களின் வலுத்தாக்கல் இந்தியாமீது ஏற்படுமென்ற பயத்தினாலேயேயாகும். அப் பயமே பெர்லின் காங்கிரசை அவர் கூட்டியதற்குக் காரணமாகும். அவரது வெளிநாட்டுக் கொள்கை பலகுறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. துருக்கியை அவர் காப்பாற்ற நினைத்தது தவறென்பது பிற்காலத்தே நன்கு விளங்கியது. அதனால், ரஷ்யாவின் பகைமை பிரிட்டனுக்கு ஏற்பட்டதேயன்றி துருக்கி சின்னா பின்னமாவதை அதனால் தடுக்க முடியவில்லை. எகிப்தோடு பிரிட்டனுக்கு இருக்கவேண்டிய உறவை அவர் நிர்ணயிக்கத் தவறிவிட்டார். பேரரசின் வளர்ச்சிக்காகப் பெர்லின் காங்கிரசை அவர் நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்திய எல்லையைச் சரிவர நிர்ணயிப்பதிலும் அவர் வெற்றிகாணவில்லை. அவரது வெளிநாட்டுக் கொள்கை பிரிட்டனின் நலனையே பெரிதாகக் கொண்டு அமைக்கப்பட்டதேயன்றிப் பிறநாடுகளின் நலம், தர்மம் இவற்றை அடிப்படையாகக் கொள்ளவில்லை.

உள்நாட்டுக் கொள்கை

பிரிட்டனின் நிருவாகத்தை டிஸ்ரேலி திறம்பட நடத்தி வந்தார். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நன்மை விளைவிக்கும் பல சட்டங்கள் அவர் காலத்தே ஏற்பட்டன. ஆனால் அவற்றைக் கொணர்ந்த பெருமை ரிச்சர்ட் கிராஸ் என்னும் உள்நாட்டமைச்சருக்கு உரியதேயன்றி அவருக்கு உரியதென்று கூற முடியாது. ஐரிஷ் மக்களின் குறைகளைக் களைய அவர் முயற்சி எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. ஐரிஷ் மக்கள் மீதும், இங்கிலாந்தில் வாழ்ந்த ஏழைகள்மீதும் பெரிதும் அன்பு கொண்டவர் போன்றும் நடித்து வந்தார்.

பாராளுமன்றத்தில் டிஸ்ரேலி

பாராளுமன்றத்தின் மூலமே டிஸ்ரேலி புகழேணியில் உச்சிக்கு ஏறினார். சிறு வயது முதலே அம்மன்றத்தில் இடம்பெற அவரது

பிஞ்சு உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. நாளடைவில் அவரது கனவு நனவானபோது அவரது மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை. ஆனால் பாராளுமன்றத்தில் அவர் முதன்முதலில் பேச வாயெடுத்த போது அவரது நா குழறியது. சொற்கள் வெளிவர மறுத்தன. கேலிச் சிரிப்புகள் மன்றமெங்கும் ஒலித்தன. 'நீங்கள் எனது சொற்களை விரும்பிச் செவிமடுக்கும் காலம் விரைவிலேயே வரும்' எனச்சூளுரைத்த டிஸ்ரேலி தனதிருக்கையில் போய் அமர்ந்தார். அப்படியே அவர் விரைவிலேயே நாட்டின் பிரதமரானார். அவரது உரைகளில் நயம் மின்னியது. நகைச்சுவை துள்ளி விளையாடியது. குத்தலாகப் பேசி விரோதிகளை மடக்குவதில் அவர் தன்னிகரற்று விளங்கினார். மன்ற உறுப்பினர்கள் அவரது சொற்பொழிவுகளை ஆர்வத்தோடு பருகலாயினர். பெரும் பேச்சாளர் என்று கருதப்படத்தக்கவர் அல்ல என்றாலும் டிஸ்ரேலி பாராளுமன்றத்தில் வெற்றியுடன் விளங்கிய தலைவர்களுள் ஒருவராய் விளங்கினார். 'பாராளுமன்றத்தின் குழந்தை' (Child of the Parliament) என அவரை அழைத்தல் முற்றிலும் பொருந்தும்.

டிஸ்ரேலியின் குணச் சிறப்புகள்

டிஸ்ரேலி நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி சிங்காரமாக உடையணிந்து, என்றும் கண்ணுக்கினிய தோற்றத்துடன் விளங்கினார். எனவே, வெளிப்பகட்டினைப் பெரிதும் போற்றியவர் என அவரைக் கூறலாம். எடுப்பான, அதே சமயத்தில் பகட்டான தமது தோற்றப் பொலிவினால் அவர் இராணியாருடையவும், ஏனைய பெரும் தலைவர்களுடையவும் இதயங்களைக் கவர்ந்தார். எனினும், ஒருசில அறிஞர்கள் அவரை ஓர் எத்தர் என்றும், பொய் நிறை நெஞ்சினரான ஆஷாடபூதி எனவும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவரென்றும் குறை கூறினர். 'யூத மந்திரவாதி' என அவரை, கார்லைல் என்னும் அறிஞர் கூறுவது வழக்கம். பாராளுமன்றச் சீர்திருத்தம், தடையிலா வாணிகம் ஆகியவற்றை எதிர்த்துவிட்டுப்பின், அவற்றை ஆதரித்ததையும், துருக்கி, ரஷ்யா நாடுகளோடு இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொண்டதையும், பாராளுமன்றத்தைக் கலக்காமலேயே மால்டாவுக்குப் படை அனுப்பியதையும் சுட்டிக்காட்டி, அவரது விரோதிகள் அவரை வஞ்சக நெஞ்சினர் எனப்பழித்தனர். மேலும், அவர் வீண் தற்பெருமைக்காரர் என்றும், பிறரை முகமன்கூறி வீணாகப் புகழ்பவரென்றும் பலர் கூறினர். அது பெரிதும் உண்மைதான். அவர் அரசியின் அபிமானத்தைப் பெற்றதற்கு முக்கியக் காரணம் அரசியாரின் சிறப்புகளை மிகைபடப் புகழ்ந்து அவரை அடிக்கடி மகிழ்வித்ததாகும். சில குறைகளிருந்த போதிலும் டிஸ்ரேலியிடம் பல சிறந்த குணங்கள் மிளிர்ந்தன. எதிரிகளின் ஏச்சுக்களி

னிடையேயும் விடாப்பிடியாகக் காரியங்களைச் செய்யக்கூடிய துணிவும் தைரியமும் அவர்பால் அதிகம் காணப்பட்டன. அவருடைய தன்னம்பிக்கை அபாரமானது, வியக்கத்தக்கது. தன்னை ஏளனம் செய்த பாராளுமன்றத்தை வாயடக்கும் காலம்வருமென்று அவர் கூறியது மட்டுமின்றிச் செயலிலும் காண்பித்தது, அவருக்குத் தமது ஆற்றலில் இருந்த பெரு நம்பிக்கைக்கோர் அறிகுறியாகும். யாவராலும் வெறுக்கப்பட்ட யூத குலத்தில் பிறந்தும், பண முட்டுப்பாட்டால் சூழப்பட்டிருந்தும், அவர் தமது முயற்சியாலும் நம்பிக்கையாலுமே முன்னுக்கு வந்தார். அரசியலில் அவர் எப்போதுமே தொலைநோக்கு உடையவர். பீலின் கொள்கை மாற்றத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை அவர் கண்டுகொண்டு அதற்கு ஏற்ப நடந்து, தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டார். பாராளுமன்றச் சீர்திருத்தத்தின் அவசியத்தைப் புரிந்து கொண்டார். அமெரிக்கத் தென்னாடு தோற்றுப் போகுமென்பதை அவர் முன்னுலேயே அறிந்திருந்தார். கிளாட்ஸ்டனின் ஐரிஷ் கொள்கை அந்நாட்டின் சுயாட்சிக்கு வழிகோலும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அரசியலில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த டிஸ்ரேலி ஒரு பெரு நாவலாசிரியராகவும் விளங்கியது, அவரது மேதைத் தன்மைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். அவரது குறிக்கோள் பலவற்றை அவர் எழுதிய நூல்கள் பிரதிபலிக்கின்றன. 'விவியன் கிரே' (**Vivian Grey**) என்னும் நூல் அவரது சுய சரிதத்தையே படம் பிடித்துக் காட்டுகிறது. 'சிபில்' (**Sibil**) என்ற நூலில் கோனுட்சி, ஜனநாயகம், ஆங்கிலிக மதம் இவற்றை ஆதரித்து அவர் எழுதியுள்ளார். விக்குக் கட்சியினரை அவர் அதில் தாக்குகிறுர். 'லோதியார்' (**Lothiar**) என்னும் நூலில் அவர் பிரபுக்களின் இழிநிலையை விவரிக்கிறுர். அவரது நாவல்கள் அவர் காலத்துப் பிரமுகர்களையும் சமூகப் பொருளாதார நிலைமைகளையும் நன்கு விளக்குகின்றன. படிப்பதற்கு அவை சுவை மிக்கனவாயிருந்தபோதும் அக்காலத்து அரசியல் கொள்கைகளை அவை ஒரு சிறிதும் பாதிக்காமல் போய்விட்டன. நடைமுறைக் கொவ்வாத வெறும் இலட்சியக் கனவுகள் அவைகளில் காணப்பட்டதே இதற்குக் காரணமாகும். இங்ஙனம், பெரு நாவலாசிரியராகவும் குறிக்கோள்வாதியாகவுமிருந்து டிஸ்ரேலி பல அரிய சேவைகளை இங்கிலாந்துக்குச் செய்துவிட்டுச் சென்றுள்ளார்.

6. விக்டோரியப் பேரமைச்சர் கிளாட்ஸ்டன் (1809 - 1898)

வாழ்க்கை வரலாறு; கிளாட்ஸ்டனின் உள்நாட்டுக் கொள்கைகளும் சாதனைகளும்: பொருளியல்துறைச் சாதனைகள்—கிளாட்ஸ்டனின் கொள்கை—கிளாட்ஸ்டனின் சமுதாய, மதச் சீர்திருத்தங்கள்—அயர்லாந்தில் சீர்திருத்தம்—மதத்துறை—அயர்லாந்து நிலச் சீர்திருத்தம்—அயர்லாந்து கல்விச் சீர்திருத்தம்—இங்கிலாந்தில் கிளாட்ஸ்டன் செய்த சீர்திருத்தங்கள்—கல்வித்துறையில் சீர்திருத்தம்—சிவில் சர்விஸ் சீர்திருத்தம்—இராணுவச் சீர்திருத்தம்—வேறு பல சீர்திருத்தங்கள்; கிளாட்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள்கை: அவரது முதல் மந்திரி சபையின் வீழ்ச்சி; கிளாட்ஸ்டனின் இரண்டாவது மந்திரிசபையும் அவரது குடியேற்ற நாட்டுக் கொள்கையும்: தென் ஆப்பிரிக்காவில் போர்—அயர்லாந்தில் தொல்லை—எகிப்தில் தொல்லை; கிளாட்ஸ்டனின் மூன்றாவது மந்திரி சபை: ஐரிஷ் சுயாட்சி மசோதா; கிளாட்ஸ்டனின் நான்காவது மந்திரி சபை; கிளாட்ஸ்டனைப் பற்றிய மதிப்பீடு.

விக்டோரியா மகாராணியாரின் காலத்தை அணி செய்த மாபெரும் மந்திரிகளுள் ஒரு மாணிக்கமெனத் திகழ்ந்தவர் வில்லியம் ஈவார்ட் கிளாட்ஸ்டன் (William Ewart Gladstone) என்பவராவர். 1868இல் டிஸ்ரேலியின் முதல் அமைச்சரவை வீழ்ச்சியுற்ற பின்னர்தான் கிளாட்ஸ்டன் முதன்முறையாக இங்கிலாந்தின் பிரதமரானார். அதன் பின்னர் நான்கு முறை அவர் பிரதமராயிருந்து தமது தாய்நாட்டுக்கு அரும்பெருஞ் சேவைகளைச் செய்தார். ஆங்கிலேயரின் காட்சியிலும், ஏன், ஐரோப்பிய மக்களனைவரது முன்னிலையிலுங்கூட அவர் ஏறக்குறைய அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தாராளக் கொள்கைகளின் ஓர் உருவமெனத் திகழ்ந்து வந்தார். ஆரம்பத்தில் பிற்போக்குக் கொள்கைகளையுடைய ஒரு மிதவாதியாக இருந்த அவர் நாளடைவில் காலநிலைக்கேற்ப ஒரு தாராளக் கொள்கையுடைய முற்போக்கு வாதியாக எப்படிப் படிப்படியாக மாறினர் என்பதையே அவரது வரலாறு நமக்கு நன்கு சித்தரித்துக் காட்டுகிறது.

வாழ்க்கை வரலாறு

லிவர்ப்பூல் நகரில் வாழ்ந்து வந்த வணிக வள்ளல் ஒருவரது மைந்தனுகக் கிளாட்ஸ்டன் 1809ஆம் ஆண்டு பிறந்தார். ஈட்டன், ஆக்ஸ்ஃபோர்டு போன்ற புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் அவர் பயின்று ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ருர். 1831இல் அவர் கணிதம், பண்டைய இலக்கியம் இரண்டிலும் முதல் வகுப்பில் தேறினுர். 'விளையும் பயிர் முளையிலே' என்னும் பழமொழிக்கேற்ப அவரது பள்ளி வாழ்வு சிறப்புற அமைந்திருந்தது. 1832இல் அவர் நிவார்க் (Newark) என்ற நசித்துப்போன பரோவின் உறுப்பினராகப் பாராளுமன்றத்துக்குள் நுழைந்தார். ஆரம்பத்தில் அவர் கன்சர்வேடிவ் கட்சியை ஆதரித்தார். அக் கட்சித் தலைவராய் அப்போது விளங்கிய பீல் என்பாரின் நன் மதிப்பைப் பெற்ற அவர், 1841இல் அவரது மந்திரி சபையிலும் ஓர் இடத்தைப் பெற்ருர். பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்ததாலும், மாய்னூத் கல்லூரிக்கு மானியம் வழங்கியதாலும், கன்சர்வேடிவ் கட்சியில் பிளவேற்பட்டபோது, கிளாட்ஸ்டன் பீலை ஆதரித்தார். பீலின் கட்சி, தாராளக் கொள்கையினர் கட்சியை ஆதரிக்க ஆரம்பித்தது. 1852இல் அபெர்டீன் என் பாரின் தலைமையில் பீலேட்டுகளும், தாராளக் கொள்கையினரும் ஒன்று சேர்ந்து ஒரு மந்திரி சபையை அமைத்தனர். அதில் கிளாட்ஸ்டன், கருவூலத் தலைவராக நியமனம் பெற்ருர். 1853இல் தான் அவர் தமது புகழ்பெற்ற முதல் வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தின் முன் படைத்தார். வரவு செலவுத் திட்டங்களை வகுப்பதில் ஈடும் இணையுமற்றவர் என்ற புகழ் அவருக்கு அப்போதிருந்து ஏற்படலாயிற்று. அடுத்து வந்த பாமர்ஸ்டன், ரஸ்ஸல் ஆகியோரின் மந்திரி சபைகளிலும் அவர் கருவூலத் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி நற்பெயர் பெற்ருர். தடையிலா வாணிகம் நாட்டில் நன்கு நிலைபெற அவர் உதவினுர். ரஸ்ஸல் பிரதமராயிருந்தபோது, கிளாட்ஸ்டன் பொது மக்கள் சபையின் தலைவராகவும் விளங்கினுர். பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவைக் கொணர்ந்ததால் ரஸ்ஸல் மந்திரிசபை வீழ்ச்சி யுற்றது. அடுத்து வந்த கன்சர்வேடிவ் கட்சியினரின் தலைவர் டிஸ்ரேலி இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவை 1867இல் எவ்வாறு கொணர்ந்தார் என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். அங்ஙனம், அவர் கொணர்ந்த சட்டத்தால் வாக் குரிமை பெற்ற சிறு நிலக்கிழாரும், நகரத் தொழிலாளரும் அவருக்கு நன்றி பாராட்டத் தவறினர். 1868இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினர் தோற்றனர். தாராளக் கொள்கையினர் வெற்றி பெற்றனர். அதன் தலைவ

ரான கிளாட்ஸ்டன் அப்போதுதான் தமது முதல் மந்திரி சபையை அமைத்தார். அச் சபையில் பீலைட்டுகளும், விக்குகளும், தீவிரச் சீர்திருத்தவாதிகளும் இடம் பெற்றனர். இருப்பினும், அவர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து வழிநடத்தக் கூடிய திறமை கிளாட்ஸ்டனுக்கு இருந்தது. எனவே அம்மந்திரிசபை அரிய பல சீர்திருத்தங்களைச் செய்தது. ஆனால், அச் சீர்திருத்தங்கள் பல்வேறு வகுப்பினரின் நலன்களைப் பாதித்ததால், அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கிளாட்ஸ்டனைத் தோற்கடித்து 1874இல் டிஸ்ரேலியைப் பிரதமராக்கினர். கிளாட்ஸ்டன் அரசியலிலிருந்தே ஓய்வு பெறப் போவதாகக் கூறிக்கொண்டு கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா செய்தார். தாராளக் கட்சியினரும், சக அமைச்சர்களும் நடந்து கொண்டது அவருக்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஆனால், அதிக நாட்கள் அவரால் ஓய்வில் இருக்க முடியவில்லை. கீழைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கை அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எனவே, அவர் அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தததோடு, மிட்லோதியன் (Midlothian) என்ற தேர்தல் தொகுதியில் தாராளக் கொள்கையினரின் கட்சியின் சார்பாக நின்று தேர்தலில் வெற்றியும் பெற்றார். அப்போது அவருக்கு வயது 70. எனினும், அவரது புகழ் அப்போதுதான் உச்சநிலையை அடைந்தது எனலாம். தாராளக் கட்சி அப்போது நன்கு உருப்பெற்றுவிட்டது. அதன் தனிப்பெருந் தலைவராய்க் கிளாட்ஸ்டன் திகழ்ந்தார். ஆனால், அவரை நாற்புறத்திலும் தொல்லைகள் சூழ்ந்து துன்புறுத்தலாயின. அயர்லாந்து, எகிப்து, சூடான், தென் ஆப்பிரிக்கா போன்ற இடங்களில் தோன்றிய புரட்சிப் போர்களை அவரால் சரிவரச் சமாளிக்க முடியவில்லை. மேலும், அந்நாடுகளோடு அவர் நடந்து கொண்ட விதம், மக்களின் மனத்தில் அப்போது நன்கு வேரூன்றிக் கிடந்த ஏகாதிபத்திய மனப்பான்மைக்கு விரோதமாயிருந்தது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. விவசாயமும் ஆக்கத் தொழில்களும் அந்நியப் போட்டியைச் சமாளிக்க முடியாமல் திணறின. இன்ன பல காரணங்களால் கிளாட்ஸ்டனின் இரண்டாவது மந்திரி சபை 1885இல் வீழ்ச்சியுற்றது. ஆனால், அதை யொட்டி நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினரும், தாராளக் கட்சியினரும், ஏறக்குறையச் சமமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்ததால் 1886இல் கிளாட்ஸ்டன் மூன்றும் முறையாகப் பிரதமரானார். ஆனால், அயர்லாந்தின் சுயாட்சி மசோதாவை அவர் கொணர்ந்து, அது தோற்றதால், கிளாட்ஸ்டன் மீண்டும் பதவியை இழந்தார். சாலிஸ்பரி பிரபுவின் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சியினர் 1886 முதல் 1892 வரை இங்கிலாந்தை ஆண்டனர். கிளாட்ஸ்டன் அப்போதெல்லாம்

வாளா இருக்கவில்லை. நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து ஐரிஷ் சுதந்திர நாடாக விளங்க வேண்டுவதன் இன்றியமை யாமையை எடுத்துக் கூறிவந்தார். 1892இல் அவரது கட்சி ஓரளவு பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் பெற்றது. கிளாட்ஸ்டன் நான்காம் முறையாகப் பிரதமரானார். ஆனால், அவர் கொணர்ந்த ஐரிஷ் சுயாட்சி மசோதா, பொதுமக்கள் சபை யில் நிறைவேறினாலும், பிரபுக்கள் சபையில் தோல்வியுற்றது. எனவே, கிளாட்ஸ்டன் தமது பதவியைத் துறந்தார் (1893). அதன்பின் அவர் அரசியலில் அதிகம் கலந்து கொள்வதை நிறுத்திக் கொண்டார். 1898 ஆம் ஆண்டு அவர் பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

கிளாட்ஸ்டனின் உள்நாட்டுக் கொள்கைகளும் சாதனைகளும்

பொருளியல்துறைச் சாதனைகள்

மற்றெல்லாத் துறைகளையும்விடப் பொருளாதாரத் துறை யிலேயே கிளாட்ஸ்டன் தமது இணையற்ற ஆற்றலை வெளிப் படுத்தினார். பாமர்ஸ்டனுடைய அமைச்சரவையில் கருவூலத் தலை வராயிருந்தபோது, அவரது பொருளியல் நிபுணத்துவம் நன்கு வெளிப்பட்டது. அவர் கடுமையான சிக்கனமுறையை அரசியலில் கையாண்டார். செலவினங்களில் சிக்கனம், வரிகளைக் கூடிய வரை குறைத்தல், இயன்ற வரையில் போர்களில் ஈடுபடாமலிருத் தல், விவசாயம் ஆக்கத் தொழில் சமூகம் ஆகிய துறைகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் இவையே அவரது பொருளியற் கொள்கையின் சிறப்பியல்புகளாகத் திகழ்ந்தன. ஆரம்பத்தில் காப்புவரிக் கொள்கையை வரவேற்ற அவர், நாளடைவில் தடை யிலா வாணிகக் கொள்கையை ஆதரிக்க முற்பட்டார். காப்டன் பிரைட் போன்ற அறிஞர்களின் தலையிடாக் கொள்கை அவரைப் பெரிதும் கவர்ந்தது. அக்கொள்கையின் அடிப்படையிலேயே அவர் தமது புகழ்பெற்ற 1860ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை வகுத்தார். அதன் அடிப்படையிலேயே அவர் ஃபிரான்சோடு ஒரு பரஸ்பர உடன்பாட்டைச் செய்துகொண் டார். அதன்படி ஃபிரான்சில் இறக்குமதியான பிரிட்டிஷ் பொருள்களின் மீது விதிக்கப்பெற்ற சுங்க வரிகள் 30 சதவிகிதம் குறைக்கப்பட்டன. அதே போன்று பிரிட்டனில் இறக்குமதி யான பல ஃபிரெஞ்சுப் பண்டங்கள் மீதிருந்த சுங்க வரிகள் குறைக்கப்பட்டன. பொறிசெய் பொருள்களின்மீது விதிக்கப் பட்ட வரிகள் முற்றிலும் அகற்றப்பட்டன. இக் கொள்கை யைக் கிளாட்ஸ்டன் எல்லா நாடுகளிடத்தும் கடைபிடித்தார்.

சுங்க வரி விதிக்கப்பெற்ற பண்டங்களின் எண்ணிக்கை 419-லிருந்து 48 ஆகக் குறைந்தது. இதனால், நாட்டின் வருமானம் சிறிது குறைந்தது. அதை ஈடுகட்ட கிளாட்ஸ்டன் வருமான வரியையும், சர்க்கரை, தேநீர் முதலிய பொருள்களின் மீதிருந்த வரிகளையும் உயர்த்தினர். உற்பத்திச் சாதனங்களின் மீது இருக்கும் தடைகளையெல்லாம் நீக்கிவிட்டால் உற்பத்தி தானகவே பெருகிவிடும் என்பது அவரது நம்பிக்கை. ராணுவத்தையும், கப்பற்படையையும் பெருக்கப் பாமர்ஸ்டன் பாடுபட்டதைக் கிளாட்ஸ்டன் தொடர்ந்து கண்டித்து வந்தார். போருக்காகச் செய்யப்படும் செலவுகள் யாவும் வீண் என அவர் வாதித்தார். அதனால், பாமர்ஸ்டன் அவரை மந்திரி சபையிலிருந்து நீக்கிவிடலாமென்றுகூட ஒரு சமயம் நினைத்தார். ஆனால், காகிதத்தின் மீது விதிக்கப்பட்ட வரியை ரத்து செய்யக் கிளாட்ஸ்டன் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தபோது பாமர்ஸ்டன் அதை ஆதரித்தார். பொது மக்கள் சபையில் அது நிறைவேறியது. ஆனால், பிரபுக்கள் சபை அதை நிராகரித்தது. பிரபுக்கள் சபை இங்ஙனம் தனது பொருளாதார நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதைத் தடுக்கக் கிளாட்ஸ்டன் ஓர் உபாயத்தைக் கையாண்டார். பண மசோதாக்களைத் தனித்தனியே கொணர்வதற்குப் பதிலாக ஓராண்டில் கொண்டுவர வேண்டிய எல்லாப் பண மசோதாக்களையும் ஒன்று சேர்த்துப் பட்ஜெட் என்ற பெயரில் ஒரே மசோதாவாக அவர் 1861ஆம் ஆண்டு கொணர்ந்தார். அதை முழுவதுமாகப் பிரபுக்கள் சபை ஏற்றுக் கொள்ளவேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டுமென்ற நிலையேற்பட்டது. பட்ஜெட்டில் ஒரு சில அம்சங்களை அவர்கள் விரும்பாதபோதும் ஏனைய பிடித்தமான அம்சங்களுக்காக அவர்கள் அதை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. கிளாட்ஸ்டன் அரசாங்கச் செலவுகளைப் பெரிதும் பலவகையிலும் குறைக்க முற்பட்டதால், வருமான வரியையும், தேநீர் வரியையும் பாதியாக அவரால் குறைக்க முடிந்தது. 1860இல் 72 மில்லியன் பவுன்கள் அரசாங்கத்தின் செலவுத் தொகையாக இருந்தது. ஆனால், 1865இல் அது 66 மில்லியன் பவுன்களாகக் குறைந்தது. மக்கள், தம் பணத்தைச் சேமிக்கும் பழக்கத்தைப் பெருக்கக் கிளாட்ஸ்டன் தபால் நிலைய சேமிப்புப் பாங்குகளை (Post Office Savings Bank) ஆங்காங்கே ஏற்படுத்தினர். அரசாங்க வரவு செலவுக் கணக்குகளை நன்கு தணிக்கை செய்ய அவர் கருவூலத் தணிக்கைச் சட்டம் (Exchequer and Audit Act) ஒன்றை 1865ஆம் ஆண்டில் ஏற்படுத்தினர். பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு (Committee of Public Accounts) ஒன்றை அவர் பொது மக்கள் சபையில் உருவாக்கினர். இத்தகு பல சாதனைகளால் கிளாட்ஸ்டன் ஓர் அரிய பொருளாதார நிபுணர் என்ற நற்பெயரைப் பெற்றார்.

கிளாட்ஸ்டனின் கொள்கை

கிளாட்ஸ்டனின் செயல்களைக் கண்டவர்கள், அவர் தலையிடாக் கொள்கையைப் போதித்த மாஞ்செஸ்டர் அறிஞர் குழாத்துடன் (Manchester School) ஒன்றிவிட்டார் எனக் கருதினர். ஆனால், உண்மையதுவன்று. தூய தனிமனிதவாதத்தை (Pure Individualist Doctrine) அவர் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை. மக்களுடைய சமுதாய நிலையை மேம்படுத்த அரசாங்கம் தனிமனித வாழ்க்கையில் தலையிடுவது நியாயமென்றே அவர் கருதினார். 1844இல் அவர் வாணிகக் குழுவில் உறுப்பினராயிருந்த போது ரெயில்வே போக்குவரவுச் சாதனங்களைத் தேசீயமயமாக்க வேண்டுமென அவர் வற்புறுத்தியதிலிருந்து அவரது கொள்கை நன்கு புலனாகிறது. பிரதமர் பீல் என்பவரின் விருப்பத்திற்கு மாறாக அவர் ரெயில்வே சட்டத்தை அவ்வாண்டில் கொணர்ந்தார். அச்சட்டம் தனியுரிமைகளைப் பெரிதும் கட்டுப்படுத்தியது. ரெயில்வே கம்பெனிகள் தங்களது கணக்கு வழக்குகளை வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென அது வற்புறுத்தியது. ரெயில்வேக் கட்டணங்களை நிர்ணயிக்கும் உரிமையையும் அச்சட்டத்தின் மூலம் அரசாங்கம் மேற்கொண்டது. பெரும்பான்மையான மக்களின் நலம் கருதி அரசாங்கம், தனி மனித வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் தலையிடலாமென்ற கொள்கையின் அடிப்படையிலேயே அவர் தேசீயப் பாங்குகளையும், தேசீய ஆயுள் பாதுகாப்புறுதி நிலையங்களையும், தேசீய வறியோர் நிவாரணமளிப்பு நிலையங்களையும், அயர்லாந்தில் நிலவுரிமை, நிலவாரம் முதலியவைகளை நிர்ணயிக்க நில நீதிமன்றங்களையும் ஏற்படுத்தினார். தொழிற்சங்கங்களிள் நிதிகளை உள்ளிருந்தே கொள்ளையடித்து வந்த சங்க அதிகாரிகளைக் கட்டுப்படுத்த 1871இல் அவர் தொழிற்சங்கங்கள் சட்டத்தைக் (Trade Unions Act) கொண்டு வந்ததும், 1853இல் வாரிசுரிமை வரியைக் (Succession Duty) கொணர்ந்து, செல்வர்களின் வாரிசுரிமையில் தலையிட்டதும் இக் கொள்கையின் அடிப்படையிலேயாகும். இதையெல்லாம் பார்க்குமிடத்து, கிளாட்ஸ்டன் அரசாங்கத் தலையீட்டுக் கொள்கை அல்லது தலையிடாக் கொள்கை என்ற குறிப்பிட்ட கொள்கை எதற்கும் கட்டுப்பட்டவரல்லர் என்பதும், அவ்வப்போது மக்களுக்கு நன்மையுண்டாக்க வல்லது எதுவோ, அதை அவர் வரவேற்பவர் என்பதும் நன்கு பெறப்படுகின்றன.

கிளாட்ஸ்டனின் சமுதாய, மதச் சீர்திருத்தங்கள்

1832 ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சடடத்தையொட்டிப் பற்பல துறைகளிலும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டது போலவே, 1867ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்தின் பின்னும்

இங்கிலாந்தில் பல்வகைச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அவைகளை யெல்லாம் ஏற்படுத்திய பெருமை கிளாட்ஸ்டனின் முதல் மந்திரி சபைக்கே உரியதாகும். அதன் ஆட்சிக்காலம் (1868-1874) இங்கிலாந்தின் வரலாற்றில் இரண்டாவது சீர்திருத்த சகாப்தம் (Second Era of Reform) என்று அழைக்கப்படுகிறது. கிளாட்ஸ்டன் அமைத்த மந்திரி சபையில் தாராளக் கொள்கையுடையவர்கள் நிறைந்திருந்ததே அவ்விதச் சீர்திருத்தங்கள் ஏற்படக் காரணமாகும். கார்டுவெல் (Cardwell) என்ற திறமை மிக்க போரமைச்சர் பீல் கட்சியைச் சேர்ந்தவர். ராபர்ட் லவே (Robert Lowe) என்ற கருவூலத் தலைவர் விக்குக் கட்சியின் உறுப்பினர். வாணிகக் குழுவின் தலைவராய் விளங்கிய ஜான் பிரைட் என்பவர் தீவிரச் சீர்திருத்தவாதிகளுள் (Radicals) ஒருவர். கிளாரண்டன் பிரபு என்னும் வெளிநாட்டமைச்சரும் ஓரளவு தாராளக் கொள்கையுடையவரேயாவர். இவர்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கிளாட்ஸ்டன், லிபரல் அல்லது தாராளக் கட்சியை உருவாக்கினர். அக் கட்சியினர் இங்கிலாந்திலும் அயர்லாந்திலுமிருந்த உளுத்துப்போன பழைய நிறுவனங்களையெல்லாம் ஒரேயடியாக மாற்றியமைக்க முனைந்தனர்.

அயர்லாந்தில் சீர்திருத்தம் – மதத்துறை

பிரதமர் கிளாட்ஸ்டனின் கவனம் முதன் முதலில் அயர்லாந்தின் பக்கம் திரும்பியது. ஏனெனில், 1868ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது அவரது தேர்தல் பிரச்சாரமெல்லாம் அயர்லாந்துப் பிரச்சினைகளை, முக்கியமாக மத நிறுவனப் பிரச்சினைகளையே முற்றிலும் சுற்றி வட்டமிட்டது. அயர்லாந்தின் சிக்கல்களைத் திருத்துவதற்காகவே அவர் பதவியை விரும்புவதுபோல் பலருக்கும் தென்பட்டது. 'அயர்லாந்தைச் சமாதானப் படுத்துவதே எனது வாழ்க்கையின் குறிக்கோளாகும்' என்று சொல்லிக்கொண்டே அவரும் பதவியேற்றார். அயர்லாந்தை அவர் உபாஸ் (Upas) என்ற நச்சுமரத்துக்கு ஒப்பிட்டார். மத நிறுவனம், கல்விமுறை, நிலவுடைமை என்ற மூன்றுமே அதன் மூன்று நச்சுக் கிளைகளாகுமெனவும், அவற்றை வெட்டி வீழ்த்துவது தமது கடமை என்றும் அவர் கூறிவந்தார்.

கிளாட்ஸ்டனும், பொதுவாகப் பிரிட்டிஷ் மக்களனைவருமே ஐரிஷ் பிரச்சினையின்மீது தமது கவனத்தைச் செலுத்துமாறு தூண்டியவர்கள் ஃபெனியன்கள் (Fenians) என்ற புரட்சிக் கூட்டத்தினராவர். ஃபெனியன் கழகமானது, அமெரிக்காவில் சென்று குடியேறிய அயர்லாந்தியர்களால் ஏற்படுத்தப்பட்ட தொன்றாகும். அவர்கள் பிரிட்டிஷாரைத் தமது பரம விரோதிகளாகக் கருதினர். பிரிட்டிஷ் ஆதிக்கம் அயர்லாந்தை விட்டு

என்று நீங்குமோ, அன்றுதான் அதன் பிரச்சினைகள் யாவும் தீருமென அவர்கள் உறுதியாய் நம்பினர். பிரிட்டனுக்கும் அயர் லாந்துக்கும் போர் ஏற்பட்டால் அயர்லாந்துக்கு உதவி செய்ய வேண்டியே மேற்படி கழகத்தை ஐரிஷ் குடியேறிகள் நியூயார்க்கில் தோற்றுவித்தனர். அதன் உறுப்பினர்களில் பலர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் கலந்துகொண்டு நல்ல போர்ப் பயிற்சி பெற்றிருந்தனர். நவீன போர்க் கருவிகள் பலவற்றை அவர்கள் வைத்திருந்தனர். சிறிதுசிறிதாக ஃபெனியன் கழகத்தின் கிளை நிறுவனங்கள் டப்ளின், கார்க் போன்ற ஐரிஷ் நகரங்களிலும் தோன்றலாயின. ஃபெனியன் என்ற பெயரானது ஐரிஷ் நாட்டுப் படையைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஃபின் மெக்கெல் (Finn Maccoul) ஐரிஷ் புராண அரசரின் மெய்க்காப்பாளர் படை யினின்றும் அது தோன்றியதாகும். ஃபெனியன்கள் முடியரசை ஒழித்துவிட்டுக் குடியரசை அயர்லாந்தில் ஏற்படுத்துவதே தங்களது நோக்கமெனக் கூறிக்கொண்டனர். அவர்களது நோக்கத்தைப் பிரிட்டிஷ் சர்க்கார் தமது ஒற்றர்கள் மூலம் அறிந்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். 'ஐரிஷ் மக்கள்' என்ற அவர்களது செய்தித் தாளின் ஆசிரியரை முதலில் அவர்கள் கைது செய்தனர். ஹெபியஸ் கார்பஸ் சட்டம் தாற் காலிகமாக அயர்லாந்தில் நிறுத்திவைக்கப்பட்டது. முக்கிய ஃபெனியன் தலைவர்களும் ஏனையோருமாகச் சுமார் முந்நூறு பேர் கைது செய்யப்பட்டனர். எஞ்சியவர்களில் பலர் பயந்து மலைப் பிரதேசங்களுக்கு ஓடி அங்கே கடுங்குளிரில் சிக்கி மாண்டனர். ஃபெனியன் மாரிக்காலம் (Fenian winter) என்று அந்த ஆண்டுக் குளிர்காலம் அழைக்கப்பட்டது. இங்ஙனம், ஃபெனியன் கழகம் அயர்லாந்தில் ஒடுக்கப் பட்டதெனினும் அதன் சாயை வேறிடங் களில் தோன்றியது. கனடாவை அவர்கள் படையெடுத்தனர். ஆனால், எளிதில் முறியடிக்கப் பட்டனர். அதேபோல் இங்கிலாந் தில் செஸ்டர் கோட்டையைப் (Chester Castle) பிடிக்க அவர்கள் செய்த முயற்சி தோல்வியுற்றது. மாஞ்செஸ்டர், கிளார்க்கன்வெல் (Clarkenwell) போன்ற இடங்களில் அவர்கள் சிறைக் கைதிகளை விடுவிக்கச் செய்த கிளர்ச்சிகளும் எளிதில் அடக்கப்பட்டன. இங்ஙனம், ஃபெனியன் இயக்கம் ஒடுக்கப்பட்டதெனினும், அது அயர்லாந்துப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை நன்கு எடுத்துக் காட்டியது.

கிளாட்ஸ்டன் முதலில் ஐரிஷ் மத நிறுவனத்தை மாற்றி யமைக்க முனைந்தார். அயர்லாந்திலிருந்த ஆங்கிலிகத் திருச்சபை இங்கிலாந்தால் ஏற்படுத்தப்பட்டதாகும். அத் திருச்சபை ஒன்றே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சபையாக விளங்கியது. அதனால், அதில் சேராதவர்கள் எல்லாம் டைத் என்ற வரியை

அச்சபைக்குச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டன. அயர்லாந்தில் வசித்தவர்களில் பெரும்பான்மையோர் (ஐந்தில் நான்கு பங்கினர்) கத்தோலிக்கர்கள். எனவே, அவர்கள் சிறுபான்மையினரான ஆங்கிலிகப் பிராட்டஸ்டென்டுகள் அனுபவித்த உரிமைகளைக் கண்டு மனம் புழுங்கினர். நாட்டின் செல்வத்தில் பெரும்பகுதி அத் திருச்சபையினரின் கைகளில் முடங்கிக் கிடந்ததை அவர்களால் சகிக்க முடியவில்லை. கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம், டைத் என்னும் வரியினின்றும் கத்தோலிக்கரை ஓரளவு விடுவித்ததெனினும், ஆங்கிலிகத் திருச்சபையின் உரிமைகளை அது ஒன்றும் குறைக்கவில்லை. அயர்லாந்திலிருந்த பிராட்டஸ்டென்ட் திருச்சபையானது ஆங்கிலேயரின் ஆதிக்கச் சின்னமாக அயர்லாந்தியருக்குத் தென்பட்டது. இக்குறையைப் போக்கக் கிளாட்ஸ்டன் விரும்பினுர். அவர் இங்கிலாந்தின் மத நிறுவனத்தின் பக்தி மிக்க உறுப்பினராயிருந்தும், பிஷப்புகளின் ஆட்சியை விரும்பியவரேனும், அயர்லாந்தில் அந்த நிறுவனம் அனுபவித்த உரிமைகள் நியாயமற்றவை என உணர்ந்தார். அதன் ஆதிக்கத்தைக் குலைத்து, மற்ற மத நிறுவனங்களோடு அதை சமமாக்கப் பல தீர்மானங்களை, அவர், டிஸரேலி பிரதமராய் இருந்தபோதே கொணர்ந்தார். எனவே, அவர் பிரதமரானவுடன் ஐரிஷ் திருச்சபை மசோதா (Irish Church Bill) ஒன்றைப் பாராளுமன்றத்தில் கொணர்ந்து சட்டமாக்கினுர். அச் சட்டம் அயர்லாந்தில் இருந்த ஆங்கிலிகத் திருச்சபையின் சிறப்புரிமைகளைப் பறித்துக் கொண்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், ஐரிஷ் மத நிலையத்துக்குமிருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஐரிஷ் மத நிலையமும் இங்கிலாந்திலிருந்த இணங்காதாரின் மத நிலையங்களும் சம அந்தஸ்தைப் பெற்றன. ஐரிஷ் மத நிலைய பிரபுக்கள் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இடம்பெறும் உரிமையையிழந்தனர். பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்ட ஐரிஷ் சமயக் கழகங்களும், சமய நீதிமன்றங்களும், சமயச் சட்டங்களும் ஒழிந்தன. ஐரிஷ் திருச்சபையானது பிரிட்டிஷ் உதவியின்றித் தன்னைத்தானே நிருவகித்துக் கொள்ள வேண்டுமெனவும், நிருவாக சபை உறுப்பினர்களை அது தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் அச்சட்டம் கூறியது. இங்ஙனம், கிளாட்ஸ்டன் ஐரிஷ் மத நிறுவனத்தின் ஆதிக்கத்தைக் குலைத்தார். (Disestablished the Irish Church). அதன் பின்னர் அத் திருச்சபையின் நிதி நிலையைக் குலைக்கவும் (Disendowment) அவர் ஒரு மசோதா தயாரித்தார். அதன்படி ஐரிஷ் மக்களைச் சுரண்டிச் சுரண்டி அச்சபை சேர்த்து வைத்திருந்த பெருந் தனம் அனைத்தையும் அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டது. அவ்வாறு கைப்பற்றிய செல்வத்தில் ஒரு பகுதி மத குருமார்களுக்கு ஊதியம் அளிக்கவும் இன்னொரு பகுதி தேவையின்

மையால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட மத குருமார்களுக்கு நஷ்ட ஈடு தரவும், ஏழ்மையில் வாடிய ஐரிஷ் மக்களின் துயர் துடைக்கவும் பயன்படுத்தப்பட்டது. ஐரிஷ் மக்களின் பெருங்குறையைக் கிளாட்ஸ்டன் இங்ஙனம் போக்கினார். உண்மையில் அவரது மசோதாவைப் பிரபுக்களும் இராணியாரும் உள்ளூர வெறுத்தரெனினும், பொதுமக்கள் அதற்குக் காட்டிய பேராதரவைக் கண்டு வாளாவிருந்துவிட்டனர்.

அயர்லாந்து நிலச் சீர்திருத்தம்

உபாஸ் மரத்தின் ஒரு கிளையை வெற்றிகரமாக வெட்டியபின், கிளாட்ஸ்டன் அதன் இன்னொரு கிளையான நிலச் சிக்கல்மீது தமது கோடாரியைத் திருப்பினார். அயர்லாந்து, இந்தியாவைப் போல் விவசாயத்தையே பெரிதும் நம்பி வாழ்ந்த நாடாக இருந்தது. ஐரிஷ் மக்களில் ஏறக்குறைய அனைவருமே விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆக்கத் தொழில்கள் அங்கு வளராததே அதற்குக் காரணம். விவசாயிகளின் இந்தத் திக்கற்ற நிலையைப் பயன்படுத்திக்கொண்டு நிலச் சொந்தக்காரர்கள் விவசாயிகளைப் பலவகைளிலும் சுரண்டித் துன்புறுத்தினர்; நினைத்தவுடன் ஓர் உழவனை நிலத்தைவிட்டுத் துரத்தும் உரிமையை அந் நிலக்கிழார்கள் பெற்றிருந்தனர். அப்படித் துரத்தும்போது நிலத்தின் செழுமைக்காக அவ் உழவன் பட்ட பாடுகளுக்கு எள்ளளவும் நஷ்டஈடு கொடுக்க அந்நில முதலாளிகள் முன்வரவில்லை. நிலத்தில் அவ் உழவர்கள் கட்டிய வீடுகளையும் அவர்கள் அபகரித்துக் கொண்டனர். நிலச் சொந்தக்காரர்களில் பலர் இங்கிலாந்தில் வாழ்ந்தனர். எனவே, அவர்கள் நிலத்திலிருந்து வரும் வருமானமொன்றிலேயே குறியாயிருந்தனரேயன்றி, விவசாயிகளின் நலனில் சிறிதும் அக்கறைகாட்டவில்லை. இருப்பதைவிட அதிக வாரம் தருவதாகக் கூறியவர்களுக்கு அவர்கள் அடிக்கடி நிலத்தை மாற்றிக் கொடுத்து வந்தனர். தங்களது பகராட்கள் (**Agents**) மூலமே அவர்கள் வாரங்களை வசூலித்தனர். அப் பகராட்களும் பிரியம்போல் விவசாயிகளைத் துன்புறுத்தி அதிகப்படி வாரம் வாங்கினர். விவசாயிகளின் இவ்விழி நிலையைப் போக்கவே கிளாட்ஸ்டன் 1870ஆம் ஆண்டில் நிலச் சட்டம் (**Land Act**) ஒன்றை ஏற்படுத்தினார். அச்சட்டம், அல்ஸ்டர் மாகாணத்தில் நிலவிய குடியானவர் உரிமையை (**Tenant Right**) அயர்லாந்து மக்களுக்கும் வழங்கியது. தகுந்த காரணங்களின்றி ஒரு நில முதலாளி நிலத்தைச் சாகுபடி செய்துவரும் ஒரு குடியானவனை நிலத்தைவிட்டு வெளியேற்றக் கூடாதென்றும், அப்படி ஏதேனும் வெளியேற்றம் நேர்ந்தால், அக்குடியானவன் நிலத்தைச் சீர்திருத்தி வளப்படுத்தச் செய்த முயற்சிகள் யாவினுக்கும் தகுந்த நஷ்ட ஈட்டை வழங்க வேண்டுமெனவும் அச்சட்டம் கூறியது.

குடியானவர்களுக்கு நீதி வழங்கவும், சரியான நஷ்ட ஈட்டைத் தீர்மானிக்கவும் சிறப்பு நீதிமன்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. இங்ஙனம், கிளாட்ஸ்டன் நில முதலாளிகளின் கொட்டத்தை அடக்கி, அவர்கள் செய்த அட்டூழியங்களினின்றும் குடியானவர்களைக் காந்தார். ஆனால், உண்மையிலேயே இச் சீர்திருத்தம் பயன்தர வெகுகாலம் பிடித்தது.

அயர்லாந்து கல்விச் சீர்திருத்தம்

உபாஸ் மரத்தின் இரு நச்சுக்கிளைகளை வெட்டிவிட்ட இறுமாப்புடன் கிளாட்ஸ்டன் அடுத்து அதன் மூன்றும் கிளையான கல்வி நிலையைத் தாக்கினார். ஆனால், அதில் அவர் கண்டது தோல்வியேயாகும். அம்முயற்சியால் அவர் தமக்கும் தமது மந்திரிசபைக்குமே குழி தோண்டிக்கொண்டார் எனலாம். அயர்லாந்தில் வசித்த பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள், பிராட்டஸ்டெண்டு கல்லூரிகளில் கல்வி கற்க அனுமதிக்கப் படவில்லை. அவர்களுக்கென்று தனிக் கல்லூரி ஒன்றே ஒன்று தான் இருந்தது. அதுவும் தனிப்பட்ட ஒருவரால் நடத்தப் பட்டதேயன்றி அரசாங்கத்தால் நடத்தப்பெறவில்லை. பிராட்டஸ்டெண்டுகளால் நடத்தப்பட்ட ட்ரினிடி கல்லூரியிலும், அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இரு இராணியார் கல்லூரிகளிலும் கத்தோலிக்கர்கள் சேர்ந்து படிக்க மறுத்தனர். அங்ஙனம், படிப்பதை அவர்கள் ஓர் அவமானமாகக் கருதினர். கத்தோலிக்கர்களுக்கென்றே அரசாங்கம் ஒரு கல்லூரியை நிறுவ வேண்டுமென அவர்கள் விரும்பினர். அவ்விருப்பத்தை நிறைவேற்ற அவர் ஐரிஷ் பல்கலைக்கழக மசோதாவை (Irish University Bill) 1873இல் கொண்டுவந்தார். டப்ளின் பல்கலைக் கழகமொன்று தனியே ஏற்பட வேண்டுமெனவும், அதில் யார் வேண்டுமானாலும் சேரலாமெனவும் சமயச் சார்பற்ற கல்வி அங்குப் புகட்டப்படவேண்டுமெனவும் அச்சட்டம் கூறியது. அப்பல்கலைக் கழகத்தில் இணைந்த கல்லூரிகள் வேண்டுமானால் சமயக் கல்வியைப் புகட்டலாம் எனவும் அச்சட்டம் கூறியது. இச்சட்டத்தால் ஒருவரும் திருப்தியடையவில்லை. கத்தோலிக்கர்கள் மற்றவர்களோடு சேர்ந்து கல்வி பயில விரும்பவில்லை. சமயச் சார்பற்ற கல்விமுறையைப் பலர் ஏளனம் செய்தனர். முடிவில், மசோதா தோல்வியுற்றது. அதன் விளைவாகக் கிளாட்ஸ்டனும் பதவியைத் துறந்தார்.

இங்கிலாந்தில் கிளாட்ஸ்டன் செய்த சீர்திருத்தங்கள் - கல்வித் துறையில் சீர்திருத்தம்

ஜனநாயகம் ஒரு நாட்டில் நன்கு மலரவேண்டுமானால், அந் நாட்டு மக்களெல்லாம் நல்ல கல்வியறிவு பெற்றிருத்தல் இன்றி

யமையாததென்பது அறிஞர்கள் ஒப்ப முடிந்ததொரு பேருண்மை யாகும். 1832ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தம் இங்கிலாந்தில் நடுநிலை வகுப்பாருக்கு வாக்குரிமை அளித்து, ஓரளவு ஜனநாயகத்தை நாட்டில் தோற்றுவித்தது. அதையொட்டி 1833 ஆம் ஆண்டில் கல்வியறிவைப் பரப்பும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியது. அதுவரை கல்வித்துறையில் அரசாங்கம் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. மக்களுக்குக் கல்வி புகட்டும் பணியைத் திருச்சபைகளும், தன்னிச்சையாக ஏற்பட்ட அறநிலையங்களுமே செய்துவந்தன. அவைகளுக்கு ஓரளவு மானியம் வழங்குவதோடு அரசாங்கம் திருப்தி அடைந்தது. எனவே, கல்வி நிலையங்கள் பல மிகச் சீர்கேடான நிலையிலிருந்தன. செல்வர்கள் பொதுப்பள்ளிகளிலும், இலக்கணப் பள்ளிகளிலும் ஓரளவு கல்வி கற்றனர். ஆனால், ஏழை எளியவர்கள் எழுத்து வாசனையே அற்றவர்களாயிருந்தனர். 1833ஆம் ஆண்டு ஆங்கிலிகத் தேசீயக் கழகம், விவிலிய நூல் கழகம் ஆகிய இரண்டுக்கும் அரசாங்கம் 20,000 பவுன்களை மானியமாக வழங்கியது. ஆங்கிலிகத் திருச்சபை இதனால் பெருத்த இலாபமடைந்தது. ஆனால், அது ஏழைகள் வாழுமிடங்களில் கல்வியைப் பரப்ப ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. அரசாங்கத்தின் பணம் பெரிதும் வீணாக்கப்பட்டது. 1839இல் மானியத் தொகை 30,000 பவுன்களாக உயர்த்தப்பட்டது. அதே சமயத்தில், அரசாங்க உதவிபெற்ற கல்வி நிலையங்களைக் கண்காணிக்கப் பிரிவி கவுன்சில் கமிட்டியொன்றும் ஏற்படுத்தப்பட்டது. பிரிவி கவுன்சிலின் தலைவர் கல்விக் கொள்கையை வழிநடத்தும் பணியை மேற்கொண்டார். கல்வி நிலையங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க இரு தணிக்கையதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கே ஷட்டில்வொர்த் (Kay Shuttleworth) என்ற பிரிவி கவுன்சில் தலைவர் மாணவ ஆசிரியர்களைக் கொண்டு கல்வியைப் பரப்பவும், அரசாங்க மானியத்தோடு மக்களிடமிருந்து பணம் வசூலித்துப் பள்ளிகளுக்கு உதவியும் பல நற்பணிகளைச் செய்தார். பாமர்ஸ்டன் பிரதமராயிருந்தபோது அவர் கல்விக்காகச் செலவிடப்படும் தொகையைக் குறைக்க எண்ணி, நியூகாஸில் கமிஷன் என்ற ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். அக்குழு நன்கு ஆராய்ந்தபின் கல்வித்துறையில் காணப்பட்ட பல ஊழல்களை வெளியிட்டது. நாட்டின் குழந்தைகளில் பத்திலொரு பகுதியினரே கல்வி பெற்றன ரென்பதும், பள்ளிகள் யாவும் மிகக் கேவலமாக நடத்தப்பெற்றன என்பதும் நன்கு வெளிப்பட்டன. எனவே, 1862இல் கவுன்சிலின் தலைவராக வந்த ராபர்ட்லவே என்பார், பள்ளிகள் தாம் வெளிப் படுத்திய திறமைக்கும் பலனுக்கும் ஏற்பவே மானியம் அளிக்கப் படும் என அறிவித்தார். பள்ளிகளின் திறமையை நிர்ணயிக்கப்

பள்ளித் தணிக்கையாளர்கள் சோதனைகள் நடத்தினர். அதனால் பள்ளி மாணவர்கள் பாடங்களை உருப்போடுவதிலேயே கவனத்தைச் செலுத்தினரேயன்றி, அறிவு வேட்கையையும், ஒழுக்க வளர்ச்சியையும் சிறிதும் கவனிக்கவில்லை.

கிளாட்ஸ்டன் பதவிக்கு வந்தபோது நாட்டில் கல்வியைப் பரப்ப வேண்டுமென்ற ஊக்கம் மிகுதியாகக் காணப்பட்டது. ஐரோப்பாவில் மெச்சத்தக்க முறையில் பிரஷ்யா முன்னேற்றம் அடைந்ததற்கும், அமெரிக்காவில் வடக்கத்தியர் தெற்கத்தியரை வென்றதற்கும் அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட நல்ல கல்வித் திட்டமே காரணம் என்பதை ஆங்கிலேயர் உணர்ந்தனர். கல்வி வளர்ச்சியைத் தடைசெய்து வந்த பாமர்ஸ்டன் 1865இல் இறந்தார். 1867இல் ஏற்பட்ட இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டமானது ஏழைத் தொழிலாளிகளுக்கு வாக்குரிமையளித்ததால் அவர்களுக்கு எழுத்தறிவிப்பது இன்றியமையாததாகி விட்டது. 'உங்கள் எஜமானர்களுக்குக் கல்வி புகட்டுங்கள்' **(Educate your masters)** என லவே என்னும் கவுன்சில் தலைவர் கூறலானார். கட்டாய ஆரம்பக் கல்வியை யாவருக்கும் வழங்கும்படி ஜோஸப் சேம்பர்லின் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட தேசியக் கல்விக் கழகம் **(National Educational League)** அரசாங்கத்தை வற்புறுத்தியது. இதையெல்லாம் கவனித்த ஃபார்ஸ்டர் **(Forster)** என்ற கல்வியமைச்சர், கல்விச் சட்டமொன்றை (Education Act) 1870ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார். அச் சட்டத்தின் மூலம் கல்வியைத் தேசியமயமாக்கிவிட அவர் முற்படவில்லை. அதற்குப் பதிலாக ஏற்கனவே இருந்த முறையைச் சிறிது ஒழுங்குபடுத்தி அமைத்தார். பழைய தன்னிச்சைக் கல்விக் கழகங்களுக்கு மானியம் வழங்குவதை அவர் நிறுத்தவில்லை. அதே சமயத்தில், அக் கல்விக் கழகங்கள் ஏற்படுத்தத் தவறிய பள்ளிகளை நிறுவும் கடமையை அரசாங்கம் மேற்கொள்ளுமென அறிவித்தார். பள்ளியில்லாத இடங்களில் புதிய பள்ளிகளை ஏற்படுத்த அக் கழகங்களுக்கு ஓராண்டு அவகாசத்தை அளித்தார். அதற்குப் பின்னர் பள்ளியில்லாத எல்லா இடங்களிலும் அரசாங்கமே பள்ளிகளை நிறுவுமென்றும், அவற்றை நடத்தும் பொறுப்பை அது ஆங்காங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர்க் குழுக்களிடம் (Local Boards) ஒப்புவிக்குமென்றும், கல்விக்காக அக் குழுக்கள் மக்கள் மீது வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெறுமென்றும் அறிவித்தார். கட்டாயக் கல்வி இதனால் நாட்டில் ஏற்படவில்லை. ஏனெனில், கல்வியைக் கட்டாயமாக்குவதும் ஆக்காததும் உள்ளூர்க் குழுக்களின் விருப்பத்திற்கே விடப்பட்டது. இலவசக் கல்வியும் புகுத்தப்படவில்லை. ஏனெனில், சம்பளம் கட்ட இயன்றோர் சம்பளம்

கட்டினர். சமயச் சார்பற்ற கல்வியும் போதிக்கப்படவில்லை. ஏனெனில், பள்ளிகளில் சமயக்கல்வி புகட்டப்படலாமென இச் சட்டம் கூறியது. ஆங்கிலிகச் சமயத்துக்கு இணங்காதார் சமயக் கல்வி புகட்டத் தங்களது வரிப்பணம் பயன் படுவதைக் கண்டித்தனர். அவர்களைச் சமாதானம் செய்ய கௌபர் டெம்பிள் (Cowper Temple) என்பார் ஒரு திருத்தம் கொணர்ந்தார். அதன் படி பள்ளிகளில் விவிலிய நூல் போதிக்கப்படலாம். ஆனால், குறிப்பிட்ட ஒரு மதப் பிரிவின் ஒழுங்கு முறைச் சட்டங்கள் போதிக்கப்படலாகாது. ஃபார்ஸ்டரின் இச் சட்டம் கல்வியை நாடெங்கும் பரப்பியது. ஆனால், தன்னிச்சைக் கல்விக் கழகங்கள், உள்ளூர்க் குழுக்களால் நடத்தப்பட்ட பள்ளிகள் வரிகள் மூலம் பயன்படுவதைக் கண்டு பொருமையுற்றன. அதே சமயத்தில் அக் கல்விக் கழகங்களுக்கு அதிகமான மானியம் வழங்கியதை இணங்காதார் (Nonconformists) பெரிதும் கண்டித்தனர். தேசியக் கல்விக் கழகமோவெனின், கல்வி தேசியமயமாக்கப்பட வேண்டுமெனவும் அது கட்டாயமானதாகவும், இலவசமானதாகவும், சமயச் சார்பற்றதாகவும் இருக்கவேண்டுமெனவும் கூறியது. எனினும், வரிகள் மூலம் கல்வியைப் பரப்பவும், உள்ளூர்க் குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் கல்வியைக் கொணரவும், ஏழைகளுக்கு இலவசக் கல்வி வழங்கவும், கட்டாயக் கல்வி வழங்கவும் ஃபார்ஸ்டரின் சட்டம் துணை புரிந்தது. கல்வித் துறையில் அது பெரியதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்திய தென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மேலும், கிளாட்ஸ்டனின் மந்திரி சபை ஆங்கில உயர்தரக் கல்வியைச் சீர்திருத்தம் செய்தது. 1868இல் ஏற்பட்ட பொதுப் பள்ளிகள் சட்டமானது (Public Schools Act) ஏழு பெரிய பள்ளிகளின் நிருவாக சபைகளைத் திருத்தி அமைத்தது. 1869இல் ஏற்பட்ட மானியப் பள்ளிகள் சட்டம் (Endowed School Acts) தர்மத்தால் நடைபெற்ற பள்ளிகளை மேற்பார்வையிட மூன்று ஆணையாளர்களை நியமித்தது. வழக்கிழந்துவிட்ட பழைய தர்ம நிதிகளைக் கல்விக்குப் பயன்படுத்த அவ் வாணையாளர் உரிமை பெற்றனர். 1871இல் பல்கலைக் கழகத்தில் நுழைவதற்காக நடத்தப்பெற்ற சமயச் சோதனைகள் யாவும் நீக்கப்பட்டன. மதக் கல்வி பெறுவோர் மட்டுமே இச்சோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

சிவில் சர்விஸ் சீர்திருத்தம்

கிளாட்ஸ்டன் காலம்வரை அரசாங்க சிவில் உத்தியோகங்களை வழங்கும் அதிகாரத்தைக் காபினெட் அமைச்சர்களே அனுபவித்து வந்தனர். அவ் வமைச்சர்கள் திறமையைப்பற்றிச்

சிறிதும் அக்கறை கொள்ளாது, தமக்கு உதவியாக இருந்த கட்சிக்காரர்களேயே பெரும் பதவிகளில் நியமிப்பது வழக்கமாக இருந்தது. அதனல், திறமையில்லாத பலர் செல்வாக்கின் மூலம் பெரிய அதிகாரிகளாக விளங்கினர். நாட்டின் நிருவாகத் திறமை பெரிதும் பாதிக்கப்பட்டது. முக்கியமாக, இந்திய சிவில் சர்வீசில் உதவாக்கரை ஆட்களெல்லாம் இடம் பெற்றனர். 1857ஆம் ஆண்டுப் பெருங்கலகத்திற்குப் பின் இந்திய சிவில் சர்வீசுக்கு நியமிக்கப்படுவோர் ஒரு போட்டித் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்ற நியதி ஏற்பட்டது. இந்த முறையைக் கிளாட்ஸ்டன் இங்கிலாந்தின் சர்வீசிலும் கையாண்டார். 1871இல் அவர் பிறப்பித்த ஒரு கவுன்சில் உத்திரவுப்படி, வெளிநாட்டு இலாகாவைத் தவிர மற்றைய இலாகாக்களில் பதவிபெற விரும்புகின்றவர்களெல்லாம் போட்டித் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்று ஏற்பட்டது. இம் முறையில், புத்தகப் பூச்சியாய் இல்லாத ஒரு சில திறமையாளர்கள் சிவில் சர்வீசில் இடம் பெற முடியாமற் போயினும் பொதுவாகத் திறமை மிக்கோரே பெரும் பதவிகளைப் பெற வழியேற்பட்டது. ஆங்கில சிவில் சர்வீசின் திறமை உலகம் பாராட்டக்கூடிய ஒன்ருக இருப்பதற்கு இம் முறையே காரணமாகும்.

இராணுவச் சீர்திருத்தம்

கிளாட்ஸ்டனின் ஒப்பற்ற போர் அமைச்சரான கார்டுவெல் **(Cardwell)** என்பவர் ஆங்கில இராணுவத்தைத் தற்கால ரீதியில் முற்றிலும் மாற்றி அமைத்தார். அதற்கு முன்பெல்லாம் இராணுவத்தில் பதவியும் பட்டமும் பணங் கொடுத்துப் பெறுவதே வழக்கமாயிருந்தது. செல்வாக்கு மிக்கவர்களே பதவி உயர்வு பெற்றனர். சேனுதிபதி தம் விருப்பப்படியே பதவிகளை விற்றுவந்தார். போர் அமைச்சருக்கு அவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரமெதுவுமில்லை. அதனல், இராணுவத்தின் திறமை குன்றியது. கிரிமியப் போரின்போது பிரிட்டிஷ் படையினரின் பலவீனம் தெற்றென விளங்கியது. பிரஷ்யப் படைகள் ஐரோப்பாவில் பெற்ற வெற்றிகள் பிரிட்டிஷாரின் கண்களைத் திறந்தன. இராணுவத்தை நவீன முறையில் விஞ்ஞான ரீதியாக அமைக்க வேண்டுவதன் இன்றியமையாமையைக் கார்டுவெல் நன்கு உணர்ந்தார். எனவே, அவர் சேனுதிபதியைப் போர் அமைச்சரின் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தார். பாராளுமன்றம் அமைச்சர் மூலம் சேனுதிபதியைக் கட்டுப்படுத்தும் உரிமை பெற்றது.

இந்தியப் பெருங்கலகம், கிரிமியப் போர் இவைகளில் பிரிட்டிஷ் படைகள் எய்திய சில தோல்விகளைக் கண்ட பின்,

நிலையான ஒரு படை இங்கிலாந்தில் என்றும் இருக்கவேண்டிய தன் அவசியத்தைப் பிரிட்டிஷார் உணர்ந்தனர். குடியேற்ற நாடுகளிலிருந்து 20,000 வீரர்களைக் கார்டுவெல் தாய்நாட்டுக்குக் கொணர்ந்தார். மேலும் குறுகிய கால இராணுவப் பயிற்சி முறையை அவர் ஏற்படுத்தினார். அதன்படி வலிமை பெற்ற குடிமக்களனைவரும் ஆறு ஆண்டுகளுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப்பெற்றபின் மீண்டும் அமைதியான வாழ்வில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். தேவை ஏற்பட்டபோது அவர்கள் போருக்கு அழைத்துக் கொள்ளப்பட்டனர். இம் முறையால் சுருங்கிய செலவில் பெரும் இராணுவமொன்றை அரசாங்கம் திரட்ட முடிந்தது. பயிற்சி பெற்ற அனைவரும் ஆறு ஆண்டு களுக்கு நிலைப்படையில் (**Reserve Force**) பணி புரியுமாறும் வற்புறுத்தப் பட்டனர். எனவே, நிலைப்படையின் எண்ணிக்கை அதிகமாயிற்று. மேலும், நிலைப் படைக்கும் நாட்டுப் படைக்கும் (**Militia**) உள்ள தொடர்பை அதிகரிக்கக் கார்டுவெல் முயன்றார். நாட்டுப் படையை 28-ஆவது படை, 32-ஆவது படை என எண்களால் குறிப்பதைவிட்டு, பர்மிங்ஹாம் படை, ஸ்டிராபோர்ட் ஷையர் படை என்று பிரதேசப் பெயர்களால் அமைத்தார். இப் பிரதேசப் படையில் ஒருபகுதி வெளிநாட்டில் சேவை புரியும் போது, இன்னொரு பகுதி உள்நாட்டில் பயிற்சி பெற்றுவரும். தேவைக்கேற்ப வெளிநாட்டுப் படைக்கு உள்நாட்டுப் படை இராணுவ வீரர்களை அனுப்பி கொண்டேயிருக்கும்.

இராணுவக் கமிஷன்களை விலைக்கு விற்கும் பழக்கத்தைக் கார்டுவெல் ஒழித்தார். விலைக்கு வாங்கப்பட்ட கமிஷன்களை எல்லாம் அரசாங்கம் திரும்பப் பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டது. அதன்பின், அப் பதவிகளை அது திறமையும் தகுதியும் உள்ளவர்களுக்கே வழங்கியது. இந்த முறையைப் பிரபுக்கள் சபையினர் கடுமையாக எதிர்த்தனர். ஆனால், கிளாட்ஸ்டன் இராணுவப் பதவிகளை விற்கும்முறையை வழங்கிய ஆன் இராணியாரின் ஆணையொன்றை ரத்து செய்யும்படி விக்டோரியா இராணியாரைத் தூண்டிவிட்டார். இராணியாரும் தமது சிறப்பதிகாரத்தைப் பயன் படுத்துவதில் பெருமை கொண்டு அந்த ஆணையை ரத்து செய்து, பதவிகளை விற்கும் வழக்கத்தை ஒழித்தார்.

மேலும், கார்டுவெல் காலாட் படையினருக்கு நவீனத் துப்பாக்கிகளை வழங்கினார்; பீரங்கிப் படையைப் பெருக்கினார்; நிலைப் படையில் 25 படைப் பகுதிகளைச் சேர்த்தார். காஸ்சன் (Goschen) என்பவரால் கப்பற் படையும் சீர்திருத்தி அமைக்கப் பட்டது. கடற்படையானது ஓர் அமைச்சரின் அதிகாரத்தின்கீழ்க்

கொண்டுவரப்பட்டது. கடற்படை இலாகாவின் முதற் பிரபு (First Lord of the Admiralty) என்ற அவ்வமைச்சருக்கு உதவியாக ஒரு கடற் படைக் குழு (Board of Admiralty) ஏற்படுத்தப்பட்டது. இங்ஙனம், இராணுவத்தின் திறமையும் பலமும் பல வகையிலும் பெருகியது.

வேறு பல சீர்திருத்தங்கள்

கிளாட்ஸ்டனின் முதல் மந்திரி சபையானது மேலும் பல சீர்திருத்தங்களைச் செய்தது. 1872இல் ஏற்பட்ட இரகசிய வாக்களிப்புச் சட்டம் (Ballot Act) ஏழை எளியவர்கள் நிலப் பிரபுக்களின் பயமுறுத்தலின்றிச் சுதந்திரமாக மறைவில் நின்று தம் வாக்குகளை வழங்க உதவி செய்தது. அதே ஆண்டில் ஏற்பட்ட அனுமதிக்கும் சட்டம் (Licensing Act) மது அருந்தும் பழக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தியது. கலப்பு மதுபானங்களை விற்கும் வழக்கத்தைத் தடுக்க மாஜிஸ்திரேட்டுகளிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களே மது விற்கவேண்டுமென அச்சட்டம் கூறியது. மதுக் கடைகள் இரவில் லண்டனில் 12 மணிக்கும், ஏனைய நகர்களில் 11 மணிக்கும் மூடப்படவேண்டுமெனவும் அது கட்டாயப்படுத்தியது. தனி மனித உரிமையில் இச் சட்டம் பெரிதும் தலையிடுவதாகச் சிலர் நினைத்தனர். 1873இல் ஏற்பட்ட தலைமை நீதிமன்றச் சட்டம் (The Supreme Court of Judicature Act) அதுகாறும் தனித்தனியே நீதி வழங்கிவந்த எக்ஸ்செக்கர் நீதிமன்றம், சான்சரி நீதிமன்றம், பொது விண்ணப்ப நீதிமன்றம் போன்ற பலவற்றையும் ஒன்றாக இணைத்து ஒரு தலைமை நீதிமன்றத்தை ஏற்படுத்தியது. அந் நீதிமன்றம் உயர்நீதிமன்றமெனவும், மேல்முறையீட்டு நீதிமன்றமெனவும் (High Court and Court of Appeal) இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பழைய முறையீட்டு நீதிமன்றங்களெல்லாம் தலைமை முறையீட்டு நீதிமன்றத்தோடு இணைக்கப்பட்டன. அதன் தீர்ப்பே முடிவானதென அறிவிக்கப்பட்டது ஷெல்போர்ன் என்ற தலைமை நீதிபதி இரண்டாவது மேல்முறையீட்டு நீதிமன்றம் இருக்கக் கூடாதென்றே மேற்படி சட்டத்தைக் கொணர்ந்தார். ஆனால், அவரது விருப்பத்திற்கு மாறாகப் பிரபுக்கள் சபையின் ஒரு குழு, மேல்முறையீட்டை விசாரிக்கும் உரிமையைப் பெற்றது.

கிளாட்ஸ்டனின் வெளிநாட்டுக் கொள்கை அவரது முதல் மந்திரி சபையின் வீழ்ச்சி

கிளாட்ஸ்டனின் முதல் மந்திரிசபை இயற்றிய பல சீர்திருத்தங்களால் நிலப்பிரபுக்கள், படைவீரர்கள், திருச்சபையினர், இணங்காதார், தொழிலாளர்கள், மது வியாபாரிகள் முதலிய பல

வகுப்பினர்களின் பகைமையை அது தேடிக்கொண்டது. மேலும், அதன் வெளிநாட்டுக் கொள்கை யாருக்கும் திருப்தி தருவதாய் இல்லை. ஃபிரான்சுக்கும், ரஷ்யாவுக்கும் நடைபெற்ற போரில் பிரிட்டன் நடுநிலைமை வகித்தது தவறு எனப் பலருக்குத் தோன்றியது. இரு நாடுகளுக்கும் சமாதானத்தை ஏற்படுத்தவும், பெல்ஜியத்தின் நடுநிலையைக் காக்கவும் வெளிநாட்டமைச்சர் கிரென்வில் (Grenwille) முயன்ருர். ஆனல், படை பலத்துடன் சென்று மத்தியஸ்தம் செய்திருந்தால் மட்டுமே அவரது முயற்சி பலித்திருக்கும் என்று பலரும் உணர்ந்தனர். ஃபிரெஞ்சு பிரஷ்யப் போரில் கலந்து கொள்ளாததால் பிரிட்டனின் கௌரவம் குறைந்தது. ரஷ்யா பிரிட்டனேடு 1856இல் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு விரோதமாகக் கருங்கடலில் தன் கடற் படையைப் பெருக்க ஆரம்பித்தது. அலபாமா என்ற கப்பலைப் பிரிட்டன் வெளிவிட்டதற்காக நடைபெற்றுவந்த வழக்கும் பிரிட்டனுக்குப் பாதகமாகவே முடிந்தது. 5 மிலியன் பவுன்களைப் பிரிட்டன் நஷ்ட ஈடாக வழங்க வேண்டுமெனச் சர்வதேச மத்தியஸ்தக் குழு தீர்ப்புக் கூறிவிட்டது. இந் நிகழ்ச்சிகள் யாவும் கிளாட்ஸ்டனின் மந்திரிசபையின் நற்பெயரைக் கெடுத்து விட்டன. இராணியாரைப் பொது விவகாரங்களில் கலந்து கொள் ளும்படி வற்புறுத்தியதால், கிளாட்ஸ்டன் அவரது நன்மதிப்பை யும் இழந்தார். நாட்டில் அவரது செல்வாக்குப் பெரிதும் குறைந் தது. இன்ன பல காரணங்களால் கிளாட்ஸ்டன் பாராளுமன் றத்தை 1874இல் கலைத்தார். அடுத்து நடைபெற்ற தேர்தலில் டிஸ்ரேலியும் அவரது கட்சியினரும் பெரும்பான்மையான வாக்கு களைப் பெற்று அரசாங்கத்தைக் கைப்பற்றினர்.

கிளாட்ஸ்டனின் இரண்டாவது மந்திரிசபையும் அவரது குடியேற்ற நாட்டுக் கொள்கையும்

1880ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் மீண்டும் இங்கிலாந்தின் பிரதமரானர். அச்சமயத்தே அவரது கவனமெல்லாம் குடியேற்ற நாடுகள் மீதே அதிகமாகப் பாய்ந்தது. குடியேற்ற நாட்டுக் கொள் கையில் அவர் டிஸ்ரேலிக்கு முற்றிலும் மாறுபட்டவராயிருந்தார். கூடியவரை குடியேற்ற நாடுகளில் போர் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்பதும். அவைகளுக்குக் கூடுமானவரை சுயாட்சியை வழங்கிவிட வேண்டுமென்பதும் அவரது முக்கியக் கொள்கை களாயிருந்தன.

தென் ஆப்பிரிக்காவில் போர்

கிளாட்ஸ்டனின் இரண்டாவது அமைச்சரவையினைத் தொல்லை கள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு துன்புறுத்தின. உள்நாட்டில்

வறுமை, வேலையில்லாத திண்டாட்டம், ஆக்கத் தொழில் மந்தம் முதலியவைகளால் வருந்திய பிரிட்டிஷ் மக்கள் வெளிநாடுகளிலும் பல சிக்கல்களைத் தீர்க்கவேண்டி வந்தது. முதலில் தென் ஆப்பிரிக்காவில் தொல்லை மூண்டது. டிஸ்ரேலி டிரான்ஸ்வால் நாட்டைப் பிரிட்டிஷ் பேரரசில் சேர்த்துக்கொண்டதைக் கிளாட்ஸ்டன் கண்டித்து வந்தார். எனவே, கிளாட்ஸ்டன் பிரதமரானவுடன் தங்களுக்குச் சுயாட்சியை வழங்கிவிடுவாரென டிரான்ஸ்வால் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அவர்கள் டிஸ்ரேலியின் செயலை ஒப்புக்கொண்டதாகத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் கிளாட்ஸ்டனிடம் கூறியிருந்ததால் அவர் வாளா இருந்துவிட்டார். அதனால், கோபமுற்ற போயர்கள் புரட்சியில் இறங்கினர். சர் ஜார்ஜ் கோலே (Sir George Colley) என்பவரது தலைமையில் போரிட்ட பிரிட்டிஷ் படையைப் போயர்கள் மஜூபா குன்று (Majuba Hill) என்னுமிடத்தில் முறியடித்தனர். கோலே அப்போரில் மாண்டார். கிளாட்ஸ்டன் சர் பிரடரிக் ராபர்ட்ஸ் என்பவரை ஒரு படையுடன் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினார். ஆனால், அவர் தென் ஆப்பிரிக்காவை அடையுமுன்பே கிளாட்ஸ்டன் தமது கருத்தை மாற்றிக் கொண்டார். போயர்களுக்குச் சுயாட்சியை வழங்கி விடுவதென அவர் தீர்மானித்துவிட்டார். பிரிடோரியாவில் கூட்டப்பட்ட ஒரு சபையானது (Convention of Pretoria) போயர்களுக்கு, இரு நிபந்தனைகளின்பேரில் சுயாட்சியை வழங்கியது. அதன்படி அவர்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது. தங்கள் நாட்டில் வந்து குடியேறும் ஏனைய ஐரோப்பியர்களுக்கும் அவர்கள் சம உரிமைகளை வழங்க வேண்டும். இங்ஙனம், கிளாட்ஸ்டன் சிறு நாடுகளின் சுய நிர்ணய உரிமையை மதித்து நடந்து கொண்டார். எனினும், அவரது செய்கை பிரிட்டனின் பெருமைக்கு இழுக்கானதென்று பலர் குறை கூறினர்.

அயர்லாந்தில் தொல்லை

ஐரிஷ் மக்களைச் சமாதானப்படுத்தக் கிளாட்ஸ்டன் தமது முதல் மந்திரி சபைக் காலத்தே செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. 1879-80இல் ஏற்பட்ட உருளைக்கிழங்குப் பஞ்சத்தால் நிலைமை கட்டுக்கடங்காததாயிற்று. குத்தகைப் பணத்தைக் கொடுக்க முடியாத குடியானவர்கள் ஏராளமாகப் பண்ணைகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அங்ஙனம், விரட்டியடிக்கப்பட்ட உழவர்கள் பட்டினியால் வாடினர். பசி ஆற்றாது அவர்கள் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டனர். நிலப்பிரபுக்களை எதிர்க்கப் பார்னெல் (Parnel) என்னும் புரட்சித் தலைவர் நிலச்சங்கம் (Land League) ஒன்றை நிறுவினார். அதில் சேர்ந்தவர்கள் ஒருவரோ

டொருவர் போட்டியிட்டுக்கொண்டு குத்தகையை ஏற்றுவதில்லை யென்றும், இரக்கமற்ற நிலப்பிரபுக்களுக்குக் குத்தகைப் பணத்தைக் கொடுக்க மறுப்பதென்றும், தமக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டனர். நிலப்பிரபுக்கள், ஒரு குடியானவனை நிலத்தை விட்டு வெளியேற்றியபோது, அந்நிலத்தைச் சாகுபடி செய்யச் சென்ற வேறு ஒருவனை நிலச் சங்கத்தார் தள்ளி வைத்தனர். அவனோடு அவர்கள் எவ்விதத் தொடர்பு கொள்வதையும் நிறுத்தினர். அங்ஙனம், முதலில் தள்ளி வைக்கப்பட்டவர் தளபதி பாய்காட் (Boycott) என்பவர். அதிலிருந்துதான் பாய்காட் என்ற சொல் ஆங்கில அகராதியில் இடம் பெற்றது.

அயர்லாந்தின் குறைகளை நீக்குமாறு ஆங்கிலேயர்களைத் தூண்ட ஆங்கிலப் பாராளுமன்றத்திலிருந்த அறுபது ஐரிஷ் உறுப்பினர்களும் ஒரு விசித்திர முறையைக் கையாண்டனர். அயர்லாந்துப் பிரச்சினையைத் தவிர வேறொன்றையும் கவனிக்க முடியாதபடி அவர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பாராளுமன்றத்தில் பேசிக் கொண்டேயிருந்தனர். 1881இல் அயர்லாந்துக் கலகக்காரரை ஒடுக்க அடக்குமுறைச் சட்டம் (Coercion Act) ஒன்றை ஃபார்ஸ்டர் என்ற ஐரிஷ் கவர்னர் கொணர்ந்தபோது மூன்று நாட்கள் வரை அச் சட்டம் நிறைவேறாதவாறு ஐரிஷ் உறுப்பினர்கள் பேசிக்கொண்டே யிருந்தனர். முடிவில், அது சட்டமாயிற்று. அங்ஙனம், அனாவசியமாகப் பேச்சை நீட்டிக்கொண்டே செல்லும் சொற்பொழிவாளர்களின் வாதங்களை ஒரே நொடியில் முடித்து விடும் அதிகாரத்தைப் (to apply the closure) பொதுமக்கள் சபையின் தலைவருக்குக் கிளாட்ஸ்டன் வழங்கினார்.

முதல் நிலச்சட்டத்தின் குறைகளைப் போக்கக் கிளாட்ஸ்டன் 1881இல் இரண்டாம் நிலச் சட்டமொன்றைக் கொணர்ந்தார். அதன்படி குத்தகைப் பணத்தைத் தனிப்பட்ட நில நீதிமன்றங்கள் தீர்மானிக்க வேண்டும். தீர்மானிக்கப்பட்ட குத்தகையைச் செலுத்தும் வரையில் எந்தக் குடியானவனையும் பிரபுக்கள் நிலத்தை விட்டு விரட்டக் கூடாது. குத்தகை உரிமைகளை விற்கக் குடியானவர்களுக்கு உரிமை உண்டு. இந்தச் சீர்திருத்தங்கள் பார்னலுக்குப் பிடிக்கவில்லை. எனவே, நில நீதிமன்றங்களின் உதவியை நாட அவரது ஆட்கள் மறுத்துவிட்டனர். அதனால், வெகுண்ட கிளாட்ஸ்டன் பார்னலையும் அவரது சகாக்களையும் சிறையிடும் அதிகாரத்தை ஃபார்ஸ்டருக்கு வழங்கினார். ஃபார்ஸ்டர் அங்ஙனமே புரட்சித் தலைவர்களைச் சிறைப்படுத்தினார். உடனே நாடெங்கும் கொலையும் கொள்ளையும் தாண்டவமாட ஆரம்பித்தன. அடக்குமுறையை இயல்பாகவே விரும்பாத கிளாட்ஸ்டன் உடனே பார்னலோடு ஒரு சமரச உடன்பாட்டைச் செய்து

கொண்டார். அது கில்மெயின்ஹாம் உடன்படிக்கை (Kilmainham Treaty) எனப்பட்டது. அதன்படி குத்தகைப் பணப் பாக்கிகளைத் தர இயலாத குடியானவர்களுக்கு ஆதரவு அளிக்கும் சட்டமொன்றை இயற்ற கிளாட்ஸ்டன் ஒப்புக்கொண்டார். அதே சமயம் அத்துமீறிய கலகத்தை நிறுத்துவதாகப் பார்னெல் ஒப்புக் கொண்டார். எனவே, பார்னெல் விடுதலை பெற்றார். இதையறிந்த ஃபார்ஸ்டர் தம் பதவியை ராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக பிரிடரிக் காவண்டிஷ் பிரபு (Lord Frederick Cavendish) என்பார் அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டார். அவரும் அவரது செயலாளர் பர்க் என்பவரும் போனிக்ஸ் பூங்காவில் நடந்து சென்றபோது ஒரு சில காலிகள் அவர்களைத் தாக்கிக் கொன்றனர். இதனால் வெகுண்ட பிரிட்டிஷ் சர்க்கார் மேலும் கடுமையான நடவடிக்கைகளைக் கலகக்காரர்கள்மீது எடுத்துக் கொண்டது. எனினும், கிளாட்ஸ்டன் அயர்லாந்தியரை எங்ஙனம் திருப்தியடையச் செய்யலாமென யோசித்துக்கொண்டேயிருந்தார். இச்சமயத்தில் சேம்பர்லெய்ன் என்பவரால் கொண்டுவரப்பட்ட மூன்றாம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தை அவர் 1884இல் நிறைவேற்றினார். அதனால், விவசாயத் தொழிலாளிகளும் வாக்குரிமை பெற்றனர்.

எகிப்தில் தொல்லை

பிரிட்டிஷாருக்கு சூயெஸ் கால்வாயின் பங்குகளை விற்ற கெடிவ் இஸ்மாயில் என்ற எகிப்திய மன்னர் தமது ஊதாரித்தனத்தால் மேன்மேலும் பிரிட்டிஷாரிடமிருந்தும், ஃபிரெஞ்சுக்காரரிடமிருந்தும் கடன் வாங்கிய வண்ணமிருந்தார். கடைசியில் இவர் கடனைத் திருப்பித் தர இயலாத நிலையை அடைந்தார். உடனே அவருக்குக் கடன் கொடுத்த பிரிட்டிஷ் ஃபிரெஞ்சு பாங்குதாரர்கள் தங்கள் தங்களது அரசாங்கங்களை எகிப்தில் தலையிடும்படி வேண்டிக் கொண்டனர். அதற்கேற்ப எகிப்தின் பொருளாதாரத்தைப் பிரிட்டிஷ், ஃபிரெஞ்சு அரசாங்கங்கள் இரண்டும் சேர்ந்து தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தன. இஸ்மாயில் இக்கட்டுப்பாட்டை எதிர்த்ததால் அவரது மகனை டிவிபிக் (Tewfik) பாஷா, எகிப்தின் மன்னராக்கப்பட்டார். இந்நிலையில் எகிப்தில் அந்நிய ஆதிக்கத்தையொழிக்க அராபி பாஷா என்பவரின் தலைமையில் ஒரு புரட்சி கிளம்பிற்று. அலெக்சாண்டிரியா நகரில் பல ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். கிளாட்ஸ்டன் வேண்டா வெறுப்பாகக் கடற்படையொன்றை அலெக்சாண்டிரியாவுக்கு அனுப்பினார். அதன்பின் அனுப்பப்பட்ட உல்ஸி (Wolsey) என்னும் தளகர்த்தர் அராபி பாஷாவை டெல் எல் கபீர் (Tel el kabir) என்னுமிடத்தில் தோற்கடித்தார்.

ஐரோப்பியரின் உடைமைகளைக் காக்கப் பிரிட்டிஷ் படையொன்று கெய்ரோவில் தங்கியது.

இச் சமயத்தில் கெடீவ் இஸ்மாயில் சூடான் நாட்டைப் படையெடுத்தார். கார்டன் (Gordon) என்ற பிரிட்டிஷ் தளகர்த்தரின் உதவியால் அவர் சூடானைக் கைப்பற்றினார். ஆனால் கார்டன் சூடானை விட்டு நீங்கிய உடனேயே அங்கு ஒரு மகமதியத் தலைவர் தம்மை ஒரு மஹ்தி (Mahdi) அல்லது விடுவிப்பவர் எனக் கூறிக்கொண்டு ஒரு படையுடன் வந்து சூடானைக் கைப்பற்றிக் கொண்டார். எகிப்திலிருந்து ஹிக்ஸ் என்பவரின் தலைமையில் வந்த பிரிட்டிஷ் படையையும் மஹ்தி தோற்கடித்தார். சூடானிலிருந்த பிரிட்டிஷ் படைகளைத் திருப்பி வரவழைக்க வேண்டி கிளாட்ஸ்டன் 1884இல் தளபதி கார்டனை அங்கு அனுப்பினார். கார்டன் கார்ட்டும் நகர்வரை சென்றார். அதன் பின் அவர் சூடானைவிட்டு வெளியேறுவதற்குப் பதிலாக அங்கேயே முகாம் போட ஆரம்பித்தார். எகிப்திலிருந்து உதவி வருமென்றும், அதைக் கொண்டு சூடானைக் கைப்பற்றிவிடலாமெனவும் அவர் ஆசை கொண்டார். ஆனால், அப்படி மேல்உதவி ஒன்றும் அனுப்பக் கிளாட்ஸ்டன் எண்ணவில்லை. வேண்டுமென்றே அவர் உதவிப் படைகளை அனுப்புவதில் காலந்தாழ்த்தி வந்தார். கடைசியாக அவர் ஒரு படையைக் கார்டனை விடுவிக்க அனுப்பினார். ஆனால், அதற்குள் மஹ்தி கார்டுமைக் கைப்பற்றிக் கார்டனையும் கொன்றுவிட்டார். பல ஆங்கிலேயர்கள் கார்டுமில் உயிரிழந்தனர். கார்டும் படுகொலை, கிளாட்ஸ்டனின் மந்திரி சபையின் நற்பெயரைப் போக்கியது. 1885இல் அதன் பட்ஜெட் ஒன்று பாராளுமன்றத்தில் தோற்றதால் கிளாட்ஸ்டன் ராஜினாமா செய்தார்.

கிளாட்ஸ்டனின் மூன்றாவது மந்திரி சபை : ஐரிஷ் சுயாட்சி மசோதா

1885இல் கிளாட்ஸ்டன் பதவியைவிட்டு விலகிய பின்னும் தேர்தல்கள் நடைபெற வழியில்லை. கிளாட்ஸ்டன் ஏற்படுத்திய கவுன்டிகள் சட்டப்படி புதிய வாக்காளர்கள் பட்டியல் இன்னும் தயாராகவேண்டியிருந்தது. அவ் இடைவேளையில் சாலிஸ்பரி பிரபு என்னும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். பின்னர் ஏற்பட்ட தேர்தலில் தாராளக் கொள்கையினர் பெருவாரியாக வெற்றி பெற்றதால் கிளாட்ஸ்டன் மூன்றாம் முறையாகப் பிரதமரானார். அச் சமயம் அவர் அயர்லாந்துக்குச் சுயாட்சி வழங்குவதன் மூலம் அப் பிரச்சினையைத் தீர்க்கலாமெனக் கூறினார். அதை மறுத்த அவரது சகாக்களில் சிலர் தம் பதவியை ராஜினாமா செய்துவிட்டனர். எனினும், கிளாட்ஸ்டன் தம்

கொள்கையில் உறுதியாய் நின்ருர். 1886இல் அவர் ஐரிஷ் சுயாட்சி மசோதாவைக் (Irish Home Rule Bill) கொணர்ந்தார். அயர்லாந்துக்கு ஒரு சட்டசபை தனியே ஏற்படவேண்டு மென்றும், நிலப் படை, கடற் படை, சுங்க வரிகள், அயல் நாட்டு விவகாரங்கள் ஆகியவற்றைத் தவிர, மற்றவைகளை எல்லாம் அச்சபையின் ஆளுகைக்கே விட்டு விடவேண்டு மெனவும் அம் மசோதா கூறியது. மசோதா ஓட்டுக்கு விடப்பட்டபோது 313 பேர் அதற்கு ஆதரவாகவும், 343 பேர் அதை எதிர்த்தும் வாக்களித்தனர். கிளாட்ஸ்டன் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் தேர்தலை நடத்தினுர். புதிய தேர்தலில் கன்சர்வேடிவ் களே பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றனர். கிளாட்ஸ்டன் தம் பதவியை மூன்ரும் முறையாக ராஜிஞமாச் செய்தார்.

கிளாட்ஸ்டனின் நான்காவது மந்திரி சபை

1886 முதல் 1891 வரை சாலிஸ்பரி பிரபு நாட்டையாண்டார். ஆனல், 1892இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தாராளக் கொள்கையினரும் கன்சர்வேடிவ் கட்சியினரும் சமமான இடங் களைப் பெற்றனர். எனவே, அயர்லாந்துக் கட்சியினரின் ஆதரவைக் கொண்டு கிளாட்ஸ்டன் மீண்டும் பிரதமரானுர். அவரது மந்திரி சபையில் கருவூலத்தலைவராக இருந்த சர் வில்லியம் ஹார்க்கோர்ட் (Sir William Harcourt), மரண வரிகளை (Death Duties) அதிகரித்து, பிரிட்டிஷ் பொருளாதார அமைப்பில் ஒரு முக்கிய மாறுதலை ஏற்படுத்தினுர். அதனல் அரசாங்கத்துக்கு நல்ல வருவாய் கிடைக்க வகையேற்பட்டது.

கிளாட்ஸ்டன் மீண்டும் அயர்லாந்தின் சிக்கலைத் தீர்க்க முயன்ருர். இரண்டாவது அயர்லாந்து சுயாட்சி மசோதாவை அவர் 1893இல் கொணர்ந்தார். அதன்படி அயர்லாத்துக்குத் தனது சொந்தச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட தோடு பிரிட்டிஷ் சபையிலும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. இம் மசோதா பொது மக்கள் சபையில் நிறைவேறியதென்ருலும் பிரபுக்கள் சபையில் தோற்றது. அதன் பின் கிளாட்ஸ்டன் அரசியல் வாழ்வினின்றும் நிரந்தரமாக ஓய்வு பெற்றுக் கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இறந்தார்.

கிளாட்ஸ்டனைப் பற்றிய மதிப்பீடு

பல்லாண்டுகள் தொடர்ந்து இங்கிலாந்திற்குப் பணி புரிந்த முதுபெருங் கிழவரெனப் (Grand old man) பெயர் பெற்ற கிளாட்ஸ்டன் உண்மையில் ஆற்றலின் இருப்பிடமாகத் திகழ்ந்

தார். உடம்பிலும் மனத்திலும் குடிகொண்டிருந்த அவரது சக்தியே ஓயாஉழைப்பினிடையேயும் அவர் 80 ஆண்டுகளுக்கும் மேலாக வாழத் துணை புரிந்தது. காண்போரது இதயத்தை ஊடுருவிச் செல்லும் அவரது கண்கள், கேட்போரைப் பிணிக்க வல்ல கணீரென்ற குரல், கம்பீரமான உடற்கட்டு ஆகிய இவற்றைக் கண்டு அவர் வயப்படாத பாராளுமன்ற உறுப்பினர்களில்லை எனலாம். மேலும், அவர் ஒரு பிறவிப் பேச்சாளராவர். எடுத்துக்கொண்ட தலைப்புக்கு ஏற்றபடி விவாதங்களைப் பின்னி எதிரிக்கு இடங்கொடாமல் பேசுவதில் அவருக்கு இணை அவரே எனலாம். நுண்ணிய அறிவுடையவரெனினும், அவர் எளிய குணம் படைத்தவர். அதோடு அபாரமான தைரியம் நிரம்பியவர். உலகமே எதிர்த்துவரினும் எடுத்துக் கொண்ட காரியத்தில் பின்வாங்காத பெருவீரர். இவற்றிற்கெல்லாம் மேலாக ஆழ்ந்த தெய்வ பக்தி யுடையவர். தாம் செய்யும் காரியங்களுக்கெல்லாம் தெய்வம் துணை நிற்பதை அவர் உணர்ந்தார். மக்களுக்குச் செய்யும் சேவையே மகேசனுக்குச் செய்யும் பூசையாக அவருக்குத் தென்பட்டது. இத் தெய்வ நம்பிக்கையின் காரணமாக அவரிடம் உண்மையும் நாணயமும் இயல்பாகவே அமைந்தன.

பல்வேறு துறைகளில் அவரது கொள்கைகளை விரிவாக ஆராய்ந்தோம். அதிலிருந்து நாம் அறிந்துகொள்ளக் கூடிய உண்மையொன்றுண்டு. எவ்விதக் குறிப்பிட்ட கொள்கைக்கும் அவர் கட்டுப்பட்டவரல்லர் என்பதே அவ்வுண்மையாகும். தலையிடாக் கொள்கையை ஆதரிப்பவர்போல் காணப்படுவார்; ஆனால், அதே சமயம் தீவிரமான அரசாங்கத் தலையீட்டை அமல் செய்வார். ஆங்கிலிகத் திருச்சபையில் ஆழ்ந்த பக்தி கொண்ட அவர் அச் சபையை அயர்லாந்தில் குலைத்துவிடத் தயங்கவில்லை. கன்சர்வேடிவ் கொள்கைகளுடன் அரசியலில் காலடி எடுத்து வைத்த அவர் நாளடைவில் தாராளக் கட்சிக்கே தலைவரானார் அவரது தாராளச் சீர்திருத்தங்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். அவரது பொருளாதார நிபுணத்துவம் பல வகையிலும் வெளிப்பட்டதை நாம் கண்டோம். ஆக்கச் சிந்தனை செறிந்த அரசியல் வித்தகர் என அவரை அழைத்தல் தகும். நாட்டின் நிறுவனங்களைத் திருத்தி அமைப்பதிலும், அரும் பெரும் கொள்கைகளைச் சட்ட உருவில் கொண்டு வருவதிலும் அவர் பெருஞ் சமர்த்தர். வெளிநாட்டுக் கொள்கையில் அவர் தேசீய இனங்கள் யாவும் தனித்தனியாகச் சமாதான முறையில் வாழ வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவர். ஆனால், உள்நாட்டுச் சீர்திருத்தங்களில் அவர் செலுத்திய கவனத்தில் பாதியைக்கூட அவர் வெளி

நாட்டு விவகாரங்களில் செலுத்தவில்லை. வெளிநாட்டு விவகாரங்களில் பெரும் போக்காக நடந்துகொண்டதால் பிரிட்டனுக்குக் கிடைக்கவேண்டிய சில நன்மைகள்கூடக் கிடைக்காமல் போயின.

கிளாட்ஸ்டன் பேச்சு வன்மையால் பெருங்கூட்டங்களைக் கவரக்கூடியவரேனும், தனிப்பட்டவர்களோடு நல்ல முறையில் பழகத் தெரியாதவர். அவரது சகாக்களும் விக்டோரியா மகாராணியாரும் தங்களுக்குத் தக்க மரியாதையை அவர் வழங்கவில்லை எனக் குறை கூறலாயினர். எனவே, கட்சியிலும் தனிப்பட்ட மக்களிடமும் அவருக்குச் செல்வாக்கு அதிகமில்லை. தம்முடைய சகாக்களை நன்கு தேர்ந்தெடுக்கும் திறமையும் அவரிடம் இல்லை. காரியங்களை எப்படியாவது சாதிக்க வேண்டுமென்ற ஆசையால் அவர் சில சமயம் குறுக்கு வழிகளில் ஈடுபடுவது வழக்கம். இராணியின் துணைகொண்டு இராணுவக் கமிஷன்களை வாங்கும் வழக்கத்தை ஒழித்தது அதற்கொரு சான்றாகும். மேலும் சில பிரச்சினைகளில் அவர் அதன் மறு புறத்தைப் பாராது, தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் எனச் சாதிப்பார். அமெரிக்க உள்நாட்டுப் போரில் தென்னவரை அவர் ஆதரித்ததும், அயர்லாந்தின் சுயாட்சியைக் கடைசிவரை பெரிதும் வற்புறுத்தியதும் அத்தகைய மனப்பான்மையின் விளைவேயாகும்.

இங்ஙனம் ஒருசில குறைகளிருப்பினும், கிளாட்ஸ்டன் உண்மையிலேயே போற்றத்தக்க ஒரு பெரியார் என்பதில் ஐயமில்லை. அரசியலில் மேதையாக விளங்கிய அவர் ஓர் இலக்கிய ஆசிரியராகவும் விளங்கினார். ஹோமர், ஹோமரது காலம் இவைபற்றி அவர் நூல்களை எழுதியுள்ளார். மேலும் அவர் ஒரு பன்மொழிப் புலவர். ஃபிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய மொழிகளிலும் அவர் நல்ல புலமை மிக்கவர். இங்ஙனம் அவர் ஒரு சகலகலா மேதையாகத் திகழ்ந்து, தமது நாட்டுக்கு ஒப்பற்ற சேவைகளைச் செய்தார்.

7. விக்டோரியாக் காலப் பேரரசு

இரண்டாவது பிரிட்டிஷ் பேரரசின் தோற்றம்: பேரரசு கொள்கையில் மாற்றம்—புதிய கொள்கை - தனிப்பட்டோர் முயற்சி—அரசாங்க ஊழியர்களின் அக்கறை—தீவிர சீர்திருத்தவாதிகளின் முயற்சி—மிஷனரிகளின் கொள்கை; கனடா நாட்டின் வளர்ச்சி: ஆரம்ப காலம் - அரசாள் குடியேற்ற நாடு—179 ஆம் ஆண்டுச் சட்டம் - பிரதிநிதித்துவ ஆட்சி—கனடியக்கலகம்—டர்ஹாம் அறிக்கை—1840 ஆம் ஆண்டு மறு இணைப்புச் சட்டம்—எல்லைச் சிக்கல்—கனடியக் கூட்டரசு; ஆஸ்திரேலியாவின் வளர்ச்சி: குற்றவாளிகளின் குடியேறிடம்—வேக் பீல்டின் திட்டம்—பொறுப்பாட்சியின் தோற்றம்—ஆஸ்திரேலியக் கூட்டரசு; நியூஸிலாந்து; தென்னுப்பிரிக்காவின் வளர்ச்சி: ஆரம்பக் குடியேற்றம்-போயர்களும் ஆங்கிலேயர்களும்—அடிமை முறை ஒழிப்பு—பெரும் வெளியேற்றம்—போயர் நாடுகளின் சுதந்திரம்-மணலாறு, ப்ளும்பாண்டின் மாநாடுகள்.

இரண்டாவது பிரிட்டிஷ் பேரரசின் தோற்றம்

பேரரசு கொள்கையில் மாற்றம்

விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக் காலத்துக்குப் பெருமை தேடித்தந்த பற்பல நிகழ்ச்சிகளுள், பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சியும் ஒன்ருகும். அப் பேரரசானது அவரது காலத்தே ஒரு புதிய கொள்கையின் அடிப்படையில், புதிய முறையிலே உருவாயிற்று. அதனுல்தான் அது இரண்டாம் பிரிட்டிஷ் பேரரசு என வரலாற்றில் பேசப்படுகிறது. 17ஆம் நூற்ருண்டில் காணப்பட்ட முதலாம் பிரிட்டிஷ் பேரரசுக்கும், விக்டோரியாக் காலப் பேரரசுக்கும் எவ்வளவோ வேற்றுமைகள் இருந்தன. முதலாம் பேரரசானது, குடியேற்ற நாடுகள் இருப்பதெல்லாம் தாய் நாட்டின் நன்மைக்காகவேயன்றி வேறில்லை என்ற மெர்கன்டலிசக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எனவே, அப்பொழுதெல்லாம் பிரிட்டன், குடியேற்ற நாடுகளைச் சுரண்டுவதொன்றையே நோக்கமாகக் கொண்டிருந்தது. வியாபாரத்

தனியுரிமையை அது வற்புறுத்தியது. இந்தியாவோடு வியாபாரம் செய்யும் உரிமையைப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஒன்று மட்டுமே பெற்றிருந்தது. அக் கம்பெனியின் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவைக் கட்டுப்படுத்திவந்தது. மேற்கிந்தியத் தீவுகளோடு அடிமை வியாபாரம் செய்வதிலும், பிரிட்டன் தனியுரிமையைப் பெற்றிருந்தது. இவ்விதத் தனியுரிமையை வற்புறுத்தவே நாவாய்ச் சட்டங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் இயற்றியது. 1776ஆம் ஆண்டுவரை பிரிட்டன் மேற்கண்ட கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. ஆனால், அவ்வாண்டில் அமெரிக்கா சுதந்திரம் பெற்ற பின்னர் பிரிட்டனின் பேரரசு கொள்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. குடியேற்ற நாடுகள் வெறும் சுரண்டலுக்கு மட்டுமே உரிய இடங்களல்ல என்றும், அவைகளை அடிமைகளைப்போல் நடத்துவதை விட்டுச் சொந்தக் குழந்தைகளைப்போல் பிரிட்டன் நடத்தவேண்டுமென்றும் அவைகள் தக்க வளர்ச்சி பெற்றபின் அவைகளுக்குச் சுய நிர்ணய உரிமையை அளிக்கப் பிரிட்டன் தயங்கக் கூடாதென்றும் பல அறிஞர்கள் கூறலாயினர். தாய் நாட்டின் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்ட முதல் பேரரசு 1776ஆம் ஆண்டோடு மாய்ந்தது. குடியேற்ற நாடுகளின் நலனையே குறிக்கோளாகக் கொண்ட புதிய இரண்டாம் பேரரசு மெல்ல மெல்லத் தோன்றலாயிற்று.

புதிய கொள்கை - தனிப்பட்டோர் முயற்சி

அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றதைச் சுட்டிக் காட்டிப் பல அறிஞர்கள் பழைய குடியேற்றக் கொள்கையைச் சாடுவாராயினர். நாடு பிடிக்கும் ஆசையைக் கைவிடும்படி அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை வற்புறுத்தினர். அரசாங்கமும் தனது குடியேற்ற நாடுகளைப் பெருக்குவதில் ஊக்கம் இழந்தது. காபினெட்டில் போருக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் சேர்த்து ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டார். அவர், ஏனைய அமைச்சர்களைக் காட்டிலும் திறமை குறைந்த சாதாரண மனிதராகவே இருப்பது வழக்கமாகிவிட்டது. பென்த்தாம் என்ற அறிஞரின் சீடர்கள், குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதே குற்றமென்று கூறினர். காப்டன் (Cobden) என்பாரும், மாஞ்செஸ்டர் நகர அறிஞர்களும் குடியேற்ற நாட்டுப் பெருக்கம் பச்சையான ஏகாதிபத்தியம் (Imperialism) என்றும், போர்கள் ஏற்பட அதுவே காரணமெனவும் பறை சாற்றலாயினர். குடியேற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குப் பிரிட்டன் வழங்கிய சலுகைகள் அப் பொருள்களை நுகர்வோருக்கு நஷ்டத்தையே விளைவித்ததைச் சுட்டிக்காட்டிப் பொருளாதார நிபுணர்களும்

குடியேற்ற நாட்டுப் பெருக்கத்தைக் கண்டித்தனர். அதனால் டாஹிடி (Tahiti), நேடால் (Netal) போன்ற பிரதேசங்களை எளிதில் கைப்பற்றிக்கொள்ளக்கூடிய சூழ்நிலை யிருந்தபோதும் பிரிட்டிஷார் அவற்றைக் கைவிட்டனர். பிற நாடுகளில் குடி யேறும்படி மக்களை வற்புறுத்துவதையும், ஊக்கப்படுத்துவதை யும் அரசாங்கம் நிறுத்திவிட்டது. எனவே, தனிப்பட்டவர்களது முயற்சியாலேயே இக் காலத்துக் குடியேற்றங்கள் ஏற்பட்டன. ஹைலாந்தியர் கழகமும், செல்கிர்க் பிரபு (Lord Selkirk) போன்ற வர்களும் ஸ்காட்லாந்தில் நிலமின்றி அவதிப்படுபவர்களுக்கு வாழ்வு அளிக்கக் குடியேற்ற நாடுகளை நிறுவ முயன்றனர். இங்ஙனமே காலனெல் டால்பட் (Colonal Talbot) என்பாரும், ஜான் கால்ட் (John Galt) என்பாரும், கிப்பன் வேக்பீல்ட் (Gibbon Wakefleld) என்பாரும் தனிப்பட்ட முறையில் குடியேற்ற நாடுகளை நிறுவினர். அக்கரை நாடுகளில் சேனையிலும், அரசாங் கத்திலும் பெரும் பதவி வகித்தவர்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டனர். கேரலைன் சிசோம் (Caroline Chishom) என்ற சீமாட்டியும் அவரது கணவரும் சிட்னி (Sydney) நகரில் தங்கி, அங்கு வசித்த குற்றவாளிகளுக்கு நல்வாழ்வளித்தனர். வில்லியம் வெண்ட்வொர்த் (William Wentworth) என்பவர் ஆஸ்திரேலியா வில் வேலைபார்த்த ஒரு மருத்துவரின் மகன். அவரும் ஆஸ்தி ரேலியக் குடியேற்றத்துக்காகப் பாடுபட்டவர்களில் ஒருவராவர்.

அரசாங்க ஊழியர்களின் அக்கறை

இவ்வாறு, தனிப்பட்டோர் மட்டுமே குடியேற்ற நாடுகளின் வளர்ச்சியில் பெரிதும் நாட்டம் செலுத்தி வந்தனரேனும், ஒருசில அரசாங்க ஊழியர்களும் அதில் ஓரளவு அக்கறை காட்டினர். குடியேற்ற நாடுகளை நட்பு நாடுகளாக ஆக்கிக்கொண்டு, அவை தாய் நாட்டினின்றும் பிரியாமல் இருக்கச் செய்ய அவர்கள் முயன்றனர். ஹஸ்கிஸன் என்பவரும், கானிங் பிரபுவும் நாவாய்ச் சட்டங்களை ஓரளவு நீக்கிக் குடியேற்ற நாடுகளின் ஆதரவைப் பெற்றனர். அதன் பின்னர் வந்த விக்குக் கட்சியினர் அடிமை முறையை ஒழித்தல் போன்ற காரியங்களால் குடியேற்ற நாட்டு மக்களுக்கு நன்மை செய்தனர். ஆனால், உண்மையில் அதனால் மேற்கிந்தியத் தீவுகள் தங்கள் செல்வாக்கை இழந்தன. எனினும், பல கொடுமைகளுக்குள்ளான நீக்ரோ அடிமைகள் பலர் அதனால் விடுதலை பெற்றனர். இங்ஙனம், குடியேற்ற நாடுகளில் பிரிட்டன் படிப்படியாகத் தாராளக் கொள்கைகளைக் கடைப்பிடித்தது. குடியேற்ற நாடுகளுக்குச் சுயாட்சி வழங்க வேண்டுமென்ற கருத்தை முதன்முதலில் வெளியிட்டவர் டர்ஹாம் பிரபுவாவார். அவர் சிபாரிசின்படி, முதலில் கனடா சுயாட்சி பெற்றது. பின்னர்

ஆஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் சுயாட்சி உரிமையைப் பெற்றன. குடியேற்ற நாடுகள் தாய்நாட்டோடு சண்டை போட்டுக்கொண்டு பிரிவதற்குப் பதிலாக, நட்பு சிதையாமல் பிரியவும், இரு நாடுகளும் அதனுல் பயன்பெறவும் இப் புதிய குடியேற்ற நாட்டுக் கொள்கை வகை செய்தது.

தீவிர சீர்திருத்தவாதிகளின் முயற்சி

ஒருசில நிருவாக அதிகாரிகளும் (administrators), பரோபகார வாதிகளும் (humanitarians) சேர்ந்துகொண்டு பிரிட்டிஷ் பேரரசு சிதையாமலிருக்க வழிசெய்துகொண்டிருக்கையில், தீவிர சீர் திருத்தவாதிகளென்போர் (Radical Reformers) சிலர் புதிய குடியேற்ற நாடுகள் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியத் தை வலியுறுத்தலாயினர். கிப்பன் வேக்பீல்டு என்பார் அவர் களில் தலை சிறந்தவர். துணிவும், ஆர்வமுமிக்க வேக்பீல்ட் இளவயதில் ஒரு செல்வச் சீமாட்டியைத் தூக்கிச்சென்று பலவந்த மாக மணக்க முயன்ற குற்றத்துக்காக மூன்றுண்டுகள் சிறை வாசம் அனுபவிக்க நேர்ந்தது. அச் சமயத்தில் அவர் குடியேற்றம் பற்றிய நூல்கள் பலவற்றைப் படித்து 'குடியேற்றக் கலை' (The Art of Colonization) என்ற ஒரு நூலை எழுதினுர். திட்ட மிட்டுக் குடியேற்றம் செய்வது எப்படி என அவர் அந் நூலில் விளக்கினுர். குடியேற்ற நாடுகளைப் பெருக்குவது பிரிட்டனுக்கு இன்றியமையாதது என்பதையும் அவர் தமது நூலில் விளக்கிக் காட்டினுர். நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ஜனத் தொகைக்கு வாழ இடமளிக்கவும், வளர்ந்து வரும் ஆக்கத் தொழில்களுக்கு மூலப் பொருள்களைப் பெறவும், தொழில் வளர்ச்சியால் நாட்டில் நாளுக்கு நாள் பெருகிவந்த பொறி செய்பொருள்களை விற்கவும் புதிய குடியேற்ற இடங்கள் தேவை என அவர் கூறினுர். எனவே, அரசாங்கம் பிரிட்டிஷ் மக்களில் சிறந்தவர்களைப் பொறுக்கியெடுத்துப் புதிய குடியேற்றங்களுக்கு அனுப்பவேண்டும். அங்ஙனம் அனுப்பப்படுபவர்கள் அநேகமாக ஏழைகளாயிருப்பர். அவர்களுக்கு நிலத்தை இலவசமாகக் கொடுத் தால், அவர்கள் அதைப் பயிரிடுவதற்கான மூலதனமும் கூலியாட்களும் இல்லாத காரணத்தால் அதை வளப்படுத்த மாட்டார்கள். எனவே, நிலத்தை ஒரு நல்ல விலைக்கு விற்க வேண்டும். நிலத்தை விற்பதால் கிடைக்கும் பொருளைக்கொண்டு அரசாங்கம் ஒரு நிதி திரட்டிப் புது நாடுகளில் குடியேற விரும்பும் ஏழை மக்களுக்குப் பொருளுதவி செய்யலாம். பொருளுதவி பெற்றோர் குடியேற்ற நாட்டில் சென்று கூலி வேலை செய்யலாம். அதனுல் கூலியாட்கள் கிடைக்காத குறை நீங்கும். நாடும் வளமடையும். அப்படிக் கூலி வேலை செய்வோரும் பணம்

சேர்த்துப் பின் மேலும் நிலம் வாங்கலாம். அதன்மூலம் குடியேற்ற நாடுகள் பெருகுவதோடு, அதன் வளமும் பெருகுமென்பதை வேக்பீல்டு எடுத்துக்காட்டினர். சிறையினின்றும் வெளிப்போந்த பின் அவர் 'குடியேற்றச் சங்கம்' (Colonization Society) ஒன்றை நிறுவித் தமது கொள்கைகளைச் செயலாக்குவதில் முனைந்தார். டர்ஹாம், கிரே போன்ற பிரிட்டிஷ் அமைச்சர்களும், சார்லஸ் புல்லர் (Charles Buller) போன்ற அறிஞர்களும் வேக்பீல்டின் கொள்கைகளை விரும்பியேற்றனர். குடியேற்ற நாடுகளில் நிலப் பிரச்சினையைத் தீர்க்கவும், பிரிட்டனை விட்டு வெளியேறுவோரின் நலன்களைக் காக்கவும், பல பாராளுமன்றக் குழுக்கள் ஏற்பட்டன. ஆணையாளர்கள் பலர் அதற்காக 1840இல் நியமிக்கப்பட்டனர். நியூஸிலாந்துக் கம்பெனி தோன்றியதற்கும், தென் ஆஸ்திரேலியா குடியேறப் பெற்றதற்கும் துணைபுரிந்தவர்கள் மேற்சொன்ன வர்களேயாவர்.

மிஷினரிகளின் கொள்கை

புது நாடுகளில் ஆங்கிலேயர்களைக் குடியேற்றும் முயற்சி இவ்வாறு ஒருபுறம் நடந்துவருகையில், குடியேறுபவர்களிட மிருந்து, குடியேற்ற நாட்டில் ஏற்கெனவே வாழும் சுதேசக் குடிகளைக் காக்கப் பல் பரோபகாரக் கழகங்களும் இங்கிலாந்தில் தோன்றின. 'பழங்குடி மக்களைக் காக்கும் கழகம்' (Aborigines Protection Society) ஒன்றை ஃபவல் பக்ஸ்டன் (Fowell Buxton) என்பவர் நிறுவினர். லண்டன் மிஷினரிக் கழகம், விவிலிய நூற் கழகம் (Bible Society) போன்ற நிறுவனங்களும் மேற்சொன்ன கருத்துக்களையே எங்கும் பரப்பிவந்தன. குடியேற்ற நாட்டமைச் சராயிருந்த கிளென்லெக் (Glenleg) என்பவரும், குடியேற்ற நாட்டுக் காரியாலயத்தில் வேலை பார்த்த ஸ்டீஃபன் (Stephen) என்பவரும் அக் கருத்துகளை நம்பினர். மார்ஸ்டன் (Marsden). வில்லியம்ஸ் (Williams), பிலிப்ஸ் (Philips) போன்ற மிஷினரிகள் தென் ஆப்பிரிக்காவிலும், ஏனைய குடியேற்றங்களிலும் சுதேச மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டுவந்தனர். இத்தகையோரின் கிளர்ச்சிகள் காரணமாகப் பிரிட்டிஷ் பேரரசுக் கொள்கை பெரிதும் மாறியது. குடியேறிய மக்களுக்குச் சுயாட்சி வழங்குவ தோடன்றிக் குடியேறப்பட்ட நாடுகளில் வாழ்ந்த மக்களின் உரிமைகளைக் காப்பதையும் பிரிட்டன் தனது கடமையாக நினைத்தது. அதோடு பிரிட்டன், தனது வியாபார நலன்களையும் பாதுகாத்துக் கொள்ள விழைந்தது. இவ்வாறு பல நோக்கங்களை ஒரே சமயத்தில் நிறைவேற்றிக்கொள்ளப் பிரிட்டன் முயற்சிப் பதையே நாம் அதன் ஒவ்வொரு குடியேற்ற நாட்டின் வளர்ச்சி வரலாற்றிலும் காண்கிறோம்.

கனடா நாட்டின் வளர்ச்சி

ஆரம்ப காலம் - அரசாள் குடியேற்ற நாடு

ஏழாண்டுப் போரின் விளைவாக ஆங்கிலேயருக்குக் கிடைத்த கனடாவில், ஆரம்பத்தில் ஃபிரெஞ்சுக்காரர்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர். பிரிட்டிஷ் கவர்னர் ஆம்ஹெர்ஸ்ட் (Amherst) என்பவர் அடக்கு முறையை அடிப்படையாகக் கொண்ட இராணுவ ஆட்சியையே முதலில் அங்கு நிலைநாட்டினார். பின்னர் 1774ஆம் ஆண்டில் ஏற்பட்ட குவிபெக் சட்டப்படி கனடா ஓர் அரசாள் குடியேற்ற நாடாக (Crown Colony) மாறியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னரும், அவரது ஆலோசனைச் சபையும் அதை ஆண்டுவந்தனர். ஆலோசனைச் சபையில் ஃபிரெஞ்சுக் கனடியர்கள் சிலர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எனினும், ஃபிரெஞ்சுக் கனடியர்களுக்கு ஆங்கிலேயர் ஆட்சி சிறிதும் பிடிக்கவில்லை. அதனால்தான் அமெரிக்க சுதந்திரப் போர் நிகழ்ந்தபோது, பிரிட்டனுக்குச் சாதகமாகப் போர் செய்ய அவர்கள் மறுத்துவிட்டனர். அமெரிக்கப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலும், அதன் பின்னரும் ஏராளமான ராஜ விசுவாசிகள் (Loyalists) வந்து கனடாவில் குடியேறினர். நியூப்ரென்ஸ்விக் பிரதேசத்திலும், பெரிய ஏரிகளுக்கு (Great Lakes) வடக்கிலும் அவர்கள் தனிப்பட்ட குடியேற்றங்களை அமைத்தனர். அங்கே அவர்கள் பிரிட்டிஷ் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்தனர். கல்வியறிவிலும் சமுதாய உணர்ச்சியிலும் அவர்கள் ஃபிரெஞ்சுக்காரரைவிடப் பெரிதும் மேம்பட்டு விளங்கினர். டல்ஹௌஸி பல்கலைக் கழகமும் பல இலக்கணப் பள்ளிகளும் அங்கு தோன்றின. ஜோசப் ஹவே (Joseph Howe) போன்ற அரசியல் நுண்ணறிவாளர்கள் அங்குத் தோன்றினர். பிரிட்டனிலிருந்த பிராட்டஸ்டென்டுத் திருச்சபை அங்கு வேரூன்றியது. பிரிட்டனுக்கும் இக் குடியேற்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பேற்பட்டது. ஹாலிபாக்ஸ் (Halifax) என்னும் நகர் பிரிட்டிஷாரின் கப்பல்தளமாக மாறியது. செயின்ட் ஜான் நதியில் பிரிட்டிஷ் கப்பல்களின் போக்குவரத்து அதிகரித்தது. இதையெல்லாம் கண்ட ஃபிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயரை வெறுத்தனர். மதத்தாலும், இனத்தாலும் வேறுபட்ட அவர்களை நாட்டைவிட்டு ஓட்டிவிட வேண்டுமென ஃபிரெஞ்சுக்காரர் விரும்பினர்.

1791ஆம் ஆண்டுச் சட்டம் - பிரதிநிதித்துவ ஆட்சி

ஃபிரெஞ்சுக்காரரும், பிரிட்டிஷாரும் கனடாவில் ஒத்து வாழ முடியாதென்பதைக் கண்டுகொண்ட அமைச்சர் பிட், 1791ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தை இயற்றி, அதன் மூலம் கனடாவை

மேல் கனடா, கீழ்க் கனடா என இரண்டு பகுதிகளாகப் பிரித்தார். குவிபெக் (Quebec) அல்லது கீழ்க் கனடாவில், ஃபிரெஞ்சுக் காரரும், ஒண்டோரியோ அல்லது மேல் கனடாவில் ஆங்கிலேயரும் தனித்தனி அரசாங்கங்களை அமைத்துக் கொண்டனர். குவிபெக்கில் ஃபிரெஞ்சுக்காரர் ஃபிரெஞ்சு மொழியில் ஃபிரெஞ்சுச் சட்டங்களின் துணைகொண்டு பழைய நிலமானிய முறையில் ஆட்சி முறையை அமைத்தனர். சுயாட்சியைப்பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால், ஒண்டோரியோவில் வாழ்ந்த ஆங்கிலேயர் சுயாட்சி வேட்கை மிக்கவர்களாயிருந்தனர். அடிப்படையான குறிக்கோள்களில் காணப்பட்ட இவ் வேறுபாட்டால் இவ்விரு இனத்தாரிடையே அடிக்கடி பூசல்கள் தோன்றின.

மேல் கனடாவில் பிராட்டஸ்டென்டுகளே பெரும்பான்மையினராயிருந்தனர். ஆங்கிலகத் திருச்சபைக்கு இந்நாட்டு நிலங்களில் ஏழில் ஒரு பகுதி சொந்தமாயிருந்தது. இவ்வளவு அதிகமான நிலங்களை ஆங்கிலிகத் திருச்சபைக்கு ஒதுக்கியது கண்ட ரோமன் கத்தோலிக்கர்களான ஃபிரெஞ்சுக்காரர் மனம் வெதும்பினர். சமயத் துறையில் காணப்பட்ட இவ்வேறுபாடு அரசியல் துறையிலும் பரவியது. ஆங்கிலேயர்கள் 'குடும்ப ஒப்பந்தம்' (Family Compact) என்னும் ஒரு கோஷ்டியை ஏற்படுத்திக் கொண்டு எல்லா அரசியல் பதவிகளையும் அவர்களே அபகரித்துக் கொண்டனர். எனவே, சிறுபான்மையினரான ஃபிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயரை வெறுத்தனர். பிரதிநிதித்துவ ஆட்சி முறையும் அவர்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

கீழ்க் கனடாவிலும் இத்தகைய அதிருப்தி அதிகரித்தது. அதை ஒரு கவர்னர் ஆண்டார். அவருக்கு உதவியாக ஓர் ஆலோசனை சபையும், மக்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு பாராளுமன்றமும் இருந்தன. பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்களின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர் ஃபிரெஞ்சுக் காரர்களாதலால் அவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு சிறுபான்மையினரான பிரிட்டிஷாரை நசுக்கினர். ஆனால் பாராளுமன்றத்தின் மேல்சபையில் கவர்னரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களே யிருந்தனர். அங்குப் பிரிட்டிஷ் உறுப்பினர்களே பெரும்பான்மையினராக இருந்ததால் அவர்கள் பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாத்தனர். மேல் சபைக்கும் கீழ்ச் சபைக்கும் அடிக்கடி சச்சரவுகள் நேர்ந்தன. மேலும், கவர்னரின் ஆலோசனை சபை, மக்களது பிரதிநிதிகளடங்கிய சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்ததாயில்லை. கவர்னருக்கு மட்டுமே அது பொறுப்புள்ளதாக

இருந்தது. பிரிட்டனிலிருப்பது போன்ற பொறுப்பாட்சியைப் பிரிட்டிஷார் விரும்பினர். ஆனால், ஃபிரெஞ்சுக்காரருக்கு அதில் அக்கறை ஏதுமில்லை. கவர்னரும், அவரது ஆலோசனைசபையும் சேர்ந்துகொண்டு பொறுப்பற்ற முறையில் நாட்டை ஆள்வதைப் பல சீர்திருத்தக்காரர்கள் கண்டித்தனர். சில இடங்களில் சட்ட சபையின் மேல்மன்றமும், கவர்னரின் ஆலோசனை சபையும் ஒரே உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. பாராளுமன்றத்தின் அனுமதியின்றிப் பல வரிகள் வசூலிக்கப்பட்டன. எனவே, நிரு வாகத்துக்கும், சட்டசபைக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.

கனடியக் கலகம்

குவிபெக்கில் முதன் முதலாக அரசாங்கத்துக்கு விரோதமாக ஒரு கலகம் ஏற்பட்டது. அதைத் தலைமை தாங்கி நடத்தியவர் லூயி ஜோசப் பேப்பினு (Louis Joseph Papineau) என்பவர். அவர் சட்டசபையின் தலைவராக 1815ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போதிலிருந்து அவரது கட்சி 1837ஆம் ஆண்டுவரை தொடர்ந்து தேர்தலில் வெற்றி பெற்றுவந்தது. பிரிட்டிஷ் தீவிர சீர்திருத்தவாதிகளும் அமெரிக்கர்களும் அவரை ஆதரித்தனர். நாட்டில் குடியரசை ஏற்படுத்த வேண்டுமென்பது அவரது இறுதிக் குறிக்கோளாகும். ஆனால், தாற்காலிகமாக அவர் சில சீர்திருத்தங்களை வேண்டினார். கவர்னரின் கவுன்சில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமெனவும், பாராளுமன்றத்தின் கீழ்ச்சபைக்கு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த முழு அதிகாரம் வேண்டுமெனவும், அரசியல் துரோகக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் வேண்டுமெனவும், அவர் சுமார் 92 கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் சமர்ப்பித்தார். பிரிட்டிஷ் பிரதமரான கிரே பிரபு நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்துக்கு அளிக்க முன்வந்தாரென்றாலும், பொறுப்பாட்சியைக் கனடாவுக்கு வழங்க ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, புரட்சியை அவர் கடுமையாக ஒறுத்தார். பேப்பினு அமெரிக்காவுக்கு ஓடினார்; புரட்சியும் ஓய்ந்தது.

மேல் கனடாவில் அவ்வளவு அதிகமாக இனவேற்றுமை காணப்படவில்லை. மதத்துறையில் மட்டுமே பூசல் அதிகம் காணப்பட்டது. பொருளாதாரத்துறையில் அங்கு அதிகமான முன்னேற்றம் காணப்பட்டது. ரிடா (Rideau), வெல்லண்ட் (Welland), லெஷின் (Lachine) கால்வாய்கள் வெட்டப்பட்டதால் ஈரி ஏரி வழியாகக் கப்பல்கள் மாண்டரீல் நகர்வரை போக முடிந்தது. பலவகை திருச்சபையைச் சேர்ந்தவர்கள் பல கல்லூரிகளை

ஆங்காங்கே ஏற்படுத்தினர். பீவர்லி ராபின்சன் (Beverley Robinson), ஸ்டிராச்சன் (Strachen) போன்ற அறிஞர்கள் தோன்றிக் கல்வியை நாடெங்கும் பரப்பினர். பிரிட்டனும் குவிபெக்கில் கிடைத்த சுங்கவரியில் பெரும் பகுதியை ஒண்டோரியோ மக்களுக்கே தந்தது. இத்தனையிருந்தும் அங்கிருந்த மக்கள் தமக்குள்ளிருந்த வேற்றுமைகள் காரணமாகக் கலகத்திலிறங்கினர். வில்லியம் லயோன் மெக்கன்ஸி (William Lyon Mackenzie) என்பாரைச் சட்டசபையினின்றும் அங்குப் பெரும்பான்மையினராயிருந்த டோரிகள் அப்புறப்படுத்தியதையொட்டிக் கலவரம் ஆரம்பித்தது. சர் பிரான்ஸிஸ் ஹெட் (Sir Francis Head) என்ற கவர்னரது அறிவீனமான செயல்களும் கலகத்துக்குக் காரணங்களாய் அமைந்தன. ஆனால், கலகம் விரைவிலேயே அடக்கப்பட்டது. 1837இல் மெக்கன்ஸி கனடாவைவிட்டு அமெரிக்காவுக்கு ஓடிப்போனர்.

டர்ஹாம் அறிக்கை

கலகங்களை அடக்குவதற்காக டர்ஹாம் பிரபுவைப் பிரிட்டிஷ் அரசாங்கம் கனடாவுக்கு அனுப்பியது. அவர் அங்குச் சென்று நிலைமையை நன்கு ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் மக்களின் அதிருப்திக்குக் காரணங்களான இன வேற்றுமை, சட்டமன்றத்துக்கும் கவுன்சிலுக்கும் உள்ள பூசல், குடும்ப ஒப்பந்தம் போன்றவைகளை விளக்கியபின், நாட்டில் அமைதி நிலவிட வேண்டுமானல் இரு கனடாக்களும் ஒன்றுபடுத்தப்படல் வேண்டுமெனவும், பொறுப்பாட்சி வழங்கப்படல் வேண்டுமெனவும், வெளிநாட்டுக் கொள்கை, வியாபாரம் முதலியவற்றிலன்றி மற்றக்காரியங்களில் உள்ளூர் அரசாங்கங்களுக்குச் சுயாட்சி வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுக் காட்டினர். தாராளக் கொள்கைகளை வெளியிட்ட டர்ஹாம் பிரபு கலகத்தினரை மிகக் கடுமையாக ஒடுக்கினர். அவரது யதேச்சாதிகாரமான செயல்களைக் கண்ட பிரிட்டிஷ் அரசு அவரைத் திருப்பி அழைத்துக் கொண்டது. ஆனல் டர்ஹாம் பிரபுவின் அறிக்கையின் சிபார்சுகளின்படி பிரிட்டன் 1840ஆம் ஆண்டில் கனடாவுக்குப் பொறுப்பாட்சியை வழங்கியது.

*1840ஆம் ஆண்டு மறு இணைப்புச் சட்டம் (*Reunion Act*)*

இச் சட்டப்படி இரு கனடாக்களும் ஒன்று பட்டன. இரண்டு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் ஒன்று ஏற்பட்டது. மேல் சபையின் உறுப்பினர்களை அரசாங்கம் நியமித்தது. கீழ்ச்சபையின் உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். பிரிட்டனிலுள்ளது போன்று மந்திரிசபை பாராளுமன்றத்துக்குப் பொறுப்

புள்ளதாக மாறியது. கீழ்ச்சபையில் பெரும்பான்மையினராக இருந்த கட்சியிலிருந்தே அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அச்சபையின் நம்பிக்கையை இழந்தவுடன் மந்திரிசபை ராஜினாமாச் செய்தது. இங்ஙனம் முதன் முதலாகக் கனடாவில் பொறுப்பாட்சி முறை ஏற்பட்டது. 1854இல் எல்ஜின் பிரபு என்பார் கவர்னர் ஜெனரலாக வந்தார். அவர் டர்ஹாம் பிரபுவின் மருகர்; அவர் காலத்தில்தான் பொறுப்பாட்சிமுறை நாட்டில் நன்கு வேரூன்றியது. அவரது அமைச்சர்களைப் பாராளுமன்றத்திலிருந்தே தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஆங்கில மொழியோடு ஃபிரெஞ்சு மொழியையும் அவர் ஆட்சி மொழியாக்கினர். ஆங்கிலிகத் திருச்சபையின் நிலங்களை அவர் அவ்வவ்விடத்து உள்ளூர் ஆட்சியினரின் கைகளுக்கே மாற்றினர். அவற்றின் வருமானத்தைக் கல்விக்கும் மற்றச் சமூக சேவைகளுக்கும் செலவு செய்ய அவர் ஏற்பாடு செய்தார். கனடாவின் தலைநகராக ஒட்டாவா **(Ottawa)** அமைந்தது.

எல்லைச் சிக்கல்

வெர்சேல்ஸ் உடன்படிக்கை (1783) கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயிருந்த எல்லைகளைச் சரிவர நிர்ணயிக்கவில்லை. எனவே, அமெரிக்கர்களுக்கும் கனடியர்களுக்கும் பல எல்லைப் பூசல்கள் ஏற்பட்டன. மெய்ன் என்ற பிரதேசத்துக்கும், கனடாவுக்குமிருந்த எல்லையை ஆஷ்பர்டன் உடன்பாடு நிர்ணயித்தது. மேற்கே அலாஸ்கா நாட்டுக்கு அருகே அமெரிக்கர்கள் புகுந்து பிரிட்டிஷ் கொலம்பியாவைக் கைப்பற்றிக் கொள்ள முயன்றனர் 54° 40° சமாந்திரக் கோடுவரை நாட்டைப் பெறுவது, இன்றேல் சண்டையிடுவது எனப் பல அமெரிக்கர்கள் கூக்குரலிட்டனர். ஆனல் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போக் **(Pock)** என்பவர் அமைதியை விரும்பியவராதலால் கனடாவோடு ஒரிகான் உடன்பாட்டைச் செய்து கொண்டார் (1846). அதன்படி 49° சமாந்திரக் கோடானது இரு நாடுகளுக்கும் எல்லையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமெரிக்கா, ஒரிகான் நாட்டைப் பெற்றது.

கனடியக் கூட்டரசு

மறு இணைப்புச் சட்டம் இரண்டு கனடாக்களையும் இணைத்தது. எனினும், பிரெஞ்சுக்காரர்—ஆங்கிலேயரிடையே இருந்த மனக் கசப்பை அதனல் மாற்ற முடியவில்லை. மேலும் மேற்கே வளர்ந்து வந்த பிரிட்டிஷ் கொலம்பியாவைக் கனடாவோடு இணைக்க அது முயற்சி ஒன்றும் எடுக்கவில்லை. 1867இல் ஏற்பட்ட பிரிட்டிஷ்—வட அமெரிக்கச் சட்டம் **(British North America Act)** கனடாவை


கனடா
அலாஸ்கா
யூகான்
வட மேற்கு
பிரதேசம்
ஹட்சன் குடா
குவிபெக்
1912
லாப்ரடார்
கொலம்பியா
1871
அல்பர்ட்டா
1882
சஸ்கட்சி வான் 1882
1870
மானிடோபா
1912
ஒண்டாரியோ
குவிபெக்
குவிபெக்
வான்கூவர்
49-வது சமாந்திரக் கோடு
பஸிபிக் கனடிய ரயில்வே (1885)
1867-ல் சுயாட்சி பெற்ற நாடுகள்
1. நியூப்ரென்ஸ்விக
2. பிரின்ஸ் எட்வர்ட் தீவு
3. நோவாஸ் கோஷியா
4. நியூ பவுண்ட் லாந்து
5. மாண்ட்ரீல்
6. ஒட்டாவா
7. வின்னிபெக்

ஒரு கூட்டரசாக மாற்றியது. குவிபெக், ஒண்டோரியோ, நியூ பிரென்ஸ்விக், நோவாஸ் கோஷியா என்ற நான்கு நாடுகளை உட்கொண்டதாக அக்கூட்டரசு விளங்கியது. கனடா ஒரு டொமினியன் என்று அழைக்கப்பட்டது. அங்குப் பூரண பொறுப்பாட்சி ஏற்பட்டது. மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார் களிடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஆனால் எஞ்சிய அதிகாரங்களை (Residuary Powers) மத்திய அரசாங்கமே பெற்றது. பாராளுமன்றத்தில் இருசபைகள் இருந்தன. செனட் என்ற மேல்சபையின் உறுப்பினர்கள் பொது மக்களால் தேர்ந் தெடுக்கப் பட்டனர். மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்ப அதன் உறுப்பினர் தொகை மாறுவதற்கான வசதியும் செய்யப்பட்டது. கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் மகுடத்தின் பிரதிநிதியாக டொமி னியனை ஆண்டார்.

1870இல் மானிடோபா (Manitoba) என்ற மாகாணமும், 1873இல் பிரின்ஸ் எட்வர்ட் தீவும், 1880இல் ராக்கி மலைக்குக் கிழக்கேயிருந்த பிரதேசங்கள் அனைத்தும் கனடாக் கூட்டரசில் சேர்ந்தன. ஆனால், மேற்கேயிருந்த பிரிட்டிஷ் கொலம்பியா கூட்டரசில் சேரமறுத்தது. கிழக்குக் கனடாவுக்கும், கொலம்பி யாவுக்குமிடையே ரெயில் போக்குவரத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் 1871ஆம் ஆண்டு அது கூட்டரசில் சேர்ந்தது. 1880ஆம் ஆண்டு டொமினியன் சர்க்கார் அத்தகைய ரெயில்வேயைப் போட முயன்று நடுவில் நிறுத்தி விட்டது. அதன்பின் பிரிட்டிஷ் கொலம்பியா, கூட்டரசினின்றும் பிரிந்துவிடப் போவதாகப் பயமுறுத்தியது. எனவே டொமி னியன் சர்க்கார் ஒரு புதிய கம்பெனிக்குப் பல சலுகைகளைத் தாராளமாக வழங்கி அவ்வேலையை மேற்கொள்ளத் தூண்டியது. 1885இல் அதன் முயற்சி வெற்றி பெற்றது. பிரிட்டிஷ் கொலம்பி யாவும் கிழக்குக் கனடாவும் இணைக்கப்பட்டன. பஸிபிக் கனடிய ரெயில் பாதையானது கனடாவின் முதுகெலும்பாகத் திகழ்ந்தது. அதனால் இரு நாடுகளின் வளமும் பெருகியது. இருநாடுகளுக் கிடையேயிருந்த புல்வெளிகளும் குடியேறப்பட்டன. சுரங்கப் பொருள்கள் பல அங்கே அகழ்ந்தெடுக்கப்பட்டன. தொழில்கள் பல நன்கு வளர்ந்தன. நியூ பவுண்ட்லாந்து மட்டும் கனடாக் கூட்டரசில் சேராமலே யிருந்தது. இறுதியில் 1949ஆம் ஆண்டு அதுவும் கனடாவுடன் சேர்ந்தது.

ஆஸ்திரேலியாவின் வளர்ச்சி

உலகத்திலேயே மிகப்பெரிய தீவும், அதேசமயத்தில் மிகச் சிறிய கண்டமுமாக விளங்கும் ஆஸ்திரேலியா, ஆதியில் டச்சுக்

காரர்களாலேயே கண்டுபிடிக்கப்பட்டது. டாஸ்மேனியத் தீவைக் கண்டு பிடித்தவர் டாஸ்மன் என்ற டச்சுக்காரராவார். நியூசிலாந்து (New Zealand) என்ற தீவைக் கண்டவரும் அவரே. ஆனால், டச்சுக்காரர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேற எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆஸ்திரேலியாவில் அடியெடுத்து வைத்த முதல் ஆங்கிலேயர் கேப்டன் குக் (Captain Cook) என்பவராவார். 1768, 1779 ஆம் ஆண்டுகளில் அவர் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்து நியூ சௌத்வேல்ஸ் என்னுமிடத்தில் பிரிட்டிஷ்கொடியை நாட்டினார். ஆனால், அவர்கூட ஆஸ்திரேலியாவில் குடியேற்றங்களை ஏற்படுத்த ஒன்றும் முயற்சி செய்யவில்லை.

குற்றவாளிகளின் குடியேறிடம்

அமெரிக்கா சுதந்திரம் பெற்ற பின்னர், இங்கிலாந்து தனது தீவாந்திர சிட்சை பெற்ற குற்றவாளிகளை அனுப்ப இடமில்லாமல் திகைத்தது. அத்தகைய குற்றவாளிகளை அனுப்ப ஆஸ்திரேலியாவே தகுந்த இடமெனப் பிட் என்னும் பேரமைச்சர் நினைத்தார். அவர் நினைத்தபடியே 1787இல் பிரிட்டனிலிருந்து கேப்டன் பிலிப்ஸ் என்பாரது தலைமையில் ஒரு கப்பல் நிறையக் குற்றவாளிகள் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டனர். 1788இல் அவரும் 700 குற்றவாளிகளும் பாடனி குடாவில் இறங்கினர். அதற்கருகிலிருந்த சிட்னி என்னுமிடத்தில் அவர்கள் முதலில் குடியேறினர். இங்ஙனம் ஆஸ்திரேலியா குற்றவாளிகளின் உறைவிடமாக ஆரம்பத்தில் திகழ்ந்தது. சிட்னி குடியேற்றம் ஒருவகையிலும் முன்னேற்றமடையவில்லை. குற்றவாளிகள் சுத்த சோம்பேறிகளாயிருந்தனர். விவசாயம் செய்யவும் அவர்களுக்குத் தெரியவில்லை. கட்டுப்பாடுகளுக்கு அடங்கவும் அவர்கள் மறுத்தனர். எனவே அங்குப் பஞ்சம் ஏற்படும் போல் தோன்றியது. 1809 முதல் 1821 வரை அங்கு கவர்னராக இருந்த மெக்வாரி (Macquarie) என்பார் பல நல்ல காரியங்களைச் செய்தார். பறவைகளைத் திருடுதல், ஐந்து பென்னிகளைத் திருடுதல் போன்ற சிறு குற்றங்களுக்கெல்லாம் ஆயுள் தண்டனை பெற்ற பலர் ஆஸ்திரேலியாவுக்கு வந்தனர். அத்தகையோரைச் சீர்திருத்துவதே நல்லதன்றித் தண்டிப்பதில் பயனில்லை என்ற கொள்கையுடையவர் மெக்வாரி. எனவே, தண்டனை தீர்ந்த பல குற்றவாளிகளை அவர் அங்கேயே நிரந்தரமாக வாழும்படி செய்தார். அவர்களுக்கு நிலங்களை இனமாக வழங்கினார். ஒரு சிலரை மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும் நியமித்தார். விரைவிலேயே குற்றவாளிகள் பலர் தங்களது முயற்சியால் பெரும் பொருளீட்டினர். குடிமக்களாகத் (Citizen) தங்களை ஏற்றுக் கொண்டு தீர்ப்புச்சான்றுள்ளர்கள் அல்லது

ஆஸ்திரேலியக் குடியேற்றம்



ஜூரிகள் போன்ற பதவிகளில் தங்களுக்கு இடமளிக்குமாறு அவர்கள் ஆங்கில அரசாங்கத்தை வேண்டலாயினர். ஜான் மக் ஆர்தர் (John Mac Arthur) என்ற இன்னொரு கவர்னர் ஆஸ்திரேலியாவுள் மெரினோ (Merino) என்ற உயர்ந்த ரக ஆடுகளை நிறைய இறக்குமதி செய்தார். ஆஸ்திரேலியாவில் நீலமலைகளுக்கு அப்பால் பரந்த புல்வெளிகளிருப்பதை அவரே முதன்முதலில் கண்டுபிடித்தார். அப் புல்வெளிகளில் ஆடு மேய்க்கும் தொழில் நன்கு வளர்ந்தது. மெரினோ ஆடுகள் கொழு கொழுவென வளர்ந்து உலகத்திலேயே மிக அதிகமான அளவில் உரோமங்களை ஈந்தன. நீலமலையில் ஆங்காங்கே கணவாய்களிருப்பதை ஆங்கிலேயர்கள் கண்டனர். ஹியூம், ஹோவல் (Hume, Hovell) என்போர்கள் விக்டோரியா என்ற பிரதேசத்தை வடக்கே ஆய்ந்து கண்டனர். ஆலன் கன்னிங்ஹாம் (Alen Cunningham) என்பவர் டார்லிங் டௌன்ஸ் (Darling Downs) என்ற செழிப்பு மிக்க புல்வெளியைக் கண்டு பிடித்தார். ஸ்டுவர்ட் என்பார் டார்லிங் நதியை ஆராய்ந்து அது மர்ரே நதியோடு கலக்குமிடத்தைக் கண்டார். வேறு பலர் மத்திய மேற்கு ஆஸ்திரேலியாவை ஆராய்ந்தனர்.

மேற்சொன்ன ஆராய்ச்சிகளின் காரணமாகப் பல துணிவுள்ள ஆட்கள் அரசாங்கக் கட்டுப்பாடுகளையும் மீறிக் கண்டத்தின் உட்பகுதிகளில் சென்று குடியேறினர். தமக்கு வேண்டிய மட்டும் நிலங்களை எடுத்துக்கொண்டு, ஆடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு அவர்கள் பெரும் பொருள் ஈட்டினர். இதைக் கண்ட அரசாங்கம் தனது கொள்கையை மாற்றிக் கொண்டது. குற்றவாளிகள் மட்டுமன்றிச் சுயேச்சைக் குடிமக்களும் அங்குக் குடியேறலாமென அறிவித்தது. அத்தகைய சுயேச்சைக் குடியேற்றம் ஒன்றையும் 1829இல் மேற்கு ஆஸ்திரேலியாவில் தோற்றுவித்தது. குடியேறிகளை ஈர்ப்பதற்காக நிலங்களை இனமாகவும் எளிய விலைக்கும் அவர்களுக்குக் கொடுத்தது. குடியேறிகள் ஏராளமாக நிலங்களை வாங்கிப் போட்டனர். ஆனால் அவற்றில் உழைப்பதற்குக் கூலியாட்கள் கிடைக்கவில்லை. மேலும், போக்குவரவுச் சாதனமின்மையால் குடியேறிகள் ஓரிடம் விட்டு ஓரிடம் போக முடியாமல் தவித்தனர். உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்கும் சந்தைகளில்லை. இக்குறைகளைப் போக்கப் பல கூலியாட்களை அங்கு அரசாங்கம் இறக்குமதி செய்தது. ஆனால், அக் கூலியாட்கள் நிறையப் பணம் சம்பாதித்து விரைவிலேயே முதலாளிகளாகிவிட்டனர். மீண்டும் உழைப்பாளிகள் பஞ்சம் ஏற்பட்டது. உழைப்பாளிகள் பற்றுக்குறையை நீக்க அரசாங்கம் குற்றவாளிகளை மேற்கு ஆஸ்திரேலியாவுக்கு அனுப்ப ஆரம்பித்தது.

வேக்பீல்டின் திட்டம்

தென் ஆஸ்திரேலியாவில் கிப்பன் வேக்பீல்டின் திட்டப்படி குடியேற்றம் நிகழ்ந்தது. குடியேறிகளுக்கு நிலங்கள் அங்கு நல்ல விலைக்கு விற்கப்பட்டன. சில ஆண்டுகள் நிலத்தில் உழைத்துப் பொருளீட்டியபின், அரசாங்கத்துக்கு அவர்கள் நிலத்தின் விலையைக் கொடுக்கலாம். இம்முறையால் உழைப்பாளிகளில்லாத நிலைமை ஏற்பட வழியில்லாமற் போகும். மேலும், ஒரே நபர் ஏராளமான நிலத்தை வாங்கிச் சேர்த்துக் கொள்ளும் பழக்கமும் அருகும். இங்ஙனம் வேக்பீல்ட் கருதி, அதன் வழியே அடிலேய்ட் (Adelaid) என்னுமிடத்தில் குடியேற்றத்தைத் துவக்கினர். நிலங்கள் ஏக்கருக்கு 12 ஷில்லிங்குகள் வீதமும், பின்னர் 20 ஷில்லிங்குகள் வீதமும் விற்கப்பட்டன. ஆனால், மேற்கு ஆஸ்திரேலியாவில் ஓர் ஏக்கர் 8 பென்சுக்குக் கிடைத்ததால், அதிகமான பேர் தென் ஆஸ்திரேலியாவுக்கு வரவில்லை. வந்த குடியேறிகள் கடனில் சிக்கித் தவித்தனர். ஆனால், நல்ல வேளையாக அங்குச் செம்பு கண்டுபிடிக்கப்பட்டதால் அவர்களின் வறுமை தீர்ந்தது.

பொறுப்பாட்சியின் தோற்றம்

நியூ சௌத்வேல்ஸ் என்ற குடியேற்றம் முதலில் குவீன்ஸ் லாந்து, விக்டோரியா என்ற இரு மாகாணங்களையும் உட்கொண்டதாக விளங்கிற்று. அதை ஓர் இராணுவ கவர்னர் ஆண்டுவந்தார். 1823இல் அது அரசாள் குடியேற்ற நாடாக (Crown Colony) மாறியது. கவர்னரொருவர் கவுன்சிலொன்றின் உதவி கொண்டு அதை ஆண்டார். ஆனால், கவுன்சில் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெறாமல் கவர்னராலேயே நியமிக்கப்பட்டனர். குற்றவாளிகள் வாழுமிடம் என்ற காரணத்தால் அங்குப் பலர் சென்று குடியேற விரும்பவில்லை. எனவே, 1840இல் பிரிட்டிஷ் அரசாங்கம் குற்றவாளிகளை அங்கு அனுப்பும் பழக்கத்தைக் கைவிட்டது. 1842இல் பிரதிநிதித்துவச் சட்டசபைகள் அந் நாட்டில் ஏற்படுத்தப்பட்டன. கவுன்சில் உறுப்பினர்களின் தொகை அதிகரிக்கப்பட்டதோடு, அதில் மூன்றில் இரண்டு பகுதியினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நியதியும் ஏற்பட்டது. போர்ட் பிலிப் என்னும் துறைமுகத்துக்கருகே ஒரு சுயேச்சைக் குடியேற்றம் ஏற்பட்டது. அதிலிருந்து ஆறு பிரதிநிதிகள் நியூசௌத் வேல்ஸின் சட்டசபைக்குச் சென்றனர். ஆனால், அவர்கள் போக்குவரவுச் சாதனமின்மையால் கடல் வழியாகவே சிட்னிக்குச் செல்லவேண்டியதாயிருந்தது. எனவே, 1850இல் விக்டோரியா, நியூ சௌத் வேல்ஸினின்றும் பிரிக்கப்பட்டது. அதன் சட்டசபை உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாய் இருந்தனர்.

1851இல் நியூ சௌத்வேல்ஸில் பாத்ஹர்ஸ்ட் (Bathhurst) என்னுமிடத்திலும், விக்டோரியாவில் பெல்லாரட் (Bellaret), பெண்டிகோ (Bendigo) என்னுமிடங்களிலும் தங்கம் தோண்டி எடுக்கப்பட்டது. அதனால் மக்கள் அங்குக் கூட்டங் கூட்டமாக வந்து குடியேறலாயினர். புதிதாக வந்தவர்களின் விருப்பத்திற் கேற்ப, அரசாங்கம் அவர்களுக்கு 1852இல் பொறுப்பாட்சியை வழங்கியது. தங்களது அரசியல் திட்டங்களைத் தாங்களே தீர் மானித்துக்கொள்ளவும், நிலங்களை யெல்லாம் பிரியம் போல் விநியோகிக்கவும் அவர்கள் உரிமை பெற்றனர். நாளடைவில் குற்றவாளிகளை அனுப்பும் பழக்கத்தை ஏனைய ஆஸ்திரேலிய மாகாணங்களிலும் ஆங்கிலேயர் கைவிட்டனர். எனவே, சுயேச் சைக் குடிமக்களின் எண்ணிக்கை எங்குப் பார்த்தாலும் பெருக ஆரம்பித்தது. 1854ஆம் ஆண்டில் நியூ சௌத்வேல்ஸ், விக்டோரியா, தென் ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா ஆகிய மாகாணங்களுக்குப் பொறுப்பாட்சியைப் பிரிட்டிஷார் வழங்கினர். 1859இல் அவர்கள் குவீன்ஸ்லாந்து என்ற மாகாணத்தை நியூ சௌத்வேல்ஸினின்றும் பிரித்துப் பொறுப்பாட்சியையும் வழங்கி னர். மேற்கு ஆஸ்திரேலியாவுக்குக் குற்றவாளிகளை அனுப்பும் பழக்கத்தை 1868ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயர் கைவிடவில்லை. 1870இல்தான் அவர்கள் அதற்குப் பிரதிநிதித்துவ நிறுவனங் களை வழங்கினர். 1890ஆம் ஆண்டில் பொறுப்பாட்சியையும் அவர்கள் அம் மாகாணத்திற்குத் தந்தனர்.

ஆஸ்திரேலியக் கூட்டரசு

இவ்வாறு, பொறுப்பாட்சி பெற்ற மாகாணங்களை ஒன்று கூட்ட வேண்டுமென்ற இயக்கம் நாளடைவில் ஆஸ்திரேலியா வில் வளர்ந்தது. ஆரம்பத்தில் ஒவ்வொரு மாகாணமும் தனித் தனியே வாழவே விரும்பின. ரயில்வேக்கள் கூட ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியே போடப்பட்டதேயன்றி அவை ஒன்றாக இணைக்கப்படவில்லை. உள்நாட்டு வியாபாரம் அதனால் தடைபட்டது. சர் ஹென்றி பார்க்ஸ் (Sir Henry Parkes), பார்ட் டன் (Barton) போன்றவர்கள் ஆஸ்திரேலியா ஒரு கூட்டரசாக இயங்க வேண்டுவதன் அவசியத்தை எடுத்தோதினர். அவர்களது திட்டத்தை ஆராய அடிலேய்ட் என்னுமிடத்தில் 1897இல் ஒரு மாநாடு நடைபெற்றது. அம் மாநாடு கூட்டரசுத் திட்டத்தை ஒருசில திருத்தங்களுடன் ஏற்றது. ஃபிரான்சும், ஜெர்மனியும், ஆஸ்திரேலியாவுக்கருகிலிருந்த சில தீவுகளை இச் சமயத்தில் கைப்பற்ற முயன்றன. எங்கு அவர்கள் ஆஸ்திரேலியாவையும் படையெடுத்துவிடுவரோ என்ற பயமானது ஆஸ்திரேலிய மாகாணங்களை ஒன்றுபடுத்தப் பெரிதும் துணைபுரிந்தது. 1900ஆம்

ஆண்டில் ஆஸ்திரேலியக் காமன்வெல்த் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இருபதாம் நூற்றுண்டின் ஆரம்ப முதல் ஆஸ்திரேலியா ஒரு கூட்டரசாகத் திகழ்ந்து வருகிறது. கனடாவில் இருப்பதைப் போன்ற இரு சபைகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றத்தை ஆஸ்திரேலியக் காமன்வெல்த் ஏற்படுத்திக்கொண்டது. அதன் மேல்சபையான செனட்டில் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறுறு உறுப்பினர்கள் இடம் பெற்றனர். கீழ்ச்சபையான பிரதிநிதித் துவ சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இடம் பெற்றனர். மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரை யறுக்கப்பட்டன. எஞ்சிய அதிகாரங்கள் மாகாணங்களுக்கே அளிக்கப்பட்டன. எனவே, கனடாவிலிருப்பதைவிட அதிக உரிமைகளுடன் ஆஸ்திரேலிய மாகாணங்கள் விளங்குகின்றன. நல்லதோர் கூட்டரசுக்கு எடுத்துக்காட்டாக ஆஸ்திரேலியக் காமன்வெல்த் விளங்குகிறது. ஆனல், அங்கு வெள்ளையர்களே யன்றி வேறெவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

டாஸ்மேனியாவுக்குள் முதன் முதலில் (1803இல்) குற்றவாளி களே அனுப்பப் பட்டனர். 1804இல் சுயேச்சைக் குடிமக்களும் அங்குக் குடியேறினர். அங்கு வாழ்ந்த கறுப்பு சுதேசிகளுக்கும் வெள்ளையர்களுக்கும் ஓயாத போர் நிகழ்ந்து வந்தது. 1876ஆம் ஆண்டுகளுக்குள் சுதேசிகள் அங்குப் பூண்டற்றுப்போயினர். 1854இல் அதற்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. 1856 முதல் அங்குக் குற்றவாளிகள் அனுப்பப்படுவது நின்றது. அதன் பின் அது வேகமாக முன்னேறலாயிற்று.

நியூசிலாந்து (New Zealand)

நியூசிலாந்தில் ஆங்கிலேயர் 1817இல் காலடி எடுத்து வைத் தனர். ஒரு தனி ஆணைப் பேரறிவிப்பின் மூலம், அந்நாட்டை ஆங்கிலேயர் தங்களுக்கென எடுத்துக்கொண்டனர். மவோரிகள் என்ற சுதேசிக் குடிகளுக்கும் ஆங்கிலேயருக்கும் அங்கு ஓயாத போர் ஏற்பட்டது. இறுதியில் 1840இல் இரு சாராருக்கும் வைடாங்கி (**Waitangi**) என்னுமிடத்தில் ஓர் உடன்பாடு ஏற்பட் டது. அதன்படி மவோரிகள் பிரிட்டிஷ் இறைமையை ஒப்புக் கொண்டு, விக்டோரியாவை அரசியாக ஏற்றனர். அதேபோல், பிரிட்டிஷாரும் மவோரிகளின் நில உரிமையை ஏற்றுக்கொண் டனர். தனிப்பட்டோர் நிலத்தை விற்கக்கூடாது என்றும்; குலக் கூட்டங்கள் (**Tribes**) மட்டுமே நிலத்தை விற்கலாம் என்றும் அவ்வுடன்பாடு கூறியது. சுதேசிகளை ஏமாற்றித் தனிநபர்கள் நிலங்களை எளிய விலைக்கு வாங்குவது இதனல் தடுக்கப்பட்டது.

1840இல் நியூசிலாந்து அரசாள் குடியேற்ற நாடாக மாறியது. கிப்பன் வேக்பீல்டின் முயற்சியால் 1837இல் ஏற்பட்ட நியூசிலாந்துக் கம்பெனியானது பல பேர்களைக் கொணர்ந்து அங்குக் குடியேற்றியது. ஆனால், வைடாங்கி உடன்படிக்கைக்கு விரோதமாக அது நிலங்களை வாங்கியதால் அதை நியூசிலாந்து கவர்னர் கிரே என்பார் 1851இல் ஒழித்துவிட்டார். அதனால் சுதேசிகள் மகிழ்ந்தனர். 1845 முதல் 1852 வரை கிரே, மவோரியர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொண்டார். 1852இல் நியூசிலாந்துக்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. மவோரிகள் சிலர் சட்டசபையில் இடம்பெற்றனர். எனினும், மவோரிகளின் நிலங்களை வெள்ளையர்கள் அபகரிப்பது நிற்கவில்லை. இருசாராருக்கும் கொரில்லாப் போர் பல ஆண்டுகள் நடைபெற்றன. 1871இல்தான் அப் போர் ஒருவாறு ஓய்ந்தது. அதன் பின் மவோரியர்கள் வெள்ளையர்களோடு ஒத்துழைத்து அதன் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டனர். ஆஸ்திரேலியக் காமன்வெல்த்தில் நியூசிலாந்து சேர மறுத்துவிட்டதால், 1907இல் பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்குத் தனியே டொமினியன் அந்தஸ்தை வழங்கியது.

தென்னாப்பிரிக்காவின் வளர்ச்சி

ஆரம்பக் குடியேற்றம்: போயர்களும் ஆங்கிலேயர்களும்

தென்னாப்பிரிக்காவில் முதன்முதலில் குடியேறியவர்கள் டச்சுக்காரர்களாவர். டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி 1650இல் நன்னம்பிக்கை முனையைக் கைப்பற்றி, இந்தியாவுக்குச் செல்லும் வழியில் அதை ஒரு தங்குமிடமாகப் பயன்படுத்திவந்தது. 1687-க்குப் பின் தாய்நாட்டில் துன்புறுத்தப்பெற்ற ஹ்யூக்னோக்கள் என்னும் பிரெஞ்சு பிராடஸ்டென்டுகள் பலர் அங்குச் சென்று குடியேறினர். இவ்விரு இனத்தவரும் கலப்புற்றதால் தோன்றியவர்களே போயர்கள் (Boers) எனப்படுபவர். இப் போயர்கள் நல்ல உழைப்பாளிகள். பெரும் பண்ணைகளை ஆங்காங்கே தோற்றுவித்தனர். நிலத்தில் பாடுபட அவர்கள் நீக்ரோக்களையும் மலேயர்களையும் அடிமைகளாக வைத்துக்கொண்டிருந்தனர்.

பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள் நடைபெற்றபோது, ஆங்கிலேயர்கள் டச்சுக் குடியேற்றத்தைக் கைப்பற்றினர். ஆனால், பின்னர் ஏற்பட்ட ஆமியாங் உடன்படிக்கையின்படி அது மீண்டும் டச்சுக்காரர்களுக்கே திருப்பிக்கொடுக்கப்பட்டது. நெப்போலியன் போர்கள் நடைபெற்றபோது பிரிட்டிஷார் மீண்டும் அந்த நாட்டைக் கைப்பற்றினர் (1806). 1814ஆம் ஆண்டில் நடைபெற்ற பாரிஸ் உடன்படிக்கையின்படி ஆங்கிலேயர் ஒரு குறிப்பிட்ட

ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர் பரவல்



தொகையை டச்சுக்காரர்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுத்துவிட்டு நன்னம்பிக்கைமுனை நாட்டை நிரந்தரமாகப் பெற்றனர். நெப்போலியப் போர்கள் முடிந்தபின், இங்கிலாந்தில் ஏற்பட்ட பஞ்சத்தாலும் பொருளாதார முட்டுப்பாடுகளாலும் அவதியுற்ற ஆங்கிலேயர் பலர் வந்து தென் ஆப்பிரிக்காவில் குடியேறினர். அவர்களது வருகை போயர்களிடையே மிகுந்த அதிருப்தியை விளைவித்தது. ஏனெனில், பிரிட்டிஷ் நீதிமன்றங்களும், பிரிட்டிஷ் மாஜிஸ்ட்ரேட்டுகளும் நாட்டில் பெருக ஆரம்பித்தனர். பழைய ரோமானிய டச்சுச்சட்டங்கள் சிவில் வழக்குகளில் பயன்படுத்தப் பட்டனவேனும், ஏனைய வழக்குகளில் பிரிட்டிஷ் சட்டங்களே அமுலுக்கு வந்தன. பிரிட்டிஷ் கவர்னர் ஒருவர் ஆலோசனை சபையொன்றின் உதவிகூட இல்லாமல் அங்குத் தனியாட்சி புரிந்தார். டச்சு மொழிக்குப் பதிலாக ஆங்கிலம் ஆட்சி மொழி யாகவும், நீதிமன்ற மொழியாகவும் ஆயிற்று. இதையெல்லாம் கண்ட டச்சுக்காரர்கள் தங்களது பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் அழிக்க வந்த நமனுகப் பிரிட்டிஷ் ஆட்சியைப் பாவிக்கலாயினர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களது பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கக்கூடியதும், மத வுணர்ச்சியைப் புண்படுத்தக் கூடியதுமான ஒரு செயலில் ஆங்கில சர்க்கார் இறங்கிய போதுதான் அவர்கள் பொறுமை எல்லைகடந்தது. டச்சுக்காரர்கள் கால்வினியப் பிராடஸ்டென்டு கள். புதிய ஏற்பாட்டிலன்றிப் பழைய ஏற்பாட்டிலேயே (**Old Testament**) அவர்களுக்கு அதிக நம்பிக்கை இருந்தது. ஹீப்ருக் களைப்போல் அவர்களும் இறைவனுல் தேர்ந்தெடுக்கப் பட்ட உயர்ந்த ஜீவன்களென்றும், கானுனியர்களைப் போன்று ஆப் பிரிக்க நீக்ரோக்கள் அவர்களுக்கு அடிமைகளாகவே இருக்கப் பிறந்தவர்களென்றும் அவர்கள் உறுதியாக நம்பினர். ஆனுல், ஆங்கிலேயர்களோவெனில் அடிமைகளுக்கு விடுதலையளிப்பதே தர்மம் எனப் பறை சாற்றினர். லண்டன் மிஷனரிக் கழகம், ஜெர்மன் லூதரன்கள், பிரெஞ்சு நற்செய்தி பரப்புவோர் யாவரும் தென் ஆப்பிரிக்க மக்களிடையே சமயப் பிரச்சாரம் செய்து சிறந்த செல்வாக்கைப் பெற்றிருந்தனர். அவர்கள், டச்சுக்காரர்கள் நீக்ரோக்களை நடத்தும் முறை பற்றிச் சிறிது மிகைபடவே எடுத்துக் கூறலாயினர். லண்டன் மிஷனரிக் கழகத்தைச் சேர்ந்த ஜான் பிலிப் என்பார், பிரிட்டிஷ் அரசாங்கத்தில் நல்ல செல்வாக் குடன் விளங்கினுர். அவரது ஆலோசனைகளை அரசாங்கம் புறக்கணிக்க இயலாத நிலையில் இருந்தது. எனவே, தென் ஆப்பிரிக்க ஹாட்டென்டாட்டுகளுக்கு (**Hottentots**) நிலங்களைச் சொந்தமாக வைத்துக்கொள்ளும் உரிமையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் 1828இல் அளித்தது. 1833இல் பிரிட்டிஷார் தென்

ஆப்பிரிக்காவில் அடிமை முறையை ஒழித்தனர். நிலங்களைப் பயிரிடுவதற்கு நீக்ரோ அடிமைகளையே நம்பியிருந்த போயர்களுக்கு அது ஒரு பெருத்த அநீதியாகத் தோன்றியது. அடிமைகளை வைத்திருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடு மிக மிகக் குறைவானதாக இருந்தது. பிரிட்டிஷார் தங்களை ஏமாற்றி விட்டதாகப் போயர்கள் நினைத்தனர். மேலும், அது அவர்களது மத நம்பிக்கைகளுக்கும் புறம்பானதாயிருந்தது. எனவே, பிரிட்டிஷாருக்கும் போயர்களுக்கும் பகை ஏற்பட்டது.

அடிமை முறை ஒழிப்பு

அடிமை முறையை ஒழித்தபின் அதைச் செவ்வனே அமுல் நடத்துவதற்காக ஆங்கிலேய சர்க்கார் சர் பெஞ்சமின் டி அர்பன் **(Sir Benjamin D' Urban)** என்னும் கவர்னரைத் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினர். சுதேச ராஜ்யங்களோடு சமாதான உடன்பாடுகளைச் செய்துகொள்ளும்படி அவர் அறிவுறுத்தப் பட்டிருந்தார் எனவே, அவர் தென்னாப்பிரிக்காவை அடைந்தவுடன் கிரிக்காக்கள் **(Griqua)** என்னும் சுதேச மக்களின் தலைவனை வாட்டர்போயர் **(Waterboer)** என்பவனோடு ஒரு சமாதான உடன்பாட்டைச் செய்துகொண்டார். ஆனால், காபிர்கள் **(Kaffirs)** என்னும் கூட்டத்தார் சமாதானத்துக்கு இணங்க மறுத்தனர். **1834**இல் அவர்கள் கேப் குடியேற்ற நாட்டைப் படையெடுத்தனர். கவர்னர் டி அர்பன் மிகவும் முயன்று அவர்களை வென்றபின் அவர்களது நாட்டிற்கும் கேப் நாட்டிற்குமிடையே யாருக்கும் சொந்தமில்லாத ஓர் இடைத்தடை நாட்டை **(Buffer State)** ஏற்படுத்தினா. காபிர்கள் மீண்டும் அதைக் கடந்து பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டைத் தாக்கினர். எனவே, டி அர்பன் தமது துருப்புகளை அனுப்பிக் கெய் நதி **(Kei River)** வரையுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றிக் கேப் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். அதனால் காபிர்களின் தொல்லை ஒருவாறு ஓய்ந்தது. ஆனால், சுதேசிகள்மீது அநுதாபம் கொண்ட பிரிட்டிஷ் அரசு டி அர்பனின் கொள்கையை ஒப்புக்கொள்ள மறுத்தது. பழைய எல்லைக்கே திரும்பிவிடும்படி **1836**இல் அவர்கள் டி அர்பனுக்கு உத்தரவிட்டனர். காபிர்களின் தொல்லைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றக் குழு ஒன்று, டாக்டர் பிலிப் போன்றவர்களின் சாட்சியங்களைக் கேட்டுவிட்டு, காபிர்கள் படையெடுப்புக்குப் போயர்களே காரணம் என்று அறிவித்தது. இதைக் கேட்ட போயர்கள் மனம் நொந்தனர். தங்களது உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைத்து வந்த நீக்ரோக் கூட்டத்தாருக்கு அளவுக்கு மீறிச் சலுகை காட்டும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வாழ அவர்களுக்குப் பிடிக்கவில்லை. கேப் குடியேற்ற

நாட்டை விட்டு அப்பாற் சென்றேனும் தம் பிரியப்படி அடிமைகளை வைத்துக்கொண்டு நல்வாழ்வு வாழ அவர்கள் திட்டமிட்டனர். அத் திட்டத்தின் விளைவே வரலாற்றுப் புகழ் பெற்ற 'பெரும் வெளியேற்றம்' (**Great Trek**) என்ற நிகழ்ச்சியாகும்.

பெரும் வெளியேற்றம்

1836ஆம் ஆண்டில் இப் பெரும் வெளியேற்றம் தொடங்கியது. ஆயிரக்கணக்கான டச்சுக்காரர்கள் ஆங்கில ஆட்சியின் பிடியினின்றும் தப்பித்துக்கொள்ள வேண்டித் தமது ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டும் மூட்டைமுடிச்சுகளை வண்டிகளில் போட்டுக்கொண்டும் கேப் மாகாணத்தை விட்டு வெளியேறலாயினர். இப் பெரும் வெளியேற்றமானது ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வரை நீடித்தது. சுமார் 10,000 டச்சுக்காரர்கள் தமது வீடு வாசல்களை விட்டு நீங்கினர். அங்ஙனம் சென்றவர்களில் பால் குரூகர் (**Pall Kruger**) என்ற இளைஞனும் ஒருவன். வருங்காலத்தே தமது இனத்தாரின் தலைவனாக வந்து பிரிட்டிஷாரை அவன் எதிர்க்கப்போவதை அன்று அவன் கனவு கண்டிருக்கக்கூடும். இவ்வாறு புறப்பட்ட போயர்கள் முதலில் ஆரஞ்சு நதியைக் கடந்து, ஆரஞ்சு சுயேச்சை நாடு (**Orange Free State**) என்ற புதிய நாடொன்றை ஏற்படுத்தினார்கள். இன்னும் சிலர் வால் (**Vaal**) நதியையும் கடந்து சென்று ட்ரான்ஸ்வால் (**Transwal**) நாட்டைத் தோற்றுவித்தனர். 1838இல் வேறு சிலர் வடகிழக்குப்புறத்தே சென்று நேடால் என்னும் பிரதேசத்தில் குடியேறினர். அங்கே ஜுலு என்ற கூட்டத்தினரின் தலைவனான டிங்கான் (**Dingann**) என்பவன் போயர்களை எதிர்த்து அவர்களிற் பெரும்பான்மையோரைக் கொன்றான். அதற்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ள விரும்பிய போயர்கள் ஆண்ட்ரீஸ் பிரிடோரியஸ் (**Andries Pretorius**) என்பவரின் தலைமையில் சென்று இரத்த நதிப் (**Blood river**) போர்க்களத்தில் ஏராளமான ஜுலுகளைக் கொன்று குவித்தனர். பிரிட்டிஷ் குடியேறிகள் போயர்களைப் பின்தொடர்ந்து சென்று நேடால் மாகாணத்தில் குடியேறினர். எனவே, 1843இல், பிரிட்டிஷ் அரசாங்கம் நேடால் மாகாணம் கேப் மாகாணத்தின் ஒரு பகுதியே என அறிவித்தது. 1845இல் அது தனி அரசாள் குடியேற்ற நாடென அறிவிக்கப்பட்டது. கேப் மாகாண கவர்னருக்குட்பட்ட லெப்டினென்ட் கவர்னரொருவர் நேடாலை ஆள்வதற்காக நியமிக்கப்பட்டார். இதைக் கண்ட போயர்களில் பலர் நேடாலையும் விட்டகன்று ஆரஞ்சு சுயேச்சை நாட்டுக்கும் டிரான்ஸ்வாலுக்கும் போய்விட்டார்கள்.

போயர் நாடுகளின் சுதந்திரம்-மணலாறு, ப்ளூம்பாண்டின் மாநாடுகள்

பிரிட்டிஷ் சர்க்கார் தென் ஆப்பிரிக்காவில் மேலும் நாடு பிடிக்கும் கொள்கையை ஆதரிக்கவில்லை. எனவே, கேப் மாகாணத்தவர்கள் கிரிக்வாக்கள், பசூட்டோக்கள் (Basutos) போன்ற சுதேசிகளோடு நட்பு உடன்பாடுகளைச் செய்துகொள்ள முயன்றனர். எனினும், நிலச்சிக்கல் எவ்வகையிலும் தீர்ந்தபாடில்லை. அப்பிரச்சினை காரணமாக 1846இல் காபிர் கூட்டத்தினர் மீண்டும் போரிலிறங்கினர். கேப் மாகாணத்தின் கவர்னராக அப்போதிருந்த ஹேரி ஸ்மித் (Harry Smith) என்பவர் விரைந்து சென்று காபிர்களை கெய் நதிக்கப்பால் துரத்தியடித்தார். அதன்பின் அவர் ஆரஞ்சு நதிக்கும் வால் நதிக்கும் இடையே இருந்த பிரதேசத்தைப் பிரிட்டிஷ் குடியேற்ற நாடென அறிவித்தார். ஆங்கிலேயர்கள் இவ்விதம் தங்களைப் போகுமிடமெல்லாம் தொடர்ந்து வந்து ஆதிக்கம் செலுத்தியது கண்ட போயர்கள், பிரிடோரியஸ் (Pretorius) என்பாரின் தலைமையில் ஒன்று திரண்டு ஆங்கிலேயரை எதிர்த்தனர். ஆனால், பிரிட்டிஷ் படை வீரர்கள் போயர்களை பூம்ப்ளாட்ஸ் (Boomplatz) என்னுமிடத்தில் தோற்கடித்தனர். எனினும், ஆரஞ்சு நாட்டைப் பிரிட்டிஷார் தங்களுக்கே வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆப்பிரிக்கச் சுதேசிகளோடு போரிட்டுப் போரிட்டு அவர்கள் சலித்துவிட்டார்கள். மேலும், அவர்களைப் போயர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமும் பிரிட்டனில் சிறிது சிறிதாகக் குறைந்துவந்தது. போயர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கிவிட்டு அதன் மூலம் பேரரசுப் பொறுப்பினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் விழைந்தனர். காப்டனின் சீடர்களும் குடியேற்ற நாட்டுச் சீர்திருத்தவாதிகளும் போயர்களுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டுமெனக் கூக்குரலிட்டனர். எனவே, 1852இல் கூடிய மணலாறு மகாநாடு (Sand River Convention) டிரான்ஸ்வால் போயர்களுக்குச் சுதந்திரம் வழங்கியது. 1854இல் கூடிய ப்ளூம்ஃபான்டின் மகாநாடானது (Bloemfonteion Convention) ஆரஞ்சு சுயேச்சை நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கியது. 1853இல் கேப் மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பொறுப்பாட்சி வழங்கப் படவில்லை.

8. விக்டோரியப் பேரமைச்சர் சாலிஸ்பரி பிரபு (1830-1903)

(Marquiss of Salisbury)

வாழ்க்கைக் குறிப்பு; சாலிஸ்பரியின் இரண்டாவது மந்திரி சபை (1886-1892): அயர்லாந்தில் அடக்குமுறை ஆட்சி—உள்நாட்டுச் சீர் திருத்தங்கள்—சமதர்ம இயக்கம்: ஏகாதிபத்திய மனப்பான்மையின் வளர்ச்சி; மூன்ரும் பேரரசின் தோற்றம்: பேரரசு தோன்றுவதற்கான காரணங்கள்—பேரரசு ஏற்பட்ட **விதம்**; சாலிஸ்பரியின் மூன்ரும் மந்திரி சபை (1895-1902): வெனிஸுலாவில் எல்லேத் தகராறு—சூடானில் ஆங்கிலேயர்-ஃபஷோடா நிகழ்ச்சி—போயர்கள் யுத்தம்-காரணங்கள்—போரின் போக்கு (1899-1902)—சீனவில் பாக்ஸர் கலகம்; இராணியாரின் மரணம்.

விக்டோரியா மகாராணியாரின் அந்திய காலத்தே அவருக்கு உறுதுணையாயிருந்து இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பைத் திறம்பட நிருவகித்த பெருமை அவரது கடைசிப் பிரதமரான சாலிஸ்பரி பிரபுவையே சாரும். கிளாட்ஸ்டனைப் போன்று உள் நாட்டு நிருவாகத்துறையில் மெச்சத்தக்கக் காரியங்களை அவர் செய்யவில்லை. எனினும், அவரது வெளிநாட்டுக் கொள்கை அவருக்கு நல்ல பேரையும் புகழையும் தேடித்தந்தது. அக் காலத்தே மக்களின் மனத்தகத்தே கொழுந்துவிட்டெரிந்த பேரரசு மனப்பான்மையின் ஒரு பெரும் பிரதிநிதியாக அவர் திகழ்ந்தார். மூன்றுமுறை பிரதமராயிருந்து அவர் தம் நாட்டிற்குத் தொண்டாற்றினர்.

வாழ்க்கைக் குறிப்பு

சாலிஸ்பரி பிரபு, எலிஸபெத் இராணியாரது பேரமைச்சராய் விளங்கிய வில்லியம் செசில் (**William Cecil**) என்ற பர்லி பிரபுவின் (**Lord Burleigh**) வழித் தோன்றலாவார். அவர் பிறந்தது 1830 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்ரும் தேதியிலாகும். அவரது

இயற்பெயர் ராபர்ட் செசில் (Robert Cecil) என்பது. 1865இல் அவருக்கு கிரான்பர்ன் பிரபு (Lord Cranborne) என்ற பட்டமும், 1868இல் சாலிஸ்பரி பிரபு (Marquiss of Salisbury) என்ற பட்டமும் கிடைத்தன. ஈட்டன், ஆக்ஸ்போர்டு என்ற புகழ்பெற்ற இடங்களில் அவர் கல்வி பயின்றவர். படிக்கும்போதே அவர் தனிப்பட்ட முறையில் சுதந்திரமாகக் காரியங்களைச் செய்கின்ற மனப்பான்மையைக் கொண்டிருந்தார். 1854ஆம் ஆண்டில்தான் அவர் பாராளுமன்ற உறுப்பினரானார். அப்பொழுது ஆரம்பமான அவரது பொது வாழ்க்கையானது 1902ஆம் ஆண்டுவரை நீடித்தது. 1854 முதல் 1868 வரை பொதுமக்கள் சபையில் இருந்துகொண்டு விக்குக் கட்சியினரின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் கண்டிப்பதிலேயே காலங்கழித்தார். சில சமயங்களில் அவர் தமது கட்சியினரையே குறை கூறுவதும் வழக்கம். போட்டித் தேர்வு மூலம் பொது சிவில் ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தல், சுங்க வரிகளை ரத்து செய்தல் போன்ற உள் நாட்டுச் சீர்திருத்தங்களையும், போலந்தையும் டென்மார்க்கையும் சமயத்தில் கைவிட்டதைப் போன்ற வெளிநாட்டுக் கொள்கைகளையும் மிக வன்மையாகக் கண்டித்தார். டிஸ்ரேலி பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொணர்ந்தபோது அவர் அதைத் தமது கட்சியின் கொள்கைக்கே முற்றிலும் மாறானது எனக் கூறிக் கட்சியைவிட்டே வெளியேறினார். 1868இல் அவர் பிரபுக்கள் சபையின் உறுப்பினரானார். கீழ்ச்சபையின் குற்றங் குறைகளைச் சரிக்கட்ட மேல் சபை ஒன்று தேவையென்பதும், அதற்கு ஆயுள் பரியந்த உறுப்பினர்களை (Life Peers) நியமிக்கும் அதிகாரம் அரசியிடமிருக்க வேண்டுமென்பதும் அவரது கருத்துக்களாகும். 1874 முதல் 1878 வரை அவர் டிஸ்ரேலியின் மந்திரிசபையில் இந்திய அமைச்சராகப் பணிபுரிந்தார். 1878 முதல் 1880 வரை வெளிநாட்டமைச்சராக அவர் விளங்கினார். 1885இல் கிளாட்ஸ்டனின் இரண்டாம் மந்திரிசபை வீழ்ச்சியுற்றபோதுதான் சாலிஸ்பரி முதல் பிரதமரானார். ஆனால், சில மாதங்களிலேயே அவர் பதவியைத் துறக்க நேர்ந்தது. ஏனெனில், அவ்வாண்டில் நடைபெற்ற தேர்தலின் மூலமாகக் கிளாட்ஸ்டன் மீண்டும் பதவியைக் கைப்பற்றினார். அயர்லாந்து சுயாட்சி சம்பந்தமாகத் தாராளக் கட்சியினரிடம் பிளவேற்பட்டுக் கிளாட்ஸ்டன் 1886இல் வீழ்ச்சியுற்றபின் சாலிஸ்பரி மீண்டும் பிரதமரானார்.

சாலிஸ்பரியின் இரண்டாவது மந்திரிசபை (1886-1892)

சாலிஸ்பரி டோரிக் கட்சியினரே எனினும், தாராளக் கொள்கைகளை ஓரளவு ஆதரித்தவர். 1867, 1884ஆம் ஆண்டுப் பாராளு

மன்றச் சீர்திருத்தச் சட்டங்களை அவர் ஆதரித்தார். அதனுல் கிளாட்ஸ்டனின் சுயாட்சி மசோதாவை வெறுத்த தாராளக் கட்சியினர் சாலிஸ்பரிக்கு ஆதரவளித்தனர். அவர்களுடைய ஒத்துழைப்பு சாலிஸ்பரிக்கு நல்ல ஊக்கமளித்தது. அவரது கொள்கைகளும் ஓரளவு தாராளப் போக்குள்ளனவாக நாளடைவில் மாறியது. அவரது காபினெட்டில் டோரிக் கட்சியினரே இடம் பெற்றனர். டிஸ்ரேலியின் டோரி ஜனநாயகத்தை நாட்டில் பரப்ப விரும்பிய ராண்டால்ப் சர்ச்சில் (Randolph Churchil) என்பவரை அவர் கருவூலத் தலைவராக நியமித்தார். அப்பெரிய பதவிக்கு அவர் அவ்வளவு தகுதியுடையவராக இல்லை. தசாம்சப் புள்ளிக்கும் முற்றுப் புள்ளிக்கும் உள்ள வேறுபாட்டைக்கூட அவர் நிரந்தரச் சிவில் அதிகாரிகளிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியிருந்ததெனச் சிலர் கேலியாகக் கூறினர். எனினும் விரைவிலேயே அவர் வரவு செலவு நுட்பங்களைத் தெரிந்து கொண்டார். தமக்குப் பிடித்தமான சமூக சீர்திருத்தங்களை உடனடியாகக் கொணர விரும்பிய அவர் அதற்கான பொருளைச் சேகரிக்கச் சேனைக்காகவும், கடற்படைக்காகவும் செலவிட வேண்டிய தொகையைக் குறைக்க எண்ணினுர். அவரது யோசனையை மற்ற மந்திரிகள் ஏற்க மறுத்தனர். எனவே சர்ச்சில் தம் பதவியை ராஜிநாமாச் செய்ய முன்வந்தார். அவரது தீவிரப் போக்கைக் கண்டு அஞ்சிய சாலிஸ்பரியும் அவரது ராஜிநாமாவை ஒப்புக்கொண்டு காஸ்ச்சன் (Goschen) என்பவரைக் கருவூலத் தலைவராக நியமித்தார். பால்பர் (Balfour) என்ற தமது மைத்துனரை அயர்லாந்தின் கவர்னராக நியமித்தார். கலைகள், இலக்கியம் இவற்றில் ஈடுபாடுகொண்ட ஒரு சுகபோகியாக இருந்த பால்பர் எங்ஙனம் அயர்லாந்தின் தொல்லைகளைச் சமாளிக்கப் போகிருர் என யாவரும் நினைத்தனர். ஆனுல், விரைவிலேயே அவர் ஓர் உறுதியும் மனத்திண்மையும் கொண்ட அதிகாரி என்பதை மெய்ப்பித்துவிட்டார்.

அயர்லாந்தில் அடக்குமுறை ஆட்சி

'அயர்லாந்துக்கு வேண்டியதெல்லாம் சுயாட்சியல்ல. இருப தாண்டுகளுக்குக் கடுமையான வல்லாட்சியே அதற்கு உடனடியாகத் தேவை' என சாலிஸ்பரி ஒரு சமயம் கூறினுர். அவரது கொள்கையை நடைமுறையில் கொண்டுவரப் பாடுபட்டார் பால்பர் என்னும் அயர்லாந்து கவர்னர். அப்போது புரட்சித் தலைவர்களாயிருந்த ஹீலி (Healy), டில்லன் (Dillon), ஓ பிரையன் (O Brien) என்ற மூவரும் போராட்டத் திட்டம் (Plan of Campaign) என்ற நூதனத் திட்டமொன்றைத் தீட்டினர். நிலப்பிரபுக்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான குத்தகை

எவ்வளவென்பதை அவர்களே தீர்மானிப்பதென்றும், அக் குத்தகையைப் பிரபுக்கள் வாங்க மறுத்தால் அதை ஒரு நிதியாகத் திரட்டிக் குடியானவர்களின் நன்மைக்குப் பயன்படுத்துவ தென்றும் அவர்கள் முடிவு செய்தனர். சட்ட விரோதமான இத்தகைய செயல்களைத் தடுக்க பால்பர் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். 'கடுங்குற்றங்கள் சட்டம்' (**Crimes Act**) என்ற சட்டமொன்றை அவர் ஏற்படுத்தினர். அதன்படி கலகக்காரர்கள் ஜூரிகளின் முன்னால் விசாரிக்கப்படாமல், ஆங்காங்கே வசித்து வந்த மாஜிஸ்திரேட்டுகளால் (**Resident Magistrates**) விசாரிக்கப் பட்டனர். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அவ்வதிகாரிகள் குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனைகளை விதித்தனர். இம்முறை யைத் தாராளக் கட்சியினரும் ஏனையோரும் வன்மையாகக் கண் டித்தனர். ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தாது பால்பர் தம் அடக்குமுறையைத் தொடர்ந்தார். 1887இல் நிலச் சட்ட மொன்றை ஏற்படுத்தி நியாயமான குத்தகையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை நீதிமன்றங்களுக்கு அளித்தார். அரசியல் குற்ற வாளிகள் திருடர்களைப் போன்று பாவிக்கப்பட்டுத் தண்டிக்கப் பட்டனர். டைம்ஸ் பத்திரிகையானது போனிக்ஸ் பூங்காக் கொலை களைப் பார்னெல் ஆதரித்து எழுதியதாக இருந்த ஒரு கடிதத் தைப் பிரசுரித்தது. அதையொட்டிப் பார்னலும், அவரைச் சார்ந்தோரும் சிறையிலிடப்பட்டனர். ஆனால், பின்னர் பார்னல் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டது. ஆனால், பார்னல் ஒரு விவாகரத்து வழக்கில் சிக்கிக்கொண்டு மக்களின் ஆதரவை இழந்தார். எனவே, பால்பரின் அடக்குமுறை வெற்றி பெற்றது. 1891இல் அவர் 'நிலம் வாங்கல் சட்டம்' (**Land Purchase Act**) ஒன்றை இயற்றினர். அதன்படி நிலப்பிரபுக்கள் தங்கள் நிலங் களை விற்க விரும்பினால் அதைக் குடியானவர்களே வாங்கிக் கொள்ள அரசாங்கம் பணவுதவி செய்யுமென்று அறிவிக்கப் பட்டது. மேலும் அச்சட்டமானது விவசாய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கென மாவட்டக் குழுக்களையும் ஏற்படுத்தியது. அயர்லாந்துக்கு சுயாட்சி அளிக்க வேண்டுமென்ற இயக்கம் நாளுக்குநாள் பலங்குன்றலாயிற்று.

உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்

சாலிஸ்பரியின் இரண்டாவது மந்திரி சபையானது சில நல்ல சீர்திருத்தங்களையும் செய்தது. கிளாட்ஸ்டனை எதிர்த்தவர்கள் தாராள ஒன்றிப்புக் கட்சி (**Liberal Unionist Party**) என்ற கட்சியைத் தோற்றுவித்தனர். அதன் தலைவராக இருந்த சேம்பர்லெய்ன் என்பவரது தூண்டுதலால் அரசாங்கம் இரண்டு நல்ல சட்டங்களைச் செய்தது. 1891ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு

சட்டமானது ஆரம்பக் கல்வியைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்தது. 1883இல் ஏற்பட்ட கவுன்டி கவுன்சில் சட்டமானது நாட்டுப்புறங்களில் தல சுயநிர்ணய ஆட்சியை ஏற்படுத்தியது. அதன்படி இடவரிசைகளைச் செலுத்தும் கௌன்டி வாசிகள் (Rate Payers) தங்களை ஆள்வதற்கென ஒரு சபையைத் தேர்ந்துதெடுத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

சமதர்ம இயக்கம் (Socialist Movement)

மேலும், இக்காலத்தே சமதர்மக் கொள்கைகள் (Socialism) நாட்டில் முதன் முதலாகப் பரவ ஆரம்பித்தன. அதுவரை இருந்த தொழிற் சங்கங்கள் திறமைமிக்க தொழிலாளர்களின் நட்புறவு சங்கங்களாக இருந்தனவேயன்றி அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இப்போ தோவெனின் மார்க்ஸ் என்பார் எழுதிய 'டாஸ் கேப்பிடல்' (Das Capital) என்ற நூலினால் உந்தப்பட்ட தொழிலாளர்கள் அரசியலைப் பலவந்தமாகக் கைப்பற்றினாலன்றித் தங்கள் குறைகள் தீர வழியில்லை என நினைத்தனர். பாராளுமன்றத்திலும் நகராண்மைக் கழகங்களிலும் தங்களது ஆட்கள் நுழைய வேண்டு மெனவும் அவர்கள் விரும்பினர். பென் டில்லட் (Ben Tillett) ஜான் பர்ன்ஸ் (John Burns), டாம் மான் (Tam Mann) போன்ற அருந்தலைவர்கள் பலாத்காரம் மூலம் தங்களது குறைகளைத் தீர்த்துக்கொள்ளும்படி தொழிலாளர்களை வற்புறுத்தினர். டில்லட் என்பார் துறைமுகத் தொழிலாளர்களை எல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு பொது வேலைநிறுத்தத்தை ஏற்படுத்தினார். ஒற்றுமையாக எல்லாத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்ததால் முதலாளிகள் பணிய வேண்டியதாயிற்று. மணி யொன்றுக்கு 6 பென்னிகள் கூலி தரவேண்டுமெனவும், நான்கு மணி நேரங்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேலை தரப்பட வேண்டு மெனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். அவர்களது கோரிக்கைகள் நிறைவேறின. இதைக் கண்ட ஏனைய தொழிற் சங்கங்கள் ஊக்கமடைந்தன. திறமையற்ற சாதாரணத் தொழிலாளர்களும் வாரத்துக்குச் சில பென்னிகள் சந்தா செலுத்தித் தொழிற் சங்கங்களில் உறுப்பினரராயினர். ஆரம்பத்தில் அவை முதலாளிகளோடு சச்சரவு நேரிடுங்காலையில் தொழிலாளர்களைக் காக்கவே ஏற்பட்டனவெனினும், நாளடைவில் முதலாளிகளை ஒழித்துத் தொழில்களைத் தொழிலாளர்களே நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடலாயின. சோஷலிசம் அல்லது சமதர்மக் கொள்கைகளை அவைகள் மேன்மேலும் கடைப்பிடிக்கலாயின.

ஏகாதிபத்திய மனப்பான்மையின் வளர்ச்சி
(Growth of Imperialism)

மூன்றும் பேரரசின் தோற்றம் (Origin of the Third Empire)

பேரரசு தோன்றுவதற்கான காரணங்கள்

சாலிஸ்பரி பிரபுவின் ஆட்சிக் காலத்தில் பிரிட்டிஷ் மக்களிடையே மீண்டும் பேரரசு மனப்பான்மை விறுவிறுவென்று வளரலாயிற்று. உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வந்த அநாகரீகமான பிற்போக்கு மக்களைக் கிறித்துவர்களாக்கி ஈடேற்ற வேண்டுமெனவும், அங்ஙனம் செய்தற்கு ஒரே வழி அந்நாடுகளைப் பிரிட்டிஷ் பேரரசில் சேர்த்துவிடுவதேயாகுமெனவும் பாதிரிமார்கள் ஒருபுறம் கூறிவந்தனர். மேலும், ஆப்பிரிக்காவில் நடைபெற்றுவந்த அடிமை வியாபாரத்தை ஒழிக்க வேண்டுமெனவும் அதைக் காரியத்தில் நிறைவேற்ற வேண்டுமானல் ஆப்பிரிக்கத் துறைமுகங்களில் பிரிட்டிஷ் கப்பற்படையானது நிலைபெற வேண்டுமெனவும் அப் பாதிரிகள் கூறிவந்தனர். இன்னொரு பக்கம் வியாபாரிகள் தங்கள் செல்வத்தைப் பெருக்கப் புதிய நாடுகளில் குடியேறுவது இன்றியமையாதது எனக் கூக்குரலிட்டனர். 1827இல் அவர்கள் கோல்ட் கோஸ்ட் வியாபாரக் கம்பெனியை ஏற்படுத்தினர். அக் கம்பெனிக்கும், சுதேசிகளுக்கும் நாளடைவில் சச்சரவு வலுத்தது. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கே தலையிட வேண்டியதாயிற்று. 1843இல் கோல்ட் கோஸ்டு நாடு பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்ட நாடாக (**Protectorate**) மாற்றப்பட்டது. இங்ஙனம் வியாபாரத்தைத் தொடர்ந்து அரசியல் ஆதிக்கம் பரவ வழியேற்பட்டது. மேலும், இக்காலத்தே ஆப்பிரிக்காக் கண்டத்தைப் பல துணிகரப் பிரயாணிகள் சென்று ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கைகள் ஐரோப்பியர்களின் பேராசையைத் தூண்டலாயின. டேவிட் லிவிங்ஸ்டன் (**David Livingston**) என்ற பாதிரியாரின் ஆராய்ச்சிகளும், அவரைத் தொடர்ந்து சென்ற ஸ்டான்லி (**Stanly**) என்பாரது ஆராய்ச்சிக் குறிப்புகளும் ஜாம்பஸி நதிப் பிரதேசமும், காங்கோ நதிப்பிரதேசமும் இயற்கை வளம் கொழிக்கும் நாடுகள் என்பதை ஐரோப்பியருக்கு எடுத்துக் காட்டின. பெல்ஜியத்தின் மன்னர் இரண்டாம் லியோபோல்டு என்பார் உடனே ஸ்டான்லியை அனுப்பிக் காங்கோப் பிரதேசத்தில் ஒரு சில வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர். அங்கிருந்து ரப்பர், தந்தம், மரம் பனை எண்ணெய் முதலியன பெருவாரியாக பெல்ஜியத்தில் வந்து குவியலாயின. இதைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு ஆப்பிரிக்காவில் வியாபார நிலையங்களை

அமைக்க முற்பட்டன. பிரெஞ்சுக்காரர்களும் பெல்ஜியர்களும் காங்கோவின் வட பாகத்தில் மோதிக்கொண்டனர். ஆக்கத் தொழிலில் வளர்ச்சி பெற்றுவிட்ட ஜெர்மனியும் கச்சாப் பொருட்களைப் பெற ஆப்பிரிக்காவில் குடியேற்ற நாடுகளை அமைக்க முயன்றது. ஜெர்மன் குடியேற்றச் சங்கமொன்று நிறுவப்பட்டு, அதன் முயற்சியால் டோகாலாந்து, காமரூன், சான்ஸிபார் பிரதேசங்களில் ஜெர்மன் வியாபாரிகள் குடியேறினர். ஜெர்மன் சான்சலராக அப்போதிருந்த பிஸ்மார்க் குடியேற்ற நாட்டுப் பெருக்கத்தில் அக்கறையற்றவராக இருந்தார். ஆனல், ஜெர்மன் குடியேற்ற நாட்டுச் சங்கத்தின் செய்கைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கம் கண்டித்ததாலும், இரு நாடுகளுக்கும் அதனுல் மோதல் விளையலாமெனத் தோன்றியதாலும், பிஸ்மார்க் ஆப்பிரிக்க விவகாரங்களில் அக்கறை கொண்டார். ஆப்பிரிக்காவில் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தும் முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் தமக்குள் சச்சரவிட்டுக் கொள்ளுதல் அழகல்லவென்றும், அதுபற்றித் தமக்குள் ஓர் உடன்பாட்டைச் செய்துகொள்வது நலமென்றும் கூறிப் பிஸ்மார்க், பெர்லின் நகரில் 1884இல் ஓர் ஐரோப்பிய நாடுகளின் மாநாட்டைக் கூட்டினுர். அதில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு செல்வாக்கு வட்டம் (Sphere of Influence) ஆப்பிரிக்காவில் வகுக்கப்பட்டது. அவ் வட்டத்துக்குள் அவரவர்கள் தங்கள் தங்களது திறமைக்கேற்றவாறு ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ளலாமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. இம்முறையால் போட்டியின்றி ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவில் முன்னேறலாயின. அடுத்த பத்தாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளின் கொடிகள் ஆப்பிரிக்காவின் பற்பல பாகங்களிலும் பறக்க ஆரம்பித்தன. அதன் வடகிழக்குப் பாகத்தில் ஸ்பெயினும், செங்கடலோரத்தில் இத்தாலியும், சஹாராவிலும் அல்ஜியர்ஸிலும் ஃபிரான்சும், தென் ஆப்பிரிக்கக் கிழக்கு கடற்கரையோரமாக ஜெர்மனியும், மேற்குக் கடற்கரையோரமாகப் போர்ச்சுகலும் பெல்ஜியமும் தங்களது ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொண்டன.

பேரரசு ஏற்பட்ட விதம்

இங்ஙனம் ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவில் பரவியதைக் கண்ட பின்னரே ஆங்கிலேயர் அங்குத் தமது கவனத்தைச் செலுத்தினர். இதுகாறும் திட்டம் எதுவும் இன்றிப் பொருளாதார நிர்ப்பந்தங்களால் பிற நாடுகளில் குடியேற்றங்களை நிறுவி வந்த ஆங்கிலேயர்கள், இப்போது திட்டமிட்டு ஆப்பிரிக்காவில் ஒரு பேரரசை அமைக்க முயன்றனர். அதற்கு மூன்ரும் பேரரசு (Third Empire) என்ற பெயர் வழங்கப்பட்டது. 1884இல் ஏகாதிபத்தியக் கூட்டாட்சிக் கழகம் (Imperial Federa-

tion League) ஒன்று இங்கிலாந்தில் ஃபார்ஸ்டர் என்பவரது தலைமையில் ஏற்பட்டது. ஜோஸப் சேம்பர்லின், ரோஸ்பரி பிரபு போன்ற செல்வாக்கு மிக்கவர்கள் அதன் உறுப்பினராயினர். 'கதிரவன் மறையாத் தன்மை பெற்ற பேரரசைப்' பற்றி அவர்கள் கனவு கண்டனர் பிரிட்டிஷ் கொடியைப் பின்பற்றி அதன் வியாபாரமும் செல்லும் என வணிகர்கள் கூறினர். இங்கிலாந்து உலகெங்கும் பரவிக்கொண்டு செல்வதன் இன்றியமையாமையைத் தெள்ளிதின் புலப்படுத்தும் பேருரைகளை சீலி **(Seeley)** என்னும் அறிஞர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும், ரஸ்கின் என்பார் ஆஃக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலும் ஆற்றினர். வெள்ளையரின் நாகரிகம் எட்டுத் திக்கும் பரவட்டும் என ரட்யார்ட் கிப்ளிங் **(Rudyard Kipling)** என்ற ஏகாதிபத்தியக் கவிஞர் தம் கவிதைகளில் முரசு கொட்டினர். இவற்றாலெல்லாம் கிளர்ந்தெழுந்த ஆங்கிலேயர் கோல்ட் கோஸ்ட் பிரதேசம், நைஜீரியா, கென்யா போன்ற பகுதிகளில் வியாபாரக் குடியேற்றங்களை வளர்த்தனர். தென் ஆப்பிரிக்காவிலும், எகிப்திலும் அவர்களது செல்வாக்கு வளர்ந்தது. பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கக் கம்பெனியானது கென்யா **(Kenya)** என்ற இடத்தில் ஒரு குடியேற்றத்தை நிறுவியது (1885-90). சாலிஸ்பரி ஜெர்மனியோடு ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு பிரிட்டிஷ் கிழக்குஆப்பிரிக்காவையும், யுகாண்டா பாதுகாப்பு நாட்டையும் **(Uganda Protectorate)** பிரிட்டிஷ் பேரரசில் சேர்த்தார் (1890). இச்சமயத்தில் பிரிட்டிஷ் கேப் குடியேற்ற நாட்டின் சட்டசபையில் செசில் ரோட்ஸ் **(Cecil Rhodes)** என்ற ஏகாதிபத்தியவாதி உறுப்பினராயிருந்தார். அவர் கனடாவைப் போல் ஆப்பிரிக்காவிலும் ஒரு டொமினியன் ஏற்படவேண்டுமென விரும்பினர். பெக்குவானலாந்து **(Beccuanaland)** என்ற நாட்டை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்றும், இல்லாவிடில் ஜெர்மானியர் அதைப் பிடித்துக்கொள்வர் என்றும், அங்ஙனம் அவர்கள் பிடித்துக்கொண்டால் ஆங்கிலேயர் வடக்கே பரவ முடியாமல் போகுமெனவும் அவர் கூறினர். கேப் குடியேற்ற நாட்டுச் சர்க்கார் அவரது எண்ணத்தை மேற்கொள்ளத் தயங்கினர். ஆகவே, அந் நாட்டைக் குடியேற்ற நாட்டு இலாகாவின் பாதுகாப்பிற்குக் கீழ் கொண்டுவருவதோடு அவர் திருப்தியடைய வேண்டியவரானர். அதன்பின் சுயேச்சையாக அவர் தமது கனவுகளை நனவாக்க முயன்றார். போதிய பொருளிருந்தால் தானே ஒரு குடியேற்ற நாட்டை உருவாக்க முடியுமென நினைத்த அவர், கிம்பர்லி வைரச் சுரங்கங்களை யெல்லாம் வாங்கி அவற்றின் மூலம் பெரும் பொருள் ஈட்டினர். அப் பொருளைக் கொண்டு அவர் ரொடீஷியா என்ற புதிய குடியேற்ற நாட்டையும் உருவாக்கினர். 1890இல் ஃபிரெஞ்சுக்காரரோடு செய்துகொண்ட ஓர் உடன்

பாட்டால் ஆங்கிலேயர் நைஜீரியாவைப் பெற்றனர். 1891இல் இத்தாலியோடு செய்துகொண்ட ஓர் உடன்பாட்டால் அவர்கள் சோமாலிலாந்தின் ஒரு பகுதியைப் பெற்றனர். தூரக் கிழக்கில் பர்மா (1886), மலேயா தீபகற்பம், போர்னியோ, நியூ கினியா (1886) போன்ற இடங்களையும் பிரிட்டன் இச்சமயம் பெற்றது. கனடா மேலும் சில நாடுகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. 1887இல் நடைபெற்ற இராணியாரின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் பேரரசு நாடுகளின் பிரதிநிதிகள் வந்து யாவரும் அரசிக்கு அஞ்சலி செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பேரரசு நாடுகளை இணைக்கும் ஒரு சங்கிலியாக முடியரசு எங்ஙனம் விளங்கக்கூடுமென்பதைப் பலரும் உணர்ந்தனர்.

சாலிஸ்பரியின் மூன்றும் மந்திரிசபை (1895-1902)

சாலிஸ்பரியின் இரண்டாவது மந்திரிசபை வீழ்ச்சியுற்றபின் கிளாட்ஸ்டன் சிறிது காலம் பதவி யேற்றதும், பின் அவர் வீழ்ச்சியுற்று ரோஸ்பரி பிரபு சிறிது காலம் ஆட்சி செய்ததும் நாம் ஏற்கனவே படித்தோம். 1895ஆம் ஆண்டில் ரோஸ்பரியின் மந்திரிசபையும் வீழ்ச்சியுற்றது. அதன்பின் சாலிஸ்பரி பிரபு மூன்றும் முறையாக மந்திரிசபையை அமைத்தார். இம்மந்திரி சபையில் அவர் பிரதமராக இருந்ததோடு வெளிநாட்டு அமைச்சராகவும் பணியாற்றினர். இங்ஙனம் இருபெரும் பொறுப்புகளை அவர் மேற்கொண்டதற்குக் காரணம் பேரரசின் வளர்ச்சியில் அவருக்கிருந்த பெரும் அக்கறையேயாகும்.

வெனிஸுலாவில் எல்லைத் தகராறு

சாலிஸ்பரியின் கவனத்தை ஈர்த்த முதல் விவகாரம் வெனிஸுலா (Venezuala) என்ற தென் அமெரிக்க நாட்டுக்கும், அதற்கருகிலிருந்த பிரிட்டிஷ் கயானுவுக்கும் இடையே எழுந்த ஓர் எல்லைத் தகராறேயாகும். இவ்வெல்லைத் தகராறைப் பலாத்காரமாகப் படைபலத்தால் தீர்த்து விடவேண்டுமெனப் பல பிரிட்டிஷார் கருதினர். ஆனால், அமெரிக்க ஜனதிபதி கிளீவ்லண்டு என்பார், பிரிட்டிஷார் தென் அமெரிக்காவுக்குப் படை அனுப்பினுல் அது மன்ரோ கொள்கையைப் புறக்கணித்ததாகுமெனவும், எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கத் தாம் பாரபட்சமற்ற ஓர் ஆய்வுக் குழுவினை (Commision) நியமிக்கப்போவதாகவும் அறிவித்தார். ஜனதிபதியின் அறிவிப்பு இங்கிலாந்தின் தன்மானத்திற்கு இழுக்கேற்படுத்திவிட்டது எனச் சில ஆங்கிலேயர்கள் கூச்சலிட்டனர். ஆனால், சாலிஸ்பரி சாந்தமாக இருந்தார். ஜனதிபதியின் யோசனையை அவர் ஒப்புக்கொண்டார். ஆய்வுக் குழு பிரிட்டன் பக்கமே தனது தீர்ப்பினை வழங்கியது.

எகிப்தும் சூடானும்


மத்திய தரைக் கடல்
அலெக்ஸாந்திரியா
கெய்ரோ
டெல்-எல்-கபீர்
சூயெஸ்
திரிபோலி
எகிப்து
செங்கடல்
அஸ்வான்
பெர்பெர்
அபுகிளியா
(1885)
ஆம்டுர்மன்
(1898)
கார்ட்டும் (1885)
ஸஹாரா
சூடான்
பஷோடா
அபிஸீனியா
உகாண்டா
பெல்ஜியன் காங்கோ

சூடானில் ஆங்கிலேயர்: ஃபஷோடா நிகழ்ச்சி, 1899 (Fashoda Incident)

எகிப்தில் ஆங்கிலேய உயர் ஆணையாளர்களாக இருந்த கிரோமர் பிரபுவும் (**Lord Cromer**) கர்னல் கிச்னரும் (**Colonol Kitchaner**) அங்கு பல நவீன சாதனங்களைப் புகுத்தி அந்நாட்டை வளப்படுத்தினர். அதன்பின் அவர்கள் சூடானை மீண்டும் கைப் பற்ற நினைத்தனர். அதற்கு முன்னேற்பாடாகக் கிச்னர் பிரபு எகிப்தையும் சூடானையும் இணைக்கும் இருப்புப்பாதையொன்றை முதலில் போட ஆரம்பித்தார். கார்ட்டும் நகர்வரை இருப்புப் பாதைகள் போட மூன்று ஆண்டுகள் பிடித்தன. அதன்பின் பிரிட்டிஷ் படைகள் எகிப்திலிருந்து ரயில் மூலம் சூடானை நோக்கி விரைந்தன. சூடானை ஆண்டுவந்த மஹ்தியின் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் ஆம் டூர்மன் (**Om Durman**) என்னுமிடத் தில் கைகலந்தன. மஹ்தியின் படைகள் அங்கு படுதோல்வி யடைந்தன. எனவே, சூடானை ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண் டனர். அதைக் கண்ட ஃபிரெஞ்சுக்காரர்கள், எகிப்தில் ஆங்கி லேயர்களை விருப்பம்போல் நடந்துகொள்ளும்படி விட்டது பெருந் தவறு என்று உணர்ந்தனர். சஹாராவிலிருந்து செங்கடல் வரை தனது ஆதிக்கத்தைப் பரப்ப நினைத்த பிரான்ஸ், ஆங்கிலேயர் களை எகிப்திலிருந்தும் சூடானிலிருந்தும் விரட்டத் திட்டமிட்டது. நைல் நதியின் கரையில் ஃபஷோடா என்னுமிடத்தில் மேஜர் மார்ச்சந்த் (**Major Marchand**) என்னும் ஃபிரெஞ்சுத் தளகர்த்தர் தனது நாட்டின் கொடியைப் பறக்கவிட்டார் (1899). கிச்னர் பிரபு அவரை அங்கிருந்து வெளியேறிவிடும்படி கேட்டுக்கொண் டார். நைல் நதியின் மேல்பாகத்தை ஆக்கிரமித்துக்கொள்வ தானது எகிப்தின் சுதந்திரத்தை அபகரிக்கப் ஃபிரெஞ்சுக்காரர் முயலுவதாக அமையும் என அவர் கூறினார். இரு சாராருக்கும் போர் மூண்டுவிடும்போல் இருந்தது. முடிவில் ஃபிரெஞ்சுக்காரர் அங்கிருந்து தம் படைகளை அப்புறப்படுத்திவிட்டனர். சூடானை ஆள ஆங்கில, எகிப்திய அதிகாரிகளை உட்கொண்ட ஒரு கூட்டு அரசாங்கம் நியமிக்கப்பட்டது. அதன் உயர் ஆணையாளராக சர் பிரான்சிஸ் வின்கேட் (**Sir Francis Wingate**) என்பார் நியமிக்கப்பட்டார். அவரது ஆட்சியின்கீழ் சூடான் பல துறை களிலும் முன்னேற்றமடைந்தது.

போயர்கள் யுத்தம் (Boer War): காரணங்கள்

தென் ஆப்பிரிக்காவில் செசில் ரோட்ஸ் என்பாரது ஏகாதி பத்தியச் செயல்களால் அங்கு போயர்களுக்கும் ஆங்கிலேயர் களுக்கும் ஒரு பெரும் போரே மூண்டுவிட்டது. ரோட்ஸ் பெருங் கனவுகளைத் தம் மனக்கண்முன் கண்டார். வடக்கே எகிப்து

முதல் தெற்கே கேப் மாகாணம் வரை ஆங்கிலேயரது நாடுகள் தொடர்ச்சியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினூர். அந் நோக்கத்தோடேயே அவர் ரொடீஷியா என்ற நாட்டையே தம் சொந்த முயற்சியால் உருவாக்கினூர். 1895இல் அந்நாட்டை இராணியார் அங்கீகரித்தார். அதன் வழியாகத் தெற்கு-வடக்கு ஆப்பிரிக்காக்களை இருப்புப்பாதைகளின் மூலமும், தந்தி, தபால் போக்குவரத்து மூலமும் இணைத்துவிட வேண்டுமென்பது அவரது அவா. ஆனூல், அவரது விருப்பத்துக்குப் போயர் குடியரசுகள் தடையாகவிருந்தன. அவை தனித்தனியே இருப்பாதைகளைப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தன. இதைக் கண்ட ரோட்ஸ் அப் போயர் குடியரசுகளை வென்று தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள எண்ணினூர். சூழ்நிலை அவருடைய எண்ணத்துக்குச் சாதகமாக அமைந்தது. ஜோஹன்ஸ்பர்க் (**Johannesburg**) என்னும் நகரருகே பொன் கிடைப்பதாகத் தெரிந்ததும், ஏராளமான ஆங்கிலேயர்கள் அங்குச் சென்று குடியேறினர். நகருக்கருகில் குடியேறிய அவர்களது எண்ணிக்கை நகரில் வாழ்ந்த போயர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாயிருந்தது. அவர்களை டச்சு சர்க்கார் வெளிநாட்டவர்கள் என்று பொருள்படும் உயிட்லாந்தியர் (**Uitlanders**) என அழைத்தனர். வாக்குரிமையை மறுத்ததோடு டச்சு சர்க்கார் அவர்களைப் பல வழிகளிலும் துன்புறுத்தினர். இதனூல் மனம் நொந்த அவ்வாங்கிலேயக் குடியேறிகள் போயர் சர்க்காரைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யலாயினர். அவ்விதச் சூழ்ச்சிகளை ரோட்ஸ் தூபம் போட்டு வளர்த்தார். சதிகாரர்களுக்குப் போர்க் கருவிகளை அவர் இனூமாக வழங்கினூர். கலகம் ஒன்றை ஆரம்பிக்கும்படியும், அங்ஙனம் கலகம் தோன்றினூல் அதற்குதவியாகத் தான் ஒரு படையை அனுப்புவதாகவும் உயிட்லாந்தியர்க்கு ரோட்ஸ் வாக்களித்தார். அப்போது ரோட்ஸ் கேப் மாகாணத்தின் பிரதமராயிருந்தார். எனவே, உயிட்லாந்தியர் நம்பிக்கையோடு சதித் திட்டங்களிலிறங்கினர். கலகப் படைகளை அவர்கள் முதலில் திரட்டிக்கொண்டு ரோட்ஸுக்குச் செய்தி அனுப்புவதென்றும், அதன்பின் ஜேம்ஸன் என்பவரது தலைமையில் 1500 படைவீரர்களைக் கொண்ட படையானது திடீரென்று போயர்களது நாட்டைப் படையெடுப்பதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜேம்ஸன் தம் படையோடு பெக்குவானூலாந்துக்கருகில் காத்திருந்தார். அவரைப் படையெடுக்க விடாமல் தடுத்துவிடுவதே நீதி என ரோட்ஸ் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், காத்திருந்து இருந்து தன் பொறுமையை இழந்துவிட்ட ஜேம்ஸன் திடீரென்று போயர்கள் நாட்டுக்குள் புகுந்தார் (1895). உயிட்லாந்தியர்கள் அப்போது போரில் இறங்கத் தயாராகவில்லை. எனவே, குருகர் (Kruger) என்னும் போயர் குடியரசு

தென் ஆப்பிரிக்கா— போயர் யுத்தம்



+ · + · + கேப் முதல் கெய்ரோ வரையுள்ள ரெயில்வே தொடர்

•—•—• தென் ஆப்பிரிக்க யூனியன் எல்லைக்கோடு

1. மசூபாஹில்	5. பிரிட்டோரியா	9. மேகர்ஸ் பான்டீன்
2. லேடிஸ்மித்	6 விட்வாடர்ஸ்ராண்டு	10. ப்ளூம் பான்டீன்
3. வெரினிகிங்	7. மெ:.பிகிங்	11. பசூட்டோலாந்து
4. ஜொஹன்னஸ்பர்க்	8. கிம்பர்லி	

தலைவர் ஒரு படையை அனுப்பி, எளிதில் ஜேம்ஸனைத் தோற்கடித்து, அவரையும் அவரது வீரர்களையும் கைது செய்தார். இதைக் கேட்டு ரோட்ஸ் மனமுடைந்து பதவியை ராஜிநாமா செய்தார். குரூகரது வெற்றியைப் பாராட்டி ஜெர்மனியின் அரசரான இரண்டாம் வில்லியம் ஒரு தந்தி அடித்தார். இதையறிந்த பிரிட்டிஷ் மக்கள் போயர்கள் மீது பழிவாங்கத் துடித்தனர். கெய்சரின் தந்தியால் ஊக்கமடைந்த குரூகரும் தம் படைவன்மையைப் பெருக்கிக்கொண்டு போருக்கு ஆயத்தமானார். பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து அவர் ஏராளமாகப் போர்த் தளவாடங்களை வாங்க ஆரம்பித்தார். தென் ஆப்பிரிக்காவில் அப்போது பிரிட்டிஷ் உயர் ஆணையாளராக இருந்த சர் ஆல்பர் மில்னர் **(Sir Alfred Milner)** என்பார் குரூகரிடம் சமாதானம் செய்துகொள்ள முயன்றார். ஆனால், முடியவில்லை. தென் ஆப்பிரிக்கா முழுமைக்கும் பிரிட்டனே தனித் தலைமையுடையது **(Paramount Power)** என்பதை ஒப்புக்கொள்ளும்படி பிரிட்டிஷார் குரூகரைக் கேட்டனர். குரூகர் அவ்வித மிரட்டலெல்லாம் தம்மிடம் பலிக்காது என இறுமாப்போடு பதிலிறுத்தார். எனவே, பிரிட்டிஷாருக்கும் போயர்களுக்கும் 1899ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போர் மூண்டது.

போரின் போக்கு *(1899-1902)*

போயர்கள் புரிந்த போரில் மூன்று கட்டங்களை நாம் எளிதில் காணலாம். 1899ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1900ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்வரை அதன் முதல் கட்டமாகும். அக்கட்டத்தில் எங்கு பார்த்தாலும் ஆங்கிலேயர்களுக்குத் தோல்வியே ஏற்பட்டது. போயர்கள் முதலில் நேடாலைப் படையெடுத்தனர். லேடி ஸ்மித் **(Lady Smith)** என்னும் நகரை அவர்கள் அங்கு கைப்பற்றிக்கொண்டனர். அதைக் காத்து வந்த சர் ஜார்ஜ் வொயிட் **(Sir George White)** என்னும் பிரிட்டிஷ் தளகர்த்தர் பின்வாங்கினார். சர் ரெட்வெர்ஸ் புல்லர் **(Sir Reduers Buller)** என்னும் பிரிட்டிஷ் சேனாதிபதி லேடிஸ்மித்தை மீட்க முயன்று பார்த்தார்; முடியவில்லை. மேகர்ஸ்பான்டீன் **(Magersfontein)**, ஸ்டார்ம்பெர்க் **(Stormperg)**, துகேளா நதிக்கரை **(Tugela River)** ஆகிய இடங்களில் அவரது படைகள் படுதோல்வியடைந்தன. கிம்பர்லி **(Kimberley)**, மெஃபிகிங் **(Mafeking)** என்ற இரு இடங்களையும் போயர்கள் முற்றுகை யிட்டனர். இவற்றையெல்லாம் கேட்ட பிரிட்டிஷ் மக்கள் மனமுடைந்தனர். ஆனால், இராணியார் அனைவரையும் ஊக்கப்படுத்தினார். ராபர்ட்ஸ் பிரபு என்பார் ஒரு படையுடன் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்து

உதவிப் படைகள் வந்து குவிந்தன. தம்மிச்சையாகப் படையில் சேரவந்தோர் பலராவர்.

1900ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நவம்பர் வரை போரின் இரண்டாவது கட்டமாகும். இக்கட்டத்தில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். புல்லர், லேடி ஸ்மித்துக்குச் சென்று அதைப் போயர்களிடமிருந்து மீட்டார். சர் ஜான் ஃபிரெஞ்சு (Sir John French) என்பவர் போயர்களைப் பார்டெபர்க் (Paardeberg) என்னுமிடத்தில் தோற்கடித்துக் கிம்பர்லியை விடுவித்தார். ராபர்ட்ஸ், ஆரஞ்சு மாகாணத்தில் புகுந்து புளூம்பான்டீன் (Bloemfontein) நகரைக் கைப்பற்றினர். மே மாதத்தில் மெஃபிகிங் நகரும் விடுவிக்கப்பட்டது. இவ்வெற்றியைப் பிரிட்டிஷ் மக்கள் வெகு குதூகலமாகக் கொண்டாடினர். விரைவில் பிரிடோரியா (Pretoria) நகரும் பிடிபட்டது. டிரான்ஸ்வால் அனைத்தும் பிரிட்டிஷாரின் கைகளுக்கு மாறியது. நவம்பர் மாதத்தில் ராபர்ட்ஸ் வெற்றிக் கொடியுடன் தாய்நாடு திரும்பினர். போர் அதனோடு முடிந்து விட்டது போலத் தோன்றியது. ஆனால், போயர்கள் தங்களது போரை இன்னும் இரண்டாண்டுகளுக்குத் தொடர்ந்து நடத்தினர். 1900ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1902ஆம் ஆண்டு மே மாதம் வரை போரின் மூன்றாவது கட்டமாகும். ராபர்ட்ஸின் துணைத்தலைவராயிருந்த கிச்னர் என்பார் போயர்களை அடக்குவதில் முனைந்தார். கொரில்லாப் போர்முறையில் போயர்கள் இறங்கலாயினர். போரிட்ட போயர் வீரர்களுக்குப் பண்ணையிலிருந்த போயர்கள் எல்லா உதவியும் செய்ததால் அவர்களைத் தோற்கடிப்பது மிகக் கடினமாய்ப் போயிற்று. கிச்னர் ஒவ்வொரு பண்ணையாக அழித்து, அப்பண்ணையிலிருந்த சாதாரண மக்களை எல்லாம் ஒன்று சேர்த்துப் பாசறைகளில் (Concentration Camp) வைத்து உணவளித்தார். இக்கடுமையான முறைகளைக் கருணை உள்ளம் படைத்த பிரிட்டிஷ் அறிஞர்கள் கண்டித்தனர். எனினும், கிச்னர் மேற்சொன்ன முறையால் 14 மாதங்களில் சுமார் 20,000 மக்களைக் கொன்றார். இவ்வட்டூழியங்களைத் தாளமுடியாமல் போயர்கள் பணிந்தனர். ஸ்மட்ஸ் (Smuts), போதா (Botha) போன்ற போயர் தலைவர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் வெரீனிகிங் (Vereeniging) என்னுமிடத்தில் சமாதான உடன்பாடு ஏற்பட்டது. பண்ணைகளை மீண்டும் உருவாக்க பிரிட்டன் 3 மில்லியன் பவுன்கள் கொடுக்க ஒப்புக்கொண்டது. போயர்கள் தங்கள் சுயேச்சையை இழந்தனர். விரைவில் அவர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுமென்ற வாக்குறுதியைப் பிரிட்டிஷார் அளித்தனர். அதையொட்டி 1906ஆம் ஆண்டில் சர் ஹென்றி காம்பெல் பானர்மேன் (Sir Henry Campell Bannerman) என்னும் பிரதமர் போயர்களுக்கு

சுயேச்சை (Self-government) வழங்கினுர். பால்ஃபர் போன்றவர்கள் அதை குறைகூறினர். ஆனுல் போயர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் நட்பு வளர அவரது செய்கை துணைபுரிந்தது 1909ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு பாராளுமன்றச் சட்டப்படி கேப் குடியேற்ற நாடு, நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு நதிக் குடியேற்ற நாடு ஆகிய நான்கு நாடுகளும் ஒன்ருக இணைக்கப் பட்டுத் 'தென் ஆப்பிரிக்க யூனியன்' என்ற பெயரைப் பெற்றது. 1910ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்க யூனியன் டொமினியன் அந்தஸ்தைப் பெற்றது.

சீனுவில் பாக்ஸர் கலகம்

சாலிஸ்பரியின் மூன்ரும் மந்திரிசபையின் ஆட்சிக் காலத்தில் சீனுவில் ஐரோப்பியர்களுக்கெதிராக 'பாக்ஸர் கலகம்' (Boxer Revolt) என்னும் ஒரு பெருங் கலகம் தோன்றியது. அதை ஐரோப்பிய நாடுகளின் படைகள் அனைத்தும் சேர்ந்து ஒடுக்கி விட்டன. அங்ஙனம் அடக்குவதில் பிரிட்டிஷ் படைகள் சிறந்த தொண்டாற்றின. அதன்விளைவாக பிரிட்டிஷார் சீனுவில் வியாபார உரிமைகளையும், வெய்-ஹெய்-வெய் (Wei-hei Wei) என்ற இடத்தையும் பெற்றனர். ஆஸ்திரேலிய நாடுகள் இச்சமயத்திலே தான் ஒரு கூட்டரசு நாடாக இணைந்தன. ஆஸ்திரேலியக் காமன் வெல்த் சட்டம் 1901இல் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

இங்ஙனம் சாலிஸ்பரி வெளிநாட்டு விவகாரங்களிலேயே அதிக கவனம் செலுத்திஞர். பேரரசைப் பெருக்குவதே அவரது முக்கியக் குறிக்கோளாயிருந்தது. ஐரோப்பிய விவகாரங்களைப் பொறுத்த வரையில் 'கண்ணியமான தனிமை' (Splendid Isolation) என்ற கொள்கையை முதலில் கடைப்பிடித்தார். எந்த நாட்டோடும் சேராமல் தனித்திருக்க முயன்ருர். ஆனுல், நாளடைவில் அவர் அது முடியாத காரியம் என உணர்ந்துகொண்டு ஒருவித இடைநிலைக் கொள்கையைக் (Via media policy) கையாண்டார். அதன்படி இங்கிலாந்து கூடியவரை தனித்திருக்க முயல வேண்டும். மிகவும் அவசியமாஞல் தலையிடத் தயங்கக்கூடாது. இக்கொள்கை நல்ல வெற்றி பெற்றது. தாராளக் கட்சியினரும் இதை ஏற்றனர்.

உள்நாட்டுத் துறையில் சாலிஸ்பரி இக்காலத்தே அதிகம் சாதிக்கவில்லை. விபத்துக்குள்ளாகும் தொழிலாளர்கள் நஷ்டஈடு பெறுவதற்கு உதவி செய்த சட்டங்களை அவர் 1897, 1900ஆம் ஆண்டுகளில் கொணர்ந்தார். 1898இல் அவர் அயர்லாந்தில் தல சுயாட்சியை ஏற்படுத்திஞர். 1902ஆம் ஆண்டில் அவர் தம் பதவியைத் துறந்தார்.

இராணியாரின் மரணம்

1901ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விக்டோரியா மகாராணியார் காலமடைந்தார். இங்கிலாந்தும், பேரரசு நாடுகளும் இத்தகைய பெருந்தன்மை வாய்ந்த அரசியாரை இனி என்று காணப் போகிறோம் என்று ஏங்கித் துயரக் கடலில் மூழ்கின. உண்மையில் விக்டோரியா இராணியார் ஒரு வல்லரசியாகவும் அதே சமயம் மக்களது ஆதரவைப் பெற்ற நல்லரசியாகவும் விளங்கினார். பொதுவாழ்க்கையில் அவரது செல்வாக்கு எல்லாத் துறைகளிலும் ஊடுருவி நின்றது. வெளிநாட்டு விவகாரங்களில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். அவரைக் கலந்தாலோசியாமல் பாமர்ஸ்டன் பிரபு ஒரு சமயம் ஃபிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியனை அங்கீகரித்ததற்காகப் பதவியை விட்டே நீங்க வேண்டியிருந்தது என்பதிலிருந்து, அவர் தமது சிறப்புரிமையை எவ்வளவு வன்மையாகப் பயன்படுத்தினார் என்பது நன்கு பெறப்படும். கிளாட்ஸ்டன் போன்ற பேரமைச்சர்களும் அவருக்குத் தெரியாமல் காரியங்களைச் செய்ய அஞ்சினர். அவரது ஆலோசனைகளைப் பெரும்பாலும் மந்திரிகள் ஏற்றனர் அல்லது அவருக்குத் திருப்தியுண்டாகும் வகையில் அவர்கள் விளக்கம் கூறித் தப்பித்தனர். மந்திரிகளை எச்சரிக்கும் அதிகாரம் (**Right to warn**), அவர்களுக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் (**Right to be consulted**) முதலிய தனது சிறப்பதிகாரங்களை அவர் நன்கு பயன்படுத்தி வந்தார். அரசிக்குரிய கண்ணியத்தையும் பெருமையையும் அவர் நன்கு காப்பாற்றினார். பேரரசு நாடுகளுக்கு அவர் ஒரு கண்கண்ட தெய்வமாகக் காட்சி அளித்தார். கண்ணுக்குப் புலனாகா பிரிட்டிஷ் நிறுவனங்களுக்கு விசுவாசமாயிருப்பதை விட ஊனுருக்கொண்டு அவைகளின் தலைவியாய் உலவிய பேரரசிக்கு வணக்கம் செலுத்துவது பேரரசுக் குடிகளுக்கு எளிதாயிருந்தது. அவரது ஆட்சிக் காலம் பலவகையில் சிறப்புற்று விளங்கியது. அவற்றை நாம் விரிவாக இன்னோர் அத்தியாயத்தில் பார்ப்போம். பொதுவாகக் கூறின், விக்டோரியா இராணியாரின் காலம் அரசியல் துறையில் ஜனநாயக வளர்ச்சி, பேரரசின் வளர்ச்சி, பேரரசு நாடுகளில் சுயாட்சியின் வளர்ச்சி முதலியவைகளுக்கும், பொருளாதாரத் துறையில் வியாபார வளர்ச்சி, தொழில்வளம், கூட்டுறவுமுறை, தொழிற்சங்கமுறை வளர்ச்சி முதலியவைகளுக்கும், கலைத்துறையில் விஞ்ஞான வளர்ச்சி, இலக்கிய முன்னேற்றம் ஆகியவைகளுக்கும் சிறப்புற்று விளங்கியது எனக் கூறலாம். அவரது மரணத்தால் ஒரு பெரிய சகாப்தம் (**Era**) முடிவுற்று வேறொரு சகாப்தம் தொடங்கியதெனக் கூறுதல் முற்றிலும் பொருந்தும்.

9. விக்டோரியா மகாராணியார் கால இங்கிலாந்தின் நிலைமை

(சமய, சமூக, பொருளியல், அரசியல் நிலைமைகள்)

சமயநிலை, சமய இயக்கங்கள்: சமயப் பற்று—சுவிசேஷ நற்செய்தி பரப்புவோர் இயக்கம் — ஆக்ஸ்போர்டு இயக்கம்—கிறித்துவ சமதர்மம் — பகுத்தறிவு வாதிகள் — இணங்காதார்—ரோமன் கத்தோலிக்கர்கள் — ஸ்காட்லாந்தில் சமயப் புரட்சி; சமுதாய நிலை: உயர்குடிவகுப்பார் — தொழிலாளர்கள் — ஏழைகள் — கல்விநிலை; கலைகளின் நிலை: இலக்கியம்—கலை — விஞ்ஞானம்; பொருளாதார நிலை: தொழில் வளர்ச்சி — விவசாயத்தின் வீழ்ச்சி — வியாபார வளர்ச்சி — தொழிற் சங்க வளர்ச்சி — அரசாங்கத்தின் தலையீடும் கட்டுப்பாடும்; அரசியல் நிலை: கோனாட்சி — பாராளுமன்றம் — காபினெட் ஆட்சி.

எலிஸபெத் இராணியாரின் ஆட்சிக் காலத்தைப் போன்றே விக்டோரியா மகாராணியாரின் காலமும் பல்லாற்றானும் சிறப் புற்று ஓங்கி, இங்கிலாந்தின் பொற்காலமெனப் போற்றற்குரிய தாய்த் திகழ்ந்தது. ஒருவகையில் விக்டோரியாவின் ஆட்சிக் காலம் எலிஸபெத்தின் காலத்தையும்விட ஓரளவு மிஞ்சிய தென்றே கூறலாம். எலிஸபெத் கால இங்கிலாந்து நவீன காலத்தில் அடியெடுத்து வைத்ததென்றால், நவீன இங்கிலாந்தின் முழு உருவமும் வெளித்தோன்றியது, விக்டோரியாவின் காலத்திலேயாகும். எலிஸபெத் காலத்தில், சமய மறுமலர்ச்சி ஏற்பட்டு அதன் விளைவாக ஒரு மதப் பிரிவே ஓங்கிவளர்ந்தது. ஆனால், விக்டோரியாவின் காலத்தோவெனில், பலவகை சமயப் பிரிவுகள் தோன்றிப் போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்தன. விக்டோரியாக் கால இலக்கியம் எலிஸபெத் கால இலக்கியத்துக்கு எத்துணையும் இளைத்ததன்று. விஞ்ஞானத்துறையிலோவெனில், எலிஸபெத் காலம் கனவுகூடக் கண்டிராத வகையில் விக்டோரி யாவின் காலம் முன்னேறி விட்டது. குடியேற்ற நாட்டுப் பெருக்கம், ஜனநாயகத்தின் வளர்ச்சி, தொழிற்சங்கங்களின்

முன்னேற்றம், தாராளக்கொள்கைகளின் வளர்ச்சி முதலிய பல்வேறு துறைகளில் விக்டோரியாவின் காலம் ஈடும் இணையும் அற்றுத் திகழ்ந்தது. மகாராணியின் வெள்ளி விழாவையும் வைரவிழாவையும் கொண்டாடிய ஆங்கில மக்கள், அவருக்கு இன்னும் நீண்ட ஆயுளைக் கொடுக்கும்படி ஆண்டவனை இறைஞ்சினரென்றால், அதற்குக் காரணம் அரசியாரின் நல்லாட்சியில் அவர்கள் அடைந்த பெருமிதமேயாகும்.

சமய நிலை, சமய இயக்கங்கள்

சமயப் பற்று

'மன்னரெவ்வழி அவ்வழி மக்கள்' என்னும் முதுமொழி விக்டோரியா இராணியாரைப் பொறுத்தவரையில் பெரிதும் உண்மையாயிருந்தது. இராணியாரிடத்தும் அவரது கணவரான ஆல்பர்ட் இளவரசரிடத்தும் காணப்பட்ட ஆழ்ந்த தெய்வ பக்தியும், சமயப் பற்றும் அவர்களது குடிமக்கள் அனைவர்பாலும் பெரிதும் குடிகொண்டிருந்தன. பெரும் பதவியிலிருந்தவர்களும் அமைச்சர்களும்கூட அவ்வுணர்ச்சிக்கு விதிவிலக்கல்லர். பாமர்ஸ்டன் பிரபு, டிஸ்ரேலி என்ற இருவரைத் தவிர, ஏனைய பிரதமர்கள் எல்லோரும் மதவுணர்ச்சி மிக்கவர்கள். பீல், கிளாட்ஸ்டன் போன்றவர்கள் 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்ற வாக்குப்படி இறைவனது திருவருளை எண்ணியே எல்லாக் காரியங்களையும் செய்தனர். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது அவர்களது அசையாத நம்பிக்கையாகும். விக்டோரியக் காலப் பெரியார்களான கார்லைல், டென்னிஸன், ஜான் பிரைட், நியூமேன் (**Carlyle, Tennyson, John Fright, Newman**) போன்றவர்களெல்லாம் மதபக்தி மிகுந்தவர்களேயாவர். அக்கால மக்கள் எதையும் சமய உணர்ச்சியோடும், உருக்கத்தோடும், சிரத்தையோடும் செய்தனர். அரசாங்கங்களின் வீழ்ச்சிகளுக்கும், காபினெட் சபைகளின் மாற்றங்களுக்கும்கூடச் சமய உணர்ச்சிகள் அக்காலத்தே அடிப்படையாயிருந்தன வென்றால், அவற்றின் பிடி மக்கள்மீது எத்துணை வலிமை மிக்கதாயிருந்தது வென்பதை நன்கறியலாம்.

டியூடர்கள் காலத்தே திருச்சபையும் அரசும் ஒன்றாக இருந்தன. மத விரோதிகள் (**Heretics**) அனைவரும் தேசத் துரோகிகளாக (**Traitors**) அப்போது கருதப்பட்டனர். ஸ்டுவர்ட்டுகள் காலத்து அந்நிலை சிறிது மாறியது. புகழ்பெற்ற புரட்சியின் பின் சமயப் பொறைக் கொள்கை நாட்டில் சிறிது சிறிதாக ஏற்பட ஆரம்பித்தது. சமய நிலையம் வேறு, அரசு வேறு என்பது நாளடைவில் நிலைநாட்டப்பட்டது. 1828-29ஆம் ஆண்டில் சோதனைச்

சட்டங்களும், மாநகராட்சிச் சட்டங்களும் ஒழிக்கப்பட்டபின், திருச் சபைக்கு இருந்த அரசியல் தனியுரிமை மாண்டது. ஒரே மதம் தான் நாட்டிலிருக்கவேண்டுமென்ற நிலைமை மாறிப் பல மதப் பிரிவுகள் பாதுகாப்புடன் இங்கிலாந்தில் வாழ வழியேற்பட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு சில புதிய மத இயக்கங்கள் விக்டோரியாவின் காலத்தே எழுந்தன.

சுவிசேஷ நற்செய்தி பரப்புவோர் இயக்கம் (Evangelical Movement)

பதினெட்டாம் நூற்றாண்டில் மக்களிடையே காணப்பட்ட உலோகாயத மனப்பான்மையைக் (Materialist attitude) கண்டிக்க எழுந்த மெத்தடிஸ்ட் இயக்கத்தைப்பற்றி நாம் முதற் புத்தகத்தில் (34ஆம் அத்தியாயம்) படித்தோம். அதன் வழித்தோன்றலாக வந்த சார்லஸ் சிமியோன் (Charles Simeon) என்பவர் ஏற்படுத்தியதே 'எவேஞ்சலிக்கர் இயக்கம்' என்பது. மெத்தடிஸ்ட் இயக்கத்தின் விளைவாக எழுந்த பல பிரிவினருக்கும் சேர்த்து 'எவாஞ்சலிக்கர்' என்ற பெயர் தரப்பட்டது. சுவிசேஷங்களின் வழிநிற்போர் (Who live according to gospel teaching) என்பது அச்சொல்லின் பொருளாகும். சுவிசேஷங்களையன்றி வேறெதையும் நம்பக்கூடாதென்றும், அவைகளின் வழிநிற்றலே கிறித்துவர்களுக்கழகென்றும் அவர்கள் பிரச்சாரம் செய்தனர். உண்மையில் அது ஒரு பரோபகார இயக்கமாகும் (Humanitarian Movement). சமுதாயத்தின் அடித்தளத்தில் நசுக்குண்டு கிடந்த ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்வதையே அவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இவ்வியக்கத்தைச் சேர்ந்த வில்பர்போர்ஸ் என்பாரது முயற்சியாலேயே அடிமை வியாபாரமும் அடிமை முறையும் இங்கிலாந்தில் ஒழிந்தன. தொழிற்சாலைகளிலும் புகைபோக்கிகளிலும் வேலை செய்த சிறுரின் குறைகளைக் களைந்த ஷாப்ட்ஸ்பரி பிரபு (Lord Shaftesbury) ஓர் எவாஞ்சலிக்கராவார். இவ்வியக்கத்தைச் சேர்ந்த டாக்டர் பார்னர்டோ (Dr. Barnardo) என்பார் முடைச் சேரிகளில் வாழ்ந்த குழந்தைகளுக்கு நல் வாழ்வளிக்க ஒரு வறியோர் இல்லத்தை 1870ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். வறியோருக்கு உணவும் உடையும் வழங்கி அவர்களை வாழ்விக்கவென்றே வில்லியம் பூத் (William Booth) என்னும் சுவிசேஷியால் (Evangelist) 1878இல் அறப்படை (Salvation Army) எனப்படும் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. சுவிசேஷ மதத்தைச் சேர்ந்தவர்கள், விவிலிய நூலின் போதனைகளுக்கு இம்மியளவும் பிழைபடக்கூடாதென்ற கருத்தையுடையவர்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் எவ்விதக் கேளிக்கைகளிலும் ஈடுபடாது அவர்கள் வாழ்ந்தனர். ஷாப்ட்ஸ்பரி பிரபு ஞாயிற்றுக்கிழமைகளில் பாண்டு வாத்தியங்கள் லண்டன் பூங்காக்களில் முழங்குவதையும் பிரிட்டிஷ்

கண்காட்சிச்சாலை திறக்கப் படுவதையும் தடுத்தார். சுவிசேஷி களின் இல்லங்களில் செபங்கள் ஒழுங்காக நடைபெற்றன. விவிலிய நூல் முறையே பாராயணம் செய்யப்பட்டது. வானமே இடிந்துவிடினும் அவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் கோயிலுக் குப் போவதையும் ஒழுக்க வகுப்புக்குப் போவதையும் நிறுத்தமாட் டார்கள். அவர்களின் குழந்தைகள் இக் கட்டுப்பாடுகளால் ஒழுக்க முடையவர்களாக மாறினர். ஆனுல், ஜான் ரஸ்கின் (John Ruskin), மேத்யூ ஆர்ஞல்ட் (Mathew Arnold) போன்ற மேதைகள் இவ்விதக் கட்டுப்பாடுகளால் மனிதனது முழு ஆளுமையும் மலர் வது தடைபடுவதாகக் கருதினர். எனினும், டாக்டர் ஆர்ஞல்ட் போன்ற தலைமையாசிரியர்கள் சமயப் பழக்கங்களையும் கட்டுப் பாடுகளையும் தங்கள் பள்ளிகளில் புகுத்தி மாணவர்களின் ஒழுக் கங்களை உருப்படுத்தினர். அவரது ரக்பி (Rugby) பள்ளியில் படித்த மாணவர்கள் செம்மை சான்ற ஒழுக்கம், பண்பு, அறிவாற் றல் ஆகியவற்றுக்கு இருப்பிடமாகத் திகழ்ந்தனர்.

ஆக்ஸ்போர்டு இயக்கம் (Oxford Movement)

பதினெட்டாம் நூற்ருண்டினைப் போலவே பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமானது ஒரு சமயப் புத்துயிர்ப்பியக்கத்துக்குத் தாயகமாய் விளங்கியது. அங்கிருந்த மதகுருமார்களான ஜான் கெபில் (John Keple), எட்வர்டு பியூஸி (Edward Pusey), ஜான் ஹென்றி நியூமேன் (John Henry Newman) என்ற மூவரே ஆக்ஸ்போர்டு இயக்கத்தின் தந்தையாவர். அவர் கள் 'காலத்திற்கேற்ற கட்டுரைகள்' (Tracts for the Times) என்ற தலைப்பில் நீண்ட கட்டுரைகளை வெளியிட்டுத் தம் கொள்கைகளைப் பரப்பினர். அதனுல் அவர்கள் 'கட்டுரையாளர்கள்' (Tractarians) என்ற பெயரைப் பெற்றனர். அவற்றில் அவர்கள் கத்தோலிக்க மதமும் ஆங்கிலிக மதமும் ஒன்றே என வாதித்தனர். பிஷப்புகள் எல்லாம் பீட்டர் காலத்திலிருந்து வாழையடி வாழை என வந்த திருக்கூட்டத்தினர் என்ற கொள்கையையும், திருவிருந்து, வழி பாடு போன்ற சடங்குகளையும் வற்புறுத்தினர். பிஷப்புகள் ஓர் அர சுக்குக் கட்டுப் பட்டவர்களா யிருக்கக்கூடா தென்பதும் அவர் களின் வாதமாகும். நியூமேன் என்பவர் தமது 90ஆவது கட்டுரை யில் ஆங்கிலிக மதத்தின் 39 கோட்பாடுகளும் ஆதி கத்தோலிக்க மதமும் ஒரே உண்மையையே உரைக்கின்றன என்று கட்டுரைத் தார். உடனே அவருக்கெதிராக நாடெங்கும் எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. நியூமேன் அவற்றை எல்லாம் சட்டை செய்யவில்லை. முடிவில் அவர் கத்தோலிக்க மதத்திலேயே சேர்ந்து கார்டினல் பதவியையும் பெற்ருர். அவர் ஓர் ஒழுக்கசீலரான உத்தமர். அப்பழுக்கற்ற துறவு வாழ்க்கை வாழ்ந்து யாவரது நன் மதிப்பை

யும் பெற்றவர். நல்ல உரைநடை எழுத்தாளர். அவர் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்தபின் பியூசி என்பார் ஆக்ஸ்போர்டு இயக்கத் தலைவரானுர். அவரைப் பின்பற்றியோர் பியூஸைட்டுகள் எனப் பட்டனர். ஆங்கிலோ-கத்தோலிக்கர் என்றும், மதநிலைய மேலோர் (High Churchmen) என்றும் அவர்கள் அழைக்கப்பட்டனர். அதற்கு மாருக சுவிசேஷிகள் எல்லாம் மதநிலைய கீழோர் (Low Churchmen) எனப்பட்டனர். கிளாட்ஸ்டன் கூடத் தன்னை ஒரு பியூஸைட் எனக் கூறிக்கொண்டார். ஆனுல், விக்டோரியாவுக்கு இக் கொள்கைகள் பிடிக்கவில்லை. அவரது தூண்டுதலால் டிஸ்ரேலி ஒருமுறை பொது வழிபாட்டுக் கட்டுப்பாட்டு மசோதா (Public Worship Regulation Bill) ஒன்றைக் கொணர்ந்து சட்டமாக்கினுர். அது ஆங்கிலோ-கத்தோலிக்கர் வற்புறுத்திய வழிபாட்டுச் சடங்கு களைத் தடுக்கவென ஏற்படுத்தப்பட்டது. ஆனுல், அது அமுல் நடத்தப்படவில்லை. நாளுக்கு நாள் அந்த இயக்கம் இங்கிலாந்தி லும் அக்கரை நாடுகளிலும் பரவிக் கொண்டே சென்றது. அதைச் சேர்ந்த குருமார்களால் ஆங்கிலிகத் திருச்சபை வலிவு பெற்றது. அதைவிட்டு நீங்கிவிட எண்ணிய பலரை அதில் நிலைபெறச் செய்த பெருமை, புதிதாய் ஏற்பட்ட ஆங்கிலிகக் கொள்கை களுக்கு உண்டு. நாட்டின் உட்புறத்திலிருந்த ஏழ்மை மிக்க பட்டிதொட்டிகளிலும் அவர்கள் ஒப்பற்ற பணிபுரிந்தனர். வெளி நாட்டுத் தூதுவரகங்களில் அவர்கள் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

கிறித்துவ சமதர்மிகள் (Christian Socialists)

கிறித்துவக் கொள்கைகளைப் பற்றிப் பேசுவதை விட்டு, அதை நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென வற்புறுத்தியவர்களே கிறித்துவ சமதர்ம வாதிகளாவர். சார்லஸ் கிங்ஸ்லி (Charles Kingsley), மௌரீஸ் (Maurice), தாமஸ் ஹியூக்ஸ் (Thomas Hughes) என்போர் இவ் வியக்கத்தின் தலைவர்களாவர். லண்டனி லுள்ள தொழிலாளருக்கும், சிறுவருக்கும் என அவர்கள் சிறு கழகங்களை (Clubs) ஏற்படுத்தினர். கிங்ஸ்லி 'வெஸ்ட்வேர்டு ஹோ' (Westward Ho), 'வாட்டர் பேபீஸ்' (The Water Babies) போன்ற நூல்களையும் பல நாவல்களையும் எழுதி அவற்றின் மூலம் ஆக்கத் தொழிலால் விளையும் தீய பயன்களைக் கிறித்துவக் கொள்கைகளால் நீக்கமுடியும் என்பதை வலியுறுத்தினுர்.

பகுத்தறிவுவாதிகள் (Rationalists)

விக்டோரியாவின் காலத்தில் விஞ்ஞானம், மெய்ஞானத் தோடு மோதிப் பலருடைய மத நம்பிக்கைகளைக் குறைத்தது. உள்ளது சிறத்தல் (Evolution) என்னும் கொள்கையை டார்வின்

(Darwin), வேலஸ் (Wallace) என்னும் அறிஞர்கள் வெளியிட்டதி லிருந்து, கடவுளே அனைத்தையும் படைத்தார் என்ற விவிலிய நூற் கொள்கை பெரிதும் ஆட்டங் கொள்ள ஆரம்பித்தது. சர் சார்லஸ் லயல் (Sir Charles Lyell) என்னும் நிலநூல் வல்லார் (Geologist), பாறைகளில் தோய்ந்திருந்த சில செடிகள், பிராணிகள் இவைகளின் எச்சங்களை (fossils) ஆராய்ந்து, அவை இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்க வேண்டும் என் றும், அவைகளே ஆதி உயிர்ப் பொருள்களாயிருந்திருக்க வேண் டும் என்றும், அதன் பின்னரே மனிதன் தோன்றியிருக்க வேண் டும் என்றும் கூறினார். 1840இல் 'பீகில்' (Beagle) என்ற கப்பலில் உலகின் பல பாகங்களுக்குச் சென்று சேகரித்த மிகப் பண்டைய பொருள்கள் மூலமாக டார்வின், மனிதனின் தோற்றம் படிப்படி யாக ஏற்பட்டது என்றும், ஒரு நாளில் அவன் படைக்கப்பட்டிருத் தல் இயலாது என்றும் தமது 'உயிரினங்களின் தோற்றம்' (Origin of the Species) என்ற நூலில் பரக்கக் கூறினார். மேலும், உயிர்கள் சூழ்நிலைக் கேற்பத் தனது முன்னைய நிலையினின்றும் சிறந்து கொண்டே செல்வதாலேயே உலகம் தோன்றியதென்றும், அமீபா போன்ற சிற்றுயிர்களே நாளடைவில் புல்லாகிப் பூண்டாகி மீனாகிப் பாம்பாகிப் பறவைகளாய்ப் பல்வகை மிருகமுமாகிக் குரங்காகி இறுதியில் மனிதனாகப் பரிணமித்தனவென்றும் கூறி னார். விவிலிய நூலின் சிருட்டிக் கொள்கை இதனால் தவிடு பொடி ஆயிற்று. மனிதனும் குரங்கும் ஒரே உயிரினத் தொகுதியினின் றும் பரிணமித்தவை என்பதை டிஸ்ரேலி போன்றார் எள்ளி நகை யாடினர். எனினும், மேத்யூ ஆர்னால்டு, டென்னிசன் போன்ற ஆத்திகர்களின் மனங்களில் அது ஒரு பெரும் புயலைக் கிளப்பி விட் டது. இறைவனை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை; முழுவதும் நம்பவும் முடியவில்லை என்ற இரண்டுங் கெட்டான் நிலையில் அவர் களின் உள்ளங்கள் ஊசலாடிய காட்சியை அவர்களின் நூல்களும் கவிதைகளும் நமக்குத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன. காலஞ் சென்ற ஆர்தர் ஹேலம் என்ற தமது நண்பரின் பிரிவாற்றாமை யால் டென்னிசன் எழுதிய 'இன் மெமோரியம்' (In Memorium) என்ற நூல் அவரது உளப் பாங்கினை நன்கு படம் பிடித்துக் காட்டு கிறது. இம்மனநிலையில் சிக்கிய ஒரு சிலர் விஞ்ஞானம் மெய்ஞானத் தோடு முரண்பட்டதன்று என வாதித்தனர். விவிலிய நூலில் கூறப் பட்டுள்ள பகுத்தறிவுக்கு ஒவ்வாக் கதைகளில் எல்லாம் உண்மைகள் பல பொதிந்துள்ளன என அவர்கள் சமயத்துக்குச் சப்பைக் கட்டுக் கட்டினர். கிறித்துவ சமதர்ம வாதியான மௌரீஸ் இத்தகையோரில் ஒருவர். அவர் அவ்வாறு வாதித்தமைக்காக லண்டனிலிருந்த அரசர் கல்லூரியினின்றும் (King's College) வெளியேற்றப் பட்டார். மத குருமார்கள் பகுத்தறிவு வாதிகளை

நாத்திகர் எனப் பழித்தனர். ஜோவெத் (Joweth), டெம்பிள் (Temple), மார்க் பேட்டிசன் (Mark Pattison) என்பவர்களின் பகுத்தறிவு நூல்கள் சமயக் குழுவினரால் கண்டிக்கப் பட்டன. ஜார்ஜ் எலியட் (George Eliot) என்பாரின் நாவல்களும் கிறித்துவ மதத்துக்குப் புறம்பானவை என ஒதுக்கப் பட்டன. எனினும், கார்லைல், ரஸ்கின் போன்ற ஒரு சில பேரறிஞர்கள் மட்டுமே ஆன்மீக உணர்வின் அவசியம் பற்றியும், இறை நம்பிக்கையைப் பற்றியும் பேசிவந்தனர். தனிமனித வாழ்க்கையில் மக்களுக்கிருந்த மோகத்தைக் கண்டித்துக் கூட்டு வாழ்க்கையின் பெருமையை எடுத்துக் கூறியவர்களும் அவர்களே.

இணங்காதார் (Nonconformists)

ஆங்கிலிகத் திருச்சபைக்கு இணங்காதவர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகியது. அவர்கள் அநேகமாக அரசியலில் தாராளக் கொள்கை யுடையவர்களா யிருந்ததால் கிளாட்ஸ்டன் போன்ற தலைவர்கள் அவர்களை ஆதரித்தனர். அதனால், 19ஆம் நூற்றுண்டில் அவர்கள் பல சலுகைகளைப் பெற்றனர். அவர்கள் தங்களது கோயில்களிலேயே திருமணம் செய்து கொள்ளவும் (1836), கோயிலின் சுற்றுப் புறங்களில் இறந்தவர்களைப் புதைத்துக் கொள்ளவும் (1880), ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து கல்வி பயிலவும் (1871) உரிமை பெற்றனர். இணங்காதாரிடையே ஏராளமான பிரிவுகள் ஏற்பட்டன வெனினும் அவைகள் நாளடைவில் ஒன்ருக இணைந்து பாடுபட ஆரம்பித்தன. சுதந்திரத் திருச்சபைக் கவுன்சில்கள் (Free Church Councils) என்பன இத்தகைய கூட்டுச் சமயக் கழகங்களேயாகும்.

பயனீட்டுவாதிகள் (Utilitarians)

மதம், மனச்சான்று, முன்னுள் வழக்கம் இவற்றை யெல்லாம் கவனியாது, ஒரு செயல் என்ன பயனை ஏற்படுத்துகிறதோ அப் பயனைக்கொண்டே அதன் நன்மை தீமையைத் தீர்மானிக்க வேண்டுமெனக் கூறிய பயனீட்டுவாதிகள் விக்டோரியாவின் காலத்தில் சிறப்புற்று விளங்கினர். அவர்களுள் முக்கியமானவர் ஜான் ஸ்டுவர்ட் மில் ஆவார். தனிமனித உரிமைகளை அவர் பெரிதும் வற்புறுத்தினுர். மதமோ, அரசாங்கமோ, தொழிற் சங்கமோ தனிமனித சுதந்திரத்தில் தலையிடுவதை அவர் கண்டித்தார். பெரும்பான்மையோரின் கொடுங்கோன்மை (Tyranny of the majority) யினின்றும் தனிமனிதர்கள் விடுபட வேண்டுமென்றும், மற்றவரைப் பாதிக்காத வரையில் தனிப்பட்டோருக்குத் தன்னைப் பொறுத்த காரியங்களில் (Selfregarding activities) முழுச் சுதந்திரம் இருக்க வேண்டுமென்றும் அவர் வாதித்தார். பிரதி

நிதித்துவ அரசாங்கம், பெண்கள் வாக்குரிமை போன்றவைகளுக்காகவும் அவர் பாடுபட்டார்.

ரோமன் கத்தோலிக்கர்கள்

ரோமன் கத்தோலிக்கர் விக்டோரியாவின் காலத்தில் நல்ல வளர்ச்சியுற்றனர். அவர்கள் மீதிருந்த பல தடைகள் உடைத்தெறியப்பட்டன (1829). பிஷப்புக்கள், ஆர்ச்பிஷப்புகள் ஆகியோரைக்கொண்ட அவர்களது திருச்சபை 1850ஆம் ஆண்டளவில் இங்கிலாந்தில் ஏற்பட்டது. மத அதிகாரிகள் பிரதேசப் பட்டங்களை (Territorial titles) வைத்துக்கொள்வதைத் தடுக்க ஒரு சட்டம் 1851இல் கொண்டுவரப்பட்டதெனினும் அதை அரசாங்கம் அமுல் நடத்தவில்லை. 1871இல் அச்சட்டம், சட்ட ஏடுகளினின்றும் நீக்கப்பட்டது. கத்தோலிக்கர்கள் நாடெங்கும் தமது திருக்கோயில்களைக் கட்ட ஆரம்பித்தனர்.

ஸ்காட்லாந்தில் சமயப் புரட்சி

இங்கிலாந்தைப் போன்று ஸ்காட்லாந்திலும் ஒரு மத கிளர்ச்சி ஏற்பட்டது. மதகுருமார்கள் அல்லாத சாதாரணச் செல்வந்தர்கள் சிலர் (Laymen) திருச்சபையில் பல உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் வழக்கத்தைப் பல பிரிஸ்பிடீரியர்கள் கண்டித்தனர். ஆனால், ஸ்காட்லாந்து திருச்சபையும் ஆங்கில அரசாங்கமும் அத்தகைய முறையை ஆதரித்ததால், அதை வெறுத்த பல குருமார்களும் மக்களும் ஸ்காட்லாந்து திருச்சபையிலிருந்து 1843இல் தனியே பிரிந்தனர். 1874இல் அவர்களது கோரிக்கையை இங்கிலாந்து ஏற்றது எனினும், பிளவுபட்ட திருச்பையினர் 1929ஆம் ஆண்டு வரையில் ஸ்காட்லாந்து திருச்சபையோடு சேரவில்லை.

இங்ஙனம் சமயத் துறையில் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் பல்வேறு பிரிவுகள் தோன்றி, விக்டோரியாவின் காலத்து மக்களை வெவ்வேறு திசைகளில் இழுத்தன; எனினும், அவை தம்முள் சண்டையிட்டுக் கொள்ளவில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. பல பிரிவுகளும் தமக்குள் ஓர் ஒற்றுமை இருப்பதை உணர்ந்து, அவை பொதுவாக நாட்டு மக்களின் ஆன்மீக முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டுவந்தன.

சமுதாய நிலை (Social Condition)

உயர்குடி வகுப்பார்

விக்டோரியா இராணியார் காலத்து உயர்குடி மக்கள் (Aristocrats) தங்கள் செல்வாக்கின் அந்திய காலத்தை எய்தினர்.

இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்களால் ஏராள மான நடுத்தர மக்களும் வாக்குரிமையைப் பெற்றுவிட்டனர். அதனுல் அவர்களது சமுதாய, அரசியல் நிலை சற்று உயர்ந்தது எனினும், நிலப்பிரபுக்களும் உயர்குடி மக்களும் முற்றிலும் தங்களது செல்வாக்கை இழக்கவில்லை. அவர்களது செல் வாக்குக்குட் பட்ட பரோக்கள் பல இருந்துகொண்டேயிருந்தன. 1874ஆம் ஆண்டில் கூட ராண்டால்ப் சர்ச்சில் என்பார் உட்ஸ்டாக் (Woodstock) என்னும் பழுதுபட்ட சிறு பரோவி னின்றே தேர்ந்தெடுக்கப் பட்டார். எனவே, பாராளுமன்றத்திலும் காபினெட்டிலும் பிரபுக்கள், பொதுமக்கள் இருசாராரது பிரதி நிதிகளும் கலந்தே காணப் பட்டனர். 1880ஆம் ஆண்டில் விவசாயத்தில் மந்த நிலை (Agricultural Depression) ஏற்படும்வரை நிலப்பிரபுக்களின் செல்வாக்கு குறையவில்லை. அதன்பின் பல நிலக்கிழார்களின் குடும்பங்கள் நசித்தன. அவற்றின் பெருமை நிலைகுலைந்தது. கன்சர்வேடிவ் கட்சியில் அவர்கள் செலுத்திவந்த ஆதிக்கம் குறைந்தது. அதற்குப் பதிலாக வியாபாரத்தாலும் ஆக்கத் தொழில்களாலும் செல்வமெய்திய சில உயர்குடிப் பெரு மக்கள் செல்வாக்கைப் பெற்றனர். அக்கால உயர்குடி மக்களின் தலைவர்களாயிருந்த பீல், கிளாட்ஸ்டன், டிஸ்ரேலி போன்றவர்கள் தொழில் விற்பன்னர்களின் புதல்வர்களேயாவர். இப்புதிய பெரு மக்களும், பழைய நிலப்பிரபுக்களும் சேர்ந்த உயர்குடி வகுப்பே நாட்டின் தலைமையைக் காத்துவந்தது. புதிய நடுத்தர வகுப் பாரும் அதிகார வர்க்கத்தாரும் விரைவில் ஆதிக்கம் பெற்றனர். சிவில் உத்தியோகங்கள் போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற வருக்கே வழங்கப்பட்டதால், பொதுப்பள்ளிகளில் கல்வி பயின்ற நடுத்தர மக்கள் பலர் அரசாட்சியில் இடம் பெற்றனர்.

தொழிலாளர்கள், ஏழைகள்

தொழிலாளர்களின் நிலை நாளுக்கு நாள் உயர்ந்தது. ஆஷ்லி பிரபு, ஷாப்ட்ஸ்பரி பிரபு போன்றவர்கள் அவர்களது நிலை உயரப் பாடுபட்டனர். 1833, 1842ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தொழிற் சாலைச் சட்டங்கள் மூலமாகக் குழந்தைகள், பெண்கள் ஆகியோர் சுரங்கங்களில் வேலை செய்வதும் மற்ற தொழில்களில் அதிக நேரம் வேலை வாங்கப்படுவதும் தடுக்கப் பட்டன. 1860இல் எல்லா தொழிற் சாலைகளிலும் வேலைநேரம் நாளொன்றுக்குப் பத்து மணிகளாகக் குறைக்கப்பட்டன. 1885இல் டிஸ்ரேலி தொழிலாளர் களுக்கு எங்ஙனம் குடியிருப்பு வசதி செய்து கொடுத்தாரென்ப தெல்லாம் நாம் ஏற்கெனவே பார்த்தோம். இங்ஙனம் தொழிலாளர் களின் நிலை சமுதாயத்தில் உயர்ந்தது. 1867ஆம் ஆண்டுச் சட்டம் அவர்களுக்கு அரசியலுரிமையையும் தந்தது. கிரே பிரபு

வின் காலத்து ஏற்பட்ட வறியோர் சட்டச் சீர்திருத்தமானது வறியோருக்கு எங்ஙனம் நிவாரணமளித்ததென்பதையும் நாம் ஏற்கெனவே படித்தோம். அதனால் ஏழைகளின் நிலை உயரவும் வழியேற்பட்டது.

கல்வி நிலை

விக்டோரியாவின் காலத்து மக்களின் கல்வியறிவு என்றுமில்லாதபடி பெருகியது. சமய குருமார்களின் ஞாயிற்றுப் பள்ளிகளையும், தனிப்பட்டோர் நடத்திய பொதுப் பள்ளிகளையும் நம்பியிருந்த மக்களுக்கு அரசாங்கம் பள்ளிகளைக் கட்டித்தர ஆரம்பித்தது. கிளாட்ஸ்டன் இவ்வரிய தொண்டினைச் செய்து எங்ஙனம் புகழ் பெற்றார் என்பதை நாம் முன்பே கண்டோம். 1880இல் அவர் கட்டாயக் கல்வி முறையைக் கொணர்ந்தார். ஆனால், 1891இல் தான் கல்வி இலவசமாக்கப்பட்டது. அதனால் எல்லாக் குழந்தைகளும் ஆரம்பக் கல்வி பெற ஏதுவாயிற்று. பால்ஃபரின் 1902ஆம் ஆண்டுச் சட்டம் கல்விக் குழுக்களை (Board) ஒழித்து, தல அரசாங்கங்களின் கைகளில் ஆரம்பக் கல்வியை ஒப்படைத்தது. சமயப் பள்ளிகளையும் அவைகள் மேற்கொள்ளலாமென்று அச் சட்டம் கூறியதை இணங்காதார்களும், சமயக்கல்வி புகட்டப்படுவதை வெறுத்தவர்களும் கண்டித்தார்கள். 1936இல் தான் இம்மதப் பிரச்சினை தீர்க்கப்பட்டு 15 வயதுக்குட்பட்ட எல்லோருக்கும் கட்டாயக் கல்வி வழங்கப்பட்டது. 1906இல் ஏழை மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. விக்டோரியாவின் காலத்தில் தொடங்கிய கல்விச் சீர்திருத்தத்தை அது முற்றுப்பெறவைத்ததெனலாம். மேலும், மக்களின் கல்வியறிவைப் பெருக்கப் பல சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் நாட்டில் தோன்றின. 'எடின்பர்க் ரெவ்யூ' (Edinburg Review), 'குவாட்டர்லி ரெவ்யூ' (Quarterly Review) போன்ற சஞ்சிகைகளில் பெரும் அறிஞர்கள் கட்டுரைகளை வரைந்து மக்கள் அறிவைப் பெருக்கினர். டைம்ஸ் (Times) என்ற நாளிதழ் பாராளுமன்ற சொற்பொழிவுகளையெல்லாம் அப்படியே பிரசுரித்து மக்களின் அரசியலறிவை வளர்த்தது. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டுகின்ற செல்வாக்கு மிக்க இதழ்களை நார்த்கிளிப் பிரபு (Lord Northcliffe) போன்றோர் பிரசுரித்தனர். பெண் கல்வியிலும் விக்டோரியா காலத்தில் ஊக்கம் அதிகம் காணப்பட்டது.

கலைகளின் நிலை

இலக்கியம்

விக்டோரியாவின் காலத்தே உலகப் புகழ் பெற்ற இலக்கியக் கர்த்தாக்கள் பலர் தோன்றினர். அவர்களிற் பலரும் தங்களது

காலத்தைக் குறை கூறுபவர்களாயும் சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருந்த ஊழல்களை அம்பலப்படுத்துபவர்களாயுமே இருந்தனர். முக்கியமாகத் தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் ஏற்பட்ட இன்னல்களை அவர்கள் படம்பிடித்துக் காட்டினர். ஸ்வின்பர்ன் (Swinburne) என்ற கவிஞர் (1837-1909) அக்கால மக்களின் ஆன்மீக உணர்வின்மையைக் கண்டித்தார். அதே சமயம் அவர் புரட்சிகரமான காதல் கவிதைகளையும் இயற்றினார். சார்ல்ஸ் டிக்கன்ஸ் (1812-70) என்ற நாவலாசிரியர், 'ஆலிவர் ட்விஸ்ட்' (Oliver Twist) போன்ற நாவல்களில் லண்டன் போன்ற பெரு நகரங்களிலும், வறியோரின் தொழிலகங்களிலும் அல்லலுற்றுக் கண்ணீர் வடிக்கும் ஏழை மக்களின்மீது கருணையும் அநுதாபமும் ஏற்படும் முறையில் எழுதியுள்ளார். டேவிட் காப்பர்ஃபீல்ட் (David Copperfield) என்னும் அவரது நாவல் ஏறக்குறைய அவரது சுயசரிதத்தையே விளக்குகிறது. பிக்விக் பேப்பர்ஸ் (Pickwick Papers) என்னும் அவரது நாவல் உலகப் புகழ்பெற்றதாகும். கார்லைல் (Carlyle, 1795-1881) என்னும் அறிஞர் அன்றைய சமுதாயத்தைக் கண்டித்தவர்களுள் தலைசிறந்தவர் எனலாம். விஞ்ஞான வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் மனிதனது உள்ள நிறைவுக்கு வழிசெய்யாது என்றும், மக்கள் ஆன்மீக உணர்வு பெறுதல் இன்றியமையாதது என்றும் அவர் ஓயாது தமது நூல்களில் வற்புறுத்தினார். மேத்யூ ஆர்னல்டு என்ற புலவரும் தமது 'பண்பாடும் குழப்பமும்' (Culture and Anarchy) என்ற நூலில் இங்கிலாந்தின் உயர்குடி மக்களைக் காட்டுமிராண்டிகள் எனப் பழிக்கிறார். கார்லைலினைப் போன்றே அவரும் தம் காலத்துப் புற நாகரீகத்தைப் பழித்து அகநாகரீகத்தை வற்புறுத்தினார். ஜான் ரஸ்கின் (1819-1900) என்ற அறிஞர், பொருள் தேடும் முயற்சியில் மூழ்கிக் கிடக்கும் மக்களை அழகைப் போற்றும்படி வற்புறுத்தினார். கட்டடக் கலையிலும், மரத்தொழிலிலும் மக்கள் வெறும் இயந்திரப் பொருள்களைப் பயன்படுத்துவதை விட்டுவிட்டுக் கையினாலேயே அழகு பெற அவைகளை அமைக்க வேண்டுமென அவர் வற்புறுத்தினார்.

விக்டோரியாவின் காலத்தே டென்னிசன் (Tennyson) போன்ற பெருங் கவிஞர்களிருந்தனர். 'மாட்' (1855) என்னும் கவிதையில் அவர் தமது காலத்தைப் பற்றிய வெறுப்பை வெளியிடுகிறார்; எனினும், 'ஈனக் ஆர்டன்' (Enoch Arden) போன்ற கவிதைகளில் அவரது உயர்ந்த உணர்ச்சிகள் நன்கு பிரதிபலிக்கின்றன. அவரது 'இடில்ஸ் ஆப் தி கிங்' (Idylls of the King) மக்கள் அனைவராலும் விரும்பப்படும் கவிதைகளுள் ஒன்றாகும். ராபர்ட் பிரௌனிங் (Robert Browning, 1812-89) என்ற இன்னொரு கவிஞர்

தமது அபாரமான புலமையாலும், கவிதா சக்தியாலும் அறிஞர்களைத் திகைக்க வைத்தார். மாத்யூ ஆர்னல்டு என்னும் கவிஞர் ஓர்ட்ஸ்வொர்த்தின் சீடர். 'ஷோரப் அண்ட் ருஸ்தம்', 'ஸ்காலர் ஜிப்ஸி' (Shorab and Rustom, Scholar gypsy) போன்ற அவரது கவிதைகள் எளிமையும் இனிமையும் ஒருங்கே நிறைந்தவையாகும். கிப்லிங் (Kipling), மேஸ்பீல்டு (Masefield), ஈட்ஸ் (Yeats) என்ற வேறு பல கவிஞர்களும் விக்டோரியாவின் காலத்தை அலங்கரித்தனர்.

நாவல் இலக்கியம் அவர் காலத்தில் இணையற்ற முறையில் வளர்ச்சியுற்றது. ஜார்ஜ் எலியட் என்பவரது நாவல்கள் நாட்டுப்புறச் சமுதாயம், குருமார் சமுதாயம் ஆகியவற்றை நன்கு சித்தரித்துள்ளன. பிரான்டே சகோதரிகளும் (Bronte Sisters) நாட்டுப்புறங்களைப் பற்றி நாவல்கள் பல எழுதினர். அவர்கள் எழுதிய 'ஜேன் ஐர்' (Jane Eyre) மிகப் பிரசித்தி பெற்றது. திருமதி கேஸ்க்கல் (Mrs. Gaskell) என்பவரது 'வடக்கும் தெற்கும்' (North and South) என்ற நாவலில் தொழிற் பட்டணங்களிலும் நாட்டுப்புறங்களிலும் நிலவும் நிலைமைகளை அவர் ஒப்பிட்டுக் காட்டுகிறார். டிஸ்ரேலியின் 'ஸிபில்' (Sybil) என்ற நாவலும், இங்கிலாந்திலிருந்த செல்வந்தர் உலகம், வறியோர் உலகம் என்ற இரு உலகங்களை விவரிக்கிறது. இங்ஙனம் விக்டோரியாக் கால நாவலாசிரியர்கள் அக்கால நிலைமையை உள்ளபடியே படம் பிடித்து காட்டியுள்ளனர்.

நாவல்களைப் போன்றே வரலாறும் அவரது காலத்தில் விஞ்ஞான முறையில் எழுதப்பெற்று வளர்ந்தது. மெக்காலே பிரபுவும், ஸ்டப்ஸ் (Stubbs) என்னும் அறிஞரும் அக்காலத்து வாழ்ந்த பெரும் வரலாற்றாசிரியர்களாவர். மெக்காலேயின் 'இங்கிலாந்து வரலாறு' படிக்கப் படிக்கச் சுவை தருவதொன்றாம். வரலாறு ஒரு கலை என்பது அவரது கோட்பாடு. ஸ்டப்ஸ் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றை விவரித்துரைத்துள்ளார். அவரது படிப்பு அபாரமானது. ஆஃக்ஸ்போர்டில் பேராசிரியராகவும், செஸ்ட்டர் (Chester) என்னுமிடத்தின் பிஷப்பாகவும் அவர் பணி புரிந்தார். சீலி (Seeley) என்பார் ஆங்கிலப் பேரரசின் வரலாற்றாசிரியராவார்.

கலை, விஞ்ஞானம்

விக்டோரியாவின் காலத்தே மக்கள் பொருள் தேடும் முயற்சியிலேயே தங்கள் கவனத்தை யெல்லாம் செலுத்தியதால் கலைகள் நன்கு வளரவில்லை. எனினும், ரொமான்டிக் இயக்கம் (Romantic Movement), ஆக்ஸ்ஃபோர்டு இயக்கம் இவைகளின் விளைவாகக் கலையில் ஓர் ஊக்கம் தென்பட்டது. வில்லியம் மாரிஸ் (William

Morris), ராஸெட்டி (Rosetti), மில்லாய் (Millais) என்ற கலைஞர்கள் 'ரெப்ஹேல் காலத்துக்கு முற்பட்ட கலையை ஓம்பும் சகோதரத்துவ இயக்கம்' (Pre-Raphailite Brotherhood) என்ற கழகத்தைத் தோற்றுவித்தனர். எளிமையை அவர்கள் வற்புறுத்தி மிகைபட்ட அலங்காரத்தைக் கண்டித்தனர். ஓவியர்களும், சிற்பிகளும் பழைய முறைகளைக் கைவிட்டனர். கான்ஸ்டபிள் (Constable), டர்னர் (Turner), விஸ்லர் (Weistler), சார்ஜண்ட் (Sargeant) போன்ற நல்ல ஓவியர்கள் வாழ்ந்த காலம் அது. தேசியக் கலைக்கூடம் (National Gallery) ஒன்றை அரசாங்கம் லண்டனில் ஏற்படுத்தியது. கட்டடக் கலையில் பழைய கிரேக்க முறையும் இடைக்கால காதிக் (Gothic), முறையும் கலந்து கையாளப் பட்டன. ஆனால், இயந்திரத்தால் செய்யப்பட்ட விலை குறைவான பொருள்களைப் பயன்படுத்தி மக்கள் அழகு இல்லாமல் கட்டடங்களைக் கட்டினர். அழகுணர்ச்சி மக்களிடையே ஏற்படுவதற்காக ரஸ்கின் பெரிதும் பாடுபட்டார். நாடகக் கலையும் இசைக்கலையும் வளர்ச்சி பெற்றன. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப் பட்டன. ஸர் ஹென்றி இர்விங் (Sir Henry lrwing), ஸர் பீர்பாம் ட்ரீ (Sir Beerbohm Tree) போன்ற நாடகக் கலைஞர்கள் அந் நாடகங்களை நன்கு நடித்துக் காட்டினர். இசையோடு கூடிய நாடகங்கள் இக்காலத்தே மிகப் பிரபலமடைந்தன.

விஞ்ஞானம் வீறு பெற்றுயர்ந்த காலம் விக்டோரியாவின் காலமாகும். டால்ட்டன் (Dalton, 1766-1844) என்பவர் தமது அணுக்கோட்பாட்டால் (Atomic Theory) வேதிநூல் கலையில் (Chemistry) ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணினார். ஃபாரடே (Faraday), கெல்வின் பிரபு (Lord Kelvin) போன்றோர் மின்சார சக்தியைப் பற்றி ஆராய்ந்து அதை மக்களுக்குப் பயன்படுத்தினர். லயஸ் என்பார் 'நிலநூல் அமைப்புக் கோட்பாடுகள்' (Principles of Geology) என்ற நூலை எழுதிப் பல புதிய உண்மைகளை வெளியிட்டார். டார்வினுடைய உள்ளது சிறத்தல் கொள்கை, விஞ்ஞான உலகுக்கு ஒரு விருந்தாக அமைந்தது. தபால், தந்தி, தொலைபேசி முறைகள் தோன்றி மக்களை மிக நெருங்கி வாழச் செய்தன. பாதையமைப்பு, பாலங் கட்டுதல், ரயில்வே போக்குவரத்து, நீராவிக்கப்பல்முறை இவைகளால் நாட்டின் பல பாகங்களும், ஏன், உலகின் பல பாகங்களுமே நன்கு இணைக்கப் பட்டன. பற்பல விஞ்ஞானத் துறைகளில் இங்கிலாந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது. ரயில்வேப் போக்குவரத்தை நாடெங்கும் முதன்முதல் ஏற்படுத்திய நாடு இங்கிலாந்தேயாகும். நீராவிக் கப்பல்களைக் கண்டுபிடித்து,

அவற்றைப் பெருமளவில் முதன் முதலில் பயன்படுத்திய நாடும் இங்கிலாந்தே. கப்பல் கட்ட மரத்துக்குப் பதில் இரும்பை முதன் முதல் பயன்படுத்தியவர்களும் ஆங்கிலேயரே! நாஸ்மித் (Nasmyth) என்பவர் 1839ஆம் ஆண்டில் கண்டு பிடித்த நீராவியால் இயங்கும் இராக்கத சக்தியானது பெரும் இரும்புத் தகடுகளை உருவாக்க மிக்க உதவியாக இருந்தது. அத்தகடுகளைக் கொண்டே பெருங் கப்பல்கள் செய்யப் பட்டன. கியூனர்டு கம்பெனி (Cunard Company) இவ்விதம் கட்டிய இரும்பு நீராவிக் கப்பல்களை 1865ஆம் ஆண்டில் அட்லாண்டிக் கடலில் முதன்முதல் வெள்ளோட்டம் விட்டது. உலகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பில் பாதியளவில் (6 மிலியன் டன்) இங்கிலாந்தில் உற்பத்தியாயிற்று. நாளடைவில் இரும்புக்குப் பதிலாக எஃகு, கப்பல் கட்டுவதற்காகப் பயன் படுத்தப் பட்டது. பெஸ்ஸமர் முறை (Bessemer Process) என்ற ஒரு நூதன முறையால் எஃகு வெகு எளிய விலையில் உற்பத்தி செய்யப் பட்டது. அம் முறையால் ஒரு டன் எஃகின் விலை 40 பவுனிலிருந்து 5 பவுனுகக் குறைந்தது. ஆவியாலோ திரவத்தாலோ இயக்கப்படும் டர்பைன் (Turbine) என்ற மோட்டார்களைக் கப்பலில் பயன்படுத்தும் முறையை பார்சன் (Parson) என்பவர் 1897இல் கண்டு பிடித்தார். அத்தகைய மோட்டார்களைக் கொண்ட கப்பல்கள் வியக்கத்தக்க வேகத்துடன் பயணம் செய்யலாயின.

மருத்துவத் துறையிலும் பிரிட்டன் ஏனைய நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியது. டாக்டர் ஜேம்ஸ் சிம்ஸன் (Dr. James Simpson) என்பவர் தற்செயலாக 1847ஆம் ஆண்டில் கண்டுபிடித்த 'குளோரஃபாம்' (Chloroform) என்ற மயக்க மருந்து வலியின்றி நோயாளிகளுக்கு ரணசிகிச்சை செய்யப் பெரிதும் துணையாயிருந்தது. வியக்கத்தக்க அறுவை முறைகள் (Operations) வழக்கத்துக்கு வந்தன். அறுவைச் சிகிச்சைக்குப்பின் ஏற்பட்ட ரணங்களில் நோய்க்கிருமிகள் புகுந்து சீழ் ஏற்படுத்திப் பலரைக் கொன்றுவந்தன. அதைத் தடுக்கக் கார்பாலிக் அமிலம் (Carbolic Acid) போன்ற கிருமிநாசினியைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான நோயாளிகளை மரணத்தினின்றும் காத்தவர், கிளாஸ்கோ நகர மருத்துவ மனையில் பணி புரிந்து வந்த லிஸ்டர் (Lister) என்னும் அறுவை நிபுணராவார் (Surgeon). நோய்களைத் தடுக்க ஊசி போடும் முறையைப் (Inoculation) பாஸ்ச்சர் (Pasteur) என்ற அறிஞர் கண்டுபிடித்தார். வெப்ப நாடிகளில் வெகுவாகப் பரவியிருந்த மலேரியா காய்ச்சல் கொசுக்கடியால் ஏற்படுவது என்ற உண்மையை சர் ரொனல்ட் ராஸ் (Sir Ronald Ross) 1897இல் கண்டு வெளியிட்டார்.

விக்டோரியா இராணியார் கால மக்களது வாழ்க்கை நவீன முறையில் மாறி அமையத் துணைசெய்த புதிய கருவிகள் பலப்பல. சைக்கிள் (Cycle), காமிரா (Camera), மின்சார விளக்கு, தொலைப் பேசி, தட்டெழுத்துக் கருவி (Typewriter) முதலியன அவைகளுள் முக்கியமானவைகளாகும். மின்சார விளக்கும் தட்டெழுத்துக் கருவியும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்தவை. எனினும், அவற்றைப் பிரிட்டிஷ் மக்கள் பயன்படுத்திச் சுகவாழ்வு வாழ்ந்தனர்.

பொருளாதார நிலை (Economic Condition)

தொழில் வளர்ச்சி

நீராவி, மின்சாரம், நிலக்கரி வாயு (Gas) முதலான சக்திகளைக் கொண்டு இயந்திரங்களை இயக்கத் தெரிந்துகொண்ட விக்டோரியா கால மக்கள் இங்கிலாந்தை விரைவிலேயே இயந்திர மயமாக்கி விட்டனர். 1850ஆம் ஆண்டுக்குள் பலவகையான நெசவுத்தொழில்களிலும் இயந்திரங்கள் பயன்பட்டன. அவற்றின் துணைகொண்டு யார்க்ஷயரில் கம்பளித் தொழிலும், நாட்டிங்ஹாமில் (Nottingham) மெல்லிய நூல்களைக் கொண்டு அழகான துணிகளைப் பின்னும் தொழிலும் (lace industry), லீசெஸ்டர்ஷயரில் (Leicestershire) மேஜோடுகள் செய்யும் தொழிலும் (Hosiery Industry) வளர்ந்தன. பர்மிங்ஹாம், ஷெப்பீல்டு (Sheffield) போன்ற இடங்களில் இரும்புத் தொழில் வளர்ச்சியுற்றது. மின்சாரத்தைப் பயன்படுத்தும் பல தொழில்கள் லண்டனைச் சுற்றியும் ஏற்பட்டன. மோட்டார் கார்களை உற்பத்தி செய்யும் தொழில் தெற்கேயுள்ள ஷயர்களில் பெரிதும் வளர்ந்தது. மின்சார சக்தியைக் கொண்டு லண்டனில் 1900ஆம் ஆண்டளவில் டியூப் (Tube) என்னும் பாதாள ரயில் வண்டிகள் ஏற்பட்டன. இரயில் இயந்திரங்கள், நீராவிக்கப்பல், நீர்மூழ்கிக் கப்பல்கள் இவைகளைக் கட்டும் தொழில்களும், தந்தி, தொலைபேசி இவை சம்பந்தமான தொழில்களும் நன்கு வளர்ச்சியுற்றன.

விவசாயத்தின் வீழ்ச்சி

ஆக்கத் தொழில்கள் விஞ்ஞானத்தின் துணை கொண்டு மின்னல் வேகத்தில் ஒருபுறம் வளரும் வேளையில், இங்கிலாந்தின் விவசாயம் நாளுக்கு நாள் தேய்பிறை போலத் தேய்ந்து வந்தது. அமெரிக்காவிலிருந்து ஏராளமான உணவுப் பொருள்கள் இங்கிலாந்தில் வந்து குவிந்தன. ஆஸ்திரேலியாவிலிருந்து இறைச்சியானது குளிர்ப் பெட்டிகளில் (Refrigerators) பதப்படுத்தப்பட்டு இங்கிலாந்துக்கு வந்தது. அவை யாவும் மிக எளிய விலைக்கு

விற்கப்பட்டன. அவற்றை வாங்கிய நுகர்வோர் கூட்டம் (Consumers) அதனால் நல்ல இலாபம் அடைந்தது. ஆனால், விவசாயிகள் பலர் அமெரிக்கப் போட்டியைச் சமாளிக்கமுடியாமல் நிலங்களை விற்றுவிட்டனர் அல்லது தரிசாகப் போட்டுவிட்டனர். நாட்டில் விவசாயம் குன்றியது. பிரிட்டிஷ் மக்கள் உணவுத் தானியங்களை மேன்மேலும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாயினர். 1890ஆம் ஆண்டளவில் 45 சதவிகித உணவுத் தானியங்கள் வெளி நாடுகளிலிருந்தே இங்கிலாந்துக்குள் வந்தன. அதனால் பண்ணைகளை வைத்திருப்பவர்களும், அதில் வேலை செய்பவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

வியாபார வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் வியாபாரத் துறையில் பல புதிய முறைகள் தோன்றின. தனிப்பட்டவர்கள் வியாபாரத்தில் ஈடுபடும் முறைக்குப் பதிலாக, அதில் பலர் கூட்டாகச் சேர்ந்து தொழிற்படும் முயற்சி தலையெடுத்தது. ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் (Joint Stock Companies) பல ஆங்காங்கே தோன்றின. அவற்றில் பங்குதாரர்களாக (Shareholders) ஏராளமான பேர் சேர்ந்தனர். கம்பெனியை நடத்துவதில் அவர்கள் சிறிதும் பங்கெடுத்துக்கொள்வதில்லை. அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வணிக நிபுணர்களான சில இயக்குநர்களே வாணிகத்தை நடத்தினர். ஆனால், அதில் வரும் இலாபம் மட்டும், பங்குதாரர்களுக்கு அவர்கள் போட்ட முதலுக்கேற்பப் பிரித்துத் தரப்பட்டது. ஒரேவழி நஷ்டம் ஏற்பட்டால் பங்குதாரர்கள் அவர்கள் போட்ட முதலை மட்டும் இழப்பர். மற்றபடி கடன்காரர்கள் அவர்களது ஏனைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய முடியாது. இதற்கே வரையறுக்கப்பட்ட பொறுப்பு (Limited Liability) எனப் பெயர். இதனால் சாதாரண மக்களும் கூடத் துணிந்து பங்குகளை வாங்கினர். பெரும் வியாபாரங்களிலீடுபடுவதற்கான மூலதனம் இம் முறையால் எளிதில் கிடைத்தது. அதே முறை பாங்குகளின் அமைப்பிலும் கையாளப்பட்டது. தனிப்பட்டோர் நடத்தும் பாங்குகளுக்குப் பதிலாக ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகள் பல ஏற்பட்டன. பாங்குகளில் சேமித்துவைக்கும் பழக்கம் மக்களிடையே ஏற்பட்டது. 1851ஆம் ஆண்டில் பாங்குகளில் இருந்த இருப்புத் தொகையானது (Deposits) 300 மிலியனாகும். இத்தொகை முழுவதும் வாணிகத்துக்குக் கடனாகக் கிடைத்ததால் வாணிகம் வளர்ந்தது. சாதாரணத் தொழிலாளர்களும்கூடச் சிறுதொகைகளைச் சேமித்து வைத்தனர். கிளாட்ஸ்டனால் ஏற்படுத்தப்பட்ட தபால் நிலையச் சேமிப்பு பாங்குகள் அத்தகையோரின் சேமிப்புக்குப் பெரிதும் ஊக்கமளித்தன.

தொழிற் சங்க வளர்ச்சி

தொழிலாளர்கள் தங்கள் குறைகளை முதலாளிகளிடம் முறையிட்டுக் கொள்ளவும், நயமுறைகளாலும் பயமுறுத்தலாலும் அவர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் உறுதுணையாயிருப்பவை தொழிற் சங்கங்களாகும். அத்தகைய சங்கங்களின் வளர்ச்சிக்கு விக்டோரியாக் கால அமைச்சர்கள் பெரிதும் துணை புரிந்தனர். 1851இல் ஏற்பட்ட ஒன்றுகூட்டப்பட்ட பொறியியல் வல்லுநர் கழகம் (Amalgamated Society of Engineers) இத்தகைய சங்கங்களில் ஒன்ருகும். இத்தகைய தொழிற் சங்கங்களின் நிதிகளை அதன் அதிகாரிகள் சமயத்தில் கையாடுவதை 1867இல் ஏற்பட்ட ஒரு சட்டம் தடுத்தது. டிஸ்ரேலி என்பார் கொணர்ந்த 1875ஆம் ஆண்டுச் சட்டம், தொழிற் சங்கம் தங்கள் வழக்குகளைத் தீர்க்கக் கையாளும் முறைகள் கிரிமினல் குற்றங்கள் எனக் கருதப்படமாட்டா எனக் கூறியது. இச் சட்டம் தொழிற் சங்கங்களுக்குப் பெருத்ததோர் வரப்பிரசாதமாயிருந்தது.

அரசாங்கத்தின் தலையீடும் கட்டுப்பாடும்

தனிமனிதர்களின் அன்ருட வாழ்வில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்ற கொள்கையே பொருளாதாரத் துறையில் வெகு நாள்களுக்கு இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்பட்டுவந்தது. ஜான் ஸ்டுவர்ட் மில் போன்றவர்கள் இக் கொள்கையைப் பெரிதும் வற்புறுத்தினர். தனிமனித சுதந்திரமே (Individual liberty) யாவினும் பெரிது என்பது அவருடைய கொள்கை. ஆனல், இத்தகைய சுதந்திரத்தை அனுபவிக்கத் தக்க சூழ்நிலையை உருவாக்குவதில் அரசாங்கம் தலையிடத்தான் வேண்டும் என கிரீன் (Green T. H.) போன்றவர்கள் கூறலாயினர். பிளேடோவின் பொதுவுடைமைக் கொள்கையை அவரது கொள்கை பெரும்பாலும் ஒத்திருந்தது. விக்டோரியாக் காலப் பிரதமர்களில் பலர் தலையிடாக் கொள்கையைக் கடைபிடித்தனர். தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டது அக் கொள்கையின் அடிப்படையிலேயாகும். ஆனல், கிளாட்ஸ்டன், டிஸ்ரேலி போன்றவர்கள் மக்கள் நலன் கருதி மக்களின் பொருளாதார வாழ்வில் தலையிடத் தயங்கியதில்லை. கல்வியைப் பரப்பவும், தொழிலாளர்களின் குறைகளைக் களையவும், வியாபாரத் தனியுரிமைகளைக் கட்டுபடுத்தவும் பல சட்டங்கள் ஏற்பட்டன. ரயில்வேக்களைத் தேசீய மயமாக்க வேண்டுமென கிளாட்ஸ்டன் ஒரு முறை கூறினர் (1844). எனினும், நடைமுறையில் அரசாங்கம் எவ்வளவு குறைவாக மக்களின் தனிமனித சுயேச்சையில் தலையிடமுடியுமோ அந்த அளவுதான் தலையிட்டது என்றே கூறலாம்.

அரசியல் நிலை (Political Condition)

கோனாட்சி (Monarchy)

விக்டோரியா மகாராணியார் கோனாட்சியின் மாட்சியைப் பெரிதும் பேணி வளர்த்தார். அவர் தமது வலிமை மிக்க ஆட்சியால் மூன்றாம் ஜார்ஜின் பேத்தியார் என்பதை நன்கு காட்டிக் கொண்டார். அவருடைய உறுதியான ஆளுகைக்கு அவரது கணவரும் ஒரு காரணமாவார். அவரது கணவரான ஆல்பர்ட் இளவரசர் தூய வாழ்க்கையினர். முடியரசின் மேன்மையை வளர்க்க அவர் ஓயாது பாடுபட்டார். அவரது ஒழுக்கத்தைப் பின்பற்றி அரண்மனையில் வாழ்ந்த அனைவரும் சீலமிக்கவர்களாக மாறினர். இருவரும் சேர்ந்துகொண்டு, பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற சிறப்பதிகாரத்தைத் தங்கள் கைகளிலேயே வைத்துக் கொள்ளப் பெரிதும் முயன்றனர். சேனையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் இராணியார் தம் கையிலேயே வைத்துக்கொண்டார். அதனால், அவர் 1856இல் தனது ஒன்றுவிட்ட சகோதரனை ஜார்ஜ் என்பாரைச் சேனாதிபதியாக நியமித்துக்கொண்டார். 1895 வரை அவர் அப்பதவிலேயே இருந்தார். அரசியாரின் வெளிநாட்டுக் கொள்கை அவரது கணவரால் பெரிதும் உருவாக்கப் பட்டது. அவர் ஜெர்மானியரை ஆதரிப்பவராதலால்தான், ஜெர்மானியர் நிறைந்த ஹோல்ஸ்டீன் நாட்டை டென்மார்க்குக்கு விரோதமாக அரசியார் ஆதரித்தார். பொதுவாக ஐரோப்பாவில் தாராளக் கொள்கைகளை வரவேற்ற அவர், இத்தாலிய சுதந்திர இயக்கத்தையும், லூயி நெப்போலியனுடைய திடீர்ப் புரட்சியையும், ஹங்கேரியப் புரட்சியையும் ஆதரிக்கவில்லை. இதனாற்றான் இராணியும் அவரது கணவரும் சேர்ந்து, தாராளக் கொள்கைகளை ஆதரித்த பாமர்ஸ்டனை வெளிநாட்டமைச்சர் பதவியிலிருந்து 1851இல் நீக்கினர். இராணியாருக்குப் பிடிக்காதவர் என்ற காரணத்தால்தான் பிரைட் (Pright) என்பவருக்குப் பிரிவி கவுன்சிலர் பதவி மறுக்கப்பட்டது. அதுபோன்றே பியூஸியைப் பின்பற்றிய எவரையும் அரண்மனையில் வேலைக்கமர்த்தாமல் இராணியாரும் அவரது கணவரும் பார்த்துக் கொண்டனர். நியமன அதிகாரத்தை இராணியார் தம் விருப்பம்போல் கையாண்டார். மந்திரிகளுக்கு எச்சரிக்கை செய்யும் அதிகாரத்தையும் (Right to warn), ஆலோசனை கூறுமதிகாரத்தையும் (Right to be consulted) நன்கு பயன்படுத்தியதோடு உற்சாகப்படுத்தும் அதிகாரத்தையும் (Right to encourage) அவர் நன்கு கையாண்டார். கிரிமியப் போரிலும், தென் ஆப்பிரிக்கப் போரிலும் மனமுடைந்துபோன வீரர்களை ஊக்குவித்த பெருமை இராணியாருக்கே உரியதாகும். கணவர் இருக்கும்வரை ஒரு வீராங்கனை

போல் வீறுடன் ஆட்சி புரிந்து வந்த இராணியார் அவரது மரணத்துக்குப் பின் பொதுக் காரியங்களில் பங்கு பெற மறுத்தார். பாராளுமன்றத்தைக் கூட்டவும் அவர் வர மறுத்தார். தன்னை ஒரு பெண்ணாக நினைத்து மந்திரிகள் நடத்த வேண்டுமென அவர் விரும்பினாரேயன்றி, அரசியர்க நினைத்து வழிபடுவதை விரும்பவில்லை. கிளாட்ஸ்டனின் நீண்ட சொற்பொழிவுகள் அவருக்குச் சோர்வை யுண்டாக்கின. டிஸ்ரேலியின் புகழ்ச்சி யுரைகளில் அவர் மயங்கிவிட ஆரம்பித்தார். மத நிறுவனங்களில் நியமனம் செய்யும் அதிகாரத்தை இராணியார் விடாமல் செலுத்தி வந்தார். 1868இல் தமக்கு வேண்டியவரான டெய்ட் (Tait) என்பாரை அவர் ஆர்ச்பிஷப்பாக நியமித்தார். வேல்ஸ் இளவரசரைப் பொதுக் காரியங்களிலீடுபடக் கூடாதென அவர் தடுத்தார். ஆனால், அவர் பொதுக் காரியங்களில் மிக்க கவனத்தோடு ஈடுபட்டு வந்தார். அவருடைய நேர்மையான யோசனைகள், பாராளுமன்றச் சீர்திருத்தம், ஐரிஷ் சமய நிறுவனக் கலைப்பு போன்ற சிக்கலான பிரச்சினைகளில் மந்திரிகளுக்குப் பெரிதும் பயன்பட்டன. பிரிட்டிஷ் இராணுவத்தைப் பற்றி அவர் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். அது எப்போதும் வெற்றியே பெறும் என்பது அவரது அசையாத நம்பிக்கை. தனது நாட்டின் கலைகளைப் பேணுவதிலும் அவரும் அவர் கணவரும் ஆர்வங் காட்டினர். லண்டனிலிருந்த பளிங்கு மாளிகையில் (Crystal Palace) அவர்கள் ஏற்படுத்திய கண்காட்சி அவர்களுடைய கலையுணர்வை நன்கு வெளிப்படுத்தியது. மாற்றங்களை வெறுக்கும் குணம் படைத்தவர் அவர். பெண்களுக்கு வாக்குரிமை கூடாதென்றும், சேனா வீரர்களைச் சவுக்காலடிப்பது நியாயமே என்றும் கூறியதிலிருந்தே அவரது கன்சர்வேடிவ் மனப்பான்மை நன்கு புலப்படும். மதத்திலும் அவர் மாற்றம் வேண்டாதவர். மதபக்தியின் காரணமாகக் கலைகளில் கூட அவர் எளிமையை நாடியவர். அறநெறிகளைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்துகள் ஒரே மாதிரியானவை. இப்படிப்பட்ட சில குறைகளிருந்தபோதும், குடிமக்களால் விரும்பிப் போற்றப்பட்ட ஒரு வல்லரசியாகவே விக்டோரியா மகாராணியார் திகழ்ந்தார். முக்கியமாகப் பேரரசு போற்றும் ஓர் அரசியாக அவர் விளங்கினார்.

பாராளுமன்றம்

பிரபுக்கள் சபையானது பழைய பெருமையை இழந்தது. அதில் கன்சர்வேடிவ் பிரபுக்களே நிறைய இருந்தனர். எனவே, தாராளக் கொள்கையினர் நிறைந்திருந்த பொதுமக்கள் சபைக்கும் அதற்கு மிருந்த ஒற்றுமை போய்விட்டது. மேலும், பாராளுமன்றச் சீர்திருத்தங்களால் கீழ்ச்சபை ஜனநாயகத் தன்மை வாய்ந்த

தாக மாறிவிட்டதால், செல்வாக்கு மிக்கோரின் ஆட்சியையே ஆதரித்த பிரபுக்கள் அச் சபையோடு ஒத்துப்போக முடியாத நிலையிலிருந்தனர். இருப்பினும் பெரும்பாலான சட்டங்களை அவர்கள் முணுமுணுக்காமல் ஏற்றுக் கொண்டனர். சில சமயங்களில் அவர்கள் தங்களது ரத்துரிமையைப் பயன்படுத்தி மசோதாக்களைத் தோற்கடித்தனர். கிளாட்ஸ்டனின் ஐரிஷ் சுயாட்சி மசோதாவையும் அவ்வாறே தோற்கடித்தனர். பிரபுக்கள் சபை அப்படியே இருக்க வேண்டு மெனவும், அதில் உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் அரசின் கையிலிருக்க வேண்டுமென்றும் சாலிஸ்பரி பிரபு போன்ரோர் கருதினர்.

பொதுமக்கள் சபையில் இரு கட்சிகள் நன்கு உருவாயின பீல் என்பார் டோரிக் கட்சியிலிருந்து கன்சர்வேடிவ் கட்சியை நன்கு உருவாக்கினர். அக் கட்சியைச் சீர்திருத்த மனப்பான்மையுள்ளதாக மாற்றிய பெருமை டிஸ்ரேலிக்குரியது. கிளாட்ஸ்டன் லிபரல் அல்லது தாராளக் கட்சியை உருவாக்கினர். அமைதி, தனிமனித சுதந்திரம், முன்னேற்றம், நல்ல பொருளாதார நிலைமை போன்ற நிலைகளை வளர்ப்பதை அது தன் குறிக்கோளாகக் கொண்டது. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற கட்சியே ஆட்சிப் பீடத்திலமர்ந்தது.

காபினெட் ஆட்சி

இரு கட்சி முறையினல் நாட்டில் காபினெட் ஆட்சி வலுப் பெற்றது. அதுவும் இராணியார் தமது கணவரை இழந்தபின் துக்க சாகரத்திலாழ்ந்து அரசியலில் ஏறக்குறைய துறவு பூண்டு விட்டதால், காபினெட் நன்கு வளர்ச்சியுற வாய்ப்பு ஏற்பட்டது. காபினெட் எனும் செடி இராணியாரின் கண்ணீரால் வளர்ந்த தென்பர் சிலர். காபினெட் உறுப்பினர்கள் பெரும்பான்மைக் கட்சியிலிருந்தே பொறுக்கப் பட்டதால் அவர்கள் எண்ணியதெல்லாம் சட்டமாயின. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையானவரின் ஆதரவைப் பெற்ற அவர்கள் பிரியம்போல் ஐந்து ஆண்டுகளுக்கு ஆள முடிந்தது. இங்ஙனம் காபினெட் யதேச்சாதிகாரம் **(Cabinet Dictatorship)** நாட்டில் ஏற்படுவதற்கு வழியேற்பட்டது. எனினும், பாராளுமன்றம் தானே விரும்பி ஏற்றுக்கொள்கிற யதேச்சாதிகாரமாகவே அது விளங்கியது. உண்மையான பாராளுமன்ற ஆட்சிமுறை **(Parliamentary Government)** இங்கிலாந்தில் ஏற்பட்டது. அவ்வாட்சி முறையைக் குடியேற்ற நாடுகளான கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா என்ற நாடுகளுக்கும் பிரிட்டன் வழங்கியது மெச்சற்பாலதாம். ஆனல், இந்தியாவுக்கு

அம்மாதிரியான ஆட்சியை வழங்க ஆங்கிலேயர் தயங்கினர். எனினும், சிறிது சிறிதாக ஜனநாயக அம்சங்களை அங்குப் புகுத்தி வந்தனர்.

இங்ஙனம், விக்டோரியா கால இங்கிலாந்து தானும் வாழ்ந்து, தனக்குட்பட்ட மற்றவர்களையும் அதே முறையில் வாழவைக்க முயற்சி செய்து கொண்டு வந்தது. அதனால், அதன் பெருமை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே சென்றது. சமயத்துறையில் பல்வகை சமயப் பிரிவுகள் தோன்றி வேற்றுமையுள் ஒற்றுமையைப் பாராட்டி வளர்த்தன. பொருள் துறையில் தலையிடாக் கொள்கையும், தலையீட்டுக் கொள்கையும் ஒருங்கே வளர்ந்தன. ஆக்கத் தொழில்கள் சிறப்புற்றன ; ஆனால், விவசாயம் குன்றியது. கலைகள் ஓரளவு மங்கின ; ஆனால், விஞ்ஞானம் வீறு பெற்று வளர்ந்தது. அரசியலில் கட்சியாட்சியும், காபினெட் ஆட்சியும் வளர்ந்தன. முடியரசின் மேன்மை பெருகியது. பொதுவில் குறைகளைவிட நிறைகளே அதிகம் காணப்படுவதால் விக்டோரியா மகாராணியார் காலத்தை ஒரு பொற்காலமெனத் தயக்கமின்றிக் கூறலாம்.

10 ஏழாம் எட்வர்ட் (1901-10) மூன்றும் பெரிய சீர்திருத்தக் காலம் (1905-14)

(Edward VII – The Third Great Era of Reform)

பால்ஃபரின் மந்திரிசபை (1902-5) : சமதர்மக்கொள்கை—தொழிற் கட்சியின் தோற்றம்—பால்ஃபரின் கல்விச் சட்டம் (1902)— அனுமதிக்கும் சட்டம், 904 (**Licensing Act**)—இராணுவத் துறைச் சீர்திருத்தம்—சேம்பர்லினும் காப்புவரிச் சீர்திருத்தமும் (**Chamberlain and Tariff Reform**)—பால்ஃபரும் அயர்லாந் தும்—பால்ஃபரின் வெளிநாட்டுக் கொள்கை—பால்ஃபர் மந்திரி சபையின் வீழ்ச்சி (1905).

மூன்றும் பெரிய சீர்திருத்தக் காலம் (1905—1914)

அ) கேம்பல் பானர்மேனின் மந்திரி சபை (1905-8) : தொழில் தகராறுகள் சட்டம், 1906 (**Trade Disputes Act**)—தொழி லாளர்களின் நஷ்ட ஈட்டுச் சட்டம 1906, (**Workmen s Compensation Act**)—ஆஸ்பர்ன் வழக்கு, 1909 (**Osborne Case**) —பொருளாதார, இராணுவச் சீர்திருத்தங்கள்—பெண்களின் உரிமைக் கிளர்ச்சி சஃப்ரஜெட்டுகள் (**Suffragettes**) — நிறை வேருச் சீர்திருத்த முயற்சிகள்.

ஆ) ஆஸ்க்வித் மந்திரி சபை (1908—11) : முதியோருக்கு உதவிப் பணம் (**Old Age Pensions**)—வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரும் நிலையங்கள் (**Labour Exchanges**)—காப்புறுதிச் சட்டம், 1911 (**Insurance Act**)—பாராளுமன்ற உறுப்பினருக்கு ஊதியம்— தொழிற் சங்கச் சட்டம், 1913 (**Trade Union Act**)—குறைந்த பட்ச ஊதியச் சட்டம், 1912 (**Minimum Wage Legislation**) —ஏனைய சீர்திருத்தச் சட்டங்கள்—மக்கள் வரவுசெலவுத் திட் டம், 1909 (**Peoples' Budget**)—பொதுமக்கள் சபைக்கும் பிரபுக்கள் சபைக்கும் சச்சரவு—1911 ஆம் ஆண்டுப் பாராளு மன்றச் சட்டம் (**Parliament Act of 1911**)—ஆஸ்க்வித்தும் அயர்லாந்தும்.

விக்டோரியா மகாராணியாரின் மறைவுக்குப்பின் அவரது மைந்தரான ஏழாம் எட்வர்ட் என்பார் ஆங்கில மகுடத்தை ஏற் ருர் (1901). அவர் தம் தாயைப் போலன்றிக் குடிமக்களிடம்

நெருங்கிப் பழகி அவர்களது அன்பையும் ஆதரவையும் பெரிதும் பெற்றிருந்தார். எனவே, அவரது ஆட்சியை மக்கள் விரும்பி வரவேற்றனர். நோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அவரது முடிசூட்டு விழா (Coronation) 1902ஆம் ஆண்டில் நடைபெற்ற போது, மக்கள் என்றுமில்லாதபடி குதூகலித்து ஆரவாரம் செய்தனர். மக்களின் கண்களுக்குப் படாமல், கூடியவரை மறைந்தே வாழ்ந்து வந்த விக்டோரியாவைப் போலன்றி, அவர் அடிக்கடி மக்களிடையே தோன்றி அவர்களை மகிழ்வித்தார். ஐரோப்பியச் சுற்றுப் பயணங்களில் அடிக்கடி ஈடுபட்டார்.

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்"

என்ற குறள் மொழிக்கிணங்க அவரது ஆட்சி அமைந்திருந்த தெனலாம்.

பால்ஃபரின் மந்திரி சபை (1902-5)

ஏழாம் எட்வர்ட் அரியணை ஏறியபோது சாலிஸ்பரி பிரபு பிரதமராயிருந்தார். அப்போது தென்னாப்பிரிக்கப் போர் மும்முரமாக நடைபெற்று வந்தது. அதை முடிக்கும்வரை பதவியிலிருப்பதென அவர் எண்ணியிருந்தார். 1902ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்போரும் முடிந்தது. ஜூன் மாதத்தில் எட்வர்டின் முடிசூட்டு விழா நடைபெறுவதாக இருந்தது. அதுவரை சாலிஸ்பரி பதவியிலிருக்க நினைத்தார். ஆனால், எட்வர்டின் எதிர்பாராத வியாதியின் காரணமாக விழா ஒத்திப் போடப்பட்டதால், சாலிஸ்பரி தம் பதவியை ஜூலையில் ராஜினாமா செய்து அரசியலிலிருந்து விடுபட்டார். அவரது தென் ஆப்பிரிக்கக் கொள்கையையும், பொதுவாகப் பேரரசுக் கொள்கைகளையும் பலர் குறைகூற ஆரம்பித்ததே அவரது கட்டாய ஓய்வெடுப்புக்குக் காரணமாகும். அவருக்குப்பின் அவரது மைத்துனரான சர் ஜேம்ஸ் பால்ஃபர் (Sir James Balfour) என்பார் பிரதமரானார். அவர் பெருங் கல்விமான்; நல்ல எழுத்தாளர்; தத்துவ அறிஞர். பிரபு வர்க்கத்தின் பிரதிநிதியாக அவர் விளங்கினார். காபினெட்டிலும் அவர் பிரபுக்களையே நியமித்தார். எனவே, ஜனநாயகத் தலைவராக அவரால் விளங்க முடியவில்லை. கிளாட்ஸ்டன், சர்ச்சில், சேம்பர்லின் முதலியவர்களைப் போன்று மக்களைத் தட்டியெழுப்பும் திறமை அவருக்கில்லை. எனினும், அவர் நிருவாகத்தைத் திறமுற நடத்தி, அவரது கட்சிக் கொள்கைகளையும் மீறிச் சில நல்ல சட்டங்களைக் கொணர்ந்தார். ஆஸ்க்வித் (Asquith), ஹால்டேன் (Haldane) போன்ற தாராளக்கொள்கையினரின் நண்பராக அவர் இருந்ததே அதற்கெல்லாம் காரணமாகும். அரசாங்கமானது பல இக்கட்டு

களில் சிக்கித் தவித்த போதெல்லாம் அவரது பாரபட்சமற்ற ஆலோசனைகள் அருமருந்தாய் உதவின.

சமதர்மக் கொள்கை—தொழிற் கட்சியின் தோற்றம்

பாஃல்பர் காலத்து இங்கிலாந்தில் சமதர்மக் கொள்கைகள் வளர ஆரம்பித்தன. சர் ராபர்ட் ஓவன் (1771-1855) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சமதர்ம இயக்கமானது நாளுக்குநாள் வலுப் பெற்றது. தனிப்பட்டோரது உடைமைகளை எல்லாம் ஒழித்து அவற்றையெல்லாம் அரசாங்க உடைமையாக்கிவிடவேண்டுமென் றும், அப்போதே செல்வ நிலையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் நீங்குமென்றும் சமதர்மவாதிகள் போதித்தனர். ஆனால், கார்ல் மார்க்ஸ் என்பார் கூறியபடி, தனி உடைமைகளைப் பலாத்காரமாகக் கைப்பற்றும் கொள்கையை ஆங்கிலச் சமதர்மவாதிகள் ஒப்புக் கொள்ளவில்லை. சட்டரீதியான அரசாங்கத்தின் மூலம் படிப்படி யாகச் சமதர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதே, ஃபேபியன் சோஷலிஸ்டுகள் (Fabian Socialists) என்ற ஆங்கில சமதர்ம வாதிகளின் குறிக்கோளாகும். சிட்னி வெப் (Sydney Webb), பெர்னார்ட் ஷா (Bernard Shah), எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) போன்ற அறிஞர்கள் ஃபேபியன் கழகத்தின் உறுப்பினர்களா யிருந்தனர்.

சமதர்மத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டுமானால் அரசாங் கத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென நினைத்த சமதர்ம வாதிகள், சுதந்திரத் தொழிற்கட்சி (Independent Labour Party) என்னும் புதிய கட்சியைத் தோற்றுவித்தனர் (1893). கேர் ஹார்டி (Keir Hardie) என்பவரே அக்கட்சியின் முதல்வராவர். அவர் 1893இல் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, சாதாரண எளிய உடையில் அவர் பொதுமக்கள் சபையில் தோன்றி, சபை உறுப்பினர் யாவரையும் வியப்புக்குள்ளாக்கினார். 1899இல் நடைபெற்ற தொழிற் சங்க மாநாட்டில் தொழிலாளர் களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டி அரசியல் நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற் றப்பட்டது. 1900ஆம் ஆண்டில் தொழிற் கட்சியானது (Labour Party) தோற்றுவிக்கப்பட்டது. கேர் ஹார்டி அதன் முதல் தலைவ ரானார். பிலிப் ஸ்நோடென் (Philip Snowdern) என்ற பொரு ளியல் நிபுணரும், ஜேம்ஸ் ராம்சே மாக்டனல்ட் (James Ramsay Macdonald) என்ற ஸ்காட்லாந்து இளைஞரும் அதன் உறுப்பினர் களிற் சிறந்தவர்களாவர். தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதற்கென்றே தனிப்பட்ட கட்சியானது தோன்றியது இக் காலத்திற்றானாகும்.

பால்ஃபரின் கல்விச் சட்டம் (Balfour's Education Act, 1902)

கிளாட்ஸ்டன் தமது கல்விச் சட்டத்தால் (1870) ஆரம்பக் கல்வி (Elementary Education) நாடெங்கும் பரவுவதற்கு வழி செய்தாரெனினும் உயர்தரக் கல்வியை அவர் தொடாமலே விட்டு விட்டார். ஜெர்மனியிலும், ஸ்விட்ஜர்லாந்திலும் காணப்பட்ட கல்வி முன்னேற்றத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள், தாங்களும் உயர்தரக் கல்வியைச் சீர்திருத்தி அமைக்க விரும்பினர். சமய நிறுவனங்கள் நடத்திய பள்ளிகளும், செல்வந்தர்கள் நடத்திய பொதுப் பள்ளிகளும் (Public Schools), மானியம் பெற்ற இலக்கணப் பள்ளிகளும் (Grammar Schools) பணம் படைத்தோருக்கே கல்வி அளித்து வந்தன. வசதியற்ற ஏழைகள் உயர்தரக் கல்வி பெறுவதென்பது அக்காலத்தே முயற்கொம்பாய் இருந்தது. 1899இல் சாலிஸ்பரி பிரபு, கல்விக் குழு (Board of Education) ஒன்றை ஏற்படுத்தி, அமைச்சர் ஒருவரின் கட்டுப்பாட்டுக்குள் எல்லாக் கல்வி நிலையங்களையும் கொண்டு வந்தாரெனினும் உயர்தரக் கல்வியில் ஓர் ஒழுங்குமுறை ஏற்படவில்லை. பொருள் முட்டுப்பாட்டால் திருச்சபைகளால் நடத்தப் பட்ட பள்ளிகள் திறமையற்ற முறையில் நடைபெற்று வந்தன. இங்நிலையைச் சீர்திருத்த வேண்டுமென ராபர்ட் மோரான்ட் (Robert Morant) என்ற சிவில் அதிகாரி ஓயாது கூறிவந்தார். அதனுல் உந்தப் பெற்ற பால்ஃபர் 1902இல் உயர்தரக் கல்விச் சட்டத்தைத் துணிவுடன் கொண்டு வந்தார். இச் சட்டமானது, 1810ஆம் ஆண்டுச் சட்டத்தால் ஏற்பட்ட பள்ளிக் குழுக்களை (School Boards) ஒழித்து விட்டு, அதற்குப் பதிலாக உயர்தரக் கல்வியை கவுன்டி கவுன்சில், பரோ கவுன்சில் போன்ற தல ஆட்சிச் சபைகளிடம் ஒப்படைத்தது. அரசாங்க உதவி பெற்ற பள்ளிகளெல்லாம் தல ஆட்சிச் சபைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. எனவே, கத்தோலிக்கர், ஆங்கிலிகர், வெஸ்லியர்கள் போன்ற மதப்பிரிவினர் நடத்திவந்த பள்ளிகளையும் தல அதிகாரிகள் காப்பாற்ற வேண்டியதாயிற்று. இந்த மதப் பிரிவுகளிலெல்லாம் சேராத இணங்காதார்கள் இம்முறையைப் பலமாகக் கண்டித்தனர். தங்கள் தங்கள் மதக்கொள்கைகளைப் போதித்துக் கொண்டு, தமக்குப் பிரியமான ஆசிரியர்களைக்கொண்டே நடத்தப் பெற்றுவந்த மதச்சார்பான பள்ளிகளைப் பராமரிக்க, எம்மதத்திலும் சேராதவர்களான தாங்கள் ஏன் வரி கொடுக்கவேண்டும் என இணங்காதார் முறையிட்டனர். இணங்காதார்களும் சில இடங்களில் அரசாங்கத்தின் உதவி பெற்றுப் பள்ளிகளை நடத்தி வந்தனர். ஆனுல், அரசாங்கத்தின் உதவியோடு திருச்சபையின் மானியங்களையும் பெற்று வந்த சமயப் பள்ளிகளைக் கண்டு அவர்கள் பொருமையுற்றனர். சமயக் கல்வி புகட்டப்பெறும் பள்ளிகளுக்கு அரசாங்கம் உதவியளிக்கக்

கூடாது என அவர்கள் கூக்குரலிட்டனர். அதே சமயத்தில் சமயக் கல்வி புகட்டப் பெருத அரசாங்கப் பள்ளிகளைப் பராமரிக்கத் தாங்கள் ஏன் வரி செலுத்த வேண்டும் என மதப்பிரிவுகள் திருப்பிக் கூறினுல் என்ன செய்வது என அவர்கள் சிறிதும் சிந்திக்கவில்லை. உண்மையில் அரசாங்க உதவியின்றேல் மூடப்படுகின்ற நிலையிலேயே பல சமயப் பள்ளிகள் இருந்தன. ஹால்டேன் என்பாரது முயற்சியால் கல்வி புகட்டும் பல்கலைக் கழகம் ஒன்றை பால்ஃபர் லண்டனில் ஏற்படுத்தினுர். விரைவில் மான்செஸ்டர், லிவர்பூல் போன்ற இடங்களிலும் அத்தகைய கழகங்கள்ஏற்படுத்தப்பட்டன.

அனுமதிக்கும் சட்டம் (Licensing Act) 1904

பீர், பைபிள் இந்த இரண்டை நம்பியே கன்சர்வேடிவ் கட்சி வாழ்கிறது எனத் தீவிரவாதிகள் பலர் குறைகூறி வந்தனர். இதை நீக்க, பால்ஃபர், மதுபானம் அருந்தும் வழக்கத்தைக் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்றை ஏற்படுத்தினுர். ஒழுங்காக நடைபெருத பல மதுபானச் சாலைகளை அச்சட்டம் அனுமதி தராமல் மூடியது. மூடப்பட்ட சாலைகளுக்கு அவைகள் பெற்று வந்த வருமானத்தையொட்டி நஷ்ட ஈடு வழங்கப்பட்டது. அனுமதி வழங்கும் அதிகாரமானது குவார்ட்டர் செஷன்கள் (Quarter Sessions) என்ற தல நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டது. மது உற்பத்தி செய்துவந்த பல செல்வாக்கு மிக்க பணக்காரர்களின் பகைமையைப் பால்ஃபர் மேற்கண்ட சட்டத்தால் அடைந்தார்.

இராணுவத்துறைச் சீர்திருத்தம்

ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படைகள் பல இடங்களில் தோல்வியுற்றதைக் கண்ட பால்ஃபர், அத்தகைய தோல்விகளுக்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகளைச் சிபாரிசு செய்யுமாறு 1903இல் ஓர் ஆய்வுக் குழுவை நியமித்தார். எஷக (Esheca) என்பாரது தலைமையில் கூடிய அக்குழு, சேனையானது உல்ஸிலி (Wolseley) போன்ற ஒரு தனிச் சேனுதிபதியின் கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பது தவறு என்றும், சேனையை நிருவகிக்கும் பொறுப்பு, நிபுணர் குழு ஒன்றினிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் சிபாரிசு செய்தது. அதற்கேற்பச் சேனுதிபதிப் பதவியானது ஒழிக்கப்பட்டு, படைக் கவுன்சில் (Army Council) ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

ஜெர்மானியர்கள் தங்களது கடற்படையைப் பெருக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டதைக் கண்ட கடற்படை அமைச்சர்களான ஸெல்போன் (Selbourne), காடர் (Cawder) என்ற இருவரும் இங்கிலாந்தின் கடற்படையைப் பெருக்குவதற்காக

31 மிலியன் பவுன்களைச் செலவிட முன்வந்தனர். சர் ஜான் ஃபிஷர் (Sir John Fisher) என்ற அறிஞர் கடற்படை வலிமையைப் பெருக்குவதற்கான நல்ல யோசனைகள் பலவற்றைக் கூறிவந்தார். மத்தியதரைக் கடலில் குவிக்கப்பட்டிருந்த கடற்படையானது ஆங்கிலக் கால்வாய்க்கும் அட்லாண்டிக் பெருங்கடலுக்குமாக மாற்றப்பட்டது. மேலும், டார்பிடோ போன்ற கடல் குண்டுகளையும் சமாளிக்கக் கூடிய வன்மை வாய்ந்த போர்க்கப்பல்கள் பல கட்டப்பட்டன. ராஸித் (Rasyth) என்னுமிடம் வடக்கத்திய கடற்படைத் தளமாக மாற்றப்பட்டது. கடற்படை அதிகாரிகளுக்குத் தக்க பயிற்சி யளிக்க டார்ட்ஸ்மவுத் (Dartsmouth) என்னுமிடத்தில் கல்லூரியொன்றும் நிறுவ ப்பட்டது.

சேம்பர்லினும் காப்புவரிச் சீர்திருத்தமும் (Chamberlain and Tariff Reform)

பால்ஃபரின் காபினெட்டில் இருந்த அமைச்சர்களிலேயே திறமையும் செல்வாக்கும் மிகுந்தவர் சேம்பர்லின் என்பவராவர். அவர் ஆதியிலிருந்தே பேரரசு விவகாரங்களில் பெரிதும் ஊக்கம் கொண்டவர். கிளாட்ஸ்டன் அத்தகைய கொள்கையில் ஊக்கமின்றியிருந்ததை அவர் பெரிதும் கண்டித்தவர். பிரிட்டனுக்குப் பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏற்படக் கூடிய அபாயங்களைத் தடுக்க வேண்டுமானால், அது தனது பேரரசு நாடுகளோடு நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பது அவர் கருத்தாகும். தாய்நாட்டையும் குடியேற்ற நாடுகளையும் நெருக்கமாகப் பிணைக்க அவர் ஒரு திட்டம் வகுத்தார். அதன்படி, குடியேற்ற நாடுகளுக்குப் பேரரசுத் தனிச்சலுகைகள் (Imperial preferences) என்ற சுங்கவரிச் சலுகைகள் தரப்படும். ஏற்கனவே கனடாவானது தன் நாட்டில் இறக்குமதியாகும் பிரிட்டிஷ் பொருள்களுக்குச் சலுகைகளை அளித்திருந்தது. அதேபோன்று இங்கிலாந்தில் வந்து இறங்கும் கனடாவின் பண்டங்களுக்கும் வரிச்சலுகை தரப்படவேண்டுமென 1902ஆம் ஆண்டு கூடிய குடியேற்ற நாடுகளின் மாநாடு கூறியது. இவ்விதச் சலுகை அமுலுக்கு வருமானால் வெளிநாடுகளினின்றும் வரும் பொருள்களைவிட பிரிட்டிஷ் பேரரசு நாடுகளிலிருந்து வரும் பொருள்கள் குறைவான சுங்கவரிகளைச் செலுத்தலாம். எனவே, வெளிநாட்டுப் பொருள்கள் மீது புதிய வரிகள் போடவேண்டிவரும். அப்படிச் செய்தால் அது பீல் காலத்திலிருந்து இங்கிலாந்தில் வழக்காற்றிலிருந்த தடையிலா வாணிகக் கொள்கைக்குப் பங்கம் வரும். எனவே, அத்தகைய கொள்கையைப் பல தாராளவாதிகள் எதிர்த்தனர். எனினும், பேரரசு நாடுகளுக்குச் சலுகை காண்பிப்பதற்காக வெளிநாட்டுத் தானியங்கள்மீது சேம்பர்லின் ஒரு சிறு

இறக்குமதி வரியை விதிக்கவேண்டுமெனக் கூறினர். அதை மற்ற அமைச்சர்களும் ஒருவாறு ஒப்புக் கொண்டனர். அதற்கேற்பச் சிறு வரியொன்று 1902இல் விதிக்கப்பட்டது. அதன்பின் சேம்பர்லின் தென் ஆப்பிரிக்காவுக்குப் போனர். அவர் இல்லாத வேளையில் காபினெட்டில் இருந்த பீச் (Beach) என்னும் அமைச்சர் பதவியைவிட்டு நீங்கிவிடவே, அவருக்குப் பதிலாகக் கருவூலத் தலைவராக வந்த ரிட்சி (Ritchie) என்பார் தானியப் பாதுகாப்பு வரியை ரத்து செய்துவிட்டார். தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்த சேம்பர்லின் இதைக் கேட்டதும் பெரிதும் கோபமுற்றுத் தமது பதவியை ராஜிநாமா செய்தார். தாம் பதவியில் நீடிக்க வேண்டுமாளுல் சுங்கவரித் திட்டம் முழுவதும் சீர்திருத்தியமைக்கப்பட வேண்டுமெனவும், அதன் மூலம் அயல்நாட்டுப் பொருள்கள் பிரிட்டிஷ் பொருள்களோடு போட்டியிட முடியாதபடி பிரிட்டிஷ் வாணிகம் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் அவர் வற்புறுத்தினர். அதைக் கேட்ட தாராள இணைப்புக் கட்சியினரில் (Liberal Unionists) பலர் அவரை குறைகூறினர். தாராளக் கொள்கையினரோவெனின், தென் ஆப்பிரிக்கப் போரின்போது தமக்குள் ஏற்பட்டிருந்த வேற்றுமைகளை யெல்லாம் மறந்து, தடையற்ற வாணிகக் கொள்கையை வற்புறுத்தி, காப்புவரிச் சீர்திருத்தத்தை எதிர்த்தனர். இதைக் கண்ட பால்ஃபர், சேம்பர்லினின் ராஜிநாமாவை ஒப்புக்கொண்டதோடன்றி, ஜார்ஜ் ஹேமில்டன், டெவன்ஷியர் (George Hamilton, Devenshire) ஆகிய வேறு இரு அமைச்சர்களின் ராஜிநாமாவையும் ஒப்புக்கொண்டார். உணவு தானியங்களைப் பொறுத்தவரையில் காப்புவரி கூடாதென்பதும், மற்றப் பொருள்களின்மீது வரி போடுவதைப் பற்றி பரிசீலிக்கத் தாம் தயார் என்றும் பால்ஃபர் கூறினர். இறக்குமதியாகும் எல்லாப் பொருள்களின் மீதும் வரிபோடவேண்டுமெனக் கூறிக் கொண்டு காப்புவரிச் சீர்திருத்தக் கழகம் (Tariff Reform League) ஒன்றைச் சேம்பர்லின் பர்மிங்ஹாம் நகரில் தோற்றுவித்தார். நாளுக்கு நாள் அவருக்கு ஆதரவு பெருகியது. பால்ஃபர் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மெல்லத் தம் பதவியில் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

பால்ஃபரும் அயர்லாந்தும்

அயர்லாந்தில் சாலிஸ்பரி காலத்தில் நடைபெற்ற அடக்குமுறை ஆட்சிக்குப்பின் ஜில்லாக் கழகங்கள் மூலமும் (District Boards), விவசாய அமைப்புக் கழகங்கள் மூலமும் (Agricultural Organisation Society) பல நன்மைகள் விளைந்தன. 1898ஆம் ஆண்டுச் சட்டமொன்று, அயர்லாந்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட தல ஆட்சிச் சபைகளை ஏற்படுத்தியது. 1885ஆம் ஆண்டில் ஏற்பட்ட

ஆஷ்பர்ன் சட்டமானது (Ashburne Act) நிலச் சொந்தக்காரரிடமிருந்து குடியானவர்கள் நிலங்களை வாங்கிக் கொள்ள உதவி புரிந்தது. பால்ஃபரின் சகாவான விண்ட்ஹாம் (Wyndham) என்னும் ஐரிஷ் கவர்னர் 1903ஆம் ஆண்டில் நிலம் வாங்கும் சட்டம் (Land Purchase Act) ஒன்றைக் கொணர்ந்தார். நிலம் வாங்கும் குடியானவர்களுக்குக் கடன் வழங்க 100 மிலியன் பவுன்களை ஆங்கில அரசாங்கம் அயர்லாந்துக்குக் கடனாக வழங்கியது. வாங்கிய கடனைக் குடியானவர்கள் 68 ஆண்டுகளில் சிறிது சிறிதாகத் திருப்பித்தர அனுமதிக்கப்பட்டனர். இந்நல்ல சீர்திருத்தத்தைக் கொணர்ந்த விண்ட்ஹாம், அயர்லாந்தின் சுய ஆட்சியை ஆதரித்த மாக்டனல் (Macdonnel) என்பவரைத் தனக்குத் துணைவராக நியமித்தார். அவர் அரசாங்கக் குழுக்களை ஒழித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிறைந்த சபைகளைக் கொண்டு நாட்டை ஆளவேண்டுமென நினைத்தார். அதையறிந்த அவரது விரோதிகள் விண்ட்ஹாமை ராஜிநாமாச் செய்யும்படி கூக்குரலிட்டனர். அவர்களது பலவந்தத்தால் விண்ட்ஹாம் பதவி துறந்தார். அதன் பின் அயர்லாந்து விவகாரங்களில் பால்ஃபர் கையொடிந்தவர்போல் ஆனார்.

பால்ஃபரின் வெளிநாட்டுக் கொள்கை

பால்ஃபரின் காலம்வரை இங்கிலாந்தானது 'கண்ணியமிக்க தனிமை' (Splendid Isolation) என்ற கொள்கையையே பெரிதும் கடைப்பிடித்து வந்தது. ஆனால், அது அபாயமிக்க ஒரு கொள்கை என்பதைப் பிரிட்டன் விரைவிலேயே உணர்ந்தது. தென் ஆப்பிரிக்கப் போரின்போது ஆங்கிலேயருக்கு விரோதமாக போயர் தலைவர் பால் குரூகரைப் பாராட்டி, ஜெர்மன் கெய்சர் தந்தி அடித்ததை அறிந்த பிரிட்டிஷ் அரசாங்கம், கெய்சரின் உட்கிடக்கையை உணர்ந்தது. உடனே அது ஜெர்மனியின் செயலைக் கண்டித்தது. கெய்சர், அவ்விதத் தந்தி தனக்குத் தெரியாமலேயே அடிக்கப்பட்டுவிட்டதெனக் கூறிச் சமாளித்துக் கொண்டார். எனினும், கெய்சரின் அந்தரங்க சுத்தியைப் பிரிட்டிஷார் ஐயுற ஆரம்பித்தனர்.

ஜெர்மனியில் அப்போது சான்சலராக இருந்தவர் பிஸ்மார்க் (Bismark) என்பவர். இரும்பு மனிதர் (Iron man) எனப் பெயர் பெற்ற அந்த அரசியல் விற்பன்னரே ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சமைத்தவர். அதற்காக அவர் ஆஸ்திரியா, ஃபிரான்சு ஆகிய நாடுகளோடு இரண்டு போர்களைத் தொடுத்தார். ஆனால், ஜெர்மனி ஐக்கியமடைந்தவுடனேயே அவர் தமது கொள்கையை மாற்றிக்கொண்டார். மீண்டும் ஒரு போர் ஏற்பட்டுவிடக்கூடாது

என்று அவர் விரும்பினர். பழிவாங்கும் எண்ணத்தால் ஃபிரான்சு நாடு ஜெர்மனியின் மீது போர் தொடுக்க முயற்சி புரியக்கூடுமென எண்ணிய பிஸ்மார்க், ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் கூட்டு சேர்த்துக்கொண்டு ஃபிரான்சைத் தனிமைப்படுத்த **(Isolate)** எண்ணினர். அவ்வெண்ணப்படி அவர் ஆஸ்திரியாவோடு 1879ஆம் ஆண்டு இருவர் கூட்டுறவு **(Double Alliance)** ஒன்றை ஏற்படுத்தினர். 1882இல் இத்தாலியும் அதில் சேரவே அது 'மூவர் கூட்டுறவாக' **(Triple Alliance)** மாறியது. அதோடு அவர் திருப்தி அடையவில்லை. 1887இல் அவர் ரஷ்யாவோடும் ஓர் இரகசிய நட்புடன்படிக்கையைச் செய்துகொண்டார். இவ்வேற்பாடுகளால் ஃபிரான்சைத் தனிமைப்படுத்தி விட்டதாக அவர் எண்ணிப் பெருமிதமடைந்தார். ஆனல், இவ்வளவும் செய்த பிஸ்மார்க்கை ஜெர்மன் கெய்சர் பதவியினின்றும் நீக்கிவிட்டார். பின்னர், அவர் தம்மைத் தட்டிக் கேட்க ஆளின்றித் தான்தோன்றித்தனமாய் நடந்துகொண்டார். ஜெர்மனிக்கும் ஒரு குடியேற்ற நாட்டுப் பேரரசு தேவை எனவும், அதை அடைவது தமது கடமை எனவும் அவர் அறிவித்தார். துருக்கியை அவர் நட்பாக்கிக் கொண்டு, ஆஸ்திரியாவையும், துருக்கியையும் இணைக்கும் ரயில்பாதையை அமைத்தார். 1889இல் அவர் கான்ஸ்டான்டிநோபிலில் ஒரு கூட்டத்தில் பேசும்போது முகமதியர்களையெல்லாம் தாம் பாது காக்கப்போவதாக அறிவித்தார். ஜெர்மானியர்கள் உலகத்தை ஆளப் பிறந்தவர்கள் என அவரும், அவரது சகாக்களும் கூறினர். போர் புரியவேண்டியது மனிதனது ஆளுமை முழுவதும் மலர்வதற்கு இன்றியமையாததெனச் சில ஜெர்மன் தத்துவ அறிஞர்கள் கூறலாயினர். கெய்சர் ஆவேசமான போர்ப் பேச்சுகளைப் பேசியதோடு, தனது கடற்படையைப் பன்மடங்கு பெருக்க ஆரம்பித்தார்.

இதையெல்லாம் கண்ட ரஷ்யா, ஃபிரான்சு, பிரிட்டன் போன்ற நாடுகள் பீதியடைந்தன. 1893ஆம் ஆண்டில் ஃபிரான்சு, ரஷ்யாவோடு ஒரு நட்புடன்பாட்டைச் செய்துகொண்டது. பிரிட்டனும் தற்காப்புக்காகத் தன் கடல் வலிமையைப் பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தது. 1889இல் ஏற்பட்ட கடற்படை தற்காப்புச் சட்டப்படி **(Naval Defence Act),** பிரிட்டிஷ் கடற்படையானது எந்த இரண்டு ஐரோப்பிய நாடுகளின் கடற்படையையும் விட அதிகமாயிருக்க வேண்டும் என்ற கொள்கை அமுலாக்கப்பட்டது. இதை எதிர்த்த ஜெர்மனி, கீல் கால்வாயில் ஒரு பெருங் கப்பற்படையைத் திரட்ட ஆரம்பித்தது. 1898ஆம் ஆண்டுக்கடற்படைச்சட்டப்படி ஜெர்மனி இங்கிலாந்தின் கடற்படையைக் காட்டிலும் உயர்ந்த படையைத் தயாரிப்பதைக் குறிக்கோளாகக் கொள்ள ஆரம்பித்தது. பிரிட்ட

னும் தன் நிலையைப் பலப்படுத்திக்கொள்ளக் கூட்டு சேர்க்க ஆரம்பித்தது. 1902இல் அது ஜப்பானுடன் ஒரு நட்புடன் பாட்டைச் செய்துகொண்டது. 1904இல் ரஷ்யாவும் ஜப்பானும் ஒரு போரில் ஈடுபட்டன. அதில் ஜப்பான் வெற்றிபெற்றது. அப்போது ரஷ்யாவுக்குப் ஃபிரான்சு உதவி செய்திருந்தால் பிரிட்டன் ஜப்பானுக்கும் உதவவேண்டி நேர்ந்திருக்கும். ஆனால், அத்தகைய இக்கட்டான நிலைமை ஏற்படவில்லை. அடுத்து பிரிட்டன் ஜெர்மனியுடனேயே ஒரு நட்புடன்படிக்கையைச் செய்து கொள்ள முயன்றது. எப்படியோ, பிரிட்டனுக்கும் ஃபிரான்சுக்கும் பகைமை உள்ளூர இருந்துகொண்டே வந்தது. எனவே, ஃபிரான்சைவிட ஜெர்மனியையே பிரிட்டன் நட்பு நாடாகக் கருதி வந்தது. இந்த எண்ணத்தைக் கெய்சர் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டார். சேம்பர்லின் என்பவர் கெய்சரோடு நடத்திய பேச்சுவார்த்தைகள் (1898-1902) பயன் தராதொழிந்தன. பிரிட்டனைக் கெய்சர் ஒரு இராணுவ பலமற்ற நாடாக நினைத்து அலட்சியம் செய்தார். அதைப் புரிந்துகொண்ட ஆங்கிலேயர், ஃபிரெஞ்சுக்காரர் பக்கம் திரும்பினர். ஏழாம் எட்வர்ட் மன்னர் ஃபிரெஞ்சுப் பழக்க வழக்கங்களைப் பெரிதும் விரும்பியவர். அவர் ஒரு முறை ஃபிரான்சில் சுற்றுப்பயணம் செய்து ஃபிரெஞ்சுக்காரர்களின் நன் மதிப்பைப் பெற்றார். ஆங்கில ஃபிரெஞ்சு நட்பு ஏற்படத்தக்க சூழ்நிலை அச் சமயம் நன்கு உருவாயிருந்தது. பால்ஃபரின் வெளி நாட்டமைச்சராயிருந்த லான்ஸ்டௌன் (Landsdowne) பிரபுவின் அரிய முயற்சியால் 1904ஆம் ஆண்டில், ஆங்கில ஃபிரெஞ்சு நேச ஒப்பந்தம் (Anglo-French Entente) ஏற்பட்டது. அது ஓர் இராணுவக் கூட்டுறவு இல்லை எனினும் பிற்காலத்தே அத்தகைய கூட்டு ஏற்பட அது வழி செய்தது. அவ் வொப்பந்தப்படி ஆங்கிலேயர் எகிப்தில் பிரியம்போல் நடந்துகொள்ளப் ஃபிரான்சு அனுமதித்தது. அதேபோல மொராக்கோவில் ஃபிரெஞ்சுக்காரர் பிரியம் போல் ஆதிக்கம் ஏற்படுத்திக் கொள்ளப் பிரிட்டன் சம்மதித்தது. சென்ட் லாரென்ஸ் குடாவில் (Gulf of St. Lawrence) மீன் பிடிக்கும் உரிமையையும் ஃபிரெஞ்சுக்காரர் பெற்றனர். குடியேற்ற நாடுகளில் ஆங்கிலேயருக்கும் ஃபிரெஞ்சுக்காரருக்கும் இருந்த சில்லறை எல்லைத் தகராறுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டன.

பால்ஃபர் மந்திரி சபையின் வீழ்ச்சி (1905)

பால்ஃபர் மந்திரிசபைக்கு நாளுக்கு நாள் எதிர்ப்பு வலுத்துக் கொண்டு வந்தது. சேம்பர்லினின் காப்புவரிச் சீர்திருத்தக்காரர்கள் அவரைப் பெரிதும் சாடினர். கன்சர்வேடிவ் கட்சியினரிலேயே சிலர் காப்பு வரியை ஆதரித்தனர். இங்கிலையில் தொழிலாளர்களின் வெறுப்பைத் தூண்டும் இன்னொரு காரியத்தையும் பால்ஃபரின்

அமைச்சரவை செய்தது. டிரான்ஸ்வால் தங்கச் சுரங்கங்களில் வேலை செய்வதற்கு ஆளில்லாமையால், சீனர்களைச் கொணர்ந்து வேலை வாங்கும் திட்டமொன்றை டிரான்ஸ்வால் சர்க்கார் அமுலாக்கியது. அத் திட்டத்தை பால்ஃபர் சர்க்கார் அனுமதித்தனர். அதன்படி மூன்று ஆண்டுகளுக்கு வேலை செய்வதாக ஒப்புக்கொண்ட 50,000 சீனர்கள் கொண்டுவரப்பட்டு, டிரான்ஸ்வாலில் குடியேற்றப்பட்டனர். பழைய அடிமை முறைக்கும் இதற்கும் வேறுபாடில்லை எனத் தாராளக் கட்சினர் கூறலாயினர். 'சீன அடிமை வியாபாரம்' (**Chinese Slavery**) எனச் சர்க்காரின் கொள்கையை அவர்கள் அழைக்கலாயினர். தொழிலாளர்களும் சர்க்காரின் செய்கையைக் கண்டித்தனர். இதையெல்லாம் கண்ட பால்ஃபர், 1905ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தார். 1906ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சினர் படுதோல்வியடைந்தனர். தாராளக் கட்சியினர் அமோகமான வெற்றி பெற்றனர். அவர்களின் தலைவர் கேம்பல் பானர்மென் (**Campbell Bannerman**) பிரதமரானார்.

மூன்றும் பெரிய சீர்திருத்தக் காலம் (1905-1914)
(The Third Great Era of Reform)

பிரிட்டிஷ் அரசியற் பெருங்கடலுள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்று முறை பெருஞ் சீர்திருத்த அலைகள் தோன்றி நாட்டின் பல்வேறு துறைகளில் பல மாற்றங்களைச் செய்துவிட்டுச் சென்றதை நாம் பார்க்கிறோம். 1832-1868ஆம் ஆண்டுகளில் தொடங்கிய முதல் இரண்டு சீர்திருத்தக் காலங்களில், முதலில் பாராளுமன்றச் சீர்திருத்தங்களும், அவற்றையொட்டிப் பல பொருளாதாரச் சீர்திருத்தங்களும் ஏற்பட்டன. 1905இல் தோன்றி, முதல் உலகப் போர் வரை நீடித்த மூன்றும் சீர்திருத்தக் காலத்தில் வாக்குரிமையைப் பெருக்கும் சீர்திருத்தங்களேற்பட வில்லையெனினும், மக்களின் பொது நலத்தை வளர்க்கும் பல அரிய சீர்திருத்தங்கள் நாட்டில் ஏற்பட்டன. அவைகளை அமுலுக்குக் கொண்டு வந்த பெருமை கேம்பல் பானர்மேன், ஆஸ்க்வித் என்ற இரு பிரதமர்களின் தலைமையில் நாட்டை ஆண்ட தாராளக் கட்சியினருக்கே உரியதாகும்.

கேம்பல் பானர்மேனின் மந்திரி சபை (1905-1908)
(Campbell Bannerman Ministry)

1906ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தாராளக் கட்சியினர் எதிர்பாராத பெரு வெற்றியைப் பெற்றனர். பொது

மக்கள் சபையில் தாராளக் கட்சினர் மற்றக் கட்சியினரின் மொத்த எண்ணிக்கையைவிட 84 பேர் அதிகமாயிருந்தனர். எனவே, கேம்பல் பானர்மேன் என்பவரது தலைமையில் தாராளக் கட்சியினரின் வலிமைமிக்க காபினெட் ஒன்று அமைந்தது. அதில் திறமையிற் சிறந்த பல அறிஞர்கள் இடம் பெற்றனர். அறிவு மிக்க ஆஸ்க்வித் என்பார் கருவூலத் தலைவராயும், தாராள ஏகாதிபத்தியக் கொள்கையினரான சர் எட்வர்ட் கிரே (Sir Edward Grey) வெளிநாட்டமைச்சராகவும், அதே கொள்கையுடைய ஹால்டேன் (Haldane) போரமைச்சராகவும், தன் சொந்த உழைப்பால் லாயிட் ஜார்ஜ் (Lloyd George) வாணிகக் குழுவின் தலைவராகவும் (President of the Board of Trade), பர்ன்ஸ் (Burns) என்ற தொழிற்கட்சித் தலைவர் தல ஆட்சிக்குழுத் தலைவராகவும் (President of the Local Government Board), மார்லி (Morley) என்பார் இந்திய அமைச்சராகவும் அதில் இடம் பெற்றிருந்தனர். ஆனால், பானர்மேன் எப்போதும் நோய்வாய்ப்பட்டிருந்ததால் திறமையிற் குறைந்தவராய்க் காணப்பட்டார். பால்ஃபரிடம் காணப்பட்ட வாதத் திறமையோ, சாலிஸ்பரியின் சாமர்த்தியமோ அவரிடம் சிறிதும் காணப்படவில்லை. பதவியைவிடக் கொள்கைகளே முக்கியமானவை என்று கருதியவர் அவர். அவருக்குத் தாராளக் கட்சியின் ஆதரவு மட்டுமன்றித் தொழிற் கட்சி, ஐரிஷ் கட்சி என்ற இரு கட்சியினரின் ஒத்துழைப்பும் இருந்தது. அதை வைத்துக்கொண்டு அவர் சீர்திருத்தப் பாதையில் நம்பிக்கையோடு இறங்கலானார்.

தொழில் தகராறுகள் சட்டம் (Trade Disputes Act), *1906*

1906ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியினர் முப்பது உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். அவர்களது பெரு வெற்றியை மதித்தே பானர்மேன், பர்ன்ஸ் என்ற அவர்களின் தலைவர்களிலொருவரைத் தமது காபினெட்டில் சேர்த்துக்கொண்டார். அதன் பின்னர், தொழிற் சங்கங்களின் அவல நிலையைப் போக்குவதில் தம் கருத்தைச் செலுத்தினார். 1871, 1875ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சட்டங்கள் ஓரளவு தொழிற் சங்கங்களின் உரிமைகளை வளர்த்தனவென்றாலும், அவைகளை நீதிபதிகள் திரித்துப் பொருள் செய்ததன் விளைவாகத் தொழிற் சங்கங்கள் பல அல்லல்களுக்குள்ளாயின. சான்றாக, மேற்கண்ட சட்டங்கள், தொழில்களில் வேலை நிறுத்தம் ஏற்படுவதால் விளையும் நஷ்டங்களுக்குத் தொழிற் சங்கங்கள் பொறுப்பாளிகளல்ல என்று கூறியதுபோல் காணப்பட்டன. எனினும், டாஃப் வேல் ரயில்வே வேலை நிறுத்த வழக்கில் (Taff Vale Railway Case, 1931) நீதிபதிகள், தொழிற் சங்கங்களே நஷ்ட ஈடு கட்ட

வேண்டுமெனத் தீர்ப்பளித்தனர். அந்த வேலை நிறுத்தத்தை ரயில்வே தொழிற் சங்கம் ஆரம்பிக்கவுமில்லை, ஆதரிக்கவுமில்லை. வேலை நிறுத்தத்தின்போது ஏற்பட்ட பலாத்காரத்தையும் அது கண்டித்தது. எனினும், பிரபுக்கள் சபையின் நீதிபதிகள் தொழிற் சங்கத்தாரே, வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட எல்லாச் சேதங் களுக்கும் ஈடுகட்டவேண்டும் எனத் தீர்ப்பளித்தனர். இவ்வித அநீதியைத் தடுக்கவே தொழில் தகராறுகள் சட்டத்தை பானர் மேன் கொண்டுவந்தார் (1906). அச் சட்டமானது, எவ்வித நீதி மன்றமும் தொழிற் சங்கங்களைச் சதிக் குற்றங்களுக்கும், அவற் றிற்குரிய தண்டனைகளுக்கும் உட்படுத்தலாகாதென்றும், தொழில் நிலையங்களில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களால் ஏற் படும் சேதங்களுக்குத் தொழிற்சங்க நிதியிலிருந்து நஷ்ட ஈடு கேட்கலாகாதென்றும் திட்டவட்டமாகக் கூறியது.

தொழிலாளர்களின் நஷ்ட ஈட்டுச் சட்டம், 1906

மேற்சொன்ன சட்டம் ஏற்பட்ட அதே ஆண்டில் தொழிலாளர் களின் நஷ்ட ஈட்டுச் சட்டம் (**Workmen's Compensation Act**) ஒன்றும், பானர்மேன் மந்திரி சபையால் ஏற்படுத்தப்பட்டது. தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது தற்செயலாகத் தொழிலாளர் களுக்கு நேரும் விபத்துக்களால் அவர்கள் அடையும் நஷ்டத்துக்கு முதலாளிகள் ஈடு செய்யவேண்டுமென அச் சட்டம் வற்புறுத் தியது.

ஆஸ்பர்ன் வழக்கு, 1909

1909ஆம் ஆண்டில் ரயில்வே ஊழியர்களின் ஐக்கியத் தொழிற் சங்கத்துக்கும் (**Railwaymen's Union**) அதன் கிளை நிறுவன மொன்றுக்கும் ஒரு வழக்கு ஏற்பட்டது. அதற்கு ஆஸ்பர்ன் வழக்கு (**Osborne Case**) எனப் பெயர். அதில் தொழிற் கட்சியைப் பராமரிப்பதற்காகவும், தேர்தல்களில் செலவிடுவதற்காகவும் தொழிலாளர்களிடமிருந்து கட்டாய அரசியல் கட்டணங்களை (**Political levy**) ரயில்வே தொழிற் சங்கம் வசூலிப்பது சட்டப்படி தவறு எனக் கிளைச் சங்கம் தாய்ச் சங்கத்தின்மீது வழக்குத் தொடர்ந்திருந்தது. இறுதியாக அவ் வழக்கு, பிரபுக்கள் சபையின் முன் தாக்கல் செய்யப்பட்டபோது, அச் சபையானது கிளைச் சங்கத்தின் வாதமே சரியெனத் தீர்ப்புக் கூறியது. அதனால் தொழிற் கட்சியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக் கெல்லாம் அதுகாறும் கொடுக்கப்பட்டு வந்த சம்பளத்தை அக் கட்சி நிறுத்திவிட வேண்டியதாயிற்று.

பொருளாதார, இராணுவச் சீர்திருத்தங்கள்

பானர்மேனின் மந்திரி சபையானது வேறு சில தாராளச் சட்டங்களையும் ஏற்படுத்தியது. அவரது முயற்சியால்தான் தென் ஆப்பிரிக்கப் போயர் நாடுகளுக்குச் சுயேச்சை வழங்கப்பட்டது. லாயிட் ஜார்ஜின் முயற்சியால் லண்டன் துறைமுக அதிகார நிலையம் (**London Port of Authority**) நிறுவப்பட்டது. ஹால்டேன் என்னும் போரமைச்சர் இராணுவத் துறையில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர். அவரது முயற்சியால் சேனைக்கென்று ஒரு நிரந்தரமான பொதுச் சிப்பந்திகளின் நிறுவனம் (**General Staff**) ஏற்பட்டது. அதோடு ஆறு காலாட்படைப் பிரிவுகளையும் ஒரு குதிரைப் படைப் பிரிவினையும் கொண்ட ஒரு படையெடுப்புச் சேனையானது (**Expeditionary Force**) அமைக்கப்பட்டது. ஆங்காங்கே இருந்த தொண்டர் படையினையும், சிறு நிலக்கிழார்களையும் ஒன்று சேர்த்து அவர் பிராந்தியப் படையை (**Teritorial Force**) உண்டாக்கினர். முதல் உலகப் போர் ஏற்பட்டபோது அத்தகைய பிராந்தியப் படைகள் வெகு விரைவிலேயே உண்மையான படைகளாக மாற்றப்பட்டுப் பெரும் பணி செய்தன. இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிப் படைகளைப் (**Officer Training Corps**) பல்கலைக் கழகங்களிலும், உயர்தரப் பள்ளிகளிலும் அவர் தோற்றுவித்தார். தமக்கு ஆலோசனை கூற இராணுவ நிபுணர்கள் அடங்கிய படைக் கவுன்சில் (**Army Council**) ஒன்றை அவர் அமைத்துக்கொண்டார். பேரரசு தற்காப்புக் குழுவொன்றை (**The Committee of Imperial Defence**) அவர் அமைத்து அதைப் பல சிறு குழுக்களாகப் பிரித்து, திடீரென்று ஏற்படக்கூடிய அபாயங்களைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளை ஆராயுமாறு அவற்றைப் பணித்தார். அப்படிப்பட்ட ஒரு குழுவின் தலைவர் 'போர் நூல்' (**War Book**) என்ற ஒரு நூலை எழுதி அவசர காலங்களில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதை அதில் விளக்கிக் காண்பித்தார். இத்தகைய முன்னேற்பாடுகளால்தான் **1914**ஆம் ஆண்டில் போர் மூண்டபோது ஒரு சில நாள்களுக்குள் பிரிட்டன் 20 இராணுவப் பகுதிகளைத் திரட்டி வெளி நாடுகளுக்கு அனுப்பத் தயாராய் வைத்திருக்க முடிந்தது.

பெண்களின் உரிமைக் கிளர்ச்சி சஃப்ரஜெட்டுகள் (Suffragettes)

இச்சமயத்திற்றான் பெண்கள் தங்களது அரசியல் உரிமைகளுக்காகத் தீவிரமாக கிளர்ச்சி செய்யலாயினர். விக்டோரியா மகாராணியாரின் காலத்திலிருந்தே அவர்கள் வாக்குரிமைக் கழகங்களை ஏற்படுத்திக்கொண்டு அரசியல் உரிமைகளைக் கோரி வந்தனர். ஜான் ஸ்டுவர்ட் மில் என்பார் அவர்களது உரிமைகளுக்காக மிகவும் பரிந்து எழுதினர். அவர்களுக்கு வாக்குரிமை அளிக்

கும்படி கோரிய தீர்மானங்கள் சில 1884இல் பாராளுமன்றத்தில் கொணரப்பட்டன. ஆனால், நிறைவேறவில்லை. மணமான பெண்களின் சொத்துரிமைச் சட்டமானது (1887) மகளிரின் சட்டரீதியான சுதந்திரத்தை நிலைநாட்டியது. நாளடைவில் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களும் மற்றக் கல்லூரிகளும் பெண்களுக்குப் பட்டங்கள் வழங்க முன் வந்தன. தல ஆட்சி சபைகளில் இடம் பெறும் உரிமைகளையும் அவர்கள் 1894, 1907ஆம் ஆண்டுகளில் பெற்றனர். கல்வி நிறுவனங்களிலும், தல ஆட்சி நிலையங்களிலும் அவர்கள் பல உத்தியோகங்களையும் பெற்றனர். எனவே 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும் விரும்பியதில் விந்தையொன்றுமில்லை. 1903ஆம் ஆண்டில் பாங்கர்ஸ்டு (Mrs. Pankhurst) என்ற பெண்மணியும் அவரது மகள் கிறிஸ்டாபெல் (Christable) என்பவரும் சேர்ந்து, பெண்களின் அரசியல் சமுதாய ஐக்கியச் சங்கம் (Women's Political and Social Union) என்ற கழகத்தைத் தோற்றுவித்தனர். அச் சங்கத்தினர் சஃப்ர ஜெட் (Suffra gettes) என்று தங்களை அழைத்துக் கொண்டு வன்முறைகளால் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முயன்றனர். முதலில் அவர்கள் காபினெட் மந்திரிகளின் கவனங்களை ஈர்ப்பதற்காக அவர்கள் பேசும் கூட்டங்களுக்கெல்லாம் சென்று ஆரவாரம் செய்து அவர்களைப் பேசவிடாமல் தடுத்தனர். அதன் பின் அவர்கள் தபால் கட்டுகளைக் கொளுத்தி நாசம் செய்தல், பொதுக் கட்டடங்களை ஊனம் செய்தல், மந்திரிகளைத் தாக்குதல், அவர்களது குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு போய்விடுதல், அவர்களது வீட்டின் ஜன்னல்களை உடைத்தல் போன்ற பல அடாத செயல்களில் ஈடுபடலாயினர். பொதுமக்கள் சபைக்கே அவர்கள் சென்று கூச்சலிட்டும், கற்களை எறிந்தும் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தினர். இதனால் அமைச்சர்கள் மனம் கல்லாயிற்று. பானர் மேனும், அவருக்குப் பின்வந்த ஆஸ்க்வித்தும் வேண்டுமென்றே பிடிவாதமாகப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க மறுத்துவிட்டனர். சஃப்ர ஜெட்டுகள் பலர் சிறைகளில் தள்ளப்பட்டனர். ஆனால், சிறைச்சாலைகளிலும் அவர்கள் பட்டினி கிடந்து சத்தியாக்கிரகம் செய்ததால் அரசாங்கம் அவர்களை விடுதலை செய்யவேண்டி நேர்ந்தது. இங்ஙனம் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே என்று பெண்கள் செய்துவந்த கிளர்ச்சிகள் அப்போதைக்குப் பயன் தராவிடினும் பிற்காலத்தே நல்ல பயன்களை விளைவித்தன.

நிறைவேறாச் சீர்திருத்த முயற்சிகள்

பானர்மேன் மந்திரி சபையினர் பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொணர்ந்து பிரபுக்கள் சபையின் எதிர்ப்பின் காரணமாக

அவற்றையெல்லாம் கைவிட நேர்ந்தது. 1906ஆம் ஆண்டில் பிர்ரல் (Birrell) என்பார் ஒரு கல்விச் சட்டத்தை ஏற்படுத்த முயன்ருர். அதன்மூலம் மத நிறுவனங்களால் நடத்தப்பெற்ற பள்ளிகளையும் அவர் தல அரசாங்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொணர நினைத்தார். ஆனுல், பிரபுக்கள் சபை அதை நிராகரித்தது. 1908இல் மெக்கன்ன (Mckanna) என்பவரால் கொண்டுவரப்பட்ட பன்மை வாக்களிப்பு ஒழிப்பு மசோதாவும் (Bill to Abolish Plural Voting) அதே கதியையடைந்தது. 1907இல் ஸ்காட்லாந்து நிலச் சட்ட மசோதாக்களையும், 1908இல் அனுமதிக்கும் மசோதா (Licensing Bill) ஒன்றையும் பிரபுக்கள் சபை நிராகரித்தது. இவ்விதச் செயல்களால் தாராளக் கட்சியினருக்கும் பிரபுக்கள் சபைக்கும் பகைமை முற்றலாயிற்று. டோரிக் கட்சி பதவியிலிருக்கும்போது, எந்தச் சட்டத்தையும் நிராகரிக்காத பிரபுக்கள் சபை, தாராளக் கட்சி நாட்டையாளும்போதுமட்டும், வேண்டுமென்றே அதன் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் வழக்கத்தை ஒழிக்கத் தாராளக் கட்சியினர் விரும்பினர். சட்டங்களை நிறுத்திவைக்கும் அதிகாரம் மட்டுமே (Suspensory Veto) பிரபுக்கள் சபைக்கு இருக்க வேண்டுமெனக் கூறிய ஒரு தீர்மானத்தைக் கேம்பல் பானர்மேன் 1907ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் கொணர்ந்தார். ஆனுல், அது நிறைவேறவில்லை. அத்தகைய தீர்மானம் நிறைவேறுங் காலம் விரைவிலேயே வரவிருந்தது. ஆஸ்க்வித் என்பார் பிரதமராயிருந்தபோது பிரபுக்கள் சபையினரின் அதிகாரம் பெரிதும் ஒடுக்கப்பட்டது.

ஆஸ்க்வித் மந்திரிசபை (1908-11)

1908ஆம் ஆண்டில் பானர்மேன் திடீரென மாண்டுவிடவே, ஆஸ்க்வித் என்னும் கருவூலத் தலைவர் பிரதமர் பதவியை ஏற்ருர். இணங்காதார் வகுப்பைச் சேர்ந்த அவர், ஒரு கனவானுக்குரிய நற்பண்புகளையெல்லாம் ஒருங்கே பெற்றிருந்தார். எதையும் எளிதில் புரிந்துகொள்ளும் நுண்ணறிவும், தெளிவாகவும், இனிமையாகவும் பேசுகின்ற ஆற்றலும் பெற்ற ஒரு நல்ல வழக்கறிஞராக அவர் பல ஆண்டுகள் பணி புரிந்தார். ஆனுல், பிரதமரான பின்பு அவர் அவ்வளவு திறமை உடையவராகக் காணப்படவில்லை. வயதின் காரணமாகவோ என்னவோ அவர் பல காரியங்களைத் தாமதமாகவே செய்தார். எனினும் தமது கம்பீரமான தோற்றத்திலும், விவாதத் திறமையாலும், தைரியத்தாலும், உறுதியாலும் அவர் பாராளுமன்றத்தின் பாராட்டுதலைப் பெற்றுத் தாராளக் கட்சியினருக்கு நல்ல பெயரையும் புகழையும் வாங்கித் தந்தார்

முதியோருக்கு உதவிப்பணம் (Old Age Pensions)

ஆஸ்க்வித் மந்திரி சபை முதன் முதல் செய்த பரோபகாரச் செயல் முதியோருக்கு ஒரு சிறிய உதவித் தொகையை வழங்கியதாகும். அதன் திட்டப்படி 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதை எய்திய அனைவரும் வாரம் ஒன்றுக்கு 5 ஷில்லிங்குகள் உதவிப் பணமாகப் பெற்றனர். ஆனால், வயது முதிர்ந்த திருமணமான கணவன் மனைவியர் இருவருக்குமாகச் சேர்ந்து ஏழு ஷில்லிங், ஆறு பென்ஸ்களே வழங்கப்பட்டன. இங்ஙனம் அளிக்கப்பட்ட உதவியால் ஏற்படும் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. உதவி பெற்றவர்களின் சேமிப்பிலிருந்து செலவின் ஒரு பகுதியைச் சரிகட்டிக்கொள்ளும் வழக்கம் அப்போது ஏற்படவில்லை. அதனால் அரசாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆறு மிலியன் பவுன்கள் செலவாயின. ஆனால், அத் திட்டத்தால் மக்கள் செலுத்திவந்த வறியோர் வரித்தொகையில் நிறைய மீதமாயிற்று. ஏனெனில், பல முதியோர்கள் சர்க்கார் நடத்திய தொழிலகங்களுக்குப் போய் உதவி பெறுவதை நிறுத்திக்கொண்டனர். இங்ஙனம் ஒருபுறம் ஏற்பட்ட நஷ்டத்தை இன்னொருபுறம் வந்த இலாபமானது ஈடு செய்துவிட்டது.

வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிலையங்கள் (Labour Exchanges)

ஆங்காங்கே பரவலாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆஸ்க்வித் மந்திரி சபையில் உள்நாட்டு அமைச்சராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) என்பார் 1909ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தைக் கொணர்ந்தார். அதன்படி வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிலையங்கள் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டன. இங்கிலாந்து பத்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பெரிய வேலை பரிமாற்று நிலையமும் (Clearing House), அவை யாவற்றையும் இணைத்து வழி நடத்தும் ஒரு மத்தியப் பரிமாற்று நிலையமும் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுக்கு உதவி செய்ய நூற்றுக்கணக்கான சிறு நிலையங்கள் ஒவ்வொரு பெரும் பட்டணங்களிலும் இருந்தன. அவற்றில் முதலாளிகளும் தொழிலாளர்களும் தங்களது தேவைகளைப் பதிவு செய்துகொண்டனர். இரு சாராரின் பரஸ்பர தேவைகளைப் பூர்த்தி செய்ய வட்டார நிலையங்களும் மத்திய நிலையமும் சேர்ந்து பாடுபட்டன.

இன்சூரன்ஸ் அல்லது காப்புறுதிச் சட்டம் 1911 (Insurance Act)

1911ஆம் ஆண்டில் கருவூலத் தலைவர் லாயிட் ஜார்ஜ் தொழிலாளர்களின் நன்மைக்காக இன்சூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்

தினர். 16 வயது முதல் 70 வயதுக்கு உட்பட்டவர்களும் ஆண்டொன்றுக்கு 160 பவுன்களுக்குக் குறைந்த வருமானமுள்ள யாவரும் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டபோதும், அல்லது ஏதோ காரணத்தால் தொழிலை இழந்துவிட்டபோதும் அவர்களுக்கு உதவி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி தொழிலாளி ஒருவன் நோய்வாய்ப்பட்டால் அவனுக்கு இலவச வைத்திய உதவிசெய்யப் பட்டது. ஆனால், நோய் நீக்கும் மருத்துவர்களுக்கு, அரசாங்கம், ஒரு நோயாளிக்கு இவ்வளவென்று ஒரு குறிப்பிட்ட தொகையை ஊதியமாக வழங்கியது. அதேபோலத் தொழிலாளர்கள் வேலையின்றி வீட்டில் இருக்க நேரும்போது அரசாங்கம் அவர்களுக்கு உதவிப் பணம் வழங்கியது. இதற்கெல்லாம் ஆகும் செலவை மேற்கொள்ள உதவி நிதி (Benefit Fund) ஒன்றை அரசாங்கம் திரட்டியது. அந்நிதிக்கு இன்சூர் செய்துகொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் மாதம் ஒன்றுக்கு நான்கு பென்னிகளைச் சந்தாவாக வழங்கவேண்டும். முதலாளிகளும் அரசாங்கத்தாரும் சேர்ந்து 5 பென்னிகளைத் தானமாக வழங்குவர். இரண்டையும் சேர்த்துத் திரட்டப்பட்ட நிதியை நிருவகிக்கும் பொறுப்பை, அரசாங்கத்தின் மேற்பார்வைக்குட்பட்ட காப்புறுதிக் கழகங்களும், தொழிற் சங்கங்களும், தபால் நிலையங்களும் மேற்கொண்டன. இங்ஙனம் நிதி திரட்டி உதவியளிக்கும் முறையைப் பலர் ஏழைகளைக் கொள்ளையடிக்கும் முறையெனக் குறை கூறினர். மருத்துவர்களுக்கும் இம் முறையால் ஊதியம் அதிகமாகக் கிடைக்காது எனப் பலர் கூறினர். எனினும் பிரசித்தி பெறாத சாதாரண மருத்துவர்களுக்கு இதனால் நிலையான வருமானம் கிடைக்க வழி ஏற்பட்டது. தொழிலாளர்களும் ஆபத்துக் காலத்தில் சமய சஞ்சீவியாக இத் திட்டத்தை மதிக்கலாயினர்.

பாராளுமன்ற உறுப்பினருக்கு ஊதியம், 1911

பாராளுமன்றத்திலோ அல்லது தல ஆட்சிச் சபைகளிலோ அமர்ந்து தொழில் புரியும் அனைவரும், அதையொரு பெருங் கௌரவமாகக் கொண்டு ஊதியம் இல்லாமலேயே ஊழியம் புரிவது அக்காலத்தியப் பழக்கமாக இருந்தது. பணம் படைத்த பிரபுக்கள் நாட்டை ஆட்சி புரிந்து கொண்டுவந்த வரையில் அத் திட்டம் நல்லதாகவே இருந்தது. ஆனால், ஏழைத் தொழிலாளர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்கு வாய்ப்பு ஏற்பட்டபோது நிலைமை மாறிவிட்டது. ஏழை உறுப்பினர்களுக்கு உணவுக்காகிலும் ஓரளவு ஊதியம் தருவது இன்றியமையாததாகிவிட்டது. எனவே, அத்தகையோருக்கு மாதா மாதம் சம்பளம் வழங்கும் பணியைத் தொழிற் சங்கங்கள் மேற்கொண்டன. அச் சங்கங்கள்

ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகையை இதற்காகவும், தேர்தல் செலவுகளுக்காகவும் வசூலித்து வந்தன. இங்ஙனம், கட்டணங்களை வசூலிப்பது சட்டவிரோதம் என ஆஸ்பர்ன் வழக்கில் (1909) நீதிபதிகள் கூறிவிடவே, வேறு வழியின்றிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்கும் வழக்கத்தைத் தொழிற் சங்கங்கள் நிறுத்தி விட்டன. இக் குறையைத் தீர்க்க ஆஸ்க்வித் சர்க்கார் முன்வந்தனர். 1911ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்கள் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டு ஒன்றுக்கு 400 பவுன்கள் சம்பளம் பெற அவர்கள் ஏற்பாடு செய்தனர்.

தொழிற் சங்கச் சட்டம், 1913 (Trade Union Act)

ஆஸ்பர்ன் வழக்குத் தீர்ப்பில், தொழிற் சங்கங்கள் தங்களது நிதியைத் தேர்தல் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்துவதும் சட்ட விரோதமெனக் கண்டிருந்தது. இத் தீர்ப்பை மாற்ற 1913ஆம் ஆண்டில் ஒரு தொழிற்சங்க மசோதா (Trade Union Bill) கொண்டுவரப்பட்டுச் சட்டமாயிற்று. அச் சட்டப்படி தொழிற் சங்கங்கள் தம் பிரியம்போல் தங்களது நிதியைச் செலவழித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றன. ஆனால், அரசியல் கட்டணத்தைச் செலுத்துவதும் செலுத்தாமல் விடுவதும் சங்க உறுப்பினரின் சொந்த விருப்பத்துக்கே விடப்பட்டது. விருப்பமானால் அத்தகைய கட்டணங்களைச் செலுத்த மறுப்பதற்கும் ஒவ்வோர் உறுப்பினரும் உரிமை பெற்றனர்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1912 (Minimum Wage Legislation)

1912ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் கூலி உயர்வு வேண்டி ஒரு பெரிய வேலை நிறுத்தத்திலிறங்கினர். என்றுமில்லாதபடி அரசாங்கம் இதில் தலையிட்டது. காபினெட் அமைச்சர்கள் முதலாளிகளோடும் தொழிலாளர்களோடும் கலந்துபேசி அவர்களிடையே ஒரு சமரசங் காண முயன்றனர். ஆனால், முடியவில்லை. எனவே, ஒவ்வொரு தொழிலாளிக்கும் குறைந்தபட்ச ஊதியத்தையேனும் கொடுக்கும்படி முதலாளிகளைக் கட்டாயப்படுத்தச் சர்க்கார் ஒரு சட்டமியற்றினர். ஆனால், கொடுக்கப்படவேண்டிய குறைந்தபட்சக் கூலி எவ்வளவு என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை, முதலாளிகள் தொழிலாளர்கள் ஆகிய இரு சாராரின் பிரதிநிதிகளடங்கிய மாவட்டக் குழுக்களுக்கே (District Boards) அரசாங்கத்தார் விட்டுவிட்டனர்.

ஏனைய சீர்திருத்தச் சட்டங்கள்

குழந்தைகள் நலனைப் பாதுகாக்கும் பல சட்டங்களும் இக் காலத்தே இயற்றப்பட்டன. பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய

உணவளிக்கவும், மருத்துவச் சோதனை செய்து மருந்தளிக்கவும் சட்டங்கள் ஏற்பட்டன. பள்ளி நலங்காப்புக் கழகங்கள் (School Care Committees) ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டன. இளங் குற்றவாளிகளைச் (Young Criminals) சீர்திருத்த, பார்ஸ்டல் (Borstel) என்பார் அறிவித்தமுறை கையாளப்பட்டது. 1908இல் ஏற்பட்ட குழந்தைகள் சட்டமானது (Children Act) அத்தகைய இளங் குற்றவாளிகள் நல்ல முறையில் நடத்தப்பெற்றுச் சீர்திருத்தப்பட வேண்டுமென்றும், 14 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் சிறையிலிடப் படக்கூடாதென்றும் கூறியது. 1909இல் ஏற்பட்ட நகர் அமைப்புத் திட்டச் சட்டமானது (Town Planning Act) சுகாதார வசதியின்றிக் கட்டப்பட்டிருந்த வீடுகளை இடிக்க அரசாங்கத்துக்கு அதிகாரமளித்தது. ஆனால், இச் சட்டத்தை ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் நிறைந்த இடங்களில் அமுல் நடத்த அரசாங்கம் பெரிதும் தயங்கியது. எனவே, ஏட்டளவிலேயே அச் சட்டம் இனிமையாயிருந்ததன்றி நடைமுறையில் அதிகம் பலனளிக்கவில்லை. 1911இல் ஏற்பட்ட கடைகள் சட்டமானது (Shops Act) கடைகளில் வேலை செய்வோரின் வேலை நேரத்தைக் குறைத்து வாரம் ஒன்றுக்கு அரைநாள் விடுமுறையை அவர்கள் பெறவும் வகை செய்தது. விவசாயிகளுக்கு நன்மை செய்த சிறு நிலச் சொந்தக்காரர் (Small Holders' Act) சட்டமும், ஸ்காட்லாந்து விவசாயக் குழுவும் (Scottish Board of Agriculture) இச் சமயத்திற்றான் ஏற்பட்டன. இராணுவத் துறையில் ஹால்டேன் என்பார் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பிராந்தியப் படைகள் நாடெங்கும் நன்கு அமைக்கப்பட்டன. கடற்படை நன்கு வலுவாக்கப்பட்டது. கடற்படைச் சிப்பந்திகள் (Navy Staff) நிரந்தரமாக நியமிக்கப்பட்டனர். ஜெர்மானியரின் கடற் படை விஸ்தரிப்பின் விளைவாகக் கப்பற்படைக்காக அதிகமான பணம் செலவழிக்கப்பட்டது. 1913-1914இல் 51 மிலியன் பவுன் கப்பற்படைக்காகச் செலவு செய்யப்பட்டது. இராணுவமும் கடற் படையும் ஒற்றுமையுடன் இயங்கவேண்டும் என்பதற்காகச் சர்ச்சிலைக் கடற் படை இலாகா அமைச்சராகவும், மெக்கன்னு என்பவரை உள்நாட்டு அமைச்சராகவும், ஆஸ்க்வித் மாற்றி நியமித்தார். சர்ச்சிலின்கீழ் கடற்படை வேகமாக முன்னேறியது. கடற் படைச் சிப்பந்திகள் அதிகமாகச் சம்பளம் பெற்றனர். அதிகாரிகளின் தொகை பெருகியது. போர்க் கப்பல்களின் எண்ணிக்கையும் பெருகியது. புதிய கடற் படைத் தளங்கள் ஸ்காபா ஃபளோ (Scapa Flow), க்ரோமார்டி (Cromarty) போன்ற இடங்களில் ஏற்பட்டன. கப்பற் படைக்கு வேண்டிய எண்ணெயைப் பெற ஆங்கிலோ-பாரசீக எண்ணெய்க் கம்பெனியோடு அரசாங்கம் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது.

மக்கள் வரவு செலவுத் திட்டம், 1909

மேற்சொன்ன பற்பல சீர்திருத்தங்களையும் நிறைவேற்ற ஏராளமாகப் பணம் செலவாகும் என்பதை உணர்ந்த ஆஸ்க்வித், 1909ஆம் ஆண்டில் துணிகரமாக ஒரு வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தின் முன் கொணர்ந்தார். அத் திட்டமானது 200 மிலியன் பவுனை எப்படியாகிலும் வருமானமாக அரசாங்கம் பெற்றாக வேண்டும் எனக் கூறியது. போர்க்கால வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பைவிட அது அதிகமாக இருந்தது. ஆஸ்க்வித் அதை ஒரு போர்க்கால பட்ஜெட் என்றே அழைத்தார். நாட்டிலே காணப்படும் வறுமை, தொழிலாளர்களின் இன்னல்கள், அறியாமை ஆகியவற்றை எதிர்த்துத் தாம் போராடப் போவதாகவும் அதற்காகவே அவர் அவ்வளவு அதிக வருமானத்தை விரும்புவதாகவும் அறிவித்தார். சாதாரண மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட அத்திட்டத்தை, மக்கள் வரவு செலவுத் திட்டமென யாவரும் அழைக்கலாயினர். கருவூலத் தலைவரான லாயிட் ஜார்ஜ் மேற்சொன்ன பட்ஜெட்டைப் பாராளுமன்றத்தின் முன் படைத்தபோது, அதன் புரட்சிகரமான அம்சங்களைக் கண்டு பலரும் துணுக்குற்றனர். புகையிலையின்மீதும் மதுபான வகைகள் மீதும் அபரிமிதமான வரிகள் போடப்பட்டன. மதுபான அனுமதிச் சீட்டுகளின் கட்டணம் பெரிதும் உயர்ந்தது. 5,000 பவுன்களுக்கும் மேலாக மதிக்கப்பட்ட சொத்துக்களை இறந்துபோன பெற்றோர்களிடமிருந்து பெறுகின்றோர்க்கு அவர்கள் செலுத்தவேண்டிய மரணவரியின் (**Death Duty**) விகிதம் உயர்த்தப்பட்டது. அதே போன்று வருமான வரியும் பவுனுக்கு ஒரு ஷில்லிங், 2 பென்னியாக உயர்த்தப்பட்டது. ஆண்டொன்றுக்கு 5,000 பவுன்களுக்கு மேற்பட்ட வருமானம் உடையவர்கள், வருமான வரியுடன் 6 பென்னி வீதம் மேல்வரி (**Super Tax**) ஒன்றையும் செலுத்தவேண்டியதாயிற்று. இத்தகைய வரிகளால் நிறைய வருமானம் பெறலாமென லாயிட் ஜார்ஜ் எதிர்பார்த்தார். அதில் ஒரு பகுதியைப் பாதைகளைச் செப்பனிட்டு மோட்டார் போக்குவரத்தை அதிகமாக்குவதற்காக ஒதுக்க அவர் திட்டமிட்டார். பாதை நிதி (**Road Fund**) என்ற அந் நிதியை ஏற்படுத்தியது லாயிட் ஜார்ஜின் அரசியல் மேதைத் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும், உழைப்பு ஏதுமின்றித் தானாகவே சிலருக்கு ஏற்படும் இலாபங்களில், அதாவது உழைப்பில்லா வருமானத்தில் (**Unearned Income**) அரசாங்கமும் பங்குபெற வேண்டுமென்ற நூதனத் திட்டத்தையும் அவர் வெளியிட்டார். மக்கள் குடியேற்றத்தாலும் போக்குவரவு வசதியாலும் சில இடங்களில் இருந்த நிலங்களின் விலை பத்து, இருபது மடங்காகப் பெருகியது. நிலச் சொந்தக்காரர்கள் ஒருவித உழைப்புமின்றிப் பெற்ற இந்த அதிக

வருமானத்தில் 20 சதவிகிதத்தை அரசாங்கத்தார் பெறவேண்டுமென லாயிட் ஜார்ஜ் கூறினார். இந்தத் திட்டத்தைச் செல்வந்தர் அனைவரும் ஒருமுகமாக எதிர்த்தனர். காப்புவரிச் சீர்திருத்தக்காரர்களும் அந்த பட்ஜெட்டை எதிர்த்தனர். ஏனெனில், நாட்டின் நவீன சாதனங்களைப் பெருக்குவதற்கான வருமானத்தைக் காப்பு வரியின் மூலமன்றி வேறுவழியில் பெறமுடியாது என்ற கூற்றை அது பொய்ப்பித்துவிடும் போலிருந்தது. ஐரிஷ் கட்சியினரும் அதை எதிர்த்தனர். காரணம் அவர்கள் விரும்பி அருந்திய விஸ்கியின் மீது வரி அதிகரிக்கப் பட்டதேயாகும். பொதுமக்கள் சபையிலேயே பட்ஜெட்டுக் கெதிராகப் பெரும் எதிர்ப்பு எழுந்தது. 'பட்ஜெட் கூட்டுறவு' (**Budget League**), 'பட்ஜெட் எதிர்ப்புக் கூட்டுறவு' (**Anti Budget League**) என்ற இரு கட்சிகள் நாட்டில் தோன்றி ஒன்றையொன்று காரசாரமாகத் தாக்கிக்கொள்ள ஆரம்பித்தன. ஆளும் கட்சிக்குப் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையான ஆதரவிருந்தும், ஏப்ரல் மாதத்திலேயே நிறைவேறியிருக்க வேண்டிய பட்ஜெட்டானது ஜூன் மாதத்தில்தான் நிறைவேறியது.

பொதுமக்கள் சபைக்கும் பிரபுக்கள் சபைக்கும் சச்சரவு — 1911ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டம்

பொது மக்கள் சபையில் நிறைவேறிய பட்ஜெட், அடுத்துப் பிரபுக்கள் சபைக்குச் சென்றது. பொதுவாகப் பண மசோதாக்களில் பிரபுக்கள் சபை தலையிடுவது வழக்கமில்லை. ஆனால், வழக்கத்திற்கு மாறாக அச் சபையினர் இப்போது நடந்துகொள்ளலாயினர். அதிலிருந்த எதிர்க் கட்சியாளர்கள பட்ஜெட்டை ஏற்றுக்கொள்வதானது மக்களின் சொத்துரிமையைக் குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமம் என்று கூறினர். லான்ஸ்டௌன் பிரபு, லாயிட் ஜார்ஜை ஒரு பேராசை பிடித்த, ஈவிரக்க மற்ற கொள்ளைக்காரனுக்கு ஒப்பிட்டார். ரோஸ்பரி பிரபு, பட்ஜெட்டை முழுக்க முழுக்க சமதர்மத் தன்மையானதென்று வருணித்ததுமன்றி, அது நிறைவேறுவதால் மக்களின் குடும்ப வாழ்க்கை குலைந்து, மத வாழ்க்கை அழிந்து, சொத்துரிமை மாய்ந்து, முடியரசும், பேரரசும் கவிழ்ந்துவிடுமென எச்சரித்தார். பிரபுக்களின் வாதங்களுக்கு லாயிட் ஜார்ஜ் சுடச்சுடப் பதிலளித்தார். ஏறக்குறைய 500 பேர்கள் சேர்ந்துகொண்டு, இலட்சக்கணக்கான மக்களின் விருப்பத்தைப் புறக்கணிப்பது எத்தகைய அபாயத்தில் அவர்களைச் சிக்கவைக்கும் என்பதை எண்ணிப்பார்க்கும்படி அவர் பிரபுக்களை எச்சரித்தார். எனினும் பெரும்பான்மையான வாக்குகளால், பிரபுக்கள் பட்ஜெட்டை நிராகரித்தனர். இதைக்கண்ட ஆஸ்க்வித், மக்கள் முன்னிலையில் இப் பிரச்சினையை

வைப்பதென்று தீர்மானித்துப் பாராளுமன்றத்தைக் கலைத்தார். 1910ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடந்தது. பிரபுக்கள் சபையின் செய்கை நியாயமா இல்லையா என்பதை மக்களே தமது வாக்குகளின்மூலம் தீர்ப்பளிக்கட்டும் என ஆஸ்க்வித் அறிவித்தார். தேர்தலில் தாராளக் கட்சியினரே மீண்டும் பெரும்பான்மையை எய்தினர். ஆனால், முன்பிருந்ததைவிட 120 பேர்கள் குறைவாகவே இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். எனினும், அதை வைத்துக்கொண்டு ஆஸ்க்வித் இரண்டாம் முறையாகத் தமது பட்ஜெட்டைப் பொது மக்கள் சபையில் நிறைவேற்றினர். ஐரிஷ் கட்சியினரின் ஆதரவின்றேல் அது தோற்றுப்போயிருக்கும். ஆனால், அயர்லாந்தில் சுய ஆட்சியை விரைவிலேயே ஏற்படுத்துவதாக வாக்களித்து ஆஸ்க்வித் அவர்களது ஆதரவைப் பெற்றார். அதன்பின் பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா ஒன்றை அவர் கொணர்ந்தார். அச் சபையானது பொதுமக்கள் விருப்பப்படி மாற்றி அமைக்கப்பட வேண்டுமெனவும், அம் மசோதா வற்புறுத்தியது. ஆனால், அது சட்டமாவதற்குமுன் ஏழாம் எட்வர்ட் இறந்துபோனார். எனவே, இப் பிரச்சினை சிறிது காலத்துக்கு ஒத்திப்போடப்பட்டது. இரு சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து பேசி ஒரு முடிவு காணப் பலமுறை முயன்றும் முடியவில்லை. கடைசியாக லாயிட் ஜார்ஜ் மீண்டும் மக்களின் தீர்ப்புக்கே இப் பிரச்சினையை விடுவதென்று முடிவு செய்தார். மீண்டும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. மசோதாக்களை ரத்துச் செய்யும் உரிமை பிரபுக்களுக்கு உண்டா இல்லையா என்ற பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடந்தது (1911). அதில் தாராளக் கட்சியினர் பழையபடியே பெருவாரியாக வெற்றி பெற்றனர். எனவே, பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவை ஆஸ்க்வித் மீண்டும் கொணர்ந்து அதைப் பொதுமக்கள் சபையில் நிறைவேற்றினர். பிரபுக்கள் சபைக்கு அது சென்றபோது அச் சபையினர், அதில் பல சீர்திருத்தங்களைச் செய்து மீண்டும் அதைப் பொதுமக்கள் சபைக்கே அனுப்பினர். பொது மக்கள் சபை அத் திருத்தங்களையெல்லாம் உதறிவிட்டுப் பழைய வடிவத்திலேயே மசோதாவை மீண்டும் பிரபுக்கள் சபைக்கு அனுப்பியது. அதோடு பிரபுக்கள் சபை தனது திருத்தங்களை வற்புறுத்துமானால், தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்கிணங்க, ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், தாராளக் கட்சியைச் சார்ந்த 450 பிரபுக்களைப் புதிதாக நியமித்து, மசோதா, பிரபுக்கள் சபையில் நிறைவேற வழி செய்வாரென்றும் ஆஸ்க்வித் அறிவித்தார். இதைக் கேட்ட டோரிப் பிரபுக்கள் பலர் பின் வாங்கினர். ஒரு சிலர் கடைசிவரை ஒரு கை பார்த்துவிடுவது என மசோதாவை எதிர்த்

தனர். எனினும் பெருவாரியான வாக்குகளைப் பெற்று மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேறியது. அங்ஙனம் 1911ஆம் ஆண்டில் ஏற்பட்ட இப் பாராளுமன்றச் சட்டமானது பிரபுக்கள் சபைக்குப் பண மசோதாக்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்தும் உரிமையில்லையென்றும், சாதாரண மசோதாக்களானாலும் பொதுமக்கள் சபையின் தொடர்ச்சியான 3 கூட்டங்களில் அவை நிறைவேறி விடுமானால், பிரபுக்கள் சபையின் ஒப்புதல் இருப்பினும், இல்லாவிடினும் அவை சட்டமாகிவிடும் எனவும், பாராளுமன்றத்தின் காலக்கெடு 7 ஆண்டுகளுக்குப் பதிலாக 5 ஆண்டுகளாக இருக்க வேண்டுமென்றும் கூறியது. இதனால் பிரபுக்கள் சபையின் ரத்துச் செய்யும் அதிகாரம் மாய்ந்து, மசோதாக்களை இருமுறை நிறுத்திவைக்கும் அதிகாரம் மட்டுமே எஞ்சியது. லாயிட் ஜார்ஜின் பட்ஜெட் மூன்றுமுறை பொதுமக்கள் சபையில் நிறைவேறிவிட்டதால் அது பிரபுக்கள் சபைக்குப் போகாமலேயே அமுலுக்கு வந்தது.

ஆஸ்க்வித்தும் அயர்லாந்தும்

ஆஸ்க்வித் சர்க்கார் அயர்லாந்திற்குச் சுய ஆட்சி வழங்குவதாக வாக்களித்திருந்தனர். அவ் வாக்கைக் காப்பாற்றவேண்டி, அவர்கள் அயர்லாந்து சுய ஆட்சி மசோதாவை 1911ஆம் ஆண்டில் கொணர்ந்தனர். பொதுமக்கள் சபை தனது 3 கூட்டங்களில் அம் மசோதாவை நிறைவேற்றியது. ஆனால், பிரபுக்கள் சபை அதை மூன்று தடவையும் தோற்கடித்தது. எனினும், 1911ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டப்படி அது சட்டமாகியது. அச் சட்டம் அமுலுக்கு வருமுன் உலகப் போர் மூண்டுவிட்டது. மேலும் ஐரிஷ் சுய ஆட்சி மசோதாவுக்கு அயர்லாந்தின் வட பகுதியான அல்ஸ்டர் மாகாணத்தில் இருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. பிராடெஸ்டன்டுகள் நிறைந்த அல்ஸ்டர் மக்கள், கத்தோலிக்கர் பெரும்பான்மையாக உள்ள டப்ளின் (Dublin) நகரப் பாராளுமன்றத்தால் ஆளப்படுவதை வெறுத்தனர். சர் எட்வர்ட் கார்சன் (Sir Edward Carson) என்பவரது தலைமையில் அவர்கள் ஒரு படையை அமைத்துக்கொண்டு போருக்கு ஆயத்தமாயினர். கார்சன், மக்களின் பூரண அன்பையும் ஆதரவையும் பெற்றவராய் இருந்தமையால் அவரைக் கைதுசெய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் அஞ்சியது. ரெட்மாண்ட் (Redmand) என்ற ஐரிஷ் கவர்னர் கார்சன் முன்னர் ஓர் இடைக்கால ஏற்பாட்டை வைத்தார். குறிப்பிட்ட காலத்துக்கு வேண்டுமானால் அல்ஸ்டர், ஐக்கிய அயர்லாந்தில் இருந்து பிரிந்து நிற்கலாம் என்பதும், அதன்பின் அயர்லாந்துடன் சேர்ந்துகொள்ளலாம் என்பதுமே அவ்வேற்பாடாகும். இதை அல்ஸ்டர் ஏற்றுக்கொள்ளவில்லை. நிரந்தரமாக

அயர்லாந்திலிருந்து பிரிந்து வாழ்வதே தமது குறிக்கோள் என அல்ஸ்டர் பகுதியினர் கூறிவிட்டனர்.

அல்ஸ்டர் மக்களின் பிடிவாதத்தைக் கண்ட தென் அயர்லாந்தியர் பொறுமை யிழந்து புரட்சியில் இறங்கினர். அயர்லாந்தின் சுயேச்சையைப் பெறவென்று ஏற்பட்ட 'சின்ஃபீன்' அல்லது 'நாம் நமக்கே' (Sinn Fein) கட்சியினரும் வேறு தீவிரவாதிகளும் ஒரு பெரும் தொண்டர் படையை அமைத்தனர். டப்ளினில் இச் சமயத்தில் ஏற்பட்ட ஒரு வேலை நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமான அல்ஸ்டர் வீரர்கள் தெற்கே வந்தனர். அயர்லாந்தில் ஒரு உள்நாட்டுப்போர் ஏற்படும்போலிருந்தது. அல்ஸ்டர் கலகக்காரர்களை அடக்குமாறு பிரிட்டிஷ் சர்க்கார் குர்ரா என்னுமிடத்திலிருந்த ஒரு படைக்கு உத்தரவிட்டனர். ஆனால், தாராள இணைப்புக் கட்சியைச் சேர்ந்த படை அதிகாரிகள் அவ்வுத்தரவுக்குப் பணிய மறுத்து வேலையை இழந்தனர். குர்ரா நிகழ்ச்சிக்குப் (Currah Incident) பின் என்ன செய்வதெனத் தெரியாது பிரிட்டிஷ் அரசாங்கம் திகைத்தது. நல்ல வேளையாக, முதல் உலகப் போர் தொடங்கியதால் எல்லோரும் வேற்றுமைகளை மறந்து, இங்கிலாந்தின் சுதந்திரத்தைக் காக்கப் பாடுபடலாயினர்.

11. முதல் உலகப் பெரும் போர் (1914-18)

(First Great World War)

போர் விளைவதற்கான அடிப்படைக் காரணங்கள் (Fundamental Causes): பொருளாதாரப் போட்டிகள்—ஆயுத உற்பத்திப் போட்டி (Arms race)—அரசியல் போட்டி—ஏகாதிபத்திய உணர்ச்சி.

போருக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் (Circumstances Leading to war): ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு—செராஜிவோ நெருக்கடி—உடனடியான காரணம்.

போரின் போக்கு—இங்கிலாந்தின் பங்கு : கட்சிகள்—போரின் தன்மை—மேற்குப் போர்முனை—கிழக்குப் போர்முனை—கடற் போர் (1914-17)—நிலப் போர் (1916-18)—இறுதிப் போர் (1918)—தற்காலிகப் போர்நிறுத்த உடன்படிக்கை (Armistice).

போர்க் காலத்து இங்கிலாந்தின் உள்நாட்டு அரசியல் : கூட்டு மந்திரி சபை—லாயிட் ஜார்ஜின் போர்க்காலக் காபினெட்—அயர்லாந்துப் பிரச்சினை (1914-22).

இருபதாம் நூற்றாண்டில் உலகம் இரண்டு பெரும் போர்களில் சிக்குண்டு பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளது. புறத்திலே தோன்றும் இப்போர்கள் எல்லாம் மக்களின் மனத்தகத்தே நடைபெறும் போராட்டங்களின் வெளிப்பாடேயன்றி வேறல்ல. உண்மையில் போர் என்பது அரசியல் தலைவர்கள், பெருமக்கள் முதலியவர்களின் உள்ளங்களில்தான் முதலில் தோன்றுகிறது. அவர்களின் அகங்களிலே கொழுந்து விட்டெரியும் போட்டி, பொறாமை, காழ்ப்புணர்ச்சி, பகைமை, தேசீய வெறி போன்ற தீக்குணங்களின் திரண்ட உருவமே போர் என்பதில் ஐயமில்லை. அத்தகைய தீய உணர்ச்சிகள் நாடுகளிடையே ஏற்படுவதற்குக் காரணங்கள் பலவுள. அவைகளைப் கண்டுபிடித்து அவற்றை நீக்கிவிட முடியுமானால் போர்கள் ஏற்படுவதையும் தவிர்க்க

முதல் உலகப் போருக்கு முற்பட்ட ஐரோப்பா



முதல் உலகப் பெரும் போர்க் காலத்திய ஐரோப்பா

1. கோலோன்
2. எஸ்ஸென்
3. ரூர்
4. பெர்லின்
5. கீல் கால்வாய்
6. டென்மார்க்
7. ஹாலந்து
8. பெல்ஜியம்
9. டன்கர்க்
10. கலே
11. ஸ்விட்சர்லாந்து
12. ஆஸ்திரியா
13. ஹங்கேரி
14. செக்கோஸ்லவேகியா
15. பல்கேரியா
16. செர்பியா
17. மான்டினீக்ரோ
18. எஸ்தோனியா
19. லாட்வியா
20. லிதுவேனியா
21. கி. பிரஷ்யா
22. அல்பேனியா
23. கிரீஸ்

—மே. போர்முனை



முடியும். முதல் உலகப் போர் ஏற்பட்டதற்கான அடிப்படைக் காரணங்கள் இங்ஙனம் பல இருக்கின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டு ஆராய்வோம்.

போர் விளைந்ததற்கான அடிப்படைக் காரணங்கள்

பொருளாதாரப் போட்டிகள்

பொருளாதாரத் துறையில் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட போட்டியே முதல் உலகப் போர் ஏற்பட்டதற்கு முக்கியக் காரணமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய தொழிற் புரட்சியானது நாளடைவில் காட்டுத்தீ போல் ஏனைய ஐரோப்பிய நாடுகளிடையேயும் பரவிவிட்டது. முக்கியமாக ஃபிரான்சும், ஜெர்மனியும் தொழில் வளர்ச்சியில் பிரிட்டனையும் மிஞ்சி விடுகின்ற அளவுக்குப் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறலாயின. அதனால் அவைகளின் வாணிகத் தேவைகள் அதிகப்பட்டன. பொறிசெய் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் வேகமாக வளர்ந்துகொண்டே சென்றதால் அவற்றை விற்பதற்கான சந்தைகள் முதலில் அவற்றிற்குத் தேவையாயிருந்தன. பிரிட்டனும், ஃபிரான்சும் உலகின் பல பாகங்களில் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்திக்கொண்டு அத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்துகொண்டு விட்டன. ஆனால், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் ஆரம்பத்தில் வாளாவிருந்துவிட்டதால் பின்னால் இருபதாம் நூற்றாண்டில் அவை தம் கவலையின்மையை ஈடு கட்டுவதற்காகக் குடியேற்ற நாட்டுப் போட்டியில் இறங்க ஆரம்பித்தன. ஆப்பிரிக்காவில் ஜெர்மனி, போலந்து, போர்ச்சுகல் போன்ற நாடுகள் அவசர அவசரமாகக் குடியேற்ற நாடுகளைத் தோற்றுவித்ததற்கு இப்போட்டி மனப்பான்மையே காரணமாகும். இப்போட்டியால் ஏற்படவிருந்த போரை பிஸ்மார்க், பெர்லின் காங்கிரஸின் மூலம் தடுத்து விட்டார். எனினும், ஜெர்மன் தொழிலதிபர்களும் வியாபாரிகளும் மேலும் பல குடியேற்ற நாடுகளைப் பெற விரும்பினர். அவர்களின் விருப்பத்திற்கு ஜெர்மன் கெய்சரான இரண்டாம் வில்லியம் உடந்தையா யிருந்தார். அமைதியை விரும்பிய பிஸ்மார்க் தலைமை அமைச்சர் பதவியைவிட்டு நீக்கப்பட்டார். கெய்சர் துருக்கி போன்ற நாடுகளில் ஜெர்மனியின் செல்வாக்கைப் பரப்ப முயன்றார். பாக்தாத்தையும் பெர்லினையும் இணைக்கும் இருப்புப் பாதையொன்றை அமைப்பதில் அவர் பெரிதும் ஆர்வம் காட்டினார். துருக்கியப் படைகளுக்குப் பயிற்சி கொடுக்க ஜெர்மன் தளபதிகளை அங்கு அனுப்பினார். முஸ்லிம்களை யெல்லாம் அந்நிய அடக்குமுறையினின்றும் விடுவிக்கப்போவதாக அவர் ஜெருச

லேம் நகரக் கூட்டமொன்றில் அறைகூவினர். இதைக் கண்ட பிரிட்டன் அச்சமடைந்தது. ஆசிய நாடுகளில் தமது ஆதிக்கத்தைப் பரப்ப ஜெர்மனி மட்டுமன்றி ரஷ்யாவும் ஜப்பானும் முயன்றன. அதனால்தான் ரஷ்ய ஜப்பான் போர் நடைபெற்றது. அதன் விளைவாக ஜெர்மனி, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் பல வியாபாரக் கிடங்குகளை சீனாவிலும் ஜப்பானிலும் பெற்றன. இங்ஙனம் தொழிற் புரட்சியாலேற்பட்ட உற்பத்திப் பெருக்கப் போட்டி, அவற்றை விற்பதற்கும் கச்சாப் பொருள்களைப் பெறுவதற்குமாக ஏற்பட்ட குடியேற்ற நாட்டுப் போட்டி (**Colonial rivalry**) இவை உலகப் போரின் முக்கிய காரணங்களாயமைந்தன. உலகின் செல்வம் மிக்க பாகங்களை யெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்ட ஃபிரான்சையும் பிரிட்டனையும் கண்ட ஜெர்மனிக்குப் பொறாமைத்தீ கொழுந்து விட்டெறிந்தது. அவற்றை முறியடித்து அவைகளின் குடியேற்ற நாடுகளை யெல்லாம் அபகரிக்க வேண்டுமெனக் கெய்சர் திட்டமிடலானார்.

ஆயுத உற்பத்திப் போட்டி (Arms Race)

குடியேற்ற நாடுகளைப் பெருக்க ஒரே வழி, கடற் படையை வளர்ப்பதுதான் என்பதை உணர்ந்த கெய்சர், போர் கப்பல்களை ஏராளமாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தார். அதற்காக 1900ஆம் ஆண்டில் அவர் கடற்படைச் சட்டம் (**Navy Act**) ஒன்றையும் ஏற்படுத்தினார். இதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் தனது கடற்படையை இன்னும் அதிகமாகப் பெருக்க ஆரம்பித்தது. 1913ஆம் ஆண்டில் ஃபிரான்சு கட்டாய இராணுவச் சேவையை இரண்டாண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக நீட்டித்தது. இங்கிலாந்தில் வின்ஸ்டன் சர்ச்சில் கடற்படை இலாகாவின் தலைவராக்கப் பட்டார். அவர் 15 அங்குலத் துப்பாக்கிகளை ஏராளமாக உற்பத்தி செய்ய உத்திரவிட்டார். பெரிய எண்ணெய்க் கிடங்குகளைக் கட்டி இரண்டாண்டுகளுக்கு வேண்டிய எரிபொருளை அவர் சேமித்தார். ஜெர்மனியும் பிரிட்டனும் தமது இராணுவங்களைப் பெருக்க ஆரம்பித்தன. போர்த் தளவாடங்கள் ஏராளமாகச் செய்யப்பட்டன. செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்திப் பார்க்க அவைகள் துடித்தன. ஆயுத உற்பத்திப் போட்டியாலும் அவை இனியும் திரும்ப இயலாதவாறு போர்ப் பாதையில் வெகு தூரம் முன்னேறிவிட்டன. எனினும், பிரிட்டன் போரைப் பற்றிப் பேசவே பயப்பட்டது. சர்ச்சில் கப்பற்படை பெருக்கத்தைப் பரஸ்பரம் நிறுத்திவிடலாமென்று (**Declare a Naval holiday**) கெய்சருக்கு எழுதினார். கெய்சர் அதை வரவேற்றார். ஆனால், அவரைச் சுற்றி யிருந்தவர்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

அரசியல் போட்டி

இருபதாம் நூற்றுண்டில் தொழிற் புரட்சியின் விளைவாக எங்ஙனம் பொருளாதாரத் துறையில் வாணிகப்போட்டியும் குடியேற்ற நாட்டுப் போட்டியும் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்டனவோ, அதேபோல தேசீய உணர்ச்சியின் வளர்ச்சி காரணமாக அவைகளிடையே அரசியல் துறையில் பல போட்டிக் கூட்டுறவுகள் ஏற்பட்டன. ஒரு தேசிய இனம் (Nationality) ஒரு நாடாக (State) வாழவேண்டுமென்ற விருப்பம் நல்லதே எனினும், அதுவே அளவுக்கு மீறிப்போகும்போது தீமையே விளையும் என்பது வரலாறு நமக்குப் புகட்டும் பாடமாகும். ஜெர்மனியிலும் இத்தாலியிலும் இத்தகைய அமித தேசியம் (Extreme nationalism) வளரலாயிற்று. பிஸ்மார்க்கின் முயற்சியால் ஒன்றுபட்ட ஜெர்மனி ஒரு பேரரசைத் தோற்றுவிக்க எண்ணியது. தான் வாழ்ந்து பிறரையும் வாழவிடவேண்டும் என்ற நல்ல தேசீய உணர்ச்சிக்குப் பதிலாக, மற்றவர்களை அடக்கியாண்டு அதன் மூலம் தன் ஆதிக்கத்தைப் பரப்பவேண்டுமென்ற தீய தேசீயப் பற்றுக்கு ஜெர்மனி ஆளாகியது. அதற்காக அது அரசியல் துறையில் கூட்டுச் சேர்க்கும் முயற்சியில் இறங்கியது. இத்தாலியையும், ஆஸ்திரியாவையும் சேர்த்து ஒரு முக்கூட்டு ஒப்பந்தத்தை (Triple Alliance) அது தோற்றுவித்தது. இதைக்கண்ட பிரிட்டன் முதலில் மனமார்ந்த நேச உடன்படிக்கையை (Entente Cordiale) செய்து கொண்டதென்பதை (1904) நாம் சென்ற அத்தியாயத்தில் கண்டோம். அந்த உடன்படிக்கை வெறும் நேச உடன்படிக்கையேயன்றி இராணுவ ஒப்பந்தமன்று. ஆனால், அவசியம் நேர்ந்தபோது அது இராணுவக் கூட்டுறவாக மாறக்கூடிய ஏது இருந்தது. 1907ஆம் ஆண்டில் பிரிட்டனேடும் ஃபிரான்சோடும் ரஷ்யாவும் சேர்ந்துக்கொண்டது. அதன் விளைவாக முக்கூட்டு நேச ஒப்பந்தம் (Triple Entente) ஏற்பட்டது. பாரசீகத்தில் பிரிட்டனும் ரஷ்யாவும் தமக்குரிய செல்வாக்கு மண்டலங்களை (Spheres of Influence) ஏற்படுத்திக்கொண்டன. ஐரோப்பா இருபெருங் கட்சிகளாகப் பிரிந்து நின்றது. எந்த நேரத்திலும் இக் கட்சிகளுக்குள் மோதல் ஏற்படலாம் என்ற நிலைமையே ஐரோப்பாவில் அப்போது நிலவியது.

ஏகாதிபத்திய உணர்ச்சி (Imperialism)

தேசீயம் அளவுக்கு மீறி வளர்ந்து ஒவ்வோர் ஐரோப்பிய நாடும் தனது ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்ப எண்ணியதாலேயே உலகப் போர் விளைந்தது எனலாம். அமித தேசீயத்தின் குழவியான ஏகாதிபத்திய உணர்ச்சி, பொருளாதாரத் துறையில் மட்டுமன்றிக் கலைத்துறையிலும் காணப்பட்டது. 'உலகத்

தை ஆளப் பிறந்தவர்கள் நாங்கள்; ஜெர்மனியின் பண்பாடு உலக மெங்கும் பரவ நாகரிகக் காப்புப் போராட்டம் (**Kultur Camp**) நடத்துவது எங்கள் கடமை’ என ஜெர்மானியர் கூறலாயினர். பிற்போக்கான நாடுகளில் நாகரிகத்தைப் பரப்புவது வெள்ளையர் களின் பொறுப்பு (**Whitemen’s burden**) என ஐரோப்பிய நாடுகள் சிறப்பாக ஜெர்மனி நினைத்ததும் போருக்கு ஒரு காரணமாகும். இங்ஙனம் உலகமெங்கும் பொருளாதாரம், அரசியல், கலை ஆகிய துறைகளில் தங்கள் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒவ்வோர் ஐரோப்பிய நாடும் முயன்றதாலேயே அவைகளுக்குள் போட்டியும் அதன்பின் போரும் ஏற்பட்டன எனலாம்.

போருக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகள்

ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு

பிரிட்டனை ஆண்ட மன்னர்கள் ஹேனேவர் என்ற ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே, பிரிட்டனுக்கும் ஜெர்மனிக் கும் இயல்பாகவே நட்பு நிலவி வந்தது. விக்டோரியா மகாராணி யாரும் அவரது கணவரும் இந்த நட்பை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்தினர். ஆனால், ஏழாம் எட்வர்ட் காலத்தில் இந் நட்பானது அருகிப் பகையாக மாறிவிட்டது. எட்வர்ட் தமது உறவினரான கெய்சரை விஷம்போல் வெறுத்தார். அவரது யதேச்சாதிகாரப் போக்கு எட்வர்டுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால், ஃபிரெஞ்சு மக்களின் நடையுடை பாவனைகளை அவர் பெரி தும் போற்றினர். எனவே, ஃபிரான்சுக்கும் பிரிட்டனுக்கு மிருந்த பகைமை மாற ஆரம்பித்தது. மேலும், ஜெர்மனியோடு நட்பை ஏற்படுத்திக்கொள்ள சேம்பர்லின் என்ற அமைச்சர் 1878இல் முயன்று தோற்றார். கெய்சர் அவரைப் புறக்கணித்துவிட்டார். எனவே, பிரிட்டன் ஃபிரான்சு பக்கம் திரும்பியது. இரு நாடு களும் எகிப்து விவகாரத்திலும், பஷோடா நிகழ்ச்சியிலும் தமக்குள் சமாதானத்தையே ஏற்படுத்திக்கொண்டன. ஆனால், ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் பகைமை வளர்ந்தது. போயர் யுத்தத்தின்போது கெய்சர் போயர்களைப் பாராட்டித் தந்தி அடித்ததிலிருந்து இப் பகைமை சிறிது சிறிதாகப் பெருகலாயிற்று. எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் அதில் இரு நாடுகளும் வேறுபட்ட கருத் துகளையே தெரிவிக்கலாயின. 1899இல் ரஷ்ய அரசர், ஹேக் மாநாட்டைக் கூட்டியபோது, ஜெர்மனி அதில் சேர மறுத்துவிட் டது. படைபலத்தினலன்றிச் சமாதான முறையில் சர்வதேசப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று பிரிட்டனும் ரஷ்யாவும் வாதாடின. ஆனால், ஜெர்மனியோவெனின், பலாத்காரத்தின் மூலமே நாடுகள் தமக்குள் இருக்கிற வழக்குகளைத் தீர்த்துக்

கொள்ள முடியும் என்று கூறியது. கடைசியில் பிரிட்டனின் கொள்கை வெற்றி பெற்றது. சர்வதேச நீதிமன்றம் ஒன்று ஹேக் நகரில் ஏற்படுத்தப்பெற்றது. வெனிசூலா என்ற தென் அமெரிக்க நாட்டுக்குக் கொடுத்த கடனைத் திரும்பப்பெற பிரிட்டனும் ஜெர்மனியும் ஒரு கப்பற் படையை அங்கு அனுப்பியபோது, அது மன்ரோ கொள்கைக்கு விரோதமானது என அமெரிக்கா கூறியதைப் பிரிட்டன் ஏற்றுக்கொண்டது. ஆனால், ஜெர்மனியோ அதை மறுத்தது. ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் அதனால் மனக்கசப்பு ஏற்பட்டது.

செராஜிவோ நெருக்கடி (Serajivo Crises)—உடனடியான காரணம்

ஆஸ்திரியப் பட்டத்திற்குரியவரான இளவரசர் ஆர்ச் டியூக் ஃபெர்டினண்டு என்பவர் பாஸ்னியாவின் தலைநகரில் நடைபெற்ற ஒரு தேசீய விழாவில் கலந்துகொண்டபோது, அவரை ஒரு செர்பிய வெறியன் சுட்டுக் கொன்றுவிட்டான் (1914 ஜுலை 28). செர்பியர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த கொலை இது என ஆஸ்திரியா எண்ணியது. குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி செர்பியாவுக்கு ஆஸ்திரியா ஓர் இறுதி எச்சரிக்கையை (Ultimatum) விடுத்தது. செர்பியா எவ்வளவோ பணிந்துபோயுங்கூட ஆஸ்திரியாவுக்கு அது திருப்தி இல்லை. போதிய அளவு சரணாகதி அடையவில்லை எனக் குற்றம் சாட்டி ஆஸ்திரியா செர்பியா மீது போர் தொடுத்தது. உடனே செர்பியா ரஷ்யாவின் உதவியை நாடியது. ரஷ்யாவும் உதவி செய்ய ஒப்புக்கொண்டது. இதைக் கண்ட ஜெர்மனி, ஆஸ்திரியாவுக்குத் தன் முழு ஆதரவையும் தர முன்வந்தது. ரஷ்யா, செர்பியாவுக்கு உதவக்கூடாது என ஜெர்மனி கூறியதை ரஷ்யர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, ஜெர்மனி ரஷ்யாமீது போர் தொடுத்தது. ஃபிரான்சு ரஷ்யாவின் நட்பு நாடாக இருந்ததால் கெய்சர் ஃபிரான்சு நாட்டின் மீதும் படையெடுத்தார். நடுநிலைமை நாடான பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மன் துருப்புகள் செல்லலாயின. பெல்ஜியத்தின் நடுநிலைமையைக் காப்பதாக பிரிட்டன் ஒரு காலத்தில் வாக்களித்திருந்தது. அந்த வாக்கைக் காப்பாற்ற வேண்டி பிரிட்டனும் ஜெர்மனியின் மீது போர்தொடுக்க வேண்டியதாயிற்று. இங்ஙனம் செராஜிவோ படுகொலை என்னும் சிறு நெருப்புப் பொறியானது முதல் உலகப் போர் என்னும் பெரிய வெடிமருந்துக் கிடங்கைக் கொளுத்திவிட்டது.

போரின் போக்கு - அதில் இங்கிலாந்தின் பங்கு

கட்சிகள்

போரை முதலில் துவக்கிய ஆஸ்திரியாவும், ஜெர்மனியும், அவற்றைச் சேர்ந்த நாடுகளும் அச்சு நாடுகள் (Central Powers)

என அழைக்கப்பட்டன. அவற்றை எதிர்த்த பிரிட்டன், ஃபிரான்சு, ரஷ்யா, ஆகிய நாடுகள் நேச நாடுகள் (**Allies**) என அழைக்கப்பட்டன். நேச நாடுகளோடு ஸ்பெயின், போர்ச்சுகல், டென்மார்க், நார்வே, பெல்ஜியம், செர்பியா, மாண்டிநீக்ரோ, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் நாளடைவில் சேர்ந்துகொண்டன. அமெரிக்கா 1917ஆம் ஆண்டில் அவைகளோடு சேர்ந்தது. அச்சு நாடுகளோடு துருக்கி, பல்கேரியா, கிரீஸ், ருமேனியா, ஸ்வீடன் ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. இங்ஙனம் தோன்றிய ஐரோப்பிய இரு கட்சிகளுள் அச்சு நாடுகளே மிகவும் வலிமை பெற்றவைகளாக இருந்தன. பிரிட்டன் மிக வலிமை குன்றிய நாடாக ஆரம்பத்தில் இருந்தது. ஆனல், குடியேற்ற நாடுகளின் உதவியாலும் அமெரிக்காவின் உதவியாலும் அது நாளடைவில் மிக வலிமைபெற்ற நாடாயிற்று.

போரின் தன்மை (Character of the War)

ஐரோப்பாவில் நடைபெற்ற போர்கள் எதிலும் காணப்படாத சில சிறப்பியல்புகள் முதல் உலகப் போரில் காணப்பட்டன. வானவூர்திகள் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டன. அப்போதுதான் எதிரிகளின் நடமாட்டங்களை வேவு பார்க்கவும், அவர்களின் ஆயுத உற்பத்திச் சாலைகளைப் படம் பிடிக்கவும் அவை பெரிதும் பயன்பட்டன. ஜெர்மானியர் 'ஜெப்லின்' என்ற இராக்கத விமானங்களைக் கொண்டு பிரிட்டனைத் தாக்கினர். எதிரிகளைத் திக்குமுக்காடச் செய்து கொல்லக்கூடிய நச்சுப் புகை (**Poison gas**) முதன் முதலில் பயன்படுத்தப் பட்டதும் இப்போரில்தான். டாங்கிகள் (**Tanks**) என்ற இராக்கதப் பீரங்கிகளும் இப்போரில் புதுமையாகப் பயன்படுத்தப்பட்டன. ஆழமான குழிகளில் மறைந்துகொண்டு போர் புரியும் அகழிப் போர்முறை (**Trench warfare**) வழக்காற்றுக்கு வந்ததும் இக் காலத்தில்தானுகும். கடற் போரிலும் ஜெர்மானியர்கள் 'யு' படகு, நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றைப் புதிய முறையில் பயன்படுத்தினர். ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்கு மிடையே ஏற்பட்ட போர் பன்னாட்டுப் போராக வடிவெடுத்தது. ஏராளமான சாதாரண மக்கள் (**Civilians**) இப் போரில் பலியாயினர். மொத்தம் ஏழரை மிலியன் பேர் மாய்ந்தனர்; பதினைந்து மிலியன் மக்கள் காயமுற்றனர்.

மேற்குப் போர்முனை (Western Front), *1914*

ஜெர்மானியரின் குறிக்கோள் ஃபிரான்சை முறியடிக்கவேண்டும் என்பதாகும். அதன்பின் அவர்கள் ரஷ்யாவின் மீது பாய எண்ணினர். எனவே, பெரும் படைப் பகுதிகள் (**Regiments**)

ஃபிரான்சை நோக்கிப் புறப்பட்டன. அவற்றுள் நான்கு பெல்ஜியத்தினூடே சென்றன. 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் லீஜ் (Liege) என்ற பெருநகரும், பிரசெல்ஸ் (Brussals) என்ற பெல்ஜியத் தலைநகரும் வீழ்ச்சியுற்றன. பிரிட்டிஷ் வீரர்களும் பெல்ஜியத் துருப்புகளும் நாமூர் (Namur) என்னுமிடத்தில் ஜெர்மன் படைகளை எதிர்த்துத் தோற்றன. வான் கிளக் (Van Kluck) என்ற தளகர்த்தரின் தலைமையில் ஜெர்மன் படைகள் பாரிஸை நோக்கி விரைந்தன. நகருக்குப் பதினைந்து மைல் தொலைவில் அவரது படை நெருங்கி விட்டது. ஃபிரெஞ்சு அரசாங்கம் போர்டா (Bourdeaux) என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. ஜாஃப்ரே (Joffre) என்ற ஃபிரெஞ்சுத் தளகர்த்தர் தமது துருப்புகளுக்குப் புதிய ஊக்கமூட்டினார். எதிரிக்குப் பணிவதைவிடப் போர்செய்து மடிவதே மேல் என அவர் தம் வீரர்களுக்குக் கூறி, அவர்களை மார்ன் நதிக்கரைக்கு நடத்திச்சென்று ஜெர்மானியர்களோடு போரிட்டார். இம் மார்ன் நதிக்கரைச் சண்டைக்குப்பின் ஜெர்மானியரின் முன்னேற்றம் தடைபட்டது. அகழிப் போர் முறை ஆரம்பித்தது. ஆழமான பள்ளங்களில் மறைந்துகொள்வதும், திடீரென வெளிப்போந்து போரிடுவதும் ஆகிய இம்முறையால் ஜெர்மானியர் சிறிது சிறிதாகவே முன்னேற முடிந்தது.

அதற்குப்பின் ஜெர்மானியர் டன்கர்க் (Dunkirk), கலே (Clais), ஆஸ்டெண்ட் (Ostend) போன்ற கால்வாய்த் துறைமுகங்களைத் (Channel Ports) தாக்கினர். பிரிட்டனுக்கும் ஃபிரான்சுக்குமிருந்த போக்குவரத்தைத் தடைசெய்வதே அப்படையெடுப்பின் நோக்கமாகும். ஆனால், ஜெர்மானியரை பெல்ஜியத் துருப்புகள் ஆன்ட்வெர்ப் (Antwerb) நகரில் எதிர்த்துக் கடுமையாகப் போர் புரிந்தன. முடிவில் அந்நகரை ஜெர்மானியர் கைப்பற்றினர். பெல்ஜியருக்கு உதவி செய்ய பிரிட்டிஷ் துருப்புகள் ஏராளமாக அனுப்பப்பட்டன; எனினும், பயனேதும் இல்லை. யைப்ரஸ் (Ypres) என்ற இடத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் மிக உறுதியாக நின்று போர் புரிந்தன. அதற்குள் மாரிக்காலம் வந்துவிட்டது. எனினும், பெல்ஜியம் முழுவதும், ஃபிரான்சின் செல்வமிக்க வடகிழக்குப் பகுதியும் ஜெர்மனியின் வசமாயின.

கிழக்குப் போர்முனை (Eastern Front) 1914-15

கிழக்குப் பகுதியில் ஜெர்மனியை ரஷ்யா எதிர்த்தது. ரஷ்யப் படைகள் கிழக்குப் பிரஷ்யாவின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன. வான் ஹிண்டன்பர்க் (Von Hindenburg), லூடன் டார்ஃப் (Ludon Dorff) என்ற இரு ஜெர்மன் தளகர்த்தர்களும் ரஷ்யர்களை டேனன்பர்க் (Tannenburg) என்னுமிடத்தில் படு

தோல்வியடையச் செய்தனர். ரஷ்யர்கள் கிழக்குப் பிரஷ்யாவி னின்றும் விரட்டியடிக்கப்பட்டனர். அதன்பின் ஹிண்டன்பர்க், ரஷ்யப் போலந்தைப் படையெடுத்தார் (1915). அதன் தலைநகர மான வார்ஸா (Warsaw) எளிதில் ஜெர்மனியோடு சேர்ந்தது (1915). டார்டனல்ஸ் ஜலசந்தியைக் கைப்பற்றத் துருக்கி இரு முறை முயன்று தோல்வி யடைந்தது. கேலிபொலி தீபகற்பத் தையும் (Gallipoli Peninsula) சூயஸ் கால்வாயையும் அது பிடிகக முயன்று தோற்றது. ஆனால், ஜெர்மானியர் லிதுவேனியா, கேலிஸியா (Galicia), ஹங்கேரி போன்ற இடங்களிலிருந்து ரஷ்யர்களை விரட்டியடித்தனர். 1915இல் பல்கேரியா ஜெர்மனி யோடு சேர்ந்தது. இரு நாட்டுப் படைகளும் சேர்ந்து செர்பியா வைக் கைப்பற்றிக்கொண்டன. 1915இல் இத்தாலியானது இங்கி லாந்தோடு ஓர் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு, அச்சு நாடுகளின் கூட்டுறவினின்றும் விலகி, நேச நாடுகளோடு சேர்ந்து கொண்டது. இஸ்ட்ரியா (Istria) தீபகற்பமும், ஆல்ப்ஸ் மலையி லிருந்த பிரென்னர் கணவாயும் (Brenner Pass) டால்மேஷியக் கடற்கரையும் (Dalmation Coast) இத்தாலிக்குக் கொடுக்கப்படு மென நேச நாடுகள் உறுதி கூறின. இதைக்கண்ட ஆஸ்திரியா, இத்தாலியை எதிர்த்து ஒரு பெரும் படையை அனுப்பியது. வெனிஸ் நகரை ஆஸ்திரியத் துருப்புகள் கைப்பற்றின. இத்தாலி மேலும் முன்னேற முடியாமல் தவித்தது.

கடற் போர் (Sea Warfare), *1914-17*

தொன்றுதொட்டுக் கடற் போரில் வெற்றியே எய்திவந்த பிரிட்டன், நிலப் போரைவிடக் கடற் போரில்தான் அதிக கவனம் செலுத்தியது. ஜெர்மனியின் கப்பற்படையானது கீல் கால்வாய், ஹெலிகோலாந்து, பால்டிக் கடல் ஆகிய இடங்களில் அடைபட் டுக் கிடந்தன. எனவே, ஆங்கிலேயர் ஏராளமான கடற் கண்ணி களை (Mines) அட்லாண்டிக், பால்டிக் கடற் கரையோரங்களில் தூவி, ஜெர்மன் கப்பல், துறைமுகங்களிலிருந்து வெளிவரா வண்ணம் தடுத்தனர். இதைக் கண்ட ஜெர்மானியர் நீர்மூழ்கிக் கப்பல்களை ஏராளமாகப் பயன்படுத்தி ஆங்கில வியாபாரக் கப்பல் களை நாசம் செய்தனர். புகழ்பெற்ற எம்டன் (Emden) என்ற நீர்மூழ்கிக் கப்பலானது இந்தியப் பெருங்கடலிலும் பசிபிக் பெருங் கடலிலும் நுழைந்து ஏறக்குறைய இருபது கப்பல்களை மூழ்கடித் தது. அவற்றுள் லூசிடானியா என்ற கப்பலும் ஒன்றாகும். அதில் இறந்தவர்களில் 128 பேர் அமெரிக்கர்கள். இதையெல்லாம் கண்ட அமெரிக்க ஜனாதிபதி வில்சன், கெய்சருக்கு எச்சரிக்கை விடுத்து ஒரு தந்தி அடித்தார். கெய்சர் தனது தவற்றை யுணர்ந்தவர் போல் நடித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இனியும் அவ்விதத்

தவறு நேராமல் தான் பார்த்துக் கொள்வதாகவும், முன்னெச்சரிக்கையின்றி எந்தக் கப்பலும் தாக்கப்படமாட்டாது என்றும் வாக்குறுதியளித்தார்.

1916ஆம் ஆண்டில் ஜட்லண்டுக்கு (Jutland) அருகே ஜெர்மானியருக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே ஒரு பெருங் கடற்போர் நிகழ்ந்தது. இரு தரப்பின் முக்கியக் கப்பற் படைகளும் இப் போர்களத்தில் கலந்துகொண்டன. பிரிட்டிஷார் பத்தொன்பது கப்பல்களையும் 6,274 வீரர்களையும் இழந்தனர்; ஜெர்மனி 11 கப்பல்களையும் 2,545 வீரர்களையும் இழந்தது. தொடர்ந்து போர் நடைபெற்றிருந்தால் ஜெர்மன் கப்பற் படை முழுவதையுமே பிரிட்டிஷ் கப்பற் படையானது அழித்திருக்கும். ஆனால், அதற்குள் கதிரவன் மேற்கடலுள் குளித்துவிட்டான். ஜெர்மன் படையானது இரவில் தப்பி ஓடிவிட்டது. இப்போரில் யாருக்கும் வெற்றி கிட்டவில்லை.

1917ஆம் ஆண்டில் கெய்சர் மீண்டும் கட்டுப்பாடற்ற முறையில் நீர்மூழ்கிக் கப்பற் போரை நடத்தலானார். பிரிட்டனை நோக்கிச் செல்லும் எல்லாக் கப்பல்களையும் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் தாக்க ஆரம்பித்தன. ஒளி பொருந்திய கோடுகள் வரையப்பட்ட அமெரிக்கக் கப்பல்கள் மட்டும் வாரத்துக்கொன்று வீதம் பிரிட்டனுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டன. ஏனைய கப்பல்கள் ஏராளமாக நாசமாக்கப்பட்டன. அமெரிக்காவுக்குச் சொந்தமான பல கப்பல்களும் நாசமடைந்தன. 1917ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஃபலாபா (Falaba) என்ற பெரும் பிரிட்டிஷ் கப்பலும் மே மாதத்தில் குல்ஃபிலைட் (Gulflight) என்ற அமெரிக்கக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. இத்தகைய கட்டுப்பாடற்ற போராலேயே அமெரிக்கா உலகப் போரில் குதிக்க நேர்ந்தது. இடைவிடாத நீர்மூழ்கிக் கப்பற் போரின் காரணமாக பிரிட்டனுக்குள் உணவுப் பொருள் வருவதுகூடத் தடைப்பட்டது. பட்டினியால் பிரிட்டிஷ் மக்கள் வாடலாயினர். அவர்களின் துயர் துடைக்க லாயிட் ஜார்ஜ் என்னும் பிரதமர் கன்வாய் (Convoy) முறையைக் கையாண்டார். அதன்படி வியாபாரப் பண்டங்களைத் தாங்கி வரும் கப்பல்களுக்கு ஆங்கிலக் கப்பற் படையானது பாதுகாப்பளித்தது. அப்படியிருந்தும் ஒருசில வியாபாரக் கப்பல்களை ஜெர்மானியர் தாக்கி அழித்தனர். ஆனால், பெரும்பான்மையான கப்பல்கள் இங்கிலாந்தை அடைந்தன. உணவுக் கட்டுப்பாடு (Food Ration) முறையைக் கையாண்டு லாயிட் ஜார்ஜ் மக்களைப் பஞ்சத்தினின்றும் காப்பாற்றினார். அதே சமயத்தில் ஜெர்மனிக்குள் எந்தப் பொருளும் செல்ல விடாமல் ஆங்கிலக் கப்பற்படை

தடுத்தது. அதன் வெற்றிகரமான கடல் முற்றுகையாலேயே ஜெர்மனி இறுதியில் பணிந்தது எனக் கூறலாம்.

ஆங்கிலேயரின் திறமைமிக்க கடல் முற்றுகையால் ஜெர்மானியர் தங்களது குடியேற்ற நாடுகளுக்கு இராணுவ உதவி எதையும் அனுப்ப முடியாமல் போயிற்று. எனவே, டோகோலாந்து, காமரூன் என்ற பிரதேசங்களைப் பிரிட்டனும், ஃபிரான்சும் கைப்பற்றிக்கொண்டன. போத்தா **(Botha)**, ஸ்மட்ஸ் **(Smuts)** என்ற தென் ஆப்பிரிக்கத் தளகர்த்தர்கள் ஆங்கிலேயரின் சார்பாகத் தென் மேற்கு ஆப்பிரிக்காவைக் கைப்பற்றிக்கொண்டனர். சீனாவில் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த கியாசௌ **(Kiachow)** என்ற துறைமுகத்தையும் பசிபிக் தீவுகளையும் ஜப்பான் பிடித்துக் கொண்டது. ஆஸ்திரேலியா நியூகினியாவைக் கைப்பற்றிக் கொண்டது.

நிலப்போர் 1916-18

1916இல் ஜெர்மானியர் மேற்குப் போர்முனையில் எப்படியாவது வெற்றி பெற்றுவிடத் திட்டமிட்டனர். தொடர்ந்து சில மாதங்களுக்குப் போர் நடைபெற்றால் அதைப் பொறமாட்டாமல் ஃபிரெஞ்சுக்காரர் மனவுறுதி குலைந்து சரணடைந்துவிடுவர் என அவர்களின் தளகர்த்தரான ஃபால்கென் ஹெய்ன் **(Falken Hayn)** என்பவர் நம்பினார். அந்த நம்பிக்கையுடன் அவர் ஃபிரெஞ்சுக் காரர்களை வெர்டுன் **(Verdun)** என்னுமிடத்தில் தன் முழுப்பலத்தோடும் தாக்கினார். பிப்ரவரி மாதத்தில் ஆரம்பித்த போர் ஜூலை வரை இடைவிடாது நடைபெற்றது. எனினும், ஃபிரெஞ்சுக்காரர் உறுதியுடன் வெர்டுன் கோட்டையைக் காத்தனர். ஜெர்மானியர் நச்சுப் புகையைப் பயன்படுத்திப் பார்த்துங்கூட ஃபிரெஞ்சுக் காரர்களின் உறுதி தளரவில்லை. இருதரப்பிலும் ஏராளமான வீரர்கள் மடிந்தனர்.

ஃபிரான்சுக்கு உதவி செய்யவேண்டி ரஷ்யர்கள் ஆஸ்திரியாவைப் படையெடுத்தனர். கேலிசியாவில் அவரது துருப்புக்கள் வெகுதூரம் முன்னேறி 3,00,000 ஜெர்மன் வீரர்களைக் கைது செய்தனர். இத்தாலியும் ஆஸ்திரியாவின் சில பகுதிகளைத் தாக்கிக் கைப்பற்றியது. இங்கிலாந்து, ஜெர்மானியரை எதிர்க்க ஒரு பெரும் படையை ஐரோப்பாவுக்கு அனுப்பிவைத்தது. ஏராளமான வெடிகுண்டுகளையும் அது ஃபிரான்சுக்குக் கொடுத்துதவியது. சோம் **(Somme)** நதிக் கரையில் பிரிட்டிஷ் படைகள் மிகக் கடுமையாகப் போர்புரிந்தன. இடைவிடாது பொழியப்பட்ட குண்டுகளால் கிராமங்கள் எல்லாம் தரைமட்டமாயின. மரம், மட்டை,

செடி, கொடிகள் கருகிக் காய்ந்து போனமையால் அந்தப் பிரதேசம் ஒரு வரண்ட பாலைவனம் போல் காட்சியளித்தது. ஒவ்வோர் அங்குலத்திற்கும் பிரிட்டிஷ் படைகள் மிக உக்கிரமாகப் போரிட்டன. பிரிட்டிஷ் தரப்பில் நான்கு இலட்சம் வீரர்களும், ஜெர்மனியின் பக்கம் ஐந்து இலட்சம் படை வீரர்களும் மாய்ந்தனர். ஹேய்க் (**Haig**) என்ற ஆங்கிலத் தளகர்த்தர் இப்போரில் தமது பெரு வீரத்தையும் மன வுறுதியையும் நன்கு புலப்படுத்தினர்.

இந்நிலையில் ருமேனியா, **1916**ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நேச நாடுகளோடு சேர்ந்துகொண்டது. உடனே ஜெர்மன் துருப்புகள் சோம் நதிக் கரையிலிருந்து ருமேனியாவுக்குப் புறப்படலாயின. ருமேனியர்கள் ரஷ்யர்களின் உதவியை எதிர்பார்த்து ஏமாந்தனர். எனவே, ஜெர்மானியர் ருமேனியாவின் பெரும் பகுதியைப் பிடித்துக்கொண்டனர். ருமேனியாவின் வீழ்ச்சி நேச நாடுகளுக்கு ஒரு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ரஷ்யாவும் வீழ்ச்சியடையும் நிலையிலிருந்தது. மேலும், துருக்கியப் படைகள் குட் (**Kut**) என்னுமிடத்தில் பிரிட்டிஷ் படைகளைத் தோற்கடித்தன. மெஸபொடோமியா, பாலஸ்தீனம் ஆகிய இடங்களில் பிரிட்டிஷாரின் முன்னேற்றம் தடைப்பட்டது. ஆனால். பிரிட்டிஷ் தளபதி லாரன்ஸ் (**Lawrence**) என்பவரது தூண்டுதலால் அராபியர்கள் துருக்கியை எதிர்த்துக் கலகம் செய்தனர், துருக்கியின் வீழ்ச்சி அதிலிருந்து ஆரம்பித்தது. எனினும், **1918**இல் ஜெர்மனிக்கு நிலைமை எல்லா வகையிலும் சாதகமாக இருந்தது. வீழ்ச்சியுறும் நிலையிலிருந்த ரஷ்யாவுக்கு மேலுதவி அனுப்ப பிரிட்டிஷார் முயன்றும் பயனில்லை. ஸலோனிகா (**Salonika**) என்ற இடத்திலிருந்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளின் துருப்புகள் புறப்பட்டுச் சென்று டார்டனெல்ஸைக் கடந்து கான்ஸ்டான்டிநோபிலைக் கைப்பற்றச் செய்த முயற்சி வீணுயிற்று. மேல் உதவி கிட்டாததால் ரஷ்யர்கள் மனமுடைந்தனர். தங்களது தோல்விகளுக்கு எல்லாம் ரஷ்ய ஃஸார் மன்னரும் அவரது துன்மந்திரியான ரஷ்புடீனுமே (**Rushputin**) காரணமென நினைத்த மக்கள் **1917**இல் முடியரசை ஒழித்துக் குடியரசை நிறுவினர். கெரென்ஸ்கி (**Kerensky**) என்ற மிதவாதி முதலில் குடியரசின் தலைவரானர். விரைவிலேயே அவரது தலைமையில் நம்பிக்கை இழந்த மக்கள் லெனின் என்பாரைத் தலைவராக்கினர். பொதுவுடைமைக் கொள்கையுடைய லெனின், உலகப் போர் முதலாளிகளின் போர் என்று கூறி, அதிலிருந்து ரஷ்யாவை விடுவிக்க விரும்பினர். அவரது முயற்சியால் ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் பிரெஸ்ட்லிடோவ்ஸ்க் (**Brast Litovske**) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. **1918**இல் பின்லாந்து, எஸ்தோனியா, கூர்லாந்து (**Courland**),

ரஷ்யப் போலந்து, யுக்ரேன் (Ukrain), காக்கேஷியா (Caucassia) ஆகிய பகுதிகளை ரஷ்யா ஜெர்மனிக்குத் தந்ததோடு பில்லியன் மார்க்குகளை நஷ்ட ஈடாகவும் வழங்கியது

மேற்குப் போர்முனையிலும் 1917ஆம் ஆண்டில் நேச நாடுகளுக்குத் தோல்விகளே காத்திருந்தன. ஜாஃப்ரே என்ற ஃபிரெஞ்சுத் தளகர்த்தருக்குப் பதிலாகப் புதிதாக நியமிக்கப்பட்ட நிவெல்லி (Nivelle) என்பார் செமின்டெ டேம்ஸ் (Chemindes Dames) என்னுமிடத்தில் ஜெர்மானியரிடம் படுதோல்வி யடைந்தார். ஃபிரெஞ்சுப் படையில் அவருக்கு எதிராகக் கலகம் ஏற்பட்டது. எனவே, அவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். யைப்ரஸ் (Ypres) என்னுமிடத்திற்கருகே பிரிட்டிஷ் படைகளுக்கும் ஜெர்மானியருக்கும் கடும் அகழிப் போர் நடந்தது. ஹெய்க் என்ற சேனாதிபதியின் பிடிவாதத்தால் 3,00,000 வீரர்கள் மடிந்தனர். ஆனால், அதன் விளைவாகக் கைப்பற்றப்பட்டது ஒன்றுக்கும் உதவாத ஒரு சிறு நிலப்பகுதியேயாகும். அடுத்தாற்போல் காம்பிராய் (Cambrai) என்னுமிடத்தில் பிரிட்டிஷார் ஜெர்மானியரை எதிர்த்தனர். அங்கு அவர்கள் டாங்கிகள் (Tanks) என்னும் இராக்கத பீரங்கிகளைக் கொண்டு ஜெர்மன் அகழிகளைத் தாக்கி அழித்தனர். டாங்கிகளை முதன்முதல் கண்ட ஜெர்மானியர் முதலில் பின்வாங்கினர். ஆனால், விரைவிலேயே அவர்கள் தாங்கள் இழந்த இடங்களை மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். செர்பியா, ருமேனியா இவற்றை ஏற்கெனவேயே வென்ற ஜெர்மானியர் 1917ஆம் ஆண்டில் இத்தாலியையும் கைப்பற்றும் தறுவாயிலிருந்தனர். கேப்போரெட்டா (Caporetto) என்னுமிடத்தில் அவர்கள் இத்தாலியப் படையை வென்று வெனிஸ் நகர் நோக்கி முன்னேறினர். பிரிட்டிஷ், ஃபிரெஞ்சுப் படைகள் உடனே இத்தாலிக்கு உதவிக்கு அனுப்பப்பட்டன.

மேற்சொன்ன தோல்விகளுக்கெல்லாம் ஈடுகட்டும் வகையில் பிரிட்டிஷ் படைகள் மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் சில வெற்றிகளைப் பெற்றன. மாட் (Maud) என்னும் ஆங்கிலத் தளபதியின் முயற்சியால் குட் (Kut), பாக்தாத் (Bagdad) என்ற நகரங்கள் பிடிபட்டன. மெஸபொடோமியா ஆங்கிலேயர் வசமாயிற்று. பாலஸ்தீனத்தில் ஆலன்பி (Allenby) என்னும் தளகர்த்தர் பல வெற்றிகளைப் பெற்று இறுதியில் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.

இறுதிப் போர், 1918

ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் வரன்முறையற்ற செயல்களால் வெகுண்ட அமெரிக்கா, 1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்

ஜெர்மன் மீது போர் தொடுத்திருப்பதாக அறிவித்தது. அமெரிக்கத் துருப்புகள் ஐரோப்பாவுக்கு வருவதற்குள் நேச நாடுகளைத் தோற்கடித்துவிடவேண்டுமென ஜெர்மானியர் திட்டமிட்டனர். ரஷ்யர்கள் பிரெஸ்ட்லிடோவ்ஸ்க் உடன்பாட்டை ஜெர்மனியோடு செய்துகொண்டதும் (1918 மார்ச்), கெய்சர் கிழக்குப் போர்முனையிலிருந்த எல்லாப் படைகளையும் மேற்குப் போர் முனைக்குப் போகும்படி உத்தரவிட்டார். தனது முழு பலத்துடன் ஜெர்மனி நேச நாடுகளைத் தாக்கியது. மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மூன்று கடுந்தாக்குதல்கள் நடைபெற்றன. மார்ச் மாதத்தில் ஜெர்மனியின் படைகள் பிரிட்டிஷ் படைகளை ஊடுருவிச் சென்று ஆமியன்ஸ் (Amiens) நகரை நெருங்கிவிட்டது. ஏப்ரல் மாதத்தில் யைப்ரஸ் நகரைக் கைப்பற்ற முயன்றது. மே மாதத்தில் மார்ன் நதியைக் கடந்து பாரிசுக்கு 40 மைல் தொலைவுக்குப் போய்விட்டது. ஆனால், அதற்குப் பின் ஜெர்மனியின் முன்னேற்றம் நின்றுவிட்டது. வீரர்கள் முழு பலத்தையும் பயன்படுத்திவிட்டு ஓய்ந்துபோய் விட்டனர். அவர்களிடையே உற்சாகம் காணப்படவில்லை. பிரிட்டிஷ் முற்றுகையினால் ஜெர்மன் படைகளும் வீரர்களும் தங்களுக்கு வேண்டிய இன்றியமையாப் பொருள்கள் கிடைக்காமல் வருந்தினர். புரட்சி மனப்பான்மை எங்கும் காணப்பட்டது. இச் சமயத்தே அமெரிக்கப் படை வீரர்களும் தளவாடங்களுடன் ஏராளமாக வந்து குவிந்தனர். நேசப் படைகளின் தலைவராக ஃபோச் (Foch) என்பார் நியமிக்கப்பட்டார். ஒரே தலைவராக இருந்தமையால் துருப்புகள் ஒற்றுமையுடன் இயங்கின. விரைவிலேயே நேசத் துருப்புகள் ஃபிரான்சையும் பெல்ஜியத்தின் பெரும் பகுதியையும் ஜெர்மானியரிடமிருந்து விடுவித்தன. பல்கேரியாவில் ஒரு கலகம் தோன்றி மக்கள் ஜெர்மனியை எதிர்த்தனர். நேச நாடுகளோடு பல்கேரியா சமாதானம் செய்துகொண்டது. கெய்சரும் சமாதானத்தை விரும்புவதாகத் தெரிவித்தார். வில்ஸன் என்ற அமெரிக்க ஜனாதிபதி 14 அம்சங்கள் கொண்ட ஒரு திட்டத்தை வெளியிட்டு அதை ஒப்புக்கொள்ளும்படி கெய்சரை வற்புறுத்தினார். இச் சமயத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று லீன்ஸ்டர் (Leinster) என்ற பிரிட்டிஷ் கப்பலைத் தாக்கி அழித்துவிட்டது. கெய்சர் கீல்கால்வாயிலிருந்த கப்பற் படையைத் தாக்குமாறு உத்தரவிட்டார். ஆனால், ஒருவரும் அவரது ஆணைக்குக் கீழ்ப்படியவில்லை. அவருக்கெதிராகக் கப்பற் படையில் ஒரு கலகம் ஏற்பட்டது. கெய்சர் முடிதுறக்க வேண்டுமென வில்சன் அறிவித்தார். இதையெல்லாம் கண்ட கெய்சர் 1918ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முடி துறந்தார். ஜெர்மனியில் ஒரு குடியரசேற்பட்டது. அது நேச நாடுகளோடு சமாதானம் செய்துகொள்ள முன்வந்தது. ஏனைய போர்முனை

களிலும் அச்சு நாடுகள் தோல்வியையே கண்டன. ஆலன்பி என்னும் பிரிட்டிஷ் தளகர்த்தர் டமாஸ்கஸ் நகரையும் (Damascus) கான்ஸ்டான்டிநோபிள் பட்டணத்தையும் கைப்பற்றினர். எனவே, துருக்கிய சுல்தான் பிரிட்டிஷாரோடு சமாதானம் செய்துகொள்ள முன்வந்தார். பிரிட்டிஷ் படைகளும், இத்தாலிய வீரர்களும் சேர்ந்து ஆஸ்திரியர்களைப் பியாவ் (Piave) என்னுமிடத்தில் தோற்கடித்து வட இத்தாலியினின்றும் அவர்களை விரட்டி விட்டனர். ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் சமாதானத்துக்கு இணங்கின. நவம்பர் மூன்றும் நாள் அவை நேச நாடுகளிடம் சரணடைந்தன. ஆஸ்திரிய மன்னரும் முடிதுறந்தார்.

தற்காலிகப் போர் நிறுத்த உடன்படிக்கை (Armistice 1918)

1918ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதியன்று இரவில் ஒரு ரயில்பெட்டியில் நடுக்காட்டுக்குள் ஜெர்மன் சர்க்கார் தற்காலிகப் போர் நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். அதன்படி நேச நாடுகளில் தங்கியிருந்த ஜெர்மன் துருப்புகளை 14 நாள்களுக்குள்ளும், ரைன் நதியின் இடக்கரையிலிருந்த துருப்புகளை 31 நாள்களுக்குள்ளும் திருப்பி அழைத்துக்கொள்வதாகவும், 5,000 துப்பாக்கிகள், 25,000 இயந்திரத் துப்பாக்கிகள், 1,700 ஆகாய விமானங்கள் ஆகியவற்றை நேச நாடுகளுக்குத் தருவதாகவும், போர்க் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதாகவும், நீர்மூழ்கிப் கப்பல்கள் அனைத்தையும், 10 போர்க் கப்பல்கள், 14 வேவு பார்க்கும் கப்பல்கள், 50 நாசகாரிக் கப்பல்கள் ஆகியவற்றையும் நேச நாடுகளிடம் ஒப்படைப்பதாகவும் ஜெர்மனி ஒப்புக்கொண்டது.

போர்க்காலத்து இங்கிலாந்தின் உள்நாட்டு அரசியல்

முதலாம் உலகப் போரின் காலத்தே இங்கிலாந்தை ஆட்சி புரிந்த பிரதமர்கள் ஆஸ்க்வித், லாயிட் ஜார்ஜ் என்ற இருவருமாவர். போர் ஆரம்பத்தில் பிரதமராயிருந்த ஆஸ்க்வித் போரை நடத்துவதற்கான திறமையும் உற்சாகமும் கொண்டவரல்லர். எனினும், அவர் தம்மாலானவரை முயன்று நாட்டைக் காப்பாற்றினர். முதல் வேலையாக கிச்சனர் பிரவுவைப் (Lord Kitchener) போர் அமைச்சராக நியமித்தார். கார்ட்டூமை வென்று புகழ் பெற்ற அவர் வயது முதிர்ந்தவராயிருந்தும், அனைவரது நன்மதிப்பையும் பெற்றிருந்தார். அவருடைய வார்த்தைகளுக்கு நாட்டில் நல்ல செல்வாக்கிருந்தது. எனவே, அவர் துணிந்து சில ஆலோசனைகளை வெளியிட்டார். போர் மூன்று மாதங்களில் முடிந்துவிடும் என்று பலரும் கூறியதை மறுத்து மூன்று ஆண்டுகள் நீடிக்குமென்று கூறி அதற்கேற்ப ஆயத்தங்களைச் செய்தார்.

இதிலிருந்து அவரது தொலைநோக்கு நன்கு புலனாகிறது. கிச்சனர் படைகள் (Kitchener Armies) என்ற படைகளை அவர் திறமையுடன் திரட்டினார். முதல் மாதத்திலேயே 5,00,000 தொண்டர்கள் அப்படையில் சேர்ந்தனர். 1916ஆம் ஆண்டுவரை போரை நடத்தப் போதிய வீரர்கள் முதல் $1\frac{1}{2}$ ஆண்டுகளிலேயே படையில் சேர்ந்துவிட்டனர்.

கூட்டு மந்திரிசபை (Coalition Ministry)

போரைத் திறம்பட நடத்த நாட்டில் உள்ள பலதரப்பட்டவர்களின் ஆதரவும் தேவை என்ற கருத்தினடிப்படையில் ஆஸ்க்வித் 1915ஆம் ஆண்டில் ஒரு கூட்டு மந்திரி சபையை அமைத்தார். அதில் கன்சர்வேடிவ் கட்சியினரும் இடம் பெற்றனர். அக் கட்சித் தலைவரான போனர்லா (Bonarlaw) என்பவர் குடியேற்ற நாட்டமைச்சராகப் பதவியேற்றார். பால்ஃபர் கடற்படைத் தலைவராக நியமனம் பெற்றார். மெக்கென்னா (Mekenna) கருவூல அமைச்சர் ஆனார். அவரது சேவை இங்கிலாந்திற்குப் பெரிதும் பயன்பட்டது. அவரது முயற்சியால் போருக்கு வேண்டிய குண்டுகளும் துப்பாக்கிகளும் ஏராளமாகச் செய்யப்பட்டன. கிச்சனரது முயற்சியால் 7 அணியாக இருந்த படை 70 அணிவகுப்புள்ளதாக மாறியது. மேலும் 1916இல் கட்டாய இராணுவச் சேவையை வற்புறுத்தும் சட்டமும் பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்டது. இராணுவச் சேவையைக் கட்டாயச் சேவையாகக் கட்டாயப்படுத்துதல் ஜனநாயக ஆட்சிக்கு விரோதமெனப் பலர் வாதித்தனர். சர் ஜான் சைமன் என்ற உள்நாட்டு அமைச்சர் கட்டாய இராணுவச் சேவையை எதிர்த்துத் தம் பதவியை ராஜினாமா செய்தார். எனவே, பல காரணங்களுக்காக இராணுவத்தில் சேர மறுப்பவர்களுக்கு அச் சட்டத்தினின்றும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், அவர்கள் போரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ததால் சிறையிலடைக்கப்பட்டனர்.

லாயிட் ஜார்ஜின் போர்காலக் காபினெட் (War Cabinet)

1916இல் கிச்சனர் பிரபு இறந்தார். எனவே, லாயிட் ஜார்ஜ் போர் அமைச்சர் பதவியை ஏற்றார். போரை நடத்துவதில் அவருக்கும் ஆஸ்க்வித்துக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆஸ்க்வித் போரை நடத்துவதற்கு அருகதையற்றவர் என்றும், அதற்குத் தனியே ஒரு காபினெட் ஏற்படுவது நல்லதென்றும் அதற்கு ஆஸ்க்வித்தைத் தவிர இன்னொருவர் தலைவராயிருக்க வேண்டுமென்றும் லாயிட் ஜார்ஜ் ஒரு யோசனை கூறினார். அந்த ஆலோசனையைப் பிரதமர் ஏற்றுக்கொள்ளத் தயங்கியதால் போர் அமைச்சர் தம் பதவியை ராஜினாமா செய்தார். அதை

யொட்டி வேறு சிலரும் ராஜினுமா செய்ய முன் வந்தனர். எனவே, மந்திரி சபை கலேந்தது. ஆஸ்க்வித் பிரதமர் பதவியினின்றும் விலகிக் கொண்டார். லாயிட் ஜார்ஜ் அப் பதவியை ஏற்ருர். 1916 முதல் 1922 வரை அவர் பிரதமராயிருந்தார். அவரது மந்திரிசபையில் போனர்லா, பால்ஃபர் போன்ற கன்சர்வேடிவ் கட்சியினரும் வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற தாராளக் கட்சியினரும் இடம் பெற்றிருந்தனர். போரைத் திறம்பட நடத்தி வெற்றி பெறுவதற்காக லாயிட் ஜார்ஜ் ஒரு சிறு போர்க் காபினெட் அமைத்து அதற்குத் தானே தலேவராக இருந்தார். அக் காபினெட்டானது போரைத் திறம்பட நடத்தி வெற்றி வாகை சூடியது. 1918இல் நடைபெற்ற தேர்தலிலும் லாயிட் ஜார்ஜ் வெற்றி எய்தினுர். எனவே, அதன் பின்னர் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அவர் பெரிதும் பங்கு கொண்டார்.

1918இல் ஏற்பட்ட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமானது 21 வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கியது. போர்க் காலத்தில் பெண்கள் பல துறைகளிலும் ஆற்றிய பணியை மெச்சியே மேற்படி சட்டம் தோன்றியது. பெண்களுக்கு உரிமையளித்த லாயிட் ஜார்ஜ், தொழிலாளர்களின் குறையைக் கவனிக்க முடியவில்லே. வேலேயில்லாத் திண்டாட்டம், வியாபார மந்தம் போன்ற பிரச்சினேகள் நாட்டில் மலிந்தன. மேலும், மந்திரி சபையின் ஐரிஷ் கொள்கையும் பலருக்குப் பிடிக்கவில்லே. எனவே, 1922ஆம் ஆண்டில் லாயிட் ஜார்ஜ் ராஜினுமா செய்தார். போனர்லா பிரதமர் பதவியேற்ருர். தமது ஆருண்டு ஆட்சிக் காலத்தில் லாயிட் ஜார்ஜ் போரின் பிற்பகுதியை வெற்றிகரமாக நடத்தியதோடல்லாது ஜெர்மனியோடு சமாதானமும் செய்துகொண்டார். ஐரிஷ் பிரச்சினேயையும் இந்தியச் சிக்கலேயும் அவர் தீர்த்துவைத்தார். அதனுல்தான் அவரது ஆட்சி புகழுடைய தொன்ருகக் கருதப்படுகிறது.

அயர்லாந்துப் பிரச்சினே, 1914-22

'கைக் கெட்டியது வாய்க்கெட்டவில்லே' என்ற பழமொழிக்கேற்ப 1914ஆம் ஆண்டு ஐரிஷ் சுயாட்சி மசோதா ஆங்கிலப் பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னும் அது அமுலுக்கு வர முடியாமல் போய்விட்டது. அதற்குள் உலகப் போர் மூண்டுவிட்டது. போர் சிறிது காலத்திற்கே நீடிக்குமென நினேத்த ஆஸ்க்வித் சர்க்கார், ஐரிஷ் சுயாட்சி மசோதாவைப் போருக்குப் பின் அமுல் நடத்திக் கொள்ளலாமென நினேத்து அதனே நிறுத்தி வைத்தனர். அயர்லாந்தினரும் தங்கள் பழம் பகைமையை மறந்து விட்டுப் போரில் முழு மனதுடன் ஈடுபட்டு ஆங்கிலேயருடன்

ஒத்துழைத்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் வலிய வந்து போரில் வீரராகச் சேர்ந்தனர். அவர்களது உற்சாகப் பெருக்கைக் கண்ட பிரிட்டிஷ் சர்க்காருக்கு அவர்கள் மீது ஐயப்பாடு எழலாயிற்று. அடுத்துக் கெடுக்கும் வேலையில் அவர்கள் எங்கு ஈடுபட்டு விடுவார்களோ என நினைத்த பிரிட்டிஷ் அரசாங்கம், அவர்களை ஏனைய வீரர்களோடு கலந்தே பிற நாட்டுக்கனுப்பினர். ஆனல் அயர்லாந்தியர் தங்களைத் தனித்தனிப் படைப் பகுதிகளாக அமைக்கவேண்டுமெனக் கோரினர். பிரிட்டிஷார் அதற்குச் சிறிதும் செவி சாய்க்கவில்லை. எனவே, சிறிது மறைந்திருந்த விரோதம் மீண்டும் தலைகாட்டலாயிற்று.

ஐரிஷ் புரட்சி இயக்கத்தினரான சின்ஃபெயின் (Sinn Fein) அல்லது 'நாம் நமக்கே' கட்சியினர், மீண்டும் மறைமுகமான சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். ஜெர்மானியர்களோடு அவர்கள் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தனர். போர்க் காலத்திலேயே அயர்லாந்தில் ஒரு குடியரசை நிறுவிவிட வேண்டுமென்பது அவர்தம் ஆசையாகும். இச் சதித் திட்டம் சிறிது சிறிதாக வெளிப்படலாயிற்று. பிரிட்டிஷ் சர்க்கார் இதைத் தடுக்கச் சில நடவடிக்கைகளை எடுத்தனர். ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலின் மூலம் அயர்லாந்துக்குள் நுழைந்த சர் ரோஜர் கேஸ்மெண்ட் (Sir Roger Gasement) என்ற புரட்சித் தலைவரொருவரை ஆங்கிலேயர் கைது செய்து சிரச் சேதம் செய்தனர். உடனே டப்ளின் நகரில் கலவரங்கள் தோன்றின. ஈஸ்டர் வாரத்தில் (Easter Week, 1916) தோன்றிய அக் கலகம் விரைவில் ஓய்ந்தது. அதில் தீவிரமாகப் பங்குகொண்டிருந்த ஒரு சில இளைஞர்கள், 'ஈஸ்டர் தியாகிகள்' (Martyrs of Easter) என ஐரிஷ் மக்களால் போற்றப்பட்டனர். 'நாம் நமக்கே' கட்சிக்குத் தென் அயர்லாந்து முழுவதிலும் நல்ல செல்வாக்கேற்பட்டது. 1918ஆம் ஆண்டில் போர் முடிந்து பொதுத் தேர்தல் நடைபெற்றபோது, 'நாம் நமக்கே' கட்சியினர் பெருவாரியாக வெற்றி பெற்றனர். ஐரிஷ் தேசியக் கட்சி இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. 'நாம் நமக்கே' கட்சியின் தலைவரான ஆர்தர் கிரிஃபித் (Arthur Griffith), மைக்கேல் காலின்ஸ் (Michael Collins) என்ற இருவரும் அயர்லாந்தின் தனிப்பட்ட குடியரசு அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினர். ஆங்கிலப் பாராளுமன்றத்தை அவர்கள் அலட்சியம் செய்துவிட்டு அயர்லாந்துக்குச் சென்று டெய்ல் அயரான் (Dail Eireann) என்ற ஒரு தனிச் சட்டசபையை ஏற்படுத்தினர். ஆங்கிலேயர்மீது விசுவாசம் காட்டிய அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதைக் கண்ட பிரிட்டிஷ் சர்க்கார் டப்ளின், பெல்ஃபாஸ்ட் (Belfast) ஆகிய இரு இடங்களிலும் இரு சர்க்கார்களைத் தோற்றுவிக்க முன்வந்தனர். அதன்படியே

பெல்ஃபாஸ்ட் நகரில் ஒரு புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நேரில் சென்று பெல்ஃபாஸ்ட் பாராளு மன்றத்தைத் திறந்து வைத்தார். ஆனால், தென் அயர்லாந்தியர் ஆங்கிலேயர்களின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள மறுத்துக் கலகம் செய்தனர். கலகத்தை பிரிட்டிஷார் மிகவும் கடுமையாக ஒறுத்தனர். கலகத்தை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட வீரர் கள் செய்த அட்டூழியங்களை அமெரிக்கர்களும், இங்கிலாந்தி லிருந்த தாராளக் கட்சியினரும் வன்மையாகக் கண்டித்தனர். இதைக் கண்ட லாயிட் ஜார்ஜ் சர்க்கார், ஐரிஷ் தலைவர்களை அழைத்து அவர்களோடு ஒரு சமாதானம் செய்துகொண்டது. தென் அயர்லாந்து தனிப்பட்ட சுயேச்சை நாடாக (Irish Free State) அமையலாமெனவும், ஏனைய டொமினியன்களைப் போல அதுவும் வட அயர்லாந்து அல்ஸ்டர் என்ற தனி நாடாக அமைய லாம் எனவும், பிரிட்டிஷ் பேரரசில் இருக்கலாம் எனவும் லாயிட் ஜார்ஜ் அறிவித்தார். 'நாம் நமக்கே' கட்சித் தலைவர்கள் அவ்வறி விப்பை ஏற்றுக்கொண்டு ஊர் திரும்பினர். ஆனால், ஏமன் டி வாலரா (Eamon De Valera) என்பவரது தலைமையில் ஏற்பட்ட தீவிரவாதக் கட்சியானது அச் சமாதான உடன்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்தது. அல்ஸ்டர் அயர்லாந்திலிருந்து பிரிக்கப்பட்ட தையும் சுதந்திரக் குடியரசு ஏற்படுத்தாமல் பிரிட்டிஷ் பேரரசில் இணைத்ததையும் டி வாலரா கட்சியினர் எதிர்த்தனர். எனவே, 'நாம் நமக்கே' கட்சியினரும், டி வாலரா கட்சியினரும் தமக்குள் போரிட்டுக்கொள்ள ஆரம்பித்தனர். இறுதியில் டி வாலரா வின் கட்சி வென்றது.

12. இரண்டாம் உலகப் பெரும் போர் (1939-45)

போரின் அடிப்படைக் காரணங்கள் : வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் குறைபாடுகள்—உலகப் பொருளாதார மந்தம்—சுயநலத் தேசீய உணர்ச்சி — சிறுபான்மையோர் பிரச்சினை — குடியேற்ற நாடுகளுக்காகப் போட்டி—சர்வ தேசச் சங்கத்தின் தோல்வி ; உடனடியான காரணங்கள் : ஹிட்லரின் வலுத் தாக்குதல்கள் ; போரின் தன்மை ; போரின் போக்கு : போலந்தின் வீழ்ச்சி — மேற்குப் போர்முனை-ஃபிரான்சின் வீழ்ச்சி—பிரிட்டன் போர் (1940-41)—இத்தாலியின் போர் முயற்சிகள்-கிரீஸ், ஆப்பிரிக்கா (1940-41)—ஜெர்மனியின் ரஷ்யப் படையெடுப்பு—ஜப்பானின் போர் முயற்சிகள்-அமெரிக்கத் தலையீடு—வட ஆப்பிரிக்காவில் வெற்றி (1942.43) — இத்தாலியின் சரணுகதி — ஜெர்மனியின் சரணுகதி—ஜப்பானின் சரணுகதி—சமாதான உடன்படிக்கைகள்.

முதலாம் உலகப் பெரும் போர் ஈன்றெடுத்த குழவியே இரண்டாம் உலகப் பெரும் போராகும். வெர்சேல்ஸ் உடன்படிக்கை, தன்னை யறியாமலேயே இன்னொரு போருக்கு வித்திட்டுச் சென்றது. இரு பெரும் போர்களுக்குமிடைப்பட்ட காலத்தே அக் கரு நாளுக்கு நாள் வளர்ந்துவந்ததை யாவருமறிவர். முதல் உலகப் பெரும் போர் ஏற்பட்டபோது பெரும்பாலான மக்கள் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனல், இரண்டாம் உலகப் போர் ஏற்படக்கூடுமென்பதைப் பலரும் அறிந்தனர். ஏனெனில், ஜனநாயகத்தை உலகில் பாதுகாக்கவே உலகப் போர் நடைபெற்றது எனக் கூறிய வில்சனின் கூற்றுக்கு மாருக, போருக்குப் பிற்பட்ட உலகத்தில் வல்லரசுகளே வளர்ந்தன. ஹிட்லர், முசோலினி போன்ற யதேச்சாதிகாரிகள் தோன்றி ஜனநாயகத்துக்குச் சாவு மணியடிக்கப் போவதாக பறைசாற்றினர். போரிடுவதின் மூலமே மக்கள், உயர் மக்களாகப் மாற முடியுமென அவர்கள் வெளிப்படையாகக் கூறினர். எனவே, என்றேனுமொரு நாள் அவர்கள் தம் சொற்களை நடைமுறையில் கொணர முற்படுவர் என்பது

இரண்டாம் உலகப்போர் — ஜெர்மனியின் வெற்றிகள்



பற்றி யாருக்கும் ஐயமில்லை. ஹிட்லரின் வலுத்தாக்குதல்களே போருக்கு உடனடியான காரணங்கள் என்றாலும், அந்த ஹிட்லரை உருவாக்கிய சூழ்நிலைகளே போருக்கு அடிப்படைக் காரணங்களாயமைந்தன.

போரின் அடிப்படைக் காரணங்கள்

வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் குறைபாடுகள்

வெர்சேல்ஸ் சமாதான உடன்படிக்கைக்கு அடிப்படையாயிருந்ததாகச் சொல்லப்படுவது வில்சனின் பதினான்கு குறிப்புகள் (Wilson's Fourteen Points) ஆகும். ஆனால், உண்மையில் அக் குறிப்புகளில் சர்வதேசச் சங்கம் அமைத்தல் பற்றிய ஒன்றைத் தவிர வேறெதையும் அவ் வுடன்படிக்கை நடைமுறையில் கொணர்ந்ததாகத் தெரியவில்லை. முதல் உலகப் போர் ஏற்பட்டதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அது மீண்டும் தோன்றுவண்ணம் தடுக்கும் வழிவகைகளை வில்சன் வகுத்துத் தமது குறிப்புகளில் தந்திருந்தார். ஆனால், பாரிஸ் சமாதான மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் அக் குறிப்புகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டுத் தம் விருப்பம் போலவே நடந்தனர். ஃபிரெஞ்சு அமைச்சர் கிளெமன் ஷோவின் உள்ளத்தில், தம் நாட்டைச் சீர்குலைத்த ஜெர்மனியின் மீது பழிவாங்க வேண்டுமென்ற உணர்ச்சியே மேலோங்கி நின்றது. அவரால் உந்தப்பட்ட பாரிஸ் மாநாடு ஜெர்மனியின்மீது தாங்க முடியாத பளுவைச் சுமத்தியது. போரை ஏற்படுத்திய குற்றத்துக்காகப் போரினால் ஏற்பட்ட செலவனைத்தையும் ஜெர்மனியே மேற்கொண்டு ஈடுகட்ட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. அதற்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளை யெல்லாம் நேச நாடுகள் அபகரித்துக்கொண்டன. ஜெர்மனியிடமிருந்து டான்ஸிக் (Danzig) என்ற துறைமுகமும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனால் பால்டிக் கடல் மூலம் நடைபெற்ற ஜெர்மனியின் வியாபாரம் தடைப்பட்டது. மேலும், போலந்து நாட்டினர் கடலையடைவதற்காகப் பிரஷ்யாவின் ஊடே ஒரு வழியமைத்துத் தந்ததன் மூலம் நேச நாடுகள் ஜெர்மானியர் நிறைந்த கிழக்குப் பிரஷ்யாவையும் ஜெர்மனியையும் துண்டித்துவிட்டனர். ஜெர்மன் பிரதிநிதிகளைப் பாரிஸ் மாநாட்டில் அனுமதிக்காமலேயே அவர்களுக்கு விரோதமாகப் பல ஷரத்துகளும் நிறைவேற்றப்பட்டன. எய்தவனிருக்க அம்பை நோவதே போன்று, போருக்குக் காரணமான கெய்சரை விட்டு விட்டு, அவனது கருவிகளாயிருந்த ஜெர்மன் மக்களை நேச நாடுகள் கொடுமைப்படுத்தியது அவ்வளவு உசிதமாயில்லை. அதனால் ஜெர்மனியில் பொருளாதார சீர்கேடு ஆரம்பித்தது. பஞ்சமும்

பட்டினியும் மக்களை வாட்டின. வேலையின்மை எங்கும் தாண்டவ மாடிற்று. இந்நிலையைத் தக்க முறையில் பயன்படுத்திக்கொள்ள முன்வந்தார், ஹிட்லர். ஜெர்மன் மக்களின் அல்லல்களுக்கெல் லாம் மூலகாரணமான வெர்சேல்ஸ் உடன்படிக்கையைக் குழி தோண்டிப் புதைப்பதும், அவ்வுடன்படிக்கையை ஜெர்மனி மீது திணித்த பிரிட்டன் மீதும், ஃபிரான்சின் மீதும் பழிக்குப்பழி வாங்குவதும், நாட்டில் வேலையின்மையையும் பட்டினியையும் அறவே ஒழிப்பதுமே தனது குறிக்கோள் என ஹிட்லர் கூறிய போது, ஜெர்மானியர் அவரைத் தங்களைக் காக்க வந்த தெய்வ மெனக் கூறி வரவேற்றனர். வெர்சேல்ஸ் உடன்பாட்டின் குறை களைச் சுட்டிக்காட்டியே ஹிட்லர் தனது செல்வாக்கைப் பெருக் கிக் கொண்டார் என்பதில் ஐயமில்லை. அவ்வுடன்பாட்டால் மனக்குறைவுற்றவர்கள் ஜெர்மானியர் மட்டுமல்ல. இத்தாலியரும் அதனால் பெரிதும் ஏமாற்றமுற்றனர். நேச நாடுகளுக்கு உதவி செய்ததால் அவர்கள் பெற எண்ணிய திரிபோலி, டால்மேஷியக் கடற்கரை முதலியன அவர்களுக்குப் போருக்குப்பின் கிடைக்க வில்லை. போரில் கலந்துகொண்டதால் இலாபத்துக்குப் பதில் நஷ்டமே விளைந்ததைக் கண்ட இத்தாலியர் நேச நாடுகளை வெறுத் தனர். அவ்வெறுப்பைப் பயன்படுத்திக்கொண்டு வளர்ந்தவரே முசோலினி. இங்ஙனம் வெர்சேல்ஸ் உடன்படிக்கையினாலேற்பட்ட அதிருப்தியில் முளைத்த ஹிட்லரும் முசோலினியுமே போருக்கு மூல காரணகர்த்தாக்களாயினர்.

உலகப் பொருளாதார மந்தம் (World Economic Depression) 1929-34

உலகப் போர் நடைபெற்ற போதும், அதற்குப் பின்னும் ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் வேண்டிய பொருள்களை உற் பத்தி செய்து அளித்த நாடு அமெரிக்காவாகும். அதனால் அங்கு செல்வம் கொழித்தது. நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே சென்ற செல்வத்தை என்ன செய்வதெனத் தெரியாமல் அமெரிக்கா தாராளமாகப் பொருளை ஐரோப்பிய நாடுகளுக்குக் கடனாக அள்ளி அள்ளி வழங்கியது. அக் கடனைக் கொண்டே போரில் தோல்வி யுற்ற ஜெர்மனி தனது தொழில் வளத்தைச் சீரமைத்துக் கொண்டு நஷ்ட ஈட்டுப் பணத்தையும் ஓரளவு கட்டிக்கொண்டு வந்தது. ஆனால், எதிர்பாராத விதமாக 1929ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஒரு பெரும் வியாபார மந்தம் (Trade Depression) ஏற்பட்டது. ஊக வாணிபத்தில் மக்கள் அளவுக்கு மீறி ஈடுபட்ட தால் பங்குச் சீட்டுகளின் (Shares) விலை விஷம்போல் ஏறியது. விலை உச்ச நிலையடைந்தபின் ஏதோ நம்பிக்கைக் குறைவின் காரணமாகப் பங்குகளை மக்கள் ஏராளமாக விற்க முன்வந்தனர்.

அவற்றின் விலை மளமளவெனக் குறைந்தது. மக்கள் பங்குச் சீட்டுக்களிலும் பாங்குகளிலும் போட்ட பணத்தைத் திருப்பி எடுக்கப் பெருவாரியாக முன்வந்தனர். அப்பணமெல்லாம் வெளிநாடுகளில் கடன் கொடுக்கப்பட்டிருந்ததால் அமெரிக்க பாங்குகள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கூடியவரை பணத்தைத் திரும்பப் பெற முயன்றன. அதனால் ஐரோப்பிய நாடுகளில் பாங்குகள் பல சடசடவென முறிந்தன. அதையொட்டி அமெரிக்க பாங்குகளும் பல மூடப்பட்டன. எங்கும் பொருளாதார நெருக்கடியும் வியாபார மந்தமும் ஏற்பட்டன. இந் நெருக்கடியைச் சமாளிக்க அமெரிக்கா அந்நிய நாடுகளுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தியது. அன்னியர், அமெரிக்காவில் குடியேறுவதையும் தடுத்தது. ஆகவே, அல்லலுற்ற ஐரோப்பியருக்குப் புகலிடமாக அமெரிக்கா இருந்ததும் நின்று போயிற்று. பொருள்களின் விலைகளை யுயர்த்த அமெரிக்க அரசாங்கம் வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்கள்மீது அதிக வரி விதித்தது. உள்நாட்டுப் பொருள்கள் பலவற்றை வேண்டுமென்றே அழித்து, அது விலைவாசியைக் குறையாமல் பார்த்துக்கொண்டது. உணவுப் பொருள்களும் இறைச்சியும் அமெரிக்காவில் பாழாக்கப்பட்ட அதே நேரத்தில் ஐரோப்பாவில் மக்கள் உணவின்றி வாடினர். பிரிட்டனும் வியாபார மந்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1925இல் அது தங்க நாணயத் திட்டத்துக்கு மீண்டது. தங்கத்தின் விலையானது 1914இல் இருந்த நிலையில் நிர்ணயிக்கப்பட்டது. அதனால், பிரிட்டிஷ் நிலக்கரி, இரும்பு போன்றவைகளின் விலைகள் உயர்ந்தன. எனவே, அவற்றைப் பிற நாடுகள் வாங்க மறுத்தன. மேலும் வியாபார மந்தம் காரணமாக ஒவ்வொரு நாடும் பிற நாட்டுப் பொருள்கள் மீது சுங்க வரிகளை ஏற்ற ஆரம்பித்தது. எனவே, பிரிட்டிஷ் பொருள்களின் விற்பனை குறைந்தது. ஏற்றுமதி குறைந்ததால் பிரிட்டிஷ் கப்பற்றொழிலும் பாதிக்கப்பட்டது. அக்கரை நாடுகளில் பிரிட்டன் போட்டிருந்த முதலுக்குத் தக்க இலாபம் கிடைக்கவில்லை. எனவே, பிரிட்டன் 1931இல் தங்க நாணயத் திட்டத்தைக் கைவிட்டது மட்டுமன்றித் தடையிலா வாணிகக் கொள்கையையும் கைவிட்டது. பிற நாட்டுப் பொருள்கள் மீது பெருமளவு சுங்க வரியை விதித்தது. 1933இல் ஏற்பட்ட ஒட்டாவா ஒப்பந்தப்படிக் குடியேற்ற நாட்டுப் பொருள்கள் மீது மட்டும் வரி ஓரளவு குறைக்கப்பட்டது. ஆனால், பிற நாடுகளைப் பொறுத்த வரையில் பாதுகாப்புக் கொள்கையை பிரிட்டன் கடைப்பிடித்ததால் அவை பெரிதும் துன்புற்றன. அமெரிக்க உதவி நின்றதன் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது ஜெர்மனிதான். 1931இல் அங்கு ஒரு பெரும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. எனவே, போர் நஷ்டஈட்டைத் தான் தரமுடியாதென ஜெர்மனி அறிவித்து விட்டது.

சுய நலத் தேசீய உணர்ச்சி

தேசீய இனங்கள் தனித்தனி நாடாக விளங்கவேண்டுமென்ற உணர்ச்சியைப் பெரிதும் மதித்த வெர்சேல்ஸ் உடன்பாடு பல சிறிய நாடுகளைப் பால்கன் தீபகற்பத்தில் தோற்றுவித்தது. அதே சமயம் பொருளாதாரத் துறையில் எல்லா நாடுகளும் ஒத்துழைக்க சர்வதேசச் சங்கம் ஒரு வாய்ப்பளித்தது. ஆனால், அரசியல் துறையில் இவ்வொத்துழைப்பு காணப்படவில்லை. ஒவ்வொரு நாடும் தனது சுயநலத்தையே பெரிதாய்க் கொண்டு செயல்பட ஆரம்பித்தது. ஒவ்வொன்றும் தன்னிறைவு பெறும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட ஆரம்பித்தது. அதிலும் 1929இல் ஏற்பட்டப் பொருளாதார நெருக்கடியின் பின், தான் மட்டும் வாழ்ந்தால் போதுமென்ற பொருளாதார தேசீயம் (Economic Nationalism) எல்லா நாடுகளிலும் காணப்பட்டது. இவ்வுணர்ச்சி வேறுபல துறைகளிலும் பிரதிபலிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு நாடும் தன்னைத்தான் காத்துக்கொள்ள ஆயுதங்களை ஏராளமாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தன. சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளிடையே பல கூட்டுறவுகள் ஏற்பட்டன. அதோடு தேசமே தெய்வம் என்ற கொள்கை இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளில் வளர ஆரம்பித்தது. குடிமக்கள் யாவரும் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தேசத்தின் நலத்திற்காக அர்ப்பணிக்க வேண்டுமென்றும், தேசத்தின் முன்னேற்றத்துக்காகப் போரிடுவதே ஒவ்வொரு குடிமகனின் தலையாய கடமை என்றும் யதேச்சாதிகாரத் தலைவர்கள் கூறினர். அதையும் மக்கள் நம்பினர். தேசீய உணர்வு ஒரு வெறியாக மாறியது. இத் தேசீய வெறி பல நாடுகளையும் வென்று தன்னடிப்படுத்த வேண்டுமென்ற ஆக்கிரமிப்பு உணர்வைத் தூண்டிவிட்டது. அவ்வுணர்ச்சியின் வெளிப்பாடே இரண்டாம் உலகப் போராகும் என்பதில் ஐயமில்லை.

சிறுபான்மையோர் பிரச்சினை

குறிப்பிட்ட தனி இனத்தவரின் சுயநிர்ணய உரிமைக் கொள்கையே (Principle of Self determination) சமாதான உடன்படிக்கைகளின் அடிப்படையாயிருக்கவேண்டுமென வில்சன் குறிப்பிட்டார். பால்கன் நாடுகளைப் பொறுத்த வரையில் ஓரளவு அது கடைப்பிடிக்கப் பட்டதென்றாலும், ஒரு சில இடங்களில், நேச நாடுகள் அதைப் புறக்கணித்தன. சிறுபான்மையினரைப் பெரும்பான்மையோரின் சுரண்டலுக்கும் அடக்கு முறைக்கும் ஆளாகும்படிச் செய்துவிட்டன. தன்னினத்தாரல்லாதாரின் ஒறுத்தலுக்கு ஆளான அச் சிறுபான்மையினர் அரசாங்கங்களை எதிர்க்கவும், அதற்குத் துரோகம் செய்யவும் முன் வந்தனர். சான்றாக,

ஆஸ்திரியா, செக்கொஸ்லோவேகியா, போலந்து ஆகிய நாடுகளில் இருந்த ஜெர்மானியர்கள், அவர்களது அரசாங்கங்களுக்கு விரோதமாகவும் ஜெர்மனிக்குச் சாதகமாகவும் இருந்தனர். அந்த நாடுகளிலிருந்த ஜெர்மானியர் வாழ் பகுதிகளெல்லாம் ஜெர்மனிக்குச் சேரவேண்டுமெனவும், அதுவே சுயநிர்ணய உரிமையின் பாற்பட்டதெனவும் ஹிட்லர் கூறினர். அவரது பிரச்சார இயந்திரத்தின் வன்மையால் அவருக்கு மேற்சொன்ன நாடுகளில் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. அதை நம்பியே ஹிட்லர் முதன் முதலில் அந் நாடுகளின் மீது பாய்ந்து அவற்றைக் கைப்பற்றினர்.

குடியேற்ற நாடுகளுக்காகப் போட்டி

முதலாம் உலகப் போரைப் போலவே இரண்டாம் உலகப் போருக்கும் பொருளாதாரப் போட்டியே முக்கியக் காரணமாயமைந்தது. தொழில்வளம் ஒருபுறமும், ஜனத்தொகை இன்னொரு புறமும் வளர்ந்துகொண்டே சென்ற ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குத் தங்களது பொறிசெய் பொருள்களை விற்கவும், வளர்ந்துவரும் மக்கள் கூட்டத்தைக் குடியேற்றவும், குடியேற்ற நாடுகள் மிகமிகத் தேவையாயிருந்தன. ஆனல், வெர்சேல்ஸ் உடன்பாடு ஜெர்மனியிடமிருந்து எல்லாக் குடியேற்ற நாடுகளையும் அபகரித்துக்கொண்டது. இத்தாலியும் தான் விரும்பியபடிக் குடியேற்ற நாடுகள் கிடைக்கவில்லையென வருந்தியது. ஆக்கத் தொழிலில் புது வளர்ச்சிப் பெற்ற ஜப்பான், கச்சாப் பொருள்களைப் பெறவும், பொறிசெய் பொருள்களை விற்கவும் ஒரு புதிய பேரரசைத் தோற்றுவிக்க விரும்பியது. மேலும் 1930ஆம் ஆண்டில் தோன்றிய வியாபார மந்தம் காரணமாக ஒவ்வொரு நாடும் தன்னிறைவைப் பெற விரும்பியபோது மேற்சொன்ன நாடுகளின் குடியேற்ற நாட்டுப் பசி மேலும் அதிகரித்தது. ஏனெனில் பிரிட்டன், ஃபிரான்சு, அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற நாடுகள் தங்களது குடியேற்ற நாடுகளிலிருந்து தமக்கு வேண்டிய கச்சாப் பொருள்களைப் பெற்றுக்கொண்டதோடு, அவைகளைத் தங்கள் பொறிசெய் பொருள்களை விற்கும் சந்தைகளாகப் பயன்படுத்திக் கொண்டன. குடியேற்றங்களில்லாத நாடுகள் எதற்கும் போக்கிடமின்றி வாடின. தாங்களும் இவ்வுலகில் வாழ வேண்டுமானல், பலவந்தமாகக் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு அவை வந்தன.

சர்வதேசச் சங்கத்தின் தோல்வி

போர் மீண்டும் ஏற்படாவண்ணம் தடுக்க வில்சன் கூறிய 14 குறிப்புகளில் ஒன்றே ஒன்றை மட்டும் நேச நாடுகள் நடை-

முறையில் கொணர்ந்தன. அதுவே சர்வதேசச் சங்கத்தை நிறுவியதாகும். அதுவும் பூரணமாகச் செயல்படாது தடுக்கப் பெருநாடுகள் முயன்றதாலேயே இரண்டாம் உலகப் போர் மூண்டதெனக் கூறலாம்.

சர்வதேசச் சங்கம், ஜெர்மனியைச் சாந்தப்படுத்த முதலில் முயன்றது. அதன் முயற்சியால் ஜெர்மனிக்கும் ஃபிரான்சுக்கும் லொகார்னோ ஒப்பந்தம் (Locarno Pact) என்னும் நட்பு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி இரு நாடுகளும் சென்றதையெல்லாம் மறந்து நட்புரிமையோடு பரஸ்பரம் உதவிசெய்துகொண்டு வாழ ஆரம்பித்தன. 1926இல் ஜெர்மனி சர்வதேசச் சங்கத்தில் உறுப்பினராயிற்று. 1928இல் அமெரிக்க அமைச்சர் கெல்லாக் என்பவரும், ஃபிரெஞ்சு அமைச்சர் பிரியாண்ட் என்பவரும் சேர்ந்து கெல்லாக்-பிரியாண்ட் (Kellog Briand Pact) என்னும் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டனர். எந் நாடும் போரின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயலக்கூடாது எனக் கூறிய அவ்வொப்பந்தத்தை ஏனைய நாடுகளும் ஏற்றுக்கொண்டன. ரைன் நதிப் பிரதேசத்தில் தங்கியிருந்த நேச நாட்டுத் துருப்புகள், திரும்பியழைத்துக்கொள்ளப்பட்டன. இவ்வித சமாதான முயற்சிகளிடையேயும் போர் விளைந்ததென்றால் அதற்குக் காரணம் சர்வதேசச் சங்கத்தின் பலவீனமே யாகும்.

1931இல் ஜப்பான் சர்வதேசச் சங்கங்களின் கொள்கைகளுக்கெதிராக மஞ்சூரியா மீது படையெடுத்தது. சீனா சர்வதேசச் சங்கத்திடம் முறையிட்டபோது பெருநாடுகளெல்லாம் வாயால் ஜப்பானைக் கண்டித்தனவே யன்றி அதன் வலுத்தாக்குதலைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அக் கண்டனத்தை ஜப்பான் லட்சியம் செய்யவில்லை. மஞ்சூரியாவைப் பிடித்து, மஞ்சுகுவோ என அதற்குப் பெயரிட்டு அங்கு ஒரு பொம்மைச் சர்க்காரையும் அது ஏற்படுத்தியது. சர்வதேசச் சங்கத்தினின்றும் அது விலகியது. அடுத்து, ஜெர்மனி சர்வதேசச் சங்கத்தின் கொள்கைகளை அலட்சியம் செய்ய ஆரம்பித்தது. 1935இல் ஜெர்மனி வெர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு மாறாகத் தனது போர்த் தளவாடங்களை அதிகரிக்க ஆரம்பித்தது. கட்டாய இராணுவ சேவையை ஹிட்லர் ஜெர்மனியில் புகுத்தினார். கப்பற் படையையும் விமானப் படையையும் அவர் அளவற்றுப் பெருக்கலானார். வெர்சேல்ஸ் உடன்படிக்கையைத் தான் ஏற்க முடியாது எனக் கூறிக்கொண்டு அவர் ரைன் நதிப் பிரதேசத்தைக் கைப்பற்றினார். சர்வதேசச் சங்கத்திலிருந்து ஜெர்மனி விலகிக் கொள்வதாக 1933இல் அவர் அறிவித்தார். இச் சமயத்தே இத்தாலியில் தோன்றிய முசோலினி பழைய ரோமானியப்

பேரரசைப் புதுப்பிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு அபிசீனியா மேல் படையெடுத்தார். அதன் மன்னர் ஓடோடியும் சென்று, பிரிட்டனிடம் தன்னுட்டைக் காக்குமாறு வேண்டிச் சரண் புகுந்தார். இத்தாலியைப் பொருளாதார நிர்ப்பந்தங்களுக்கு (Economic Sanctions) உட்படுத்த வேண்டுமெனச் சர்வதேசச் சங்கம் அறிவித்தது, செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது. இத்தாலிக்கு வேண்டிய தளவாடங்களும் நிலக்கரியும் பிரிட்டனிலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் தாராளமாய் வந்துகொண்டிருந்தன. எனவே, 1936ஆம் ஆண்டு மே மாதத்தில் அபிசீனியா வீழ்ந்தது. அதோடு சர்வதேசச் சங்கமும் வீழ்ச்சியடைந்தது எனக் கூறலாம். ஏனெனில், வன்மைமிக்க நாடுகளின் வலுத்தாக்குதலை அச் சங்கத்தால் தடுக்க முடியாதென்பது உறுதிப்பட்டுவிட்டது.

உடனடியான காரணங்கள் (Immediate Causes)

ஹிட்லரின் வலுத்தாக்குதல்கள் (Hitler's Aggressions)

முதல் உலகப் போரில் ஜெர்மனி இழந்த நாடுகளை யெல்லாம் மீண்டும் கைப்பற்றிவிட வேண்டுமென்ற முடிவுக்கு ஹிட்லர் வந்தார். ஆனால், வெளிக்கு ஒரு சமாதானப் பிரியர் போல் தன்னைக் காட்டிக் கொண்டார். போர் மூலம் தங்களுக்குள்ளிருக்கும் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடாதெனக் கூறி அவர் போலந்தோடு 1934இல் ஓர் உடன்பாட்டையும் செய்து கொண்டார். 1936இல் ரைன் நதிப் பிரதேசத்தை அவர் கைப்பற்றிக் கொண்டபின் போர் மூலம் எல்லைகளை நிர்ணயிப்பது தனது நோக்கமல்ல என்று வாய்புளிக்க அவர் கூறினர். அடுத்து அவர் 10 மிலியன் ஜெர்மன் சிறுபான்மையினரைக் காப்பதே தமது குறிக்கோள் எனக் கூறிக்கொண்டு 1938ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவைக் கைப்பற்றினர். கோயபெல்ஸ் (Goebells) என்னும் பிரச்சார மந்திரி ஜெர்மனி செய்வதெல்லாம் சரியென உலகிற்கு விளக்கி வந்தார். பொய்யைக்கூடத் திருப்பித் திருப்பிக் கூறினல் மெய்யாகும் என்பது அவரது கோட்பாடு. ஆஸ்திரியா விழுங்கப்பட்டபின், செக்கோஸ்லோவேகியாவில் வாழ்ந்த ஜெர்மானியர்களுக்காகக் கோயபெல்ஸ் முதலைக் கண்ணீர் வடித்தார். சுடெட்டென்லாந்து (Sudetenland) என்ற பகுதி ஜெர்மனியோடு சேர்ந்து விடுவதே முறையெனக் கூறிக்கொண்டு ஹிட்லர் தமது படைகளை அதன் எல்லைகளுக்கு அனுப்பினர். பயந்துபோன செக்கோஸ்லோவேகியா, பிரிட்டனிடம் முறையிட்டது. அப்போது பிரிட்டிஷ் பிரதமராயிருந்த நெவில் சேம்பர்லின் அமைதி விருப்பங் கொண்டவர். எனவே, அவர் ஹிட்லர் இருக்குமிடம் சென்று மூன்று மணி நேரம் பேச்சு

வார்த்தை நடத்தினர். ஆனால், ஹிட்லர் பிடிவாதமாக சுடெட்டென்லாந்து தனக்கு வேண்டுமென்று கூறிவிட்டார். அதன்பின் சேம்பர்லினும், ஃபிரெஞ்சுப் பிரதமர் டலாடியரும் (Daladiar) கலந்து பேசி, சுடெட்டென்லாந்து ஜெர்மன் மக்கள் சுயநிர்ணய உரிமை பெறுவது நியாயமே என்ற முடிவுக்கு வந்து அப்பிரதேசத்தை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும்படி செக்கோஸ்லோவேகியாவுக்குச் சிபார்சு செய்தனர். முணு முணுத்துக் கொண்டே செக் நாடு அதற்கு இணங்கியது. எனி னும், ஹிட்லர் இராணுவத்தைக்கொண்டு சுடெட்டென்லாந்தைக் கைப்பற்றப் போவதாக அறிவித்தார். அதைக் கண்ட பிரிட்ட னும், ஃபிரான்சும் போருக்குத் தயார் செய்ய ஆரம்பித்தன. திடீரென ஹிட்லர் ஒரு படி கீழே இறங்கி ஐரோப்பிய நாடுகளின் மாநாடு ஒன்றின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாகக் கூறினர். மியூனிச் நகரில் அம் மாநாடு கூட்டப்பட்டது. பிரிட்டன், ஃபிரான்சு, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மட்டும் அதில் கூடி ஆலோசித்தனர். செக்கோஸ்லோவேகியா வின் பிரதிநிதி அதில் இடம் பெறவில்லை. சுடெட்டென்லாந்தில் 5 கட்டங்களில் படிப்படியாக ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொள்ள லாமென மியூனிச் மாநாடு (Munich Conference) அறிவித்தது. ஹிட்லர் மாநாட்டின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். 'கௌரவத் தோடு கூடிய அமைதியை' (Peace with honour) தாம் பெற்று விட்டதாகச் சேம்பர்லின் பெருமையோடு கூறிக் கொண்டார். ஆனால், விரைவிலேயே ஹிட்லர் நம்பத் தகாதவர் என்பதைக் காட்டிவிட்டார். 1939இல் அவர் செக்கோஸ்லோவேகியா முழுவ தையுமே தன் இராணுவ பலத்தைக் கொண்டு ஆக்ரமித்துக் கொண்டார். அதே ஆண்டில் அவர் லிதுவேனியாவிடமிருந்து மெமல் (Memel) என்ற துறைமுகத்தையும் பலவந்தமாகக் கைப் பற்றிக் கொண்டார். ஹிட்லரைச் சாந்தப்படுத்தும் கொள்கை (Appeasement Policy) எவ்வளவு தவறானதென்பதைச் சேம்பர் லின் உணரலானர். ஹிட்லரின் ஆசை அளவிறந்ததாகத் தோன்றியது. டான்சிக் துறைமுகம் ஜெர்மனிக்கு வேண்டுமென வும் போலந்தின் வழி (Polish Corridor) எனப்படும் பகுதியில் ரயில் பாதையை அமைத்துக் கிழக்குப் பிரஷ்யாவுடன் மெமல் துறைமுகத்தோடும் தொடர்பு கொள்ள ஜெர்மனி வசதி பெற வேண்டுமெனவும் அவர் அறிவித்தார். ஹிட்லரின் விருப்பங்களை நிறைவேற்றுவது முடியாத காரியமெனப் போலந்து அறிவித் தது. போலந்து நாடு சிதைவுறாமல் பாதுகாப்பது தனது கடமையெனவும், ஜெர்மனி போலந்தின் மீது படையெடுத்தால் தானும் போலந்துக்குச் சாதகமாகப் போரில் இறங்க நேரும் எனவும் பிரிட்டன் அறிவித்தது. இதைக் கேட்ட ஹிட்லர்

தயங்கினர். ஏனெனில், பிரிட்டன் போரில் இறங்கினால், ஃபிரான்சும், ரஷ்யாவும் அதற்கு உதவியாகப் போரிட முன்வரக் கூடும். அவ்வாறு நேர்ந்தால் ஜெர்மனி கிழக்கிலும் மேற்கிலுமாக இரு முனைகளிலும் போரிட வேண்டியிருக்கும். இந்த அபாயம் நேரிடுவதைக் தடுக்க அவர் ரஷ்யாவை, பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளினின்றும் பிரிக்கத் திட்டமிட்டார். ஏற்கெனவே, மியூனிச் மகாநாட்டில் ரஷ்யப் பிரதிநிதிகள் கலந்துகொள்வதைப் பிரிட்டனும், ஃபிரான்சும் அனுமதிக்கவில்லை என்ற கோபம் ரஷ்யாவுக்கு இருந்தது. ஹிட்லரின் பிடிவாதமே அதற்குக் காரணமாயிருந்தது. எனினும், பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளின் மீது ரஷ்யாவுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இனி தான் அந் நாடுகளோடு முன்பு ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகளுக் குக் கட்டுப்பட வேண்டியதில்லை என ரஷ்யா அறிவித்தது. போலந்தின் உரிமையைக் காக்க ரஷ்யா பிரிட்டனோடு ஒத் துழைக்கவேண்டுமென சேம்பர்லின் கேட்டுக்கொண்டார். ஆனால், ரஷ்யா வாளாவிருந்தது. போலந்து 1921இல் ரஷ்யாவின் ஒரு பகுதியைக் கைப்பற்றியதை ரஷ்யா மறக்கவில்லை. இதையெல் லாம் பயன்படுத்திக்கொண்டு ஹிட்லர் ரஷ்யாவோடு 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒரு நட்பு உடன்பாட்டைச் செய்து கொண்டார். கம்யூனிஸ்டுகளைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டிருந்த ஹிட்லர் கம்யூனிஸ்டு ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது கண்டு உலகமே வியந்தது. ஆனால், இலா பத்தை முன்னிட்டே இவ்விரு நாடுகளும் உடன்பாட்டைச் செய்து கொண்டன என்பது விரைவிலேயே விளங்கியது. 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று ஜெர்மன் துருப்பு கள் போலந்தைப் படையெடுத்தன. போலந்திலிருந்து உடனே அகன்றுவிடும்படி ஜெர்மனிக்குப் பிரிட்டன் ஓர் இறுதி எச்சரிக்கை விடுத்தது. ஜெர்மனி அதை மதிக்கவில்லை. எனவே, செப்டம்பர் 3ஆம் தேதியன்று பிரிட்டன் ஜெர்மனியின் மீது போர் தொடுத் திருப்பதாக அறிவித்தது. பிரிட்டிஷ் டொமினியன்களும், ஃபிரான் சும் உடனே போரில் பிரிட்டனுடன் சேர்ந்துவிட்டதாக அறிவித் தன. ஆனால், அயர் நாடு (Eire) மட்டும் நடுநிலைமை வகித்தது. இரண்டாம் உலகப் போர் துவங்கியது.

போரின் தன்மை (Nature of the War)

இரண்டாம் உலகப் போர் பலவகைகளில் முதல் உலகப் போரை ஒத்திருந்தது. இரண்டிலும் ஜெர்மனி ஆரம்பத்தில் வியத் தகு வெற்றிகளைப் பெற்று முடிவில் தோல்வியுற்றது. இரண்டு போர்களும் நீரிலும் நிலத்திலுமாக உலகின் பல பகுதிகளிலும்

நடைபெற்றன. இரண்டிலும் போர் வீரர்களே யன்றி ஏராளமான சாதாரண மக்களும் பங்கெடுத்துக் கொண்டு தங்கள் பொருளை யும் உயிரையும் இழந்தனர். இரண்டு போர்களின் இறுதிக் காலத்தே அமெரிக்கா தலையிட்டு வெற்றிப் பாதையில் நேச நாடு களைத் திருப்பிவிடுவதைப் பார்க்கிறோம். சிறு நாடுகளின் சுய நிர்ணய உரிமையைக் காப்பதும் யதேச்சாதிகாரத்தை யொழித்து ஜனநாயகத்தை வளர்ப்பதுமே இரு போர்களின் குறிக்கோள்களாக அறிவிக்கப்பட்டன. இரு போராட்டங்களின் முடிவிலும் உலக அமைதியைக் காக்கவெனப் பல நாடுகள் அடங்கிய சபை யொன்று நிறுவப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் பல வகைகளில் முதல் உலகப் போரையும் மிஞ்சியதாக இருந்தது. முதலாம் போர் கண்டிராத பல ராக்கத அழிவுக் கருவிகள் இரண்டாவதில் பயன்படுத்தப்பட் டன. முதற் போரில் ஆகாய விமானங்கள் ஓரளவே பயன்படுத் தப்பட்டன. ஆனால், இரண்டாம் போரில் விமானப் படையின் உபயோகம் பன்மடங்கு பெருகியது. ஜெர்மன் லஃப்ட்வேஃபே **(Luftwaffe)** விமானங்களும், பிரிட்டிஷ் ராயல் ஏர்ஃபோர்ஸ் **(Royal Airforce)** வான ஊர்திகளும் தொழிற் பட்டணங்களை அழிக்கும் தொழிலில் போட்டி போட்டுக்கொண்டு இறங்கின. ஜெர்மானியர் பிரிட்டிஷ் நகரங்கள் மீது **V-1, V-2** போன்ற ஏவு கணைகளை **(Rocket Bombs)** வீசினர். அணுகுண்டுகளை அமெ ரிக்கா ஜப்பான் மீது வீசியது. வலவன் ஏவா வான ஊர்திகள் **(Piolotless Planes)** எதிரிகளின் பட்டணங்கள் மீது குண்டுகளை வீசப் பயன்படுத்தப்பட்டன. டாங்கிகள் என்ற ராக்கத பீரங்கி களை இருதரப்பினரும் நிறையக் கையாண்டனர். விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் பீரங்கிகள் முதல் உலகப் போரிலிருந்ததைவிட நன்கு வளர்ச்சியடைந்திருந்தன. கடலில் **'U'** படகுகள் என்ற நீர் மூழ்கிக் கப்பல்களை ஜெர்மானியர் நிறையப் பயன்படுத்தி னர். அதோடு ஏமாந்துள்ள சமயம் பார்த்து மோட்டார் சைக்கிள் படை, விமானப் படை, டாங்கி இவற்றை மின்னல் வேகத்தில் எதிரி நாட்டில் புகுத்தித் தாக்கும் 'மின்னல் தாக்கு முறை'யையும் **(Blitzkreig)** ஜெர்மானியர் கையாண்டனர்.

முதல் உலகப் போரைவிட இரண்டாவது போர் அதிகமான முழுமைத் தன்மையைப் **(Total War)** பெற்று விளங்கியது. நாட்டிலுள்ள ஆண்கள், பெண்கள், சிறுர் யாவரையும் அது பெரிதும் பாதித்தது. உணவுப் பங்கீட்டு முறை **(Rationing)**, இருட்டடிப்பு முறை **(Black out)**, கட்டாய உழைப்பு போன்ற வற்ருல் எல்லோரும் துன்புற்றனர். இங்கிலாந்தில் பெண்டிரும் கட்டாய சேவையிலீடுபடும்படி வற்புறுத்தப்பட்டனர். பல ஜீவா

தார உரிமைகள் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டன. போர், உலக மக்கள் யாவரையும் பாதித்தது போன்றே உலகின் பல நிலப்பகுதிகளையும் கவர்ந்தது. ஐரோப்பாவில் மட்டுமன்றி, ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும்—ஏன் ? ஆர்க்டிக் வட்டத்திலும் கூட போர் நடைபெற்றது. அதற்கேற்ற முறையில் போர்த் தந்திரங்களும் (Strategy) வகுக்கப்பட்டன. இங்கிலாந்தில் சர்ச்சில், அமெரிக்காவில் ரூஸ்வெல்ட், ரஷ்யாவில் ஸ்டாலின் ஆகிய முப்பெரும் தலைவர்களே இப் போர்த் தந்திரங்களை செவ்விய முறையில் வகுத்து வழிநடத்தியவர்களாவர்.

போரின் போக்கு (Course of the War)

போரின் போக்கில் இரு கட்டங்கள் இருப்பதை நாம் எளிதில் காணலாம். 1939 முதல் 1942ஆம் ஆண்டு வரை நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளை முதற் கட்டத்துக்குள் அடக்கலாம். அவ்வமயம் ஜெர்மனி வெற்றி மேல் வெற்றி பெற்றதைக் காண்கிறோம். 1942 முதல் 1945 வரை நீடித்த இரண்டாம் கட்டத்தில் அச்சு நாடுகள் (Axis Powers) ஒன்றன் பின் ஒன்றாய்த் தோல்வியுற்றதைப் பார்க்கிறோம்.

போலந்தின் வீழ்ச்சி

1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜெர்மனி போலந்தின் மீது பாய்ந்தது. மின்னல் தாக்கு முறை முதன் முதல் பயன்படுத்தப்பட்டது இங்குதான் ஆகும். ஜெர்மன் விமானப் படை முதலில் சென்று போக்கு வரவு சாதனங்களையும், போர் வீரர்கள் தங்குமிடங்களையும் தாக்கியது. அதைத் தொடர்ந்து கவசம் அணிந்த மோட்டார் சைக்கிள் படையினர் மென்மேலும் புகுந்தனர். அவர்களைத் தொடர்ந்து டாங்கிகளும், பீரங்கிகளும், மோட்டார் படைகளும் வந்து குவிந்தன. அவற்றைத் துப்பாக்கிப் படையும் காலாட்படையும் தொடர்ந்தன. திட்டமிட்டு அழிவு வேலையில் அவர்கள் ஈடுபட்டனர். ஒரு பாலத்தை உடைத்த பின் நதியைக் கடக்க அதே மாதிரியான செயற்கைப் பாலத்தை அவர்கள் கையிலேயே வைத்திருந்தனர். இவ்வித முறைகளை எதிர்த்து நிற்கப் போலந்து தயாராக இல்லை. அக்டோபர் மாதத்திலேயே போலந்து வீழ்ந்தது. தலைநகர் வார்சா (Warsaw) ஜெர்மானியர் வசமாயிற்று. அதே சமயத்தில் ரஷ்யர்கள் கிழக்கே போலந்தின் மீது பாய்ந்தனர். கிழக்குப் போலந்து, லாத்வியா (Latvia), எஸ்தோனியா, லிதுவேனியா (Lithuvania) ஆகிய பால்டிக் குடியரசு நாடுகளை ரஷ்யா கைப்பற்றியது. போலந்தை இரு நாடுகளும் தம்முள் பிரித்துக்கொண்டன. ‘திருடனைத் தேள் கொட்டியது’

போல, ரஷ்யாவின் ஏகாதிபத்தியத்தை ஹிட்லர் எதிர்த்துப் பேச முடியாமல் திகைத்தார்.

மேற்குப் போர்முனை (1940): ஃபிரன்சின் வீழ்ச்சி

இப் போர்முனையில் முதல் உலகப் போரில் நடைபெற்றது போல் அகழிப் போர் நடைபெற்றது. ஜெர்மானியர் சீக் ஃபிரிட் அரணுக்குப் (Siegfriedline) பின்னும், ஃபிரெஞ்சுக்காரர் மேகினாட் அரணுக்குப் (Maginotline) பின்னும், மறைந்துகொண்டு அவ்வப் போது வெளிவந்து போர் செய்தனர். மேகினாட் அரண் பெல்ஜியத்தோடு நின்றுவிட்டது. எனவே, பெல்ஜியத்தின் வழியாகச் சென்று ஜெர்மன் படைகள் ஃபிரான்சுக்குள் நுழைந்தன. அதற்கு முன் அவைகள் நார்வே, டென்மார்க், லக்ஸம்பெர்க், ஹாலந்து பெல்ஜியம் ஆகிய சிறு நாடுகளைச் சில மணி நேரப் போராட்டங்களிலேயே கைப்பற்றிவிட்டன. ஃபிரான்சுக்கு உதவச்சென்றிருந்த பிரிட்டிஷ் படைகள் டன்கர்க் (Dunkirk) வழியாகத் தாய்நாடு திரும்பிட ஆரம்பித்தன. ஃபிரான்சில் மக்கள் மிகவும் அதிருப்தியுற்ற நிலையில் இருந்தனர். இச் சமயத்தில் ஜெர்மன் படைகள் அங்கு நுழைந்தன. 1939ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவை பாரிசைக் கைப்பற்றின. டலாடியார் அரசாங்கம் வீழ்ந்தது. மார்ஷல் பெடெய்ன் (Marshal Patain) என்ற ஹிட்லர் பக்தர் நாட்டின் பிரதமரானார். ஹிட்லரின் புகழ் உச்ச நிலையை அடைந்தது. இத்தாலியும், ஜப்பானும் ஜெர்மனியோடு சேர்ந்தன. பெர்லின், ரோம், டோக்கியோ நாடுகளின் அச்சு (Axis) உதயமாயிற்று.

பிரிட்டன் போர் (1940-41) (Battle of Britain)

ஃபிரான்சின் வீழ்ச்சிக்குப் பின் ஓராண்டுவரை பிரிட்டன் ஜெர்மனியோடு தனியே நின்று போராடியது. இச்சமயத்தில்தான் பிரிட்டிஷ் அமைச்சரவையில் குறிப்பிடத் தக்கதோர் மாற்றம் நேர்ந்தது. நெவில் சேம்பர்லின் பிரதமர் பதவியினின்றும் விலகிக் கொண்டார். வின்ஸ்டன் சர்ச்சில் என்னும் உற்சாகமிக்க தலைவர் பிரதமர் பதவியை ஏற்றுப் போரை நடத்தலானார். இச்சமயத்தில் ஜெர்மன் விமானப் படையானது பிரிட்டிஷ் தொழில் நகர்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. எனினும், பிரிட்டிஷ் விமானப் படைகள் கூட்டமாக வந்த ஜெர்மன் விமானப் பட்டாளத்தைத் தொகுதி தொகுதியாக அழித்தன. அதைக் கண்ட ஹிட்லர் சிறுசிறு விமானக் கூட்டங்களை அனுப்பினார். நெருப்பிட்டுக் கொளுத்தும் குண்டுகள் (Incendiary Bombs) எங்கும் வீசப்பட்டன. ஒரே ஆண்டில் 44,000 சாதாரண மக்கள் இக் குண்டு வீச்சால் இறந்தனர். 50,000 பேர் காயமுற்றனர். இவ்

விமானத் தாக்குதலோடு ஜெர்மன் 'U' படகுகள் பிரிட்டிஷ் கப்பல்களை நாசம் செய்தன. இரண்டே மாதங்களில் பிரிட்டன் 54 கப்பல்களை இழந்தது. மேலும் ஆங்கிலக் கால்வாயிலும் பிரிட்டனைச் சுற்றிலும் காந்தக் குண்டுகளை (Magnetic Mines) வீசி ஜெர்மனி பிரிட்டிஷ் கப்பல்களை அழித்தது. இதனாலெல்லாம் பிரிட்டன் சளைக்கவில்லை. ஜெர்மன் தொழில் நகரங்களான பெர்லின், கோலோன், ஹாம்பர்க் முதலானவை ஆங்கில விமானப் படை குண்டு வீச்சுக்கு உள்ளாயின. ஜெர்மனிக்கும் இதனால் பெரும் சேதம் விளைந்தது. போர் முடிவதற்குள் ஏறக்குறைய 996 ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை பிரிட்டன் அழித்தது.

இத்தாலியின் போர் முயற்சிகள் : கிரீஸ் ஆப்பிரிக்கா (1940-41)

1940இல் ஜெர்மனியோடு சேர்ந்து கொண்ட இத்தாலி மத்தியதரைக் கடலைச் சுற்றிலும் தனக்கென்று ஒரு பேரரசைத் தோற்றுவிக்க முயன்றது. இத்தாலியின் தலைவர் முசோலினி, கிரீஸ் நாட்டை முதலில் கைப்பற்ற எண்ணி இரண்டு இலட்சம் வீரர்களை அந்நாட்டுக்குள் அனுப்பினார். ஆனால், பிரிட்டிஷாரின் உதவியுடன் கிரேக்கர்கள் ஒப்பற்ற வீரத்துடன் போர்புரிந்து இத்தாலியர்களை விரைவில் தமது நாட்டினின்றும் விரட்டினர். அதோடு அல்பேனியாவையும் தாக்கினர். இதைக் கண்ட ஜெர்மானியர் தமது துருப்புகளை அனுப்பி கிரீஸைக் கைப்பற்றினர். பிரிட்டிஷ் துருப்புகள் கிரீட்டுக்கும், பின் எகிப்துக்கும் பின்வாங்கின. இத்தாலியர்கள் அடுத்தாற்போல் ஆப்பிரிக்காவிலிருந்த ஆங்கில ஃபிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்ற முனைந்தனர். பிரிட்டிஷ் சோமாலிலாந்து, லிபியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்ட இத்தாலியர், எகிப்தை நோக்கி விரைந்தனர். வழியில், சிதி பாரனி (Sidi Barrani) என்னுமிடத்தில் தங்கி இளைப்பாறினர். அதற்குள் பிரிட்டிஷ் படைகள் வேவல் என்னும் தளகர்த்தரின் தலைமையில் ஆப்பிரிக்காவினுள் நுழைந்தன. விரைவிலேயே அப் படை, இத்தாலியரை எகிப்தினின்றும் விரட்டியதுமின்றி, லிபியாவுக்குள்ளும் அவர்களைத் துரத்திச் சென்றது. இதையறிந்த ஜெர்மானியர் ரோமல் (Rommel) என்னும் தளகர்த்தரை இத்தாலியருக்கு உதவி செய்ய எகிப்துக்கு அனுப்பினர். ரோமல் எகிப்தில் வேகமாக முன்னேறி சூயஸ் கால்வாயை நெருங்கினார். அச்சமயத்தில் ஆங்கிலத் தளகர்த்தரான வேவல் இத்தாலியரை சோமாலிலாந்து, எரிட்ரியா (Eritrea), எதியோப்பியா (Ethiopia) ஆகிய நாடுகளினின்றும் விரட்டியடித்துப் பெரு வெற்றி பெற்றார். எனவே, இத்தாலியின் ஆசை நிறைவேறா தொழிந்தது.

ஜெர்மனியின் ரஷ்யப் படையெடுப்பு (1941-43)

1941ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் தேதியன்று ஹிட்லர் நெப்போலியனையும் விஞ்ச எண்ணி ரஷ்யா மீது படையெடுத்தார். ரஷ்யாவின் எண்ணற்ற கச்சாப் பொருள்களைக் கொண்டு பிரிட்டனை வென்று ஐரோப்பாவைக் கட்டி ஆளலாமென ஹிட்லர் மனப் பால் குடித்தார். மின்னல் தாக்கு முறை மூலம் ரஷ்யாவை விரைவிலேயே மாரிக்காலம் வரும் முன்பே வென்று விடலாமென்று நினைத்துவிட்டார். உண்மையில் அவர் ரஷ்யாவின் பலத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிட்டார் என்றே கூற வேண்டும். அவரது எண்ணங்கள் யாவும் தவருக முடிந்தன.

ஜெர்மனியின் படை ரஷ்யாவை நோக்கிப் போகும் வழியில் ஹங்கேரியர், பல்கேரியர், ருமேனியர், ஃபின்னுகள் (Finns) ஆகியோர் பலர் அதனுடன் சேர்ந்து கொண்டனர். இங்ஙனம் யாவரும் சேர்ந்த பெரும்படையின் ஒரு பகுதி ரஷ்யாவின் வடக்கே யிருந்த லெனின் கிராட் (Leningrad) நகரை நோக்கியும், இன்னொரு பகுதி மத்தியிலிருந்த மாஸ்கோ நகரை நோக்கியும், மூன்ரும் பகுதி தெற்கேயிருந்த கிரிமியாவை நோக்கியும் புறப்பட்டன. செப்டம்பர் மாதத்தில் ஜெர்மன் படைகள் லெனின் கிராடையும், அக்டோபரில் மாஸ்கோவையும் நெருங்கிவிட்டன. தெற்கே கீவ் (Kiev), ஒடெஸ்ஸா (Odessa) வரை அவை சென்றன. ஆனால், அதற்கு மேல் அவை முன்னேறமுடியவில்லை. ஏனெனில், அதற்குள் மாரிக்காலம் வந்து விட்டது. மாரிக் காலத்துக்கு முன் ரஷ்யா வீழ்ந்து விடுமென ஹிட்லர் நினைத் திருந்ததால், தமது வீரர்களுக்கு வேண்டிய கம்பளி உடைகளை அவர் தயார் செய்து வைத்துக் கொள்ளவில்லை. எனவே, மாரிக்காலம் வந்துற்றபோது ஏராளமான ஜெர்மன் வீரர்கள் குளிரால் மடிந்தனர். ஜெர்மானியர் அதுவரை 6,15,000 சதுர மைல் பரப்பளவுள்ள சோவியத் பிரதேசங்களைக் கைப்பற்றி யிருந்தும் பயனில்லை. ஏனெனில், ரஷ்யர்கள் பின் வாங்கிச் செல்லும்போது ஆங்காங்கேயிருந்த உணவுப் பொருள்களை அழித்தும், பயிர்களை நாசமாக்கியும், ஆலைகளைக் கொளுத்தியும், பாலங்களை இடித்தும் அவை யாவற்றையும் எதிரிக்குப் பயன் படாதவாறு செய்துவிட்டுச் சென்றனர். ரஷ்யரின் இப் 'பாழாக் கும் கொள்கை'யால் (Scorched Earth Policy) ஜெர்மனிக்குப் பெருத்த தட்டுப்பாடு ஏற்பட்டது. பட்டினியால் பலர் மடிந்தனர். அல்லலுற்ற ஜெர்மானியரை ரஷ்ய வீரர்கள் திருப்பித் தாக்க ஆரம்பித்தனர். மாரிக்காலப் போருக்கென அவர்கள் நன்கு பழக்கப்பட்டிருந்ததால், அவ்வாறு பழக்கப்படாத ஜெர்மானியரை

அவர்கள் எளிதில் தோற்கடித்தனர். ஸ்டாலின்கிராடில் ஜெர்மன் வீரர்கள் நாளுக்கு 2,000 பேர் வீதம் மடிந்தனர். எனினும் ஹிட்லர் பணிய மறுத்தார். காஸக் குதிரை வீரர்கள் வேறு ஜெர்மானியரைப் பின்புறமிருந்து தாக்கினர். வழுக்கு வண்டிகளில் (Sledges) ஏறிக்கொண்டு வந்தும், வழுக்குக் கருவிகளை (Skis) அணிந்துகொண்டும் ரஷ்ய வீரர்கள் வீராவேசமாகப் போர் புரிந்து ஜெர்மானியரைத் தோற்கடித்தனர். 14 ஜெர்மன் படைப் பகுதிகளை ரஷ்யப் படைகள் சூழ்ந்து கொண்டன. சரணுகதி அடைய அவை மறுத்ததால் ரஷ்யர்கள் அவர்களைக் கொன்று குவித்தனர். எனவே, 3,30,000 பேர் கொண்ட ஜெர்மன் படை பலமானது 12,000 ஆகக் குறைந்தது. அப் பன்னீராயிரம் வீரரும் ரஷ்யாவிடம் சரணடைந்தனர். எனவே, ஹிட்லரின் பேராசை நிறைவேருதொழிந்தது.

ஜப்பானின் போர் முயற்சிகள் - அமெரிக்கத் தலையீடு

அமெரிக்க ஜனுதிபதி ரூஸ்வெல்ட் ஆரம்பத்திலிருந்தே பிரிட்டனையும் ஃபிரான்சையும் ஆதரித்து வந்தார். எனினும், அமெரிக்க மக்கள் போரை விஷம்போல் வெறுத்து வந்ததால் அவர் வெளிப்படையாக எந்த உதவியையும் நேச நாடுகளுக்குச் செய்யத் தயங்கினுர். கொஞ்சங் கொஞ்சமாக அவர் அமெரிக்கர்களைத் தன்வழிக்குக் கொண்டுவந்தார். முதலில் அமெரிக்கர் பிரிட்டனுக்கு உணவுப் பொருள்களையும் போர்த் தளவாடங்களையும் விலைக்கு விற்று வந்தனர். நாள் செல்லச் செல்லப் பிரிட்டன் அப் பொருள்களை விலைகொடுத்து வாங்க இயலாத நிலை ஏற்பட்டது. அச்சமயம் பார்த்து ரூஸ்வெல்ட் கடனுகப் பொருள்களை வழங்க முன்வந்தார். ஆனுல், கடனைத் திருப்பி எப்படிப் பெறுவது என்பதைப் பற்றி அவர் எந்த முடிவும் எடுக்கவில்லை. வீடு நெருப்புப் பிடித்து எரியும்போது வீட்டிலுள்ளவனைக் காப்பாற்றுவதே முதற் கடமை என்பது போல், ஐரோப்பிய ஜனநாயக நாடுகளை, யதேச்சாதிகாரிகளின் போரினின்றும் காப்பதே அமெரிக்க ஜனநாயக நாட்டின் கடமையாக இருக்கவேண்டுமென அவர் புகன்ருர். குத்தகைக் கடன் (Lend lease) என்ற முறையால் பிரிட்டன் பேருதவி பெற்றது. 1941இல் ரூஸ்வெல்ட் 50 நாசகாரிக் கப்பல்களைப் பிரிட்டனுக்கு வழங்கினுர். ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல்களைச் சமாளிக்க அவை பிரிட்டனுக்குப் பெரிதும் பயன்பட்டன. 1941இல் ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும் நடுக்கடலில் சந்தித்துப்பேசிப் போரின் குறிக்கோள்களை அட்லாண்டிக் சாசனம் (Atlantic Charter) என்ற பெயரில் வெளியிட்டனர். பயத்தினின்றும் விடுதலை, பட்டினியினின்றும் விடுதலை, அரசியல் விடுதலை, சமய விடு

இரண்டாம் உலகப்போர்
ஜப்பானின் வெற்றிகள்



ஜப்பானுல் வெல்லப்பட்ட நாடுகள்

தலை ஆகிய நான்கு உரிமைகளுக்கே போர் நிகழ்வதாக அது அறிவித்தது. இவ்வறிவிப்புக்கு நான்கு மாதங்கள் கழித்து ஒருவித எச்சரிக்கையுமின்றி ஜப்பான் அமெரிக்காவின் கடற்படை தங்கியிருந்த பேர்ல் ஹார்பர் என்னும் துறைமுகத்தின்மீது குண்டு வீசியது. 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றாந் தேதி குண்டு வீச்சு நிகழ்ந்தது. உடனே அமெரிக்கா ஜப்பான் மீதும், மற்ற அச்சு நாடுகள் மீதும் போர் தொடுத்திருப்பதாக அறிவித்தது. அமெரிக்கா போருக்கு ஆயத்தமாகுமுன் கீழை நாடுகளையெல்லாம் கைப்பற்றிவிடத் தீர்மானித்த ஜப்பான், ஹாங்காங், பிலிப்பைன் தீவுகள், மேலும் பல பசிஃபிக் தீவுகள், மலேயா, சிங்கப்பூர், பர்மா, நியூகினியா ஆகிய நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கைப்பற்றியது. 1942இல் அது இந்தியாவின் வடகிழக்கு எல்லையிலிருந்த மணிப்பூர்வரை வந்துவிட்டது. ஆனால், விரைவிலேயே வெற்றித்திருமகள் நேசநாடுகளுக்கு அருள்புரிய ஆரம்பித்தாள். அமெரிக்கப்படைகள் வேகமாக வந்து குவிந்தன. அவற்றோடு பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, கனடியப் படைகளும் சேர்ந்து கொண்டன. ஜெனரல் மக் ஆர்தர் (General Mac Arthur) என்னும் அமெரிக்கத் தளகர்த்தர் பசிஃபிக் படைகளின் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார்; பிரிட்டிஷ் கடற்படைத் தளபதியான லூயி மவுன்ட்பேட்டன் பிரபு (Lord Louis Mountbatten) பர்மிய சேனைகளின் தலைவராக்கப்பட்டார். 1944-45-க்குள் பர்மாவும், ஃபிலிப்பைன் தீவுகளும் ஜப்பானியரிடமிருந்து மீட்கப்பட்டன. ஜப்பானை நோக்கி நேசப் படைகள் முன்னேறலாயின.

வட ஆப்பிரிக்காவில் வெற்றி (1942-43)

1942ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஜெர்மன் தளகர்த்தரான ரோமல் அலெக்ஸாந்திரியாவுக்கு 80 மைல் தூரத்தில் வந்துவிட்டார். பிரிட்டிஷ் படைகளும், காமன்வெல்த் துருப்புகளும் எதிர்ப்பைத் தாக்கத் தங்களாலான வரை முயன்றன. அக்டோபர் மாதத்தில் மாண்ட் கோமரி, அலெக்ஸாந்தர் என்ற இரு தளகர்த்தர்களும் எல் அலமெய்ன் (El Alamein) என்னும் போர்க்களத்தில் ரோமலை முறியடித்துச் சகாராப் பாலை நிலத்தை நோக்கித் துரத்தினர். மாண்ட் கோமரியின் எட்டாம் படையானது (Eighth Army) ஜெர்மன், இத்தாலியர் படைகளை லிபியாவினின்றும் துரத்தியடித்தது. பாலைவனத்தில் காட்டிய வீரத்துக்காக அப் படையினர் 'பாலைவன எலிகள்' (Desert Rats) என்றும் அழைக்கப்பட்டனர். ரோமல் பின்வாங்கிக்கொண்டே சென்றதால், பிரிட்டிஷ் படைகள் இத்தாலிக்குச் சொந்தமாயிருந்த திரிபோலியைக் (Tripoli) கைப்பற்றினர். அபிஸினியாவினின்றும் இத்தாலியர் துரத்தியடிக்கப்பட்டு, அதன் பழைய மன்னர்

மீண்டும் அரியணையில் அமர்த்தப்பட்டார். 1942ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐசன்ஹோவர் (Eisenhower) என்னும் அமெரிக்கத் தளபதியின் தலைமையில் ஒரு பிரிட்டிஷ் அமெரிக்கக் கூட்டுப்படை, அல்ஜியர்ஸ் துறைமுகத்தில் இறங்கியது. ஃபிரெஞ்சுப் படைகளும் அமெரிக்க வீரர்களும் சேர்ந்து ட்யூனிஸியாவை 1943 ஆம் ஆண்டு மே மாதத்தில் கைப்பற்றினர். ஆப்பிரிக்காவிலிருந்த எதிரியின் படைகள் அனைத்தும் ஐசன் ஹோவரிடம் சரணடைந்தன.

இத்தாலியின் சரணாகதி (1943)

ஆப்பிரிக்காவில் வெற்றிபெற்ற ஆங்கில அமெரிக்கப் படைகள் 1943ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஸிஸிலித் தீவில் சென்றிறங்கின. ஆகஸ்டில் ஸிஸிலி கைப்பற்றப்பட்டது. சில வாரங்கள் கழித்து அவை இத்தாலியின் தென் பாகத்தைத் தாக்கின. ஏற்கெனவே மனம் தளர்ந்திருந்த இத்தாலியர் விரைவில் சரணடைந்தனர் (செப்டம்பர், 1943). முஸோலினி பதவியினின்றும் நீங்கினார். ஜெர்மன் வீரர்கள் மட்டும் நேசப் படைகளை எதிர்த்துப் போராடிவந்தனர். அவர்களும் நாளடை வில் இத்தாலியினின்றும் விரட்டப்பட்டனர். 1944ஆம் ஆண்டு மே மாதத்தில் நேசப் படைகள் ரோம் நகரைக் கைப்பற்றின. முஸோலினியை இத்தாலிய வீரர்கள் மிலானுக்கருகில் பிடித்துச் சுட்டுக் கொன்றனர்.

ஜெர்மனியின் சரணாகதி

1944ஆம் ஆண்டில் நேச நாடுகள் ஜெர்மனி மீது படை யெடுப்பதற்கான முயற்சிகளிலீடுபட்டன. இதை உணர்ந்த ஜெர்மனி, டூலோன் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த பெரும் பிரெஞ்சுக் கப்பற் படையைக் கைப்பற்ற முயன்றது. ஆனால், அது முடியவில்லை. ஜெனரல் ஐசன்ஹோவர் தமது சகாக்களின் உதவி கொண்டு ஐரோப்பியப் படையெடுப்புக்கான ஆயத்தங் களைச் செய்தார். ஆங்கிலக் கால்வாயின் குறுக்கே மல்பரி (Mulberry) என்ற செயற்கைத் துறைமுகங்கள் பல கட்டப் பட்டன. துருப்புகளும், போர்த்தளவாடங்களும் அவைகளில் சேகரிக்கப்பட்டன. பிரெஞ்சுக் கடற்கரைவரையில் இச்செயற்கைத் துறைமுகங்கள் கட்டப்பட்டு ஒன்றோடொன்று இணைக்கப் பட்டன. ஃபிரான்சில் இறங்கும் படைகளுக்குப் பெட்ரோல் எண்ணெய் வழங்கக் கடலினூடே 'ப்ளூடோ' (Pluto) என்னும் எண்ணெய்க் குழாய்கள் அமைக்கப்பட்டன. 1943-44இல் பிரிட்டிஷ் விமானப்படை ஜெர்மனியின்மீது கடுங்குண்டு வீச்சு நிகழ்த்தி அதன் போக்குவரவு சாதனங்களையும் ஆயுத உற்பத்தி

யையும் பெரிதும் சீர்குலைத்தது. அதனால் கோபம் கொண்ட ஹிட்லர் V-1, V-2 என்னும் ஏவுகணைகளை பிரிட்டன் மீது வீசினார்.

1944ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நேசப் படைகள் 4,000 கப்பல்களில் நார்மண்டியில் சென்று இறங்கின. விரைவில் நார்மண்டி முழுவதும் அவர்கள் வசமாயிற்று. அதன்பின் அவை லாயிறை (Loire) நோக்கி முன்னேறின. விரைவிலேயே பாரிஸ் நகரை அவை ஆக்கிரமித்தன. அதன்பின் அவை ஜெர்மனியின் எல்லையை நோக்கி விரைந்தன. இத்தாலியின் மூலம் வந்த நேசப் படைகளும், மத்தியதரைக் கடல் ஓரத்திலிருந்து ஃபிரான்சுக்குள் வந்த படைகளும் ஒன்று சேர்ந்து ஃபிரான்சின் தென் பாகத்தி லிருந்த ஜெர்மானியரை விரட்டிவிட்டனர். ஐசன்ஹோவரது படைகள் ரைன் நதியைக் கடந்து எல்ப் (Elbe) நதியை நோக்கிச் சென்றன. இச்சமயத்தே ரஷ்யப் படைகள் ஜெர்மனியைப் போலந்தின் வழியாகத் தாக்கி பெர்லினை நோக்கி முன்னேறின. 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரஷ்யப் படைகள் பெர்லினுக் குள் புகுந்தன. இதைக் கேட்ட ஹிட்லர் தற்கொலை புரிந்து கொண்டார் என்று கருதப்படுகிறது. ஆனால், அவர் என்னவா னார் என்பது பற்றி உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. ஜெர்மன் தளகர்த்தர்கள் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தனர். ஆனால், ஜெர்மனியுடன் எவ்விதத் தற்காலிக உடன்பாட்டையும் நேச நாடுகள் செய்துகொள்ளவில்லை. ஜெர்மன் நாடு முழுவதையும் அவை கைப்பற்றிக்கொண்டன. எல்ப் நதிக்குக் கிழக்கேயிருந்த பகுதியை ரஷ்யாவும், வடமேற்குப் பகுதியைப் பிரிட்டனும், ஸார் (Saar) பிரதேசத்தை ஃபிரான்சும், தென்மேற்கு ஜெர்ம னியை அமெரிக்காவும் வைத்துக்கொள்வதென ஏற்பாடு ஆயிற்று. ஜெர்மனியின் போர்த்தளவாடங்கள் அனைத்தும் கைப் பற்றப்பட்டன. ஜெர்மன் சிறையில் வாடிக் கிடந்தோரெல்லாம் விடுதலை பெற்றனர். போரைத் துவக்கிய குற்றத்துக்காகப் பல ஜெர்மன் தளபதிகள் தூக்கிலிடப்பட்டனர். (1945-46இல் நூரம் பர்க் என்னுமிடத்தில் நடைபெற்ற விசாரணையில் 12 தளகர்த்தர் கள் குற்றம் சாட்டப்பட்டு உயிரிழந்தனர். புதிய ஐரோப்பாவை உருவாக்க நினைத்த ஜெர்மனி உருத் தெரியாமல் குலைந்தது)

ஜப்பானின் சரணாகதி

ஜெர்மனி தோல்வியுற்றபின் பிரிட்டனும் அமெரிக்காவும் ஜப்பானைத் தோற்கடிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்த லாயின. 1945ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரிட்டிஷ் இந்தி யக் கூட்டுப்படையொன்று ரங்கூனைக் கைப்பற்றியது. அமெ

ரிக்கப் படைகள் ஜப்பானுக்கருகிலிருந்த தீவுகளை ஒன்றன்பின் ஒன்ருகக் கைப்பற்றின. ஜப்பானில் இறங்குவதற்குப் படைகளைத் தயாராக வைத்துக்கொண்டு நேச நாடுகள் ஓர் இறுதி எச்சரிக்கையை விடுத்தன. சரணுகதி அடையாவிடில் ஜப்பானை முழுவதும் அழித்துவிடப் போவதாக அவ்வெச்சரிக்கை கூறியது. ஜப்பானியர் அதை மதிக்கவில்லை. எனவே, 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ஆம் தேதியன்று ஹிரோஷிமா (Hiroshima) என்னும் பட்டணத்தின்மீது அணுகுண்டு வீசப்பட்டது. ஒரே நொடியில் பட்டணம் பஸ்பம் ஆகியது. எனினும், ஜப்பான் சரணடையவில்லை. மூன்று நாள்கள் கழித்து நாகசாகி (Nagasaki) என்னும் நகர்மீது இன்னேர் அணுகுண்டு போடப்பட்டது. இதைக் கண்ட ஜப்பானியர் ஆகஸ்டு பதிஞலாந் தேதியன்று நேச நாடுகளிடம் நிபந்தனையற்ற சரணுகதி யடைந்தனர். இரண்டாம் உலகப் பெரும் போர் அதோடு முடிந்தது.

சமாதான உடன்படிக்கைகள்

முதல் உலகப் போர் முடிவுற்றதும் நடைபெற்றதுபோல் ஒரே மகாநாட்டின்மூலம் சமாதான உடன்படிக்கை ஏற்படவில்லை. வெற்றிபெற்ற நாடுகளில் முக்கியத்துவம் பெற்ற ஐம்பெரும் நாடுகளான (The Big Five) அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஃபிரான்சு, சீஞ ஆகிய நாடுகள் கெய்ரோ, டெஹ்ரான், யால்டா, பாட்ஸ்டாம் போன்ற பலவிடங்களில் கூடி ஒரு சில நாடுகளோடு மட்டும் சமாதான உடன்படிக்கைகளைச் செய்துகொண்டன. 1947ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் 10ஆம் தேதியன்று இத்தாலியோடும் ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து, ஆகிய நாடுகளோடும் உடன்படிக்கைகள் ஏற்பட்டன. இத்தாலியிடமிருந்து அதன் ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளான லிபியா, எரிட்ரியா, இத்தாலிய சோமாலிலாந்து, எதியோப்பியா ஆகிய நாடுகளனைத்தும் அபகரித்துக்கொள்ளப்பட்டன. டிரிஸ்ட் (Triest) என்ற அட்ரியாடிக் கடல் துறைமுகத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு இத்தாலி கொடுத்துவிட்டது. வெற்றிபெற்ற நாடுகளுக்கு நஷ்டஈடாக இத்தாலி 360 மிலியன் டாலர்கள் வழங்க வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. அதன் படைபலம் 2,50,000 ஆகக் குறைக்கப்பட்டது. ருமேனியாவிடமிருந்து பெஸ்ஸரேபியாவை (Bassarabia) ரஷ்யா எடுத்துக்கொண்டது. செக்கோஸ்லவேகியா, ஹங்கேரியிடமிருந்து சில நகர்களைப் பெற்றுக்கொண்டது. ஆர்க்டிக் கடலிலுள்ள பனியுறையாத் துறைமுகமான பெட்ஸமோவை (Petsamo) பின்லாந்திடமிருந்து ரஷ்யா பெற்றது. தோல்வியுற்ற நாடுகள் ஏராளமாக நஷ்டஈடு வழங்கவேண்டியிருந்தது. அவற்றின் படைகளும் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டன.

ஜெர்மனியின் தலைவிதியை நிர்ணயிக்கப் பிரிட்டன், ஃபிரான்சு, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் 1947ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் தேதியன்று கூடி ஆலோசித்தனர். வலிமை பெற்ற ஒரு மத்திய ஆட்சி ஏற்படுவதை ரஷ்யாவும், கூட்டரசு அமைப்பு ஏற்படுவதைப் பிரிட்டனும் அமெரிக்காவும் ஆதரித்தன. ஃபிரான்சு தன் பாதுகாப்பையே பெரிதாகக் கருதியது. எனவே, ஒருவித உடன்பாடும் ஏற்பட வழியில்லாமற் போயிற்று. நிருவாக சௌகரியத்துக்காக ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் முறையே கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு மண்டலங்களையும், ஃபிரான்சு ஒரு சிறிய இடைப்பட்ட மண்டலத்தையும் ஆள்கின்றன. இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது. பொதுக் காரியங்களை இராணுவத் தலைவர்களின் கவுன்சில் ஒன்று கவனித்துக்கொள்கிறது.

ஜப்பானைப் பொறுத்தவரை அங்குப் பொறுப்பாட்சியை ஏற்படுத்தும் பொறுப்பு தளகர்த்தரான மக் ஆர்தரிடமே விடப்பட்டது. அவர் அங்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத் துரைத்தனத்தை ஏற்படுத்தினர். ஜப்பானிய மன்னர் அதிகாரமற்ற மன்னராக மாற்றப்பட்டார். போருக்குக் காரணமாயிருந்த தொழிலதிபர்களும் தளகர்த்தர்களும் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஜப்பானிய இராணுவமும் கடற்படையும் கலைக்கப்பட்டன.

இரண்டு உலகப் போர்களின் விளைவாக ஆங்கில அரசியலமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

Another Beauty

சமயத்திற்கேற்றாற்போல் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை (Flexibility) ஆங்கில அரசியலமைப்பின் ஒரு பெருஞ் சிறப்பாகும். இரண்டு உலகப் பெரும் போர்களின்போது எதிர்பாராத பல நெருக்கடிகள் நாட்டில் ஏற்பட்டவண்ணமிருந்தன. அவற்றை எல்லாம் எளிதே சமாளிக்குமளவுக்கு ஆங்கில அரசியலமைப்பு தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் பல பெருத்த மாறுதல்களை எய்தியது. போர் தொடங்கிய உடனேயே சர்ச்சைக்குரிய பற்பல மசோதாக்களைப் பாராளுமன்றம் நிறுத்திவைத்து விட்டது. சான்றாக அயர்லாந்துக்குச் சுயநிர்ணய உரிமை வழங்குவது, வேல்ஸ் நாட்டுத் திருச் சபையைக் கலைப்பது போன்ற பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதைத் திடீரெனப் பாராளுமன்றம் நிறுத்திக்கொண்டது. பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தைப் பற்றிய மரபையும் தற்காலிகமாக அம்மன்றம் கைவிட்டது. 1910ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட பாராளுமன்றம் 1918ஆம்

ஆண்டு நவம்பர் மாதம் வரை நீடித்தது. காபினெட் சபை உறுப்பினர்கள் 1915ஆம் ஆண்டில், மரபுப்படி பதவிகளைக் கைவிடவில்லை. மறு தேர்தலும் நாட்டில் நடைபெறவில்லை. பழைய அமைச்சர்களே தொடர்ந்து அமைச்சர்களாயிருந்து பணி புரிந்தனர்.

காபினெட் குழுவில் மாற்றம் - போர்க்காலக் காபினெட்

முதல் உலகப் பெரும் போர் ஏற்பட்டபோது இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர் ஆஸ்க்வித் என்பவராவர். அவர் தாராளக் கட்சியைச் (Liberals) சேர்ந்தவர். 1915ஆம் ஆண்டுவரை ஆஸ்க்வித்தின் தலைமையின் கீழ் அமைந்த தாராள அமைச்சரவையே போரை நடத்திவந்தது. போரின் விளைவாக ஏற்பட்ட பற்பல பிரச்சினைகளைத் தீர்க்கப் பிரதமர் தமது அமைச்சரவையைப் பெருக்கிக்கொண்டார். நாளடைவில் வேறு கட்சியினரும் அதில் இடம் பெறவே அது ஒரு கூட்டு மந்திரி சபை போலவே காட்சியளித்தது. இருபத்து இரண்டு உறுப்பினர்கள் அடங்கிய காபினெட்டில் யூனியனிஸ்ட் (Unionists) கட்சியினர் எட்டு இடங்களைப் பெற்றனர். எல்லாக் கட்சியினரின் தலைவர்களும் அதில் இடம் பெற்றுவிடவே எதிர்க்கட்சி என்ற ஒரு கட்சிக்கு இடமில்லாமலே போயிற்று. இங்ஙனம் விரிவடைந்துவிட்ட அமைச்சரவையானது முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விரைவில் ஒரு முடிவுக்கு வர முடியாமல் திணறியது. போர்க் காலத்தே முடிவுகள் அவ்வப்போது கால தாமதமின்றி எடுக்கப்பட வேண்டியது மிக இன்றியமையாததொன்றாயிருந்தது. எனவே, விரைவில் தீர்மானங்களைச் செய்யக்கூடிய சிறிய குழு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியது. அதில் ஐந்தாறு காபினெட் அமைச்சர்கள் மட்டுமே இடம் பெற்றனர். பிரதமரே அதன் தலைவராயிருந்தார். 1915ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இத்தகைய போர்க்குழு (War Committee) ஒன்று தோன்றியது. அஃது, பழைய அமைச்சரவையைப் போலல்லாது விரைந்து தொழில் புரிந்தது. அதன் திறமையும் அதிகரித்தது. எனினும், அதனால் செய்யப்பட்ட காரியங்களுக்கு முழு காபினெட்டும் பொறுப்பேற்க வேண்டிய நிலை நீடித்ததால், சற்றுத் தயக்கத்துடனேயே போர் குழு தனது பணிகளைப் புரிந்துவந்தது.

1916ஆம் ஆண்டின் முடிவில் ஆஸ்க்வித் தமது பதவியைத் துறந்த பின்னர், லாயிட் ஜார்ஜ் பிரதமரானார். அவர் பதவிக்கு வந்த உடனேயே ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட போர்க் காலக் காபினெட் (War Cabinet) ஒன்றை அமைத்தார். அதில் சேர்க்கப்படாத அமைச்சர்கள் பலரும் தத்தம் துறைகளோடு

சம்பந்தப்படாத பரந்த அரசாங்கக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து விடுபட்டனர். கருவூலத் தலைவர் ஒருவர் மட்டுமே அத்தகைய பொறுப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். ஏனையோர் யாவரும் போரின் விளைவாகத் தத்தம் துறைகளில் ஏற்பட்ட ஏராளமான கடமைகளில் மட்டுமே தங்கள் கவனம் முழுவதையும் செலுத்தினர். அவர்கள் தத்தம் துறைகளைப்பற்றி மட்டுமே சிந்தித்துச் செயலாற்றியதால் காரியங்கள் விரைவாகவும் திறமையாகவும் நடைபெற்றன. அத்தகைய அமைச்சர்கள் தெரிவித்த செய்திகளை வைத்துக்கொண்டு அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளை நிர்ணயிக்கும் பொறுப்பைப் போர்காலக் காபினெட் மேற்கொண்டது. அதன் உறுப்பினர்கள் அடிக்கடி வெவ்வேறு நிருவாகத்துறை தலைவர்களைச் சந்தித்து நிலைமையை நன்கு புரிந்துகொண்டனர்.

போர்க்காலக் காபினெட் கூட்டங்களில் நிருவாகத் துறைத் தலைவர்களும் நிபுணர்களும் தாராளமாகக் கலந்து கொண்டனர். நிருவாகத்தோடு சம்பந்தப்படாத பல அறிஞர்கள்கூட அடிக்கடி அக் கூட்டங்களுக்கு வரவழைக்கப்பட்டனர். அயல் நாட்டவர்வர்கள்கூடச் சில சமயங்களில் அக் கூட்டங்களில் அனுமதிக்கப்பட்டனர். 1915ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கனடாவின் பிரதமர் சர் ராபர்ட் பார்டன் (Sir Robert Borden) என்பவரும் தென் ஆப்பிரிக்கப் பிரதமரான ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவரும் காபினெட் கூட்டங்களில் கலந்துகொண்டார்கள். வெறும் அறிவுரை வழங்குவதற்காக மட்டும் அவர்கள் அழைக்கப்படவில்லை. தங்கள் நாடுகளின் பிரதிநிதிகளாக அவர்கள் அரசாங்க ரீதியில் அழைக்கப்பட்டுக் காபினெட்டின் முழு உறுப்பினர்களாக அதன் அலுவல்களில் பங்கு கொண்டனர். பிரிட்டன் வரலாற்றிலேயே இங்ஙனம் நடைபெற்றது இதுதான் முதல் தடவையாகும்.

போர்க்காலக் காபினெட்டானது நாளடைவில் விரிவடைந்து பேரரசு காபினெட்டாக (Imperial Cabinet) மாறியது. 1917ஆம் ஆண்டு வசந்த காலத்திலும், கோடை காலத்திலும் 1918ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தன. அச் சமயங்களில் டொமினியன் நாடுகளின் பிரதமர்களும் இந்தியாவின் பிரதிநிதிகளும் காபினெட்டின் முழு உறுப்பினர்களாக வந்து அமர்ந்து அதன் பணிகளில், முக்கியமாகப் பேரரசு சம்பந்தமான கொள்கைகளை வகுப்பதில் பங்கு கொள்ளும்படி அழைக்கப்பட்டனர். பாராளுமன்றத்தின் உறுப்பினர்களல்லாதவர்களும் கூட காபினெட் கூட்டங்களில் பங்கு பெறுகின்ற விசித்திர நிகழ்ச்சி, போர்க் காலத்தில்தான் முதன் முதலாக நடைபெற்றது.

போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது காபினெட் சபையில் ஒரு மாற்றம் ஏற்பட்டதென்பதைக் கண்டோம். அதாவது ஆஸ்க்வித் என்பார் தம் பிரதமர் பதவியைக் கைவிட அதை லாயிட் ஜார்ஜ் என்பவர் ஏற்ருர். இத்தகைய மாற்றம் அமைதிக் காலத்தே நடக்கக் கூடாத ஒரு நிகழ்ச்சியாகும். ஓர் அமைச்சரவையைப் பதவியிருந்து நீக்கவேண்டுமாஞல் அதற்குப் பொதுமக்கள் சபையும், பொதுமக்களும் சேர்ந்து வேண்டுகோள் விடுக்க வேண்டும். அதோடு புதிய மந்திரி சபைக்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டும். இவைபெல்லாம் இல்லாமலேயே மந்திரி சபையில் மாற்றம் ஏற்பட்டதென்பது, போர்க்காலத்தே அரசியலமைப்பில் நேர்ந்துவிட்ட புதுமைகளில் ஒன்ருகும். ஆஞல், மாறி அமைந்த மந்திரி சபையைப் பொதுமக்கள் வரவேற்ருர்கள் என்பதை மறுக்க முடியாது. செய்தித் தாள்கள் அவரை ஆதரித்தன. பொதுமக்கள் கருத்து (Public Opinion) அவருக்குச் சாதகமாயிருந்தது. அப்படி இல்லாமலிருந்திருந்தால் அவரது அமைச்சரவையே ஒரே மாதத்தில் ஆட்டங்கண்டிருக்குமென்பது ஒருதலை.

போர் தொடர்ந்து நடைபெற நடைபெறப் போர்க்காலக் காபினெட்டின் உறுப்பினர்கள் தொகையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. போரின் விளைவாகப் புதிய பல துறைகள் நாட்டில் ஏற்பட்டன. நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் (Defence of Realm Act) காரணமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மலிந்தன. அவற்றையெல்லாம் நிருவகிக்கப் புதிய அமைச்சர்கள் தோற்றுவிக்கப்பட்டார்கள். தொழில், கப்பல் வாணிகம், உணவு, விமானப்படை, ஆயுத உற்பத்தி, உதவித் தொகை (Pension), நாட்டுப் புனரமைப்பு (Reconstruction) போன்ற பல புதிய அமைச்சுத் துறைகள் தோன்றின. 1918ஆம் ஆண்டில் ஏறக்குறைய நூறு துறைகள் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தன. பொதுமக்கள் சபையில் உறுப்பினர்கள் அல்லாத பல அறிஞர்கள் அமைச்சரவையில் இடம் பெற்ருர்கள். தொழில் நுணுக்கம் செறிந்தவர்களான லார்டு கிச்னர் (Lord Kitchener), சர் எரிக் கெட்டஸ் (Sir Eric Gedders) எச். ஏ. எல். ஃபிஷர் (H. A. L. Fisher) போன்றவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டதும் இக் காலத்திற்ருகும்.

போர்க்காலக் காபினெட் நாள் தவருது கூடிக்கூடி ஆலோசனைகள் புரிந்து போரைத் திறம்பட நடத்தி வந்தது. பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் காபினெட் அமைச்சர்கள் போரிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். அமைச்சர்கள் ஏதோ சிற்சில சமயங்களில்தான் பாராளு

மன்றக் கூட்டங்களில் சென்று கலந்து கொண்டனர். அதிலும் முக்கியமாகப் பிரதம அமைச்சர் பொதுமக்கள் சபைக்குப் போவதையே நிறுத்திக் கொண்டார். அச் சபையின் தலைவராகப் பணியாற்றும் பொறுப்பைக் கருவூலத் தலைவரே மேற்கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் போர் சம்பந்தமான குழுக்களில் மும்முரமாகப் பணியாற்றிக்கொண்டிருந்ததால், அவர்களும்கூடப் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாது போயிற்று.

காபினெட் சபையினர் யாவரும் கருத்தொருமை கொண்டு கூட்டாகச் செயல்புரிய வேண்டுமென்பதும், ஏதாவது ஓர் அமைச்சர் தவறு புரிந்துவிட்டால் அமைச்சரவை முழுவதும் பதவியை விட்டு நீங்கவேண்டும் என்பதும் போர்க் காலத்தே, கைவிடப்பட்ட கொள்கைகளாகி விட்டன. முதலாம் மெசபடோமியப் போரைச் சரிவர நடத்தாதது பற்றிப் பாராளுமன்றம் இந்திய அரசாங்கத்தைக் குறைகூறியபோது, இந்திய அமைச்சராயிருந்த ஆஸ்டின் சேம்பர்லின் என்பார் மட்டுமே பதவி துறந்தார். காபினெட் முழுவதுமாகப் பதவி துறக்கவில்லை. இந்த நூதனமான நிகழ்ச்சியை மக்கள் போரின் காரணமாக அனுமதித்தனர்.

காபினெட் கூட்டங்களில் நடைபெறுபவை எல்லாம் இரகசியமாக இருக்கவேண்டுமென்பது தொன்றுதொட்டு வந்த மரபுகளில் ஒன்ருகும். ஆனுல், போர்க் காலத்தே இந்த முறை மறைந்தே போயிற்று. காபினெட்டில் ஒருசில அமைச்சர்களே இடம் பெற்றிருந்தமையாலும், அங்கு என்னென்ன நடைபெற்றன என்பதை அதில் இடம் பெருத ஏனைய அமைச்சர்கள் தெரிந்துகொள்ள வேண்டுவது நிருவாகத் திறமைக்கு மிக இன்றியமையாததாயிருந்ததாலும், காபினெட் கூட்டங்களில் நடைபெறுபவைகளைச் செவ்வனே குறித்து வைத்து அவைகளை அவ்வப்போது சம்பந்தப்பட்ட நிருவாகத் தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய காபினெட் தலைமைச் செயலகம் (Cabinet Secretariat) ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. செயலாளர் ஒருவர் காபினெட் கூட்டங்களில் கலந்துகொள்வது வழக்கமாகிவிட்டது. அவர் கூட்ட நடவடிக்கைகளை ஒழுங்காகக் குறித்துக் கொண்டு அவற்றை வகைப்படுத்தி வெவ்வேறு துறைகளுக்கு அனுப்பி வைத்தார். இங்ஙனம் காபினெட் நடவடிக்கைகளைப்பற்றி நிருவாகத்துறைத் தலைவர்கள் அறிந்துகொள்வதற்கும், நிருவாகத் துறைகளின் அலுவல்கள் பற்றி, காபினெட் அமைச்சர்கள் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக, செயலாளரும் அவரது செயலகமும் பணிபுரிந்தது. காபினெட் அலுவல்கள் பற்றிய

நிகழ்ச்சிக் குறிப்பைத் தயாரிப்பதும், கடிதப் போக்குவரத்துகளை நடத்துவதும், வெளியார்கள் வந்து அதன் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு வகைசெய்வதும் அச் செயலகத்தின் கடமைகளாகும். காபினெட் நடவடிக்கைகளைப் பற்றிய ஆண்டறிக்கை ஒன்றையும் அது வெளியிடலாயிற்று. இங்ஙனம் காலம், இடம், நிகழ்ச்சிநிரல் முதலியவைகளில் ஒரு வரை துறையின்றி நடைபெற்று வந்த காபினெட்கூட்ட நடவடிக்கைகளில், போர்க் காலத்தே ஓர் ஒழுங்கும் அமைதியும் தோன்றலாயிற்று.

போர்க் காலத்தே தோன்றிய புதுமைகள் பல போர் ஓய்ந்த பின்னும் இங்கிலாந்தில் நிலைத்து விளங்குவதாயின. காபினெட் தலைமைச் செயலகம் தொடர்ந்து தன் பணிகளைச் செய்து வந்தது. போர்க் காலத்தே விரிவாக்கப்பட்ட காபினெட், அது முடிந்து ஓராண்டுவரை அப்படியே நீடித்தது. 1919ஆம் ஆண்டில்தான் அக் காபினெட் கலைக்கப்பட்டு இருபது பேர் கொண்ட பழைய சபை அமைக்கப்பட்டது. தனிப்பட்ட சில காரியங்களைக் கவனிக்க சிறப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதும், அதில் வந்து கலந்து கொண்டு தங்கள் மேலான ஆலோசனைகளை நல்கும்படி நிபுணர்களை அழைப்பதுமான வழக்கம் தொடர்ந்து நடைபெறலாயின. இத்தகைய சிறப்புக் குழுக்கள், ஆலோசனை முடிந்தபின் காபினெட்டின் முன் தங்கள் சிபாரிசுகளை அறிக்கைகளாகச் சமர்ப்பிக்கின்றன. தொழிற் கட்சி அரசாங்கத்தார் 1930ஆம் ஆண்டில் பொருளாதாரத் துறையில் அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்குவதற்காக இத்தகைய ஒரு நிபுணர் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்தனர். அட்லி என்ற பிரதமர் அடிக்கடி இவ் வழக்கத்தைக் கடைபிடித்தார்.

செயலகத்தின் உயர்வான பணிகளின் விளைவாகச் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளைக் கலந்தாலோசித்த பின்பே காபினெட் அத்துறைகளைப்பற்றிய கொள்கைகளை வகுக்கிறது. குறிப்பிட்ட ஒரு துறையைப்பற்றிய விவாதம் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுமுன் அதுபற்றி அத்துறையினர் கலந்தாலோசிக்கப்பெற வேண்டுமென்பது இப்போது ஒரு கண்டிப்பான விதியாகவே கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் காபினெட்டின் கொள்கைகள் செம்மையாகவும் தப்புத் தவறின்றியும் அமைவதற்குச் சாதகமாகிறது.

போர்க் காலத்தே தோன்றிய பல புதிய துறைகள் மறைந்துவிட்டன. எனினும், தொழில், சுரங்கம், போக்குவரத்து, கப்பல் வாணிகம், உதவித் தொகை, விமானம், புனரமைப்பு ஆகியவை பற்றிய துறைகள் போர் முடிந்த பின்னும் நீடித்துச் செயல் புரிந்து வந்தன.

இரண்டாம் உலகப் போரும் காபினெட் சபையும்

1939ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் தோன்றிய போது நெவில் சேம்பர்லின் (Neville Chamberlin) என்ற பிரதமர் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட போர்க்கால காபினெட் ஒன்றை அமைத்தார். தொழிற்கட்சி, தாராளக் கட்சி ஆகிய இரு கட்சியினரும் காபினெட்டில் சேர மறுத்துவிட்டனர். ஆனால், அரசாங்கத்துக்கு அவர்கள் தங்களது ஒத்துழைப்பை நல்கினர். 1940ஆம் ஆண்டில் வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமரானபோது அக் கட்சியினர் காபினெட்டில் சேர்ந்தனர். அதில் ஆரம்பத்தில் ஐவரும், நாளடைவில் எண்மரும் இடம் பெற்றனர். முதல் உலகப் போரின்போது ஏற்பட்ட காபினெட்டும் இரண்டாம் உலகப் போரின்போது அமைந்த காபினெட்டும் பெரிதும் மாறுபட்டு விளங்கின. முன்னைய காபினெட்டில் நிருவாகத் துறைகளோடு தொடர்பில்லாத அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தனர். எனவே, அவர்கள் நிருவாகத்தோடு தொடர்பு கொண்டிருந்த அமைச்சர்களைக் கலந்தாலோசிப்பதிலும், அதுபற்றி ஆராய்வதிலும் அதிக நேரத்தைச் செலவழித்தனர். இந்த அனுபவத்தின் விளைவாக இரண்டாம் உலகப் போர்க் காலக் காபினெட்டில் நிருவாகத் துறைத் தலைவர்களாயிருந்த அமைச்சர்களையே சர்ச்சில் சேர்த்துக் கொண்டார். கருவூலத் தலைவர், அயல்நாட்டுத் துறைத் தலைவர் போன்ற பல்வேறு துறைத் தலைவர்கள் அதில் இடம் பெற்றனர். மூன்றே அமைச்சர்கள் மட்டுமே நிருவாகத்தோடு தொடர்பு அற்றவர்களாயிருந்தனர். பேரரசு காபினெட் என்ற நிறுவனமும் இரண்டாம் உலகப் போரின்போது ஏற்படுத்தப்படவில்லை.

மற்றும் காபினெட் அமைப்பு முறையில் புதியதோர் பரிசோதனை இரண்டாம் உலகப்போரின்போது நடந்தது. போர் நடைபெற்றுவந்த வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து அங்கிருந்து கொண்டே அமைச்சர் பணியை ஆற்றிவந்த ஒருசிலர் காபினெட்டில் இடம்பெற்றார்கள். மத்திய கிழக்குப் பிரதேசம், தூரக்கிழக்குப் பிரதேசம், மேற்கு ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளுக்கென்று தனிப்பட்ட அமைச்சர்கள் காபினெட்டில் அமர்த்தப்பெற்றனர் அவர்கள் அந்தந்த நிலப் பகுதிகளில் வாழ்ந்து தம் கடமையைச் செய்தனரேயன்றி, இங்கிலாந்தில் தொழில் புரியவில்லை. அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் தூதுவராக இருந்த ஹாலிஃபாக்ஸ் பிரபு, போர்க்கால காபினெட்டின் உறுப்பினராகவுமிருந்தார்.

முதல் உலகப் போரின்போது ஏற்பட்டதே போன்று பல புதிய துறைகள் இரண்டாம் போருக்குப் பின்னும் தோன்றின.

முதற் போரின்போது போர்க்கருவிகளை வழங்கிவந்த அமைச்சுத் துறையானது, பொருள் வழங்குதுறை (Ministry of Supply) என்ற பெயரில் இரண்டாம் போரின்போது செயற்பட்டது. போர் முடிந்த பின்னும் அவ்வமைச்சுக் குழு தொடர்ந்து பணியாற்றி வந்தது. அதேபோல, விமானத்துறை, தொழில், செய்தி, உணவு, கப்பல், திட்ட அமைப்பு ஆகிய துறைகளுக்கும் தனித்தனி அமைச்சுக் குழுக்கள் ஏற்பட்டன. ஒவ்வொன்றுக்கும் தலைவராக ஓர் அமைச்சர் இருந்தார். நாடு, நகரமைப்புத் திட்டம் பற்றிய துறையைத் தவிர ஏனைய துறைகள் யாவும் போருக்குப் பின் கலைக்கப்பட்டு விட்டன. 1945-க்குப் பின் போர்க்காலக் காபினெட் சபைக்கே ஆபத்து நேர்ந்தது. போர் முடிந்துவிட்ட காரணத்தால் தொழிற் கட்சி, தாராளக் கட்சி ஆகியவை அரசாங்கத்துக்குத் தங்களது ஒத்துழைப்பைத் தராமல் நிறுத்தி விட்டன. கூட்டமைச்சு கலைந்தது. பின்னர் நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வி அடைந்தது. தொழிற் கட்சித் தலைவர் அட்லி பிரதமரானார். எனவே, இரண்டாம் உலகப் போரோடு அதற்கென்று ஏற்பட்ட சிறப்பான காபினெட்டும் அதையொட்டிய அமைச்சுக் குழுக்களும் மறைந்தன.

இரண்டாம் உலகப்போரின்போது ஏற்பட்ட காபினெட்டில் கமிட்டி முறையையே அமைச்சர்கள் பெரிதும் கையாண்டனர். வெவ்வேறு துறைகளுக்கும் வெவ்வேறு குழுக்களை அவர்கள் அமைத்தனர். ஆனால், எல்லாத் துறைகளுக்கும் பிரதமரே தலைவராகத் திகழ்ந்தார். அவர் எண்ணியதை எண்ணியாங்கு செய்துதற்கான எல்லா அதிகாரங்களையும் பாராளுமன்றம் அவருக்கு வழங்கியது. போரைச் செவ்வனே நடத்தும் பொறுப்பு அவர் மீதே முழுவதுமாக விழுந்தது. போர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாவரையும் அவரே கண்காணித்துப் பணித்து வந்தார். பல்வேறு பணிகளையும் ஒருங்கே கவனிக்கவேண்டியிருந்த காரணத்தால் அவர் பொதுமக்கள் சபைக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பைக் கைவிட்டார். ஸர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ், அந்தோனி ஈடன் ஆகிய அமைச்சர்களுக்கு அப் பொறுப்பைப் பிரதமர் வழங்கிவிட்டார். எனினும், அவர் பொதுமக்கள் சபையில் அடிக்கடி வந்து கலந்துகொண்டார். முதல் உலகப் போரின்போது, பிரதமர் பொதுமக்கள் சபைக்கு ஏதோ அத்தி பூத்தாற்போல்தான் வருவார் என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

போர்க் காலத்தே உரிமைகளில் தலையீடு

1939, 1940ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட அவசர கால அதிகாரங்கள் சட்டப்படி (Emergency Powers Act) அரசாங்கத்துக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. போரைத்

திறம்பட நடத்தவும், அமைதியைக் காக்கவும் எதையும் செய்தற்குரிய அதிகாரத்தை அமைச்சர்கள் பெற்றிருந்தனர். பொது அமைதியைக் காக்குமுகத்தான், ஐயத்துக்குரிய எந்த நபரையும் சிறையிலடைக்கும் அதிகாரத்தை உள்துறை அமைச்சர் பெற்றிருந்தார். ஹெபியஸ் கார்ப்பஸ் மனுக்களின் மூலம் சிறைப்பட்டவர்கள் விடுதலையடையாவண்ணம் தடுக்கும் உரிமையையும் அமைச்சர் பெற்றிருந்தார். அவர் அவ்வப்போது வெளியிட்ட கட்டுப்பாட்டு விதிகள் சட்டங்களாகவே கருதப்பட்டன. குடிமக்களைக் கட்டாயமாகப் படைகளில் சேர்க்கவும், போர்ப்பணிகளில் கட்டாயமாக ஈடுபடுத்தவும் அமைச்சர் அதிகாரம் பெற்றிருந்தார். கருத்து வெளியீட்டுரிமையும் போர்க்காலத்தே பெரிதும் தடைப்பட்டது. தனது கட்டுரைகள் மூலம் போர் நடப்பைப் பாதிப்பதாகக் கருதப்பட்ட 'டெய்லி வொர்க்கர்' (Daily Worker) என்ற கம்யூனிஸ்ட் பத்திரிகையை அரசாங்கம் 1940ஆம் ஆண்டில் தடை செய்தது. 1941ஆம் ஆண்டில் சர் ஆஸ்வால்ட் மோஸ்லி (Sir Aswald Mosley) என்பாரை விசாரணையின்றி அரசாங்கம் சிறை செய்தது. இங்ஙனம் தனி நபர்களை விசாரணையின்றிச் சிறையில்டைப்பது முறையா என்பது பற்றி 1941இல் பாராளுமன்றத்தில் ஒரு விவாதம் நடைபெற்றது. அரசாங்கத்தின் செயல் சரியே என்று அதில் பாராளுமன்றம் இறுதியில் ஒப்புக்கொண்டது. மக்களின் உடலுரிமையேயன்றி சொத்துரிமையும் போர்க்காலத்தே பறிபோயிற்று. 1940ஆம் ஆண்டுச் சட்டப்படி எல்லா மக்களின் சொத்துகளிலும் அரசாங்கம் எப்போது வேண்டுமானாலும் பங்குபெறலாமென்பது நிலைநாட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட இடங்களில் நீதி வழங்குவதற்காக ஜூரியில்லாமலேயே இயங்கக்கூடிய தனிப்பட்ட சிவில் நீதி மன்றங்களை இன்னொரு சட்டம் ஏற்படுத்தியது. மற்றுமோர் சட்டம், எதிரி நாடுகளிலிருந்து வந்து தலைமறைவாகத் திரியும் உளவாளிகளைக் கைது செய்து கொன்றுவிடக்கூடிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு நல்கியது. ஜெர்மானியர்கள் ஒருவேளை இங்கிலாந்தின்மீது தரைமூலமாகப் படையெடுப்பார்களேயானால், அப்போது நிருவாகம் தடையின்றிச் செயல்படுதற்காக மத்திய அரசாங்கத்தின் உதவியின்றியே இயங்கக்கூடிய ஆணையாளர்கள் இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளில் (12 பகுதிகளில்) நியமிக்கப்பட்டனர். ஆனால், நல்லவேளையாக அத்தகைய படையெடுப்பு நேரவில்லை. எனவே, அச் சட்டமும் அமுலாக்கப்படவில்லை.

முதல் உலகப்போரின்போதும் மக்களின் உரிமைகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டன. நாட்டுப் பாதுகாப்புச் சட்

டத்தின்படி (Defence of the Realm Act 1914) அரசாங்கம் எவரை யும் விசாரணையின்றியே கைது செய்யலாம். போர்க்காலக் கட்டு திட்டங்களை மீறுபவர்களைத் தனிப்பட்ட இராணுவ நீதிமன்றங் கள் மூலம் தண்டிக்கலாம். போரில் சேரும்படி மக்களை அரசாங் கம் கட்டாயப்படுத்தலாம். 1914ஆம் ஆண்டில் ஏற்பட்ட அந்நியர்கள் தடைச் சட்டப்படி (Aliens Restrictions Act) ஐயப் பட்ட எந்த அயல் நாட்டவரையும் இங்கிலாந்தில் நுழைய விடாதபடி தடுக்கவும், அல்லது இங்கிலாந்திலிருந்து வெளி யேற்றவும் உள்துறை அமைச்சர் அதிகாரம் பெற்றிருந்தார். இருப்பினும், சுதந்திரமாக நடமாடும் உரிமையும், உடலுரிமை மனுக்களைக் கோரும் உரிமையும் முழுவதுமாகத் தடைப் படவில்லை. பேச்சுரிமை, கருத்து வெளியீட்டுரிமைகளுக்குப் பெரிதும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. எனினும், கட்டாய இராணுவ சேவை, அந்நிய நாடுகளோடு ஏற்பட்ட உடன்படிக்கை போன்றவைகளைக் குறைகூறும் உரிமையை மக்கள் பெற்றிருந் தனர். பிரசுர உரிமை பெரிதும் குறைந்தது. செய்திகளைத் தணிக்கை செய்யத் தனி பிரசுர இலாகா ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியது. மக்களின் சொத்துரிமையிலும அரசாங்கம் பெரிதும் தலையிட்டது. ரயில்வேக்கள், சுரங்கங்கள், தொழிலகங் கள் ஆகியவை அரசாங்க உடைமையாக்கப்பட்டன. உணவு வழங்கலையும், மது அருந்துவதையும், விளக்குகளைப் பயன் படுத்துவதையும்கூட அரசாங்கம் கட்டுப்படுத்தியது. விலைவாசி கள் கட்டுப்படுத்தப்பட்டன. இங்ஙனம் மக்களின் சிவில் உரிமை களில் அரசாங்கம் போர்க் காலத்தே பெரிதும் தலையிடுவது வழக்கமாகிவிட்டது.

அமைச்சர்கள் அளவுக்கு மீறித் தங்களது அதிகாரங் களைப் பயன்படுத்திவிடாமல் தடுக்கவும் பாராளுமன்றம் முயற்சி எடுத்துக்கொண்டது. அரசாங்கத்தின் கட்டுதிட்டங் களை ஆராய்ந்து அவசியமில்லாவிடின் அவற்றை ரத்து செய் யும் உரிமையைப் பாராளுமன்றமே தன்னகத்து வைத்துக் கொண்டது. அமைச்சர்களால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறை களை ஆராய்ந்து அவற்றில் கொள்ளத்தக்கனவும், தள்ளத் தக்கனவும் எவை என்பதைப் பொதுமக்கள் சபைக்கு எடுத்துச் சொல்லவேண்டி 1944ஆம் ஆண்டு ஜூன் மாதம் சோதனைக் குழு (Scrutiny Committee) ஒன்று அமைக்கப்பட்டது. போர் எனும் போர்வையைப் போர்த்துக்கொண்டு அரசாங்கம் மக்களது உரிமையைப் பறித்துவிடாவண்ணம் பாராளுமன்றம் விழிப் போடு நடந்துகொண்டமை உண்மையில் பாராட்டப்பட வேண்டிய செயலேயாகும். போர்க் காலத்தும்கூட தனி மனிதர்கள் நாட்டின் பொதுவழக்கு நீதிமன்றங்களில் முறை

யிட்டுக் கொள்வதன் மூலம் அரசாங்க அதிகாரிகள்மீது நட வடிக்கை எடுத்துத் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்வதற் கான வசதிகளைப் பெற்றிருந்தனர். மிகக் குறைந்தபட்ச அளவி லேயே அரசாங்கம் மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் உரிமை களிலும் தலையிட்டது. போர் முடிந்த உடனேயே இக் கட்டு திட்டங்கள் யாவும் மறைந்தொழிந்தன. ஆங்கில மக்கள் எப் போதும்போல் சுதந்திரக் காற்றை உட்கொண்டு பண்பட்ட அரசியல் நாகரீகத்துடன் வாழலாயினர்.

13. பிரிட்டிஷ் காமன்வெல்த்

(British Commonwealth of Nations)

பிரிட்டிஷ் காமன்வெல்த் : காமன்வெல்த்தின் உறுப்புகள்—டொமினியன்கள், வெஸ்ட்மின்ஸ்டர் நிலவரச் சட்டம் (Statute of Westminster) 1931; அரசாள் குடியேற்றங்கள் (Crown Colonies)—பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள் (Protectorate)—காமன்வெல்த் நாடுகளின் வகை : ஒப்படைக்கப்பட்ட நாடுகள் (Mandated territories)—இணையாட்சி நாடுகள்—குத்தகைக்கு விடப்பட்ட நாடுகள்—கூட்டாளி அரசு.

பிரிட்டிஷ் காமன்வெல்த் (British Commonwealth)

உலக நாடுகளின் கூட்டுறவில், பிரிட்டிஷ் காமன்வெல்த் அல்லது பொதுநலக் கூட்டுறவு ஒரு தனி இடத்தைப் பெறுகின்றது. அது ஒரு விசித்திரமான குடும்பம். அக் குடும்பத்தின் தலைவியாக விளங்குபவர் பிரிட்டிஷ் இராணியாவார். ஒரு குடும்பத்தில் வயது வந்தவர்கள், சிறுவர்கள், எடுத்து வளர்க்கப்பட்டவர்கள், சொந்தப் பிள்ளைகள் எனப் பலதரப்பினர் அடங்கியிருப்பதுபோலப் பிரிட்டிஷ் காமன்வெல்த்திலும் முழு சுயேச்சை பெற்றவை, ஓரளவு சுயேச்சை பெற்றவை, பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்டவை எனப் பல திறப்பட்ட நாடுகள் இணைந்துள்ளன. பிள்ளைகளிற் சிலர், வயது வந்து திருமணமான பின் குடும்பத்தை விட்டு வெளியே போய்த் தனிக் குடும்பம் நடத்துவதைப் போல், பிரிட்டிஷ் பேரரசுக்குட்பட்டிருந்த நாடுகளில் சில (பர்மா, அயர்லாந்து போன்றவை) சுதந்திரம் பெற்ற பின் காமன்வெல்த்தை விட்டு வெளியேறியும் இருக்கின்றன. ஆனால், வளர்ப்புத் தாயெனினும், அவளிடம் குழந்தைகள் விசுவாசமாயிருப்பதைப் போன்று காமன்வெல்த்திலிருந்து பிரிந்த நாடுகளும் பிரிட்டனிடம் நட்புடன் நடந்து கொள்கின்றன. தாயுடன் சண்டையிட்டுக் கொண்டு பிரிந்த முரட்டுக் குழந்தையான அமெரிக்காவும் பிரிட்டனுடன் நட்புரிமை பாராட்டியே வருகிறது. கனடா, ஆஸ்திரேலியா போன்ற டொமினியன்கள் பிரிட்டனின் சொந்தக் குழந்தை


பிரிட்டிஷ்
காமென்வெல்த்
கூட்டுறவு நாடுகள்
பிரிட்டிஷ் காமென்வெல்த்தில் சேர்ந்துள்ள நாடுகள்
காமென்வெல்த்தில் சேராத நாடுகள்
கனடா
லாபரடார்
நியூ பவுண்ட்லாந்து
வட அயர்லாந்து
பிரிட்டன்
பஹாமா தீவுகள்
ஜிப்ரால்டர்
மால்டா
சைப்ரஸ்
மே. பாகிஸ்தான்
காஷ்மீர்
கி. பாகிஸ்தான்
இந்தியா
பர்மா
ஹாங்காங்
ஏடன்
சிலோன்
மலாசியா
சிங்கப்பூர்
சாலமன் தீவுகள்
நியூகினியா
ஆஸ்திரேலியா
நியூஜிலாந்து
ஜமாய்க்கா
டிரினிடாட் டொபாகோ
பிரிட்டிஷ் ஹாண்டுராஸ்
குயானா
மொசாம்பிக்
தெ. மே. ஆப்பிரிக்கா
பாக்லாந்து தீவுகள்
1. ரோடீஷியா.
2. ஸாம்பியா
3. பாட்ஸ்வானு
4. டான்ஸானியா
5. மாளவி
6. கென்யா
7. நைஜீரியா.
8. கானு
9. சியாராலியோண்
10. காம்பியா
11. உகாண்டா
12. ஸ்வாஸிலாந்து
13. லெசாத்தோ

கள் போன்றவை. அவைகள் சுயாட்சியைப் பெற்ற பின்னும் காமன்வெல்த்திலிருந்து பிரியாமலேயே இருக்கின்றன. பிரிட்டிஷ் இராணியைத் தங்கள் இராணியென ஏற்றுக்கொள்கின்றன. எடுத்து வளர்க்கப்பெற்ற பிள்ளைகள் போன்ற இந்தியாவும், கானாவும், ஏனைய ஆப்பிரிக்க நாடுகளும் கூடச் சுதந்திரம் பெற்ற பின்னும் காமன்வெல்த்தை விட்டு நீங்காமல் பழைய விசுவாசம் குன்றாமல் நடந்து கொள்கின்றன. பிரிட்டிஷ் இராணியைத் தங்களது இராணியென ஒப்புக்கொள்ளாவிட்டாலும், காமன் வெல்த் தலைவியென ஒப்புக்கொள்கின்றன. வியாபாரம், பாது காப்பு போன்ற பொது விவகாரங்களில் அவை பெரிதும் ஒத்துழைக்கின்றன. அவ்வப்போது நடைபெறும் பேரரசு மாநாடு களில் (Imperial Conferences) அவை, பிரிந்த சேய்கள் தாயுடன் அளவளாவுதல் போன்று பொதுப் பிரச்சினைகளைப் பிரிட்டனு டன் விவாதித்துக் கருத்துகளைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்கின் றன. ஆரம்பத்தில் பிரிட்டிஷ் தாய் தன் குழந்தைகளிடம் மிகக் கண்டிப்பாக இருந்தாள். அவை சுதந்திர உணர்ச்சியை வெளிப் படுத்தியபோது சீறினாள். தன் சுகத்துக்காகவே தன் மக்கள் என்று கருதி அவற்றைச் சுரண்டினாள். அதனால், ஒரு குழந்தை அதாவது அமெரிக்கா, சண்டையிட்டுக் கொண்டு தனியே பிரிந் தது. அதன் பின் அவள் மனப்பான்மை மாறியது. வயது வரும் வரை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து விட்டுப் பின்னர் அவற்றுக்குச் சுதந்திரம் அளித்தலே நல்லதென அவளுக்குப்பட்டது. எனவே, தக்க வேளை வரும்போது சுயாட் சியை வழங்கித் தனக்குச் சமமாகத் தன் குடும்பத்திலேயே வாழும் படி தனது மக்களை அனுமதித்தாள். இக் கொள்கையின் அடிப் படையிலேற்பட்டதே பிரிட்டிஷ் காமன்வெல்த்தாகும். பிரிட்ட னின் பெருந்தன்மைக்கும், நாகரிக மனப்பான்மைக்கும் இப் பொது நலக் கூட்டுறவு, ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

காமன்வெல்த்தின் உறுப்புகள்

பிரிட்டிஷ் காமன்வெல்த்தும் பேரரசும் உலகமெங்கணும் பரந்து விரிந்துள்ள ஒரு நிறுவனமாகும். ஐரோப்பாக் கண்டத் தில் பிரிட்டன், வட அயர்லாந்து, மால்டா, சைப்ரஸ் தீவுகள், ஜிப்ரால்டர் துறைமுகம் ஆகிய இடங்களும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் தென் ஆப்பிரிக்க யூனியன், கிழக்கு ஆப்பிரிக்கா வின் பெரும் பகுதி, சூடான், மேற்கு ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகள் ஆகிய பிரதேசங்களும், ஆசியாக் கண்டத்தில் இந்தியா, சிலோன், மலேயா, ஏடன், ஹாங்காங் என்ற இடங்களும், ஆஸ்ட்ரலேசியாவில் ஆஸ்திரேலியக் காமன்வெல்த், நியூஸி லாந்து, பிரிட்டிஷ் நியூகினியா, பசி:பிக் தீவுகள் ஆகிய நாடு

களும், அமெரிக்காவில் கனடா, நியூஃபவுண்ட்லாந்து, பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகள், பிரிட்டிஷ் கயானு, ஹாண்டுராஸ், ஃபாக் லண்ட் தீவுகள் ஆகிய பிரதேசங்களும், அன்டார்டிக் கண்டத் தில் பெரும் பகுதியும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் உட்பட்டுள் ளன. தன்னுட்சித் துறையில் இவைகள் அடைந்துள்ள முன்னேற் றத்துக்கு ஏற்ப இவற்றைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

டொமினியன்கள் அல்லது சுயாட்சி பெற்ற காமன்மெல்த் அரசுகள் (Dominions or Commonwealth States), வெஸ்ட்மின்ஸ் டர் நிலவரச் சட்டம் (Statute of Westminster 1931)

இன்றைய பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் பெரும்பான்மை யான நாடுகள் சுதந்திரம் பெற்றுள்ளவையாயிருக்கின்றன. பத் தொன்பதாம் நூற்ருண்டிலேயே கனடா, நியூஸிலாந்து, ஆஸ்தி ரேலியா, தென் ஆப்பிரிக்கா என்ற நாடுகள் ஓரளவு சுயாட்சி பெற்றவைகளாயிருந்தன. இருபதாம் நூற்ருண்டில் அவைகள் பூரண சுயாட்சியைப் பெற்றுவிட்டன. உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் அவைகளுக்குப் பூரண சுதந்திரத்தை வழங்கிய வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் 1931ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அது வழங்கிய அரசியல் சுதந்திரம் டொமினியன் அந்தஸ்து (Dominion Status) என்ற பெயரால் முதலில் குறிக்கப்பட்டது. ஆனுல், டொமினியன் என்ற ஆங்கிலச் சொல் ஏதோவோர் அரசியல் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்ட நிலையைக் குறிப்பது போல் இருப்பதால், அச் சொல் இப்பொழுது கைவிடப்பட்டுள் ளது. காமன்வெல்த் நாடுகள் அல்லது அரசுகள் (Commonwealth States) என்ற பொதுப் பெயராலேயே இப்போது இந் நாடுகளெல் லாம் அழைக்கப்படுகின்றன.

பிரிட்டனுக்கும் இவ்வரசுகளுக்குமுள்ள தொடர்பை வெஸ்ட் மின்ஸ்டர் நிலவரச் சட்டம் நன்கு வரையறுத்துள்ளது. அச் சட்டப்படி டொமினியன்கள் என்பவை கட்டற்ற, சுதந்திரமுள்ள, இறைமை வாய்ந்த (Free, Independent, Sovereign States) நாடுக ளாகும். பிரிட்டிஷ் மகுடத்துக்கு விசுவாசமா யிருப்பதொன் றைத் தவிர, வேறு எந்தவிதமான தொடர்பும் பிரிட்டனுக்கும் டொமினியன்களுக்கும் சட்டப்படி கிடையாது. உள்நாட்டு வெளி நாட்டு விவகாரங்களில் இவை எவ்வகையிலும் ஒன்றுக்கொன்று கட்டுப்பட்டவை யல்ல. காமன்வெல்த்திலிருந்து எந்தச் சமயத்தி லும் பிரிந்து போக இவற்றுக்கு உரிமை உண்டு. இவைகள் பூரண இறைமை வாய்ந்தவை. எனவே எந்த நாட்டோடும் விருப் பம்போல் இராஜதந்திர உறவுகளைக் கொள்ளலாம். பிரிட்டனுக்கு விரோதமான ஒரு நாட்டோடு தொடர்பு கொள்ளவும்கூட ஒரு

டொமினியனுக்கு உரிமை யுண்டு. ஆனால், நடைமுறையில் அங்ஙனம் நிகழ்வதில்லை. அதே போல பிரிட்டனுக்கும் இன்னொரு நாட்டுக்கும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, ஏனைய காமன்வெல்த் நாடுகள் பிரிட்டன் சார்பாகப் போரிடவேண்டு மென்பது கட்டாயமில்லை. அம்மாதிரி சமயங்களில் ஒரு நாடு விரும்பினால் நடு நிலைமை வகிக்கலாம். உண்மையில் பிரிட்டனும் ஜெர்மனியும் இரண்டாம் உலகப் போரில் மோதிக்கொண்ட போது, காமன்வெல்த் நாடாக இருந்த அயர்லாந்து நடுநிலைமை வகித்தது. பிரிட்டனுக்கு மிக அருகில் உள்ள நாடு அங்ஙனம் நடுநிலைமை வகிப்பது எவ்வளவு அபாயகரமானது என்பதை உணர்ந்திருந்தும், பிரிட்டன் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தை மதித்து வாளா யிருந்தது. ஆனால், சாதாரணமாகக் காமன்வெல்த் நாடு ஒன்றை அந்நிய நாடு தாக்கினால் உடனே ஏனைய நாடுகள் ஓடோடியும் வந்து 'உடுக்கை யிழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைய' முற்படுவதே வழக்கம். சமீபத்தில் சீனர்கள் இந்தியாவைத் தாக்கியபோது, இந்தியா கேட்கவேண்டுமெனக் கூடக் காத்திராது பல காமன்வெல்த் நாடுகள் உதவிக்கு விரைந்ததிலிருந்து, அந் நாடுகளின் உறவு எவ்வளவு ஆழமானது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதே சமயம் கானா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் வாளாயிருந்ததுமின்றி இந்தியாவைக் குறை கூறவும் முனைந்ததிலிருந்து இவ்வுறவு எவ்வளவு மேலெழுந்தவாரியாக இருக்க முடியும் என்பதும் இங்குத் தெரிகிறது. வெளிநாட்டுறவைப் பொறுத்த வரையில் இங்ஙனம் இறைமை பெற்றுள்ள காமன்வெல்த் நாடுகள் உள்நாட்டுத் துறையிலும் தனித் தலைமை பெற்றுள்ளன. பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு எவ்வகையிலும் கட்டுப்படாமல், தங்களது சொந்தப் பாராளுமன்றங்களைக் கொண்டு விருப்பம் போல் அவை சட்டங்களை இயற்றிக்கொள்ளலாம். இதற்கு முன்பெல்லாம் டொமினியன் பாராளுமன்றங்களுக்குச் சட்டமியற்றுவதில் பூரண உரிமை கிடையாது. டொமினியன்களைப் பொறுத்த பிரிட்டிஷ் பேரரசு சட்டங்களுக்கு விரோதமாக, எந்தச் சட்டத்தையும் டொமினியன் பாராளுமன்றங்கள் இயற்ற முடியாது. எனவே, பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டே அவை சில வேளைகளில் சட்டம் செய்ய வேண்டியிருந்தது. டொமினியன் ஆளுநர்களைப் பிரிட்டிஷ் அரசரே நியமித்து வந்தார். டொமினியன் பாராளுமன்றச் சட்டங்கள், பிரிட்டிஷ் பேரரசுச் சட்டங்களுக்கு உடன்பாடில்லை என ஆளுநர் ஐயப்பட்டால், அவற்றை அவர் நிறுத்தி வைக்கலாம். பின் அவற்றை அவர் அரசருக்கு அனுப்பிவைக்கலாம். அரசரது ஒப்பம் பெற்ற பின்பே அவை செல்லுபடியாகும். இங்ஙனம் டொமினியன்களால் ஏற்படுத்தப்படும் சட்டங்களில்

எவை ஏற்புடையவை, எவை செல்லுபடியாகாதவை என்பதை வரையறுத்த 'குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் செல்லுபடி சட்ட' மானது (Colonial Laws Validity Act 1865), 1931இல் ரத்து செய்யப்பட்டது. எனவே, பிரிட்டிஷ் சட்டம் எதற்கும் டொமினியன்கள் கட்டுப்பட்டவையல்ல. தங்களைப் பாதிக்கின்ற பிரிட்டிஷ் சட்டங்களை ரத்துச் செய்யவோ திருத்தவோ டொமினியன் பாராளுமன்றங்களுக்கு உரிமை உண்டு. டொமினியன்களைப் பாதிக்கின்ற சட்டம் எதுவாயினும், அது சம்பந்தப்பட்ட டொமினியன்களின் வேண்டுகோளின்படியும், சம்மதத்தின் பேரிலுமே பிரிட்டிஷ் பாராளுமன்றம் அதை இயற்ற முடியும். ஏற்கெனவே டொமினியன்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்களை டொமினியன்கள் விரும்பினுல் அப்படியே வைத்துக்கொள்ளலாம். சான்ருக, 1867ஆம் ஆண்டிலிருந்து 1930 வரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் கனடாவிற்காக இயற்றப்பட்ட வட அமெரிக்கச் சட்டங்களைக் (North American Acts) கனடா ஏற்றுக் கொண்டதோடு, அவற்றைத் திருத்தும் உரிமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கே உரியதென்றும், கனடியப் பாராளுமன்றத்துக்கு அத்தகைய உரிமை இல்லை எனவும் அது அறிவித்தது. கனடாவிலுள்ள ஆங்கிலேயர்கள், அங்குள்ள ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு விரோதமாக அரசியலமைப்பைத் திருத்திவிடாமல் காப்பதற்கே மேற்சொன்ன கட்டுப்பாட்டைக் கனடா வலிய ஏற்றுக் கொண்டுள்ளது. அதேபோல ஆஸ்திரேலியாவும் வலிய பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் தலைமையை ஒரு துறையில் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தும் முறைகளை மாற்ற பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கே உரிமை உண்டென்றும், ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்துக்கு அவ்வுரிமை இல்லை என்றும் அதன் தலைவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மத்திய அரசு, மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டமியற்றிவிடாமல் காக்கவே, மேற்படி தலைமையை ஆஸ்திரேலிய மக்கள் வலிய ஏற்றுக்கொண்டுள்ளார்கள். மற்றபடி டொமினியன்கள் சட்டமியற்றும் துறையில் முழு சுயேச்சையுடனேயே விளங்குகின்றன. பிரிட்டிஷ் சட்டம் எதற்கும் அவை கட்டுப்பட்டவையல்ல. மேலும் பிரிட்டிஷ் வாரிசுரிமையில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமானுல், அது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அனுமதியை மட்டுமன்றி டொமினியன் பாராளுமன்றங்களுடைய வேண்டுதல்களையும் ஒப்புதல்களையும் பெற்ருக வேண்டுமென வெஸ்ட்மின்ஸ்டர் நிலவரச் சட்டத்தின் முகப்புரை (Preamble) கூறுகிறது. எட்டாம் எட்வர்ட் 1936இல் முடிதுறந்ததால், வாரிசுரிமையில்

ஏற்பட்ட மாற்றத்தை இங்கிலாந்து மட்டுமன்றி ஏனைய காமன் வெல்த் நாடுகளும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இரண்டாம் எலிசபெத் இராணியார் அரியணை ஏறியபின், காமன்வெல்த் நாடுகளின் அனுமதியின்றியே அரசபட்டத்தை (Royal Title) மாற்றலாமென்ற உரிமை வற்புறுத்தப் படுகிறது. அரசியை எந்தப் பட்டத்துடன் அழைக்கவேண்டு மென்பதைக் காமன்வெல்த் நாடுகள் தங்கள் விருப்பம் போல் தீர்மானித்துக் கொள்கின்றன. ஓர் அரசர் இறந்தபின், யார் பட்டத்திற்கு வருவதென்பதைப் பற்றி ஒவ்வொரு நாடும் தம் விருப்பம்போல் தீர்மானித்துக் கொள்ளவும் பிரிட்டிஷ் பாராளு மன்றம் ஒப்புக்கொள்ளும். ஓர் அரசரை இந் நாடுகள் மறுக்கக் கூட முடியும். ஒரு காமன்வெல்த் நாடு மற்றொன்றுக்கு எல்லா வகையிலும் சமம் என்ற கோட்பாடும் நடைமுறையில் உள்ளது. முதல் உலகப்போருக்குப் பின் காமன்வெல்த் நாடுகள் சர்வதேசச் சங்கத்துக்குத் தனித்தனியே உறுப்பினர்களை அனுப்பும் உரிமை பெற்றன. ஐக்கிய நாடுகள் சபையிலும் அவை தனித்தனி உறுப்பினர்களையே நியமித்துள்ளன. மற்ற நாடுகளுக்கு அவை தம் விருப்பப்படியே தூதுவர்களை நியமிக்கின்றன. எம்மாதிரி துரைத்தனத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதும் அந்தந்த நாட்டின் சொந்த விருப்பத்தைப் பொறுத்ததேயாகும். பொதுவாகப் பாராளுமன்றத் துரைத்தனத்தையே எல்லா நாடு களும் கடைப்பிடிக்கின்றன. ஆனால், பாகிஸ்தான் யதேச்சாதி காரத்தை மேற்கொண்டபோது பிரிட்டனால் அதை மறுக்க முடியவில்லை. இங்ஙனம் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் இவை பூரண இறைமையுடன் விளங்குகின்றன. தொடக்கத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் நிலவரச் சட்டமானது கனடா, ஆஸ்தி ரேலியா, நியூஸிலாந்து, தென் ஆப்பிரிக்கா, அயர்லாந்து, நியூஃபவுண்ட்லாந்து ஆகிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்துவதா யிருந்தது. இந்தப் பட்டியலிலிருந்து அயர்லாந்தும், தென் ஆப்பிரிக்காவும் நியூஃபவுண்ட்லாந்தும் தங்கள் பெயர்களை நீக் கிக் கொண்டன. முதல் இரண்டு நாடுகளும் சுயேச்சை நாடு கள் எனத் தங்களை அறிவித்துக் கொண்டதோடு காமன்வெல்த் கூட்டுறவில் தொடர்ந்து உறுப்பினராயிருக்க விரும்பவில்லை என வும் அவை அறிவித்துவிட்டன. நியூஃபவுண்ட்லாந்து கனடா வோடு ஒன்றித்துவிட்டது. எனவே, அச் சட்டம் மூன்று நாடு களுக்கு மட்டுமே பொருந்துவதாக அமைந்தது. ஆனால், இன்று அதன் விதிமுறைகள் காமன்வெல்த்தில் புதிதாகச் சேரும் உறுப்பு நாடுகள் அனைத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 1947ஆம் ஆண்டில் இந்தியாவும் பாகிஸ்தானும் சுயேச்சை பெற்றபின் காமன்வெல்த்தில் சேர்ந்தபோது குடியரசு நாடு

களுக்கு வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி பிறந்தது. நெகிழ்ச்சி உள்ளம் படைத்த பிரிட்டிஷார், நிலைமைக்கேற்ப அச் சட்டத்தைத் திருத்திவிட்டனர். காமன் வெல்த்திலுள்ள குடியரசு நாடுகள் பிரிட்டிஷ் இராணியைத் தங்களது அரசி எனக் கருத வேண்டுவதில்லை என்றும், 'காமன் வெல்த் கூட்டுறவின் தலைவி' (Head of the Commonwealth) எனக் கருதினால் போதும் என்றும் திருத்தம் கூறியது. இத் திருத்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பல குடியரசு நாடுகள் இன்று காமன்வெல்த்தில் உறுப்பினராக ஆகியுள்ளன. இலங்கையும், பர்மாவும் 1947இல் சுயேச்சை பெற்ற குடியரசு களாக மாறின. பர்மா காமன்வெல்த்தில் சேரவில்லை. ஆனால், இலங்கை அதில் சேர்ந்துகொண்டுள்ளது. தொழிற் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பல குடியேற்ற நாடுகள் சுயேச்சை பெற்று காமன்வெல்த்தில் இடம் பெற்றுள்ளன. 1957இல் கானு (Ghana) என்ற ஆப்பிரிக்க நாடும் மலேயா (Malaya) என்ற தென் கிழக்கு ஆசிய நாடும் சுயேச்சை பெற்றன. மலேசியக் கூட்டரசில் மலேயா, சிங்கப்பூர், சராவக், வடபோர்னியா ஆகிய நாடுகள் சேர்ந்திருந்தன. 1963இல் அது மலேசியா (Malaysia) என்று பெயர் பெற்றது. ஆனால், சிங்கப்பூர் மக்கள் புரட்சி செய்து அதனின்றும் தனியே பிரிந்தனர். சிங்கப்பூர் 1965இல் தனிக் குடியரசாகிக் காமன்வெல்த்தில் சேர்ந்தது. நைஜீரியக் குடியரசு 1960ஆம் ஆண்டு அக்டோபரில் உதயமாகிக் காமன்வெல்த்தில் சேர்ந்தது. ரொடீஷிய, நியாஸாலாந்து கூட்டரசு 1955இல் சுதந்திரமாக அமைந்து காமன்வெல்த்தில் சேர்ந்தது. 1963ஆம் ஆண்டு டிசம்பரில் கூட்டரசு கலைக்கப்பட்டது. வட ரொடீஷியா ஸாம்பியா (Zambia) என்ற பெயரிலும் (1964), நியாஸாலாந்து மாளவி (Malavi) என்ற பெயரிலும் (1964) காமன்வெல்த்தில் சேர்ந்தன. தென்ரொடீஷியா பிரிட்டனோடு பகைத்துக் கொண்டு 1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் தேதி யன்று தன்னை ஒரு சுயேச்சை நாடு என அறிவித்துக் கொண்டது. 1961இல் சுயேச்சை பெற்ற தாங்கனிகாவும் (Tanganyika), 1963இல் சுயேச்சை பெற்ற ஸான்ஸிபாரும் 1964ஆம் ஆண்டில் ஒன்றாக இணைந்து டான்ஸானியா (Tanzania) என்ற பெயரில் காமன் வெல்த்தில் உறுப்பினராகியது. கென்யா (Kenya-1963), உகாண்டா (Uganda-1962), சியராலியோன் (Sierra Leone-1961), காம்பியா (Gambia-1965), பாட்ஸ்வானு (Botswana-1966), லெசாத்தோ (Lesatho-1966), ஸ்வாஸிலாந்து (Swaziland-1968) ஆகிய ஆப்பிரிக்க நாடுகளும் தற்போது சுயேச்சை பெற்றுக் காமன்வெல்த்தில் சேர்ந்துள்ளன. லெசாத்தோவைத் தவிர, ஏனைய நாடுகள் யாவும் குடியரசுகள். மத்தியதரைக் கடல் குடியேற்ற

நாடுகளான சைப்ரஸ் தீவும் (Cyprus), மால்டாவும் (Malta) முறையே 1961, 1964ஆம் ஆண்டுகளில் சுயேச்சைக் குடியரசு களாகிக் கூட்டுறவில் சேர்ந்துள்ளன. கரிபியன் கடலிலுள்ள பார்படாஸ் (Barbados-1966), ஜமாய்க்கா (Jamaica-1962), டிரினிடாட் (Trinidad-1962), டொபாகோ (Tobago-1962) ஆகிய தீவுகளும் தென் அமெரிக்க நாடான குயானுவும் (Guyana-1966) சுயேச்சை பெற்றுக் காமன்வெல்த்தில் இடம் பெற்றுள்ளன. தற்போது மௌரிஷியஸ் (Mauritius), நாஸு (Nausu), டோங்கா (Tonga), மேற்கு சமோவா (West Samve) ஆகிய குடியேற்றங்களுக்கும் சுயேச்சை வழங்கப்பட்டுள்ளது. அவை களும் காமன்வெல்த்தில் உறுப்பினராய்ச் சேர்ந்துள்ளன. 1972ஆம் ஆண்டளவில் காமன்வெல்த்தில் முப்பத்து இரண்டு சுயேச்சை நாடுகள் இடம் பெற்றுவிட்டன. இவற்றுள் கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, சிலோன், ஜமாய்க்கா, டிரினிடாட், டொபாகோ, சியராலியோன், மால்டா, காம்பியா, குயானு, பார்படாஸ் ஆகிய நாடுகள் பிரிட்டிஷ் இராணியைத் தங்களது இறைவியாக ஏற்றுக்கொண்டுள்ளன. குடியரசுகளான இந்தியா, பாகிஸ்தான், கானு, சைப்ரஸ், நைஜீரியா, டான்ஸானியா, ஸாம்பியா, மாளவி, பாட்ஸ்வானு, உகாண்டா, சிங்கப்பூர், கென்யா, ஸ்வாஸிலாந்து ஆகிய நாடுகள் பிரிட்டிஷ் அரசியைக் காமன்வெல்த்தின் தலைவி என்று ஏற்றுக்கொள்கின்றன. மலாசியாவில், மலாய் மன்னரொருவரும், லெசாத்தோவில் ஒரு பரம்பரை மன்னரும் ஆண்டு வருவதால் அவைகளில் வசிக்கும் மக்களும் பிரிட்டிஷ் அரசிக்கு அடிபணிவதில்லை. ஆனால், காமன்வெல்த்தின் தலைவி என அவர்கள் அரசியை ஏற்றுக்கொள் கின்றனர். இத்தகைய சுயேச்சை நாடுகளேயன்றி, சுதந்திரப் பாதையில் மெதுவாக நடைபோட்டுவரும் வேறுபல நாடுகளும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அடங்கியுள்ளன. அவற்றை பிரிட்டன் தனது காமன்வெல்த் அலுவலகத்தின் (Commonwealth Office) மூலம் ஆட்சி புரிந்து வருகிறது. சுதந்திரத்தை நாளடை வில் பெறுதற்கான பயிற்சியை அது அந் நாடுகளுக்கு அளித்து வருகிறது. காமன்வெல்த்தை ஒரு சிலர் ஒரு பெரிய சுதந்திர ஊர்வலத்துக்கு ஒப்பிடுவர். அவ்வூர்வலத்தில் முன்னணியில் நிற்பன சுயேச்சை பெற்ற நாடுகளாகும். ஏனைய நாடுகள் சுதந்திர அணியின் வெவ்வேறு நிலைகளில் இருப்பவையாகும்.

காமன்வெல்த் நாடுகளின் வகை

அரசாள் குடியேற்றங்கள் (Crown Colonies)

மேற்சொன்ன சுயேச்சை பெற்ற நாடுகளைத் தவிர, ஓரளவு சுயாட்சி பெற்ற பல சிறு நாடுகள் காமன்வெல்த்தில் அடங்கியுள்

ளன. இவை 'அரசாள் குடியேற்ற நாடுகள்' என முதலில் அழைக்கப்பட்டன. பின்னர் அவை குடியேற்ற நாடுகள் (Colonies) என்ற பெயராலேயே இப்போது குறிக்கப்படுகின்றன. இவைகளுள் முக்கியமான சில இடங்களில் பிரதிநிதித்துவ சபைகள் (Representative Institutions) அமைக்கப்பட்டுள்ளன. எனினும், பொறுப்பாட்சி (Responsible Government) அங்கு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. சட்டசபையில் மட்டும், யாவருமோ அல்லது ஒரு பகுதியினரோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாயிருப்பர். அரசாங்கத்தின் தலைவர் ஒரு கவர்னராயிருப்பார். அவருக்கு ஆலோசனை கூறவும், நிருவாகத்தை நடத்தவும் ஒரு மந்திரி சபை யிருக்கும். ஆனால், அம் மந்திரி சபையானது சட்டசபைக்கு எவ்வகையிலும் பொறுப்பு வாய்ந்ததன்று. அச்சபையின் பெரும்பான்மையினரால் கண்டிக்கப்பட்டாலும்கூட மந்திரிகள் பதவியில் நீடித்து இருக்கலாம். பிரிட்டிஷ் ஹாண்டுராஸ், மொரீஷியஸ், ஃபிஜி, பெர்முடா என்ற தீவுகளில் இத்தகைய பிரதிநிதித்துவ நிறுவனங்களும், ஓரளவு பொறுப்பாட்சியும் காணப்படுகின்றன.

வேறு சில சிறிய குடியேற்ற நாடுகளில் மேற்சொன்ன பிரதிநிதித்துவ சபைகள்கூட இல்லை. ஒரு கவர்னர், இரு கவுன்சில்களின் உதவியுடன் அவற்றை ஆளுகிறார். கவுன்சிலில் ஒன்று நிருவாக சபையாகவும் இன்னொன்று சட்டசபையாகவும் இயங்கும். மிகச் சிறிய நாடுகளில் ஒரே கவுன்சில் மட்டுமே இருக்கும். கவுன்சில் உறுப்பினர்கள் கவர்னரால் நியமிக்கப்படுவார்களேயன்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். செயின்ட் ஹெலீனா ஃபாக்லாந்து தீவுகள், ஹாங்காங், செய்ச்சலிஸ் (Seychillis) ஆகிய இடங்கள் இவ்வித ஆட்சி முறையையுடையவையாகும்.

பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள்(Protectorates or Trust Territories)

பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள் என்ற வகையைச் சார்ந்தவை பல பிரிட்டிஷ் பேரரசில் உள்ளன. இவைகள் பெரும்பாலும், பிரிட்டிஷாரல்லாத சுதேச மக்கள் அதிகமாக வாழுகின்ற நிலப்பகுதிகளாக இருக்கும். அவைகளை ஆளுகின்றவர்கள் சுதேசத் தலைவர்களாகவே இருப்பர். அவர்களுக்கு ஆலோசனை கூறவும், அவசியமானபோது எச்சரித்து பிரிட்டிஷ் கட்டுப்பாட்டுக்குள் அவர்களைக் கொண்டு வரவும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகள் (Residents) அல்லது கமிஷனர்கள் (Commissioners) நியமிக்கப்படுவர். சுதேச மன்னர்கள், மக்களைக் கொடுமைப்படுத்தாது, ஒழுங்காக ஆட்சி புரியும்வரை ரெஸிடெண்டுகள் வாளாயிருப்பர். ஆனால், அவர்கள் அத்துமீறிய செயல்களிலும் அடக்கு முறைகளி

லும் ஈடுபட்டுக் கொடுங்கோன்மை புரிந்தால், உடனே ரெஸி டெண்டுகள் தங்களது மேலதிகாரத்தைப் பயன்படுத்த முன்வரு வர். ஆட்சியை ஒழுங்குற நடத்த முடியவில்லை என்ற காரணத் துக்காக ரெஸிடெண்டுகள் சுதேச அரசர்களைப் பதவியினின்றும் நீக்கலாம். நீக்கிய பின் வேறு ஒருவரை அப் பதவியில் அமர்த்த லாம். அல்லது ரெஸிடெண்டே கவர்னராக நியமிக்கப்படலாம். இங்ஙனம் கவர்னராட்சிக்கு உட்படுவதன் மூலம், பாதுகாப்புக் குட்பட்ட சுதேச நாடானது, குடியேற்ற நாடாக (Colony) மாறு வதும் உண்டு. குடியேற்ற நாடுகள் நாளடைவில் பிரதிநிதித் துவ ஆட்சி பெற்றவைகளாயும், பின்னர் பொறுப்பாட்சி பெற்ற வைகளாயும், இறுதியில் சுயாட்சி பெற்றவைகளாகவும் மாறு வதற்கு இடமிருக்கிறது. இங்ஙனம் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அரசாங்க முறைகள் படித்துறை வளர்ச்சி பெறுகின்ற (Evolution) காட்சியை நாம் காணுகிறோம். பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள் எல்லாமே சுதேச ஆட்சிக்குட்பட்டதாயிருப்பதுமில்லை. ஆரம்பத் திலிருந்தே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆட்சிக்கு உட்பட்டுள்ள நாடுகளும் இவைகளிற் சிலவுள. மேற்கு ஆப்பிரிக்காவில் சியரா லியோன் (Sierra Leone) என்ற நாடும், தென் ஆப்பிரிக்காவில் சோமாலிலாந்து, கென்யா, உகாண்டா (Uganda), ஸான்ஸிபார் (Zanzibar), கிழக்கு ஆப்பிரிக்கா, பெக்குவானலாந்து (Bechuana-land), ஸ்வாஸிலாந்து (Swaziland), பசூட்டோலாந்து என்ற நாடு களும், மேற்கு பசிஃபிக் பெருங்கடலிலுள்ள ஏராளமான சிறு தீவு களும் இங்ஙனம் பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்ட நாடுகளாக இருந்தன. சமீப காலத்தில் பிரிட்டன், ஆப்பிரிக்க நாடுகள் பல வற்றுக்கும் சுதந்திரத்தை வழங்கி அவற்றைக் காமன்வெல்த் நாடுகளாக மாற்றியுள்ளது.

ஒப்படைக்கப்பட்ட நாடுகள்

முதல் உலகப் போரின் இறுதியில் வெர்சேல்ஸ் உடன்படிக் கையின்படி, ஜெர்மனி, துருக்கி ஆகிய நாடுகளுக்குச் சொந்தமா யிருந்த சில பிரதேசங்கள் பிரிட்டனிடம் ஒப்படைக்கப்பட்டன. இவைகள் ஒப்படைக்கப்பட்ட நாடுகள் (Mandated territories) எனப்படும். சரியாக வளர்ச்சி பெறாத சில அநாதைக் குழந்தை களை ஒரு பாதுகாப்பாளரிடம் விட்டு, அவை வளர்ந்து தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ளும் பருவம் வரும் வரை பாதுகாத்து வளர்த்து வரும்படிக் கூறுகின்ற ஒரு பெரியார்போலச் சர்வதேச சங்கமானது ஒருசில பிற்போக்கு நாடுகளை பிரிட்டனிடமும் ஃபிரான்சிடமும் ஒப்படைத்தது. இங்ஙனம் ஒப்படைக்கப்பட்ட நாடுகளை நல்ல முறையில் ஆட்சி செய்வதும், சுதேச மக்களைப் பாதுகாத்து, அவர்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதும் அவர்க

ளுக்கு அரசியற் பயிற்சியளித்துச் சுயாட்சிக்குத் தகுதி பெறச் செய்வதும், சுயாட்சி பெறத் தகுதி பெற்றபின், அவற்றை விட்டு நீங்கிக்கொள்வதும், பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளின் உற்ற கடமையாகுமெனச் சர்வதேசச் சங்கம் அறிவித்தது. அக் கடமைகளைச் செய்வதாக வாக்குறுதியளித்த பின், பிரிட்டன் ஆசியாவில் பாலஸ்தீனத்தையும், ஈராக்கையும் ஆப்பிரிக்காவில் தங்கனிக்கா (Tanganyika), பிரிட்டிஷ் காமரூன்கள், டோகாலாந்து ஆகிய பிரதேசங்களையும் பெற்றது. பாலஸ்தீனத்துக்கும் ஈராக்குக்கும் பிரிட்டன் சுயேச்சையை வழங்கிவிட்டது. டோகோலாந்தை கானு (Ghana) குடியரசுக்குக் கொடுத்துவிட்டது. எஞ்சியுள்ள பகுதிகளையே அது தன் ஆதரவில் பரிபாலித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையால் ஒப்படைக்கப்பட்ட ஒருசில நாடுகளையும் பிரிட்டன் ஆட்சி புரிந்து வருகிறது.

இணையாட்சி நாடுகள் (Condominium)

ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் இணையாட்சிக்கு உட்பட்டுள்ள நாடுகளும் ஒருசில உள்ளன. சான்றாக, நியூ ஹீப்ரிடீஸ் (New Hebrides) என்ற தீவுகளைப் பிரிட்டனும், ஃபிரான்சும் சேர்ந்தே ஆட்சி புரிந்து வருகின்றன.

குத்தகைக்கு விடப்பட்ட பிரதேசங்கள் (Leased Territories)

இத்தகைய பிரதேசங்கள் சீனுவில் மட்டுமே உள்ளன. 1898ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி அந்தப் பிரதேசங்கள் பிரிட்டனிடம் தொண்ணூற்றொன்பது ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. ஹாங்காங் அரசாங்கமே இப் பிரதேசங்களை ஆண்டு வருகிறது.

கூட்டாளி அரசு (Associated States)

தொடக்கத்தில் குடியேற்ற நாடாக இருந்த ஒரு பிரதேசம், பிரிட்டனோடு கூட்டுச் சேர்ந்து தன்னாட்சி நாடாக மாறலாம். உள்நாட்டு விவகாரங்களில் அது பூரண சுயேச்சையுடன் ஆட்சி புரியலாம். ஆனால், வெளிநாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு ஆகியவற்றில் மட்டும் அது பிரிட்டனையே சார்ந்து வாழும். கரீபியக் கடல் தீவுகளான ஆண்டிகுவா (Antigua), செண்ட் கிட்ஸ் (St. Kitts), நெவிஸ் (Nevis), அங்குய்லா (Anguilla), டொமினிகா (Dominica), செண்ட் லூசியா (St. Lucia), செண்ட் வின்செண்ட் (St. Vincent), கிரெனடா (Greneda) ஆகிய தீவுகள் இத்தகைய கூட்டினை பிரிட்டனோடு ஏற்படுத்திக்கொண்டன. சமீப காலத்தில் அங்குய்லா தீவு தன்னை முற்றிலும் சுயேச்சை பெற்ற நாடாக அறிவித்துக்கொண்டது (1969). பிரிட்டன் துருப்புகளை

அனுப்பி அங்குத் தனது ஆதிக்கத்தைப் பலாத்காரமாக நிலை நாட்டியது.

காமன்வெல்த் நாடுகளிடையேயுள்ள உறவின் தன்மை

காமன்வெல்த் நாடுகள் அடிக்கடி லண்டனிலோ அல்லது வேறிடங்களிலோ ஒன்றுகூடிப் பொதுப் பிரச்சினைகளை ஆராய்கின்றன. ஆரம்பத்தில் இத்தகைய மாநாடுகள் 'குடியேற்ற மாநாடுகள்' (Colonial Conferences) என அழைக்கப்பட்டன. ஆனால், 1907ஆம் ஆண்டிலிருந்து இவை 'பேரரசு மாநாடுகள்' (Imperial Conferences) என அழைக்கப்படுகின்றன. காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மாநாடுகள் (Commonwealth Prime Ministers' Conferences) என்றும் அவை அழைக்கப்படும். இம் மாநாடுகளில் பொதுப் பாதுகாப்புப் பிரச்சினைதான் அதிகமாக ஆராயப்படும். ஏதாவதொரு நாட்டுக்குச் சுயேச்சை வழங்குவது போன்ற முக்கியமான முடிவுகளைப் பிரிட்டன் இம் மாநாடுகளில்தான் எடுப்பது வழக்கம். மேலும் பல்வேறு நாடுகளின் பிரதமர்களும், பிரதிநிதிகளும் ஒன்றுகூடிப் பேசி அளவளாவவும், தங்களிடையே நட்பினை வளர்த்துக் கொள்ளவும், அதன் மூலம் பல சிக்கல்களை எளிதில் தீர்த்துக்கொள்ளவும் இம் மாநாடுகள் பெரிதும் உதவுகின்றன எனலாம். இத்தகைய மாநாடுகள் மூலமாக அன்றி, சர்வதேச நெருக்கடிகளைப் பற்றிய செய்திகளைக் காமன்வெல்த் நாடுகள் ஓயாமல் தந்தி மூலமும் தபால் மூலமும் பரிமாறிக் கொள்கின்றன. நெருக்கடிகளில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றி அவை தம்முள் கலந்தாலோசித்த பின்னரே ஒரு முடிவுக்கு வருகின்றன. அவ்வப்போது எழுதப்படும் கடிதங்களைத் தவிர, ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு 35,000 தந்திகள் பிரிட்டனுக்கும் ஏனைய காமன்வெல்த் நாடுகளுக்கும் பறக்கின்றன என்பதைப் பார்க்கும்போதுதான் செய்திப் பரிமாறல் இவற்றிடையே எவ்வளவு சுறுசுறுப்பாக நடைபெறுகிறதென்பது நன்கு விளங்குகின்றது.

பிரிட்டனுக்கும் காமன்வெல்த் நாடுகளுக்கு மிடையே பலத்த வியாபாரம் நடைபெற்று வருகிறது. பிரிட்டன் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் கச்சாப் பொருள்களையும் காமன்வெல்த் குடியேற்ற நாடுகளிலிருந்தே பெற்று வருகின்றது. பிரிட்டனில் ஆக்கப்படும் பொறிசெய் பொருள்கள் விற்பனையாகும் சந்தைகளாக விளங்குவன காமன்வெல்த் நாடுகளே யாகும். காமன்வெல்த் நாடுகளிற் பல இப்போது தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள முயலுவதால் பிரிட்டனின் உலக வியாபாரம்

ஓரளவு குறைந்துள்ளது. எனினும், பிரிட்டனும் அதன் குடியேற்ற நாடுகளும் தமக்கிடையே சில வியாபாரச் சலுகைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதன்படி அவை தம் நாட்டுக்குள் இறக்குமதியாகும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரியைப் பரஸ்பரம் குறைத்துக் கொள்கின்றன. 1932இல் ஒட்டாவா (Ottawa) நகரில் கூடிய பேரரசு பொருளாதார மாநாடு, மேற்சொன்ன முறையில் பிரிட்டனும் காமன்வெல்த் நாடுகளும் பரஸ்பரம் சுங்க வரிகளைக் குறைத்துக் கொள்ளவும், அதே சமயம் வேற்று நாடுகளிலிருந்து வரும் பொருள்கள்மீது பலத்த வரி விதிக்கவும் தீர்மானித்தன. இத்தகைய பரஸ்பர வரிக் குறைப்பே பேரரசு தனிச் சலுகை (Imperial Preference) எனப்படுவதாகும். ஒட்டாவா மாநாட்டுத் தீர்மானத்தால் காமன்வெல்த் கூட்டுறவு நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பும் நட்பும் வளருமென்பதில் ஐயமில்லை. ஆனால், சமீப காலத்தே இந்தச் சலுகைகள் அவ்வளவு இன்றியமையாததாகக் கருதப்படுவதில்லை. அவை காலத்துக்கேற்றபடி மாற்றப்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியா தனது ஆட்டு உரோமத்தை பிரிட்டனுக்கு அனுப்புவதைவிட அண்டையிலுள்ள கீழை நாடுகளுக்கு அனுப்புவதை இலாபகரமாகக் கருதி, அங்ஙனமே செய்கிறது. அதே போல் கனடா, தனது மரத்தூளையும் மீன்களையும் அண்டையிலுள்ள அமெரிக்காவுக்கு அனுப்ப விரும்புகிறது. மீன் வியாபாரம் பற்றி இரு நாடுகளுக்கும் 1932இல் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

பிரிட்டிஷ் பொதுநலக் கூட்டுறவில் சேர்ந்துள்ள நாடுகளிடையே உலவும் உறவு முறையானது உண்மையில் அலாதியானதொன்றாகும். அது சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாதது. திட்டவட்டமாக வரையறுக்கப்படாதது. வெறும் ஆன்ம நேய உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. குடும்பப் பாசம் என்ற உணர்ச்சிக்குச் சமமாகவும் அதைக் கூறலாம். எந்தச் சமயத்திலும் எந்த நாடும் கூட்டுறவிலிருந்து வெளியேறலாம். ஆனால், பர்மா, அயர்லாந்தைத் தவிர வேறு எந்த நாடும் அவ்வாறு செய்ததில்லை. கூட்டுறவில் சேர்ந்து இருப்பதால், ஏற்படக்கூடிய பொருளாதார இராணுவ நன்மைகளே அதற்குக் காரணமாகும். 1920ஆம் ஆண்டு முதல் 1960 வரை பிரிட்டன் தன்னைச்சார்ந்த நாடுகளுக்கு மட்டும் 344 மிலியன் பவுன்களை உதவி நிதியாக அளித்துள்ளதாகக் கணக்கிட்டுள்ளனர். போர், புயல், பூகம்பம் இவற்றால் விளைந்த சேதத்தை ஈடுகட்டவே மேற்கண்ட உதவி வழங்கப்பட்டது. அவ்வப்போது ஏற்படும் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சி நலச் சட்டங்களின்படி (Colonial Development and Welfare Act) பிரிட்டன் தன்னைச்

சார்ந்துள்ள நாடுகள் திட்டமிட்டு வளர்வதற்காக 315 மிலியன் பவுன்களை 1948 முதல் 1964ஆம் ஆண்டுக்குள் கொடுப்ப தாக வாக்குறுதியளித்துள்ளது. அந் நாடுகளின் பொருளாதார நிலையைச் செம்மையாக்கக் குடியேற்ற நாட்டுப் பொருளாதார முன்னேற்றக் கழகம் (Colonial Development Corporation) ஒன்றையும் பிரிட்டன் நிறுவியுள்ளது. அக் கழகம் பிரிட்டிஷ் கருவூலத்திலிருந்து 150 மிலியன் பவுன்கள் வரை கடன் வாங்கலாம். சார்புற்ற நாடுகளில் விவசாயத்தை வளர்க்கவும், குடியிருப்புக்கு வீடுகள் கட்டவும், உணவு விடுதிகள் கட்டவும் பல வகையில் அக் கழகம் தொண்டு புரிந்து வருகிறது.

பிரிட்டன் ஏனைய காமன்வெல்த் நாடுகளுக்கு உதவி செய்வதுபோல், அந் நாடுகளும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவி செய்துகொள்கின்றன. அவ்வகையில் கனடா, இந்தியாவுக்கு நிறைய உதவிகள் செய்து வருகிறது. தென் ஆசிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதற்கென்றே கொழும்புத் திட்டம் (Colombo Plan) ஏற்பட்டது. அத் திட்டத்தால் ஆசிய நாடுகள் பெரிதும் நன்மையடைந்துள்ளன. நேபா (NEFA) பிரதேசத்தின் மீது சீனர்கள் படையெடுத்த போது கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் நிபந்தனை யின்றி இந்தியாவுக்கு இராணுவ உதவி செய்ய முன்வந்தன. இந்தியாவின் படை பலத்தைப் பெருக்க ஆஸ்திரேலியா பல வகையிலும் உதவி செய்து வருகிறது. இங்ஙனம் காமன் வெல்த் கூட்டுறவு, ஆசிய நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும், கறுப்பர்களும், வெள்ளையர்களும் ஒத்துழைக்கவும், நட்புடன் வாழவும் வழி செய்கிறது. தென் ஆப்பிரிக்கா ஒன்றுதான் தனது இன ஒதுக்கல் கொள்கையால் (Apartheid) இத் தகைய ஒத்துழைப்புக்கு இடையூறுயிருந்தது. பிரிட்டன் எவ் வளவோ அதற்குச் சொல்லிப்பார்த்தும் பயனில்லை. இறுதி யில் தென் ஆப்பிரிக்கா காமன்வெல்த்தினின்றும் பிரிந்தது. அதற்குப் பதிலாக இன்று ரொடீஷியாவானது நிற வெறுப்புக் கொள்கையைக் கடைபிடித்து அதன் மூலம் உலக நாடுகள் பலவற்றின் வெறுப்புக்கும் ஆளாகியுள்ளது.

காமன்வெல்த்தை ஒரு குடும்பத்துக்கும், அதன் உறுப் பினர்களிடையே நிலவும் உறவு முறையைக் குடும்பப் பாசத் துக்கும் ஒப்பிட்டோம். குடும்பத்திலுள்ளவர்கள் பாசமாயிருப் பதுபோல் அடிக்கடி தம்முள் சச்சரவிட்டுக் கொள்வதும் மரபு. அதுபோல் காமன்வெல்த் நாடுகளிடையே சில சிறு சச்சரவுகள் அவ்வப்போது நிகழ்வதுண்டு. ஆனால், பொதுவாக நல்ல உறவே எல்லா நாடுகளிடையேயும் நிலவி வருகிறது.

காமன்வெல்த்தை ஒரு சங்கமென்று (Club) கருதுவதும் தகும். ஒரு சங்கத்தில் உறுப்பினராயுள்ளவர்கள் வேறு சங்கங்களிலும் உறுப்பினராயிருக்கலாம். அதுபோலக் காமன்வெல்த் நாடுகள், வட அட்லாண்டிக் மண்டல உடன்பாட்டுச் சங்கம் (NATO), தென் கிழக்கு ஆசிய மண்டல உடன்பாட்டுச் சங்கம் (SEATO) முதலான மண்டல நிறுவனங்களில் உறுப்பினராயிருக்கின்றன. அதனுல் அவைகளின் ஒத்துழைப்பு அதிகமாகுமேயன்றிக் குறையாது என பிரிட்டிஷார் கருதுகின்றனர்.

காமன்வெல்த் நாடுகளை இணைத்து வைக்கும் சங்கிலியாக விளங்குவது ஆங்கில மகுடம் (Crown) என்பதைக் கண்டோம். அது மட்டுமன்று. ஆங்கில மொழியும் பெருமளவுக்கு இவ் வொற்றுமையை வளர்க்கிறது. அம்மொழியே இந் நாடுகளில் வாழும் அறிஞர்களின் மொழியாக உள்ளது. எனவே, கருத்துகளை எளிதில் பரிமாறிக்கொள்ளவும் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசிக்கொள்ளவும் காமன்வெல்த் மக்களுக்கு எளிதாக இருக்கிறது. மேலும் காமன்வெல்த் நாட்டினர் எவ் விதத் தடையுமின்றி ஒரு நாட்டிலிருந்து இன்னெரு நாட் டிற்குச் செல்லலாம். காமன்வெல்த் குடியுரிமை-(Commonwealth Citizenship) எல்லா நாடுகளுக்கும் பொது. இதைப் பயன் படுத்திக்கொண்டு இந்தியர்களும் ஆப்பிரிக்கர்களும் ஏராள மாகப் பிரிட்டனுக்குள் நுழைய ஆரம்பித்ததால், பிரிட்டன் சமீபத்தில் வெளிநாட்டினரின் குடியேற்றத்தை ஓரளவு கட்டுப் படுத்தியுள்ளது. ஆங்கில மொழியும் கருத்துகளும் காமன் வெல்த் நாடுகளிடையே பரவி உள்ளது போன்று, அதன் தனிச் சொத்தான பாராளுமன்ற ஆட்சி முறையும் (Parliamentary System of Government) இந் நாடுகளிடையே காணப்படு கின்றது. அவ்வவ்விடத்தே காணப்பெறும் தனி இயல்பு களுக்கேற்ப இம்முறைகள் சிறிது மாறுபடினும், பொதுவாக ஜனநாயகம் எல்லா நாடுகளிலும் தழைத்தோங்குகிறது. யதேச்சாதிகாரங்கள் உலகின் பல பாகங்களில் மளமளவென்று வளர்ந்து வரும் இக்காலத்தே ஜனநாயகத்தின் கொடி வானளாவப் பறக்கும் நாடுகள் காமன்வெல்த் நாடுகளே யாகும். ஆசிய நாட்டில் ஜனநாயகத்தின் பாசறையாக இந்தியா விளங்குவதாலேயே அமெரிக்காவும் பிரிட்டனும் இதைச் சீனப் பொதுவுடமைத் தாக்குதலினின்றும் எவ்வா றேனும் காக்கவேண்டுமெனக் கங்கணங் கட்டிக்கொண்டுள் ளன. இங்ஙனம், பொது மொழி, பொது அரசியல் நிறுவனங் கள், பொது வியாபாரப் பாதுகாப்புப் பிரச்சினைகள் முதலிய வைகளைக் கொண்டுள்ளதாலேயே காமன்வெல்த் கூட்டுறவு நாளுக்குநாள் பலம் பெற்று வருகிறது.

காமன்வெல்த் நாடுகளிடையே இருக்கின்ற பிணைப்பு இன்னும் நெருக்கமாக அமைய வேண்டுமென்பதே பிரிட்டிஷ் கட்சிகளின் பெரு விருப்பமாகும். ஒரு காலத்தே குடியேற்ற நாடுகள், பேரரசு இவற்றைக் கட்டிக் காப்பதே தனது உயர்ந்த குறிக்கோளெனக் கன்சர்வேடிவ் கட்சியினர் கூறிவந்தனர். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அவர்களது கருத்தும் மாறி விட்டது. மாக்மில்லன் என்னும் டோரி அமைச்சர் குடியேற்ற நாட்டுக் கொள்கையில் 'மாற்றம் எனும் காற்று' (Wind of Change) வீச வேண்டுமென்று கூறினர். ஆப்பிரிக்காவிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறிவிட வேண்டுமென அவர் வற்புறுத்தினர். ஆனால், அதே சமயத்தில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவான, ஐரோப்பியப் பொதுச் சந்தையில் பிரிட்டனைச் சேர்த்துவிட வேண்டுமென அவர் முயற்சி செய்தார். அங்ஙனம் சேர்வதால் காமன்வெல்த் நாடுகளின் நலனுக்கு கேடுவிளையக் கூடுமென தொழிற் கட்சியினர் கருதினர். ஒரு சில நிபந்தனைகளோடேயே பிரிட்டன் ஐரோப்பியச் சந்தையில் சேர வேண்டுமென அவர்கள் கூறியதைப் பிரிட்டிஷ் மக்கள் பெரும்பான்மையாக ஆதரித்தனர்.

வில்சன் சர்க்கார் காமன்வெல்த் நாடுகளின் உறவு முறையில் பெரிதும் அக்கறை காட்டி வருகிறது. புதிதாகச் சுயேச்சை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளிடையே ஒருமையையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த ஒரு தனிப்பட்ட பிரதிநிதியை அவரது அரசாங்கம் நியமித்துள்ளது. மால்கம் மாக்டனல்டு (Malcolm Macdonald) என்ற அப் பிரதிநிதி கென்யா, டான்ஸானியா, ஸாம்பியா, மாளவி ஆகிய நாடுகளிடையே சுற்றுப்பயணம்செய்து அவற்றுள் நட்பை வளர்க்கப் பாடுபடுகிறார். உகாண்டா மட்டும் அவரது சேவையை ஏற்றுக்கொள்ள இப்போதைக்கு மறுத்து விட்டது.

காமன்வெல்த் நாடுகள் பற்றிய விவகாரங்களைச் செவ்வனே கவனிப்பதற்காகத் தனிப்பட்ட காமன்வெல்த் காரியாலயம் (Commonwealth Secretariat) ஒன்றை 1965ஆம் ஆண்டு வில்சன் சர்க்கார் ஏற்படுத்தியது. பிரிட்டிஷ் காமன்வெல்த் அலுவலகத்தோடு தொடர்பு ஏதுமின்றித் தனியாக நின்று அது பணிபுரிகிறது. காமன்வெல்த் பற்றிய செய்திகள் அனைத்துக்கும் அது ஊற்றுகத் திகழ்கிறது. எல்லோரும் ஓரினம். உலகமெலாம் ஒரு குலம். வெள்ளையரும் கறுப்பரும் ஒன்றே என்ற பரந்த கொள்கைகளை உடைய ஆர்னல்ட் ஸ்மித் (Arnold Smith) எனும் கனடிய இராஜதந்திரியே இந்த நிறுவனத்தின் செயலாளர் தலைவராக (Secretary General) நியமிக்கப்பட்டுள்ளார். பொருளாதாரத்

துறையில் முன்னேறியுள்ள நாடுகளுக்கும் பின்தங்கியுள்ள நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளி குறைந்துவிட்டால் இனவெறி மாய்ந்து விடுமெனக் கருதுகிறார் அவர். அதற்கேற்ப அவர் சதா உழைத்து வருகிறார். 1966ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து குடியேற்ற நாட்டு அலுவலகம் மூடப்பட்டது. 1967ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து குடியேற்ற நாட்டு அமைச்சர் பதவியும் ஒழிக்கப்பட்டது.

காமன்வெல்த் அலுவலகம் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. காமன்வெல்த் அமைச்சர் என்ற புதிய பதவியும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. காமன்வெல்த் நாடுகளிலிருந்து ஓயாது வந்து இங்கிலாந்தில் குடிபுகும் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. அவர்களது வருகை ஒருவகையில் நன்றே என்றும், அத்தகைய அயல்நாட்டு உழைப்பாளிகளின் துணை கொண்டே ஜெர்மனியும் ஜப்பானும் பொருளாதாரத் துறையில் மேம்பட்டுள்ளனரென்றும் பல கன்சர்வேடிவ்களும், தொழிற்கட்சியினரும் கருதுகின்றனர். ஆனால் ஏராளமான கன்சர்வேடிவ்களும் ஒருசில தொழிற் கட்சியினரும், பிறநாட்டுத் தொழிலாளர்களின் வருகையால் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் நலன்களும் சிறப்புரிமைகளும் பெரிதும் பாதிக்கப்படுமெனக் கூறுகின்றனர். தொழிற் பட்டணங்களில் குடியேறியுள்ள ஆசிய ஆப்பிரிக்கத் தொழிலாளர்கள் மிகக் கேவலமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குடியிருப்புகள் நாற்ற மிக்க முடைச்சேரிகளாக மாறிவருகின்றன. அவர்களது ஆங்கில அறிவும், வாழ்க்கைத் தரமும் மிகவும் பிற்போக்காயிருப்பதால் ஆங்கிலேயர் அவர்களோடு ஒன்றித்துப்போக முடியவில்லை. இனவெறி சில சமயங்களில் தலைதூக்குகிறது. வெள்ளையர்கள் கறுப்பர்கள் இடையே சுமுகமான உறவை வளர்க்க வேண்டி வில்சன் சர்க்கார் ஆங்காங்கே சமாதானக் கமிட்டிகளை (Conciliation Committees) அமைத்துள்ளது. அறுபதுக்கு மேற்பட்ட இத்தகைய கமிட்டிகள் அயல் நாட்டுக் குடியேறிகளின் அன்றாடப் பிரச்சினைகளை நீதிமன்றங்களுக்குப் போகவேண்டிய அவசியமில்லாதபடி தீர்த்து வருகின்றன. 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனத் தொடர்புகள் சட்டந்தான் (Race Relations Act) மேற்கண்ட முறை உருவாவதற்குக் காரணம்.

குடியேறிகளின் பிரச்சினை கட்டுக்கடங்காமல் போவதற்கு முன் அதன் தீமைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டுமென்பது வில்சன் சர்க்காரின் நோக்கமாகும். இதை அடிப்படையாகக் கொண்டு அச் சர்க்கார் ஓர் அறிக்கையை 1965இல் வெளியிட்டது. ஆண்டுதோறும் காமன்வெல்த் நாடுகளிலிருந்து

இங்கிலாந்துக்குள் வந்து குடிபுகுவோரின் எண்ணிக்கை 8,500 ஆகக் குறைக்கப்படவேண்டுமென்றும், அவர்களின் உடல் நலம் நன்கு பரிசோதிக்கப்பட வேண்டுமென்றும், சட்டத்துக்கு முரணாக நாட்டில் வந்து புகுந்தவர்கள் மீண்டும் அவரவர் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு விடவேண்டுமென்றும், இங்கிலாந்தில் வாழ் கின்ற அந்நியர்களின் வீட்டு வசதி, சுகாதார வசதிகளைப் பெருக்க வேண்டுமென்றும், வெள்ளையர், அந்நியர் ஆகியோரின் நட்பை வளர்க்க வேண்டுமென்றும் பல பரிவுரைகளை அவ் வறிக்கை வழங்கியது. அவற்றை ஆதாரமாகக் கொண்டு காமன் வெல்த் குடிபுகுவோர் சட்டமானது (Commonwealth Immigration Act, 1968) ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் வெள்ளையரல்லாதார் இங்கிலாந்தில் குடிபுகுவது பெரிதும் தடுக்கப்பட்டு வருகிறது. கென்யா போன்ற ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வரும் குடியேறிகளை அனுமதிப்பதில் பிரிட்டன் பெரிதும் தயக்கம் காண்பிக் கிறது. அவர்களிற் பலரை இந்தியா ஏற்றுக்கொள்ளச் சித்தமா யிருப்பதாகப் பிரதமர் இந்திரா காந்தி அறிவித்துள்ளார். எனவே, கென்யாவிலிருந்து ஏராளமான பேர் கப்பல் கப்பலாக இந்தியா வுக்கு வந்து கொண்டிருக்கின்றனர். ரொடீஷியாவில் நிறவெறி தலை விரித்தாடுகிறது. ஸ்மித் என்பார் அங்குள்ள சிறுபான்மை யினரான வெள்ளையரின் தலைவராக இருந்துகொண்டு கறுப்பர் களைப் படாத பாடு படுத்துகிறார். அவரது ஆட்சியை ஒழிக்க, பிரிட்டன் பலாத்காரத்தைப் பயன்படுத்த மறுத்துவிட்டது. பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துவதன் மூலம் ரொடீஷி யாவைப் பணிய வைக்க பிரிட்டன் முயலுகின்றது. ஆனால், அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

இங்ஙனம் காமன்வெல்த்தில் பல பிரச்சினைகள் குமுறிக் கொண்டிருக்கின்றன. பிரிட்டன் மீது ஏனைய நாடுகளுக்கு நம் பிக்கை குறைந்து வருகிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவில் பிரிட்டன் சேர முயல்வது, ரொடீஷியாவைத் தண் டிக்கத் தயங்குவது போன்ற செயல்களால் பிரிட்டனின் செல் வாக்கு ஓரளவுக்குக் காமன்வெல்த் நாடுகளிடையே குறைந்துள் ளது என்றே தோன்றுகின்றது. எனினும், பிரிட்டன், காமன் வெல்த்தைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாயிருக் கிறது. உலக அமைதியைக் காப்பதில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்தபடியாக பிரிட்டிஷ் காமன்வெல்த் கூட்டுறவு விளங்கு கிறதென்பதைப் பலரும் ஒப்புக்கொள்கின்றனர். காமன்வெல்த் பிரதமர்கள் ஆண்டுதோறும் கூடிப் பொதுப் பிரச்சினைகளை ஆய் கின்றனர். அவர்களின் ஆலோசனைகள் உலக அமைதிக்குப் பெரிதும் உதவியாயிருக்கின்றன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

14. முதல் உலகப் போருக்குப் பிற்பட்ட கால இங்கிலாந்து

இருபெரும் போர்களுக்கும் இடைப்பட்ட கால இங்கிலாந்து (1918-39): தொழிற் கட்சியின் வளர்ச்சி — கூட்டு மந்திரி சபை (1918-23) — பால்டுவினின் முதல் மந்திரி சபை (1923-24) — முதல் தொழிற் கட்சி மந்திரி சபை (1924) — பால்டுவினின் இரண்டாவது மந்திரி சபை (1924-29) — மாக்டனல்டின் இரண்டாவது மந்திரி சபை (1929-31)—தேசிய அரசு (1931)—எட்டாம் எட்வர்டின் முடிதுறப்பு நெருக்கடி (1936)—நெவில் சேம்பர்லினின் மந்திரி சபை (1937-40); இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டனின் உள்நாட்டு அரசியல் வரலாறு: தொழிற்கட்சி மந்திரி சபை — மீண்டும் கன்சர்வேடிவ்கள்— தொழிழிற்கட்சி அரசாங்கத்தின் சாதனைகள் — தொழிற்துறை.

இருபெரும் போர்களுக்கு இடைப்பட்ட கால இங்கிலாந்து *(1918-1939)*

தொழிற்கட்சியின் வளர்ச்சி

முதல் உலகப் போர் 1918ஆம் ஆண்டில் முடிவுற்றது. எனினும், அதற்குப் பின் பல ஆண்டுகள் வரை அதனால் விளைந்த தீய பலன்கள் ஐரோப்பாவை அலைக்கழித்தன. போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே அதன் விளைவாக, ரஷ்யாவில் ஒரு பொது உடமை சர்க்கார் ஏற்பட்டது. போர் முடிந்தபின் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக இத்தாலியிலும், ஜெர்மனியிலும் யதேச்சாதிகார சர்க்கார்கள் தோன்றின. பிரிட்டனும் போரின் பின் விளைவுகளால் ஓரளவு தாக்குண்டதேயெனினும் அங்குப் புரட்சிகரமான மாறுதல்கள் எதுவும் அரசியலமைப்பில் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் மக்களின் அரசியற் பண்பாடு அத்தகைய மாற்றங்கள் நிகழாமல் தடுத்தது. ஆனால், சமதர்மக் கொள்கையைக் குறிக்கோளாகக் கொண்ட தொழிற் கட்சியானது போரின் விளைவாகப் பெரிதும் வலுவடைந்தது. போரினால் நாட்டில் ஏற்பட்ட பற்பல பொருளாதாரப் பிரச்சினை

களையும் தீர்ப்பதற்கான ஒரே வழி சமதர்மத்தை நாட்டில் புகுத்து வதேயாகுமென அவர்கள் கூறினர். அக் குறிக்கோளை அவர்கள் பலாத்கார முறையினலன்றிப் பாராளுமன்ற முறைப்படி அடைய விரும்பியதால், பிரிட்டிஷ் மக்கள் அவர்களை ஆதரித்தனர். அந்த ஆதரவும் சிறிது சிறிதாகவே தொழிற் கட்சிக்குக் கிடைத்தது. அதற்குக் காரணம் பிரிட்டிஷ் மக்களின் இயல்பான, மாற்றம் விரும்பாத மனப்பான்மையே யாகும். இங்ஙனம் தொழிற் கட்சி ஒருபுறம் வளர்ச்சியுற்று வருகையில் இன்னொரு புறம் தாராளக் கட்சியானது தேய்வுற ஆரம்பித்தது. அதன் கொள்கைகளையும் தொழிற்கட்சி உட்கொண்டுவிட்டதே அதற்குக் காரணமாகும்.

கூட்டு மந்திரி சபை *(1918-23)*

போரை வெற்றியுடன் நடத்திய கூட்டு மந்திரி சபையே, போருக்குப் பின்னும் நாட்டையாளும் அதிகாரத்தைப் பெற்றது. 1918இல் நடைபெற்ற தேர்தலில் லாயிட் ஜார்ஜ் தமது கூட்டு மந்திரி சபையின் குறிக்கோள்களை வெளியிட்டார். கெய்சரைத் தூக்கிலிடவேண்டுமென்றும், அநியாயமாகப் போரிட்டவர்களைத் தண்டிக்க வேண்டுமென்றும், போர்ச் செலவின் பெரும் பகுதியை ஜெர்மனியிடமிருந்து வசூலித்துவிட வேண்டுமென்றும், பிரிட்டனை வீரர்கள் வாழ்வதற்கேற்ற வளமிக்க நாடாக மாற்றியமைக்க வேண்டுமென்றும் அவர் தம் அறிவிப்பில் குறிப்பிட்டார். பழி வாங்கும் உணர்ச்சியால் உந்தப்பட்ட பிரிட்டிஷ் மக்களும் லாயிட் ஜார்ஜின் கொள்கைகளை விரும்பியேற்றனர். எனவே, கூட்டுக் கட்சியினர் பொதுமக்கள் சபையில் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றினர். தம்முள் ஏற்பட்ட பிளவால் தாராளக் கட்சியினரின் பலம் குன்றிவிட்டதால், தொழிற் கட்சியே எதிர்க்கட்சியாக விளங்குவதற்கேற்ற தகுதியைப் பெற்றது.

கூட்டு மந்திரி சபை, போரினுல் ஏற்பட்ட பல பிரச்சினைகளையும் சமாளிக்க இயலாமல் திகைத்தது. தனது தேர்தல் வாக்குறுதிகளையும் அதனுல் நிறைவேற்ற இயலவில்லை. கெய்சர் தஞ்சம் புகுந்திருந்த ஹாலந்துநாடு அவரை நேச நாடுகளிடம் ஒப்படைக்க மறுத்தது. போர்ச் செலவை ஜெர்மனியிடமிருந்து வசூலிப்பதென்பதும் முயற் கொம்பாயிருந்தது. பிரிட்டனின் பழைய நிலையை மீட்பதும் முடியாத செயலாயிருந்தது. ஏனெனில், போர்க்களத்திலிருந்து திரும்பிய பலர் வேலை கிடைக்காமல் தவித்தனர். வேலை கிடைத்த சிலருக்குக் குடியிருக்க வீடுகள் கிடைக்கவில்லை. குடியிருக்க வசதி பெற்றவர்களும், நாட்டில் ஏற்பட்ட விலைவாசி யுயர்வாலும், வாழ்க்கைத் தர உயர்வாலும், பற்றுக் குறைக்கு ஆளாகித் தவித்தனர். வியாபாரத்தில் ஒருவித மந்த

நிலையே ஏற்பட்டது. ஏனெனில், போருக்குமுன் இங்கிலாந்தின் பொருள்களை விரும்பி வாங்கிய நாடுகள், போர் முடிந்தவுடன் தத்தம் நாட்டுத் தொழிலை வளர்ப்பதில் முனைந்து விட்டன. இங்கிலாந்திலிருந்து வந்த பொருள்களின் மீது ஏனைய நாடுகள் கடும் சுங்கவரிகளை விதிக்கலாயின. போதிய முதலில்லாததால், குடியானவர்களும் பிரபுக்களும் விவசாயத்திலீடுபட முடியாது தவித்தனர். நாட்டில் உற்பத்தி குறைந்தது. அதற்கேற்ப ஏற்று மதியும் குறைந்தது. நாள் கூலிகளும் குறைந்தன. தொழிலாளர் கள் கூலி உயர்வு கோரி வேலை நிறுத்தங்களில் ஈடுபடலாயினர். முக்கியமாக நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்வோர், அதிகக் கூலியும் குறைந்த வேலை நேரமும் கோரினர். நாட்டின் சுரங்கங் களைத் தேசீய உடமையாக்க வேண்டுமென வற்புறுத்தலாயினர். தங்கள் கோரிக்கைகள் நிறைவேருமற் போனுல், வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அச்சுறுத்தினர். தொழில் முக்கூட்டுறவின் (**Industrial Triple Alliances**) உறுப்பினர்களும் அதில் சேரப் போவதாகக் கூறினர். இதைக் கண்ட அரசாங்கம் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளரின் நிலையை ஆராய ஒரு ராயல் கமிஷனை நியமித்து வேலை நிறுத்தம் ஏற்படாதபடி தடுத்தது. நீதிபதி சான்கி (Justice Sankey) என்பவரது தலைமையில் அமைந்த கமிஷன், தொழிலாளர்களின் கூலி சிறிது உயர்த்தப்பட வேண்டு மென்றும், நிலக்கரிக் கனிகளை அரசாங்கம் வாங்கிவிட வேண்டு மெனவும் சிபாரிசு செய்தது. அதனுல் திருப்தியடைந்த தொழி லாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். ஆனுல், அவர் களுக்குப் பதிலாக ரயில்வே தொழிலாளர்கள், அரசாங்கம் அவர் களது கூலியைக் குறைக்கத் திட்டமிட்டதை எதிர்த்து ஒரு வாரம் வேலை நிறுத்தம் செய்து, நாட்டின் போக்குவரத்தை ஸ்தம் பிக்கச் செய்தனர். அதன்பின் அவர்களது கோரிக்கைகளில் பெரும்பான்மையானவை நிறைவேற்றப்பட்டன.

பால்டுவினின் முதல் மந்திரி சபை (*1923-24*)

1922இல் கன்சர்வேடிவ் கட்சியினர் கூட்டு மந்திரி சபையை விட்டு வெளியேறினர். போர் முடிந்துவிட்டதாலும் அதனுல் ஏற்பட்ட உடனடியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதா லும், தாங்கள் கூட்டு மந்திரிசபையில் சேர்ந்ததன் நோக்கம் நிறைவேறிவிட்டதென்றும், ஒரு கட்சியினுட்சி மீண்டும் நாட்டில் ஏற்பட வேண்டுமெனவும் அவர்கள் கூறலாயினர். எனவே, லாயிட் ஜார்ஜ் தம் பதவியை ராஜினுமா செய்தார். ஆண்ட்ரூ போனர்லா (Andrew Bonorlaw) என்ற வயதேறிய கிழவர் பிரதமர் பதவியை ஏற்ருர். உடனே ஒரு பொதுத் தேர்தலும் நடைபெற் றது. அதில் கன்சர்வேடிவ் கட்சியினர் பெருவாரியான வாக்கு

களைப் பெற்றனர். தொழிற்கட்சியும் ஏராளமான வாக்குகளைப் பெற்றது. 142 தொழிற்கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் சபையில் இடம் பெற்றனர். போனர்லா சில மாதங்கள் பிரதமராயிருந்த பின், நோய் காரணமாகப் பிரதமர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். அதன்பின் கன்சர்வேடிவ் கட்சியின் இரு பெரும் தலைவர்களான மார்க்விஸ் கர்ஸனும் (Marquis Curzon) சர் ஆஸ்டன் சேம்பர்லினும் (Sir Austan Chamberlin) பிரதமராக வர விரும்பினர். அவர்களுள் யார் பிரதமரானாலும் கட்சியில் பிளவேற்படுமென அஞ்சிய கட்சிக்காரர்கள் ஸ்டான்லி பால்டுவின் (Stanley Baldwin) என்ற ஒரு சாதாரண நபரைப் பிரதமராக்கினர் (1923). அவர் தமது உயர்ந்த ஒழுக்கத்தாலும், பொது அறிவின் திறத்தாலும் கட்சியினர் அனைவரது நன்மதிப்பையும் விரைவில் பெற்றார். ஆனால், அவரது காப்பு வரிக் கொள்கை அவருடைய செல்வாக்கைப் போக்கியது. இறக்குமதிப் பொருள் மீது சுங்கவரி விதித்து அதன் மூலம் பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக்கூடுமென அவர் கூறினார். ஆனால், மக்களது தீர்ப்பையொட்டியே தாம் காப்புவரிச் சீர்திருத்தம் செய்யப்போவதாகக் கூறி அவர் அந்தப் பிரச்சினையின் பேரில் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை நடத்தினார். தேர்தலில் அவரது கட்சி பெரும்பான்மையை இழந்தது. அதனால் தடையிலா வாணிகத்தையே மக்கள் விரும்புகிறார்களென்பது நன்கு தெளிவாயிற்று. புதிதாய்க் கூடிய பாராளுமன்றத்தில் மூன்று கட்சிகள் இடம் பெற்றிருந்தன. கன்சர்வேடிவ் கட்சியினரும், கூட்டணிகளும் 261 உறுப்பினர்களையும், தாராளக் கட்சியினர் 155 பேரையும், தொழிற் கட்சியினர் 291 உறுப்பினர்களையும் பொதுமக்கள் சபையில் பெற்றனர். தொழிற் கட்சியினர், தாராளக் கட்சியினரின் எண்ணிக்கையைவிட அதிகமாயிருந்தது இதுவே முதல் முறையாகும்.

முதல் தொழிற்கட்சி மந்திரி சபை (1924)

1924ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ராம்சே மாக்டனால்ட் என்பவரின் தலைமையில் தொழிற்கட்சி மந்திரிசபை முதன் முதலாக ஏற்பட்டது. ஆனால், அதற்குப் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையினர் ஆதரவில்லாதிருந்ததால், தாராளக் கட்சியின் ஆதரவை நம்பியே அது வாழ வேண்டியதாயிருந்தது. சில மாதங்கள்வரை அத்தகைய ஆதரவைத் தாராளக் கட்சியினர் வழங்கினர். அதன்பின் அவர்கள் மாக்டனால்டின் ரஷ்யக் கொள்கையை ஐயுற்றுத் தங்கள் ஆதரவை நிறுத்திவிட்டனர். எனவே, 1924ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொழிற்கட்சி மந்திரிசபை வீழ்ச்சியுற்றது. அடுத்து நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ்

கட்சியினர் பெரும் வெற்றிபெற்றனர். மொத்தம் 400 உறுப்பினர்களை அக் கட்சி பொதுமக்கள் சபையில் பெற்றது. தொழிற்கட்சி 150 உறுப்பினர்களையும், தாராளக் கட்சியினர் நாற்பதே உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தது. தாராளக் கட்சியின் வீழ்ச்சி இத் தேர்தலில் நன்கு உறுதியாயிற்று.

பால்டுவினின் இரண்டாவது மந்திரி சபை (1924-29)

கன்சர்வேடிவ் கட்சியின் அமோகமான வெற்றியின் விளைவாகப் பால்டுவின் இரண்டாம் முறையாகப் பிரதமரானார். இறக்குமதியாகும் உணவுப் பொருள்கள் மீது வரி விதிப்பதில்லை என்றும், சுங்கவரிச் சீர்திருத்தம் செய்யப்போவதில்லை என்றும் அவர் மக்களுக்கு வாக்குறுதி யளித்திருந்தார். ஆனால், அந்நிய நாட்டுப் போட்டிகளினின்றும் சில முக்கியத் தொழில்களைக் காப்பாற்றவேண்டி ஒருசில பாதுகாப்பு வரிகளைத் (Safeguarding duties) தாம் விதிக்க உரிமை யுண்டென்றும் அவர் கூறிக்கொண்டார். அத்தகைய பாதுகாப்பு வரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவானது என்றனர், காப்புவரிக் கொள்கையினர். அவை மிக அதிகம் என்றனர், தடையிலா வாணிகக் கொள்கையினர். பால்டுவினைஆதரித்த பல நிலப் பிரபுக்கள் தங்களுடைய விவசாயத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் உணவுப் பொருள்களுக்கு வரி விலக்களித்தது பற்றி பால்டுவினைக் குறை கூறினர். மேலும், பால்டுவின் சர்க்கார் தங்க நாணயத் திட்டத்தை (Gold Standard) மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்ததாலும், பவுன் விலையை 1914இல் இருந்த அளவுக்கே நிர்ணயித்ததாலும், நாட்டில் தொல்லைகள் பெருகின. அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியான பிரிட்டிஷ் பண்டங்களின் விலை ஏறியது. அதனால் பிரிட்டனில் விற்பனை குறைந்தது. அதனால், தொழிலாளர்களின் கூலிகளும் குறைந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிற்று. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையே பகைமை வளர்ந்தது. முக்கியமாக நிலக்கரிச் சுரங்கத்தினரின் முணுமுணுப்பு அதிகமாயிற்று. சான்கி ஆய்வுக் குழுவின் சிபாரிசுப்படி தங்களுக்குக் கூலி உயர்வுகிடைக்க அரசாங்கம் வழி செய்யவில்லை என அவர்கள் குறைபட்டுக் கொண்டனர். ஆனால், கூலியை உயர்த்த இயலாத நிலையில் கனிகளின் சொந்தக்காரர்களிருந்தனர். ஏனெனில், பல அந்நிய நாடுகள் இங்கிலாந்திலிருந்து நிலக்கரி வாங்குவதையே நிறுத்திக்கொண்டன. கரிக்குப் பதிலாக எண்ணெயைப் பயன்படுத்தும் முறையும் அங்கங்கே வழக்கத்துக்கு வந்தது. எனவே, நிலக்கரி எடுக்கும் தொழிலில் மந்தமேற்பட்டது. கூலிகளும் அதற்கேற்பக் குறைந்தன. தொழிலாளர்களோவெனில், கனிகள் யாவும் அரசாங்கத்திற்குச் சொந்தமாகி

விட்டால் தங்கள் நிலை உயர்ந்துவிடுமெனத் தவருக எண்ணி னர். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற அவர்கள் 1920-21இல் இரண்டு பெரும் வேலை நிறுத்தங்களைச் செய்தனர். அதனுல் நிலைமை மேலும் மோசமாயிற்றே தவிர நன்மையொன்றும் நேரவில்லை. வெளி நாடுகள் நிலக்கரியை வேறு இடங்களி லிருந்து தருவித்துக் கொள்ளலாயின. வேலை நிறுத்தத்தால் பயனேற்படாததைக் கண்ட தொழிலாளர்கள், தொழிற் சங்கங் களின் மீது நம்பிக்கையிழந்தனர். அச் சங்கங்களின் உறுப்பினர் தொகை வீழ்ந்தது. கூலியுயர்வைப் பெற வேலை நிறுத்தம் பயன்படாததைக் கண்ட தொழிலாளர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்ற முயன்றனர். 1924இல் அவர்களது முயற்சி ஓரளவு நிறைவேறியது. ஆனுல், தொழிற்கட்சி அமைச்சு வீழ்ச்சியுற்ற தால் அவர்களது விருப்பம் தடைப்பட்டது. 1925இல் பால்டுவின் சர்க்கார் சுரங்கங்களின் மீது செலுத்திவந்த கட்டுப்பாட்டை எடுத்துவிட்டனர். இதனுல் சுரங்கத் தொழி லாளர்களின் வருமானம் மேலும் குறைந்துவிடும் போல் தோன் றியது. எனவே, புதிய ஏற்பாடு ஏதாவது அமையும்வரை தங் களுக்கு உதவிப் பணம் தரும்படி அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டனர். அதற்கென அவர்கள் ஒரு கெடுவு காலத்தையும் குறிப்பிட்டுக் காத்திருந்தனர். 1926ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியன்று அக்கெடுவும் முடிந்தது. எனவே, சுரங்கத் தொழிலாளரனைவரும் ஒரு பெரும் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டனர். இதை எதிர்பார்த்த சர்க்கார் முன்னெச்சரிக்கை யாகவே மக்களுக்கு வேண்டிய இன்றியமையாப் பொருள்கள் தட்டின்றிக் கிடைப்பதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்து வைத்திருந்தது. மேலும் ரயில்களுக்குப் பதிலாக லாரிகள் பொருள்களை இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லலாயின. வேலை நிறுத்தத்தால் பெரிதும் துன்புற்றவர்கள் தொழிலாளர் களும் அவர்களது குடும்பத்தினருமே யாவர். எனவே, வேலை நிறுத்தம் ஒரே வாரத்தில் நிலைகுலைந்தது. அரசாங்கம் வெற்றி பெற்றது. அதையொட்டிப் புதிய தொழிற் கட்டுப்பாட்டுச் சட்டமொன்றை அது ஏற்படுத்தியது (1927). அதன்படி ஒரு வேலை நிறுத்தம் ஏற்படும்போது அதற்குப் பரிவு காட்டும் வகையில் வேறு வேலை நிறுத்தங்கள் செய்வது சட்ட விரோதமாக்கப்பட்டது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் களைத் தொழிற் சங்கங்கள் ஆதரிப்பதையும் அது பலவகையில் தடை செய்தது. இங்ஙனம் வேலை நிறுத்தம் ஒடுக்கப்பட்ட தெனினும், அதனுல் ஏற்பட்ட தீய பலன்கள் மக்களைப் பெரி தும் வாட்டின. ஆலைத்தொழில் மிகுந்திருந்த பாகங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. மக்கள், சர்க்கார்

மீது வெறுப்புற்றனர். இவ் வெறுப்பு 1929இல் ஏற்பட்ட பொதுத் தேர்தலில் நன்கு வெளியாயிற்று. தொழிற்கட்சி பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று, அரசாங்கத்தைக் கைப்பற்றியது. எனினும், தாராளக் கட்சியின் ஆதரவின்றி இயங்க முடியாத நிலையிலேயே அது இருந்தது.

மாக்டனல்டின் இரண்டாவது மந்திரி சபை (1929-31)

தொழிற்கட்சித் தலைவர் மாக்டனல்ட் இரண்டாம் முறையாகப் பிரதமரானார். என்ன முயன்றும் அவரால் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இயலவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகியது. மேலும் 1929இல் அமெரிக்காவில் ஏற்பட்ட வியாபார மந்தம் ஐரோப்பாவிலும் பிரிட்டனிலும் எதிரொலிக்கலாயிற்று. பல பாங்குகள் முறிந்தன. சில பிரிட்டிஷ் பாங்குகள் எவ்வளவோ உறுதியுடன் நெருக்கடியைச் சமாளித்தன. சர்க்காருக்குப் பணத்தட்டு அதிகரித்தது. அதைப் போக்க ஆலைத் தொழில்கள் மீது வரி விதிக்கப்பட்டது. ஏற்கெனவே வரிப் பளுவால் வாடிக் கிடந்த தொழிலதிபர்கள் இதனால் மாக்டனல்டு சர்க்காரை வெறுக்கலாயினர். அரசாங்கம் தனது செலவைக் குறைப்பதன் மூலம் பொருளாதார நிலையைச் சீராக்க முயன்றது. அதனால் வேலையில்லாதவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிப் பணம் குறைக்கப்பட்டது. எனவே, பொதுமக்கள் சர்க்காரை வெறுக்கலாயினர். மக்களுக்குக் கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையும் குறைந்தது. தங்கம் ஏராளமாக வெளி நாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தது. பொருளாதார நிலையைச் சரிபடுத்த இயலாத காரணத்தால் தொழிற்கட்சி சர்க்கார் கலைந்தது. அதன்பின், மாக்டனல்ட் எல்லாக் கட்சிகளும் சேர்ந்த தேசீய சர்க்கார் ஒன்றை அமைத்தார்.

தேசீய அரசு (National Government, 1931)

நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத நெருக்கடியைச் சமாளிக்க எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே ஒரு கூட்டு மந்திரிசபையை மாக்டனல்டு அமைத்தார். அது பல கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக உழைக்கலாயிற்று. அரசாங்கம் பொதுச் செலவைப் பெரிதும் குறைத்துச் சிக்கனத்தைக் கையாண்டது. வேலையற்றோர்க்கு வழங்கப்பட்ட உதவிப் பணம்கூட ஓரளவு குறைக்கப்பட்டது. வரிகள் யாவும் பெரிதும் அதிகரிக்கப்பட்டன. இங்கிலாந்து தங்க நாணயத் திட்டத்தினின்றும் (Gold Standard)

விலகியது. தடையிலா வாணிக முறையும் கைவிடப்பட்டது. வெளி நாட்டிலிருந்து இறக்குமதியான பல பண்டங்கள் மீது வரிகள் போடப்பட்டன. பிரிட்டனின் குடியேற்ற நாட்டுப் பொருள்களும் இவ் வரிகளுக்கு உட்பட்டன. ஆனால், 1932இல் ஒட்டாவா (Ottawa) நகரில் கூடிய பேரரசுப் பொருளாதார மாநாட்டில் (Imperial Economic Conference) டொமினியன்கள், குடியேற்ற நாடுகள் இவற்றிலிருந்து இங்கிலாந்துக்குள் வந்தப் பொருள்கள் மீது விதிக்கப்பெற்ற வரிகளில், அவற்றுக்குச் சாத மாகச் சில சலுகைகளைப் பிரிட்டன் அளித்தது. தேசியக் கடனுக்காக அளிக்கப்பட்ட வட்டி விகிதம் ஐந்திலிருந்து மூன் றரையாகக் குறைக்கப்பட்டது. இத்தகைய முறைகளால் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் சீரடைந்தது. பழைய செல்வாக்கு மீண்டும் சிறிது சிறிதாகத் திரும்பியது. எனினும், வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் ஒரு பெரும் பிரச்சினை யாகவே இருந்தது. 1935இல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தமது ஆட்சியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது, மக்கள் காட்டிய குதூகலம், உண்மையில் அவர்களது வாழ்க்கை நிலையில் ஓரளவாவது உயர்வு ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதையே எடுத்துக் காட்டியது. எனினும், மாக்ட னல்டின் இந்தியக் கொள்கையைச் சர்ச்சில் போன்றவர்கள் பலமாக எதிர்த்தார்கள். 1935ஆம் ஆண்டு இந்தியத் துரைத் தனச் சட்டத்தை ஏற்படுத்தியபின், மாக்டனல்டு தம் பத வியை ராஜினாமாச் செய்தார்.

1936ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் உயிர் நீத்தார். அவர் எளிமையே உருவானவர். மிகச் சாதாரண மனிதர் எனத் தன்னைத்தானே அவர் கூறிக் கொள்வது வழக்கம். எனினும், அவரது காலத்தில் அரச பதவிக் கிருந்த மதிப்புச் சிறிதும் குன்றவில்லை. மேலும் அவர் பேரரசு நாடுகளின் ஒற்றுமையை வளர்த்தார். காமன்வெல்த் என்ற குடும்பத்தின் தலைவராக விளங்கினார். ஒரு சமயம் தம் பேரரசுக் குடிகளுக்கு வானொலி மூலம் ஓர் அறிக்கையை வெளி யிட்டு அவர்களின் விசுவாசத்தையும் நன்மதிப்பையும் பெற்றார்.

எட்டாம் எட்வர்டின் முடிதுறப்பு நெருக்கடி (Abdication Crisis, *1936)*

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 1936ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உயிர்நீத்தபின், அவரது மூத்த மகன் எட்டாம் எட் வர்ட் ஆங்கில அரியணையேறினார். அவரது ஆட்சியை மக்கள் மனதார வரவேற்றனர். ஏனெனில், இளவரசராயிருக்கும்

போதே அவர் தமது கருணைமிக்க சொற்களாலும், செயல்களாலும் பொதுமக்களின் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டார். மக்களின் நலனுக்காக, அதுவும் ஏழை எளிய மக்களின் நன்மைக்காக உழைப்பதொன்றே தமது வாழ்வின் குறிக்கோள் என்பதை அவர் சென்றவிடமெல்லாம் கூறிக்கொண்டிருந்தார். ஆகவே, ஆங்கில மக்களேயன்றி, பேரரசு நாடுகளில் வாழ்ந்த அத்தனை பேரும் அவரை உளமார நேசித்தனர். அரும்பெரும் சாதனைகளை அவரிடமிருந்து பலதரப்பட்ட வகுப்பினரும் எதிர்பார்த்தனர். எட்வர்டும் தமது செயல்களால் அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை என்பதைக் காட்டிக் கொண்டார். அரசருக்குரிய அன்றாடக் கடமைகளைச் செய்த தோடு அவர் நின்றுவிடவில்லை. தேநீர் விருந்துகளை அவர் அடிக்கடி ஏற்பாடு செய்து, பலதரப்பட்ட மக்களையும் வர வழைத்து அவர்களது உள்ளக்கிடக்கைகளை அறிய அவர் அரும் பாடுபட்டார். ஏழை எளியவர்களின் இல்லங்களுக்குத் தாமே நேரில் சென்று அவர்தம் குறைகளைக் கேட்டறிந்தார். சான்ருக, பாண்டா பள்ளத்தாக்கில் (Bhondda Valley) வறுமையில் வாடிக்கொண்டிருந்த மக்களை அவர் சந்தித்து அவர்களின் நிலைமையை விசாரித்தறிந்தார். இதை எல்லாம் கண்ட மக்கள், இவரை மன்னராகப் பெற நாம் எப்பேறு பெற்ருேம் என நினைந்து நினைந்து இறுமாப்பெய்தினர்.

இங்ஙனம், மக்கள் அனைவரும் மன்னரிடமிருந்து மாபெருஞ் சாதனைகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில்தான், அவர்கள் அனைவரையும் திடுக்கிடச் செய்யும்படியான செய்தி ஒன்று வெளிக்கிளம்பியது. வாலிஸ் சிம்சன் (Wallis Simpson) என்ற அமெரிக்க மாது ஒருத்தியை அரசர் திருமணம் செய்து கொள்ளப்போவதாகப் பரவலாக ஒரு வதந்தி கிளம்பியது. அரசர் அம் மாதுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைப் பால்டுவின் என்ற பிரதமரும் அவரது சகாக்களும் அறிந்திருந் தனர். என்ருலும், அதைப்பற்றி மக்கள் அறியாவண்ணம் அவர்கள் எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டனர். ஆனல், இரண்டு மாதங்களுக்கு மேல் அந்த இரகசியத்தைக் காப் பாற்ற அவர்களாலும் இயலவில்லை. நாடெங்கும் செய்தி பரவிவிட்டது. எங்குப் பார்த்தாலும் மக்கள் இதைப் பற்றியே பேசிக் கொண்டனர். கண்டனக் குரல்கள் ஆங்காங்கே கிளம்ப ஆரம்பித்தன. செய்தித் தாள்கள் பல அரசரை ஆதரித்து எழுதின. ஒரு சில அவரைத் தாக்கி எழுதிவந்தன. நாள் செல்லச் செல்ல எதிர்ப்பு அதிகமாகிக் கொண்டே சென்றது. சாதாரண மங்கை ஒருத்தியை, அதுவும் அந்நிய நாட்டைச்

சேர்ந்த ஒருத்தியை, மன்னர் திருமணம் செய்துகொள்வதென்பது தகாத செயல் என்றே பலரும் பரவலாகப் பேசிக்கொண்டனர். ஆனால், மன்னர்கள் சாதாரணக் குடும்பத்தில் திருமணத் தொடர்பு கொள்வதோ, அந்நிய நாட்டினள் ஒருத்தியை மணந்து கொள்வதோ அவ்வளவு பெரிய தடையாக இருக்கவில்லை. ஏனெனில், யார்க் கோமகனான ஜார்ஜ் ஒரு சாதாரண மங்கையையே மணந்திருந்தார். அவரது முன்னோர்கள் பலர், அந்நிய நாட்டுப் பெண்களோடு திருமணத் தொடர்பு கொண்டிருந்தனர். ஆனால், சிம்சன் என்ற அந்த அமெரிக்க மாது ஏற்கெனவே இருமுறை திருமணம் செய்துகொண்டவள் என்பதும், திருமணமான பின் அவ்விரு கணவர்களையும் விவாக ரத்துச் செய்துவிட்டவள் என்பதும்தான் ஆங்கில மக்களுக்கு ஒரு அதூயையை ஏற்படுத்தி விட்டன. விவாக ரத்துச் செய்துகொள்வதென்பது ஆங்கிலச் சட்டத்துக்குப் புறம்பானதொன்றன்று. ஆனால், ஆங்கிலிகத் திருச்சபைக்கு அது ஒவ்வாததொன்றாயிருந்தது. விவாகரத்தில் நம்பிக்கை இல்லாத ஒரு திருச்சபைக்கு, இருமுறை விவாகரத்திலீடுபட்டிருந்த ஒருத்தியை மணந்துகொள்ளப் போகும் அரசரைத் தனது தலைவராக எப்படி ஏற்றுக்கொள்வதென்ற கேள்வியானது இயல்பாகவே எழுந்தது. அப்படிப்பட்ட ஓர் அரசருக்குத் தனது கரங்களால் முடிசூட்டுதலென்பது எப்படி முடியும் என ஆர்ச்பிஷப் காஸ்மோலாங் (Casmo Lang) என்பார் உளங் கலங்கினார். மன்னர், நாட்டின் தலைவர் என்ற நிலையில் விவாகரத்து செய்வதோ, விவாகரத்துச் செய்துகொண்ட மங்கையை மணப்பதென்பதோ கூடாத காரியமல்ல. ஆனால், நாட்டுத் திருச்சபையின் தலைவர் என்ற நிலையில், அத்திருச்சபைக்கு உடன்பாடில்லாத ஒரு காரியத்தைச் செய்துள்ள ஒரு பெண்ணை மணந்துகொள்வது என்பதுதான் கூடாத காரியம் என அவருக்கும் பட்டது. மற்றும் இந்தச் சிக்கலில் பேரரசு நாடுகளின் கருத்தையும் மன்னர் மதிக்க வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் பிரதமர் பால்டுவின் டொமினியன் நாடுகளின் பிரதமர்களுக்கு எழுதி இச் சிக்கலில் அவர்களது கருத்து என்ன என்பதை மன்னருக்குத் தெரிவிக்கும்படி கோரினார். அயர்லாந்தைத் தவிர ஏனைய டொமினியன் நாடுகள் யாவும் சிம்சன் சீமாட்டியைத் தங்களது இராணியாக ஏற்றுக் கொள்ள இயலாதென்பதைத் தெரிவித்துவிட்டன. பால்டுவின் தனிப்பட்ட முறையில் மன்னரைச் சந்தித்துப் பேசினார். சிம்சன் சீமாட்டியைக் கைவிட்டுவிடுவதே சாலச் சிறந்ததும் மக்களுக்குகந்ததுமாகுமென அறிவுரை பகர்ந்தார். ஆனால், பயனில்லை. தான் முடிதுறக்கப்போவதாயும், அதன்பின் சாதாரண குடிமகன் என்ற நிலையில் சிம்சனை மணந்துகொள்ள விரும்புவதாகவும் அவர் பால்டுவினிடம் கூறிவிட்டார். அதன் பின்னர், இன்

ஞெரு யோசனையையும் அவர் தெரிவித்தார். சிம்சனைத் தான் மணந்துகொள்வதை ஏற்றுக்கொண்டு, அதே சமயம் அச் சீமாட்டி இங்கிலாந்தின் இராணியாக வராமல் தடுக்கப் பாராளு மன்றம் ஒரு சட்டமியற்றிவிடலாம் என்பதே அந்த யோசனை யாகும். ஆனால், அத்தகைய யோசனையைப் பால்டுவின் தமது அமைச்சரவையில் கூறியபோது, ஏனைய அமைச்சர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். மன்னரின் மனைவியாக இருக்கும் ஒரு மங்கையை, நாட்டின் இராணியாக இல்லாமலிருக்க ஒரு சட்டம் கொண்டுவருதலென்பது சற்றும் பொருந்தாத செயல்; எனவே, அது முடியாத காரியம் எனக் காபினெட் அறிவித்துவிட்டது. காபினெட் ஆலோசனையின்படி நடப்பதே மன்னரின் கடமை என லாஸ்கி (Laski) என்ற அறிஞர் 'டெய்லி ஹெறால்ட்' என்ற பத்திரிகையில் எழுதினுர். மன்னரை ஆதரித் தும், கண்டித்தும் கூக்குரல்கள் நாடெங்கும் கிளம்பின. மன்னர் மாளிகைக்கு முன் மாணவர்கள் பலர் கூடி முடியரசு நீடிக்க வேண்டுமென்றும், 'எட்வர்ட் மன்னர் வாழ்க !' என்றும் கோஷ மிட்டனர். நாடெங்கும் வதந்திகள் பல உலவலாயின. அரசர் தான் கூறுகிறபடி நடக்கவில்லையானுல், காமன்வெல்த் கூட்டுற விலிருந்து பிரிந்துவிடப் போவதாகக் கானடாவின் பிரதமர் அச்சுறுத்தியிருப்பதாக ஒரு வதந்தி கிளம்பியது. எட்வர்ட் முடி துறந்தால், தான் அரச பதவியை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என யார்க் கோமகன் கூறிவிட்டதாகவும், எனவே, இளவரசி எலிஸபெத்தை இராணியாக அறிவித்து அவருக்குத் துணையாக, மேரி அரசி, யார்க் கோமகன், காண்டர்பரி ஆர்ச்பிஷப் ஆகியோ ரைக்கொண்ட ஒரு பாதுகாப்பு சபை (Regency Council) ஏற்படுத் தப்படப் போவதாகவும் இன்ஞெரு வதந்தி கிளம்பிற்று. இந்த நிலையில் அரசர் மௌனமாகவே இருந்தார். கிளர்ச்சிகள் மேலும் வலுப்பெருதிருக்க அவர் லண்டனைவிட்டுப் பெல்வெடிர் கோட் டைக்குச் (Fort Belvedere) சென்று வசிக்கலானுர். கன்சர்வேடிவ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசருக்குத் தங்களது ஆதர வைத் தெரிவித்தனர். அதே சமயம் சிம்சனைக் கைவிட்டுவிடும் படியும் அவர்கள் மன்னரைக் கேட்டுக்கொண்டனர். இதற்கிடை யில் ஐரோப்பாவுக்குப் போய்விட்ட சிம்சன் சீமாட்டி கேன்னஸ் (Cannes) நகரத்திலிருந்து தனது முடிவால் மன்னருக்கோ அல்லது அவரது பதவிக்கோ ஏதாவது இழுக்கு நேருமானுல் தான் தனது காதலைத் தியாகம் செய்துவிட்டுத் திருமண விவகா ரத்திலிருந்து முற்றிலும் விலகிக்கொள்ளத் தயாராயிருப்பதாக ஓர் அறிக்கை விடுத்தாள். இவ்வறிக்கையின் பின், பால்டுவின் மன்னரோடு தொடர்பு கொண்டு அவரது கருத்தை அறிய விரும் பினுர். சிக்கலிலிருந்து விடுபட மன்னர் முன் மூன்று வழிகள்

தோன்றின. ஒன்று அவர் சிம்சனை இராணி என்ற நிலையில் திருமணம் செய்துகொள்ளவேண்டும். அல்லது முடி துறந்து விட்டுப் பின்னர் சிம்சனை மணக்க வேண்டும். இன்றேல் சிம்சனை மணக்கும் எண்ணத்தையே மன்னர் கைவிட்டுவிட வேண்டும். இவற்றில் முதல் வழியைக் கடைப்பிடிப்பதென்பது முடியாத காரியமாயிருந்தது. ஏனெனில் கிரேட் பிரிட்டனில் மட்டுமின்றி, டொமினியன்களிலும்கூட சிம்சனை இராணியாக ஏற்றுக்கொள்ள மக்கள் மறுப்புத் தெரிவித்தனர். மூன்ருவது வழியைக் கடைப் பிடிக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாயிருந்தது. ஆனுல் மன்னர் சிம்சனை மணப்பதில் உறுதியாக இருந்தார். அதற் காகத்தான் ஆங்கில அரியணையைத் துறந்துவிட்டதாக 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி அறிவித்துவிட்டார். அதே நாளன்று 'முடிதுறப்பு அறிவிப்புச் சட்டம்' (Declaration of Abdication Act) ஒன்றை அவசர அவசரமாகப் பாராளுமன்றத் தில் அமைச்சர்கள் நிறைவேற்றி வைத்தனர். யார்க் கோமகன் ஆரும் ஜார்ஜ் எனப் பட்டமெய்தினுர். அன்று இரவு எட்வர்ட் உருக்கமான ரேடியோச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினுர். அடுத்த நாள் அவர் ஒரு கப்பலில் ஏறி ஐரோப்பாவுக்குப் போய் விட்டார். அதன் பின் அவர் சிம்சனை மணந்துகொண்டார். 'விண்ட்சர் கோமகன்' என்ற பட்டத்தை ஆரும் ஜார்ஜ் அவருக்கு வழங்கினுர்.

அரசியலமைப்பின்படி ஒரு மன்னர் முடிதுறந்து இன்னெருவர் பட்டத்துக்கு வருதலென்பது அவ்வளவு எளிதான காரியமன்று. அரச பதவியில் மாற்றம் நிகழும் போதெல்லாம் அது காமன்வெல்த் நாட்டுப் பிரதமர்களால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்பதும், அந் நாடுகளின் இசைவினைப் பெற்ற பின்பே முடிதுறப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்பதும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் நிபந்தனையாகும். மன்னருடைய முடிதுறப்பைக் காமன்வெல்த் நாடுகள் ஏற்றுக் கொள்வதோடு அதற்கான சட்டத்தை இயற்றும்படி பாராளுமன்றத்தை வேண்டிக்கொள்ளவேண்டும். கனடாவின் பிரதமரும் சட்டமன்றத்தினரும் முடிதுறப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஆஸ்திரேலியாவும், நியூஸிலாந்தும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தை இன்னும் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அவை இந் நெருக்கடியின்போது வாளா இருந்துவிட்டன. தென் ஆப்பிரிக்கா மட்டும் தனிப்பட்ட முறையில் ஆங்கில மன்னரைத் தனது மன்னராக வரித்துக்கொண்டிருந்த காரணத்தால், முடி துறப்புக்குப் பின், தான் அடுத்த மன்னரைத் தனிப்பட்ட சட்டத்தின் மூலம் தேர்ந்தெடுத்துக்கொள்வதாகக் கூறிவிட்டது. அயர்லாந்து

ஆங்கில அரசரைத் தனது மன்னராக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கருத்தைக் கொண்டிருந்ததால் மன்னரின் முடி துறப்பைப் பற்றி அதுவும் வாளா இருந்துவிட்டது. இங்ஙனம், முடி துறப்பானது காமன்வெல்த் நாடுகளின் ஒப்புதலைப் பெற்றுவிட்டது. எனவே, மன்னர் முடி துறப்பை ஆங்கில அமைச்சரவை ஏற்றுக் கொண்டுவிட்டது. எட்வர்டின் மனத்தை அழுத்திக்கொண்டிருந்த பாரம் நீங்கியது. சிம்சனை மணந்துகொண்டு அவர் இங்கிலாந்தின் ஒரு சாதாரணக் குடிமகனுகி விட்டார். அவரது இளவயதில் அவர், தானே பிரிட்டிஷ் தீவின் கணவன் என்று அடிக்கடி கூறுவது வழக்கம். ஆனுல், கடைசியில் அவர் பிரிட்டனைக் கைவிட்டுவிட்டுச் சிம்சனைக் கைப்பிடித்துவிட்டார். தனிப்பட்ட ஒரு பெண்பால் கொண்ட காதல் அவரது நாட்டுக் காதலை மறைத்துவிட்டது. அவரது வாக்குறுதிகளில் பெரு நம்பிக்கை வைத்திருந்த மக்கள் அனைவரும் ஏமாந்துபோயினர். ஆனுல், காதல் வரலாற்றில், அம்பிகாபதி அமராவதி போன்று அவர் நிலையான ஒரு பேரிடத்தைப் பெற்றுவிட்டார். காதலால் கசிந்து உருகும் உள்ளம் எத்தகைய தியாகத்தையும் செய்யக்கூடிய வன்மை பொருந்தியது என்ற உண்மைக்கு எடுத்துக்காட்டாக அவர் அமைந்துவிட்டார்.

எட்டாம் எட்வர்டின் முடி துறப்பானது ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெறுகின்றது. மக்களின் பிரதிநிதிகளடங்கிய காபினெட் சபையின் சர்வ வல்லமையை இந் நிகழ்ச்சி நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. அரசரின் திருமண விவகாரத்தைப் பிரதமர் பால்டுவின் வெகு நாட்கள்வரை பாராளுமன்றத்திடம் தெரிவிக்கவே இல்லை. சிம்சன் சீமாட்டியை அரசர் மணப்பது தவரு சரியா என்பதைப்பற்றி அவர் பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்கவே இல்லை. தமது சகாக்களை மட்டுமே அவர் கலந்தாலோசித்தார். பின்னர் அரசர், சிம்சனை ஒரு சாதாரண மனைவியாக மணந்துகொள்வதாகவும் அதேசமயம் அவருக்கு இராணிக்குரிய ஸ்தானத்தைத் தரவேண்டாமென்றும் பிரதமரைக் கேட்டுக்கொண்டபோது, அதற்கு அவசியமான ஒரு தனிப்பட்ட சட்டத்தைப் பாராளுமன்றம் இயற்றவேண்டுமாதலால், அதுபற்றிக் காபினெட்டை அவர் கலந்தாலோசித்தார். அவர்கள் அத்தகைய சட்டம் கொணர மறுக்கவே, அதைப் பாராளுமன்றத்திடம் கூறி அதன் மறுப்பையும் பெற்றுர். அரசர் முடிதுறப்பதை முதலில் அமைச்சரவை ஏற்றுக்கொண்ட பின்னர்தான் அது பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது. விரும்பினுல் காபினெட் சர்வாதிகாரம் (Cabinet Dictatorship) செலுத்த முடியும் என்பதற்கும்,

பாராளுமன்றத்தைத் தன் கைப்பாவையாக ஆட்டிவைக்க் முடியு மென்பதற்கும் இது ஒரு தக்க சான்றாகும்.

காபினெட்டுக்கும் அரசருக்குமுள்ள தொடர்பு என்ன என் பதையும் இந்நிகழ்ச்சி நன்கு எடுத்துக் காட்டிவிட்டது. காபி னெட்டின் விருப்பப்படியே அரசர் தமது சொந்த விஷயங்களில் கூட நடந்து கொள்ளவேண்டுமென்பது இதனால் நன்கு நிலை நாட்டப்பட்டது. காபினெட்டின் ஆலோசனைக்கேற்பவே அரசர் நடந்துகொள்ள வேண்டும் என்பது அரசியல் மரபு. அதற்கு அரசர் பணிந்தார். முடிதுறக்கும்வரை அவர் வாய்திறந்து பேசவில்லை. முடிதுறப்பைப் பாராளுமன்றமும் காபினெட்டும் ஒப்புக்கொண்ட பின்னரே அவர் மக்களிடம் ரேடியோ மூலம் பேசினார். அது வரை தமது வாய் கட்டப்பட்டிருந்ததாகவும், அரச பதவியை இழந்த பின்னரே அவர் சுதந்திரமாகப் பேச முடிந்தது என் றும் அவர் உருக்கமாக ஓர் உரையாற்றினார்.

வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்துக்கு ஓர் உரைகல்லாகவும் இந் நிகழ்ச்சி பயன்பட்டது. அச் சட்டப்படி, அரச பதவியிலும் பாரம்பரியத்திலும் ஒரு மாற்றம் நிகழவேண்டுமானால் அத் தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் சட்டத்தை டொமினியன் பாராளுமன்றங்களே விரும்பிக் கோரவேண்டுமெனவும், அதோடு அதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமெனவும் (must be requested and Consented) மேற்கண்ட சட்டம் கூறுகிறது. எட்டாம் எட்வர்ட் முடிதுறக்க முன்வந்தபோது அதற்குரிய சட்டத்தை டொமினியன் பாராளுமன்றங்களே கோரி ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் வந்தது. பால்டுவின் இது விஷயமாக டொமினியன் பிரதமர்களைக் கலந்து கொண்ட பின்னரே ஒரு முடிவுக்கு வந்தார். சாதாரண மாது ஒருத்தியை, அதுவும் விவாகரத்தில் ஈடுபட்ட ஒருத்தியை, அரசர் மணம் செய்துகொள்வதை டொமினியன் பிரதமர்கள் எவரும் விரும்பவில்லை. எனவே, பால்டுவின் தனது விருப்பத்தை எளிதில் நிறைவேற்றிவிட்டார். ஆனால், டொமினியன் பிரதமர் கள் அவரது கருத்தை மறுத்திருந்தால் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கக்கூடும். அரசரின் முடிதுறப்புச் சட்டத்தை டொமினியன் பாராளுமன்றங்கள் கோரி ஒப்புக்கொண்ட பின்னரே அது அமுலுக்கு வந்தது. அரச பதவியில் மாற் றத்தை ஏற்று அப் பாராளுமன்றங்களும் துணைச் சட்டங்களை இயற்றின.

1772ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரச குடும்பத் திருமணங் கள் சட்டப்படி (Royal Marriages Act) அரச குடும்பத்தில்

நிகழும் ஒவ்வொரு திருமணத்துக்கும் அரசரின் ஒப்பம் வேண்டும். அத்தகைய ஒப்பத்தை அரசர் தமது கவுன்சிலில் தெரிவிக்க வேண்டும். எட்டாம் எட்வர்ட் திருமண விவகாரத் தில் இந்த நிலை ஏற்பட வழியில்லை. ஏனெனில் ஓர் அரசர் தமக் குக் கீழுள்ளவர்களின் திருமணங்களுக்கு ஒப்பம் வழங்க முடி யுமே தவிர, தனக்குத்தானே அவ்வொப்பத்தை வழங்கிக்கொள்ள இயலாது; அவசியமும் இல்லை.

பாராளுமன்றத்தில் நிறைவேறிய ஒரு மசோதா சட்ட மாகவேண்டுமானல், அரசரது ஒப்பம் தேவை. ஆனல், எட் டாம் எட்வர்டின் முடிதுறப்புச் சட்டத்துக்கு ஒப்பம் தர ஒருவரு மில்லையாதலால், மன்னரின் ஒப்பத்திற்குப் பதிலாகக் கவுன்சிலே ஒப்பத்தை வழங்கியது. அதன்படி அரசரின் முடிதுறப்புச் சட்டமும் மன்னரின் ஒப்பத்தைக் கவுன்சில் மூலமாகப் பெற்றது.

ஒரு மன்னர் முடிதுறந்து இன்னெருவர் பட்டத்துக்கு வரும் போது, முடிதுறந்தவரின் சந்ததிகள், பின்னல் வாரிசுரிமை கோர இடம் உண்டு. அதைத் தவிர்க்கப் பால்டுவின் எட் வர்டை அணுகி, அவரது சந்ததியார்கள், பிரிட்டிஷ் மகுடத் துக்கு உரிமை கொண்டாடுவதில்லை என வாக்குறுதி தரும்படி கூறினர். எட்டாம் எட்வர்டும் அதற்கிணங்கித் தமது குழந் தைகள் ஆங்கில அரியணைக்கு உரிமை கொண்டாட மாட்டார் கள் என வாக்குறுதி கொடுத்தார். இங்ஙனம் பல அரசிய லமைப்புப் பிரச்சினைகளுக்கு இந்நிகழ்ச்சி விடையளித்தது.

மற்றும், நாட்டின் திருச்சபையானது எவ்வளவு செல் வாக்குடையதென்பதையும் இந்நிகழ்ச்சி நன்கு வலியுறுத்துகிறது. விவாகரத்தில் ஈடுபட்டவர்களை அரசர் மணப்பது சட்டத்துக்கு முரணானதன்று. ஆனல், ஆங்கிலத் திருச்சபைக்குத்தான் அது உடன்பாடில்லை. விவாகரத்தை எள்ளி நகையாடி வந்த ஒரு திருச்சபை, அதில் இருமுறை ஈடுபட்ட ஒரு மாதினை எப்படித் தனது தலைவியாக ஏற்றுக்கொள்ள முடியும் என்ற பிரச்சினை எழுந்தது. ஏனெனில், இராணியார் நாட்டுக்கு மட்டுமன்றித் திருச்சபைக்கும் தலைவர். இந்த இக்கட்டான நிலையில் திருச் சபை அரசரது விருப்பத்தை நிராகரித்ததில் தவறில்லை. திருச் சபையின் விருப்பத்துக்கு விரோதமாகப் போக பிரிட்டிஷ் அமைச்சர்களுக்கும் துணிவில்லை என்பதும் இந்நிகழ்ச்சியால் அறியப்படுகிறது. இங்ஙனம், பல மத, அரசியலமைப்புப் பிரச் சினைகளுக்கு விடைகாணும் வகையில் அரசரது முடிதுறப்பு நிகழ்ச்சி அமைந்தது என்பது ஈண்டு நன்கு கருத்திற் பதிக்கற் பாற்று ஆகும்.

நெவில் சேம்பர்லினின் மந்திரி சபை 1937-40

மாக்டனுல்டுக்குப் பின் பால்டுவின் மீண்டும் பிரதமரானுர். அவரது காலத்தே வெளிநாட்டு விவகாரங்களே இங்கிலாந்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. ஜெர்மனியும் இத்தாலியும் இச்சமயத்தில்தான் ஏகாதிபத்தியப் பாதையில் விரைந்து நடை போட ஆரம்பித்தன. இரண்டாண்டுகளில் பால்டுவின் பதவி துறந்தார். அவருக்குப்பின் நெவில் சேம்பர்லின் பிரதமரானுர். பிரதமரான வுடனேயே தொழிலாளர்கள் நலனைப் பெருக்கும் தொழிற்சாலைச் சட்டத்தை (Factory Act, 1937) ஏற்படுத்தினுர். வேலையின்மை மிகுந்திருந்த இடங்களில் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்தார். அவர் அமைதியின்பால் நாட்டங் கொண்டவர். ஹிட்லரோடு பேரம் பேசிப் போரை நிறுத்த முயன்ருர். மியூனிச் நகரில் அவருக்கும் ஹிட்லருக்கும் பேச்சுவார்த்தைகள் நடந்தன (1938 செப்டம்பர்). அதில் இரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. செக்கோஸ்லவேகியாவின் ஒரு பகுதியை அவர் ஜெர்மனிக்குக் கொடுத்துவிட இசைந்தார். அதன் மூலம் போர் நடைபெறுவதைத் தடுத்து விடலாமென எண்ணினுர். ஆனுல், 'ருசி கண்ட பூனை உறிக்கு உறி தாவும்' என்ற பழமொழிப்படி, ஹிட்லர் மேன்மேலும் வலுத்தாக்கலிலிறங்கியதால் போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது. மியூனிச் நகரிலிருந்து திரும்பிய சேம்பர்லின், 'கௌரவத்தோடு கூடிய சமாதானத்தை'த் (Peace with Honour) தான் பெற்று வந்ததாகப் பெருமை பாராட்டிக் கொண்டார். ஆனுல், விரைவிலேயே உலகப் போர் மூள இருப்பதை அவர் அறியாமற் போனுர். சேம்பர்லின் 'கடைப்பிடித்த, எதிரிக்கு விட்டுக் கொடுக்கும் கொள்கையைச் (Policy of Appeacement) சர்ச்சில் (Churchill) பலமாகக் கண்டித்தார். மியூனிச் ஒப்பந்தத்தால் இங்கிலாந்து தன் எதிரிகளின் கைகளில் படுதோல்வியடைந்து விட்டது (Total and Unmitigated Defeat) என்று அவர் குறை கூறினுர். அவர் கூற்று விரைவில் மெய்யாயிற்று. ஹிட்லரின் செய்கைகள் அவர் போரை எப்படியும் விரும்புபவர் என்பதையே நன்கு எடுத்துக் காட்டின. சேம்பர்லினும் ஓரளவு விழிப்புற்று, கட்டாய இராணுவச் சேவையை நாட்டில் புகுத்தினுர். இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கெல்லாம் கட்டாயப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் மூலம் விரைவிலேயே நாட்டுப்படை (Militia) ஒன்றை உருவாக்கினுர். எதிர்பார்த்தபடியே 1939 ஆம் ஆண்டு செப்டம்பரில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. போரைச் சமாளிக்கச் சேம்பர்லின் தன்னுலானவரை முயன்ருர். கட்டாய இராணுவச் சேவையை ஆண்களுக்கேயன்றி பெண்களுக்கும்

விஸ்தரித்தார். குழந்தைகளைப் பள்ளியினின்றும் நிறுத்தினர். விலைக் கட்டுப்பாடு முறைகளையும் (Price Control), உணவுப் பங்கீட்டு முறைகளையும் (Ration) புகுத்தினர். வரிகளை அதிகரித்தார். எனினும், போரில் ஆங்கிலேயருக்கு வெற்றிகள் கிட்டவில்லை. சேம்பர்லின் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை குறைந்தது. எனவே, 1940ஆம் ஆண்டு மே மாதத்தில் அவர் தம் பதவியை ராஜினாமாச் செய்தார். சர்ச்சில் பிரதமர் பதவி யேற்றார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டனின் உள்நாட்டு அரசியல் வரலாறு *(1939 - 1972)*

இரண்டாம் உலகப் பெரும்போர் நடைபெற்று வருகையில் இங்கிலாந்தை ஆண்ட சர்ச்சில் அரசாங்கமானது போரினைத் திறம்பட நடத்துவதில் பெரிதும் கண்ணுங் கருத்துமாயிருந்ததெனினும், உள்நாட்டுச் சீர்திருத்தங்களிலும் ஓரளவு அக்கறை காட்டிற்று. போரின் விளைவாகச் சேதமுற்ற இல்லங்களைச் செப்பனிடவும், புதிய வீடுகளைக் கட்டித் தரவும் தனிப்பட்ட ஒரு கிளை மந்திரி சபையானது நகர, நாட்டுப்புறத் திட்ட அமைச்சரவை (A Ministry of Town and Country Planning) என்னும் பெயரில் ஏற்படுத்தப்பட்டது. அதோடு அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப, சர் வில்லியம் பீவரிட்ஜ் என்பவர் 1942இல் ஒரு விரிவான சமுதாயப் பாதுகாப்புறுதித் திட்டத்தை (Scheme of Social Security) உருவாக்கி வெளியிட்டார். நாட்டு மக்கள் அனைவருக்கும் நோய், வேலையின்மை, முதுமை இவைகளால் ஏற்படக்கூடிய இன்னல்களினின்றும் பாதுகாப்பு அளிக்க அரசாங்கமே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென அத்திட்டம் கூறியது. அவ்வித விரிவான அரசாங்கக் காப்புறுதித் திட்டமே (State Insurance) பீவரிட்ஜ் திட்டம் என்று (Beveridge Plan) பெயர் பெற்றது. போர் முடிந்தவுடன் அத் திட்டத்தை நிறைவேற்றுவதாக அரசாங்கம் உறுதி கூறியது. அதே போன்று போர் முடிந்தபின் அமுலுக்குக் கொண்டு வருவதற்கென 1944இல் கல்விச் சட்டம் (Education Act) ஒன்றையும் அரசாங்கம் ஏற்படுத்தியது. ஒவ்வொரு குழந்தையும் பதினறு வயதுவரை முழு நேரக் கல்வியையும் அதன்பின் இரண்டாண்டுகளுக்குப் பகுதி நேரக் கல்வியையும் பெற வேண்டுமென அச்சட்டம் கூறியது. 1945ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவுற்றது. உடனே பொதுத் தேர்தலொன்றை நடத்த வேண்டுமெனச் சர்ச்சில் தீர்மானித்தார். 1935இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றமானது போரின் காரணமாகக் கலைக்கப்

படாமலேயே இருந்தது. கன்சர்வேடிவ் கட்சியினரும், தொழிற் கட்சியினரும் கூட்டாக அரசாங்கத்தை நடத்தி வந்தனர். 1945ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாராளுமன்றம் கலைக்கப் பட்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் தொழிற் கட்சியினர் அமோகமான வெற்றியைப் பெற்றனர். இருநூறு கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினரும், நானூறு தொழிற்கட்சி உறுப்பினரும் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். எனவே சர்ச்சில், தம் பதவியைத் துறந்தார். அட்லி என்னும் தொழிற்கட்சித் தலைவர் பிரதமரானார்.

தொழிற்கட்சி மந்திரி சபை (1945-51)

1945 ஆம் ஆண்டு முதல் 1951 வரை இங்கிலாந்தை ஆண்ட தொழிற்கட்சி அரசாங்கமானது, தனது கட்சிக் கொள்கைகளைக் கூடியவரை செயலாக்க முயன்றது. போர்க் காலத்தே அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட பல தொழில்களை மீண்டும் தனிப்பட்டோரிடம் ஒப்படைக்க அட்லி சர்க்கார் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக நாட்டின் இன்றி யமையாத பல தொழில்களை அது தேசியமயமாக்கியது. இரும்பு, எஃகுத் தொழில்கள், போக்குவரவுச் சாதனங்களான ரயில்வே, பாதைப் போக்குவரவு, துறைமுகங்கள், கால்வாய் கள் ஆகியவை, நிலக்கரி வாயு, மின்சாரம் பற்றிய தொழில் கள்; கடல் தந்தி (Cable), கம்பியில்லாத் தந்தி நிறுவனங்கள், இங்கிலாந்து பாங்கு (The Bank of England) முதலியன யாவும் தேசியமயமாக்கப்பட்டன. சமுதாயத்துறையில் பீவரிட்ஜ் திட் டத்தைப் பெருமளவிற்கு அட்லி சர்க்கார் அமுல் நடத்தினர். விரிவான தேசியக் காப்புறுதித் திட்டம் கொண்டு வரப்பட் டது. அதனால், வயதானவர்களும் விதவைகளும் உதவிப் பணம் பெற்றனர். நோயுற்றவர்களும் வேலையில்லாதவர்களும் அவரவர் தகுதிக்கேற்ப பணம் வழங்கப்பட்டனர். நோயாளி கள் யாவரும் உணவும் மருந்தும் இலவசமாகப் பெறுவதற் காக, 'தேசிய ஆரோக்கியப் பணி நிறுவனம்' (National Health Service) ஒன்றைச் சர்க்கார் ஏற்படுத்தியது. இதனால் மருத்துவ முறையே தேசியமயமாக்கப்பட்டது. ஏழை, பணக்காரர் யாவ ரும் அவசியமான மருந்துகளை உடனடியாகப் பெற இத் திட் டம் வழி செய்தது. இதை நிறைவேற்ற உதவிய மருத்துவர் களுக்கு அரசாங்கமே சம்பளம் வழங்கிற்று. பணத்துக்காக அன்றி சேவையுணர்ச்சியுடன் மருத்துவர்கள் ஊழியம் செய் வதற்கான பயிற்சியையும் இத் திட்டம் வழங்கிற்று. வறுமை யுற்றோர்க்கெல்லாம் நிவாரணம் அளிக்கத் தேசிய உதவிச்சட்டம் (National Assistance Act) ஒன்றும் இக்காலத்தே அமுலுக்கு

வந்தது. தொழிற்கட்சியின் கொள்கைக்கேற்ப அட்லி சர்க்கார் இந்தியா, பர்மா, சிலோன், பாகிஸ்தான் ஆகிய நாடுகட்குச் சுதந்திரம் வழங்கினர். இங்ஙனம் அவர்கள் பேரரசைக் காமன் வெல்த் அல்லது பொதுநலக் கூட்டுறவு நிறுவனமாக மாற்றினர்.

மீண்டும் கன்சர்வேடிவ்கள் (1951-1955)

தொழிற் கட்சியினர் பல நன்மைகளை நாட்டுக்குச் செய்தனர் என்றாலும், இங்கிலாந்தின் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை. பேரரசுக்குட் பட்டிருந்த பல நாடுகள் சுயேச்சை பெற்றுவிட்டதால், நாட்டின் பொருள் வருவாயில் பெரியதோர் துண்டு விழுந்தது. மற்றும் அத்தகைய சுதந்திர நாடுகள், அவைகள் பெற்ற சுயேச்சையை நிலைநாட்ட அவைகளுக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டிய கட்டாயமும் பிரிட்டனுக்கு ஏற்பட்டது. மக்கள் நலன்களைப் பேணும்வகையில் அட்லி சர்க்கார் கொணர்ந்த பல்வேறு திட்டங்கள் நாட்டு வருமானத்தின் பெரும்பகுதியை விழுங்கிக் கொண்டிருந்தது. விலைவாசிகள் விஷம்போல் ஏறலாயின. இதைக் கண்ட சர் ஸ்டிராஃபோர்டு கிரிப்ஸ் எனும் அமைச்சர் நாணயத்தின் மதிப்பைக் குறைத்தார். 1949 ஆம் ஆண்டில் பவுனின் மதிப்பு நான்கு டாலரிலிருந்து 2·80 டாலராகக் குறைக்கப்பட்டது. இருப்பினும், பொருளாதார நலிவு சீர்படவில்லை. ஏற்றுமதியில் ஏற்றம் ஏற்படவில்லை. எனவே, மக்கள் நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் ஒரு மாற்றம் தேவை என எண்ணலாயினர். எஃகுத் தொழிலைத் தேசியமயமாக்கியது பலருக்குப் பிடிக்கவில்லை. கன்சர் வேடிவ்கள் அதை வன்மையாகக் கண்டித்தனர். தாம் பதவிக்கு வந்தால் உடனடியாக அத் தொழிலைத் தனியார் துறைக்கு மாற்றப் போவதாக அவர்கள் மக்களுக்கு வாக்களித்தனர். இன்ன பல காரணங்களால் 1951ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினர் வெற்றி பெற்றனர். ஏனைய கட்சிகளைவிட 17 உறுப்பினர்களை அதிகமாகப் பெற்று, அவர்கள் ஆட்சி பீடத்திலமர்ந்தனர். மீண்டும் சர்ச்சில் பிரதமரானார்.

தொழிற் கட்சியினரால் தேசியமயமாக்கப்பட்ட தொழில்களில் பெரும்பாலானவற்றைச் சர்ச்சில் அப்படியே விட்டுவிட்டார். ஆனால், எஃகுத் தொழிலை மட்டும் மீண்டும் தனியார் துறைக்குக் கொண்டு வந்தார். தொலைக்காட்சித்துறையில் (Television) பிரிட்டிஷ் செய்தி ஒலிபரப்பு நிறுவனத்தின் (British Broadcasting Corporation) தனியுரிமையை அவர் உடைத்தெறிந்தார். அதற்காக அவர் வாணிகத் தொலைக்காட்சிச் சட்டம் (Commercial Television Act) ஒன்றைப் பாராளுமன்றத்தில்

நிறைவேற்றினார் (1954). பொருளாதாரத் துறையில் இருந்து வந்த பல தளைகளைத் தளர்த்தினார். உணவுப் பங்கீட்டு முறையை (Rationing) அவர் ஒழித்தார். எனினும், நாட்டின் வளம் வளரவில்லை. தொழிலில் மந்தம் ஏற்பட்டது. ஊதிய உயர்வு வேண்டியும், மேலும் பல சலுகைகளை வேண்டியும் 1955ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் பல வேலை நிறுத்தங்களில் ஈடுபடலாயினர்.

1952ஆம் ஆண்டு ஆறும் ஜார்ஜ் மன்னர் இறந்தார். உலகெங்குமிருந்த அவரது குடிமக்கள் பெரிதும் துயரெய்தினர். அவரது மகளான இரண்டாம் எலிஸபெத் இங்கிலாந்தின் அரசியானார். அவர், அறிவும் திருவும் ஒருங்கே அமைந்தவராய் விளங்கியதோடு, மக்களின் மதிப்பையும் அன்பையும் பெறக் கூடிய கம்பீரமும் நல்லியல்புகளும் உடையவராகவும் திகழ்ந்தார். 1955ஆம் ஆண்டில் உடல்நலக்குறைவு காரணமாகச் சர்ச்சில் ஓய்வு பெற்றார். அயல் நாட்டு அமைச்சராகப் பணியாற்றி வந்த சர் அந்தோணி ஈடன் (Sir Anthony Eden) என்பவரை இராணியார் பிரதமராக நியமித்தார். அந் நியமனம் சர்ச்சிலுக்கும் உடன்பாடாக இருந்தது. ஈடன் ஆட்சிக் காலத்தில்தான் எகிப்தியப் படையெடுப்பு நிகழ்ந்தது. எகிப்தும் இஸ்ரேலும் மோதிக் கொள்வதைத் தடுத்து நிறுத்தவும், அதன் மூலம் சர்வதேச நெருக்கடியைத் தவிர்க்கவும், பிரிட்டனின் மண்ணெண்ணெய் வியாபாரத்தைக் காக்கவும் என்று பிரிட்டிஷ் படைகள் 1956ஆம் ஆண்டில் சூயெஸ் கால்வாய்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. ஃபிரான்சும் தனது படைகளை அங்கு அனுப்பி வைத்தது. அந்நியத் துருப்புகள் உடனே எகிப்திலிருந்து வெளியேற வேண்டுமென நாஸர் என்னும் எகிப்தியத் தலைவர் அறிவித்தார். அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகள் பிரிட்டனின் செயலைப் பெரிதும் கண்டித்தன. எனவே, பிரிட்டிஷ் படைகள் எகிப்தினின்றும் வெளியேறிவிட்டன. தங்களது விருப்பப்படி நடக்குமாறு ஏனைய உலக நாடுகளைப் பலவந்தப்படுத்துமளவுக்குத் தங்களுக்குப் பலமோ செல்வாக்கோ இல்லை என்பதைக் கன்சர்வேடிவ் கட்சியினர் உணர்ந்தனர். இங்கிலையில் ஈடனின் உடல் நலம் குறைந்தது. எனவே, 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பதவி துறந்தார். அவருக்குப் பின் பட்லர் (R. A. Butler) என்னும் பெருந்தகைதான் பிரதமராவாரெனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், கன்சர்வேடிவ் கட்சியினர் ஹெரால்ட் மாக்மில்லன் (Harold Macmillan) என்பவரையே பெரிதும் ஆதரிப்பதாகத் தெரிந்ததால் இராணியார் அவரையே பிரதமராக நியமித்தார்.

1957ஆம் ஆண்டு முதல் 1964 வரை மாக்மில்லன் சர்க்கார் நாட்டை ஆண்டது. வளமிக்க சமுதாயத்தைப் படைக்க அது

பலவகையிலும் முயன்றது. 1957ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வாடகைச் சட்டத்தைப் (Rent Act) பலதிறப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களும் வரவேற்றனர். போர்க் காலத்தே விதிக்கப்பட்டிருந்த வாடகைக் கட்டுப்பாடுகள் பதினேரு மிலியன் வீடுகளினின்றும் அகற்றப்பட்டன. அதனுல் பலர் அதிக வாடகை செலுத்த நேர்ந்தது. எனவே, கூக்குரல்கள் ஆங்காங்கே கிளம்பின. எனினும், பொதுவாக எங்கும் திருப்தி நிலவியது. வீட்டுச் சொந்தக்காரர்கள் அதிக வாடகையைப் பெற்றதால் வீடுகளைச் செப்பனிட்டுக் குடியிருப்பவர்களின் வசதிகளைப் பெருக்கினர். கொலைக் குற்றச் சட்டம் (Homicide Act) ஒன்றை இவ் வரசாங்கம் நிறைவேற்றியது. அதன்படி ஐந்துவகைப் பெருங் கொலைக் குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட்டது. நாளடைவில் மரண தண்டனை முற்றிலும் அகற்றப்படுவதற்கு இச் சட்டம் வழி வகுத்தது. ஆண்களேயன்றிப் பெண்டிரும் பிரபுக்கள் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட இவ்வரசாங்கம் வழி செய்தது. மற்றும் பொது நன்மைக்கு விரோதமாகத் தனியுரிமையைப் (Monopoly) பயன்படுத்தும் தொழிலதிபர்களைத் தண்டிக்கும் உரிமையை அது ஒரு தனிப்பட்ட கட்டுப்பாட்டு நடைமுறைகள் நீதிமன்றத்துக்கு (Restrictive Practices Court) வழங்கியது. சில்லரை வியாபாரிகளின் நலன்களைப் பெருக்கும் ஒரு சட்டத்தை, அதாவது மறு விற்பனை விலை நிலைநாட்டுச் சட்டம் (Resale Prices Maintenance Act) ஒன்றை இச்சர்க்கார் ஏற்படுத்தியது. அதன்படி, பொருள் உற்பத்தியாளர்கள், அப் பொருள்களை ஒரு குறிப்பிட்ட விலைக்கே விற்கவேண்டுமெனச் சில்லரை வியாபாரிகளை வற்புறுத்தக் கூடாதெனத் தடுக்கப்பட்டனர். 1958ஆம் ஆண்டில் பொதுவாக நாட்டில் வாணிகம் முன்னேறிக் கொண்டுதானிருந்தது. ஆனுல், 1959ஆம் ஆண்டளவில் திடீரெனப் பொருளாதாரத் துறையில் ஒரு நலிவு தோன்றியது. ஏற்றுமதிகள் பெரிதும் குறைந்தன. உற்பத்திக் குறைவே அதற்குக் காரணமென அறிந்த மாக்மில்லன் மேலும் உற்பத்திப் பெருக்கம் கணிசமாக ஏற்படும் வரை கூலிகள், சம்பளங்கள் ஆகியவற்றை அதிகரிக்க வேண்டி எவ்விதப் பேச்சு வார்த்தைகளும் நடைபெறக் கூடாது என அறிவித்தார். கூலிகள், வருமானங்கள் ஆகியவற்றின் நிலைமையை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்காக தேசீயப் பொருளாதார வளர்ச்சிக் கழகம் (National Economic Development Council) ஒன்றை மாக்மில்லன் அமைத்தார். அதில் தொழிலதிபர்கள், தொழிற்சங்கப் பிரமுகர்கள், பொதுமக்கட் பிரதிநிதிகள் ஆகிய பலர் பங்கு கொண்டு ஒரு திட்டத்தை வகுத்தனர். இங்கிலையில் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே இருந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டே சென்றது. அயல்

நாடுகளிலிருந்து ஏராளமான பேர் நாட்டில் வந்து குடிபுகுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகமாகுமென்று பலர் கண்டனக் குரல்களை எழுப்பினர். அதற்கிணங்கக் காமன்வெல்த் குடியேறிகள் தடைச் சட்டம் (Commonwealth Immigrants Act) ஒன்றை அரசாங்கம் கொணர்ந்து நிறைவேற்றியது. ஏற்கெனவே ஏதாவதொரு வேலைக்கு இங்கிலாந்தில் உறுதியளிக்கப் பட்டவர்கள் தவிர, ஏனைய காமன்வெல்த் குடிமக்கள் எவரும் இங்கிலாந்துக்குள் குடிபுகுவதை அச் சட்டம் தடை செய்தது. அது பலருக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது. காமன்வெல்த் நாடுகளின் பகையை வளர்க்கவே மாக்மில்லன் பாடுபடுகிறார் எனத் தொழிற்கட்சிக்காரர்கள் குறைகூறலாயினர். மாக்மில்லன் எப்போதுமே ஐரோப்பிய நாடுகளின் உறவை விரும்பியவர். எனவே, ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரக் கூட்டுறவில், அதாவது ஐரோப்பிய பொதுமைச் சந்தையில் (Europian Common Market) இங்கிலாந்தையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்துவிட 1961ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மாக்மில்லன் அதற்குரிய விண்ணப்பத்தைச் செய்துகொண்டார். ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனின் கூட்டுறவை அவ்வளவாக விரும்பவில்லை. காமன்வெல்த் நாடுகளோடு பலவகையிலும் பிணிப்புண்டு கிடக்கும் பிரிட்டனை ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுத் திட்டத்தில் சேர்ப்பதால் நட்டமே ஒழிய, இலாபமொன்றுமில்லை எனப் பல ஐரோப்பியத் தலைவர்கள் கூறலாயினர். ஐரோப்பியப் பொதுமைச் சந்தையில் சேர்வது குறித்துப் பிரிட்டனிலேயும் பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. ஐரோப்பியர் போட்டி உலகத்தில் பங்கு கொள்வதால் மட்டுமே பிரிட்டனில் மண்டிக்கிடக்கும் பொருளாதாரச் சிக்கல்கள் தீரும் எனக் கன்சர்வேடிவ்கள் கருதினர். ஆனால், அங்ஙனம் செய்வது காமன்வெல்த் நாடுகளுக்குப் பிரிட்டன் கொடுத்துள்ள வாக்குறுதிகளுக்கு விரோதமெனவும், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் பொருளாதார நலன்களுக்குக் கேடு வராது என்ற உறுதி ஏற்பட்டாலன்றிப் பிரிட்டன் அக் கூட்டுறவில் சேரக் கூடாது எனவும் தொழிற் கட்சியினர் கூறலாயினர். இங்ஙனம் இரு கட்சிகளும் மோதிக்கொண்டிருந்த வேளையில், ஜெனரல் டிகால் (General Degaulle) எனும் ஃபிரெஞ்சு ஜனாதிபதி, ஐரோப்பியப் பொதுமைச் சந்தையில் பிரிட்டனுக்கு இடமில்லை என அறிவித்து விட்டார். இவ்வறிவிப்பு மாக்மில்லன் சர்க்காரின் நற்பெயருக்குப் பெரியதோர் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது.

அணு ஆயுதப் போட்டியில் பிரிட்டன் பங்குகொள்வதா கூடாதா என்ற சர்ச்சையிலும் கன்சர்வேடிவ்கள் தங்கள் எதிரி

களுக்குச் சரியான மாற்றம் தரத் தவறிவிட்டனர். 1957ஆம் ஆண்டில் பிரிட்டன் ஹைட்ரஜன் குண்டு ஒன்றை வெடித்தது. விண்வெளியில் குண்டுகளை எடுத்துச் செல்ல ராக்கெட்டுகள் எனும் (Rockets) விண்வெளி விமானங்களைச் செய்யும் முயற்சிகள் நடைபெற்றன. புளூ ஸ்டிரீக் (Blue Streak) எனும் விமானந்தாங்கியும் பின்னர் ஸ்கை போல்ட் (Skybolt) எனும் பொறியும் செய்யப்பட்டன. 1962இல் மாக்மில்லன் சர்க்கார் அவ்விரண்டையும் கைவிட்டுப் போலாரிஸ் (Polaris) எனும் ஆயுதத்தைக் கைக்கொள்ள முன்வந்தனர். அதன்மூலம் சுதந்திரமாகப் பிரிட்டன் தனது அணு ஆயுதங்களை வானவெளியில் அனுப்பும் முயற்சியைக் கைவிட்டது. இதைப் பலர் குறை கூறலாயினர். அணு ஆயுதங்களைச் செய்வதிலும், அவற்றை விண்வெளியில் அனுப்பும் சாதனங்களைச் செய்வதிலும் பிரிட்டன் எந்த நாட்டையும் சார்ந்திருக்கக் கூடாது என்றும், சொந்தமாக அவற்றைச் செய்து முடிக்க வேண்டும் என்றும் கன்சர்வேடிவ்கள் பலர் கூறினர். அணு குண்டுகளை ஆக்க நிறையப் பொருள் தேவைப்படுமாதலால் அவற்றைத் தானே உற்பத்தி செய்வதைவிடப் பிற நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதே சாலச் சிறந்ததெனத் தொழிற் கட்சியினர் கூறலாயினர். இப் பிரச்சினையில் தொழிற் கட்சிக்கே மக்கள் ஆதரவு பெருகியது.

இங்கிலையில் ஆளும் கட்சியின் மதிப்பை மேலும் குலைக்கக் கூடிய வேறொரு நிகழ்ச்சி ஒன்றும் நடந்தது. அதுவே புரோஃபியூமோ புரளி (Profumo Affair) எனப்படுவது. போர் அமைச்சராக இருந்த ஜான் புரோஃபியூமோ என்பார் கிறிஸ்டியன் கீலர் (Christian Keeler) எனும் நடத்தைகெட்ட நங்கையிடம் தொடர்பு கொண்டிருந்தார். அந் நங்கை ரஷ்ய ஒற்றர் படையைச் சேர்ந்த ஐவனேவ் (Ivanov) என்பவரோடும் தொடர்பு கொண்டிருந்தாள். எனவே, பிரிட்டிஷ் இராணுவ இரகசியங்களை அப் பொதுமகள் ரஷ்ய ஒற்றருக்கு வழங்கியிருக்கக்கூடும் என்ற ஐயப்பாடு நாட்டில் தோன்றிற்று. போர் அமைச்சரின் பொருந்தாக் காதல் உண்மைதானு என்று பாராளுமன்றத்தில் வினு எழுப்பப்பட்டபோது இல்லை என அமைச்சர் பதிலளித்தார். ஆனுல், அது உண்மை என்பது நாளடைவில் வெட்ட வெளிச்சமடைந்தது. எனவே, மாக்மில்லன் சர்க்காரின் செல்வாக்கு மடமடவெனச் சரியலாயிற்று. மாக்மில்லன் மனமுடைந்தார். அவர் உடல் நோய்வாய்ப்பட்டது. அவர் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென மருத்துவர்கள் கூறிவிட்டனர். எனவே, அவர் பதவியைக் கைவிட்டார். ஹோம் பிரபு அவரது வழித்தோன்றலாகக் கட்சியினரால் வரித்துக்கொள்ளப்பட்டார்.

ஹோம் பிரபு தனது பிரபுப் பட்டத்தைத் துறந்து, உப தேர்தல் ஒன்றில் நின்று பொதுமக்கள் சபையின் உறுப்பினராக ஆனார். சர் அலெக் டக்ளஸ் ஹோம் (Sir Alec Douglas Home) எனத் தமது பெயரை மாற்றி கொண்டார்.

தொழிற்கட்சித் தலைவர் ஹியூ கெய்ட்ஸ் கெல் (Hugh Gaitskell) என்பார் பிப்ரவரி 1963இல் திடீரென மாண்டுவிட்டார். அவருக்கும் பதிலாக ஹெரால்ட் வில்சன் (Herold Wilson) என்பவரைத் தம் தலைவராகத் தொழிற் கட்சியினர் தேர்ந்தெடுத்தனர். சாதாரணத் தொழிலாளியின் மகனான வில்சன் கட்சியின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதில் சமர்த்தராக விளங்கினார். விரைவிலேயே அவர் ஒன்றுபட்ட தொழிற் கட்சியை உருவாக்கினார். 1964ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தொழிற் கட்சியே வென்றது. ஆனால், அரசாங்கத்தைச் செவ்வனே அமைத்து நடத்துவதற்கான பெரும்பான்மையை அது பெறவில்லை. பொதுமக்கள் சபையில் ஏனைய கட்சியினரைவிட நான்கு இடங்களையே தொழிற் கட்சி அதிகமாகப் பெற்றிருந்தது (தொழிற் கட்சிக்கு 317 இடங்கள், கன்சர்வேடிவ்களுக்கு 303, தாராளக் கட்சிக்கு 9, சபாநாயகர் ஒன்று). இந்தச் சாதாரணப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு வில்சன் அமைச்சரவையை அமைத்து ஆட்சி நடத்தினார். பல நல்ல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரவில்லை. அவைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே சென்றன. கடன் பளு அதிகரித்துக்கொண்டே சென்றது. வில்சன் பிரச்சினைகளைச் சமாளிக்கத் தனது சர்க்காருக்கு நல்ல ஆதரவைப் பெற விரும்பினார். 1966இல் மீண்டும் ஒரு தேர்தல் நடைபெற அவர் ஏற்பாடு செய்தார். நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோற்றது. அக் கட்சியின் தலைவராயிருந்த ஹோம் என்பார் விலகிக்கொண்டு எட்வர்ட் ஹீத் (Edward Heath) என்பவர் தலைவரானார். அவரால் வில்சனைத் தோற்கடிக்க முடியவில்லை. பொதுமக்கள் சபையில் தொழிற் கட்சிக்கு ஏனைய கட்சிகளைவிட 97 இடங்கள் அதிகமாகக் கிடைத்தன. வில்சன், அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ரூஸ்வெல்ட் என்பார் பயன்படுத்திய தொலைக்காட்சி முறையைக் கையாண்டு, மக்களின் நல்லாதரவைப் பெற்றார். டெலிவிஷன் மூலம் மக்களோடு அடிக்கடி அளவளாவி அவர் தேசீயத் தலைவர் என்ற நிலையை எளிதில் அடைந்தார். எனினும், விரைவிலேயே அவரைத் தொல்லைகள் வந்து சூழ்ந்துகொண்டன. ஏற்றுமதிகள் குறைய ஆரம்பித்தன. உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டது. வேலை நிறுத்தங்கள் பரவலாக ஏற்பட்டன. கடற்படை ஊழியர்கள்

வேலை நிறுத்தம் செய்தனர். செப்பு உலோகத்தின் விலைவாசி உயர்ந்துகொண்டே சென்றது. இத்தகைய காரணங்களினாலும், இன்னும் இனம் தெரியாத பல காரணங்களினாலும் 1966ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இங்கிலாந்தில் ஒரு பெரிய பொருளா தார நெருக்கடி தோன்றிற்று. ஒருவிதப் பொருளாதாரப் பீதியால் பாதிக்கப்பட்ட மக்கள், பாங்குகளில் தாங்கள் போட்டு வைத் திருந்த பவுன்களை எல்லாம் திருப்பி வாங்க ஆரம்பித்தனர். நிலைமையைச் சமாளிக்க முடியாமல் பல பாங்குகள் மூடப்படும் நிலைமைக்கு வந்துவிட்டன. இந்நிலையில் மக்கள் மேலும் தங்கள் பணத்தைத் திருப்பிப் பெறும் வெறியிலீடுபடுவதைத் தடுக்க வேண்டிப் பிரதமர் வில்சன் ஸ்டர்லிங் நாணயத்தின் புழக்கத் தைச் சுருக்கப் பல வழிகளைக் கையாண்டார். மறைமுக வரி களைப் பத்து சதவிகிதம் உயர்த்தினர். உபரி வரியை (Surtax) இன்னும் பத்து சதவிகிதம் அதிகமாக்கினர். கட்டடங்களிலும், வேறு வகைகளிலும் முதலீடு செய்யப்படுவதைக் குறைத்தார். தவணை முறைகளில் (Hire Purchase) பொருள்கள் வாங்கப்படு வதைக் கூடியவரை தடை செய்தார். இத்தகைய முறைகளால் நாட்டின் செலவினங்களை அவர் தடை செய்தார். அதனால் நாட் டில் பணச்சுருக்கம் (Deflation) ஏற்பட்டது. ஆனால், அதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும், நாட்டில் அதிகரித் தது. பெரும் தொழில்களில் முதலீடு செய்வதற்கு மக்கள் தயங் கினர். எனவே, எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பெருந் தடை ஏற்பட்டது. நெருக்கடியைத் தவிர்க்க வில்சன் சர்க்கார் பலவகையிலும் பாடுபட்டனர். ஆதாரபூர்வமான புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே முக்கியமான முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றும், அம் முடிவுகளை நன்கு செயற்படுத்தத்தக்க வகையில் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பெற வேண்டுமெனவும், நவீனப் பொருளாதார வளர்ச்சி முறைகளைக் கையாள வேண்டுமெனவும், தொழிலாளர்கள் நன்கு பயிற்றுவிக் கப்பட்டு நாடெங்கும் தடங்கலின்றிப் பரவி உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி வகைகள் காணப்படவேண்டுமெனவும் அரசாங்கம் தீர்மானித்து, அதன் வழி நடந்து வருகிறது. ஆனால், பிரிட்டன் இனியும் பழம் பெருமை பாராட்டிக்கொண்டு, உலக நாடுகளின் பாங்குதாரியாகவும் (World's Banker) அமைதிக் காவலாளியாகவும் இருந்து வந்தால் நாட்டின் பொருளாதாரச் சீர்கேடு சீர்பெற வழியில்லை என்று பலரும் கருதினர்.

தொழிற் கட்சி அரசாங்கத்தின் சாதனைகள்

வில்சன் பிரதமர் பதவியை ஏற்றபோது அவர் முன் பல பிரச்சினைகள் மலைபோல் நின்றன. தளர்ந்து தள்ளாடிக்கொண்

டிருந்த தொழில்கள் என்னும் உடல்களினூடே புதிய அறிவியல் நுட்பங்கள் எனும் இரத்தத்தைப் பாய்ச்சி அவற்றை வீறுபெறச் செய்யவேண்டியது அவரது முதற் கடமையாயிருந்தது. அடுத்து, வளர்ந்துவரும் மக்கட் தொகையினருக்கு வாழ்வளிக்கும் கல்வி வளர்ச்சிக்கான அடிப்படையை அவர் அமைக்க வேண்டியிருந்தது. இதற்கெல்லாம் விரிவான திட்டமும் திறமையும் தேவையாயிருந்தன. 'ஆணிகள் நிறைந்த ஒரு படுக்கையை எனக்குத் தந்துவிட்டார்கள்' ('They have given me a bed of nails') என்று புதியதாக வந்த தொழிலமைச்சர் ரேமாண்ட் கண்டர் (Raymond Gunter) என்பார் ஒரு சமயம் அங்கலாய்த்தார். அவரது கூற்று அமைச்சரவை முழுவதுக்கும் பொருந்துமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இருப்பினும், கூடுமானவரை இவ்வரசாங்கம் மக்களுக்குப் பல துறைகளிலும் சேவைகளைச் செய்துள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது.

தொழிற்துறை

நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கி, அதன் மூலம் கடன்களைக் கழித்து நாடு நலமே வாழத் தொழிற் கட்சி அரசாங்கம் திட்டமிட்ட பொருளாதாரத்தை நாடியது. தேசியத் திட்டம் (National Planning) நாட்டுக்குத் தேவை என்பதோடுகூட பிரதேச வாரியான திட்டமும் இன்றியமையாதது என அது கருதியது. அதோடு வருவாய்க் கொள்கை (Income Policy) நன்கு வகுக்கப்பட வேண்டுமென்றும், நாணயத்தின் மதிப்பு உறுதி செய்யப்படவேண்டுமெனவும் அது கருதியது.

தேசியப் பொருளாதாரத் திட்டப்படி நாட்டின் உற்பத்தியானது ஆண்டுக்கு 3·8 சதவிகிதத்தில் ஐந்து ஆண்டுகளில் (1965 – 1970) பெருக்கப்படும். அதற்குரிய மன பரிபக்குவத்தை மக்களிடையே ஏற்படுத்தத் தொழிலக உற்பத்திக் கழகங்களும் (Factory Production Committees), பிரதேச ரீதியான மன்றங்களும் (Regional Councils) அமைக்கப்பட்டன. பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை வகுக்கவும், செயற்படுத்தவும் தனிப்பட்ட பொருளாதாரச் செயல்கள் துறை (Department of Economic Affairs) ஒன்றையும், அதற்கு அமைச்சர் (Minister for Economic Affairs) ஒருவரையும் வில்சன் 1966ஆம் ஆண்டில் உண்டாக்கினர். மைக்கேல் ஸ்டீவர்ட் (Michael Stewart) என்பாருக்கு அப் பதவி வழங்கப்பட்டது. அவர் தேசியப் பொருளாதார வளர்ச்சிக் கழகத்தின் (National Economic Development Council) தலைவராகவும் இருந்தார். எனவே, அக் கழகத்துக்கு அவர் ஒரு புதிய அதிகாரத்தை வழங்

கினர். அதுவரை வெறும் ஆலோசனை கூறுவதற்கு மட்டுமே உரிமை பெற்றிருந்த அக் கழகத்துக்கு நாட்டின் வரிக் கொள்கை (Taxation Policy) போன்ற முக்கிய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும் உரிமையையும் அவர் வழங்கினர். அதோடு தேசீயத் திட்டத்தைப் பரிசீலனை செய்து யோசனை வழங்கவும் அதற்கு அதிகாரம் வழங்கினர். அதன் யோசனைகளைச் செயற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காகக் காபினெட்டின் பொருளாதாரச் செயல்கள் துறை பாடுபட்டு வருகிறது.

நாட்டின் வருவாய், விலைவாசி இவற்றை ஆராய்ந்து, ஒரு பொது அறிக்கையை வெளியிடுவதற்காகத் தேசீய விலைவாசிகள் வருவாய்கள் வாரியம் (National Board for prices and Income) ஒன்று 1965 ஆம் ஆண்டில் வில்சன் சர்க்கார் அமைத்தது. உற்பத்திப் பெருக்கத்துக்கான வழிமுறைகளை அது ஆராய்ந்து வெளியிட்டது. தொழில் இயக்குநர்களும், தொழிற் சங்கங்களும், அரசாங்கமும் இணைந்து செயல்பட்டாலன்றி உற்பத்தி பெருகாது என அது அறிவித்தது. உற்பத்திப் பெருக்கத்துக் கேற்பவே தொழிலாளர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும், விலைவாசிகள் தாமாகவே ஏறிக்கொண்டு செல்வதை அரசாங்கம் தடுக்க வேண்டுமெனவும், கூலி நிர்ணயம் செய்வதில் தொழிலாளர்களின் நலன்கள் மட்டுமன்றிப் பொது மக்களின் நலன்களும் கவனிக்கப்பட வேண்டுமெனவும், அது பல பரிவுரைகளை (Recommendations) வழங்கியது. தேசீயத் திட்டத்தைச் செயற்படுத்த ஆங்காங்கே தேசீயப் பொருளாதார வளர்ச்சிக் குழுக்கள் (National Development Committees) அமைக்கப்பட்டுள்ளன. அரசாங்கம், தொழில் சொந்தக்காரர்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகள் இக் குழுக்களில் இடம் பெற்றனர். திட்டத்தைக் கருத்திற்கொண்டு, அக் குழுக்கள் தொழிலதிபர்களை ஊக்குவிப்பது, தொழிலாளர்களை மீண்டும் நன்கு பயிற்றுவிப்பது, ஏற்றுமதிகளை அதிகரிக்கக்கூடிய வழிகளைக் கூறுவது போன்ற பல வழிகளால் நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்க வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனல், நேரடியாக அரசாங்கம் அவைகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்த முன்வரவில்லை. மேற்சொல்லப்பட்ட முத்திறத்தாரும் பரஸ்பர ஒப்பத்தின் பேரில் குழுக்களை அமைத்தனரேயன்றி, அரசாங்கம் பலவந்தமாக அவைகளை அமைக்க முற்படவில்லை. எனினும், 'சிறிய நெட்டிகள்' (Little Neddies) என்ற இக் குழுக்கள் அரசாங்கத்துக்குப் பெரிதும் துணையாக இருக்கின்றன. உற்பத்தியாளர்களும், அரசாங்கத்தாரும் நெருங்கி உறவாடவும், ஒருவர்

கருத்தை இன்னொருவர் புரிந்து கொண்டு செயல்படவும், அரசாங்கத்தின் திட்டங்களும், ஆலோசனைகளும் நடைமுறைக்கு வரவும் இவை பெரிதும் துணைபுரிகின்றன. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கின்ற அளவுக்கு இவற்றின் முக்கியத்துவம் பெருகிவிட்டது. இவற்றோடு ஒத்துழைத்து, பொருளுற்பத்தியைப் பெருக்க, அரசாங்கத்தின் பொருளாதாரச் செயல்கள் துறையின் தொழிற் பிரிவொன்று, தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் நுட்பத்துறை அமைச்சும் இவற்றோடு ஒத்துழைக்கின்றது.

பொருளாதாரத் துறையில் இங்ஙனம் ஒரு புதிய மனப்போக்கைத் தொழிற்கட்சி அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் திட்டமிட்ட பொருளாதாரமும், தனியார் முதலாளித்துவமும் (Planning and Capitalism) ஒன்றுக்கொன்று முரண்படாது இணைந்து செயல்பட வழி வகுக்கப்பட்டுள்ளது. தொழில், வாணிகம் ஆகியவற்றில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்ற கொள்கை மலையேறிவிட்டது. புதிய தொழில்களிலும், வியாபாரத்திலும் ஈடுபடுவதற்கெனத் தொழில் மறு அமைப்புக் கார்ப்பரேஷன் (Industrial Reorganisation Corporation) என்ற ஒரு புரட்சிகரமான நிறுவனத்தை 1966ஆம் ஆண்டில் சர்க்கார் ஏற்படுத்தினர். புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், ஏற்கெனவே இருக்கின்ற தனியார் தொழில்களை வாங்கவும், நசித்துக் கொண்டுள்ள தொழில் நிலையங்களை எடுத்துச் சீர்படுத்தவும், பல தொழில்கள் ஒன்றுசேர்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவும் ஏராளமான அதிகாரங்கள் இந் நிறுவனத்துக்குத் தரப்பட்டுள்ளன. வெறும் லாபத்துக்கு மட்டுமன்றிப் பொது நன்மைக்காகவென நடத்தப்பட வேண்டிய சில தொழில்களை அரசாங்கம் மேற்கொள்ள இது துணை செய்கிறது.

தொழிலாளர்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்து அவர்களின் திறமையைப் பெருக்கப் பலவகையிலும் அரசாங்கம் முயற்சி செய்கிறது. தொழில் மறு பயிற்சி நிலையங்களை (Industrial Retraining Centres) ஆங்காங்கே அரசாங்கம் நிறுவியுள்ளது. அத்தகைய நிலையங்கள் சுமார் பத்தாயிரம் வரை அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட முதலாளிகள் பயிற்சி நிலையங்கள் அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் மானியம் வழங்குகிறது. அரைகுறைப் பயிற்சி நிலையங்களை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் பெற்றுள்ள தொழிலாளர்கள் அனைவரும் முழுப் பயிற்சி பெற இந் நிலையங்கள் துணை புரிகின்றன.

தொழில் சச்சரவுகளைத் தீர்க்க வேலை நிறுத்தம் செய்யும் முறை நாட்டுக்கு நன்மை பயப்பதொன்றன்று என்றும், அதற்காக ஒரு தொழிற்சங்க சச்சரவுகள் தீர்ப்பு நீதி மன்றம் (Tribunal on Trade Union Disputes) ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் ஆக்ஸ்ஃபோர்டு பேராசிரியர் ஆலன் ஃபிளாண்டர்ஸ் (Allan Flanders) என்பார் ஓர் யோசனையைக் கூறியுள்ளார். அதைத் தொழிற் கட்சியினர் ஆதரிக்கின்றனர்.

பொருளாதாரத் திட்டத்தைச் செயற்படுத்த நாடெங்கும் வட்டாரத் திட்ட அமைப்புகள் (Regional Planning Bodies) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கிலாந்து எட்டுப் பொருளாதார மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் திட்ட ஆலோசனை மன்றங்கள் (Planning Councils), திட்டக் குழுக்கள் (Planning Boards) முதலியவை ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஒரு மாவட்டம் அதிகமாக வளர்ந்திருக்க இன்னொன்று பிற்பட்டு நிற்கின்ற நிலை ஏற்படாமல் வட்டாரச் சமநிலை வளர்ச்சிக்குரிய (Balanced Development) ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுச் செயலாக்கப்படுகின்றன.

இங்ஙனம் பலவகைத் திட்டங்களைக் கைக்கொண்டொழுகி யுங்கூட நாட்டில் உற்பத்தி பெருகாமலும், ஏற்றுமதி அதிகமாகா மலும் ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளது, உண்மையில் வில்சன் சர்க் காரின் கெட்ட காலம் என்றே சொல்ல வேண்டியுள்ளது. உலக நாடுகள் பலவும் வேகமாக முன்னேறி வருவதாலும், பழையபடி பிரிட்டன் பெரு வாணிகம் செய்து பொருளீட்ட முடியாததாலும், மக்கள் நலப் பணிகளில் (Welfare activities) அளவுக்கு மீறி ஈடுபடுவதாலும், உலகப் பெரு நாடுகள் தங்கத்தை முடக்கி வைத்துக் கொள்வதாலும், உலகப் பாதுகாப்புக்காகப் பெருமளவு பிரிட்டன் செலவழிப்பதாலுமே பொருளாதார நெருக்கடி அங்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறுவர் சிலர்.

ஆனால், கூலி உயர்வுக்கேற்ப உற்பத்திப் பெருக்கமேற்படா ததே நலிவுக்கு மூல காரணம். உற்பத்திப் பெருக்கம் கணிசமான அளவுக்கு இல்லாதபோது, தொழிற் சங்கங்கள் சேர்ந்துகொண்டு கூலிகளையும் வருவாய்களையும் உயர்த்திக்கொண்டே செல்லுவ தால் நாட்டில் விலைவாசிகள் விஷம் போல் ஏறுகின்றன. எனவே இங்கிலாந்தின் பொருள்கள் வெளிநாடுகளில் வாங்கப்படுவதில்லை. ஏற்றுமதி குறைகிறது; இறக்குமதி பெருகுகிறது. வாணிகச் சம நிலை (Balance of Trade) குன்றுகிறது. இதைச் சமாளிக்க வேண்டுமானால், ஒன்று விலைவாசிகளைக் குறைக்க வேண்டும்; அல்லது பவுன் நாணயத்தின் மதிப்புக்கும், ஏனைய உலக நாணயங்

களின் மதிப்புக்கும் இருந்து வருகிற ஒப்பீட்டு மதிப்பைக் குறைக்க வேண்டும். கூலி, வருவாய் இவைகளை யாரும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை, அதாவது 1966ஆம் ஆண்டு முடிய ஏற்றவோ குறைக்கவோ கூடாது என அரசாங்கம் அறிவித்தது. அதுவே வருவாய் விலைவாசிகள் நிலைநிறுத்தம் (Prices and Income Stand Still) எனப்படும். 1967ஆம் ஆண்டின் முதற்பாதியிலும் இத் தடை மிகக் கடுமையாக அமுலாக்கப்பட்டது. இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் அதிகமாயிற்று. பாங்கு வீதங்கள் மாறிக்கொண்டே இருந்தன. 1967ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஏழு சதவிதத்திலிருந்து 6½ சதவிதமாகக் குறைக்கப்பட்ட பாங்கு வீதமானது (Bank Rate) நவம்பர் மாதத்தில் 8 சதவீதமாக உயர்ந்துவிட்டது. நிலைமையைச் சமாளிக்க வில்சன் பவுன் நாணயத்தின் சர்வதேச மதிப்பைக் குறைத்தார். 1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி இம் மதிப்புக் குறைவு வெளியிடப்பெற்றது. அமெரிக்க டாலருக்கும், பவுனுக்குமிருந்த மதிப்பு விகிதம் 14·3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அதாவது, பவுனின் மதிப்பு 2·80 டாலரிலிருந்து 2·40 டாலராகக் குறைந்தது. நாணயத்தின் மதிப்பைக் குறைக்க மாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்திருந்த தொழிற் கட்சியின் தலைவர்களே அதற்கு விரோதமாகப்போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சர்வதேச பாங்கியின் வற்புறுத்தலும், டி கால் என்ற ஃபிரெஞ்சு ஜனாதிபதியின் குறைகூறலும்தான் வில்சனின் கொள்கை மாற்றத்துக்கு முக்கிய காரணங்களாகும். இப்படிச் செய்தாவது ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயத்தில் (European Economic Community) பிரிட்டனைச் சேர்க்கலாமென வில்சன் நினைத்தார். ஆனால், டி கால் அதற்கு வழிவிடவில்லை. உள்நாட்டு உற்பத்தியிலும் வெளிநாட்டு ஏற்றுமதியிலும், நாணய மதிப்புக் குறைவால் எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் எதுவும் விளையவில்லை. தொழிற்கட்சி சர்க்காரின் பொருளாதாரத் திட்டங்கள் ஏட்டளவில் இனித்தனவென்றாலும், நடைமுறையில் மக்களிடை மனக்கசப்பையே விளைத்து வருகின்றன எனலாம்.

பொருளாதார நெருக்கடி பிரிட்டனில் ஏற்பட்டுள்ளது என்பர் பொருளாதார மேதைகள். அவர்களின் சொற்படி செலவினங்களைக் குறைத்து வருவாயைப் பெருக்க வில்சன் சர்க்கார் பெரிதும் பாடுபட்டு வருகிறது.

கல்வி

பிரிட்டனின் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகிறது. எல்லோருக்கும் கல்வி அறிவை வழங்கக்கூடிய கட்ட

டங்களைத் திடீரெனக் கட்ட இயலாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது. இந்த இக்கட்டான நிலையைச் சமாளிக்க வில்சன் ஒரு புதிய திட்டத்தைக் கொணர்ந்துள்ளார். ரேடியோ, டெலிவிஷன் இவை மூலமாக மக்கள் பயிற்றுவிக்கப்பட்டுப் பட்டங்களும் வழங்கப் பெறலாமென்பதே அந்தத் திட்டம். வானொலி, தொலைக் காட்சி மூலமாகப் பல பெரிய பேராசிரியர்களின் சொற்பொழிவுகளை நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள மாணவர்கள் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டு பின்னர் தேர்வுகளை எழுதிப் பட்டம் பெறலாம். தபால் மூலமாகவும் விரிவுரைகள் அனுப்பப்படும். அத்துடன் குறுகிய காலக் கருத்தரங்குகளும், நேர்முகப் பயிற்சிகளும் அளிக்கப்படும். நான்கு ஆண்டுகள் பயிற்சிக்குப் பின் பட்டம் வழங்கப்படும். இத்தகைய நிறுவனம் வளிநிலைப் பல்கலைக் கழகம் (University of the air) எனப்படும். குமாரி ஜென்னி லீ (Miss Jenniee Lee) என்னும் அமைச்சர் இந்தக் கழகத்தை நடத்துமாறு பணிக்கப்பட்டுள்ளார். குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்தப் பல ஆராய்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ப்ளௌடன் திட்டம் (Plowden) என்ற ஒரு திட்டப்படி முதல்நிலைக் கல்வி (Primary Education) குழந்தைகளின் பன்னிரண்டு வயது வரை நீடிக்க வேண்டுமென்பது வற்புறுத்தப்படுகிறது. பள்ளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கவும், சீர் திருத்தவும், பெரும் முதலீடு செய்யப்பட வேண்டுமெனவும், குழந்தைகள் கல்வி (Nursery Education) வளர வேண்டுமெனவும் அது கூறுகிறது. அதன் சிபாரிசுக்கேற்ப குழந்தைகளுக்குக் கசையடித் தண்டனை (Corporal Punishment) கொடுப்பதை அரசாங்கம் நிறுத்திவிட்டது. சமயக்கல்வி, பள்ளிகளில் புகட்டப்படுவதை மறுபரிசீலனை செய்யும்படியும் திட்டம் அறிவுறுத்துகிறது. செல்வந்தர்களும் உயர் வகுப்பாரும் தனிப்பட்ட பள்ளிகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பும் பழக்கத்தை நிறுத்திவிட்டு, எல்லாக் குழந்தைகளும் ஒரே பள்ளியில் கல்வி பெறும் வாய்ப்பை வழங்க வேண்டுமென்பது பிரிட்டிஷ் கல்வி நிபுணர்களின் கருத்தாகும். இத்தகைய அனைவரையுமுட்கொண்ட பள்ளிகளை (Comprehensive Schools) நிறுவ முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், அதற்கு எதிர்ப்புகள் நிறைய இருக்கின்றன.

தொழிற் கல்வி வளரவேண்டுமென்பதில் தொழிற்கட்சி சர்க்கார் பெரிதும் அக்கறை காட்டுகின்றனர். அத்தகைய கல்வியை வளர்க்க ஒரு தனிப்பட்ட அமைச்சவையை அது ஏற்படுத்தியுள்ளது. அதன் தலைவர் தொழில் நுண்ணியல் அமைச்சர் Minister of Technology) என அழைக்கப்படுகின்றார். பொருளா

தார வளர்ச்சிக்குரிய முறையில் கல்வித் திட்டங்களை வகுப்பதிலும், அதைச் செயற்படுத்தும் வழிவகைகளை வகுப்பதிலும் இவ்வமைச்சவை பெரிதும் ஊக்கம் காட்டுகிறது. அதற்கான பல செயற்குழுக்களை அது அமைத்துள்ளது. அணுசக்தி ஆராய்ச்சி, ஆகாய விமானப் போக்குவரத்து பற்றிய ஆய்வுகள் முதலியனவும் இவ்வமைச்சின் பார்வையிலேயே நடைபெற்று வருகின்றன. முன்பு, தனியே இருந்த விமானப் போக்குவரத்து அமைச்சவை, தற்போது தொழில் நுண்ணியல் அமைச்சவையோடு ஒன்றித்து விட்டது.

மக்கள் நலன் பேணும் செயல்கள் (Welfare activities)

மக்கள் நலன்களைப் பலவாற்ருனும் பெருக்குவதே தொழிற்கட்சி சர்க்காரின் குறிக்கோளாகத் தொடக்கத்திலிருந்தே இருந்து வருகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமைக்கப்பட்ட மக்கள் நல அரசு (Welfare State) தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. சமுதாயக் காப்பு முறைகள் (Social Security Measures) மென்மேலும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. 1964ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேசீயக் காப்புறுதிச் சட்டம் (National Insurance Act) தொழில் செய்யுங்கால், 1948ஆம் ஆண்டுக்குப் பின் ஊனமடைந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்பெற்று வந்த உதவிப் பணத்தை அதிகமாக்கியது. சந்தா செலுத்தும் முறையில் பல நல்ல மாற்றங்களை அது ஏற்படுத்தியது. சந்தாவினுல் விளையும் நன்மைகளையும் அது பெருக்கியது. 1966இல் அச் சட்டம் மேலும் திருத்தப்பட்டது. அதன்படி தொழிலாளர்களில் வேலையின்றி வாடுவோருக்கும், நோயால் பீடிக்கப்பட்டோருக்கும், கணவனை இழந்து வாடும் விதவைகளுக்கும் அளிக்கப் பெற்றுவந்த உதவிப் பணங்களின் தொகை, சந்தா செலுத்துவோரின் வருவாய்க்கேற்ப உயர்த்தப்பட்டது. தேசீய ஆரோக்கியப் பணி (National Health Service) நல்ல முறையில் நடைபெற்று வந்தது. ஏழை எளியவர்கள் இலவச சிகிச்சை பெற அது உதவி செய்தது. ஆனுல், அதில் பணியாற்றிய மருத்துவர்கள் தாங்கள் அளவுக்கு மீறி வேலை வாங்கப்படுவதாகவும் தங்களுக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும் குறை கூறிக் கொண்டிருந்தனர். 1965ஆம் ஆண்டில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அச்சுறுத்தினர். அதன் பின், அவர்களுடைய குறைகள் பலவற்றைப் போக்கும் வகையில் அரசாங்கம் ஒரு சாசனத்தை (Doctors Charter) வெளியிட்டது. மருத்துவர்களின் ஊதியம் ஆண்டொன்றுக்கு 3,,000 பவுன்களாக உயர்த்தப்பட்டது. அவர்கள் தங்களுடைய மருத்துவச் சாதனங்களை வாங்குவதற்குக் கடன் கொடுக்க 10 மிலியன் பவுன்கள்

கொண்ட ஒரு சேம நிதியை அரசாங்கம் ஏற்படுத்தியது. இத்தகைய மருத்துவ வசதிகளை எல்லோருக்கும் பொதுவாக வழங்கக் கூடாதெனவும், பண வசதியுள்ளவர்கள் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் பலர் கூறுகின்றனர். இதையொட்டி ஒருசில சேவைகளுக்குத் தற்போது வருவாயுள்ளவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. எனினும், பெரும்பான்மையோர் இலவச மருத்துவ வசதியே பெற்று வருகின்றனர். குடும்ப உதவிப் பணத்தையும் (Family Allowances), ஓய்வுக்கால ஊதியப் பணத்தையும் (Pensions), விதவைகள் உதவிப் பணத்தையும் வில்சன் சர்க்கார் உயர்த்தியுள்ளது. 1968ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய இரண்டாவது குழந்தைக்கும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் 7 ஷில்லிங்குகள் அதிகமாக உதவிப் பணம் பெறுகிறான். குழந்தைகளுக்கு மதிய உணவும் பாலும் வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு தொகையை அளிக்கிறது. மீதியைத் தொழிலாளர்கள் தருகின்றனர். அதை ஆறிலிருந்து எட்டுப் பென்சாக அரசாங்கத்தினர் உயர்த்தியுள்ளனர். இத்தகைய உதவிகள் எல்லாம் உண்மையாகவே வேண்டியிருப்பவர்களுக்கு மட்டுமே இலவசமாக வழங்கப்பட வேண்டும்; ஏனையோரிடம் கட்டணம் வசூலிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் சிறிது சிறிதாகக் கடைப்பிடிக்கிறது. இதை எதிர்த்த சமுதாயக் காப்பு அமைச்சர் (Social Security Minister) மிஸ் மார்கிரெட் ஹெர்பிஸன் 1967ஆம் ஆண்டு தம் பதவியை ராஜினாமாச் செய்தார். ஜூடித் ஹார்ட் (Judith Hartt) எனும் அம்மையார் அப் பதவியை ஏற்றார்.

நாட்டின் பொருள் உற்பத்திக்கேற்பவே மக்கட் தொகையும் இருக்க வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கையாகும். எனவே, மக்கட் தொகையைக் குறைக்கக் குடும்பத் திட்ட முறையை (Family Planning) அரசாங்கம் வற்புறுத்துகிறது. மருத்துவ மனைகள் அத் திட்டத்துக்குப் பெரிதும் உதவுகின்றன. கருச்சிதைவு செய்து கொள்வது (Abortion) இப்போது சட்டத்துக்குட்பட்ட செய்கையாகவே கருதப்படுகிறது. 1967ஆம் ஆண்டில் கருச்சிதைவு மசோதா (Termination of pregnancy Bill) இங்கிலாந்தில் சட்டமாகியது.

வீட்டு முதலாளிகள் தங்களது மனைகளில் குடியிருப்போரைப் பிரியம் போல் வெளியேற்றித் துன்புறுத்துவதைத் தடுக்கவும் சட்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது (Protection from Eviction Act—1964). அதே போன்று வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்களது வீடுகளை வாடகை செலுத்துவோரிடமிருந்துச் சொந்த உபயோ

கத்துக்காக மீட்டுப் பெறவும், ஒழுங்காக வாடகைகளை வசூலிக்கவும், வாடகை செலுத்தாதவர்களைச் சட்டப்படி வெளியேற்றவும் 1965ஆம் ஆண்டில் வாடகைச் சட்டம் (Rent Act) எனும் ஒரு சட்டம் கொணரப்பட்டது. பொது நன்மைக்கான காரியங்களுக்காக நிலங்களை வாங்கிப் போட்டு வைக்க உயர் ஆணைக் குழு ஒன்று 1967ஆம் ஆண்டுச் சட்டமொன்றால் (Land Commission Act) அமைக்கப்பட்டது. இன்றியமையாப் பொதுக் காரியங்களுக்கும் திட்டங்களுக்கும் தேவைப்படும் நிலங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதே அக் குழுவின் நோக்கமும் பணியுமாகும். சூழ்நிலைகளின் காரணமாக விலை உயர்வு பெறுகின்ற நிலங்கள் மீது 50 சதவிகிதம் வரை அரசாங்கம் வரி வசூலிக்கவும் மேற்படிச் சட்டம் வழிவகுக்கிறது.

எத்தகைய குற்றம் செய்யினும் ஒரு மனிதன் உயிரை வாங்குதல் முறையன்று என்ற கொள்கையினடிப்படையில், மரண தண்டனையை அரசாங்கம் ஒழித்தது. 1967ஆம் ஆண்டில் ஏற்பட்ட மரண தண்டனை ஒழிப்புச் சட்டம் (Abolition of Death Penalty Act) கொலைக் குற்றஞ் செய்தவர்களுக்குங்கூட மரண தண்டனை விதிப்பதைத் தடை செய்தது. அதற்குப் பதிலாகக் குற்றவாளியைச் சீர்திருத்தும் வகையில் பல தண்டனைகளை விதிக்க அது ஏற்பாடு செய்தது.

மேலும் கருச்சிதைப்பை அனுமதிக்கின்ற கருச்சிதைப்புச் சட்டம் (Abortion Act) ஒன்றும், 1967ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1969ஆம் ஆண்டில் விவாக ரத்து சீர்திருத்தச் சட்டம் (Divorce Reforms Act) கொண்டுவரப்பட்டது. எதற்கெடுத்தாலும் விவாகரத்து செய்கின்ற புன்மையை மாற்றி அதைக் கூடியவரை தடுப்பதற்கு அச் சட்டம் வழி செய்தது. காமவெறியின் காரணமாக ஏற்படும் குற்றங்களைத் தடுக்கும் சட்டமொன்றும் 1967இல் (Sexual offences Act, 1967) பாராளுமன்றத்தில் நிறைவேறியது. 1969இல் ஏற்பட்ட சிறுவர்கள், வாலிபர்கள் சட்டம் (The Children and Young Persons Act) இளங் குற்றவாளிகளுக்கு ஒரு சில சலுகைகளை வழங்கியது. குற்றவாளிகள் என்று கருதப்படக்கூடிய குழந்தைகளின் வயது குறைந்தது பன்னிரண்டாகவேனும் இருக்கவேண்டுமென இச் சட்டம் கூறியது. (இதற்குமுன் இளங்குற்றவாளிகளின் குறைந்தபட்ச வயது பத்து). தனிப்பட்டவர்களால் குழந்தைகள் குற்றஞ் சாட்டப்படுவது இதனால் தடுக்கப்பட்டது. அரசாங்க அதிகாரிகளும், நீதி மன்றங்களும் மட்டுமே, இளைஞர்களைக் குற்றவாளிகளாகத் தாக்கல் செய்யவும் தண்டிக்கவும் உரிமை பெற்றனர். மற்றும் மனநிலை சரியில்லாதவர்களும், பிணியால் பீடிக்கப்பட்டவர்களும்

குற்றவாளிகள் எனக் கருதப்படலாகாதென்றும், இளங்குற்ற வாளிகளைப் பாதுகாத்துப் பயிற்சி யளிக்கத் தனிப்பட்ட சமுதாய இல்லங்கள் (Community Homes) அமைக்கப்படவேண்டுமெனவும் இச் சட்டம் கூறுகிறது. இச் சட்டத்தின் பல ஷரத்துக்கள் படிப்படியாக அந்தந்த வட்டாரத்து நிலைமைகளுக் கேற்ப அமுலாக்கப்பட்டு வருகின்றன.

தேர்தலில் வாக்களிப்பதற்குரிய குறைந்த பட்ச வயதை இருபத்தொன்றிலிருந்து பதினெட்டாகக் குறைக்கும் சட்டமொன்றும் தொழிற் கட்சி அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. இது உண்மையிலேயே புரட்சிகரமானதொரு சீர்திருத்தமாகும். இச் சட்டப்படிக் கல்லூரியில் படித்துவரும் மாணவ மாணவியரும் கூட வாக்குகளை அளிக்கும் உரிமையைப் பெற்றனர். இதனுல் மாணவர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது எனப் பிற நாடுகளில் பேசப்படுவது போல பிரிட்டனில் பேசுவதற்கே வழியில்லாமற் போய்விட்டது. 1968ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட நாட்டுப்புறச் சட்டம் (Countryside Act) நாட்டுப்புற உயர் ஆணைக் குழுக்களின் (Countryside Commission) செயல்களை விரிவாக்கியதோடு, கிராம மக்கள் அதிக ஓய்வு காலத்தைப் பெறவும், ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்குகளில் திளைத்து இன்பமடையவும் வழி செய்தது. தல ஆட்சி அதிகாரிகள் கிராம மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றனர். அரசாங்க அலுவலகங்களிலும், தனிப்பட்ட நிறுவன அலுவலகங்களிலும், வேலை பெறுவதில் இனம், நிறம் முதலிய காரணங்களால் எத்தகைய தடையும் பாகுபாடும் இருக்கலாகாதென்றும், அவ்விதம் ஏதேனும் பாகுபாடு காண்பிக்கப்பட்டால், அதற்காளானவர்கள் இனத் தொடர்புக்குழு (Race Relations Board) விடமோ அல்லது உள்ளூர் சமாதானக் குழு (Local Conciliation Council) விடமோ முறையிட்டு நீதி பெறலாமென்றும் இச் சட்டம் அறிவிக்கின்றது. 1968ஆம் ஆண்டில் ஏற்பட்ட போக்குவரத்துச் சட்டமானது (Transport Act) மோட்டார், இரயில் போக்கு வரவு சாதனங்கள் போட்டியின்றி இணைந்து செயல்படவும், தரை மூலமாகப் பயணம் செய்வதிலுள்ள குறைகள் களையப்படவும் வழிவகுத்தது. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய பிரதேசங்களில் மட்டுமே புதிய தொழிலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனத் தொழிற் கட்சி அரசு வற்புறுத்தியது. அத்தகைய இடங்களில் புதிய தொழில்கள் ஏற்படுத்துபவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்வதாக வாக்களித்தது. இதன் மூலம் ஒருசில இடங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாயிருக்கின்ற குறையைப் போக்க

அரசாங்கம் முயற்சி செய்தது. கார்டினர் பிரபுவின் தூண்டுதலின்பேரில் ஏற்பட்ட சட்ட உயர் ஆணைக் குழு (Law Commission) வின் பரிந்துரைகளுக் கேற்ப புதிய சட்டங்கள் சில நீதித் துறையில் ஏற்பட்டன.

இங்ஙனம் பல சமூக நலத் திட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியது. இத்தகைய திட்டங்களால்தான் நாட்டில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுகிறது என்பது சிலரது வாதமாகும். போட்டி மனப்பான்மையும், எதிர்காலத்தைப் பற்றிய பயமும் இல்லாமற் செய்வதன் மூலம் மக்களின் திறமை குறைகிறதென்றும், சோம்பேறித்தனமும் உல்லாச வாழ்க்கையில் விருப்பமும் ஏற்படுகிறதென்றும், அதனால் பொதுவாக நாட்டின் உற்பத்தித் திறன் குறைகிறதென்றும் ஒருசிலர் கூறுவதிலும் ஓரளவு உண்மை இருப்பதாகவே தெரிகிறது. எனினும், மக்கள் மாக்களாக அன்றி மக்களாக வாழ்ந்து இன்புற இத் திட்டங்கள் துணைபுரிகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

தொழிற்கட்சி அரசின் பல்வேறு திட்டமிட்ட செயல்களால் நாட்டின் பொருளாதார நிலையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. 1970ஆம் ஆண்டுவரை அயல் நாடுகளுக்குப் பிரிட்டன் செலுத்த வேண்டிய ரொக்கத் தொகையில் பற்றுக் குறையான (Deficit) நிலையே காணப்பட்டது. ஆனால் 1970ஆம் ஆண்டில் அந்நிலைமாறி அயல் நாட்டுச் செலுத்து நிலையில் (Balance of Payments) உபரி நிலை (Surplus) ஏற்பட்டது. இதையெல்லாம் கண்ட வில்சன் தமது சர்க்காருக்கு மக்களிடையே நல்ல செல்வாக்கு இருக்குமென நம்பினார். தமக்குச் சாதகமான சூழ்நிலை இருக்கும்போதே பொதுத்தேர்தலை நடத்திவிட வேண்டுமென எண்ணி, அவர் ஜூன் மாதம் 18ஆந் தேதியில் நாடெங்கும் தேர்தல் நடைபெறுமென அறிவித்தார். மக்களுடைய நலனுக்காகப் பாடுபட்டுவரும் தொழிற்கட்சி சர்க்காருக்கு மற்றுமொரு வாய்ப்பை அளிக்கும்படி வில்சன் தமது தேர்தல் அறிக்கையில் கேட்டுக் கொண்டார். கன்சர்வேடிவ் கட்சியினர், தங்களது தேர்தல் அறிக்கையில், மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வருமானவரி, கலால்வரி போன்ற வரிப்பளுவைக் குறைப்பதும், பணவீக்கத்தைப் (Inflation) போக்குவதும், பொருளுற்பத்தியிலீடுபட்டுள்ள முதலாளிகளுக்குப் போதிய ஊக்கமும் சுயேச்சையுமளிப்பதும், தேவையற்ற வேலைநிறுத்தங்களைத் தடுத்து நிறுத்துவதும், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவதும், அந்நியர்கள் ஏராளமாக வந்து இங்கிலாந்தில் குடிபுகுவதைத் தடுப்பதுமே தங்களது குறிக்கோள்கள் என அறிவித்தனர். ஆங்கிலேயர்கள்

வில்சன் சர்க்காரது கொள்கைகளிலும் நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை இழந்து விட்டனர் என்பதைத் தேர்தலின்போது காட்டிவிட்டனர். 1970ஆம் ஆண்டு ஜூன் 18-ந் தேதியன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது. பொது மக்கள் சபையில் 330 இடங்களை அவர்கள் கைப்பற்றினர். தொழிற் கட்சிக்கு 287 இடங்கள் கிடைத்தன. தாராளக் கட்சியினர் ஆறு இடங்களையும், ஏனைய கட்சியினர் ஏழு இடங்களையும் பெற்றனர். தேர்தல் முடியும் வரை தொழிற் கட்சியினர் தாம் தோற்போம் என்று கனவிலும் கருதவில்லை. எனவே தேர்தல் விளைவு அவர்களை வியப்புக் கடலில் ஆழ்த்தியது. அறிஞர்களுக்கு அது புரிந்துகொள்ள முடியாத புதிராகக் காட்சியளித்தது. தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட, வாணிக நிலை பற்றிய பாதகமான சில தகவல்களே சர்க்காரின் தோல்விக்குக் காரணமாயிருக்கலாமெனப் பொதுவாக நம்பப்படுகிறது. எப்படியோ, வெற்றி கன்சர்வேடிவ் கட்சிக்குக் கிடைத்து விட்டது. ஹீத் என்பார் பிரதமராக நியமிக்கப்பட்டார். ஜூன் 19-ந் தேதியில் ஹீத் பிரதமரின் இருப்பிடமான, டௌனிங் தெரு 10ம் எண் இல்லத்தின் வாயிற்படியில் நின்று கொண்டு புன்னகை பூத்தவாறு பின்வருமாறு அறிவித்தார். "ஆட்சி செய்வதென்பது மக்களுக்குச் சேவை செய்வதேயாகும். இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சேவைசெய்ய இதோ இவ்வரசாங்கம் காத்து நிற்கிறது. எங்களுடைய குறிக்கோள் ஒற்றுமையேயன்றிப் பிரிவினையல்ல. வேற்றுமைகளைச் சமாதானம் செய்து ஒன்றுபட்ட ஒரு தேசிய சமுதாயத்தைப் படைப்பதே எங்களது குறிக்கோளாகும்".

கன்சர்வேடிவ் அரசாங்கத்தின் சாதனைகள்

இன்றைய பிரிட்டிஷ் ஆட்சி பீடத்திலமர்ந்துள்ள கன்சர்வேடிவ் சர்க்கார் எந்தனையோ இடையூறுகளுக்கிடையேயும், தனது தேர்தல் வாக்குறுதிகளை ஓரளவு நடைமுறையில் செயலாக்கப் பாடுபட்டு வருகிறது. 1970ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், கருவூலத் தலைவர் (Chancellor of Exchequer) வெளியிட்ட பட்ஜெட்டில் அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய விரிவான தகவல்கள் காணப்பட்டன. அதன்படி, அரசாங்கமானது தனியார் துறையில் தலையிடுவதைக் கூடிய வரை நிறுத்திக் கொள்ளும். அரசாங்கத்தால் மட்டுமே செய்யக் கூடிய காரியங்களில் மட்டுமே, அரசு தலையிடும். ஏனையவற்றில் மக்கள் சுயேச்சையாக ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்கலாம்.

அதில் வரும் லாபத்தை அரசாங்கம் பறித்துக் கொள்ளாது. வரிகள் குறைக்கப்படும். சேமிப்பு மக்களிடம் அதிகப்பட வேண்டுமென்பதே அரசின் குறிக்கோள். சமுதாய நலன் கருதிய செயல்களில் அரசாங்கம் அளவுக்கு மீறி ஈடுபடாது. பள்ளிகள், மருத்துவமனைகள் தவிர ஏனைய பொதுச் சேவைகளில் செய்யப் பட்டு வரும் செலவுகள் குறைக்கப்படும். இராணுவத்துக்காகச் செலவிடப்படும் தொகை கணிசமாகக் குறைக்கப்படும். தொழில் மறு அமைப்பு நிறுவனம் (Industrial Reorganisation Corporation) கலைக்கப்படும். உணவுச் சாலைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை நிறுத்தப்படும். புதிய தொழில்களுககும், சுற்றுலாப் பணிகளுக்கும் உதவிசெய்ய நிதி அதிகமாக ஒதுக்கப்படும். ஆராய்ச்சி நிறுவனங்களுக்காகச் செய்யப்படும் செலவுகள் குறைக்கப்படும். இறக்குமதி வரிகள் மூலமாக வேளாண்மை வளர அரசு பாடுபடும். துறைமுகங்களைத் தேசிய மயமாக்கும் முயற்சியை அரசு கைவிடும். தேசிய மயமாக்கப்பட்ட தொழில் களைப் பரிசீலனை செய்து அவற்றில் ஏற்பட்டுவரும் இழப்பைப் போக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். ஆரோக்கியப் பணி களில் (Health Services) இன்றியமையாதனவற்றைத் தவிர மற்றவைகளில் யாவற்றிலும் செலவினங்கள் தவிர்க்கப்படும். ஆனால் மருத்துவமனைகளுக்கும், கைகால் முடமாகியவர்களை ஆதரிக்கும் நிலையங்களுக்கும் உதவித் தொகை அதிகரிக்கப்படும். பெற்றோர்கள் தங்களுடைய மக்களுக்குப் பள்ளிகளில் அளிக்கப் படும் மதிய உணவுக்காகச் செலுத்திவரும் கட்டணத் தொகை உயர்த்தப்படும். ஏழு வயதுக்கு மேற்பட்ட பள்ளிக் குழந்தை களுக்கு இலவசமாகப் பால் உணவு வழங்கப்பட மாட்டாது. பல் சிகிச்சைக்கு வசூலிக்கப்படும் கட்டணம் உயர்த்தப்படும். தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் நோய் உதவித் தொகை யானது (Sickness benefits), அன்னார் நோய்வாய்ப்பட்ட முதல் மூன்று நாட்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது. ஏழை எளிய குடும் பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை வாரத்துக்கு மூன்று பவுன்கள் வரை உயர்த்தப்படும். பாதைகள், போக்குவரவு சாதனங்கள் இவைகளுக்காகச் செய்யப்பட்டு வரும் செலவுகள் குறைக்கப்படும். வருமானவரி, தொழில் நிறுவனவரி இவைகள் ஓரளவு குறைக்கப்படும். அமிதவரியால் உற்பத்திப் பெருக்கம் குறைந்து விடாதபடி அரசு பார்த்துக் கொள்ளும்.

மேற்கண்ட பட்ஜெட் உரையை தொழிற் கட்சியினர் பெரிதும் குறை கூறினர். சமுதாயத்தில் ஒரு சிலருக்கு மிக அநீதி செய்வ தாக அமைந்துள்ளது எனவும், பணவீக்கம் அதிகமாகுமென்றும், விலைவாசிகள் உயருமென்றும் அவர்கள் கூறினர். எனினும்

விடாமுயற்சியோடு ஹீத் சர்க்கார் தனது குறிக்கோள்களை அடையப் பாடுபட்டு வருகிறது. குடும்ப வருவாய் உதவித் தொகை மசோதா (Family Income Supplement Bill) ஒன்றைச் சட்டமாக்கியதன் மூலம், மிக ஏழ்மையான நிலையிலுள்ள குடும்பங்கள் ஆண்டுக்கு 150 பவுன்கள் வரையில் உதவித் தொகை பெற இவ்வரசு வழி செய்துள்ளது. முதியோர் உதவித் தொகை வாரத்துக்கு ஐந்து பவுனிலிருந்து ஆறாக அதிகரிக்கப் பட்டுள்ளது. தொழில் நிறுவனங்கள் மீது போடப்பட்டுள்ள வரி 45 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. வருமான வரிக்கென்று கணிக்கப்படும்போது, கணவன், மனைவி ஆகியோரின் வருமானங்கள் தனித்தனியாகவே கருதப்பட வேண்டுமென ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மொத்த வருமான வரி 41·25 சதவீதத்திலிருந்து 38·75 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 65 ஆண்டுக்கு மேற்பட்ட வயதினருக்கு வருமான வரி விலக்கு மிகக் கணிசமான அளவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. உபக் குத்தகையாளர்களுக்கு (Sub Contractors) அளிக்கப் பெற்றிருந்த வரி விலக்குச் சலுகை நீக்கப்பட்டு அவர்கள் மீதும் வருமான வரி போடப்பட்டுள்ளது. கலால் வரி (Excise Duties) களும், வேறு பல வரிகளும் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன. இத்தகைய வரிக் குறைப்புகளால் மக்களின் சேமிப்பு சக்தி அதிகமாகும் என்றும், நாட்டின் மொத்த முதலீடும் அதன் மூலம் பொருளுற்பத்தியும் பெருகுமென்றும், கருவூலத் தலைவர் பார்பர் (Barbar) கூறுகின்றார். தனியார் துறைக்குப் பல வகைகளில் ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. தனியார் கட்டியுள்ள வீடுகளில் அமுலாக்கப்பட்டு வந்த வாடகைக் கட்டுப்பாட்டு முறை (Rent Control System) அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக நியாய வாடகை முறை (Fair Rent System) கொண்டு வரப்பட்டுள்ளது. தனிப்பட்டோர் இதனால் சமயத்துக்கேற்றபடி அதிக வாடகையை வசூலித்துக் கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. அரசாங்கக் குடியிருப்புகளில் வசிப்போருக்கு வாடகைச் சலுகையைச் சர்க்கார் வழங்கியுள்ளது.

கன்சர்வேடிவ் சர்க்கார் கொண்டுவந்துள்ள சட்டங்களிலெல்லாம் மிக விவாதத்துக்குரியதாய் விளங்கியது தொழிலகத் தொடர்பு மசோதாவாகும் (Industrial Relations Bill). வில்சனும் அவரது கட்சியினரும் அதை முழுமூச்சோடு எதிர்த்தனர். நாடெங்குமுள்ள தொழிலாளர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனால், பிடிவாதமாக 1970ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இம் மசோதாவை ஹீத் சர்க்கார் சட்டமாக்கி விட்டது. அதன்படி அரசாங்கத்திடம் பதிவு செய்துகொண்ட தொழிற் சங்கங்கள் மட்டுமே வேலை

நிறுத்தங்களை நடத்தலாம். அதுவும் தொழிலாளர்கள் தொழிலதிபர்களுடன் செய்துகொண்டுள்ள தொழில் ஒப்பந்தத்துக் கேற்பவே (Labour Contracts) வேலை நிறுத்தம் செய்யலாம். ஒப்பந்தத்தை மீறினால் தொழிலதிபர்கள், தொழிற் சங்கங்கள்மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கலாம். முறையல்லாத வேலை நிறுத்தத்தால் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்புக்கு ஈடாக 100,000 பவுன்கள் வரை இழப்பீடு செலுத்துமாறு தொழிற் சங்கங்களுக்கு ஆணையிடும் உரிமையானது புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ள தொழில் தொடர்பு நீதி நிறுவனங்களுக்கு (Industrial Relations Court) வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்துகொள்ளாத, அரசாங்கத்தால் அனுமதிக்கப் பெறாத தொழிற் சங்கங்கள் பொறுப்பற்ற முறையில் வேலை நிறுத்தங்களைத் தூண்டிவிடுவதை இச் சட்டம் தடுக்கிறது. அப்படித் தூண்டிவிடும் பொறுப் பற்ற தொழிற் சங்கங்கள் மீது தொழிலகங்கள் நஷ்டஈட்டு வழக் குத் தொடர இச் சட்டம் அனுமதிக்கிறது. எந்தவிதமான கட்டுப் பாடு மில்லாது சுயேச்சையாகத் தொழிற் சங்கங்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளவும் அமைதியான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி அக் குறைகளைப் போக்கிக் கொள்ளவும் மத்தியஸ்தக் குழுக்களின் (Arbitration Committees) தீர்ப்புகளை இரு சாரரும் ஒப்புக்கொள்ளவும் தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் எவ்வித வெளி நிர்பந்தமுமின்றிச் சுயேச்சையாக சங்கங்கள் அமைக்கவும் அரசாங்கம் உதவுமென்று இச் சட்டம் அறிவிக்கிறது. சட்டத்துக்குட்பட்ட முறையில் தொழிற் சங்கங் கள் விரிவாக்கம்பெறவும், தொழிலாளர்கள் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ளவும், தொழிலதிபர்கள் நியாயம் பெறவும் இச் சட்டம் வழிவகுக்கிறது.

ஹீத் சர்க்கார் இன்னும் முக்கியமான சில சிறிய சீர்திருத்தங் களையும் நாட்டில் புகுத்தியுள்ளது. 1970ஆம் ஆண்டு அக்டோப ரில் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்டு கால முறையானது (British Standard Time) ஒழிக்கப்பட்டும் பழைய கிரீன்விச் சராசரிக் கால முறையானது (Greenwich average Time) கொண்டுவரப்பட்டது. நிறுத்தல் அளவை, நீட்டல் அளவை முதலியவற்றில் தசாம்ச முறை புகுத்தப்பட்டுள்ளது. இம் முறைப்படி 100 பென்சுகள் கொண்டது ஒரு பவுனாகும். அரை பென்சு, ஒரு பென்சு, இரண்டு பென்சு மதிப்புள்ள மூன்று நாணயங்கள் புதிதாகப் புழக்கதில் கொண்டுவரப்பட்டுள்ளன. பாராளுமன்றத் தொகுதி களும் அவைகளுக்குரிய இடங்களும் சீர்திருத்தி அமைக்கப்பட் டுள்ளன. 1832ஆம் ஆண்டுக்குப் பின் செய்யப்பட்ட பாராளு மன்ற உறுப்பினர் தொகை மறு விநியோகங்களில் இதுவே மிகப்

பெரிதெனக் கருதப்படுகின்றது. தல ஆட்சித் துறையிலும் பல சீர்திருத்தங்கள் 1971ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டுள்ளன. மருத்துவ மனைகளில் பணியாற்றும் செவிலியர்கள் (Nurses), ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், எழுத்தர்கள் (Clerks) ஆகியோருக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

காமன்வெல்த் நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குள் வந்து புகும் அந்நியர்களின் தொகை கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருப்பதை ஆங்கிலேயர் வெறுத்தனர். தங்களோடு போட்டி போட்டு தங்களுடைய கூலியையும் வாழ்க்கைத் தரத்தையும் அவ்வந்நியர்கள் குறைத்து விடுவதாகப் பலர் எண்ணினர். எனவே, கன்சர்வேடிவ் சர்க்கார், அத்தகைய குடிபுகுவோரைக் கட்டுப்படுத்த ஒரு சட்டத்தைக் கொணர்ந்தது (Immigration Bill-குடிபுகுவோர் சட்டம், 1970). அதன்படி காமன்வெல்த் நாடுகளிலிருந்து வருவோரும் காமன்வெல்த் அல்லாத பிற நாடுகளிலிருந்து வருவோரும் ஒரே வகையில் அந்நியர்கள் (aliens) போன்றே நடத்தப்படுவர். காமன்வெல்த் நாடுகளிலிருந்து வரும் குடி மக்களுக்குத் தனிச் சலுகைகள் காட்டப்படமாட்டாது.

ஐரோப்பிய பொதுமைப் பொருளாதாரச் சந்தையில் (European Common Market) இங்கிலாந்து ஓர் உறுப்பினராகச் சேருவதா கூடாதா என்ற வாதம் இக் காலத்தே உச்ச நிலையடைந்தது. அதில் சேர்வதால் சுங்க வரிகள் நீக்கப்பட்டு, பிரிட்டிஷ் பொருள்களுக்குப் பெரியதோர் சந்தை கிடைக்குமெனக் கூறி கன்சர்வேடிவ் அரசாங்கம் ஒரு வெள்ளை யறிக்கையை (White paper, July 1971) வெளியிட்டது. வில்சன், தான் பிரதமராயிருந்த போது ஐரோப்பிய பொதுமைச் சமுதாயத்தில் இங்கிலாந்து சேர வேண்டுமென்று கூறியவரே எனினும் தற்போது எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் அங்ஙனம் சேருவதை எதிர்த்தார். சேருவதற்கான நிபந்தனைகள் சரியில்லை என அவர் குறை கூறினார். எனினும், ஹீத் சர்க்கார் விடாப் பிடியாக முயற்சித்து இங்கிலாந்து, ஐரோப்பிய பொதுமைப் பொருளாதாரச் சந்தையில் சேருவதைப் பாராளுமன்றம் ஒப்புக்கொள்ளும்படிச் செய்துவிட்டது (1971, அக்டோபர் 28).

இங்ஙனம் ஹீத்தின் தலைமையிலமைந்த கன்சர்வேடிவ் அரசாங்கமானது பதவியேற்ற இரண்டு ஆண்டு காலத்தில் மெச்சத்தக்க பல காரியங்களைச் செய்துள்ளது. எனினும், பிரிட்டிஷ் பொது மக்கள் தமக்கே உரிய சீரிய முறையில் அரசாங்கத்தின் குறைகளை எடுத்துக் காட்டிக் கண்டிக்கின்றனர். பண வீக்கத்தைத் தடுக்க அரசாங்கம் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை

என்பதும், அவர்களின் முக்கிய கண்டனமாகும். வெளி நாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில், தென் ஆப்பிரிக்காவுக்கு படைக் கலன்கள் வழங்க அரசாங்கம் ஒப்புக்கொண்டிருப்பதைப் பலரும் கண்டிக்கின்றனர். நிறவெறி பிடித்த தென்னுப்பிரிக்கா வுக்கு உதவி செய்கின்ற பிரிட்டனைக் காமன்வெல்த் நாடுகள், சிறப்பாக ஆப்பிரிக்க நாடுகள், கண்டிக்கின்றன. இக் கொள்கை யால் காமன்வெல்த்தே கலைத்துவிடக்கூடும் எனப் பலரும் அஞ்சு கின்றனர். நிறவெறி பிடித்த ரொடீஷியாவையும் ஹீத் சர்க்கார் ஒன்றும் கட்டுப்படுத்த முடியவில்லை. ரொடீஷியா இங்கிலாந் தோடு கொண்டுள்ள தொடர்பை முற்றிலும் அறுத்துக்கொண்டு விட்டது.

வட அல்ஸ்டர் மாநிலத்தில் ஓயாத கலவரம் ஏற்பட்டு வருகிறது. மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரான கத்தோலிக்கர்கள், தங்களை ஆண்டுவரும் பிராடஸ்டெண்டுகளை எதிர்த்துப் பல வன்முறைக் கிளர்ச்சிகளிலீடுபட்டனர். அரசாங்க அலுவல்கள், தல ஆட்சி நிருவாகம், கல்விக் கூடம் இவைகளில் கத்தோலிக்கருக்குச் சரிவர இடமளிக்கப்படுவதில்லை என்பது அவர்களின் குறைபாடாகும். ஹீத் சர்க்கார் அவர்களுக்குப் பாரபட்சமற்ற நீதி வழங்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டது. ஸ்டார்மாண்ட் (**Stormont**) என்ற ஐரிஷ் பாராளு மன்றத்தில் கத்தோலிக்கர் இடம் பெறவும், தல ஆட்சி நிறுவனங் களில் அவர்களுக்கு இடமளிக்கவும் இவ் வரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டது. வீட்டு மனை வழங்குவதில் பாரபட்சம் காண்பிக்கப்படலாகாது என்பதையும் சர்க்கார் வற்புறுத்தியது. எனினும், கத்தோலிக்கரது வன்முறைகள் ஓயவில்லை. பெல்பாஸ்ட் (**Belfast**) என்ற தலைநகரிலும், லண்டன்டெரி (**Londonderry**) போன்ற நகரங்களிலும், கத்தோலிக்கரும் பிராடஸ்டெண்டுகளும் ஒருவரையொருவர் ஈவிரக்கமின்றி கொல்வதும், இராணுவ வீரர் கள் போலீசார் மீது குண்டு வீசுவதும் சர்வ சாதாரண நிகழ்ச்சி களாகிவிட்டன. எனவே, பிரிட்டனிலிருந்து ஏராளமான போர் வீரர்கள் வட அயர்லாந்துக்குள் அனுப்பப்பட்டனர். அவர்கள் கத்தோலிக்கர்களின் இல்லங்களைச் சோதனை யிட்டும், சதிகாரர் கள் எனச் சந்தேகப்பட்டவர்களைச் சிறை செய்தும் கலகத்தை ஒடுக்க முயற்சித்தனர். ஆனால், கலவரம் ஓய்ந்தபாடில்லை. எனவே முதலில் கேப்டன் ஓநீல் (**O Neill**), அதன்பின் மேஜர் சிச்செஸ்டர் கிளார்க் (**Major Chichester Clark**) ஆகிய ஐரிஷ் பிரதமர்கள் தங்களது பதவிகளை ராஜினமாச் செய்துவிட்டனர். கத்தோலிக் கரைச் சமாதானப்படுத்த அவர்கள் கைக்கொண்ட நடவடிக்கை களும் சீர்திருத்தங்களும் விழலுக்கிறைத்த நீராயின. எதிர்க்

கட்சித் தலைவரான வில்சன், வட அயர்லாந்தும் அயரும் ஒன்று சேர்ந்து காமன்வெல்த் நாடாக மாறிவிடலாம் என ஒரு யோசனை தெரிவித்தார். ஆனால், ஒன்றும் பயன்படவில்லை. 1972ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கூட லண்டன்டெரியில் நடைபெற்ற ஒரு கலகத்தில் 13 பேர் கொல்லப்பட்டனர். எனவே, மார்ச் மாதம் 22இல் வட அயர்லாந்து பிரிட்டனின் நேரடியான ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதை ஆண்டுவந்த அரசாங்கமும் பாராளுமன்றமும் கலைக்கப்பட்டு விட்டன. கத்தோலிக்கர்களின் குறைகள் பரிசீலிக்கப்பட்டு அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகள் படிப்படியாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

இங்ஙனம் ஒரு சில காரியங்களில் ஹீத் சர்க்கார் சரிவர நடந்துகொள்ளாததால் வெற்றிபெற இயலாமற்போன போதிலும், பொதுவாக இங்கிலாந்தில் அவர்களால் நன்மையே பெரிதும் ஏற்பட்டுள்ளது. தனியார் துறையினருக்கு ஊக்கம் அதிகமாகியுள்ளது. ஆட்சித் துறை நன்கு வலுவடைந்துள்ளது. பொருளாதாரத் துறையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. ஐரோப்பியப் பொதுமைச் சந்தையில் சேர்ந்துள்ளதன் மூலமாக அதன் பொருளாதார முன்னேற்றம் இன்னும் அதிகமாகலாம் என நம்பப்படுகின்றது. தொழில் துறையில் தேவையற்றதும் பொறுப்பற்றதுமான வேலைநிறுத்தங்கள் ஏற்படாதவாறு தடுக்கச் சட்டம் கொணர்ந்தது கன்சர்வேடிவ் கட்சியினர் செய்துள்ள அரும் பெருஞ் சாதனை யென்றே கருதத் தகும்.

அரசியல் நிறுவனம்

அரசியல் நிறுவனத்திலும் வில்சன் சர்க்கார் பல மெச்சத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது. காபினெட்டின் நிலையும், பிரதமரின் நிலையும் பெருமளவில் வலுவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிருவாகத் துறைகளிலும் நடைபெறுபவைகளைக் கோர்வைபடுத்தி அமைச்சர்களுக்கு அவ்வப்போது அறிவிக்கவேண்டி அதற்கு ஏற்றாற்போல் செயலகத்தின் (Secretariat) செயல்களும் அதிகாரங்களும் பெருக்கப்பட்டுள்ளன. இம்முறையால் பின்னால் வரப் போகின்றவற்றை, முன்னாலேயே அறிந்துகொள்ளக் காபினெட்டுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ‘எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை, அதிர வருவதோர் நோய்’ என்னும் குறள் மொழிக்கிணங்க அமைச்சர்கள் ‘வரு முன்னர்க் காக்கும்’ பொறுப்பை மேற்கொள்ள இதனால் வழி பிறக்கிறது. காபினெட் அமைச்சர்களின் எண்ணிக்கையும் இருபத்து மூன்றிலிருந்து இருபத்தொன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது. இன்னும் அது பதினாறாகக் குறைந்தால்தான் நல்லது என்பர் சிலர். காபினெட்டில்

புதிய சில துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதாரச் செயல்துறை (Department of Economic Affairs) என்பது புதிய தாக தோற்றுவிக்கப்பட்ட காபினெட் பிரிவுகளில் தலைசிறந்த தாகும். பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை வகுத்துச் செயலாக்குவதும், கண்காணிப்பதும், தொழில் முன்னேற்றத்துக் கான கொள்கைகளை வகுத்து அதற்குத் தேவையான பொருள் வசதியைப் பெற ஏற்பாடு செய்வதும் அதன் கடமையாகும். நாட்டின் பொருளாதாரத் துறையில், ஒரு புதிய தெம்பையும் ஊக்கத்தையும் ஊட்டவே இத் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் விஞ்ஞான வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வும் கண்காணிக்கவும் தொழில் நுண்ணியல் அமைச்சுத்துறை (Ministry of Technology) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விஞ்ஞானம், தொழில், அரசாங்கம் ஆகிய மூன்றும் ஒருங்கே நின்று ஒத்துழைக்க இத் துறை உதவி செய்கிறது. நாட்டின் பாதுகாப்புத் துறையும் சற்று மாற்றியமைக்கப்பட்டது. அன்றாட நிருவாகத்துக்கும், தளவாடச் சேகரிப்புக்கும் தனித்தனி அமைச் சர்கள் நியமிக்கப்பட்டனர். கடற்படை, தரைப்படை, விமானப் படை ஆகியவைகளுக்குத் தனித்தனி அமைச்சர்களுக்குப் பதிலா கத் துணைச் செயலாளர்கள் (Under Secretaries) நியமிக்கப்பட்ட னர். கல்வித் துறையில், கல்லூரிக் கல்வி, அறிவியல், கலைக் கல்வி ஆகியவற்றுக்குத் தனி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். இவற்றைப் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை கூற அறிவியல் கொள்கை ஆலோசனை மன்றம் (Council of Scientifie Policy) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நில, இயற்கை உற்பத்திச் சாதன அமைச்சவை என்பது (Ministry of Land and Natural Resources) இன்னொரு புதிய காபினெட் பிரிவாகும். நாட்டுப் புறங்களிலும், நகரங்களிலும் திட்டமிட்டுக் கட்டடங்கள் கட்டல், பூங்காக்கள், காடுகள் ஆகியவற்றைப் பேணல், சுரங்கத் தொழில் களைக் கண்காணித்தல் முதலிய பணிகளை இவ்வமைச்சு மேற் கொள்கிறது. நிலங்களைப் பொதுக் காரியங்களுக்காக வாங்கும் உரிமை பெற்ற நில உயர் ஆணைக் குழு (Land Commissions) இவ்வமைச்சின் கீழ்நின்றே பணிபுரிகிறது. குடியேற்ற நாடு களைக் காமன்வெல்த் நாடுகளாக மாற்ற விரும்பிய வில்சன் சர்க் கார், குடியேற்ற நாட்டுத் துறையையும், குடியேற்ற நாட்டு அமைச்சர் பதவியையும் ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாகக் காமன்வெல்த் அலுவலகம் (Commonwealth Office) ஒன்றைத் தோற்றுவித்து அதன் தலைவராகக் காமன்வெல்த் அமைச்சர் ஒருவரை ஏற்படுத்தியது. காமன்வெல்த் செயலகம் (Commonwealth Secretariat) என்ற புதிய நிறுவனம் காமன்வெல்த் நாடு கள் பற்றிய விவகாரங்களைச் செவ்வனே நடத்தி வருகிறது.

பாராளுமன்றத்தின் பணிகள் நிறைவுபெற வேண்டுமானல், அரசாங்க அலுவல்களில் அவர்களுக்கு மேலும் பங்கு தரப்பட வேண்டுமென்றும், கமிட்டி முறை பரவலாக்கப்பட வேண்டுமென்றும் பல அறிஞர் கூறி வந்தனர். அதற்கேற்ப இரு புதிய கமிட்டிகள் அமைக்கப்பட்டன. அறிவியல், தொழில் நுணுக்கம் (Science and Technology) இவைபற்றிய அலுவல்களை மேற்கொள்ள ஒரு பொறுப்புக் குழு (Select Committee) அமைக்கப்பட்டது. தனிப்பட்ட ஒரு நிருவாகத் துறையைப் பற்றி ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஆய்வு நிகழ்த்த ஒரு பொறுக்குக் கமிட்டி அமைக்கப்பட்டது. உணவு, விவசாயம், மீன் வளர்ப்புத் துறையை ஆராய முதலில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இங்ஙனம் நிருவாகத் துறைகளிலும் பொதுக் காரியங்க்ளிலும் பங்குகொள்ளப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. மற்றும் நிருவாகத் துறையினரின் கொடுங்கோன்மையினின்றும், சாதாரணக் குடிமக்களைக் காக்க வேண்டிப் பாராளுமன்ற ஆணையாளர் (Parlimentary Commissioner) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்வீடனிலுள்ள ஆம்புட்ஸ்மேன் (Ombudsman) எனும் அதிகாரிக்கு அவரை ஒப்பிடலாம். நாட்டிலுள்ள எந்த அரசாங்க அதிகாரியைப் பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வதிகாரியிடம் முறையிட்டுக் கொள்ளலாம். அமைச்சர்களும் இதற்கு விதிவிலக்கல்லர். யாரைப் பற்றியும் அவர் விசாரணை நடத்தலாம். எவ்வித அரசியல் பத்திரத்தையும் வரவழைத்துப் பரிசீலிக்க அவருக்கு உரிமை உண்டு. விசாரணையின் முடிவை அவ்வதிகாரி குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கோ அல்லது ஒரு பொறுக்குக் குழுவுக்கோ தெரிவிப்பார். அதன் பேரில் பின்னர் குறிப்பிட்ட அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பெரிய மனிதர்களின் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசாரணை நீதி மன்றங்கள் (Tribunals of Inquiry) அமைக்கப்படும் வழக்கமும் இருந்து வருகிறது. ஆனல், அதில் அரசாங்க வழக்கறிஞர்கள் யாரும் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாதென்றும், குற்றச்சாட்டுகளுக்கு மூலம் ஏது என கேட்கப்படக் கூடாதென்றும், வெளிப்படையாகவே விசாரணை நடைபெற வேண்டுமென்றும் 1966இல் ஏற்படுத்தப்பட்ட ராயல் கமிஷன் ஒன்று சிபாரிசு செய்துள்ளது.

சிவில் சர்வீஸ் நிறுவனத்திலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென வில்சன் சர்க்கார் விரும்பியது. ஃபுல்டன் கமிட்டியின் சிபாரிசுகளை அது அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு நிருவாகத் துறையிலும் இப்போது அதிகாரம் ஒரு நிரந்தரச் செயலாளரிடம் (Permanent Secretary) குவிந்து கிடக்கிறது. அவர் ஒருவரே அமைச்சரிடம் தொடர்பு கொள்ளலாம். அதற்குப் பதிலாக அமைச்சர்களை அணுகும் அதிகாரம்

இன்னும் ஒருசில பேர்களுக்கு ஒவ்வொரு துறையிலும் தரப்பட வேண்டுமென்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. மேலும் சிவில் அதிகாரிகளை நியமிப்பதோடு அவர்களுடைய நடவடிக்கைகள், ஊதியம், உத்தியோக உயர்வு ஆகியவைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நிதித் துறையிலிருந்து சர்வீஸ் கமிஷனுக்கு மாற்றப்பட வேண்டுமென்பதையும் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மற்றும், சிவில் சர்வீஸ் அதிகாரிகளுக்கு, நியமனத்துக்குப் பின்னர் இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கக் கல்லூரி ஒன்று நிறுவப்படவேண்டுமென்பதையும் அது ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வோர் அமைச்சருக்கும், நிருவாகத்துறை பற்றிய ஆலோசனைகளைக் கூறவென்றே ஒருசில அதிகாரிகள் ஒவ்வொரு துறையிலும் இருக்கவேண்டு மென்பதையும் அமைச்சர்கள் விரும்பி ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நீதித் துறையில் பல மாற்றங்களை இவ்வரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. 1966ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கிரிமினல் நீதி மசோதாவின்படி (Criminal Justice Bill) பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகள் பெரிதும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. கிரிமினல் குற்றவாளிகள் தக்க தண்டனை விதிக்கப் பெறவும், குறைந்தகாலச் சிறைவாசத்துக்குப் பதில் அபராதம் விதிக்கப்பெறவும் அது வகை செய்கிறது. ஜூரிகளின் தீர்ப்பு ஒருமுகமாக வன்றிப் பெரும்பான்மையினரின் தீர்ப்பாக அமைந்தால் போதுமென்றும், குற்றவாளிகள் பெரோலில் அடிக்கடி வெளிவிடப்படலாமென்றும், சித்திரவதை முறைகள் ஒழிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்படுகின்ற ஆலோசனைகளையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளது.

இங்ஙனம் பல்வேறு துறைகளிலும் ஒரு புதிய இரத்தத்தைப் பாய்ச்சி நிருவாகத்துக்குப் புத்துயிரூட்டவும், மக்களது பொது நலன்களை வளர்க்கவும் தொழிற்கட்சி அரசாங்கம் முயற்சி செய்து வந்தது. வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் சோவியத் ருஷ்யாவோடு நட்பை வளர்க்கவும், வியட்நாம் போரை நிறுத்தவும், ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவில் சேரவும், காமன்வெல்த் நாடுகளோடு நட்பை வளர்க்கவும் வில்சன் அரும்பாடுபட்டு வந்தார். ஆனால், உலக அரங்கில் பிரிட்டனின் பெருமை நாளுக்கு நாள் மங்கி வருகிறது. அதன் முயற்சிகள் ஃபிரான்ஸ், ரொடீஷியா போன்ற நாடுகளால் தோற்கடிக்கப்படுகின்றன. எனவே, பிரிட்டன் உலக அரங்கினின்றும் விடுபட்டுத் தனிப்பட்ட முறையில் முன்னேறி ஐரோப்பிய நாடுகளோடாவது சரிநிகர் சமானமாக விளங்கப் பெரிதும் முயன்று வருகிறது.

— —

15. இங்கிலாந்து அரசியலமைப்பின் வளர்ச்சி வரலாறு

அரசியலமைப்பின் சில சிறப்பியல்புகள்: முடியரசு (Monarchy); காபினெட்—பாராளுமன்றம்—நீதி நிறுவனம்—ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கமும் ஆட்சித் துறைத் தீர்ப்பளிப்பு முறையும்—கட்சிமுறை—சட்டத்தின் இறைமை (Rule of Law); சிவில் உரிமைகள் (Civil Liberties); தல ஆட்சி முறை (Local Government); சிவில் சர்வீஸ்; பொருளாதார நிலைமை: போக்குவரவு சாதன வளர்ச்சி—கம்பியில்லாத் தந்தி—தொழில் விவசாய மந்தம்—பொருள் நெருக்கடி; திட்டமிடும் முறை; சமூக நிலை: சமுதாய வாழ்க்கை—கலைகளின் நிலை.

அரசியலமைப்பின் சில சிறப்பியல்புகள்

1. முடியரசு (Monarchy)

அரசியல் துறையில் பல்வேறு வகையான ஆட்சிமுறைகள் பேசப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை முடியரசு (Monarchy), குடியரசு (Republic) ஆகிய இருவகை ஆட்சி முறைகளாகும். குடியரசு நிலவும் நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் நாட்டை ஆளுகின்ருர். முடியரசு நிலவும் நாடுகளில் பரம்பரையாகத் தொன்றுதொட்டு வருகின்ற அரசர்கள் ஆட்சி புரிகின்ருர்கள். இவ்விருவகை அரசுகளுள் இங்கிலாந்தில் தொன்றுதொட்டு வழக்காற்றிலிருந்து வருவது முடியரசேயாகும். இடையில் தற்காலிகமாக ஆலிவர் கிராம்வெல் என்பவரால் அங்கே குடியரசு தோற்றுவிக்கப்பட்டது (1649). ஆனுல், பிரிட்டிஷ் மக்கள் மீண்டும் முடியரசையே 1660ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். இன்றளவும் இங்கிலாந்தில் அரசர்களோ அன்றி அரசியர்களோதான், செங்கோலாச்சி வருகின்றனர்.

முடியரசின் தன்மை

புறத்தோற்றத்துக்கு அரசரே இங்கிலாந்தின் தனித் தலைவராய் விளங்குகின்ருர் என்ருலும், நடைமுறையில் அவரது

நிலை பெரிதும் மாறிப்போய்விட்டது. டியூடர் மன்னர்களும் ஸ்டுவர்ட் அரசர்களும் செலுத்திவந்த வல்லரசை இன்று காண முடியாது. 1688இல் ஏற்பட்ட புகழ்பெற்ற புரட்சிக் குப்பின் மன்னர்கள் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டே நடந்து வருகின்றனர். அவர்களது தெய்வீக உரிமைக் கொள்கை (Divine Right Theory) மாய்ந்துவிட்டது. மன்னன் சட்டத்துக்கும் மேம்பட்டவன் என்ற நிலையை மாற்றி, சட்டத்துக்கு உட்பட்டவனே வேந்தன் என்ற கொள்கை இங்கிலாந்தில் வேரூன்றிவிட்டது. அதுவும் ஹனோவரியர்கள் மன்னர்களாக வந்தபின், அரசர்கள் அமைச்சர்களிடமே அரச பாரத்தை ஒப்படைத்து விட்டார்கள். அமைச்சர் குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதையும் அவர்கள் நிறுத்திக் கொண்டார்கள். வெறும் பெயரளவிற்கு மட்டுமே அரசர்களாக விளங்க அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். எனவே, அரசரது பெயரில் அமைச்சர்கள் நாட்டை ஆள ஆரம்பித்தார்கள். அவ்வமைச்சர்களைப் பாராளுமன்றம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இங்ஙனம் பாராளுமன்ற ஜனநாயகம் (Parliamentary Democracy) நாட்டில் தோன்றியது. எனவே இன்றைய அரசியலமைப்பில் மன்னர்கள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கும், அவற்றை ஆக்கிச் செயற்படுத்துகின்ற பாராளுமன்றத்துக்கும், காபினெட் என்ற அமைச்சர் குழுவுக்கும் கட்டுப்பட்டவர்களேயாவர். சொந்தமாக அவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அமைச்சர்களின் ஆலோசனைகளுக்கேற்பத்தான் அவர் பேசவும் செயலாற்றவும் முடியும். எனவே, இங்கிலாந்தில் இன்று அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட முடியரசே (Constitutional Monarchy) நடைமுறையில் இயங்கி வருகிறது.

அரசும்—அரசரும் (Crown and King)

இங்கிலாந்தில் 'அரசர்' என்ற சொல்லும் 'அரசு' என்ற சொல்லும் வெவ்வேறு பொருளில் வழங்கப்படுகின்றன. 'அரசர்' என்ற சொல், பரம்பரையாக நாட்டை ஆண்டு வருகின்ற ஒரு தனிப்பட்ட நபரை மட்டுமே குறிப்பதாகும். ஆனால் 'அரசு' என்ற சொல் அமைச்சரவையை உள்ளிட்ட மன்னரைக் குறிக்கும். நாட்டின் நிருவாகம் அனைத்தும் அமைச்சர்களின் கைகளிலிருப்பதால், 'அரசு' என்ற சொல் நாட்டின் நிருவாக நிறுவனமனைத்தையும் குறிப்பதொன்றாகும். இங்கிலாந்தின் இறை (Sovereign) 'அரசர்' என்ற நிலையில் வெறும் செல்வாக்கைத் (Influence) தவிர வேறு எந்த அதிகாரமும் இல்லாதது. ஆனால், **'அரசு' என்ற நிலையில் சகல அதிகாரங்களையும் கொண்டது.**

அரசர் இன்று இருந்து நாளை மாய்பவர். ஆனால், அரசு என்றும் நின்று நிலவுவது. இக் கருத்தில்தான் ஒரு மன்னர் இறந்தவுடன் ஆங்கில மக்கள் 'மன்னர் மாய்ந்தார்; மன்னர் நீடு வாழ்க' (The King is dead; Long live the King) என்று கோஷமிடுகின்றனர். ஒரு காலத்தில் தனிப்பட்ட முறையில் செலுத்திவந்த அத்தனை அதிகாரங்களையும் அரசர், இன்று பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையின் துணையோடு செலுத்தி வருகிறார். எனவே, பெயரளவில் இங்கிலாந்தில் 'முடியரசும்' நடைமுறையில் 'பாராளுமன்ற ஜனநாயகமும்' நடைபெறுகிறது.

இறையின் கடமைகள் (Duties of the Sovereign)

இங்கிலாந்தை ஆள்பவர் ஓர் அரசராகவோ அன்றி தற்போது இருப்பதுபோல ஓர் அரசியாகவோ இருக்கலாம். அரசியலமைப்பின்படி அவர்கள் தனித்தலைமை பெற்றவர்களாதலால், பொதுவாக அவர்களை 'இறை' (Sovereign) என்று அழைக்கலாம். அரசியலமைப்பின்படி அவ்விறைக்கு ஒரு சில முக்கியமான கடமைகள் உள்ளன.

தலைமை அமைச்சர் அல்லது பிரதமரைத் தேர்ந்தெடுப்பது இறையின் மிக முக்கியமான கடமையாகும். அங்ஙனம் தேர்ந்தெடுப்பதில் இறையின் சொந்த விருப்பத்துக்கு அதிகம் இடமில்லை. ஏனெனில், பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையோரின் ஆதரவின்றி ஓர் அமைச்சரவை அல்லது காபினெட் பதவியில் நீடிக்க இயலாது. எனவே, பெரும்பான்மைக் கட்சியின் தலைவரையே பிரதமராகத் தேர்ந்தெடுப்பதென்பது ஓர் அரசியல் மரபு (Convention) ஆகிவிட்டது. இருபதாம் நூற்றாண்டுவரையில் பிரதமர்களில் பலர் பிரபுக்கள் சபையிலிருந்து (House of Lords) தேர்ந்தெடுக்கப்படுதல் வழக்கமாயிருந்தது. ஆனால், 1923ஆம் ஆண்டில் போனர் லா (Bonar Law) என்னும் பிரதமர் நோய் காரணமாகப் பதவியைத் துறந்தபோது, அடுத்த பிரதமர் எந்த சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிய பிரச்சினை எழுந்தது. கர்ஸன் பிரபு (Lord Curzon) அப்போது நல்ல அனுபவம் வாய்ந்த அமைச்சராக இருந்தார். ஆனால், அவர் பிரபுக்கள் சபை உறுப்பினராயிருந்ததால், பிரதமர் பதவிக்குத் தகுதியற்றவர் எனப் பலரும் வாதித்தனர். பிரதமராயிருப்பவர் பொதுமக்கள் சபையில் ஓர் உறுப்பினராயிருத்தல் அவசியம் என 1839ஆம் ஆண்டிலேயே வெல்லிங்டன் பிரபு எடுத்து விளம்பினார். அதையொட்டி 1923ஆம்

ஆண்டிலும் கர்ஸன் பிரபு பிரதமராவதற்குப் பலர் மறுப்புத் தெரிவித்தனர். பலரைக் கலந்தாலோசித்த பின் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பொதுமக்கள் சபை உறுப்பினரான ஸ்டான்லி பால்டு வின் (Stanley Baldwin) என்பாரைப் பிரதமராக்கினுர். ஆனுல், விரைவிலேயே அவர் தமது காப்பு வரிக் கொள்கையின் மூலம் செல்வாக்கை இழந்தார். எனவே, பாராளுமன்றத்தைக் கலைத்து மறு தேர்தல் நடத்தும்படி மன்னரைக் கேட்டுக் கொண்டார்.

பொதுமக்கள் சபையில் ஒரு கட்சி மிகப் பெரும்பான்மையாக இருந்தால் பிரதமரைத் தேர்ந்தெடுப்பது எளிது. ஆனுல். எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாமலிருக்கும் போதுதான் இறை யின் பாடு சங்கடமாகிவிடும். சான்ருக, 1923ஆம் ஆண்டில் காப்புவரிக் கொள்கையை ஒரு பிரச்சினையாக வைத்து நடை பெற்ற பொதுத் தேர்தலில் தொழில், கன்சர்வேடிவ், லிபரல் ஆகிய மூன்று கட்சிகளுக்கும் பொதுமக்கள் சபையில் முழுமை யான பெரும்பான்மை (Absolute Majority) கிடைக்கவில்லை. கன்சர்வேடிவ் கட்சி தனிப்பட்ட முறையில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருந்தது (261). என்ருலும், தொழிற் கட்சியும் லிபரல் கட்சியும் சேர்ந்தால் (191+155=346) கன்சர்வே டிவ் கட்சியைத் தோற்கடிக்கும் நிலையில் அவை இருந்தன. இம் மாதிரியான இக்கட்டான சூழ்நிலையில்தான் இறை தனது சுய இச்சைப்படி நடக்க ஒரு வாய்ப்பு கிட்டுகிறது. அவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதைய மன்னர் ஆரும் ஜார்ஜ், ராம்சே மாக்டனுல்ட் (Ramsay Macdonald) எனும் தொழிற்கட்சித் தலைவரை அதாவது, சிறுபான்மைக் கட்சித் தலைவரைப் பிரதம ராக நியமித்தார். லிபரல் கட்சியின் துணைகொண்டு அவர் அரசாங்கத்தை அமைத்தார் (1924). ஆனுல், ஓராண்டுக்குள் அவரது ஆட்சி கவிழ்ந்துவிட்டது. மீண்டும் பால்டுவின் என்ற கன்சர்வேடிவ் தலைவரைப் பிரதமராக மன்னர் நியமித்தார். 1929 வரை அவரது ஆட்சி நீடித்தது. அதன் முடிவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் ஓர் இக்கட்டான நிலைமை ஏற்பட் டது. தொழிற்கட்சியினர் 284 இடங்களையும், கன்சர்வேடிவ் கள் 260 இடங்களையும், லிபரல்கள் 59 இடங்களையும் பொது மக்கள் சபையில் பிடித்தனர். தொழிற் கட்சிக்கு முழுமையான பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும், அரசர் மாக்டனுல்டு எனும் தொழிற் கட்சித் தலைவரையே பிரதமராக நியமித்தார். லிபரல் கட்சியின் துணைக்கொண்டு அவர் அமைச்சரவையை அமைத்தார். இங்ஙனம் 1923, 1929ஆம் ஆண்டுகளில் பிரதம ரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு இறையின் சொந்த விருப்பத்

துக்கே விடப்பட்டதென்றாலும், அது பொதுமக்கள் சபையின் சம்மதத்தைப் பெற்றபின்பே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது எனவே, இறுதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உரியது என்பது நன்கு பெறப்படுகின்றது.

பாராளுமன்றத்தைக் கலைத்தல் (Dissolution) இறையின் இன்னொரு முக்கியமான பணியாகும். ஐந்து ஆண்டுகளுக்கொரு முறையே பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென்பது அரசியல் மரபு. எனினும், ஒரு சில சமயங்களில் ஐந்து ஆண்டுகள் நிறைவுறும் முன்பே பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய கட்டாயம் இறைக்கு ஏற்படக்கூடும். அமைச்சரவையில் பிளவு ஏற்படுவதாலும், அதன் முக்கியமான கொள்கையைப் பொதுமக்கள் சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பதாலும், அமைச்சரவை கூட்டாகப் பதவி துறக்க நேரிடும். அப்படிக் கலைந்துபோகும் அமைச்சரவைத் தலைவர், பாராளுமன்றத்தைக் கலைக்கும்படியும், மறுதேர்தலை நடத்தும்படியும் இறையைக் கேட்டுக்கொள்ளலாம். அவ் வேண்டுகோள் உசிதமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இறையைச் சார்ந்தது. அது உசிதமில்லை எனத் தெரிந்தால் வேறோர் அமைச்சரை அழைத்து அமைச்சரவையை அமைக்கும்படி இறை பணிக்கலாம். அவ்வமைச்சரவை பாராளுமன்றத்தின் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றுவிட்டால், அமைச்சரவை ஆட்சியைத் தொடர்ந்து நடத்தலாம். இல்லையெனில், மீண்டும் அமைச்சரவையையும், பாராளுமன்றத்தையும் கலைத்து மறு தேர்தல் நடத்தவேண்டிவரும்.

பிரதமரின் ஆலோசனைப்படி மன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுவது கட்டாயமானதா இல்லையா என்ற பிரச்சினை 1950–1951ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்டது. 1950இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியினர் ஏனைய கட்சியினரை விட 5 இடங்களே அதிகமாகப் பெற்றிருந்தனர். நிலக்கரிச் சுரங்கத் தொழிலையும், இரும்பு எஃகுத் தொழில்களையும் தேசீய உடமையாக்குவது என்ற தொழிற் கட்சிக் கொள்கைக்கு நாட்டில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. எனினும், துணிந்து தொழிற்கட்சி சர்க்கார் 1950ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இரும்பு எஃகுத் தொழிலைத் தேசீய உடைமையாக்கினர். கொரியப் போர் போன்ற புதிய நிகழ்ச்சிகளால் பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்படடது. தேசீய உடைமைக் கொள்கையைப் பற்றி தொழிற் கட்சியிலேயே பிளவு ஏற்பட்டது. எனவே, பிரதமர் அக் கொள்கையைப் பிரச்சினையாக வைத்துப் பாராளுமன்றத்தைக் கலைத்து மறு தேர்தல் நடத்தும்படி மன்னரைக் கேட்டுக்கொண்

டார். அப்போது எச். எச். ஆஸ்க்வித் (H. H. Asquith) என்ற லிபரல் கட்சித் தலைவர், பிரதமரது செயலைக் கண்டித்தார். பிரதமர் சொல்லுகிறார் என்பதற்காக மன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் எனும் செலவுமிக்க நிகழ்ச்சியில் நாட்டை ஈடுபடுத்தி மக்களை வாட்டுதல் சரியல்லவென்றும், வேறோர் அமைச்சரை அழைத்து அமைச்சரவையை அமைக்கும்படி கேட்டுக்கொள்வதே மன்னரது கடமை என்றும் வாதாடினார். எனினும், மன்னர் பிரதமரின் விருப்பத்துக் கேற்பப் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு தேர்தலை நடத்தினார். தொழிற் கட்சியினர் தமக்கு அமோக வெற்றி கிடைக்குமென எதிர்பார்த்தே இத் தேர்தலை நடத்தினர். ஆனால், கன்சர்வேடிவ் கட்சி ஆச்சரியகரமான வெற்றியைப் பெற்றது.

பிரபு பட்டங்களை வழங்கல் இறையின் மற்றொரு கடமையாகும். அமைச்சர்களின் ஆலோசனைப்படியே பட்டங்கள் வழங்கப்படுகின்றன. இங்ஙனம் சாதாரண மக்களும் பிரபுக்கள் சபையில் இடம்பெற முடிகின்றது. பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கு விரோதமாகப் பிரபுக்கள் சபை நடந்துகொள்ளுமானால், அமைச்சர்கள் தங்கள் கொள்கையை ஆதரிக்கும் பலரைப் பிரபுக்களாக நியமிக்கும்படியும், அதன் மூலம் தங்களது மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேற உதவி செய்யும்படியும் மன்னரைக் கேட்டுக்கொள்ளலாம். 1832ஆம் ஆண்டு பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தைப் பிரபுக்கள் சபை நிராகரித்தபோது, பிரதமர் கிரே, பிரபுக்கள் சபையில் தமக்குச் சாதகமான பிரபுக்களைப் பெரும்பான்மையாக நியமிக்குமாறு கோரினார். அதை மன்னர் வில்லியம் ஒப்புக்கொண்ட பின்பே அவர் மந்திரி சபை அமைக்க முன்வந்தார். அதன் பின்னர் பிரபுக்கள் சபை பணிந்து விட்டது. எனவே, மன்னர் பிரபுக்களைப் புதிதாக நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படவில்லை. அதே போல 1911ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டத்தைப் பிரபுக்கள் சபை நிராகரித்தபோது, பிரதமரின் ஆலோசனைப்படி ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் போதிய அளவு பிரபுக்களை நியமித்து அதன் மூலம் மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேற உதவி செய்வதாக வாக்களித்தார். அதன் பின்னர் பிரபுக்கள் சபை பணிந்து மசோதாவை ஏற்றுக்கொண்டது. எனவே, பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபைக்குப் பணிந்து போகுமாறு செய்ய இறையின் இச் சிறப்பதிகாரமானது (Prerogative) பயன்படுத்தப்படுகிறது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிற மசோதாக்களுக்கு ஒப்பம் (Assent) வழங்குதல் இறையின் இன்னொரு கடமையாகும். ஒப்பம் தர இயலாது என்று மறுக்க இறைக்கு அதிகாரம் உண்டு.

ஆனால், ஆன் இராணியார் காலத்துக்குப்பின் [ஸ்காட்லாந்து நாட்டுப் படை மசோதாவுக்கு (Scottish Militia Bill) 1707ஆம் ஆண்டில் அவர் ஒப்பம் தர மறுத்தார்] இந்தச் சிறப்பதிகாரம் வழக்காற்றிலிருந்து நழுவிவிட்டது.

ஒவ்வொரு பாராளுமன்றம் தொடங்கும்போதும் 'அரியணைப் பேருரை' (Speach from the Throne) என்ற ஓர் உரையை நிகழ்த் வேண்டுவதும் இறையின் கடமையாகும். இந்த உரையின் வாசகத்தைப் பிரதமரே தயாரித்துத் தருவது வழக்கம். அதில் புதிய அமைச்சரவையின் கொள்கைகள் விளக்கப்பட்டிருக்கும். அதன் பேரில் பாராளுமன்றம் பின்னர் விவாதங்கள் நடத்தும்.

இறையின் உரிமைகளும் செல்வாக்கும்

மேற்சொன்ன கடமைகளோடு ஒருசில உரிமைகளும் இறைக்கு இருக்கின்றன. பேஜ்ஹாட் (Bagehot) எனும் ஆசிரியர் இறைக்கு மூன்று உரிமைகள் இருப்பதாகக் கூறுகிறார். அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறவும் (Right to be Consulted) உற்சாகம் அளிக்கவும் (Right to be Encourage) எச்சரிக்கை செய்யவும் இறைக்கு உரிமை உண்டு என அவர் வற்புறுத்தியிருக்கிறார். இவ்வுரிமைகளை வெவ்வேறு அரசர்களும் அரசிகளும் தங்களது ஆற்றலுக்கும், செல்வாக்குக்கும் ஏற்ப, வெவ்வேறு விதமாகப் பயன்படுத்தி உள்ளனர்.

விக்டோரியா மகாராணியார்

விக்டோரியா மகாராணியார் தமது சிறப்புரிமைகளைக் கட்டிக் காப்பதில் பெரிதும் கண்ணுங் கருத்துமாயிருந்தார். அரசியல் மரபுகள் காரணமாக அவரது விருப்பத்துக்கு மாறாக நிகழ்ச்சிகள் நடைபெற்றபோதெல்லாம் அவர் மனம் நொந்தார். சான்றாக, 1839ஆம் ஆண்டில் மேல்போர்ன் (Melbourne) எனும் பிரதமர் பாராளுமன்றத்தில் தமது செல்வாக்கை இழந்து பதவியைக் கைவிட்டார். மெல்போர்ன், அரசியாரின் இளமைப்பருவத்தே அவரது தந்தையைப் போல் இருந்து வழி நடத்தியவர். எனவே, அவர் பதவியை விட்டு விலகுவது அரசிக்குப் பிடிக்கவில்லை. எனினும், வேண்டாவெறுப்பாகப் பீல் என்ற செல்வாக்கு மிக்க தலைவரை அழைத்து அமைச்சரவையை அமைக்குமாறு கூறினார். மெல்போர்ன் காலத்து நியமிக்கப்பட்ட பள்ளியறைச் சீமாட்டிகளையும் (Ladies of the Bed Chamber) வேறு பல உயர் அதிகாரிகளையும் நீக்கிவிட வேண்டுமெனவும், தன் கட்சிக்குச் சாதகமானவர்களே நியமிக்கப்பட வேண்டுமெனவும் பீல் வற்புறுத்தினார். இதை இராணியார் பெரிதும் வெறுத்தார். தனது சொந்த உரிமை

யில் பீல் தலையிடுவதாகக் கூறி, அரசியார் அவரது வேண்டு கோளை மறுத்துவிட்டார். எனவே, மெல்போர்ன் மீண்டும் பிரதம ரானார். ஆனால், இண்டாண்டுகள் கழித்து மெல்போர்ன் அமைச் சரவை பொதுமக்கள் சபையில் தோற்கடிக்கப்பட்டது. அதன் பின் நடைபெற்ற தேர்தலில் பீலின் கட்சி பெருவெற்றி பெற்றது. எனவே, பீல் பிரதமரானார். எனினும், அரசியார் மெல்போர்னுக்கு அடிக்கடி கடிதம் எழுதி அவரது ஆலோசனைகளைக் கேட்டு வந்தார். ஆனால், மெல்போர்ன் தமது ஆலோசனையால் அரசாங் கத்துக்கு ஏதும் இடையூறு ஏற்படாதவாறு எச்சரிக்கையாக நடந்துகொண்டார். பிற்காலத்து, கிளாட்ஸ்டன் பிரதமரான போது, அரசியார் அடிக்கடி டிஸ்ரேலியைக் கலந்தாலோசிப்பது வழக்கம். இங்ஙனம் ஆட்சி பீடத்திலமர்ந்துள்ள அமைச்சர்களுக் குப் புறம்பாக இராணியார் ஆலோசனைகள் பெறலாமா என்பது பற்றிக் கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. பிரிவி கவுன்சிலர்களையும், பிரபுக்களையும் அரசியார் கலந்தாலோசிப்ப தில் தவறில்லை என்று ஆன்சன் (Anson) போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், காபினெட் அமைச்சர்களை மட்டுமே அரசியார் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதே இன்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மரபாகும்.

பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தனக்கே உரியதென்பது இராணியார் கருத்து. கிளாட்ஸ்டன் எனும் பிரதமர் 1893ஆம் ஆண்டில் பதவி துறந்தபோது, பொதுமக்கள் சபையின் தலைவ ராகத் திகழ்ந்த சர் வில்லியம் ஹார்கோர்ட் (Sir William Harcourt) என்பவரை விட்டுவிட்டு அவர் பிரபுக்கள் சபையில் லிபரல் கட்சித் தலைவராக இருந்த ரோஸ்பரி (Rosebury) என்பவரை அழைத்து அமைச்சரவையை அமைக்கும்படி கூறினார். இன்றைய சூழ்நிலை யில் இத்தகைய நிகழ்ச்சி நடைபெறுதல் என்பது இயலாத காரி யம். பதவி துறக்கும் பிரதமர், அடுத்த பிரதமர் யாராக இருக்க வேண்டுமென்பதை அரசிக்கு அறிவித்து விடுவதே இன்றைய வழக்கமாக இருக்கிறது.

பிரதமரைத் தேர்ந்தெடுத்த பின் ஏனைய அமைச்சர்களைப் பிரதமரே நியமிக்குமாறு விட்டுவிடுவதே இன்றைய இறையின் கடமையாக கருதப்படுகிறது. ஆனால், விக்டோரியா இராணியார் அமைச்சரவையில் யார்யார் இடம்பெற வேண்டுமென்பதிலும் தலையிட்டு வந்தார். பாமர்ஸ்டனுக்கு அயல் நாட்டமைச்சர் பதவி தரப்படக்கூடாது என 1851ஆம் ஆண்டில் அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அமைச்சரவையின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளி லும் இராணியார் அடிக்கடி தலையிட்டு வந்தார். கிளாட்ஸ்டனின்

சீர்திருத்தங்களை அவர் எதிர்த்தார். அவரது வெளிநாட்டு கொள்கைகளிற் பலவற்றை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஐரோப்பாவில் பல அரசர்கள் இராணியாருக்கு உறவினர்களாக இருந்ததால் அவர்களோடெல்லாம் ஒத்துப் போகவே அவர் விரும்பினர். ஆனல், பாராளுமன்றத்தின் ஆதரவைக் கொண்டு பாமர்ஸ்டன் நாட்டுக்கு நல்லது என்று தாம் கருதிய வழிகளிலேயே நடந்து கொண்டு வந்தார். அரசியாருக்கு அவரது போக்குப் பிடிக்கவில்லை. 1850ஆம் ஆண்டில் அவர் பாமர்ஸ்டனுக்கு ஒரு குறிப்புரை அனுப்பினர். அதில் அவர் அமைச்சர்கள் தன்னைக் கலந்தாலோசித்த பின்பே வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டுமென்றும், அங்ஙனம் தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளைத் தனது ஒப்புதலின்றி மாற்றக் கூடாதென்றும் வற்புறுத்தியிருந்தார். எனினும் பாமர்ஸ்டன் தன் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தார். இராணியார் அவரைக் கண்டித்தபோதெல்லாம், தாம் அவரைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதை மறந்து விட்டதாகச் சாக்குப்போக்குத் தெரிவித்தார். இறுதியில், ஃபிரெஞ்சு அரச குடும்பத்துக்கு விரோதமாக லூயி என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சி சர்க்காரைப் பாமர்ஸ்டன் இராணியின் அனுமதியின்றி அங்கீகரித்தபோது, அரசியாரின் பொறுமை எல்லை கடந்தது. ரஸ்ஸல் (Russell) எனும் பிரதமரை அணுகிப் பாமர்ஸ்டனைப் பதவியை விட்டு நீக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். அங்ஙனமே அவர் பாமர்ஸ்டனை அயல் நாட்டமைச்சர் பதவியினின்றும் நீக்கினர். இங்ஙனம் அமைச்சர்கள் தங்களது வெளிநாட்டுக் கொள்கைகளை நிர்ணயிக்கும் முன், அரசியைக் கலந்தாலோசிக்க வேண்டுமெனும் நிபந்தனையை விக்டோரியா பெரிதும் வற்புறுத்தினர். ஆனல், உள்நாட்டுக் கொள்கைகளில் அவர் தனது உரிமையை அவ்வளவாக வற்புறுத்தவில்லை. இன்றைக்கும் பாராளுமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் அரசியாருக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுத் தூதர்களை அவரே வரவேற்கிறர். அவர்களோடு உரையாடி அவர் வெளி நாட்டினரின் உள்ளக் கிடக்கையைப் புரிந்து கொள்கிறர். அவரது அறிவுரைகள் பாரபட்சமின்றியும், கட்சிப் பற்றின்றியுமிருக்கும். எனவே, அமைச்சர்கள் அரசியாரின் ஆலோசனைகளையும், எச்சரிக்கையையும் இலேசாகப் புறக்கணித்து விடமாட்டார்கள். விக்டோரியா இராணியார் அடிக்கடி பாமர்ஸ்டனது வெளிநாட்டுக் கொள்கைகளைக் கண்டித்து எச்சரிப்பது வழக்கம். அமெரிக்க உள்நாட்டுப் போரைப் பற்றி ரஸ்ஸல் பிரபு வெளியிட்ட அறிக்கையை இராணியாரின் கணவர் பெரிதும் மாற்றியமைத்தாரென அறிகிறேம். தேவையான சமயங்களில் அரசியார் அரசாங்கத்துக்கு உற்சாக மூட்டவும் தவறவில்லை.

பீல், தானியச் சட்டங்களை ஒழிக்க முயன்றபோது அவருக்கு இராணியார் தமது ஆதரவைத் தெரிவித்தார். இந்திய பெருங் கலகத்தின்போது மேல் உதவிகள் ஏராளமாக அனுப்பப்பட வேண்டுமெனக் கூறிப் பாமர்ஸ்டனுக்கு அவர் ஆதரவு தந்தார். இந்தியர்களைச் சாந்தப்படுத்திய 1858ஆம் ஆண்டுப் பேரறி விப்பை (Proclamation) ஆக்குவதில் இராணியார் பங்கெடுத்துக் கொண்டார். கிரிமியப் போரிலும், தென் ஆப்பிரிக்கப் போர்களி லும் தளர்ந்துபோயிருந்த அமைச்சர்களுக்கும், போர் வீரர்களுக் கும் இராணியார் பெரிதும் உற்சாகமளித்தார். ஐரிஷ் திருச் சபைக் கலைப்பைத் (Irish Disestablishment) தாம் விரும்பவில்லை எனினும் அம் மசோதாவை எதிர்க்க வேண்டாமென்று அவர் காண்டர்பரி ஆர்ச் பிஷப்புக்கு அறிவுரை வழங்கினார். டிஸ்ரேலி யின் பேரரசு பரப்புக் கொள்கைக்கு (Imperialism) அவர் தமது முழு ஆதரவையும் வழங்கினார்.

ஒருசில சமயங்களில் அமைச்சரவை தமக்குப் பிடிக்காத கொள்கைகளைக் கடைப்பிடிக்க முயன்றபோது, இராணியார் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட எண்ணினார். 1886, 1893ஆம் ஆண்டுகளில் ஐரிஷ் சுயாட்சி மசோதாவை நிறைவேற்ற கிளாட்ஸ் டன் முயற்சித்தபோது இராணியார் அங்ஙனம் செய்ய விழைந்தார். ஆனால், சாலிஸ்பரி பிரபுவின் ஆலோசனையின் பேரில் அவர் அத் தகைய எண்ணத்தைக் கைவிட்டார். அமைச்சரவையின் விருப்பத் துக்கு மாறாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், நடக்கப் போகும் மறுதேர்தலில் அரசியாருக்கு விரோதமானவர்களே மீண் டும் பெரும்பான்மையினராக வந்துவிட்டால் இறையின் கண்ணி யத்துக்கு இழுக்கு ஏற்பட்டுவிடுமென்பதை சாலிஸ்பரி எடுத்துக் காட்டினார். ரோஸ்பரி எனும் அமைச்சர் பிரபுக்கள் சபை சீர்திருத் தம் பற்றி ஒரு சில யோசனைகளைத் தெரிவித்தபோதும் இராணி யார் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாகப் பயமுறுத்தினார். ஆனால், அங்ஙனம் செய்யவில்லை. 1858இல் டெர்பி பிரபு (Lord Derby) பாராளுமன்றத்தில் செல்வாக்கை இழந்துவிட்டபோது, அதைக் கலைத்துவிட நினைத்து இராணியாரின் சம்மதத்தைக் கோரினார். பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதாகப் பயமுறுத் தப் பிரதமருக்கு எல்லா உரிமையும் உண்டென்றும், ஆனால், அதில் இராணியின் பெயரை இழுப்பது முறையன்று என்றும் அபர்டீன் பிரபு தெரிவித்தார். அவரது யோசனையை இராணி யார் அப்படியே ஏற்றுக்கொண்டார். இங்ஙனம் பாராளுமன்றத் தைக் கலைக்கும் சிறப்புரிமையை இராணியார் அமைச்சர்களின் விருப்பத்தின்படியே கையாள எண்ணினார் என்பதை மேற்கண்ட நிகழ்ச்சிகள் நன்கு மெய்ப்பிக்கின்றன.

ஏழாம் எட்வர்ட்

விக்டோரியா இராணியாரின் வழித்தோன்றலான ஏழாம் எட்வர்ட், நடுத்தர வயதைத் தாண்டிவிட்டாரெனினும், பொறுப் பற்ற விளையாட்டுப் பிள்ளையாகவே காணப்பட்டார். சுகபோகங் களிலும், கேளிக்கையிலும் அவருக்கிருந்த உற்சாகம் அரசியலில் இல்லை. எனினும், அவர் தமது கடமைகளையும் உரிமைகளையும் செவ்வனே கடைப்பிடித்தார். பால்ஃபர் (Balfour) 1905இல் தம் பதவியைக் கைவிட்டபோது ஸர் ஹென்றி கேம்பல் பானர்மேன் (Sir Henry Campbell Bannerman) என்பவருக்கு அரசர் தாமாகவே சொல்லி அனுப்பி அமைச்சரவையை அமைக்கும்படி பணித்தார். ஜனநாயகத்தை நாட்டில் வளர்க்கக்கூடிய சீர்திருத்தங்களை அவர் ஆதரித்தார். 'அரசரின் பேருரை'யின் (Kings Speech) வாசகம் பாராளுமன்றத்தில் படிக்கப்படுமுன் தமது ஒப்புதலைப் பெற வேண்டுமென வற்புறுத்தினர். எனினும், பொதுவாக இறையின் அதிகாரம் அவரது காலத்தில் பெரிதும் குறைந்துவிட்டது. அமைச்சர்களுக்கு விரோதமாக நடந்துகொள்ள அவரால் முடிய வில்லை. ஆனல், வெளிநாட்டு விவகாரங்களில் அவர் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்து பல அரச குடும்பங்களின் நட்பைப் பெற்றுர். அந்நட்பைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிலாந்துக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே நேசத்தை வளர்த்தார். ஃபிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே மனமார்ந்த நேச உடன்பாடு (Entente Cordiale) ஏற்படுவதற்கு முக்கிய ஏதுவாயிருந்தவர் அவரே எனலாம். வெளிநாட்டு விவகாரங்களிலும்கூட அவரது செயல் களும் கொள்கைகளும் அமைச்சரவையின் விருப்பத்துக்குட் பட்டே அமைந்திருந்தன. விக்டோரியா இராணியாரைப்போலன்றி அவர் அமைச்சர்களோடு வாய்விட்டுப் பேசி சுமுகமாகப் பழகி னர். கருத்துகளைத் தாராளமாக அவர்களுடன் பரிமாறிக்கொண் டார். தனது மகன் வேல்ஸ் இளவரசருக்கும் நாட்டு விவகாரங் களில் நல்ல பயிற்சியை இளவயதிலேயே அவர் தந்தார்.

ஐந்தாம் ஜார்ஜ்

எட்வர்டுக்குப் பின் ஆங்கில மகுடத்தை ஏற்ற ஐந்தாம் ஜார்ஜ் பெரிய அறிவாளி எனக் கருதப்படத்தக்கவர் அல்லர் என் ருலும், அமைச்சர்களோடு ஒத்துப்போகவும், அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் அறிந்திருந்தார். 1911ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தைப் பிரபுக்கள் சபை நிராக ரித்தபோது, அவர் தலையீட்டால்தான் அது நிறைவேற முடிந்த தென்பதை நாம் ஏற்கெனவேயே கண்டோம். அதே போன்று

1923-29ஆம் ஆண்டுகளில் எந்தக் கட்சிக்கும் முழுமையான பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைக்காதபோது, அவரே தமது யூகத்தைப் பயன்படுத்தி ராம்சே மாக்டனுல்டைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்து நெருக்கடியைத் தீர்த்தார் என்பதையும் நாம் மேலே கண்டோம். ஆனுல், தமது சிறப்புரிமைகளைக் கையாள்வதில் அவர் மிகவும் நிதானமாகவே நடந்து கொண்டார். 1914ஆம் ஆண்டில் ஐரிஷ் சுயாட்சி மசோதா (Irish Home Rule Bill) பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது, கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்கள், பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு அவருக்கு யோசனை கூறினர். ஆனுல், அந்த யோசனையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அமைச்சர்களிடையேயும், மக்களிடையேயும் ஒற்றுமை ஏற்படுத்த அவர் முயன்ருர். 1921ஆம் ஆண்டில் ஐரிஷ் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்படுவதற்கு அவரே காரணமாயிருந்தார் எனலாம். 1931இல் நாட்டில் ஏற்பட்டுவிட்ட பொருளாதார நலிவைப் போக்கக் கையாளப்படவேண்டிய முறைகளைப்பற்றி காபினெட் சபையிலேயே பிளவு ஏற்பட்டது. எனவே, தொழிற்கட்சிப் பிரதமர் மாக்டனுல்ட் பதவி துறந்தார். அரசர் உடனே கன்சர்வேடிவ் கட்சித் தலைவரான பால்டுவினை அழைத்து மந்திரி சபையை அமைக்குமாறு கூறி இருக்கலாம். ஆனுல், அவர் அங்ஙனம் செய்யவில்லை. மீண்டும் அவர் மாக்டனுல்டையே அழைத்துப் பல கட்சிகளுமடங்கிய தேசீய சர்க்காரை (National Government) ஏற்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். அதன்படியே மாக்டனுல்டு 1931ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேசீய சர்க்காரை அமைத்தார். அதனுல் தொழிற் கட்சியினர் வெகுண்டு விரைவிலேயே அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டனர். மன்னரது செய்கையைப் பலர் குறை கூறினர். ஆனுல், பதவி விலகிய மாக்டனுல்ட்டின் யோசனைப்படியே அரசர் நடந்து கொண்டார் என்பது தற்போது தெரியவருகின்றது. எனவே, அரசியலமைப்பு மரபுகளை ஒட்டியே அவர் நடந்துகொண்டுள்ளார் என்பது நன்கு உறுதியாகின்றது. இங்ஙனம் ஐந்தாம் ஜார்ஜ் கூடியவரை அமைச்சர்களுக்கு விரோதமின்றியும், அதே சமயம் நாட்டின் நன்மைக்குகந்தது எது எனத் தனக்குப் பட்டதோ அதற்கு ஏற்பவும் தமது கடமைகளைக் கண்ணியமான முறையில் ஆற்றிவந்தாரென அறிகிருேம்.

ஆரும் ஜார்ஜ்

ஐந்தாம் ஜார்ஜுக்குப்பின் அரியணை ஏறிய எட்டாம் எட்வர்ட் மக்கள் அனைவராலும் விரும்பப்பட்டார். எனினும் அவர் தமது திருமண விவகாரத்தின் காரணமாக முடிதுறக்க நேர்ந்தது. எனவே, அவரது சகோதரர், ஆரும் ஜார்ஜ் எனும் பட்டத்துடன்

அரசுரிமை எய்தினர். அவர் பட்டத்துக்கு வருவாரென்ற எண்ண மில்லாத காரணத்தால் அவரது தந்தையார் அவருக்கு அரச பாரத்தை ஏற்கத் தக்க பயிற்சியை அளிக்கவில்லை. எனினும், அவர் சாமர்த்தியமாகப் புதிய நிலைமையைச் சமாளித்தார். அந்நியர்களோடு பழகும்போது அவர் சற்று சங்கோசத்துடன் நடந்துகொண்டார். ஆனால், அதை ஈடு செய்யும் வகையில் அவரது இராணியார் எல்லாரும் போற்றும் வண்ணம் மனம் விட்டுப் பழகினர். அரசர் அமைச்சர்களின் கருத்தை அறிந்து அதற்கேற்பவே நடந்துகொண்டார். அவர்களுக்கு ஆலோசனை கூறல், எச்சரிக்கை செய்தல், உற்சாக மூட்டுதல்போன்ற உரிமை களையும், ஏனைய கடமைகளையும் அவர் வழுவாது கடைப்பிடித்து நற்பெயர் பெற்றார். பொதுமக்களின் கருத்தை முன்கூட்டி அறி வதில் அவர் வல்லவாராயிருந்தார். சான்றாக, இரண்டாம் உலகப் போர் தொடங்கியபோது, விண்ட்சார் கோமகன் தனது மனைவி யோடு நாட்டின் பல இராணுவ நிலையங்களுக்கும் போய் வீரர்களை உற்சாகப்படுத்த விரும்பியபோது, அரசர் அதை தடுத்தார். கோமகனின் மனைவிக்கு ஸ்காட்லாந்தில் பலத்த எதிர்ப்பு ஏற்படும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

நாட்டுநடப்பு பற்றி அமைச்சர்கள் அவரிடம் அடிக்கடி கூறி அவரது ஆலோசனையைப் பெறவேண்டுமென்பதை அவர் வற் புறுத்தினர். அவருக்குத் தெரியாமல் ஏதாகிலும் நடந்துவிடுமா னால் அதை அவர் பெரிதும் கண்டித்தார். 1938ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், அயல் நாட்டமைச்சர் ஈடனுக்கும், பிரதமர் நெவில் சேம்பர்லினுக்கும் அயல்நாட்டுக் கொள்கைபற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இறுதியில் ஈடன் தம் பதவியைக் கைவிட நேர்ந்தது. இதுபற்றிய செய்தி அரசரது செவிகளுக்குக் கடைசி வரை எட்டவே இல்லை. எனவே, அரசர் பெரிதும் கோப முற்று, காபினெட் செயலகத்தின் மீது தமக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பைத் தமது அந்தரங்கச் செயலாளர் சர் அலெக்ஸாண்டர் ஹார்டிஞ்சு மூலம் சொல்லி அனுப்பினர். மீண்டும் அத்தகைய தவறு ஏற்படாமலிருக்க ஆவன செய்யும்படி அவரிடம் கூறினர். அதன்பின் முக்கிய நெருக்கடிகளைப் பற்றி மன்னரிடம் அறிவிக் கும்படி பிரதமருக்கு நினைவுபடுத்தும் பொறுப்பு காபினெட் செய லாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதோடு காபினெட் கூட்டங் களில் நடைபெறும் உரையாடல்களின் சுருக்கத்தை அவ்வப் போது காபினெட் செயலாளர் அரசருக்கு அனுப்பிவைக்கவேண்டு மென்ற வழக்கத்தையும் ஆரும் ஜார்ஜ் ஏற்படுத்தினர். வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமராயிருந்தபோது, காபினெட்டின் நடவடிக்கைகளை அவர் உடனுக்குடன் அரசருக்குத் தெரியப்படுத்தி வந்தார்.

அரசருக்கும் அவருக்கும் நல்ல உறவு முறை நிலவிவந்தது. 1940ஆம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட நெருக்கடியின்போது அரசர் வெகு சாதுரியமாக நடந்துகொண்டார். சேம்பர்லின் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்துபோனபோது அரசர் ஹாலிபாக்ஸ்பிரபு (Halifox) என்பாரைப் பிரதமராக்க முதலில் விரும்பினுர். ஆனுல், ஹாலிபாக்ஸ் பதவி ஏற்பதில் உற்சாகம் காட்டவில்லை. இறுதியில் அவர் சர்ச்சிலைப் பிரதமராக நியமித்தார். அங்ஙனம் நியமித்ததில் அவருக்கு ஆரம்பத்தில் சற்றே அதிருப்தி காணப்பட்டதெனினும் நாள் செல்லச் செல்லத் தான் செய்தது முற்றிலும் சரி என்பதை அவர் உணர்ந்தார். முதல் உலகப் போரின்போது, பிரதமர் லாயிட் ஜார்ஜுக்கு ஏற்பட்ட இக்கட்டுகளும் எதிர்ப்புகளும் சர்ச்சிலுக்கு இல்லை. அறிவிலும் ஆற்றலிலும் அவருக்கு ஈடானவர்கள் ஒருவரும் நாட்டிலில்லையாதலால் போட்டியின்றி அவர் எண்ணியதை எண்ணியாங்கு செய்து முடித்தார். மற்றும் லாயிட் ஜார்ஜுக்கும் போர் வீரர்களுக்கும், நல்ல உறவு நிலவவில்லை. ஆனுல், சர்ச்சிலை வீரர்களும் தளகர்த்தர்களும் நேசித்தனர். எனவே, அவர் போரை வெகு சாமர்த்தியமாக நடத்த முடிந்தது. மன்னரது கடமையும் அதனுல் எளிதாகப் போய்விட்டது. பிரதமர் லாயிட் ஜார்ஜ் காலத்து, அவரது தந்தையாருக்கு இருந்த கவலை அவருக்கு இல்லை. இறுதி வெற்றியில் அவருக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும், அவரது உற்சாகம் நிறைந்த பேச்சுகளும் மக்களை எல்லாம் தட்டி எழுப்பி வெற்றிப் பாதையில் நடைபோடச் செய்தது. தங்கள் நலனில் அக்கறை கொண்ட மன்னன் மீது மக்களுக்குப் பாசமும் நேசமும் வளர்ந்தன. ஹிட்லரின் விமானப் படை அரசரது அரண்மனையைத் தாக்கியதைக் கேட்ட மக்கள் அரசரை இன்னும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தனர். தங்களோடு ஒன்ருகச் சேர்ந்து துன்பங்களை அரச குடும்பத்தார் பகிர்ந்து கொள்கின்றனர் என்ற எண்ணம் அவர்களிடையே பரவியது. அரசரும் அரசியாரும் ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் நாடெங்கும் சுற்றிப் போர் முனையிலும், போர்க்கருவி உற்பத்திச் சாலைகளிலும், குண்டு வீசப்பட்ட இடங்களிலும் இருந்த மக்களுக்கு ஆறுதலும் உற்சாகமும் அளித்தனர். அதனுல் குடிமக்களுக்கு அவர்கள்மீது ஒரு பக்தி ஏற்படலாயிற்று. போர் முடிந்த பின் தொழிற் கட்சியினர் தேர்தலில் அமோக வெற்றி பெற்றனர். உடனே அரசர் அட்லியை அழைத்து அமைச்சரவையை அமைக்கும்படி பணித்தார். அயல் நாட்டமைச்சராக யாரை நியமிக்க வேண்டுமென்பதில் அவர் பெரிதும் அக்கறை காட்டினுர். டாக்டர் ஹியூ டால்டன் (Dr. Hugh Dalton) என்பாரை அட்லி, அயல் நாட்டமைச்சராக ஆக்க விரும்பியபோது அரசர் அதை மறுத்து மிஸ்டர் பெவின் என்பாரை நியமிக்கும்

படி ஆலோசனை கூறினர். அட்லியும் அந்த ஆலோசனையை ஏற்றார். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கூட அரசர் ஒருவர் எவ்வளவு செல்வாக்குடன் விளங்க முடியும் என்பதற்கு இந் நிகழ்ச்சி ஒரு தகுந்த எடுத்துக் காட்டாகும். அனுபவம் அதிக மில்லாத அட்லி சர்க்காருக்கு, அவருடைய அறிவும், அனுபவமிக்க ஆலோசனைகளும் அருமருந்தென விளங்கின. 1950ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியினர் ஏனைய கட்சியினரை விட அதிகமாக எட்டே இடங்களைப் பொதுமக்கள் சபையில் பெற்றனர். தொழிற் கட்சி சர்க்காரின் சமதர்மக் கொள் கைக்கு ஆதரவு குறைய ஆரம்பித்தது. எனவே, அக் கொள்கை யின் அடிப்படையில் சட்டசபையைக் கலைத்து மறுதேர்தல் நடத் தும்படி அட்லி அரசரை வேண்டிக்கொண்டார். புற்று நோயால் வாடிக் கொண்டிருந்த அரசர் பிரதமரின் விருப்பத்துக்கேற்ப சபை யைக் கலைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பின் நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மை பெற்று விட்டதால் அரசர் சர்ச்சிலிடம் பிரதமர் பதவியை ஒப்படைத்தார். ஈடன் என்பாரைச் சர்ச்சில் அயல்நாட்டமைச்சராகவும், துணைப் பிரதம ராகவும் நியமித்தபோது, அரசர் துணைப் பிரதமர் பதவி அரசிய லமைப்பில் காணப்படாதொன்றென்பதை எடுத்துக் காட்டினர். சர்ச்சில் அரசரின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டார். இங்ஙனம் ஆரும் ஜார்ஜ் பல்லாற்றாலும் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் சேவை செய்து நற்பெயர் பெற்று வருகையில் 1952ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதியன்று திடீரென மாரடைப்பால் மாண்டார். கருத்து வேறுபாடுகளால் நாடு அலைக்கழிக்கப்பட் டுக்கொண்டிருந்த நேரத்தில் அவர் ஒற்றுமையை வளர்க்க அரும் பாடுபட்டார். நாட்டு மக்களின் இதயத்தில் அரச பதவியைப் பற்றி மேலானதோர் எண்ணத்தை ஏற்படுத்திவிட்டு அவர் மறைந்தார்.

இரண்டாம் எலிசபெத்

இன்று இங்கிலாந்தின் இராணியாராக விளங்கும் இரண்டாம் எலிசபெத் ஒரு ஜனநாயக நாட்டின் தலைவியாக இருப்பதற்குரிய எல்லாத் தகுதிகளையும் பெற்று விளங்குகின்றார். நாட்டின் பிரதமரை நியமிக்கும்போது அவர் மிகக் கவனமாகவே நடந்து கொள்கிறார். சர்ச்சிலுக்குப் பதிலாக ஈடனையும், ஈடனுக்குப் பதிலாக மாக்மில்லனையும் அவர் பிரதமராக நியமித்தபோது அரசியலமைப்புக் கொத்த முறையிலேயே அவர் நடந்துகொண் டார். யாரை நியமித்தால் அவர் பாராளுமன்றத்தில் பெரும்பான் மையான ஆதரவைப் பெறுவார் என்பதை அவர் முன்கூட்டியே அறிந்துகொண்ட பின்னரே நியமனங்களைச் செய்தார். மாக்மில்

லனைப் பிரதமராக ஆக்குமுன், பழைய பிரதமர் ஈடன், சாலிஸ்பரி பிரபு போன்றவர்களை அவர் கலந்தாலோசித்தே ஒரு முடிவுக்கு வந்தார். வில்சனையும் அவர் பல அறிஞர்களைக் கலந்தாலோசித்தே பிரதமராக நியமித்தார். காமன்வெல்த் நாடுகளுக்கும், பிரிட்டனுக்கு மிடையே உள்ள உறவு வலுக்க அவர் பெரிதும் பாடுபடுகிறார். பல நாடுகளுக்கும் அவர் சுற்றுப் பயணம் செய்து யாவரது நன்மதிப்பையும் பெறுகின்றார். அவர் பட்டத்துக்கு வந்தபின் குடியரசு நாடுகளும் காமன்வெல்த்தில் இடம் பெற வசதியளிப்பதற்காக, அவரது பட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. 'காமன்வெல்த் நாடுகளின் தலைவி' (**Head of the Commonwealth**) என்றே அவர் தற்போது அழைக்கப்படுகின்றார். ஆனால், டொமினியன் நாடுகளுக்கு அவர் இன்னும் இராணியாகவே விளங்குகின்றார். பிரிட்டிஷ் சமுதாயத்தின் தலைவி என்ற முறையிலும், திருச்சபைக்குத் தலைவி என்ற முறையிலும் அவரது பெருமை இன்றும் ஒரு சிறிதும் குன்றவில்லை. அரசியாருக்குக் கொடுக்கவேண்டிய கௌரவத்தைப் பிரிட்டிஷ் மக்கள் மனமுவந்து கொடுக்கின்றனர். அரசியார் மகுடமேற்றபோதும், அவருக்குக் குழந்தை பிறந்த போதும், பிரிட்டிஷ் மக்கள் அவற்றைத் தேசீய விழாக்கள் போல் கொண்டாடினர். இராணியாருக்கு நெருங்கியிருக்கும் அதிகாரிகள் பொதுமக்களோடு நல்ல தொடர்பு கொண்டவர்களா யிருப்பதில்லை என்று ஒருசிலர் குறை கூறுகின்றனர், ஆனால், அவர்கள் அமைச்சர்களின் விருப்பப்படியே நியமிக்கப்படுகிறார்களாதலால் அவர்களிடம் காணப்படும் குறைக்கு அரசியார் பொறுப்பாளியல்லர். மற்றபடி அரசியார் நடத்தும் விருந்துகளில் விவாகரத்தில் ஈடுபட்டவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்றும் அவரது வேட்டையாடும் காடுகளில் செல்வந்தர்களே அனுமதிச் சீட்டைப் பெற முடிகிறதென்றும் சிலர் குறை கூறுவர். எனினும், பொதுவாகப் பார்க்குமிடத்து அரசியார் யாவருக்கும் நடுநிலையில் நின்று கண்ணியத்துடன் ஆட்சி புரிகின்றார் என்பதே கண்கண்ட உண்மையாகும்.

அவரது கணவர் எடின்பர்க் கோமகனும், கிரேக்க நாட்டில் பிறந்தவராயிருந்தும், பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் பயின்றவரானதால் ஆங்கில மக்களின் மனப்பான்மையைப் புரிந்துகொண்டு அவர்கள் மனமுவக்கும் வண்ணம் நடந்துகொண்டார். பல விழாக்களில் அவர் கலந்துகொண்டு பேசும்போது, அவ்வப்போது மனதில் தோன்றுபவைகளையே அவர் பேசுவது வழக்கம். முன்பே தயாரிக்கப்பட்ட உரைகளை அவர் வாசிப்பதில்லை. அத்தகைய முறையினால் அவர் மக்களின் உள்ளன்பைப் பெரிதும் பெற முடிந்தது. இராணியாருக்கும் அமைச்சர்களுக்கும் அவர்

சிறந்த ஓர் அரசியல் ஆலோசகராக விளங்கி வருகிறார். அவரது துணைகொண்டு இராணியார் தமது பதவிக்குரிய கண்ணியத்தையும் கடமையையும் கண்ணுங் கருத்துமாய்ப் பேணி வருவதோடு, குடிமக்களின் நன்மதிப்பையும் பெற்று ஆட்சி புரிந்து வருகிறார். "இராணியார் நீடு வாழ்க" (Long live the Queen) என்று ஒவ்வொரு ஆங்கிலேயனும் உண்மையாகவே இறைவனை வேண்டி வழிபட்டு வருகின்றனர்.

முடியரசின் அவசியம்

மக்களாட்சி நன்கு மலர்ந்துள்ள இங்கிலாந்தில் முடியரசு தேவையில்லாததும், காலத்துக் கொவ்வாததுமானதாகும் எனப் பலர் கூறுகின்றனர். ஆனால், பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலோர் முடியரசையே விரும்புகின்றனர். ஏனெனில், அவர்கள் இயல்பாகவே பழைய நிறுவனங்களில் பாசங் கொண்டவர்கள். எனவே, அவற்றின் தன்மை (Spirit) மாற்றப்படலாமேயன்றி உருவம் (Form) மாற்றப்படலாகாது என அவர்கள் நினைக்கின்றனர். மேலும் முடியரசை நீக்கிவிட்டால் அதற்குப் பதிலாக வரப்போகிற குடியரசுத் தலைவர் எவ்வகையில் உயர்ந்தவராயிருக்க முடியும் என அவர்கள் வினவுகின்றனர். ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை மக்கள் அத்தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், அரசியலமைப்பு மரபுகளுக்கு ஏற்ப அவருக்கு ஓர் அதிகாரமும் இருக்காது. அங்ஙனம் அதிகாரமில்லாத ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை ஏன் நாட்டின் பொருளை வீணாக்க வேண்டும் என்றும், அத்தகைய தேர்தலுக்கு ஆகும் செலவில் ஒரு சிறு பகுதியை வைத்துக்கொண்டு அரச பதவியை நீடிக்கலாமென்றும், அதனால் பொருள் மிச்சமாவதோடு, தொன்று தொட்டு வருகிற ஒரு கௌரவமான நிறுவனமும் காப்பாற்றப்படுமெனவும் அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் கூற்றிலும் உண்மை யில்லாமலில்லை. அரசுரிமையை அகற்றிவிடுவதால் பெரிய இலாபம் ஒன்றும் நாட்டுக்கு ஏற்பட்டுவிடப் போவதில்லை. அதற்குப் பதிலாக, அது நீடிப்பதால் பெரிய நஷ்டமும் இல்லை. மாறாக ஒரு சில நன்மைகளும் உண்டு.

முடியரசு, மக்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய ஒரு நிறுவனம். ஒரு மன்னரை மக்கள் எளிதாகப் புரிந்துகொண்டு அவரது ஆணைகளுக்குக் கீழ்ப்படிவர். எனவே அரசாங்கத்தின் செயல்கள் எல்லாம் ஒரு மன்னர் பெயரில் நடைபெறுவது நல்லது. ஆனால், குடியரசில், நாட்டின் இறைமை கட்புலனுக்குத் தெரியாத பல நிறுவனங்களில் முடங்கிக் கிடக்கிறது. ஆட்சி பீடத்தை நேசிப்பதும், விசுவாசமாய் நடந்துகொள்வதும் முடியரசில் எளிது. குடியரசில் அது ஓரளவு செயற்கையாகத்தான் செயல்படுகிறது.

மற்றும் நாட்டின் இறைமையின் உருவகமாக மன்னரை மக்கள் மதிக்கின்றனரேயன்றி ஒரு மனிதர் என்பதற்காக அவரை யாரும் மதிப்பதில்லை. மன்னரும் மக்கட் பிரதிநிதிகளின் விருப்பத்தை நிறைவேற்றுபவராக இருக்கிறாரேயன்றி தன் சுய இச்சசைப்படி எதுவும் செய்வதில்லை. அவருக்குக் கீழ்ப்படிவதால் மக்கள் தங்களைத் தாங்களே மதிக்கின்றார்கள் என்றே கருதலாகும்.

பிரிட்டிஷ் காமன்வெல்த் பொதுநலக் கூட்டுறவு நாடுகளின் தலைவியாக இங்கிலாந்தின் இராணியார் விளங்குகின்றார். டொமினியன்கள் அவரைத் தங்கள் நாடுகளின் இராணியாகவும், ஏனைய குடியரசு நாடுகள் அவரைக் காமன்வெல்த்தின் தலைவியாகவும் கருதுகின்றன. பிரிட்டனையும் ஏனைய காமன்வெல்த் நாடுகளையும் இணைக்கின்ற ஒரு சங்கிலியாக இங்கிலாந்தின் இறைவி விளங்குகின்றார். காமன்வெல்த் நாடுகளில் இராணியார் அடிக்கடி சுற்றுப் பயணம் செய்கின்றார். அந்நாடுகளிலுள்ள மக்கள் இராணியாரை நேசிக்கின்றனர். அது அவர்களுக்குப் பாராளுமன்றம் போன்ற கட்புலனாகா நிறுவனங்களை நேசிப்பதைவிட எளிதாகின்றது. காமன்வெல்த் உறவு நாடுகளிடையே ஒற்றுமையும் உண்மையான உறவும் ஏற்பட இராணியார் பெரிதும் துணை புரிகின்றார்.

ஆங்கில அரசர் அல்லது அரசியார் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்லர். எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர். எனவே, கட்சி ஆட்சி நடைபெறும் இங்கிலாந்தில் அவரே தக்க நடுவராக நின்று நடுநிலைமையோடு கூடிய அறிவுரைகளை வழங்கக் கூடியவர். ஐந்தாண்டுக் கொருமுறை அரசாங்கங்கள் மாறுகின்றன. ஆனால், அரசர் மாறுவதில்லை. எனவே, அவரது அனுபவத்தோடு கூடிய ஆலோசனைகளால் புதிதாக வருகின்ற அமைச்சர்கள் பெரிதும் பயனடைகின்றனர். பதவியைவிட்டுப் போகும் அமைச்சரவைக்கும் புதிதாகப் பதவி ஏற்கும் அமைச்சரவைக்கும் ஒரு பாலமாக அவர் விளங்குகின்றார். ஓர் அமைச்சரவை பதவி விலகியபின் மறு அமைச்சரவை பதவி ஏற்கும் வரை நாட்டில் நிருவாகம் தொடர்ச்சியாக நடைபெறவும் அவர் துணை புரிகிறார். நாட்டின் கொள்கைகளிலும் செயல்களிலும் தொடர்ச்சி (Continuity) நிலவுவதற்கு அவர் உதவுகின்றாரெனில் மிகையாகாது. நெடுநாள் அனுபவத்தின் காரணமாக அரசர்கள் முன்னேற்றத்துக்குத் தடைபோடுபவர்களாக இருப்பார்களேயன்றி அதை வளர்க்க உதவமாட்டார்கள் என கிளாட்ஸ்டன் போன்றவர்கள் கருதுகிறார்கள். ஆனால், பொதுவாக அரசர்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட முயற்சிப்பதில்லை. அப்படி முயற்சித்தாலும் அமைச்சர்கள் அதை மீறி வினையாற்ற அரசிய

லமைப்பு அனுமதிப்பதால் அத்தகைய அச்சத்துக்கும் இடமில்லை. தீங்கு செய்ய இயலாத அதே சமயம், நன்மைகள் பலவற்றைச் செய்யக்கூடிய, நாட்டு நிருவாகம் நன்கு முட்டின்றி நடைபெற உதவுகின்ற ஒரு நிறுவனமாகவே முடியரசு விளங்குகின்றது. அதனாற்றான் அதன் உருவகமாக உள்ள அரசரையும், அரசியாரையும் பிரிட்டிஷ் மக்கள் பொன்னேபோல் போற்றி வருகின்றனர்.

2. காபினெட் அமைச்சரவை

'முடிசூட்டப்பெற்ற குடியரசு' (Crowned Republic) என இங்கிலாந்தின் அரசியலமைப்பை ஒருசிலர் வர்ணிக்கின்றனர். காரணம் அங்குப் பெயரளவில் ஆட்சி புரிபவர் ஓர் அரசரோ அரசியரோ எனினும், உண்மையில் நாட்டை ஆள்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில அமைச்சர்களே ஆவர். அவ்வமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு முற்றிலும் பொறுப்பு வாய்ந்தவர்கள். அன்னாரடங்கிய குழுவே 'காபினெட்' என்று அழைக்கப்படுகிறது. 'காபினெட்' என்ற இந்த அமைச்சரவைதான் நாட்டின் உண்மையான நிருவாக நிறுவனமாகும் (True Executive). இந்த அச்சினை மையமாகக் கொண்டே ஆங்கில அரசாங்கம் எனும் இயந்திரம் சுழல்கிறது. எனவே, இன்றைய ஆங்கில அரசியலமைப்பில் 'காபினெட்' ஓர் ஒப்பற்ற நிறுவனமாக விளங்குகிறது.

வளர்ச்சி வரலாறு

இங்கிலாந்தின் மன்னர்கள் ஆதியிலிருந்தே, தங்களுக்கு ஆலோசனை கூறுவதெற்கென ஒரு சபையை வைத்திருந்தார்கள். ஆங்கிலோ-சாக்சானியர்களின் காலத்தே அது விடனுஜ்மூட் (Witanagemot) என அழைக்கப்பெற்றது. நார்மானிய மன்னர்கள் காலத்து அது 'பிரிவி கவுன்சில்' (Privy Council) என்ற பெயர் பெற்றது. முக்கியமான பிரச்சினைகளை மன்னர்கள் அக்கவுன்சிலின் ஆலோசனையைக் கேட்டே தீர்த்து வந்தனர். நாட்டில் செல்வமும் செல்வாக்கும் படைத்த பிரபுக்கள் பலரும் அக்கவுன்சிலில் இடம் பெற்றிருந்தனர். டியூடர் மன்னர்கள் காலத்தே சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அதில் இடம் பெற்றார்கள். கவுன்சில் உறுப்பினர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. எனவே, மன்னர்கள் தங்களுக்குப் பிரியமான ஒரு சிலரை மட்டுமே கலந்தாலோசிக்கிற வழக்கம் ஏற்பட்டது. மன்னருக்கு அருகில் சதா இருந்து ஆலோசனை கூறியவர்கள் 'பிரிவி கவுன்சிலர்கள்' அல்லது அந்தரங்க ஆலோசகர்களென்றும், மற்றபடி நீதிபதிகளாகவும், அரசாங்க அதிகாரிகளாயும் பணியாற்றியவர்கள் 'சாதாரண கவுன்சிலர்

கள்' (Ordinary Councillors) என்றும் அழைக்கப்பட்டனர். முதலாம் சார்லஸ், இரண்டாம் சார்லஸ் ஆகிய இருவரும் சிறிய ஆலோசனைக் குழுக்களைக் கலந்துகொண்டே காரியங்களைச் செய்தனர். அக்குழுக்கள் அரசரது தனிப்பட்ட அறையில் அதாவது காபினெட்டில் இரகசியமாகக் கூடி அரசருக்கு ஆலோசனை கூறியதால் அவை காபினெட் குழுக்கள் எனப் பெயர் பெற்றன. பேக்கன் (Bacon) என்ற அறிஞர்தான் முதலில் காபினெட் என்ற சொல்லை எடுத்து ஆண்டவர். மெகாலே பிரபுவும் பிற்காலத்தே அச்சொல்லைப் பெரிதும் பயன்படுத்தினர். ஆனால், அச்சொல் அரசியலமைப்பில் இடம்பெருததொன்றேயாம். காபினெட் ஆட்சி முறை மரபுவழி நடைபெறும் ஓர் ஆட்சியே அன்றி அரசியலமைப்பில் வகுத்தளிக்கப்பெற்ற ஓர் ஆட்சி முறையன்று. எனினும், அது ஒன்றுதான் ஆங்கில அரசியலமைப்பின் சிறப்பியல்பாகத் திகழ்கிறது.

இரண்டாம் சார்லஸ் ஐவரை உட்கொண்ட 'கெபால்' எனும் அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்டே ஆட்சி நடத்தி வந்தார். அவையின் உறுப்பினர்களை அரசர்கள் தம் பிரியப்படியே தேர்ந்தெடுத்துக்கொண்டனர். ஆனால், கட்சி முறை நாட்டில் வளர ஆரம்பித்தபின் ஒரே கட்சியிலிருந்து அமைச்சர்களைப் பொறுக்கும் வழக்கத்தை மன்னர்கள் மேற்கொள்ளலாயினர். ஆரம்பத்தில் விக்கு, டோரி எனும் இரு கட்சியினரையும் ஆதரித்த மூன்ரும் வில்லியம் எனும் மன்னர் தனது ஐரோப்பியப் போர்களை ஆதரித்த விக்குக் கட்சியினரையே அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தை நாளடைவில் மேற்கொண்டார் (1696). ஒரே கருத்துடன் திறம்படச் செயல்பட்ட அவ்வமைச்சரவை 'விக் ஜண்டோ' (Whig Junto) என அழைக்கப்பட்டது. ஆன் இராணியார் காலத்தேயும் போர்க் காலத்தே அதை ஆதரித்த விக்குகளும், சமாதான காலத்தே அதை ஆதரித்த டோரிகளுமே அமைச்சரவையில் இடம் பெற்றனர். ஹனேவரியர்களான முதல் இரண்டு ஜார்ஜுகள் காலத்தேதான் தற்கால காபினெட் உண்மையிலேயே உருவாயிற்று. அம் மன்னர்கள் தங்களை ஆதரித்த விக்குக் கட்சியினரை அமைச்சரவையில் அமர்த்தியதோடு அவர்களுக்கு ஆட்சித் துறையில் பூரண அதிகாரத்தையும் வழங்கிவிட்டனர். ஆங்கில மொழி தெரியாத காரணத்தால் அவர்கள் அமைச்சரவைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பையும் விட்டொழித்தனர். எனவே, அமைச்சர்கள் தங்களுக்குள்ளாகவே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அவரே நாளடைவில் பிரதமர் (Premier) என்று அழைக்கப்பட்டார். அத்தகைய நிலையில் முதலில் பணியாற்றியவர் வால்போல் (Walpole) எனும் பெருமகனு

வார். அவர் தம்மைப் பிரதம மந்திரி எனப் பிறர் அழைத்ததை வெறுத்தாரெனினும், பிரதமருக்குரிய இலக்கணங்களை வகுத்து நிலை நாட்டியவர் அவரேயாகும். அமைச்சரவையில் ஒரே கட்சியைச் சேர்ந்த ஒரே கருத்துடையவர்களையே அவர் நியமித்தார். கருத்தொருமையை (Homogenity) அவர் நன்கு வற்புறுத்தினார். அதோடு தனது கருத்துப்படியே ஏனைய அமைச்சர்கள் நடக்க வேண்டுமென்பதையும் அவர் வற்புறுத்தினார். தன்னை எதிர்த்த டௌன்சென்ட் (Townshend), புல்டினி (Bulteny), கார்ட்டரெட் (Carterat) போன்றவர்களை அவர் அமைச்சரவையினின்றும் வெளியேற்றினார். அதன் மூலம் தலைமை அமைச்சரின் இறைமை (Primacy of the Premier) எனும் காபினெட் மரபையும் அவர் ஏற்படுத்தினார். இறுதியாக அமைச்சர்கள் பொதுமக்கள் சபைக்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும், அச்சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டபின் அவர்கள் ஒரு கணமும் பதவியிலிருக்கக் கூடாது என்றும் கூறி 'அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பு' (Collective Responsibility) என்ற மரபை நிலை நாட்டியவரும் அவரே. சிப்பன்ஹாம் தேர்தலில் மக்கள் அவருக்கு எதிராக வாக்களித்ததாலும், அவரது ஸ்பானியப் போர்க் கொள்கையைப் பலர் கண்டித்ததாலும், 1742இல் அவர் பதவியைக் கைவிட்டார். ஆனால், ஏனைய அமைச்சர்களில் பலர் பதவிகளில் ஒட்டிக்கொண்டே இருந்தனர். கூட்டாக எல்லா அமைச்சர்களும் பதவிகளைத் துறக்க வேண்டுமென்ற கொள்கை நாளடைவில் ஏற்பட்டது. 1782ஆம் ஆண்டில் நார்த் பிரபு பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டபோது அவரது அமைச்சரவை கூட்டாக ராஜினாமாச் செய்தது. 1783 முதல் 1801 வரை ஆண்ட வில்லியம் பிட் எனும் பிரதமரின் ஆட்சிக் காலத்தே பிரதமரின் இறைமையும், காபினெட் ஆட்சி முறையின் பல்வேறு இலக்கணங்களும் நன்கு நிறுவப்பெற்றன. காபினெட் கூட்டங்களில் அரசர் தலையிடக் கூடாது என்ற மரபும் நாளடைவில் வலுவடைந்தது. அமைச்சரவையின் அலுவல்களில் மூன்றாம் ஜார்ஜ் அடிக்கடி தலையிட்டாரெனினும் அதன் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க அவர் முற்படவில்லை. பிரதமர் சொற்படியே அரசர் ஆட்சி புரியவேண்டுமென்ற மரபும் நாளடைவில் ஏற்பட்டுவிட்டது.

சிறப்பியல்பு

'காபினெட்' என்ற நிறுவனம் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படாததொன்றே. எனினும், அதிலுள்ள அமைச்சர்கள் தொன்றுதொட்டு வருபவர்களும் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களுமேயாவர். ஆனால், 'பிரதமர்' பதவியானது 1917ஆம்

ஆண்டு வரையில் சட்டத்தில் இடம்பெறவில்லை. எனினும், நாட்டின் இறைமையானது மன்னரிடமிருந்து பாராளுமன்றத்துக்கு மாறிவிட்ட பின், காபினெட் ஆட்சி முறை நாட்டிற்கு இன்றிமையாததாகிவிட்டது. இறைமை பெற்ற பாராளுமன்றம் நாட்டின் நிருவாகத்தைத் தனக்குக் கட்டுபட்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்தது. அக் குழுவின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிலும் பொதுமக்கள் சபையிலிருந்தே அமைச்சர்களில் பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற நியதியும் நாளடைவில் ஏற்பட்டது. இங்ஙனம் பாராளுமன்றமும் நிருவாக அரசாங்கமும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் ஒத்துழைத்து நாட்டை ஆளுகின்ற முறையே காபினெட் ஆட்சியின்-சிறப்பியல்பாகும். காபினெட் உறுப்பினர்கள் யாவரும் பாராளுமன்றத்தின் ஏதாவதொரு சபையின் உறுப்பினர்களாக இருப்பதோடன்றி பிரிவி கவுன்சிலின் உறுப்பினர்களாவுமிருக்கின்றனர். ஆனால், ஒருசிலர் கருதுகின்றபடி காபினெட்டைப் பாராளுமன்றத்தின் கமிட்டி அல்லது பிரிவி கவுன்சிலின் கமிட்டி எனக் கருதுவதற்கில்லை. இன்ன காரியத்தைத்தான் செய்யவேண்டுமென்று காபினெட்டைப் பாராளுமன்றமோ, பிரிவி கவுன்சிலோ பணிப்பதில்லை. அது சுயேச்சையாகவே நாட்டை ஆளுகின்றது. சில சமயங்களில் அது பாராளுமன்றத்தையே அடக்கி ஆளுகிறது.

அரசியலமைப்பின் மரபின்படி காபினெட் அமைச்சர்கள் மூன்று வகையான பொறுப்பை மேற்கொள்ள வேண்டியவர்களாவர். முதலில் அவர்கள் அரசருக்குப் பொறுப்பானவர்கள். அரசருக்கு அவர்கள் தங்களது கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அறிவிக்க வேண்டும். அவற்றை மாற்றிக்கொள்ளும்படி அறிவுரை கூற அரசருக்கு உரிமை உண்டு. ஆனால், தன் கருத்தை ஒப்புக் கொள்ளும்படி அமைச்சர்களை வற்புறுத்த அரசருக்கு உரிமை இல்லை. அத்தகைய உரிமை இல்லாததால்தான் எட்டாம் எட்வர்ட் முடிதுறக்க நேர்ந்தது. எனவே, அமைச்சர்களின் ஆலோசனைப்படியே அரசர் நடந்துகொள்ள வேண்டுமென்ற மரபே இப்போது வழக்காற்றிலுள்ளது. பிரதமரை நியமிக்கும் அதிகாரம் அரசருக்கு உண்டு. ஆனால், சட்ட சபையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரையே அரசர் பிரதமராக நியமிக்க வேண்டுமென்பதும் இப்போது வழக்கமாகிவிட்டது. எனவே, அமைச்சர்கள் உண்மையில் பாராளுமன்றத்துக்கே பொறுப்பு வாய்ந்தவர்களாயிருக்கின்றனர்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலமாகவோ, அல்லது அமைச்சர்கள் கொண்டுவரும் மசோதாக்களைத் தோற்கடிப்பதன்

மூலமாகவோ, அன்றிப் போதிய மானியங்களைக் கொடுக்க மறுப்பதன் மூலமாகவோ பாராளுமன்றம் அமைச்சரவையைக் கூட்டாக வெளியேற்றி விடலாம். அம்மாதிரி சமயங்களில் 1832ஆம் ஆண்டில் நடைபெற்றது போல, பிரதமர் பார்த்துப் பாராளுமன்றத்தைக் கலைத்து மறு தேர்தல் நடத்தும்படியும் அரசரிடம் கூறலாம். தேர்தலுக்குப் பின் வேறு கட்சி பெரும்பான்மை பெற்றுவிட்டால் ஆளும் கட்சி பதவியை விட்டு விலக வேண்டியதுதான். இத்தகைய நிலை தொழிற் கட்சி சர்க்காருக்கு 1950ஆம் ஆண்டில் ஏற்பட்டதென்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். எனவே, பாராளுமன்றமும் காபினெட்டும் ஒன்றை ஒன்று விழுங்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளதை நாம் ஆங்கில அரசியலமைப்பில் காண்கிறோம். மூன்றாவதாக அமைச்சர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பொறுப்பு வாய்ந்தவர்கள். ஓர் அமைச்சர் தமது நிருவாகத் துறையில் கடைப்பிடிக்க விரும்பும் கொள்கையை ஏனைய அமைச்சர்களுக்கும் கூறி அவர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும். பெரும்பான்மையினரின் ஒப்பத்தைப் பெறமுடியவில்லை என்றால் அதுவும் முக்கியமாகப் பிரதமரின் ஒப்பத்தைப் பெற முடியாது போனால் அவர்கள் பதவியைக் கைவிட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. இங்ஙனம் முப்பெரும் பொறுப்புகளை மேற்கொண்டு காபினெட் அமைச்சர்கள் பணிபுரிகின்றனர்.

பிரதமர் அல்லது தலைமை அமைச்சர்

'காபினெட்' என்ற வளைவுச் சுவரின் மூலக்கல் எனத் திகழ்பவர் (Keystone of the Cabinet arch) பிரதமரே என மோர்லி (Morley) எனும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இவர் சில சமயங்களில் எல்லாம் வல்லவராகவும் இருக்கின்றார். முக்கியமாகப் போர்க் காலங்களில் அவர் வைத்ததுதான் சட்டம். போர்க் காலத்தே சர்ச்சில் எனும் பிரதமர் பெருஞ் செல்வாக்குடன் விளங்கினார். ஒரு சமயம் இளம் பிள்ளைகளின் உயர்தரக் கல்வி பற்றிய மசோதா ஒன்றைப் பாராளுமன்றம் விரும்பாதபோது அது சட்டமாகாவிடில், தான் ராஜினாமா செய்துவிடுவதாகப் பயமுறுத்தி அம் மசோதாவை ஒப்புக்கொள்ளும்படி அவர் செய்துவிட்டார். இங்கிலாந்தில் இங்ஙனம் காபினெட் சர்வாதிகாரம் (Cabinet Dictatorship) ஏற்பட வழி இருக்கிறது. ஆனால், சாதாரண காலங்களில் பிரதமர் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பதே வழக்கமாக இருக்கிறது. ஆனால், ஒருசிலர் அம் மரபை எதிர்ப்பதும் உண்டு. 1834ஆம் ஆண்டில் பீல் என்பார் போதிய பெரும்பான்மையான ஆதரவைப் பாராளுமன்றத்தில் பெறாதபோதிலும், பதவியைவிட்டு விலகமாட்டேன் என

அடம் பிடித்தார். 1867இல் டிஸ்ரேலி அதே முறையில் நடந்து கொண்டார். ஆனால், அதன் பின் தேர்தலில் பெரும்பான்மையை இழந்துவிட்ட பிரதமர் ஒருவர், தம் பதவியை விட்டு விடுவதென்பது மரபாகி விட்டது. சட்டசபையில் நம்பிக்கையின்மை வெளிப்படவேண்டுமென்பதுகூட அவ்வளவு முக்கியமாகத் தற்காலத்து இல்லை. பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாகச் செய்தித் தாள்கள் மூலமாக அறிந்த உடனேயே பிரதமர்கள் பதவியை விட்டு விலகிவிடுவது வழக்கமாகிவிட்டது. 1939ஆம் ஆண்டில் நெவில் சேம்பர்லின், ஹிட்லரின் செக்கோஸ்லோவேகிய வன்முறைத் தாக்குதலை ஆதரித்ததால், நாட்டில் செல்வாக்கிழந்து 1940இல் பதவி துறந்தார். அச்சமயம் அவருக்குப் பாராளுமன்றத்தில் நல்ல ஆதரவு இருந்தது என்பது நினைவுகூர்தற்பாற்று. 1916ஆம் ஆண்டிலும் தேர்தலில்லாமலேயே பிரதமர்கள் மாறியதை நாம் கண்டோம்.

பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அநேகமாகப் பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சித் தலைவராகவே இருப்பார். ஆனால், சில சமயங்களில் அரசர் பார்த்து சிறுபான்மைக் கட்சித் தலைவர்களையும்கூடப் பிரதமராக நியமிக்கலாம். ஐந்தாம் ஜார்ஜ் 1921ஆம் ஆண்டில் அங்ஙனம் செய்தார். ராம்சே மாக்டனால்ட் எனும் சிறுபான்மைத் தொழிற்கட்சித் தலைவரை அவர் பிரதமராக்கினார். லிபரல் கட்சியின் துணைக்கொண்டு அவர் ஆட்சி புரிந்து வந்தார். சில சமயம் கூட்டு மந்திரி சபைகள் அமைக்கப்படலாம். அப்போதும் அரசர் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து பிரதமரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை.

பிரதமரை மன்னர் தேர்ந்தெடுத்த பின், ஏனைய அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பிரதமருக்கே உண்டு. நாட்டிலுள்ள பல்வேறு நலன்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அவர் மந்திரிகளை நியமிக்கவேண்டும். அரசரின் மேலான ஆலோசனைகளையும் அவர் இதில் பெற்றுக் கொள்ளலாம். அங்ஙனம் நியமிக்கப்பட்ட அமைச்சர்களைத் தனது கருத்துக்கு ஏற்ப நடக்கும்படி வற்புறுத்தப் பிரதமருக்கு உரிமை உண்டு. தனக்கு ஒத்துவராதவர்களை அவர் உடனே பதவியிலிருந்து நீக்கிவிட முடியும். 1772இல் தன்னை எதிர்த்த தர்லோ பிரபுவை (Lord Thurlow) பிட் என்னும் பிரதமர், லார்டு சான்சலர் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். 1917இல் மெசபொடோமியா போரைச் சரிவர நடத்தாத குற்றத்திற்காக ஆஸ்டன் சேம்பர்லின் பதவி துறந்தார். 1922இல் துருக்கிய உடன்பாட்டைப் பற்றி இந்திய சர்க்காரின் கொள்கையை வகுத்த மாண்டேகு என்பார் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 1934இல் அபிசீனியாவைப் பங்குபோட

வேண்டுமெனக் கூறியதற்காக ஹோர் (Hoare) என்பார் பதவி துறந்தார். பிரதமரோடு ஒத்துப்போக முடியாததால், 1938இல் டஃப் கூப்பரும் (Duff Cooper), ஈடனும் பதவி துறந்தனர்.

சட்டசபையில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றுள்ள பிரதமர்களின் அதிகாரங்கள் எல்லையற்றவை. அவர்கள் உண்மையில் செய்யக்கூடாத காரியம் எதுவுமில்லை எனலாம். இருப்பினும், அவர்கள் அத்துமீறித் தான்தோன்றித்தனமாகவோ அன்றித் திறமையற்ற முறையிலோ நடந்துகொள்ள முடியாது. அப்படி நடந்துகொண்டால் பெரும்பான்மைக் கட்சியினரே பார்த்துப் பிரதமரை மாற்றிவிட முடியும். உலகப் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பிரதமர்கள் மாற்றப்பட்டது இவ்விதத்திலேயேயாகும். எனினும், சாதாரணமாகப் பிரதமர் ஏராளமான அதிகாரங்களைக் கையாளுகிறார். அவர் ஆலோசனையின்படியே நாட்டின் சிவில் இராணுவ உயர் அதிகாரிகளும், திருச்சபை அதிகாரிகளும் நியமிக்கப்படுகின்றனர். 'அரசரது பேருரை' எனும் சட்டசபைத் தொடக்க உரையைத் தயாரிப்பவர் அவரே. நாட்டின் கொள்கைகளை வகுத்து அதற்கேற்றபடி சட்டங்களைக் கொண்டு வருவதில் அவரே பெரும் பங்காற்றுகிறார். நாட்டின் சட்டங்களைப் பெரும்பாலும் அவரும் அவரது அமைச்சர்களும் கொண்டு வருகின்றனர். சட்டங்களைப் பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றுபவர்களும் அவர்களே. அச் சட்டங்களை அமுல் நடத்தும் பொறுப்பும் அமைச்சரவையைச் சேர்ந்ததே ஆகும். பாராளுமன்றக் கூட்டம் நடைபெறாதபோது அவசரச் சட்டங்களையும் அவர்கள் ஆக்கலாம். நிருவாக நிறுவனங்கள் சம்பந்தமான வழக்குகள் பலவற்றை அமைச்சர்களே விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். நாட்டின் வரவு செலவுகளைத் தீர்மானிப்பதும் வரி போடுவதும் அவர்கள் பொறுப்பே யாகும். நாட்டின் பாதுகாப்பைக் கண்காணிப்பதும், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், வெளிநாட்டு உறவுகளைத் தீர்மானிப்பதும் அமைச்சரவையேயாகும். பிரதமர் சொற்படியே மன்னர் பிரபுப் பட்டங்களையும் சில சமயங்களில் இறுதி மன்னிப்பையும் வழங்கின்றார். அவர் சொற்படியே பாராளுமன்றத்தை மன்னர் கூட்டுகிறார். வேண்டும்போது ஒத்திப்போடுகிறார்; அல்லது கலைத்து விடுகிறார். இங்ஙனம் சட்டத்துறை, நிருவாகத் துறை இரண்டிலும் பெருமளவிலும், நீதித்துறையில் சிறிய அளவிலும் பிரதமர் தமது சகாக்களின் துணைக்கொண்டு அதிகாரங்களைச் செலுத்தி வருகிறார்.

1905ஆம் ஆண்டில்தான் அரசரது வாரண்ட் (Royal Warrant) ஒன்றின்படி பிரதமர் என்ற பதவி அரசாங்க ஏடுகளில்

இடம் பெற்றது. அதன்படிப் பிரதமருக்கு ஏனையோருக்கிடையே முதலிடம் தரப்பட்டது. 1917ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டம் லீ பிரபுவால் (Lord Lee) அளிக்கப்பட்ட ஒரு மாளிகையைப் பிரதமருக்கு இனமாக வழங்கியது. பிரதமர் என்ற சொல் அப்போதுதான் பாராளுமன்றச் சட்ட நூலில் (Statute Book) இடம் பெற்றது. 1937ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசின் அமைச்சர்கள் சட்டம் (Minister of the Crown Act) பிரதமரின் சம்பளத்தையும், ஏனைய அமைச்சர்களின் ஊதியங்களையும், எதிர்க்கட்சித் தலைவரின் மாத வரும்படியையும் தீர்மானித்தது.

காபினெட்டின் அமைப்பு

காபினெட்டில் இருபது பேர்களுக்குட்பட்ட அமைச்சர்களே இடம் பெறுவது வழக்கம். அவர்கள் யாவரும் பெரும் நிருவாகத் துறைகளின் தலைவர்களாய் இருப்பர். உள் துறை, அயல்நாட்டுத் துறை, ஸ்காட்லாந்து, குடியேற்றநாடுகள், காமன்வெல்த் நாடுகள் ஆகியவற்றுக்கு ஐந்து செயலாளர்களும் (Secretaries of State) தல ஆட்சித்துறை, வீட்டு வசதி, கல்வித்துறை, பாதுகாப்புத் துறை, பொதுப்பணித் துறை, தொழில் துறை, விவசாயம், உணவு, மீன் வளர்ப்புத் துறைகள் (Fishery) ஆகியவைகளுக்குத் தனித்த அமைச்சர்களும் (Ministers) இருக்கின்றனர். அதோடு லார்டு சான்சலர் (Lord Chancellor) என்ற நிதித்துறைத் தலைவரும், லார்டு பிரஸிடென்ட ஆஃப் தி கவுன்சில் (Lord President of the Council) என்ற பிரிவி கவுன்சில் தலைவரும், குறிப்பிட்ட பணி ஏதுமற்ற லார்டு பிரிவி சீல் (Lord Privy Seal) என்பாரும், நீதித் துறையைக் கண்காணிக்கும் கருவூலத் தலைவரும் (Chancellor of Exchequer), தொழில் வியாபாரம் ஆகியவற்றைக் கண்காணிக்கும் வாணிகக் குழுத் தலைவரும் (President of the Board of Trade) காபினெட்டில் இடம் பெற்றுள்ளனர். காபினெட் அமைச்சர்களே அன்றி, பதினைந்து பதினாறு சாதாரண அமைச்சர்களும், நான்கு சட்ட அதிகாரிகளும், ஏறக்குறைய முப்பத்தைந்து இள அமைச்சர்களும், (Junior Ministers), நாற்பது பாராளுமன்றச் செயலாளர்களும் (Parliamentary Secretaries) இருக்கின்றனர். அவர்களும் பிரதமரால் நியமிக்கப்படுபவர்களே யாவர். காபினெட் கூட்டங்களில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வதில்லை. ஆனால், இவர்கள் அனைவரும் சேர்ந்ததே 'அமைச்சரவை' (Ministry) எனப்படும். அமைச்சரவையே நிருவாகத்தை நடத்தும் பொறியாகும்.

செயல்கள் (Functions)

அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை வகுப்பதே காபினெட்டின் முக்கியச் செயலாகும். கொள்கைகளை

வகுப்பது மட்டும் போதாது. வகுக்கப்பட்ட கொள்கைகளைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்து அதன் ஒப்பத்தைப் பெற வேண்டுவதும் அதன் கடமையாகும். அங்ஙனம் ஒப்புக்கொள்ளப் பட்ட கொள்கைகளை நடைமுறையில் நிறைவேற்றுவது அதன் இரண்டாவது கடமையாகும். அக் கொள்கைகளை நிறைவேற்று வதற்கான முறையில், நாட்டின் நிருவாக நிறுவனத்தை அமைத்து, அதன் வெவ்வேறு துறைகளையும் இணைத்துக் கோர்வை யாக இயங்கச் செய்வது அதன் மூன்றுவது பணியாகும்.

இப் பணிகளை எல்லாம் காபினெட் சபையானது அமைதியாக வும் பெரும்பாலும் இரகசியமாகவும் செய்கிறது. 1916ஆம் ஆண் டுக்கு முன் காபினெட் கூட்டங்களில் வெளியார் யாரும் அனுமதிக் கப்படுவதில்லை. கூட்டங்களில் நடைபெறுபவைகள் குறித்து வைக்கப்படுவதில்லை. ஆனால், முதல் உலகப் போரின் போது அமைச்சர்கள் கூறுவனவற்றைக் குறிப்பெடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனுக்குடன் தகவல்களைத் தெரிவிக்கவேண்டி காபினெட் செயலாளர் ஒருவர் காபினெட் கூட்டங்களில் அனு மதிக்கப்பட்டார். எனவே, 1916ஆம் ஆண்டுக்குப் பின் காபினெட் கூட்டங்களின் நடவடிக்கைகள் பல காபினெட் செயலாளருக்கும் அவரது செயலகத்தாருக்கும் (Secretariat) தெரியும்படியே நடக் கின்றன. அப்போதும் கூட ஒருசில முக்கியக் கூட்டங்களில் அந்நியர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. போர்க் காலங்களில் பொறிநூல் வல்லுநர்கள், காமன்வெல்த் நாட்டுப் பிரதமர்கள் போன்றோர் காபினெட்டில் அனுமதிக்கப்படுகின்றனர். காபி னெட்டின் முடிவுகள் அநேகமாக ஏகமனதாகவே எடுக்கப்படும். சில சமயங்களில் தீர்மானங்கள் ஓட்டுக்கு விடப்பட்டு, பெரும் பான்மை வாக்குகளைக் கொண்டு நிறைவேற்றப்படுவதும் உண்டு. காபினெட் கூட்டங்கள் டௌனிங் தெருவிலுள்ள 10ஆம் எண் வீட்டில் (No. 10, Downing Street) அதாவது பிரதமரது வீட்டில் தான் ஏறக்குறைய வாரம் ஒருமுறை நடைபெறும். பிரதமரே அவைகளுக்குத் தலைமை வகிப்பார். கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலைக் காபினெட் செயலகம் முன்னதாகவே தயாரித்துப் பல அமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்துவிடும். அமைச்சர்கள் அவைகளை நன்கு ஆய்ந்து, சட்ட நிபுணர்களின் கருத்துகளையும் கேட்டுக்கொண்டு கூட்டங்களுக்கு வருவர். காபினெட் கூட்டங் களில் அமைச்சர்கள் தம்முள் கருத்து மாறுபடலாம்; வாதமிட லாம். ஆனால், கடைசியில் யாவரும் ஏகோபித்த ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். காபினெட்டின் கொள்கை எப்போதும் ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமென்பது நிலையான மரபாகி விட்டது. அதன் கொள்கையைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ள

வேண்டுமென்ற கட்டாயமில்லை. எனினும், பொதுவாகக் காபி னெட்டும் பாராளுமன்றமும் கூட்டாக ஒத்துழைத்தே காரியங்களைச் செய்கின்றன. அதனுல்தான் நிருவாகம் முட்டின்றித் திறமையாக இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

3. பாராளுமன்றம் (Parliament)

பிரிட்டனில் இன்று பாராளுமன்ற ஜனநாயகம் (Parliamentary Democracy) நடைபெற்று வருகிறது. பாராளுமன்றமே இங்கு இறைமை அல்லது தனித் தலைமை பெற்ற நிறுவனமாகத் திகழ்கிறது. அதன் சட்டங்களுக்குக் கட்டுப்படாத நிறுவனம் எதுவும் அங்கு இல்லை. இங்ஙனம் சர்வ வல்லமை பொருந்திய பாராளுமன்றம் மக்களிடமிருந்தே தனது அதிகாரங்களைப் பெறுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அதில் செல்வாக்குடன் விளங்குகிறுர்கள். எனவே, மக்களாட்சி அங்குப் பாராளுமன்றத்தின் மூலமாகச் செயல்படுகிறது. இத்தகைய ஆட்சிமுறை உலகின் பல பாகங்களில் இன்று காணப்படுகிறது. பிரிட்டிஷ் பாராளுமன்றம் உலகப் பாராளுமன்றங்களுக்கெல்லாம் தாயெனத் (Mother of Parliaments) திகழ்கிறது. அத்துடன் அது ஏனைய பாராளுமன்றங்களுக்கு ஒரு வழிகாட்டும் ஆசிரியனுகவும் (Their preceptor as well) விளங்குகிறது என்று டாக்டர் ஜென்னிங்ஸ் என்பார் கூறுவது முற்றிலும் சரியே யாகும். இன்று நம் நாட்டில் மையத்திலும் மாநிலங்களிலும் நடைமுறையிலிருந்து வருவது இத்தகைய ஆட்சி முறையேயாகும்.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் பிரபுக்கள் சபை (House of Lords), பொதுமக்கள் சபை (House of Commons) என்ற இரு சபைகளை உட்கொண்டு விளங்குகிறது. இவைகளில் பொது மக்கள் சபையே முதன்மை பெற்றது. பொதுமக்கள் சபையின் விருப்பத்துக்கு மாருகப் பிரபுக்கள் சபை நடந்து கொள்வதில்லை. எனவேதான் பிரிட்டனில் ஜனநாயகம் செயல்படுவதாகக் கருதுகிறேம். முடியாட்சியின் (Monarchy) பிரதிநிதியாக ஓர் அரசரும், உயர் குடிப் பிரபுக்களாட்சியின் (Aristocracy) பிரதிநிதியாகப் பிரபுக்கள் சபையும் அங்குப் பெயரளவில் இருக்கின்றன. எனினும் மக்களாட்சியின் (Democracy) சின்னமாக விளங்கும் பொதுமக்கள் சபையே அங்குத் தலைதூக்கி நிற்கிறது.

பொதுமக்கள் சபை (House of Commons)

வளர்ச்சி வரலாறு

ஆதியில் இங்கிலாந்தில் பொதுமக்கள் சபை என்று தனியே ஒரு மன்றம் இருக்கவில்லை. பெருநிலக்கிழார்களின் பிரதிநிதிகள்

அடங்கிய 'பெருமக்கள் மன்றமே' (Magnum Concilium) அரச ருக்கு அவ்வப்போது தேவையான மானியங்களை வழங்கியும், ஆலோசனை கூறியும் வந்தது. ஆனால், ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டே சென்ற அரசரின் செலவுகளை மேற்கொள்ளப் போது மான வருவாயை அம் மன்றத்தால் வழங்க முடியவில்லை. அதன் உதவிகொண்டு வசூலிக்கப் பெற்ற நிலமானியக் கட்டணங்கள் (Feudal Incidents) அரசருக்குப் போதவில்லை. எனவே, அவர் சாதாரண மக்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் உதவி யைப் பெற முயன்றார். அங்ஙனம் அழைக்கப்பெற்ற பிரதி நிதிகள் அரசரிடம் தங்கள் குறைகளை முறையிட்டுக் கொண்டனர்.

ஜான் என்ற அரசர் தான் முதன் முதலில் பொதுமக்கட் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் ஆலோசனையைக் கேட்ட வர். 1213ஆம் ஆண்டில் அவர் கூட்டிய செய்ன்ட் ஆல்பன்ஸ் (St. Albans) மாநாட்டிற்கு, நகரத் தொகுதிகளிலிருந்து (Town-ships) நான்கு சாதாரண நபர்களை அனுப்பிவைக்கும்படி ஷெரீஃப்புகளுக்கு (Sheriffs) அவர் கட்டளையிட்டார். நாட்டின் பொது விவகாரங்களைப் பற்றி ஆலோசிக்கவென்று அம் மாநாடு கூட்டப்பட்டது. ஆனால், உண்மையில் திருச்சபைகளுக்கு எவ் வளவு ஈட்டுப் பணம் தரலாம், எப்படி அதைத் திரட்டலாம் என் பதை நிர்ணயிக்கவே ஜான் அதைக் கூட்டினார். பிஷப்புகள், பாரன்கள் (Barons) பொதுமக்கட் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றாக அமர்ந்து மன்னருக்கு ஆலோசனை கூறியதோடு, தங்கள் குறைகளையும் எடுத்து விளம்பினர். பேருரிமைப் பட்டயத்துக்கான (Great Charter) வித்துகள் அம் மாநாட்டில்தான் ஊன்றப்பட்டன. 1246-ல் கூட்டப்பட்ட ஓர் ஆலோசனைச் சபைக்குப் பாராளுமன்றம் என்ற பெயர் முதன் முதலில் சூட்டப்பட்டது. 1254ஆம் ஆண்டில் ஃபிரான்சில் போரிட்டுக் கொண்டிருந்த மன்னர் மூன்றாம் ஹென்றிக்குப் பண உதவி அனுப்புவதைப் பற்றி ஆலோசனை கூறும்படிக் கவுன்டிகளிலிருந்து இரண்டிரண்டு நைட்டுகளை (Knights) இராணியார் அழைத்தார். நிலமானியக் கட்டணங்க ளன்றியும் வேறு பல மானியங்களைப் பெறவே அவர்கள் ஆலோசனையை இராணியார் அப்போது வேண்டினார். 1261 ஆம் ஆண்டில் மன்னரும் பிரபுக்களும் போரிட்டுக்கொண்டபோது இருதரப்பிலிருந்தும் கவுன்டியில் வாழ்ந்த நைட்டுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. நாட்டின் பொது விவகாரங்களைப் பற்றி ஆலோசிக்கவென்று நாட்டுப்புற நைட் வீரர்களிலிருந்து கவுன் டிக்கு இருவர் அழைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். போரில் வெற்றிபெற்ற சைமன் டி மாண்பர்ட் (Simon de Mon-fort) என்னும் தலைவர் 1264-ல் கூட்டிய ஆலோசனை மன்றத்தில்

அவரது அழைப்புக்கிணங்க ஷயர்களிலிருந்து நான்கு நைட்டுகள் மட்டுமன்றி நகரப் பிரதிநிதிகளும் (Representative burgesses from towns) அழைக்கப்பட்டனர். நாட்டின் பொதுக் காரியங் களைப் பற்றி விவாதிக்கப் பிஷப்புகள், பிரபுக்கள் மட்டுமன்றி, நைட்டுகள், நகரவாசிகள் போன்ற இடைநிலை வகுப்பினரும் தகுதி வாய்ந்தவர்களே என்ற கருத்து நாளடைவில் வலிவுற்றது. முதலாம் எட்வர்ட் மன்னர் 1295ஆம் ஆண்டில் கூட்டிய பாராளுமன்றத்தில் பிரபுக்கள் மட்டுமன்றி, கவுன்டிகளிலிருந்து இரண்டு நைட்டுகளும், நகரங்களிலிருந்து இரு குடிமக்களும் (Citizen), பரோக்களிலிருந்து இரு பர்க்ஸஸ்களும் (Burgesses) இடம் பெற்றனர். எனவே, அது 'மாதிரிப் பாராளுமன்றம்' (Model Parliament) எனப் பெயர்பெற்றது.

ஆரம்பத்தில் கூட்டப்பட்ட இப் பாராளுமன்றங்கள் மன்ன ருக்கு எவ்வளவு மானிய உதவி செய்வது என்பதையே முக்கிய மாக விவாதித்தனவெனினும், குடிமக்களின் குறை விண்ணப் பங்களையும் அவை மன்னரிடம் சமர்ப்பித்தன. மன்றத்தின் தனி உறுப்பினர்களே இவ் விண்ணப்பங்களைக் கொடுத்தனர். நாள டைவில் இக் குறை விண்ணப்பங்கள் மசோதாக்களாக (Bills) வடிவெடுத்தன. பாராளுமன்ற மசோதாக்களை மன்னரும், மன்ன ரின் சட்டங்களைப் பாராளுமன்றமும் ஒப்புக்கொள்ள வேண்டு மென்ற மரபு நாளடைவில் ஏற்பட்டது.

ஃபிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளில் பிரபுக்கள், மத குருமார்கள், சாதாரண மக்கள் ஆகிய முத்திறத்தாரும் தனித் தனிச் சபைகளை அமைத்துக்கொண்டனர். ஆனால், இங்கிலாந் தில் மத குருமார்கள் தனிச்சபையை அமைக்கவில்லை. சாதாரண மத குருமார்கள் பாராளுமன்றக் கூட்டங்களுக்குப் போவதையே நாளடைவில் நிறுத்திக் கொண்டனர். பணம் படைத்த பெரும் மத குருமார்கள், பெருநிலக்கிழார்களோடு ஒன்று சேர்ந்து ஒரு சபையினராக அமைந்தனர். அதுவே பிரபுக்கள் சபை எனப் பட்டது. சாதாரண நிலப் பிரபுக்கள், நைட்டுகள், நகரவாசிகள் ஆகியோரின் குறைகள் ஏறத்தாழ ஒன்றாயிருந்ததால், அவர்கள் ஒன்றுசேர்ந்து பொதுமக்கள் சபையை அமைத்தனர். இங்ஙனம் ஈரங்க சட்டசபை (Bicameral Legislature) இங்கிலாந்தில் ஏற்பட்டது.

டியூடர்கள் காலத்தில் பாராளுமன்றம் நன்கு வளர்ச்சியுற்றது. ஆனால், அது மன்னரின் கைப்பாவையாகவே பெரும்பாலும் இயங்கி வந்தது. மன்னர் பாராளுமன்றத்தின் மூலமாகத் தம் வல்லரசைச் செலுத்தினர். ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் மன்னருக்கும்

பாராளுமன்றத்துக்கும் ஓயாத சச்சரவு ஏற்பட்டு முடிவில் 1688-ல் பாராளுமன்றம் வெற்றி பெற்றது. இறைமை, மன்னரிடமிருந்து பாராளுமன்றத்துக்கே மாறியது. கட்சி முறைவளர்ந்தது. விக்கு, டோரிக் கட்சிகள் மாறி மாறிப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று மன்னரைக் கட்டுப்படுத்தி வந்தன. ஹனோவரிவர்கள் காலத்தில் கட்சியாட்சியும், காபினெட் ஆட்சிமுறையும் நன்கு உருப்பெற்றன. ஆனல், பாராளுமன்றத்தில் பணம் படைத்த பெரும் பிரபுக்களே செல்வாக்குடன் விளங்கினர். எனவே, பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்பட்டது. அதன் விளைவாகப் பல பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் மூலம் வாக்காளர் தொகை பெருகிற்று. பணநாயகம் மாறி ஜனநாயகம் நாட்டில் ஏற்பட்டது. 1832ஆம் ஆண்டில் இடைநிலை வகுப்பினரான (Middle Class) சிறு நிலக்கிழார்கள், குத்தகைச் சாகுபடியாளர்கள், சிறு வியாபாரிகள் ஆகியோரும், 1867-ல் நகரத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் போன்ற சாதாரண மக்களும், 1884-ல் விவசாயத் தொழிலாளர்களும், 1918-ல் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்டிரும், 1928-ல் 21 வயதுக்கு மேற்பட்ட பெண்டிரும் வாக்குரிமை பெற்றனர். அதன் பின் வயது வந்தோர் வாக்குரிமை (Adult Franchise) இங்கிலாந்தில் நிலவி வருகிறது. ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி 21 வயதுக்குமேற்பட்ட எல்லாக் குடி மக்களுக்கும் இன்று வாக்குரிமை இருக்கிறது. வயதின் எல்லையை 18 ஆகக் குறைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி இன்று இங்கிலாந்தில் காணப்படுகிறது. ஆனல், சிறுவர்கள் (minors), சித்த சுவாதீனமற்றவர்கள் (lunatics) ஆகியோருக்கு வாக்குரிமை இல்லை. 1948ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டப்படி, நாடு பல சிறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒருவர்மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மூன்று மாதங்கள் ஒரு தொகுதியில் வாசம் செய்துள்ள ஒவ்வொரு வயது வந்த ஆணும் பெண்ணும் வாக்குரிமை பெற்றுள்ளனர். இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 630 உறுப்பினர்கள் பொதுமக்கள் சபையில் இடம் பெற்றுள்ளனர்.

தேர்தல் முறை

தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது. ஏறக்குறைய நம் நாட்டில் நடைபெறுவதைப் போலவே, கட்சிப் பிரசாரங்களும் தேர்தல்களும் நடைபெறுகின்றன. ஆங்கிலிகக் கத்தோலிக்க திருச்சபைகளைச் சேர்ந்த மத குருமார்கள், நீதிபதிகள், சிறுவர்கள், அந்நியர்கள், பெருங்குற்றவாளிகள் தவிர ஏனையோர் எவரும் தேர்தலில் வேட்பாளராக நிற்கலாம். 420

டாலர்களை அவர்கள் இருப்புத் தொகையாகச் (Deposit) செலுத்த வேண்டும். மொத்தத்தில் எட்டில் ஒருபங்கு வாக்குகளைப் பெறாத வர்கள் இருப்புத் தொகையை இழப்பர். 1872-ல் ஏற்பட்ட மறைவு வாக்களிப்புச் சட்டப்படி (Ballot Act) வாக்காளர்கள் வாக்குச் சீட்டுகளில் மறைவாகக் குறிக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. வாக்காளர்கள் தொகை மிகப் பெரிதாக இருப்பதால், லஞ்ச ஊழல் அதிகமாக நிகழ இடமில்லை. அப்படியும் மீறி லஞ்சம் கொடுப்பவர்கள் லஞ்ச ஊழல் சட்டங்களின்படித் தண்டிக் கப்படுவர். ஏழு ஆண்டுகளுக்கு அத்தகையோர் எங்கும் தேர்த லில் நிற்க முடியாது. ஒரு நபர் தேர்தலில் எவ்வளவு செலவு செய்யலாம் என்பது சட்டப்படி வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் வேட்பாளராக நிற்க லாம். அவர் அத் தொகுதிவாசியாக இருக்கவேண்டு மென்பது கட்டாயமில்லை. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாம் நிற்கும் தொகுதி நலன் மட்டுமன்றித் தேசிய நலனின் பிரதிநிதியாகவே கருதப்பட வேண்டுமென்பது பர்க் (Burk) போன்ற அறிஞர்களின் கூற்றாகும். சாதாரணப் பெரும்பான்மை (Simple Majority) முறை மூலமே உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சாதா ரணத் தொழிலாளர்களும் உறுப்பினராவதற்கு ஏதுவாக அவர் களுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது.

பொதுமக்கள் சபையின் அலுவல்கள் (Functions)

பொதுமக்கள் சபையின் அலுவல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நாட்டுக்குத் தேவையான சட்டங்களை ஆக்குதல் அதன் முதல் வேலையாகும். அடுத்து, அது அரசாங்கத்தின் பொரு ளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபடுகிறது. மூன்றாவதாக, அது அரசாங்கத்தின் செய்கைகளைப் பரிசீலனை செய்து அவற்றின் தராதரங்கள் பற்றித் தீர விவாதிக்கிறது. இங்ஙனம் விவாதிப்பதன் மூலமும், அரசாங்கத்தின் குற்றங் குறை களை எடுத்துக் கூறுவதன் மூலமும் இச்சபை நிருவாகத்தின் போக்கினை ஓரளவு கட்டுப்படுத்துகிறது. இத்தகைய கட்டுப்பாடே சபையின் தலைசிறந்த பணியென யாவரும் கருதுகின்றனர்.

பொதுமக்கள் சபையின் பெரும் பகுதியான காலம் சட்டங் களை ஆக்குவதிலேயே கழிந்துவிடுகிறது. ஆதியில் சபையின் உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளில் காணப்பட்ட குறைகளை மன்னரிடம் விண்ணப்பித்துக் கொள்வதே வழக்கமாயிருந்தது. அத்தகைய குறை விண்ணப்பங்கள் (Petitions) நாளடைவில் மசோதாக்களாக (Bills) மாறின. இம் மசோதாக்கள் பொது மசோதாக்கள் (Public Bills), தனிப்பட்ட மசோதாக்கள் (Private

Bills), தனிப்பட்ட உறுப்பினர்களின் மசோதாக்கள் (Private Members Bills) என மூவகைப்படும். பொது மசோதாக்கள் என்பன அரசாங்க அமைச்சர்களால் கொண்டுவரப்படுபவையாகும். அரசாங்கத்தின் காரியங்களும் பாராளுமன்றத்தின் ஒப்பத்தைப் பெற்றே நடைபெற வேண்டும் என்ற கொள்கையின் வளர்ச்சி காரணமாகவே பொது மசோதாக்கள் கொண்டு வரும் வழக்கம் ஏற்பட்டது. நிறைவேறும் மசோதாக்களில் முக்கால்வாசிக்கு மேல் பொது மசோதாக்களே யாகும். அவை சபையில் மூன்று முறை கொண்டுவரப்படுகின்றன. அச்சடிப்பு முறை தெரியாத காலத்தில் மசோதா ஒவ்வொரு முறையும் சபையில் முறையாகப் படிக்கப் பட்டே விவாதிக்கப்படும். எனவே, அவை முறையே முதலாவது, இரண்டாவது, மூன்ருவது படிப்புகள் (First, Second and Third Readings) என அழைக்கப்பட்டன. இன்றும் அவை அங்ஙனமே அழைக்கப்படுகின்றன. ஆனுல், அச்சடிக்கப்பட்ட மசோதாக்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதால் அவைகளை முழுமையாகப் படித்துக் காட்டவேண்டிய அவசியம் தற்போது இல்லை. முதற் படிப்பு (First Reading) என்பது வெறும் சம்பிரதாயத்துக்காக நடைபெறுவதொன்ருகும். அப்போது மசோதாவின் பொம்மைப் பிரதி (Dummy Bill) ஒன்றை அமைச்சர், சபையின் சிப்பந்தி யிடம் (Clerk) கொடுப்பார். அவர் அதன் தலைப்பைப் படிப்பார். அதோடு முதற் படிப்பு முடிந்துவிடும். சில சமயங்களில் மசோதா வின் முக்கியக் கருத்தை அமைச்சர் சுருக்கமாக விளக்குவதும் உண்டு. அதையொட்டி விவாதம் நிகழ்ந்தால், மசோதாவைக் கொண்டுவர வேண்டியது அவசியந்தானு என்பது பற்றிய வாக் கெடுப்பு நிகழும். அவசியம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட பின் மசோதா அச்சுக்குக் கொடுக்கப்படும். இங்ஙனம் முதற் படிப்பு என்பது பெயரளவிலேயே நிகழ்கின்றது. முதற்படிப்புக்குப் பின், மசோதா அச்சுக்குக் கொடுக்கப்படுகிறது. அச்சான பின் மசோதாவின் இரண்டாம் படிப்பு (Second Reading) நிகழும். அவ்வமயம்தான் மசோதாவின் முக்கியக் கொள்கைகள் விவாதிக்கப் படும். மசோதாவின் குறிக்கோள் தனக்குப் பிடிக்கவில்லையாயின், சபை அதைக் கண்ணியமான முறையில் தெரிவிக்க ஓர் உபாயத் தைக் கையாள்கிறது. 'ஆறு மாதங்கள் கழித்து இதே நாளில் இம் மசோதா இரண்டாம் முறையாகப் படிக்கப்படுவதாகும்!' என்று அது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினுல் அதுவே மசோதா ஒன்றைத் தோற்கடித்ததற்கு ஒப்பாகும். ஏனெனில், ஆறு மாதங் கழித்துக் குறிப்பிடப்படும் தேதியில் சபையின் கூட்டம் நடைபெற் றுக்கொண்டிராது. மசோதா தோற்ருல் மந்திரிசபை ராஜினுமாச் செய்ய வேண்டியதுதான். ஆனுல், அமைச்சர்கள் பெரும்பான்மைக்

கட்சியினர்களா யிருப்பார்களாதலால், பொதுவாக அரசாங்க மசோதாக்கள் தோற்கடிக்கப்படுவதில்லை. இங்ஙனம் பகுதி பகுதி யாக நன்கு விவாதிக்கப்பட்டு மசோதா இரண்டாம் முறையாகச் சபையில் நிறைவேறிய பின் அது தனிப்பட்ட கமிட்டிகளுக்குச் செல்லும். கமிட்டிகளில் எதிர்க்கட்சியாளர்களும் இடம் பெற் றிருப்பர். மசோதாவில் பல திருத்தங்களைக் கமிட்டி சிபாரிசு செய்யக்கூடும். அங்ஙனம் திருத்தப்பட்ட மசோதா மீண்டும் சபை முன் கொண்டுவரப்படும். அது அறிவிப்பு நிலை (Report Stage) எனப்படும். அச்சமயத்திலும் திருத்தங்களின் மீது விரிவான விவாதம் நடைபெறலாம். அதன்பின் மசோதாவின் மூன்றும் படிப்பு (Third Reading) நிகழும். அது சமயம் மசோதா முழுமை யாக விவாதிக்கப்படும். திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மசோதாவின் வாசகத்தில் ஒரு சில மாற்றங்கள் மட்டுமே செய்யக் கூடும். மூன்றும் முறையில் மசோதா சபையில் பெரும்பான்மை யான வாக்குகளைப் பெற்று நிறைவேறியபின் அது பிரபுக்கள் சபைக்குச் செல்லும். அங்கேயும் அது மும்முறை படிக்கப்படும். மும்முறையும் அங்கு அது நிறைவேறிய பின் மன்னரது ஒப்பத் தத்தைப் (Royal Assent) பெற்றுச் சட்டமாக மாறும். மன்னரது ஒப்பம் என்பது வெறும் சடங்கே ஆகும். அதற்கென ஏற்படுத்தப் பட்ட ஒரு குழு அச்சடங்கை நிறைவேற்றும். மன்னரால் ஒப்புக் கொள்ளப்படாத மசோதா என்று இன்று வரை ஒன்றுமே யில்லை. பிரபுக்கள் சபையின் ஒப்பமும் பெயரளவில்தான் நடைபெறுகிறது. பண மசோதாக்களைப் (Finance Bills) பிரபுக்கள் சபை நிராகரிக்க முடியாது. நிராகரித்தாலும் அதைப் பொதுமக்கள் சபை பொருட் படுத்த வேண்டுவதில்லை. சாதாரண மசோதாக்களைப் பிரபுக்கள் சபை ஓராண்டுவரை நிறுத்திவைக்கலாம். அதன் பின் அச் சபை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மசோதா தானாகவே சட்ட மாகிவிடும்.

அரசாங்கத்தின் பல்வேறு செலவுகளுக்கு வேண்டிய வருவாயை வழங்கி, அவ் வருவாய் எவ்வாறு செலவிடப்பட வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதும் பொதுமக்கள் சபையே யாகும். ஆண்டுக்கொருமுறை நிருவாகத்துறை ஒவ்வொன்றும் நடப்பு ஆண்டில் தனக்கு ஆகக்கூடிய செலவுகளைப் பற்றி ஓர் உத்தேச மதிப்பீட்டைத் (Estimates) தயாரித்து கருவூலத்துறை யிடம் (Treasury) வழங்குகிறது. கருவூலத்துறை அதிகாரிகள் அம் மதிப்பீட்டை நன்கு பரிசீலனை செய்து, வேண்டிய மாற்றங் களைச் செய்தபின், அது பொதுமக்கள் சபையின் முழுமைக் குழு வின் (The Committee of the Wohle House) முன் தாக்கல் செய் யப்படுகிறது. அக்குழுவில் சபையின் உறுப்பினர் அனைவரும்

பங்கெடுத்துக்கொள்கின்றனர். வழக்கமாக இருக்கின்ற அவைத் தலைவருக்குப் (Speaker) பதிலாக வேறொரு தலைவர் அதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார். நிருவாகத் துறையின் உத்தேசச் செலவுகள் நியாயமானவைதானா என்பதையும் சபை ஆராயும். அது சமயம் அது வருவாய் வழங்கு குழு (Committee of Supply) என அழைக்கப்பெறும். செலவுகள் சரியானவையே என்பது ஒப்புக் கொள்ளப்பட்டபின், அச் செலவுகளுக்கு வேண்டிய பொருளைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் யாவை என்பதைச் சபை ஆராயும். அப்போது சபை வருவாய்க்கு வழி முறைகள் காணும் குழு (Committee of Ways and Means) என அழைக்கப்படும். மக்கள் மீது என்னென்ன வரிகள் விதிக்கப் பெறலாம் என்பதைப் பற்றி அமைச்சர்கள் கூறியுள்ள கருத்துகளைப் பொதுமக்கள் சபை ஆராயும். புதிய வரிகளைப் பற்றி அது யோசனை கூறமுடியாது. அமைச்சரவையின் தீர்மானங்களை ஆராய்ந்து அதில் திருத்தங்களை ஏற்படுத்துவதே அதன் உரிமையாகும். இங்ஙனம் நன்கு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களே பட்ஜெட் தீர்மானங்கள் (Budget Resolutions) எனப்படும். இத்தீர்மானங்கள் அடங்கிய காகிதக் கட்டை ஒரு தோல் பையில் போட்டு எடுத்து வந்து நிதி அமைச்சர் (Chancellor of Exchequer) பொது மக்கள் சபையில் படிப்பது வழக்கம். அதனால் தான் 'தோல் பை' எனப் பொருள்படும் 'பட்ஜெட்' என்ற பெயர் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. சபையானது மேற்சொன்ன இரு குழுக்களாக அமைந்து பட்ஜெட் தீர்மானங்களை ஏற்றுக்கொண்ட பின்னரே அவை ஒரு நிதி மசோதாவாக (Finance Bill) உருவாக்கப்படும். ஏனைய மசோதாக்கள் போலவே நிதி மசோதாவும், மும்முறை சபையில் நிறைவேற வேண்டும். நிதி மசோதாவைப் பொதுமக்கள் சபையில் மட்டுமே கொண்டுவர முடியும். பிரபுக்கள் சபைக்கு அந்த உரிமை இல்லை. பொதுமக்கள் சபையில் நிறைவேறிய பின், பிரபுக்கள் சபை அதை ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், ஒரு மாதத்துக்குள் அது சட்டமாகிவிடும். இத்தகைய நிதி மசோதாக்கள் மூலமே அரசாங்கக் கருவூலத்துக்கு வேண்டிய நிதி திரட்டப்படுகிறது. நிதி ஆண்டு துவங்குவதற்கு முன்னர், நிருவாகத்துறை தங்களது அன்றாடச் செலவுகளுக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக, திரட்சி நிதி மசோதா (Consolidated Fund Bill) ஒன்றைப் பொது மக்கள் சபை நிறைவேற்றுகிறது. அதைக் கொண்டு நிருவாகம் சுமார் நான்கு மாதங்கள் தட்டின்றி நடைபெற முடியும். அதன் பின் ஆகக்கூடிய செலவுகளுக்கு வேண்டிய பொருளை 'நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (Appropriation Act) ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம்,

சபை நிருவாகத் துறைகளுக்கு வழங்குகிறது. அரசாங்க மதிப்பீடுகளை நான்கு மாதங்கள் வருவாய் வழங்கு குழுவில் நன்கு பரிசீலனை செய்த பின்பே சபை மேற்சொன்ன நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தை ஏற்படுத்துகிறது. அச் சட்டத்தின் மூலம் இன்னின்ன செலவுகளுக்கு இவ்வளவு பொருள் செலவிடப்படலாம் என்பது தீர்மானிக்கப்படுகிறது. எதற்காகவென்று நிதி ஒதுக்கப்படுகிறதோ அதற்காகவென்று அது முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணித்துத் தணிக்கை செய்ய பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) ஒன்றும் ஏற்படுத்தப்படுகிறது. எதிர்க்கட்சிப் பிரமுகர் ஒருவர் அத்தகைய குழுவுக்குத் தலைமை தாங்குவதே மரபாகும். அக் குழுவுக்குத் தேவையான யோசனைகள் கூறி உதவி செய்யப் பொதுக் கணக்குக் கட்டுப்பாட்டுத் தணிக்கைத் தலைவர் (Controller and Auditor General) ஒருவரைப் பொதுமக்கள் சபை நியமிக்கிறது. அவருக்கும் நிதி அமைச்சருக்கும் யாதொரு தொடர்புமில்லை. நிதி எங்ஙனம் செலவிடப்பட வேண்டுமென்பது பற்றிய பரந்த கொள்கைகளையே நிதியமைச்சர் தீர்மானிக்கிறார். எங்ஙனம் திரட்டப்படுகிறது, எங்ஙனம் செலவிடப்படுகிறது என்பதைத் தணிக்கை செய்பவர், பாராளுமன்றத்தின் ஒப்பத்துக்கேற்ப அரசாங்கத்தால் நியமிக்கப்படும் சுதந்திரமான ஓர் அதிகாரியே யாவார். பொதுச் செலவில் காணப்படும் குறைகளை எடுத்துக் காட்டுவது அவரது முக்கியக் கடமையாகும்.

நிதி மசோதாவைத் தோற்கடிப்பதன் மூலமும், அதில் சில திருத்தங்களைச் செய்வதன் மூலமும் அரசாங்கத்தைப் பொது மக்கள்சபை வீழ்ச்சியுறச் செய்ய முடியும். ஆனால், நடைமுறையில் அங்ஙனம் நிகழ்வதில்லை. சிக்கல் நிறைந்த நிதி மசோதாக்கள் பாராளுமன்ற உறுப்பினர் பலருக்குப் புரிவதே இல்லை. அதன் உள்ளிட்ட கொள்கைகளையே அவர்கள் ஓரளவு ஆராய்கின்றனர். செலவு செய்யப்படும் முறைகளை சபை குறைகூறலாமே ஒழிய தடுக்க முடியாது. எவ்வளவு செலவு செய்யலாம், எப்படி வருவாய் பெறலாம் என்பதை எல்லாம் நிரந்தர நிருவாக அதிகாரிகளே தீர்மானிக்கின்றனர். நிருவாகத் துறையில் அனுபவமில்லாத அமைச்சர்கள் அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு பொதுமக்கள் சபையின் முன் வைக்கின்றனர். அவைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாவிட்டால் அமைச்சர்கள் பதவி துறக்க நேருமென்ற அச்சத்தால், சபையின் பெரும்பான்மைக் கட்சியினர் அவற்றை ஆதரித்து வாக்களித்து விடுகின்றனர். எனவே, நிதித் துறையில் பொதுமக்கள் சபையின் கட்டுப்பாடு என்பது மிகமிகக் குறைந்த அளவிலேயே செயல்படுகிறது எனலாம்.

அரசாங்கத்தின் கொள்கைகளையும் செய்கைகளையும் பரிசீலனை செய்து, குறைகளைக் கண்டிப்பதுதான் பொதுமக்கள் சபையின் முக்கியக் கடமையாகும். சபையில் வீற்றிருக்கும் எதிர்க் கட்சியினர் இத்தகைய பணியில் பெரிதும் ஈடுபடுகின்றனர். சபை நடவடிக்கைகள் தொடங்கும் 'கேள்வி நேரம்' (Question Time) என்று ஒரு மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. அச் சமயம், அரசாங்கம் செய்த தவறுகளையும், செய்யத் தவறியவற்றையும் கேள்விகள் மூலம் எடுத்துக் காட்டி, அவற்றைத் திருத்திக்கொள்ளும்படிச் சபை உறுப்பினர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளலாம். அரசாங்க அதிகாரிகளின் ஊழல்களையும் குறைகளையும் அம்பலப்படுத்த அது தக்க தருணமாக அமைகிறது. கேள்விகளுக்கு உபகேள்விகளையும் உறுப்பினர்கள் கொடுக்க உரிமை உண்டு. அத்தகைய கேள்விகளை அனுமதிக்கவோ மறுக்கவோ அவைத் தலைவருக்கு உரிமை உண்டு. இதனால் அமைச்சர்கள் விழிப்போடு நடந்துகொள்ள ஏதுவாகிறது. குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆராயும்படி நிருவாகக் குழுக்களையும், ராயல் கமிஷன்களையும் நியமிக்கும்படி சபை அரசாங்கத்தை வற்புறுத்தலாம். உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு பொதுக் காரியத்தைப் பற்றி விவாதம் கோரி உறுப்பினர் ஒருவர் ஒத்திவைப்புத் தீர்மானம் (Adjournment Motion) கொண்டுவரலாம். மற்றும் அமைச்சர்கள் மீது கண்டனத் தீர்மானம் (Vote of Censure), நம்பிக்கை இல்லாத் தீர்மானம் (Vote of no-confidence) முதலியவைகளைச் சபை உறுப்பினர்கள் கொண்டு வரலாம். அரசாங்கத்தின் செய்கைகளைத் தனிப்பட்ட முறையிலும் முழுமையாகவும் கண்டிக்க அத் தீர்மானங்கள் முறையே உதவி செய்கின்றன. ஆனால், அமைச்சர்களுக்குப் பெரும்பான்மையான ஆதரவு சபையில் இருக்கும் வரை இத்தகைய தீர்மானங்கள் கண்டிப்பாகத் தோற்றுவிடும். பொதுமக்கள் சபை அமைச்சர்களின் மசோதாக்களைத் தோற்கடிப்பதாலும், நிதியளிக்க மறுப்பதாலும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதென்பதும் கட்சி யாட்சியில் நடைபெறக் கூடாதவையேயாகும். எனினும், இத்தகைய விவாதங்கள் மூலம் எதிர்க் கட்சியினர் பொதுமக்களின் மனத்தை மாற்றி, அடுத்த தேர்தலில் ஆளும் கட்சியை முறியடிக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி விடலாம்.

வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் சபையைக் கலக்காமலேயே அமைச்சர்கள் ஒரு முடிவுக்கு வருவதே வழக்கம். அமைச்சர்களின் முடிவைப் பாராளுமன்றம் ஏற்றுக் கொள்வதே மரபு. ஆனால், இன்றைய சூழ்நிலையில் அமைச்சர்கள் பாராளுமன்றத்தைக் கலந்தாலோசித்தே முக்கிய அயல்நாட்டுக்

கொள்கைகளை வகுக்கின்றனர். வெர்சேல்ஸ் உடன்படிக்கை, லொகார்னே ஒப்பந்தம் (Locarno Pact) போன்றவைகளை அரசாங்கம் பாராளுமன்றத்தைக் கலந்துகொண்டே செய்ததென்பதை அறிகிறோம். ஆனால், அன்றாட வெளிநாட்டு உறவு முறைகளைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத்தைக் கலக்காமலேயே அமைச்சரவை முடிவுகளை எடுக்கின்றது.

சபை நடவடிக்கை (Procedure in the House)

பொதுமக்கள் சபை கூடிய உடனே அது தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. அவைத்தலைவர் (Speaker) தேர்தலே அதன் முதல் நடவடிக்கையாகும். பொதுவாகத் தேர்தலுக்கு யாரும் போட்டியிடுவதென்பது வழக்கமில்லை. ஏகமனதாகவே அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அமைச்சர்கள் சபை உறுப்பினர்களைக் கலந்து தக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பர். அதை யாவரும் ஆமோதிப்பர். தேர்ந்தெடுக்கப்படுபவர் ஆளும் கட்சியிலிருந்து பொறுக்கப்படலாம். ஆனால், நியமனம் பெற்ற பின் அவர் கட்சிச் சார்பற்றவராக இருக்கவேண்டுமென்பதே மரபு. நடுநிலை நின்று சட்டமன்ற நடவடிக்கைகளை நடத்த வேண்டுவதே அவரது கடமை. ஒரு காலத்தில் அவர் சபையினரின் திரண்ட கருத்துகளை மன்னரிடம் எடுத்துக்கூறும் பணியைச் செய்துவந்தார். அதனால்தான் 'பேச்சாளர்' என்று பொருள்படும் 'ஸ்பீக்கர்' (Speaker) என்ற பெயர் அவருக்கு வந்தது. நாளடைவில் மன்னரின் அதிகாரங்கள் மாய்ந்துவிடவே அவர் சபையை நடத்தும் பணியை மேற்கொண்டார். சபையில் இன்று பேச்சில் இறங்காதவர் அவர் ஒருவரேயாவார். சபையின் விருப்பத்துக்கு விரோதமாக அவர் நடந்து கொள்ள முடியாது. சான்றாக, முதலாம் சார்லஸ் பொதுமக்கள் சபைக்குள் புகுந்து தான் கைது செய்ய விரும்பிய ஐந்து உறுப்பினர்களும் எங்கே என்று அவைத் தலைவரைக் கேட்ட போது, சபையின் ஆணைக்குப் புறம்பாகப் பார்க்கக் கண்களோ கேட்கக் காதுகளோ தமக்கில்லை என்று அவர் கூறிவிட்டார்.

பொதுமக்கள் சபையில் என்னென்ன எப்படி நடைபெற வேண்டுமென்பதில், அவைத் தலைவரே தனித் தலைமை பெற்று விளங்குகிறார். சபையில் அவர் பணிக்கின்றபடியே ஒருவர் உரை நிகழ்த்த முடியும். ஒரே சமயத்தில் பலர் பேச எழுந்தால், அவர்களில் யார் முதலில் பேசவேண்டுமென்பதைத் தீர்மானிப்பவர் அவரே. உறுப்பினர் தாறுமாறாகப் பேசினால், பேச்சை நிறுத்தும்படிக் கூற அவருக்கு உரிமை உண்டு. அவரது கட்டளைக்குப் பணியாத அடங்காப் பிடாரிகளைச் சபையினின்றும் வெளியேற்றும் அதிகாரமும் அவருக்குண்டு. உறுப்பினரை அவர் பெயரிட்

டழைத்தார் என்றால் (Naming the Member) அவர் உடனே வெளியேறிவிட வேண்டும். இல்லாவிடில், காவலர்களின் (Sergeants) உதவிகொண்டு அவரை வெளியேற்றும் அதிகாரம் அவருக்குண்டு. விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் எவை தீர்மானங்கள் எவை என்பதை வரையறுப்பவரும் அவரே. நிதி மசோதா என்பது எது என்பதைத் தீர்மானித்து உறுதிச் சீட்டு (Certify) வழங்க வேண்டியவரும் அவரே. சபையின் கட்டுப்பாட்டைக் கட்டிக் காப்பவர் அவர்தான். சபையினர் அவரை விளித்தே உரையாற்ற வேண்டும். ஏனைய உறுப்பினர்களை மறைமுகமாகச் சுட்டிக் காட்டலாமேயன்றிப் பெயர் சொல்லிப் பேசக்கூடாது. சபையில் கூச்சலும் குழப்பமும் அதிகமாகி நிலைமை கட்டுக்கடங்காமற் போய்விடுமானால் சபை நடவடிக்கைகளைத் திடீரென நிறுத்திவிடவோ, ஒத்திவைக்கவோ அவருக்கு உரிமை உண்டு.

ஒருவர் தொடர்ந்து பல மணி நேரம் பேசிக்கொண்டே இருப்பதன் மூலம் சபையின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடலாம். அத்தகைய தேவையற்ற சொற்பொழிவுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் அதிகாரம் அவைத் தலைவருக்கு உண்டு. விவாதங்கள் நீண்டுகொண்டே போவதைத் தடுக்கப் பொது மக்கள் சபை மூன்று முறைகளைக் கையாளுகிறது. 'கங்காரு' முறை (Kangaroo) என்பது ஒன்று. அதன்படி மசோதாவின் ஒரு சில திருத்தங்களை மட்டும் விவாதத்துக்கு விடவும், ஏனையவற்றை நிறைவேறியதாகக் கருதவும், அவைத் தலைவருக்கு உரிமை தரப்படுகிறது. மசோதாவைப் பரிசீலித்த கமிட்டித் தலைவர் இந்த உரிமையை அவருக்கு வழங்குகிறார். மசோதா திருத்தங்களில் ஒன்றிலிருந்து சட்டென்று இன்னொன்றுக்கு அவர் கங்காரு போலத் தாவுவதால் இம்முறை அப்பெயரைப் பெற்றுள்ளது. அதேபோல் மசோதாவின் பல்வேறு பகுதிகள் இவ்வளவு நேரம் தான் விவாதிக்கப்படலாம் என்ற காலவரையறையை அவைத் தலைவர் முன்னாலேயே தீர்மானித்துவிடலாம். விவாதக் காலத்தை இங்ஙனம் வெட்டிவிடும் முறை 'கிலடின்' (Gullotine) எனப் பெயர் பெற்றுள்ளது. ஃபிரெஞ்சுப் புரட்சிக் காலத்துப் பிரபுக்களின் தலைகளை விரைவில் கூட்டாக வெட்டித்தள்ளப் பயன்படுத்தப்பட்ட கருவியே கிலடின் எனப்படுவதாகும். 'குளோசர்' முறை (Closure) என்பது மூன்றாவதாகும். அதன்படி ஒரு விவாதத்தைச் சட்டென்று முடித்துவிடும்படி ஓர் உறுப்பினர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலமும் அவைத்தலைவர் விவாதத்தின் காலத்தைக் குறைக்கலாம். நாட்டின் ஏதாவதொரு பகுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைக்கு விளக்கம் கோரி எதிர்க்

கட்சிக்காரர்கள் கொண்டுவரும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை (Adjournment Motions) ஏற்றுக் கொள்ளவோ தள்ளிவிடவோ அவைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

சட்டங்களை ஆக்குவதில் அமைச்சர்களேயன்றித் தனிப்பட்ட உறுப்பினர்களும் அவ்வப்போது பங்கு கொள்கின்றனர். தனிப் பட்ட உறுப்பினரின் மசோதாக்கள் (Private Member's Bills) அநேகமாக வெற்றி பெறுவதில்லை. அவைகளைப் பரிசீலிக்க வென்று தனிக் கமிட்டிகள் இருக்கின்றன. பொதுமைச் சட்டத்தின் வரம்புக்கு அப்பாற்பட்ட தல ஆட்சி நிறுவனங்கள், பொதுப்பணி நிறுவனங்கள், வாணிகக் கைத்தொழில் கம்பெனிகள் ஆகியவை களைப் பற்றிய மசோதாக்கள் தனி மசோதாக்கள் (Private Bills) எனப்படும். குறிப்பிட்ட இடங்களிலிருந்தோ நபர்களிட மிருந்தோ இத்தகைய மசோதாக்கள் முதலில் விண்ணப்பங்களின் உருவில் வரும். இரண்டாவது படிப்பின்போது ஒப்புக்கொள்ளப் படாத மசோதாக்களை நான்கு பேர் அடங்கிய குழு ஒன்று நன்கு ஆராயும்; சாட்சியங்களை விசாரிக்கும்; அதன்பின் குழுவினரின் சிபாரிசைச் சபை ஏற்றுக்கொள்ளும். எதிர்க்கப்படாத தனி மசோதாக்களும் கமிட்டியின் முன் பரிசீலனை செய்யப்படும். கமிட்டியின் சிபாரிசைச் சபை ஏற்கும். இந்த முறையில் செலவு நிறைய ஏற்படும். எனவே, நிருவாகத் துறையில் தாங்களே சில தற்காலிகக் கட்டளைகள் மூலம், தனிப்பட்ட நிறுவனங்களின் குறைகளைத் தீர்த்துவிடுகின்றனர். அத்தகைய கட்டளைகளைப் பின்னர் பாராளுமன்றம் விவாதமின்றி ஏற்றுக்கொண்டுவிடும்.

சட்டங்களை ஆக்கும் பணியில் கமிட்டிகள் பெரிதும் பங்கு கொள்கின்றன. சபையின் உறுப்பினர்கள் யாவரும் அடங்கிய முழுமைக் குழு மிக முக்கியமான மசோதாக்களைப் பரிசீலிக்கின்றன. மற்றபடி ஒரு குறிப்பிட்ட பொருள் (Subject) பற்றிப் பரிசீலனை செய்யத் தனிப்பட்ட பொறுக்குக் குழுக்கள் (Select Committees) அமைக்கப்படுகின்றன. அதன் ஒப்பத்தைப் பெற்ற பின்பே அப் பொருள் பற்றிய மசோதா உருவாக்கப்படும். குறிப்பிட்ட பரிசீலனை முடிந்ததும், குழு கலைக்கப்படும். குழுவின் உறுப்பினர் தொகைக்கு ஒரு வரையறை இல்லை. அது தன் தலைவரை தானே தேர்ந் தெடுத்துக் கொள்கிறது. இவையன்றி முப்பது முதல் ஐம்பது பேர்களடங்கிய நிலைபேறுன குழுக்களும் (Standing Committees) உண்டு. அவை சபைக் கூட்டத் தொடக்கத்தில் ஏற்படுத்தப் பட்டுச் சபை கலையும்வரை பணியாற்றுவன. அப்படிப்பட்ட குழுக்கள் ஐந்து இருக்கின்றன. அவைகளில் எதிர்க்கட்சி யாளர்களும் இடம் பெற்றிருப்பர். சபைக் கூட்டம் நடைபெற்றுக்

கொண்டிருக்கும்போதே இக் கமிட்டிகள் தத்தம் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும். மசோதாக்களுக்கு வாக்களிக்க வேண்டிய நேரத்தில் மட்டுமே அவர்கள் சபைக்குக் கட்சிக் கொறடாக்களால் (Whips) வரவழைக்கப்படுகின்றனர். இரண்டு சபைகளிலும் இத்தகைய குழுக்கள் உள்ளன. இவற்றில் குறிப்பிட்ட துறையில் அறிவும் அனுபவமும் நிறைந்த நிபுணர்கள் அடங்கியிருப்பராதலால், மசோதாக்கள் உண்மையில் அங்குத்தான் நன்கு பரிசீலிக்கப்படுகின்றன. கமிட்டியில் பல மசோதாக்களின் உருவமே மாற்றப்பட்டு விடுகின்றன. எதிர்க்கட்சிகளின் உருப்படியான ஆலோசனைகளும் இந்நிலையில்தான் ஏற்கப்படுகின்றன.

பொதுமக்கள் சபை ஆண்டொன்றுக்கு 120 முழு நாட்களாவது கூட்டம் நடத்த வேண்டுமென்பது மரபு. வாரத்தில் முதல் நான்கு நாள்களில் சபையானது மாலை 2-30 மணியிலிருந்து இரவு 11-30 மணி வரை நடைபெறும். பொது மசோதாக்கள் அந் நாள்களில் விவாதிக்கப்பெறும். ஐந்தாம் நாளான வெள்ளிக்கிழமைகள் தனிப்பட்ட மசோதாக்களுக்கென (Private Bills) ஒதுக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் கடவுள் வணக்கத்துக்குப் பின் மன்ற நடவடிக்கைகள் தொடங்குகின்றன. முதல் மணி கேள்வி நேரமாகும். அப்போது ஆளும் கட்சியைச் சாராத உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளின் குறைகளைக் கேள்வி உருவில் வெளியிடுவார்கள். அரசாங்கத்தின் சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் கேள்விகளைத் தொடுக்கலாம். கேள்வி நேரத்துக்குப்பின் மசோதாக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மசோதாக்களைச் சட்டங்களாக மாற்றக் குறைந்தபட்சம் 40 பேர்களாவது சபையில் இருக்கவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்களால் கொணரப்படும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள், நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள், கண்டனத் தீர்மானங்கள் ஆகியவைகளுக்கும் சில மணி நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன. அத் தீர்மானங்களை ஒட்டி விவாதமும் வாக்கெடுப்பும் கூட நடைபெறும். அதில் தோற்றால் அமைச்சர்கள் பதவியை இழக்க நேரிடும். ஆனால், அவர்களுக்குச் சபையில் பெரும்பான்மையான ஆதரவு இருக்குமாதலால், அத்தகைய இக்கட்டான நிலை ஏற்படுவதில்லை. பழங்கால முறையை ஒட்டி பொது விண்ணப்பங்களும் (Public Petitions) சபையின் முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றின்பேரில் விவாதம் நடைபெறுவதில்லை. அத்தகைய விண்ணப்பங்களைப் பரிசீலனைச் செய்து சிபாரிசுகளை வெளியிடத் தனிப்பட்ட கமிட்டி ஒன்று உள்ளது.

தற்காலத்தே அரசாங்கத்தின் செயல்கள் மிகவும் சிக்கலாக வும் விரிவாகவும் வளர்ந்துவிட்டன. ஆகவே, நிருவாக சம்பந்த மான பற்பல சிறிய சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தைப் பாராளு மன்றம் நிருவாகத் தலைவர்களுக்கு வழங்கியுள்ளது. இங்ஙனம் ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்க முறை (Delegated Legislation) தற்போது இங்கிலாந்தில் பெருகிவிட்டது.

பிரபுக்கள் சபை (House of Lords)

இங்கிலாந்து சட்டமன்றத்தின் மேல் சபை (Upper Chamber) எனக் கருதப்படும் பிரபுக்கள் சபை மிகத் தொன்மை வாய்ந்தது. நார்மானியர்கள் காலத்தே அரசரது ஆலோசனை மன்றத்தில் நிலமானியப் பிரபுக்களும், மத குருமார்களும் வீற்றிருந்தனர். அது பெருமக்கள் மன்றம் (Magnum Councilium) என அப்போது அழைக்கப்பட்டது. நாளடைவில் சாதாரண குருமார்கள் அம் மன்றத்தின் கூட்டங்களுக்குப் போவதை நிறுத்திக் கொண்டார்கள். எஞ்சியிருந்த பெரும் நிலப்பிரபுக்களும், பெரும் குருமார்களும் சேர்ந்து பிரபுக்கள் சபையைத் தோற்றுவித்தனர். சாதாரண நிலப் பிரபுக்களும், பொதுமக்கட் பிரதிநிதிகளும் ஒன்ருகச் சேர்ந்துகொண்டு பொது மக்கள் சபையைத் தோற்றுவித்தனர்.

சபையின் அமைப்பு

இங்ஙனம் தோன்றிய பிரபுக்கள் சபையில் முதலில் பரம்பரை யாக வந்த நிலப்பிரபுக்கள் பெரிதும் இடம் பெற்றிருந்தனர். நாள டைவில் மன்னர்கள் பார்த்துப் பிரபுக்களை நியமிக்கும் வழக்கம் ஏற்பட்டது. அப்போது அரசருக்கு வேண்டிய செல்வந்தர்களும் அறிஞர்களும் அச் சபையில் இடம் பெற்றனர். மூன்ரும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில் மட்டும் சுமார் 388 பிரபுக்கள் இங்ஙனம் நியமிக்கப்பட்டனர். சபை உறுப்பினர்களின் தொகை 1[illegible]ஆம் நூற்ருண்டில் 600 ஆகவும், இருபதாம் நூற்ருண்டில் ஏறத்தாழ 900 ஆகவும் உயர்ந்துவிட்டது. 1958ஆம் ஆண்டில் அதில் இருந்த உறுப்பினர்கள் தொகை வருமாறு :

அரச பரம்பரையைச் சேர்ந்த பிரபுக்கள்	... 4
மதகுருமார் பிரபுக்கள் (பிஷப்புகள், ஆர்ச் பிஷப்புகள்)	... 26
சாதாரண மேல்முறையீட்டுப் பிரபுக்கள் (Lords of Appeal in ordinary)	... 9
ஸ்காட்லாந்திய பிரதிநிதிப் பிரபுக்கள்	... 16
ஐரிஷ் பிரதிநிதிப் பிரபுக்கள்	... 4

ஏனைய பிரபுக்கள் (டியூக்குகள், மார்க்குவிசுகள் ஏர்ல்கள், வைகவுன்டுகள், பாரன்கள் முதலியோர்)	828
மொத்தம் ...	887

இவர்களில் அரச பரம்பரையைச் சேர்ந்த பிரபுக்கள், சபை நடவடிக்கைகளில் அவ்வளவாக உற்சாகம் காட்டுவதில்லை. மதப் பிரபுக்களில், காண்டர்பரி, யார்க் ஆகிய இரு இடங்களைச் சார்ந்த ஆர்ச் பிஷப்புகள், லண்டன், டர்ஹாம், வின்செஸ்டர் ஆகிய இடங்களைச் சார்ந்த பிஷப்புகள் மற்றும் ஆங்கிலத் திருச் சபையைச் சார்ந்த 21 மூத்த பிஷப்புகள் ஆகியோர் அடங்குவர். முறையீட்டு வழக்குகளில் இறுதித் தீர்ப்பை வழங்குவதற்காக முறையீட்டுப் பிரபுக்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்களின் ஆயுள்வரை அப் பதவி நீடிக்கும். அவர்கள் இறந்த பின் வேறு நீதிபதிகள் பிரபுக்களாக நியமிக்கப்படுவர். ஸ்காட்லாந்தியப் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரிட்டிஷ் மேல் சபைக்கு அனுப்பப்படுவோர்களே ஸ்காட்லாந்துப் பிரதிநிதிப் பிரபுக்கள் எனப்படுவர். 1922-ல் அயர்லாந்து சுயேச்சை அடையுமுன் அங்கிருந்து அனுப்பப்பட்டு வந்த ஆயுள் பிரதிநிதிகளில் எஞ்சி யுள்ளோரே இன்றைய ஐரிஷ் பிரபுக்களாவர். டியூக், மார்க்விஸ் போன்றவர்களெல்லாம் அவ்வப்போது ஆங்கில மன்னர்களால் நியமிக்கப்பட்ட பரம்பரைப் பிரபுக்கள். அத்தகைய ஒரு பிரபு இறந்த உடன் அப் பதவி அவரது மூத்த மகனைச் சென்றடையும். மூத்த மகளுக்குப் பட்டம் செல்வதில்லை. ஆண், பெண் வேறுபா டின்றி யாவரும் பொது அலுவல்களை மேற்கொள்ளத் தகுதி உடையவர்கள் என 1919ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டம் கூறுகிறது. அதை ஒட்டி ரோண்டா என்ற வைகவுன்ட் பெரு மாட்டி (Viscounteos Rhondda) பிரபுக்கள் சபையில் தனக்கு இடமளிக்குமாறு விண்ணப்பித்தார். விண்ணப்பம் வெற்றி பெறவில்லை. சிறுவர்கள், அயல்நாட்டார், வறிஞர்கள் ஆகியோரும் பிரபுக்கள் சபையில் இடம் பெறத் தகுதியற்றவர்கள். சபையில் இத்தனை பேர் இருப்பினும், அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்பவர்கள் 60 அல்லது 70 பேர்களே யாவர். மசோதாக்களை நிறைவேற்றத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்கள் (Quorum) மூவரே யாவர். ஒரு காலத்தில் நிலப்பிரபுக்களின் பிரதிநிதியாக மட்டுமே இருந்த இச்சபையில் இன்று பல்வேறு துறையின் பிரதிநிதிகளும் காணப்படுகின்றனர். நாட்டுக்கு யாதானுமொரு வகையில் சேவை செய்தவர்களுக்குப் பரிசாகப் பிரபுப் பட்டம் வழங்கப்படுகிறது. அரசியலுக்கு மட்டுமன்றி,

இலக்கியம், அறிவியல், நுண்கலை ஆகியவற்றுக்குத் தொண்டாற்றியவர்களும் பிரபுக்கள் சபையில் இடம் பெறுகின்றனர். அறிவின் மூத்தோர் அடங்கிய மூதறிஞர் சபையாக அது விளங்குகிறது. ஆனால், கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்களே அதில் அதிகம் காணப்படுகின்றனர்.

சபையின் அலுவல்கள்

மசோதாக்களைச் சட்டங்களாக ஆக்குவதே அதன் முக்கிய அலுவலாகும். நிதி மசோதாக்களை இச் சபையில் கொண்டுவர முடியாது. வாதத்துக்கு இடமில்லாத சரதாரண மசோதாக்களை உறுப்பினர்கள் கொணரலாம். பொதுமக்கள் சபையில் நடப்பதைப் போன்றே இங்கும் சட்டங்கள் ஆக்கப்படுகின்றன. மற்றபடி கீழ்ச்சபையில் நிறைவேறிய மசோதாக்களுக்கு ஒப்பம் வழங்கும் பணிதான் சபையின் மிகுதியான நேரத்தையும் எடுத்துக் கொள்கிறது. அம் மசோதாக்களை இரண்டாண்டுக் காலம் மட்டுமே நிறுத்தி வைக்கும் அதிகாரத்தை 1911ஆம் ஆண்டுப் பாராளு மன்றச் சட்டம் வழங்கியது. 1949-ல் ஏற்பட்ட இன்னொரு சட்டப்படி அக் காலக்கெடு ஓர் ஆண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதற்குள் மும்முறை ஒரு மசோதாவைச் சபை நிராகரிக்கலாம். அதன் பின் சபையின் தயவின்றியே மசோதா சட்டமாகிவிடும். அக் கால எல்லைக்குள் மசோதாவைப் பற்றி மக்கள் ஆர அமரச் சிந்திப்பர். அதற்குள் அம் மசோதாவின் தேவையேகூட இல்லாமற் போய்விடும். எனவே, நிறுத்திவைக்கும் அதிகாரம் ஓரளவு வேண்டற்பாலதே யாகும். எனினும், இதுவரை எந்த மசோதாவையும் மேல் சபை நிறுத்தி வைத்ததாக (மேற்சொன்ன 1949ஆம் ஆண்டுச் சட்டத்தைத் தவிர) வரலாறு இல்லை. இத்தகைய பலவீனமே சபையின் பலமாகும் என்பது ஒருசிலரின் கூற்றாகும். ஏனெனில், இது பலமுடைய சபையாக இருந்தால், கீழ்ச் சபையோடு சச்சரவு அடிக்கடி ஏற்படும். அதன் காரணமாக அது இதற்குள் ஒழிக்கப்பட்டிருக்கவும் கூடும்.

சட்ட ஆக்கத் துறையில் இச்சபைக்கு உண்மையான அதிகாரம் ஒன்றுமில்லையாயினும் நாட்டின் முக்கிய பிரச்சினைகளைக் குறித்து நன்கு ஆராய்ந்து அரிய யோசனைகளை இம்மன்றம் வெளியிடுகிறது. சான்சலர் பிரபுதான் அவைத் தலைவராவார். கீழ்ச்சபைத் தலைவருக்குரிய அதிகாரங்கள் இவருக்கு இல்லை. மன்ற உறுப்பினர்கள் அதிக உரிமையோடு சாவகாசமாக நாட்டுப் பிரச்சினைகளை ஆராய்கின்றனர். அறிவின் மூத்த அவர்களது ஆலோசனைகளைப் பொதுமக்கள் சபையும் அமைச்சர்களும் பெரிதும் மதிக்கின்றனர்.

இரு சபைகளிடையே சச்சரவு

18ஆம் நூற்றுண்டு வரை மேல்சபை, கீழ்ச்சபை ஆகிய இரு சபைகளும் பெரிதும் ஒத்தே தொழிற்பட்டு வந்தன. ஆன் இராணியார் காலத்து மட்டுமே ஒரு பலத்த சச்சரவு இரு சபைகளுக்கிடையேயும் நடைபெற்றது. பிரபுக்கள் சபையில் விக்குக் கட்சியினரும், பொதுமக்கள் சபையில் டோரிக் கட்சியினரும் பெரும்பான்மையாக இருந்ததே இச் சச்சரவிற்குக் காரணமாகும். 1710ஆம் ஆண்டில் நாட்டை ஆண்டுகொண்டிருந்த டோரி அமைச்சர்கள் யுட்ரெக்ட் உடன்பாட்டை வற்புறுத்திய போது, பிரபுக்கள் சபை அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உடனே அமைச்சர்கள் 12 டோரிப் பிரபுக்களை மேல் சபையில் நியமித்து அதன் மூலம் தங்களது தீர்மானத்தை அங்கு நிறைவேற்றும்படிக் கேட்டுக்கொண்டனர். அரசியாரும் சம்மதித்துவிட்டார்கள். இதைக் கண்ட மேல்சபை பணிந்து விட்டது. யுட்ரெக்ட் சமாதானத்தை ஏற்றுக் கொண்டது. எனினும், பொதுவாகப் பதினெட்டாம் நூற்றுண்டில் பிரபுக்கள் சபையின் கையே ஓங்கி இருந்தது. வால்போல், பிட் போன்ற பிரதமர்கள் அச்சபையைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். 19ஆம் நூற்றுண்டிலுங்கூட இரு சபைகளும் ஒத்தே பணிபுரிந்தன. சட்டங்களை ஆக்குவதிலும் நீக்குவதிலும் மேல்சபை கீழ்ச்சபையோடு சம அதிகாரத்தைப் பெற்றிருந்தது. ஆனல், நிதி மசோதாக்களைத் தோற்றுவிக்கும் அதிகாரத்தை இச்சபை 1407ஆம் ஆண்டிலேயே இழந்து விட்டது. 1671ஆம் ஆண்டளவில் அவற்றைத் திருத்தும் அதிகாரத்தையும் அது இழந்தது. எனவே, சாதாரண மசோதாக்களையும் நிதி மசோதாவோடு சேர்த்து நிறைவேற்றும் வழக்கத்தை அரசாங்கம் மேற்கொண்டது. 1702ஆம் ஆண்டளவில் இவ் வழக்கம் நின்றுவிட்டது. இரு சபைகளும் முரண்படும் போதெல்லாம் இரண்டின் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டு மாநாடு ஒன்றை அரசாங்கம் கூட்டும். அம் மாநாட்டில் முரண்பாடு தீர்க்கப்பட்டு விடும். ஒரு சபையிலிருந்து இன்னென்றுக்குச் செய்தி அனுப்புவதன் மூலம் முரண்பாடுகள் தீர்க்கப்பெற்றன. அரசாங்கத்துக்குச் சாதகமான பிரபுக்களைப் போதிய அளவு நியமிப்பதன் மூலம் மேல் சபையைக் கீழ்ச்சபையோடு ஒத்துழைக்குமாறு செய்துவிடுவது இன்னெரு முறை. இம்முறையையே ஆன் இராணியார் கையாள யத்தனித்தார். இத்தகைய முறையைத் தவிர்ப்பதற்காக அரசர் ஆறு பேர்களுக்கு மேல் பிரபுக்களை நியமிக்கலாகாது என்று கூறும் பிரபுத்துவச் சட்டத்தை (Peerage Bill) அரசாங்கம் கொணர்ந்தது. ஆனல், வால்போலின் பலத்த எதிர்ப்புக் காரணமாக மசோதா சட்டமாக நிறைவேருமற் போய்விட்டது. 1832ஆம் ஆண்டு மசோதாவும், 1911ஆம் ஆண்டுச் சட்டமும் அரசர்கள் போதிய

அளவு பிரபுக்களை நியமித்து அதன் மூலம் அரசாங்கத்துக்குப் பிரபுக்கள் சபையில் பெரும்பான்மை ஆதரவை உண்டாக்க முன்வந்ததாலேயே பாராளுமன்றச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன என்பதை நாம் ஏற்கெனவே விரிவாகக் கண்டுள்ளோம். 1862ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் எனும் அமைச்சரால் கொண்டுவரப்பட்ட காகித வரி மசோதாவைப் (Paper Duty Bill) பிரபுக்கள் சபை நிராகரித்தது. நாட்டின் நிதி பற்றிய விஷயங்களைத் தீர்மானிக்கும் உரிமை தனக்கே உரியதெனப் பொது மக்கள் சபை பல தீர்மானங்களை அப்போது நிறைவேற்றியது. அடுத்த ஆண்டு அவர் தமது மசோதாவை ஏனைய நிதி மசோதாக்களோடு சேர்த்து ஒரு பட்ஜெட்டாக வெளியிட்டார். பட்ஜெட்டை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டவுடன் பிரபுக்கள் சபை அதை ஏற்றுக்கொண்டது. 1895ஆம் ஆண்டில் அயர்லாந்துக்குச் சுயாட்சி வழங்கும் விஷயத்தில் பிரபுக்கள் சபை கிளாட்ஸ்டனை எதிர்த்தது. 19ஆம் நூற்றுண்டின் இறுதியில், நிலப் பிரபுக்களும், புதிய வணிகப் பெரு மக்களும் பிரபுக்கள் சபையில் இடம் பெற்றனர். எனவே, அவர்கள் பொது மக்களால் கொண்டுவரப்பட்ட பல மசோதாக்களை எதிர்க்க ஆரம்பித்தனர். 1909-ல் நிதி மசோதாவை அவர்கள் தோற் கடித்ததன் விளைவாக 1911ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் ஏற்பட்டதென்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். அச் சட்டப்படி பிரபுக்கள் சபைக்கு நிதி மசோதாக்களைப் பொறுத்த வரையில் ஒருவித அதிகாரமுமில்லை. பொது மக்கள் சபையில் நிறைவேறிய நிதி மசோதா, பிரபுக்கள் சபையின் சம்மதமின்றியே ஒரு மாதத்துக்குள் சட்டமாகிவிடும். சாதாரண மசோதாக்களையும் இரண்டாண்டுகளுக்கு மட்டுமே அது நிறுத்தி வைக்கலாம். ஆனால், தள்ளிவிட முடியாது. அவ் விரண்டாண்டு களுக்குள் அம்மசோதா கீழ்ச்சபையில் மும்முறை நிறைவேறி விட்டால், அது தானாகவே சட்டமாகிவிடும். 1949ஆம் ஆண்டில் சபையின் நிறுத்தி வைக்கும் அதிகாரம் ஓராண்டுக்குக் குறைக்கப் பட்டுவிட்டது. எனவே, இரு சபைகளுக்கும் முட்டுக்கட்டை ஏற்படவே இப்போது வழியில்லை.

சபைச் சீர்திருத்தம்

பிரபுக்கள் சபை சீர்திருத்தப்பட வேண்டும், அல்லது ஒரேயடியாக ஒழிக்கப்படவேண்டும் என்ற இயக்கம் இங்கிலாந்தில் பரவலாக இருந்து வருகிறது. கன்சர்வேடிவ் கட்சியினர் அதை ஓரளவு சீர்திருத்தி அப்படியே வைத்திருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். தொழிற்கட்சியினர் பலர் அதை ஒழித்துவிடுவதே நல்லது எனக் கூறுகின்றனர். மக்களாட்சியும்

சமதர்மமும் வளர்ந்துவரும் ஒரு நாட்டில் சமுதாயத்தின் உயர்வு தாழ்வுகளைச் சுட்டிக் காட்டும் வகையில் எந்த நிறுவனமும் இருக்கக்கூடாது என்றும், பிரபுக்கள் என்ற வகுப்பே காலத்துக் கொவ்வாதது என்றும் பலர் கருதுகின்றனர். ஜனநாயகத்துக்கு முரண்பாடான ஒரு நிறுவனம் என்பது மட்டுமன்றி, இன்றைய நிலையில் அது தேவையற்றது எனவும் ஒரு சிலர் கருதுகின்றனர். பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபை இருக்கும் போது, வேரூன்றிய சுயநலக் கும்பல்களின் (Vested Interests) பிரதிநிதியாக இன்னொரு சபையை வைத்திருப்பது என்பது, அக் கும்பல்களுக்கு வேண்டுமானால் நலம் பயக்கலாமேயன்றி, பொது வாக சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அது தடையாகவே அமையும் என்று சிலர் வாதிக்கின்றனர். முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை யாக நிற்கக்கூடிய ஒரு சபை தேவையற்றது என்பது அவர்தம் கட்டுரையாகும். மேல் சபை தேவையற்றது எனக் கூறி வந்த அப்பேஸீ (Abbe Sieyes) என்னும் ஃபிரெஞ்சு அறிஞர், 'கீழ்ச் சபையோடு ஒத்துப்போகுமாயின், அது தேவைக்கு மீறியதொன்று (Superfluous); ஒத்துப்போகாவிடின், அது பொல்லாங்கு நிறைந்த ஒன்று (Mischievous)' என வர்ணிக்கிறார். இதை விளக்க பிரைஸ் (Bryce) என்னும் அறிஞர் கலீபா உமர் (Caliph of Omar) அலெக்ஸாந்திரிய நூல் நிலையத்தை எரிப்பதற்குமுன் விளம்பிய கூற்றை நினைவுபடுத்துகிறார். 'இங்குள்ள நூல்கள் குரானோடு ஒத்துப்போகுமானால், அவை தேவையற்றவை; ஒத்துப் போகாதவை என்றால் அவை அழியத்தக்கவை' என்றாராம் அவர். அப்பேஸீ கூறுகிறபடி மேல் சபை கீழ்ச்சபையோடு ஒத்துப் போகவோ மறுக்கவோ வேண்டுவதில்லை. கீழ்ச்சபை தனது கொள்கைகளை எப்படி நல்ல முறையில் கடைப்பிடிக்கலாம் என் பதைச் சுட்டிக்காட்ட அது துணை புரியலாம். பிரபுக்கள் சபை இங்கிலாந்தில் அத்தகைய நிலையில்தான் இருக்கிறது. கீழ்ச் சபையின் கொள்கைகளை ஆய்ந்து தனது மேலான யோசனைகளை வெளியிடுவதோடு அது நிறுத்திக்கொள்கிறது. மற்றபடி அநேக மாகக் கீழ்ச்சபையின் மசோதாக்களை அது மறுதலிப்பதே இல்லை. ஒரோ வழிக் கீழ்ச்சபை தீவிரச் சீர்திருத்தத்தில் ஈடுபட் டால், அதைச் சிறிது காலம் அதாவது ஓராண்டுக் காலம் நிறுத்தி வைக்கும் அதிகாரம் மட்டுமே அதற்குண்டு. மசோதாக்களைச் சில சமயம் தேக்கி வைப்பது அவசியம் என்பதைப் பல அறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

கீழ்ச்சபையிலிருந்து காட்டமாக வெளிவரும் மசோதாக்களை மேல் சபையில் ஆர அமர ஆலோசித்த பின் ஒப்புக்கொள்வது 'சூடான தேநீரைக் கோப்பையிலிருந்து தட்டில் அல்லது ஸாஸரில்

(Saucer) ஊற்றி ஆறவைத்து அருந்துவது போன்றது' என ஜார்ஜ் வாஷிங்டன் என்ற அமெரிக்கத் தலைவர் ஒருமுறை கூறினராம். இந்த முறை 'குடிபோதையிலுள்ள ஃபிலிப்பிடமிருந்து ஒரு வழக்கை மனந்தெளிந்த நிலையிலுள்ள ஃபிலிப்பிடம் முறையிட்டுக் கொள்வதை ஒக்கும்' (The appeal from Philip drunk to Philip Sober) எனப் பேரரசர் வேலரியஸ் மேக்ஸிமஸ் (Emperor Valerius Maximus) கூறியுள்ளார். கீழ்ச்சபையிலுள்ளவர்கள் கட்சிவெறி காரணமாகவும் உணர்ச்சி காரணமாகவும் அவசரப்பட்டு ஒரு தீவிர மசோதாவைக் கொண்டுவரலாம். அதை நிறுத்தி வைப்பதன் மூலம், கீழ்ச்சபையினரும் பொதுமக்களும் அத்தகைய தீவிர சீர்திருத்தம் நாட்டுக்குத் தேவைதானா என்பதைத் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வர அவகாசம் கிடைக்கிறது. அவசரத்தில் தவறு செய்திருந்தால் அதைத் திருத்திக்கொள்ள கீழ்ச்சபைக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. தவறில்லை என்று யாவரும் நினைத்தால் ஓராண்டுக்குப் பின் மீண்டும் அம்மசோதாவை நிறைவேற்றிக்கொள்ளப் பொதுமக்கள் சபைக்கு உரிமை என்றுமே இருக்கிறது. எனவே, இதை ஒரு பெரிய தடையாகக் கருதுவதற்கில்லை.

தற்காலத்தே இயற்றப்படவேண்டிய சட்டங்கள் ஏராளமாக இருப்பதால், மேல்சபையில் அவைகளை நிறைவேற்றுவதால், காலதாமதம் ஆகுமென்றும், கீழ்ச்சபையில் மூன்று முறை நன்கு ஆராய்ந்த பின்னரே ஒரு மசோதா நிறைவேற்றப்படுவதால், மீண்டும் அதை மேல்சபையில் விவாதிப்பதென்பது காலத்தை வீணாக்குவதாகுமென்று சிலர் குறை கூறுகின்றனர். ஆனால், மேல்சபையில் காலதாமதம் அதிகம் ஆவது இல்லை. சடங்குகள் ஏதுமின்றி அது விரைவில் தனது பணியைச் செய்துவிடுகிறது. மேலும் தகராறுக்கு இடமில்லாத பல மசோதாக்களை மேல் சபையில் முதலில் கொண்டு வருவதன் மூலம் கீழ்ச்சபையின் வேலைப்பளு பெரிதும் குறைவதற்கு இடமுண்டு.

மேல்சபையை வைத்திருப்பதால், பணம் விரயமாகின்றதென்றும் சொல்வதற்கில்லை. ஏனென்றால், பிரபுக்களுக்குச் சம்பளம் வழங்கப்படுவதில்லை. இரு சபைகளுக்கும் பிணக்கு நேர்ந்தால், தீர்ப்பது கடினம் என்ற நிலையும் இல்லை. ஏனெனில், ஓராண்டுக்குள் பிணக்குத் தானாகவே தீர்ந்துவிடச் சட்டம் இடம் தருகிறது.

சபையின் அமைப்பு முறையைத்தான் (Organisation) பலர் கண்டிக்கின்றனர். வாழையடி வாழையெனப் பரம்பரையாகப்

பிரபுத்துவம் வழங்கப்படுவதைப் பலர் குறைகூறுகின்றனர். ஒரு குடும்பத்தில் ஒருவர் நல்லவராகவும் வல்லவராகவும் இருக்கலாம். ஆனால், அவரது மூத்தமகனும் அதேபோல இருப்பாரென்று எப்படித் திடமாகக் கூறமுடியும் என அன்னார் வினவுகின்றனர். எனவே, ஒருவர் அவரது வாழ்நாள் முடியும் வரைக்கே பிரபுவாக நியமிக்கபடவேண்டும். அதன்பின் தகுதிக்கேற்ப வேறொருவர் அப்பதவியில் இடம் பெறவேண்டும்; பிரபுத்துவம் சிறப்புரிமையாக இருக்கலாமேயன்றிப் பிறப்புரிமையாக இருக்கக்கூடாது என்பது பலரின் வாதமாகும். மற்றும் வழிவழிப் பிரபுக்களேயன்றி நாட்டுக்குச் சேவை செய்துள்ள பல பெரியோர்களும் பெண்டிரும் அதில் இடம்பெற வேண்டுமென்பதும் சிலரது கருத்தாகும். உண்மையில் இன்று பல்வேறு துறைகளில் சிறப்புப் பணிபுரியும் பல அறிஞர்கள் பிரபுக்கள் சபையில் நியமிக்கப்படுகின்றனர். 1959ஆம் ஆண்டிலிருந்து பெண்டிரும் அதில் இடம்பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இச்சபையானது பல சுயநலக் கும்பல்களின் பிரதிநிதியாக இருக்கிறதேயன்றி பொதுவான தேசத்தின் பிரதிநிதியாயில்லை என்பது பலரின் வாதமாகும். உண்மையில் பங்குதாரர்கள், கப்பல் வணிகர், மது வியாபாரிகள் போன்றவர்களுக்குச் சபையில் நிறைய நிகராட்கள் (Representatives) இருக்கின்றனர். அவர்கள் செல்வர்களைப் பாதிக்கும் சட்டங்களை விரும்புவார்கள் என்பது ஐயப்பாட்டுக்குரியதுதான். மற்றும், இச்சபையில் கன்சர்வேடிவ் கட்சியினர்தான் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். கிளாட்ஸ்டன் பிரபு ஐரிஷ் சுயாட்சி மசோதாவைக் கொண்டுவந்த பொழுது பல தாராளக் கட்சியினர், கன்சர்வேடிவ்களாக மாறி விட்டனர். எனவே, இன்று பிற்போக்குவாதிகளின் செல்வாக்குதான் சபையில் மேலோங்கி நிற்கிறது. நாட்டில் பல கட்சிகளிருக்க, ஒரே ஒரு கட்சியின் பிரதிநிதியாக இருக்கும் பிரபுக்கள் சபை ஒழிக்கப்படவேண்டும் என்பது சிலரின் கருத்தாகும். கட்சிக்குப் பணம் கொடுப்பவர்கள் எளிதில் பிரபுப் பட்டத்தைப் பெற்றுவிடும் வழக்கம் இங்கிலாந்தில் நெடுநாளாக இருந்து வந்தது. 1925ஆம் ஆண்டில்தான் லாயிட் ஜார்ஜ் அத்தகைய வழக்கத்தைத் தடுத்தார். இத்தகைய அமைப்பு முறையால் சபையின் எண்ணிக்கை அதிகமாகிறதே யன்றிக் கண்ணியமும் குறைந்துவிடுகிறது. மேலும் இச் சபையில் ஆங்கிலிகத் திருச்சபையைச் சேர்ந்த பிரபுக்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். ஏனைய மதப் பிரிவுகள் அதில் ஏன் இடம் பெறக்கூடாது எனச் சிலர் வாதிக்கின்றனர். இங்ஙனம் ஒரு கட்சி, ஒரு மத நிறுவனம் இவைகளின் பிரதிநிதியாக விளங்கும் சபை நாட்டுக்குத் தேவைதானா எனும் வினா இயல்பாகவே பலருக்கு எழுகின்றது. சபையைச் சீர்திருத்த இதுவரை பல முயற்சிகள் நடைபெற்றுள்ளன. ஆனால், ஒன்றாவது வெற்றி பெற

வில்லை. ஏனெனில், இன்றைய பிரபுக்கள் சபை இருந்தும் இல்லாதது போன்று, பல்லிழந்த பாம்பு போன்று செயற்பட்டு வருகிறது. அதில் ஏதேனும் சீர்திருத்தம் செய்தால் கண்டிப்பாக அதற்கு அதிகமான அதிகாரங்களை வழங்க வேண்டியிருக்கும். அதற்கேற்பப் பொது மக்கள் சபையின் பலம் குறையும். எனவேதான் சீர்திருத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போகின்றன.

ஒருவர் தமது வாழ்நாள் முடியும் வரை மட்டுமே பிரபுவாக நியமிக்கப்படவேண்டும் என்ற ஆயுள் பிரபுத்துவக் கொள்கையை (Life Peerages) பலர் வற்புறுத்தியுள்ளனர். 1869ஆம் ஆண்டில் ஜான் ரஸ்ஸல் பிரபு அத்தகையதொரு மசோதாவைச் சட்டமன்றத்தில் கொணர்ந்தார். ஆண்டொன்றுக்கு நான்குக்கு மேற்படாத ஆயுட்காலப் பிரபுக்கள் (Life Peers) நியமிக்கப்படலாம் எனவும், அவர்கள் ஸ்காட்லாந்திய அயர்லாந்திய பிரபுக்கள் கூட்டம், பொதுமக்கள் சபையில் பத்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தோர், தரைப்படை, கடற்படை, நீதித்துறை, சட்டத்துறை, இவைகளில் பணி புரியும் திறமைசால் அதிகாரிகள், அறிவியல், இலக்கியம், கலை ஆகியவற்றில் தனிசிறந்தோர் ஆகியவர்களிலிருந்து பொறுக்கப்பட வேண்டும் எனவும் அவரது மசோதா கூறிற்று. ஆனால், அது நிறைவேறவில்லை. டெர்பி பிரபு அதை வன்மையாகக் கண்டித்தார். பிரபுக்கள் நியமனம் என்பது நிருவாகத் தலைவர்களான அமைச்சர்களின் கைகளில் இருப்பதால், மேற்சொன்ன மசோதாவால் அமைச்சர்களின் அதிகாரமும் அவர்களுக்குப் பல்லவி பாடுகின்ற பொதுமக்கள் சபையின் அதிகாரங்களும் பெருகுமேயன்றிப் பிரபுக்கள் சபைக்கு அதனால் ஒரு பலனுமேற்படாது என்பதை அவர் நன்கு எடுத்துக் காட்டினார். 1856ஆம் ஆண்டில் வென்ஸ்லி டேல் (Wensley Dale) என்பார் பிரபுவாக நியமிக்கப்பட்டபோது, அரசாங்கம் தனது தனிச் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி, யாரை வேண்டுமானாலும், பிரபுவாக நியமிக்கலாம்; ஆனால், அவர்களைப் பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களாக ஆக்கக் கூடாது என்ற தீர்மானத்தைச் சபை நிறைவேற்றியது. 1874ஆம் ஆண்டில் ரோஸ்பரி பிரபு (Lord Rosebury) ஒரு திட்டம் கொணர்ந்தார். அதன்படிப் பிரபுக்கள் அனைவரும் மேல் சபையில் உறுப்பினராயிருக்க வேண்டுவதில்லை. அவர்கள் ஒருசில நிகராட்களைத் (Representatives) தேர்ந்தெடுத்துச் சபையில் உறுப்பினர்களாக ஆக்கவேண்டும். ஸ்காட்லாந்திலிருந்தும், அயர்லாந்திலிருந்தும் பிரபுக்களின் பிரதிநிதிகள் சபைக்கு வருவது போன்று இங்கிலாந்திலிருந்தும் அவ் வகுப்பாரின் நிகராட்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டால் போதும்; அதோடு வேறு சில நிறுவனங்களிலிருந்தும் பல உறுப்

பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அவர் கூறினர். அவரது கூற்றும் எடுபடவில்லை. அடுத்து 1876ஆம் ஆண்டில் சபையில் நீதிபதிகளின் தொகை மிகவும் குறைந்து விட்டது. சபைக்கு வரும் முறையீட்டு வழக்குகளைச் (Cases of Appeal) செவ்வனே விசாரித்து இறுதித் தீர்ப்பு வழங்கப் போதிய அளவு நீதிபதிகள் அங்கு இல்லை. எனவே, முறையீட்டு நீதிபதிப் பிரபுக் கள் நால்வரை அரசாங்கம் நியமிக்கலாம் என்று கூறுகிற சட்டம் ஒன்றைப் பாராளுமன்றம் இயற்றியது. அத்தகைய நீதிபதிகள் தங்களது ஆயுட்காலம் வரைக்குமே பிரபுக்களாக நியமிக்கப்பட்ட னர். இத்தகைய நீதிபதிகளின் தொகை 1913ஆம் ஆண்டில் ஆருகவும், 1929-ல் ஏழாகவும், 1947-ல் ஒன்பதாகவும் உயர்த்தப் பட்டது. 1888ஆம் ஆண்டில் சாலிஸ்பரி பிரபு இரண்டு சீர்திருத்த மசோதாக்களை முன்மொழிந்தார். அவற்றில் ஒன்று, ஆண்டொன் றுக்கு நான்கு பேர் வீதம் ஐம்பதுக்கு மேற்படாத பிரபுக்கள் நாட்டின் நல்லறிஞர்கள் கூட்டத்திலிருந்து நியமிக்கப்படலாம் என்றும், அவர்கள் தங்கள் ஆயுட்காலம் வரை மட்டுமே பதவி வகிக்கலாமெனவும் கூறியது. இன்னொரு மசோதா தகுதியற்ற பிரபுக்களைச் சபையிலிருந்து நீக்கிவிட வேண்டுமெனக் கூறியது. இரண்டுக்கும் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதால் சாலிஸ்பரி அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார். ஆயுட்காலப் பிரபுக்கள் ஆண்டொன்றுக்குப் பத்துப் பேர் வீதம் நியமிக்கப் பெறலாம் எனக் கூறுகின்ற மசோதா ஒன்றை 1953ஆம் ஆண்டில் சைமன் பிரபு (Lord of Simon) பாராளுமன்றத்தில் கொணர்ந்தார். எர்ல் ஜோவிட் (Earl Jowitt) என்பார், பிரபுக்கள் சபையில் இங்கொன் றும் அங்கொன்றுமாகச் சீர்திருத்தங்களைப் புகுத்துதல் சரியில்லை யென்றும், அமைப்பு, அதிகாரம் ஆகிய பல முறைகளிலும் பரவலாக மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனவும், அதற்குரிய காலம் இன்னும் வரவில்லை எனவும் விவாதித்தார். மசோதா தோல்வியடைந்தது.

ஆயுட்காலப் பிரபுக்களை நியமிக்கிற யோசனை மேற்கண்டவாறு நாளடைவில் கைவிடப்பட்டதென்ருலும் வேறு சிலச் சீர்திருத்தக் கருத்துகளும் அவ்வப்போது அறிஞர்களால் வெளியிடப்பட்டன. 1911ஆம் ஆண்டில் லான்ஸ்டௌன் பிரபு (Lord Lansdowne) ஒரு சீர்திருத்த மசோதாவைப் பிரபுக்கள் சபையில் கொணர்ந்தார். அதன்படிச் சபையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள், கட்சி வாரியாக அதாவது பொதுமக்கள் சபையில் கட்சிகள் பெற்றுள்ள இடங்களின் எண்ணிக்கைக்கேற்ப, மன்னரால் நியமிக்கப்பெற வேண்டும். இன்னொரு மூன்றில் ஒரு பகுதியினர் பொதுமக்கள் சபையிலிருந்து பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்;

எஞ்சியுள்ள மூன்றில் ஒரு பகுதியினர் உலகியல் பிரபுக்கள் (Lay Peers) கூட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்கள் அனைவரும் 12 ஆண்டுகளுக்கு மட்டுமே பதவி வகிக்க வேண்டும். மூன்ருண்டுகளுக்கொருமுறை நான்கில் ஒரு பகுதியினர் தங்களது பதவிகளைத் துறக்கவேண்டும். இங்ஙனம் கூறிய இம் மசோதாவும் தோல்வியே அடைந்தது. சபை சீர்திருத்தப்பட வேண்டுமென்பதை 1911ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டம் தனது முகப்புரையில் (Preamble) சுட்டிக் காட்டியது. 1918ஆம் ஆண்டில் பிரைஸ் பிரபுவின் (Lord Bryce) தலைமையில் மேல் சபைச் சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்கான ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அக் கமிட்டியின் சிபாரிசுகளின்படிச் சபையின் ஒரு பகுதியினர் (246 பேர்கள்) பொதுமக்கள் சபையிலிருந்து பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இன்னொரு பகுதியினர் (81 பேர்) இரு சபைகளும் சேர்ந்த ஒரு கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இன்னும் ஒருசிலர் பழைய உலகியல் பிரபுக்கள், பிஷப்புகள் ஆகியோரிடமிருந்து பொறுக்கப்படவேண்டும். சட்டவல்லுநர் சிலர் தம் ஆயுட் காலம் வரையில் பிரபுக்களாக நியமிக்கப்படவேண்டும். அரச குடும்பத்தைச் சார்ந்த பிரபுக்களும் அதில் இடம் பெறவேண்டும். இத்தகைய ஒரு கலப்புச் சபை 12 ஆண்டுகளுக்கே நியமிக்கப் பெறவேண்டும். அதில் மூன்றில் ஒரு பகுதியினர் நான்காண்டுகளுக்கொருமுறை பதவியிலிருந்து நீங்கிக் கொள்ள வேண்டும். 12 ஆண்டுகளுக்குப் பின் வேறு புதிய சபை அமைக்கப்பட வேண்டும். சான்சலர் பிரபு அதன் தலைவராக அமையவேண்டும். பொதுமக்கள் சபையில் இடம்பெற இயலாத அறிஞர்கள் பலரும் இச் சபையில் இடம்பெறவேண்டும்.

சபையின் அதிகாரங்களைப் பற்றியும் கமிட்டி ஒருசில மாற்றங்களைச் சிபாரிசு செய்தது. நிதி மசோதாக்கள் உண்மையில் நிதி பற்றியவைதாஞ என்பதை இரு சபைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களடங்கிய கூட்டுச் சபையே தீர்மானிக்க வேண்டுமெனவும், நிதி மசோதாவெனத் தீர்மானிக்கப்பட்டால் அதை ரத்துச் செய்யவோ, திருத்தவோ மேல் சபைக்கு அதிகாரமில்லை எனவும், ஏனைய சாதாரண மசோதாக்களைப் பொறுத்தவரை இரு சபைகளுக்கும் பிணக்கு நேரிட்டால், அதை இரு சபைகளின் நிகராட்கள் சேர்ந்த கூட்டுச்சபையே தீர்க்க வேண்டுமெனவும் கமிட்டி சிபாரிசு செய்தது. இச் சிபாரிசுகளைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. மறைமுகத் தேர்தல் முறையைப் (Indirect Election) பலர் எதிர்த்தனர். சபையின் அதிகாரத்திலும் சிறந்த மாறுதல் எதையும் அது செய்யுவில்லை எனப் பலர் குறை கூறினர்.

அதன் பின் 1925ஆம் ஆண்டில் பர்க்கன்ஹெட் பிரபு (Lord Birkenhead) ஒருசிலச் சீர்திருத்தக் கருத்துகளை வெளியிட்டார். ஆனால், அதனால் ஒரு பலனும் விளையவில்லை. 1933ஆம் ஆண்டில் சாலிஸ்பரி பிரபு ஒரு சீர்திருத்த மசோதாவைக் கொணர்ந்தார். அதன்படிப் பரம்பரைப் பிரபுக்களின் எண்ணிக்கை 150 ஆகக் குறைக்கப்படவேண்டும். அவர்கள் பழைய பிரபுக்கள் கூட்டத்தி லிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அரச குடும்பத்தினர், நீதிபதிப் பிரபுக்கள், மதப் பிரபுக்கள் ஆகியோரும் அதில் நியமிக்கப்படலாம். 150 பேர் கவுன்டி, பரோ கவுன்சில்களி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்தலில் ஆண் பெண் வேறுபாடு கூடாது. நிதி மசோதாக்களின் தன்மையை இரு சபைகளின் கமிட்டி ஒன்றே தீர்மானிக்க வேண்டும். நிதி விஷயத்தில் பொது மக்கள் சபையே முதன்மையுடன் விளங்க வேண்டும். ஏனைய மசோதாக்களைப் பிரபுக்கள் சபை மறுக்கலாம். ஆனால், இறுதித் தீர்ப்புப் பொதுமக்கள் சபைக்கே உரியது. இந்த மசோதாவும் இரண்டாம் படிப்பிலேயே தோற்றது. 1948ஆம் ஆண்டில் பிரபுக்கள் சபைச் சீர்திருத்தம் பற்றி ஆராயச் சர்வ கட்சி மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதன் சிபாரிசுகளின்படிச் சபை உறுப்பினர்களில் ஒருசிலரே பரம்பரைப் பிரபுக்களாக இருக்கலாம். ஏனையோர் நாட்டுக்கு நல்ல சேவைகளைச் செய்தவர்கள், அறிவுத் துறையிலும், கலைத்துறையிலும் சிறந்தவர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்பட வேண்டும். நியமனத்தில் ஆண் பெண் பாகுபாடு கூடாது. உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும். இந்தச் சிபாரிசுகளும் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

பல வேறு முயற்சிகளுக்குப்பின், பிரபுக்கள் சபை இன்று போல் என்றுமிருக்கட்டும் என்ற முடிவுக்கு ஆங்கில அறிஞர்கள் வந்துவிட்டனர். அதன் பலவீனமே அதன் பலமாக ('Its very Weakness is it's Strength') இன்று மதிக்கப்படுகிறது. வல்லமை மிக்க மேல்சபை, பாராளுமன்ற ஜனநாயகத்துக்குப் பொருந்தாதது என்பதைப் பலரும் உணர்கின்றனர். நாட்டை ஆளும் அமைச் சர்கள் பொதுமக்கள் சபைக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற நிலை இருக்கும் வரை, மேல் சபையைச் சீர்திருத்துவதோ, அதன் அதிகாரங்களைப் பெருக்குவதோ கூடாத காரியம்; பொதுமக்கள் சபையும் அதில் வன்மை பெற்றிருக்கும் கட்சிகளும் அத்தகைய நிலைக்குக் கண்டிப்பாக இணங்கமாட்டா. அதனாற்றான் தொழிற் கட்சி, தாராளக் கட்சி உறுப்பினர்கள் பிரபுக்கள் சபைச் சீர்திருத் தத்தில் அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளாமலிருக்கின்ற னர். ஆனால், கன்சர்வேடிவ்கள் நிறைந்துள்ள அச் சபையை

ஒழித்துவிடுவதே நல்லது என அக் கட்சியினர் கருதுகின்றனர். ல்ாஸ்கி (Laski), ஜென்னிங்ஸ் (Jennings) போன்ற அறிஞர்களும் அத்தகைய கருத்தையே ஆதரிக்கின்றனர். எனினும், குறைந்த பட்ச அளவே அதிகாரமுடையதும், பல வகுப்பாரின் பிரதிநிதி களடங்கியதுமான மேல்சபை ஒன்று நாட்டில் இருப்பதால் தவறென்றுமில்லை என்பதே இன்று பெரும்பான்மையான ஆங்கி லேயரின் திரண்ட கருத்தெனத் தெரிகிறது.

இரு சபைகளின் கூட்டுக் கூட்டம்

நடைமுறையில் இரு சபைகளும் வெவ்வேருக அமர்ந்து பணி புரிந்தாலும், கொள்கை அளவில் பாராளுமன்றம் என்பது ஓரங்க சட்டசபையாகவே கருதப்படுகிறது. முக்கியமான சில பாராளு மன்ற நடவடிக்கைகள் இன்றும் இரு சபைகளும் அடங்கிய கூட் டுக் கூட்டத்தில்தான் நடைபெறுகின்றன. மன்னர் பாராளு மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேருரை ஆற்றும்போதும், சபையை ஒத்திவைக்கும்போதும், கலைக்கும்போதும், மசோதாக்களுக்குச் சம்மதம் அளிக்கும்போதும், இரு சபைகளும் ஒன்ருக அமர்ந்தே அவரது கட்டளையைச் செவிமடுத்து அதன்படிச் செய்கின்றன. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழாவை இரு சபைகளும் சேர்ந்தே கொண்டாடின. அரசர் அல்லது அரசியாரின் முடி சூட்டு விழாக்களையும் இரு சபைகளும் சேர்ந்தே கொண்டாடு கின்றன. ஜெனரல் ஸ்மட்ஸ் (General Smuts) என்பவர் உரை யாற்றியபோது இரு சபைகளும் ஒன்ருக அமர்ந்தே அவ்வுரையைச் செவிமடுத்தன.

அரசரும், இரு சபைகளும் சேர்ந்ததே பாராளுமன்றம் எனப் பெயர் பெறும். அரசர் தனிப்பட்ட நிலையில் ஒரு காலத்தே செலுத்திய சிறப்பதிகாரங்களெல்லாம் அரசரோடு கூடிய பாராளு மன்றத்தால் இன்று செலுத்தப்படுகின்றன. பாராளுமன்றமே இன்று நாட்டில் இறைமை வாய்ந்த நிறுவனம். நாட்டு நிருவா கத்தை அது தன்னிடமிருந்து பொறுக்கப்பட்ட காபினெட் குழு விடம் ஒப்படைக்கிறது. ஆனுல், அதை எந்த நிமிடத்திலும் கலைத்துவிடப் பாராளுமன்றத்துக்கு உரிமை உண்டு. பாராளு மன்றம் மக்களின் பிரதிநிதி. எனவே, மக்களின் கருத்து காபி னெட்டுக்கு விரோதமாக மாறினுல் அது காபினெட்டைக் கலைக்க முன்வரும். ஆனுல், பிரதமரின் விருப்பப்படியே யாவும் நடை பெறுவதால், காபினெட் சர்வாதிகாரமே (Cabinet Dictatorship) நாட்டில் நடைபெறுகிறது என்பர் சிலர். எனினும், பொதுமக்க ளின் விருப்பத்திற்கேற்பப் பாராளுமன்றம், தன்னைக் கலைக்க முடி யும் என்ற எண்ணமே காபினெட்டைப் பொறுப்பாக நடந்து

கொள்ளும்படித் தூண்டும் என்பதில் ஐயமில்லை. இன்றைய சிக்கலான ஆட்சி முறையில் சட்ட ஆக்கம், நீதி பரிபாலனம் ஆகியவற்றைப் பாராளுமன்றம் நிருவாகத் தலைவர்களிடம் ஒப்படைக்கிறது. எனினும் அவற்றைக் கண்காணித்துக் குறைகளை நீக்கும் உரிமை பாராளுமன்றத்துக்கே உள்ளது. போர்க்காலத்தே கூடப் பாராளுமன்றம் நிருவாகத்தின் செயல்களைக் கண்காணித்துக் குறைகளிருந்தால், கண்டிக்கத் தவறுவதில்லை. சான்றுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் போரில் பல பதவிகளைப் பெற்றபோது, அது பாராளுமன்ற மரபுக்கு விரோதம் என்பதைப் பலர் எடுத்துக் காட்டினர். போர் நடவடிக்கைகளையும், சமாதான நடவடிக்கைகளையும் நல்லமுறையில் தணிக்கை செய்து மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் நிறுவனமாகப் பாராளுமன்றம் இயங்கி வருகிறது.

பாராளுமன்றச் சிறப்புரிமைகள் (Privileges)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஏனையவர் எவருக்குமில்லாத சில சிறப்புரிமைகள் உண்டு. சபைக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது உறுப்பினர் ஒருவரை எக்காரணத்தை முன்னிட்டும் எவரும் கைது செய்ய முடியாது. பொதுமக்கள் சபையைப் பொறுத்தவரை, சபைக் கூட்டத்துக்கு 40 நாள்கள் முன்னும் பின்னும், பிரபுக்கள் சபையைப் பொறுத்தவரையில் கூட்டத்துக்கு 20 நாள்கள் முன்னும் பின்னும் உறுப்பினர்கள் கைது செய்யப்பட முடியாது. சிவில் வழக்குகளுக்கே இவ்வுரிமை பொருந்தும். அதுவும் உறுப்பினரின் உடலை மட்டுந்தான் கைது செய்ய இயலாது. அவர் மீது வழக்குப் போடவோ அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்யவோ கடன் கொடுத்தவர்களுக்கு உரிமை உண்டு. பாராளுமன்றத்தில் ஒருவர் எதை வேண்டுமானாலும் பேசலாம். இந்தப் பேச்சுரிமையானது டியூடர்கள் காலத்திலிருந்தே நன்கு பேணப்பட்டு வளர்ந்து வந்துள்ளது. ஆனால், சபையில் இல்லாதவர்களைப் பற்றி அவதூறாக ஒருவர் பேசினால், அதைத் தடுத்து நிறுத்த அவைத் தலைவருக்கு அதிகாரமுண்டு. சபை உறுப்பினர்களையும் ஒருவர் அவமதிக்கும் முறையில் பெயர் சொல்லிப் பேசக்கூடாது. தவறிப் பேசிவிட்டால், அத்தகைய அநாகரிகமான சொற்களை அவரது பேச்சினின்றும் அகற்றி விடும்படி அவைத் தலைவர் ஆணையிடலாம். சபையினரின் சொற்பொழிவுகளைச் செய்தித்தாள்கள் வெளியிடத் தற்போது எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. சபையின் சம்மதப்படி வெளியிடப்படும் செய்திகள் சிலரை மறைமுகமாக அவமதிப்பதாயிருந்தாலும், அதை ஒட்டி அவதூறு வழக்குகள் போடமுடியாது. நாட்டின் அமைதிக்கு விரோதமாக உறுப்பினர்கள் செய்திகளைப்

பாராளுமன்றத்தில் வெளியிடுவதற்கு உரிமை இல்லை. அத்தகையோர் சபையிலிருந்து சிலகாலம் தள்ளி வைக்கப்படுவர். சபை உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சபைக்கு மட்டுமே உண்டு. நீதிமன்றங்களுக்கு இல்லை. உறுப்பினர் ஒருவரை சபை எச்சமயத்திலும் வெளியேற்றலாம். தகாத நடத்தை காரணமாகச் சபையை விட்டே ஓர் உறுப்பினரை அப்புறப்படுத்தி விடலாம். சபையை அவமதித்த குற்றத்துக்காகவும் ஒருவரைத் தண்டிக்கப் பாராளுமன்றத்துக்கே உரிமை உண்டு. பாராளுமன்றத்தின் உரிமைகள் தொன்றுதொட்டு வருகிற மரபுகளாலும், முன் நிகழ்ச்சிகளாலும் (Customs and Precedents) தீர்மானிக்கப் படுகின்றன. முற்றிலும் புதிய உரிமைகளைப் பாராளுமன்றம் கொண்டாட முடியாது. உரிமைகள் எவை என்பதைப் பற்றி விளக்கம் கூற நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு. எனினும், வேறொரு சட்டத்தைக் கொணர்வதன் மூலம் பாராளுமன்றம் தன்து உரிமையை வளர்த்துக்கொள்ள முடியும். இங்ஙனம் பாராளுமன்றமானது பல்வகையிலும் தனித்தலைமை பெற்று விளங்குவதால்தான் பாராளுமன்ற ஆட்சிமுறை (Parliamentary Government) இங்கிலாந்தில் இன்று நிலவுவதாகக் கூறப்படுகிறது.

4. நீதி நிறுவனம் (Judiciary)

சட்டங்களின் வகை

இன்று உலகத்தின் தனிசிறந்த சட்டமுறைகள் இரண்டென்பர் மேலோர். ஒன்று ரோமானிய முறை. இரண்டாவது ஆங்கில முறை. இதில் ரோமானியச் சட்டம் ஒழுங்காக வகுக்கப் பட்டுள்ள ஒரு விதிமுறைத் தொகுதி. ஆனால், ஆங்கிலப் பொதுமைச் சட்டம் (Common Law) என்பது வழிவழியாக நாட்டில் வழங்கி வருகிற மரபுகள், வழக்காறுகளின் தொகுதியாகும். இன்னும் அது சரிவர வரையறுக்கப்படாததும், முறையே எழுதப் படாததுமாகும். நீதிபதிகளின் தீர்ப்புகளில்தான் அவை ஓரளவு முறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலோ சாக்ஸானியர் காலத்தி லிருந்து நாட்டை வலம்வந்த நீதிபதிகள் பழைய மரபுகளை ஒட்டி அவ்வப்போது அளித்த தீர்ப்புகளின் வடிவில்தான் ஆங்கிலச் சட்டம் இன்று வெளியே தெரிகின்றது. 13ஆம் நூற்றாண்டில் கிளென்வில் (Glenvil), பிராக்டன் (Bracton) போன்ற சட்ட அறிஞர்களும், 18ஆம் நூற்றாண்டில் பிளேக்ஸ்டோன் (Blackstone) போன்ற சட்ட நிபுணர்களுமே இப்பொதுமைச் சட்டத்தை ஓரளவு வகுத்து வரையறுத்து வழங்கியுள்ளனர்.

ஆங்கிலச் சமுதாயத்தில் தொன்றுதொட்டு வரும் வழக்காறுகளின் தெளிந்த தெளிவாக விளங்கும் பொதுமைச் சட்டமானது

நாடனைத்துக்கும், எல்லா வகுப்பினருக்கும் பொதுவானது. நீதிபதிகளின் விளக்கத்துக்கு அது உட்பட்டது. பழைய கொள்கைகளினடிப்படையில் புதிய சூழ்நிலைகளுக்கேற்ப அவர்கள் விளக்கம் கூறலாம். முன்நிகழ்வு ஆதாரங்களை (Precedents) அடிப்படையாகக் கொண்டும் அவர்கள் புதிய தீர்ப்புகளை வழங்கலாம். மற்றும், அது பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்படும் நிலவரச் சட்டம் (Statute Law), மன்னரால் ஏற்படுத்தப்படும் ஒப்புரவுச் சட்டம் (Equity Law) ஆகிய இருவகைச் சட்டங்களிளின்றும் வேறுபட்டதாகும். மன்னரால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளின் தீர்ப்புகளில் பொதுமைச் சட்டமும், மன்னரின் சம்மதத்தைப் பெற்றுப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகிற சட்டங்களில் நிலவரச் சட்டமும் மிளிர்கின்றன. பொதுமை சட்டங்களில் ஏற்படுகிற ஐயப்பாடுகளைத் தீர்க்கப் பாராளுமன்றம் எப்போதுமே முன்வரலாம். நிலவரச் சட்டமும், பொதுமைச் சட்டமும், ஒப்புரவுச் சட்டமும் முரண்படுமேயானுல், நிலவரச் சட்டமே வெல்லும். குடிமக்களின் அன்ருட வாழ்வில் ஏற்படும் சிவில் வழக்குகளைத் தீர்ப்பதில் பொதுமைச் சட்டமே பெரிதும் பயன்படுகிறது. ஆனுல், சிலசமயங்களில் இவ் விருவகைச் சட்டங்களாலுமே ஒருவருக்கு நீதி கிடைக்காமல் போகலாம். அப்படித் தனக்கு நீதி கிடைக்கவில்லை எனக் கருதுகின்ற ஒருவர் நீதிக்கெல்லாம் ஊற்ருன மன்னரிடம் முறையிட்டுக் கொள்ளலாம். மன்னர் தமது மனச்சான்றுக்கேற்ப அத்தகைய வழக்குகளில் நீதி வழங்குவார். அரசரின் மனச்சான்று காப்பாளர் எனக் கருதப்படுபவர் சான்சலர் என்ற தலைமை நீதிபதியாவார். அரசரது சார்பில் அவர் தம் மனச்சான்றுக்கேற்ப, சமய அறநெறிகளை ஒட்டி வழங்குகின்ற நியாயமே ஈக்விடி எனப்படும். அவரது நீதிமன்றம் சான்சரி நீதிமன்றமெனப்படும். சான்சரி நீதிமன்றத்தில் வழங்கப்பெறும் தீர்ப்புகளில்தான் ஈக்விடி அல்லது ஒப்புரவுச் சட்டம் மிளிர்கின்றது. இச்சட்டம் சிவில் வழக்குகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். இந்த மூன்று வகையான சட்டத்தின்படியே இங்கிலாந்தில் யாவும் நடக்கின்றன. நீதிபதிகள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பழங் கோட்பாடுகளுக்குப் புது வகையாய் விளக்கம் கூறி அளிக்கின்ற தீர்ப்புகளும் ஒரு வகையில் சட்டங்களேயாம். அவைகளை வழக்குமன்றச் சட்டங்கள் (Case Law) எனலாம். சட்டத்துக்குப் புறம்பாக எவருடைய உடலையும், உரிமையையும், உடைமையையும் யாரும் பறிக்க முடியாது. சட்டத்துக்கு மேலானவர்கள் (அரசரைத் தவிர) இங்கிலாந்தில் எவருமே இல்லை. சட்டத்தின் முன் யாவரும் சமம். இதுவே டைஸி (Dicey) என்பவரால் சட்டத்தின் இறைமை (Rule of Law) என அழைக்கப்படுகிறது.

நீதி நிறுவன அமைப்பு

பத்தொன்பதாம் நூற்றுண்டுக்கு முன்னர் இங்கிலாந்தின் நீதி நிறுவனம் தாறுமாருகக் கிடந்தது. ஷயர் (Shire), ஹண்ட்ரட் (Hundred), பரோ (Borough) போன்ற பிரதேசப் பகுதிகளில் இருந்த பழைய நீதிமன்றங்கள் வழக்கற்றுப்போய் விட்டன. மையத்தில் இருந்த நீதிமன்றங்கள் பல. அவை களிடையே ஓர் ஒப்புரவோ ஒருமைப்பாடோ இல்லை. முதலில் மையத்தில் மூன்று பொதுமைச் சட்ட நீதிமன்றங்கள் இருந்தன. அவை முறையே பொது விண்ணப்ப நீதிமன்றம் (Court of Common Pleas), அரசரது உயர் நீதிமன்றம் (Court of the Kings Bench), கருவூல நீதிமன்றம் (Court of the Exchequer) என்பன. இவைகளோடு சான்சரி நீதிமன்றமானது 17ஆம் நூற்றுண்டில் நன்கு வளரலாயிற்று. பொதுமைச் சட்டத்துக்குப் புறம்பான வழக்குகளைத் தீர்க்க அது உதவியாயிருந்தது. பொதுமைச் சட்டத்தால் நிவாரணம் பெற முடியாதவர்கள் ஒப்புரவுச் சட்டத்தின் மூலம் அதைப் பெற்றனர். மற்றும் கடற்படை, கடற் பயண சம்பந்தமான வழக்குகளைத் தீர்க்கக் கடற்படை நீதிமன்றம் (Admiralty Court) ஒன்று இருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் இன்னும் மூன்று நீதிமன்றங்கள் புதியதாய் முளைத்தன. அவை முறையே திவாலா நீதிமன்றம் (Court of Bankruptcy), இறப்புறுதிச்சான்று நீதிமன்றம் (Court of Probate), விவாகரத்து நீதிமன்றம் (Court of Divorce) எனப் பட்டன. இப்படிப் பல நீதி மன்றங்களிருந்ததால் எந்த நீதி மன்றததில் எந்த வழக்கைத் தொடுக்கலாமென்பதே மக்களுக்குப் புரியவில்லை. ஒவ்வொரு நீதி மன்றத்தின் அதிகார வரம்பும் சரிவர நிச்சயிக்கப்படவில்லை. மேலும் நடவடிக்கை எடுக்கும் முறையானது (Procedure) ஒவ்வொரு நீதிமன்றத்துக்கும் ஒவ் வொரு வகையாக இருந்தது. நன்கு பயிற்சி பெற்ற சட்ட அறிஞர்களுக்குக்கூட அம்முறைகள் புதிராகவே இருந்தன. லஞ்சமும் ஊழலும் எங்கும் தாண்டவமாடின. வழக்குகள் தீர்க்கப்படுவதில் காலதாமதம் அளவுக்குமீறிக் காணப்பட்டது. சான்ருக, முதலாம் சார்லஸ் காலத்தில், நான்கு பவுன்களைத் திருப்பிப் பெறுவதற்காகப் பெண் ஒருத்தியால் போடப்பட்ட வழக்கில், அவளது பெயரன் காலத்தில்தான் தீர்ப்பு வழங்கப் பட்டது. அதற்கு அவள் செலவழித்த பணம் 200 பவுன்கள். இந்த நிலையில் கீழ் நீதிமன்றங்களிலிருந்து மேல் நீதிமன்றங் களுக்கு முறையீடு செய்துகொள்வதற்கும் சரிவர ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. பொதுமைச் சட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு களுக்கு மேல்முறையீடே பல காலம் இல்லாமலிருந்தது. நான்காம் ஜார்ஜ், நான்காம் வில்லியம் காலத்தில்தான் பொது

மைச் சட்ட நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் கருவூல உயர் நீதிமன்றமொன்றில் (Exchequer Chamber) விசாரிக்கப்படுவதற்கு வழிசெய்யப்பெற்றது. பொதுமைச் சட்ட நீதிமன்றங்களுக்கும், சான்சரி நீதிமன்றத்துக்கும் மேல் முறையீட்டு நீதிமன்றமாக விளங்கியது பிரபுக்கள் சபையேயாகும். அதுவும் 17ஆம் நூற்றாண்டில்தான் இந்த நிலை ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்றும் பிரபுக்களை விசாரிக்கவும், பெரும் அதிகாரிகள் மீது அரச துரோக வழக்கு தொடரவும் (Impeachment) பிரபுக்கள்சபை முதல் நிலை நீதிமன்றமாக விளங்கியது. அக்கரை நாடுகளுக்கு, மேல் முறையீட்டு நீதிமன்றமாக விளங்கியது பிரிவி கவுன்சிலேயாகும். சட்ட வல்லுநர்களாயிருந்த ஒருசில கவுன்சிலர்களே முறையீட்டு வழக்குகளை விசாரித்தனர். திருச்சபை நீதிமன்றங்கள், கடற்படை நீதிமன்றம் ஆகியவற்றிலிருந்து வரக்கூடிய முறையீட்டு வழக்குகளை விசாரிக்கப் பேராள்கள் நீதிமன்றம் (Court of Delegates) ஒன்று தனியே இருந்தது. இங்ஙனம் முறையீட்டு வழக்கு விவகாரங்களும்கூட, ஒரு வரைதுறையின்றித் தாறுமாறுகவே தீர்க்கப்பட்டுவந்தன.

சிவில் நீதிமுறை (Civil Justice)

பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் நீதிமுறையில் ஓர் ஒழுங்கும் ஓர்மையும் ஏற்பட்டன. கோட்ட நீதிமன்றங்கள் (County Courts) என்ற புதுவகை மன்றங்கள் 1846ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. இந் நீதிமன்றங்களுக்குத் தலைமைதாங்க ஒரு நீதிபதியைச் சான்சலர் பிரபு நியமித்தார். அந்த நீதிபதி பல ஊர்களுக்குச் சென்று ஆங்காங்கே இருந்த கோட்ட நீதிமன்றங்களுக்குத் (Circuit Courts) தலைமைதாங்கி வழக்குகளை நடத்திக் கொடுக்க வேண்டும். அவர் ஏதாவது தவறு செய்தால் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடச் சான்சலர் பிரபுவுக்கு அதிகாரம் உண்டு. இத்தகைய நீதிமன்றங்களில் சிறிய வழக்குகளே விசாரிக்கப்பட்டன. ஜூரி முறை விசாரணையின்போது பயன்படுத்தப்படவில்லை. இந் நீதிமன்றங்களிலிருந்து மேலே முறையீடு செய்துகொள்ளலாம். ஏழைகள் இந் நீதிமன்றங்களில் இலவச நீதி பெறுவதற்கு 1949இல் ஏற்பட்ட சட்டமொன்று வழிசெய்தது. இவற்றின் அதிகார வரம்பைப் பாராளுமன்றமானது பலவகையிலும் பிற்காலத்தே பெருக்கியது. பழங்காலத்து ஷயர், ஹண்ட்ரட், பரோ நீதிமன்றங்கள் வழக்கிழந்து போய்விட்ட நேரத்தில், கோட்ட நீதிமன்றங்கள் வந்து அவற்றின் பணிகளை மேற்கொள்ளலாயின.

1873, 1876ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தலைமை நீதிமன்றச் சட்டங்களின்படி (Supreme Court Judicature Act) நீதி

நிறுவன அமைப்பில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. நாட்டிலுள்ள நீதிமன்றங்களுக்கெல்லாம் தலையாய ஒரே தலைமை நீதிமன்றத்தை (Supreme Court of Judicature) அச் சட்டங்கள் தோற்றுவித்தன. அத்தகைய நீதிமன்றத்தில் இரு பிரிவுகள் இருந்தன. அவை முறையே உயர்நீதிமன்றம் (High Court of Justice) என்றும், மேல்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal) என்றும் அழைக்கப்பட்டன. உயர்நீதிமன்றமானது மூன்று பகுதிகளை உட்கொண்டு விளங்கியது. அவை முறையே, அரசியார் உயர்நீதிமன்றம் (Court of Queens Bench), இறப்புறுதிச் சான்று, விவாகரத்து, கடற்படை உயர்நீதிமன்றம் (The Probate, Divorce and Admiralty Court), சான்சரி உயர்நீதிமன்றம் எனப்படுவனவாகும். இங்ஙனம் தனித்தனியே இயங்கிவந்த நீதிமன்றங்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டன. அரச உயர்நீதிமன்றமானது பழைய நீதி நிறுவனங்களான, பொது விண்ணப்ப நீதிமன்றம், கருவூல நீதிமன்றம், திவாலா நீதிமன்றம் ஆகியவற்றின் பணிகளை அப்படியே மேற்கொண்டது. தலைமை நீதிபதிப் பிரபு (Lord Chief Justice) அதற்குத் தலைமை வகிக்கிருர். சான்சரி பிரிவுக்குச் சான்சலர் பிரபுவே தலைமை வகிக்கிருர். மூன்ருவது பிரிவுக்கு வேருெரு தலைவர் நியமிக்கப்படுகிருர். பிறப்புறுதிச் சான்று, திருமணங்கள் பற்றிய வழக்குகளை விசாரித்துவந்த பழைய நீதிநிறுவனங்களின் அலுவல்களையும் கடற்படை சம்பந்தமான சிவில் வழக்குகளையும் (இதுபற்றிய கிரிமினல் வழக்குகள் மத்திய கிரிமினல் நீதிமன்றத்துக்கு 1834ஆம் ஆண்டில் மாற்றப்பட்டுவிட்டன) உயர்நீதிமன்றத்தின் மூன்ருவது பிரிவு கவனித்துக்கொள்கிறது. அவசியமில்லாத பல சின்னஞ் சிறிய நீதிமன்றங்கள் யாவும் 1890ஆம் ஆண்டளவில் ஒழிக்கப்பட்டன. உயர்நீதிமன்றத்தின் முப்பிரிவுகளும் என்னென்ன வழக்குகளை விசாரிக்கலாம் என்பது வழிவழி மரபின்படியே தீர்மானிக்கப்படுகிறது. அரச உயர்நீதிமன்றம் பொதுமைச் சட்டம்பற்றிய வழக்குகளையும், சான்சரி, விவாகரத்து நீதிமன்றங்கள் சிவில் வழக்குகளையும், ஒப்புரவுச் சட்டம் பற்றிய வழக்குகளையும் விசாரிக்கின்றன. பொதுமைச் சட்டம் பற்றிய வழக்குகளைச் சான்சரி மன்றமும், ஒப்புரவுச் சட்டம் பற்றிய வழக்குகளை அரச நீதிமன்றமும் ஒரோவழி விசாரிப்பதும் உண்டு. 1928ஆம் ஆண்டில் ஏற்பட்ட நீதி பரிபாலனச் சட்டப்படி (Administration of Justice Act) உயர்நீதிமன்றத்திற்குச் சொந்தமான அதிகாரங்கள் அனைத்தும் அதன் முப்பகுதிகளில் எதில் வேண்டுமாளுலும் செலுத்தப்படலாம். ஒரு பகுதியிலிருந்து வழக்குகள் இன்னெரு பகுதிக்கு எளிதில் மாற்றப்படலாம். இவைகள் பெரும்பாலும் பொதுமைச் சட்டத்தையே கையாளும்.

பொதுமைச் சட்டத்தால் தீர்க்கப்படமுடியாத வழக்குகளில் மட்டுமே ஒப்புரவுச் சட்டத்தை இவை பயன்படுத்தும். இவ்விரு வகைச் சட்டத்துக்கும் முரண்பாடு நேர்கின்ற வேளையில் ஒப்புரவுச் சட்டத்தின்பாற்பட்ட இறைநீதியே (Equity Justice) வெல்லும். வழக்கில் சம்பந்தபட்ட கட்சிக்காரர்கள் விரும்பினுல், ஜூரிகள் அல்லது தீர்ப்புச் சான்ருளர்களை நீதிபதி அமர்த்தலாம். ஜூரிகள் அவசியமா இல்லையா என்பதைத் திர்மானிக்க வேண்டியவர் நீதிபதியேயாவர். சான்சரி நீதிமன்றத்தில் ஜூரிகள் அமர்த்தப்படுவது வழக்கமில்லை.

மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும், மூன்று முக்கிய நீதிபதிகளும், வேறு சில முறையீட்டு நீதிபதிப் பிரபுக்களும் (Lords of Appeal) இருக்கின்றனர். தலைமை நீதிபதி மாஸ்டர் ஆஃப் ரோல்ஸ் (Master of Rolls) என அழைக்கப்படுகிருர். அவர் ஆதியில் சான்சலர் பிரபுவின் உதவியாளராயிருந்தவர். நாளடைவில் தனி நீதிபதியாஞர். பொதுமைச் சட்டம் பற்றிய வழக்குகளில் இந் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்துகொள்ளலாம். முறையீட்டு விசாரணையில் ஜூரிகள் அமர்த்தப்படுவதில்லை. உயர்நீதிமன்றம் சிவில் கிரிமினல் வழக்குகளைத் தனிப்பட்ட முறையில் சொந்தமாக விசாரிக்கும் உரிமை பெற்றிருப்பதோடு, கோட்ட நீதிமன்றங்கள் போன்ற கீழ் நீதிமன்றங்களிலிருந்து மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உரிமையையும் பெற்றுள்ளது. உயர்நீதிமன்றத்திலிருந்து இன்னும் மேலே முறையிட்டுக்கொள்ள விரும்புபவர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செல்கின்றனர். அதற்கும் மேலே போக விரும்புகின்றவர்கள் பிரபுக்கள் சபையையே நாடவேண்டும். இத்தகைய மேல் முறையீடுகளை விசாரிக்க என்றே ஒருசில பிரபுக்கள் அச் சபையில் நியமிக்கப் பட்டுள்ளனர். 1876ஆம் ஆண்டில் ஏற்பட்ட மேல் முறையீட்டு நீதி பரிபாலனச் சட்டப்படி (Appellate Jurisdiction Act) சட்ட வல்லுநர்களான நான்கு பிரபுக்கள் அவர்களது ஆயுட்காலம் வரை பிரபுக்கள் சபையில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை 1913ஆம் ஆண்டில் ஆருகவும், இன்று ஒன்பதாகவும் உயர்ந்துள்ளது. இந்த எண்ணிக்கையை அவ்சியமானுல் மாற்றிக்கொள்ள 1928இல் ஏற்பட்ட சட்டமொன்று இடம் தருகிறது. இத்தகைய சட்டப் பிரபுக்கள்தான் ஜூரிகளின் உதவியின்றிப் பிரபுக்கள் சபையிடம் விண்ணப்பிக்கப் பெற்ற வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். சான்சலர் பிரபுவே அதற்குத் தலைமை தாங்குகிருர். தலைமை முறையீட்டு நீதிமன்றத்தின் இன்னெரு பகுதி பிரிவி கவுன்சில்

என்று அழைக்கப்படுகிறது. காமன்வெல்த் நாடுகளிலிருந்து வரும் முறையீட்டு வழக்குகளை இதுவே விசாரிக்கிறது. ஆனால், அத்தகைய வழக்குகள் வருவது இன்று அநேகமாய் நின்று போய்விட்டது. இந் நீதிமன்றத்தில் சட்டப் பிரபுக்களேயன்றி, ஓய்வுபெற்ற சான்சலர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், காமன் வெல்த் நாடுகளின் உயர் நீதிபதிகள் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். சான்சலர் பிரபுவே இதற்கும் தலைமை வகிக்கிறார். மத சம்பந்தமான முறையீடுகளையும் இக் கவுன்சில் விசாரிக்கிறது, பகராள்கள் நீதிமன்றத்தின் பணிகளை இது மேற்கொண்டுள்ளது. நீதிமுறை பற்றிய அறிவுரைகளையும் அது மன்னருக்கு வழங்குகிறது. அவர்களின் ஆலோசனைகளின் படியே மன்னர் கவுன்சில் கட்டளைகளை (Orders in Council) வெளியிடுகின்றார்.

தலைமை நீதிமன்றத்துக்குக் கீழே பல சிறிய நீதிமன்றங்கள் உள்ளன. கோட்ட நீதிமன்றங்கள் (County Courts) ஆங்காங்கே நடைபெறுகின்றன. சான்சலரால் நியமிக்கப்பட்ட நீதிபதி ஒருவர் இடம்விட்டு இடம் சென்று இந் நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்குகிறார். 500 பவுன்களுக்கு உட்பட்ட தொகையைப் பற்றிய சிவில் வழக்குகள் இவற்றில் விசாரிக்கப்படுகின்றன. தொகை பெரியதாயிருந்தால், அவ்வழக்குகளை விசாரிக்க உயர்நீதிமன்றத்துக்கே உரிமை உண்டு. அமைதிகாண் நீதிபதிகளின் (Justices of the Peace) தலைமையில் நடைபெறும் குவார்ட்டர் செஷன்ஸ் (Quarter Sessions), பெட்டி செஷன்ஸ் (Petty Sessions) என்ற நீதிமன்றங்களும், லண்டன் நகர மேயர் நீதிமன்றமும் பல சிறிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கின்றன. அவற்றில் திருப்தியடையாதவர்கள் உயர்நீதி மன்றத்துக்கு முறையிட்டுக்கொள்கின்றனர்.

கிரிமினல் நீதி முறை (Criminal Justice)

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குமுன் கிரிமினல் நீதி முறையிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. தற்காலத்து இருப்பது போன்ற காவற்படை (Police force) அக்காலத்தே இல்லை. பாரிஷ்கள் (Parishes) என்ற கிராமப்புறங்களில் கான்ஸ்டபிள்கள் (Constables) என்ற அதிகாரிகளே குற்றவாளிகளைக் கண்டுபிடித்தனர். அவர்களின் ஊதியம் மிகக் குறைவாயிருந்தது. எனவே, அவர்கள் லஞ்சம் வாங்குவதில் வல்லவர்களாயிருந்தனர். சிறைச்சாலைகள் பெரும் செல்வந்தர்களால் நிருவகிக்கப்பட்டுவந்தன. கைதிகள் அங்கு மிருகங்கள் போல் நடத்தப்பட்டனர். பணம் கொடுத்த கைதிகளே நன்கு நடத்தப்

பட்டனர். கிரிமினல் சட்டம் மிகக் கடுமையாக இருந்தது. எடுத்ததற்கெல்லாம் மரண தண்டனை வழங்கும் வழக்கம் அப்போது காணப்பட்டது. சுமார் 250 சிறு குற்றங்களுக்கு மரண தண்டனை தரப்பட்டு வந்தது. கள்ளக் கையெழுத்திடுதல், ஜேப்படி செய்தல் (Pickpockets) போன்ற சிறு குற்றங்களுக்கெல்லாம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இன்னும் பல குற்றங்களுக்கு நாடு கடத்தல் (Transportation), ஆயுள் சிறை போன்ற கடுந்தண்டனைகள் தரப்பட்டன. கிரிமினல் சட்டங்களின் கடுமையைக் குறைக்க வேண்டுமெனப் பென்த்தாம் (Bentham), மாக்கின்டோஷ் (Mackintosh) போன்றவர்கள் கிளர்ச்சி செய்தனர். அதன்படி 1848இல் ராஜ துரோகக் கடுங்குற்றச் சட்டம் (Treason Felony Act) ஏற்பட்டது. அதன்படி ராஜதுரோகக் குற்றங்களின் எண்ணிக்கை பெரிதும் குறைந்தது. பல குற்றங்களுக்கு மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுள்சிறைத் தண்டனை அளிக்கப்பெற்றது. மன்னரைக் கொல்வதற்கோ அல்லது அவரது உடலுக்கு ஏதாவது ஊறு செய்வதற்கோ, சிறை செய்வதற்கோ முயற்சிப்பதே ராஜதுரோகம் எனவும் அதற்கே மரணதண்டனை விதிக்கப்பெறலாம் எனவும் அச் சட்டம் கூறியது. அரசரது உடலுக்கு விரோதமாகச் செய்யப்படும் செயல்களும், அவருக்கு விரோதமாகப் போரில் ஈடுபடுதலும், அவரது விரோதிகளோடு சேர்ந்துகொள்ளுதலுமே இன்றைய நிலையில் ராஜதுரோகமாகக் கருதப்படுகிறது. கொலைக் குற்றத்துக்குக்கூட மரணதண்டனை விதிக்கப்படல் கூடாது எனக் கூறும் மசோதா ஒன்று 1948இல் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. ஆனால், பிரபுக்கள் சபை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. கசையடி கொடுத்தல், அடிமைகளைப்போல் நடத்தப்படுதல் போன்ற தண்டனைகளை ஒழிக்கும்படி கூறிய அம் மசோதாவின் ஏனைய ஷரத்துகள் இரு சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பொது அமைதியைக் கெடுக்கும் வகையில் கொலைக் குற்றம் செய்தவர்களுக்கே மரணதண்டனை விதிக்கப்பெற வேண்டுமென 1956ஆம் ஆண்டுச் சட்டமொன்று கூறுகிறது. 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட மரண தண்டனை ஒழிப்புச் சட்டத்தின்படி (Abolition of Death Penalty Act) கொலைக் குற்றத்துக்குக்கூட மரணதண்டனை விதிக்கப்படுதல் கூடாது. ஆயுட்கால சிறைதண்டனை மட்டுமே விதிக்கப்படலாம். 1970ஆம் ஆண்டு வரை இம்முறை பரீட்சார்த்தமாக நீடிக்கும். அதன்பின் சட்டம் காலாவதியாகிவிடும். பாராளுமன்றம் விரும்பினால் அது மேலும் நீட்டிக்கப்படலாம். கைதிகளைத் தண்டிப்பதைவிடச் சீர்திருத்துவதே நல்லது என்ற கொள்கையினடிப்படையில் சிறைச்சாலையில் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. ஜான் ஹோவார்ட் (John Howard) என்பார் சிறைச்சாலைச் சீர்திருத்தங்களைப் பெரிதும்

வற்புறுத்தினர். 1908ஆம் ஆண்டிலிருந்து பார்ஸ்டல் முறை (Borstal System) சிறைச்சாலையில் கடைப்பிடிக்கப்படுகிறது. கைதிகள் திருந்துவதற்காக இரண்டு ஆண்டுகள் அவகாசம் தரப் படுகிறது. திருந்துபவர்களுக்குத் தண்டனை குறைக்கப்படுகிறது; அல்லது ரத்து செய்யப்படுகிறது.

ஆங்கிலக் காவற்படை (Police force) மிகவும் திறமை வாய்ந் தது. பீல் என்பார் 1829இல் லண்டன் காவற்படையை உருவாக் கினர். அதன்பின் அது பல நகரங்களுக்குப் பரவியது. அவை ஏறக்குறைய சுயேச்சையாகவே செயல்பட்டு வந்தன. 1919இல் தான் அவை ஒரே கூட்டு நிறுவனமாக அமைக்கப்பட்டன. குற் றங்களைத் தடுப்பதிலும், கண்டுபிடிப்பதிலும், போக்குவரவுகளில் விபத்து நேராமல் காப்பதிலும், காவற்படை பெருந்தொண்டு செய்துவருகிறது. நீதிபதிகளின் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்து பவர்கள் காவற்படையைச் சேர்ந்தவர்களேயாவர்.

சிறிய கிரிமினல் குற்றங்களை எல்லாம் ‘அமைதிகாண் நீதி பதிகள்’ (Justice of the Peace) என்னும் கௌரவ நீதிபதிகளா லேயே விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப் படுகின்றன. ஊதிய மின்றி உழைக்கின்ற அவர்களது நீதிமன்றங்கள் சிறிய செஷன் ஸுகள் (Petty Sessions) எனப்படும். இத்தகைய நீதிபதிகள் சுமார் 20,000 பேர் இங்கிலாந்தில் இருக்கின்றனர். கோட்டத் தளகர்த்தர் பிரபுவின் (Lord Lieutenant of the County) சிபாரி சின் பேரில் சான்சலர் பிரபு இவர்களை நியமிக்கிறார். பெண் களும் இத்தகைய நீதிபதிகளாக நியமிக்கப்படலாம். உள்ளூர் வட்டாரங்களில் செல்வாக்கு மிக்கவர்களே இக் கௌரவப் பதவி யில் அமர்த்தப்படுகின்றனர். சிறிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கவும், குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்களைச் சிறை செய்யவும் (ஒரு குற்றத்துக்கு ஆறு மாதங்களுக்கு மேற் படாமல்) இந்நீதிபதிகள் அதிகாரம் பெற்றுள்ளனர். குற்றங்கள் சடுமையானவைகளாயிருந்தால் இந் நீதிபதிகள் அவைகளை அஸைஸு நீதிமன்றங்களுக்கு மாற்றிவிடலாம். அஸைஸு நீதி மன்றங்கள் 12 ஜூரிகளின் உதவிகொண்டு தீர்ப்புகளை வழங்கு கின்றன. அஸைஸு நீதிமன்றங்களுக்கு மேல் மத்திய உயர் நீதிமன்றம் இருக்கிறது. ஒருசிலர் அதனிடம் மேல் முறையீடு செய்துகொள்ளலாம். அது மேல் முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal) எனப்படும். அதற்கு மேலும் முறையிட்டுக் கொள்பவர்கள் பிரபுக்கள் சபைக்குத்தான் போகவேண்டும். அக்கரை நாட்டினர் பிரிவி கவுன்சிலிடம்தான் மேல் முறையீடு செய்துகொள்ளலாம்.

ஆண்டுக்கு நான்கு முறை குவார்ட்டர் செஷன்ஸ் என்ற நீதிமன்றங்கள் உள்ளூர் வட்டாரங்களில் நடைபெறுகின்றன. அதில் குறைந்தபட்சம் இரண்டு அமைதிகாண் நீதிபதிகளாவது அமர்ந்து விசாரணை செய்யவேண்டும். கீழ் நீதிமன்றங்களில் திருப்தி அடையாதவர்கள் இந்த நீதிமன்றங்களுக்கே முறையீடு செய்துகொள்கின்றனர். கொலை, ராஜதுரோகம் போன்ற பெருங் குற்றங்களையன்றி ஏனைய சிறுகுற்றங்களை எல்லாம் இந்த செஷன்ஸ் நீதிமன்றங்களே விசாரிக்கின்றன. பெருங்குற்றங்கள் மட்டுமே உயர் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகின்றன. உயர் நீதி மன்றத்தின் செஷன்சுகள் எட்டு மாவட்டங்களில் ஆண்டுக்கு மூன்று முறை நடைபெறுகின்றன. நீதிபதிகள் இடம்விட்டு இடம் சென்று இந்த நீதிமன்றங்களில் பணிபுரிகின்றனர். இவைகளே அசைஸஸுகள் என அழைக்கப்படுவன. அஸைஸ்ஸுகளில் கிரிமினல் குற்றங்கள் அதிகமாக விசாரிக்கப்படுகின்றன. ஒரோவழி சிவில் வழக்குகளும் விசாரிக்கப்படுகின்றன. லண்டனுக்கும் அதன் சுற்று வட்டாரத்திற்குமாக மத்திய கிரிமினல் நீதிமன்றம் (Central Criminal Court) என்ற தனி அசைஸஸு நீதிமன்றம் அமைக்கப் பட்டுள்ளது. கடற்செலவு சம்பந்தமான வழக்குகளும் தற் காலத்தே இந்த நீதிமன்றத்தில்தான் விசாரிக்கப்படுகின்றன. பழங்காலக் கடற்படை நீதிமன்றம் வழக்கிழந்துபோய்விட்டது. பெரிய பரோக்களில் அமைதிகாண் நீதிபதிகளின் பணியை ஊதி யம் பெற்ற மாஜிஸ்திரேட்டுகள் செய்து வருகின்றனர். அவர்கள் அங்கே ஆண்டுக்கு நான்கு முறை குவார்ட்டர் செஷன்சுகளை நடத்துகின்றனர்.

கிரிமினல் வழக்குகளில் குற்றம் சாட்டியவரே குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. கட்டாயத்தின் பேரில், நிரபராதி ஒருவர் தன்னைத் தான் குற்றஞ்சாட்டிக்கொள்ள நேரும் என்பதற்காகவே இம்முறை கையாளப்படுகிறது. தக்க சாட்சியங்கள் பேரில்தான் குற்றங் கள் நிரூபிக்கப்படவேண்டும். சாட்சிகளை வழக்குரைஞர்கள் (Advocates) குறுக்கு விசாரணை செய்யலாம். கிரிமினல் வழக்கு களில் ஜூரிகள் அமர்ந்து தீர்ப்பு வழங்குவது வழக்கம். ஜூரிக ளின் தீர்ப்பு ஏகமனதாக (Unanimous) அமைந்திருக்க வேண்டும் என்பதே தொன்றுதொட்டு மரபாக இருந்து வந்தது. ஆனால், 1966ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கிரிமினல் நீதி மசோதா வின்படி (Criminal Justice Act) பெரும்பான்மையோரின் தீர்ப்பு அதாவது பன்னிரண்டில் பத்து ஜூரிகளின் தீர்ப்பே போதுமான தென ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. ஜூரிகளின் தீர்ப்பை

ஒட்டியே நீதிபதியும் தீர்ப்பு வழங்குவார். ஆனால், நீதிபதி தன் மனச்சான்றுக்கேற்ற மாற்றுத் தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் பெற்றுள்ளார். கிரீமினல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர் களுக்கு அரசர் இறுதி மன்னிப்பு (Pardon) வழங்கலாம். மற்றபடி நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்க முடியாது. நீதிபதிகளின் சுதந்திர மென்பதும் சட்டத்தின் இறைமை என்பதும் ஆங்கில நீதிமுறை கட்டடத்தின் இருபெருந் தூண்கள் என்றால் மிகை யாகாது.

இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்கள் (Juvenile Courts)

இங்கிலாந்தில் இளங்குற்றவாளிகளின் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகின்றது. 17வயதுக்குக் குறைந்த குற்றவாளி களை விசாரிக்கவென்று தனிப்பட்ட நீதிமன்றங்களிருக்கின்றன. அதில் நன்கு பயிற்சிபெற்ற நிபுணர்கள், அதுவும் முக்கியமாகப் பெண்பாலரே நீதிபதியாக நியமிக்கப்படுகின்றனர். மூன்று நீதி பதிகள் சேர்ந்து அமர்ந்தே வழக்கை நடத்துகின்றனர். விசா ரணை சாதாரணமாக வழக்கு விசாரிக்கப்படும் மன்றத்திலல்லாது, தனிப்பட்ட ஒதுக்குப்புற அறைகளிலேயே நடைபெறும். குற்றம் செய்யும் சிறுவர்களைத் திருத்தவேண்டு மென்பதே இந் நீதிமன் றங்களின் குறிக்கோளாகும். சூழ்நிலையின் காரணமாகவே சிறு வர்கள் குற்றமிழைக்கிறார்களாதலால், அவர்களுக்கு நல்ல சூழ் நிலையும் சில சமயங்களில் கல்வியும் அல்லது தொழிற்பயிற்சியும் தரப்படுகின்றன. சமுதாய சேவையிலீடுபட்டுள்ளவர்கள் இத்த கைய பணிகளில் பெரிதும் பங்குகொண்டுள்ளனர்.

இளங்குற்றவாளிகள் நீதிமன்றங்களுக்கு இட்டுச்செல்லப் படுவதே தவறு எனச் சிலர் நினைக்கின்றனர். 1965ஆம் ஆண்டில் ‘குழந்தையும், குடும்பமும், இளங்குற்றவாளியும்’ (The Child, the Family and the young offender) என்ற அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டது. அதில் இளங் குற்றவாளிகள் 16 வயதுக்குட்பட்டவர்களாயிருப்பின், நீதிமன்றங்களுக்கு அவர் கள் இட்டுச் செல்லப்படக்கூடாதென்றும், அவர்களது பெற்றோர் களிடமும், சமுதாய சேவகர்களிடமுமே அவர்களை ஒப்படைத்துச் சீர்திருத்தச் சொல்லவேண்டுமென்றும் கூறப்படுகிறது. குழந்தை களின் மனஇயலுக்கேற்ப சிகிச்சை அளிக்கப்பெறலாமென்றும் குறிப்பிட்ட முறை எதுவும் கடைப்பிடிக்கப்பட வேண்டியதில்லை என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. நீதிமன்றங்களுக்குப் பதில் குடும்ப ஆலோசனை மன்றங்களே அமைக்கப்பட வேண்டு மென அது கூறுகிறது. எல்லா வகையிலும் வளம் பெருகி விட்டால், குற்றங்கள் மறைந்துவிடும் என்ற நம்பிக்கை இப்

போது இங்கிலாந்தில் குறைந்து வருகிறது. வளம் பெருகப் பெருகக் குற்றங்கள் பெருகுகின்றன. முக்கியமாக இளைஞர்கள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றனர். வில்சன் சர்க்காருக்கு இளைஞர்களின் போக்கு உண்மையில் ஒரு பெரிய தலைவலியாகவே இருந்து வந்தது. இளைஞர்களைத் திருத்தி வழிக்குக் கொண்டுவரப் பலவகையான உளவியல் முறைகள் கையாளப்பட்டன.

5. அதிகார ஒப்படைப்பு (Delegation of Powers)

இங்கிலாந்தில் பாராளுமன்றமே தனித் தலைமை கொண்ட நிறுவனமாக விளங்குகிறது. அதிகாரங்கள் அனைத்துக்கும் அதுவே உறைவிடமாகும். அவ் வதிகாரங்களில் ஒரு சிலவற்றை அது அவ்வப்போது வேறு நிருவாக நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. இதையே அதிகார ஒப்படைப்பு என நாம் அழைக்கிறோம். இத்தகைய அதிகார ஒப்படைப்பு சட்டத்துறை, நீதித்துறை ஆகிய இரு துறைகளிலும் நிகழலாம். நிருவாகத்தினருக்குச் சட்டங்களை ஆக்குகின்ற அதிகாரமானது ஒப்படைக்கப்படும்பொழுது அது ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கமுறை (Delegated Legislation) என்றும், அதே நிருவாக நிறுவனத்துக்கு நீதி வழங்கும் அதிகாரம் ஒப்படைக்கப்படும்பொழுது அது ஆட்சித்துறைத் தீர்ப்பளிப்பு முறை (Administrative Adjudication) என்றும் அழைக்கப்பெறுகின்றது.

ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கமுறை (Delegated Legislation)

நாட்டுக்குத் தேவையான சட்டங்களை ஆக்குதல் பாராளுமன்றத்தின் தலையாய அதிகாரமாகும். எனினும், அவ்வதிகாரத்தையும்கூட அம் மன்றம் சில சமயங்களில் நிருவாகத்திடம் ஒப்படைத்தலென்பது தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் நிகழ்ச்சியாகும். நாட்டிலிருந்து ஆட்டு உரோமத்தை ஏற்றுமதி செய்யக்கூடாது என விதித்த பதினைன்காம் நூற்றாண்டுப் பாராளுமன்றச் சட்டமானது மன்னரும் பிரிவி கவுன்சிலும் பார்த்து வேறொரு விதியால் அத்தடையை நீக்கிவிடலாம் என்றும் கூறியது. இரவலர் சட்டத்தை அமுல் நடத்துவதற்கான விதிமுறைகளை ஆக்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் இரவலர் சட்ட ஆணையாளர்களுக்கு (Poor Law Commissioners) வழங்கியது (1834).

அதன் அவசியம்

சென்ற நூற்றாண்டிலிருந்து, இத்தகைய ஒப்படைப்பு முறை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. அரசியல், பொரு

ளாதாரம், சமுதாயம் ஆகிய துறைகளில் மக்கள் கொண்டிருந்த கருத்துக்களில் ஏற்பட்டுள்ள பெருமாற்றமே அதற்கு முக்கிய காரணமாகும். நாட்டின் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்வ தொன்றே அரசின் தலையாய கடமை என்ற கொள்கை மாறி, மக்களின் நலனுக்காக அவர்களின் அன்றாட வாழ்வில் அரசாங்கம் பல்லாற்றானும் தலையிடுவதே முறை என்ற கொள்கை இப்போது நிலைத்துவிட்டது. சமுதாய நலனை வளர்க்க ஏராளமாகச் சட்டங்கள் செய்யப்படுகின்றன. தொழில் வளர்ச்சியின் விளை வால் ஏற்பட்டுள்ள பற்பல பிரச்சினைகளைத் தீர்க்க ஓயாமல் விதி முறைகளை ஆக்கவேண்டியுள்ளது. அவை எல்லாவற்றையும் பாராளுமன்றமே ஆக்குவதென்பது உண்மையில் நடவாத காரிய மாகும். மற்றும், மாறிவிட்ட சூழ்நிலைகளுக்கேற்ப ஒரு சட்டத்தை மாற்ற வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் பாராளுமன்றம் ஒப்புக்கொள்வது உசிதமேயன்றி அம் மாற்றம் எந்த அளவில் அமையவேண்டுமென்பதைச் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையே தீர்மானிக்கத் தகுதி வாய்ந்தது என்பதை இன்று எல்லோருமே ஒப்புக் கொள்கின்றனர். ஏனெனில், இக்கால சமுதாய நலக் காரி யங்களும், அறிவியல் சம்பந்தமான வேலைகளும் மிக நுட்ப மானவை. அவை பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் சாதாரணப் பொது அறிவுடைய உறுப்பினர்களுக்கு அவ்வளவாகப் புரியாது. புரியாத ஒன்றைப்பற்றிச் சட்டம் செய்வதை யாரும் விரும்பமாட் டார்கள். எனவேதான் பொதுவான கொள்கைகளைப் பாராளு மன்றம் சட்டமாக இயற்றிவிட்டு, அச் சட்டம் நடைமுறையில் அமுலாக்கப்படுவதற்கான பல்வேறு உப சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அந்தந்த நிருவாக நிறுவனங்களுக்கே வழங்கி விடுகிறது. சட்டத்தை அமுலாக்கும்போது எத்தனையோ புதுப்புது பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அவற்றை எல்லாம் முன்கூட்டியே யூகித்தறிந்து அவற்றுக்கேற்ற சட்டப் பிரிவுகளைப் பாராளு மன்றமே ஆக்குவதென்பது முடியாத காரியம். இங்ஙனம் எதிர் பாராமல் ஏற்படுகின்ற பற்பல இக்கட்டுகளையும் மேற்கொள்வதற் கான விதி முறைகளை ஆக்கும் அதிகாரம் நிருவாகத் துறையின ருக்கே ஒப்படைக்கப்படுகின்றது.

மற்றும் நெருக்கடியான காலங்களில் சட்டங்கள் துரிதமாக இயற்றப்பட வேண்டும். சான்றாகப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நாட்டில் பல அவசரத் தேவைகள் ஏற்படக்கூடும். அவற்றை எல்லாம் சமாளிக்கப் பல சட்டங்கள் உடனடியாக இயற்றப்பட வேண்டியிருக்கும். எனவேதான் அத் தகைய நெருக்கடியான சமயங்களில் தேவையான சட்டங்களை இயற்றும் அதிகாரமானது நிருவாகத்துறைக்கு அளிக்கப்படுகின்

றது. நாட்டின் பாதுகாப்பு பலியிடப்படும்போது, சட்டங்களை விவாதித்து அவற்றை மெள்ள மெள்ளப் பாராளுமன்றம் இயற்ற வேண்டுமென்பது முக்கியமில்லை. காரியங்கள் வெற்றியுடன் நடைபெறவேண்டுமென்பதே யாவரது குறிக்கோளாகவுமிருக்கும். எனவேதான் நிருவாகத்தினர்க்குச் சட்டஞ் செய் அதிகாரமானது அத்தகைய சமயங்களில் வழங்கப்படுவது இன்றியமையாத தொன்றுகிறது.

மேலும், பாராளுமன்றம் எப்போதுமே கூட்டத்தில் அமர்ந் திருப்பதில்லை. அதன் கூட்டங்கள் நடைபெறாத வேளையில் ஒரு சில சட்டங்கள் நாட்டுக்குத் தேவைப்படக்கூடும். அத்தகைய சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் நிருவாகத் துறையிடமே ஒப்படைத்துள்ளது.

பாராளுமன்றத்தில் கட்சிகளின் செல்வாக்கைப் பொறுத்தே சட்டங்கள் இயற்றமுடியும். சில பொதுக் காரியங்களில் கட்சி களின் தலையீடும் நெருக்குதலும் இன்றி சட்டம் செய்யப்பெறுதலே நாட்டுக்கு நலமாயிருக்கும். கட்சியின் நலனைவிட, நாட்டின் நலனே முக்கியம் என்ற உண்மையைப் பாராளுமன்றம் நன்கு உணர்ந்துள்ளது. அதனுற்றான் நாட்டுக்குப் பொதுவான பல பணிகளும், தேசீயமயமாக்கப்பட்டுள்ள தொழில்கள் யாவும், பெருமளவுக்குச் சுயேச்சையுடன் செயல்படுகின்ற தனி நிறுவனங் களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. மத்திய மின் வாரியம் (Central Electricity), பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிலையம் (British Broadcasting Corporation), சுங்கவரி ஆலோசனைக் குழு (Tariff Advisory Board), தேசீய நிலக்கரி வாரியம் (National Coal Board) போன்ற பல சுயேச்சை நிறுவனங்கள் தங்களுடைய அலுவல்கள் ஒழுங்காக நடைபெறுவதற்காகப் பல விதிமுறைகளை இயற்றிக் கொள்கின்றன. அத்தகைய அதிகாரத்தைப் பாராளுமன்றமே அவைகளிடம் வழங்கியுள்ளது. இங்ஙனம் ஜனநாயகம், கட்சி யாட்சியின் தீங்குகளினின்றும் தன்னைத்தானே காத்துக் கொள் கின்ற காட்சியை நாம் இங்கிலாந்தில் காண்கின்றோம்.

அவற்றின் இயல்பு

நிருவாக நிறுவனங்களினுல் இயற்றப்படும் சட்டங்கள் எளிதில் மாற்றப்படத்தக்கவை. எனவே, நிலைமை மாற்றத்துக் கேற்ப அவற்றை அவ்வப்போது திருத்திக்கொள்ளலாம். ஆனுல், பாராளுமன்றச் சட்டங்களை அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது. மற்றும் நிருவாகச் சட்டங்களை அரசியலமைப்புக் கொவ்வாதவை என நிராகரிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கு

உண்டு. பாராளுமன்றமும் அவற்றைக் கண்காணித்துவரும். ஒருசில சட்டங்களை ஆக்குமுன்னர் அவற்றைப் பாராளுமன்றத்திடம் நிருவாகத்தினர் சமர்ப்பிக்கவேண்டும் என்ற மரபும் இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. மேலும் நிருவாகத்தினர் ஒரு சட்டத்தைச் செய்யுமுன் அதைப்பற்றிப் பொதுமக்களுக்கு அறிவித்து அவர்களின் கருத்துகளை அறிந்துகொள்ளவேண்டும் என்று, விதிமுறைகள் வெளியீட்டுச் சட்டம் (Rules Publication Act, 1893) திட்டமாகத் தெரிவிக்கிறது. நிருவாகத்தால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் எதுவாயினும் அவற்றை முழுவதுமாகவோ, அன்றி பகுதியாகவோ ரத்துச் செய்யும் முடிவான அதிகாரமும் பாராளுமன்றத்திடமே உள்ளது. எனவே, நிருவாகத்துறை பொறுப்பற்ற முறையில் சட்டங்களைச் செய்துவிடும் என்ற அச்சத்துக்கும் இங்கிலாந்தில் அவ்வளவாக இடமில்லை.

தீமைகள்

இங்ஙனம் சட்டஞ்செய் பொறுப்பை நிருவாகத்திடம் ஒப்படைப்பதில் ஒருசில அபாயங்களும் உள்ளன. நிருவாக அதிகாரிகள் தங்களுடைய அலுவல்கள் சுலபமாக நடைபெறுவதையே சில சமயம் முக்கியமாகக் கருதிவிடுவார்களேயன்றி, தனி மனிதர்களின் உரிமைகளை அவ்வளவாக மதிக்க மாட்டார்கள். தேசீய நலனை மட்டுமே கருத்திற்கொண்டு அதற்காக அவர்கள் தனிநபர் சுதந்திரத்தைப் பலியிட்டுவிடக்கூடும். அரசியல் அமைப்புக்கு உட்பட்டு நடந்து வரும் அதிகாரிகள், விருப்பம்போல் அதை மீறி நடப்பதற்கும், வேண்டுமானல் பாராளுமன்ற ஆட்சி முறையையே ஓரளவு நிறுத்தி வைப்பதற்கும் அது துணைபுரியக்கூடும். பாராளுமன்றமே பார்த்து இத்தகைய அதிகாரத்தை நிருவாகத்தினருக்கு வழங்குவதால் நீதிமன்றங்களும் அவர்களைக் கட்டுப்படுத்த இயலாமல் போய்விடும். தான்தோன்றித்தனமாக அவர்கள் நடந்துகொள்ளும் அபாயம் எப்போதுமே உண்டு. நாட்டின் நீதிமன்றங்களுக்குக்கூட கட்டுப்படாத, வரையறை யற்றதோர் வல்லரசு நாட்டில் ஏற்பட்டுவிடுவதற்கே இத்தகைய அதிகார ஒப்படைப்பு வழிவகுக்கிறது என்று தலைமை நீதிபதி ஹீவார்ட் பிரபு (Lord Hewart) போன்றவர்கள் கூறலானார்கள். இத்தகைய வல்லரசைக் கண்டித்து அவர் 'புதிய வல்லரசு' (New Despotism) என்ற நூலை எழுதி 1928ஆம் ஆண்டில் வெளியிட்டார். இங்ஙனம் கிளம்பிய கண்டனக் குரல்களின் விளைவாக 1929ஆம் ஆண்டில் டனேமூர் எர்ல் பிரபுவின் (Earl of Donoughmore) தலைமையில் ஓர் ஆய்வுக் குழுவை அரசாங்கத்தினர் ஏற்படுத்தினர். நிருவாகத்தினரிடம் சட்டஞ் செய் அதிகாரத்தை ஒப்படைக்கும் அதே சமயத்தில், பாராளுமன்றத்தின் தனித்

தலைமையையும், சட்டத்தின் இறைமையையும் எவ்வாறு பாதுகாப்பது என்பதை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை வெளியிடுமாறு அக் குழுவினர் பணிக்கப்பட்டனர். அதற்கேற்ப 1932ஆம் ஆண்டில் அது ஓர் அறிக்கையை வெளியிட்டது. ஓரளவு கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, நிருவாகத்தினர் சட்டங்களை ஆக்குவதென்பது அவசியமானதொன்றே என்றும், அது சட்ட ரீதியானதே என்றும் அவ்வறிக்கை கூறிற்று. சட்டஞ்செய் அதிகாரத்தை நிருவாகத்துறைக்குப் பாராளுமன்றம் வழங்கும் போது, திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அதைத் தெரிவிக்கவேண்டும்; எந்த எல்லைக்குள் அந்த அதிகாரம் செயல்படலாம் என்பதையும் எவ்வளவு காலம்வரை அது செல்லுபடியாகுமென்பதையும் பாராளுமன்றம் வரையறுக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கும் பாராளுமன்றச் சட்டங்களுக்கும், அரசியலமைப்பு விதிகளுக்கும் உட்பட்டே உப சட்டங்களை நிருவாகத்தினர் ஏற்படுத்தலாம். அவைகள் ஒரோவழி அரசியலமைப்புக்கு விரோதமாக அமைந்துவிடுமாயின், அதை நிராகரிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கு இருக்கவேண்டும். ஒரு சில இன்றியமையாத வேளைகளில் மட்டுமே நீதிமன்றங்களுக்குக் கட்டுப்படாது நிருவாகம் சட்டங்களை ஆக்கலாம். நிருவாகத்துக்கு இத்தகைய அதிகாரத்தை வழங்கும் மசோதாவைப் பரிசீலிக்கப் பாராளுமன்ற நிரந்தரக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். அக் குழுவின் சிபாரிசின் பேரில் அம் மசோதாவின் விதிகளை 28 நாள்களுக்குள் மாற்றவோ நிராகரிக்கவோ பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். நிருவாகத்தினர் ஏற்படுத்தும் விதிகள் யார் யாரைப் பாதிக்குமோ அவர்களை எல்லாம் கலந்தாலோசித்து அவர்களின் ஆலோசனைகளைத் தொகுத்துப் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு அவற்றைக் கொண்டுவரவேண்டும் என்றெல்லாம் அக் குழு பரிவுரை (Recommendation) வழங்கியது. இவற்றுள் பல நடைமுறையில் கடைப்பிடிக்கப்படவில்லை. எனினும் இத்தகைய அதிகார ஒப்படைப்பை ஆராய்வதற்காக 1944இல் பொறுக்குக் குழு ஒன்றைப் பொதுமக்கள் சபை ஏற்படுத்தியது. பிரபுக்கள் சபையிலும் அத்தகைய பரிசீலனைக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1946இல் ஏற்பட்ட ஒரு சட்டப்படி நிருவாகத்துறையினர் வகுக்கும் விதிமுறைகள் பாராளுமன்றத்தின் பார்வையில் நாற்பது நாட்கள்வரை வைக்கப்பட வேண்டும்; அதற்குள் பாராளுமன்ற உறுப்பினர் எவராவது விரும்பினுல், அவற்றை ரத்து செய்துவிடுமாறு சட்டசபையில் அவர் ஒரு தீர்மானம் கொண்டுவரலாம். அதை ஒட்டிப் பாராளுமன்றம் அதனை ரத்து செய்துவிடலாம்.

சில சான்றுகள்

இத்தகைய கட்டுப்பாடுகள் பல இருந்தும் நிருவாகத்துறையினரால் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன. 1911ஆம் ஆண்டில் ஏற்பட்ட தேசீய காப்புறுதிச் சட்டப்படி (The National Insurance Act) இன்ஷூரன்ஸ் சம்பந்தமான விதிமுறைகளை (Regulations) வகுக்கின்ற அதிகாரம் காப்புறுதி ஆணையாளர்களின் குழு (Board of Insurance Commissioners) ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலாம் உலகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, போரைச் செவ்வனே நடத்தவும், நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் தேவையான கட்டுப்பாட்டு விதிகளை ஆக்குகின்ற தனிப்பட்ட அதிகாரமானது நிருவாகத்துக்கு வழங்கப்பட்டது.

1914ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டுப் பாதுகாப்புச் சட்டப்படி இத்தகைய சிறப்பதிகாரங்களை அமைச்சர்களுக்குப் பாராளுமன்றமே பார்த்து வழங்கியது. போருக்குப் பின்னும் இத்தகைய வழக்கம் வளர்ந்துகொண்டே வந்தது. 1919ஆம் ஆண்டில் ஏற்பட்ட 102 பொதுச் சட்டங்களில் ஏறக்குறைய 62 சட்டங்கள் நிருவாகத் தலைவர்களுக்குச் சட்டஞ்செய் அதிகாரங்களை வழங்கின. 1920ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருவழிகள் சட்டமானது (Roads Act) நாட்டின் பொதுப்பாதைகள்பற்றிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவும், அவற்றை நடைமுறையில் செயற்படுத்துதற்குமான அதிகாரங்களைப் போக்குவரத்து அமைச்சவைக்கு (Transport Ministry) வழங்கியது. 1925இல் ஏற்பட்ட தீர்வை, விலை நிர்ணயச் சட்டமானது (Rating and Valuation Act) அச்சட்டத்தை அமுல் நடத்துதற்குத் தேவையான கட்டளைகளை இடும் அதிகாரத்தை மட்டுமின்றி, அவசியமானால் சட்டத்தின் ஷரத்துகளைத் திருத்துவதற்குங் கூடத் தேவையான அதிகாரத்தை அமைச்சர்களுக்கு வழங்கியது. இங்ஙனம் ஒரு சட்டத்தின் ஷரத்துகளையே திருத்துவதற்கான அதிகாரத்தை அமைச்சர்களுக்கு வழங்குகின்ற சட்டப் பிரிவு எட்டாம் ஹென்றியின் ஷரத்து எனக் கேலியாக அழைக்கப்படுகின்றது. 1930ஆம் ஆண்டில் ஏற்பட்ட இரவலர்ச் சட்டமும் (Poor Law Act) சுகாதார அமைச்சருக்குப் பரவலான சட்டஞ்செய் அதிகாரத்தை வழங்கியுள்ளது. இங்ஙனம் சட்டசபையானது தனது சிறப்பதிகாரத்தை நிருவாகத் தலைவர்களிடம் ஒப்படைக்கும் வழக்கம் அதிகரித்து வருவதால் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கே ஆபத்து வந்து விட்டதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், அதிகாரத்தைக் கொடுக்கின்ற பாராளுமன்றம் அதை

அவசியமானல் திருப்பி எடுத்துக்கொள்ளவும் உரிமை பெற்றிருப்ப தால் அத்தகைய அபாயத்துக்கு இடமில்லை என்றே தோன்று கிறது.

ஆட்சித்துறை தீர்ப்பளிக்கும் முறை

ஆட்சித்துறை சம்பந்தமான வழக்குகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை நிருவாகத் தலைவர்களான அமைச்சர்களிடமோ அல்லது அவர்களால் நியமிக்கப்படும் நீதிமன்றங்களிடமோ ஒப்படைக்கும் வழக்கமும் இங்கிலாந்தில் தொன்றுதொட்டு நிலவி வருகிறது. இங்ஙனம் அவர்களால் வழங்கப்பெறும் தீர்ப்புகளில் பல, அவையே முடிவானவை என்றும், அவற்றை எதிர்த்து மேல்முறையீடு செய்துகொள்ள யாராலும் இயலாது என்றும் பாராளுமன்றமானது 1870ஆம் ஆண்டிலிருந்தே அறிவித்துவந்துள்ளது. 1875ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொதுச் சுகாதாரச் சட்டம் (Public Health Act) சுகாதார சம்பந்தமான வழக்குகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தைச் சுகாதார அதிகாரி களுக்கு வழங்கியது. ஆனல், அத்தீர்ப்புகளை எதிர்த்துத் தல ஆட்சிக் குழுக்களிடம் முறையிட்டுக் கொள்ளும் உரிமையையும் அது மக்களுக்கு வழங்கியது. 1911ஆம் ஆண்டில் ஏற்பட்ட தேசீய காப்புறுதிச் சட்டமானது (National Insurance Act) காப்புறுதி சம்பந்தமான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தைக் காப்புறுதி ஆணையாளர்களுக்கே வழங்கியது. முதல் உலகப் போரின்போதும் அதற்குப் பின்னும் இவ் வழக்கம் அதிகமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. வேலையற்ருேர் காப்புறுதிச் சட்டங்களின்படி (Unemployment Insurance Acts) வேலையின்றி வாடும் மக்கள், தங்களுக்குச் சேரவேண்டிய காப்புறுதிப் பணத்தைப் பெறுவதில் ஏற்படுகின்ற வழக்குகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் தொழிலமைச்சரின் கீழ் அமையப்பெற்ற பல ஆட்சித் துறை நீதிமன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1920ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருவழிகள் சட்டப்படி (Roads Act) வாடகை மோட்டார் வண்டிகளுக்கு அனுமதிகள் வழங்குதல் பற்றிய வழக்குகளில் முடிவான தீர்ப்பு வழங்கும் அதிகாரமானது போக்குவரத்து அமைச்சருக்கே வழங்கப்பட்டது. தல ஆட்சி அதிகாரிகளால் பலவந்தமாகப் பறிக்கப்பட்டுத் தம் நிலங்களை இழந்தவர்கள், அமைச்சரிடம் மேல்முறையீடு செய்துகொள்ளும் உரிமையை 1925ஆம் ஆண்டில் ஏற்பட்ட நகரமைப்புத் திட்டச் சட்டமானது (Town Planning Act) குடிமக்களுக்கு வழங்கியது. ரயில்வே போக்குவரத்து, வாணிகம் ஆகியவை சம்பந்தமான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூற நிருவாக அலுவலர்கள்

அடங்கிய ஆட்சித்துறை நீதிமன்றங்கள் தற்போதைய இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ளன.

அவற்றின் அவசியம்

இன்றைய நிருவாகமானது மக்களின் நலன்களைப் பாதுகாக்கப் பற்பலவிதமான சமுதாய நலத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. எனவே, அதன் செயல்களும் அவை சம்பந்தமான வழக்குகளும் ஏராளமாகப் பெருகிவிட்டன. அவைகளைச் சாதாரண நீதிமன்றங்களில் விசாரிப்பதென்பது நடைமுறையில் நடவாத காரியமாகும். எனவே, பொதுவழக்கு நீதிமன்றங்களின் (Common Law Courts) அசாதாரணமான பளுவைக் குறைப்பதற்காக வேனும் ஆட்சித்துறை நீதிமன்றங்களும், தீர்ப்பு வழங்குமுறையும் அவசியமாகின்றன.

மற்றும் மின்சாரம், பொறியியல், ஆயுள்காப்புறுதி போன்ற துறைகளில் ஏற்படும் வழக்குகளில் தக்கதோர் தீர்ப்பளிக்கச் சாதாரண நீதிபதிகள் தகுதியற்றவர்களாவர். ஒரு நுணுக்கமான தொழில்துறையில் ஏற்படும் வழக்குகளைச் சரிவர புரிந்து கொண்டு அதற்கேற்ற தீர்ப்புகளை வழங்கும் தகுதி பெற்றவர்கள், அத்தொழில்களில் அறிவும் அநுபவமும் உள்ள நிருவாக அதிகாரிகளே என்பதை யாவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

சாதாரண நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைமுறையே அலாதியானது. அதில் காலதாமதம் நிறைய ஏற்படும். நிருவாக சம்பந்தமான வழக்குகளில் அங்ஙனம் காலம் தாழ்த்துதல் மிக அபாயமாகும். எனவே, துரிதமாகவும், எளிதாகவும் வழக்குகள் தீர்க்கப்பட வேண்டுமானுல் தனிப்பட்ட நிருவாக நீதிமன்றங்கள் அவசியமாகின்றன.

நிருவாகத்தின் செயல்களைச் சிவில் நீதிமன்றத்தார் எப்போதும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அதனுல் அவர்கள் நிருவாக சம்பந்தமான வழக்குகளில் அதற்கு எதிராகத் தீர்ப்புக் கூறுவது சாதாரணமாக நடைபெற்றுவிடுகிறது. ஆனுல், நிருவாக அநுபவமுள்ளவர்கள் நிறைந்த நீதிமன்றத்தில் ஆட்சித்துறை பற்றிய வழக்குகள் விசாரிக்கப்படுமானுல், நிருவாகத்தின் தனிப்பட்ட இடர்ப்பாடுகளை அவர்கள் உணர்ந்து, அது முட்டின்றி நன்கு செயல்படுவதற்குத் துணைபுரியும் வகையில் தீர்ப்புகள் வழங்கப்படுவது உண்டு.

மேலும் நிருவாக நீதிமன்றங்களின் தீர்ப்புகளைச் சமய சந்தர்ப்பத்துக்கேற்ப பின்னுல் மாற்றிக்கொள்ள முடியும். ஆனுல்,

சாதாரண நீதிமன்றங்களின் தீர்ப்புகளை அவ்வளவு எளிதில் மாற்ற முடியாது. வெகு வேகமாக நாடு முன்னேறிக்கொண்டு வரும் இக்காலத்தே, மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப மாற்றப்படக் கூடிய தீர்ப்புகளை வழங்கக்கூடியவை ஆட்சித் துறை நீதிமன்றங் களேயன்றி வேறல்ல என்பதில் ஐயமில்லை.

தீமைகள்

நிருவாகத்தினரிடம் நீதி வழங்கும் அதிகாரத்தைக் கொடுப் பது குரங்கு கையில் பூமாலையைக் கொடுப்பதை ஒக்கும் எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். ஏனெனில், தப்பு செய்கின்ற வர்களே அத்தப்பை விசாரிக்கும் உரிமையையும் இதனால் பெற்று விடுகின்றனர்.

சான்றாக ஒரு பள்ளி நிருவாகிக்கும், அதைக் கண்காணிக்கும் தல கல்வி அதிகாரிக்கும் ஒரு வழக்கு ஏற்படுமானால், அதை விசாரிக்கும் பொறுப்பு கல்வி அமைச்சரிடம் வந்து வீழ்கிறது. கல்வி அமைச்சர் தமது துறையில் தனக்குக் கீழ் வேலை பார்க்கும் ஒருவரைக் காப்பாற்றுவதிலேயே கவனம் செலுத்துவாரேயன்றி, நடுநிலைநின்று நேர்மையாகத் தீர்ப்பு வழங்குவார் என்று எதிர் பார்க்க முடியாது.

மற்றும் நிருவாக அதிகாரிகள் நிருவாகத் துறையின் சௌகரியத்தையே பெரியதாகக் கருதி அதற்கேற்பக் கண்டிப்பாக இருப்பார்களே யன்றி, தனிமனிதர்களின் உரிமைகள்பற்றி அதிகம் கவலைப்படமாட்டார்கள். நிருவாக இயந்திரத்தில் சிக்கி மழுங்கிப்போன அதிகாரிகள் மக்களின் சிவில் உரிமைகளை அவ்வளவாக மதிக்கமாட்டார்கள். வெறும் சட்ட நுணுக்கங் களைப் பெரிதுபடுத்துவார்களேயன்றி, தனிப்பட்ட வழக்குகளில் தனிப்பட்ட நியாயம் வழங்கத் துணிவும் கொள்ளமாட்டார்கள்.

பாராளுமன்ற ஆட்சிமுறையில் அமைச்சர்களே முடிவான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள். எனவே, நிருவாக அலுவலர்கள் செய்யும் தவறுக்கும் அவர்களே பொறுப்பாளிகளா கின்றனர். நிருவாக சம்பந்தமான நுட்பங்கள் அவர்களுக்கதிகம் தெரியாது. எனவே, அவர்களின் சிவில் அதிகாரிகளையேபெரிதும் சார்ந்திருப்பர். அவர்கள் சொற்படியே அனேகமாக நடந்து கொள்வர். எனவே, நிருவாக சம்பந்தமான வழக்கு ஒன்றை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் தீர்ப்புக்கு விடும்போது, உண்மை யில் ஊர் பேர் தெரியாத நிருவாக அலுவலர்களே அத் தீர்ப்பினை அமைச்சரின் பேரால் வழங்குகின்றனர். எனவே, அத் தீர்ப்பு நேர்மையாகவும் நியாயமாகவும் இருக்குமென்று நம்புவதற்கில்லை.

டைஸி (Dicey) எனும் ஆசிரியர் நிருவாகத் தொடர்பான நீதிமன்றங்கள் தனிமனித உரிமைகளுக்குப் பெரிதும் கேடு சூழ்பவை எனத் தமது 'அரசியலமைப்புச் சட்டம்' (Law of the Constitution) என்ற நூலில் குறிப்பிடுகின்ருர். நிருவாகம் நீதித் துறையில் தலையிடுமாளுல் நாட்டில் நிருவாகத்தினரின் கொடுங்கோன்மையே வளரும் என அவர் விளக்குகின்ருர். ஆட்சித் துறைச் சட்டத்துக்கோ, நீதிமன்றங்களுக்கோ, சட்டத்தின் இறைமை (Rule of Law) நிலவும் இங்கிலாந்தில் இடமில்லை என்பது அவரது வாதமாகும். ஆனுல், நாளடைவில் அவரேகூட ஆட்சித்துறைச் சட்டத்தின் (Administrative Law) அவசியம் பற்றிப் பிற்காலத்தே எடுத்து விளம்பியுள்ளார். ஹிவார்ட் பிரபு (Lord Hewart) ஆட்சித்துறை நீதி என்பது ஆட்சித்துறையின் தான்தோன்றித்தனமேயன்றி வேறல்ல என தமது 'புதிய வல்லரசு' (New Despotism) என்ற நூலில் குறிப்பிடுகின்ருர். ஆட்சித்துறை நீதிவழங்கலில் உள்ள பல குறைகளையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். ஆட்சித்துறை நீதிமன்ற நடவடிக்கைகளில் ஒரு வரையறை கிடையாது. சாட்சிகள் விசாரிக்கப்படுதல், நடுவர்களின் தீர்ப்பைக் கோரல் போன்ற முறைகள் அங்கு இல்லை. தனிப்பட்ட நபர்களின் உரிமைகள் அங்கு மதிக்கப்பட வழியில்லை. தீர்ப்புகளை அமைச்சர்கள் வகுக்க உதவி புரிபவர்கள் ஈர நெஞ்சமற்ற நிருவாக அலுவலர்களே. அவர்கள் தாம் எண்ணுவதையே நாட்டு நலனுக்குகந்தது என்று எண்ணிக்கொண்டு தனி நபரின் உரிமைகளைக் காற்றில் பறக்கவிட்டு விடுவார்கள். தங்கள் பெயர் வெளியே தெரியாது என்ற காரணத்தால் அவர்கள் மனம்போனபடி ஒரு முடிவுக்கு வருவார்கள். எல்லாம் மூடுமந்திரமாகவே நடைபெறுவதால், தீர்ப்புகளால் பாதிக்கப்பட்டவர்கள், ஓர் இலாகாவில் என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ளவோ, வருங்காலத்து அது எங்ஙனம் நடந்து கொள்ளும் என்பதைப் புரிந்துகொள்ளவோ முடியாமல் போகிறது என்றெல்லாம் அவர் குறைகூறுகிருர். பேராசிரியர் ராப்சன் (Prof. W. A. Robson) என்பார் ஆட்சித்துறை நீதி எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை 'நீதியும் ஆட்சித்துறைச் சட்டமும்' (Justice and Administrative Law) என்ற நூலில் பரக்க எடுத்தோதுகிருர். ஆட்சித்துறை சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கத் திட்டவட்டமான நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதில் தக்கவர்களை நிரந்தர நீதிபதிகளாக அரசாங்கம் நியமிக்கவேண்டும். அங்கு வழக்குகள் வெளிப் படையாக விசாரிக்கப்பட வேண்டும். சாட்சிகளிடம் வாக்கு மூலங்கள் வாங்கப்பெற வேண்டும். தீர்ப்புகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டன என்பதை நீதிமன்றங்கள்

அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மேலிடத்துக்கு முறையிட்டுக் கொள்ளவும் வசதி இருக்கவேண்டும் என்றெல்லாம் அவர் கூறியுள்ளார்.

நீதியை நிருவாகத்தார் வழங்க முற்படும்போது ஏற்படக் கூடிய தீங்கினை ஒழிக்க இங்கிலாந்தில் பாராளுமன்றத்துக்கே உரிமை உண்டு. அரசியலமைப்புக்கு ஒவ்வாதவை என ஒருசில நிருவாகத் தீர்ப்புகளை, சாதாரண நீதிமன்றங்கள் நிராகரிக்கலாம். ஆனால், ஒருசில நிலவரச் சட்டங்கள், நிருவாகத்தார் ஏற்படுத்தும் விதிகளுக்குச் சட்டத்தின் ஆற்றலைத் தந்து விடுகின்ற காரணத் தால் அவைகளை மறுத்துரைக்க நீதிமன்றத்துக்கு வழி இல்லாமல் போய்விடுகிறது. எனினும், அமைச்சர்களுக்கும் நிருவாக நீதி மன்றங்களுக்கும் நீதி வழங்கும் அதிகாரத்தை அளிக்கும் சட்டங் கள் பாராளுமன்றத்தின் குழுக்களால் பரிசீலிக்கப்படுவதாலும், நாற்பது நாள்களுக்கு அவை பாராளுமன்றத்தினரின் பார்வை யில் படும்படி வைத்திருக்கப்பெறுவதாலும், நாட்டு நலனுக்கு விரோதமாக அவை அமைந்து விடுகின்ற அபாயம் அவ்வளவாக இல்லை என்றே கருதலாம்.

6. பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் (British Civil Service)

பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் என்ற அரசாங்க ஊழியர் அமைப்பு முறை உலகப் புகழ் பெற்றதோர் நிறுவனமாகும். தகுதிக்கும் திறமைக்கும் அது ஏனைய நாடுகளுக்கோர் முன் மாதிரியாக விளங்கி வருகிறது. உலகநாடுகளிற் பல, சிவில் சர்வீஸ் அமைப்பைப் பொறுத்தவரையில் பிரிட்டனையே பின்பற்றுகின் றன. கதிரவன் மறையாத் தன்மை பெற்ற பிரிட்டிஷ் பேரரசைத் திறம்படக் கட்டியாண்ட பெருமை அந் நிறுவனத்துக்கே உரிய தாகும். அதனாற்றான் அதை ஒரு சில ஆசிரியர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் 'எஃகு சட்டம்' (Steel frame) என்று அழைப்பர். பிரிட்டனின் ஏனைய நிறுவனங்கள் போலவே, இதுவும் நாளடை வில் தானாகவே வளர்ந்து செம்மையுற்றதோர் அமைப்புமுறை யாகும்.

வளர்ச்சி வரலாறு-பதினெட்டாம் நூற்றாண்டு

ஆதியில், இங்கிலாந்தில் அரசியல்வாதிக்கும் (Politician) அரசாங்க ஊழியனுக்கும் (Official) வேறுபாடு எதுவும் இருந்த தாகத் தெரியவில்லை. நாட்டின் கொள்கைகளை வகுக்கின்ற அரசியல்வாதிகள் வேறு, அக் கொள்கைகளை நடைமுறையில் கொண்டு செலுத்துகின்ற அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்

களும் வேறு என்ற நிலைமை கொஞ்சம் கொஞ்சமாகவே இங்கிலாந்தில் மலர்ந்தது. அரசாங்கப் பணியாளர் தொகையும் அக்காலத்தே மிகவும் குறைவாகவே இருந்தது. 1797ஆம் ஆண்டில் சுமார் 16,000 பொது ஊழியர்களே நாட்டில் இருந்தனர். அதில் முக்கால் பகுதியினர் சுங்க வரி, கலால் வரி ஆகியவற்றை வசூல் செய்யும் நிறுவனத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். மீதிப் பேர் சுமார் நாற்பது சிறிய துறைகளில் பணியாற்றினர். அவற்றுள் மிகப் பெரிய துறை தபால்துறை ஒன்றுதானுகும். அதில் ஏறக்குறைய ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றினர். இவ்வூழியர்கள் யாவரையும் அரசரோ, அன்றி நிருவாகத்துறை தலைவர்களோ தத்தம் பிரியப்படியே நியமித்தனர். ஒருசிலர் பதவிகளை விலைகொடுத்து வாங்கினர். பதவியின் சிறப்புக்கேற்றபடி அதன் விலையும் உயர்ந்துகொண்டே சென்றது. தேர்தல் காலங்களில் சிறப்பாகப் பணியாற்றியவர்களும் மக்களிடம் செல்வாக்கு மிக்கவர்களும், அரசாங்கத்துக்கு ஏதாவதொரு வகையில் உதவி செய்தவர்களும் ஆகிய ஒரு சிலருக்கே பதவிகள் தனியுரிமையாயிருந்தன.

அரசாங்கப் பணியாளர்களுக்கு முறையாக ஊதியம் வழங்கப் பெறவில்லை. வரிவசூல் செய்தவர்கள் தாங்கள் வசூலித்த பணத்தில் ஒரு பகுதியைத் தங்களுக்கென்று எடுத்துக் கொள்ளுதல் சாதாரண வழக்கமாயிருந்தது. மேலும், அரசாங்க அதிகாரிகள் கூசாமல் லஞ்சம் வாங்கினர். ஒருசில வாணிக நிறுவனங்கள், அதிகாரிகளுக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை இனமாக அளித்து வந்தன. மேலும் குடியிருப்பு வசதி, எரிபொருள் வசதி போன்றவைகளையும் அவை சில அதிகாரிகளுக்கு இனமாக வழங்கின. மேல்வரும்படி (Perquisites) என்ற பெயரில் அரசாங்க அதிகாரிகள் பல சலுகைகளை அநுபவித்து வந்தனர். ஒருசில அதிகாரிகள், தங்களுக்குப் பதிலாக ஓர் ஆளை வைத்துக் குறைந்த செலவில் தங்களது அலுவல்களை முடித்துவிட்டு அரசாங்கத்திடமிருந்து பெருந்தொகைகளைச் சம்பளமாகப் பெற்று வந்தனர். அரசாங்க நிறுவனங்கள் எதிலும் வரவுசெலவுக் கணக்குச் சரிவர வைக்கப்படவில்லை. அவற்றைத் தணிக்கை செய்வார் எவரும் அக்காலத்து இல்லை. பொதுப்பணத்தைக் கையாடல், அல்லது அதிலிருந்து கடன் வாங்குதல் என்பது சர்வசாதாரணமாக நடைபெற்று வந்தது. ஓர் அதிகாரி பொதுப்பணத்தில் £ 500,000 கடன் வாங்கியிருந்தார் என்பது அவர் ஓய்வு பெற்றபோதுதான் தெரிய வந்ததாம்! சில சமயங்களில் ஓர் அதிகாரி இறந்த பின்னர்தான் அவர் அரசாங்கப் பணத்தை எவ்வளவுதூரம் கையாடியிருக்கிறார் என்பதே

தெரியவரும். வேறுசில உத்தியோகங்களுக்குச் சம்பளம் இருக்கும். ஆனால், செய்யவேண்டிய பணியோ ஒன்றுமிருக்காது. அரசர்கள் அத்தகைய உத்தியோகங்களைத் தமது நண்பர்களுக்குப் பரிசாக வழங்குவர் (Sinecures).

18ஆம் நூற்றாண்டில் விக்குக் கட்சியினர் இங்கிலாந்தில் தனியாதிக்கம் செலுத்திவந்தபோது அதன் தலைவர்கள், பொது ஊழியத்தில் தங்களது ஆதரவாளர்களையும் நண்பர்களையுமே நிறைய நுழைத்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏராளமான உத்தியோகங்கள் வழங்கப்பட்டன. மேலும், ஒரு தேர்தல் தொகுதியில் ஒரு வேலை காலியானால், அதில் யாரை நியமிப்பதென்பதை அத்தொகுதியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரே தீர்மானிக்கும் வழக்கமும் ஏற்பட்டது. அவர்களை அரசாங்கம் கலந்தாலோசித்த பின்னரே வேலை வாய்ப்புகளை வழங்கலாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சீர்திருத்த முயற்சி

இங்ஙனம் ஊழல்கள் மலிந்துகிடந்த அரசாங்க ஊழியர் நிறுவனத்தைச் சீர்திருத்தவேண்டுமென்று பலர் அவ்வப்போது எடுத்துக்கூறி வந்தனர். 1782ஆம் ஆண்டில் பர்க் (Burke) என்ற அறிஞர் 'பதவிச் சட்டம்' (Place Act) ஒன்றைக் கொணர்ந்து நிறைவேற்றினார். அதன்படி வரிவசூல் செய்த அதிகாரிகள் அனைவரும் தங்கள் வாக்குரிமையை இழந்தனர். ஆனால், அரசாங்க ஊழியர்களின் திறமையின்மையையும் இலஞ்ச ஊழலையும் போக்க ஒருவருமே முயற்சிக்கவில்லை. வேண்டியவர்களுக்கு வேலை வழங்கும் சிறப்பதிகாரத்தைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டபடி எல்லாம் கையாண்டு வந்தனர். தனது தொகுதியில் மட்டும் 300 பேர்களுக்கு வேலைவாங்கித் தந்துள்ளதாக சர் வில்லியம் ஹேய்டர் (Sir William Haytor) என்பார் பெருமையடித்துக் கொண்டார். அவர் 'பதவி வழங்குச் செயலாளராக' (Patronage Secretary) 1850 முதல் 1858 வரை பணியாற்றினார். அவரது செய்கைகளை அப்போது கடற்படை அமைச்சராக இருந்த சர் ஜேம்ஸ் கிரஹாம் (Sir James Graham) ஒருவர் மட்டுமே துணிந்து கண்டித்தார்.

பொதுப்பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் 19ஆம் நூற்றாண்டில்தான் ஒருசில சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. போட்டித் தேர்வு ஒன்று நடத்தி அதன்மூலம் தகுதியுள்ளவர்களைக் கண்டு பிடித்து அவர்களை மட்டுமே பொது ஊழியத்தில் சேர்க்கவேண்டுமென்ற கொள்கை கொஞ்சம் கொஞ்சமாகவே நடைமுறைக்கு வந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி தனக்கு

வேண்டிய அதிகாரிகளைத் தேர்தெடுப்பதில் முதலில் இக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இந்தியாவில் பணிபுரிந்து வந்த கம்பெனி அதிகாரிகளைக் கம்பெனியின் இயக்குநர்களே ஆரம்பத்தில் தம் விருப்பப்படி நியமித்து வந்தனர். அங்ஙனம் நியமிக்கப்பட்டவர்கள் பெரும் பொருள் ஈட்டிக்கொண்டு தாய் நாடு திரும்பினர். அதைக்கண்டு பொருமையுற்ற பலர் கம்பெனி உத்தியோகங்களைப் பெறப் பெரிதும் போட்டி போட்டனர். இப்போட்டியைத் தடுக்கக் கம்பெனியானது 1806ஆம் ஆண்டில் ஹெய்லிபரி (Haileybury) என்னுமிடத்தில் ஒரு பயிற்சிக் கல்லூரியை நிறுவி அதில் பயிற்சிபெற்று நல்லமுறையில் தேர்ந்தவர்கள் மட்டுமே இந்தியாவில் உத்தியோகம் பெற முடியும் என்று அறிவித்துவிட்டது. இம்முறையால் நல்ல திறமைசாலிகள் மட்டுமே கம்பெனி சர்வீஸில் நுழைய முடிந்தது. 1833ஆம் ஆண்டில் போட்டித்தேர்வு ஒன்றை நடத்தி அதன்மூலம் ஆட்களைப் பொறுக்குகின்ற முறையைக் கம்பெனி கடைப்பிடித்தது. மெக்காலே, ட்ரெவெல்யான் போன்ற அறிஞர்கள்தான் இத்தகைய சீர்திருத்தத்துக்குக் காரணமானவர்கள். அவர்கள் இதே முறையை ஆங்கில அரசாங்கப் பணிகளுக்கு ஆள் தேர்ந்தெடுப்பதிலும் கடைப்பிடிக்கலாமென ஆலோசனை கூறினர்.

1853ஆம் ஆண்டில்தான் சிவில் சர்வீஸ் சீர்திருத்தத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போது நிதி அமைச்சராக இருந்த கிளாட்ஸ்டன் என்னும் அறிஞர் சிவில் சர்வீஸ் நிறுவனத்தின் அமைப்புமுறையை ஆராயக் குழு ஒன்றை அமைத்தார். ஸர் ஸ்டாஃபோர்டு நார்த்கோட் (Sir Stafford Northcote), ஸர் சார்லஸ் ட்ரெவெல்யான் (Sir Charles Trevelyan) ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்ட அக்குழு 1854ஆம் ஆண்டில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்து அதன்மூலம் பல தீவிரமான மாற்றங்களைச் சிவில் சர்வீஸில் வற்புறுத்தியது. திறமையைப் பற்றியும் தகுதியைப் பற்றியும் கவலைப்படாமல், வேண்டியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் முறையே (Patronage) எல்லா ஊழல்களுக்கும் மூலகாரணம் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டி, போட்டித் தேர்வு மூலம் ஆட்களைப் பொறுக்குவதே சரியான முறை என்பதை அவர்கள் வற்புறுத்தினர். சுயேச்சையான ஒரு நிறுவனத்திடம் அத்தகைய போட்டித் தேர்வுகளை நடத்தும் பணியை அரசாங்கம் ஒப்படைத்துவிட வேண்டுமெனவும், அவ்வப்போது, அந்நிறுவனம் தேர்வுகளை நடத்த வேண்டுமெனவும், அத்தேர்வுகளில் நன்ருக வெற்றி பெற்றவர்கள் மட்டுமே அரசாங்க உத்தியோகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும், தேர்ந்தெடுக்கப்படுவோரின் உடல் நலம், குணநலம்,

வயது முதலியவைகள் சோதனை செய்யப்பட வேண்டுமென்றும், ஒருசில ஆண்டுகள் தற்காலிகமாகச் சோதனை நிலையில் (Probation) வைக்கப்பட்ட பின்பே அவர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படவேண்டுமெனவும் அக்குழு சிபாரிசு செய்தது. தகுதிக்கேற்ப பதவி உயர்வு அளிக்கப்படவேண்டுமெனவும் அது வற்புறுத்தியது.

நார்த்கோட், ட்ரெவெல்யான் கமிட்டியின் சிபாரிசுகளுக் கேற்ப மூன்று உறுப்பினர்கள் அடங்கிய சிவில் சர்வீஸ் கமிஷன் இங்கிலாந்தில் முதன்முதலாக 1855ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்டது. அரசாங்கத்தின் தலையீடின்றிச் சுயேச்சையாகத் தொழிற்படக்கூடிய ஒரு நிறுவனம் அரசாங்க ஊழியர்களைப் பதவியிலமர்த்துவதற்காக அமைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். சீராக ஒரே மாதிரியாக ஆட்களைத் தேர்ந்தெடுக் கும் முயற்சியில் சர்வீஸ் கமிஷன் பெருமளவுக்கு வெற்றி பெற்றது. போட்டித் தேர்வுகளை அது ஆண்டுதோறும் நடத்தி வந்தது. அதன் மூலமாக அரசாங்க ஊழியர்களில் சாதாரணமான பதவி வகித்தவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். உயர்ந்த பதவி கள் எல்லாம் இன்னும் அரசாங்கத்தின் கைகளிலே இருந்தன. அரசாங்க ஊழியர்கள் இருவகையாகப் பிரிக்கப்பட வேண்டு மெனவும், சாதாரண அன்றாடப் பணிகளை மேற்கொள்பவர்களுக் குத் தனியாகவும், திறமைமிக்க பணிகளை ஆற்றுவோர்க்குத் தனியாகவும் வெவ்வேறு போட்டித்தேர்வுகள் நடத்தப்பட வேண்டுமெனவும் நார்த்கோட் கமிட்டி சிபாரிசு செய்தது. ஆனால், அது அமுலாக்கப்படவில்லை. பல்லாண்டுக் காலம் உழைத்த பின்னரே சிறந்த அறிவாளிகளும்கூட உத்தியோக உயர்வு பெற முடிந்தது. இத்தகைய குறைகளை ஆராய 1860ஆம் ஆண்டில் ஒரு பொறுக்குக் குழுவை (Select Committee) அரசாங்கம் அமைத்தது. நார்த்கோட் என்பவர் அதிலும் உறுப்பினராயிருந் தார். போட்டித்தேர்வு எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டு மென்றும், இருவகையான ஊழியர்களுக்கும் தனித்தனி தேர்வு கள் நடத்தப்பெற வேண்டுமெனவும் அக்குழு சிபாரிசு செய்தது. திறமைமிக்கவர்கள் நேரடியாகப் பெரிய பதவிகளுக்குத் தேர்ந் தெடுக்கப்படலாமென அது கூறிற்று. எனினும், இச்சிபாரிசுகள் நடைமுறையில் செயலாக்கப்படவில்லை. அக்குழுவின் உறுப்பினர் களில் ஒருவரான லவே (Lowe) எனும் நிதி அமைச்சர் அரிதின் முயன்று 1870ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தைக் கொணர்ந்தார். அதன்மூலம் அரசாங்கப் பதவிகள் யாவும் வெளிப்படையான போட்டித்தேர்வு மூலமே நிரப்பப்பட வேண்டுமென்பதை அவர் நன்கு நிலைநாட்டினார். அதோடு அரசாங்க நிறுவன ஊழியர்கள்

அனைவரையும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அவர் நிதித்துறைக்கு வழங்கினர். 1870ஆம் ஆண்டிலிருந்து முறையே போட்டித்தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. சிவில் சர்விஸ் அமைப்பை ஆராய அவ்வப்போது குழுக்கள் நியமிக்கப் படுகின்றன. ப்ளேஃபேர் கமிஷன் (Playfair Commission, 1874-75), ரிட்லி கமிஷன் (Ridley Commission, 1886-90), மாக்டனல் கமிஷன் (Mac Donnell Commission, 1912-15), டாம்லின் கமிஷன் (1929-31) என்பவை இத்தகைய ஆராய்ச்சியை நடத்திப் பல சிபாரிசுகளைச் செய்துள்ளன. அவற்றுள் அரசாங்கம் ஒருசிலவற்றை நடைமுறையில் கடைப்பிடித்துள்ளது. 1918ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஹால்டேன் கமிட்டி (Haldane Committee) அரசாங்க நிறுவனம் அனைத்தையும் எப்படிச் சீர்திருத்தவேண்டுமென்பதைப் பற்றி பல அரிய யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

நிருவாகப் பணிகளின் பெருக்கம்

ஒருகாலத்தே, அரசாங்கம் கூடியவரை மக்களது வாழ்க்கையில் தலையிடக்கூடாது என்றும், நாட்டின் அமைதியைக் காத்தல், வெளிநாடுகளோடு தொடர்பு கொள்ளுதல் போன்ற இன்றியமையாத ஒருசில காரியங்களில் மட்டுமே அரசாங்கம் ஈடுபட வேண்டுமெனவும் ஆங்கில அறிஞர்கள் பலர் கருதி வந்தனர். மில் (Mill), பென்த்தாம் (Bentham) போன்ற இவ்வறிஞர்கள் வற்புறுத்திய இத் தலையிடாக் கொள்கையானது (Laissez Faire Theory) நாளடைவில் கைவிடப்பட்டது. அரசாங்கம் தனிமனிதர்களின் வாழ்வில் மென்மேலும் குறுக்கிட ஆரம்பித்தது. தொழிற்புரட்சிக்குப் பின்னர் முதலாளிகள் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழியா வண்ணம் தடுக்கவும், தொழிலகங்களைக் கண்காணிக்கவும், இரவலர் சட்டங்களை (Poor Laws) அமுலாக்கவும் பல சட்டங்கள் ஏற்பட்டன. அவற்றை அமுல் நடத்த ஏராளமான அரசாங்க அலுவலர்கள் தேவைப்பட்டனர். மேலும் பிரிட்டிஷ் பேரரசு பத்தொன்பதாம் நூற்றுண்டில் விரிவடைந்துகொண்டே சென்றது. அதைக் கட்டிக் காக்கவும் பல புதிய நிறுவனங்களும், ஊழியர்களும் தேவைப்பட்டனர். சமுதாய நலனுக்காக அரசாங்கம் உழைக்க வேண்டும் என்ற சமதர்மக் கொள்கையின் (Socialist Doctrine) வளர்ச்சியால், இன்று அரசாங்கம் கல்வி, சுகாதாரம், தொழிலாளர் நலன் ஆகிய பல்வேறு துறைகளில் பெரிதும் பணியாற்றுகிறது. அதனல், ஊழியர்கள் தொகையும் முன்பிருந்ததைவிடப் பன்மடங்கு பெருகிவிட்டது.

இரண்டு உலகப் போர்களின் விளைவாக நாட்டில் பல்வேறு துறைகள் புதிதாக ஏற்பட்டன. அதனல் அரசாங்கத்தின்

செயல்களும் பன்மடங்கு அதிகரித்தது. முதலாளிகளையும், தொழிலாளர்களையும் முடுக்கிப் போர்க்கருவிகளை ஏராளமாக உற்பத்தி செய்து வழங்குவதற்காகப் போர்க்கருவி அமைச்சு (Ministry of Munitions) என்ற ஓர் அமைச்சுக் குழுவை அரசாங்கம் ஏற்படுத்தியது. உணவுத்துறை அமைச்சு உணவுப் பொருள் பங்கீட்டு முறையை (Rationing) நாட்டில் புகுத்தியது. இப் புதிய துறைகளிற் பல போருக்குப்பின் மறைந்துவிட்டன. என்றாலும், ஒருசில தொடர்ந்து பணியாற்றி வந்தன. போருக்குப் பின் நாட்டைச் சீர்படுத்த அரசாங்கம் மக்கள் வாழ்க்கையில் தலையிட நேர்ந்தது. 1922ஆம் ஆண்டிலிருந்து மின்சக்தி வழங்கு துறையிலும் (Electricity Board), செய்தி ஒலிபரப்புத் துறையிலும் (Broadcasting) அரசாங்கம் தலையிட்டு அவற்றை நிருவகிக்க மத்திய மின்சாரக் குழு (Central Electricity Board), பிரிட்டிஷ் செய்தி ஒலிபரப்பு நிறுவனம் (British Broadcasting Corporation) ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. நிலக்கரி உற்பத்தியையும், விநியோகத்தையும் கட்டுப்படுத்த 1930ஆம் ஆண்டில் நிலக்கரிச் சுரங்கச் சட்டத்தை (Coal Mines Act) அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. 1928ஆம் ஆண்டில் ஏற்பட்ட வியாபார மந்தத்தை அடுத்து நாட்டின் பொருளாதாரத்தையே பிரியப்படி கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அரசாங்கம் பெற்றது. தேசீயப் பொருளாதாரச் சட்டத்தின்படி (National Economy Act) அரசாங்கம் செலவுகளைக் கட்டுப்படுத்திப் பொருளைச் சேமிக்க எவ்வழியையும் கடைப்பிடிக்கும் உரிமையைப் பெற்றது. 1931ஆம் ஆண்டில் நாட்டின் ஏற்றுமதியை அதிகரித்து, பொருளாதார நிலையைச் சீர்படுத்தும் அதிகாரத்தை மக்கள் அரசாங்கத்துக்குத் தாமே வலிய வழங்கினர். 1939இல் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்ட பின்னர் அரசினரின் செய்கைகள் மேலும் பன்மடங்கு பெருகின. பொருள்களின் உற்பத்தி, விநியோகம், இலாபம் முதலிய அனைத்தையும் அரசாங்கம் கட்டுப்படுத்தலாயிற்று. போருக்குப்பின் ஏற்பட்ட தொழிற்கட்சி அரசாங்கம் பற்பல சமுதாயநலத் திட்டங்களை மேற்கொண்டது. இங்கிலாந்து பாங்கு 1945இல் தேசீய உடைமையாக்கப்பட்டது. இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள், நிலக்கரி வாயு, மின்சாரம், தந்தி ஆகியவையும் தேசியமயமாக்கப்பட்டன (Nationalised). ரயில்வே, கால்வாய், விமானப் போக்குவரத்துகளும் தேசீய உடைமையாகிவிட்டன. 1945ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய தொழில்களைத் தனிப்பட்ட நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. ஆனால், அவை காபினெட் அமைச்சர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டே இயங்குகின்றன. அவற்றின் நிருவாகத் தலைவர்களை அமைச்சரே நியமிக்கிறார். அவற்றின் திட்டங்களையும், கொள்கைகளையும் அமைச்சர் பரிசீலனை செய்யும்

உரிமையைப் பெற்றிருக்கிறார். இங்ஙனம் அரசாங்கமும், அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற நிறுவனங்களும் சேர்ந்துகொண்டு சமுதாயத்தின் காரியங்களில் பெரிதும் தலையிடுகின்ற காட்சியை நாம் இன்றைய இங்கிலாந்தில் காண்கிறோம். சமுதாயநலம் பேணும் அரசாக (Welfare State) இன்றைய அரசாங்கம் விளங்குகிறது. அதற்கேற்ப அரசாங்கத்தின் அலுவல்களும் மலிந்துவிட்டன. அரசாங்க அலுவலர்களின் எண்ணிக்கையும் பெருகிவிட்டது. சிவில் சர்வீஸ் நிறுவனம் அரசாங்கத்தின் ஒருபெரும் பகுதியாகவும் கூட்டாளியாகவும் திகழ்கிறது.

சிவில் சர்வீஸின் இன்றைய அமைப்பு (Organization)

இன்றைய பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் நிறுவனமானது பல்வேறு பகுதிகளைத் தன்னகத்தே கொண்டதாகும். நிருவாகத் துறைகளின் தலைவர்களான அமைச்சர்களின் கீழ் வேலைபார்க்கும் அத்தனைபேரும் சிவில் சர்வீஸைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப் பெறும் மானியத்தினின்று மட்டுமே ஊதியம் பெறுகின்றனர். எனவே, தனிப்பட்ட ஒதுக்கு நிதிகளிலிருந்து சம்பளம் பெறுகின்ற நீதித்துறை அதிகாரிகள் அதாவது நீதிபதிகள் (Judges), சிவில் அல்லது அமைதிக் கால அலுவல்களுக்குப் புறம்பான பணிகளைச் செய்கின்ற இராணுவ அதிகாரிகள், ஊழியர்கள், அரசியல்வாதிகளான அதாவது நாட்டின் அரசியல் கொள்கைகளை வகுக்கின்றவர்களான அமைச்சர்களும் சிவில் சர்வீஸில் உறுப்பினர்களல்லர். அதேபோன்று தல ஆட்சி நிறுவனங்கள், பொது நிருவாக நிறுவனங்கள் (Public Corporations) ஆகியவற்றில் பணியாற்றுபவர்களும் சிவில் சர்வீஸின் உறுப்பினர்களெனக் கருதப்பட முடியாதவர்களேயாவர். சிவில் சர்வீஸ் ஊழியர்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

(1) **ஆட்சித்துறை அதிகாரிகள் (Administrative Officials):** இவர்கள் அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறி, அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பதில் அவர்களுக்கு உதவி செய்கின்றவர்கள். பழுத்த அனுபவம் உடையவர்கள். வயதிலும் மூத்தவர்கள். மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இத்தகைய பணியை ஆற்றுகின்றனர்.

(2) **அறிவியல், தொழில் நுணுக்கம், தனிப்பட்ட தொழில் ஆகியவற்றில் பணிபுரிவோர் (Scientific, Technical and Professional):** அரசாங்கத்துக்காகப் பணிபுரியும் வழக்கறிஞர்கள், கட்டடக்கலை வல்லுநர்கள், பொறியியல் வல்லுநர்கள், அறிவியல்

நிபுணர்கள், இன்னும் பல தனிப்பட்ட அலுவல்களை மேற்கொண்டுள்ள அதிகாரிகள் அனைவரும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களே. இத்தகையோர் ஒரு லக்ஷத்துக்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர்.

(3) நிருவாக அதிகாரிகள் (Executives): இவர்கள் அமைச்சர்களால் வகுக்கப்பட்ட கொள்கைகளை நடைமுறையில் கொண்டு செலுத்தும் பணியினை மேற்கொண்டவர்கள். அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இத்தகைய அலுவல்களில் ஈடுபட்டுள்ளனர்.

(4) எழுத்தர், தட்டெழுத்தர், செயலாளர் ஆகியோர் (Clerks, Typists & Secretaries): இவர்கள் மேலதிகாரிகள் இடும் கட்டளைகளுக்கேற்பக் காரியங்களை முறையாகச் செய்து வருபவர்கள். நாட்டின் அன்றாட நிருவாக நடவடிக்கைகள் இத்தகையோர்களால்தான் நடக்கிறது. அவர்களது வேலைகள் அதிக மாறுபாடின்றி ஒரே மாதிரியாக அமைந்திருக்கும். எனவே, இவைகளைச் செய்வதற்குத் தனிப்பட்ட சிந்தனை தேவை இல்லை.

(5) உழைப்பாளிகள் (Manual Workers): தபால் துறை, தொலைபேசித்துறை, துப்புரவு செய்வோர், பொருள்களைச் சுமந்து செல்வோர், மற்றும் பல சில்லறைப் பணிகளைச் செய்வோரெல்லாம் இதில் அடங்கியவர்களாவர்.

(6) தொழிலாளர்கள் (Industrial Workers): போர்க்கருவி உற்பத்திசாலைகள், கப்பல் தளங்கள் போன்ற இடங்களில் பணிபுரியும் தொழில் விற்பன்னர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

மேற்கண்ட பணியாளர்கள் யாவரும் வெவ்வேறு வகையான சம்பளம் பெறுகின்றவர்கள். ஒரே துறையில் தகுதிக்கேற்பவும் திறமைக்கேற்பவும் ஊதியங்கள் மாறுபடும். மேலதிகாரிகள் தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களைப்பற்றி நம்பகமான அறிக்கைகளை (Confidential Reports) அவ்வப்போது எழுதிவைப்பர். அவைகளின் அடிப்படையிலும், அனுபவ முதிர்ச்சிக்கேற்பவும் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் அளிக்கப்படுகின்றன. பற்பல பணிகளின் தராதரத்துக்கேற்றபடி வெவ்வேறு வகையான போட்டித் தேர்வுகளை சர்வீஸ் கமிஷன் நடத்துகிறது. சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுத்த ஊழியர்களை அரசாங்கம் அனேகமாக நிராகரிப்பதில்லை. அப்படி ஒரோவழி நிராகரிக்க நேர்ந்தால் அது பற்றிய செய்தியைத் தக்க காரணங்களோடு அரசாங்கம் பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

செயற்பாடுகள் (Functions)

சிவில் சர்வீஸ்தான் நாட்டின் நிருவாக இயந்திரமாகும். அமைச்சர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மாறுகின்றவர்கள். ஆனால், சிவில் சர்வீஸ் மாறாமல் நின்று தொழிற்படுவது. அரசாங்கம் ஏவுகிறபடி பணிபுரிவதொன்றே அதன் கடமை. அரசாங்கம் எந்தக் கட்சியைச் சேர்ந்ததென்ற கவலை அவர்களுக்கிருக்கக் கூடாது என்பதே மரபு. வழிவழியாக வந்த விதிமுறைகளுக்கேற்ப அவர்கள் நிருவாகத்தை நடத்துகிறவர்கள். அமைச்சர்களுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் கூறி, அவர்கள் வழிவழி மரபுகளுக்கேற்பவும், மக்களின் நன்மைக்குகந்தவாறும் கொள்கைகளை வகுக்க உதவி செய்பவர்கள் அவர்களே. அங்ஙனம் வகுக்கப்பட்ட கொள்கைகளையும், நாட்டின் சட்டங்களையும், நீதித்துறையின் தீர்ப்புகளையும் அமுல் நடத்துபவர்கள் அவர்களே யாவர். பாராளுமன்றத்தில் 'கேள்வி நேரம்' (Question Time) என்று ஒருகாலம் உண்டு. அச்சமயம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் பல்வேறு வகையான கேள்விகளைக் கேட்பர். அக்கேள்விகளுக்கேற்ற விடைகளை அமைச்சர்களுக்குத் தயாரித்துத் தருவதும் நிருவாக நிறுவனமேயாகும். பாராளுமன்றத்தில் அமைச்சர்களால் கொண்டுவரப்படும் மசோதாக்களைத் தயாரிப்பவர்களும் சிவில் ஊழியர்களேயாவர். அம்மசோதாக்கள் வெற்றியுடன் சட்டமாவதற்கான சகல உதவிகளையும் அவர்கள் அமைச்சர்களுக்கு வழங்குகிறார்கள். இங்ஙனம் உண்மையான நிருவாகப் பணியை சிவில் சர்வீஸ் மேற்கொண்டாலும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு முடிவான பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் அமைச்சர்களே என்பதும் ஈண்டு கருதற்பாற்று.

சிவில் சர்வீஸ் கட்டுப்பாடுகள் - சிறப்பியல்புகள்

சிவில் சர்வீஸ் என்பது இங்கிலாந்தின் நிரந்தர நிருவாக நிறுவனமாக (Permanent Executive) விளங்குகிறது. ஆனால், அதன் தலைவர்களாக வருகின்ற அமைச்சர்கள் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை குணத்திலும் கொள்கையிலும் மாறிக் கொண்டேயிருப்பவர்கள். எனவே, அவர்களின் கொள்கைகளை நடைமுறையிற் செயற்படுத்துகின்ற சிவில் சர்வீஸ் நிறுவனத்தார் ஒரு சில விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குவது இன்றியமையாததாகிறது. அத்தகைய கட்டுப்பாடுகளே ஆங்கில சிவில் சர்வீஸின் சிறப்பியல்பாகத் திகழ்கிறது.

சிவில் சர்வீஸ் உறுப்பினர்கள் அரசியலில் கலந்துகொள்ளக் கூடாதென்பதும், அரசியலில் அவர்கள் நடுநிலைமை (Political

Neutrality) வகிக்க வேண்டுமென்பதும் இங்கிலாந்தில் யாவரும் ஒப்புக்கொண்டுள்ளதோர் மரபாகும். நிருவாக அதிகாரிகளும் ஊழியர்களும் எந்தக் கட்சிக்கும் அடிமை ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தத்தம் துறைகளில் பெற்றுள்ள அநுபவ அறிவு அரும் பொக்கிஷமாகும். அது எல்லாக் கட்சி களுக்கும் பொதுவானது. எந்தக் கட்சி அரசாங்கத்தைக் கைப் பற்றுகிறதோ அக்கட்சிக்கு அவர்கள் தங்கள் மேலான ஆலோசனைகளைக் கூறி நிருவாக இயந்திரம் பழுதுபடாமல் காப்பாற்றவேண்டியது அவர்கள் பொறுப்பாகும். அதேசமயம் அவர்கள் ஆட்சிபீடத்தே அமர்ந்திருப்பது எந்தக் கட்சியே ஆனாலும் அந்த ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் அவர்கள் விசுவாசமாக இருக்க வேண்டுமேயல்லாது எந்தக் கட்சிக்கும் அவர்கள் விசுவாசமாக இருக்கக் கூடாது. நிருவாக ஊழியர்கள் இதனால் கொள்கை யற்றவர்களாக இருக்கவேண்டுமென்பது பொருளல்ல. அவருக்கு ஒரு சில கொள்கைகளில் நம்பிக்கை இருக்கலாம். ஆனால், அவர் அதை வெளிப்படையாகச் செயலில் காட்டக்கூடாது; அதை அவர்கள் தமக்குள்ளாக வைத்துக்கொள்ள வேண்டும். அதை நாட்டுக்குகந்த கொள்கையாயிருந்தால் அவற்றை அமைச்சர் களுக்கு அவர்கள் எடுத்துக்கூறலாம். அரசாங்கம் கடைப் பிடிக்கின்ற கொள்கையில் தவறு இருப்பதாகத் தெரிந்தால் அதை அவர்கள் அமைச்சர்களுக்கு எடுத்துக் காட்டலாம். அரசாங்கத்துக்குப் பிடிக்காத கருத்துகளைத் தெரிவிக்கின்ற நிருவாக அதிகாரிகளை அரசாங்கம் வேலையைவிட்டு நீக்குவ தென்பது இங்கிலாந்தில் நடவாத காரியம். அதேசமயம் தனது கொள்கையை விடாப் பிடியாகப் பற்றிக்கொண்டு அரசாங்கத் தின் அல்லது அமைச்சர்களின் முடிவான கொள்கைகளுக்குப் பணிந்து போகாமலிருக்கும் நிருவாக ஊழியர்களையும் இங்கிலாந் தில் காண்பதரிது. கட்சி வேறு அரசாங்கம் வேறு என்பது அங்கே நன்கு உணரப்படுகிறது. எனவே, ஆட்சிபீடத்திலமர்ந் திருக்கும் கட்சிக்கு ஒருவர் விசுவாசமாயில்லை என்பதற்காக வேலையைவிட்டு நீக்கப்படுவதில்லை; அவர் நாட்டுக்கு அல்லது அரசுக்கு விரோதமானவர் என்று தெரிந்தால் மட்டுமே அவரது பணியினின்றும் அகற்றப்படுவார். கம்யூனிஸ்ட் கட்சி, பாஸிஸ்ட் கட்சி (Fascist Party) ஆகியவற்றின் கொள்கைகளை ஆதரிப்பவர் கள், நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்த அலுவல்களினின்றும் அகற்றப்பெறுவது, அவர்களின் கொள்கைகளுக்காக அல்ல; நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்ததேயாகும்.

சிவில் சர்வீஸ் உறுப்பினர்கள் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாது என்ற மரபில், நவீன காலத்தே ஓரளவு நெகிழ்ச்சி

காணப்படுகிறது. ஒரு மிலியன் சிவில் ஊழியர்களில் சுமார் 700,000 பேர்கள் மீது இத்தகைய தடைகள் எதுவுமே இல்லை. சுமார் 280,000 பேர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெற்று அரசியலில் கலந்துகொள்ளலாம். ஏறக்குறைய 120,000 பேர் மத்திய அரசாங்கத்தைப்பற்றிய அரசியலில் கலந்து கொள்ள அநுமதிக்கப்படுவதில்லை. எனினும் தல ஆட்சியைப் பொறுத்த அரசியலில் கலந்துகொள்ள அவர்கள் அநுமதிக்கப்படுகிறார்கள். அங்ஙனம் கலந்துகொள்ளும்போது அவர்கள் மிதமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதும், யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசக்கூடாதென்பதும், யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளதோர் வழக்காறு ஆகும். தேர்தல்களில் எல்லா சிவில் ஊழியர்களுக்கும் வாக்குரிமை உண்டு. தங்கள் வாக்குகளை எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் அவர்கள் அளிக்கலாம். ஆனால், தேர்தல் வேட்பாளர்களாக அதாவது பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்தல்களில் அவர்கள் நிற்க முடியாது. தேர்தல்களில் நிற்பது தவிர வேறு வழிகளில் அவர்கள் மிதமாக அரசியலில் பங்கு பெறலாம். சிவில் சர்வீஸ் சங்கங்கள் அரசியல் கட்சிகளின் சார்பாக இயங்கலாமா கூடாதா என்பதும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாட்டை உண்டாக்கியுள்ளது. 1927ஆம் ஆண்டில் ஏற்பட்ட தொழிற்சங்கச் சட்டப்படி (Trade Union Act) சிவில் ஊழியர்கள், கட்சித்தொடர்புகொண்ட தொழிற்சங்கங்களில், அதாவது அரசாங்க ஊழியர்களல்லாதவர்கள் இடம் பெற்றுள்ள சங்கங்களில் உறுப்பினர்களாவதைத் தடுத்தது. இதுமுறையன்று என்பது தொழிற்கட்சியின் வாதம். எனவே, இரண்டாம் உலகப் போருக்குப்பின் அது ஆட்சிக்கு வந்தபோது முதல் வேலையாக அத்தகைய தடையை அது ரத்து செய்தது. இங்ஙனம் சுயேச்சையுடன் சிவில் சர்வீஸ் சங்கங்கள் விளங்கினாலும் அவைகள் நடைமுறையில் கட்சித்தொடர்பின்றி நடுநிலையிலேயே செயல்படுகின்றன.

தொழில் தகராறுகளைத் தீர்க்கப் பொதுமக்கள் சபையின் முன்னாள் தலைவர் விட்லி என்பார் ஒரு திட்டம் வகுத்தார். அதை விட்லியிஸம் என ஆங்கிலேயர் அழைப்பர். அதன்படி தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள் ஆகிய இருசாராரின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுத் தொழிற் கவுன்சில்கள் (Joint Industrial Council) மூலமே தொழில் தகராறுகள் தீர்க்கப்பட வேண்டும். கூலி, வேலை நேரம் ஆகியவற்றை அவைகளே தீர்மானிக்க வேண்டும். தனியார்த்துறை தொழில்களில் முதன் முதலில் கடைப்பிடிக்கப்பட்ட இக்கொள்கையை இன்று சிவில் அரசாங்க ஊழியர்களின் சங்கங்களும் கடைப்பிடிக்கின்றன.

சிவில் சர்வீஸ் துறைகள் பலவற்றுள் நிதித்துறை அல்லது கருவூலத்துறையே தலைமையான நிலையை வகிக்கிறது. சிவில் சர்வீஸ் உறுப்பினர் எல்லோருடைய ஊதியம், கட்டுப்பாடு, பதவியுயர்வு போன்ற பல்வேறு முக்கிய விஷயங்களை எல்லாம் இத்துறையே கண்காணித்துக் கட்டுப்படுத்துகிறது. நாட்டின் வருவாயையும் செலவையும் அதுவே வரையறுக்கிறது. பொருட் செலவு சம்பந்தமான நடவடிக்கை எதுவானாலும் இத் துறையின் அநுமதியைப் பெற்ற பின்பே நடைமுறைப்படுத்தப்படவேண்டு மென்பது நன்கு நிலைபெற்றுவிட்டதோர் மரபாகும். நிருவாகத் துறை எதுவாயினும் அது அத்துமீறிய செலவுகளில் ஈடுபடு மானால் அதைத் தடை செய்யும் உரிமை நிதித்துறைக்கு உண்டு.

சிவில் சர்வீஸைக் கட்டுப்படுத்தும் இன்னொரு நிறுவனம் சிவில் சர்வீஸ் கமிஷன் என்பதாகும். 1855ஆம் ஆண்டில் தோற்று விக்கப்பட்ட இந்நிறுவனம் ஆண்டிலும் அநுபவத்திலும் முதிர்ந்த அறிஞர்களைக் கொண்டது. போட்டித்தேர்வுகள் நடத்தி பல்வேறு பணிகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பெரும்பணியை அது செய்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களின் ஊதியம், பதவியுயர்வு, ஒழுங்குமுறை பற்றிய எந்தக் காரியத்தையும் அதனால் கட்டுப்படுத்த இயலாது. வெவ்வேறு துறைகளுக்கு வெவ்வேறு தேர்வு முறைகளைச் சர்வீஸ் கமிஷன் கடைப்பிடிக் கிறது. சிவில் ஊழியர் ஒருவர் செய்யும் ஒரு காரியத்துக்கு முடிவான பொறுப்பை ஏற்கவேண்டியவர் அமைச்சரேயாவார். ஆனால், அவ்வமைச்சரோ தாம் தலைமை வகிக்கும் துறையைப் பற்றிய அநுபவம் சிறிதுமற்ற அரசியல்வாதியாயிருப்பார். அநேகமாக அவர் தமது நிருவாக அதிகாரிகளின் ஆலோசனைப் படியே நடப்பார். ஒரு துறையில் ஒரு சிறு தவறு ஏற்பட்டுவிட்டா லும் அதை எதிர்க்கட்சிக்காரர்கள் பாராளுமன்றத்தில் மிகப் பெரி தாக எடுத்துக்காட்டி ஆளும் கட்சியைத் தாழ்வுபடுத்த முயற்சிப் பர். எனவே, சிவில் சர்வீஸ் உறுப்பினர்கள் தங்கள் பணிகளில் தவறு நேராதிருக்கும்படி விழிப்பாயிருக்க வேண்டியவர்களாகின் றனர். அதனால்தான் அரசாங்க அலுவல்பற்றிய ஒரு கட்டு (File) அமைச்சரின் மேஜைக்கு வருமுன் பல பேர்களிடம் அது செல்ல வேண்டியதாகின்றது. அதனால் காலதாமதம் (Red Tapism) ஏற்படுகிறதென்பதென்னவோ உண்மைதான். ஆனால், தவறுகள் அநேகமாக ஏற்படாது. வேறு பல நன்மைகளைப் பார்க்கும்போது சிவில் ஊழியர்களின் காலந்தாழ்த்துங் கொள்கையை நாம் அதிகம் கண்டிப்பதற்கில்லை.

குறைகள் சீர்திருத்தம்

இன்றைய பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் குறைகளே இல்லாத நிறைவுபெற்ற நிறுவனம் என்று சொல்லிவிட முடியாது.

ஏனெனில், ஏறக்குறைய ஒரு நூற்றுண்டு காலமாக அதில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ட்ரெவெல்யான்-நார்த்கோட் குழுவினரின் சிபாரிசுகளுக்கேற்பச் சீர்திருத்தப்பட்ட சிவில் சர்வீஸ் இன்று பழங்கால நிறுவனமாகக் காட்சியளிக்கிறது. மாறிவிட்ட சூழ்நிலைக்கேற்ப அதை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பேராசிரியர் பிரியான் சேப்மன் (Brian Chapman), சி. எச். சிஸ்ஸன் (C. H. Sisson) போன்ற அறிஞர்கள் வற்புறுத்தி யுள்ளனர். இன்றைய நிருவாக நிறுவனமானது அரசியல் தலையீடின்றி நன்கு திறமையுடன் நடைபெற்று வருகிறதே எனினும், மாற்றமில்லாத காரணத்தால் அதன் உயிரூட்டம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகிறது.

சிவில் சர்வீஸ் ஊழியர்கள் எதற்கெடுத்தாலும், அதற்கு முன் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை ஆதாரமாகக் காட்ட முற்படுகின்றுர் கள். முன்நிகழ்வு ஆதாரமில்லாமல் புதிதாக ஒரு காரியத்தைச் செய்ய அவர்கள் தயங்குகிறுர்கள். பலதரப்பட்ட மக்கட் சமுதா யத்தின் பல்வேறு தேவைகளைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. பொதுமக்களும், அவர்களை எளிதில் நெருங்க முடிவதில்லை. நெருங்கிறுலும் அவர்களிடம் மரியாதையாக முகங் கொடுத்துப் பேசி அவர்களுக்கு உண்மையான உதவி புரிய எந்த நிருவாக ஊழியரும் முற்படுவதில்லை. இயந்திரம் போல் அவர்கள் தங்களுக்கு முன்பிருந்தோர் சென்றவழியில் செல்ல விரும்புகின் றுர்கள். கற்பனை ஊற்றே, புதியனவற்றைத் தொடங்கும் துணிவோ அவர்களிடம் சிறிதும் காணப்படுவதில்லை. மேலதி காரிகள் மேல் எதற்கெடுத்தாலும் பொறுப்பை ஏற்றிவிட்டுத் தாங்கள் தப்பித்துக்கொள்ளவே ஒவ்வொருவரும் பார்க்கிறுர்கள். காரியங்களை எவ்வளக்கெவ்வளவு ஒத்திப்போட முடியுமோ அவ்வளவுக்கு ஒத்திப்போட அவர்கள் முயற்சிக்கிறுர்கள். விரை வாக அவர்கள் காரியங்களைக் கவனிப்பதில்லை. ஒரே காரியத் தைப் பலபேர் அநாவசியமாகச் செய்துகொண்டு மனித சக்தியை விரயம் செய்கிறுர்கள். சிவில் சர்வீஸின் அமைப்புமுறை சரியில்லை; அதில் பொருளும் மனிதசக்தியும் சேமிக்கப்படுவதில்லை. இயற்கை யான திறமையுள்ளவர்கள் வேகமாக முன்னேற முடிவதில்லை. வயது தளர்ந்து திறமை குன்றிய பின்னரே அறிவாளிகள்கூடப் பதவியில் உயர முடிகிறது; உற்சாகமும், துணிவும், ஆக்கச் சிந்தனையுமுள்ள இளைஞர்கள் மேலான உத்தியோகங்களுக்குப் போக முடிவதில்லை. நிருவாக அதிகாரிகள் பலர் பொதுவான அறிவு கொண்டவர்களே அன்றி, அவரவர் பணிபுரியும் துறைக்குத் தேவையான சிறப்பறிவும், சிறப்புப் பயிற்சியும், சட்ட அறிவும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்; சிறப்பறிஞர்கள்

(Specialists) குறைவாகவும், பொது அறிஞர்கள் (Generalists) மிகுந்தும் இன்றைய நிருவாகத் துறையில் காணப்படுகின்றனர்; நிருவாகத் தலைவர் ஒருவர் எந்தத் துறைக்கு வேண்டுமானாலும் மாற்றப்படலாம் என்ற கருத்து வேரூன்றி விட்டது. பொது அறிவு மிக்க அரசியல்வாதிகள் பல்வேறுவகை அமைச்சர்களாக அமைந்துவிடுவது சாதாரணமாக நடைமுறையாகிவிட்டது. சான்றாக, சர்ச்சில் என்ற அறிஞர் குடியேற்ற நாடுகளின் அமைச்சராகவும், வாணிகக் குழுவின் தலைவராகவும், கடற்படைத் தலைமைப் பிரபுவாகவும், போரமைச்சராகவும், நிதியமைச்சராகவும், தலைமையமைச்சராகவும் பல பதவிகளில் பணியாற்றியுள்ளார்! இங்ஙனம் பல குறைகள் சிவில் சர்வீஸில் இருப்பதாகப் பலர் கூறுகின்றனர். ஒருசிலர் இங்கிலாந்தின் ஆட்சியை அநுபவ மற்றோரின் ஆட்சி (Government by Amateaurs) என்று பழிக் கின்றனர்.

இத்தகைய குறைகளை எல்லாம் ஆராய்ந்து அவற்றைக் களைவதற்கான சிபாரிசுகளைச் செய்யும்படி ஃபுல்டன் கமிட்டி (Fulton Committee) என்ற ஒரு குழுவை ஆங்கில அரசாங்கம் சமீபத்தில் நியமித்தது. அக்குழுவின் சிபாரிசுகள் (1968) மிகப் பரந்த தன்மையுடையவை. அவற்றில் பலவற்றை இன்றைய வில்சன் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. சிவில் சர்வீஸ் இலாகா என ஒரு புதிய துறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அதன் தலைவர் பிரதமரின் நேரடியான கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்பதும் அச்சிபாரிசுகளுள் ஒன்று கும். அதன்படியே இன்றைய வில்சன் சர்க்கார் சிவில் சர்வீஸ் இலாகா ஒன்றை ஏற்படுத்தி அதற்கு ஸர் வில்லியம் ஆர்ம்ஸ்டிராங் (Sir William Armstrong) என்பவரைத் தலைவராக நியமித்துள் ளது. அத்தலைவர் பிரதமரோடு நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும். நிருவாகத்துறையினர் கருவூலத்துறைத் தலைவரோடு முதலில் தொடர்பு கொள்ள வேண்டிய மரபு இப்போது கைவிடப் பட்டுள்ளது. பிரதமரே இப்போது சிவில் சர்வீஸ் நிறுவனத்தை இயக்குபவராயும் கட்டுப்படுத்துபவராயும் விளங்குகிறார். தமக் குக் கீழுள்ள எல்லா அமைச்சர்களின் துணையைக்கொண்டே அவர் இப்பணியைச் செய்கிறார். எனவே, நிருவாக காரியங் கள் துரிதமாயும் திறமையாயும் நடைபெறுகின்றன. அதில் முன்பெல்லாமிருந்ததுபோல் ஒளிவு மறைவுக்கு அதிகம் இட மில்லை. எல்லாம் வெளிப்படையாயும் குறைந்தபட்ச ஆட்களைக் கொண்டும் நடைபெறுகின்றன. மற்றும் சிவில் சர்வீஸுக்கு வேண்டிய ஆட்களைப் பொறுக்கி எடுக்கும் சர்வீஸ் கமிஷன் குழுவானது இப்போது பிரதமரின் ஆணைக்குள் கொண்டுவரப்

பட்டுள்ளது. சிவில் சர்வீஸ் உறுப்பினர்களைப் பரிபாலிக்கின்ற நிறுவனமும் (Personnel Management Department) பிரதமருக்கே கட்டுப்பட்டுள்ளதாதலால், ஆட்களைப் பொறுக்கும் குழுவினருக்கும் பொறுக்கப்பட்ட ஆட்களைக் கண்காணிக்கும் குழுவினருக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்பட்டுள்ளது. ஒன்றின் தேவைக்கேற்ப இன்னொன்று செயல்பட இதனுல் வசதி ஏற்பட்டுள்ளது.

சிவில் சர்வீஸுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில், எந்தத் துறைக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிருரோ அந்தத் துறையில் அவர் வல்லுநராயிருக்க வேண்டுமென்ற கொள்கையை ஃபுல்டன் கமிட்டி வற்புறுத்தியுள்ளது. வெறும் பல்கலைக்கழகப் படிப்பறிவு மட்டுமின்றி அந்தந்தத் துறைகளைப் பற்றிய சிறப்பறிவும் சிறப்புப் பயிற்சியும் நிருவாக ஊழியர்களுக்குத் தேவை என்பதைக் கமிட்டி வற்புறுத்தியுள்ளது. ஒரு துறையில் சிறந்த அறிவும் பயிற்சியுமுடையவர்களைத் தற்காலிகமாக, வெளியேயிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது குறிப்பிட்ட பணியை முடிப்பதற்கோ நியமிக்கலாமெனவும், அதன்பின் அவர்கள் பழைய தொழிலுக்கே போய்விடலாமெனவும் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. சிவில் சர்வீஸில் நுழையும் பட்டதாரிகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து அவர்களை அந்தந்தத் துறைக்குத் தகுதியானவர்களாக மாற்ற ஒரு சிவில் சர்விஸ் கல்லூரி நிறுவப் படவேண்டுமென்பதும் கமிட்டியின் சிபாரிசுகளிலொன்ருகும். ஏற்கெனவே சர்வீஸில் இருப்பவர்களுக்கும் அவ்வப்போது அக் கல்லூரியில் குறுகியகாலப் பயிற்சி அளிக்கப்படலாமென்றும், சிவில் சர்வீஸ் பணிகளைப்பற்றி அங்கு ஆராய்ச்சிகள் நடத்தப்படலாமெனவும், ஆராய்ச்சியில் காணப்படுகிற புதிய உண்மைகளை நடைமுறையில் கொண்டுவரலாமென்றும் அது யோசனை தெரிவித்துள்ளது. இதை வில்சன் சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டது. புட்னி (Putney) என்னுமிடத்தில் அத்தகைய கல்லூரி நிறுவப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிவில் சர்வீஸ் துறையில் காணப்படுகின்ற பலவகையான ஏற்றத் தாழ்வுகளும் பாகுபாடுகளும் ஒழிக்கப்படவேண்டுமெனவும் பதவியுயர்வுக்கு ஒரே படித்தரமிருந்தால் (Single Grading Structure) போதுமென்றும் அது கூறியுள்ளது. தகுதிக்கேற்றபடியும் திறமைக்கேற்றபடியும் நேராக ஒருவர் முன்னேற்றமடைய அத்தகைய முறை பயன்படுமென்று கருதப்படுகிறது.

ஒரு துறையில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் இல்லாதவர்கள் அதற்குத் தலைவராக இருக்கின்ற முறையை அக்கமிட்டி பெரிதும் கண்டிக்கிறது. நிருவாகத்துறைத் தலைவர்கள், அத்துறையில் முதிர்ந்த அறிவுடைய நிபுணர்களை எப்போதும், தம் அருகே வைத்

துக் கொள்ளவேண்டுமென்றும், அமைச்சர்கள் தங்கள் கொள்கைகளை வகுப்பதில், கொள்கை ஆலோசகர் (Policy Adviser) ஒருவருடைய உதவியைப் பெறுவதவசியம் என்றும் அஃது கூறுகிறது. அரசியல், பொருளியல் துறைகளில் நிபுணர்களின் சேவையை நாடு பெறவேண்டுமென்பதற்காகத் தனியார் துறைத் தொழில்களிலிருந்து சிவில் சர்வீஸுக்கும், சிவில் சர்வீஸிலிருந்து தனியார் நிறுவனங்களுக்கும் பேரறிஞர்கள் செல்லலாமென்ற கமிட்டியின் சிபாரிசை வில்சன் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனுல் தனியார் துறைக்கும் அரசாங்கத்துறைக்கும் போட்டி ஏற்படவும், அப்போட்டியின் விளைவாகத் திறமை மலரவும், அதனுல் நாடு நலம் பெறவும் வழி ஏற்படுகின்றது. இளவயதில் ஆக்கச்சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ள அறிவியல் நிபுணர்கள் வயது முதிர்ந்தபின் ஆட்சித்துறை அதிகாரிகளாக நியமிக்கப்பட இத் திட்டம் வழி செய்கிறது. இங்ஙனம் ஆங்கிலேயர் அரசாங்கப் பணிகளில் புத்துணர்ச்சியையும், புதிய ஆற்றலையும் புகுத்தத் தங்களாலான முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிருர்கள்.

7. கட்சிமுறை வளர்ச்சி (Growth of Party System)

பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை (Parliamentary Democracy) நன்கு வேரூன்றிவிட்ட இங்கிலாந்தில் கட்சிகள் சிறந்ததோர் இடத்தைப் பெறுகின்றன. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள கட்சியே தனது பிரதிநிதிகளான அமைச்சர்கள் மூலம் நாட்டை உண்மையில் ஆள்கிறது. அரசர் பெயரளவிற்கு மட்டுமே ஆட்சி புரிகின்ருர். ஆட்சியைக்கைப்பற்றி அரசரின் பெயரில் நாட்டை ஆளும் கட்சி ஒரோவழித் தவறு செய்யின் அதை மக்களுக்கு எடுத்துக்காட்டவும், அவசியமானுல் அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றவும் தகுந்த பக்குவமுடைய எதிர்க்கட்சி ஒன்றும் இங்கிலாந்தில் ஓர் இன்றியமையாத நிறுவனமாகிவிட்டது. நாட்டின் பிரதமருக்கு எவ்வளவு மதிப்பிருக்கிறதோ அவ்வளவு மதிப்பு எதிர்கட்சித் தலைவருக்கும் அங்கே இருக்கிறது. 'மேன்மைதங்கிய அரசியாரின் எதிர்க்கட்சித் தலைவர்' (Her Majesty's Opposition Leader) என்று அவர் கண்ணியமாக அழைக்கப்படுவதோடு அரசாங்கத்திடமிருந்து ஊதியமும் பெறுகின்ருர். இங்ஙனம் இரு கட்சி ஆட்சி முறை (Two Party System) இங்கிலாந்தில் நன்கு நிலைபெற்றுவிட்டது. கன்சர்வேடிவ் கட்சி, தொழிற்கட்சி ஆகிய இரு கட்சிகளே மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றுகின்றன. தாராளக் கட்சி (Liberal Party) போன்ற சிறிய கட்சிகள் சமயம்போல் பெரும்பான்மைக் கட்சிகளோடு சேர்ந்துகொள்கின்றன.

கட்சி வளர்ச்சிக்குக் காரணம்

ஆரம்பத்தில் இங்கிலாந்தில் கட்சிகள் என்று எவையும் இருக்கவில்லை. ஏனெனில், அரசரே தம் விருப்பம்போல் நாட்டை ஆண்டுவந்தார். அரசரை ஆதரிப்போர், எதிர்ப்போர் என்ற இரு கூட்டத்தார் முதலாம் சார்லஸ் காலத்தில் தோன்றினர். ஆனால், அவர்கள் திட்டவட்டமான அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டு விளங்காததால் கட்சிகள் என்ற பெயர் அவைகளுக்குப் பொருந்தாது. இரண்டாம் சார்லஸ் காலத்தில், அவரது சகோதரர் யார்க் கோமகனை அரியணையிலிருந்து விலக்கி வைக்கப் பாராளுமன்றம் விலக்கு மசோதாவைக் (Exclusion Bill) கொணர்ந்தபோதுதான் கட்சிகள் முதன்முதலில் அரும்பின. விலக்கு மசோதாவைத் தடுக்க சார்லஸ் பாராளுமன்றத்தைக் கூட்டாமல் ஒத்திப்போட்டுக் கொண்டே வந்தபோதுதான், பாராளுமன்றக் கூட்டத்தை அரசர் கூட்டவேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டவர்கள் 'விண்ணப்பதாரர்கள்' என்றும் (Petitioners), அங்ஙனம் அரசரை வற்புறுத்துவதை வெறுத்த இராஜ விசுவாசிகள் 'வெறுப்பாளர்கள்' (Abhorrers) என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் நாளடைவில் பாராளுமன்ற இறைமையை வற்புறுத்திய விக்குகளாகவும் (Whigs) அரசரது தனியாட்சியை ஆதரித்த டோரிகளாகவும் (Tories) மாறினர். அவர்கள் நாளடைவில் முற்றிலும் மாறுபட்ட கருத்துகளை வற்புறுத்த ஆரம்பித்தார்கள். அரசியலில் வரையறையற்ற பரம்பரைக் கோனாட்சியை டோரிகளும், பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட கோனாட்சியை விக்குகளும் ஆதரித்தனர். பொருளாதாரத் துறையில் தடையற்ற வாணிகக் கொள்கையை (Laissez Faire) விக்குகளும், பாதுகாப்புக் கொள்கையை (Protection) டோரிகளும் வற்புறுத்தினர். சமயத்துறையில் ஆங்கிலகத் திருச்சபையை டோரிகளும், சமயப்பொறைக் கொள்கையை (Toleration) விக்குகளும் ஆதரித்தனர்.

மன்னர்களின் ஆதிக்கம் குன்றாமலிருந்தவரையில் கட்சிகளின் தேவை நாட்டுக்கு அவ்வளவாக இல்லை. ஆனால், 1688ஆம் ஆண்டுக்குப் பிறகு மன்னர்கள் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டே நடக்கலாயினர். வில்லியமும், ஆன் இராணியாரும் பொது மக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சிகளாக இருந்த விக்கு, டோரிக் கட்சிகளிலிருந்தே அநேகமாகத் தமது அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்தனர். அதன் பின்னர் 1714இல் ஹனோவரியர்கள் பட்டத்துக்கு வந்தபின்னர், மொழி தெரியாத காரணத்தால் அவர்கள் அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டங்களுக்குப் போவதை நிறுத்திக்கொண்டு அவர்களுக்கு ஏராளமான உரிமை

களை வழங்கிவிட்டதன் காரணமாகக் கட்சிகளின் முக்கியத்துவம் பெருகலாயிற்று. பொது மக்கள் சபையில் பெரும்பான்மையாக இருந்த விக்குக் கட்சியே அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கட்டுப்படுத்த ஆரம்பித்தது. விக்குக் கட்சியில் இருந்த ஒரு சில பணக்காரர்கள் லஞ்சம், பதவி, பட்டம் இவற்றை வழங்குவதன் மூலம் தமது செல்வாக்கைப் பாராளுமன்றத்திலும், நாட்டிலும் வளர்த்துக் கொண்டனர். பின்னர் டோரிகளும் அதே முறையைக் கையாள ஆரம்பித்தனர். ஆனால், 1832ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாராளுமன்ற சீர்திருத்தச் சட்டத்துக்குப் பின் வாக்காளர் தொகை பெருகி விட்டது. லஞ்சம் கொடுத்து வாக்காளரை விலைக்கு வாங்குவதென்பது முடியாத காரியமாகப் போய்விட்டது. ஒரு சில கொள்கைகளை மக்கள்முன் வைத்து அவர்களது பரவலான ஆதரவைப் பெறக் கட்சிகள் முன்வரலாயின. நாடெங்கும் சென்று தமது பணிகளைச் செய்ய அவை பொருள் திரட்டவும், கிளைக் கழகங்களை அமைக்கவும் ஆரம்பித்தன. டோரிகள் கன்சர்வேடிவ்களாகவும், விக்குகள் லிபரல்களாகவும் மாறி அமைந்தனர். நாளடைவில் தொழிலாளர்களும் வாக்குரிமை பெற்றனர். தொழிற் சங்கங்கள் வளர்ந்தன. எனவே, தொழிலாளர்களின் நலன்களைப் பேணத் தொழிற் கட்சி ஒன்று நாட்டில் தோன்றலாயிற்று. இங்ஙனம் ஒரு கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும், அங்ஙனம் ஆட்சி பீடத்திலமர்ந்துவிட்ட கட்சியின் கொடுங்கோன்மையினின்று ஏனைய கட்சியினர் தங்களைக் காத்துக்கொள்வதற்கும், கட்சி அமைப்பு முறை நாட்டில் இன்றியமையாத தொன்றாகி விட்டது.

கன்சர்வேடிவ் கட்சியின் வளர்ச்சி

பாராளுமன்றத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற கிளர்ச்சி நாட்டில் வலுத்த பின்னர்தான் டோரிகள், கன்சர்வேடிவ் கட்சியாகவும், விக்குகள், லிபரல் கட்சியாகவும் மாறினர். கன்சர்வேடிவ் என்ற சொற்றொடரை முதன்முதல் பயன்படுத்தியவர் ஜான் வில்சன் குரோக்கர் (John Wilson Croker) எனும் அறிஞராவர். 1830ஆம் ஆண்டில் 'குவார்ட்டர்லி ரெவ்யூ' (Quarterly Review) எனும் சஞ்சிகையில் அவர் அச்சொல்லை முதன்முதலில் எடுத்தாண்டார். பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா சட்டமாக நிறைவேறிய பின் அச் சொல் நன்கு வழக்காற்றுக்கு வந்துவிட்டது.

கன்சர்வேடிவ் கட்சியினரின் ஆதி முன்னோர்களாகக் கருதப்படத் தக்கவர்கள் முதலாம் சார்லஸ் காலத்து அவரை ஆதரித்த காவலியர்களாவர் (Cavaliers). அவர்கள் டோரிகள் என (அயர்லாந்து நாட்டுக் கத்தோலிக்க கொள்ளைக்காரர்கள்) பாராளுமன்

றத்தவர்களால் கேலியாக அழைக்கப்பட்டனர். பாராளுமன்றத்தவர்களை அவர்கள் விக்குகள் (ஸ்காட்லாந்து நாட்டு பிரஸ்பிடீரிய மலைவாழ் முரட்டு வகுப்பினர்) என அழைக்கலாயினர். 1714ஆம் ஆண்டிலிருந்து விக்குக் கட்சியினர் நாட்டை ஆண்டு வந்தபோது டோரிகள் எதிர்க்கட்சியாக நின்று அரசாங்கத்தின் ஊழல்களைக் கண்டித்து வந்தனர். இறுதியில் 1770ஆம் ஆண்டில் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றி 1830ஆம் ஆண்டுவரை நாட்டை ஆண்டனர். அதன் பின்னர் பாராளுமன்ற சீர்திருத்தத்தை ஆதரித்த விக்குகள் ஆட்சி பீடத்தமர்ந்தனர். அச்சமயத்தில்தான் சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) என்பார் கன்சர்வேடிவ் கட்சியை நன்கு உருவாக்கினர். 1824ஆம் ஆண்டிலேயே கானிங் எனும் அமைச்சர் கன்சர்வேடிவ் என்ற பெயரை டோரிக் கட்சிக்குச் சூட்டினரெனினும், அதை நன்கு விளம்பரப்படுத்தியவர் பீல் என்பாரே ஆவார். 1834இல் அவர் வெளியிட்ட 'டாம்வொர்த் தேர்தல் அறிக்கை'யில் (Tomworth Manifesto) கன்சர்வேடிவ் கட்சியின் புதிய கொள்கைகளை விளக்கினர். பழைய நிறுவனங்களை அப்படியே தொழுவதென்பது அக்கட்சியின் கொள்கையல்லவென்றும், பழையனவற்றில் இருக்கும் குறைகளைக் களைந்து, குணங்களைப் பாதுகாப்பதே அதன் குறிக்கோள் என்றும் அவர் அறிவித்தார். அதன் பின்னர் அவர் தானியச் சட்டத்தை (Corn Laws) ரத்து செய்ய முயன்றபோது கட்சியில் பிளவு ஏற்பட்டது. பீலை ஆதரித்தோர் பீலைட்டுகள் என்றும், லிபரல்கள் என்றும் பிரிந்தனர். மறுபடியும் டிஸ்ரேலி காலத்தில் கன்சர்வேடிவ் கட்சி நன்கு வலுப்பெற்றது. பாராளுமன்றச் சீர்திருத்தத்தை அது ஆதரிக்க முன்வந்தது. 1867ஆம் ஆண்டில் இரண்டாம் பாராளுமன்றச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர்கள் கன்சர்வேடிவ் கட்சியினரேயாவர். அச் சட்டத்தின் விளைவால் வாக்காளர் தொகை பன்மடங்கு அதிகரித்தது. எனவே, மக்களிடம் தனது ஆதரவைப் பெருக்க, கன்சர்வேடிவ் கட்சி தன்னை நன்கு வலுப்படுத்திக் கொண்டது. நாட்டின் பல பகுதிகளில் தனித்தனியாக இயங்கி வந்த தேர்தல் தொகுதிக் கழகங்கள் (Constituency Assemblies) யாவும் 1867ஆம் ஆண்டில் ஒரே தேசீய கன்சர்வேடிவ் கட்சியாக (National Conservative Party) அமைக்கப்பட்டது. 1870இல் அதற்கென்று ஒரு மத்திய அலுவலகமும் லண்டனில் ஏற்பட்டது. இதன்பின் இக்கட்சிப் பிரமுகர்கள் நாட்டில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர். ஐரிஷ் சுயாட்சியை ஆதரிக்காத லிபரல் கட்சியினர் இக்கட்சியில் சேர்ந்து யூனியனிஸ்ட் (Unionists) கட்சி ஒன்றை உருவாக்கினர். ஆனால், 1922இல் அயர்லாந்து சுயேச்சை நாடாக அறிவிக்கப்பட்டபின் மீண்டும் கன்சர்வேடிவ் கட்சி தனது பழைய உருவில் வெளிவந்தது. ஜோஸப் சேம்பர்

லின் என்பார் கொணர்ந்த காப்புவரிக் கொள்கையை (Tariff Reform) ஆதரிக்காதார் சிலர் கட்சியிலிருந்து நீங்கினர். காப்பு வரியை ஆதரிப்பவர்கள் திரண்டு ஒரே கன்சர்வேடிவ் கட்சியாக நின்று ஒற்றுமையுடன் பணியாற்றலாயினர். பிரிட்டிஷ் பேரரசு கலையாமல் இருக்க வேண்டுமென்பதும், அரசர், பிரபுக்கள் சபை, நாட்டின் ஆங்கில திருச்சபை ஆகியவைகள் மாறாமல் பாதுகாக்கப் பட வேண்டுமென்பதும் அவர்கள் கொள்கைகளாகும். பழமையைப் பாதுகாக்க விரும்பும் இக்கட்சிக்குப் பணம் படைத்த பிரபுக்களும், இராணுவ அதிகாரிகளும், உயர் நடுநிலை வகுப்பாரில் பலரும், பெண்களில் பாதிக்கு மேற்பட்டவர்களும் பெரிதும் ஆதரவு தருகின்றனர்.

கன்சர்வேடிவ் கட்சியின் அமைப்பு

கன்சர்வேடிவ் கட்சிக்கு நாடெங்கும் கிளைகள் உள்ளன. அவை தேர்தல் தொகுதிக் கழகங்கள் (Constituency Associations) எனப் படும். அவை யாவும் மத்திய யூனியன் கட்சிக்குக் கட்டுப்பட்டவை. அதன் ஏவலுக்கேற்பவே தேர்தல் பிரசாரம் செய்தல், தேர்தல் களில் நபர்களைப் பொறுக்கி நிறுத்துதல் முதலிய காரியங்களில் அவை ஈடுபடும். அவற்றின் நிருவாகக் கமிட்டி (Executive Committee) உறுப்பினர்கள் அங்கங்கே தேர்ந்தெடுக்கப் படுகிறார் கள். மத்திய நிருவாகக் கமிட்டியின் உறுப்பினர்களிற் பலர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சிலர் நியமிக்கப்படுகிறார்கள். கட்சி யின் முக்கிய பிரதிநிதிகள் சேர்ந்து கட்சித் தலைவரைத் தேர்ந் தெடுப்பர். கட்சி பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையினதாக இருந்தால், கட்சித் தலைவரே பிரதமராக ஆவார். அவர் சொற் படியே கட்சித் தலைவர், அலுவலர் ஆகியோர் நியமிக்கப்படுவர். தேர்தல் பிரசாரத்தின் தன்மையையும் அவரே வகுப்பவர். கட்சிப் பிரசாரத்துக்காக ஏராளமான பணம் சேர்க்கப்படுகிறது. ஆனால், கட்சியின் கணக்குகள் இரகசியமாகவே வைக்கப்படுகின்றன. கட்சிக்கு ஆதரவாக நாட்டில் 1500க்கும் மேற்பட்ட கன்சர்வேடிவ் சமூக சங்கங்கள் (Conservative Clubs) இருக்கின்றன. கட்சிக் கூட்டம் ஆண்டுக்கொருமுறை நடைபெறுகிறது. கட்சியின் தலைவர் தனித் தலைமை வாய்ந்தவர். அரசர் யாரைப் பிரதமராக நியமிக்கிறாரோ அவரையே கட்சித் தலைவராக (Leader) ஏற்றுக் கொள்ளும் மரபை இக்கட்சியினர் கடைப்பிடிக்கின்றனர்.

லிபரல் கட்சியின் வளர்ச்சி

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் ஒரு தனிப் பெருங் கட்சியாகத் திகழ்ந்த விக்குக் கட்சியே நாளடைவில் லிபரல் கட்சி என அழைக்கப்பட்டது. முதலில் 1714ஆம் ஆண்டிலிருந்து

1762 வரையும், இரண்டாவதாக 1830-லிருந்து 1874 வரையும், மூன்ருவ்தாக 1906-லிருந்து 1918 வரையும் இக் கட்சி நாட்டில் ஒரு பலம்பெற்ற கட்சியாகவும், ஆளும் கட்சியாகவும் விளங்கியது. வால்போல், ஃபாக்ஸ், பாமர்ஸ்டன், கிளாட்ஸ்டன் ஆஸ்க்வித், லாயிட் ஜார்ஜ் போன்ற பெருந்தலைவர்களை இக்கட்சி தோற்றுவித்துள்ளது. அரசியலமைப்பு மாற்றப்படக் கூடாது என்று கூறிவந்த டோரிகளுக்கு எதிராக, அரசியல் அமைப்பும், அரச பதவியும், மற்றப்படி எந்த நிறுவனமுமே மாற்றப்படத் தக்கவையே என்றும், மக்களின் நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டு அவற்றை மாற்றுவதே முறை என்றும் விக்குகள் கூறினர். பாராளுமன்றத்தின் இறைமை, சமுதாய சீர்திருத்தம், தாழ்த்தப் பட்டவர்களின் நிலையில் உயர்வு, தடையற்ற வாணிகக் கொள்கை, சமயப்பொறை முதலிய தாராளக் கொள்கைகளை அவர்கள் ஆதரித்தனர். ஆனால், சில சமயங்களில் ஏகாதிபத்தியக் கொள்கை (Imperialism), சமய ஒறுப்புக் கொள்கை போன்ற பிற்போக்குக் கொள்கைகளையும் அவர்கள் ஆதரித்துள்ளனர். எனினும், பொதுவாகக் குடிமக்களின் தன்னுரிமை, சொத்துரிமை, இவற்றைக் காப்பதையும், மக்களிடையே இருக்கும் ஏழ்மை, அறியாமை, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றைப் போக்குவதையுமே இக்கட்சி தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆனால், இக் கொள்கைகளை எல்லாம் ஏனைய கட்சிகளும் ஏற்றுக் கொண்டு விட்டதால் லிபரல் கட்சி இன்று ஒரு சிறுபான்மைக் கட்சியாக மாறிவிட்டது. 1957ஆம் ஆண்டில் ஐந்து லிபரல்களே பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர்.

லிபரல் கட்சியின் அமைப்பு

ஏனைய கட்சிகளைப் போன்றே இக் கட்சிக்கும் மத்தியக் கழகமும், கிளைக் கழகங்களும் இருக்கின்றன. மத்தியக் கழகம், தேசிய லிபரல் கூட்டுக் கழகம் (National Liberal Federation) என அழைக்கப்படுகிறது. ஆண்டுக்கொரு முறை கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. அக்கூட்டத்தில்தான் கட்சி அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கட்சியின் கொள்கையையும், தேர்தல் நடவடிக்கைகளையும் அதுவே தீர்மானிக்கும். அத் தீர்மானங்களுக்கேற்ப தேர்தல் தொகுதி கிளைக் கழகங்கள் (Constituency Parties) செயல்படும். கட்சியை நிருவகிக்கக் காரியக் கமிட்டி ஒன்று உள்ளது. அதில் சில அதிகாரிகளும், தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களும் இடம் பெறுகின்றனர். இக் கட்சியின் உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் செல்வந்தர்களோ தொழிலாளர்களோ அல்லர். நடுத்தர வகுப்பினரில் சிலரே இதில் அதிகம் பங்கெடுத்துக் கொள்கின்றனர். மொத்தத்தில் எதிலும்

அவ்வளவாக உற்சாகமற்ற ஒரு கூட்டத்தினராகவே இன்றைய லிபரல் கட்சியினர் விளங்குகின்றனர்.

தொழிற் கட்சி (Labour Party)

தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடும் இக் கட்சியானது இன்று இங்கிலாந்தின் மாபெருங் கட்சியாகவும், ஆளுங் கட்சியாகவும் விளங்குகிறது. தொழிற் சங்கங்களிலிருந்து (Trade Unions) முளைத்ததே தொழிற் கட்சியாகும். ஆதியில் தொழிற் சங்கங்கள் சட்ட விரோதமானவைகளாகக் கருதப்பட்டன. ஒன்றுகூடல் சட்டங்களின்படி (Combination Laws) தொழிலாளர்கள் ஒன்றுபடுவது கிரிமினல் குற்றமாக மதிக்கப்பட்டது. அத்தகைய சட்டங்கள் 1825ஆம் ஆண்டில்தான் ஒழிக்கப்பட்டன. அப்போதிருந்து முக்கியமான தொழில்களில் வேலை பார்த்தோர் அனைவரும் முதலாளிகளோடு வாதாட, தங்களுக்கெனச் சிறு சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர். 1867, 1884ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்களின்படி, ஏராளமான தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்றனர். எனவே, தொழிலாளர் சங்கங்கள் தமது பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்ப முயற்சித்தன. அதன் விளைவாக 1874ஆம் ஆண்டில் இரண்டு தொழிலாளர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொழிற் சங்கங்கள் நாளுக்கு நாள் வலிமையடைந்துகொண்டே சென்றன. திறமைமிக்க தொழிலாளர்களேயன்றி (Skilled Workers) சாதாரணத் தொழிலாளர்களும் அவற்றில் இடம் பெற்றனர். சமதர்மவாதிகள் (Socialists) அதில் நுழைந்தனர். 1884ஆம் ஆண்டில் ஃபேபியன் கழகம் ஒன்று (Fabian Society) நடுத்தர வகுப்பு அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் தொழிலாளர்கள் இடம்பெற வேண்டுமென அக் கழகம் வற்புறுத்தியது. தொழிலாளர்களுக்கென ஒரு தனிப்பட்ட கட்சி 1893ஆம் ஆண்டில் கேர் ஹார்டி (Keir Hardie) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. அது சுயேச்சையான தொழிற்கட்சி (Independent Labour Party) என அழைக்கப்பட்டது. 1899ஆம் ஆண்டில் கூடிய தொழிற்சங்கக் காங்கிரஸால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்துக்கேற்ப, பாராளுமன்றத்துக்குத் தொழிற்சங்க உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை ஆராய்வதற்காகப் பல்வகையான தொழிலாளர் சங்கங்களும் தத்தம் பிரதிநிதிகளை ஒரு தனிப்பட்ட கூட்டத்துக்கு அனுப்பி வைத்தன. அக் கூட்டத்தைக் கூட்டுவதற்காக ஜார்ஜ் பெர்னட்ஷா, கேர் ஹார்டி, ராம்சே மாக்டனல்டு ஆகியோரடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர்களது முயற்சியால் தொழிற் சங்கங்கள், சமதர்மக் கழகங்கள் ஆகியவைகளிலிருந்து தேர்ந்

தெடுக்கப்பட்ட 129 பிரதிநிதிகள் லண்டனில் ஒன்றுகூடி தொழிலாளர் பிரதிநிதித்துவக் கழகங்கள் குழு (Labour Representation Committee) ஒன்றை ஏற்படுத்தினர். அதுவே நாளடைவில் தொழிற்கட்சி எனப் பெயர் பெற்றது. ரா்ம்சே மாக்டனல்டு அதன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக் குழுவில் 41 தொழிற் சங்கங்களும், சுயேச்சையான தொழிற்கட்சியும், சமுதாய ஜனநாயகக் கூட்டுக் கட்சியும், ஃபேபியன் கழகமும் இடம் பெற்றிருந்தன. சமுதாய ஜனநாயகக் கூட்டுக் கட்சி (Social Democratic Federation) 1881ஆம் ஆண்டில் எச். எம். ஹிண்ட்மேன் (H. M. Hindman) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. மார்க்ஸீயக் கொள்கைகளை ஓரளவு பின்பற்றும் கட்சி இங்கிலாந்தில் இது ஒன்றேயாகும். ஃபேபியன் கழகத்தவர்கள் நல்ல அறிவாளிகள். ஜார்ஜ் பெர்னார்ட்ஷா (George Bernardshah), ஸிட்னி வெப் (Sydney Webb) போன்றவர்கள் அதன் உறுப்பினர்களாவர். கேர் ஹார்டியால் தோற்றுவிக்கப்பட்ட சுயேச்சையான தொழிற்கட்சி லட்சியவாதிகளை உட்கொண்டது. தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழுவில் இம்மூன்று கட்சிகளும் பெரும் பங்கெடுத்துக் கொண்டன. ஆனால், அதில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தொழிற்சங்க இயக்கத்தைச் சேர்ந்தவர்களேயாவர். அவர்களே கட்சிக்குத் தேவையான பொருளைச் சேகரித்துத் தந்தனர். 1917ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கட்சி (Co-operative Party) என்ற ஒரு தனிக் கட்சி தோன்றி கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவைப் பெற்று வளர்ந்தது. 1927இல் அதுவும் தொழிற்கட்சியில் கூட்டு சேர்ந்துகொண்டது. 1955ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் கூட்டுறவுக் கட்சி 38 பேர்களைத் தேர்தலில் நிறுத்தி வைத்தது. அவர்களில் 19 பேர் வெற்றிபெற்றனர். இங்ஙனம் இன்றைய தொழிற்கட்சியானது சமதர்மக் கழகங்கள், கூட்டுறவுக் கழகம், தொழிற்சங்கங்கள், தேர்தல் தொகுதிக் கிளைக் கழகங்கள், மத்தியக் கழகம் ஆகியவைகளின் உறுப்பினர்கள் யாவரையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

தொழிற்கட்சி சமதர்மக் கொள்கையில் (Socialism) ஆழ்ந்த நம்பிக்கை கொண்டது. போக்குவரத்துச் சாதனங்கள், பாங்குகள், முக்கிய தொழில்கள் யாவும் தேசீயமயமாக்கப்படவேண்டுமென்பது அதன் குறிக்கோளாகும். அதனால் தனிப்பட்டவர்களிடம் செல்வம் குவியாமல், சமுதாயத்தில் பரவலாக அது சென்றடையும் என்பது அதன் வாதமாகும். தொழில்களைத் தேசீய உடைமையாக்கும்போது பலவந்தம் சிறிதும் இருக்கக்கூடாதென்பதும் பாராளுமன்ற முறைகளில் மெல்லமெல்ல அவைகள் அரசாங்

கத்தால் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதும் அதன் கொள்கையாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின், ஆட்சியைக் கைப்பற்றிய தொழிற்கட்சி, எ.ஃகு, நிலக்கரி, ரயில்வே முதலிய முக்கியத் தொழில்களைத் தேசிய உடைமையாக்கியது, இக் கொள்கையின் அடிப்படையிலாகும். சர்வ தேசீயத் துறையில் அமைதியை நிலைநாட்டுவதே அதன் கொள்கையாகும். குடியேற்ற நாடுகள் சுயேச்சை பெற்று பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் பிரிட்டனுடன் சமமான இடம்பெற வேண்டுமென்பதும் அதன் குறிக்கோளாகும். இத்தகைய குறிக்கோளின் விளைவாகத்தான் தொழிற்கட்சியைச் சேர்ந்த அட்லி சர்க்கார் இந்தியாவுக்கு **1947**ஆம் ஆண்டில் சுதந்திரத்தை வழங்கினர். இன்றைய வில்சனின் தொழிற்கட்சி ஆட்சியில் அநேகமாக எல்லா குடியேற்ற நாடுகளும் சுயேச்சை பெற்றுவிட்டன.

தொழிற்கட்சியின் அமைப்பு

தொழிற்கட்சியின் மிகச்சிறிய உறுப்பாக இருப்பது தேர்தல் தொகுதி ஒவ்வொன்றிலும் இருக்கும் கிளைக்கழகமாகும். இவைகள் கட்சியின் சொந்த உறுப்புகளாகும். இவற்றின் உறுப்பினர்கள் கட்சியின் தனிப்பட்ட உறுப்பினர்களாவர். இவைகளேயன்றி, கட்சியோடு இணைந்த அல்லது கூட்டுச் சேர்ந்த கழகங்களும் பல இருக்கின்றன. தொழிற் சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள், சமதர்மக் கழகங்கள் ஆகியவை அத்தகைய கூட்டுக் கட்சிகளாகும். தனிப்பட்ட முறையில் கட்சி உறுப்பினராயிருப்பவர்கள் மாதம் ஒன்றுக்கு ஆறு சென்டுகளும், கூட்டுச் சேர்ந்த கட்சிகளின் உறுப்பினர்கள் (Affiliated Association) ஆண்டு ஒன்றுக்கு மூன்று சென்டுகளும் சந்தா செலுத்த வேண்டும். ஒவ்வொரு தேர்தல் தொகுதிக் கட்சியும், தேசீயக் கட்சிக்கு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஆண்டென்றுக்கு ஆறு சென்ட் வீதம் சந்தா வழங்குகிறது. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் கட்சிக் கூட்டம் மாதமொருமுறை நடைபெறும். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு நிருவாகக் குழு உண்டு. அதன் உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் உறுப்பினர்களாலும், கூட்டுசேர் கட்சிகளின் உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். மத்திய செயற்குழு ஒன்றும் ஆண்டுக்கொரு முறை இங்ஙனமே தேர்ந்தெடுக்கப்படும். தேர்தல் தொகுதிகளைச் சார்ந்த கட்சிகளே பாராளுமன்றத்துக்கும், தல ஆட்சி மன்றங்களுக்கும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும். தேர்தல் பிரசாரம், தேர்தல் போட்டிகள் ஆகியவற்றை நடத்துபவையும் அவைகளே. அவைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களை மத்திய நிருவாகக் குழு அங்கீகரித்த பின்னரே, அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும்.

கட்சி அமைப்பைக் கவனித்துக்கொள்ள முழு நேர வேலையாட்கள் பலர் உள்ளனர்.

ஆண்டுதோறும் கூடும் கட்சி மாநாடுதான் கட்சியின் தனித்தலைமை பெற்ற நிறுவனமாகும். அதில்தான் தேசிய நிருவாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். கட்சியின் கொள்கைகளை வகுப்பதும் அதுவே. பாராளுமன்ற இருசபையிலும் இடம்பெற்றுள்ளவர்கள் யாவரும் பாராளுமன்றத் தொழிற் கட்சியைச் (Parliamentary Labour Party) சேர்ந்தவர்கள். அவர்களே கட்சித்தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

கட்சியின் வரவுசெலவுக் கணக்குகள் ஆண்டுக்கொருமுறை வெளியிடப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் கட்சியின் நாணயத்தை ஐயப்பட வழியில்லை. பாராளுமன்றத் தொழிற் கட்சியானது சுயேச்சை வாய்ந்தது. கட்சியின் மையக் குழு அதனைக் கட்டுப்படுத்த இயலாது. எனினும், குழுவின் ஆலோசனை களைப் பாராளுமன்றக் கட்சி கண்டிப்பாகச் செவிமடுக்கும். பலாத்காரப் புரட்சியில் கட்சி நம்பிக்கை கொண்டதல்ல. மெள்ள மெள்ள ஏற்படும் சீர்திருத்தங்களில்தான் அதற்கு நம்பிக்கை உண்டு. கையாலும் மூளையாலும் உழைக்கும் எல்லாத் தொழிலா ளர்களும் தங்களது உழைப்புக்கேற்ற ஊதியம் பெறவேண்டுமென் றும், நாட்டின் செல்வம் எல்லா வகுப்பாரிடையேயும் சமமாகப் பிரிக்கப்படவேண்டுமெனவும், அதற்காக உற்பத்தி விநியோகம், நாணயமாற்று (Exchange) போன்ற துறைகள் தேசிய மயமாக்கப் படவேண்டும் என்பதுவே கட்சியின் முக்கியக் கொள்கைகளாகும்.

கட்சி உறுப்பினர்களிற் பெரும்பான்மையோர் சாதாரண நடுத்தர வர்க்கத்தவரும், தொழிலாளர்களுமேயாவர். அவர்களில் இருவகையினர் உண்டு. ஒரு வகையினர் சாதாரண உழைப்பாளி கள். அவர்கள் படிப்பறிவு அதிகமில்லாதவர்கள். ஆனால், கட்சிக்கு ஓயாது உழைப்பதன்மூலம் முன்னுக்கு வருபவர்கள். இரண்டாம் வகையினர் நன்கு படித்துப் பட்டம் பெற்றவர்கள். ஆசிரியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், பத்திரிகை ஆசிரியர் களாகவும் இருந்து தம் அயரா முயற்சியால் முன்னேற்றமடைந்த வர்கள். பொதுவாக எல்லோருமே நல்ல உழைப்பாளிகள். அவர் களிற் பெரும்பான்மையோர் ஆடவர்களேயாவர்.

மார்க்ஸீயக் கொள்கையுடைய ஒருசிலர் தொழிற்கட்சியிலும் இருக்கின்றனர் என்பது உண்மையேயெனினும், பொதுவாகத் தொழிற்கட்சி மார்க்ஸின் கொள்கைகளை, முக்கியமாக அவரது வர்க்கப் போராட்டக் கொள்கையையும் (Class War), பலாத்காரக்

கொள்கையையும் ஏற்றுக்கொள்வதில்லை. மார்க்ஸின் வர்க்கப்போராட்டக் கொள்கையை ஒப்புக்கொள்ளாவிடினும், நடைமுறையில் தொழிற்கட்சி அதைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக் கம்யூனிஸ்டுகள் தங்களது இரண்டாவது சர்வதேசக் கூட்டத்தில் (Second International Conference) தொழிற்கட்சிக்கு இடமளித்தனர். ஆனால் நாளடைவில் கம்யூனிஸ்டுகளுக்கும் தொழிற்கட்சிக்கும் இருந்த உறவு முறிந்துபோயிற்று. 1920ஆம் ஆண்டில் லெனின் (Lenin) என்பாரின் ஆலோசனைப்படி பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று தனியாகத் துவக்கப்பட்டது. அதே ஆண்டில் தொழிற்கட்சியில் கூட்டுசேர அது விண்ணப்பித்தது. ஆனால், தொழிற்கட்சி அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. 1920ஆம் ஆண்டிலிருந்து பல முறை இத்தகைய விண்ணப்பங்கள் தொழிற் கட்சியின் ஆண்டு இறுதிக் கூட்டத்துக்கு வந்துள்ளன. ஆனால், ஒவ்வொருமுறையும் அவைகளைத் தொழிற்கட்சிக் கூட்டமானது பெரும்பான்மை வாக்குகளால் நிராகரித்துக் கொண்டே வருகிறது.

கட்சி முறையின் நன்மை தீமைகள்

ஜ[illegible]யகத்தில் கட்சிமுறை தேவையில்லை என்பது சிலரது வாதமாகும். கிரேக்க நாட்டு நகர அரசுகளில் (City States) கட்சி முறை இல்லாமலேயே நேர்முக ஜனநாயகம் (Direct Democracy) நன்கு நடைபெற்று வந்துள்ளதென்றும் திறமைமிக்க அறிஞர்கள் அரசாங்கத்தை நடத்துவதாலேயே மக்கள் நலம்பெற முடியுமேயன்றி, ஒரு கட்சியினர் அல்லது ஒரு சில கட்சியினர் நாட்டை ஆள்வதென்பது அவ்வளவு முக்கியமானதல்லவென்றும் அவர்கள் கூறுகின்றனர். அவர்களின் வாதப்படி, கட்சிகள் நாட்டு மக்களின் ஒற்றுமையைக் குலைத்துவிடுகின்றன. மகன் தந்தைக்கும், அண்ணன் தம்பிக்கும் விரோதமாகக் கட்சிகளில் சேர்ந்து கொண்டு போட்டிபோடக் கட்சிமுறை வழிவகுக்கிறது. சிலசமயங்களில் வெவ்வேறு கட்சிகளை ஆதரிப்பதால், கணவன் மனைவிக்குள்ளேயே மனக்கசப்பு ஏற்பட்டு விடுகின்றது. அதனால் குடும்ப உறவே கெட்டுப்போகிறது. மனிதனைக் காழ்ப்புணர்ச்சியும் பொறுமையும் கொண்டவனாகக் கட்சி மாற்றிவிடுகிறது. கட்சி நலனையே ஒவ்வொருவரும் கருதுகிறார்களே அன்றி நாட்டு நலனை யாரும் பெரிதாக மதிப்பதில்லை.

கட்சிகள் மக்களது சுதந்திர ஆக்கச் சிந்தனையைக் குலைத்துவிடுகிறது. கருத்து வெளியீட்டுரிமையைக் கெடுத்துவிடுகிறது. ஒரு கட்சியில் சேர்ந்தவன் அக் கட்சியின் கொள்கை தனக்குப் பிடிக்காவிடினும் பேசாமல் அதைப் பின்பற்றுகிறான். எதிர்த்துப் பேசினால் கட்சியிலிருந்து தான் விலக்கப்படநேரும்; அதனால்

தனது எதிர்காலம் இருண்டு போகும் எனக் கட்சி உறுப்பினர்கள் பயப்படுகிருர்கள். கட்சியில் சேராமல் இருப்பவனை வெளவால் கட்சியினன் என்றும் பைத்தியக்காரன் என்றும் எல்லோரும் பழிக்கின்றனர். எனவே, நாட்டுக்கு நல்லனவற்றைக் கட்சிகளுக்கு விரோதமாக எடுத்துச் சொல்லவும் அறிஞர்கள் அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

கட்சியில் சேருகிறவர்கள் தங்கள் சுயேச்சையை இழந்து விடுகிருர்கள். கட்சிக் கட்டுத்திட்டங்களுக்கு அடிமைகளாகி விடுகிருர்கள். மறந்தும் அவர்கள் தங்கள் கட்சியைப் பழிக்க ஒருப்படார். கட்சியின் பெயரை நிலைநாட்ட அவர்கள் கட்சியின் குறைகளை மறைப்பர். குணங்களை மிகைப்படுத்துவர். மற்றும் தேர்தலில் வெற்றி பெறவேண்டி அவர்கள் உண்மைக்குப் புறம்பானதையும் நடைமுறைக்கு ஒவ்வாததையும் கூறி மக்களை ஏமாற்றப் பார்ப்பர். எனவே, கட்சிகள் நாட்டில் பொய்பேசுவதை ஒரு கலையாக ஆக்கிவிடுகின்றன. நேர்மை பலியிடப்படுகிறது. வெளிவேஷமும் கபடநாடகமும் வளர ஏதுவாகின்றது. அரசியலில் அது ஒழுக்கத்தையே கெடுத்துவிடுகிறது.

மற்றும் கட்சிகள் சுயநலமிக்க ஒருசில சந்தர்ப்பவாதிகளுக்கும் அரசியல் சூதாட்டக்காரர்களுக்கும், ஆவேசப் பேச்சால் மக்களை மயக்கும் ஏமாற்றுக்காரர்களுக்கும் முன்னுக்கு வர நல்ல வாய்ப்புகளை அளித்துவிடுகின்றன. கூவுவதற்கு ஒவ்வொரு கோழியும் ஒரு குப்பைமேட்டைத் தேடிக்கொள்வதுபோல், ஒவ்வொரு சந்தர்ப்பவாதியும் ஒரு கட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிருன். அத்தகைய சுயநலமிகளைக் கண்டுபிடித்துக் கட்சியிலிருந்து வெளியேற்றுமுன் அது முடியாதபடி அவர்கள் கட்சியில் பெரிதும் பலமடைந்துவிடக்கூடும்.

கட்சிகள் துணிவுமிக்க அறிவாளிகளை ஆதரிப்பதில்லை. சாதாரண ஆமாஞ்சாமிகளே அவற்றில் இடம் பெறுகின்றனர். எனவே, பேரறிவாளர்களின் சேவை நாட்டுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. இதனுல் மிகச்சாதாரணமானவர்கள் ஆட்சியை நடத்தவும், அறிவுமிக்கவர்கள் அவர்களுக்கு அடங்கி நடக்கவும் வழி ஏற்பட்டுவிடுகிறது.

மற்றும் பல்வேறு கட்சிகளுக்குள்ளுமுள்ள வேறுபாடுகள் மிகக் குறைவேயாகும். பிரைஸ் பிரபு (Lord Bryce) என்பார் கூறுவது போல, பிரிட்டிஷ் கட்சிகள் வெவ்வேறு பெயர் எழுதி ஒட்டப்பட்டுள்ள காலிபுட்டிகளேயாகும்.

ஒரு கட்சி ஆட்சி பீடத்திலமர்ந்திருக்கும்போது, அடுத்த தேர்தலில் எப்படி வெற்றி பெறுவது என்ற நோக்கத்திலேயே காரியங்களைச் செய்யுமேயன்றி நாட்டுக்கு உருப்படியான நிலைத்த நன்மைகளைச் செய்ய முன்வராது.

கட்சிகளின் எண்ணிக்கை இரண்டுக்கு மேற்பட்டுப்போனால் அரசாங்கம் நிலையாக இருக்கமுடியாது. அடிக்கடி அமைச்சரவை மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஃபிரான்சு போன்ற நாடுகளில் இப்படி அடிக்கடி அமைச்சரவை மாறுவதைப் பார்க்கின்றோம்.

இவ்வாறெல்லாம் கட்சிமுறையைச் சிலர் குறைகூறுகின்றனர். இருப்பினும், இன்றைய ஜனநாயகத்தில் கட்சிமுறையைத் தவிர வேறுமுறை அதைவிட உயர்ந்ததாயிருப்பதாகத் தென்படவில்லை. தனி மனிதர்களது சுதந்திரம் ஒரு கூட்டத்தினரின் செல்வாக்குக்காகப் பலியிடப்படுவதென்பது ஓரளவு உண்மைதான். கட்சிமுறை நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கிறது என்பதும், கட்சிக் கண்ணோட்டமின்றி நாட்டின் நற்பெரு மக்கள் சேர்ந்து நாட்டு நலத்தைக் குறிக்கோளாகக்கொண்டு நாட்டையாண்டால் நலமாயிருக்கும் என்பதும் ஓரளவு ஒப்புக்கொள்ளக்கூடியதேயாகும். எனினும், குடிமக்கள் தங்களை ஆட்சி புரிவோர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் கட்சி முறையே அவ்வளவாக அபாயமற்றதொன்றாகும். தனிப்பட்ட மனிதர்களை அவ்வளவு எளிதில் மக்கள் எடைபோட முடியாது. மேலும் தேர்தலின்போது நல்லவனாக நடித்துவிட்டுப் பின்னர் ஆட்சி தன் கைக்கு வந்தவுடன் ஒருவன் கொடுங்கோலனாக மாறிவிடலாம். ஆனால், அவனே ஒரு கட்சியைச் சேர்ந்திருந்தால், அவன் கட்சிக் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டே நடப்பான் என்று எதிர்பார்க்கலாம். அப்படி நடக்காவிட்டால், கட்சியே பார்த்து அவனை நீக்கிவிடும். நாட்டு மக்கள் கட்சிக்கு வாக்களித்தால் போதும். தனிப்பட்ட மனிதர்களைப் பற்றி அவர்கள் அவ்வளவாகக் கவலைப்பட வேண்டியதில்லை. கட்சிமுறை ஒன்றால்தான் இது சாத்தியமாகும்.

ஜனநாயக நாட்டில் உள்ள கட்சிகளின் கட்டுப்பாடுகள் வேண்டத்தக்கவைகளேயாகும். கட்சி ஆள்கள் தான்தோன்றித்தனமாய் நடக்காமலிருக்கவே அவை உதவுகின்றன. யதேச்சாதிகார நாடுகளில்தான் ஒரே கட்சி கொடுங்கோன்மை புரியவும், மக்களின் நியாயமான உரிமைகளை நசுக்கவும் முடியும். ஜனநாயக நாட்டில் கருத்து வெளியீட்டுரிமை இருக்கிறது. ஒருவர் தமது கருத்துகளைத் தெளிவாகக் கூறி மற்றவர்களையும் தனக்கேற்ப மாற்றலாம். மாற்றமுடியாவிட்டால் பெரும்

பான்மையோர் விருப்பப்படி நடப்பதே முறை. அதுவும் விருப்பம் இல்லையாயின் கட்சிகளிலிருந்து விலகிக்கொண்டு தனிமனிதனுக நின்று கருத்துகளை நூல்கள், செய்தித்தாள்கள் மூலம் வெளியிட்டு மக்கள் மனத்தை மாற்றவும் ஜனநாயகத்தில் வழி இருக்கிறது.

ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையே ஒரு தொடர்பும், பரஸ்பரக் கட்டுப்பாடும் கட்சிகளின் மூலமே நாட்டில் ஏற்படக்கூடும். மக்கள் யாவரும் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதென்பது பரந்துவிரிந்து கிடக்கும் இக்கால நாடுகளில் முடியாதொன்று. எனவே, நாட்டை யாள்கின்ற பொறுப்பை யாரிடமாவது ஒப்படைப்பது அவசியமாகிறது. அப்படி ஒப்படைக்கும்போது, எத்தகையோரிடம் அத்தகைய பொறுப்பை அளிக்கிறோம் என்பதை மக்கள் அறிந்துகொள்ளக் கட்சிகள் உதவிபுரிகின்றன. தேர்தலின்போது, ஒவ்வொரு கட்சியினரும் மக்கள் முன்னிலையில் மக்களது நலனை வளர்ப்பதற்காகத் தாங்கள் கொண்டிருக்கும் கொள்கைகள் என்ன என்பதை எடுத்துக் கூறுகின்றனர். நாட்டு நலனை வளர்க்கப் பல வழிகள் இருப்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அவற்றில் எவ்வழி ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நல்லது என்பதை மக்கள் அறியக் கட்சிகள் தான் உதவிபுரிகின்றன. அதனுற்றுன் கட்சிகளைக் 'கருத்துகளின் தரகர்கள்' (Brokers of Ideas) என லோவல் (Lowell) எனும் ஆசிரியர் அழைக்கின்ருர். இங்ஙனம் ஐந்தாண்டுகளுக்கொருமுறை ஆளநினைப்போர் ஆளப்படுவோரிடம் சென்று அதிகாரத்தை இரக்கின்ற நிலை இன்றைய ஜனநாயகத்தில் காணப்படுகிறது. மக்கள் தம் பிரியப்படி ஒரு கட்சியைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் அதிகாரத்துக்கு வந்தபின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ருமல் போனுல், எதிர்கட்சி வாளா இருக்காது. மக்களும் சும்மா இருக்கமாட்டார்கள். எல்லோரும் சேர்ந்து அடுத்த தேர்தலில் வேரெுரு கட்சியிடம் அதிகாரத்தைக் கொடுத்துவிடுகிருர்கள். எனவே, ஆளும் கட்சி பொறுப்போடும் விழிப்போடும் நடந்துகொள்ளுமென்பதில் ஐயமில்லை.

அவ்வப்போதைய தேவைக்கேற்ற ஆட்சிமுறையை மக்கள் அடைய கட்சிமுறைதான் உதவி புரிகிறது. சான்ருக, இரண்டாம் உலகப்போரின்போது பிரிட்டிஷ் மக்கள் கன்சர்வேடிவ் கட்சியையும் அதன் தலைவர் சர்ச்சிலையும் ஆதரித்தனர். ஆனுல், போர் முடிந்த பின் நடைபெற்ற தேர்தலில், தொழிற்கட்சிக்கு மக்கள் பெருவாரியான வாக்குகளை வழங்கி விட்டனர். ஏனெனில், சமாதானம், உலக அமைதி, குடியேற்ற நாடுகளுக்கு

உரிமை வழங்கல் முதலியவைகளைக் கன்சர்வேடிவ் கட்சி ஆதரிக்காது என்பது அவர்களுக்குத் தெரியும்.

அரசியல் பிரச்சினைபற்றி ஒரேமாதிரியாக எண்ணுபவர்கள் எல்லோரும் ஒன்றுசேரவும், தாங்கள் ஒருமுகமாக ஒப்புக்கொண்ட ஒரு குறிப்பிட்ட கொள்கையின் அடிப்படையில் தேசீய நலனை வளர்க்க ஒன்ருகப் பாடுபடவும் கட்சிகள் துணைபுரிகின்றன என்பது பர்க் (Burke) போன்ற அறிஞர்களின் துணிவாகும். எனவே, பெரும்பான்மையான மக்களது கண்காணு ஆசைகள் யாவும், யாவருங் காணப் பேச்சு வடிவிலும், எழுத்து வடிவிலும், செயல் உருவிலும் வெளிப்படத் துணை செய்பவை கட்சிகளே யாகும். கட்சிகளே மேடைச் சொற்பொழிவு, ரேடியோ, செய்தித்தாள், சினிமா முதலிய சாதனங்களின்மூலம் பொதுமக்களுக்கு அரசியலறிவை ஊட்டி அவர்தம் பொதுக் கருத்தை உருவாக்குகின்றன. மக்கள் முன்னிலையில் அரசியலை ஒரு நாடகம்போல் நடித்துப் புரிய வைப்பவை கட்சிகளேயாகும்.

மற்றும், கட்சிகள் நாட்டு நிருவாகத்தில் ஓர் ஒருமையை வளர்க்கின்றன. ஒரு கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் அது தனது கொள்கையைத் திட்டவட்டமாகக் கூறுவதால், நிருவாகத்துறைகள் பலவும் அதற்கேற்ப செயல்பட ஆரம்பிக்கின்றன. எல்லாக் காரியங்களிலும் ஒரே கொள்கை ஊடுருவி நிற்கும். இல்லாவிடில், நிருவாக அதிகாரிகள் தம் பிரியம்போல் நடக்க முயற்சிப்பர். அதனுல் நாட்டு நிருவாகத்தின் தரமும் திறமையும் குறைந்து போகும்.

கட்சிகளின் ஒரு பகுதி, சட்டமன்றக் கட்சிகளாக அமைந்து சட்டங்கள் ஒரு கொள்கையினடிப்படையில் செவ்வனே அமையப் பெறவும் உதவி செய்கின்றன. சட்டத்தைக் கொணரும் அமைச்சர்களும், சட்டமன்றத்தின் பெரும்பான்மையினரும் ஒரே கட்சியினராக இருப்பதால் நாட்டு நலனுக்குகந்த சட்டங்கள் விரைவாக நிறைவேற வசதி ஏற்படுகிறது.

ஆளப்படுவோர் சதா விழிப்போடு இருக்கவும், ஆளுங் கட்சியைக் கண்டிக்கவும், அரசியலறிவைக் கற்றுக்கொள்ளவும், தக்கவர்களைத் தேர்ந்தெடுப்பதில் பயிற்சி பெறவும், தேர்தல்களின் போது, தங்களது இறைமையை வெளிப்படுத்தவும் கட்சிகளே உதவுகின்றன. எனவே, ஒருசில குறைபாடுகளிருப்பினும், ஜனநாயக வளர்ச்சிக்குக் கட்சிமுறையே, சிறப்பாக இருகட்சி முறையே பெரிதும் உகந்தது என்பது அறிஞர்கள் ஒப்ப முடிந்த ஒரு பெரும் உண்மையாகும்.

8 சட்டத்தின் இறைமை (Rule of Law) சிவில் உரிமைகள் (Civil Liberties)

இங்கிலாந்திலும் காமன்வெல்த் நாடுகளிலும் சட்டமே இறைமை பொருந்தியதாய் உள்ளது. சட்டத்தின் முன் யாவரும் சமமே. அரசராலுலும், குடிமகனுலும் யாவரும் நாட்டின் பொதுமைச் சட்டங்களுக்குக் (Common law) கட்டுப்பட்டவர்கள். சாதாரணப் பொது வழக்கு நீதிமன்றங்களில் அவர்கள் விசாரிக்கப் படலாம். சட்டத்தை மீறினனென்று ஒருவன் சாதாரண நீதி மன்றங்களால் நிரூபிக்கப்படாத வரை, அவனது உடலுக்கும் உடைமைக்கும் எவரும் தீங்கிழைக்க முடியாது. அப்படி நிரூபண மாகிவிட்டால், எத்தகைய பெரிய மனிதரிடமிருந்தும் நஷ்ட ஈட்டை ஒருவர் பெறலாம். இவ்விரண்டுமே சட்ட ஆட்சியின் பிரிக்க முடியாத பகுதிகள் என டைஸி (Dicey) என்னும் ஆசிரியர் கூறுகின்றார். ஃபிரான்சு, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் தனி மனிதர்களின் சிவில் உரிமைகள் அரசியல் திட்டத்திலேயே இடம் பெற்றுள்ளன. ஆனல், இங்கிலாந்திலோவெனில், நீதிபதி கள் சட்டங்களைப் பொருள் விளக்கம் செய்வதன் மூலம்தான் அவ் வுரிமைகள் காக்கப்படுகின்றன. நீதிபதிகள் நிருவாக அதிகாரி களின் கட்டுப்பாடு எதுவுமின்றிச் சுயேச்சையாகச் சட்டங்கட்குப் பொருள் கூறலாம். இதுவே சட்டத்தின் இறைமை எனப்படும்.

சட்டத்தின் இறைமை

சட்டத்தின் இறைமை செயற்படுகின்ற நாடுகளில், யாவருக் கும் பொதுவாக ஒரே சட்டமுறைமைதான் இருக்கும். ஃபிரான்சு போன்ற நாடுகளில் ஆளப்படும் குடிமக்களுக்கு வேருகவும், ஆளு கின்ற அமைச்சர்கள், சிவில் அதிகாரிகள் போன்றவர்களுக்கு வேருகவும் தனித்தனியான சட்டமுறைகள் உள்ளன. அச்சட்டங் களை அமுல்நடத்தத் தனித்தனியான நீதி நிறுவனங்களும் அங்கே உள்ளன. ஆனல், இங்கிலாந்தில் இருப்பது ஒரே சட்டம், ஒரே வகை நீதிமன்றங்கள். தற்காலத்தே தப்பு செய்யும் நிருவாக அதி காரிகளை விசாரிக்கப் பாராளுமன்ற ஆணையாளர் ஒருவர் (Parliamentary Commissioner) நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன் றம் தனிப்பட்ட ஆட்சித்துறை நீதிமன்றம் (Administrative Court) போன்று காட்சியளிக்கிறது. ஆனல், அது பாராளுமன்றச் சட் டத்தின்மூலமே அமைக்கப்பட்டது. எனவே, எந்தச் சமயத்திலும் அதை அகற்றிவிடப் பாராளுமன்றத்துக்கு உரிமை உண்டு. அப் படியேதான் நிருவாக நீதிமன்றங்கள் பல அமைச்சர்களின் தலை மையில் நீதி வழங்கி வருகின்றன. ஆனல், அவை யாவும் பாராளுமன்றத்தின் அனுமதியின் பேரில்தான் அத்தகைய அதி

காரத்தைச் செலுத்தி வருகின்றன. பாராளுமன்றம் பார்த்து வலிய ஒப்படைத்த நீதிவழங்கல் அதிகாரங்களையே அவை மேற்கொண்டுள்ளன. எனவேதான், அவை ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் (Delegated Powers) எனப்படும். ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்க அதிகாரமும் (Delegated legislation) இத்தகையதேயாகும். பாராளுமன்றத்தால் கொடுக்கப்பட்டுள்ள அதிகார வரம்பை அமைச்சர்கள் மீற முடியாது. எனவே, பாராளுமன்றமும் அதனுல் ஆக்கப்படும் சட்டங்களுமே இங்கிலாந்தில் இறைமை வாய்ந்தவை.

தனி மனித உடலுரிமையைக் (Personal liberty) காக்க இங்கிலாந்தில் ஹெபியஸ் கார்ப்பஸ் அல்லது உடலுரிமைக் காப்புச் சட்டம் (Habeas Corpus) இருக்கிறது. தக்க காரணங்களின்றித் தாக்கப்பட்டாலோ அல்லது சிறையிடப்பட்டாலோ ஒருவர் இச் சட்டத்தின் உதவியைக் கோரலாம். அரசாங்கத்தின் மீதும் ஒருவன் இச்சட்டப்படி வழக்குத் தொடரலாம். எனவே, காரணமின்றி அரசாங்கம் ஒருவனைக் காலவரையறையின்றி சிறையில் அடைத்து வைக்க இயலாது. உடனே தன்னை விசாரிக்கும்படி இச்சட்டத்தின் மூலம் குற்றவாளி அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தலாம். ஒருவனது பிரியமின்றி அரசாங்கம் ஒருவனை இராணுவத்திலோ, கடற்படையிலோ சேர்க்க உரிமையில்லை. பொதுமைச் சட்டப்படி யாரும், எவரையும் அடிமைப்படுத்த உரிமை கிடையாது. வாரன்ட் பிறப்பிக்காமல் அரசாங்கம் யாரையும் கைது செய்ய முடியாது. 1947இல் லீச்சின்ஸ்கி (Leachinskey) என்னும் வியாபாரியைத் திருட்டுப் பொருள்களை வைத்திருந்த குற்றத்திற்காக அரசாங்கம் வாரன்டின்றிக் கைது செய்தபோது, அது சட்டத்துக்கு விரோதமெனக் கூறி ஸ்காட் என்னும் நீதிபதி அவரை விடுதலை செய்தார்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத வரையில் பொதுக் கூட்டங்களைக் கூட்டும் உரிமையை யாவரும் அனுபவிக்கப் பொதுமைச் சட்டம் இடம் தருகிறது. உலகப் போரின்போது அரசாங்கத்துக்கு விரோதமாகப் பேசுபவர்களைத் தடுக்கச் சதித் கூட்டத் தடைச் சட்டம் (Seditious Meeting Act) ஒன்று ஏற்பட்டது. ஆனுல் இவ்விதச் சட்டங்கள் எல்லாம் தற்காலிகமானவையே. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மாஜிஸ்திரேட்டுகள்கூடக் கூட்டங்களைத் தடை செய்ய முடியாது. முதல் உலகப் போரின்போது ஃபாஸிஸ்ட்டுக்கள் (Fascists) தங்களுக்கு விரோதமான கூட்டங்களைக் கலைத்து வந்தனர். அங்ஙனம் எவரும் கூட்டங்களைப் பலவந்தமாகக் கலைப்பதைத் தடுக்க 1936இல் பொது அமைதிச் சட்டம் (Public Order Act) ஏற்படுத்தப்பட்டது.

கருத்து வெளியீட்டு உரிமை (Liberty of Press) இங்கிலாந்தில் நன்கு நிலைபெற்றுள்ளது. அரசாங்கத்தை அவதூறு செய்தல் (libel) அல்லது ஒருவரது நற்பெயரை வேண்டுமென்றே கெடுக்கும் முறையில் எழுதுதல் (defamation) போன்ற குற்றங்களுக்காக மட்டுமே ஒரு பத்திரிகையின்மீது வழக்குத்தொடர ஒருவரால் முடியும். அத்தகைய குற்றத்தை ஒருவர் செய்தாரா என்பதை ஜூரிகளே தீர்மானிக்கவேண்டும். 1919இல் ஏற்பட்ட போலீஸ் சட்டம் (Police Act) போலீஸ்காரரின் ராஜ விசுவாசத்தைக் குலைக்கக்கூடிய பிரசாரங்களைத் தடைசெய்தது. 1934இல் ஏற்பட்ட ஒரு சட்டம் படை வீரர்களிடையே அரசாங்கத்துக்கு விரோதமாக துர்ப்பிரச்சாரம் செய்வதைத் தடை செய்தது. அரசுக்கு விரோத மாக இரகசியங்களை எதிரிகளுக்கு வெளியிடும் அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் தண்டிக்க 1911இல் காரியாலய இரகசியங்கள் சட்டம் (Official Secrets Act) ஏற்பட்டது.

அரசாங்கத்துக்கு மனுச் செய்து கொள்ளும் உரிமையும் (Right of Petitioning) ஆங்கிலேயர் தொன்றுதொட்டு அனுப வித்து வரும் உரிமையாகும். அடிமை முறையை ஒழிக்கப் பல மனுக்களை 19ஆம் நூற்றுண்டில் மக்கள் அரசாங்கத்துக்கு அனுப் பினர். 20ஆம் நூற்றுண்டில் மக்கள் இம் முறையை அவ்வள வாகக் கையாள்வதில்லை. அவரவர் பிரியம்போல் தொழுகை நடத்தும் மத உரிமையும் யாவருக்குமிருக்கிறது. தடையின்றி உடைமைகளை அனுபவிக்கும் உரிமையானது (Right to Property), வாடகைக் கட்டுப்பாடு, வாரம் பற்றிய சட்டங்கள் (Tenancy Acts), மரண வரி (Death duty) போன்றவைகளால் ஓரளவு தடைப் படுகின்றது. ஆனால், ஒருவனுடைய வீடு, உடை, உடைமை ஆகிய வற்றை மற்றவர்கள் பறித்துக்கொள்ளாமல் காப்பது அரசாங் கத்தின் கடமையாகும்.

ஒப்பந்த உரிமை (Freedom of Contract) ஒரு காலத்தில் பெரிதும் வற்புறுத்தப்பட்டதேனும் இப்போது அரசாங்கம் பல வகையிலும் தனிப்பட்டோரது ஒப்பந்தங்களில் தலையிடுவது வழக்கமாகிவிட்டது. ஆலைத் தொழிற் சட்டங்கள் (Factory Laws) அதற்கொரு சான்றாகும். போர்க் காலங்களில் தனி மனித உரிமை கள் பலவற்றை அரசாங்கம் பறிக்கவேண்டியது கட்டாயமா கிறது. முதல் உலகப் போரின்போது, கட்டாய இராணுவ சேவை மூலம் அது தனி மனிதனின் உரிமையில் தலையிட்டது. 1914ஆம் ஆண்டில் ஏற்பட்ட அந்நியர் தடைச்சட்டமானது (Aliens Restrictions Act) அந்நியர்களின் தனிப்பட்ட உரிமையைத் தடுத் தது. இராஜீயப் பாதுகாப்புச் சட்டமானது (Defence of Realm Act) அரசாங்கத்துக்கு ஏராளமான அதிகாரத்தைக் கொடுத்தது.

அதன்மூலம் அரசாங்கம் நாட்டுக்கு விரோதிகள் என ஐயப்படக் கூடிய எவரையும் சிறையிலிட்டு, இராணுவ நீதி மன்றங்கள் மூலம் தண்டிக்க உரிமை பெற்றது. நிருவாகச் சட்டங்கள் பல இதனுல் ஏற்பட்டன. பேச்சுரிமை, பிரசுர உரிமை, விவாத உரிமைபோன்ற பல உரிமைகள் போர்க்காலத்தில் பாதுகாப்பை முன்னிட்டுத் தடை செய்யப்பட்டன. உடைமை உரிமையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அரசாங்கம் தனக்கு வேண்டிய நிலம், வீடு, ரயில்வே, சுரங்கம் யாவற்றையும் எடுத்துக்கொண்டது. உணவுக் கட்டுப்பாடு, பங்கீடு, மின்சாரவெட்டுப்போன்ற பல தியாகங்களை அரசாங்கம் மக்கள்மீது திணிக்க வேண்டியதாயிற்று. 1939இல் அரசாங்கம் மீண்டும் மக்களுரிமைகளைப் பறித்தது. ஹெபியஸ் கார்பஸ் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. தினத் தொழிலாளி (Daily Worker) போன்ற கம்யூனிஸ்ட் பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. 1940இல் ஏற்பட்ட அவசரகால அதிகாரங்கள் சட்டம் (Emergency Powers Act) அரசாங்கத்துக்கு ஏராளமான அதிகாரங்களைத் தந்தது. மக்களது உடல், உடைமை இரண்டையும் அது அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. இத்தகைய சட்டங்கள் குறுகிய காலங்கட்கு மட்டுமே அமுலிலிருக்கும். ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றம் அவற்றைப் புதுப்பிக்க வேண்டும்.

போர்க்காலங்களில் மட்டுமன்றி அமைதிக் காலத்திலும் சட்டத்தின் இறைமை பல வகைகளில் தடைப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களும் நீதிபதிகளும் சட்டத்துக்குக் கட்டுப்படாமல் பேச உரிமைபெற்றுள்ளனர். அந்நியர்களின் உடைமையும் உடலும் ஆங்கிலச் சட்டத்துக்குக் கட்டுப்படாதவை. தொழிற் சங்கங்கள் சட்டத்திற்கு எதிராகப் பல உரிமைகளைத் தன் உறுப்பினர்களுக்கு வழங்கி உள்ளன. ‘அரசர் குற்றம் செய்ய இயலாதவர்’ (The king can do no wrong) என்ற கொள்கையின்படி, பல அரசாங்கச் சிப்பந்திகள் குற்றங்களினின்றும் தப்பித்துக்கொள்ள வழியுண்டு. இராணுவ நிருவாகத் துறையிலுள்ள அரசாங்க அதிகாரிகள் சட்டம் செய்யவும், நீதி வழங்கவும் இக்காலத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஃபிரான்சில் இருப்பது போன்ற ‘ஆட்சித் துறைச் சட்டம்’ (Administrative Law) இங்கிலாந்திலும் பெருமளவுக்கு அமுலுக்கு வந்துவிட்டதாகக் கருத இடமுண்டு. எனினும், சட்ட ஆட்சியே இங்கிலாந்தில் இன்னும் நிலவுகிறது. அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் வழக்கு ஏற்பட்டால் அது சாதாரண நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படுகிறது. ஃபிரான்சில் இருப்பதுபோல் தனிப்பட்ட நிருவாக நீதிமன்றங்கள் இங்கிலாந்திலில்லை. சிவில் சுயேச்சைக்குப் பல கட்டுப்பாடுகள் சட்டப்படி இருப்பினும், அவை பெரும்பாலும் அமுல் நடத்தப்

படுவதில்லை. எனவே, மக்கள் உண்மையான சுதந்திரமுள்ளவர்களாக உலவுகின்றனர்.

9. தல ஆட்சி முறை (Local Government)

பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்தின் தல ஆட்சி முறையில் பல மெச்சத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு நாட்டின் அரசாங்கம் எத்தன்மையது என்பதை அறிய அந்நாட்டின் மத்திய அரசாங்கத்தைவிடத் தல அரசாங்கமே உற்றதோர் உரைகல்லாகுமென்பது அறிஞர்களின் துணிபு. அப்படிப் பார்க்கும் வேளையில் மக்கள் நலன் கருதிய ஜனநாயக ஆட்சியே பிரிட்டனில் வேரூன்றியுள்ளதென்பதை அதன் தல அரசாங்கம் நமக்குத் தெள்ளிதின் புலப்படுத்துகிறது. 1835ஆம் ஆண்டு வரை தல அரசாங்கமானது செல்வமிக்க சிறுபான்மைக் குழுவினரிடம் சிக்கித் தவித்ததேனும், அதன்பின் விறுவிறு என ஜனநாயகப் பண்புகள் அதில் மலரலாயின.

தல ஆட்சிப் பிரிவுகள்

தல ஆட்சிப் பிரிவுகள் இடைக்கால இங்கிலாந்தில் இருந்ததைப் போன்று இன்றைக்கும் ஏறக்குறைய இருக்கின்றன. பாரிஷ் (Parish) என்னும் கிராமமே தல ஆட்சியின் மிகச் சிறிய உட்பிரிவாகும். அத்தகைய கிராமங்கள் பல சேர்ந்த தொகுதி நாட்டுப்புற ஜில்லாக்கள் (Rural Districts) எனப்படும். அவை பரப்பளவில் பெரியவை எனினும், ஜனத்தொகையில் மிகவும் குறைந்தவை. ஜனத்தொகை மிக்கவையும், பட்டணங்களுக்கு அருகாமையிலுள்ள கிராமங்களின் கூட்டங்களும் பட்டண ஜில்லாக்கள் (Urban Districts) என அழைக்கப்படுகின்றன. இவையிரண்டைத் தவிர உரிமைப் பட்டயம் (Charter) பெற்ற பல பட்டணங்கள் உள்ளன. அவை பரோக்கள் (Boroughs) எனப்படும். இம்மூன்று தல ஆட்சிப் பிரிவுகளையும் உட்கொண்ட பெரும் உட்பிரிவுகளாவன கவுன்டிகள் (Counties) எனப்படுகின்றன. இவைகளில் நிருவாகக் கவுன்டிகள் (Administrative Counties), கவுன்டி பரோக்கள் (County Boroughs) என இருவகையுண்டு. இப் பிரிவுகளிலெல்லாம் அடங்காது தனித்து நிற்பது லண்டன் மாவட்டம் ஒன்றேயாகும். அதுவும் லண்டன் நகரம் என்றும், தலைநகரப் பரோக்கள் (Metropolitan Boroughs) என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உட்பிரிவுகளின் தொகுப்பு

நிருவாக சௌகரியத்துக்காகப் பாரிஷ்கள் அவ்வப்போது பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. 1834இல் ஏற்பட்ட இரவலர்ச்

சட்டமானது வறுமை நிவாரணமளிப்புக்காக இரவலர்ச் சட்ட ஜில்லாக்கள் (Poor Law Districts) என்ற தொகுதியை ஏற்படுத்தியது. 1835இல் ஏற்பட்ட பெருவழிகள் சட்டமானது (Highways Act) பாதைப் பாதுகாப்புக்கான பணத்தைத் திரட்டுவதற்காகப் பெருவழி ஜில்லாக்கள் (Highways Districts) என்ற தொகுதியை உண்டாக்கியது. 1870இல் ஏற்பட்ட கல்விச் சட்டமானது, கல்வியைப் பரப்புதற்காக கல்விக் குழு ஜில்லாக்களைத் (School Board Districts) தோற்றுவித்தது. இவை தவிர புதைக்கும் ஜில்லாக்கள் (Burial Districts), சுகாதார ஜில்லாக்கள் (Sanitary Districts) எனவும் பல ஜில்லாக்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தந்த ஜில்லாக்களுக்கு அதிகாரம் பெற்ற ஜில்லாக் குழுக்கள் (Boards) தனித் தனியே மக்கள் மீது வரி விதித்துத் தத்தம் பணிகளைச் செய்து வந்தன. அதனால் மக்கள் பல வரிகளுக்குட்பட்டு நலிந்தனர். ஒவ்வோர் ஆட்சிக் குழுவிலும் தனித்தனி ஊழியர்களிருந்ததால், பணச் செலவும் அதிகமாயிற்று. இந்தக் குழப்ப நிலைமை நாளடைவில் மாறியது. 1894ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டமானது பல தொகுதிகளை ஒழித்தது. 1902ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம் கல்விக் குழு ஜில்லாக்களை ஒழித்தது. 1920ஆம் ஆண்டுச் சட்டமொன்று இரவலர் ஜில்லாக்களை ஒழித்தது. 1933ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டமானது பற்பல தல நிருவாகச் சபைகளின் அமைப்பையும் அதிகாரங்களையும் ஒன்றுகத் தொகுத்தது.

ஜனநாயகத் தன்மை

தல நிருவாகச் சபைகளில் நிலப் பிரபுக்களே ஆரம்பத்தில் உறுப்பினராயிருந்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு வேறெவரும் ஆட்சியில் பங்கு பெறு வண்ணம் தடுத்துவந்தனர். மேலும் அவர்கள் பொறுப்பற்ற முறையில் ஆட்சி புரிந்தனர். பல நகரங்கள் சுகாதார வசதிகள் சிறிதுமின்றிக் கிடந்தன. லஞ்சமும், ஊழலும், திறமையின்மையுமே எங்கும் காணப்பட்டன. 1835ஆம் ஆண்டில், ஏற்பட்ட மாநகராட்சிச் சீர்திருத்தச் சட்டமானது இவ்வூழல்களை அகற்றி, பரோ நிருவாகச் சபைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஓரளவு இடம் பெற வழி செய்ததென்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். 1883இல் ஏற்பட்ட கவுன்டி கவுன்சில் சட்டமானது (County Councils Act) கவுன்டி நிருவாக சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இடம் பெற வழி செய்தது. 1894இல் ஏற்பட்ட ஜில்லா பாரிஷ் கவுன்சில் சட்டமானது (District and Parish Councils Act) ஜில்லா பாரிஷ் நிருவாக சபைகளிலும் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் பங்குபெறச் செய்தது. தேர்தலில் ஜனநாயக முறை பெரிதும் புகுத்தப்பட்டுள்ளது. சொந்த வீட்டில் குடியிருப்பவர்கள்

மட்டுமன்றி மூன்று மாதங்களுக்குக் குறைவின்றி குடிக்கூலிக்கு இருப்பவர்களும் வாக்குரிமை பெற்றுள்ளனர். பாராளுமன்ற வாக்குரிமையைப் போன்று அவ்வளவு தாராளத் தன்மை தல ஆட்சி சபை வாக்குரிமையில் இல்லை. எனினும், இடைக்காலத்திலிருந்தபடி வெறும் நிலப் பிரபுக்களே அதிகாரத் தனியுரிமை பெற்று விளங்க இப்போது வழியில்லை. வரி செலுத்திக்கொண்டு ஓரிடத்தில் ஓராண்டாவது தொடர்ந்து குடியிருக்கும் எவரும் தேர்தலில் போட்டியிட உரிமையுண்டு. சாதாரண மக்களும் தல நிருவாக சபைகளில் இடம் பெற வழியுண்டு.

பாரிஷ் நிருவாகம்

பாரிஷுகளை டியூடர்கள் காலத்தில் வெஸ்ட்ரி (Vestry) என்ற ஒரு சபை ஆண்டு வந்தது. ஆனால், தற்போது அச் சபை மத சம்பந்தமான காரியங்களை மட்டுமே கவனிக்கிறது. அரசியல் சம்பந்தப்பட்ட காரியங்களை மட்டுமே கவனிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரடங்கிய சபை ஒன்றை 1831இல் ஏற்பட்ட சட்டமொன்று தோற்றுவித்தது. 1948ஆம் ஆண்டிலிருந்து மறைவு வாக்களிப்பு முறையில் சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதன் தலைவர் சபையாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார். வரி செலுத்தும் பெண்டிர்க்கும் அச் சட்டம் வாக்குரிமையை வழங்கியது. 18ஆம் நூற்றாண்டில் தல நிருவாகத்தில் மிக முக்கிய உறுப்பாகப் பாரிஷ் விளங்கியது. ஆனால், 19ஆம் நூற்றாண்டில் அதன் முக்கியத்துவம் பெரிதும் குறைந்துவிட்டது. பாரிஷைச் சார்ந்த சொத்துக்களையும் பாதைகளையும் பாதுகாப்பதே அதன் நிருவாக சபையின் முக்கியப் பொறுப்பாகும். நூலகங்களைப் பாதுகாத்தல், விளக்குகளை ஏற்படுத்துதல் போன்ற காரியங்களையும் அவை சில இடங்களில் கவனிக்கின்றன.

ஜில்லா நிருவாகம்

1894ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஜில்லா, பாரிஷ் கவுன்சில் சட்டமானது கவுன்டிகளை, நாட்டுப்புற ஜில்லாக்கள், பட்டண ஜில்லாக்கள் (Rural and Urban Districts) என இருவகையாகப் பிரித்தது. ஒவ்வொரு ஜில்லாவிலும் பல பாரிஷுகள் உள்ளன. நாட்டுப்புற ஜில்லாக்களை ஆள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை ஒன்றுள்ளது. அதன் ஆயுட்காலம் மூன்று ஆண்டுகள். ஆண்டுக்கொருமுறை அதில் பாதி உறுப்பினர் பதவியினின்றும் ஓய்வு பெறுவர். பட்டண ஜில்லாக்களுக்கும் அதேபோல நிருவாக சபைகள் உள்ளன. சபைகளின் உறுப்பினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். சபைக்கு ஒருகாலத்தில் ஏராளமான அதிகாரங்கள் இருந்தன. ஆனால், அவை யாவும் இன்று கவுன்டி நிருவாக சபையின் கைகளுக்கு மாறிவிட்டன. கல்வி, சுகாதாரம்,

போலீஸ் பற்றிய பணிகள் அதனின்றும் நீக்கப்பட்டன. ஆனல், வீடுகள் அமைத்துத்தரும் பணி அதற்கு இப்போது இன்னும் அதிகமாகியுள்ளது. 1925இல் ஏற்பட்ட வரிவிதிப்பு, மதிப்பீட்டுச் சட்டமானது (Rating and Valuation Act) பரோ, ஜில்லா நிருவாகச் சபைகளுக்கே வரி விதித்து வசூலிக்கும் அதிகாரத்தைக் கொடுத்துள்ளது. தல நிருவாகத்துக்கான பணத்தை அவை வசூலித்துக் கவுன்டி சபைகளுக்கும் தருகின்றன.

பரோ நிருவாகம்

பரோக்களில் பலவகையுள்ளன. 1888ஆம் ஆண்டில் ஏற்பட்ட தல ஆட்சிமுறைச் சட்டமானது (Local Government Act of 1888) கவுன்டி சபைகளின் அதிகாரத்துக்குட்பட்ட பரோக்கள், அதற்குட்படாத கவுன்டி பரோக்கள் என இருவகையாகப் பிரித்தது. கவுன்டி பரோக்கள் தனிப்பட்ட கவுன்டிகளைப் போலவே ஆட்சி செய்யப்படுகின்றன. 1933ஆம் ஆண்டுச் சட்டப்படி குறைந்தது ஒரு லக்ஷம் ஜனத் தொகையாவது உள்ள நகரங்களே கவுன்டி பரோக்களாகலாம். ஏனைய பரோக்கள் தனிப்பட்ட முறையில் இயங்குகின்றன. அவைகளுக்குத் தனித்தனி சாசனங்கள் இருக்கின்றன. பரோ நிருவாக சபையில் 1835ஆம் ஆண்டுச் சட்டப்படி பெரும்பான்மையோர் நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மூன்றில் ஒரு பகுதியினர் சபையினரால் ஆறு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் நகர முதியவர் அல்லது ஆல்டர்மென் (Aldermen) எனப்படுகின்றனர். சபையின் ஆயுட்காலம் மூன்று ஆண்டுகள். மூன்றில் ஒரு பகுதியினர் ஆண்டுக்கொருமுறை பதவியினின்றும் நீங்க வேண்டும். ஆண்டுக்கொருமுறை சபையின் தலைவரான மேயர் அல்லது நகரத் தந்தை சபையினரால் தேர்ந்தெடுக்கப்படுகிருர். நகரத்துக்கு வேண்டிய குடிதண்ணீர், வெளிச்சம், வீடுகள் ஆகியவற்றை அளித்துக் கண்காணிப்பதே பரோ சபையின் முக்கிய அலுவல்கள். பாராளுமன்றத்தின் அனுமதிபெற்று கண்காட்சிகள், விளையாட்டு மைதானங்கள், குளியலறைகள், நூலகங்கள் முதலியவற்றையும் அவை அமைக்கலாம். வியாபாரங்களிலும் ஈடுபடலாம். சான்ருக, லிவர்ப்பூல் நகரசபை பால் விற்பனை செய்கிறது. பர்மிங்ஹாம் நகர் பாங்கு ஒன்றை நடத்துகிறது. கோல்ச்செஸ்டர் நகர் ஆய்ஸ்ட்டர் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

கவுன்டி நிருவாகம்

கவுன்டி நிருவாகசபை உறுப்பினர்கள் மூன்ருண்டுகளுக்கொருமுறை பொதுமக்களால் தேர்தெடுக்கப்படுகின்றனர்.

அதன் நான்கில் ஒரு பகுதியினர் சபையினராலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆல்டர்மென்களாவர். ஆறு ஆண்டுகளுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களில் பாதிப்பேர் மூன்றாண்டுகளுக்குகொருமுறை பதவியினின்றும் ஓய்வு பெறவேண்டும். ஒருகாலத்தே கவுன்டிகளில் நிலப்பிரபுக்களான அமைதிகாண் நீதிபதிகளே (Justices of the Peace) சர்வ அதிகாரமுடையவர்களாக விளங்கினர். ஆனால், 1888ஆம் ஆண்டுச் சட்டப்படி அவர்களது அதிகாரங்களை எல்லாம் இன்று மக்கள் மன்றங்களே செலுத்துகின்றன. ஆனால், அம் மன்றங்களிலும் பழைய நிலப்பிரபுக்கள் புகுந்துகொள்வது இயல்பாயுள்ளது. கவுன்டி நிருவாக சபையின் அதிகாரங்கள் மிகப் பல. 1944ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம், வட்டாரக் கல்வியைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அச்சபையின்மீது திணித்துள்ளது. ஆரம்பக் கல்வியை வளர்க்கும் பணியை அவை பரோக்கள், பட்டண ஜில்லாக்கள் சபைகளுடன் பகிர்ந்து கொள்ளுகின்றன. உயர்தரக் கல்விக்குக் கவுன்டிகளும், கவுன்டி பரோக்களுமே பொறுப்புள்ளவை. வட்டார ஆரோக்கியத்தையும் அதுவே கவனிக்கிறது. 1948ஆம் ஆண்டு தேசிய ஆரோக்கியப் பணிச் சட்டமானது (National Health Service Act) கர்ப்பிணிகள், குழந்தைகள் நலன்களைப் பாதுகாத்தல், வீட்டு வசதி ஏற்படுத்துதல், அம்மைகுத்தும் பணி ஆகியவற்றைக் கவுன்டி சபைகளிடம் ஒப்படைத்துள்ளது. 1946இல் ஏற்பட்ட போலீஸ் சட்டமானது (Police Act) பரோ போலீஸ் படையையும் கவுன்டி சபையின் அதிகாரத்துக்குட்படுத்தியது. 1929ஆம் ஆண்டுச் சட்டப்படி இரவலர்ச் சட்டத்தை அமுல் நடத்தல், பாதைகளைப் பாதுகாத்தல், பிறப்பிறப்புக் கணக்கெடுத்தல் போன்ற பணிகளை, ஜில்லா, பாரிஷ் சபைகளிடமிருந்து கவுன்டி சபைகள் பெற்றுள்ளன. 1947இல் ஏற்பட்ட நகர நாட்டுப்புறத் திட்ட அமைப்புச் சட்டம் (Town and Country Planning Act) நகரங்களைத் திட்டமிட்டமைக்கும் பணியைப் பரோ ஜில்லா சபைகளிடமிருந்து பறித்துக் கவுன்டி சபைகளிடம் தந்தது. மற்றும் விவசாயம் பற்றிய பணிகள், தேர்தல் பற்றிய பணிகள், மார்க்கெட்டுகள், ஹோட்டல்கள் நடத்துதல் போன்ற பல்வேறு வேலைகளை அச்சபை செய்கிறது. தொழிற்கட்சி சர்க்காரின் நடவடிக்கைகளால் மருத்துவமனைகள், நிலக்கரி வாயு, மின்சார அளிப்பு ஆகியவற்றில் அதற்கிருந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டது. மன்றத்தின் பல்வேறு அலுவல்களைக் கவனிக்கப் பல்வேறு குழுக்கள் (Committees) அமைக்கப்படுகின்றன. சபையில் உறுப்பினரல்லாத பல நிபுணர்கள் அதில் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

லண்டன்

லண்டன் கவுன்டி மட்டும் தனிப்பட்ட தல ஆட்சிமுறைக்குட் பட்டுள்ளது. அதற்கெனத் தனியே ஒரு கவுன்டி சபை உள்ளது. அதில் ஏழில் ஒரு பகுதியினர் ஆல்டர்மென்கள். ஏனையோர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஏனைய கவுன்டிகளுக்கில்லாத பல அதிகாரங்கள் லண்டன் கவுன்டிக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் போலீஸ் படை மட்டும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத் துக்குட்பட்டது. லண்டன் கவுன்டியில் 32 தலைநகர பரோக்கள் உள்ளன. அவைகளைப் பரோ கவுன்சில்கள் ஆளுகின்றன. வீட்டு வசதி, ஆரோக்கியம் போன்றவைகளை அவை கவனிக்கின்றன. லண்டன் நகரம் (City of London) என்ற பகுதி, மாவட்டத்தின் நடுவிலுள்ள ஒரு சதுர மைல் பரப்புள்ள இடத்தையே குறிக்கும். அது தனிப்பட்ட தல ஆட்சி முறையைக் கொண்டது. அதில் பழங்கால முறைப்படி அமைந்த மூன்று சபைகள் உள்ளன. அதிலுள்ள ஆல்டர்மென்கள் ஆயுட்காலம் வரை பதவி வகிப்பர். ஒரு மேல் சபையையும் கொண்ட நகராட்சி மன்றத்தை லண்ட னில்தான் காணலாம். கல்வி, சுகாதாரம் இவற்றைக் கவனிப் பதே சபையின் முக்கிய கடமைகளாகும். அகண்ட லண்டன் (Greater London) என்ற பகுதி 100 கவுன்சிலர்களையும் 16 ஆல் டர்மென்களையும் கொண்ட ஒரு மன்றத்தினால் ஆளப்படுகிறது. லண்டனைச் சுற்றியுள்ள பிரதேசங்களை அது ஆளுகிறது. இப் பகுதிகளில் கல்வி, போக்குவரத்து ஆகியவற்றைக் கவனிக்கத் தனிப்பட்ட கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் தல ஆட்சியில் ஒரு முறையோ, ஒழுங்கோ கிடை யாது. பரப்பளவு ஜனத்தொகையின்படி தல நிருவாகப் பகுதி கள் இன்னும் பிரிக்கப்படவில்லை. 1945இல் ஏற்பட்ட ஒரு கமிஷ னது சிறிய கவுன்டிகளைப் பெரியவற்றோடு இணைக்கலாமென வும், சில சிறிய கவுன்டி பரோக்களைச் சாதாரண பரோக்களாக மாற்றலாமென்றும் பல சிபாரிசுகளைச் செய்துள்ளது. பொதுவில் தல அரசாங்கம் திறமையுற நடைபெறுகிறது. இரண்டாம் உல கப் போருக்குப் பின் மத்திய அரசாங்கம் தல அரசாங்கத்தின் பல அலுவல்களை மேற்கொண்டதால், ஓரளவு அதன் சுயேச்சை தடைப்பட்டுள்ளது.

1958ஆம் ஆண்டுத் தல ஆட்சிச் சட்டம் (The Local Government Act, 1958)

இச்சட்டப்படிக் கீழ்க்கண்ட மாற்றங்கள் தல ஆட்சித் துறையில் ஏற்பட்டன. தனிப்பட்ட மானியங்கள், குறிப்பிட்ட

சேவைகளுக்குக் கொடுக்கப்பட்டுவந்த வழக்கத்துக்குப் பதிலாக எல்லாப் பொதுநலத் தொண்டுகளுக்கும் சேர்த்துப் பொதுவான ஒரு மானியம் (General Grant) வழங்கப்படுகின்றது. கல்வி, சுகாதாரம், குழந்தை நலம், தீயணைப்பு இவைகளுக்காக அதில் பெரும்பகுதியான தொகை செலவழிக்கப்பட வேண்டும்.

தொழில்கள் செலுத்த வேண்டிய வரி அவற்றின் ஆண்டு மதிப்பீட்டில் ஐம்பது சதவீதமாக (25 சதவீதத்திலிருந்து) உயர்த்தப்பட்டுள்ளது.

கவுன்டிகள், கவுன்டி பரோக்கள் இவைகளின் பரப்பளவுகளை ஆராய்ந்து, அவற்றை மேலும் விரிவாக்க வேண்டுவதன் அவசியத்தைப் பரிசீலனை செய்யவும், தாங்கள் பெரிய கவுன்டி பரோக்களாக மாற்றப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள கவுன்டியல்லாத பரோக்கள், பட்டண ஜில்லாக்கள் ஆகியவற்றின் வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்யவும், இங்கிலாந்திலும் வேல்ஸிலும் ஒவ்வொரு கமிஷன் நியமிக்கப்பட்டது. (100,000 மக்கட்தொகையுள்ள ஒரு பிரதேசம் கவுன்டியாக மாறலாமெனக் கருதப்பட்டது.)

கமிஷனின் தனிப்பட்ட ஆய்வுக்காக ஐந்து பெரும் மாநிலங்கள் ஒதுக்கப்பட்டன.

அவ்வைந்து மாநிலங்களுக்குப் புறம்பான பாரிஷுகள், ஜில்லாக்கள் ஆகியவற்றை மறு பரிசீலனை செய்ய கவுன்டி கவுன்சில்கள் அதிகாரம் பெற்றன.

சுகாதாரம், கல்வி போன்ற பொதுநலச் சேவைகள், கவுன்டி கவுன்சில்களிடமிருந்து அவற்றைவிடப் பெரிய ஜில்லா கவுன்சில்களுக்கு மாற்றப்பட்டன.

மேற்கண்டவாறு அமைக்கப்பட்ட கமிஷன்கள் 1966ஆம் ஆண்டுக்குள் 9 அறிக்கைகளை வெளியிட்டன. ஆனால் முற்றிலும் புதிய முறையில் தல ஆட்சியை மாற்றி அமைக்கத் தொழிற்கட்சி அரசு விரும்புவதால், அவைகளால் பலன் ஏதும் ஏற்படவில்லை. 1966இல் தல ஆட்சியை மறுபரிசீலனை செய்ய வேறு இரு ராயல் கமிஷன்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று இங்கிலாந்தையும், இன்னொன்று ஸ்காட்லாந்தையும் ஆராயும். 1970ஆம் ஆண்டில் அவை தங்களது இறுதி அறிக்கைகளை வெளியிடும். அதன்படி தல ஆட்சிமுறை முற்றிலும் புதியதோர் வடிவத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தல ஆட்சிப் பிரிவுகள்

கிரேட் பிரிட்டன்

- அகண்ட லண்டன்
  - லண்டன் நகரம்
  - தலைநகரப் பரோக்கள்
- நிர்வாகக் கவுன்டிகள் (58)
  - (கவுன்டியல்லாத) பரோக்கள் (276)
  - நகர ஜில்லாக்கள் (547)
  - நாட்டுப்புற ஜில்லாக்கள் (473)
    - பாரிஷுகள்
- கவுன்டி பரோக்கள் (82)

10. பொருளாதார நிலைமை

அணுயுகம் (Atomic Age) எனப் போற்றப்படும் இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் விஞ்ஞானத்தின் அரிய சாதனைகளால் வியத்தகு மாற்றங்கள் பல விளைந்துள்ளன. விக்டோரியா இராணியார் காலத்து ஆங்கிலேயனொருவன் இன்றைய இங்கிலாந்துக்குள் வருவானேயானால், தனது நாட்டின் முழு உருவம் அப்படியே மாறிப் போயிருப்பதைக் கண்டு, தான் காண்பது கனவா நினைவா என ஐயுறும் நிலையை அடைவானென்பது திண்ணம். விக்டோரியாவின் காலத்தில் சைக்கிள் சவாரி செய்வதை ஓர் ஒப்பற்ற சாதனையாகக் கருதிவந்த ஆங்கிலேயன் இன்று அழகிய மோட்டார் வண்டிகளில் வாயு வேகத்தில் பயணம் செய்கிறான். வான ஊர்திகளிலேறிக்கொண்டு உலகை வலம் வருகிறான். பழைய சாதாரணத் தொலைபேசிகளுக்குப் பதிலாக இன்று தானாகவே இயங்கும் தொலைபேசிகளும், அன்றைய மங்கலான மின்சார விளக்குகள் எரிந்த இடத்தில் கண்கள் கூசும் வண்ணம் ஒளிவிட்டுத் துலங்கும் மின்சார விளக்குகளும், விக்டோரியக் குடிமகனின் கற்பனைக்கும் எட்டாத மருத்துவ முறைகளும், அறுவை முறைகளும், வேறுபல நூதனக் கருவிகளும் இன்றைய இங்கிலாந்தில் மல்கிக் கிடப்பதைக் காணலாம். பகாசுரன் தவம் செய்து சிவனிடமிருந்து எல்லோரையும் அழித்துவிடும் சக்தியைப் பெற்றதேபோல், நவீன மனிதனும் விஞ்ஞானத்தின் துணைகொண்டு எண்ணற்ற சக்திகளை இயற்கை யன்னையிடமிருந்து பெற்றுள்ளான். ஆனால் மமதை கொண்ட பகாசுரன் தன்னையே தான் அழித்துக்கொண்டது போல் தற்கால மனிதனும் விஞ்ஞானத்தால் மன்பதையை

அழித்துவிடுவாளுே என்ற பயம் நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது.

போக்குவரத்துச் சாதன வளர்ச்சி

1885ஆம் ஆண்டில் டெய்ம்லர் (Daimler) என்ற ஜெர்மானியரால் புதியதாய்ச் செய்யப்பட்ட மோட்டார் வண்டி நாளடைவில் இங்கிலாந்திலும் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கில மக்கள் அதைக் கண்டு அஞ்சியோடினர். மோட்டார் வருகிறதென்பதை மக்களுக்கும் வாகனங்களுக்கும் உணர்த்தி எச்சரிக்கச் சிவப்புக் கொடியை ஏந்திக்கொண்டு ஒருவன் மோட்டாருக்கு முன்னல் செல்வது வழக்கமாயிருந்தது. மோட்டார் பயணம் செய்பவர்கள் மணிக்கு நான்கு மைல் வேகத்துக்குமேல் போகக் கூடாதென அரசாங்கம் ஆணையிட்டது. ஆனல், இந்நிலை விரைவில் மாறியது. ஃபோர்டு (Ford) என்ற அமெரிக்கத் தொழிற் விற்பன்னரது முயற்சியாலும், சர் வில்லியம் மாரிஸ் (Sir William Morris) என்ற ஆங்கிலப் பிரபுவின் சாதனைகளாலும் மோட்டார்கள் எளிய விலைக்குக் கிடைத்தன. அதை ஓட்டுவதற்கான பெட்ரோல் எண்ணெயும் நிறையக் கிடைத்தது. எனவே, மோட்டார் போக்குவரத்து அதிகரித்தது. ரயில் போகமுடியாத நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் மோட்டார் சென்றது. நாட்டு மக்கள் அனைவரும் கலந்துபழகும் வாய்ப்பு பெரிதும் வளர்ந்தது. அதே சமயம் பாதை விபத்துகளும் அதிகமாயின. வேகத்தில் நாட்டமிக்க பலர் உயிரைத் துச்சமாக மதித்தனர். வேகமான வாழ்க்கை பலரது அமைதியை அகற்றி, மனச் சமநிலையைக் குலைத்துள்ளதென்பதும் உண்மையே.

நிலப் பயணத்தில் புரட்சிகரமான மாறுதலை மோட்டார் ஏற்படுத்தியதேபோல், வானவெளிப் பயணத்தில் ரைட் சகோதரர்களால் செய்யப்பெற்ற வானவூர்தி பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டனையும் அதன் காமன்வெல்த் நாடுகளையும் இணைப்பதில் வானவூர்திகள் நற்பணியைச் செய்து வருகின்றன. பிரயாணிகள் விமானங்களும், தபால் விமானங்களும் குறிப்பிட்ட காலங்களில் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு உலகெங்கும் செல்கின்றன. வாயுவேக மனோவேகத்தில் தற்கால விமானங்கள் பறக்கின்றன., அதேசமயம் உயிருக்கு ஆபத்து நேராமல் காக்கப் பலமுறைகளும் கையாளப்படுகின்றன.

1947ஆம் ஆண்டில் ஏற்பட்ட போக்குவரவுச் சட்டப்படி (Transport Act) எல்லா போக்குவரவுச்சாதனங்களும் தேசிய உடைமையாக்கப்பட்டன. போர் முடிந்த பின்னும் அம்முறை நீடித்ததென்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். ரயில்வேக்களின்

நிலை மிகக் கேவலமாகிக் கொண்டு வந்தது. அவற்றின் நிலையை ஆராய 1956ஆம் ஆண்டில் போக்குவரத்து கமிஷன் ஒன்று நிறுவப்பட்டது. நீராவிக்குப் பதிலாக டீசல் எண்ணெய் (Diesel), மின்சாரம் ஆகியவற்றைப் பயன்படுத்துதல் போன்ற பல சீர் திருத்தங்களைச் செய்யலாமென அக்கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. சர்க்கார் அவற்றை அமுல் நடத்த முயன்று வருகின்றனர்.

கம்பியில்லாத் தந்தி (Wireless)

1902இல் மார்க்கோனி (Marconi) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட கம்பியில்லாத் தந்தி முறையானது விரைவில் இங்கிலாந்தில் பரவியது. முதல் உலகப் போருக்குப்பின் ஒலி பரப்பும் கலையும் (Broadcasting) நன்கு இங்கிலாந்தில் வளர்ந்தது. அரசாங்கம் மக்களுடைய அபிப்பிராயங்களைத் தனது கொள்கைகளுக்குச் சாதகமாக மாற்ற ஒலிபரப்பு முறையையும் சினிமாவையும் ஹிட்லர் போன்ற யதேச்சாதிகாரிகள் பயன்படுத்தினர். இங்கிலாந்தில் ஒலிபரப்பு, பி. பி. ஸி. (B. B. C) என்ற தனிப்பட்ட குழுவினரால் நடத்தப்படுகிறது. அரசாங்கம் அதில் தலையிட வழியில்லை. ஆனால், பாராளுமன்றத்துக்கு அக்குழு பொறுப்புடையது. எனவே, மக்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு அது இயங்கி வருகிறது.

தொழில் விவசாய மந்தம்

மேற்சொன்னபடி மோட்டார் தொழில் போன்ற புதிய தொழில்கள் இங்கிலாந்தில் வளர்ந்தனவே எனினும், பல பழைய தொழில்கள் போரின் காரணமாக நசித்தன. போர்க் காலத்துப் பின்பும் நாடுகள் தன்னிறைவு பெற இச்சை கொண்டு தங்கள் தங்கள் தொழில்களை வளர்க்க முயன்று இங்கிலாந்திலிருந்துவந்த பொருள்கள்மீது அவை நிறையச் சுங்க வரியை விதிக்க ஆரம்பித்தன. இத்தகையப் பொருளாதாரத் தேசியத்தால் (Economic Nationalism) இங்கிலாந்தின் பல தொழில்கள் பாதிக்கப்பட்டன. முக்கியமாகக் கப்பல் கட்டும் தொழில் சீர்குலைந்தது. ரயில், கப்பல் முதலியவைகளை ஓட்ட நிலக்கரிக்குப் பதிலாக எண்ணெய் பயன்படுத்தப்பட்டதால், பிரிட்டனின் நிலக்கரி வியாபாரம் பெரிதும் குறைந்தது. அதனால் வேல்ஸ், டைனிசைட் (Tyneside) போன்ற இடங்களின் செல்வாக்கு குறைந்தது. 1929இல் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாகவும் பிரிட்டிஷ் தொழில்கள் நசித்தன.

பிரிட்டிஷ் தொழில்களைப் போலவே, விவசாயமும் 1930ஆம் ஆண்டுக்குப்பின் மந்தமடையலாயிற்று. பல விவசாய இளைஞர்

கள் வயல்களை விட்டுவிட்டு நகரங்களுக்குக் குடிபோய் விட்டனர். பாலுக்கு அதிக கிராக்கி இருந்ததால் பல குடியானவர்கள் பயிர் செய்வதை விட்டுக் கால்நடை வளர்ப்புத் தொழிலிலீடுபடலாயினர். பயிர்த் தொழிலில் லாபம் வரவரக் குறைந்து வந்தது. கோதுமை யின் விலையும் குறைந்தது. 1939இல் போர் ஏற்பட்டபோது விவசாயத்தில் மக்களுக்கு மீண்டும் ஊக்கம் பிறந்தது. புல்வெளி களும், கட்டாந்தரைகளும், கரம்பு நிலங்களும்கூடப் பயிர் செய்யப்பட்டன. தானியங்களின் விலையும் உயர்ந்தது. புதி தாகப் பயிர் செய்யப்பட்ட ஒவ்வோர் ஏக்கருக்கும் இரண்டு பவுன்கள் வீதம் அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவிப் பணம் வழங்கியது. ஒவ்வொரு கவுன்டியிலும் விவசாயத்தை வளர்க்கப் போர் விவசாயக் குழு (War Agricultural Committee) ஒன்று அர சாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. தரிசாகக் கிடந்த நிலங்களைப் பயிர் செய்யும்படி அது குடியானவர்களை வற்புறுத்தியதோடு பயிர் செய்யும் முறையையும் கற்பித்தது. அதன் ஆணை களுக்குப் பணியாத குடியானவர்களை அது நிலங்களினின்றும் ஓட்டிவிட்டுப் புதிய விவசாயிகளை நியமித்தது. போர் நடை பெறும் போது நிலங்களில் வேலை செய்யக் கூலியாட்கள் கிடைக்காத குறையைப் போக்க அரசாங்கம் பெண்களின் உதவியை நாடியது. பெண்கள் நிலப் படை (Women's Land Army) ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அப் படையினரும், கைதிகளும், தொண்டர்களும் சேர்ந்து நிலங்களில் பாடுபட்டு உணவுப் பற்றுக்குறையைப் போக்கினர். போர் முடிந்த பின்னர் பிரிட்டன் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தானே உற்பத்தி செய்து கொள்ளும் முயற்சியிலீடுபட்டுள்ளது. விவசாயிகளுக்குப் புது நிலங்களைப் பயிர் செய்யவும், கால்நடை களை அபிவிருத்தி செய்யவும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

பொருள் நெருக்கடி—திட்டமிடும் முறை (Planning)

பல நாடுகள் பொருளாதாரத் தேசீயக் கொள்கைகளைக் கடைப்பிடித்ததால், பிரிட்டனின் வருவாய் பெரிதும் குறைந்தது. பிரிட்டன் பிற நாடுகளில் போட்டிருந்த முதலீடுகளிலிருந்தும் போதிய வட்டி வரவில்லை. வந்த வட்டியும் போர்த் தளவாடங் கள் வாங்கப் பயன்படுத்தப்பட்டன. பிரிட்டனின் கடன் நாளுக்குநாள் வளர்ந்தது. போர் முடிந்த பின்னர் அது அமெரிக்கா, இந்தியா, எகிப்து போன்ற நாடுகளுக்குப் பெருந் தொகைகளைக் கடனாகக் கட்டவேண்டியிருந்தது. எனவே, திட்ட மிட்டு நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற சோஷலிஸ்டுக் கொள்கை பிரிட்டனில் பலம் பெறலாயிற்று. தொழிற்கட்சியினர் அக்கொள்கையைப் பெரிதும் வற்புறுத்து

கின்றனர். பொருளாதார, சமுதாயத்துறைகளில் அரசாங்கம் தலையிடுவது நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

11. சமூக நிலை

சமுதாய வாழ்க்கை

விக்டோரியாவின் காலத்தில் காணப்பட்ட சமயப்பற்று நிறைந்த உருக்கமான வாழ்க்கைமுறை இன்றைய இங்கிலாந்தில் காண்பதற்கரியதோர் காட்சியாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் ஓய்வெடுத்துக் கொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுவதற்குப் பதிலாகக் கேளிக்கைகளிலும் விநோதங்களிலும் ஈடுபடுகின்றனர். சினிமாக் காட்சிகளைக் கண்டு இன்பம் பெறுவது பெரும்பாலான மக்களின் முக்கிய பொழுதுபோக்காக மாறிவிட்டது. பி. பி. ஸி. நிறுவனத்தின் மூலம் இசையையும், மற்றும் கல்வி, கலை சம்பந்தமான ஒலிபரப்புகளையும் மக்கள் கேட்டு இன்புறுகின்றனர். டெலிவிஷன் காட்சிகளையும் கண்டு மகிழ்கின்றனர். சினிமாப் படங்கள் பல ஆபாசங்கள் நிறைந்து மக்களின் மிருக உணர்ச்சிகளைக் கிளறிவிடும் முறையில் அமைந்திருந்தாலும், ஒருவித உயர்ந்த முறையில் எடுக்கப்படுகின்றன. மக்களின் அறிவு வளர்ச்சிக்குச் சினிமாவும், ரேடியோவும், பத்திரிகைகளும் முக்கிய கருவிகளாயிருக்கின்றன. பத்திரிகைகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிவருகிறது. ஜார்ஜ் நியூன்ஸ் (George Newnes) என்பார் தோற்றுவித்த 'டிட் பிட்டுகள்' (Tit-Bits), ஆல்ஃபிரட் ஹார்ம்ஸ்வொர்த் (Alfred Harmsworth) என்பார் ஆரம்பித்த 'பதில்கள்' (Answers), 'தினத் தபால்' (Daily Mail) போன்ற இதழ்கள் பாமர மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டன. ஏனெனில், அவை அறிவுக்கு வேலை சிறிதும் கொடாமல் உணர்ச்சிக்கு உணவூட்டும் வகையில் பிரசுரிக்கப்பட்டன. பல பத்திரிகைகள் அவைகளில் வெளியாகும் விளம்பரங்களால் கிடைக்கும் வருமானத்தை நம்பியே வாழ்கின்றன. சமுதாயத்தில் இன்று பெண்டிர், சிறுவர் ஆகிய இரு சாராரின் நிலைமைகள் பெரிதும் உயர்ந்துள்ளன. போர்க் காலத்தில் பெண்டிர் செய்த அரிய தொண்டுகளின் காரணமாக அவர்கள் வாக்குரிமையையும் வேறு எல்லா அரசியலுரிமைகளையும் பெற்றுள்ளனர். நம் நாட்டுத் தேசியக் கவி பாரதி கண்ட புதுமைப் பெண்ணை இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமே நாம் இன்று காண்கிறோம். ஆண்களோடு சரிநிகர் சமானமாக அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறுகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். விடுதலை பெற்ற வீராங்கனைகள் ஆண்களை மயக்குவதற்காகவன்றி சௌகரியத்துக்காகவே உடையணிகின்றனர். நீண்ட பெரிய கவுன்கள் போன இடம் தெரியவில்லை. குறைந்த அளவு உடை

யுடுத்திக் கொண்டு ஆண்களைப் போன்று பெண்களும் பல தொழில்களைச் செய்கின்றனர். சிறுவர்களும் பல தேவையற்ற கட்டுப்பாடுகளினின்றும் விடுதலை பெற்றுள்ளனர். கூண்டினின்றும் விடுபட்ட குருவிகளே போல் அவர்கள் சுதந்திரச் சிறகடித்துப் பறந்து தங்களிடையே பொதிந்துள்ள பேராற்றல்களை வெளிப்படுத்தும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

கலைகளின் நிலை

இங்கிலாந்தில் கட்டாயக் கல்விமுறை இருப்பதால், அனேகமாக எல்லோருமே இன்று எழுத்தறிவுடையவர்களா யுள்ளனர். உயர்தரக் கல்வி பெறுவோரின் தொகை அவ்வளவு அதிகமாக இல்லாவிடினும், பொதுவாக மக்கள் பத்திரிகைகள், ரேடியோ, சினிமா முதலியவைகள் வாயிலாக நல்ல கல்வியறிவு பெற்றவர்களாக விளங்குகின்றனர். இருபதாம் நூற்றுண்டு பல இலக்கிய மேதைகளைத் தோற்றுவித்துள்ளது. தாமஸ் ஹார்டி (Thomas Hardy) என்பார் ஒரு தலைசிறந்த நாவலாசிரியர். அவர் நாட்டுப் பற்று மிக்கவர். அவர் வாழ்ந்த நிலப்பகுதியான வெஸ்ஸெக்ஸின் (Wessex) இயற்கை வனப்பினை அவர் தமது 'சுதேசியின் திருப்பம்' (The Return of the Native) போன்ற நாவல்களில் சித்திரித்துள்ளார். ராபர்ட் லூயி ஸ்டீவன்சன் (Robert Louis Stevenson) என்பார் இன்னெரு புகழ்பெற்ற நாவலாசிரியர். அவரது தெளிவான எளியநடை படிப்போருக்குப் பயிலுந்தோறும் இன்பம் பயப்பதொன்ருகும். 'புதையல் தீவு' (Treasure Island) போன்ற துணிகரச் செயல்கள் நிறைந்த நூல்களையும் அவர் எழுதியுள்ளார். எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்னும் பேரறிஞர் உலக வரலாற்றை விஞ்ஞான முறையில் எழுதியதோடு, எதிர்கால நோக்குடன் கற்பனை வளம் செறிந்த நாவல்களையும் புனைந்துள்ளார். 'கண்காணுத மனிதன்' (Invisible Man), 'காலயந்திரம்' (Time Machine) போன்றவை அத்தகைய நூல்களாகும். ஆர்னுல்டு பென்னேட் (Arnold Bennett) என்ற ஆசிரியரின் நாவல்கள் இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. அதேபோன்றுதான் ஜான் கால்ஸ்வொர்த்தி (John Galsworthy) என்பாரது நூல்களுமாகும். 'ஃபார்சைட் சாகா' (Forsyte Saga) எனும் அவரது நாவலில் மூன்று தலைமுறையைச் சேர்ந்த ஆங்கில நடுத்தர மக்களின் வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. ஜோசப் கான்ராட் (Joseph Conrad) என்பாரின் நாவல்கள் கடல் பயணம் பற்றிய துணிகரச் செயல்களை அடிப்படையாகக் கொண்டவை.

உரை நடையாசிரியர்களேயன்றிப் பல கவிஞர்களும் இக்காலத்தே தோன்றியுள்ளனர். ருட்யார்ட்கிப்ளிங் (Rudyard Kip-

ling) என்ற கவிஞரின் கவிதைகள் கடல் கடந்து வேற்று நாடுகளுக்குச் செல்லும் துணிவுமிக்க பிரயாணிகள், வீரர்கள் ஆகியோரது உணர்ச்சிகளை நன்கு பிரதிபலிக்கின்றன. 'ஜியார்ஜியக் கவிஞர்கள்' (Georgian Poets) என அழைக்கப்படும் ரூப்பர்ட் ப்ரூக் (Rupert Brooke), ஜேம்ஸ் எல்ராய் ஃப்ளெக்கர் (James Elroy Flecker), ஜான் மேஸ்பீல்ட் (John Masfield), வால்ட்டர் டிலா மார் (Walter Dela Mare) என்ற அறிஞர்களும் இருபதாம் நூற்றுண்டைச் சேர்ந்தவர்களேயாவர். நாவலாசிரியர் ஹார்டியும் ஒரு கவிஞரே. ஹவுஸ்மேன் (A.E. Housman) என்பவர் அகவற்பா எழுதுவதில் வல்லவர். ஷ்ராப்ஷையர் பையன் (Shropshire Lad) எனும் அவரது காவியம் அழகும் எளிமையும் நிறைந்தது. ஈட்ஸ் (W. B. Yeats) என்பார் இன்னொரு புகழ்பெற்ற கவிஞர். ரூப்பர்ட் ப்ருக் (Rupert Brooke) வீர காவியங்கள் இயற்றுவதில் வல்லவர். டி. எஸ். எலியட் (T. S. Eliot) என்பார் பழைய முறைகளை அறவே விட்டுப் புதிய முறையில் கவிதைகள் பல புனைந்துள்ளார். பல இளங் கவிஞர்கள் அவரது நடையைப் பின்பற்றுகின்றனர்.

விக்டோரியாவின் காலத்தில் பழைய ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஹென்றி இர்விங் போன்ருேர் உயிர்ப்பித்தனரெனினும் ஆடம்பரமான ஜோடனைகளின் பின்னனியில் அவை நடிக்கப் பட்டதால், நாடகங்களின் சுவை குன்றியது. அச் சுவை குன்ருவண்ணம் எளிய ஜோடனைகளின் பின்னணியில் அந் நாடகங்களை நடித்துக் காட்டியவர் 'ஹார்லி க்ரென்வில் பார்க்கர்' (Harley Grenvil Barker) என்பவராவார். 1904லிருந்து அவரது முறை இங்கிலாந்தில் பரவிற்று. ஜார்ஜ் பெர்னுட் ஷா (George Bernard Shah) என்பார் நாடகத்துக்குப் புத்துயிரூட்டிய அறிஞர்களுள் தலை சிறந்தவராவார். விக்டோரியாவின் காலத்தையும் தனது காலத்தையும் கிண்டல் செய்வதாயும் அதே சமயத்தில் அரிய சீர்திருத்தக் கருத்துகளை உடையதாயும் அவரது நாடகங்கள் விளங்குகின்றன. ஸர் ஜேம்ஸ் பாரி (Sir James Barrie) என்பார் இன்ஞெரு பெரும் நாடகாசிரியராவார். 'பீட்டர் பேன்' (Peter Pan), 'டியர் ப்ரூடஸ்' போன்ற நாடகங்களை அவர் எழுதியுள்ளார்.

ஓவியம் போன்ற கலைகளில் விஞ்ஞானத்தின் சாயல் தென்படுகிறது. க்யூபிஸம் (Cubism) என்ற ஓவிய முறையில் வரைபடக் கணிதத்தின் (Geometry) வாடையைக் காண்கிருேம். ஒரு காட்சியைக் காணுங்கால் ஓவியன் மனத்தில் ஏற்படும் பதிவுகளை அப்படியே வெளியிடும் கலையான உள்ளப்பதிவு வெளிப்பாட்டு ஓவியமும் (Impersionism) தற்காலத்தே வளர்ந்துள்ளது. சிற்பக் கலையிலும் அழகுணர்ச்சிக்குப் பதில் அறிவே வெளிப்படுத்தப்படு

கிறது. கட்டடக் கலையில் விஞ்ஞான முறையில் வானளாவிய மாளிகைகளை (Skyscrappers) எழுப்ப மக்கள் தெரிந்துகொண்டுள்ளனர். இங்ஙனம் எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான மணம் கமழ்வதையே நாம் இன்றைய இங்கிலாந்தில் காண்கிறோம்.

இங்ஙனம், பிரிட்டன் எல்லாத் துறைகளிலும் பல வகையிலும் முன்னேறி வருவதையே நாம் காண்கிறோம். காலத்திற்கேற்ப தம் கொள்கைகளையும் செயல்களையும் மாற்றிக்கொள்ளும் கலையில் பிரிட்டிஷார் கைதேர்ந்தவர்களாய் விளங்குகின்றனர். வரலாற்று உணர்ச்சிமிக்க அவர்கள் தங்களது கடந்தகால வரலாற்றினின்றும் பல நல்ல பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளனர். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வெனத் தெரிந்து அவர்கள் பிரதேச உணர்ச்சிகளையெல்லாம் மறந்து தேசிய மனப்பான்மையுடன் தொழிற்படுகின்றனர். அதிகாரம் செலுத்துவதைவிட மக்களின் நலனுக்காகப் பாடுபடுவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்து செயல்படுகின்றனர். அரசியலில் ஜனநாயகத்தையும், பொருளாதாரச் சமுதாயத் துறைகளில் சமதர்மத்தையும் வளர்க்கின்றனர். அதோடு உலகத்தோடொட்ட ஒழுகவும் தெரிந்துள்ளனர். சட்டத்தின் இறைமையையும், கடமையுணர்ச்சியையும், ஒப்புரவையும் போற்றிவரும் வரையில் பிரிட்டிஷ் மக்கள் என்றும்போல இனியும் முன்னேறுவர் என்பதில் ஐயமில்லை. கடற்படைத் தளகர்த்தரான நெல்சன், ட்ரஃபால்கர் கடற்போரில் தம் வீரர்களுக்குக் கூறிய 'ஒவ்வொருவனும் தனது கடமையைச் செய்யவேண்டுமென இங்கிலாந்து எதிர்பார்க்கிறது' (England expects every man to do his duty) எனும் அறிவுரையானது ஆங்கிலேயன் ஒவ்வொருவனது உள்ளத்திலும் ஒலித்து வருகிறது. அக் கடமை யுணர்ச்சியை இந்தியர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் தட்டி எழுப்புவதே பிரிட்டிஷ் வரலாற்றுப் படிப்பினாலாய பெரும் பயன் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

பாட நூல்கள் (Text Books)

1. Adams, G. B. — English Constitutional History (also Tamil Translations)
2. Carter and Mears — A History of Britain.
3. Keir, D. L. — Constitutional History of Modern Britain 1485–1937.
4. Keith Feiling — History of England (also Tamil Translations)
5. Ramsay Muir — A History of Britain.
6. Rayner, R. M. — A Concise History of Britain.
7. Southgate, G.W. — A Text Book of Modern English History (2 Vols.)
8. Taswell Langmead — English Constitutional History (also Tamil Translations)
9. Trevelyan — History of England (also Tamil Translations)
10. Venkatraman, J. K. — Constitutional History of Britain, Vol-II.
11. do — A Manual of British History III
12. Warner, Martin & Muir — A New Groundwork of British History.

மேற்கோள் நூல்கள் (Reference Books)

1. Birrel Francis — 'Gladstone'
2. Boisho Weator — A Centuary of British Monarchy
3. Bryant, Arthur — English Saga 1840–1940.
4. Buckle, G. L. — The Letters of Queen Victoria
5. Carter, B. A. — The Office of the Prime Minister.
6. Cecil Algernon — Victoria and Her Prime Ministers.
7. Fulford, Roger — Queen Victoria
8. Froude — The Queen's Prime Ministers
9. Hill, F. H. — George Canning
10. Harvey and Bather — The English Constitution
11. Harringhurst — Twentieth Century Britain
12. Hearnshaw, E. J. C. — The Political Principles of some notable Prime Ministers
13. Hovell Mark — The Chartist Movement.
14. Inglis Brian — Abdication.
15. Jennings, Ivor — The British Commonwealth of Nations.
16. Jose — The Growth of the Empire.
17. Keith, A. B. — The British Cabinet System.
18. Marriott, J. A. R. — English Political Institutions.
19. do — Queen Victoria and Her Ministers.
20. Marquis of Lorne — The Queen's Prime Ministers–Lord Palmerston.
21. Nicholson Herald — King George V.
22. Pelling Henry — A Short History of the Labour Party.
23. Petric — Modern British Monarchy.
24. Paul — A History of Modern England.
25. Rayner, R. M. — Nineteenth Century England.
26. Russell — The Queen's Prime Ministers–Glasdstone.
27. Thomson — Twentieth Century Britain.

சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு வினாக்கள்

பி.ஏ. பட்டத் தேர்வு - ஏப்ரல், 1964

குறிப்பு : ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு கேள்விகளுக்குக் குறையாமல் மொத்தம் ஐந்து கேள்விகளுக்கு விடை தருக.

காலம் - 3 மணி] [மொத்த மதிப்பெண் - 100

முதற் பகுதி

1. இரண்டாம் சார்லஸ், இரண்டாம் ஜேம்ஸ் என்ற இரு மன்னர்களின் சமயக் கொள்கைகளை விளக்கி ஒப்பிடுக.

2. இங்கிலாந்தும் அயர்லாந்தும் இணைந்ததற்குரிய சூழ்நிலையை விவரிக்க. ஏன் அது தோல்வியடைந்தது ?

3. மூத்த பிட், இளைய பிட் ஆகிய இவ்விருவரையும் அரசியல் விற்பன்னர்கள் (Statesmen) என்ற நிலையில் ஒப்பிடுக.

4. ‘கன்சர்வேடிவ்களில் லிபரலாகவும், லிபரல்களில் கன்சர்வேடிவ் ஆகவும் அவர் விளங்கினார்’ என்ற இந்தக் கூற்று ராபர்ட் பீல் என்பாருக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதை அவரது ஆட்சி முறையைப் பொறுத்தவரையில் ஆராய்க.

5. 1871 முதல் 1914 வரை இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையே ஏற்பட்ட பிளவுக்குக் காரணங்களைக் கூறுக.

இரண்டாம் பகுதி

6. உரிமைகள் விண்ணப்பத்தின் பல பகுதிகளையும் கூறி அவற்றின் அரசியலமைப்பு முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

7. ‘முன்னிலை மீட்சி என்பது ஒரு புரட்சியும் ஆகும்’ எனும் இக் கூற்று 1660ஆம் ஆண்டு ஏற்பட்ட முன்னிலை மீட்சியைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் மெய்யாகும்?

8. பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் வளர்ந்த வரலாற்றைத் தொடர்ந்து வரைக. அரசிய லமைப்பில் அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

9. பிரிட்டனின் அரசியலமைப்பில் இரண்டு உலகப் போர்களும் ஏற்படுத்திச் சென்ற மாறுதல்களை ஒப்பிட்டு விளக்கவும்.

செப்டம்பர், 1965

முதற் பகுதி

1. முதலாம் சார்லஸ் சிரச்சேதம் செய்யப்பட்டது எவ்வளவு தூரம் நியாயம் என்பதையும், உண்மையில் அது வேண்டத் தக்கதா என்பதையும் விவாதிக்க.

2. கிராம்வெல்லின் வெளிநாட்டுக் கொள்கையின் குணங் குறைகளை மதிப்பிடுக.

3. அமெரிக்க சுதந்திரப் போரானது பழைய குடியேற்ற நாட்டுக் கொள்கையின் தவிர்க்க முடியாத விளைவேயாகும் என்பதை எடுத்துக் காட்டுக.

4. ‘பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில ஐரிஷ் தொடர்பின் வரலாறானது உண்மையிலேயே அயர்லாந்தியர்கள் கிளர்ச்சி செய்வதும், அதைத் தொடர்ந்து இங்கிலாந்து ஒரு சில சலு கைகளை வழங்குவதுமாக நடைபெற்ற ஓயாத பூசல்களின் பட்டியலே ஆகும்’—இக் கூற்றை விவாதிக்க.

5. இரண்டாம் உலகப் போரில் சர்ச்சில் ஆற்றிய தொண்டினை விவரிக்க.

இரண்டாம் பகுதி

6. பதினேழாம் நூற்றாண்டில் வரி விதிக்கும் துறையில் அரசரைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக் கைகளைத் தொடர்ந்து கூறுக.

7. உரிமைகள் மசோதாவின் (1689) முக்கியத்துவத்தை விவாதிக்க.

8. 1832ஆம் ஆண்டுக்குப்பின் அதிகார வர்க்கம் பிரிட்டனில் பெரிதும் வளர்ந்ததற்குக் காரணங்களை விளக்குக ; அதன் அரசியலமைப்பு விளைவுகளை விவாதித்து எழுதுக.

9. 1832ஆம் ஆண்டுக்குப்பின் பிரபுக்கள் சபையானது நாளுக்கு நாள் நலிவுற்று வந்ததற்குக் காரணத்தை விளக்கவும்.

10. 19ஆம் நூற்றுண்டு இங்கிலாந்தின் தல சுயாட்சி வரலாற்றை வரைக.

ஏப்ரல், 1966

முதற் பகுதி

1. 'கிறிஸ்துவ உலகிலேயே அவர் ஓர் அறிவு செறிந்த கயவர்' —இக் கூற்று முதலாம் ஜேம்ஸுக்கு எவ்வாறு பொருந்தும் ? அவரது வெளிநாட்டுக் கொள்கை சமயக் கொள்கை ஆகிய இரண்டும் எங்ஙனம் மேற்படி கூற்றை மெய்ப்பிக்கின்றன ?

2. 1660ஆம் ஆண்டு முதல் 1714ஆம் ஆண்டுவரை அரசியல் துறையில் மதம் எவ்வளவு தூரம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

3. 1750 முதல் 1850 வரை இங்கிலாந்தில் நிகழ்ந்த முக்கிய பரோபகார இயக்கங்களைக் (Humanitarian Movements) கூறுக. அவற்றல் ஏற்பட்ட விளைவுகளுக்கு ஓர் விளக்கம் தருக.

4. பிரிட்டனின் பேரரசையும் ஏகாதிபத்தியத்தையும் டிஸ்ரேலி எவ்வாறு வளர்த்தார் என்பதை விளக்குக.

5. இரண்டாம் உலகப் போரில் அச்சு நாடுகளை முறியடிக்க பிரிட்டன் எவ்வளவு தூரம் காரணமாயிருந்தது என்பதை விளக்குக.

இரண்டாம் பகுதி

6. நீடித்த பாராளுமன்றம் இயற்றிய சட்டங்கள் எவ்வளவு தூரம் (a) சீர்திருத்தத்தன்மை வாய்ந்தவை, (b) புரட்சிகரமானவை என்பதை விளக்குக.

7. 'மூன்ரும் ஜார்ஜ் வெறும் பெயரளவில் மட்டுமின்றி உண்மையாகவே ஆட்சி புரிய விரும்பினுர்'—இக் கூற்றை விளக்குக.

இக் குறிக்கோளையடைய மூன்றும் ஜார்ஜ் என்னென்ன முறைகளைக் கையாண்டார்; எவ்வளவு தூரம் அதில் வெற்றியடைந்தார் என்பதை விளக்குக.

8. விக்டோரியா இராணியார் காலத்திலிருந்து ஆங்கில அரசியல் அமைப்பில் இறை அல்லது அரசு (Crown) வகித்து வரும் பாகத்தை விவரித்து எழுதுக.

9. 1875ஆம் ஆண்டு முதல் நீதித்துறையில் இங்கிலாந்தில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்களைத் தொடர்ந்து கூறுக.

10. தற்போதைய பிரிட்டிஷ் அரசாங்கத்தை 'அதிகார வர்க்கத்தின் எதேச்சாதிகாரம்' என வர்ணிப்பது எவ்வளவு தூரம் பொருத்தமாகும்?

ஏப்ரல், 1967

முதற் பகுதி

1. 'பதினேழாம் நூற்றூண்டின் முதற் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கை பயனும் சிறப்பும் அற்றதன்று'—இக் கூற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

2. 'மூன்றும் வில்லியத்தின் ஆட்சிக் காலமானது ஆங்கில வரலாற்றிலேயே ஓர் புதிய திருப்பம் ஏற்பட்ட காலம்' என்று கருதப்படுவதற்குரிய காரணங்களை விவரிக்க.

3. தொழிற் புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட்டதற்குச் சாதகமாக இருந்த சூழ்நிலைகள் யாவை? அதனுல் ஏற்பட்ட மாறுதல்கள் எவை?

4. 1870 முதல் 1907 வரை பிரிட்டிஷ் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய கூறுபாடுகளைக் குறிப்பிடுக.

5. லாயிட் ஜார்ஜ் பிரிட்டனுக்குச் செய்த சேவைகளை மதிப்பிடுக.

இரண்டாம் பகுதி

6. 'தெய்வீக உரிமைக் கொள்கை' யானது மன்னனுக்கும் பாராளுமன்றத்திற்கும் பதினேழாம் நூற்றூண்டில் ஏற்பட்ட சச்சரவுகளுக்கு எவ்வளவு தூரம் காரணமாயிருந்தது என்பதைக் காட்டுக.

7. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் ஆட்சி முறையானது ஓர் பிரபுத்துவ ஆட்சி முறையாகும் (Aristocracy) என்று குறிப்பிடுவது எவ்வளவு தூரம் சரியென்பதை விளக்குக.

8. 1688ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் குடி மகன் ஒருவன், தான் நீதிமன்றத்தில் நடுநிலையான நீதியைப் பெறுவதற்கான உரிமையை எவ்வாறு படிப்படியாகப் பெற்றான் என்பதைப் பொது நோக்காக வரைக.

9. 19, 20ஆம் நூற்றாண்டுகளில் பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட பல்வேறு நிலைகளை விவரிக்க.

10. எட்டாம் எட்வர்ட் முடிதுறந்த நிகழ்ச்சியானது அரசியல் அமைப்பில் எவ்வாறு முக்கியத்துவம் உடையது என்பதை விவாதித்து எழுதுக.

ஏப்ரல், 1968

முதற் பகுதி

1. முதலாம் சார்லஸ் 1629 முதல் 1640 வரை செலுத்திவந்த தனியாட்சியைச் சுருக்கமாக வரைக. அதைப் பதினோராண்டுக் கொடுங்கோன்மை என அழைத்தல் எவ்வளவு தூரம் தகும் ?

2. ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக ஆங்கில சமுதாயம், அரசியல் அறிவுத்துறை ஆகியவற்றுள் என்ன மாறுதல்கள் ஏற்பட்டன என்பதை மதிப்பிடுக.

3. இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்கும் ஐக்கியம் ஏற்படுவதில் என்னென்ன தொல்லைகளிருந்தன ? அவை எவ்வாறு நீக்கப்பட்டன ?

4. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆண்ட பிரதமர்களுள் இணையற்ற பெருமையுடையவர் என்று நீ யாரைக் கருதுகிறாய் ? அதற்குரிய காரணங்களைத் தரவும்.

5. இரண்டாவது உலகப் போரில் பிரிட்டன் ஆற்றிய சேவையை விளக்கவும். அதனால், பிரிட்டனில் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிடவும்.

இரண்டாம் பகுதி

6. 1603 முதல் 1609 வரை பாராளுமன்றம் நிருவாகத்தில் தலையிடுவதற்குச் செய்த முயற்சிகள் யாவை? சான்றுகளுடன் விளக்குக.

7. '1714ஆம் ஆண்டில் விக்குக் கட்சியினர் பெற்ற வெற்றியானது 1688ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வரம்புக்குட்பட்ட முடியாட்சி என்ற புதிய ஆட்சி முறையின் தொடர்ச்சியே அன்றி வேறல்ல'—இக் கூற்று முதல் இரண்டு ஜார்ஜுகளின் ஆட்சிக் காலத்துக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை விவாதிக்க.

8. 19, 20ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தின் நீதித் துறையில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்களை விவரிக்க.

9. 19ஆம் நூற்றாண்டில் பொதுமக்கள் சபையின் தன்மையானது எவ்வளவு தூரம் மாற்றப்பட்டது என்பதை எடுத்துக் காட்டுக.

10. 1931ஆம் ஆண்டு ஏற்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் நிலவரச் சட்டமானது அரசியலமைப்பில் எவ்வாறு முக்கியத்துவம் பொருந்தியது என்பதையும் பரிசீலனை செய்க.

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்-தமிழ்)

A

Administrative Adjudication	—ஆட்சித்துறைத் தீர்ப்பளிப்பு முறை
Administrative Law	—ஆட்சித்துறைச் சட்டம்
Abdication	—முடிதுறப்பு
Agricultural Holdings Act (1875)	—விவசாய நிலவுடைமைச் சட்டம் (1875)
Aggression	—வலுத் தாக்குதல்
Aldermen	—நகர முதுவர்; ஆல்டெர்மென்
Anglo French Entente	—ஆங்கில ஃபிரெஞ்சு மனமார்ந்த நேச உடன்படிக்கை
Apartheid	—(நிறவெறியின் பாற்பட்ட) இன ஒதுக்கல் கொள்கை
Appeal Courts	—மேல்முறையீட்டு நீதிமன்றங்கள்
Appropriation	—நிதி ஒதுக்கீடு
Armistice	—தற்காலிகப் போர் நிறுத்த உடன்படிக்கை
Arms Act	—படைக்கலச் சட்டம்
Artisan Dwelling Act (1875)	—தொழிலாளர் குடியிருப்புச் சட்டம்
Atlantic Charter	—அட்லாண்டிக் சாசனம்
Auditor General	—பொதுக் கணக்குத் தணிக்கைத் தலைவர்

B

Ballot Act (1872)	—இரகசிய வாக்களிப்புச் சட்டம் மறைவு வாக்கீட்டுத் தேர்தல் சட்டம்

Balkanisation	—சின்னஞ்சிறு நாடுகளாகத் துண்டாடும் முறை
Bills	—மசோதாக்கள்
Board of Control	—கண்காணிப்புக் குழு
Buffer State	—இடைத்தடை நாடு
Bureaucracy	—அதிகார வர்க்கம்

C

Cabinet	—காபினெட் அமைச்சரவை
Chartist Movement	—சார்ட்டிஸ்டு இயக்கம்
Christian Socialism	—கிறித்துவச் சமதர்மம்
Civil List	—அரசரது செலவுத் தொகை
Clearing House	—வேலை பரிமாற்று நிலையம்
Coalition Ministry	– கூட்டு மந்திரி சபை
Cold War	—கெடுபிடிப்போர்
Colony	—குடியேற்ற நாடு
Common Law	—பொதுமைச் சட்டம்
Commonwealth	—பொது நலக் கூட்டுறவு; காமன் வெல்த்
Combination Laws	—(தொழிலாளர்) ஒன்றுகூடல் தடைச்சட்டங்கள்
Commutation Act	—பதில் மாற்றுச் சட்டம்
Consolidated Fund	—திரட்சி நிதி
Consumers	—நுகர்வோர் கூட்டம்
Confederation	—இணைக் கூட்டரசு
Constituent Assembly	—அரசியல் நிர்ணய சபை
Copy Holders	—பத்திர மானியதாரர்கள்
Corn Laws	—தானியச் சட்டங்கள்
Coup de Erat	—திடீர்ப் புரட்சி
Crown	—மகுடம், அரசு, இறை
Crown Colony	—அரசாள் குடியேற்ற நாடு

D

Deflation	—பணச் சுருக்கம்
Delegation of Powers	—அதிகார ஒப்படைப்பு
Devaluation	—நாணய மதிப்புக் குறைப்பு
Democracy	—ஜனநாயகம், மக்களாட்சி
Death Duties	—மரண வரிகள்
Delegated legislation	– ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்க முறை
Depression	– தொழில், வியாபார மந்தம்

Disarmament —படைக் கலைப்்பு
Dual Alliance —இருவர் கூட்டுறவு
Durham Report —டர்ஹாம் அறிக்கை (1837-1840)

E

Eastern Question —கீழைச் சிக்கல்
Eastern Front —கிழக்குப் போர் முனை
Ecclesiastical Commission —சமய ஆணைக் குழு
Economic Nationalism —பொருளாதாரத் தேசீயம்
Economic Sanctions —பொருளாதார நிர்ப்பந்தங்கள்
Electors —தேர்வாளர்கள்
Emergency powers Act (1940) —அவசரகால அதிகாரங்கள் சட்டம்
Empire —பேரரசு
Enclosure of Commons Act —பொது நிலங்களுக்கு வேலியிடல் சட்டம்
Endowed Schools Act —மானியப் பள்ளிகள் சட்டம்
Entente Cordiale —மனமார்ந்த நேச உடன்படிக்கை
Epitah —கல்லறை வாசகம்
Equity —ஒப்புரவுச் சட்டம்
Evolution —பரிணமம், படித்தர வளர்ச்சி, உள்ளது சிறத்தல்
Evangelicals —சுவிசேஷிகள் ; நற்செய்தி பரப்புவோர்
Exchequer and Audit Act (1865) —கருவூலத் தணிக்கைச் சட்டம்
Executive —நிருவாக நிறுவனம்

F

Factory System —தொழிற்சாலை முறை
Family Compact —குடும்ப ஒப்பந்தம்
Franchise —வாக்குரிமை

G

Gold Standard —பொன் நாணயத் திட்டம்
Great Trek —பெரும் வெளியேற்றம்

H

Habeas Corpus Act (1679) —ஹெபியஸ் கார்ப்பஸ் சட்டம் உடலுரிமைக் காப்புச் சட்டம்
High Commissioner —உயர் ஆணையாளர்.

High Churchmen	—மத நிலைய மேலோர்
Holy Alliance	—புனிதக் கூட்டுறவு; தூய கூட்டுறவு
House of Commons	—பொதுமக்கள் சபை, காமன்ஸ் சபை
Humanitarianism	—பரோபகார மனித காருண்ய வாதம்
Humanitarian Movement	—பரோபகார இயக்கம்
Human Rights Declaration	—மனித ஜீவாதார உரிமைகள் பற்றிய அறிவிப்பு

I

Imperial reference	—பேரரசுத் தனிச் சலுகை
Imperialism	—ஏகாதிபத்தியம், பேரரசு மனப் பான்மை
Industrial Revolution	—தொழிற் புரட்சி
Individualism	—தனி மனித வாதம்
Indian Mutiny	—இந்தியப் பெருங்கலகம் (1857)
Insurance Act (1911)	—காப்புறுதிச் சட்டம்
International Court of Justice	—சர்வதேச நீதி மன்றம்
International Monetary Fund	—சர்வதேசச் செலாவணி நிதி
Irish Home Rule Bill	—ஐரிஷ் சுயாட்சி மசோதா
Irish Disendowment	—ஐரிஷ் திருச்சபை நிலைக்குலைப்பு

J

Joint Stock Companies	—கூட்டு நிதிக் கம்பெனிகள், ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனிகள்
Judiciary	—நீதி நிறுவனம்
Justices of the Peace	—அமைதி காண் நீதிபதிகள்
Juvenile Delinquency Courts	—இளங் குற்றவாளிகள் நீதி மன்றங்கள்

K

Kultur Camp	—நாகரீகக் காப்புப் போராட்டம்

L

Laissez Faire Theory	—(அரசாங்கம்) தலையிடாக் கொள்கை
Lapse Doctrine	—தத்துரிமை ரத்துக் கொள்கை
Labour Party	—தொழிற் கட்சி
Labour Exchanges	—வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிலையங்கள்; வேலை பரி மாற்று நிலையங்கள்

League of Nations	—சர்வ தேசச் சங்கம்
Lease Holders	—குத்தகைச் சாகுபடியாளர்கள்
Lend Lease System	— குத்தகைக் கடன் முறை
Licensing Act (1904)	—அனுமதிக்கும் சட்டம்
Liberal Party	—தாராளக் கட்சி; லிபரல் கட்சி
Local Government	—தல ஆட்சி முறை
Lodgers	—குடிக் கூலிக்காரர்கள்
Loyalists	—ராஜ விசுவாசிகள்

M

Mandated Territories	—ஒப்படைக்கப்பட்ட நாடுகள்
Martyrs	—தியாகிகள்
Moderates	—மிதவாதிகள்
Monarchy	—முடியரசு
Money Bills	—பண மசோதாக்கள்

N

National Debt	—நாட்டுக் கடன்
Nationalities	—தேசீய இனங்கள்
National Health Service	—தேசீய ஆரோக்கியப் பணி நிறுவனம்
Nonconformists	—(தேசீய மதத்துக்கு) இணங்காதார்

O

Old Age Pensions	—முதியோர்க்கு உதவிப் பணம் வழங்கல்
Ordinance	—அவசரச் சட்டம்
Organism	—உயிர்ப் பொருள், ஜந்து

P

Parliament	—பாராளுமன்றம்
Parliamentary Government	—பாராளுமன்ற ஆட்சிமுறை
Parliamentary Reform	—பாராளுமன்றச் சீர்திருத்தம்
Peers	—பிரபுக்கள்
Peoples Budget	—மக்கள் வரவு செலவுத் திட்டம்
Picketing	—மறியல்
Pilotless Planes	—வலவன் ஏவா வானவூர்திகள்
Plebiscite	—பொதுஜன வாக்கெடுப்பு
Poor Rate	—வறியோர் வரி
Poor Law Amendment Act	—இரவலர் சட்டத் திருத்தம்
Power looms	—விசைத் தறிகள்

Preamble —முகப்புரை
Privileges —சிறப்புரிமைகள்
Prime Minister —பிரதமர், தலைமை அமைச்சர்
Protectionists —பாதுகாப்பு வரி வாதிகள்
Protectorate —பாதுகாப்புக்குட்பட்ட நாடு

Q

Quadruple Alliance —நால்வர் கூட்டுறவு
Quintuple Alliance —ஐவர் கூட்டுறவு

R

Radicals —தீவிர சீர்திருத்த வாதிகள் ராடிகல்கள்
Rationing —உணவுப் பொருள் பங்கீட்டு முறை
Reciprocity Treaties —பரஸ்பர வரிவிலக்கு உடன் படிக்கைகள்
Regent —இடைக்காலப் பாதுகாப்பாளர், ரீஜெண்ட்
Representation —பிரதிநிதித்துவம், நிகராண்மை
Representation of the Peoples Act —மக்களின் பிரதிநிதித்துவச் சட்டம்
Representatives —நிகராட்கள்
Royal Historical Society —ராயல் வரலாற்றுக் கழகம்
Royal Exchange —அரச நாணய மாற்று நிலையம்
Rule of Law —சட்டத்தின் இறைமை

S

Scorched Earth Policy —(எதிரி கையில் விழாமல்) பாழாக்கும் கொள்கை
Select Committee —பொறுக்குக் குழு
Self Regarding Activities —தன்னைப்பொறுத்த காரியங்கள்
Self Government —சுயாட்சி
Sinking Fund —கடன் கழிவு நிதி
Slums —முடைச் சேரிகள்
Socialism —சமதர்மம்
Social Contract —சமுதாய ஒப்பந்தம்
Sovereign —இறை
Speculation —ஊக வாணிபம்; ஹேஷ்ய வியாபாரம்
Sphere of Influence —செல்வாக்கு வட்டம்-மண்டலம்

Statute —நிலவரச் சட்டம்
Strategy —போர்த் தந்திரம்
Super Tax —மேல் வரி
Supremacy —தனித் தலைமை; இறைமை
Subsidiary alliance —படைத் துணை உடன்படிக்கை
Suffragettes —(பெண்கள்) வாக்குரிமைவாதிகள், சஃப்ரஜெட்டுகள்

T

Tariff Reform —காப்பு வரிச் சட்டம்
Test Act —(மத) சோதனைச் சட்டம்
Toleration —சமயப்பொறைக் கொள்கை
Trade Unions —தொழிற் சங்கங்கள்
Tractarians —ட்ராக்டேரியன்கள், கட்டுரையாளர்கள்
Triple Entente —முக்கூட்டு நேச ஒப்பந்தம்
Triple Alliance —முக்கூட்டு ஒப்பந்தம்
Trench Warfare —அகழிப் போர், பதுங்கு குழிக் கிடங்குப் போர்
Triumvirate —மூவர் நிருவாகம்
Trusteeship Council —தர்மகர்த்தா சபை

U

Uitlanders —(தென் ஆப்பிரிக்க) வுயிட்லாந்தியர்கள்
Ultimatum —இறுதி எச்சரிக்கை
Unions —ஒன்றியங்கள்
United Nations Organisation —ஐக்கிய நாடுகள் சபை
UNCIEF —சர்வதேசக் குழந்தைகள் அவசர கால நிதி (யூனிசெஃப்)
UNESCO —யுனெஸ்கோ ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞானக் கலாச்சார சபை
Utilitarians —பயனீட்டு வாதிகள்

V

Veto Power —ரத்து அதிகாரம், தள்ளுரிமை
Via Media Policy —இடைநிலைக் கொள்கை

W

Wage Fund Theory —கூலி நிதிக் கொள்கை
War Cabinet —போர்க்காலக் காபினெட்
White Mans burden —வெள்ளையர் பொறுப்பு
W. H. O. —உலக ஆரோக்கிய சபை

பொருள் குறிப்பகராதி

அ

அ.ழிப் போர்—213, 218
அச்சு நாடுகள் (1914)—211
அச்சு நாடுகள் (1939)—237, 238
அடல்லமைட்டுகள்—67
அடிமை முறை ஒழிப்பு—119
அடிமை நீக்ரோக்கள் — 119, 135, 137
அடிமை வியாபாரம்—118, 143
அட்லாண்டிக் சாசனம்—241
அட்லி—அமைச்சர் தலைப்பில் காண்க.
அபினிப் போர்—37
அபெர்டீன் —அமைச்சர் தலைப்பில் காண்க.
அமெரிக்கா—47, 62, 66, 91, 98, 104, 122, 172, 173, 218, 228, 229, 245, 246
அமைச்சர்கள்—
அட்லி—252, 294, 336
அபெர்டீன்—28, 31, 38, 43, 57, 61, 93
ஆஷ்லி—166
ஆஸ்க்வித்—189, 190, 194, 199, 200, 202, 221, 250
ஈடன் அந்தோணி—296, 335, 337
கார்டுவெல்—98, 106, 107
காஸ்ச்சன்—107, 143
கிச்னர் பிரபு—151, 155, 220
கிரே—31
கிளாட்ஸ்டன்—4, 43, 51, 66, 73, 83, 86, 92-115, 142, 143, 157, 159, 162, 164, 166, 167, 173, 174, 175
சர் வில்லியம் ஹார்கோர்ட்—114
சர்ச்சில் வின்ஸ்டன் — 195, 198, 208, 222, 241, 336, 337
சாலிஸ்பரி—114, 141, 142-157, 169, 177, 180, 182, 185, 190
சேம்பர்லின் (ஜோசப்) — 111, 144, 180, 184, 185, 186, 210
சேம்பர்லின் (நெவில்) — 233, 234, 253, 292, 293, 335, 336
டலாடியர் (பிரெ.)—234, 238
டிஸ்ரேலி—4, 9, 25, 29, 43, 51, 71-91, 110, 142, 162, 163, 166, 167, 169, 175, 176, 332
டெர்பி பிரபு—31, 42, 43, 68, 69, 72, 83, 332

பாமர்ஸ்டன்—4, 30—54, 56, 65, 93, 95, 96, 104, 159, 175, 176, 331
ஃபார்ஸ்டர்—104, 105
பால்பர்-167, 180, 188, 190, 333
பால்டுவின்—279, 280, 287, 326
பானர்மென் (ஹென்றி கேம்பல்)—189, 190, 191, 194, 333
பிட்—122
பீல், சர் ராபர்ட்—4, 12, 13, 14, 15, 16-29, 31, 43, 57, 68, 71, 97, 98, 166, 184
பெடெய்ன் (பிரெ.)—238
பெர்சிவல் பிரபு—31
பெவின்—336
போனர்லா, ஆண்ட்ரு—221, 223, 279, 325
'மாக்டனுல்டு' ராம்ஸே—181, 280, 283
மாக்மில்லன்—296, 297
மார்லி—190
மெல்போர்ன்—5, 7, 12, 13, 14, 15, 18, 31, 329, 330
ரஸ்ஸல் பிரபு—31, 39, 42, 43, 46, 50, 56-63, 93

ராண்டால்ஃப் சர்ச்சில்—143
ரிச்சர்ட் கிராஸ்—74
ரிச்மண்ட் கோமகன்—77
ரோஸ்பரி—200, 330, 332
லாயிட் ஜார்ஜ்—190 199-202, 221, 222, 224, 336
லிண்ட் ஹர்ஸ்ட் பிரபு—71
லிவர்ப்பூல்—17, 31
வால்போல்—342
வில்சன்—300, 301, 302, 303,

வெல்லிங்டன் பிரபு—18, 43
ஹஸ்கிஸன்—119
ஹால்டேன்—180, 190, 192, 198
ஹாலிஃபாக்ஸ்—122, 253, 336
ஹார் கோர்ட், சர் வில்லியம்—330
ஷாப்ட்ஸ்பரி பிரபு—160, 166
ஸ்டான்லி—19
அமைச்சரவை (காபினெட்)—
அட்லி (தொழிற் கட்சி), 1945—294, 295
அபெர்டீன் (கூட்டு), 1852-55—43
ஆஸ்க்வித் (லிபரல்), 1908-15—194, 202
கானிங் (லிபரல்டோரி), 1827—17
கிளாட்ஸ்டன் (லிப), 1868—54, 74
கிளாட்ஸ்டன் (லிப), 1880 87, 108, 109, 113
கிளாட்ஸ்டன் (லிப), 1885-86—113, 114
கிளாட்ஸ்டன் (லிப), 1892-94 95-114
சர்ச்சில், வின்ஸ்டன் (கன்), 1940-295, 296
சர்ச்சில் வின்ஸ்டன் (கன்), 1951—295
சாலிஸ்பரி (கன்), 1885-86—141-157
சாலிஸ்பரி (கன், லிப, யூனியனிஸ்ட்), 1886-92—141, 144, 146
சாலிஸ்பரி (கன், லிப, யூனியனிஸ்ட்), 1896—149, 156

டிஸ்ரேலி, பெஞ்சமின் (கன்), 1874—80, 84, 90
டெர்பி டிஸ்ரேலி (கன்), 1852—43
டெர்பி டிஸ்ரேலி (கன்), 1858—45
டெர்பி டிஸ்ரேலி (கன்) 1866—64-91
நெவில் சேம்பர்லின் (தேசீய), 1937—292, 293
பாமர்ஸ்டன் (விக்), 1855-58—42, 43, 45
பாமர்ஸ்டன் (விக், லிப, யூனியனிஸ்ட்), 1859-65—45-54
பால்டுவின் (கன்), 1923-24—279
பால்டுவின் (கன்), 1924-29—281
பால்டுவின் (தேசீய), 1935-37—292
பால்ஃபர் (யூனி), 1902-05—179, 188, 189
பானர்மென், காம்பெல் (லிப), 1905-8—189
பீல் (கன்), 1841—16-29
போனர்லா (கன்), 1922-23—279
மாக்டனுல்டு (தொழி), 1924—280
மாக்டனுல்டு (தேசீய), 1931-35—283
மாக்மில்லன் (கன்), 1957-63—296, 297
மெல்போர்ன் (விக்), 1835—5-15
ரஸ்ஸல் (விக்), 1846—56-63
ரஸ்ஸல் (விக், லிப), 1865-66-—61, 62
ரோஸ்பரி (லிப), 1894-95-201
லாயிட் ஜார்ஜ் (கூட்டு), 1916-22—221, 224, 278, 279
வெலிங்டன், பீல் (டோரி) 1828-30—17
வில்சன், 1964—300, 322
அயர்லாந்து—20, 21, 25, 53, 60, 98, 110, 111, 112, 113, 143, 144, 185, 186, 202, 222
அயர்லாந்து இளைஞர்கட்சி-21
,, உபாஸ் நச்சுமரம்—98, 101, 102
,, கல்விச் சீர்திருத்தம்-102
,, குடியானவர் உரிமை—112
,, டைத் வரிகள்—99, 100
,, திருச்சபை மசோதா—100
,, திருச்சபை நிதி நிலைக் குலைப்பு—100
,, நிலச்சட்டம் (1870)—101, 111
,, நிலசீர்திருத்தம்—101
அயர்லாந்து ஃபெனியன் கழகம்—98, 99
அரச வரலாற்றுக் கழகம் 62
அரசாள் குடியேற்ற நாடு—122
அரசு—324
அராபி பாஷா—112
அலபாமா—48, 52, 62
அலாஸ்கா—126
அல்பேனியா—239
அல்ஸ்டர்—202, 203
அல்ஜியர்ஸ்—244
அறப்படை—160
அணுகுண்டு—236, 246

ஆ

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் —93, 142, 161
ஆக்ஸ்போர்டு இயக்கம்—161
ஆங்கில மகுடம் — 273, 324, 325, 329
ஆங்கிலிக திருச்சபை — 99, 100, 115, 123, 162, 182
ஆங்கிலிக தேசீய கழகம்—103
ஆங்கிலோ பிரெஞ்சு மன மார்ந்த நேச ஒப்பந்தம் (1904)— 188, 209, 333
ஆசியா—237
ஆப்கானியப் போர்கள்—36, 84
ஆப்பிரிக்கா—237, 239
ஆப்பிரிக்கா (தென்)—8, 109, 110, 120, 135, 138, 147, 148, 184, 185, 260, 265, 272
ஆப்பிரிக்க நாடுகள் சுயேச்சை —265
ஆப்ரஹாம் லிங்கன் — 47, 48
ஆம்ஹர்ஸ்ட் பிரபு—122
ஆரஞ்சுக் குடியரசு நாடு—60, 85, 156
ஆரோ கப்பல்—50
ஆர்ஸினி—44
ஆர்னல்டு மாத்யூ—161
ஆலன் கன்னிங்ஹாம்—131
ஆலன்பி—218
ஆல்பர்ட்—175
ஆண்ட்ரஸிக் குறிப்பு—82
ஆஸ்பர்ன் வழக்கு (1909)— 191, 197
ஆஸ்க்வித்—அமைச்சர்கள் தலைப்பில் காண்க.
ஆஸ்திரியா—39, 40, 41, 44, 46, 49, 50, 211, 220, 233
ஆஸ்திரேலியா—60, 119, 128-134, 177, 217, 258, 271, 272
ஆஸ்திரேலியா காமன்வெல்த் சட்டம் (1900)—134
ஆஷ்லி பிரபு—166
ஆஷ்பர்ட்டன் உடன்படிக்கை (1842)—28
ஆஷ்பர்ன் சட்டம் (1885)—186

இ

இங்கிலாந்து இளைஞர் கட்சி— 88
இடைத்தடை நாடுகள்—138
இடைநிலைக் கொள்கை—156
இணங்காதார் — 59, 66, 105, 164, 182
இதாலி — 45, 46, 60, 207, 228, 231, 232, 239, 244, 246
இதாலிய சுதந்திர இயக்கம்— 175
இதாலிய ஒப்பந்தம் (1891)— 149
இந்தியா—36, 37, 44, 80, 81, 82, 88, 118
இந்திய மசோதா—45
இரகசிய நட்புடன்படிக்கை (1887)—187
இரகசிய வாக்களிப்புச் சட்டம் (1872)—108
இரத்த நதிப்போர் (1838)—139
இராணியின் கல்லூரிகள்—21
இராணுவச் சீர்திருத்தம்—183
இராணுவ ஆட்சி—122
இருவர் கூட்டுறவு (1879)— 187
இருட்டடிப்பு முறை—236
இர்விங் ஹென்றி—170

இறை—1, 2, 3, 4, 325-329
இன்பெண்டா—38, 39
இஸபெல்லா (ஸ்பெயின்)—34, 38
இஸண்டில்வானுப் போர் (1877)—86
இஸ்மாயில் பாஷா (எகி)—80

ஈ

ஈடன் அந்தோணி—335
ஈட்டன் கல்லூரி—93, 142

உ

உபாஸ்—98
உரிமைகள் (அடிப்படை)—237
உயர்தரக் கல்விச் சட்டம் (1902)—182
உயிட்லாந்தியர்—152
உலகப் பொருளாதார மந்தம்—228
உலகப் போர் (1914) — 204, 207, 210, 215, 222, 225, 293
உலகப் போர் II (1939)—292-322
உலுண்டிப் போர் (1877)—86
உன்கியார் ஸ்கெலெஸ்ஸி உடன்படிக்கை (1833)—35

எ

எகிப்து—89,. 151, 159, 188, 239, 243, 296
எடின்பர்க் கடிதம்—57
எடின்பர்க் கோமகன்—338
எட்வர்ட் VII— 179, 180, 182, 201, 210
எட்வர்ட் VIII முடிதுறப்பு நெருக்கடி—284-291
எட்வர்ட் பியூஸி—162
எம்டன்—214
எலிஸபெத் II—296, 337, 338
எல்டன் பிரபு—17
எல்ஜின் பிரபு—51
எல்லன்பரோ—37
எலியட் ஜார்ஜ்—164
எவாஞ்சலிகம்—160

ஏ

ஏகாதிபத்தியக் கூட்டாளிக் கழகம்—147
ஏடன்—37

ஐ

ஐக்கிய அயர்லாந்தியர் கட்சி—21
ஐரோப்பா—110, 184, 185, 283
ஐரோப்பிய நாடுகள் மாநாடு (1884)—147
ஐரோப்பிய பொதுமைச் சந்தை—298
ஐவர் கூட்டுறவு—246
ஐவஞேவ்—299
ஐஸன்ஹோவர்—244, 245

ஒ

ஒட்டாவா ஒப்பந்தம் (1933)—229
ஒட்டாவா மாநாடு—271, 284
ஒரிகான் உடன்பாடு (1846)—28
ஒண்டாரியோ—123, 128
ஒன்று கூட்டப்பட்ட பொறியியல் வல்லுநர் கழகம்—174

ஓ

ஓபிரியன்—11, 21, 143,
ஓவன், சர் ராபர்ட்—9, 10
ஓகானல், டேவிட்—20, 60

க

கடன் கழிவு நிதி—79
கடற்படை—183, 184, 187, 198, 205, 208
கடற்படைக் குழு—183
கடற்படைச் சட்டம் —(Navy Act) (1900)—208
கடற்படைத் தற்காப்புச் சட்டம் (Naval Defence Act) (1889)—187
கடுங் குற்றங்கள் சட்டம் (Criminal Act)—144
கடைகள் சட்டம் (Shops Act, 1911)—198
கட்சி—
இங்கிலாந்து இளைஞர் கட்சி (Young England Party)—71, 88
இள அயர்லாந்தியக் கட்சி (Young Ireland Party)—21
ஐக்கிய அயர்லாந்தியர் கட்சி —21
ஐரிஷ் கட்சி—190, 201

கன்சர்வேடிவ் கட்சி—18, 28, 43, 68, 72, 87, 88, 94, 188, 279, 295, 299, 300, 326, 337
சின்ஃபீன் (Sinfeen) கட்சி — 203, 224
சுதந்திர தொழிற்கட்சி — 181
டோரிக் கட்சி—13, 15, 18, 31, 38, 53, 54, 72, 342
தாராள இணைப்புக் கட்சி (Liberal Unionist)-185, 203,
தாராள ஒன்றிப்புக் கட்சி (அயர்)—144
தாராளக் கட்சி (லிபரல்)—70, 93, 201, 248, 278, 280, 300, 326, 327
தொழிற் கட்சி (Labour) — 181, 252, 253, 277, 278, 280, 282, 283, 295, 299, 301, 326, 336
தீவிர சீர் திருத்தவாதிகள் கட்சி (Radicals) — 174, 178
தீவிரவாதக் கட்சி (அயர்)— 223
பட்ஜெட் கூட்டுறவு கட்சி— (Budget League)—200, 256
பட்ஜெட் எதிர்ப்புக் கூட்டுறவு கட்சி—200
பீலைட்டுகள் (Peelites)—93, 94
விக்குக் கட்சி—14, 31, 43, 53, 54, 56, 66, 91, 341, 342
கட்டாய இராணுவ சேவை— 221
கட்டாய இராணுவ சேவையை வற்புறுத்தும் சட்டம் (1916) —221
கட்டுரையாளர்கள்—161
கத்தோலிக்கர் மதம்—61, 161, 162, 165, 182
கத்தோலிக்கர் விடுதலை—17
கத்தோலிக்க விடுதலைச் சட்டம் (Catholic Emancipation Act —1829)—18, 27, 57
கத்தோலிக்கர் வாக்குரிமைச் சட்டம்—46
கரிபால்டி—40, 45, 46
கருவூலத் தணிக்கைச் சட்டம் (Exchequer and Audit Act— 1865)—96

கல்வி—
ஆரம்பக் கல்வி—167, 182
இலவசக் கல்வி—105
உயர்தரக் கல்வி — 105, 160, 182
கட்டாயக் கல்வி (1880)—104, 105, 167
சமயக் கல்வி—105, 183
சமயச் சார்பற்ற கல்வி —102
கல்விக்குழு—182
கல்விச் சட்டம் (1902)—182
கல்விச் சட்டம் (1906)—194
கல்விச் சட்டம் (1944)—293
கல்விக் குழுக்களை ஒழிக்கும் சட்டம் (1902)—167
கனடா—6, 40, 122, 149, 258, 261, 266

கனடிய பஸிபிக் ரயில்பாதை —128
கனடிய கூட்டரசு—126
கனடிய பொறுப்பாட்சி—125
கனடிய பூரண பொறுப்பாட்சி —125
கனடிய மறு இணைப்புச் சட்டம் (Reunion Act, 1840)— 125, 126
கண்ணியமான தனிமைக் கொள்கை (Splendid Isolation Policy)—186
கன்சர்வேடிவ் கட்சி ("கட்சிகள்" தலைப்பில் காண்க)

கா

காப்புவரிச் சீர்திருத்தக் கழகம் —(Tariff Reform League) — 185
காபினெட்—178, 341, 348
காபினெட் ஆட்சி—177
காபினெட் (போர்க்கால) — 248, 250
காபினெட் (பேரரசு)—249
காபினெட் தலைமைச் செயலகம் —252
காபூல்—36
காப்டன்—118
காப்பு வரிக்கொள்கை — 184, 185
காப்டன் ரிச்சர்ட்—25
காப்பர் பீல்ட், டேவிட்—168
காமன்வெல்த்—258-276
உறுப்புகள்—260
அரசுகள்—261
காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு - 270
காமன்வெல்த் குடிபுகுவோர் சட்டம் (1968)—276
காமன்வெல்த் செயலகம்—274
காமன்வெல்த் நாடுகளின் தலைவி - 338
காமன்வெல்த் குடியுரிமை— 273
காமன்வெல்த் நாடுகளின் வகை—266-269
காமன்வெல்த் செயலகம்—320
கார்டுவெல் (' அமைச்சர் ' தலைப்பில் காண்க)—98
கார்லைல்—69, 159, 168
கார்ட்ரைட் (' அமைச்சர் ' தலைப்பில் பார்க்க)
கார்டென் ('அமைச்சர்' தலைப்பில் பார்க்க)
கால்வினியர்கள்—137
கான்டன் — 37
கான்ஸ்டான்டிநோபில்—83
கான்ஸ்டபிள்—170
காஸக் வீரர்—241
காஸ்மோலாங் பிஷப்—286

கி

கிச்னர் பிரபு ('அமைச்சர்' தலைப்பில் பார்க்க)
கிப்பன் வேக்பீல்டு – 119, 120, 132, 135
கிரன்வில் பிரபு ('அமைச்சர்' தலைப்பில் பார்க்க)
கிரஹாம் ('அமைச்சர்' தலைப்பில் பார்க்க)
கிராக்கோ குடியரசு—39
கிராம்வெல்—323
கிப்லிங் ருட்யார்ட்—169
கிம்பர்லிப் போர் (1800)—154
கிரிமியப் போர்—44
கிரே ('அமைச்சர்' தலைப்பில் பார்க்க)
கிளாட்ஸ்டன் ('அமைச்சர்' தலைப்பில் பார்க்க)
கிரீஸ் நாடு—239
கிரீன்—174
கிளாரண்டன் பிரபு—98
கிறிஸ்டியன் IX—49
கிறித்துவ சமதர்மம்—162
கிழக்கிந்தியக் கம்பெனி—118

கீ

கீலர் புரளி—299
கீழைச் சிக்கல்—58, 82, 83

கு

குடியரசுகள்—261, 323
குடியேற்றக் கலை—120
குடியேற்றச் சங்கம்—121
குடியேற்ற நாட்டுப் பொருளாதார முன்னேற்றக் கழகம்—272
குடியேற்ற நாட்டுக் கொள்கை—109, 120
குடியேற்ற நாட்டுச் சட்டங்களின் செல்லுபடி சட்டங்கள் (1865)—263
குடும்பத் திட்டம்—309
குத்தகைக் கடன் முறை (Land Lease System)—241
குரோமர்—151
குர்ரா நிகழ்ச்சி—203
குவிபெக் சட்டம் (1774)—122
குவிபெக்—122, 123
குவீன்ஸ்லாந்து—132,. 133
குழந்தைகள் சட்டம்(1908)–198
குறைந்தபட்ச ஊதியச் சட்டம் (Minimum Wage Legislation) (1912)—197

கூ

கூப்பர், தாமஸ்—11

கூட்டுறவு இயக்கம்—10
கூட்டாளி அரசு—269

கெ

கெட்டிஸ்பர்க் போர்—47
கெபால்—342
கெய்சர்—186, 188, 207, 214, 219, 278
கெரன்ஸ்கி—217
கெல்லாக்—232
கெல்வின் பிரபு—170
கெவூர்—45

கே

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம்—148, 164, 193
கேப்போரெட்டா(போர்)—218
கேலிஸியா (போர்)—214

கேப்காலனி—8, 85
கேஸ்கல்—169
கெல்லாக்பிரியாண்ட் உடன் பாடு—232
கேர் ஹார்டி—181

கொ

கொரில்லாப் போர் (நியூஜி)—135, 155
கொழும்புத் திட்டம் (Colombo Plan)—272
கொலை சூழ்ச்சி மசோதா (Conspiracy to Murder Bill)—45

கோ

கோனுட்சி—175
கோல்ரிட்ஜ்—13
கோயபெல்ஸ்—233
கோசுத்—40, 41

க்

க்ளமென்சோ—227

ச

சமுதாயக் காப்புறுதித் திட்டம்—293
சமதர்மக் கொள்கை(Socialism)—9, 10, 145, 181
சர்ச்சில் வின்ஸ்டன்—(அமைச்சர் தலைப்பில் காண்க)

சர் சாமுவேல் ராமில்லி (அமைச்சர் தலைப்பில் காண்க)
,, ஜான் சைமன் (அமைச்சர் தலைப்பில் காண்க)
,, ஜேம்ஸ் மாகிண்டோஷ் (அமைச்சர் தலைப்பில் காண்க)
,, வில்லியம் பீவரிட்ஜ் (அமைச்சர் தலைப்பில் காண்க)
,, வில்லியம் ஹார்கோர்ட் (அமைச்சர் தலைப்பில் காண்க)
,, ஸ்டிராப்போர்டு நார்த் கோர்ட் (அமைச்சர் தலைப்பில் காண்க)

சா

சாக்ஸிகோபர்க் இளவரசர் —33
சார்டினியா—46
சார்ட்டிஸ்ட் இயக்கம்—11, 12
சார்லஸ் II—342
சார்லஸ் X (பிரெ)—32
சார்லஸ் கிங்ஸ்லி—162
சாலிஸ்பரி பிரபு (அமைச்சர் தலைப்பில் காண்க.)
சார்ஜண்ட்—170

சி

சிங்கப்பூர்—37
சிடவாயோ (ஜுலு)—85
சிட்னிவெப்—181
சிட்னி—119, 129,
சிம்ஸன்—171
சிம்ஸன் சீமாட்டி—285
சிலோன்—260, 265, 266, 295
சிறு நாடுகளின் தனி உரிமை—110
சின்ஃபீன் கட்சி—203, 224
சிவில் சர்வீஸ்—105, 321, 399
சிவில் உரிமைகள்—430

சீ

சீக்பிரிட் அரண்—238
சீனு - 50, 189
சீலி—169

சு

சுங்க வரிகள்—95, 114, 229
சுங்க வரிச் சலுகை—95, 271
சுய நிர்ணய உரிமைக் கொள்கை—230, 231
சுயாட்சி—119, 143, 156, 157,
சுரங்கச் சட்டம் (1842) 24
சுவிசேஷ நற்செய்தி பரப்புவோர் இயக்கம்—160
சுதேசிகள்—
காஃபிர்கள்—140
கிரிக்வாக்கள்—140
பசூட்டோக்கள்—140
மவோரிகள்—135
மெட்டபாலிக் கூட்டம்—85
ஹாட்டண் டாட்டுகள்—137

சூ

சூயெஸ்—80
சூடான்—113, 151

செ

செக்கோஸ்லோவேகியா—233, 234, 246
செகு குன்னி (ஜூலு)—85, 86
செசில் ரோட்ஸ் (Rhodes)-148
செடவாயோ—85
செராஜிவோ படுகொலை—211
செர்பியா—210
செஸ்ட்டர்—169

சே

சேம்பர்லின் — (அமைச்சர் தலைப்பில் காண்க)

சோ

சோதனைச் சட்டம் (நீக்கப்படல்)—57, 59

ட

டச்சுக்காரர்—33
டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி—135
டப்ளின்—202, 223
டப்ளின் பல்கலைக் கழகம்—102
டமாஸ்கஸ்—220
டர்னர்—170
டர்ஹாம் கடிதம்—57, 61
டர்ஹாம் அறிக்கை—125
டர்ஹாம் பிரபு—125, 126
டலாடியர்— அமைச்சர் தலைப்பில் பார்க்க
டன் கர்க் (போர்)— 213
ட்ரெண்ட் நிகழ்ச்சி—48

டா

டாஃப்வேல் ரயில்வே வேலை நிறுத்த வழக்கு (Taffvale Railway Strike Case)—190
டார்வின் 163, 170
டால்டன்—170
டான்பஸிபிகோ நிகழ்ச்சி—42
டான் பிரான்ஸிஸ்—39
டான்சிக்—227
டான் கார்லோ—34
டாஸ்மேனியா—60, 133, 134

டி

டிகால் ஜெனரல்—298
டிக்கென்ஸ், சார்லஸ்—168
டிரினிடி கல்லூரி—102
டிவேலரா—223, 224
டியன்ட்சின் உடன்படிக்கை (1856)—51
டிரான்ஸ்வால்—85, 110, 139, 140, 155, 156
டிஸ்ரேலி — 'அமைச்சர்' தலைப்பில் காண்க

டெ

டெவன் கமிஷன்—21
டெர்பி — 'அமைச்சரவை' தலைப்பில் பார்க்க
டெல் எல் கபீர் (போர் 1884)—112
டெல்ஹௌஸி பல்கலைக் கழகம்—122
டென்னிசன்—163, 168
டென்மார்க்—175

டே

டேனன்பர்க்—213

டொ

டொமினியன் அந்தஸ்து — 128, 135, 148, 155, 261

டோ

டோரிக் கட்சி — கட்சிகள் தலைப்பில் காண்க

ட்

ட்ரபால்கர்—67

த

தங்க நாணயத் திட்டம் (Gold Standard)—229, 281
தடையிலா வாணிகக் கொள்கை—2, 57, 72, 184, 280, 281, 284
தபால் நிலைய சேமிப்பு பாங்குகள்--96, 173
தல ஆட்சி சீர்திருத்தச் சட்டம் (1835)—57
தலையிடாக் கொள்கை (Laissez Faire) – 174
தலைமை நீதிமன்றச் சட்டம் (1873)—108
தற்காலிகப் போர் நிறுத்த உடன்படிக்கை (Armistice) — 220
தனிமனித வாதக் கொள்கை (Individualism)—97

தா

தாராளக் கட்சி (கட்சிகள் தலைப்பீல் காண்க)
தாராளக் கொள்கை—92, 93, 98, 119, 175, 176, 177, 180
தாராள ஏகாதிபத்தியக் கொள்கை—190
தாராள இணைப்புக் கட்சி (கட்சிகள் தலைப்பில் காண்க)
தாராள ஒன்றிப்புக் கட்சி—(கட்சிகள் தலைப்பில் காண்க)
தாராளக் கட்சி (Liberal)—(கட்சிகள் தலைப்பில் காண்க)
தானியச் சட்டம் (1815)—24, 25, 174, 332

தானியச் சட்டம் ஒழிப்பு—24, 25, 26, 57
தானியச் சட்டம் எதிர்ப்புச் சங்கம் (Anti Corn Law League)—12, 24

தி

திட்டக் குழுக்கள்—305

தீ

தீவிரவாதக் கட்சி (கட்சிகள் தலைப்பில் காண்க)

து

துருக்கி—34, 35, 39, 82, 89, 187, 207, 217

தூ

தூய ஒப்பந்தம்—35

தெ

தெய்வீக உரிமைக் கொள்கை—324
தென் ஆப்பிரிக்கா—85, 97, 109, 110, 135, 138, 140, 180, 185, 216

தே

தேசீயம்—230
தேசீய ஆரோக்கியப் பணி நிறுவனம்—294
தேசீய ஆரோக்கியப் பணிச் சட்டம் (1948)—308
தேசீய ஆயுள் காப்புறுதி நிலையங்கள் (National Life Insurance Socities)—97
தேசீயப் பொருளாதார வளர்ச்சிக் கழகம்—297, 302
தேசீயப் பொருளாதாரக் குழுக்கள்—303
தேசீய இனங்கள்—115
தேசீய உதவிச் சட்டம் (National Assistance Act)—294
தேசீய கல்விக் கழகங்கள்—104, 105
தேசீய கலைக் கூடம்—170
தேசீய உடைமை—294, 295
தேசீய துரைத்தனம் (1931)—283
தேசீய பாங்கு—97
தேசீய வறியோர் நிவாரண மளிப்பு நிலையம்—97
தேசீயத் திட்டம்—302
தேசீய விலைவாசிகள் வருவாய்கள் வாரியம் (1965)—303

தொ

தொழிலாளர் இயக்கங்கள்—8
தொழிற்புரட்சி—9
தொழிலக உற்பத்திக் கழகம்—302
தொழில் மறு அமைப்பு கார்ப்பரேஷன்—304
தொழில் மறுபயிற்சி நிலையங்கள்—304
தொழிற்சங்க சச்சரவுகள் தீர்ப்பு நீதிமன்றம்—305
தொழிற்கட்சி — (கட்சிகள் தலைப்பில் காண்க)
தொழில் கட்டுப்பாட்டுச் சட்டம் (1927)—282

தொழிற் சங்கங்கள் 9, 65, 97, 174, 190, 197
தொழிற் சங்கங்கள் சட்டம் (Trade Union Act 1871)–97
,, 1875—76
,, 1876—76
,, 1913—197

தொழிற்சாலைச் சட்டம் (Factory Act) (1802-31)–24
,, (1842)–166
,, (1847)— 59
,, (1860)—166
,, (1867)—166, 174
,, (1937)—292
தொழில் தகராறுகள் சட்டம் (Trade Diputes Act, 1906) —190
தொழில் நுண்ணியல் அமைச்சுத் துறை—307
தொழில் மந்தம்—110
தொழில் முக்கூட்டுறவு (Industrial Triple Alliance)—279
தொழிலாளர் குடியிருப்புச் சட்டம் (Artisans's Dweling Act), 1875—75
,, நஷ்ட ஈட்டுச் சட்டம் —191

தோ

தோஸ்த் முகமது—36

ந

நகராண்மைக் கழக சீர்திருத்தச் சட்டம் (Municipal Corporations Reform Act) 1835—59
நடுநிலை வகுப்பார்—103

நா

நாகரீகக் காப்புப் போராட்டம் (Kultur Camp)—210
நாகஸாகி நாசம்—246
நாமூர்—213
நாட்டுப் படை (National Military)—292
நால்வர் உடன்பாடு (Quadruple Alliance) 34
நாவாய்ச் சட்டங்கள் (Navigation Acts)—118, 119
நான்கிங் உடன்பாடு—37

நி

நிக்கோலாஸ் (ஸார்)—33
நியூகாஸில் கமிஷன்—103
நியூகினியா—260
நியூமேன்—161
நியூ சௌத்வேல்ஸ்—129
நியூப்ரென்ஸ்விக்—122, 128
நியூபவுண்ட்லாந்து—122, 128
நியூஸிலாந்து—134, 135, 260, 298
நியூஸிலாந்து கம்பெனி—121
நிலப்பிரபுக்கள்—108
நிலச்சங்கம்—110
நில உயர் ஆணைக்குழு—310

நீ

நீக்ரோக்கள்—47
எக்ஸெக்கர் நீதிமன்றம்—108
தலைமை நீதிமன்றம்—108
தலைமை மேல்முறையீட்டு நீதிமன்றம்—108
பொது விண்ணப்ப நீதிமன்றம் —108
சான்ஸரி நீதிமன்றம்—108

நெ

நெப்போலியன் III—42, 46, 47, 175

நே

நேட்டால்—8, 119
நேச நாடுகள்—212

ப

பகுத்தறிவு வாதிகள்—162
படைக்கலச் சட்டம்—20
பட்ஜெட் கூட்டுறவுக் கட்சி—200
பட்ஜெட் எதிர்ப்புக் கட்சி—200
பணவீக்கம்—22
பயனீட்டு வாதம் (Utilitarianism)—164
பரிணாமக் கொள்கை (Evolution)—163, 170
பரோபகாரக் கழகங்கள் (Humanitarian Societies)-121
பரோபகார இயக்கம்—160
பர்க்—401
பர்மா—258, 265
பல்கேரியா—83, 214
பள்ளியறைச் சீமாட்டிகள் நியமனம் பற்றிய சிக்கல் (Bed Chamber Question)—12
பயனீட்டு வாதிகள்—164, 165
பழங்குடி மக்களைக் காக்கும் கழகம் (Aborigines Protection Society)—121
பன்மை வாக்களிப்பு ஒழிப்புச் சட்டம் (Act to Abolish Plural Voting, 1908)—194
ப்ளௌடன் திட்டம்—307
பஷோடா நிகழ்ச்சி (Fashoda Incident)—151

பா

பாகிஸ்தான்—262
பாக்தாத்—218
பாக்ஸர் கலகம்—156
ஃபாக்ஸ்—அமைச்சர் தலைப்பில் காண்க
பாங்குச் சாசன சட்டம் (Bank Charter Act, 1944)—22
பாட்ஸ் டாம்—246
பாதுகாப்புவாதிகள் கொள்கை (Protectionist Doctrine)—26
பாதுகாப்புக்குட்பட்ட நாடுகள் (Protectorates)—146, 267
பாமர்ஸ்டன் — அமைச்சர் தலைப்பில் காண்க
பாதை நிதி—199
பாராளுமன்றம் — 106, 109, 111, 176, 350-378
பாராளுமன்றத்தின் குழந்தை —90
பாராளுமன்றச் சட்டம் (1911) —200, 201
பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் (1832)—57, 103
பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் (1867) 93, 97, 104
பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் (1884)—142
பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் (1918)—222
பாராளுமன்ற ஆட்சிமுறை (Parliamentary Govt.)—177, 273, 324
பாரிஸ்—238, 245
பாரிஸ் மகாநாடு 1919-227
பாஸ்ச்சர்—171
பாரடே—170
ஃபார்ஸ்டர்—111, 148

பாலைவன எலிகள் (Desert rats)—243
பால்கன் தீபகற்பம்—230, 231
பாலஸ்தீனம்—217, 313
பால்டுவின் — அமைச்சர் தலைப்பில் காண்க
பால்குரூகர்—139, 152, 154
பாழாக்கும் கொள்கை (Scorched earth Policy)—240
பானர்மென்கேம்பல் (அமைச்சர் தலைப்பில் காண்க)

பி

பிட் — அமைச்சர் தலைப்பில் பார்க்க
பிரஷ்யா—48, 49, 227, 234
பிரதேசப் படை—107
பிரஸ்ட் லிடோவ்ஸ்க் சமாதானம் (1918)—217
பிரபுக்கள் சபை — 200, 201, 325, 328, 364
பிரதிநிதித்வ ஆட்சி—122, 268
பிரதமர்—342, 343
பிராங்கோ பிரஷ்யப் போர்—73
பிராட்டஸ்டெண்டுகள் — 100, 122, 123
பிரான்ஸ்—33, 34, 38, 39, 44, 80, 95, 187, 207, 209, 210, 213, 224, 231, 235, 238, 239
பிரிட்டிஷ் கயானா—149
பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கக் கம்பெனி—148
பிரிட்டிஷ் பேரரசு (இரண்டாம்)—117
பிரிட்டிஷ் பேரரசு (மூன்றும்) —146
பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனி—118
பிரிட்டிஷ் பேரரசு தற்காப்புக் குழு—192
பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் (1867)—126
பிரைட், ஜான்—159
பிரௌனிங்—168
பிலிப் (பிரஞ்சு மன்னர்)—39
பிலிப் ஸ்னோடன்—181
பிலிம்சால் குறி—78
பியர்கஸ் ஓகானர்—11
பிஷப்புகள் ஆட்சி (Episcopacy)—100
பிஸ்மார்க்—49, 147, 207, 209

பீ

பீகிங்—51
பீல், சர் ராபர்ட்—(அமைச்சர் தலைப்பில் காண்க)
பீலைட்டுகள் (Peelites) — 93, 94, 98
பீவரிட்ஜ் திட்டம் (Beveridge Plan) 293, 294

பு

புரோபியூமா—299
புளும்பாண்டின் மாநாடு(1854) —140

பூ

பூம்பிளாட்ஸ்—140

பெ

பெடெய்ன் — அமைச்சர்கள் தலைப்பில் பார்க்க)
பெண்கள் உரிமைக் கிளர்ச்சி —192
பெண்கள் நிலப்படை—445

பெர்சிவல் பிரபு (அமைச்சர் தலைப்பில் காண்க)
பெர்டினண்டு VII—34
பெர்மூடாத் தீவு—7
பெர்லின்—40
பெர்லின் காங்கிரஸ் (1878) —84, 89, 207
பெல்ஜியம்—32, 33, 37
பெரும் வெளியேற்றம் (The Great Trek)—8, 139
பெர்ஞுட்ஷா—181, 447
ஃபெனியன்கள் கழகம் (Fenian Society)—98
பென்டிங் பிரபு—60, 72
பென்னித் தபால் முறை-13, 14
பென்த்தாம்—118

பே

பேரரசு தனிச் சலுகைகள்—184
பேரரசு பொருளாதார மகாநாடு—284
பேகன்—342

பொ

பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு (Committee of Public Accounts)—96
பொதுச் சுகாதாரச் சட்டம் (1875)—75
பொது நிலங்களின் வேலியிடல் சட்டம்—77
பொது வழிபாட்டுக் கட்டுப்பாட்டுச் சட்டம்—162
பொதுவுடைமைக் கொள்கை —174
பொது மக்கள் சபை—93, 95, 96, 200
பொருளாதார நிர்ப்பந்தங்கள்—233
பொருளாதாரச் செயல்கள் துறை—302, 319
பொருளாதார வளர்ச்சிக் குழு—303
பொறுப்பாட்சி (Responsible Govt.)—267, 268

போ

போதா (Botha)—155
போயர்கள்—85, 110, 135
போயர் யுத்தம் (1899)—151-156
போலீஸ் படை—18
போலந்து—33, 50, 52, 207, 233 237
போனிக்ஸ் பூங்கா கொலை—144
போர்ச்சுகல்—34, 207
போனர்லா — (அமைச்சர் தலைப்பில் பார்க்க)
ப்ரைம்ரோஸ் லீக் (Primerose League)—88
ஃபோச்—219

ம

மக்கள் வரவு செலவுத் திட்டம் (1909)—199
மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (Representation of the People Act) 1918—222
மனமார்ந்த நேச உடன்படிக்கை—209, 333
மறு இணைப்புச் சட்டம் (Act of Reunion—1840)—125, 126
மன்ரோ கொள்கை (Munro Doctrine (1823)—149, 211

மவோரியர்கள்—135
மஜூபா குன்றுப் போர் (1886)—110
மஹ்தி (Madhi)—113, 151
மணலாறு மகாநாடு (1852)—140

மா

மாக்டனுல்டு ராம்ஸே — அமைச்சர் தலைப்பில் காண்க
மாண்டேட் முறை (Mandate System)—268
மாண்ட் கோமரி—243
மாய்னூத் கல்லூரிகள்—21, 59
மார்ன் நதிப்போர்—213,
மால்டா—40, 83, 86
மானியப் பள்ளிகள் சட்டம் (அயர்) (1869)—105
மாஜினி—40

மி

மியூனிச் ஒப்பந்தம்—234, 292
மில், ஜான்ஸ்டுவர்ட்—164

மு

முக்கூட்டு ஒப்பந்தம்—209
முதியோர் உதவிப் பணம்—195
முடியரசு—323, 324

மூ

மூவர் கூட்டுறவு (1882)—187

மெ

மெகமட் அலி—34, 35, 36
மெக்காலே பிரபு—169, 342
மெக்கன்ஸி வில்லியம் லயோன்—7
மெட்டர்னிக்—40
மெத்தாடிஸ்ட் இயக்கம்—160
மெமல் துறைமுகம்—234
மெர்க்கண்டிலிசம் (Mercantalism)—117
மெல்போர்ன் — (அமைச்சர் தலைப்பில் காண்க)

மே

மேத்யூ ஆர்னுல்டு—161, 168, 169
மேஸ்பீல்ட்—169
மேகினுட் அரண்—238

மௌ

மௌரீஸ்—162, 163

யூ

யூதர்கள்—60, 70

யை

யைப்ரஸ்—218

யோ

யோகோஹாமா—52

ர

ரயில்வேச் சட்டம்—97
ரஸ்ஸல் பிரபு — அமைச்சர் தலைப்பில் காண்க
ஜான் ரஸ்கின்—161, 168

ரஸ்ஸல் ஜான்—56-63
ரஷ்யா—73, 89, 187, 208, 209, 235, 240

ரா

ராட்சில்டுகள்—80
ராசெட்டி—170
ராண்டால்ப்சர்ச்சில் — அமைச்சர் தலைப்பில் காண்க
ராபின்சன் — அமைச்சர் தலைப்பில் காண்க

ரி

ரிச்சர்ட்கிராஸ் — அமைச்சர் தலைப்பில் காண்க
ரிச்மண்ட் கோமகன்—அமைச்சர் தலைப்பில் காண்க

ரு

ருமேனியா—217

ரொ

ரொடீஷியா—148, 265, 276

ரோ

ரோம்—40
ரோஸ்பரி பிரபு— அமைச்சர் தலைப்பில் பார்க்க

ல

லம்பார்டி—40
லண்டன்—168, 170, 172, 183, 192
லண்டன் உடன்படிக்கை (1827)—33
லண்டன் மிஷனரிக் குழு—121, 137

லா

லாரென்ஸ்—217
லாபெங்குலா—85
லாயிட் ஜார்ஜ்— அமைச்சர் தலைப்பில் காண்க
லாஸ்கி—287
லான்ஸ்டௌன் — அமைச்சர் தலைப்பில் காண்க

லி

லிட்டன் பிரபு—82
லிச் பீல்ட் குடும்ப ஒப்பந்தம்—60
லியோபோல்டு II (பெல்)—33
,, (கோபர்க்)—38
லிவர்பூல் — அமைச்சர் தலைப்பில் காண்க
லிவிங்ஸ்டன் டேவிட்—146

லு

லூயி பேப்பினு (கனடா)—7
லூயி பிலிப்—35, 39

லெ

லெனின் கிராட்—240

லே

லேடிஸ் மித் போர் (1900)–154

லொ

லொகார்னோ ஒப்பந்தம்—232

வ

வட்டாரத் திட்ட அமைப்புகள் —305
(மக்கள்) வரவு செலவு திட்டம் (P[illegible]es Budget)—199
வரு[illegible]ப் விலைவாசிகள் நிலை நிறுத்தம்—306
வளிநிலைப் பல்கலைக் கழகம்—307
வரி—
மரண வரி—114, 199
வாரிசுரிமை வரி (1853)—97

வா

வாக்குரிமை—
சிறுநிலக்கிழார் வாக்குரிமை—93
தொழிலாளர் வாக்குரிமை—87, 104
விவசாயத் தொழிலாளர் வாக்குரிமை—112
வாக்குரிமை வாதிகள்—பெண்கள் (Suffragettes)—192, 193
வாணிகக் குழு—97
வாணிகச் சமநிலை—305
வால்போல்—342
வார்ஸா—214, 237

வி

விக்டர் எமானுவேல்—46
விக்டோரியா பிரதேசம்—132, 133, 134
விக்டோரியா மகாராணியார்—1, 2, 3, 4, 5, 6—15, 18, 37, 40, 49, 50, 52, 73, 81, 82, 86, 141
விடனுஜ் மூட்—341
வியன்னு குறிப்பு—62
வியன்னு காங்கிரஸ்—(1815)—32, 33
வியன்னு சமாதான மாநாடு-(1855)—57
வியாபார மந்தம்—228, 231
வியாபாரக் கப்பலேற்றச் சட்டம் (1876)—78
வில்சன்—227
வில்லியம் லவெட்—11
வில்லியம்ஸ் மாரிஸ்—169
வில்லியம் II (ஜெர்)—207
வில்லியம் III—342
வில்லியம் IV—328
விவசாய அமைப்புக் கழகம் (Agricultural Organisation League)—185
விவசாய மந்தம்—166
விவிலிய நூல் கழகம்—121

வெ

வெஸ்ட் மினிஸ்டர் நிலவரச் சட்டம் (1931)—261
வெரினிகிங் உடன்படிக்கை (1902)—155
வெர்சேல்ஸ் உடன்படிக்கை (1783)—126
வெர்சேல்ஸ் உடன்படிக்கை (1919)—225, 227
வெர்டுன் போர்—216
வெலிங்டன் — (அமைச்சர் தலைப்பில் காண்க)
வெள்ளையர்தம் பொறுப்பு-210
வெல்ஸ்—181
வெனிஸ்—40
வெனிஸுலா—149, 211
வெஸ்லியர்கள்—182

வே

வேக்பீல்டு திட்டம்—132

வேலைவாய்ப்பு தரும் நிலையங்கள்—195

வை

வைடாங்கி உடன்படிக்கை (1840)—134

வொ

வொர்ட்ஸ் வொர்த்—169

ஹ

ஹங்கேரி—40, 41
ஹஸ்கிஸன் — (அமைச்சர் தலைப்பில் காண்க)
ஹாட்டண்டாட்டுகள்—137
ஹாலந்து—35
ஹாங்காங்—37
ஹாலிபாக்ஸ் — (அமைச்சர் தலைப்பில் காண்க)
ஹால்டேன் — (அமைச்சர் தலைப்பில் காண்க)
ஹிட்லர்—225, 227, 233, 234, 235, 292
ஹாய்னு—41
ஹிண்டன்பர்க்—213
ஹியூக்னேக்க்ள்—135
ஹிரோஷிமா—246
ஹீத் (எட்வர்ட்)—300
ஹியூக்ஸ், தாமஸ்—162
ஹேக் மாநாடு நீதிமன்றம்—211
ஹோல்ஸ்டீன்—49, 175
ஹோம் பிரபு—299

ஸ

ஸான்ஸ்டிபானோ உடன்படிக்கை (San Stefeno 1878)—83
ஸ்காட்லாந்து—165
ஸ்டப்ஸ்—169
ஸ்டான்லி—146
ஸ்வின்பர்ன்—168
ஸ்பெயின்—34, 37, 38
ஸ்வாஸிலாந்து—268
ஸ்லெஸ்விக்—49
ஸ்விட்ஸர்லாந்து—39
ஸைப்ரஸ்—266

ஷ

ஷாப்ட்ஸ்பரி பிரபு —(அமைச்சர் தலைப்பில் காண்க)
ஷாஷஜா—36
ஷெப்ஸ்டோன்—85

ஜ

ஜட்லண்டு—215
ஜப்பான்—208, 212, 231, 232, 236, 241, 245, 246, 247
ஜான் ஸ்டுவர்ட் மில்—174
ஜான் மிட்சல்—21
ஜான் பிரைட்—66, 159
ஜான் கெபில்—161
ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி—173
ஜார்ஜ் V—201, 224, 284, 326 333, 334
ஜார்ஜ் VI—288. 296, 334
ஜார்ஜ் எலியட்—164, 169
ஜுலுப் போர்—85
ஜெருசலேம்—207
ஜெர்மனி—40, 49, 186, 187, 207, 208, 210, 214
ஜெர்மன் குடியேற்ற நாட்டுச் சங்கம்—147
ஜேம்ஸ் ராம்சே மாக்டனல்ட்—181
ஜோசப் பேப்பினு—124